
கம்ப ராமாயணம்

அயோத்தியா காண்டம்



டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம், சென்னை

இணை முயற்சி - மாறன் பதிப்பகம், பெங்களூர்

ஸ்ரீமத்

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்

(பதவுரை, விளக்கவுரை முதலியவற்றுடன்)



டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்



எண். 2, அருண்டேல் கடற்கரைச் சாலை
பெசன்ட் நகர், சென்னை – 600 090
தொலைபேசி: 044–2491 1697
druvslibrary@gmail.com

இணை முயற்சி :

மாறன் பதிப்பகம்
எண். 56, 6வது குறுக்கு, நஞ்சப்பா கார்டன்
பாபுஸாபால்யா, பெங்களூர் – 560 043
கைபேசி: 99807 94542, 98411 24542
maranpublications.blr@gmail.com

ஆன்மாவின் சேவையில்

© காப்புரிமை : **டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்**

முதற்பதிப்பு : அக்டோபர் 1957
மறுபதிப்பு : பிப்ரவரி 2022

பிரதிகள் : 500

பக்கங்கள் : 18 + 1024 = 1042

விலை : ரூ.6000/–
(ஒன்பது தொகுதிகளுக்கும்)

வெளியிடுவோர் & கிடைக்குமிடம் : **டாக்டர் உ.வே. சாமிநாதையர் நூல்நிலையம்**
பெசன்ட் நகர், சென்னை – 600 090
044 – 2491 1697, செல்: 80720 70668

இணை முயற்சி & கிடைக்குமிடம் : **மாறன் பதிப்பகம்**
56, 6வது குறுக்கு, நஞ்சப்பா கார்டன்
பாபுஸாபால்யா, பெங்களூர் – 560 043
செல்: 99807 94542, 98411 24542
maranpublications.blr@gmail.com

அட்டைப்படம் வரைகலை : R. பிரகாஷ், Previz
சென்னை–87. செல்: 90031 90096

அச்சிட்டோர் : ஆர்.என்.ஆர். பிரிண்டர்ஸ் & பப்ளிஷர்ஸ்
8, தாண்டவராயன் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 5
044 – 2844 7071, 2844 1856
rnrprintersch5@gmail.com

18/4

ஸ்ரீமத் கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்

அட்டைப்பட விளக்கம்

மன்னவன் பணியன்று ஆகில் நும் பணி மறுப்பனோ!: சீதையை மணமுடித்து அயோத்தி திரும்புகையில் எதிர்ப்பட்ட பரசுராமனின் கர்வத்தை அடக்கி, அயோத்தி மக்களின் நாயகனாய்த் திகழ்ந்த இராமனுக்குத் தயரதன் முடிசூட்ட நிச்சயித்தான்; மந்திராலோசனையில் எல்லாருடைய எண்ணமும் அதுவாகவே இருக்க, இராமனைப் பெற்றபொழிதினும், ராமன் வில்லிறுத்த பொழுதினும், இராமனால் பரசுராமன் தாழ்வுற்ற நாளினும் அகமகிழ்ந்து இராகவனை அழைத்து, முடிசூடல் பற்றித் தெரிவித்தான். அயோத்தி நகரமே விழாக்காலம் பூண, மந்தரை என்னும் ஒருத்தி மட்டும் மனம் குமைந்தாள்; கூனியான அவள், வில்லுண்டையால் இராமனிடம் பட்ட அடிகளுக்குப் பதிலடி கொடுக்க, இளைப்பாறிய கைகேசியின் மனம் கலைக்க முனைந்தாள். இராமனின் முடிசூட்டு விழாவை அறிவித்த மந்தரைக்குப் பரிசு தந்த கைகேயியின் மனத்தைத் தன் பேச்சாற்றலால் பரதன் உயிர்க்கு ஆபத்தெனத் திருப்பி, இறுதியில் பரதன் முடிசூடவும், இராமன் காடேகவும் பழைய இருவரங்களைத் தயரதனிடம் கேட்கத் தூண்டிச் செல்கிறாள். மயங்கிய தையல் தயங்கிய தயரதனிடம் அடத்தினால் வரங்களைப் பெறுகிறாள். முடிசூட்டு விழாவிற்கு எல்லோரும் குவிந்த அவ்வேளேயில், மாறிமாறி மயங்கியும் கலங்கியும் தயரதன் கிடக்க, இராமனை அழைத்துவரச்சொல்கிறாள் கேகயன் மகள். சுமந்திரனால் அழைத்துவரப்பட்டு, பணிவன்புடன் தன்முன் நின்ற ராமனை நோக்கி,

ஆழி சூழ் உலகம் எல்லாம் பரதனே ஆள, நீ போய்த்
தாழ் இருஞ் சடைகள் தாங்கி, தாங்க அருந் தவம் மேற்கொண்டு,
பூழி வெங் கானம் நண்ணி, புண்ணியத் துறைகள் ஆடி,
ஏழ்-இரண்டு ஆண்டின் வா'' என்று, இயம்பினன் அரசன்' என்றாள்

என்ற நிகழ்வு அட்டைப்பட சித்திரங்களுள் ஒன்றானது.

குகன் நாவாய்: தந்தையின் கட்டளையைத் தலைமேற்கொண்டு இராமன், சீதை மற்றும் இளவல் என மூவருமாய் மரவுரி உடுத்துக் கானகமேக, முதலில் சிருங்கிபேரம் என்னும் கங்கைக் கரைப்பகுதி அடைகின்றனர். கம்பனின் இராமாவதாரத்துள்

கம்பனே அனுபவித்த பாத்திரங்களுள் ஒருவன் குகன். இராமனுக்கு அறிமுகமான நேரத்தில் அப்பகுதியின் தலைவனான குகன், இருக்கையில் அமர மறுப்பதிலிருந்து தொடங்குகிறான் கம்பன். இரவு முழுதும் இலக்குவனனுடன் காவல் காக்கும் குகன், பிறவிப்பெருங்கடலைக் கடக்க வேண்டப்படுபவனை, கங்கைக் கரைதாண்ட உதவியவன். சித்திரகூடத்தில் இராமப்பாதுகை ஏந்திய பரதனுடன் விடைபெறும் வரை கம்பனால் மிக அழகாக செதுக்கப்படுகிறான். இராமனிடம் குகன் செலுத்தும் அன்பின் ஆழத்தை அனுபவிக்கும் இராமன் அவனைத் தன் சகோதரனாக ஏற்றுக்கொள்ளும் கவிதை வரிகளில் வான்மீகத்தையும், திருமங்கை ஆழ்வாரின் பாசுரார்த்தங்களையும் கலந்து நம்மை வியக்கச்செய்கிறான் கம்பன். அக்கவிநயத்துடன் இராமன் கட்டளைப்படி நாவாய் கொணர்ந்து, சீதையொடும் இளவலொடும் இராமனைப் படகில் ஏற்றி கங்கையைக் கடந்தநிலை கீழ்க்காணும் கம்பனின் பாடல் அட்டைப்பட ஓவியமாய் மிளிர்கிறது:

பால் உடை மொழியாளும், பகலவன் அனையானும்,
சேலுடை நெடு நல் நீர் சிந்தினர், விளையாட;
தோலுடை நிமிர் கோலின் துழவிட, எழு நாவாய்,
காலுடை நெடு ஞெண்டின், சென்றது கடிது அம்மா !

(பாலின் இனிமையையும் தோற்கடிக்கும் இனிய மொழியாளான பிராட்டியும், சூரியனைப் போன்ற இராமனும் சேல்மீன்களை உடைய மிக்க நல்ல கங்கை நீரைத் தூவி விளையாட, தோல் இணைக்கப்பெற்ற நேரான தள்ளு கோலால் துழாவிச் செலுத்தப்பட்ட நெடிய படகு பல கால்களையுடைய பெரிய நண்டுபோல விரைந்து சென்றது). நாவாய்க்கு உவமை நண்டு. கம்பன் கவிநயம்!

திருவடிகளுக்கு முடிசூட்டிய இராமானுசன்: விரைவில் வந்துசேர அறிவுறுத்தி வந்த வசிட்டனின் ஓலையின்படி சத்துருக்கனனுடன் கோசலநாடு வந்து சேருகையில் பரதன், நகரத்துத் திருமகள் நீங்கிப் பொலிவற்றுத் திகழும் நகரத்தைக் கண்டு, விரைந்து தந்தை அரண்மனை ஏகி அவரைக் காணாமல் தாயிடம் சென்றான்; இராமன் கானகமும், தந்தை வானகமும் ஏகியதைச் செய்தியாய் கூறிய தாயைக் கடிந்தான். காணச் சென்ற கோசலையின், தாயின் வஞ்சனை முன்னம் அறியிலியோ? என்ற ஐயம் தோய்ந்த வாசகம் கேட்டு துடித்தான் பரதன்; அவன் ஏற்றிய

18/4

சபதம் மாற்றிய மனத்துடன் குலத்தில் உயர்ந்தோர் உன்னிலும் யாருமில்லை என்றாள் அவள். எண்ணெய் தோய்ந்த தந்தை உடலைக் காட்டிய வசிட்டன், இறுதிக் கடனை ஆற்ற மறுத்தான். அவையினர் அரசை ஏற்க அழைக்க, மறுத்த பரதனை நோக்கி, தந்தை இருக்க அரியணை மறுத்தான் ராமன்; அவனுமில்லா நேரத்தில் அரியணை மறுக்கும் நின் ஒத்தார் பிறந்தார் இல்லை என்றனர் அவரும். முனிவரோடும், தாய்களுடனும், மந்திரி, சேனையுடனும் இராமனைக் கண்டு அரியணை ஏற்க இறைஞ்சக் கானகம் புறப்பட்டான் பரதன். தொலைவில் சேனை கண்டு பரதன் மேல் கோபம் கொண்ட குகன், கிட்டி வந்து நின்ற அவன் குணம் கண்டு ஆயிரம் அண்ணல் நின் ஒப்பரோ என்று வியந்தான். அரசு ஏற்காமல், வார்சடையுடன் வந்த காரணம் கூறக் கேட்டார் பரத்துவாசமுனிவர்; முறையறிந்த முனிவரும் முறை தவறிப்பேசியதால் நொந்த பரதனை மெச்சி, படைக்கும் விருந்து படைத்து இராமன் இருப்பிடம் கூறி அனுப்பினார் அவர்.

இவ்வாறு அயோத்திநகர் நுழைந்ததிலிருந்து தாய்முதல் சேர்த்துக் கொண்ட சகோதரன் வரை, மந்திரி முதல் முனிவர் வரை தனக்குத் தாயின் விருப்பத்தில் பங்கில்லை என்பதை நிரூபிக்கும் நிலை வந்ததை எண்ணி, நொந்திருந்த பரதனைக் கூடப்பிறந்த இலக்குவனும் மற்றவர்க்கு விலக்கல்ல என்றபடி எதிர்கொள்ளத் தயாரானான்; அண்ணல் இராமன் மட்டுமே, தர்மதேவதையும், நற்குணங்களின் உரையாணி போன்றவனான பரதன் சேனையுடன் அரசையும், தன்னையும் அர்ப்பணிக்க வருகிறான் என்றான்.

பரதனின் குணத்தை முற்றும் அறிந்த அண்ணலும், அரசாள மீண்டும் அயோத்தி திரும்பும் பரதனின் வேண்டுகோளை நிராகரித்து பெற்றோரின் பெருமையையும், மக்கள் அவருக்காற்ற வேண்டிய கடமையையும் கூறினான்; தந்தையைப் பொய்த்த பாவத்திற்கு உள்ளாக்கி நரகத்தில் தள்ளாமல் இருக்கத் தான் காடேகினதைக் கூறித் தன் ஆணையால் பரதனை அரசாளப் பணித்தான். தந்தையொத்த தமையனின் ஆணையால் வேறுவழியின்றி, அவன் திருவடிநிலைகளை வேண்டினான் பரதன். இராமனும், இம்மை மறுமை இரண்டிலும் நற்பயன் தரும் பாதுகைகளை ஈந்தான். பாதுகையைப் பெற்றுக்கொண்ட பரதன், அழுத கண்ணையுடையவனாய், புழுதி படிந்த அழகான திருமேனி உடையவனாய், திருவடி இரண்டையும் இவையே


எனக்கு மணிமுடி என்று சொல்லி, முறைப்படி தலையில் சூடிக்கொண்டு தரையில் விழுந்து இராமபிரானை வணங்கி எழுந்து செல்லலானான் என்ற பொருள்பட,

அடித்தலம் இரண்டையும், அழுத கண்ணினான்,
முடித்தலம் இவை' என, முறையின் சூடினான்;
படித்தலம் இறைஞ்சினன், பரதன் போயினான்-
பொடித்தலம் இலங்குறு பொலம் கொள் மேனியான்

என்று கம்பன் அனுபவித்த பாடலின் கருத்து அட்டைப் படமாயிற்றாம்.

பிலவ வருடம்   புதுஅக்ரஹாரம் ச.வாசுதேவன்
தைத்திங்கள் முதல் நாள்   மாறன் பதிப்பகம்
பெங்களூர்

******



பதிப்புரை

மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் தாமே பதிப்பிக்க நோக்கங்கொண்டிருந்தவற்றுள், கம்ப ராமாயணமும் ஒன்று. அவர்கள் காலத்தில் நிறை வேருமல் போன அப்பணியை, அவர்கள் நினைவுச் சின்ன மாக விளங்கும் இந்நூல் நிலயம் மேற்கொண்டு, அவர்கள் சித்தஞ் செய்து வைத்திருந்த பலவகைக் குறிப்புக்களோடு பல ஏட்டுச் சுவடிகளையும் வைத்து ஆராய்ந்து, பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப் புக்கள், ஒப்புமைப் பகுதி, மேறகோள், பாட பேதங்கள் ஆகியவற்றுடன் கூடிய விரிவான முறையில் ஒவ்வொரு காண்டமாக வெளியிட்டு வருவதைத் தமிழன்பர்கள் அறிவர்.

இவ்வெளியீடுகளுள், பால, அயோத்திய காண் டங்கள் முதலில் குறிப்புரையோடு வெளிவந்தன. பின்னர், சுந்தரகாண்டத்தில் தொடங்கி, அதுவும், ஆரணிய, கிட்கிந்தா, யுத்த காண்டங்களும் முற்கூறிய விரிவான முறையில் ஒன்றன்பின் ஒன்ருக முறையே வெளியிடப் பெற்றன. யுத்தகாண்டம் நான்கு பகுதிகள் கொண்ட நான்கு புத்தகங்களாக உள்ளது. இவை வெளிவந்த பின், முதலிரண்டு காண்டங்களையும் இம்முறையில் வெளியிடுதற்குரிய ஏற்பாடுகள் செய்து, பாலகாண்டம் சென்ற 1967-இல் வெளியிடப்பெற்றது. இப்போது இவ்வயோத்தியா காண்டம் வெளிவருகின்றது.

இந்தப் பதிப்பு :

இக்காண்டத்தின் படலப் பெயர்களும், முறை வைப்பும், சுவடிகளிலும், பழைய அச்சுப் பிரதிகளிலும் பலவாறு வேறுபட்டுள்ளமையின், அவற்றை நன்கு ஆராய்ந்து, சிறந்ததென முந்திய பதிப்பில் மேற்கொள்ளப் பெற்ற முறையே இதிலும் மேற்கொள்ளப்பெற்றது. ஒவ்வொரு பாட்டுக்கும், மூலபாடம், பதவுரை, விசேடவுரை, இலக்கணக் குறிப்புக்கள், ஒப்புமைப் பகுதி, மேற்கோள்கள், பாடபேதங்கள் ஆகியவை முறையே தரப் பெற்றுள்ளன. இவை தெளிவாகப் புலனுகும் வகையில் வெவ்வேறு எழுத்துக்கள் பயன்படுத்தப் பெற்றுள்ளன. மூல பாடங்கள் சிறந்த பல திருத்தங்களைப் பெற்றுள்ளன. மிகையாகத் தோற்றிய சில பாடல்கள் குறையவும், சிறந்தனவாகக் காணப்பட்ட வேறு சில பாடல்கள் கூடவும் நேர்ந்து, முந்திய பதிப்பில் 1216 ஆக இருந்த பாடற்ருெகை இப்பதிப்பில் 1210 ஆகியுள்ளது. காண்ட முழுதுக்கும் தொடர்ந்த எண் ஒவ்வொரு பாட்டின் முதலிலும், அவ்வப் படலத்துப் பாடலெண் உரை முதலியவற்றின் முடிவிலும் முறையே கொடுக்கப் பெற்றுள்ளன. பொருட் குறிப்பான தலைப்புக்கள் ஆங்காங்கே அமைக்கப்பெற்றுள்ளன. வான்மீகத்தினின்று வேறுபடு மிடங்களும் பிறவும் அங்கங்கே உரையின் முடிவில் குறிக்கப்பெற்றுள்ளன. மிகையாகத் தோற்றிய பாடல்களும் அங்கங்கே தனியாகக் காட்டப்பெற்றுள்ளன. உரை யெழுதுங்கால், சிறந்த பாடல்களைத் துணிந்து கொள்வதற்கு அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு மிகவும் உதவியாக இருந்தது. வழக்கப்படி பிற்சேர்க்கையாக அமைந்துள்ள ‘அரும்பத முதலியவற்றின் அகராதி அரும்பதங்கள், தொடர்கள், கருத்துக்கள், உவமைகள்

ஆகியவற்றைக் கொண்டதாய்ப் படிப்போர்க்கு மிக்க பயனுள்ளதாயிருக்கும்.

இந்தக் காண்டத்துக்கு உரை யெழுதும் பணியை மேற்கொண்டு நிறைவேற்றியவர் பண்டிதர் ஸ்ரீ கோ. சேஷாத்திரி ஐயர் அவர்கள்.

அயோத்தியா காண்டம் முழுவதும் பல பக்கங்களை உடையதாக இருப்பதால் எடுப்பதற்கும் படிப்பதற்கும் வசதியாக இரண்டு பகுதிகளாக இப்போது வெளியிடப் படுகிறது. முதல் ஆறு படலங்கள் இந்தப் பகுதியில் இருக்கின்றன. ஏனையவை அடுத்த பகுதியில் உள்ளன.

நூல் நிலையத்தார்

முன்னுரை

திருவான்மியூரில் அமரர் டாக்டர் மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதையரவர்கள் திருப்பெயருடன் விளங்கும் இந்த நூல் நிலையத்தின் சார்பில் ஐயரவர்கள் பல்லாண்டுகளாகச் சேகரித்து வைத்துள்ள ஓலைச்சுவடிகளையும், பிரதி பண்ணி வைத்திருக்கும் கடிதப் பிரதிகளையும், அவ்வப்போது குறித்து வைத்திருக்கும் பலவகைக் குறிப்புக்களையும் பயன்படுத்தித் தமிழ் மொழியை வளம்படுத்தும் வகையில் பல நூல்களை வெளியிட வேண்டும் என்ற எண்ணம் உண்டாகி அதற்குரிய முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதுகாறும் வெளிவராத நூல்கள் சில வெளியாகி இருக்கின்றன. சில பழைய நூல்கள் முன்பு வெளியாகியிருந்தும் நல்ல முறையில் குறிப்புரை, ஆராய்ச்சி உரைகளுடன் இந் நூல் நிலையப் பதிப்பாக மலர்ந்துள்ளன.

ஐயரவர்கள் இறுதிக் காலத்தில் கம்ப ராமாயணத்தையும், தேவாரத்தையும் தமக்கே உரிய முறையில் வெளியிட வேண்டும் என்ற ஆர்வத்தை உடையவர்களாக இருந்தார்கள். இந்த நூல் நிலையத்தைத் தொடங்கியபொழுது இதன் அமைச்சராக இருந்தவரும் ஐயரவர்களுடைய புதல்வருமாகிய அமரர் கல்யாண சுந்தரையரவர்கள் கம்பராமாயணப் பதிப்பை இந்நூல் நிலைய வெளியீடாக வெளியிட வேண்டுமென்று வற்புறுத்தி அதற்கு ஆவன செய்தார்கள். பால காண்டமும் அயோத்தியா காண்டமும் குறிப்புரையுடன் முதலில் வெளியாயின.

பாடல்களின் முழுப் பொருளும் தெளிவாக விளங்கும்படி பதவுரை இருந்தால் படிப்பவர்களுக்கு உதவியாக இருக்கும் என்று பல அன்பர்கள் கருதினர். அதன்படி ஆரணிய காண்டம் முதலியவற்றைப் பதவுரை, கருத்துரை, விசேடவுரை முதலியவற்றுடன் வெளியிடும் முயற்சி தொடங்கியது. தக்க புலவர்களைக் கொண்டு விரிவான வகையில் உரை எழுதச் செய்து அந்தக்

காண்டங்களை இந் நூல் நிலையம் வெளியிட்டது. அப்பால் அந்த முறையில் பால காண்டமும் வெளியாயிற்று. இப்போது அயோத்தியா காண்டம் வெளியாகிறது.

சுந்தர காண்டம், அயோத்தியா காண்டங்களைத் தவிர மற்றைக் காண்டங்களை வெளியிடுவதற்கு அரசினருடைய பொருளுதவி கிடைத்தது. அந்த அந்தக் காண்டத்தின் முகவுரையில் அந்த உதவி பற்றிய செய்திகள் காணப்படும்.

அயோத்தியா காண்டம் உரையுடன் ஒரே புத்தகமாக வெளியிட்டால் அளவிற் பெரியதாக இருக்கும் என்ற எண்ணத்தால் இரண்டு தொகுதிகளாக வெளியிடப்படுகிறது. முதல் தொகுதியில் ஆறு படலங்களும், இரண்டாவது தொகுதியில் ஏழு படலங்களும் உள்ளன. காண்டம் முழுவதற்கும் அமைந்த செய்யுள் முதற்குறிப்பகராதி, அரும்பதம் முதலியவற்றின் அகராதி என்னும் இரண்டும் இரண்டாம் தொகுதியில் இணைக்கப்பட்டுள்ளன.

ஐயரவர்கள் தாம் வாழ்ந்த காலத்தில் அவ்வப்போது கம்ப ராமாயண சம்பந்தமாகப் பல குறிப்புக்களைக் குறித்து வந்தார்கள். பல ஏட்டுச் சுவடிகளைப் பார்த்துப் பாட பேதங்களைக் குறித்து வைத்தார்கள். எப்போதுமே ஏதேனும் தமிழ்ப் பணியில் ஈடுபட்டிருந்த அவர்களுக்குக் கம்ப ராமாயணத்தில் சிந்தை செலுத்திப் பாட நிச்சயம் செய்து குறிப்பு எழுதும் பணியைத் தொடங்கும் வாய்ப்பு உண்டாகவில்லை. பல பல நூல்களைப்பற்றிய குறிப்புக்களைச் சமயம் நேரும்போதெல்லாம் குறித்து வைப்பதும், பாட பேதங்களைக் குறித்து வைப்பதும், ஒப்புமைப் பகுதிகளை எழுதி வைப்பதும் அவர்கள் வழக்கம். ஒரு நூலை ஆராயப் புகும்போது முதன் முதலில் அதற்கு ஒரு அகராதி எழுதி வைத்துக் கொள்ளுவார்கள். பிறகு ஓலைச் சுவடிகளைப் பார்த்துப் பாட பேதங்களையெல்லாம் தொகுப்பார்கள். எந்தப் பாடம் சிறந்தது என்பதை நிர்ணயிக்க அந்த அகராதி துணை புரியும். ஒரு சொல்லை எத்தனை இடங்களில் எந்த எந்தப் பொருளில் கவிஞர் ஆள்கிறார் என்பதை அறிய அந்த அகராதி உதவும். அதன் துணையினால் கவிஞனுடைய சொல்லாட்சியைத் தெரிந்து கொள்ளலாம். சில சொற்களைச் சில கவிஞர்கள் அடுத்தடுத்து ஆள்வார்கள். ஒரே சொல்லைச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி பொருள் அமையும்படி அமைப்பார்கள். நூல் முழுவதிலும் உள்ள சொற்களையும் தொடர்களையும்

தொகுத்து அகராதி செய்து வைத்துக்கொண்டு பார்த்தால் இந்த நெறி முறை தெரியவரும்.

ஐயரவர்கள் தாம் பதிப்பிக்காத நூல்களுக்கும் அகராதிகளைச் சித்தம் செய்து வைத்திருந்தார்கள். தேவாரம், திவ்யப் பிரபந்தம், பெரியபுராணம், திருக்கோவையார், திருக்குற்றாலத் தலபுராணம் முதலிய நூல்களில் உள்ள சொற்களையும் கருத்துக்களையும் தொகுத்து அகர வரிசைப்படுத்தி அகராதியைச் சித்தம் செய்து வைத்தார்கள். கம்ப ராமாயணத்தை ஆராயும் வாய்ப்பு நேர்ந்திருந்தால் முதலில் கம்ப ராமாயணம் முழுவதற்கும் ஓர் அகராதியைத் தொகுத்து வைத்துக்கொண்ட பிறகே அந்த நூலை ஆராயப் புகுந்திருப்பார்கள். தேவாரத்துக்கு அகராதி அமைத்த அவர்கள் கம்பராமாயண அகராதியைத் தொகுக்கவில்லை. பின்பு செய்யலாம் என்று எண்ணியிருந்தார்கள்.

அவர்களுடைய பதிப்பாகக் கம்பராமாயணம் வெளிவரும் பேற்றைத் தமிழகம் பெற்றிருக்கவில்லை. கம்ப ராமாயணத்துக்குப் பல பதிப்புகள் இருந்தாலும் ஐயரவர்களுடைய பதிப்பு இல்லையே என்ற குறை புலவர் பெருமக்களின் உள்ளத்தினின்றும் என்றும் நீங்காது.

ஐயரவர்கள் குறித்துவைத்திருந்த குறிப்புக்களைப் பயன்படுத்திக்கொள்ளும் வாய்ப்பு இந்தப் பதிப்பினால் ஏற்பட்டது. கம்பராமாயணக் கருப்பொருள் என்ற ஓர் ஏட்டுச்சுவடி இந்த நூல் நிலையத்தில் இருக்கிறது. அதையும் இந்தப் பதிப்புக்கு பயன்படுத்திக் கொண்டோம். ஐயரவர்கள் பதிப்பித்த நூல்களில் அடிக் குறிப்பில் ஒப்புமைப் பகுதியாகக் கம்பராமாயணப் பாடல்களும், பாடற் பகுதிகளும் இருக்கின்றன. அவை பாட நிச்சயம் செய்யவும் பொருளைத் தெரியவும் பயன்பட்டன. இந்த அயோத்தியா காண்டப் பதிப்புக்குப் பயன்பட்டவை:

1. இந்த நூல் நிலையத்தில் உள்ள கம்பராமயண ஓலைச்சுவடிகள் 9
2. கம்பராமாயணக் கையெழுத்துக் கடிதப் பிரதிகள் 2
3. கம்பராமாயணக் கருப்பொருள் சுவடிகள் 2
4. வசனமாக உள்ள சுவடிகள் 2
5. பல அச்சுப் பிரதிகள்

பெருக வழங்கும் பழைய அச்சுப் பிரதிகளில் உள்ள படலப் பெயர்கள் பாடல்களின் எண்கள் ஆகியவை சில மாற்றங்கள் பெற்று இப் பதிப்பில் அமைந்துள்ளன.

வால்மீகி ராமாயணத்திலிருந்து வேறுபடும் இடங்கள் அங்கங்கே குறிக்கப் பெற்றுள்ளன. பாட பேதங்களை அந்த அந்தப் பாடலின் உரையின் பின்னே காணலாம்.

கம்ப ராமாயணத்தைப்பற்றிய சொற்பொழிவுகளும், கம்பன் விழாக்களும், கம்ப ராமாயணப் பட்டிமண்டபங்களும் இப்போது தமிழ் நாடெங்கும் நடைபெறுகின்றன. காரைக்குடியில் பல ஆண்டுகளாக நடைபெற்றுவரும் கம்பன் திருநாள் பெரிய தமிழ்த் திருவிழாவாகவே அமைந்து சிறப்புப் பெற்று விளங்குகிறது. கம்ப ராமாயணத் திறனாய்வு ஓரளவுதான் நடைபெற்றிருக்கிறது. எத்தனையோ வகையாகக் கம்ப ராமாயண ஆராய்ச்சியை நடத்தலாம். வ. வெ. சு. ஐயரவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய நூல் நல்ல முறையில் இந்தக் காப்பியத்தின் திறனாய்வாக அமைந்திருக்கிறது. இந்தக் காப்பியத்தைத் தெலுங்கில் மொழி பெயர்த்திருக்கிறார்கள். வடமொழியில் சில பகுதிகள் வெளியாகியுள்ளன. ஹிந்தி மொழி பெயர்ப்பும் உண்டு.

இருப்பினும் கம்பராமாயணத்தை இன்னும் பல பல கோணங்களில் ஆராய்ந்து பல பல நூல்களை எழுத இடம் உண்டு. டாக்டர் பட்டம் பெறுகிறவர்களில் சிலர் கம்பராமாயண ஆராய்ச்சியில் ஈடுபடுகிறார்கள். கம்பனுடைய காப்பிய நெறியையும், பாத்திரப் படைப்பையும், சொற்பொருட் சுவையையும், அணி வகைகளையும், சுவை விரிவையும், இவைபோன்ற பிறவற்றையும் ஆராய இனிமேல் பல புலவர்கள் முந்துவார்கள் என்றே நம்புகிறோம்.

கம்பராமாயணப் பணியில் ஓரளவு இந்த நூல் நிலைய வெளியீடுகள் துணையாக இருக்கும் என்பது எங்கள் எண்ணம். ஐயரவர்கள் இந்தப் பெருங்காப்பிய ரத்தினத்தைப் பதிப்பித்திருந்தால் எப்படி இருந்திருக்கும்! ஆம்! அந்தப் பதிப்பை இமயமென்று யாவரும் வாழ்த்தியிருப்பார்கள்.

அவர்கள் பெயரால் நிலவும் இந்த நூல் நிலையத்தில் ஏதோ ஒரு வகையில் இந்தப் பதிப்பை வெளியிட முடிந்ததே என்று ஆறுதல் பெறுகிறோம். வெவ்வேறு காண்டங்களுக்கு வெவ்வேறு

புலவர்கள் உரை எழுதினார்கள். இந்தக் காண்டத்துக்குப் புலவர் திரு. கோ. சேஷாத்திரி ஐயரவர்கள் உரை எழுதினார்கள். அவர்களுக்கு இந்த நூல் நிலையத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த நூல் நிலையத்தின் தலைவியாக விளங்கும் ஸ்ரீமதி ருக்மிணி தேவி அம்மையாருக்குக் கம்பராமாயணம் முழுவதும் விரிவுரையுடன் வெளி வரவேண்டுமென்ற ஆவல் மிகுதியாக இருந்தது. அவர்கள் பொருளுதவியும் ஊக்கமும் இந்தப் பணியை நிறைவேற்றத் துணையாக இருந்தன.

இந்த நூல் நிலைய ஆட்சிக் குழுவின் தலைவர் ஸ்ரீ டி. வி. விசுவநாதையரவர்களின் ஆதரவும் தூண்டுதலும் இந்தப் பதிப்பை உருவாக்கப் பெரிதும் காரணமாக இருந்தன. இந்த நூல் நிலையத்தைத் தமிழ் நாட்டின் சுடர்மணி விளக்காக ஆக்க வேண்டும் என்பது அவர்களுடைய வேணவா. தமிழ் மக்களின் ஆதரவும் அரசியலாரின் உதவியும் கிடைத்தால் அவர்கள் அவா நிறைவேறும்.

தமிழ் மக்கள் இந்த நூல் நிலையத்துக்குப் பல வகையில் உதவி செய்யலாம். இதுகாறும் வெளியாகியுள்ள நூல்களை வாங்கி ஆதரவு தரலாம். நூற்றுக்கணக்கான சிறு நூல்கள் இன்னும் ஏட்டுச் சுவடிகளுக்குள் மறைந்து வெளிப்படாமல் இருக்கின்றன. செல்வர்களில் ஒவ்வொருவர் ஒவ்வொரு நூலை வெளியிடப் பொருள் வழங்கி உதவி புரியலாம். நூலகங்கள் இந்த வெளியீடுகளை வாங்கி நலம் செய்யலாம்.

அரிய நூல்கள் பலவற்றைக்கொண்ட பெருங்கருவூலமாகிய இந்த நூல் நிலையத்தில் உள்ள செல்வங்கள் தக்க வகையில் வெளி வருமானால் தமிழகம் பெருமைப்படும் வகையில் தமிழ் மொழியின் இலக்கிய வளம் பெருகும் என்பது திண்ணம்.

திருவான்மியூர்,
20—6—1972

நூல் நிலையத்தார்

உள்ளுறை

இப்பதிப்பில் எடுத்தாண்டுள்ள நூல்கள் முதலியவற்றின் முதற் குறிப்பகராதி

அகநா-அகநானூறு
அடியார்க்கு-அடியார்க்கு நல்லா ருரை
அரிச்சந்திர-அரிச்சந்திர புராணம்
ஆசாரக்-ஆசாரக் கோவை
இராச. உலா-இராசராச சோழ னுலா
இலக்கணவிளக்-இலக்கண விளக்கம்
இலிங்க-இலிங்க புராணம்
இளம்-இளம்பூரணருரை
இறை-இறையனுரகப் பொருள்
இனிய-இனியவை நாற்பது
ஈங்கோய்-ஈங்கோய்மலையெழுபது
ஐங்குறு-ஐங்குறு நூறு
கந்த-கந்தபுராணம்
கலி-கலித்தொகை
கலிங்கத்துப்-கலிங்கத்துப் பரணி
கஜேந்திர-கஜேந்திர மோட்சம்
காஞ்சிப்-காஞ்சிப் புராணம்
கார்-கார் நாற்பது
குமரகுருபர-குமரகுருபர சுவாமி கள் பிரபந்தத் திருட்டு
குமார சம்-குமார சம்பவம்
குலோத். உலா-குலோத்துங்க சோழனுலா
குறள்-திருக்குறள்
குறிஞ்சி-குறிஞ்சிப் பாட்டு
குறுந்-குறுந்தொகை
கூர்ம-கூர்ம புராணம்
சருக்-சருக்கம்
சிதம்பர மும்மணிக்-சிதம்பர மும் மணிக்கோவை
சிலப்-சிலப்பதிகாரம்
சிறுபாண்-சிறுபாணாற்றுப் படை
சீவக-சீவகசிந்தாமணி
சுந்தர-சுந்தரமூர்த்தி நாயனர் தேவாரம்
சூ-சூத்திரம்
சூளா-சூளாமணி
தக்க-தக்கயாகப்பரணி
தஞ்சை-தஞ்சைவாணன்கோவை
தணிகை-தணிகைப் புராணம்
தனிப்-தனிப் பாடல்
திணைமாலை-திணைமாலை நூற் றைம்பது
திணைமொழி-திணைமொழி யைம்பது
திரி-திரிகடுகம்
திருக்குற்ருலத்-திருக்குற்ருலத் தல புராணம்
திருச்சந்த-திருச்சந்த விருத்தம்
திருக், திருச்சிற்-திருச்சிற்றம்பலக் கோவையார்
திருஞா-திருஞானசம்பந்தர் தேவாரம்
திருநாவுக்-திருநாவுக்கரசர் தேவாரம்
திருவள்ளுவ-திருவள்ளுவ மாலை
திருவா-திருவாசகம்
திருவாய்-திருவாய்மொழி
திருவால-திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்
திருவிளை-பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம்
திவ்-திவ்வியப்பிரபந்தம்
தே-தேவாரம்
தொல்-தொல்காப்பியம்
ந, நச்-நச்சினர்க்கினியருரை
நள-நளவெண்பா
நற்-நற்றிணை
நன்-நன்னூல்

நாச்சியார்-நாச்சியார் திருமொழி
நாலடி-நாலடியார்
நான்மணி-நான்மணிக் கடிகை
நீதிநெறி-நீதிநெறி விளக்கம்
நெடுதல்-நெடுநல்வாடை
நைடத-நைடதம்
பட்டினத்-பட்டினத்துப் பிள்ளையார் பாடல்
பட்டினப்-பட்டினப் பாலை
பதி-பதிகம்
பதிற்-பதிற்றுப்பத்து
பதினோராந்-பதினோராந் திருமுறை
பரி-பரிபாடல்
பரிமேல்-பரிமேலழகருரை
பழ-பழமொழி நானூறு
பாகவத-பாகவத புராணம்
பி-ம்-பிரதிபேதம்
பிரபு-பிரபுலிங்க லீலை
புறப்.-புறப்பொருள் வெண்பா மாலை
புறநா-புறநானூறு
பெரிய-பெரிய புராணம்
பெரியதிரு-பெரிய திருமொழி
பெரியாழ்-பெரியாழ்வார் திருமொழி
பெருங்-பெருங்கதை
பெரும்பாண்-பெரும்பாணாற்றுப் படை
பெருமாள்-பெருமாள் திருமொழி
பேர்-பேராசிரியருரை
பொருந-பொருநராற்றுப்படை
மணி-மணிமேகலை
மதுரைக்-மதுரைக் காஞ்சி
மலைபடு-மலைபடுகடாம்
மு-முழுதும்
முருகு-திருமுருகாற்றுப்படை
முல்லைப்-முல்லைப் பாட்டு
மேருமந்தர-மேருமந்தர புராணம்
மேற்-மேற்கோள்
யா.கா-யாப்பருங்கலக்காரிகை
யா.வி-யாப்பருங்கல விருத்தி
ரகு-ரகுவம்சம்
வளையா-வளையாபதி
விசேட-விசேடவுரை
விசேடக்-விசேடக் குறிப்பு
வி.பா-வில்லிபுத்தூரார் பாரதம்
வீர-வீரசோழியம்



உ

ஸ்ரீராமஜயம்

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்

இராமாயணக் கதையில் அயோத்தியில் நிகழ்ந்த வரலாறுகளைக் கூறும் பகுதி என்பது பொருள்.

பாலகாண்டத்தில் இராமாயணக் கதைக்குரிய தலைவனான இராமன் சூரிய குலத்தில் பிறந்து வசிட்டர்பால் கல்விகற்றுத் தாடகை முதலியோர்களை வென்று சிவபிரானது வில்லை முறித்துத் திருமகளாகிய சீதாபிராட்டியைத் திருமணம் செய்துகொண்ட வரலாறு கூறப் பெற்றது. இக்காண்டத்தில் இராமன் கடைப்பிடித்த பிதுர்வாக்கிய பரிபாலனம் என்ற சாமானிய தருமமும் இலக்குவன் பகவானுக்குச் சேஷன் (அடியவன்), பரதன் பகவானுக்குப் பரதந்த்ரன் (சார்ந்திருப்பவன்), சத்துருக்கனன் பாகவதர்களுக்குப் பரதந்த்ரன் என்ற விசேஷ தர்மங்களும் கூறப்படுகின்றன. இன்னும் பாலகாண்டத்தில் ஸ்ரீதேவியின் சேர்க்கையும் இந்தக் காண்டத்தில் பூதேவியின் சேர்க்கையும் சொல்லப்படுகின்றனவென்றும் முன் காண்டத்தில் பரத்துவமும் இக் காண்டத்தில் சௌலப்யமும் வர்ணிக்கப்படுகின்றனவென்றும் இவ்வாறு காண்டங்களின் தன்மைகளையும் அவற்றிலடங்கியிருக்கும் மறைபொருள்களையும் பற்றிப் பெரியோர்கள் பல கருத்துக்களைக் கூறுவர்.

கடவுள் வாழ்த்து

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

1. வானின் றிழிந்து வரம்பிகந்த மாபூ தத்தின் வைப்பெங்கும்
ஊனு முயிரு முணர்வும்போ லுள்ளும் புறத்து முளனென்ப
கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமை யிழைப்பக்கோ றுறந்து
கானுங் கடலும் கடந்திமையோ ரிடுக்கண் டீர்த்த கழல்வேந்தை.

[பதவுரை] கூனும் - கூனியாகிய மந்தரையும், சிறிய கோ தாயும் - இளைய பட்டத்து அரசியும் தாயுமான கைகேயியும், கொடுமை இழைப்ப - தனக்குக் கொடுமை செய்ய, கோல் - அரசாட்சியை, துறந்து - கைவிட்டு, கானும் - காட்டையும், கடலும் - கடலையும், கடந்து-தாண்டிச் சென்று (இராவணாதியரை அழித்து), இமையோர் - தேவர்களின், இடுக்கண் - துன்பங்களை, தீர்த்த - நீக்கிய, கழல் வேந்தை - வீரக்கழல் பூண்ட அரசனாகிய இராமபிரானை, வான் நின்று இழிந்து - மூலப் பிரகிருதியினின்று தோன்றி, வரம்பு இகந்த - எல்லை நீங்கிய, மா பூதத்தின் - பெரிய பூதங்கள் ஐந்தினாலான, வைப்பு எங்கும் - உலகங்களெங்கும், ஊனும் உயிரும் உணர்வும் போல் - உடம்பும் உயிரும் உணர்வும்போல், உள்ளும் புறத்தும் - உள்ளேயும் புறத்தேயும், உளன் - இருக்கின்றனன், என்ப - என்று கூறுவர்.

இப்பாட்டு ஒருவாறு இராமாயணக் கதையின் சுருக்கம் போல அமைந்துள்ளது. வரம்பிகந்த மாபூதம் : "ஈறில் வரம்பில் பூதம்" (நகர் நீங்கு. 118). பூதத்தின் வைப்பு : - ஐம்பூதங்களாலியன்ற உலகம்; "பூதமைந்தும் விலங்கிய விகாரப் பாட்டின் வேறுபா டுற்ற வீக்கம்" (சுந்தர. 1). "நிலம், தீ, நீர், வளி, விசும்போ டைந்தும், கலந்த மயக்கம் உலகம்" (தொல். மரபு. 89); குறள் 11 - ஐயும் காண்க. "ஊனைக் குறித்த உயிரெல்லாம்" (குறள். 1013). உடலில் உயிரும் உணர்வும் பரந்திருத்தல் ஐம்பூதங்களில் பரம்பொருள் கலந்திருத்தலுக்கு உவமை. ஊனைப்போல் புறத்தும், உயிரைப்போல் உள்ளும், உணர்வைப்போல் உள்ளும் புறத்தும் என்க. ஒப்பு : "வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி, ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க், கோனாகி யான்எனதென் றவரவரைக் கூத்தாட்டு, வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே" (திருவா. திருச். 15). கூன் - மந்தரையென்னும் கூனி; ஆகுபெயர். சிறிய கோத்தாய் - பட்டத்துத் தேவியரில் இராமன் தாய்க்கு அடுத்த இளையவளான கைகேயி. கோல் - அரசாட்சி : ஆகுபெயர். துறந்து : தானே நீங்கியதால், இழந்து என்னாது துறந்து என்றார் என்பது பழைய உரை; வான் நின்றிழிந்து - திருவைகுந்தத்தினின்று இறங்கி என்று கொண்டு, வைப்பெங்கும் உளனென்ப என்று கூட்டிப் பொருள் செய்வாருமுண்டு.

(பிரதிபேதம்) 1. வானின்றிழிந்த ; வரம்பிகழ்ந்த, வரம்பிகழ்ந்து; ஐம்பூதத்தின் ; வைப்பெய்தி.

2. உணர்வுமுயிரும் ; புறனும் ; என்பர், என்பார், என்பான்.

3. கோட்டாயும் ; கொடுமை இழப்பக் கோற்றுறந்து;குடைதுறந்து.

4. இடுக்கண் காத்த ; கழல்வேந்தே, கழல்வீரன்.

1. மந்திரப் படலம்

இது, தசரதன் இராமபிரானுக்கு முடிசூட்டுவதுபற்றிப் புரோகிதர் அமைச்சர் முதலானவரோடு ஆலோசனை செய்ததைக் குறிக்கும் படலம் என விரியும்.

தயரதன் தன் மந்திராலோசனைச் சபையை அடைதல்
(கலிவிருத்தம்)

2. மண்ணுறு முரசின மழையி னார்ப்புறப்
பண்ணுறு படர்சினப் பரும யானையான்
கண்ணுறு கவரியின் கற்றை சுற்றுற
எண்ணுறு சூழ்ச்சியி னிருக்கை யெய்தினான்.

[பதவுரை] பண் உறு - அலங்காரம் செய்யப்பெற்ற, படர்சினம் - மிகுந்த கோபத்தையும், பருமம் - கழுத்து மெத்தையையும் (உடைய), யானையான் - பட்டத்து யானையையுடைய தசரதன், மண் உறு - மார்ச்சனை அமைந்த, முரசு இனம் - முரசங்களின் தொகுதி, மழையின் - மேகங்களைப் போல, ஆர்ப்பு உற - முழங்கவும், கண் உறு - காண்டற்கு ஒத்த, கவரியின் கற்றை - கவரிமானின் மயிர்க்கற்றையால் அமைந்த சாமரை, சுற்று உற - (இருபுறங்களிலும்) இரட்டவும், எண் உறு - ஆராய்தற்கு உற்ற, சூழ்ச்சியின் இருக்கை - ஆராய்ச்சி மண்டபத்தை, எய்தினான் - அடைந்தான்.

மண்ணுறு முரசு : "மண்ணுறு முரசுடை மன்னர் மாலையில்" (157); முரசத்தில் ஒரு வகை மண்பூசுதல் வழக்கம். பருமம்—இதனைக் கலணை என்றும் கூறுவர். பருமயானை : 83, 1104; சீவக : 410, 2211; கலித். 97. கண்ணுறு கவரி - அழகு பொருந்திய கவரி எனலும் ஆம். சூழ்ச்சியின் இருக்கை - மந்திராலோசனை மண்டபம்.

(பி - ம்.) 3. கவரியங் கற்றை.
4. சூழ்ச்சியில்; ஏயினான்.

தசரதன் தன் பிராயம் முதிர்ந்த நிலையைத் தன் காதினுள் தோன்றிய நரைமயிர் ஒன்றினால் அறிவுறுத்தப்பெற்றுத் தன் மூத்த மகனான இராமபிரானுக்கு முடிசூட்டித் தான் தவம் செய்யப் போக விரும்பியதைத் தன் புரோகிதர் அமைச்சர் ஆகியவரோடு ஆலோசிக்கக் கருதினான் என்று குறிக்கும் இரு பாடல்களைக் கொண்டு இப்படலம் தொடங்குகிறது.

[அப்பாடல்கள் அதிகமானவை என்று கீழே காட்டப் பெறுகின்றன.]

மன்னனே யவனியை மகனுக் கீந்துநீ
பன்னருந் தவம்புரி பருவ மீதெனக்
கன்னமு லத்தினிற் கழற வந்தென
மின்னெனக் கருமைபோய் வெளுத்த தோர்மயிர்.

[கன்னமூலம் - காதின் அடி]

தீங்கிழை யிராவணன் செய்த தீமைதான்
ஆங்கொரு நரையதா வணுகிற் றாமெனப்
பாங்கில்வந் திடுநரை படிமக் கண்ணடி
ஆங்கெதிர் கண்டன னவனி காவலன்.

[படிமக்கண்ணடி - உருவைக் காணும் நிலைக்கண்ணாடி.] (1)

3. புக்கபின் னிருபரும் பொருவில் சுற்றமும்
பக்கமும் பெயர்கெனப் பரிவி னீக்கினான்
ஒக்கநின் றுலகளித் தியோகி னெய்திய
சக்கரத் தவனெனத் தமிய னாயினான்.

புக்கபின் - (மன்னன் சூழ்ச்சியின் இருக்கையுள்) வந்த பிறகு, (தன்னோடு வந்த) நிருபரும் - அரசர்களும், பொருஇல் - ஒப்பற்ற, சுற்றமும் - உறவினர்களும், பக்கமும் - தன் அன்பிற்கு உரிய நண்பர் களும், பெயர்க - இவ்விடத்தை விட்டு நீங்குக, என - என்று சொல்லி, பரிவின் - அன்புடன், நீக்கினான் - (அவர்களை) நீங்கச் செய்தான்: (பின்பு அவன்) ஒக்க நின்று - (யாவரிடமும்) சமமாக நின்று, உலகு அளித்து - உலகத்தைக் காத்து, யோகின் எய்திய - யோக நித்தி ரையை அடைந்த, சக்கரத்தவன் என - சக்கரம் தரித்த திருமாலைப் போல, தமியன் ஆயினான் - தனித்தவன் ஆயினான்.

நிருபர் முதலியோர் அரசனை அரண்மனையினின்றும் தொடர்ந்து வந்தவராவர். பக்கம் - பக்ஷம் என்பதன் திரிபு; பக்ஷம் - அன்பு; ஆகு பெயராய் அன்புக்குரியவரைக் குறித்தது. பக்கத்தார் எனினும் ஆம். தயரதனுக்கும் திருமாலுக்கும் ஒப்புமை: சக்கரமுடைமையாலும், உலகளித்தலாலும், தமியனாதலாலும் என்க. யோகு - யோக நித்திரை அறிதுயில். யோகினெய்திய சக்கரத்தவன்; "பிறிவருந் தம்பியும் பிரியப் பேருல, கிறுதியிற் றானென விருந்த வேந்தலை" (கிட்கிந்தா. 676.)

(பா - ம்.) 1. பொருவில் சேனையும்.
2. பெயர்கெனப்; பரிவு நீக்கினான், பணிந்துநீக்கினான், பலவும் பன்னினான்.
3. யோக மெய்திய; உலகொழித்தியோகின்; எய்திடும்; நீங்கிய, வைகிய.

(2)

மந்திரச் சுற்றத்தாரை மன்னன் வருவித்தல்

4. சந்திரற் குவமைசெய் தரள வெண்குடை
அந்தரத் தளவுநின் றளிக்கு மாணையான்
இந்திரற் கிமையவர் குருவை யேய்ந்ததன்
மந்திரக் கிழவரை வருகென றேவினான்.

சந்திரற்கு உவமை செய் - சந்திரனுக்கு உவமையாக்குதற்கு உரிய, தரளம் - முத்துக்களாலாகிய, வெண்குடை - வெண்மையான (கொற்றக்) குடையானது, அந்தரத்து அளவு நின்று - ஆகாயம் வரை ஓங்கி நின்று, அளிக்கும் - காவல புரியும், ஆணையான் - ஆணைச் சிறப் புடைய தசரதன், இந்திரற்கு - தேவ அரசனுக்கு, இமையவர் குருவை ஏய்ந்த - வியாழ பகவானை ஒத்த, மந்திரம் கிழவரை - தன் மந்திரச் சுற்றத்தவரை, வருக என்று ஏவினான் - வருக என்று பணித்தான்.

இச்செய்யுளில் தயரதனைத் தேவலோகம் வரையில் அளிக்கும் ஆணையுடையவனாகவும் இந்திரனை ஒத்தவனாகவும் கூறுகின்றார். சந்திரற்கு உவமைசெய் குடை: "சென்னிவெண் குடைபோன்றிவ் வங்க ணுலகளித்தலான்" (சிலப். 1 ; 1-3). குடை அளித்தல்: "குடை... வருந்திய குடிமறைப் பதுவே" (புறநா. 35). அந்தரம் - தேவலோகம். தயரதன் குடை அந்தரத்தளவு நின்றளித்தமை, "இன்றளிர்க்கற் பகநறுந்தே னிடைதுளிக்கு நிழலிருக்கை யிழந்து போந்து, நின்றளிக்குந் தனிக்குடையி னிழலொதுங்கிக் குறையிரந்து நிற்ப நோக்கி...நீகொண், டன்றளித்த வரசன்றோ புரந்தரனின் றாள்கின்ற தரச வென்றான்" (பால : 323) என்றதால் என்க. தயரதனுக்கு இந்திரன் (பால : 329). இமையவர் குரு - பிருகஸ்பதி. மந்திரக் கிழவர் - அமைச்சர், புரோகிதர் முதலியோர். அவர்களுள் ஒவ்வொரு வரும் இமையவர் குருவை ஒத்திருந்தனர் என்பது இங்குக் குறிக்கப்பெற்றது.

(பி - ம்.) 1. உவமைய.
2. ஆற்றலான்.
3. யேய்ந்த நன், யேய்ந்தனன், யேமிகர்.
4. கிழவனை, கிழவரும்; ஏயினான். (3)

வசிட்டர் வருகை

5. பூவரு பொலங்கழற் பொருவின் மன்னவன்
காவலி னாணைசெய் கடவு ளாமெனத்
தேவரு முனிவரு முணருந் தேவர்கள்
மூவரி னல்வனா முனிவந் தெய்தினான்.

பூ வரு - பொலிவு பொருந்திய, பொலம் கழல் - பொன்னாலான வீரக் கழலை அணிந்த, பொருவு இல் மன்னன் - (தனக்குப்) பிறர் ஒப்பில்லாத அரசனான தயரதன், காவலின் - ஆட்சியில், ஆணைசெய் -

கட்டளை இடும் (நிலையைப் பெற்ற), கடவுள் ஆம் என - கடவுளாக உள்ளான் என்னும்படி, தேவரும் முனிவரும் உணரும் - தேவர்களும் முனிவர்களும் தேடி அறியும், தேவர்கள் மூவரின் - (நான்முகன், திருமால், சிவபிரான் என்று சொல்லப்பெறும்) மூவர்களுடன், நால்வன் ஆம் - நாலாமவனாக மதித்தற்குரிய, முனி - வசிட்ட முனிவன், எய்தினன் - வந்து சேர்ந்தான்.

பூவரு - பூத்தொழிலமைந்த என்றும் பொருள் கொள்ளலாம். பொலம் கழல் - பொன்கழல். பொருவில் என்பதற்குப் பொருகின்ற வில்லைத் தாங்கும் என்று பொருள் கூறலும் ஆம். தயரதன் காவலில் அவனுக்கு ஆணையிடும் ஆற்றலுடையவர் வசிட்டர் என்பது கூறப் பெற்றது.

மூவரில் நால்வன்: "இறைவர்கண் மூவ ரென்ப தெண்ணிலா ரெண்ண மேதான், அறைகழ லனும னோடு நால்வரே முதல்வ ரம்மா" (யுத்த. 25). புரோகிதரும் மந்திராலோசனைச் சபையில் இருத்தற் குரியவர்; இங்கே வசிட்டர், புரோகிதரும் குலகுருவுமாகி வேறு பல சிறப்புக்களும் உடைமையால் அவர் வருகை முதலிற் கூறப்பெற்றது. கடவுளாமென, முனி வந்தெய்தினன் என்றியைக்க.

(பா - ம்.) 1. பூவரும் ; பொலன் கழல்.
2. காவலினாணையின் ; கடவுடாமெனத்.
3. உணர்ந்த தேவர், தேடும் தேவர், நினையும்தேவர்
4. மூவரினல்வராம்; எய்தினர். (4)

இதன்பின் வரும் அதிகப் பாடல் ஒரு சுவடியில் காணப் படுகின்றது:

எய்திய முனிவர னிணைகொ டாமரைச்
செய்யபூங் கழலவன் சென்னி சேர்த்தபின்
வய்யகத் தரசரும் மதிவல் லாளரும்
வெய்தினல் வருகென மேயி னனரோ.

மந்திரச் சுற்றத்தாரின் இயல்பு

6. குலமுதற் றொன்மையுங் கலையின் குப்பையும்
பலமுதற் கேள்வியும் பயனு மெய்தினர்
நலமுத னலியினு நடுவு நோக்குவார்
சலமுத லறுத்தருந் தருமந் தாங்கினர்.

(அமைச்சர்) குலம் முதல் தொன்மையும் - குடிப் பிறப்பின் முதன்மையான பழமையையும், கலையின் குப்பையும் - கலை அறிவுகளின் தொகுதியையும், பல முதல் கேள்வியும் - பலவகைப்பட்ட முதன்மை யான கேள்வியறிவையும், பயனும் - (அவற்றால் அடைந்த) பயன் களையும், எய்தினர் - பெற்றவர்கள்; நலம் முதல் நலியினும் - (தமக்கு

வரத்தக்க) நலன்கள் அடியோடு கெடுவதாயினும், நடுவு நோக்கு வார் - நடுநிலையில் நிற்பதையே கருதுபவர்கள்; சலம் முதல் அறுத்து சினம் முதலிய குற்றங்களைக் களைந்து, அரு தருமம் தாங்கினார் அருமையான தருமங்களைத் தாங்கினவர்கள்.

இதுமுதல் ஆறு பாடல்களில் தயரத மன்னனுடைய அமைச்சர் களின் அருமை பெருமைகளையும், அவர்கள் ஆலோசனை மண்டபத் துக்கு வந்து சேர்ந்தமையையும் கூறுகின்றார்.

குலமுதல் தொன்மை - நல்ல குலம் முதலிய பழைய சிறப்புக்கள் எனலும் ஆம். அமைச்சர் தொல்குடிப் பிறப்பு, கல்வி, கேள்விகளால் ஆன சிறப்பு, நடு நோக்கு, சினமின்மை ஆகியவற்றை உடைய ராதல் வேண்டுமென்பது இங்குக் கூறப்பெற்றது. "வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி, பண்பிற் றலைப்பிரித லின்று" (குறள். 955) என்பது தொல்குலத்தின் பண்பினைக் கூறுவதாகும். குப்பை - தொகுதி. சலம் - கோபம்; வஞ்சனையும் ஆம். சலமுத லறுத்து - சலத்தை வேரோடு களைந்து என்றலுமாம். தருமம் தாங்குதல் - தாம் தருமத்தை மேற்கொண்டொழுகுதலும், உலக மக்க ளிடையே அறம் நலியாமற் பாதுகாத்தலும்.

(பி - ம்.) 1. குலமுதற்றகைமையும், குலமுதற்றண்மையும்; தண்மையுங் குணத்தின்.
2. பலமுகக் கேள்வியும், பலமுதற் கேள்வியின், பலமுதற் கேள்வி யாம்; பயனுந் தாங்கினர்.
4. அருந்தவமும் ; எய்தினர். (6)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

7. உற்றது கொண்டு மேல்வந் துறுபொரு ளுணருங் கோளார்
மற்றது வினையின் வந்த தாயினு மாற்ற லாற்றும்
பெற்றியர் பிறப்பின் மேன்மைப் பெரியவ ரரிய நூலும்
கற்றவர் மான நோக்கிற் கவரிமா வனைய நீரார்.

உற்றது கொண்டு - (மன்னன், நாடு முதலியவற்றிற்கு) நேர்ந்த தைக் கொண்டு, மேல் வந்து உறு பொருள் - எதிர் காலத்து வந்து நேரத்தக்கவற்றை, உணரும் - (தம் மதிவன்மையால்) அறிந்து கொள்ளும், கோளார் - அறிவு வன்மையையுடையவர்; அது - அந் நிகழ்ச்சி, வினையின் வந்தது ஆயினும் - ஊழ்வினைப் பயனால் விளைந்தது ஆனாலும், மாற்றல் ஆற்றும் பெற்றியர் - (அதன் கடுமை யைப்) போக்குதலைச் செய்யும் தன்மையுடையவர்கள்; பிறப்பின் மேன்மை பெரியவர் - தம் நற்குடிப் பிறப்பினால் பெற்ற பெருமைக் குணம் நிரம்பியவர்; (இவற்றோடு) அரிய நூலும் கற்றவர் - அருமை யான (நுண்ணிய கருத்துக்களமைந்த) நூல்களையும் கற்றுத் தேர்ந்த வர்கள்; மானம் நோக்கின் - (தம்) மானத்தைக் கருதுமிடத்தில், கவரிமா

அனைய நீரார் - கவரிமானைப்போன்ற தன்மையையுடையோர் (மானம் இழக்க நேரின் உயிரை விடுவர்). மற்று : அசை.

அமைச்சர் வரும்பொருள் உணர்தல் : "ஆய்மையின் மந்திரத் தறிஞ ருமெனச், செய்மையின் நோக்குறுஞ் சிறுகணுன்" (ஆரணிய. 181), "சேயதை நோக்கி...சூழ்ச்சியர்" (பெருங். 3. 4 : 97-9), "மந்திரிக்கழகு வரும்பொரு ளுரைத்தல்" (நறுந். 2).

வினையின் வந்ததை மாற்றும் பெற்றியார் : "உற்றநோய் நீக்கி யுறுஅமை முற்காக்கும், பெற்றியார்" (குறள். 44).

கவரிமானின் இயல்பு : "வருந்தலின் மானமா அனைய காட்சியர்" (சுந்தர. 507), "மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னுர், உயிர் நீப்பர் மானம் வரின்" (குறள். 969), "வான்மயிர் துடக்கின் தானுயிர் வாழாப், பெருந்தகைக் கவரி" (பெருங். 1. 35 : 231 - 2). மானங் கெடின் உயிர் நீத்தல்: "ஊனமே யான ஊனிடை யிருக்கும் உயிரினைத் துறந்துமொண் பூணும், மானமே புரப்ப தவனிமேல் எவர்க்கும் வரிசையும் தோற்றமும் மரபும்" (வி-பா. பழம். 18), "மானமும் உயிரும் ஒருங்குநில் லாத வழிஉயிர் தன்னையே விடுத்துத், தானுறு பொருளாய் மானமே கொள்ளும்" (பிரபு. பிரபுதேவர். 79).

உற்றது - ஊறுபாடு (புறநா. 183). கோளார் - கொள்கையுடையவர் எனினும் ஆம். பிறப்பு, இங்கு நற்குடிப் பிறப்பு. அரிய நூல் - அரசியல் நூல், ஞானநூல் முதலியன. மானம் - எஞ்ஞான்றும் தம் நிலையில் தாழாமையும், தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையும் (பரிமே. உரை). தயரதன் அமைச்சர்கள் மானிகள் என்பது 1157-ஆம் செய்யுளாலும் விளங்கும்.

(பி - ம்.) 1. உறும் பொருள் : ஒன்றும் கோளார், என்றும் கொள்ளார்; கேளார்.
2. மாற்றல் மாறும்.
3. பிறப்பின் மெய்ம்மைப், பிறப்பின் மேலைப், பிறப்பு மேலைப்; பெற்றியாம் பிறப்பின்.
4. நோக்கிக் கவரிமா : கவரிமாவன்ன. (6)

8. காலமு மிடனு மேற்ற கருவியுந் தெரியக் கற்ற
நூலுற நோக்கித் தெய்வ நுனித்தறங் குறித்த மேலோர்
சீலமும் புகழ்க்கு வேண்டுஞ் செய்கையுந் தெரிந்து கொண்டு
பால்வரு முறுதி யாவுந் தலைவற்குப் பயக்கு நீரார்.

ஏற்ற காலமும் இடனும் கருவியும் - (அரசின் பொருட்டுத் தாம் மேற்கொண்ட செயலுக்கு) ஏற்ற காலத்தையும் இடத்தையும் கருவிகளையும், கற்ற நூல் உற - தாம் படித்த நூல்களிற் கூறியவற்ருேடு பொருந்த, தெரிய நோக்கி - தெளிவுற ஆராய்ந்து, தெய்வம் நுனித்து - தெய்வத்தைத் தியானித்து, அறம் குறித்த மேலோர் - (அரச)

தருமத்தை எண்ணிக் கூறும் பெரியோர்கள், சீலமும் - (தமக்குரிய) ஒழுக்கத்தையும், புகழ்க்கு வேண்டும் செய்கையும் - புகழ் மேம் படுதற்கு உரிய செயல்களையும், தெரிந்துகொண்டு - ஆராய்ந்தறிந்து கொண்டு, பால் வரும் உறுதி யாவும் - (இவ்வாராய்ச்சிகளின்) பங்காக வரும் நற்பயன்கள் யாவற்றையும், தலைவற்கு - தம் தலைவனான மன்னனுக்கு, பயக்கும் - அமையுமாறு செய்யும், நீரார் - தன்மையை யுடையவர்கள்.

இச்செய்யுளில் அமைச்சர்களின் வினை செயல் திறன்கள் கூறப் பெற்றன. இதனுடன், "கருவியும் காலமும் செய்கையும் செய்யும், அருவினையும் மாண்ட தமைச்சு" (குறள். 631) என்பதை ஒப்பிடுக; "அருவினை என்ப உளவோ கருவியான், காலம் அறிந்து செயின்" (குறள். 483). காலமறிதல் என்பதற்கு, 'வலியான் மிகுதி யுடையனுய்ப் பகைமேல் சேறலுற்ற அரசன், அச்செலவிற்கேற்ற காலத்தினை அறிதல்' என்று பரிமேலழகர் விளக்கம் கூறுவர். இடன் : கடைப் போலி. கருவி: 'கருவிகளாவன மூவகையாற்றலும் (அறிவு, ஆண்மை, பெருமை), நால்வகை உபாயங்களும்' என்பர் பரிமேலழகர் (குறள். 483, உரை). நூல், இங்கு அரச நீதி நூல்களைக் குறிக்கும். நுனித்தல் - தியானித்தல். குறித்த சமயங்களில் பெரியோர்கள் நடந்து காட்டிய முறை பின்பற்றத்தக்கதாம். பால்வரு முறுதி - அந்த அந்தப் பகுதிகளால் விளையும் நன்மை. உறுதி யாவும் தலைவற்குப் பயத்தல்: "புரைதவப் பயனேக்கார் தம்மாக்க முயல்வாரை" (கலித். பாலை. 7 : 15) என்பதனேடு வைத்துக் காண்க.

(பி - ம்.) 1. காலமு மிடமும் பெற்ற; தெரியக் கற்ருர்.
2. நூல் முறை; நோக்கிற்றெய்வம், தெரிந்து தெய்வம்; குணித்த மேலோர், குறித்து மேலோர்; நல்லோர்.
3. புகழ்க்கும் வேண்டும்; செல்வமும் தெரிந்துகொண்டு; தெரிந்து கொண்டே.
4. பால்வரு நீதி; தலைவற்கே. (7)

9. தம்முயிர்க் குறுதி யெண்ணுர் தலைமகன் வெகுண்ட போதும்
வெம்மையைத் தாங்கி நீதி விடாதுநின் றுரைக்கும் வீரர்
செம்மையிற் றிறம்பல் செல்லாத்தேற்றத்தார் தெரியுங்காலம்
மும்மையு முணர வல்லோ ரொருமையே மொழியும் நீரார்.

தலைமகன் - அரசன், வெகுண்டபோதும் - கோபித்த காலத்தும், தம் உயிர்க்கு உறுதி எண்ணுர் - தம்முடைய உயிர்க்கு நன்மையைக் கருதாதவராகி, வெம்மையை தாங்கி - (அரசனது கோபத்தின்) கொடுமையைப் பொறுத்துக்கொண்டு, விடாது நின்று - (தம் கடமையை) விட்டு நீங்காது நின்று, நீதி உரைக்கும் - உரிய நீதிகளை

இடித்துச் சொல்லும், வீரர் - வீரத் தன்மை பொருந்தியவர்கள்; செம்மையில் - நேர்மையினின்றும், திறம்பல் செல்லா - மாறுபடுதல் இல்லாத, தோற்றத்தார் - தெளிவுடையவர்கள்; தெரியும் - (நூல்களால்) அறியப்படுகிற, காலம் மும்மையும் - (இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும்) முக்கால நிகழ்ச்சிகளையும், உணரவல்லோர் - உணரத்தக்க ஆற்றல் வாய்ந்தவர்கள்; ஒருமையே மொழியும் நீரார் - (தாம் சொல்வனவற்றில் ஐயப்பாட்டிற்கு இடமின்றி) ஒருபடியாகச் சொல்லும் தன்மையையுடையவர்கள்.

உறுதி - நன்மை. எண்ணுர்: முற்றெச்சம். நீதி...வீரர் - நீதியை விடாது பல முறையும் சொல்லித் தலைமகனைத் தெருட்டும் வீரமுடையவர் எனலும் ஆம். நீதி விடாது நின்றுரைத்தல்: குறள். 634, 638. தம்முயிர்க்கு...வீரர்: "மூரித்தேந் தாரி னுய்நீ முனியினு முறுதி நோக்கிப், பாரித்தேன் றரும நுண்ணூல் வழக்கது வாதல் கொண்டே" (சீவக. 214); சீவக: 2506-ம் காண்க. "இன்னுயி ரழியும் போது மிறைவனுக் குறுதி யல்லால், முன்னிய முகமன் மாட்டா முற்றிய வறிவினுர்" (சூளா. துறவு. 21); "செறிந்தவர் தெளிந்த நூலால் சிறந்தன தெரிந்து கூறி, அறிந்தவை யாற்ற கிற்கு மமைதியா னமைச்ச ருவான்" (சூளா: மந்திர. 9); "அரசர் சீறுவ ரேனு மடியவர், உரைசெ யாதொழி யார்க ளுறுதியே" (கலிங். 378); "மன்னவர் செவியழல் மடுத்த தாமென, நன்னெறி தருவதோர் நடுவு நீதியைச், சொன்னவ ரமைச்சர்கள் துணைவர் மேலையோர், ஒன்னலர் விழைந்தவா றுரைக்கின் ருர்களே" (கந்த. சூரனமைச்சு. 192). வீரர் என்றது, சொல்லுதற்கண் அஞ்சாமையும் வெல்லலும் உண்மையின் (குறள். 647).

இப் பாடல் சில பிரதிகளில் இல்லை.

(பி - ம்.) 1. இறுதி யெண்ணுர் ; வெகுண்ட போழ்தும்.
2. வெம்மையைத் தாங்கும், மெய்மையைத் தாங்கி; உரைக்கு நீரார், அளிக்கு நீரார்.
3. திறம்பல் செய்யாத்; தோற்றத்தார்; தெரியுங்காலை.
4. உணரத் தக்கார், உணரு நீரசர்; ஒருமையே மொழியு நீரார், ஒருமையே யுரைக்கு நீரார். (8)

(கலிவிருத்தம்)

10. நல்லவுந் தீயவு நாடி நாயகற்
கெல்லையின் மருத்துவ ரியல்பி னெண்ணுவார்
ஒல்லைவந் துறுவன வுற்ற பெற்றியின்
தொல்லைநல் வினையென வுதவுஞ் சூழ்ச்சியார்.

(அவ்வமைச்சர்கள்) நாயகற்கு - தம் அரசனுக்கு, நல்லவும் தியவும் நாடி - நல்லனவற்றையும் தீயனவற்றையும் ஆராய்ந்து,

எல்லையில் - முடிவில், மருத்துவர் இயல்பின் - (நோயாளிகள் விரும் பினும் விரும்பாவிடினும் அவர்களுக்கு நன்மையையே கருதிச் செய லாற்றும்) மருத்துவரின் தன்மை போல, எண்ணுவார் - (தலைவ னுக்கு) நன்மையையே கருதுவர்; (அன்றியும்) ஒல்லை வந்து உறுவன - விரைவில் வந்து சேரத்தக்க தீங்குகள், உற்ற பெற்றியின் - நேர்ந்த விடத்து, தொல்லை நல் வினையென - பண்டைப் புண்ணியம் (வந்து உதவுதல்) போல, உதவும் சூழ்ச்சியார் - (அத்தீங்குகளைப் போக்க) உதவி செய்யும் ஆலோசனைத் திறம் உடையவர்களுமாவார்.

இங்கு அமைச்சருக்கு மருத்துவரையும், நல்வினையையும் உவமையாக்கினர்; மருத்துவன் நோயாளியின் உடற் கூற்றையும், நோயையும், அது வந்த காரணத்தையும் ஆராய்ந்து, அது நீங்க உதிரங்களைதல், அறுத்தல், சுடுதல் முதலிய செயல்களை (நோயாளி விரும்பாவிடினும்) ஏற்ற பெற்றி துணிந்து செய்தல் போல, அமைச் சர்கள் அரசற்கு உண்டாம் நல்லன தீயனவற்றை நாடி, தீயன நேர்ந்தவிடத்து அவற்றைப் போக்குதற்குரிய உபாயங்களை அறிந்து அரசனுடைய விருப்பு வெறுப்புக்களைப் பொருட்படுத்தாமல் செய்து முடிப்பரென்பதாம். வினைப்பயனை எவரும் நுகர்ந்தே தீர வேண்டு தலின், ஒருகால் தீயன வந்துற்றபோதும், நல்வினை மிகுதியாயின் அது தீயனவற்றை நீக்கி நற்பயன் அளித்தல் போல அமைச்சரும் உதவுவரென்பதற்கு நல்வினையை உவமை கூறினர்.

இப் பாடல் சில பிரதிகளில் இல்லை.

(பி - ம்.) 1. மருத்துவனியல்பின், மருத்துவமியல்பின், மருத்துறுமியல்பின்.
2. உறு விளைவு; பெற்றியாற். (9)

11. அறுபதி னுயிர ரெனினு மாண்டகைக்
குறுதியி னென் றிவர்க் குணர்வென் றுன்னலாம்
பெறலருஞ் சூழ்ச்சியர் திருவின் பெட்பினர்
மறிதிரைக் கடலென வந்து சுற்றினர்.

திருவின் பெட்பினர் - செல்வப் பெருமை வாய்ந்தவர்கள், அறுபதினுயிரர் எனினும் - (எண்ணிக்கையில்) அறுபதினுயிரவர் என்றாலும், ஆண் தகைக்கு - ஆண்மையிற் சிறந்தோனாகிய தயரத மன்னனுக்கு, உறுதியின் - நன்மை பயப்பதில், இவர்க்கு உணர்வு ஒன்று என்று - இவ்வமைச்சர் அனைவர்க்கும் உணர்வு ஒன்றே என்று, உன்னல் ஆம் - நினைக்கத்தக்க, பெறல் அரும் சூழ்ச்சியர் - அடை தற்கு அருமையான ஆராய்ச்சித்திறம் படைத்தோர்; (அவர்கள்), மறிதிரை கடல் என - மடங்கி வருகின்ற அலைகளையுடைய கடல் போல, வந்து சுற்றினர் - (அரசவைக்கு) வந்து அவனைச் சூழ்ந் திருந்தனர்.

இங்குத் தயரத மன்னனுக்கு அறுபதினாயிரம் அமைச்சர்கள் இருந்தனர் என்றதுபோல, அவன் ஆட்சி புரிந்த காலம் அறுபதினாயிரம் ஆண்டு (பால. 196); மனைவியர் அறுபதினாயிரவர் (நகர் நீங்கு. 179) என்று கூறப்பெற்றுள்ளமை காண்க. 'மகா சக்கரவர்த்திகளுக்கு எல்லாம் அறுபதினாயிரம் என்ற கணக்கு' (சிவசம்போதனை, 1.7 : 57; 2·1: 13; 12 : 72); பாலகாண்டம் கார்முகப் படலத்தில் வில்லினைக் கொண்டு வந்தவர் தொகை அறுபதினாயிரம் என்று கூறப் பெற்றுள்ளது. இவ்வாறே பெருங்கதையில் பிரச்சோதன சக்கரவர்த்திக்கு மந்திரிகள், முரசம், அவன் பிறருக்குக் கொடுப்பன, பிறர் அவனுக்குக் கொடுப்பனவான கையுறைகள் ஆக ஒவ்வொன்றும் பதினாறாயிரம் என்றும், இப்படியே அவனுக்குப் பதினாறு பகுதிகள் இருந்தன வென்றும் கூறப்பட்டுள்ளது. உணர்வு ஒன்று: 15, 51;"வேந்தன், மனம் போல வந்த மகன்" (பு. வெ. 26), "நும் பெருமான், நெஞ்சுபுரை அமைச்சன்" (பெருங். 2. 17 : 94-9). திருவின் பெட்பினர் - சிந்தையின் நிறைவாகிய செல்வமும், பொருட் செல்வமும் ஒருங்கே பெற்றவர்; இலக்குமி விரும்பி இருத்தற்கிடமானவர் என்றும் ஆம்.

(பி-ம்.) 1. அறுபதினாயிரரேனும்; மென்னும், மெனினும், மெண்ணும்.
2. லொன்றிவற்கு, லொன்றறிந்து; உன்னலாய்ப், உன்னலாய்; உணர்த்தவுன்னலாம்; உறுதியினறி வுறுத்துணர் வொன்றின்னலாம்.
3. பெட்பினர், பெட்பினால்.
4. வந்து தேறினர். (10)

வந்த மந்திரச் சுற்றத்தாரின் செயல்

12. முறைமையி னெய்தினர் முந்தி யந்தமில்
அறிவனை வணங்கித்தம் மரசைக் கைதொழு
திறையிடை வரன்முறை யேறி யேற்றசொல்
துறையறி பெருமையா னருளுஞ் சூடினார்.

(அவ்வமைச்சர்கள்) முறைமையில் - வரிசைப்படி, எய்தினர் - அணுக வந்து, அந்தம் இல் அறிவனை - முடிவற்ற அறிவைப் பெற்ற வசிட்டனை, முந்தி வணங்கி - முதலில் வணங்கி, தம் அரசை கை தொழுது - (பின்பு) தம் மன்னனாகிய தயரதனைக் கைகூப்பித் தொழுது, இறை இடை - ஆசனங்களில், வரல் முறை - தமக்கு அமைந்த முறையிலே, ஏறி - ஏறி அமர்ந்து, ஏற்ற சொல் துறை அறி பெருமையான் - தக்க சொல் துறைகளை அறியும் பெருமை வாய்ந்த மன்னனின், அருளும் - அருள் நோக்கத்தையும், சூடினார் - பெற்றார்கள்.

அந்தமில் அறிவு - பேரறிவு; பிரமஞானம் என்பது இதுவே. வணங்குதலை முனிவனுக்கும் கை தொழுதலை மன்னனுக்கும் முறைமையறிந்து செய்தனர் என்க. சொல்துறை அறி பெருமையான்- யார் யாரிடம் எவ்வெவ்வாறு பேசவேண்டுமென்ற முறையறிந்து

அவ்வாறே பேசுபவன். அருள் சூடுதல் - அன்பு கலந்த முறுவலைப் பெறுதல். எய்தினர் : முற்றெச்சம். இறை - இருத்தல்; ஆகுபெயராய் ஆசனத்தைக் குறித்தது. இறைஇடை வரல்முறை ஏறி - அரசனிடம் வரிசைப்படி குறுகிச் சென்று என்றலுமாம்.

(பி - ம்.) 1. எய்தினர், ஏயினர்.
2. வணங்கிமல் லரசைக்.
3. இறையிட; இடையிடம், உறைவிடம்; அறிந்தறிந்து: ஏற்றி யேற்ற சொல், இயற்றியேற்ற சொல், இருந்தங்கோங்கு சொல்.
4. பெருமையின்; சூழ்ச்சியார். (11)

தயரதன் அவையினரிடம் கூறல்

13. அன்னவ ரருளமைந் திருந்த வாண்டையில்
மன்னனு மவர்முக மரபி னேக்கினன்
உன்னிய தரும்பெற லுறுதி யொன்றுள
தென்னுணர் வனையநீ ரினிது கேட்கென.

அன்னவர் - அவ்வமைச்சர்கள், அருள் அமைந்து இருந்த ஆண்டையின் - (மன்னனின்) அருளைச் சூடித் (தம் ஆசனங்களில்) அமர்ந்த அப்பொழுது, மன்னனும் - தயரதனும், அவர் முகம் மரபின் நோக்கினன் - அவர்கள் முகங்களை முறைப்படி நோக்கி, உன்னியது - யான் எண்ணியதான, பெறல் அரும் உறுதி ஒன்று - பெறுதற்கு அருமையான உறுதிப் பொருள் ஒன்று, உளது - இருக்கின்றது; (அதனை) என் உணர்வு அனைய நீர் - என்னுணர்வை ஒத்த நீவிர், இனிது கேட்க - இனிது கேட்பீராக, என - என்று (தொடங்கிக் கூறலானான்).

இதுமுதல் 19 பாடல்கள் தயரதன் தன் கருத்தை அவையினருக்குக் கூறுதல். இவை ஒருதொடர்; இதில் என என்றது பின் 31-ஆம் செய்யுளிலுள்ள இனைய கூறினன் என்பதோடு இயைந்து முடிவுறும்.

'அன்னவர் அருளமைந்திருந்த' என்றது முன் செய்யுளில், "பெருமையான் அருளும் சூடினர்" என்பதைச் சுட்டியதாம். மரபின் நோக்குதல் - முறைமையின் எய்திய அமைச்சர்களை அம்முறைப்படி நோக்குதல். நோக்கினன் : முற்றெச்சம். அரும்பெறல் உறுதி - தான் வீடடைதற்குரிய நெறி நாடல். 'யான் மகனுக்கு முடிசூட்டி, தான் வீடடைதற்குரிய நெறி நாடல். 'யான் உணரவேண்டியதை நீங்களே உணர்ந்து கூறும் இயல்புடையீர்' என்ற கருத்தினால், 'என்னுணர் வனையநீர்' என்றான்.

(பி - ம்.) 1. அன்னவன்; மனமகிழ்ந்த; அருள் சுமந்திருந்த, அருள் சுரந்திருந்த; இருந்த வாண்டகை.
2. மன்னவன்; அன்பினேக்கினன்; நோக்கியே.

3. உன்னிய தருமம் போலுறுதி; கருமம் பெற்றுறுதி, கருமம் வேறுறுதி, கருமம் வேறுறுதி, கருமம் போலுறுதி, கன்மம் வந்துறுதி, கருமத் தினுறுதி, தருமமேற்றுறுதி: ஒன்றுள, என்றுளது, என்றுள.
4. என்னுரை, என்னுரவு; கேட்டிரால்; கேண்மெனு. (12)

14. வெய்யவன் குலமுதல் வேந்தர் மேலவர்
செய்கையி ைெருமுறை திறம்ப லின்றியே
வையமென் புயத்திடை நுங்கண் மாட்சியால்
ஐயிரண் டாயிரத் தாறு தாங்கினேன்.

நுங்கள் மாட்சியால் - உங்கள் (துணையின்) பெருமையால், வெய்யவன் குலம் - சூரிய குலத்தில் (தோன்றிய), முதல் வேந்தர் - தலைமையுற்ற அரசர்களான, மேலவர் - என் முன்னோர்களின், செய்கையின் - செயல்களினின்றும், ஒரு முறை - ஒரு வகையிலும், திறம்பல் இன்றி - மாறுபாடு இல்லாமல், வையம் - பூமியை, ஐ இரண்டு ஆயிரத்து ஆறு - அறுபதினாயிரம் ஆண்டுகள், என் புயத்திடை - என் தோள்களில்; தாங்கினேன் - சுமந்தேன்; (ஆட்சி செய்தேன்).

வெய்யவன் - சூரியன். ஐயிரண்டாயிரத்தாறு - அறுபதினாயிரம்; 11-ஆம் செய்யுட் குறிப்பைக் காண்க.

(பி - ம்.) 3. வையம் யானுண் டவாண்டுங்கள்; வையகமாண்டது.
4. ஐயமிலறுபதினாயிரம்மரோ; ஆயிரமறுபதாண்டனன். (13)

15. கன்னியர்க் கமைவருங் கற்பின் மாநிலம்
தன்னையித் தகையதாத் தருமங் கைதர
மன்னுயிர்க் குறுவதே செய்து வைகினேன்
என்னுயிர்க் குறுவதுஞ் செய்ய வெண்ணினேன்.

கன்னியர்க்கு - மகளிர்க்கு, அமைவரும் - பொருந்தும், கற்பின் - கற்பினை (அவர்கள் காத்தல்) போல, மாநிலம் தன்னை - பெரிய (இப்) பூமியை, இ தகையதா - இந்தத் தகைமை உடையதாகும்படி, தருமம் கைதர - தருமம் கைகொடுத்து உதவ, மன் உயிர்க்கு - நிலைபெற்ற உயிர்களுக்கு, உறுவது - நன்மையாவதையே, செய்து வைகினேன். (இதுகாறும்) செய்து வாழ்ந்தேன்; (இனிமேல்) என் உயிர்க்கு - என் ஆன்மாவுக்கு, உறுவதும் - நன்மை தரும் செயலையும், செய்ய எண்ணினேன்—.

கன்னியர் காப்பு: "கன்னிய ரல்குற் றடமென யார்க்கும் படிவருங் காப்பினது" (பால. 120), "கட்டுடைக் காவலிற் காமர் கன்னியே" (சீவக. 98); பிறவரசர் நெருங்காதபடி சிறந்த காவலுடன் காத்தான் என்றபடி; இவ்வாறே மன்னன் பின்னும், "மறுவறு

கற்பினில் வையம் யாவையும், அறுபதி னுயிர மாண்டு மாண்டவன்" (12 : 72) என்று தன்னைக் கூறிக்கொள்ளுதல் காண்க. கைதரல்: "நல் லறிவு கைதர" (ஆரணிய. 3 : 7). என்னுயிர்க் குறுவது என்றது, உயிர்க்கு உறுதி பயப்பதான தவத்தை; உம்மை, இறந்தது தழீஇயது; "தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார்" (குறள். 266).

(பி . ம்.) 1. கற்பின் ஞானிலம், காப்பின் மாநிலம்.
2. தன்னையித்தகைதர, தன் மனத்தகைதரத், தன்மையிற்றகைதரத்.
3. உறுவதேயெய்தி. (14)

16. விரும்பிய மூப்பெனும் வீடு கண்டயான்
இரும்பிய லனந்தனு மினத்த யானையும்
பெரும்பெயர்க் கிரிகளும் பெயரத் தாங்கிய
அரும்பொறை யினிச்சிறி தாற்ற வாற்றலேன்.

விரும்பிய - யான் விரும்பிய, மூப்பு எனும் - முதுமை என்னும், வீடு - விடுதலைக்குரிய காலத்தை, கண்ட யான் - வரக் கண்ட யான், இரு பியல் அனந்தனும் - பெரிய பிடரியை யுடைய ஆதிசேடனும், இனத்த யானையும் - (எட்டு என்று ஒருசேரக் கூறும்) இனத்தனவாகிய திக்கு யானைகளும், பெரு பெயர் கிரிகளும் - மிக்க புகழையுடைய (அட்டகுல) பருவதங்களும், பெயர - (பூமியைச் சுமக்கும் தொழிலி னின்று) நீங்க, தாங்கிய அரு பொறை - யான் தாங்கி வந்த அரிய பூமி பாரத்தை, இனி சிறிது - இனிமேல் சிறிதளவும், ஆற்ற - தாங்க, ஆற்றலேன் - வலிமையற்றவனானேன்.

தனக்கு மைந்தன் பிறக்கத் தான் அரசாட்சியை விட்டுத் தவம் புரியப் போகவேண்டுமென்ற விருப்பத்தோடு இருந்தவனாதலின், 'விரும்பிய மூப்பெனும் வீடு' என்றான். ஆதிசேடனும், எட்டுத்திசை யானைகளும், எட்டு மலைகளும் பூமியைத் தாங்கி வருகின்றன என்பது ஐதிகம். மூப்பை வீடு என்றது, அது முன் செய்த கடமைகளினின்றும் விடுபடும் காலமாதலின். அனந்தன் முதலியன பெயரத் தாங்குதல்: "தார வட்டவெண் டிசைகளைத் தனித்தனி சுமக்கும், பார வெட்டினோ டிரண்டினி லொன்றுபார் புரக்கல், பேர விட்டவன்" (ஆரணிய. 520), "மைந்நாக மெட்டு மதநாக மோரெட்டும். பைந்நாக மெட்டும் பரந்தீர - இஞ்ஞாலம்......பொறை நீக்கி" (குலோத். உலா, 34 - 5), அனந்தன் - ஆதிசேடன். திக்கயங்கள் - இராசராச. 237 - 2-ம் பார்க்க. ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புஷ்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீபம் என்பன. கிரிகள் - இமயம், மந்தரம், கைலாசம், விந்தம், நிடதம், ஏமகூடம், நீலம், கந்தமாதனம் என்பன.

(பி - ம்.) 1. கண்டியான், கண்டனன்.
2. இரும்பயில், இரும்பையில்; இசைந்த யானையும், எழில்கொள் யானையும், எழில்நல் யானையும், எட்டியானையும்.

3. பெரிதுந் தாங்கிய, பெட்டத் தாங்கிய.
4. இனிப் பொறை: ஆற்றவல்லனே, ஆற்றவேண்டுவேன். (15)

17. நங்குலக் குரவர்க ணவையி னீங்கினர்
தங்குலப் புதல்வரே தரணி தாங்கப்போய்
வெங்குலப் புலன்கெட வீடு நண்ணினர்
எங்குலப் புறுவரென் றெண்ணி நோக்குகேன்.

நம் குலம் குரவர்கள் - எம் குலத்தில் உதித்த (முன்னோர்களான) பெரியோர்கள், நவையின் நீங்கினர் - குற்றங்களினின்று நீங்கியவர்கள், தரணி - பூமியை, தம் குலம் புதல்வரே தாங்க - தங்கள் மேலான புதல்வர்களே தாங்கும்படி, (உரிய காலத்திலாவது அவர்களிடம் ஒப்பு வித்து) போய் - (நாட்டைவிட்டுச்) சென்று, (தாம்) வெம் குலம் புலன் கெட - கொடிய கூட்டமாக உள்ள புல ஆசைகள் கெட்டொழிய, (தவம் புரிந்து) வீடு நண்ணினர் - துறக்கத்தை அடைந்தவர்கள், எங்கு உலப்பு உறுவர் என்று - எங்கே (எண்ணிக்கையில்) முடிவு பெறுவர் என்று நினைத்து, நோக்குகேன் - நானும் அவ்வுறுதியை நாடுகின்றேன்.

நீங்கினர் : முற்றெச்சமாகவும் கொள்ளலாம். நவை - காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்கள். குலம் புலன் - கூட்டமாகிய புலன்; இச்செய்யுளுடன், "நங்குலத் துதித்தவர் நவையு ணீங்கினர், எங்குலப் புறுவர்கள் எண்ணின் யாவரே, தங்குலத் தொருவருந் தரும நீங்கினர், பொங்குலத் திரளொடும் பொருத தோளினாய்" (13 : 49) என்ற செய்யுளை ஒப்பிட்டுப் பார்க்க. உலப்பு - முடிவு. அவ்வாறு தவம் செய்து வீடடைந்தவரின் எண்ணிக்கை முடிவற்றது என்றபடி. இங்குத் தயரதன் அமைச்சர்களிடம் கூறிய இக்கருத்தையே பின்பு தன் தனயனிடம் கூறுவதை 62-ஆம் செய்யுளிற் காண்க.

இங்கு, "பொய்விடா திருந்த வெய்ய புன்பவக் கடலை நீக்கும், மெய்விடா தியைந்த வன்ன விழுத்துணைப் புணையை யானே, கைவிடா விரிந்த வாழி நற்கரை காணுங் காலும், கைவிடா தமைந்தேன் வையங் காக்குமி னீர்க ளென்றான்" என்ற இரகுவம்சம், குறைகூறு படலம், 14-ஆம் செய்யுளைக் காண்க.

(பி - ம்.) 1. நங்குலத்தரசர்கள் : நவையுணீங்கினர்.
2. தாங்கிப்போய்.
3. வீடுகண்ணினர்.
4. எங்குலப்புறுவனென்று; நோக்குவேன், நோக்கிலே; எண்ணின் நோக்குகேன். (16

18. வெள்ளநீ ருலகினில் விண்ணி ஞகரில்
தள்ளரும் பகையெலாந் தவிர்த்து நின்றயான்
கள்வரிற் கரந்துறை காம மாதியாம்
உள்ளுறு பகைவருக் கொதுங்கி வாழ்வெனே.

வெள்ளம் நீர் உலகினில் - மிகுதியாயுள்ள கடல்நீரால் சூழப்பட்ட இந்த உலகத்திலும், விண்ணில் - வானுலகத்திலும், நாகர் இல் - நாகர்கள் வாழும் பாதாள உலகத்திலும், தள்ள அரும் பகை எல்லாம் - நீக்குதற்கு அரிய (புறப்) பகைகள் யாவற்றையும், தவிர்த்து நின்ற யான் - நீக்கி (வெற்றி கொண்டு) நின்ற யான், கள்வரில் - கள்வர் களைப் போல, கரந்து உறை - ஒளிந்து வாழ்கின்ற, காமம் ஆதி ஆம் - காமம் முதலான, உள் உறு பகைவருக்கு - உள்ளே பொருந்திய பகைகளுக்கு, ஒதுங்கி வாழ்வெனே - பின்னடைந்து வாழ்வேனே? (வாழேன், என்றபடி).

புறப் பகையை வென்ற யான் அகப் பகையையும் வெல்ல எண்ணினேன் என்பது கருத்து.

தயரதன் மூவுலகும் வென்றவன்: ''மாகமு நாகமு மண்ணும் வென்ற வாளான்'' (208) காமமாதி: காமம், வெகுளி, மயக்கம் என மூன்ருகவும், காமம், வெகுளி, கடும் பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என ஆருகவும் இன்னும் பிற வகையாகவும் கூறுவர். ஒதுங்கி வாழ்வெனே என்றதனல், அக் குற்றங்களைத் தவத்தால் ஒறுத்து வெல்வேனேயன்றி, தோற்று அடங்கி வாழேன் என்றனன் என்க. ஓகாரம், எதிர்மறைப் பொருளது.

(பி - ம்.) 1. வெள்ள நீருலகிடை; நீர்நிலத்தினின்.
2. தவிர்ந்து.
3. கள்ளரிற் கலந்துறை காமமாதியாய். (17)

19. பஞ்சிமென் றளிரடிப் பாவை கோல்கொள
வெஞ்சினத் தவுணர்தேர் பத்தும் வென்றுளேற்
கெஞ்சலின் மனமெனு மிழுதை யேறிய
அஞ்சுதேர் வெல்லுமீ தருமை யாவதோ.

பஞ்சி - செம்பஞ்சூட்டப்பெற்ற, மெல் தளிர் அடி - மெல்லிய தளிர் போன்ற பாதங்களையுடைய, பாவை - கைகேயி, கோல் கொள - கையில் குதிரையை ஓட்டும் கோலைக்கொண்டு தேரோட்ட, வெம் சினத்து - கொடுங் கோபத்தையுடைய, அவுணர் தேர் பத்தும் - அவுணர்களின் பத்துத் தேர்களையும், வென்றுளேற்கு - வென்றுள்ள வனுகிய எனக்கு, எஞ்சல் இல் மனம் எனும் - (பற்றுதல்) குறையாத மனம் என்கிற, இழுதை ஏறிய - பேய் ஏறிக்கொண்டுள்ள, அஞ்சு தேர் - (பொறிகளாகிய) ஐந்து தேர்களை, வெல்லும் ஈது - வெற்றி

கொள்ளும் இச்செயல், அருமை ஆவதோ - அரியது ஆகும் செயலோ? (அன்று என்றபடி).

பஞ்சி மெல்லடி - பஞ்சினை ஒத்த மெல்லடி எனலும் ஆம்; "பஞ்சொக்கு மடிகள்" (ஆரணிய. 623;) கிட்கிந்தா. 373; யுத்த. 27. ஐயும் பார்க்க. மடந்தையர் கோல் கொள்ளுதல் : சீவக. 2054; வி. பா. தீர்த்த. 79; கோல் - குதிரையை ஓட்டும் கோல். கைகேயி சாரத்தியம் செய்தது இங்குக் குறிக்கப்பெற்றது. தயரதன் அவுணரை வென்றமை: "ஆரியன் அமரர்க் காகி யசுரரை யாவி யுண்ட, வீரியன்" (கிட்கிந்தா. 69). தேர் பத்து : சம்பரன் பத்து வடிவங்கொண்டு பத்துத் தேர்களில் வந்தான் என்பது வரலாறு (குலோத். உலா. 9; இராச. உலா. 11). எஞ்சல் - குறைவு; அற்றெழிகை : இழுதை - பேய்; "இழுதை நெஞ்சினன்" (902); "இழுதை நெஞ்சமி தென்படு கின்றதே" (தேவாரம். 1203-8); அறிவின்மையும் ஆம். பத்துத் தேரை வென்றவனுக்கு அஞ்சு தேரை வெல்வது அரிதாவதோ என்றது நயம்.

(பி - ம்.) 1. பஞ்சின்மென்.
2. வென்றயான்.
3. ஏவிய, மேவிய.
4. வெல்லுவது; ஆகுமோ. (18)

20. ஒட்டிய பகைஞர்வந் துருத்த போரிடைப்
பட்டவ ரல்லரேற் பரம ஞானம்போய்த்
தெட்டவ ரல்லரேற் செல்வ மீண்டென
விட்டவ ரல்லரேல் யாவர் வீடுளார்.

வந்து ஒட்டிய - வந்து தாக்கிய, பகைஞர் - பகைவர்கள், உருத்த போர் இடை - சினந்து செய்யும் போரில், பட்டவர் - இறந்தவரும், அல்லரேல் - அல்லரானல், பரம ஞானம் - மேலான ஞானம் என்னும் பேரறிவு, போய் - மிகுந்து, தெட்டவர் - தெளிந்தவரும், அல்லரேல் - அவர்களும் அல்லராயின், செல்வம் ஈண்டு என - பொருள் (முதலிய யாவும்) இவ்வுலகத்து மட்டுமே என்று, விட்டவர் - (அவற்றைத்) துறந்தவரும் (ஆகிய மூவகையினர்), அல்லரேல் - அல்லார்கள் ஆனல், வீடு உளார் யாவர் - துறக்கத்தைத் தமக்கு உரிமையாக உள்ளவர் வேறு யாவர்? (எவரும் இலர் என்றபடி).

போரிட்டுக் களத்திடை இறந்தவரும் ஞானம் மிக்கு மெய் யுணர்ந்தவரும் அறவுணர்ச்சி யுள்ளவரும் வீடுபெறுவார் என்பது கருத்து.

ஒட்டுதல் - தாக்குதல்; "மாந்த ருறைநிலத்தோ டொட்ட லரிது" (குறள். 499). உருத்த போர் - சினந்து செய்த போர். போர்க்களத்தே பட்டவர்க்கு வீடு : 30; புறநா. 43 ; 9 - 10; மணி. 23 : 14 ; 'மூப்பினும்

பிணியினு மிறவாது அமர்க்களத்து வீழ்ந்தோரே துறக்கம் பெறுவர்' (தொல். அகத். சூ. 44. ந.) என்பதையும் காண்க. போய் - மிகுந்து; 77, 151. பாவை ஞானம் என்ற பாடத்திற்குப் பிரதிமாஞானம் என்று பொருள் கொள்க. தெட்டவர் - தெளிந்தவர். ஈண்டு - இவ்வுலகத்தில்.

வீடு பெறுதற்குரியார் இவர் இவரே என்று கூறி, மன்னன் தான் துறக்க விரும்பியதற்குக் காரணத்தை இங்கு வற்புறுத்துகின்றான்.

(பி - ம்.) 1. பகைஞர்வந்துற்ற.
2. பாவைஞானம்போய்க்.
3. கெட்டவர், தொட்டவர்; செல்வமுண்டெனா துறவுநன்றெனா கேடுமில்லென.
4. வீட்டுள்ளார், வீட்டுளார். (19)

21. இறப்பெனு மெய்ம்மையை யிம்மை யாவர்க்கும்
மறப்பெனு மதனின்மேற் கேடு மற்றுண்டோ
துறப்பெனுந் தெப்பமே துணைசெய் யாவிடின்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க லாவதோ.

யாவர்க்கும் - எவர்க்கும், இறப்பு எனும் மெய்ம்மையை - சாவு (உண்டு) என்ற உண்மையை, இம்மை - இப்பிறப்பிலே, மறப்பு எனும் அதனின்மேல் - மறந்துவிடுதல் என்ற அந்த ஒன்றுக்குமேல், மற்று - பிற, கேடு உண்டோ - அழிவாவது உண்டோ? (இல்லை); துறப்பு எனும் தெப்பமே - துறவு என்கிற தெப்பமே, துணை செய்யா விடின் - உதவி செய்யாவிட்டால், பிறப்பு எனும் பெரு கடல் - பிறப்பு என்று சொல்லப்படும் பெரிய கடலினின்றும், பிழைக்கல் ஆவதோ- தப்புதல் இயலுமோ? (இயலாது, என்றபடி).

துறவை மேற்கொண்டவர்கள் பிறவாமையையும் இறவாமையை யும் அடைவர் என்பது கருத்து.

இறப்பெனும் மெய்ம்மை : "இருப்பதுபொய் போவதுமெய்" (பட்டினத்). மெய்ம்மை, நிச்சயமானது, தவறாதது என்னும் பொருளில் வந்தது. பிறவிப் பெருங்கடல்: குறள். 10; சீவக. 1242; மணி. 11: 23-25.

(பி - ம்.) 1. மெய்ம்மையே; எய்தி யாவர்க்கும்.
2. மறப்பெனுற்றதனின்மேல், மறப்பின்மற்றதனின்மேல்.
3. துறப்பரும்; தோற்றமே.
4. பிழைக்கலாகுமோ; நீந்தும் பெற்றியோ. (20)

22. அருஞ்சிறப் பமைவருந் துறவு மவ்வழித்
தெரிஞ்சுற வெனமிகுந் தெளிவு மாய்வரும்
பெருஞ்சிறை யுளவெனிற் பிறவி யென்னுமிவ்
விருஞ்சிறை கடத்தலி னினிய தியாவதோ.

(ஒருவருக்கு) அரும் சிறப்பு அமைவரும் துறவும் - அருமையான துறக்கம் என்னும் சிறந்த நிலை அமைவதற்குக் காரணமான துறவும், அ வழி தெரிஞ்சு - அந்த வழியை அறிந்து, உறவு என மிகும் தெளிவும் - அதற்கு உறவு என்று சொல்லப்படும் மிக்க மனத்தெளிவும், ஆய்வரும் - என இரண்டாக வழங்கும், பெரு சிறை உள எனில் - பெரிய சிறகுகள் அமைந்துள்ளன என்றால் (அவற்றைக்கொண்டு) பிறவி என்னும் இ இரு சிறை - பிறப்பு என்று சொல்லும் இப்பெரிய சிறைச்சாலையை, கடத்தலின் இனியது - நீங்கிச் செல்லுதலினும் இனிமையான தொன்று, யாவதோ - வேறு எதுவோ? (எதுவுமில்லை).

பிறவியைச் சிறை யென்றும், அச்சிறையில் அடைபட்டுள்ள ஆன்மப் பறவைக்குத் துறவு, தெளிவு என்ற இரு சிறகுகளும் அமைந்துவிட்டால் அஃது இனிமையாக அச்சிறையை விட்டு நீங்கி விடும் என்றும் கூறினர்.

சிறப்பு - துறக்கம் (குறள்: 31). இச்செய்யுளின் சொற்பொருளோடு ஆரணிய. 3: 7 ஆம் செய்யுளின் சொற்பொருளை ஒப்பிடுக. தெரிஞ்சு: தெரிந்து என்பதன் போலி. துறவுக்கு உறவு தெளிவு; தெளிவு - மனத் தெளிவு; மன மாசுகள் நீங்கி, மெய்யுணர்வுக்கு நிலைக்களனாக நிற்கும் மனநிலை. 'மெய்யுணர்தலாவது, பிறப்பு வீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களன்றி உண்மையான் உணர்தல்; இதனை வடநூலார் தத்துவ ஞானம் என்ப. இதுவும் பற்றற்றான் பற்றினைப் பற்றியவழி உளதாவது ஆதலின், அக்காரண ஒற்றுமைபற்றித் துறவின்பின் வைக்கப்பட்டது' என்ற பரிமேலழகர் கருத்தைக் காண்க. துறவும் தெளிவும் சிறகு. உறவு - இனம். பிறவிச்சிறை : "பிறவிவெந் துயரப் பெருஞ்சிறை" (ஆரணிய. 124); "ஏழையி னிரட்டைவினை யாயதோ ருடற்சிறை" (வேலைக்காரன் வகுப்பு).

(பி - ம்) 1. சிறப்பவைவரும், சிறப்புறவரும், சிறையமைவரும்; துறத்தலவ்வழி.
2. தெரிஞ்சுறவாவரும்; உறவெனவரும், உறவே மிகும்தெளிவு மாயவப்; தெளிவும் யாவரும், தெளிவு சேருமாற், தெளிவுதேருறுணப்.
3. சிறகுளவெனிற், சிறையுள்ளவிப்.
4. இருஞ்சிறை கடல்தனில்; சிறைகடத்தலின்; இருங்கடல், அருஞ்சிறை; இனியாவதோ, இவைவதியாவதோ. (21)

23. இனியது போலுமிவ் வரசை யெண்ணுமோ
துனிவரு புலனெனத் தொடர்ந்து தோற்கலா
நனிவரு பெரும்பகை நவையி னீங்கிய
தனியர சாட்சியிற் றாழு முள்ளமே.

துனிவரு - துன்பம் உண்டாவதற்குக் காரணமாகிய, புலன் என தொடர்ந்து - பொறிகள் என்னும் பெயரையுடையனவாக உயிரைத்

தொடர்ந்து, தோற்கலா - தோல்வியைப் பெருத, தனிவரு - மிகுதியாக வருகின்ற, பெரும்பகை - பெரிய பகையினுல் உண்டாகிய, நவையின் நீங்கிய - குற்றங்களினின்றும் விடுபட்ட, தனி அரசாட்சியில் - ஒப்பற்ற வீடாகிய அரசை ஆளும் செயலில், தாழும் - பதியும், உள்ளம் - என் உள்ளம், இனியது போலும் - இனியது போலத் தோற்றும், இவ்வரசை - இந்த உலகையாளும் அரசாட்சியை, எண்ணுமோ - ஒரு பொருளாக நினைக்குமோ? (நினையாது என்றபடி).

புலனெனத் தொடர்ந்து வரு பகையினது நவையின் நீங்கிய அரசாட்சி. அகப்பகையாதலின் புலனெனத் தொடர்ந்து வரு பகையென்ருன். "வெற்றர செய்தி யெம்பி வீட்டர செனக்கு விட்டான்" (வாலிவதை) என்று முத்தியை அரசென்பர்.

(பி - ம்.) 2. துனிதரு புலனெனத் தொடர்ந்து, கலனெனத் தொழுது, புலனெனத் துரந்து, புல்லெனத் தொடர்ந்து, புனலெனத் தொடர்ந்து; ஓர்கலா, தேர்கிலா, நோற்கிலா.
3. பகையெனும், பகையவை; நவையினீங்கியத், நவையினீங்கிப்போய், நவையை நீக்கிகல், நவையுணீங்கிய.
4. அரசாட்சியுள்; தளரும். (22)

24. உம்மையா னுடைமையி னுலகம் யாவையும்
செம்மையி னோம்பிநல் லறமுஞ் செய்தனென்
இம்மையி னுதவியென் னிசைந டாயநீர்
அம்மையு முதவுதற் கமைய வேண்டுமால்.

யான் —, உம்மை உடைமையின் - (மந்திரக் கிழவராக) நும்மைப் பெற்றுள்ளமையினுல், உலகம் யாவையும் - உலகம் முழுவதையும், செம்மையின் - நேர்மையாக, ஓம்பி - பாதுகாத்து, நல் அறமும் செய்தனென் - நல்ல அறச் செயல்களையும் செய்து முடித்தேன்; இம்மையின் உதவி - இவ்வாழ்வில் (எனக்கு) உதவி புரிந்து, என் இசை நடாய நீர் - என் புகழைப் பரவச் செய்த நீங்கள், அம்மையும் உதவுதற்கு - அவ்வுலக வாழ்விலும் எனக்கு உதவி புரிதற்கு, அமையவேண்டும் - மனங் கொள்ளவேண்டும். ஆல்: அசை.

"வையமென் புயத்திடை நுங்கண் மாட்சியால், ஐயிரண் டாயிரத் தாறு தாங்கினேன்" (14) என முன் கூறியதை யொப்ப ஈண்டும் கூறினுன். செம்மை - நேர்மை; நடுநிலைமை. நல்லறம் - தானம், வேள்வி முதலியன; இவை தனக்காகச் செய்தவை. அம்மை - அவ்வுலகப் பேறு.

(பி - ம்.) 1. உம்மையென், உம்மையே; உடைமையா னுலகம்.
2. செம்மையி லொருமுறை திரும்ப லன்றியே, திறம்பலின்றியே.
3. உதவி நல்லிசை நடாய; என்னிடர் கொடாயநீர்.
4. அம்மையுமருதற்கு; வேண்டுநீர், ஐயம் வேண்டுமோ, அருள வேண்டுமால். (23)

25. இழைத்ததொல் வினையையுங் கடக்க வெண்ணுதல்
தழைத்தபே ரருளுடைத் தவத்தி னாகுமேல்
குழைத்ததோ ரமுதினைக் கோட னீங்கிவே
றழைத்ததீ விடத்தினை யருந்த லாகுமோ.

இழைத்த - (ஒருவன்) செய்த, தொல்வினையையும் - பழமையான வினைகளின் பயன்களையும், கடக்க - தாண்ட, எண்ணுதல் - கருதுதல், தழைத்த - மிக்க, அருள் உடை தவத்தின் ஆகுமேல் - சீவகாருணியத்தை அடிப்படையாகக் கொண்ட தவத்தினால் உண்டாகுமானால், குழைத்தது ஓர் அமுதினை – மூலிகைகளைக் கலந்து கடைந்த ஒப்பற்ற அமுதினை - அமுதத்தை, கோடல் நீக்கி - உட்கொள்ளுதலை விட்டு, வேறு அழைத்த - வேறாகப் பெறப்பட்ட, தீவிடத்தினை - கொடிய நஞ்சினை, அருந்தல் ஆகுமோ - பருகுதல் முறையாகுமோ? (ஆகாதென்றபடி).

தொல்வினை - சஞ்சிதம். பிராரத்தம். வினைகள் நுகர்ந்தே தீர வேண்டியனவாயினும், ''தவத்தின்முன் னில்லாதாம் பாவம்'' (நாலடி. 51) என்றபடி தவம் நீக்கும் தொல்வினைகளும் உண்டு என்க. அருளுடைத் தவம்; ''அருளுதல் சான்ற வருந்தவஞ் செய்ம்மின்'' (வளையாபதி, புறத்.). குழைத்த அமுது - இனிய பொருளோடு கலந்து குழையச் செய்த உணவு எனலும் ஆம்; கோடல் - கொள்ளுதல். தவ வாழ்வை அமுதாக உருவகித்து அரசாட்சியை நஞ்சென்று குறிப்பினால் புலப்படுத்தினான். ''ஞாலங் காவ னஞ்சென நீக்கி'' (பெருங். 2. 11 : 58); ''அமுதுண்பாய் நஞ்சுண்பாயோ'' (கும்பகருணன்) என்பது ஒப்பு நோக்குதற்குரியது.

(பி - ம்.) 1. இழைத்த தீவினையையுங், தீவினைதனைக், நல்வினையையும், வெவ்வினையையும்; எண்ணுறல், எண்ணுறத்.
2. தழைத்த நல்; தவத்தினுகுமே, தவத்தினாற்குமேல், தவத்தினுமென.
3. குழைத்த தேன், குழைத்த பேர்; அமுதுடைக் கோரம், கோலம்; கொள்ளல் நீக்கி.
4. ஆவதோ. (24)

26. கச்சையங் கடகரிக் கழுத்தின் கண்ணுறப்
பிச்சமுங் கவிகையும் பெய்யு மின்னிழல்
நிச்சய மன்றெனி னெடிது நாளுண்ட
எச்சிலை நுகருவ தின்ப மாகுமோ.

கச்சை - கயிறு பூண்ட, அம் கடம் கரி - அழகிய மத யானையின், கழுத்தின்கண் உற - கழுத்தில் அமர்ந்திருப்ப, பிச்சமும் - பீலிக் குஞ்சமும், கவிகையும் - வெண் குடையும், பெய்யும் - தருகின்ற, இன் நிழல் - இனிய நிழலையுடைய வாழ்வு, நிச்சயம் அன்று எனின் -

(என்றும்) நிலைக்கக்கூடியதன்று என்றால், நெடிது நாள் உண்ட எச்சிலை - நீண்ட காலமாக நுகர்ந்து வந்த எச்சில் போன்ற அவ்வாழ்வை, நுகருவது - மேலும் அநுபவிப்பது, இன்பம் ஆகுமோ - (உண்மையான) இன்பமாகுமோ?

கச்சை - கழுத்திடு கயிறு; கீழ் வயிற்றிலே கட்டுங் கயிறும் ஆம். பிச்சம் - பீலிக்குஞ்சம் என்னும் ஒருவகை விருது. பிச்சமும் கவிகையும் அரசச்சின்னங்கள்; பால. 863, குறிப்புக் காண்க. ''குடையும் பிச்சமும்'' (சீவக. 416); ''குடையும் கொடியும் கூந்தற்பிச்சமும்'' (பெருங். 1:36: 26). இச்செய்யுட் கருத்துக்கு ஒப்பு: ''யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச், சேனைத் தலைவராய்ச் சென்றோரும் - ஏனை, வினையுலப்ப வேறாகி வீழ்வர்தாம் கொண்ட, மனையாளை மாற்றார் கொள'' (நாலடி. 3); நிழல், இங்கு அரச போகத்தைக் குறித்தது.

தயரதன் இச்செய்யுளாலும் இவ்வுலக இன்பத்தில் தனக் குண்டான வெறுப்பைக் காட்டுகின்றான்.

(பா - ம்.) 1. கச்சைவெம், கச்சடு; கழுத்திற்கண் கடக்கரி; கண்ணகன்.
2. நெடிது நாளுடை.
3. நுகருமது, நுகர்வதும், நுகர்ந்திடின்; இன்பமாவதோ, இன்பம் யாவதோ, ஆக்கமாவதோ. (25)

27. மைந்தரை யின்மையின் வரம்பில் காலமும்
நொந்தனெ னிராமனென் னோவை நீக்குவான்
வந்தன னவனினி வருந்த யான்பிழைத்
துய்ந்தனென் போவதோ ருறுதி யெண்ணினேன்.

மைந்தர் இன்மையின் - மக்கள் இல்லாமையால், வரம்பு இல் காலமும் - எல்லையில்லாத (என் வாழ்நாட்) காலமெல்லாம், நொந்தனென் - (மனம்) வருந்தினேன்; என் நோவை நீக்குவான் - என் துன்பத்தை நீக்கும்பொருட்டு, இராமன் வந்தனன் - இராமன் (என் மகனாகத்) தோன்றினான்; இனி—,அவன் வருந்த - இராமன் (நிலச் சுமையைத் தாங்கி) வருந்த, யான் - நான், பிழைத்து உய்ந்தனென் போவது ஓர் உறுதி - தப்பி ஈடேறிப் போவதான ஒரு நன்மையை(ப் பெற), எண்ணினேன் - கருதினேன்.

(பா - ம்.) 1. இன்மையில்; காலமுன். 2. நோயை.
3. வந்தவனவனினி, வந்தனனினியவன்.
4. உய்ந்தனன் பேர்வதோர்; பெயர்வதோர், போர்வதற்கு. (26)

28. இறந்திலன் செருக்களத் திராமன் ருதைதான்
அறந்தலை நிரம்பமூப் படைந்த பின்னரும்
துறந்தில னென்பதோர் சொல்லுண் டானபின்
பிறந்தில னென்பதிற் பிறிதுண் டாகுமோ.

இராமன் தாதை - இராமனுடைய தந்தை, செருக்களத்து இறந்திலன் - (வீர சுவர்க்கம் பெறும்வண்ணம்) போர்க்களத்தில் இறந்தானில்லை, (அன்றி) தான் மூப்பு அடைந்த பின்னரும் - தான் முதுமையை அடைந்த பிறகும், அறம் தலை நிரம்ப - அறம் முழுதும் நிரம்பும்படி, துறந்திலன் - துறவறத்தை மேற்கொள்ளவில்லை, என்பது ஓர் சொல் - என்பதான ஓர் இழிந்த பேச்சு, உண்டானபின் - (உலகத்தாரிடையே) தோன்றியபின், பிறந்திலன் என்பதின் - (இவன்) பிறந்தும் பிறவாதவன் என்ற இழிவினும், பிறிது உண்டாகுமோ - வேறு உளதாகுமோ? (ஆகாது என்றபடி).

உலகில் பிறந்தோர் ஒவ்வொருவரும், இல்லறம் மேற்கொண்டு அதனை முறையாக நடத்திப் பின்னர்த் துறவு பூண்டு அதன் பயனையும் பெறுதலே சிறப்புடையதாகும்; அதுவே அறந்தலை நிரம்பியது எனலாம். ஆதலால், அறந்தலை நிரம்பத் துறந்திலன் 'என்ப தோர் சொல் என்றான். அரசர்க்குப் போர்க்களத்தே விழுப்புண் பட்டு உயிர் துறந்து வீரசுவர்க்கம் பெறுதல் சிறந்ததாகலின் அதனை முன்னர்க் கூறினான்.

இராமன் தாதை என்று தன்னைச் சொல்லிக்கொண்டது பிள்ளையைப் பெற்ற பின்னும் துறந்திலன் என்ற குறிப்பை உடையது. அற உருவினனான இராமனுக்குத் தாதையாயிருந்தும், தான் அறந்தலை நிரம்பப் பெறுதிருத்தலைக் குறிக்கக் கூறியது எனலுமாம். செருக் களத்து இறவாமல் மூத்துவிளிதல் அரசர்க்கு இழிதகவுடைத்து என்பது, "செற்ற தெவ்வர் தேஎந்தம தாக்கியும், தருப்பையிற் கிடத்தி வாளிற் போழ்ந்து, செருப்புகன் மன்னர் செல்வுழிச் செல்கென, மூத்து விளிதலிக் குடிப்பிறந்தோர்க்கு, நாப்புடை பெயராது நாணுத்தக வுடைத்து" (மணி.23: 12 - 16) என்றமையாலும், புறநா. 93; தொல். அகத். சூ. 44. ந. உரை, அகநா. 61 : 1 - 3. ஆகியவற்றாலும் பெறப் படும். பிறந்திலன்: "இறந்தில னிருந்தன னென்செய் தாற்றுவான், பிறந்திலன் பரதனீபெறுத லாலென்றாள்" (155).

"ஆற்ற, அறஞ்செய் தருளுடையீ ராகுமின் யாரும், பிறந்தும் பிறவாதா ரில்" (நாலடி. 7).

(பி - ம்.) 1. இறந்தனன். 2. நிரம்பி மூப்பு, நிரப்பி மூப்பு; நின்றறம் படைத்த பின்னரும்.
3. என்றதோர், என்னதோர். 4. பிறந்தனன்; என்றலா, என்ற சொல்.

29. பெருமக னென்வயிற் பிறக்கச் சீதையாம்
திருமகண் மணவினை தெரியக் கண்டயான்
அருமக னிறைகுணத் தவனி மாதெனும்
ஒருமகண் மணமுங்கண் டுவப்ப வெண்ணினேன்.

பெருமகன் - புருஷோத்தமனான இராமன், என்வயின், பிறக்க - எனக்கு மகனாகத் தோன்ற, (அவனுக்குரியவளாக) சீதை ஆம் திருமகள் மணவினை - சீதையாகிற இலக்குமியின் திருமணத்தை, தெரியக் கண்ட யான் - நேராகப் பார்த்த நான், அருமகன் - அவ் வருமை மகன் இராமன், நிறைகுணத்து - நிறைந்த குணங்களையுடைய, அவனி மாது எனும் - பூமிதேவி என்கிற, ஒரு மகள் மணமும் - ஒப்பற்ற பெண்ணை மணந்துகொள்ளுதலையும், கண்டு உவப்ப எண்ணினேன் - கண்ணாரக் கண்டு மகிழ நினைத்தேன்.

திருமாலுக்குத் திருமகள், பூமகள் ஆகிய இரு தேவிமார் உள்ளமை உலகமறிந்த உண்மை. அரசர் அவனி மாதை மணத்தல்: 38; சிந்தாமணியில், பூமகளிலம்பகம் என்ற பகுதி சீவகன் நாட்டர சுரிமை ஏற்றதைக் கூறுவது காண்க. திருமகளும் பூமகளும் இராமபிரானின் பத்தினியர் என்றது: 298, 362, 400.

இதுகாறும் மன்னன் தான் துறக்க விரும்பியதற்குக் காரணங் கூறி, இச்செய்யுள்முதல் இராமபிரானுக்கு அவன் முடிசூட்ட விரும்பியதைக் கூறுகின்றான்.

(பி - ம்.) 1. பெருமிலை மகள்வயிற் பிறந்த.
3. அருமக ணிறை குணத்து, அருமறை நிறைகுணத்து; மாதொடும்.
4. அருமறை உவப்பதாயினேன், உவப்பவுன்னினேன். (28)

30. நிவப்புறு நிலனெனு நிரம்பு நங்கையும்
சிவப்புறு மலர்மிசைச் சிறந்த செல்வியும்
உவப்புறு கணவனை யுயிரி னெய்திய
தவப்பயன் றாழ்ப்பது தரும மன்றரோ.

நிவப்பு உறு - உயர்வு பெற்ற, நிலன் எனும் - பூமி என்னும், நிரம்பு நங்கையும் - எல்லாக் குணங்களும் நிரம்பிய தேவியும், சிவப்பு உறு மலர் மிசை - செந்நிறம் பெற்ற தாமரை மலர்மீது, சிறந்த - சிறப்பமைய வீற்றிருக்கும், செல்வியும் - திருமகளும், உவப்பு உறு - (தத்தம் உள்ளத்துக்கு) மகிழ்ச்சியைத் தரும், கணவனை - தலைவனை, உயிரின் - தத்தம் உயிர்போல, எய்திய தவம் பயன் - அடைவதற்கு உதவிய தவத்தின் பயனை, தாழ்ப்பது , தாமதிக்கச் செய்வது, தருமம் அன்று - தருமம் ஆகாது. அரோ : அசை.

முன் செய்யுளின் கருத்தையே மறுமுறையும் கூறி, இராமபிரானுக்கு முடிசூட்டும் நாளைத் தாழ்ப்பது தருமமாகாதென்று கூறுகின்றான்.

பூமகள், மண்மகள் இருவரும் இராமபிரானைத் தலைவனாக அடைதல் : "பொன்னு யிர்த்தபூ மடந்தையும் புவியெனும் திருவும், இன்னு யிர்த்துணை யிவனென நினைக்கின்ற விராமன்" (38).

(பி - ம்.) 1. நிரம்புமங்கையும், நிரப்பு மங்கையும்.
2. பெரிய செல்வியும். 3. எய்தினர்.
4. இழப்பது. (29)

31. ஆதலா லிராமனுக் கரசை நல்கியிப்
பேதைமைத் தாய்வரும் பிறப்பை நீக்குவான்
மாதவந் தொடங்கிய வனத்தை நண்ணுவேன்
யாதுநுங் கருத்தென வினைய கூறினன்.

ஆதலால்—, அரசை - அரசாட்சியை, இராமனுக்கு நல்கி - இராமனுக்கு அளித்துவிட்டு, பேதைமைத்து ஆய் வரும் பிறப்பை - அறியாமையையுடையதாக வரும் பிறவி நோயை, நீக்குவான் - விலக்கும்பொருட்டு, மா தவம் தொடங்கிய - பெரிய தவத்தைத் தொடங்குவதற்காக, வனத்தை நண்ணுவேன் - காட்டை அடைவேன்; நும் கருத்து யாது - (இதைப்பற்றி) உங்கள் கருத்து யாது? என - என்று, இனைய கூறினன் இத்தன்மையானவற்றை விளம்பினன்.

பேதைமை - அவிச்சை. பேதைமையாய் வரும் பிறப்பு; "பிறப்பென்னும் பேதைமை நீங்க" (குறள். 358-ம் பரிமேலழகர் உரையும் காண்க); "பேதைமையென்னும் வித்திற் பிறந்து" (சீவக. 1389).

(பி - ம்.) 2. பேதைமை, தாய்வரும், பேதைமைத் தால்வரும்; நீக்கயான், நீக்குறும்.
3. தொடங்குற, தொடங்குவான்; நண்ணுமேவற்கு.
4. இனிய கூறினன், இனிது கூறினன். (30)

மந்திரக் கிழவரின் உட்கோள்

(கலிநிலைத்துறை)

32. திரண்ட தோளின னிப்படிச் செப்பவுஞ் சிந்தை
புரண்டு மீதிடப் பொங்கிய வுவகைய ராங்கே
வெருண்டு மன்னவன் பிரிவெனும் விம்முறு நிலையால்
இரண்டு கன்றினுக் கிரங்குமோ ராவென விருந்தார்.

திரண்ட தோளினன் - பருத்த தோள்களை உடைய தசரதன், இப்படி செப்பவும் - இவ்வாறு கூறவும், (மந்திரக் கிழவர்) சிந்தை - மனத்தில், புரண்டு மீது இட பொங்கிய - எழுந்து மேலோங்கிப் பொங்கிய, உவகையர் - மகிழ்ச்சியை உடையராகி, ஆங்கே - அதே நேரத்தில், மன்னவன் பிரிவு என்னும் - அரசனுடைய பிரிவு என்கிற

விம்முறு நிலையால் வெருண்டு - வருத்தந் தரும் நிலைமையால் மனம் கலங்கி, இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஓர் ஆ என - இரண்டு கன்று களுக்காக மனமிரங்கும் ஒரு பசுவை ஒத்து, இருந்தார் - ஒன்றும் (தெளிய மாட்டாதவராக) இருந்தனர்.

இரண்டு கன்றையுடைய ஆ இரண்டில் ஒன்றை விடும் நிலை வந்தபோது எதையும் பிரிய இயலாமல் இரண்டுக்கும் இரங்குவது போல, தசரதன் கானகம் செல்வதையும் இராமன் அரசனாகாமல் இருத்தலையும் விரும்பாமல் இருவரையும் விட மனமின்றி இரங்கினர் என்று உவமையை விரித்துக் கொள்க. உவகையும் விம்முறு நிலையும் அடைதல்: "இன்னலு முவகையு மிரண்டு மெய்தினன், தன்னல தொருபொரு டனக்கு மேவிலான்" (ஆரணிய. 1115); "துன்பமு முவகையுஞ் சுமந்த வுள்ளத்தான்" (சுந்தர. 573). இரண்டு கன்றினுக் கிரங்கு மோரா: "இருவருந் தொழுதன ரிரண்டு கன்றெரீஇ; வெருவரு மாவெனத் தாயும் விம்மினள்" (447).

(பா.ம்.) 1. தோளண்ணலப்படிச்; செப்பலும், செப்பவே.
2. மீதெழப்; உவகை யாங் கெய்தா, எய்தி; துயரினாரங்கே.
3. வெருண்ட, தெருண்ட; விம்முறு நிலையார், விதிர்ப்புறு நிலையசால், வெருவருநிலையார், வெறுவுறு நிலையால், ஏமுறு நிலையார்; தீச்சுடத் தியங்கி, தீத்துயரெய்த.
4. கன்னினுக்கு; இரங்கிய வாவென. (31)

33. அன்ன ராயினு மரசனுக் கதுவல்ல துறுதி
பின்ன ரில்லெனக் கருதியும் பெருநில வரைப்பின்
மன்னு மன்னுயிர்க் கிராமனின் மன்னவ ரில்லை
என்ன வுன்னியும் விதியது வலியினு மியைந்தார்.

அன்னர் ஆயினும் - (அமைச்சர் மன்னன் பிரிவுக்கு வருந்தி) அத்தன்மையராயினும், அரசனுக்கு - தயரதனுக்கு, பின்னர் உறுதி - மறுமைக்கு நன்மையாவது, அது அல்லது இல் - தவம் செய்யச் செல்வதையன்றி (வேறு) இல்லை, என கருதியும் - என்று எண்ணியும், பெருநில வரைப்பில் - பெரிய நில உலகத்தில், மன்னும் - தங்கும், மன் உயிர்க்கு - நிலைபேறுடைய உயிர்களுக்கு, இராமனின் - இராம பிரானைப் போல, மன்னவர் - (சிறந்த) அரசர், இல்லை என உன்னியும் - இலர் எனக் கருதியும், விதியது வலியினும் - விதியின் வலிமையாலும், இயைந்தார் - (மன்னன் விருப்பத்திற்கு) இணங்கினார்கள்.

மன்னன் விருப்பத்திற்கு அமைச்சர்கள் இணங்கினமைக்குப் பொருத்தமான மூன்று காரணங்கள் காட்டப்பெற்றுள்ளன. அவர்கள் தம் இசைவைக் குறிப்பால் உணர்த்தினரென்க.

அமைச்சர் இயைந்தமையால் மேலே தயரதன் இராமனுக்கு முடிசூட்ட உறுதி செய்தான். அதனை அறிந்து கைகேசி மனந்திரம்பு

தலையும் அதன்மேல் உண்டாகும் விளைவுகளையும் எண்ணி, 'விதியது வலியினும்' என்றார்.

இராமபிரான் திறத்து அமைச்சர் முதலியோர் கொண்ட கருத்துக்கள் மேலே வரும் வசிட்ட முனிவர் கூற்றால் விளங்கும்.

(பி - ம்.) 1. அன்னதாயினும்: அரசற்கு மதுவல்லது, அதுவல்ல தரசனுக்கு, இதுவலா லரசனுக்கு.
3. மன்னனுக்கிராமனின்; இன்னுயிர்க், இராமனின் மன்னுயிரில்லை, இராமனே யன்றி மற்றில்லை, இராமனென்னுயிரது வகையே.
4. எண்ணியும்; வகையினுமிசைந்தார். (32)

வசிட்டர் கூறத் தொடங்கல்

34. இருந்த மந்திரக் கிழவர்த மெண்ணமு மகன்பால்
பரிந்த சிந்தையம் மன்னவன் கருதிய பயனும்
பொருந்து மன்னுயிர்க் குறுதியும் பொதுவுற நோக்கித்
தெரிந்த நான்மறைத் திசைமுகன் றிருமகன் செப்பும்.

தெரிந்த நால்மறை - ஆராய்ந்த நான்கு வேதங்களின் அறிவைப் பெற்றுள்ள, திசைமுகன் திருமகன் - நான்முகன் திருமகனான வசிட்ட முனிவன், இருந்த - (அவ்வவையில் கூடி) இருந்த, மந்திரம் கிழவர் தம் எண்ணமும் - அமைச்சர்களின் கருத்தையும், மகன் பால் - தன் மகனாகிய இராமனிடத்தில், பரிந்த - அன்பு கொண்ட, சிந்தை - மனத்தையுடைய, அ மன்னவன் - அந்தத் தயரதன், கருதிய - எண்ணிய, பயனும் - பயனுள்ள செயலையும், மன் உயிர்க்கு பொருந்தும் உறுதியும் - (அச்செயலால்) நிலைபெற்ற உயிர்களுக்கு விளையக்கூடிய நன்மையையும், பொது உற நோக்கி - நடுவுநிலை பொருந்த ஆராய்ந்து, செப்பும் - (பின்வருமாறு) கூறுவானானான்.

பொதுவுற நோக்கி என்றது, மந்திரக் கிழவரைப் போல இரண்டு கன்றினுக்கு இரங்கும் ஆவைப் போன்று இராது நடுநிலையில் நின்று ஆராய்ந்து என்றபடி.

(பி - ம்.) 1. கிழவரது; எண்ணமுந்தன்பால்; மகன்மேல்.
2. சிந்தையும், சிந்தைய மன்னவன், சிந்தனை மன்னவன்.
3. பொருந்த; உறுவதும்; பொதுவற.
4. தெரிந்து; திசைமுகன் மகனிவை. (33)

வசிட்ட முனிவர் கூறுதல்

35. நிருப நின்குல மன்னவர் நேமிபண் டுருட்டிப்
பெருமை யெய்தினர் யாவரே யிராமனைப் பெற்றார்
கரும மும்மிது கற்றுணர்ந் தோர்கட்குக் கடவ
தரும மும்மிது தக்கதே நினைந்தனை தகவோய்.

தகவோய் - தகுதியுடையோனே, நிருப - மன்ன, பண்டு - முன்பு, நேமி உருட்டி - ஆக்ஞா சக்கரத்தைச் செலுத்தி, பெருமை எய்தினேர் - மேன்மை அடைந்தவர்களான, நின் குலம் மன்னர் - உன் குலத்து அரசர்களுள், யாவர் இராமனைப் பெற்ருர் - எவர் இராமனைத் தம் மகனுகப் பெறும் பேற்றை அடைந்தார்? (உன்னையன்றி; வேறு எவரும் இலர்; ஆகவே) கருமமும் இது - (இப்போது) செய்யத்தக்க காரியமும் இதுவே; கற்றுணர்ந்தோர்கட்கு - அற நூல்களைக் கற்று நல்லுணர்வு பெற்றவர்களுக்கு, கடவ - செய்யக்கடவதாகிய, தருமமும் இது - தருமமும் இதுவே; தக்கதே நினைந்தனை - தகுதியையுடைய செயலையே கருதினை.

இதுமுதல் ஏழு செய்யுட்கள் ஒரு தொடர்; வசிட்ட முனிவர், 'யாது நும் கருத்து' என்ற மன்னன் வினுவுக்கு விடையாகக் கூறியவை; 41-ஆம் செய்யுளில் உள்ள புகன்ருன் என்பதனேடு இயைந்து முடிவு கொள்ளும்.

முனிவர் மன்னனிடம் கொண்ட மதிப்பினுலும் அவன் தகுதியே கருதிய பெருமை நோக்கியும், அவனை 'நிருப' என்றதனேடு அமையாது, 'தக்கோய்' எனவும் விளித்தார். சூரிய வமிசத்து மன்னர்களிற் பலர் வீரம், கொடை முதலியவற்ருல் சிறந்து விளங்கினரேனும், இராமனை மகனுகப் பெறும் பேறு தயரதன் ஒருவனுக்கே உண்டானமையால் அவனை அவர்கள் அனைவரினும் சிறந்தவனுகக் கருதிப் போற்றினுர் என்க. நேமி — ஆக்ஞா சக்கரம். கருமம் என்றது ஒருவன் தன் நலம் குறித்து ஆற்றும் கடமை. தருமம் என்றது யாவருக்கும் பயன் தரும் செயல். முன்னது தயரதன் துறவையும் பின்னது இராமன் முடி சூடுதலையும் குறித்தன.

(பி - ம்.) 1. நின்குல மரபினேர், மரபுளோர், முதலினேர்.
2. கருமமேயிது; உணர்ந்தோய்க்கினிக், உணர்ந்தோர்க்கினிக்.
3. உரைத்தனை. (34)

36. புண்ணி யம்புரி வேள்விகள் யாவையும் புரிந்த
அண்ண லேயினி யருந்தவ மியற்றவு மடுக்கும்
வண்ண மேகலை நிலமகண் மற்றுனைப் பிரிந்து
கண்ணி ழந்தில ளெனச்செயு நீதந்த கழலோன்.

புண்ணியம் புரி - நற்பயன்களைத் தருகிற, வேள்விகள் யாவையும் - (மன்னருக்குரிய) வேள்விகள் யாவற்றையும், புரிந்த - செய்த, அண்ணலே - பெரியோனே, இனி - இனிமேல், அரு தவம் இயற்றவும் அடுக்கும் - செய்தற்கரிய தவங்களை நீ ஏற்றுச் செய்தலும் பொருந்தும்; வண்ணம் மேகலை நிலம் மகள் - அழகிய மேகலாபரணம் பூண்ட பூமிதேவி, உனை பிரிந்து - உன்னை விட்டுப் பிரிவதனுல், கண் இழந்திலள் என - கண்ணை இழக்கவில்லை என்று சொல்லும்படி, நீ தந்த கழலோன் - நீ பெற்ற வீரனுன இராமன், செயும் - செய்வான்.

தயரதன் வேள்விகள் யாவையும் புரிந்தவன் என்பது : பால. 171. பிறருக்குத் தீமை உண்டாகும்படி அசுராரதியோர் செய்யும் வேள்வியும் உண்டாதலின் அதனை மாற்றி, 'புண்ணியம் புரி வேள்வி கள்' என்றார். வேள்விகள் பல புரிந்தவரே தவம் செய்யத் தக்கவர் என்பதும் இங்குக் கூறப்பெற்றது. நிலமகள் வண்ண மேகலை - கடல். அரசனுக்குக் கண் : ''கண்ணெனப் படுவ மூன்று காவலர் கல்வி காமர், விண்ணினைச் சுழல வோடும் வெய்யவர்'' (சூளா. மந்திர. 30); ''மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம், கண்ணு மாவியு மாம்பெருங் காவலன்'' (பெரிய. திருநகரச்.). கழலோன் - வீரக்கழலை அணிந்தவன்; தாடகையைக் கொன்று பரசுராமனை வென்று கட்டிய கழல்; இங்கே இதைச் சுட்டியது பகையைப் பொரும் தகுதியுடை யவன் என்பதைப் புலப்படுத்த.

(பி - ம்.) 1. புண்ணியம் தொடர், புண்ணியம் பல; எண்ணருந்தவம்; தான் முனர்ப் புரிந்த.
2. அண்ணல் நீ; இருந்தவம் புரியவு மடுக்கும்.
4. எனச் செய. (35)

37. புறத்து நாமொரு பொருளினிப் புகல்கின்ற தெவனே
அறத்தின் மூர்த்திவந் தவதரித் தானென்ப தல்லால்
பிறத்தி யாவையுங் காத்தவை பின்னின்று துடைக்கும்
திறத்தின் மூவருந் திருத்தின திருத்துமத் திறலோன்.

அறத்தின் மூர்த்தி - தருமத்தின் வடிவான பரம்பொருள், வந்து - (தன்னிச்சையால் இவ்வுலகில்) வந்து, அவதரித்தான் என்பது அல்லால் - (இராமனாக) அவதரித்துள்ளான் என்பதையன்றி, புறத்து - (அதனின்) வேறாக, நாம் புகல்கின்றது ஒரு பொருள் எவன் - நாம் சொல்லத்தக்கதொன்று யாது? யாவையும் பிறத்து -(உலகத்து) எல்லா வற்றையும் தோற்றுவித்து, பின் நின்று காத்து - (அவற்றை) அப்பால் நின்று காத்து, அவை துடைக்கும் - அவற்றை அழிக்கின்ற, திறத்தின் மூவரும் - அவ்வத் திறம்படைத்த (பிரமன், திருமால், உருத்திரன் என்ற)மும்மூர்த்திகளும், திருத்தின - செய்வனவற்றை, அ திறலோன் - எல்லா ஆற்றலுங்கொண்ட அவ்விராமன், திருத்தும் - (தான் ஒரு வனாகவே) செய்து முடிப்பான்.

'மும்மூர்த்திகளுக்கும் அப்பாற்பட்ட பரம்பொருளே இராமனாக வந்து அவதரித்துள்ளானாதலால், அவனால் ஆகாததொன்றில்லை' என இராமபிரானது அவதாரச் செய்தியை வசிட்ட முனிவர் குறிப்பிக் கின்றார்.

பிறத்து - பிறந்து என்பதன் பிறவினை. பிறத்தி : இகரம் குற்றிய லிகரம். அறத்தின் மூர்த்தி: ''தரும மன்னநிற் றந்த'' (63); ''தரும மூர்த்தி'' (யுத்த. 2211); ''அறவாழி அந்தணன்'' (குறள். 9)

என்பதற்கு, 'பலவேறு வகைப்பட்ட அறங்கள் எல்லாவற்றையும் தனக்கு வடிவாக உடையவன்' என்று பரிமேலழகர் எழுதிய உரை இங்கே கருதத்தக்கது. திருத்துதல் - செம்மையாகச் செய்தல்; "மூவர் காரியமுந் திருத்துமம் முதல்வன்'' (திவ். பெரியாழ்வார். 4. 4 : 1).

(பி - ம்.) 1. நாமொரு பொருளினைப், நாமினியொரு பொருள்; புகலுவதேவனே, நாமினிப் புகல்வின்றதொரு பொருளில்லை.
3. பிறத்தல் யாவையும், பிறத்தல் காத்தவை, பெறுத்தல் யாவையும்; பின்னுறத் துடைக்கும், பின்னின்று துடைத்தல்.
4. திறத்து மூவரும்; திருத்திய திருத்துறத், திருத்திடத் திருத்துமத். (36)

38. பொன்னு யிர்த்தபூ மடந்தையும் புவியெனுந் திருவும்
இன்னு யிர்த்துணை யிவனென நினைக்கின்ற விராமன்
தன்னு யிர்க்கென்கை புல்லிது தற்பயந் தெடுத்த
உன்னு யிர்க்கென நல்லன்மன் னுயிர்க்கெலா முரவோய்.

உரவோய் - வலிமையை உடையவனே, பொன் உயிர்த்த பூ மடந்தையும் - அழகைத் தோற்றுவிக்கும் சீதேவியும், புவி எனும் திருவும் - பூமிதேவி என்னும் பெண்ணும், இன் உயிர் துணை இவன் என நினைக்கின்ற இராமன் - (தத்தம்) உயிர்க்கு இனிய துணைவன் இவனே என்று நினைக்கின்ற இராமன், தன் உயிர்க்கு (நல்லன்) என்கை புல்லிது - தன் உயிரை ஓம்புதலில் நல்லவன் என்று சொல்லுதல் புன்மையானது; (அவன்) தன் பயந்து எடுத்த - தன்னைப் பெற்றெடுத்த, உன் உயிர்க்கு என - உன் உயிர்க்கு (நல்லன்) ஆவது போல, மன் உயிர்க்கு எல்லாம் நல்லன் - நிலைபெற்ற எல்லா உயிர்களுக்கும் நல்லவனாவான்.

நல்லன் - நன்மை செய்பவன். நல்லன் என்பதனை முன்னும் கூட்டுக. இராமன் தயரதனுக்கும் பிற உயிர்களுக்கும் நல்லன்: "என்மக னென்க ணென்னுயி ரெல்லா வுயிர்கட்கும், நன்மகன்'' (கைகேசி சூழ்வினை.). இராமன் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன் என்றார். இராமபிரான் உலகத்தால் போற்றப்படுவான்; ஆகவே அவனுக்கு முடிசூட்டுதலை உலகம் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளும் என்பது வசிட்டன் கருத்து.

(பி - ம்.) 2. நினைகின்ற.
3. என்னுயிர்க்கு: புல்லிதிங்கிவற் பயந்தெடுத்த, புல்லிதங்கவற் பயந் தெடுத்த.
4. மற்றுயிர்க் கெலாம்; உரவோன். (37)

39. வார மென்னினிப் பகர்வது வைகலு மனையான்
பேரி னுல்வரு மிடரெலாம் பெயர்கின்ற பயத்தால்
வீர நின்குல மைந்தனை வேதியர் முதலோர்
யாருந் தாஞ்செய்த நல்லறப் பயனென விருப்பார்.

வீர - வீரனே. வைகலும் - நாள்தோறும், அனையான் - அந்த இராமனது, பேரினால் - பேரைச் சொல்லுதலால், வரும் இடர் எலாம் - (ஒருவருக்கு) வரும் துன்பங்கள் எல்லாம், பெயர்கின்ற பயத்தால் - நீங்கிப் போகின்ற பயனால், நின் குலம் மைந்தனை - உன் சிறந்த மகனான இராமனை, வேதியர் முதலோர் யாரும் - வேதமறிந்த அந்தணர் முதலானோர் யாவரும், தாம் செய்த நல் அறம் பயன் என இருப்பார் - தாங்கள் இயற்றிய நல்ல அறங்களின் பயனானவன் என்று கருதியிருக் கிறார்கள்; (இவ்வாறாக) வாரம் - (குடிமக்களுக்கு அவனிடம் உள்ள) அன்பைப்பற்றி, என் இனி பகர்வது - என்ன இப்போது கூறுவது?

வாரம் - அன்பு; தடை எனலுமாம்; இராம நாம மகிமை : பால. பாயிரம்; "அண்டமு மகிலமு மறிவரு நெறியால், உண்டவ னொருபெய ருணர்குந ருறுபே, றெண்டவ நெடிது" (ஆரணிய. 117); கிட்கிந்தா. 300; 361; 964; 972. சுந்தர. 89; 552; யுத்த. 2211; 3762 முதலியன காண்க. பேரினால் இடையூறு பெயர்கின்றமை : "தீமையவை தீர, ஏறும்வகை யிங்குள திராமவென வெல்லாம், மாறுமதின் மாறுபிறி தில்" (சுந்தர. 89); "ஈதைகள் தீர்க்கும் நாமத் திராமனை" (யுத்த.2211).

(பி - ம்.) 1. மறைப்பொருள் அனையான்.
2. பாரினால் வரும்; இடையுறு, இடையூறு; பெயர்க்கின்ற, பேர்கின்ற; போக்கு நற்பயனால்; பேரை யோதத் தம்மிடர்பல பிதிர்கின்ற; திறத்தால்.
4. பாரும்; யாஞ்செய்த; நல்லறத்தவமென, நல்லறந்தவமென, நல்லற மாகுமென்று. (38)

40. மண்ணி னுந்நல்லள் மலர்மகள் கலைமகள் கலையூர்
பெண்ணி னுந்நல்லள் பெரும்புகழ்ச் சனகியோ நல்லள்
கண்ணி னுந்நல்லன் கற்றவர் கற்றிலா தவரும்
உண்ணு நீரினு முயிரினு மவனையே யுகப்பார்.

மண்ணிலும் நல்லள் - (பொறுமையால்) பூமியினும் மேலான வளும், மலர்மகள் கலைமகள் கலை ஊர் பெண்ணினும் - பூமகளும் கலைமகளும் கலைமான் வாகனமுடைய சதிதேவியுமாகிய மூவரினும், நல்லள் - (முறையே அழகாலும், அறிவாலும், கற்பாலும்) மேலான வளும் (ஆகிய), சனகியாம் நல்லள் - சீதையாகிய நல்லவளது, கண்ணினும் நல்லன் - கண்ணினும் நன்மையானவன்; கற்றவர் கற்றிலாதவரும் - கற்றவர்களும் கல்லாதவர்களும், உண்ணும் நீரினும் - தாம் பருகும் நீரைக் காட்டிலும், உயிரினும் - தம்முயிரைக் காட்டிலும், அவனையே உகப்பர் - அவ்விராமனையே விரும்பி மகிழ்வார்கள்.

நாடாளும் அரசனொருவனுக்கு, அவன் தேவியாகிய அரசியும் மிக்க மாட்சியுடையளாதல் இன்றியமையாதது; "புகழ்புரிந் தில்லி லோர்க் கில்லை யிகழ்வார்முன், ஏறுபோற் பீடு நடை" (குறள். 59); பலவகைச் சிறப்பும் பொருந்திய இராமனுக்கு உற்ற துணைவியான

வளும் பலவகையில் மேம்பாடுற்றவளாக அமைந்துள்ளாள்; எனவே, இராமனிடத்து அரசாட்சியை ஒப்பித்தல் எவ்வகையிலும் ஏற்புடையதே என்ற கருத்துப்பட, வசிட்ட முனிவர் இங்கே சானகிப்பிராட்டியின் பெருமையையும் எடுத்து இணைத்துக் கூறினர்.

'நீரின்றமையா துலகு' என்ற சிறப்புடைய உண்ணும் நீரினும் மக்கட்குச் சிறந்தவனாகின்றான் இராமபிரான்; உயிரினும் சிறந்த பொருள் யார்க்கும் இல்லையாயினும், உலகுக்கே உயிராகும் உயர் தகுதி வாய்ந்த இராமபிரானைத் தம்முயிரினும் மேலாக மக்கள் மதிப்பர் என்றார்; "இன்னுயிர்க்கு மின்னுயிரா யிருநிலமுன் காத்தளித்த, பொன்னுயிர்க்குங் கழலவர்" (பால. 718) என மனு குலத்தோர் சிறப்பிக்கப் பெறுதலும் காண்க.

குறிப்பு: இதனை ஓர் அதிகப் பாடலாகக் கொள்ளலாம். எல்லா அச்சுப் புத்தகங்களிலும் காண்கிறது. ஒரு சுவடியில்மட்டும் இல்லை. இருந்தாலும் பொருத்தமாக இல்லை.

(பி - ம்.) 1. மண்ணினு நல்லள், மண்ணிலு நல்லள்; கலைமகள் மலர்மகள், மலை மகள், கலைதெரி மாமகள்; மலைமகள் மலர்மகள், நாமகள் மலைமகள்; மலர்மகள்.
2. பெண்ணினு நல்லள்; சனகியோ நல்லள், சனகி பேருலகின், சனகி என்றுரைப்பாள்; ஆமெனப் பெரும் புகழ்ச் சனகி, பெரும் புகழ்ச் சனகியுமவடன்.
3. கண்ணினு நல்லர், கண்ணிலும் நல்ல; கற்றிலாதாரும், கற்றிலாத வர்க்கும்.
4. நீரினும் உவரினும்; அவனையே உவப்பார், உவப்பர், இவனையே உவப்பார், அவனையே உவப்பார், இவனையே உவப்பார். (39)

41. மனிதர் வானவர் மற்றுளோ ரற்றங்காத் தளிப்பார்
இனிய மன்னுயிர்க் கிராமனிற் சிறந்தவ ரில்லை
அனைய னாதலி னரசநிற் குறுபொரு ளறியின்
புனித மாதவ மல்லதொன் றில்லெனப் புகன்றான்.

அரச - மன்னனே, மனிதர் - மானிடரும், வானவர் - தேவரும், மற்று உள்ளோர் - (இவரல்லாத) பிறருமான அனைவருடைய, இனிய மன் உயிர்க்கு - இனிய நிலைபேறுடைய உயிர்களுக்கெல்லாம். அற்றம் காத்து -(நேரும்) கேடுகளைக் காத்து, அளிப்பார் - அருளாட்சி செய்யத்தக்கவர், இராமனின் சிறந்தவர் இல்லை - இராமனைவிட மேலானவர் எவரும் இல்லை; அனையன் ஆதலின் - அவன் அத்தகையவன் ஆதலினால், நிற்கு உறுபொருள் அறியின் - உனக்கு (இப்போது) பொருந்திய காரியத்தை நினைக்குமிடத்து, புனிதம் மாதவம் அல்லது - தூய பெரிய தவம் மேற்கொள்ளுதலையன்றி, ஒன்று இல் என - பிறிதொன்று இல்லை என்று, புகன்றான் - (வசிட்டன்) கூறினான்.

"இருந்த மந்திரக் கிழவர்" என்று தொடங்கிய செய்யுள் முதல் இது முடிய வசிட்டர் மன்னன் கருத்தை ஒட்டிக் கூறியவை. இவற்ருல் முனிவர் இராமபிரானுக்குரிய தகுதிகளை எடுத்துக் கூறியதோடு, அவன் பரம்பொருளின் அவதாரம் என்றும், அவன் ஆட்சி பெறுவதால் பூவுலகில் மட்டுமேயன்றி ஏனைய உலகங்களிலுள்ள உயிர்களும் நன்மை பெறுமென்றும், மன்னன் கருதியபடி இராமனுக்கு முடி சூட்டித் தான் தவம் மேற்கொள்ளுதலே எவ்வகையிலும் ஏற்புடைய தென்றும் கூறி முடித்தார்.

மற்றுளோர் - நாகர் முதலியோர். அறங்காத்து அளித்தல் - தீமைகளைத் தடுத்து நல்லன விளைவித்தல். 34-ஆம் செய்யுளில் முனிவர், "மன்னவன் கருதிய பயனும், பொருந்து மன்னுயிர்க் குறுதியும் பொதுவுற நோக்கி...இவை செப்பும்" என்பதற்கேற்ப இச்செய்யுள் அமைந்துள்ளமை காண்க. மன்னுயிர்க்கு இராமனிற் சிறந்தவரில்லை: "மன்னுயிர்கட் கெல்லாம், தாயினு மன்பி னானை" (யுத்த. 702).

(பி - ம்.) 1. வானுளோர் : மற்றுளாரறங்கள் காத்து, மற்றுளவறங்கள், மற்றுளார் மங்கிடாது; அளிக்க.
2. இனியம் மன்னுயிர்க்; இன்னனிற் சிறந்தவர்.
3. அனையதாதலின், அனைய காதலில்; ஐயமிற்கு, அரசினுக்கு; அறையில். (40)

தசரதனது மகிழ்ச்சியும் உரையும்

42. மற்ற வன்சொன்ன வாசகங் கேட்டலு மகனைப்
பெற்ற வன்றினும் பிஞ்ஞகன் பிடித்தவப் பெருவில்
இற்ற வன்றினு மெறிமழு வாளவ னிழுக்கம்
உற்ற வன்றினும் பெரியதோ ருவகைய னானான்.

(தயரதன்), அவன் சொன்ன வாசகம் கேட்டலும் - வசிட்ட முனிவன் கூறிய சொற்களைக் கேட்டவுடன், மகனை பெற்ற அன்றினும் - (தான் இராமனை) மகனைப் பெற்ற அந்நாளில் அடைந்ததைக் காட்டிலும், பிஞ்ஞகன் பிடித்த அ பெருவில் - சிவபிரான் ஏந்திய பெரிய வில், இற்ற அன்றினும் - (இராமபிரானால்) ஒடிந்த அந்நாளில் அடைந்ததைக் காட்டிலும், எறி - வீசப்படும், மழு வாளவன் - மழுவாகிய படையைத் தரித்த பரசுராமன், இழுக்கம் உற்ற அன்றினும் - தாழ்வுற்ற நாளில் தான் அடைந்ததைக் காட்டிலும், பெரியது ஓர் உவகையன் ஆனான் - மிக்கதொரு மகிழ்ச்சியுடையவனானான்.

"மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை, என்னோற்ருன் கொல்லெனுஞ் சொல்" (குறள். 70) என்றபடி, தன் மகன் வசிட்டரால் புகழப்பெற்றதைக் கேட்ட மன்னன் பேருவகை கொண்டான் என்க. அவ்வுவகை, தன் மகனால் தான் முன் மூன்று காலங்களில் பெற்ற உவகைகளிலும் பெரியதெனக் கூறுகின்ருர். இராமபிரானைப் புதல்வ

ளுக்ப் பெற்ற மன்னன் அவன் சான்ருேனாக வளர்ந்து வந்ததை அறிந்து, "கரைசெய லரியதோர் களிப்பின் வைகினுன்" என்றும் (பால. 315), அவன் சிவதனுசை முறித்த செய்தி கேட்டு, "நிலைமுக வலயங்க ளிமிர்ந்து நீங்கிட, மலையென வளர்ந்தன வயிரத் தோள் களே" (பால.811) என்றும், அவன் பரசுராமனை வென்றமையறிந்ததும், "களிப்பெனுங் கரையிலாக் கடலு ளாழ்ந்தனன்" (பால. 1381) என்றும் முன்பு கூறியவற்றைக் காண்க. பெற்ற வன்றினும் உவகையனுனன்: "பெற்ற நாளினும் பெரும்பூட் புதல்வரைக், கற்ற நாள்வயிற் கலி சிறந் துரைஇ, மகிழ்ச்சிக் கிளவி மழையென விசைப்ப" (பெருங். 1. 37 : 79 - 81); "முதியோள் சிறுவன், களிறெறிந்து பட்டன னென்னு முவகை, ஈன்ற ஞான்றினும் பெரிதே" (புறநா. 277 : 2 - 4); இன்னும் புறநா. 278 : 9; 295 : 5 - 7, குறள். 68 - 69 முதலியனவும் காண்க. பிஞ்ஞகன் - சடையையுடைய சிவபிரான்.

(பி - ம்.) 2. பிடிக்குமப்; பொருவில்.
3. எமுமமுவாளவன். (41)

43. அனைய தாகிய வுவகையன் கண்கணீ ரரும்ப
முனிவன் மாமலர்ப் பாதங்கண் முறைமையி னிறைஞ்சி
இனிய சொல்லினை யெம்பெரு மானருள் வழியின்
தனிய னுனிலந் தாங்கிய தவற்கது தகாதோ.

அனையது ஆகிய உவகையன் - அத்தன்மையுள்ள மகிழ்ச்சியை அடைந்த தயரதன், கண்கள் நீர் அரும்ப - இன்பக் கண்ணீர் ததும்ப, முனிவன் - வசிட்ட முனிவனுடைய, மா - சிறந்த, மலர் பாதங்கள் - தாமரை மலர் போன்ற பாதங்களை. முறைமையின் இறைஞ்சி - முறைப்படி வணங்கி, (அவனை நோக்கி) எம்பெருமான் - எம் ஐயனே, இனிய சொல்லினை - இதத்தையே சொல்லியருளினுய்; வழியின் - (முன்பும்) நீ காட்டியருளிய வழியிலேயே, தனியன் - துணையற்ற வனுகிய யான், நானிலம் தாங்கியது - புவியைத் தாங்கி அரசாட்சி செய்தது, அருள் வழியின் - நீ அருளிய வழியில்தான்; அது - அந்த அருள், அவற்கு - இராமனுக்கும், தகாதோ - பொருந்தாதோ? (பொருந்தும் என்றபடி).

இதுவும் அடுத்த கவியும் ஒரு தொடர்; அதன் ஈற்றில் உள்ள "உரைசெய்து மகிழ்ந்தான்" என்பதனோடு முடிவுறும். முறைமையின் இறைஞ்சுதல்: "மாத வன்றனை வரன்முறை வணங்கி" (59).

(பி - ம்.) 1. அனையனுகிய ; கண்ணினீர்; அரும்பி.
2. முனைவன்.
3. இனிது ; சொல்லினன் ; எம்பெருமாஅன் ; அருன் விழியின்; அருளன்றே.
4. அவற்கிவ. (42)

44\. எந்தை நீயுவந் திதஞ்சொல வெங்குலத் தரசர்
அந்த மில்லதோர் பெரும்புக ழவனியி னிறுத்தி
முந்து வேள்வியு முடித்துத்தம் மிருவினை முடித்தார்
வந்த தவ்வரு ளெனக்குமென் றுரைசெய்து மகிழ்ந்தான்.

எந்தை - எம் தந்தை போன்றோய், எம் குலத்து அரசர் - எங்கள் குலத்து முன்னோரான அரசர், நீ உவந்து இதம் சொல - நீ மன மகிழ்ந்து அவர்களுக்கு நல்ல உபதேசங்களைச் சொல்ல, அவனியில் - (இந்தப்) பூமியில், அந்தம் இல்லது ஓர் பெரு புகழ் நிறுத்தி - அளவற்ற பெரும் புகழை நிலைநிறுத்தி, முந்து வேள்வியும் முடித்து - முதன்மை யான பல யாகங்களையும் செய்து முடித்து, தம் இரு வினை முடித்தார் - தங்கள் (நல்வினை, தீவினை என்ற) இரு வினைத்தொடர்புகளையும் போக்கிக்கொண்டனர்; அ அருள் எனக்கும் வந்தது - அவ்வாறான நின் அருள் எனக்கும் கைகூடிற்று, என்று உரை செய்து - என்று சொல்லி, மகிழ்ந்தான் - மகிழ்ச்சியை அடைந்தான்.

தயரதனுடைய விருப்பம் அரச பாரத்தினின்றும் விடுபட்டுத் தவம் செய்யச் செல்லவேண்டுமென்பதே. அதற்குத் துணையாக, இராம பிரான் முடிசூடல் அமையவேண்டும். இவ்விரண்டும் கைகூட முனிவர் அருளியதை இச்செய்யுளில் அவன் கொண்டாடுகின்றான்.

இதம்-நன்மை; இங்கு உயிர்க்குறுதியான நன்மைகளைச் சுட்டிற்று. வீடடைவார் இருவினை முடித்துக் கொள்ளவேண்டும் என்ற நியதி உடையராதலால் 'இருவினை முடித்தார்' என்றார். முடித்தல் - நிறை வேற்றல்; அழித்தல். ஒரே அடியில் முடித்தல் என்னும் சொல்லை இரண்டு முறை காட்டியது: ''நின்னன்னை சாபமு, முடித்தென் னெஞ்சத் திடர்முடித்தான்'' (பால. 643). இச்செய்யுளால் தயரதன் முன்னோர்களுக்கும் வசிட்டனே குருவாயிருந்தவன் என்பது குறிக்கப் பெற்றது.

1. நீயும் வந்து நீ தவம்; இது சொல்ல; இயற்றலால்;
2. அந்தமில்லவர், அந்தமில்லா; அரும்புகழ்; நிறுத்த.
3. முந்து வேள்விகள்.
4. அந்தவவ்வருள்; எனக்கு மொன்று; உரைசெய; அரசனும் அறைந் தான். (43)

45\. பழுதின் மாதவன் பின்னொன்றும் பணித்தில னிருந்தான்
முழுது மெண்ணுறு மந்திரக் கிழவர்தம் முகத்தால்
எழுதி நீட்டிய விங்கித மிறைமகற் கேறத்
தொழுத கையினன் சுமந்திரன் முன்னின்று சொல்லும்.

பழுது இல் மாதவன் - குற்றமில்லாததும் பெரியதுமான தவத்தை உடைய வசிட்டன், பின் ஒன்றும் பணித்திலன் இருந்தான் - மேலே ஒன்றும் பேசாமல் இருந்தான்; (அப்பொழுது), முழுதும் எண்ணுறு

மந்திரம் கிழவர் - எதையும் தீர ஆராயும் இயல்புடைய அமைச்சர்கள், தம் முகத்தால் எழுதி நீட்டிய இங்கிதம் - தத்தம் முகத்தினால் தெரிவித்த குறிப்பை, இறை மகற்கு - மன்னனான தயரதனுக்கு, ஏற - உள்ளத்தில் படும்படி, சுமந்திரன் - சுமந்திரன் என்பான், முன் நின்று - (அவன்) முன்னே நின்று, தொழுத கையினன் - கூப்பி அஞ்சலி செய்த கைகளையுடையவனாக, சொல்லும் - சொல்வானானான்.

அவன் சொன்னவை பின் இரண்டு செய்யுட்களில் அமையும். சுமந்திரன் அமைச்சர் தலைவனாகவும், சேனாபதியாகவும் அரசனுக்கு உற்ற துணைவனாகவும் கூறப்படுபவன். இங்கிதம் - குறிப்பு. முகத்தால் எழுதி நீட்டிய இங்கிதம்; "நோக்கினாற் சுமந்திர னுவல லுற்றதை, வாக்கினா லன்றியே யுணர்ந்த மாதவன்" (948); "கண்ணிற் சொலிச் செவியி னோக்கு மிறைமாட்சி" (நீதிநெறி. 28). குறிப்புணர்த்தற்கு முகம் கருவியாதலை, குறள் குறிப்பறிதல் என்னும் அதிகாரச் செய்யுட்களாலும் அவற்றுள்ளும் குறிப்பறிதற்கருவி முகம் என்று கூறும் 706-8 - ஆம் செய்யுட்களாலும் அவற்றின் உரைகளாலும் அறிக. இறை மகன் - அரசன்.

(பி - ம்.) 1. பழுதிலாதவன்: பகர்ந்திலன்.
3. எழுதிக்காட்டிய; ஏற்க, ஏற்ப, ஒக்கத்.
4. சொல்வான். (44)

46. உறத்த கும்மர சிராமற்கென் றுவக்கின்ற மனத்தைத்
துறத்தி நீயெனுஞ் சொற்சுடு முன்குலத் தொல்லோர்
மறத்தல் செய்கலாத் தருமத்தை மறப்பதும் வழக்கன்
றறத்தி னூங்கினிக் கொடிதென லாவதொன் றியாதே.

அரசு இராமற்கு உற தகும் என்று - அரசாட்சி இராமபிரானுக்கு அமைதல் தக்கதாகும் என்று, உவக்கின்ற மனத்தை - மகிழ்கின்ற (எங்களை (எங்கள்) உள்ளத்தை, நீ துறத்தி எனும் சொல் சுடும் - நீ (எங்களை விட்டுத்) துறவு கொள்கின்றாய் என்னும் சொல்லானது சுட்டெரிக்கும்; (ஆனாலும்) உன் குலம் தொல்லோர் - உன் குலத்தைச் சார்ந்த முன்னோர்கள், மறத்தல் செய்கலா தருமத்தை - மறவாத (நினைவுடன் செய்து வந்த மகனுக்கு முடி சூடித் தாம் துறத்தலாகிய) நியதியை, மறப்பதும் - நீ மறந்துவிடுவதும், வழக்கு அன்று - முறை அன்று; (ஆதலால்) இனி, அறத்தின் ஊங்கு - தருமத்தின் மேற்பட்ட, கொடிது எனல் ஆவது ஒன்று - கொடியதென்று சொல்லத்தக்க ஒன்று யாது - வேறெது? ஏ: அசை.

தயரதன் துறத்தல் அறமாயினும் அது தமக்கு இனிதாகாமை கருதி, "அறத்தி னூங்கினிக் கொடிதென லாவதொன் றியாதே" என்றார். "சிறக்கும் செல்வ மகற்கெனச் சிந்தையிற், பிறக்கும் பேருவகைக்கடல் பெட்பற, வறக்கு மாவட வைக்கன லானதால், துறக்கு மன்னவ னென்னுந் துணுக்கமே" (96.) வழக்கு - நெறி. "அன்புற்

றமர்ந்த வழக்கென்ப'' (குறள். 75). அறம் கொடிது : ''ஒகொடிதே யற மென்னும்'' (206). மறத்தல் செய்கலாத் தருமம் - மகனுக்கு முடி சூட்டித் துறவு கொள்ளுதல்.

(பி - ம்.) 3. மறத்தல் செய்திலார்; செய்திலாத்; மறுப்பது, துறப்பது.
4. அறத்தினிங்கினிக், அறத்தினீங்கினிக்; கொடி தெனலாவ திங்கியாதோ, கொடிதெனல்யாவ தொன்றியாதே. (45)

47. புரைசை மால்கரி நிருபரும் புரத்துறை வோரும்
உரைசெய் மந்திரக் கிழவரு முனிவரு முவப்ப
முரைச மார்ப்பநின் முதன்மணிப் புதல்வனை முறையால்
அரைச னுக்கிய பின்புனக் கடுத்தது புரிவாய்.

புரைசை மால் கரி நிருபரும் - கழுத்திடு கயிறு பூண்ட பெரிய யானைப் படையை உடைய அரசர்களும், புரத்து உறைவோரும் - அயோத்தி நகரத்தில் வாழும் நகர மக்களும், உரை செய் மந்திரம் கிழவரும் - அரசியலுக்குரிய ஆலோசனைகளைக் கூறும் அமைச்சர் களும், முனிவரும் - முனிவர்களும், உவப்ப - மனங் களிக்கவும், முரைசம் ஆர்ப்ப - முரசங்கள் முழங்கவும், நின் - உன்னுடைய, முதல் மணி புதல்வனை - மூத்தவனும் நீலமணிபோன்ற நிறமுடையவனுமான மகனை, முறையால் - வேத முறைப்படி செய்ய வேண்டிய கருமங்க ளுடன், அரசன் ஆக்கிய பின்பு - (அபிடேகம் செய்து முடிசூட்டி) அரசனாகச் செய்த பிறகு, அடுத்தது - உனக்குத் தக்கதான தவம் மேற்கொள்ளுதலை, புரிவாய் - செய்வாயாக.

புரைசை, முரைசு, அரைசு என்பன இடைநிலைப்போலி. புரத்துறைவோர் உவப்ப அரசகாரியம் இயற்றப்படல் வேண்டும் என்பது, நகரமாந்தர்க்கு அரசியலில் உள்ள நிலையைக் குறிக்கிறது. நகர மாந்தர் எண்பேராயத்தினருள் சேர்க்கப்பெற்றிருந்தமை, சிலப். 5 : 157 - 60, அடியார்க். உரையால் விளங்கும். உரை செய் மந்திரக் கிழவர் - ''மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்'' (நறுந்தொகை) என்றபடி வரும் பொருளுரைப்பவர் என்றும் கூறலாம். உரைசெய்தல் : ''அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றும், திறனறிந்தான் றேர்ச்சித் துணை'' (குறள். 635) என்றபடி, 'ஆன்றமைந்த சொல்லுடைமை'யைப் பெற்ற மந்திரக் கிழவர் என்றும் பொருள் கொள்ளலாம். முதல் புதல்வன், மணிப் புதல்வன் எனத் தனித்தனி கூட்டுக : மணிப் புதல்வன் - மணி போன்ற நாயகத் தன்மையை யுடைய புதல்வன் எனலுமாம்.

(பி - ம்.) 1. புரைசெய்; மாக்கரி சிருபர்க்கும் புறத்துறைவோர்க்கும்.
2. மந்திரக்கிழவர்க்கும்; உரிய கற்றவமுடையதோர்; முனிவர்க்கு முள்ளம்; மகிழ்வாய்.
3. முரசம்.
4. அரசன்; ஆக்கிப்பின்; அப்புறத்தடுத்தது; புரிதல், புரிதி. (46)

இராமபிரானை அழைத்து வருமாறு மன்னன் சுமந்திரனை ஏவுதல்

48. என்ற வாசகஞ் சுமந்திர னியம்பலு மிறைவன்
நன்று சொல்லினை நம்பியை நளிமுடி சூட்டி
நின்று நின்றது செய்வது விரைவினி னீயே
சென்று கொண்டணை திருமகள் கொழுநனை யென்றான்.

என்ற வாசகம் - இவ்வாறான வார்த்தைகளை, சுமந்திரன் இயம்பலும் - சுமந்தரன் கூறினவுடன், இறைவன் - அரசன், (சுமந்திரனை நோக்கி), நன்று சொல்லினை - நல்லதையே சொன்னாய்; நம்பியை நளி முடிசூட்டி நின்று - சிறந்தோனான இராமனுக்குப் பெருமை மிக்க மகுடத்தை அணிவித்தே, நின்றது செய்வது - மேலே செய்ய நின்றதை யும் செய்வோமாக; நீயே—,விரைவினில் சென்று - விரைவிற் போய், திருமகள் கொழுநனை - திருமகள் மணாளனான அவனை, கொண்டு அணை - அழைத்துக்கொண்டு வருவாயாக, என்றான் - என்று கூறினான்.

நளி - பெருமை, நின்றது - எஞ்சி நின்றது; தவம் செய்யச் செல்வது. செய்வது : வியங்கோள். திருமகள் கொழுநன் - இராமன்; "திருவின் கேள்வன்" (பால. 331; ஆரணிய. 111); "திருவின் நாயகன்" (யுத்த. 4160, 4184.)

(பி - ம்.) 2. களிர்முடி, மணிமுடி.
3. நின்று பின்னது, நின்ற பின்னது, நின்று மற்றது; செய்குதும், செய்குவன், புரிகுவன்; விரைவினனீயே, விரைவினினீபோய். (47)
4. கொண்டருள்.

சுமந்திரன் மன்னனது கட்டளையை நிறைவேற்றுதல்

49. அலங்கன் மன்னனை யடிதொழு தவன்மன மனையான்
விலங்கன் மாளிகை வீதியின் விரைவொடு சென்றான்
தலங்கள் யாவையும் பெற்றனன் றானெனத் தளிர்ப்பான்
பொலங்கொ டேரொடு மிராகவன் திருமனை புக்கான்.

அவன் மனம் அனையான் - (அச்சொற் கேட்ட) மன்னனின் மனத்தை ஒத்தவனான சுமந்திரன், அலங்கல் மன்னனை - மாலை சூடிய அம்மன்னனை, அடி தொழுது - திருவடிகளில் வணங்கி, தலங்கள் யாவையும் - பூமியாட்சி முழுதும், தான் பெற்றனன் என - தானே அடைந்தவன் போல, தளிர்ப்பான் - மனமகிழ்ச்சியுடையவனாய், பொலம் கொள் தேரொடு - பொன்னால் ஆன தேருடன், விலங்கல் மாளிகை வீதியின் - மலைபோன்ற மாளிகைகள் நிறைந்த அரச வீதி யின் வழியே, விரைவொடு சென்றான் - விரைந்து சென்று, இராகவன் திருமனை புக்கான் - இராமபிரானுடைய திருமாளிகையில் புகுந்தான்.

'அவன் தேரொடு சென்றான் திருமனை புக்கான் என்றியைக்க. 'அவன் மனம் அனையான்' என்றது இராமபிரான் விஷயத்தில் யாவரும்

தயரதனை ஒத்த அன்பு நிறைந்த மனமுடைமையைக் குறித்ததாம்; "ஏழையர்...மதுகையர்...தாழ்குவர் கவுசலை தயரதனெனவே" (பால. 310); "அவ்வூர்ச், சாதுகை மாந்த ரெல்லாந் தயரதன் றன்னை யொத்தார்" (2. 3 : 66). அன்றி, அமைச்சர் அரசனோடொத்த கருத்துடையவர் என்பது கொண்டு, இவ்வாறு கூறினர் எனலும் ஆம்; 13-பார்க்க. "வேந்தன், மனம்போல வந்த மகன்" (பு. வெ. 26). தலங்கள் யாவையும் பெற்றனன் றுனென : 78; "ஒத்தமூ வுலகத் தோர்க்கு மூவகையினுறுதி யுன்னில், தத்தமுச் சியின்மேல் வைத்த தொத்ததத் தாம மௌலி." (யுத்த. 4283.) சென்றுன்: முற்றெச்சம். இராகவன் - இரகு மரபில் தோன்றியவன்; தத்திதாந்த நாமம்.

(பி - ம்.) 1. மன்னனையான் தொழுது.
2. விரைவினில்; செல்வான், ஏகித்.
3. ஏழையும்.
4. புகுந்தான். (48)

சுமந்திரன் இராமனைக் காணுதல்

50. பெண்ணி னின்னமு தன்னவ டன்னொடும் பிரியா
வண்ண வெஞ்சிலைக் குரிசிலு மருங்கினி திருப்ப
அண்ண லாண்டிருந் தானழ கருநற வெனத்தன்
கண்ணு முள்ளமும் வண்டெனக் களிப்புறக் கண்டான்.

அண்ணல் - இராமபிரான், பிரியா - தன்னை விட்டு என்றும் பிரியாத, வண்ணம் வெம்சிலை குரிசிலும் - அழகியதும் கொடியதுமான வில்லைப்பிடித்த இலக்குவனும், மருங்கு - பக்கத்தில், இனிது இருப்ப - இனிதாகநிற்க, பெண்ணின் - பெண்களுக்குள், இன் அமுது அன்னவள் தன்னொடும் - இனிய அமுதம் போன்ற பிராட்டியுடன், ஆண்டு - அவ்விடத்தில், இருந்தான் - வீற்றிருந்தான்; அழகு - அவனது அழகை, அரு நறவு என - அருமையான தேன் ஆகக் (கொண்டு), வண்டு என - வண்டுகள் போல, தன் கண்ணும் உள்ளமும் களிப்பு உற — தன் கண்களும் மனமும் மகிழ்ச்சி மிக, கண்டான் -(சுமந்திரன்) பார்த்தான்.

பிராட்டியோடும் தம்பியோடும் இராமபிரான் இருந்த காட்சி யழகை அவர்கள்பால் மிக்க அன்பு கொண்டவனும் அறிவு மிக்கவனுமான சுமந்திரன் கண்ட விதம் இங்குக் கூறப்பெற்றது.

சீதைக்கு அமுது : 670; 704; 788, பால : 582; ஆரணிய. 284; கிட்கி. 26, 307; யுத்த. 92, 762, 1576, 1581, 1619, 3935. அழகு நறவெனப் பட்டது. அழகைப் பருகுதல்; பால : 122, சுந்தர: 110.

அழகு நறவென, கண்வண்டெனக் காண்டல்: "மாதர் தேனுக ரளியின் மொய்த்தார்"; "மாதர் அமிழ்தின் மொய்க்கும் ஈயின மென்ன லானார்" (பால. 1141, 1144). களிப்பு, மதுவெறியை யொத்த மகிழ்ச்சி என்ற பொருள்பட அமைந்தது.

(பி - ம்.) 1. அன்னசானகியொடும்.
2. மருங்கினிலிருப்ப, மருங்கினில்நிற்ப.
3. அழகருநிறவெள்ளம், அருநறவெனத்தனது.
4. களிபெறக். (49)

சுமந்திரன் அழைப்பின்மேல் இராமபிரான் புறப்படுதல்

51. கண்டு கைதொழு தையவிக் கடலிடைக் கிழவோன்
உண்டொர் காரியம் வருகென வுரைத்தன னெனலும்
புண்ட ரீகக்கட் புரவலன் பொருக்கென வெழுந்தோர்
கொண்டல் போற்சென்று கொடிநெடுந் தேர்மிசைக்
கொண்டான்.

கண்டு - (சுமந்திரன் இராமபிரானை) நோக்கி, கை தொழுது - கைகூப்பி வணங்கி, ஐய - ஐயனே, இ கடல் இடை கிழவோன் - கடல் சூழ்ந்த இந்நில உலகுக்கு உரியவனான சக்கரவர்த்தி, ஓர் காரியம் உண்டு - ஒரு காரியம் இருக்கிறது, வருக என - நீ வரக் கடவாய் என்று, உரைத்தனன் - கட்டளையிட்டனன், எனலும் என்று கூறியவுடனே, புண்டரீகம் கண் புரவலன் - செந்தாமரைக் கண்ணனான இராமபிரான், பொருக்கென எழுந்து - விரைவாக எழுந்து, ஓர் கொண்டல் போல் சென்று - ஒரு மேகம் நடப்பதுபோல் நடந்து சென்று, கொடி நெடு தேர்மிசை கொண்டான் - கொடிகளை யுடையதும் மிக உயர்ந்ததுமான தேர்மீது ஏறிக்கொண்டான்.

கடலிடை - கடல் சூழ்ந்த இடம்; பூமி. கடலுடை என்று பாடங் கொண்டு கடலை ஆடையாக உடையது என்பாரும் உளர். கிழவோன்: உரிமையுடையவன்; காரியம்: "உண்டோர், காரிய முண்மை நின்னைக் காணிய வந்தேன்" (ஆரணிய. 262).

(பி - ம்.) 1. கடலுடைக் கிழவோன், கடற்புவிக் கிழவோன்.
2. வருகவென்று.
3. எழுந்தான், எழுந்து.
4. கொண்டல்போலவன், போல்பவன், போலவக். (50)

வீதியில் இராமபிரான் சென்றமை

52. முறையின் மொய்ம்முகி லெனமுர சார்த்திட மடவார்
இறைக ழன்றசங் கார்த்திட விமையவ ரெங்கள்
குறைமு டிந்ததென் றார்த்திடக் குஞ்சியைச் சூழ்த்த
நறைய லங்கல்வண் டார்த்திடத் தேர்மிசை நடந்தான்.

(இராமபிரான்), முறையின் - வரிசையாக, மொய் முகில் என - நெருங்கிய மேகம் போல, முரசு - முரச வாத்தியங்கள், ஆர்த்திட - ஒலிக்கவும், (அதைக் கேட்ட) மடவார் - பெண்களினுடைய, இறை - முன்னங் கைகளினின்று, கழன்ற - கழன்று விழுந்த, சங்கு - வளையல்கள், ஆர்த்திட - ஆரவாரிக்கவும், இமையவர் - தேவர்கள், எங்கள் குறை முடிந்தது என்று - எங்கள் குறைபாடுகள் தீர்ந்தன என்று எண்ணி, ஆர்த்திட - பெருமுழக்கம் செய்யவும், குஞ்சியை சூழ்ந்த- தன் தலைமுடியைச் சூழ அலங்கரித்த, நறை அலங்கல் - தேன் சொரியும் கண்ணிகளின்மீது (மொய்த்த), வண்டு - வண்டுகள், ஆர்த்திட - ஒலிக்கவும், தேர்மிசை நடந்தான் - தேர்மீது சென்றான்.

முகில், இங்கு இடியைக் குறித்தது. முரசொலிக்கு இடி முழக்கம்: ஆரணிய. 384, சீவக : 2392. இறை - முன் கை. சங்கு - வளை : சங்கினால் செய்யப்பட்டமையின் இப்பெயர் அமைந்தது; ஆகுபெயர். இராமபிரானது அழகில் ஈடுபட்ட பெண்கள் காதலுற்றமையால் அவர்களின் உடல் இளைத்துக் கை வளைகள் கழன்று விழுந்து ஒலித்தன என்க. இமையவர் ஆர்த்தமை, இராவண சங்காரம் விரைவில் நடைபெறும் என்றமையால். குஞ்சி - ஆண் மயிர். அலங்கல், இங்குத் தலைமாலையைக் குறித்தது.

(பி - ம்.) 1. முறையினின் முரசார்த்திட, நன்முரசு, முறையென முரசார்த்திட; முகிலென மடவார்.
2. இறைகழன்று, நிறைகழன்ற. (51)

வீதிகளில் நிகழ்ந்தவை

53. பணை நிரந்தன பாட்டொலி நிரந்தன வனங்கன்
கணை நிரந்தன நாணொலி கறங்கின நிறைப்பேர்
அணை நிரந்தன வறிவெனும் பெருபுன லனையார்
பிணை நிரந்தெனப் பரந்தனர் நாணமும் பிரிந்தார்.

(இராமபிரான் வீதியில் புக), பணை - முரசுகளின் (ஒலி), நிரந்தன - நிரம்பின; பாட்டு ஒலி நிரந்தன - பாடல்களின் ஒலி நிரம்பின; அனங்கன் - மன்மதனின், கணை - அம்புகள், நிரந்தன - (மகளிரின் உள்ளங்களிலே) பரவின; நாண் ஒலி - (அவனுடைய) வில் நாணின் ஒலிகள், கறங்கின - ஒலித்தன; அறிவு என்னும் - (அம்மாதர்கள் இராமபிரானைக் காணும்) அவாவுணர்ச்சியாகிற, பெரு புனல்-பெரிய நீர்ப்பெருக்கானது, நிறை - மன அடக்கம் என்னும், பேர் அணை - பெரிய அணையை, நிரந்தன - கடந்தன; அனையார் - (இவ்வாறான) அம்மகளிர், நாணமும் பிரிந்தார் - நாணத்தினின்றும் பிரிந்தவராகி, பிணை - பெண் மான்கள், நிரந்த என - கூடின போல, பரந்தனர் - (வீதிகளிலே) வந்து நிறைந்தனர்.

பணை - முரசு; வாத்தியங்கள் எனலும் ஆம். நிரத்தல் - பரத்தல். அணை நிரந்தன என்ற இடத்தில் நிரம்புதல் எனப் பொருள்கொண்டு, கடத்தலைக் குறித்தது. அனங்கன் - அங்கங்களில்லாதவன்; மன்மதன். அனங்கன் நாணொலி; அவனுடைய பாணங்கள் எல்லாத் திசைகளிலும் சிதறிக்கொண்டு ஒலித்தன. கறங்குதல் - ஒலித்தல். நாணினின்றெழுந்த அம்புகள் மகளிர் உள்ளங்களில் தைத்து இராமபிரான்பால் காதலுணர்ச்சியை அவர்களுக்கு எழுப்பிவிட்டமையால் அவர்கள் நிறை இழந்து நாணமும் பிரிந்து வீதிகளிலே கூட்டங் கூட்டமாக நின்றனர் என்க. அறிவு புனல், நிறை அணை; முற்றுருவகம். நிறை - மனவடக்கம், மறை பிறரறியாமை என்றும் கூறுவர். அணையார் என்றது, நிறையழிந்த மகளிரைக் குறித்தது. நாணமும் என்றதில் உம்மை இறந்தது தழுவியது; இழிவு சிறப்புமாம். அனங்கன் கணைகள் மலர்கள்; நாண் வண்டுகள்; இராமபிரான் போந்த வீதியிலே தேவர்கள் மலர்மாரி பொழிய அதனில் வண்டுகள் மொய்த்தன என்பாரும் உளர்.

(பி - ம்.) 1. நிறைந்தன, நிரைந்தன.
2. நிறைந்தன, நிரைந்தன; நிறைபேர்.
3. நிறைந்தன, நிரைந்தன; பெரும்புலனணையார்.
4. நிரைந்தெனம்; படர்ந்தனர், பாய்ந்தனர், பிரியார். (52)

54. நீளெ ழுத்தொடர் வாயினுங் குழையொடு நெகிழ்ந்த
ஆள கத்தினோ டரமியத் தலத்தினு மலர்ந்த
வாள ரத்தவேல் வண்டொடு கெண்டைகண் மயங்கச்
சாள ரத்தினும் பூத்தன தாமரை மலர்கள்.

(அப்பொழுது) நீள் எழு தொடர் வாயினும் - நீண்ட தூண்கள் அமைந்த (மாளிகை) வாயில்களிலும், அரமியம் தலத்தினும் - (அவற்றின்) நிலாமுற்றங்களிலும், குழையொடும் - குண்டலங் களோடும், நெகிழ்ந்த அளகத்தினோடும் - அவிழ்ந்த கூந்தலோடும், தாமரை மலர்கள் - (மகளிரின் முகங்களாகிய) தாமரை மலர்கள், அலர்ந்த - மலர்ந்தன; (அவை) சாளரத்தினும் - (அம்மாளிகைகளின்) பலகணிகளிலும் வாள் அரத்தம் வேல் வண்டொடு கெண்டைகள் மயங்க - வாளொடும் குருதி தோய்ந்த வேலொடும் வண்டு களோடும் கெண்டைகள் கலந்து நிற்க, பூத்தன - மலர்ந்தன.

தாமரை மலர்கள் அலர்ந்த, பூத்தன என இயைக்க. தாமரை மலர்கள் - மகளிர் முகங்கள், கண்கள். அவர்களிற் சிலர் தத்தம் மாளிகை வாயில்களிலும் சாளரங்களிலும் நின்று வீதி வழியே செல்லும் இராமபிரானைப் பார்த்து மகிழ்ந்த காட்சியை இவ்வாறு உருவகப்படுத்தினர். வாள், வேல், வண்டு, கெண்டை மகளிர் கண்களுக்கு ஒப்பானவை. அரத்த வேல், செவ்வரி படர்ந்த கூர்மை

யாயுள்ள கண்ணுக்கு. ஆளகம் : நீட்டல்; அளகம் - கூந்தல். வாயிலிலும் அரமியத் தலத்திலும் நின்ற மாதர்களின் முகங்களோடு குழைகளும் அளகமும் தோன்றின. சாளரத்தில் கண்களே தோன்றின. இச்செய்யுளோடு, பால. 568 ஒப்பிடுக. இன்னும் மகளிர் சாளரங்களைச் சார்ந்து நின்று வீதியைப் பார்த்தல் : "மெய் சாயலோர், வளிநுழையும் வாய் பொருந்தி" (பட்டினப். 151 - 152); "மாலை தாழு மாடவாய் நிலத்தகத்து மங்கைமார், வேலவா நெடுங்கணே விலங்கநின் றிலங்கலால், சாலவாயி லுமெலாமொர் தாமரைத் தடத்திடை, நீலமா மலர்க்குழா நிரந்தலர்ந்த நீரவே" (சூளா : 480) என்பதையும் காண்க.

(பி - ம்.) 1. மீளெழும்; தொடர்வாயிலில்; குழைவொடு கிமிர்ந்த; கிடந்த.
2. கோளரத்தினோடு, தாளகத்தினோடு, வாளரத்தினோடு; உயர்ந்த, மலிந்த.
3. மறுகச். 4. மலர்ந்தன. (53)

55. மண்ட லந்தரு மதிகெழு மழைமுகி லனைய
அண்டர் நாயகன் வரைபுரை யகலத்து ளலங்கல்
தொண்டை வாய்ச்சியர் நிறையொடு நாணொடுந் தொடர்ந்த
கெண்டை யும்முள கிளைபயில் வண்டொடு கிடந்த.

மண் தலம் தரு - நிலவுலகத்தில் உண்டான, மதிகெழு மழை முகில் அனைய - சந்திரனோடு பொருந்திய கார்மேகம் போன்ற, அண்டர் நாயகன்-தேவர்களின் தலைவனான இராமபிரானுடைய, வரை புரை அகலத்துள் - மலையை ஒத்த மார்பினில் (விளங்கும்), அலங்கல் - மாலை, தொண்டை வாய்ச்சியர் - கோவைக்கனி போன்ற (சிவந்த) உதடுகளைக் கொண்ட மகளிரின், நிறையொடும் நாணொடும் தொடர்ந்த - நிறை நாண் ஆகிய பண்புகள் முன் போகப் பின்னே தொடர்ந்த, கெண்டையும் உள - கெண்டை மீன்களும் உள்ளனவாய், கிளை பயில் வண்டொடு - கைக்கிளை என்னும் பண்ணை முரல்கின்ற வண்டுகளோடு, கிடந்த - அமைந்து கிடந்தன.

இராமபிரானின் திருமுகத்துக்குச் சந்திரனும், திருமேனிக்கு மழை முகிலும் ஒப்பு. மண்டலம்...முகில்: இல்பொருள். மண்டலம் என்பதனை ஒரு மொழியாகக் கொண்டு வட்டம் என்று பொருள் கொள்வாரும் உளர்; வானமண்டலம் எனவும் ஆம். அண்டர் நாயகன் - இராமபிரான்; சுந்தா. 510; 607. அலங்கலில் வண்டுகள் படிவது இயல்பு. கிளை - கைக்கிளை என்னும் பண்; "கிளைக்குற்ற வுழைச்சுரும்பின்" (பரிபா. 11; 127) என்ற அடிக்குப் பரிமேலழகர் காட்டும் பொருள் காண்க. கிளை - பெண், ஆண் வண்டுகள் என்பாரும் உளர்.

இராமபிரானின் திருமார்பில் அணிந்த மாலையில், வீதியிலே அவனைக் கண்ட மகளிரின் நிறையும் நாணும் செல்ல, அவற்றின்பின்

அவர் பார்வை மாலையில் கிடந்தன. கெண்டை என்றது கண்களை. வண்டென்றது மாலையில் இயல்பாக மொய்க்கும் வண்டுகளை. அவற்றையும் கண்களாகக் கொள்ளுதலும் பொருந்தும்.

(பி - ம்.) 1. மண்டலத்திகழ்.
2. அண்டநாயகன்; மலைபுரை ஆகத்துள்.
3. காேணாடும் பிறையொடும்; துறந்த. (54)

56. சரிந்த பூவுள மழையொடு கலையுறத் தாழப்
பரிந்த பூவுள பனிக்கடை முத்தினம் படைப்ப
எரிந்த பூவுள விளமுலை யிழையிடை நுழைய
விரிந்த பூவுள வந்தர வானின்று வீழ.

(இராமபிரான் தேர் சென்ற வீதியிலே), மழையொடு - (மாளிகைகளில் நின்று பார்த்த மகளிரின்) மேகம் போன்ற கூந்தல்களும், கலை - பூர்ண சந்திரன் போன்ற முகங்களும், உற தாழ - நாணத்தினால் மிகக் கவிழ, சரிந்த பூ - (அவர்கள் கூந்தல்களிலிருந்த) மாலைகளினின்று நழுவின பூக்கள், உள-உள்ளன; பனி - குளிர்ச்சியையுடைய, கடை - மகளிரின் கண்ணின் கடைகள், முத்து இனம் - முத்துக் கூட்டங்கள் போன்ற நீர்த்துளிகளை, படைப்ப - தோற்றுவிக்க, பரிந்த - அவர்கள் நீக்கிய, பூ - மலர்களும், உள - உள்ளன; இளமுலை - இளமையான சில மகளிர் தனங்கள், இழை இடை நுழைய - (காமத்தினாலே) பருத்து (மார்பில் புரளும்) அணிகலன் ஊடே நுழைய, எரிந்த - அத்தனங்களின்மீது அப்பப்பெற்றுக் கருகின, பூ - பூக்கள், உள - (விழுந்து வீதியிலே பரவினவாய்) உள்ளன; அந்தரம் வான் நின்று வீழ - நடு இடமான ஆகாயத்தினின்று (தேவலோகத்திலிருந்து தேவர்கள் வீசுதலால்) வீதியிலே வீழ, விரிந்த பூ உள - நன்றாக மலர்ந்த மலர்களும் உள்ளன.

இராமபிரான் தேரோட்டிச் சென்ற வீதியிலே மகளிர் விரகத்தால் சிந்தின மலர்களும், உடல் வெப்பினால் கரிந்த மலர்களும், தேவர்கள் மகிழ்ச்சியால் சொரிந்த மலர்களும் நிறைந்திருந்தன என்க. மகளிர் கூந்தலிலிருந்தும் கழுத்து மாலைகளினின்றும் பூக்கள் சரிந்தும், பரிந்தும், எரிந்தும் வீழ்வது அபசகுனமாகும்; இராமபிரானுக்குப் பின்னே நிகழப் போவனவற்றை முன்னே அறிவிப்பன போன்று அவை அமைந்தன. அந்தரம் - நடுவிடம்; தேவலோகத்தின் மேலேயும் வானில் உலகங்களுண்டாதலின், தேவர்கள் வாழும் இடத்தைக் குறிக்க அந்தர வான் என்றார்.

(பி - ம்.) 1. கரிந்த தூசொடு; தலையுறத் தாழ்வ.
2. பிரிந்த, புரிந்த; பனிக்கடல்.
3. இடையிடை நுழைவ, இடையொடு நுழைவ. (55)
4 வரிந்த; மீனுடை வானின்று, வியனுடை வானின்று.

57. வள்ளுறைகழித் தொளிர்வன வாண்மிளிர் மதியம்
தள்ளுறச்சுமந் தெழுதரு தமனியக் கொம்பிற்
புள்ளி நுண்பனி பொடிப்பன பொன்னினிற் பொதிந்த
எள்ளுடைப்பொரி விரவின வுளசில விளநீர்.

(இராமபிரானைக் கண்ட அளவிலே) வள் உறை கழித்து - (இமைகளாகிய) வளம்மிக்க உறைகளை நீக்கி, ஒளிர்வன வாள் - ஒளிவீசுகின்ற கண்களாகிய வாள்களுடன், மிளிர் மதியம் - பிரகாசிக்கின்ற (முகமாகிய) சந்திரனை, தள்ளுற சுமந்து - தள்ளாடும்படி சுமந்து, எழுதரு தமனியம் கொம்பில் - எழுகின்ற (மாதர்களாகிய) பொற் கொம்புகளில், சில இளநீர் - இரண்டு (தனங்களாகிய) இளநீர்கள், நுண்பனி புள்ளி பொடிப்பன - நுண்ணிய குளிர்ந்த (வியர்வைத் துளிகள்) புள்ளிகளைப் போலத் தோன்றுவனவாயும், பொன்னினில் பொதிந்த - இடையிடையே (பசலையாகிய) பொற்பொடி கலந்தன வாயும், (ஆன) எள்பொரி விரவின - (தேமல்களாகிய) எள்ளின் பொரிகள் பரந்து தோன்றுவனவாகவும், உள - உள்ளன.

மங்கையரைப் பொற்கொம்பாகவும், அவர்களின் முகத்தைச் சந்திரனாகவும், கண்ணை வாளாகவும், இமையை உறையாகவும் உருவகித்தார். நகில்களை இளநீர்களாகவும், அவற்றிற் காணும் பசலை தேமல் ஆகியவற்றைப் பொன் பொரி ஆகவும் கூறி, விரகத்தால் உண்டான வியர்வையைப் பனி பொடித்தலாகவும் கூறினர். வள் - வளமை; பெருமையும் ஆம். மிளிர் மதியம் என்றதால் பூர்ணசந்திரன் குறிக்கப்பட்டது. கண்களையும் முகத்தையும் தாங்க முடியாத கொடி என்றமையால், அம் மகளிரின் மெல்லிய உடல்கள் குறிக்கப்பட்டன. சில - இரண்டு; திருமுருகாற்றுப்படையின் உரையில், 'சில்காழல்குல்' என்பதற்கு, 'சில் காழ் - இரண்டு மணி வடங்கள்' என்று நச்சினார்க்கினியர் கூறியமை காணத்தகும்.

(பி - ம்.) 1. வாணிமிர் மதியம், வாள்விழி மதியம், வான்மிளிர் மதியம், வானுறை மதியம்.
2. தள்ளுறச் சமைத்து; கொப்பில்.
3. புள்ளிநுட்பொரி; பொன்னிடைப், பொன்னுடைப்.
4. எள்ளிடைப்பொரி, எள்ளிறப்பொரி, எள்ளினிற்பொரி; விரிவன.
(56)

இராமபிரான் தம்பியுடன் தசரதன் இருந்த இடம் சேர்தல்

58. ஆயதவ்வழி நிகழ்தர வாடவரெல்லாம்
தாயை முன்னிய கன்றென நின்றுயிர் தளிர்ப்பத்
தூய தம்பியுந் தானுமச் சுமந்திரன் றேர்மேல்
போய கங்குளிர் புரவல னிருந்துழிப் புக்கான்.

ஆயது - (பெண்டிர்களுக்கு) நிகழ்ந்தது, அவ்வழி - மேலே கூறிய வகையில், நிகழ்தர - உண்டாக, (இராமபிரானைக் கண்ட) ஆடவர்

எல்லாம் - ஆண்கள் அனைவரும், தாயை முன்னிய கன்று என - தாய்ப் பசுவை நினைந்த கன்று போல, நின்று உயிர் தளிர்ப்ப - நின்று உயிர் தழைக்க, தூய தம்பியும் தானும் - தூய்மை நிறைந்த தம்பியான இலக்கு வனும் தானும், அ சுமந்திரன் தேர்மேல் போய் - அந்தச் சுமந்திரன் செலுத்திக்கொண்டு வந்த தேரின்மேல் (ஏறிச்) சென்று, அகம் குளிர் புரவலன் இருந்த உழி - உள்ளம் குளிர்ந்திருந்த தயரதமன்னன் இருந்த மண்டபத்துள், புக்கான் - புகுந்தான்.

ஆயது என்றது பெண்டிர் நிலையைக் குறித்தவாறு. தாயை முன்னிய கன்று: "தாய்வர நோக்கிய கன்றின் தன்மையார்" (ஆரணிய. 122); "தாயை முன்னிய கன்றனையான்" (சுந்தர; 617): குறுந்: 64, 1-3; பெருங். 2-10:7. தம்பியும் தானும் புக்கான்; சிறப்பினால் ஒரு முடிபேற்றது. இங்கே இராமபிரானுடன் இலக்கு வனும் சென்றதாக வான்மீகர் கூறவில்லை.

(பி - ம்.) 1. ஆயதவ்வயின்.
2. தாயையுள்ளிய, உன்னிய; உயிர்தளிர்ப்பார், தரிப்ப.
3. தம்பியோடுந்தனிச். (57)

தயரதன் இராமபிரானைத் தழுவுதல்

59. மாத வன்றனை வரன்முறை வணங்கிவா ளுழவன்
பாத பங்கயம் பணிந்தனன் பணிதலு மனையான்
காதல் பொங்கிடக் கண்பனி யுகுத்திடக் கனிவாய்ச்
சீதை கொண்கனைத் திருவுறை மார்பகஞ் சேர்த்தான்.

(இராமபிரான்) வரல்முறை - தொன்றுதொட்டுவரும் முறைப்படி, மாதவன்தனை வணங்கி - சிறந்த தவத்தினையுடைய வசிட்ட முனிவனை வணங்கி, (அதன் பின்) வாள் உழவன் - வாளினால் பகைவரைக் கொல்பவனான தயரதனுடைய, பாதபங்கயம் - திருவடித் தாமரைகளை, பணிந்தனன் - வணங்கினான்; பணிதலும் - அவ்வாறு அவன் வணங் கினவுடனே, அனையான் - (அவ்வாறு வணங்கப் பெற்ற) தயரதன், காதல் பொங்கிட - (தன் மகன்மீது கொண்ட) அன்பு பொங்க, கண் பனி உகுத்திட - கண்கள் இன்பக் கண்ணீரைச் சொரிய, கனி வாய் சீதை கொண்கனை - கனி போன்ற உதடுகளை உடைய சீதா பிராட்டியின் கணவனாகிய இராமபிரானை, திரு உறை மார்பு அகம் - திருத்தங்கிய தன் மார்போடு, சேர்த்தான் - சேர்த்து அணைத்துக் கொண்டான்.

வாள் உழவன்: பால. 756, 1076. வரன்முறை வணங்குதல்; "முனிவன் மாமலர்ப் பாதங்கள் முறைமையின் இறைஞ்சி" (43). திரு உறை மார்பு : "திருவுடை மன்னன்" (திருவாய். 4. 4 ; 8); "திருத் துயில் பெற்ற மார்பன்" (சீவக. 1504). திரு – இராச்சியலட்சுமி.

(பி - ம்.) 1. முந்தற வணங்கி, வந்தற வணங்கி.
3. கவிர்வாய்ச்.
4. திருவமர்; திருவுற, தன்திரு. (58)

60. நலங்கொண் மைந்தனைத் தழுவின னென்பதென் னளிநீர்
நிலங்க டாங்குறு நிலையினை நிலையிட நினைந்தான்
விலங்க லன்னதிண் டோளையு மெய்த்திரு விருக்கும்
அலங்கன் மார்பையுந் தனதுதோண் மார்புகொண் டளந்தான்.

நலம் கொள் மைந்தனை - நன்மைகள் (யாவற்றையும் தன்னிடம்) பெற்றுள்ள மகனாகிய இராமபிரானை, தழுவினன் என்பது - (தந்தையாகிய தயரதன்) தழுவிக் கொண்டான் என்று சொல்வது, என் - என்ன பொருளுடையது? (எனின்), நளிநீர் நிலங்கள் - அகன்ற நீரையுடைய கடல்கள் சூழ்ந்த பூமியை, தாங்கு உறு நிலையினை - தாங்குதற்கு உரிய (இராமபிரானுடைய) நிலையை, நிலை இட - அளந்து பார்க்க, நினைந்தான் - கருதியவனாகி, விலங்கல் அன்ன - மலை போன்ற, திண் தோளையும் - (இராமபிரானின்) வலிய தோள்களையும், மெய் திரு இருக்கும் அலங்கல் மார்பையும், - உண்மையான விசயலட்சுமி வாழ்கிற மாலையை அணிந்த அவனுடைய மார்பையும், தனது - தன்னுடைய, தோள் மார்புகொண்டு - தோள்களையும் மார்பையும் கொண்டு, அளந்தான் - அளந்து பார்த்தான்.

தயரதன் இராமபிரானைத் தழுவியது: பால. 1382; அயோத். 73; யுத்த. 4009. அன்பினால் மகனைத் தந்தை தழுவியதற்கு ஆசிரியர் ஒரு காரணம் கற்பித்துக் கூறியது தற்குறிப்பேற்றம். தான் தாங்கிய உலகத்தைத் தாங்கத் தன்னுடையன போன்ற தோளும் மார்பும் அவன் பெற்றுள்ளானோ என்று தயரதன் அவற்றைத் தன் தோளும் மார்புங் கொண்டு அளந்து பார்த்தான் என்க. நினைந்தான்: முற்றெச்சம். மன்னன் மார்பில் திரு வாழ்கின்றாள் என்பது உபசார மொழி; இராமபிரான் திருமாலே ஆயினமையின், அவன் மார்பில் வாழ்பவள்தான் 'மெய்த்திரு' என்பதைக் குறித்தார்.

(பி - ம்.) 1. என்பதே, என்றதே; களிர்நீர், நன்னீர்.
2. நிலையிடவேண்டி; நிலையிடனினைந்தான், நிலைபட நினைந்தான்.
4. மார்புகொண்டணைத்தான். (59)

தயரதன் தன் கருத்தை இராமபிரானுக்குக் கூறுதல்

61. ஆண்டு தன்மருங் கிரீஇயுவந் தன்புற நோக்கிப்
பூண்ட போர்மழு வுடையவ னெடும்புகழ் குறுக
நீண்ட தோளினாய் நிற்பயந் தெடுத்தயா னின்னை
வேண்டி யெய்திட விழைவதொன் றுளதென விளம்பும்.

(இராமபிரானைத் தழுவிக்கொண்ட தயரதன்) ஆண்டு - அப்பொழுது, உவந்து - மிக்க மகிழ்ச்சி கொண்டு, தன் மருங்கு இரீஇ - (சிங்காதனத்திலே) தன் பக்கத்தில் (அவனை) இருக்கச் செய்து, அன்பு உற நோக்கி - அன்பு மீதூரப் பார்த்து, போர் பூண்ட - போர்த்தொழிலை

மேற்கொண்ட, மழு உடையவன் - மழு ஆயுதத்தை யுடைய, பரசுராமனது, நெடு புகழ் குறுக - நெடிய புகழ் தேயுமாறு, நீண்ட தோளிஞய்-(அவன் வில்லைப் பெற்று வளைக்கும் பொருட்டு) உயர்த்திய தோளை உடையோனே, நின் பயந்து எடுத்த யான் - நின்னைப் பெற்று வளர்த்த நான், நின்னை வேண்டி எய்திட விழைவது ஒன்று உளது - உன்னைக் கேட்டுப் பெற விரும்புவது ஒரு காரியம் உண்டு, என - என்று சொல்லி, விளம்பும் - அதனை விரித்துரைக்கலானுன்.

பூண்ட போர் மழு உடையவன் - பரசுராமன்; பரசுராமன் புகழ் குறுக இராமபிரான் தோள் நீண்ட வரலாற்றினைப் பாலகாண்டம் பரசுராமப் படலத்திற் காண்க. இன்னும் இக்காண்டத்தில் 100, 360 - ஆம் செய்யுட்களிலும் இச்செய்தியைக் காண்க. தயரதன் மகப் பேற்றை விரும்பியது தனக்குப்பின் தரணி தாங்க ஒருவன் வேண்டும் என்பதற்கேயாம் என்பது, பால. 183, 184, 209 பாடல்களாலும் அறியப் பெற்றது. ‘நிற்பயந்தெடுத்த’ என்று கூறிக்கொண்டமையால், ‘அதன் பயனைப் பெற விரும்பியது இன்னது’ என்பது குறிக்கப்பெற்றது. விளம்புதல் - விரித்துக் கூறுதல்; தயரதன் விளம்பியவை அடுத்த எட்டுக் கவிகளால் தெளியப்படும்.

(பி - ம்.) 1. மருங்கிருத்தியங்கு, இருத்திப்பின்.
2. பெரும்புகழ் குறைய, மறுக; பூண.
3. தோளைய; நானுன்னை, நானின்னை.
4. வேண்டி நீ மகிழ்ந்து, வேண்ட நீ மகிழ்ந்து; விரைவதொன்றுளதென, விளைவதொன்றுண்டென, வினையதொன்றுண்டென, ஈவதொன்றுளதென, உண்டென. (60)

62. ஐய சாலவு மலசினெ னரும்பெரு மூப்பு
மெய்ய தாயது பியலிடம் பெரும்பரம் விசித்த
தொய்யன் மாநிலச் சுமையுறுஞ் சிறைதுறந் தினியான்
உய்ய லாவதோர் நெறிபுக வுதவிட வேண்டும்.

(தயரதன் இராமபிரானை நோக்கி), ஐய - ஐயனே! அரு பெரு மூப்பு மெய்யது ஆயது - (தாங்குதற்கு) அருமையும் (பிராயத்தின்) பெருமையும் அமைந்த முதுமை என் உடலில் அமைந்துவிட்டது; (அதனுல்) சாலவும் - மிகவும், அலசினென் - தளர்ந்தேன்; பியல் இடம் - (என்) கழுத்தில், பெரும் பரம் - பெரிய பாரமாக, விசித்த - கட்டப் பெற்றுள்ள, தொய்யல் - துன்பத்திற்கிடமான, மாநிலம் சுமை உறும் - பெரிய உலகத்தைத் தாங்குதலான சுமைதங்கிய, சிறை - சிறைப்பட்ட நிலையை, யான் இனி துறந்து - யான் இனியாவது விட்டுவிட்டு, உய்யல் ஆவது ஓர் நெறிபுக - பிழைத்தற்குரிய (தவ) நெறியை மேற்கொள்ள, உதவிட வேண்டும் - எனக்கு நீ உதவி புரியவேண்டும்-

'மூப்பும் ஆயது' என்று கொண்டும் பொருள் காணலாம். பியல் - பிடரி. விசித்தல் - இறுகக் கட்டுதல். தொய்யல் - துன்பம்; சோர்வும் ஆம்.

(பி - ம்.) 1. அஞ்சினன்; மூப்பும்.
2. வெய்யதாயது; விபலிடம்; மேவிடப், மேவிடப்; விசித்துத், விதித்துத், விரித்துத்.
3. தொய்யில்; மாமிலஞ் சுமையுறு, மாமில முழுவதும், மானகஞ் சமையுறு, சுமையுறுஞ் சிறையான்.
4. நெறியது; உறுநெறி; உதவிடல். (61)

63. உரிமை மைந்தரைப் பெறுகின்ற துறுதுயர் நீங்கி
இருமை யும்பெறற் கென்பது பெரியவ ரியற்கை
தரும மன்னநிற் றந்தயான் றளர்வது தகவோ
கரும மென்வயிற் செய்யினென் கட்டுரை கோடி.

உரிமை மைந்தரை பெறுகின்றது - (ஒருவர் தமக்கு) உரிய புத்திரரைப் பெறுதல், உறு துயர் நீங்கி - (தமக்கு நேரும்) மிக்க துயர்களினின்று (அப்புத்திரர்களால்) விடுதலை பெற்று, இருமையும் பெறற்கு என்பது - இம்மை மறுமைப் பயன்களை அடைவதற்கே என்று சொல்லுவது, பெரியவர் இயற்கை - பெரியோர்களின் கொள்கையாகும்; (அவ்வாறாக) தருமம் அன்ன நின் - தருமதேவதையை ஒத்த உன்னை, தந்த - பெற்ற, யான் —, தளர்வது தகவோ - (அப்பயன்களைப் பெறாமல்) மனத் தளர்ச்சி அடைவது தக்கதாகுமோ? என் வயின் கருமம் - எனக்குரிய செயல்களை, செய்யின் - நீ செய்வதானால், என் கட்டுரை கோடி - என் உறுதிமொழியை ஏற்றுக்கொள்வாயாக.

உரிமை மைந்தர் - எல்லா உரிமைகளுக்கும் உரிய மைந்தர். மைந்தரைப் பெறுவதன் பயன்: "பராவரும் புதல்வரைப் பயக்க யாவரும், உராவரும் துயரைவிட் டுறுதி காண்பரால்." (அயோத். மந்தரை சூழ்ச்சி. 47); "இம்மை யுலகத் திசையொடும் விளங்கி, மறுமை யுலகமும் மறுவின் றெய்துப,...சிறுவர்ப் பயந்த செம்மலோர்" (அகநா. 66). இருமை - இம்மை மறுமை இன்பங்கள். இயற்கை - கொள்கை. தருமம் அன்னவன் இராமபிரான்; "அறத்தின் மூர்த்தி" (39); ஆரணிய. 528; கிட்கிந்தா. 55, 353 : சுந்தா. 363, 639; யுத்த. 1337, 1338, 2208, 3841. கட்டுரை - உறுதிமொழி.

(பி - ம்.) 1. உரிய மைந்தரைப் பெறுவதும்; உறுபிணி, உறுவலி, உறுவினை.
2. இருமையெய்துவர், இருமையும் பெறும், பெருமையும் பெறற்கு; முன்புளோர், முன்பினோர்.
4. செய்பிலென்; கேட்டி. (62)

64. மைந்த நங்குல மரபினில் வந்தருள் வேந்தர்
தந்த மக்களே கடைமுறை நெடுநிலந் தாங்க
ஐந்தொ டாகிய முப்பகை மருங்கற வகற்றி
உய்ந்து போயினு ரூழிநின் றெண்ணினு முலவார்.

மைந்த - புதல்வனே, நம் குலம் மரபினில்-நம் வமிச பாரம்பரியத்தில், வந்தருள் வேந்தர் - தோன்றிய மன்னர்கள், கடை முறை - தம் முதுமைக் காலத்தில், நெடுநிலம் - (தங்களுக்குரிய) பெரிய நாட்டின் பாரத்தை, தம் தம் மக்களே தாங்க - தங்கள் தங்கள் மைந்தர்களே ஏற்றுக்கொள்ள, ஐந்தொடு ஆகிய - ஐம்பொறிகளோடு தொடர்பு கொண்டுள்ள, முப்பகை - காமம் வெகுளி மயக்கம் என்ற மூன்று பகைகளையும், மருங்கு அற - அடியோடு நீங்கும்படி, அகற்றி - நீக்கி விட்டு, உய்ந்து போயினர் - தாம் பிழைத்துப் போனவர்கள், ஊழி நின்று எண்ணினும் - கற்ப காலம் முழுதும் நின்று எண்ணினாலும், உலவார் - (எண்ணி) முடிய மாட்டார்; (கணக்கற்றவர் ஆவர் என்றபடி).

கடைமுறை - தம் வாழ்க்கையின் இறுதிக்காலம்; அதாவது முதுமைப் பருவம். ஐந்தொடாகிய முப்பகை - ஐம்பொறிவாயிலாகப் புலப்படும் அவா, வெகுளி, மயக்கம் என்ற பகைகள் (குறள். 360). மருங்கு-சூழல். ஊழி நின்றெண்ணினும் உலவார் என்றது, எவ்வளவு காலம் நின்று எண்ணினாலும் எண்ணி முடிய மாட்டார் என்றபடி. உய்ந்து போயினர் - வீடடைந்தோர். இச்செய்யுட் கருத்தோடு 17-ஆம் செய்யுட் கருத்தை ஒப்பிடுக.

(பி - ம்.) 1. நின்குல; மணிமுடி வேந்தர்.
2. கடன் முறை.
3. மருங்குற வகற்றி, அழுக்கறவகற்றி.
4. ஊழிநின்றுன்னினும்; உரவோர். (63)

65. முன்னை யூழ்வினைப் பயத்தினு முற்றிய வேள்விப்
பின்னை யெய்திய நலத்தினு மரிதினிற் பெற்றேன்
இன்னம் யானிந்த வரசிய லிடும்பைய னென்றால்
நின்னை யீன்றுள பயத்தினி னிரம்புவ தியாதோ.

முன்னை - முற்பிறப்புக்களிற் செய்த, ஊழ்வினை பயத்தினும் - பழவினைப் பயனாலும், பின்னை - பிறகு அமைந்த இப்பிறவியில், முற்றிய - யான் செய்து முடித்த, வேள்வி - வேள்விகளால், எய்திய நலத்தினும் - அடைந்த பேற்றாலும், அரிதினில் பெற்றேன் - அருமையாக (உன்னை மகனாக) அடைந்தேன்; யான்—, இன்னம் - இனிமேலும், இந்த அரசியல் இடும்பையன் என்றால் - இந்த அரசியலைத் தாங்கும் துன்பமுடையேன் என்றால், நின்னை - உன்னை, ஈன்று உள பயத்தினின் - பெற்ற பயனால், நிரம்புவது யாதோ - நிறையும் குறை யாதோ?

தயரதன் தனக்குப் பின் தான் தாங்கி வந்த உலகைத் தாங்கவே மகனொருவனை வேண்டினான். இராமபிரான் பிறந்து தக்க பருவமடைந்த பின்னும் அக்குறை நீங்கவில்லையே என்ற மனக் குறையால், 'நின்னைப் பெற்ற பயனை யான் பெற உதவவேண்டும்' என்று தன்

தனையனை வேண்டினுன். இந்த அரசியல் இடும்பையினின்றும் என்னை நீக்க வேண்டுமென்பது குறிப்பு.

(பி - ம்.) 1. பயத்தினுமுயற்றிய, உஞற்றிய, பயத்தினை முற்றிய.
2. பின்னர்; அரிதுணைப்.
3. இன்னும்யான்; ஆசையின், இடும்பையினின்ருல். (64)
4. பயனிதினிரப்புவது.

66. ஒருத்த லைப்பரத் தொருத்தலைப் பங்குவி னூர்தி
எருத்தி னீங்குநின் றியல்வரக் குழைந்திட ருழக்கும்
வருத்த நீங்கியவ் வரம்பறு திருவினை மருவும்
அருத்தி யுண்டெனக் கையவீ தருளிட வேண்டும்.

ஒரு தலை - ஒரு புறத்தில், பரத்து - (வைக்கப்பட்ட) பாரத்தையும், ஒரு தலை - மற்றொரு புறத்தில், பங்குவின் - முடத்தன்மையையுங் கொண்ட, ஊர்தி எருத்தின் - மனிதன் ஊரும் பொதிமாட்டைப் போல, ஈங்கு நின்று - இவ்வுலகிலிருந்து, இயல்வர குழைந்து - தன்மை பொருந்த வருந்தி, சுமந்து - (வண்டிப் பாரத்தைச்) சுமந்து, இடர் உழக்கும் - துன்பப்படுவது போன்ற, வருத்தம் - அரசபாரமாகிய வருத்தத்தினின்றும், நீங்கி - விடுதலை பெற்று, அ வரம்பு அறு திரு வினை - அந்த எல்லையில்லாத முத்திச் செல்வத்தை, மருவும் அருத்தி- அடையும் ஆசை, எனக்கு உண்டு - எனக்கு உளதாகின்றது; (ஆதலால்) ஐய - என் ஐயனே, ஈது - இக்குறையை, அருளிட வேண்டும் - நீ நிரப்பியருள வேண்டும்.

ஒரு புறத்தில் சுமக்க முடியாத பாரமும், மற்ருெரு புறத்தில் நொண்டிக்காலும் பெற்ற எருது படும்பாட்டை அரசாட்சிச் சுமை யாலும், முதுமைப் பிராயத்தாலும் தான் படுவதாக மன்னன் கூறு கிருன். ஒருதலை, ஒருத்தலை என்ருயது விகாரம். பரம் - பாரம். ஊர்தி - வாகனம்; இங்கு எருதினைக் குறித்தது. அரசாட்சிக்கு வண்டி; 294; புறம். 185. உழத்தல் - வருந்துதல். வரம்பறு திரு - மோக்ஷ சாம்ராஜ்யம். 'அருளிடவேண்டும்' என்றது தயரதனுடைய எளிய நிலையைக் குறித்தது. இச்செய்யுட் கருத்தை 294-ஆம் செய்யுட் கருத் துடன் ஒப்பிடுக.

(பி - ம்.) 1. ஒருதலைப் பங்குவின், ஒருத்தலைப் பங்குறல், ஒருத்தலெட்டொடு திருத்தலைப் பன்மை சாலுரக.
2. எருத்தம் விங்க வின்றலமர, எருத்தம் நீங்க நின்று, நீக்க நின்று, விங்கி நின்று; இயல்வரச் சூழ்ந்திடருழக்கும், இயல்பரச் சுமந்திட ருழக்கும், அயல்வரக் குழைந்திடருழக்கும்; அலம்வர, உயல்வர; எருத்தம் மேல்படி புயமறச் சுமந் திடருழக்கும்.
3. நீங்கிட.
4. அருளிடல். (65)

67. ஆளு நன்னெறிக் கமைவரு மமைதியின் ருக
நாளு நங்குல நாயக னறைவிரி கமலத்
தாளி னல்கிய கங்கையைத் தந்துதந் தையரை
மீள்வி லாவுல கேற்றினு னொருமகன் மேனுள்.

மேல் நாள் - முன்னொரு காலத்தில், ஒரு மகன் - (நம் குலத்து) மக்களுள் ஒப்பற்றவனுன (பகீரதன் என்ற) ஒருவன், (தன் மூதாதைகள்) ஆளும் - தாம் நுகரக் கூடிய, நல் நெறிக்கு - (வீட்டுக்குரிய) நல்ல வழிக்கு, அமைவரும் - உரிய, அமைதி - தகுதி, இன்று ஆக - இல்லாமற்போக, நாளும் - எக்காலமும், நம் குலம் நாயகன் - நம் குலத்திற்கு வழிபடுகடவுளான ஸ்ரீரங்கநாதனுடைய, நறை விரி கமலம் தாளின் - தேன் பெருகுகின்ற தாமரை போன்ற திருவடிகளிலிருந்து, நல்கிய - (அப்பெருமான்) உதவிய, கங்கையை - ஆகாய கங்கையை, தந்து - நிலவுலகத்திற்குக் கொணர்ந்து, தந்தையரை - தன் முன்னோர்களான சகரர்களை, மீட்பு இலா உலகு - மீளுதலில்லாத வீட்டுலகில், ஏற்றினுன் - ஏறும்படி செய்தான்.

பகீரதன் கங்கை கொண்டுவந்த வரலாறு, திருமாலின் திருவடிகளில் கங்கை தோன்றிய வரலாறு ஆகிய இரண்டும் பாலகாண்டத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மக்கட் பேற்றின் பயனை இன்னதென்று முன் செய்யுளிற் சுட்டி, அதற்கோர் உதாரணமாகப் பகீரதன் வரலாற்றை இச்செய்யுளில் கூறுகின்ருன். ஆளும் நன்னெறிக் கமைவரும் அமைதி - வீடு அடைதற்குரிய வாய்ப்பு. சகரர்களுக்கு அவ்வாய்ப்பு இல்லாமற் போனது கபிலர் சாபத்தால் என்க. நம் குலம் - இக்குவாகு குலம். நம் குல நாயகன் - ஸ்ரீ ரங்கநாதன். இந்த மூர்த்தியைப் பிரமனிடமிருந்து இக்குவாகு பெற்று அயோத்திக்குக் கொண்டு வந்தான்; பால. 713; யுத்த. 4263 பார்க்க. மீள்விலா உலகு - வீடு; பரமபதம். முன்னோரைத் தந்தையர் என்றது உபசாரமொழி.

(பி - ம்.) 1. அமைவினனுகி, அமைதியின்றவத்தால்; அமைதியின் மின்றே, மதியினனின்றே.
2. தாளிலங்கிய; தந்துதந்தமரை, தந்துதந்தவரை, தாழ்ந்து தந்தையரை,
3. மீள்விவின்னுலகு, மீள்கிலாக்கதி, மீள்விலாருலகு, மீளவிண்ணுலகு; ஏற்றினன். (66)

68. மன்ன ரானவ ரல்லர்மேல் வானவர்க் கரசாம்
பொன்னின் வார்கழற் புரந்தரன் போலிய ரல்லர்
பின்னு மாதவந் தொடங்கினேன் பிழைத்தவ ரல்லர்
சொன்ம ருமகப் பெற்றவ ரேதுயர் துறந்தார்.

துயர் துறந்தார் - (இவ்வுலகத்தில்) துன்பங்களினின்று விடுபட்டவர், மன்னர் ஆனவர் அல்லர் - அரசாட்சி புரிகின்றவர் அல்லர்; மேல் - மேலுலகில், வானவர்க்கு அரசு ஆம் - தேவர்களுக்கு அரசனுன,

பொன்னின் வார்கழல் புரந்தரன் போலியர் அல்லர் - பொன்னாலான நீண்ட வீரக்கழலணிந்த தேவேந்திரன் போன்றவரும் அல்லர்; பின்னும்-மேலும், மா தவம் தொடங்கி - பெருந்தவத்தைச் செய்யத்-தொடங்கி, நோன்பு இழைத்தவர் அல்லர் - பல விரதங்களைச் செய்த (முனிவர்களும்) அல்லராவர்; (பின் யாவரோ என்னின்) சொல் மரு மகவு பெற்றவரே - தம் சொல்லைத் தட்டாத மக்களைப் பெற்றவரே (துயர் துறந்தவர் ஆவர்).

"ஏவா மக்கள் மூவா மருந்து" என்பதை இங்கே நினைக்க; குறள். 62, காண்க. தவமென்றது தவ வாழ்க்கையையும், நோன்பு என்றது செய்யும் விரதங்களையும் குறித்தன.

(பி - ம்.) 1. மன்னர் வானவர்; அல்லது.
2. போலியரல்லால், நேரியரல்லர்.
3. தொடங்கினோர், தொடங்கி நோய்; பிழைத்தவர் பிறரார், பலரால்.
4. சொன்மருமகன்; பெற்றவரருந்துயர். (67)

69. அனைய தாதலி னருந்துயர்ப் பெரும்பர மரசன்
வினையி னென்வயின் வைத்தன னெனக்கொளல் வேண்டா
புனையு மாமுடி புனைந்திந்த நல்லறம் புரக்க
நினையல் வேண்டும்யா னின்வயிற் பெறுவதீ தென்றான்.

அனையது ஆதலின் - (அறத்தின் நிலைமை) அத்தன்மையது ஆதலால், அரு துயர் பெரு பரம் - (தாங்குதற்கு) அருமை உடைய துயரான பெரிய அரசுச் சுமையை, வினையின் - சூழ்ச்சியால், அரசன் - மன்னன், என்வயின் - என்மீது, வைத்தனன் - சுமத்தி விட்டான், என - என்று, கொளல் வேண்டா - நீ கருதல்வேண்டா; புனையும்-(நீ) பூணத் தக்க, மாமுடி - சிறந்த முடியை, புனைந்து-பூண்டு கொண்டு, இந்த நல் அறம் – (எனக்கு இதம் செய்தலாகிய) இந்த நல்ல அறத்தை, புரக்க நினையல் வேண்டும் - காக்கக் கருதல் வேண்டும்; நின் வயின் - உன்னிடம், யான் பெறுவது- நான் (வேண்டி) அடைவது, ஈது - இதுவே ஆகும், என்றான் - என்று கூறினான்.

'நின்னை வேண்டி யெய்திட விழைவதொன்றுளது' (61) என்று தொடங்கி இச் செய்யுள்காறும் தயரதன் புரோகிதர், அமைச்சர் முதலியோர் முன்னிலையில் இராமபிரானை முடிசூட்டிக்கொள்ள வேண்டிய முறை கூறப்பெற்றது.

(பி - ம்.) 1. அனைய காதலின்; அருமையிற்.
2. எனக்கொளல் வேண்டாம்.
3. நல்லறம் புகனீ.
4. வினையவேண்டும்யான், வேண்டுநான், வினையல்வேண்டு நான்: பெறுவனீதென்றான், பெறுவது நெறியோய். (68)

இராமபிரான் உடன்படல்

70. தாதை யப்பரி சுரைசெயத் தாமரைக் கண்ணன்
காத லுற்றில னிகழ்ந்திலன் கடனிதென் றுணர்ந்தும்
யாது கொற்றவ னேவிய ததுசெய லன்றே
நீதி யெற்கென நினைந்துமப் பணிதலை நின்றான்.

தாதை - தந்தையாகிய தயரதன், அ பரிசு உரை செய - மேற் கண்டவாறு (தன் கருத்தைச்) சொல்ல, தாமரை கண்ணன் - செந்தாமரை போலும் கண்களையுடைய இராமபிரான், காதல் உற்றிலன் - (அரசாட்சியில்) பெருவிருப்புற்றான் இல்லை; இகழ்ந்திலன் - (அது பெரும்பாரமானதென்று) தள்ளவும் இல்லை; கடன் இது என்று உணர்ந்தும் (அரசகுமாரனுக்குரிய) கடமை இதுவாகும் என்று கருதியும், கொற்றவன் ஏவியது - சக்கரவர்த்தி கட்டளையிட்டது எதுவோ, அது செயல் அன்றே - அதை மறுது செய்வதன்றே, எற்கு நீதி - (மகனாகிய) எனக்குரிய முறை, என நினைந்தும் - என்று எண்ணியும், அ பணிதலை நின்றான் - (தந்தை ஏவிய) அக்காரியத்தைத் தலைமேற் கொண்டான் (தன் உடன்பாட்டை அடக்கத்தோடு குறிப்பால் உணர்த்தினான் என்றவாறு).

(பி - ம்.) 1. உரைத்திடத், உரைத்தலும்.
2. காதலித்திலன்; இகந்திலன் கடனிதென்றுணர்ந்து, கடனிதென் றுணர்ந்தே, கடனிதென்றுணர்த்தி.
3. ஏது; ஏவியது, ஏவினது, ஏவினனது.
4. மினைத்துமப், மினைந்துதன், மினைந்தப்; பணித்தலை. (69)

தயரதன் மகிழ்ந்து அரண்மனையை அடைதல்

71. குருசில் சிந்தையை மனக்கொண்ட கொற்றவெண் குடையான்
தருதி யிவ்வர மெனச்சொல்லி யுயிருறத் தழுவிச்
சுருதி யன்னதன் மந்திரச் சுற்றமுஞ் சுற்றப்
பொருவின் மேருவும் பொருவருங் கோயில்போய்ப் புக்கான்.

குருசில் சிந்தையை - இராமபிரானது மனக் கருத்தை, மனம் கொண்ட - உணர்ந்த, கொற்றம் வெண்குடையான் - வெண்கொற்றக் குடையை உடைய தயரதன், இ வரம் தருதி - இந்த வரத்தை (உறுதியாகத்) தருவாயாக, என சொல்லி - என்று வற்புறுத்திச் சொல்லி, உயிர் உற தழுவி - உயிரோடு உயிர் பொருந்த இறுகத் தழுவிக்கொண்டு, சுருதி அன்ன - வேதத்தை ஒத்த, தன் மந்திரம் சுற்றமும் - தன்னுடைய அமைச்சர் குழுவும், சுற்ற - (தன்னைச்) சூழ்ந்துவர, போய் - (மந்திராலோசனை மண்டபத்தினின்றும்) போய், பொரு இல் மேருவும் - தனக்கொப்பு வேறொன்று இல்லாத மேருமலை

யும், பொருவு அரு - ஒப்பாதல் அரிய, கோயில் புக்கான் - அரண்மனையை அடைந்தான்.

இராமபிரான் தன் கருத்துக்கு இயைந்தமையை இங்கிதத்தால் உணர்ந்த தயரதன், அதனை வற்புறுத்தும் வகையில், "தருதி இவ்வரம்" என மீண்டுங் கூறி, அன்பும் மகிழ்ச்சியும் புலப்படத் தழுவுதலும் செய்தான். தழுவுதல் உடம்பின் தொழிலேயாயினும், அதன் பயனாகிய இன்பத்தை நுகர்வது உயிர்; இராமபிரான் தயரதனுக்கு உயிர்; இவ் விரண்டுயிரும் ஒன்ருேடொன்று பொருந்தத் தழுவினுன் என்க. கொள்ளுவது இது, தள்ளுவது இது என்று கூறும் ஒப்புமை கருதி மந்திரச் சுற்றத்துக்கு வேதம் உவமையாயிற்று. மந்திரச் சுற்றமும் என்ற உம்மையால், பிற சுற்றமும் சுற்றினமை பெறப்படும். மேருவும்: உம்மை, உயர்வு சிறப்பு. பொரு வில் மேரு எனப் பிரித்து, சிவபெருமானது போருக்குரிய வில்லாகிய மேரு என்றலும் ஆம். குருசில் - புருஷ சிரேஷ்டன்; இது குரிசில் எனவும் வரும்.

(பி - ம்.) 1. குரிசில்; மனக்கொண்டு, மனங்கொண்ட.
2. எனச்சொலி, என்னக் கொண்டு.
3. மந்திரத் தலைவரும்.
4. மேருவொத்துயர்ந்த பொற்கோயில் சென்றடைந்தான். (70)

இராமபிரான் தன் மாளிகையைச் சேர்தல்

72. நிவந்த வந்தணர் நெடுந்தகை மன்னவர் நகரத்
துவந்த மைந்தர்கண் மடந்தைய ருழையுழை தொடரச்
சுமந்தி ரன்றடந் தேர்மிசைச் சுந்தரத் திரடோள்
அமைந்த மைந்தனுந் தன்னெடுங் கோயில்சென்றடைந்தான்.

சுந்தரம் திரள் தோள் அமைந்த - அழகிய திரண்ட தோள்கள் அமையப்பெற்ற, மைந்தனும் - இளைஞனை இராமபிரானும் (மண்டபத்தை விட்டு), நிவந்த அந்தணர் - (அறிவு ஒழுக்கங்களால்) உயர்ந்த அந்தணரும், நெடு தகை மன்னவர் - பெருந்தன்மை பொருந்திய அரசர் பலரும், நகரத்து - அந்நகரத்திலே வாழ்கிற, உவந்த மைந்தர்கள் - (தன்னைக் காணுதலில்) பெருமகிழ்ச்சி கொண்ட இளைஞர் பலரும், மடந்தையர் - (அவ்வாறே காணும் விருப்புடைய) பெண்கள் பலரும், உழை உழை தொடர - பக்கங்களிலே (சூழ்ந்து தன்னைத்) தொடர்ந்து வர, சுமந்திரன் தட தேர்மிசை சென்று - சுமந்திரன் செலுத்திய பெரிய தேரில் ஏறிச் சென்று, தன் நெடு கோயில் அடைந்தான் - தனது பெரிய மாளிகையை அடைந்தான்.

தந்தை போனபின், தனயனும் போய்ச் சேர்ந்தான் என்றதனுல், உம்மை இறந்தது தழுவியது. இராமபிரானது பேரழகும் பெருங் குணங்களும் அனைவர் கண்களையும் கருத்தையும் கவர்வனவாதலால்,

அந்தணர் முதல் மடந்தையர் இறுதியாகவுள்ள அனைவரும் அப்பிரானது தேரைச் சூழ்ந்தனர். ''ஆடவ ரெல்லாம், தாயை முன்னிய கன்றென நின்றுயிர் தளிர்ப்ப'' (58) என்றதும் காண்க. நிவத்தல் - உயர்தல்; குலத்தாலும், அறிவாலும், ஒழுக்கத்தாலும் உயர்ந்தோர் அந்தணர் என்க. 'உழை உழை' என்ற அடுக்கு, 'எல்லாப் பக்கங்களிலும்' என்பது குறித்தது. காண்பார்க்கு முந்திக் காணப்படுவன தோள்களும் மார்பும். அவற்றுள்ளும், இராமபிரானுடைய தோள்கள் தாடகை வதம், சிவன் வில் முறித்தல், பரசுராமன் செருக்கழித்தல் ஆகிய செயற்கருஞ் செயல்கள் செய்ததோடு கட்டழகும் அமைந்தவையாதலால், 'சுந்தரத் திரள்தோள் மைந்தன்' என்றார். ''ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினாய்'' (பால. 380) எனக் கௌசிக முனிவன் கூற்றாக முன்னே கூறியிருத்தலும் காணத்தக்கது. முன்பு இராமபிரானை அழைத்து வந்த சுமந்திரனே மீண்டும் அப்பிரானை அரண்மனையிற் கொண்டு சேர்த்தான்.

(பி - ம்.) 1. மன்னவனகரத்து, மன்னவர்கள் நகரத்து, மன்னவர் நிகரற்று.
2. உழையுழைத் தொடரச், உழையர்பின் றொடரச்.
3. தனித்தேர் மிசைச்; தடந்தோள், திண்டோள்.
4. தன்பெருங்; கோயில் சென்றணைந்தான், கோயிலையடைந்தான், கோயில்புக்கிருந்தான். (71)

73. வென்றி வேந்தரை வருகென வுவணம்வீற் றிருந்த
பொன்றி ணிந்ததோட் டரும்பெற லிலச்சினை போக்கி
நன்று சித்திர நளிமுடி கவித்தற்கு நல்லீர்
சென்று வேண்டுவ வரன்முறை யமைக்கெனச் செப்ப.

(தயரதன்), வென்றி வேந்தரை - வெற்றி பொருந்திய பல அரசர்களை, வருக என - (அயோத்திக்கு) வருக என்று, உவணம் வீற்றிருந்த - கருட வடிவம் (தலைப்பிலே) பொறிக்கப் பெற்ற, பொன் திணிந்த தோடு - பொன்னாற் செறித்தமைந்த ஓலையிலே, அரு பெறல் - (பிறர் எளிதாகப்) பெறுதற்கரிய, இலச்சினை போக்கி - (தன் அடையாள) முத்திரையிட்டு அனுப்பி, (பின்பு வசிட்டமுனிவரிடம்), நல்லீர் - உத்தமரே, சென்று - (நீர்) போய், சித்திரம் நளி முடி - சித்திர வேலைப்பாடமைந்த, பெருமை தங்கிய முடியை, நன்று - செம்மையாக, கவித்தற்கு - (இராமனுக்குச்) சூட்டுதற்கு, வேண்டுவ - வேண்டியவற்றை, வரல்முறை - நம் குல முறையின்படி, அமைக்க - செய்தமைப்பீராக, என செப்ப - என்று சொல்ல.

இதுவும் அடுத்த பாட்டும் குளகம்; செப்ப என்னும் எச்சம், அடுத்த பாட்டில் 'உரியமாதவன்......போக' என்பதனோடியையும். இந்தப் பாட்டில் எழுவாய் வருவிக்கப்பெற்றது; 'அமைக்க' என்று வசிட்ட முனிவருக்குக் கூறினமை, 'உரிய மாதவன்' என மேலே வருவதனாற் பெறப்படும். இராம பட்டாபிஷேகத்திற்கு அமைச்சர்

களின் இசைவைப் பெற்ற தசரதன், மேலே அதற்குரியவற்றைச் செய்யத் தொடங்கி முதற்கண், அரசர் பலரும் அயோத்திக்கு வந்து சேரும்வண்ணம் அவர்களுக்கு மங்கலவோலை போக்கி, குலமுறைப்படி ஆவன செய்யுமாறு வசிட்ட முனிவரையும் வேண்டினன் என்க. அரசர், பிறருக்கு அனுப்பும் ஓலையைச் சுருள் செய்து, அதன் பொருத்துவாயில் அரச முத்திரையிட்டு அனுப்புதல் மரபு. அந்த முத்திரைக்குரிய கருவியை, அதற்குரியாரன்றிப் பிறர் ஆளுதல் அரிதாகலின், 'அரும்பெறல் இலச்சினை' என்றார். வசிட்ட முனிவர் மிக நெடுங்காலமாக அக்குலத்து முன்னோர் பலருக்கும் முடிசூட்டிய அநுபவமுடையவராதலால் 'வேண்டுவ வரன்முறை யமைக்க' என்று சக்கரவர்த்தி கூறினன். உரிய மாதவன் என்பதும் இதனை வலியுறுத்தும். ஓலையின் தலைப்பில் கருட வடிவம் சிறக்க அமைந்திருந்தமையை, 'உவணம் வீற்றிருந்த' என்று புலப்படுத்தினார். "உட்குறு முவண முச்சியிற் சுமந்த, சக்கர வட்டமொடு சங்குபல பொறித்த, தோட்டுவினை வட்டித்துக் கூட்டரக் குருக்கி, ஏட்டுவினைக் கணக்கனீடறிந் தொற்றிய, முடக்கமை யோலை" (பெருங். 4.10 : 92 - 96) என்பது ஈண்டு ஒப்பு நோக்கத்தகும். இட்சுவாகுமுதல் அக்குலத்தோர் தம் குலதெய்வமாக வழிபட்டுவந்த அரங்கநாத மூர்த்திக்குக் கொடியும் ஊர்தியுமான கருடனது வடிவத்தை அவர்கள் இவ்வாறு போற்றி வந்தனர் போலும்.

(பி - ம்.) 1. வருகவென்றுவணம், வருகவென்றவணம், வருகவென்றண்ணல், வருகென மன்னன்; வீற்றிருந்து.
2. பொன்றணிந்த; அருந்திறலிலச்சினை, அரும்பணியிலச்சினை.
3. நன்றுரித்தளிர்; நளிர்முடி; நல்லோய்.
4. சென்று வேறுள; விதி முறை; அமைக்கெனச் செப்பும், அமைகெனச் செப்ப, எதிர்மொழி செப்ப. (72)

அரசர்களுக்குத் தயரதன் தெரிவித்தல்

74. உரிய மாதவ னொள்ளிதென் றுவந்தனன் விரைந்தோர்
பொருவி றேர்மிசை யந்தணர் குழாத்தொடும் போக
நிருபர் கேண்மின்க ளிராமற்கு நெறிமுறை யதனால்
திருவும் பூமியுஞ் சிந்தையிற் சிறந்தன வென்றான்.

உரிய - முடிசூட்டும் உரிமையையுடைய, மாதவன் - பெருந்தவசியான வசிட்ட முனிவன், ஒள்ளிது என்று - (தயரதனுக்கு விடையாக) நல்லது என்று சொல்லி, உவந்தனன் - மகிழ்ச்சி யுடையவனாகி, விரைந்து - (காரியத்தில்) விரைவு கொண்டு, அந்தணர் குழாத்தொடும் - (தன்னைச் சூழ்ந்த) அந்தணர் கூட்டத்துடனே, பொரு இல் - ஒப்பற்ற, ஓர்தேர் மிசை - ஒரு தேரில் ஏறி, போக—, (தயரதன் தன் பக்கலில் இருந்த அரசர்களை நோக்கி) நிருபர் - அரசர்களே, கேள்மின்கள்

கேட்பீராக; திருவும் - அரசச் செல்வமும், பூமியும் - நாடும், இராமற்கு - இராமனுக்கு, நெறிமுறை - (எம் குலத்து) வழிவந்த முறைப்படி உரியன, சிந்தையில் - என் மனத்தில், சிறந்தன - அவை சிறந்து நிற்கின்றன, என்ருன் - என்று கூறினுன்.

வசிட்ட முனிவர், முடி சூட்டு விழாவுக்குரியவற்றைச் செய்யப் போன பின்பு, சக்கரவர்த்தி, அப்போது தன்னைச் சார்ந்திருந்த அரசர்களை நோக்கி, 'இராமனிடத்து அரசாட்சியை ஒப்பித்து அவனுக்கு முடிசூட்டக் கருதுகின்றேன்' என்று தன் உட்கோளைக் கூறினுன் என்றவாறு. இங்குக் கூறப்பெற்ற அரசர், சக்கரவர்த்திக்குத் திறை செலுத்துதற்கும், சக்கரவர்த்தியைக் காணுதற்கும் வந்தவராதல் வேண்டும். வெளியே பல அரசர்க்கும் ஓலை போக்கினமை முன் கவியில் கூறப்பெற்றது. நிருபர் : அண்மை விளி. மரபு முறைப்படி அரசச் செல்வமும் நாடும் இராமனுக்கு உரியனவாதலின் என் சிந்தனையில் அவை சிறந்து நிற்கின்றன என்ருன். இராமனுக்கு உரியன என ஒரு சொல் வருவிக்க. சீதையிற் சிறந்தன என்பதும் பாடம்; அதற்கு, சீதை இராமனுக்கு உரியவளானது போலச் சீதேவியும் பூதேவியும் அவனை அடைதற்கு முந்துகின்றனர் என்க. 29, 30-ஆம் பாடல்களும் பார்க்க. ஒள்ளிது - நல்லது; ஒப்புதல் பொருளில் வருவது. இச்சொல் இவ்வாறே கன்னடத்தில் வழக்கிலுள்ளது.

(பி - ம்.) 1. ஒள்ளிதென்றமைந்தனன், இயம்பினன், உணர்ந்தனன்; வியக்தான், வியந்தே.
2. குழாத்தோடும் போகி, போனுன்.
3. நெறிமுறைமையினுல், நெறிமுறைமையினல்.
4. சீதையிற் சிறந்தன. (73)

அரசர்களின் மகிழ்ச்சி

75. இறைவன் சொல்லெனு மின்னற வருந்தினர் யாரும்
முறையி னின்றிலர் முந்துறு களியிடை மூழ்கி
நிறையு நெஞ்சிடை யுவகைபோய் மயிர்வழி நிமிர
உறையும் விண்ணக முடலொடு மெய்தின ரொத்தார்.

இறைவன் சொல் எனும் - சக்கரவர்த்தியின் வார்த்தையாகிற, இன் நறவு - இனிய கள்ளை, அருந்தினர் யாரும் - உட்கொண்ட அரசர் முதலிய அனைவரும், முந்து உறு களி இடை மூழ்கி - மிகப் பெருங் களிப்பென்னும் வெள்ளத்தில் மூழ்கி, நெஞ்சு இடை நிறையும் உவகை - தங்கள் மனத்தில் நிறைந்த அப்பெரு மகிழ்ச்சி, போய் - கரை கடந்து போய், மயிர்வழி நிமிர - மயிர்க்கால்களின் வழியே (புளகமாக) வெளிப்பட, உறையும் விண் அகம் - தாங்கள் (மறுமையில்) சென்று தங்குதற்குரிய சுவர்க்கத்தை, உடலொடும் எய்தினர் ஒத்தார் - இவ்வுடம்புடனே சென்றடைந்தவர் போலாகி, முறையின் நின்றிலர்-

(சக்கரவர்த்தியின் முன்னே இருக்கவேண்டிய) முறையில் நில்லாதவ ராயினர்.

இராமபிரான் முடி சூடும் செய்தி கேட்ட அனைவரும், அளவு கடந்த மகிழ்ச்சியால் தம் நிலையையும் மறந்து, சக்கரவர்த்தியின் எதிரில் தாம் அடக்கமாக இருக்கவேண்டிய முறை மீறித் தம் மனம் போனபடி இருந்தனர் என அவர்கள் மகிழ்ச்சி மிகுதியைப் புலப்படுத் தினர். அவர்கள் அந்நிலை அடைதற்குக் காரணமானது இறைவன் சொல் எனும் நறவு. மூழ்கி என்றதற்கேற்பக் களிப்பை வெள்ளமாகக் கொள்க. அவர்கள் புளகாங்கிதமாயினர் என்பதை; உண்ணிறைந்த உவகை அங்கே இடமின்றி மயிர்க் கால்களின் வழியே புறத்து வெளிப் பட்டதென்றார். உடலோடு சுவர்க்கமெய்துதல் மிக அரியதொன் றாகலின், அதனை உவமித்தார். "உடம்பொடு துறக்கநக ருற்றவரை யொத்தார்" (பால. 1237) என்பதும் அதன் விசேடக் குறிப்புங் காண்க.

(பி - ம்.) 2. முறையினின்றவர்; முகந்துறுகளியிடை, களிப்பிடை, முந்திய களிப் பிடை, முந்துறுகளிப்பிடை, முந்துரைகளிப்பிடை, முன்னுறை களிப் பிடை, முந்துறக் களியிடை; மூழ்க, முழுகி.
3. நெஞ்சுடை; மயிர்வழிநிறைய, மெய்வழி மிமிர, மெய்விழி விமிர.
4. விண்ணமுது; உயிரொடும். (74)

அரசர்கள் கூறத் தொடங்கல்

76. ஒத்த சிந்தைய ருவகையி னொருவரி னொருவர்
தத்த மக்குற்ற வரசெனத் தழைக்கின்ற மனத்தார்
முத்த வெண்குடை மன்னனை முறைமுறை தொழுதார்
அத்த நன்றென வன்பினோ டறிவிப்ப தானார்.

உவகையின் - மகிழ்ச்சியினால், ஒருவரின் ஒருவர் - ஒருவரைப் போல் ஒருவர், ஒத்த சிந்தையர் - (இராமபிரான் முடிசூடுதலில்) ஒத்த கருத்துடையவரான அவ்வரசர்கள், தம் தமக்கு அரசு உற்ற என - அவரவருக்குப் (புதிதாக) அரசாட்சி கிடைத்ததுபோல, தழைக் கின்ற மனத்தார் - மகிழ்ச்சி மிகும் மனமுடையவராய், முத்தம் வெண்குடை மன்னனை - முத்துக்கள் கட்டப் பெற்ற வெண்கொற்றக் குடையையுடைய சக்கரவர்த்தியை, முறை முறை - வரிசையாக, தொழுவார் - வணங்கி, அத்த - எம் தந்தை போன்றவரே, நன்று என - தங்கள் கருத்து நல்லதே என்று கூறி, அன்பினோடு - (மனங் கனிந்த) அன்புடனே, அறிவிப்பது ஆனார் - (தங்கள் கருத்தைச் சக்கரவர்த்திக்குத்) தெரிவிக்கலாயினர்.

அரசர் பல்வேறிடங்களுக்கும் நிலைகளுக்கும் உரியவராயினும், இராமபிரான் திறத்தில் அனைவரும் ஒன்றுபட்ட கருத்துடையவர் என்பார், 'ஒத்த சிந்தையர்' என்றார். "தலங்கள் யாவையும் பெற்றனன்

றுன்னனத் தளிர்ப்பரன்'' எனச் சுமந்திரனே முன்னே (49) கூறியிருத்தலும் காண்க.

(பி - ம்.) 1. சிந்தையின்; உவகையின்; ஒருவர்க்கங் கொருவர், ஒருவருக் கொருவர், ஒருவர்பாலொருவர், ஒருவரோடொருவர்.
2. தத்தமக்குறவு; தழைகின்ற, தளிர்க்கின்ற: மனத்தர், மனத்தோர், தகவோர்.
3. தொழுவார்.
4. அத்த கேளென: அறிவிக்கலுற்றுர், அறிவிக்கலுற்றுர். (75)

அரசர் கூறுதல்

(கலிவிருத்தம்)

77. மூவெழு முறைமையெங் குலங்கண் முற்றுறப்
பூவெழு மழுவினுற் பொருது போக்கிய
சேவகன் சேவகஞ் செகுத்த சேவகற்
காவதிவ் வுலகமீ தறனென் ருரரோ.

மூ எழு முறைமை - இருபத்தொரு தலைமுறை, எம் குலங்கள் முற்று உற - எம் அரசர் குலமெல்லாம் அழியும்படி, பூ எழு மழுவினுல் பொருது - கூர்மை மிக்க (தன்) மழுப்படையினுல் போர் செய்து, போக்கிய சேவகன் சேவகம் - தொலேத்த வீரனுகிய பரசுராமனது வீரத்தை, செகுத்த - கெடுத்த, சேவகற்கு - பெரு வீரனுகிய இராமனுக்கு, இ உலகம் ஆவது - இந்த உலகம் உரிமையாகுக! ஈது - இச் செயல்; அறன் - தருமமானதே, என்ருர் - என்று கூறினுர்கள்.

அரோ : அசை.

'அரசரையெல்லாம் அழித்து உலகம் முழுதும் தனதாக்கிக் கொண்ட பரசுராமனே எளிதில் வென்று வலியழித்தபோதே இராமனுக்கு இவ்வுலகம் உரிமையாயிற்று; இதனே வெளிப்பட உரிமையாக்கி முடிசூட்டுதல் மிகவும் ஏற்புடையதே' எனத் தம் கருத்தை மகிழ்ச்சியோடு தெரிவித்தனர் அரசர்.

பூ - கூர்மை; "பூவாட் கோவலர்" (புறநா. 224).

(பி - ம்.) 1. முறைமையும்; குலங்கண் முற்றுமப், குலங்கண் முப்புறப்.
2. செருக்கச் சேகறக்.
4. ஆவவிவ்வுலகமீது; ஆவவிவ்வுலகமென்று, ஆவதிவ்வுலகமென்று, காவவிவுலகமீது: அறமென்ருரரோ, அறைகின்ருரரோ, ஆமென் ருரரோ.

இதன்பின் சில பிரதிகளில், கீழ்வரும் 14 பாடல்கள் உள்ளன. இவை மற்றும் சில பிரதிகளில் 'இவ்வகை யுரைசெய' (80) என்பதன் பின் எழுதப்பட்டுள்ளன; அவற்றுட் பாடபேதங்களும் காண்கின்றன.

அதிகப் பாடல்கள்

1. நறைக்குழற் சீதையு ஞால நங்கையும்
மறுத்துமிங் கொருவற்கு மணத்தின் பாலரோ
கறுத்தமா மிடறுடைக் கடவுள் காலவில்
இறுத்தவற் கன்றியென் றிரட்டர் கூறினர்.
[இரட்டர் - ராஷ்டிரகூடத்து அரசர்.]

2. ஏத்தவந் துலகெலா மீன்ற வேந்தனைப்
பூத்தவ னல்லனேற் புனித வேள்வியைக்
காத்தவ னுலகினைக் காத்த னன்றென
வேத்தவை வியப்புற விதர்ப்பர் கூறினர்.

3. பெருமையா லுலகினைப் பின்னு முன்னுநின்
றுரிமையோ டோம்புதற் குரிமை பூண்டவத்
தருமமே தாங்கலிற் றக்க தீண்டொரு
கருமம்வே றிலதெனக் கலிங்கர் கூறினர்.

4. கேடகல் படியினைக் கெடுத்துக் கேடிலாத்
தாடகை வலிக்கெலாஞ் சரமொன் றேவிய
ஆடக வில்லிக்கே யாக பாரெனுத்
தோடக மலர்முடித் துருக்கர் சொல்லினர்.

5. கற்றநான் மறையவர் கண்ணை மன்னுயிர்
பெற்றதா யெனவருள் பிறக்கும் வாரியை
உற்றதே லுலகினி லுறுதி யாதெனக்
கொற்றவேல் வனைகழற் குருக்கள் கூறினர்.
[குருக்கள் - குருநாட்டு அரசர்.]

6. வாய்நனி புரந்தமா மனுவி னூன்முறைத்
தாய்நனி புரந்தனை தரும வேலியாய்
நீநனி புரத்தலி னெடிது காலநின்
சேய்நனி புரக்கெனத் தெலுங்கர் கூறினர்.

7. வையமும் வானமு மதியும் ஞாயிறும்
எய்திய வெய்துப திகழும் யாண்டெலாம்
நெய்தவழ் வேலினுய் நிற்கும் வாசகம்
செய்தவம் பெரிதெனச் சேரர் கூறினர்.

8. பேரிசை பெற்றனை பெருத தென்னினிச்
சீரிய தெண்ணினை செப்பு கின்றதென்
ஆரிய நங்குடிக் கபர மானதோர்
சூரிய னீயெனச் சோழர் சொல்லினர்.
[அபரம் - அடுத்தது.]

9. ஒன்றிய வுவகைய ரொருங்கு சிந்தையர்
தென்றமிழ் சேணுற வளர்த்த தென்னரும்
என்றுநின் புகழொடு தரும மேமுற
நின்றது நிலையென நினைந்து கூறினர்.

10. வாட்டொழி லுழவநீ யுலகை வைகலும்
ஊட்டினை யருளமு துரிமை மைந்தனைப்
பூட்டினை யாதலிற் பொருவி னன்னெறி
காட்டினை நன்றெனக் கங்கர் கூறினர்.

11. தொழுகழல் வேந்தநின் றெல்கு லத்துளோர்
முழுமுத விழித்தகை முறைமை யாக்கியீண்
டெழுமுகில் வண்ணனுக் களித்த விச்செல்வம்
விழுமிது பெரிதென மிலேச்சர் கூறினர்.

12. கொங்கலர் நறுவிரைக் கோதை மௌலியாய்
சங்கநீ ருலகத்துட் டவத்தின் றன்மையால்
அங்கண னரசுசெய் தருளு மாயிடிற்
சிங்கள ரிங்கிதிற் சிறந்த தில்லென்றார்.

13. ஆதியின் மனுவினு லமைந்த மைந்தற்குப்
பாதியு மாகிலை பரிந்து வாழ்த்துதல்
வேதியர் தவப்பயன் விளைந்த தாமெனச்
சேதியர் சிந்தனை தெரியச் செப்பினர்.
[சேதியர் - சேதி நாட்டார்.]

14. அளம்படு குரைகட லகழி யேழுடை
வளம்படு நெடுநில மன்னர் மன்னனே
உளம்படிந் துயிரெலா முவப்ப தோர்பொருள்
விளம்பினை பெரிதென் விராடர் கூறினர்.
[அளம் - உப்பளம்.] (76)

தயரதன் அரசருடைய மனத்தைச் சோதித்தல்

78. வேறிலா மன்னரும் விரும்பி யின்னது
கூறினா ரதுமனங் கொண்ட கொற்றவன்
ஊறிய வுவகையை யொளிக்குஞ் சிந்தையான்
மாறுமோ ரளவைசால் வாய்மை கூறினன்.

வேறு இலா மன்னரும் - கருத்து வேறுபாடில்லாத அவ்வரசர் அனைவரும், விரும்பி - (இராமன் முடிசூடுதலை) விரும்பி, இன்னது கூறினர் - இவ்வாறு கூறினராக, அது மனம் கொண்ட கொற்றவன் - அதனைத் தன் மனத்தில் ஏற்றுக்கொண்ட சக்கரவர்த்தி, ஊறிய உவகையை - (தன்னுள்ளே) சுரந்த பெருமகிழ்ச்சியை, ஒளிக்கும் சிந்தையான் -

(வெளிப்படாது) மறைக்கும் கருத்துடையவனாய், (அவர்களை நோக்கி) மாறும் - மீண்டும், ஓர் அளவைசால் வாய்மை - (அவர்கள் மனத்தை) அளந்தறிதற்குரிய ஒரு வார்த்தையை, கூறினான் - சொல்லலானான்.

அரசரெல்லோரும், தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட சக்கரவர்த்தி. அதனாற் பெருமகிழ்வெய்தி, அதனை வெளிப்படக் காட்டாமல் மறைத்துக்கொண்டு, அம்மகிழ்ச்சிக்கு மாறுபட்டதாகத் தோற்றுவதும், அரசர் கூற்றின் உண்மையை அளந்தறியத்தக்கதுமான ஒன்றை அவர்களிடம் சொல்லலானான் என்க.

வாய்மை : இங்கே 'வாய்ச்சொல்' என்ற பொருளில் நின்றது. அளவைசால் வாய்மை - அளந்தறியும் சொல். மாறும் - மறுத்தும்; மீண்டும். வேறிலா - தன் கருத்துக்கு வேறுபடாமல் எனவும் கூறலாம்.

(பி - ம்.) 1. வேறெலாமன்னரும், வேறலா மன்னரும், வேறிலா மன்னவர்; அன்னது, இன்னன.
2. கூறினர் : மனக்கொண்ட.
3. ஊறினு, ஊறினன் : உவகையே.
4. அளவையால், அளவுசால். (77)

79. மகன்வயி னன்பினான் மயங்கி யானிது
புகலநீர் புகன்றவிப் பொம்மல் வாசகம்
உகவையின் மொழிந்ததோ வுள்ள நோக்கியோ
தகவென நினைந்ததோ தன்மை யாதென்றான்.

(சக்கரவர்த்தி அரசரை நோக்கி), மகன் வயின் அன்பினால் - என் மகனிடத்திலுள்ள அன்பினாலே, மயங்கி - (உண்மையை ஆராயாது) மயக்கங்கொண்டு, யான் இது புகல - நான் (இராமனுக்கு முடி சூட்ட வேண்டுமென்று) இதனைச் சொல்ல, நீர் புகன்ற - (அதற்கு விடையாக) நீங்கள் சொல்லிய, இ பொம்மல் வாசகம் - இந்தப் பொலிவு பெற்ற வார்த்தை, உகவையின் மொழிந்ததோ - (பொதுவாக எழுந்த) மகிழ்ச்சியால் கூறியதோ? (அல்லது), உள்ளம் நோக்கியோ - என் உட்கருத்தைக் குறித்தோ? (அல்லது), தகவு என நினைந்ததோ - (உண்மையாகவே அது) தகுதியுடைய செயலென்று நினைந்ததனாலோ? தன்மை யாது - அதன் தன்மை எத்தகையது? என்றான் - என்று கேட்டான்.

"தந்தைக்குத் தன் மகனிடத்திலுள்ள அன்பினால், மகன் தகுதியற்றவனானாலும் அது புலப்படாமல் அவனுக்கு முடிசூட்டக் கருதுதல் இயல்பு; தகுதியுடையவனா அல்லனா என்பதைப் பிறரே நிச்சயித்தல் வேண்டும்; ஆதலால் உங்களை நான் கேட்டதற்கு, என் கருத்து நேரானதே என்கின்றீர்கள்; அது இராமனிடம் உள்ள அன்பு காரணமாக உண்டான மகிழ்ச்சியால் கூறியதாகலாம்; அல்லது எனக்கு இச்சக வார்த்தையாக இருக்கலாம்; அல்லது உண்மையறிந்து கூறிய

தாகவும் இருக்கலாம். இவற்றுள் எத்தகையது உங்கள் சொல் என்பதனை உள்ளவாறு கூறுங்கள்'' என அவர்கள் சொல்லை உறுதிப் படுத்தக் கருதிக் கேட்டான் தசரதன்; அதனால் இதனை, 'அளவைசால் வாசகம்' என்றார்.

(பி - ம்.) 1. மகவயினன்பினுன், மகன்வயினென்மனம், எம்மனம், மகன் வயினுனிலம்; மயங்கியொனது, வழங்கயானிது.
2. இப்பொருமல், அப்பொம்மல்.
3. உவகையின்; உள்ளனேக்கியோ.
4. நினைந்ததோ தன்மையென், நினைந்ததெத் தன்மையால், நினைந்த தெத்தன்மையாம், நினைத்ததெத்தகைமையால். (78)

80. இவ்வகை யுரைசெய விருந்த வேந்தர்கள்
செவ்வியோய் நின்றிரு மகற்குத் தேயத்தோர்
அவ்வவர்க் கவ்வவர்க் கமைந்த வாறுறும்
எவ்வமி லன்பினை யினிது கேளெனு.

இவ்வகை உரைசெய - (சக்கரவர்த்தி) இவ்வாறு சொல்ல, இருந்த வேந்தர்கள் - (அது கேட்டு, அப்போது அங்கே) இருந்த அரசரெல்லோரும் (சக்கரவர்த்தியை நோக்கி), செவ்வியோய் - செப்பமுடைய அரசே, நின் திரு மகற்கு - நின் செல்வக்குமரன் இராம னிடத்து, தேயத்தோர் - நாட்டிலுள்ளோர்களில், அவ்வவர்க்கு அவ்வ வர்க்கு - பல்வேறு தகுதியுடைய அவரவர்க்கும், அமைந்தவாறு - ஏற்ற வகையில், உறும் - பொருந்தியுள்ள, எவ்வம் இல் அன்பினை - குற்றமற்ற அன்பின் நிலையை (நாங்கள் கூற), இனிது கேள் - இன்ப மாகக் கேட்பாயாக, எனு - என்று சொல்லி.

இது முதல் நான்கு பாடல்கள் ஒரு தொடர்:

தம் மனத்தை அளந்தறியும் வகையில் சக்கரவர்த்தி கூறியதைக் கேட்ட அரசர்கள், அதற்கு விடையாக, 'அரசே! நாங்கள் மட்டு மன்று; நாட்டிலுள்ள மக்கள் அனைவரும், அவர்கள் எந்நிலையிலிருப் போராயினும், இராமனிடத்து அளவு கடந்த உண்மையன்புடைய வர்களே; அவனும் அனைவரிடத்தும் அவ்வாறே பழகுகின்றான்; ஆதலால், எங்கள் கூற்று, மனமுவந்து கூறியதேயாகும்' எனக் கூற லாயினர். அது மேலே மூன்று பாடல்களாற் கூறப்படும். சக்கர வர்த்தியின் நடுவுநிலை தவறாத தன்மையைக் குறித்தற்கு, 'செவ்வி யோய்' என்றனர். 'செவ்விய நின்றிருமகற்கு' என்பதும் பாடம்; அதுவும் இராமபிரானுக்கு விசேடணமாதலால் சிறப்புடையதே. மகற்கு - மகனிடத்து. அனைவரும் இராமபிரானிடம் கொண்ட அன்பு களங்கமற்றது, தூயது என்பது தோன்ற 'எவ்வமில் அன்பு' என்றார்.

(பி - ம்.) 1. இருந்த வேந்தவை, வேத்தவை.
2. செவ்விய, செவ்வியோர், செவ்வியே; மகற்குத் தேர்ந்துளோர், தேயத்துள், தேத்துள.

3. அவ்வவர்க்கவ்வர், அவ்வவரவ்வவவர்; ஆற்றவாற்றும், ஆற்றவாற்றவும், ஆற்றவாற்றுமென்று, அமைந்தவாற்றும், ஆவதாற்றவும்.
4. இனிதுகேளென்றார், இனிகேளென. (79)

81. தானமுந் தருமமுந் தகவுந் தன்மைசேர்
ஞானமு நல்லவர்ப் பேணு நன்மையும்
மானமு மையநின் மகற்கு வைகுமால்
ஈனமில் செல்வம்வந் தியைவ தென்னவே.

ஐய - ஐயனே, நின் மகற்கு - உன் குமாரன் இராமனிடத்து, ஈனம் இல் செல்வம் - தாழ்வில்லாத அரசுச் செல்வம், வந்து இயைவது என்ன - வந்து பொருந்துதற் கேற்றவாறு, தானமும்—, தருமமும் - கொடையும், தகவும் - நல்லொழுக்கமும், தன்மை சேர் ஞானமும் - நல்ல இயல்பு பொருந்திய மெய்யுணர்வும், நல்லவர் பேணும் நன்மையும் - நல்லோரை ஆதரிக்கும் நற்குணமும், மானமும் - தன் நிலையில் குன்றாத தன்மையும் (ஆகிய சிறப்புக்களெல்லாம்), வைகும் - பொருந்தியுள்ளன. ஆல், ஏ : அசை.

'ஐயனே! இராமனிடத்து எல்லாச் சிறப்புக்களும் அமைந்திருத்தலின், எவ்வகையிலும் அவன் அரசைப் பெறுவதற்குத் தகுதியுடையவனே' என்றனர் அரசர். அவர்கள் மேலும் கூறுகின்றனர். 3, 4 - ஆம் அடிகளில், 'மானவ வையம்நின் மகற்கு வைகலும், ஈனமில் செல்வம் வந்தியைக வென்னவே' என்று பாடங்கொண்டு, 'உலகத்தார் இராமனுக்கு அரசுச் செல்வம் வந்தெய்துக வென்றே நாடோறும் தானதருமம் முதலிய நற்காரியங்களைச் செய்கின்றனர்' என உரை கூறுவாருமுளர்.

தானம் நீரோடு சேர்த்துக் கொடுப்பது; தருமம் யாவர்க்கும் தருவது.

(பி - ம்.) 1. தன்மமும், தவமும், தகைவும்; தன்மை சால், தண்மை சேர், நன்மை சேர்.
2. நல்லவர் பேணும், நல்லறம் பேணும்; தன்மையும்.
3. மானவவையமின், மானவ கேட்டிமின், மானவவெவையுமின், மானமுமெவையுமின், மானவ வாய்மைமின், மானவ மின்வய; மகற்கு வைகலும், வைகுவ, வைகுமிவ்.
4. இயைகவென்னவே, இய்யவவென்னவே, இசைவதென்னவே, எதிர்ந்ததென்னவே. (80)

82. ஊருணி நிறையவு முதவு மாடுயர்
பார்நுகர் பயன்மரம் பழுத்த தாகவும்
கார்மழை பொழியவுங் கழனி பாய்நதி
வார்புனல் பெருகவு மறுக்கின் றார்கள்யார்.

ஊருணி நிறையவும் - ஊரார் உண்ணுதற்குரிய நீரமைந்த குளம் நீர் நிறையப் பெறவும், உதவும் மாடு - (புலர்க்கும்) உதவத்தக்க

இடத்தில், உயர் - நன்கு வளர்ந்துள்ள, பார்நுகர் பயன் மரம் - உலகத்தார் உண்ணுதற்குரிய இனிய பழந்தரும் மரம், பழுத்தது ஆகவும் - நிறையப் பழுத்ததாகவும், கார் மழை பொழியவும் - மேகங்கள் (உரிய காலத்தில்) மழையைப் பொழியவும், கழனி பாய் நதி - வயல்களுக்குப் பாயும் ஆற்றிலே, வார்புனல் பெருகவும் - மிக்க நீர் பெருகவும், மறுக்கின்றார்கள் யார் - (வேண்டாமென்று) மறுப்பவர் யார் உளர்? (எவரும் இலர்.)

'ஊருணி நீர் நிறைதல் முதலியனவாக இங்கே கூறப்பெற்ற பயனுள்ள செயல்கள் நிகழ வேண்டாவென்று கூறுவார் உலகத்தில் இரார்; அதுபோல, இராமனுக்கு அரசுரிமை யெய்துதல் வேண்டாவென்பாரும் இரார்' என உவமைமுகத்தால் இராமபிரானது தகுதியுடைமையைப் பாராட்டிக் கூறினர் அரசர். இராமபிரான் அரசெய்துதலால் உலகம் மிக்க பயன்பெறும் என்பது கருத்து. முதலிரண்டடிகளில், "ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம், பேரறி வாளன் திரு","பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வம், நயனுடை யான்கட் படின்" (215 - 16) என்ற குறட்பாக்களின் சொல்லும் பொருளும் அழகுற அமைந்திருத்தல் காண்க.

(பி - ம்.) 1. உதவுமாறுயர், உதவமாயொரு, உதவமாடுயர்.
2. பார்நுகர் பழுமரம், பார்கெழு பழுமரம், பார்கெழு பயன்மரம், பார்நுகர் பயமரம்; பழுத்தற்றாகவும், பழுதற்றாகவும்.
3. கழனி வாய்நதி, கழனி பாய்ந்திட, கழனி வாய்ந்திட.
4. மறுக்கிற்பார்கள் யார், மறுகுற்றார்களார். (81)

83. பனையவா நெடுங்கரப் பரும யானையாய்
நினையவாந் தகையனாய் நிமிர்ந்த மன்னுயிர்க்
கெனையவா றன்பின னிராம னீண்டவற்
கனையவா றன்பின வவையு மென்றனர்.

பனை அவாம் நெடு கரம் - பனைமரம் போன்ற நீண்ட துதிக்கையையும், பருமம் - மேலிடு தவிசையும் (அம்பாரியையும்) உடைய, யானையாய் - பட்டத்து யானையையுடைய அரசே, இராமன் —, நினை அவாம் தகையன் ஆய் - உன்னையொத்த தகுதிகளையுடையவனாகி, நிமிர்ந்த - (உலகில்) நிறைந்துள்ள, மன் உயிர்க்கு - நிலைபேறுடைய உயிர்களிடத்தெல்லாம், எனைய ஆறு அன்பினன் - எவ்வாறு அன்புடையவனாயிருக்கின்றானோ, அனைய ஆறு - அவ்வாறே, அவையும் - அவ்வுயிர்களும், அவற்கு - அவ்விராமனிடத்து, ஈண்டு அன்பின என்றனர் - மிக்க அன்புடையன என்று கூறினர்.

'இராமன் இவ்விளமைப் பருவத்திலேயே, தந்தையைப் போன்று பல சிறந்த தகுதிகளும் பெற்றிருப்பதோடு, குடிகளிடத்து அன்பு செலுத்துவதிலும் சிறந்திருக்கின்றான்; காண்போர் மனத்தைக் கவரும்

அவனுடைய குண விசேடங்களால், குடிமக்களும் அவனிடத்துப் பேரன்புடையவரா யிருக்கின்றனர் என்பதை அனைவரும் காண் கின்றோம்' என்று அரசர் பலரும் ஒருமுகமாகக் கூறினர். அஃறிணை உயிர்களும் அவனிடம் அன்பு கொண்டிருந்தன வென்ற குறிப்பும் பெறப்படும்; 234 - பார்க்க. இராமபிரான் குடிமக்களிடத்தும், அவர்கள் அப்பிரானிடத்தும் காட்டிய அன்பின் தன்மையை, பால. 312 - 13ஆம் பாடல்களிற் காண்க. அவாம் : உவமவுருபு.

(பி - ம்.) 1. பனியிவர்; யானையான்.
2. மினயலாம், மினவரும்; தன்மையை, தன்மையன், தகைமையை; மினந்த மன்னுயிர், மிமிர்ந்த மன்னுயிர், மினைந்து மன்னுயிர்க்கு, மிகர்த்த மன்னுயிர்க்கு.
3. இனயவாமன்பினன், எனயவாமன்பினன், இனயவாறன்பினன்; இராமனீண்டவர்க்கு, இராமனீண்டவர், இராமனீன்றவற்கு, இராமன்கண்டவாற்று.
4 அனையவாரன்பினர், அனையவாறன்பவை, அனையவாமன்பின, அனையயாமன்பினேம்; அவையுமென்பவே, அமையுமென்றனர், அமையுமென்பவே, ஐயவென்றனர். (82)

தயரதனது மகிழ்ச்சியுரை

84. மொழிந்தது கேட்டலு மொய்த்து நெஞ்சினைப்
பொழிந்தபே ருவகையன் பொங்கு காதலன்
கழிந்ததோர் துயரினன் களிக்குஞ் சிந்தையன்
வழிந்தகண் ணீரினன் மன்னன் கூறுவான்.

மொழிந்தது கேட்டலும் - அரசர்கள் கூறியதைக் கேட்டவளவில், மன்னன் - தயரத சக்கரவர்த்தி, நெஞ்சினை மொய்த்து - மனத்தில் முழுதும் நிரம்பி, பொழிந்த - (அங்கே இடமின்றி) வெளிப்பட்ட, பேர் உவகையன் - பெருமகிழ்ச்சி யுடையவனாகியும், பொங்கு காதலன் - (அவ்வாறே) மேலிடும் அன்புடையவனாகியும், கழிந்தது ஓர் துயரினன் - மனத் துன்பம் சிறிதும் அற்றவனாகியும், களிக்கும் சிந்தையன் - களிப்பை வெளிப்படுத்தும் மனம் உடையவனாகியும், வழிந்த கண் நீரினன் - நிறைந்து வழிந்த இன்பக் கண்ணீருடைய வனாகியும், கூறுவான் - சொல்லலானான்.

இராமன் திறத்தில் பிறர் கருத்து எவ்வாறுளதோ வென்ற ஐயத்தால் சிறிதுளதாயிருந்த மனத் துன்பமும் அரசர் சொற் களால் நீங்கிவிட்டமையின், சக்கரவர்த்தி பெரு மகிழ்வெய்தி, அதனை வெளிப்படையாகவும் தோற்றுவித்தான்என்றவாறு. அம்மகிழ்ச்சி மிகுதி யைப் புலப்படுத்தற்கு, 'நெஞ்சினைப் பொழிந்த பேருவகையன்' என்றத னோடு அமையாது, 'களிக்குஞ் சிந்தையன்' என மீண்டுங் கூறினர். சக்கரவர்த்தியின் மனக்களிப்பு இன்பக் கண்ணீரால் வெளிப்பட்டது. நெஞ்சினை - நெஞ்சில்; வேற்றுமை மயக்கம்.

(பி - ம்.) 1. மொழிந்தவை, மொழிந்தன; மொய்த்த; நெஞ்சினன், நெஞ்சினில்.
2. பேருவகையன், பேருவகையின், பேருவகையைப்; பொங்கு காதலான்.
3. கழிந்தோரிடரினுன், இடரினன், இடரெனக், கழிந்ததென் றுயரெனக், கழிந்ததென்னிடரெனக், விடரெனக், கழிந்தபேர் துயரினன், கழிந்த பேரிடரினுன்; சிந்தையான்.
4. கண்ணீரினுன்; கூறினுன். (83)

85. செம்மையிற் றருமத்திற் செயலிற் றீங்கின்பால்
வெம்மையி னெழுக்கத்தின் மேன்மை மேவினீர்
எம்மக னென்பதென் னெறியி னீங்கிவன்
நும்மகன் கையடை நோக்கு மீங்கென்ருன்.

(தசரதன் அரசர்களை நோக்கி), செம்மையில் - நடு நிலைமையிலும், தருமத்தில் - அரச தருமங்களிலும், செயலில் - நற்செயல்களிலும், தீங்கின்பால் வெம்மையின் - தீச்செயல்களிடத்துக் கடியுந் தன்மையிலும், ஒழுக்கத்தின் - நல்லொழுக்கத்திலும், மேன்மை மேவினீர் - மேன்மையுற்றவர்களே, இவன் - இவ்விராமன், ஈங்கு - இனிமேல், எம் மகன் என்பது என் - எம் புதல்வன் என்பதில் யாதுளது? நெறியின் - முறைப்படி, நும் மகன் - உங்கள் புதல்வனேயாவன்; கையடை - (அவனை உங்கள்) அடைக்கலமாக்கினேன்; ஈங்கு நோக்கும் - இங்கே அவ்வாறே கண்டு பேணுங்கள், என்ருன் —.

'நான் துறவுள்ளம் கொண்டமையின், இராமனை இனி என் புதல்வன் என்ற உரிமை கொண்டாடத் தக்கவனல்லேன்; அவனை உங்களிடம் ஒப்பித்துவிட்டேன்; இனி அவன் உங்களனைவர்க்கும் புதல்வனென்றே கருதி உரியன செய்க' என அரசர்களிடத்து உபசாரமொழி கூறினுன் தசரதன் என்றவாறு. இருந்த அரசர் பலரும், ஆண்டு முதிர்வும் அரசியல் அநுபவமும் பெற்றவராதலின் அவரை, 'செம்மையில்....மேன்மை மேவினீர்' எனச் சிறப்பித்துக் கூறினுன். எம்மகன் ! தன்னையும் தன் தேவியரையும் உளப்படுத்திய பன்மை.

(பி - ம்.) 1. செம்மையிற் கருமத்தின், செம்மைநற் கருமத்தின்; செயலிற்றீங்கிற் பால், செயலிற்றீங்கிலா, செயலிற்றீங்கென்பார்.
2. வெம்மையி லொழுக்கத்தின், மெய்ம்மையி னெழுக்கத்தின்; மெய்ம்மைமேவினீர், மேவுநீர், மேயநீர், மேன்மை மேவுநீர், மேயநீர்.
3. எம்மகனென்பதன்று, என்மகனென்பதென், என்பதே; நெறியி னூங்கவன், ஊங்குவன், அன்றி யீங்கிவன், அறியினீங்குவன், தெரியி னீங்கிவன்; இயம்பினீங்கிவன், இனிதி னீங்கிவன்.
4. நோக்கு மாகென்ருன், ஊங்கென்ருர், நோக்கு நீரென்ருன், நோக்குவீரென்ருன், நுமக்கென்ருேதினுன். (84)

தயரதன் கணிதருடன் ஆலோசித்தல்

86. அரசரை விடுத்தபி னாணை மன்னவன்
புரைதபு நாளொடும் பொழுது நோக்குவான்
உரைதெரி கணிதரை யொருங்கு கொண்டொரு
வரைபொரு மண்டப மருங்கு போயினான்.

அரசரை விடுத்தபின் - (முற்கூறியவாறு உபசார மொழிகள் சொல்லி) அரசர்களை அனுப்பியபின், ஆணை மன்னவன் - (தன்) ஆணையை எங்கும் செலுத்தும் தசரதசக்கரவர்த்தி, புரைதபு குற்றமற்ற, நாளொடு - (முடி சூட்டுக்குரிய) நட்சத்திரத்தையும், பொழுது - முகூர்த்தத்தையும், நோக்குவான் - பார்க்கும்பொருட்டு, உரை தெரி - கணித நூலாராய்ச்சியுடைய, கணிதரை - சோதிடரை, ஒருங்கு கொண்டு - உடன் அழைத்துக் கொண்டு, வரைபொரு ஒரு மண்டபம் மருங்கு - மலைபோல் உயர்ந்ததொரு மண்டபத்திலே, போயினான் - போய்ப் புக்கான்.

சக்கரவர்த்தி, மேலே முடிசூட்டுதற்குரிய நன்னாளையும் நன் முகூர்த்தத்தையும் பார்த்து நிச்சயிக்கும் பொருட்டு, தேர்ந்த சோதிடர் சிலருடன் ஒரு தனி மண்டபத்தை அடைந்தான் என்றவாறு.

உரை, ஆகு பெயராய்க் கணித நூலைக் குறித்தது; உரைதெரி சொல்லுதல் வல்ல எனவுமாம்.

(பி - ம்.) 1. அரசவை, அரைசவை; விடுத்தலும், ஆணைமன்னனும்.
2. புரைதபுநாளொடு, புரைதவிர் நாளொடு, புரையறுநாளொடு; பொழுதுபோக்குவான், போதுபோக்குவான்.
3. உரைதெரி கணிகரை, உரைசெறி கணிதனை, கணிகரை, கணிதரை.
4. வரைதரு; மருங்குமேயினான், மேவினான். (85)

மாதர்களின் செயல்

(வேறு)

87. ஆண்ட வன்னிலை யாக வறிந்தவர்
பூண்ட கூந்தலர் பூட்டவிழ் கொங்கையர்
நீண்ட காதலர் நீள்கலை தாங்கலர்
ஈண்ட வோடின ரிட்டிடை யிற்றிலர்.

ஆண்டு - அவ்விடத்து, அவன் நிலை ஆக - சக்கரவர்த்தியின் நிலை அவ்வாறாக, அறிந்தவர் - (இராமபிரான் முடிசூடும் நற்செய்தியை) அறிந்த சில மாதர், பூண்ட காதலர் - (தம் மனத்தே) கொண்ட ஆசையுடையவராய், பூட்டு அவிழ் கொங்கையர் - (கச்சின்) முடிப்பு அவிழ்ந்த தனங்களையுடையவரும், நீண்ட கூந்தலர் - (அவிழ்ந்து) நீண்டு தொங்கும் கூந்தலுடையவரும், நீள்கலை தாங்கலர் - (இடையி

னின்றும்) தளர்ந்து தொங்கும் ஆடையைத் தாங்கிப் பற்றுதவரும் (ஆகி), ஈண்ட - விரைவாக, ஓடினர் - (கௌசல்யாதேவியிடம்) ஓடினார்கள்; இட்டு இடை இற்றிலர் - நல்ல காலமாகத் (தங்கள்) நுணுகிய இடை முறியப்பெற்றாரிலர்.

இராமபட்டாபிஷேகச் செய்தியை அறிந்த சில பெண்கள், அடங்காத மகிழ்ச்சி கொண்டு, அதனைக் கௌசல்யாதேவிக்குத் தெரிவிக்கும் பொருட்டு விரைந்தோடினர் என்க.

'பூட்டவிழ் கொங்கையர்' என்பது முதலிய குறிப்புக்களால், ஓடினவர் மகளிர் என்பது பெற்றும். அவர்கள் நால்வர் என்பதும், கோசலையிடம் ஓடினர் என்பதும் மேல் இரண்டு கவிகளால் பெறப் படும். அவர்கள் இராமபிரானிடம் பேரன்பு பூண்டவரென்பது தோன்ற, 'பூண்ட காதலர்' என்றார்.

(பி - ம்.) 1. ஆண்டகை யவ்வழியாக, ஆண்டையந்நிலேயாக, ஆண்டையனம் நிலேயாக; அறிந்தனர், அறிந்தோர்.
2. பூண்டகு, பூட்டவிழ் கோதையர்.
3. நீண்ட கோதையர், நீண்டவிழ் கூந்தலர், நீண்டகு கூந்தலர்; தாங்கலார்.
4. ஈண்டகவோடினர்; இட்டிடையிற்றிலார், அற்றிலார், இற்றிடையற் றிலார், இற்றிலார். (86)

88. ஆடு கின்றனர் பண்ணடை வின்றியே
பாடு கின்றனர் பார்த்தவர்க் கேகரம்
சூடு கின்றனர் சொல்லுவ தோர்கிலார்
மாடு சென்றனர் மங்கையர் நால்வரே.

மங்கையர் நால்வர் - அவ்வாறு சென்ற மங்கையர் நால்வரும், ஆடுகின்றனர் - மகிழ்ச்சியால் கூத்தாடுகின்றவராயும், பண் அடைவு இன்றியே பாடுகின்றனர் - பண்முறை இல்லாமலே (வாய்க்கு வந்த வாறு) பாடுகின்றவராயும், பார்த்தவர்க்கு - எதிரே கண்டவரிடத் தெல்லாம், கரம் சூடுகின்றனர் - (தம்) கைகளைத் தலைமேல் குவிப்ப வராகியும், சொல்லுவது ஓர்கிலார் - இன்னது சொல்வதென்று அறி யாதவராகியும், மாடு சென்றனர் - (கோசலையின்) பக்கம் சென்று சேர்ந்தனர்.

இம்மங்கையர் செய்தன மகிழ்ச்சி மிகுதியாலானவை. ஆடுகின் றனர் முதலிய முற்றெச்சங்கள் நான்கும் சென்றனர் என்ற முடிவு கொண்டன. ஏகாரம் : ஈற்றசை.

87, 88, 89-ஆம் பாடல்களில் அடங்கிய செய்திகளை இராமபிரான் வில்லிறுத்த செய்தியைப் பிராட்டிக்குத் தெரிவித்தற்குச் சென்ற தோழி யின் நிலையைக் கூறும் (பால. 322 - 23) பாடல்களுடன் ஒப்பிடுக.

(பி - ம்.) 1. பண்ணடையின்றியே, அன்றியே, பண்டையினன்றியே; அன்பன வின்றியே.
2. பார்த்தவர்க்கோரருள்.
3. ஓர்மிலர். (87)

கோசலை வினவுதல்

89. கண்ட மாதரைக் காதலி னோக்கினாள்
கொண்டல் வண்ணனை நல்கிய கோசலை
உண்டு பேருவ கைப்பொரு ளன்னது
தொண்டை வாயினிர் சொல்லுமி னீண்டென்றாள்.

கொண்டல் வண்ணனை — நீலமேக வண்ணனாகிய இராமபிரானை, நல்கிய - பெற்றுத் தந்த, கோசலை - கௌசல்யாதேவி, கண்ட மாதரை - (தன்னெதிரே) கண்ட அம்மகளிரை, காதலின் நோக்கினாள் - அன்போடு பார்த்து, தொண்டை வாயினிர் - கொவ்வைக் கனிபோன்ற வாயுடையவர்களே, பேர் உவகை பொருள் உண்டு — பெருமகிழ்ச்சி தரும் செய்தியொன்றுண்டென்பது (உங்கள் மகிழ்ச்சியால்) தெரிகின்றது, அன்னது - அதனை, ஈண்டு கூறுமின் - இப்போது கூறுங்கள், என்றாள்—.

மங்கையர் நால்வரும் வந்த வகையினாலேயே, அவர்கள் பெருமகிழ்ச்சிக்குரியதொன்றைத் தெரிவிக்க வந்தனரென்பதை அறிந்து, கௌசல்யாதேவி அவர்களை நோக்கி, 'சொல்ல வந்ததை உடனே சொல்லுங்கள்' என்றாள்.

தொண்டை - கொவ்வை; ஆதொண்டையெனலுமாம்; ஆகுபெயர். நோக்கினாள் : முற்றெச்சம்.

(பி - ம்.) 2. நோக்கிய கோசலை.
3. உண்டோர்; பொருளுள்ளது, பொருளென்றலும், பொருளென்னது.
4. வாயினீர்; சொல்லுமினீரென்றான், சொல்லு மீண்டென்றான், சொல்லுமி னென்றலும். (88)

மங்கையர் கூறுதல்

90. மன்னெ டுங்கழல் வந்து வணங்கிடப்
பன்னெ டும்பகல் பாரளிப் பாயென
நின்னெ டும்புதல் வன்றனை நேமியான்
தொன்னெ டும்முடி சூட்டுகின் றானென்றார்.

நேமியான் - ஆணைச் சக்கரத்தையுடைய (நம்) சக்கரவர்த்தி, மன் வந்து - அரசர்களெல்லாம் வந்து, நெடு கழல் வணங்கிட - பெருமைமிக்க வீரக்கழலணிந்த பாதங்களை வணங்கும்வண்ணம், பல நெடு பகல் - மிக நெடுங் காலம், பார் அளிப்பாய் என - இப் பூமியை

ஆள்வாயாகவென்று, நின் நெடு புதல்வன்தனை-உன்னுடைய உயர்ந்த குமரனான இராமபிரானுக்கு, தொல் நெடு முடி - வழிவழி வந்த பெருமை தங்கிய கிரீடத்தை, சூட்டுகின்றான் - சூட்டப் போகின்றான், என்றார்—.

சக்கரவர்த்தி, இராமபிரானுக்கு முடிசூட்ட இருக்கின்ற உவகைச் செய்தியை அம்மங்கையர் கூறினர்.

மன் : சொல்லால் அஃறிணையாகிப் பன்மை குறித்து நின்றது. கழல் : ஆகுபெயர். பகல், காலம் என்பதுபட நின்றது; அதாவது ஆண்டுகள். புதல்வன்றனை - புதல்வனுக்கு; தன் : சாரியை. சூட்டு கின்றான் : விரைவு பற்றி எதிர்காலம் நிகழ்காலமாகக் கூறப்பெற்ற வழுவமைதி. நெடும்முடி - விரித்தல்.

(பி - ம்.) 1. நெடுங்கடல்.
2. நெடும்பகற்.
4. நெடுமுடி; சூட்டுகென்றான், சூடுகின்றான். (89)

கோசலையின் மனநிலை

91. சிறக்குஞ் செல்வ மகற்கெனச் சிந்தையில்
பிறக்கும் பேருவ கைக்கடல் பெட்பற
வறக்கு மாவட வைக்கன லானதால்
துறக்கு மன்னவ னென்னுந் துணுக்கமே.

(உவகைச் செய்தி கேட்ட கோசலைக்கு), மகற்கு - தன் மகனான இராமனுக்கு, செல்வம் சிறக்கும் என - அரசுச் செல்வம் சிறப்புற வந்தெய்து மென்பதனால், சிந்தையில் பிறக்கும் - மனத்திலே தோன்றிய, பேர் உவகை கடல் - பெருமகிழ்ச்சி யென்னும் கடலானது, பெட்பு அற - விருப்பம் கெட, வறக்கும் - வற்றுவதற்குக் காரணமான, மா வடவை கனல் - பெரிய வடவைத் தீயாக, மன்னவன் - சக்கரவர்த்தி, துறக்கும் என்னும் - துறவு கொள்வான் என்றதனாலான, துணுக்கம் - அச்சம், ஆனது - ஆயிற்று. ஆல் : அசை; ஏ : ஈற்றசை.

இராமபிரான் முடிசூடும் செய்தி பெருமகிழ்ச்சி தர, உடனே, 'சக்கரவர்த்தி துறவுகொள்ளக்கூடுமே' என்ற எண்ணம் தோன்றி அம்மகிழ்ச்சியைச் சிதைக்க, இன்பமும் துன்பமுமாகிய இருவகை மனநிலையையும் ஒருங்கே யெய்தினள் கோசலை யென்க. இவற்றுள், மகிழ்ச்சியே பெரிதாகலின் அதனைக் கடலாக உருவகித்தார். வடவைத் தீ, அளவிற் சிறிதாயினும் சுடுந்தன்மை மிக்கதாதலின், மன்னவன் துறக்கு மென்ற துணுக்கத்தை வடவையாக உருவகித்து, அது கடலுக்குள் அடங்கியிருத்தல்போல, இத்துறவச்சமும் உவகைக் கடலுள் அடங்கியே யிருக்குமென்ற குறிப்புத் தோன்ற வைத்தார். பெட்பு - தன்மை; அதாவது, பொங்குதல். ஒப்பு ; 46 - ஆம் செய்யுள் பார்க்க.

(பி - ம்.) 1. மகற்கெனும், அதற்கெனச்.
2. கடல் பெட்புற, கடற்பெட்புற.
3. கனலானவால், கனலாகுமால்.
4. மன்னனென்றுன்னும். (90)

கோசலையின் செயல்

92. அன்ன ளாயு மரும்பெற லாரமும்
நன்னி திக்குவை யும்பல நல்கித்தன்
துன்னு காதற் சுமித்திரை யோடும்போய்
மின்னு நேமியன் மேவிட மேவினுள்.

(கோசலை), அன்னள் ஆயும் - அத்தன்மையள் (மகிழ்ச்சியும் வருத்தமும் ஒருங்கெய்தினவள்) ஆனலும், ஆரமும் - மணிவடங்களும், நல் நிதி குவையும் - நல்ல பொருள் திரளும், பல நல்கி - மிகப் பலவாக (மகிழ்ச்சி கூறிய மகளிர்க்கு) அளித்து, (அவர்களை அனுப்பிவிட்டு), தன் துன்னு காதல் - தனது மிக்க அன்புக்குரிய, சுமித்திரையோடும் போய் - சுமித்திரையையும் உடன் கொண்டு சென்று, மின்னும் நேமியன் மேவு இடம் - ஒளிமிக்க சக்கரப் படையையுடைய திருநாரணன் (அரங்கநாதமூர்ந்தி) எழுந்தருளியுள்ள கோயிலை, மேவினுள் - அடைந்தாள்.

கௌசல்யாதேவி, இராமபிரானுக்கு மங்கலம் மேன்மேலும் உண்டாகும் பொருட்டுத் தம் குல தெய்வமான அரங்கநாதமூர்த்தியை வழிபட்டுவேண்டி, பல வகையான தானங்களைச் செய்து, நோன்பிருந்தவள் என மேலே ஐந்து பாடல்களால் கூறுகின்றார். சக்கரவர்த்தி துறவுகொள்ளக்கூடுமென்பதனுலான வருத்தம் ஒரு புறம் இருப்பினும், இராமபிரானது ஆக்கத்திற்குரியவற்றைச் செய்தலில் அவள் மனம் முனைந்து நின்றது. மகிழ்ச்சி மேலிட்ட நிலையில், அதற்குரிய செய்தியைச் சொன்ன மங்கையருக்குப் பொருளும் அணிகலன்களும் வாரி வழங்கினுள். சுமித்திரை, தன் பேரன்புக்குரியவளாய் மனங்கலந்து பழகுபவள் என்றதனுல், கைகேயியின் நிலை வேறென்பது குறிப்பிக்கப் பட்டது.

நேமியன் - திருமால்; அரங்கநாதமூர்த்தி; இட்சுவாகு பிரமனை வேண்டிப் பெற்று வந்து நிறுவ (பால. 713) அவ்வமிசத்தவரால் வழி வழியாகப் போற்றி வரப்படும் மூர்த்தி. இராமபிரானது திருமணத்தின் பொருட்டுத் தயரதன் மிதிலைக்குப் புறப்படும்போது இந்த மூர்த்தியை வழிபட்டமை, "நேமியான் பாதம் சென்னி வைத்தபின்" (பால. 880) எனக் குறிக்கப்படுகின்றது. இராமபிரானும் திருமணத்திற்கு முன், தம் குலத்தோர் தொழும் ஆதியஞ் சோதியை அடிவணங்கியது (பால. 1285) காண்க.

(பி - ம்.) 2. நன்மணிக்குவையும், பன்மணிக் குவையும்; நனிநல்கித்தன், நல்கித்தான், நல்கிப்பின்.
3. துன்றுகாதல்; சுமித்திரையாரோடு, சுமித்திரியோடும் போய்.
4. நேமியான்; வைகிடமேவினுள், கோயிலைமேயினுள், மேவினுள். (91)

93. மேவி மென்மல ராணில மாதெனும்
தேவி மாரொடுந் தேவர்கள் யாவர்க்கும்
ஆவி யும்மறி வும்முத லாயவன்
வாவி மாமலர்ப் பாதம் வணங்கினுள்.

மேவி - (கோயிலை) அடைந்து, மெல் மலராள் - மென்மையான தாமரை மலரில் வீற்றிருக்கும் சீதேவி, நிலமாது - பூதேவி, எனும் - என்று சொல்லப்படுகிற, தேவிமாரொடும் - இரு தேவிமாரொடும் (அமர்ந்து), தேவர்கள் - தேவர்களுக்கும், யாவர்க்கும் - மற்றுமுள்ள யாவர்க்கும், ஆவியும் - உயிரும், அறிவும் - உணர்வும், முதல் - மூலமும், ஆயவன் - ஆகியுள்ள எம்பெருமானுடைய, வாவி மா மலர் பாதம் - குளத்திலே அப்போது மலர்ந்த பெரிய தாமரை மலர் போன்ற திருவடிகளை, வணங்கினுள் - வழிபட்டாள்.

மேவி வணங்கினுள் எனக் கூட்டுக. மேவி என்றது, முன் கவியில் 'மேவினுள்' என்றதன் அநுவாதம். எம்பெருமான், எல்லாவுலகங் களுக்கும் மூலகாரணனுகி, அங்கங்கேயுள்ள சீவராசிகள் அனைத்தி னும் அவற்றின் உயிரும் உணர்வுமாய் வியாபித்தவன் என்பது இக் கவியில் குறிக்கப்பெற்றது. பறித்து வாடிய பூவன்று; அன்றலர்ந்த புதிய பூவென்பார், 'வாவிமா மலர்' என்ருர். 'தேவர்கள்' என்றவிடத்து, நான்கனுருபும் உம்மையும் தொக்கன; தேவர்கள் யாவர்க்கும் எனக் கொண்டு கூறுதலும் ஆம்.

(பி - ம்.) 2. தேவிமாரொடு; தேவர்க்கும்.
3. ஆவியும் மமுதம் முதலாயவன்.
4. மாவுலாமலர்ப்பாதம், மாவுலாப்பதம் வந்து; வணங்கினர், வணங்கியே. (92)

94. என்வ யிற்றரு மைந்தற் கினியருள்
உன்வ யத்ததென் ருளுல கியாவையும்
மன்வ யிற்றி லடக்கிய மாயனைத்
தன்வ யிற்றி லடக்குந் தவத்தினுள்.

உலகு யாவையும்-எல்லா உலகங்களையும், மன்வயிற்றின் அடக் கிய - பெருமைமிக்க தன் திருவுதரத்திலே அடக்கிக்கொண்ட, மாயனை - நாராயணனை, தன் வயிற்றில் அடக்கும் - தன் வயிற்றிலே அடக்கிய, தவத்தினுள் - தவப்பெருமை வாய்ந்த கௌசலை, (அரங்க நாதமூர்த்தியிடத்தில்), என் வயின் தரும் மைந்தற்கு - உனதருளால் என்னிடமாகத் தோற்றுவித்த குமாரனுன இராமனுக்கு, இனி அருள் இனி எல்லா நலங்களையும் அருளுதல், உன் வயத்தது-உன்னிடத்துள தாகும், என்ருள் - என்று கூறி வேண்டிக்கொண்டாள்.

'என்னிடமாக இராமனைத் தோற்றுவித்தது உனதருளே; மேலும் அவனுக்குரிய நன்மைகளையெல்லாம் அருளுதலும் உன்னைச் சார்ந்ததே' என வேண்டினுள் கோசலை.

பிரளய காலத்தில், உலகங்களையெல்லாம் தன்னுள் அடக்கிக் கொண்டு குழந்தையாகி ஆலிலைமேலறிதுயிலமரும் பெருமானைத் தன் வயிற்றில் (இராமனாக) அடக்கிய தவமுடையவள் எனக் கோசலை யின் பெருமையைச் சிறப்பித்தார். என் வயிற்று அரு மைந்தற்கு எனப் பிரித்துப் பொருள் கூறலும் ஆம்.

(பி - ம்.) 1. என்வயிற்றரு மைந்தற்கு, என்வயிற்றருள் மைந்தற்கு, என் வயிற்றரு மைந்தன், திருமைந்தற்கு.
2. உன் வயிற்றது, உன் வயத்தன்.
3. மன்வயிற்றில்.
4. தன் வயிற்றில், தன் வயிற்றுள், தன் வயத்தில். (93)

95. என்றி றைஞ்சியவ் விந்திரை கேள்வனுக்
கொன்று நான்மறை யோதிய பூசனை
நன்றி ழைத்தவ ணல்ல தவர்க்கெலாம்
கன்று டைப்பசு வின்கட னல்கினள்.

அவள் - அக்கோசலை, என்று - முற்கூறியவாறு வேண்டி, இறைஞ்சி - வழிபட்டு, அ இந்திரை கேள்வனுக்கு - திருவின் நாய கனான அப்பெருமானுக்கு, ஒன்று - பொருந்திய, நால் மறை ஓதிய - நான்காகிய வேதங்களில் சொல்லிய (விதிப்படி), பூசனை நன்று இழைத்து - பூசையை நன்கு செய்து, நல்ல தவர்க்கு எலாம் - நல்ல தவமுடையவர்க்கெல்லாம், கன்று உடை(ய) பசுவின் கடன் - கன் றோடு கூடிய பசுக்கொடையை (கோதானத்தை), நல்கினள் - கொடுத்தாள்.

கௌசல்யாதேவி, அரங்கநாத மூர்த்திக்கு வேத விதிப்படி பூஜை யைச் செய்வித்து, வழிபட்டு வேண்டிக்கொண்டு, தகுதியுடைய தவசியர்க்குக் கோதானமும் செய்தாள். மேலே, மற்றும் பல வகைத் தானங்களையும் கூறுவர். மங்கல காரியங்களுக்கு முன்னே உரியவாறு தானங்கள் செய்தல் மரபு. இராமபிரான் திருமணத்திற்கு முன்னே அவ்வாறு செய்யப் பெற்றமை பாலகாண்டத்துட் காண்க. கன்றில் லாத பசுவையும், பால் மறுத்த பசுவையும் தானம் செய்தல் கூடாது. இளங்கன்றுடையதாய் நல்ல கறவையும் நல்லிலக்கணங்களும் உள்ள பசுவையே தானம் செய்தல் வேண்டுமென்பது விதியாத லால், 'கன்றுடைப் பசுவின் கடன்' என்றார். கடன் - கடமையாகச் செய்யவேண்டிய தானம்.

(பி - ம்.) 1. இறைஞ்சியவிந்திரைத் இறைஞ்சியே யிந்திரை.
3. மின்றிழைத்து; நல்லவர்க்கே வரம், நல்லதற்கே கோலாம், நல்லத் தவர்க்கெலாம்.
4. பசுவின் கணம். (94)

96. பொன்னு மாமணி யும்புனை சாந்தமும்
கன்னி மாரொடு காசினி யீட்டமும்
இன்ன யாவையு மீந்தன ளந்தணர்க்
கன்ன முந்தளி ராடையு நல்கினள்.

(கோசலை மேலும்) அந்தணர்க்கு - மறையோருக்கு, பொன்னும் - சுவர்ணமும், மாமணியும் - சிறந்த இரத்தினங்களும், புனை சந்தனமும் - பூசுதற்குரிய சந்தனமும், கன்னிமாரொடு - கன்னிப் பெண்களும், காசினி ஈட்டமும் - பூமித் தொகுதியும், இன்ன யாவையும் - இவை போல்வன மற்றும் தானம் செய்தற்குரியனவும், ஈந்தனள் - கொடுத்தாள்; (மேலும்) அன்னமும் - உண்டியையும், தளிர் ஆடையும் - வாழைக் குருத்துப் போன்ற சிறந்த ஆடைகளையும், நல்கினள் - கொடுத்தாள்.

முந்தின கவியில் கோதானம் ஒன்றைக் கூறி, இக்கவியில் பிற பலவகையான தானங்களையும் கூறினர். இவற்றுள், வேண்டுவார் வேண்டினவற்றையெல்லாம் தடையின்றிக் கொடுத்தமை கூறி, ஆடையின் உயர்வுபற்றி, 'தளிர் ஆடை' என்றார்; தளிர் போன்ற பட்டாடை என்பதுமாகும். அந்தணர்க்கு என்பது முன்னும் கூட்டி யுரைக்கப் பட்டது. அவ்வாறன்றி, அதற்கு முன் உள்ளவற்றைப் பொதுவாக யாவர்க்கும் ஈந்தனள் எனவும், அந்தணர்க்குச் சோறும் கூறையும் உதவினள் எனவும் கூறலுமாம். காசினி - பூமி; ஈட்டம் என்பது, அவரவர் தகுதிக்கேற்றவாறு, பல காணிகளைத் தானஞ் செய்தமை யைக் குறிக்கும்.

இப்பாடல் சில பிரதிகளில் இல்லை.

(பா - ம்.) 2. கன்னிமாரொடும்.
4. அன்னதானமு மாடையும். (96)

97. நல்கி நாயக னுண்மலர்ப் பாதத்தைப்
புல்லிப் போற்றி வணங்கிப் புரையிலாள்
மல்லல் மாமணிக் கோயில் வலங்கொளாத்
தொல்லை நோன்புகள் யாவுந் தொடங்கினள்.

புரை இலாள் - குற்றமில்லாதவளாகிய கோசலை, நல்கி - (முற் கூறியவாறு பலவற்றையும்) தானம் செய்து, நாயகன் - பெருமானுடைய, நாள் மலர் பாதத்தை புல்லி - புதிய தாமரை மலர் போன்ற திருவடிகளைப் பற்றி, போற்றி வணங்கி - துதித்து வணங்கி, மல்லல் - வளம் மிக்க, மாமணி - சிறந்த மணிகளால் அழகு செய்யப் பெற்ற, கோயில் - அக்கோயிலை, வலம் கொளா - வலம் வந்து, (அரண்மனை சேர்ந்து), தொல்லை - பழமையான, நோன்புகள் யாவும் - (அப்போது மேற்கொள்ளுதற்குரிய) நோன்புகள் எல்லாவற்றையும், தொடங்கினள் - செய்யத் தொடங்கினாள்.

இதுகாறும், கோசலை அரங்கநாத மூர்த்தியின் ஆலயத்தில் இருந்தவாறே பலப்பல தானங்களைச் செய்து, மீண்டும் அப்பெருமானை வணங்கி வழுத்தி அருள்கொண்டு, மேலே அரண்மனையை அடைந்து சிறந்த பல விரதங்களையும் மேற்கொள்ளலானாள் என்பது கூறினர். விரதங்களும் இராமபிரானுடைய ஆக்கங் குறித்தனவே. கோயில் அரண்மனையின் ஒரு பகுதியிலே அமைந்தது.

நாண்மலர்ப் பாதம்: "வாவி மாமலர்ப்பாதம்" (93) என்றார் முன்னும்.

இப்பாடல் சில பிரதிகளில் இல்லை.

(பி - ம்.) 1. மலர்ப்பாதங்கள்.
2. புல்லிப் போற்றி, புல்லியேத்தி; புரையிலா.
3. மல்லன் மாளிகைக், வல்குமாளிகைக், மல்குமாமணிக். கலங்கொடு.

(96)

மந்திரப் படலம் முற்றும்.

2. மந்தரை சூழ்ச்சிப் படலம்*

இது, மந்தரையினது சூழ்ச்சியைப்பற்றிக் கூறும் படலம் என விரியும், கைகேயியின் தோழியாகிய மந்தரை யென்பவள், இராம பிரான் முடி சூடுதலைத் தவிர்க்கும் பொருட்டுச் செய்த சூழ்ச்சிகளும் பிறவும் இப்படலத்துட் கூறப்படும். இவள் கூனலுடைமையால், கூனி என வழங்கப்படுவாள்.

தயரதன் கணிதருக்குக் கூறுதல்

(கலிவிருத்தம்)

98. கடிகமழ் தாரினுன் கணித மாக்களை
முடிவுற நோக்கியோர் முகமன் கூறிப்பின்
வடிமழு வாளவற் கடந்த மைந்தற்கு
முடிபுனை கடிகைநாண் மொழிமி னென்றனன்.

கடிகமழ் தாரினுன் - மணம் வீசும் பூமாலையணிந்த தயரதன், கணித மாக்களை - (தன்னெதிரில் இருந்த) சோதிடர்களை, முடிவு உற நோக்கி - முற்றும் பார்த்து, ஓர் முகமன் கூறி - (அவ்வமயத்துக்கேற்ற வாறு) ஓர் உபசார வார்த்தையை (முதலில்) மொழிந்து, பின் - அதன் பிறகு, வடி மழுவாளன் - கூரிய மழுப்படையை உடைய பரசுராமனை, கடந்த - வென்ற, மைந்தற்கு - வீரனுன இராமனுக்கு, முடிபுனை கடிகை நாள் - முடி சூடுதற்குரிய முகூர்த்தம் அமைந்த நன்னாளை, மொழிமின் - ஆராய்ந்து கூறுவீராக, என்றனன்—.

சோதிடரைக் கலந்து ஆலோசிக்கும் பொருட்டு அவர்களுடன் ஒரு தனி மண்டபத்தை அடைந்த (86) சக்கரவர்த்தி, அவர்களெல் லோரையும் அன்புடன் நோக்கி முகமன் கூறி, இராமன் முடி சூடு தற்குரிய நல்ல முகூர்த்தம் அமைந்த சிறந்ததொரு நாளை ஆராய்ந்து கூறுங்கள் என வேண்டினுன்.

சோதிடர் பலராதலின், எல்லோரையும் வேறுபாடின்றி நோக்கி மொழிந்தான் என்பதுபட, 'முடிவுற நோக்கி' என்றுர். மாக்கள் -

*இப்படலப் பெயர், சில பிரதிகளில் 'மந்தரைப் படலம்' என்றும் காணப்படுகின்றது. சில பிரதிகளில், 'வசிட்டன் உபதேசப் படலம்', 'மந்திரப் படலம்' என இரண்டு பகுதியாகவும், மற்றும் சிலவற்றில் 'நலந்திரி படலம்', 'மந்தரை சூழ்ச்சிப் படலம்' என இரண்டு பகுதி யாகவும் காணப்படுகின்றன.

மக்கள் என்னும் பொருளது; "தவஞ்செய் மாக்கள்" (பொரு. ந. 91) என்புழிப் போல. கணித மாக்கள் - கணித நூலுணர்ந்த மாந்தர் (263).

இப்பாடல் சில ஏட்டுப் பிரதிகளில் இல்லை; சிலவற்றில் முந்திய படலத்தின் இறுதிச் செய்யுளாக உள்ளது.

(பி - ம்.) 1. கணிக மாக்களை, கடிகை மாக்களை.
2. முடிவுற, படிதனில்; நோக்கியே; முதன்மை கூறிப், முறைமை கூறி. பரிவு கூறிப்.
3. கடந்த மன்னற்கு.
4. முதன்மை நாள்; மொழியுமென்றனன். (1)

99. பொருந்துநா ளென்றுநின் புதல்வற் கென்றலும்
திருந்தினர் இனியசொற் கேட்ட செய்கழற்
பெருந்திண்மா லியானையான் பிழைப்பில் செய்தவ
மருந்தனான் வருகென வசிட்ட னெய்தினான்.

(சோதிடர் நன்கு ஆராய்ந்து மன்னனை நோக்கி), உன் புதல்வற்கு - நின் புதல்வனாகிய இராமனுக்கு, பொருந்து நாள் - (முடி சூடுதற்குப்) பொருந்திய நாள், நாளை என்றலும் - நாளைக்கே யாகும் என்று கூறலும், திருந்தினர் - (சோதிடத்தில்) வல்லவரான அவர்களுடைய, இனிய சொல் கேட்ட - இதமான வார்த்தையைக் கேட்ட, செய்கழல் - (காலை) அழகு செய்கின்ற வீரக்கழலணிந்த, பெரு திண் மால் யானையான்-பெரிய வலிய மதமயக்கமுடைய யானைகளையுடைய தயரத மன்னன், பிழைப்பு இல் - தவறுதல் இல்லாத, செய்தவம் - செய்து முடித்த தவத்தையுடைய, மருந்து அன்னான் - தேவாமிர்தம் போன்ற வசிட்ட முனிவன், வருக என - இங்கே வருகவென்று தெரிவிக்க, வசிட்டன்—, எய்தினான் - அங்கு வந்து சேர்ந்தான்.

இராமனுக்கு முடிசூட்டு விழா விரைவில் நடத்த வேண்டுமென்ற ஆவலுடைமையால், 'நாளையே பொருத்தமான நாள் உள்ளது' என்று சோதிடர் கூறியது சக்கரவர்த்திக்கு, 'இனிய சொல்' ஆயிற்று. ஆதலால், உடனே அதற்கு வேண்டுவன செய்வித்தற்பொருட்டு வசிட்ட முனிவரை அங்கே வருவித்தான். செய் கழல் - மிக்க வேலைப்பாடு செய்யப் பெற்ற கழல் எனலுமாம். மருந்தனான் - குணத்தாலும் செயலாலும் அமிர்தம் போன்ற சிறப்புடையவன்; பிறவிப் பிணிக்கு மருந்து போன்றவன் என்றலுமாம்.

(பி - ம்.) 1. பொருந்து நீர் நாளை; நின்புதல்வற்கென்றனர், என்றலும், உன் புதல்வர்க் கென்னுறத்.
2. திருந்தினர், திருந்தினோர்; அன்னசொல், அரியசொல்; தெரிந்திடு கணிதர்கள் செப்பக் கேட்டபின், திருந்தினரினிய சொற்கேட்ட தெய்விகம்.
3. பெருந்தண் மால் யானையான்; செய்தவம்; நூன்முறை.
4. வருந்தினன், வருந்தவன்; மருந்தனான்; வருந்திய வசிட்டற்கோர் மாற்றங் கூறினான். (2)

மன்னன் வசிட்ட முனிவரை வேண்டுதல்

100. நல்லியன் மங்கல நாளு நாளையவ்
வில்லிய ரோளவற் கின்று வேண்டுவ
ஒல்லையி னியற்றிநல் லுறுதி வாய்மையும்
சொல்லுதி பெரிதெனத் தொழுது சொல்லினான்.

(மன்னவன் வசிட்ட முனிவனை நோக்கி) நல் இயல் - நல்ல தன்மைகள் அமைந்த, மங்கல நாளும் - (மகுடாபிஷேகத்துக்குரிய) மங்களகரமான நாளும், நாளை - நாளையே பொருந்தியுள்ளது; (ஆதலால்), அ - அந்த, வில் இயல் தோளவற்கு - வில்லொடு பழகும் புயவலியையுடைய இராமனுக்கு, இன்று - இன்றைக்கே, வேண்டுவ - (அதற்கு) வேண்டியவற்றை, ஒல்லையின் இயற்றி - விரைவாகச் செய்து முடித்து, உறுதி நல் வாய்மையும் - (அரசியலுக்கு) உறுதி பயக்கும் நல்ல உபதேசங்களையும், பெரிது சொல்லுதி என - விரிவாகச் சொல்லுக வென்று, தொழுது - (முனிவனை) வணங்கி, சொன்னான்—.

மகுடாபிஷேகம் செய்துகொள்வோர், அதற்கு முந்தின நாளிலே செய்தற்குரிய சடங்குகளும், விரதமும் சில உண்டாதலின், இராமனுக்கு அவற்றை முறைப்படி செய்வித்து, அரசியலுக்குரிய பல உறுதி மொழிகளையும் கூறும்வண்ணம் வசிட்டரை வேண்டிக்கொண்டான் மன்னன்.

முகூர்த்தம் மறுநாளேயாதலால், 'வேண்டுவ ஒல்லையின் இயற்றி' என்றார். வாய்மை-வாய்மொழி என்ற பொருளது; "மாறுமோ ரளவை சால் வாய்மை கூறினான்" (78) என்ற விடத்திற் போல. அரசியலுக்குரிய பல நீதிகளையும் தயரதனே இராமனுக்குச் சொன்னதாக வான்மீகம் கூறுகின்றது (ஸர்க்கம் 2, சுலோகம் 3).

(பி - ம்.) 1. மங்கல விளைவு நாளையவ், நாளு நாளைய, நாளுறு நாளையாகின்மா.
2. வில்லியரோளினற்கு, வில்லியல் கொள்பவற்கு; ஈண்டு வேண்டுவ, இன்று வேண்டுவது, என்று வேண்டுவ, என்றும் வேண்டுவ.
3. ஒல்லையில், வல்லையின், வல்விதின்; இயற்றியவுறுதி, இயற்றியவ் வுறுதி, இயற்றியேயுறுதி, இயற்றியமறையும்; வார்த்தையும்.
4. சொல்லுதிர், சொல்லுக; போதெனத், போயெனத், நீயெனத்; தொழுது போக்கினன். (3)

வசிட்ட முனிவர் இராமபிரானிடம் செல்லுதல்

101. முனிவனு முவகையுந் தானு முந்துவான்
மனுகுல நாயகன் வாயின் முன்னினான்
அனையவன் வரவுகண் டலங்கல் மார்பனும்
இனிதெதிர் கொண்டுதன் னிருக்கை யெய்தினான்.

முனிவனும் - (தசரதன் சொல்லியதைக் கேட்ட) வசிட்ட முனிவனும், உவகையும் தானும் முந்துவான் - மிக்க உவகையோடு தான்

விரைந்து சென்று, மனுகுலம் நாயகன் வாயில் - மனுகுலத்தலைவனான இராமபிரானது மாளிகை வாயிலை, முன்னினான் - அடைந்தான்; அனைய வன் வரவு கண்டு - அம்முனிவன் வருதலைக் கண்டு, அலங்கல் மார்பனும் - பூமாலை சூடிய மார்பையுடைய இராமபிரானும், இனிது எதிர் கொண்டு - இனிமையாக (வாயிலில் வந்து) எதிர்கொண்டு அழைத்துச் சென்று, தன் இருக்கை எய்தினான் - (உள்ளே) தனது இருப்பிடம் சேர்ந்தான்.

சக்கரவர்த்தி சொல்லியவற்றை நிறைவேற்றும் பொருட்டு வசிட்ட முனிவர் மகிழ்ச்சியோடு இராமபிரானது மாளிகை சென்றடைய, அவர் வருகையைக் கண்ட இராமபிரான், முகமலர்ச்சியுடன் வெளியே வந்து முனிவரை முறைப்படி உபசரித்து உள்ளே அழைத்துச் சென்று அவருக்கு ஆதனமளித்துத் தானும் அமர்ந்தான். மரியாதைக்குரிய பெரியோர் வரின், இருக்கையை விட்டு எழுந்து எதிர் சென்று வரவேற்று உபசரித்தல் முறையாகும். முனிவரது மகிழ்ச்சி மிகுதியைப் புலப்படுத்தற்கு, 'உவகையும் தானும் முந்துவான்' என்றார். முந்துவான் : முற்றெச்சம்.

(பா - ம்.) 1. உவகையுந்தானு முந்தினான், உவகையின் முடுகி முந்துவான்.
2. வாயின் மன்னினான், வாயன் முந்தினான், வாயின் முந்தினான், வாயிலெய்தினான், மேயினான், நண்ணினான்.
3. வரவுகேட்டு; அலங்கல் வீரனும்.
4. முனியெதிர் கொண்டுதன் கோயில், தன்வாயில். (4)

இராமனிடம் வசிட்டர் கூறுதல்

(வேறு)

102. ஒல்கி லாத்தவத் துத்தம னோதுநூல்
மல்கு கேள்வியவ் வள்ளலை நோக்கியே
புல்கு காதற் புரவலன் போர்வலாய்
நல்கு நானில நானே நினக்கென்றான்.

ஒல்கு இலா தவத்து உத்தமன் - தளர்ச்சியில்லாத தவம் நிறைந்த உத்தமனான வசிட்ட முனிவன், ஓதும் நூல் - ஓதுதற்குரிய நூல்களின் அறிவும், மல்கு கேள்வி - நிறைந்த கேள்வியறிவும் பொருந்திய, அ வள்ளலை நோக்கி - வள்ளலான அவ்விராமபிரானைப் பார்த்து, போர் வலாய் - போரில்வல்ல வீரனே, புல்கு காதல் புரவலன் - (நின்னிடம்) பொருந்திய அன்புடைய சக்கரவர்த்தி, நாளை - நாளைக்கே, நினக்கு - உனக்கு, நால் நிலம் நல்கும் - பூமியை யாளும் அரசுரிமையை அளிக்கப் போகின்றான்; என்றான்—. ஏகாரம் : அசை.

இராமபிரானுடைய உபசாரத்தைப் பெற்று அருகில் அமர்ந்த வசிட்ட முனிவர், 'சக்கரவர்த்தி நாளையே நினக்கு அரசளித்து முடி

சூட்டப் போகின்றான்' என்று, தாம் வந்த காரியத்தைச் சொன்னார்: இராமபிரானைப் பலவிடத்தும் 'வள்ளல்' என்பர். நானிலம்: குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு பகுப்பாகிய நிலம்.

(பி - ம்.) 1. ஒல்கலி றவத்து, ஒல்கலிற் றவத்து.
2. கேள்விய வள்ளலை, கேள்வியன் வள்ளலை, கேள்வியின் வள்ளலை; நோக்கினன்.
3. போர் வல்லாய், போரிலாங்.
4. நல்கினனிலம்; மினக்கென. (5)

முனிவர் உறுதிப் பொருளைக் கூறத் தொடங்கல்

103. என்று பின்னு மிராமனை நோக்கிநான்
ஒன்று கூறுவ துண்டுறு திப்பொருள்
நன்று கேட்டுக் கடைப்பிடி நன்கெனாத்
துன்று தாரவற் சொல்லுதன் மேயினான்.

என்று - (நானை நினக்கு நானிலம் நல்கும்) என்று சொல்லி, பின்னும் இராமனை நோக்கி - மேலும் இராமபிரானைப் பார்த்து, நான் கூறுவது - நான் சொல்லப் போவதாகிய, உறுதிப் பொருள் ஒன்று உண்டு—;நன்று கேட்டு - (அதனை) நன்ருகக் கேட்டு, நன்கு கடைப் பிடி எனா - (கேட்டதனை) நன்கு கடைப்பிடித்து நடப்பாயாக என்று, துன்று தார் அவன் - அடர்ந்த பூமாலையணிந்த அவ்விராமபிரானுக்கு, சொல்லுதல் மேயினான் - சொல்லுதலுற்றான்.

முனிவர் இராமபிரானிடத்து, முதலில் முடிசூட்டுதலாகிய மகிழ்ச் சிச் செய்தியைக் கூறி, மேலே, அரசெய்தியபின் அதனை ஆளுதற் குரிய முறைபற்றிய பல நீதிகளைச் சொல்லத் தொடங்கி, 'நான் சொல்பவற்றைக் கருத்துடன் கேட்டுத் தவருது கடைப்பிடிக்க' என்ற எச்சரிக்கையுடன் சொல்லலானார். 'தாரவற்கு' என நான்கனுருபு விரிக்க.

(பி - ம்.) 1. நோக்கினன், நோக்குவான்.
2. ஒன்றுறுதிப் பொருள்.
3. நன்கெனத், நன்றெனத், நன்றெனாத், நல்கெனத்.
4. தாரவற்குச் சொலல் மேயினான். (6)

வசிட்டர் செய்த உபதேசம்

104. கரிய மாலினுங் கண்ணுதலானினும்
உரிய தாமரை மேலுறை வானினும்
விரியும் பூதமொ ரைந்தினு மெய்யினும்
பெரிய ரந்தணர் பேணுதி யுள்ளத்தால்.

கரிய மாலினும் - கரிய திருமேனியையுடைய திருமாலைக் காட்டி லும், கண்நுதலானினும்-நெற்றிக் கண்ணையுடைய உருத்திரனைக் காட்டி

லும், உரிய - தனக்குரியதான, தாமரைமேல் உறைவானினும் - தாமரைப் பூவிலே தங்கும் பிரமனைக் காட்டிலும், விரியும் பூதம் ஓர் ஐந்தினும் - ஒன்றின் ஒன்று விரிவடையும் தன்மை வாய்ந்த ஐம்பெரும் பூதங்களைக் காட்டிலும், மெய்யினும் - உண்மைப் பொருளைக் காட்டிலும், அந்தணர் பெரியர் - அந்தணர் மேற்பட்டவராவர்; (ஆதலால்) உள்ளத்தால் பேணுதி - (அவர்களை) மனத்தால் போற்றுக.

இராமபிரானுக்கு உறுதி பயப்பனவற்றைக் கூறத் தொடங்கிய முனிவர், அந்தணரை மனமாரப் போற்றுதல் அரசர்க்கு முதற்கடமை என அதனை முதற்கட் கூறினர். ஐம்பெரும் பூதங்களின் காரியமாகிய உலகத்தைக் காரணமான பூதங்களாற் குறித்தார். உலகு நிகழ்தற்குரிய முத்தொழிலையும் இயற்றும் திரிமூர்த்திகளினும், அவரினும் மேம்பட்ட உண்மைப் பொருளாகிய பரம்பொருளினும் அந்தணர் பெரியர் என்றது, அப்பரம்பொருளைத் தம் மெய்யுணர்வால் தம் மனத்தடக்க வல்ல ஆற்றலை அவர் பெற்றிருத்தலின் என்க. 'மெய்' என்பது ஆகுபெயராய் உண்மைப் பொருளைக் குறித்தது; அவ்வாறன்றி, உண்மை என்றே கொள்ளுதலும் ஆம். ஆகாயத்தினின்றும் முறையே தோன்றி ஒவ்வொன்றும் தனித்தனியே மிக விரிதலின், 'விரியும் பூதமொரைந்து' என்றார். அடி 1 - 2. மூவர்: 108, 112, 1146.

(பி - ம்.) 1. கண்ணுதலோனினும்.
2. உறைவானிலும்.
3. விரையும் பூதம்.
4. பேசுதி; உள்ளத்தாய். (7)

105. அந்த ணாளர் முனியவு மாங்கவர்
சிந்தை யாலருள் செய்யவுந் தேவருள்
நொந்து ளாரையு நொய்துயர்ந் தாரையும்
மைந்த வெண்ண வரம்புமுண் டாங்கொலோ.

மைந்த - குழந்தாய், அந்தணாளர் முனியவும் - அந்தணர் (மனத்தால்) வெறுத்துக் கூறவும், ஆங்கு - அவ்வாறே, அவர் - அவ்வந்தணர், சிந்தையால் அருள் செய்யவும் - மனத்தால் கருணை காட்டவும், தேவருள் - தேவருக்குள்ளேயும், (முறையே), நொந்து உளாரையும் - துன்பமுற்றவரையும், நொய்து உயர்ந்தாரையும் - விரைவில் உயர்வடைந்தவரையும், எண்ண - எண்ணிச் சொல்வதற்கு, வரம்பும் உண்டோ - ஓர் எல்லையும் உண்டோ? (இல்லையென்றபடி).

இதனால், 'அந்தணர் மிகவுயர்ந்தோர்' என்றதனைக் காரணங் காட்டி விரித்துரைக்கின்றார். அந்தணர் முனிதலால் நொந்துளாரையும், அருள் செய்தலால் உயர்ந்தாரையும் என முறை நிரல்நிறையாகக் கூட்டிக் கொள்க. 'சிந்தையால்' என்பதனை 'முனியவும்' என்பதன் முன்னும், 'நொய்து' என்பதனை நொந்துளா ரென்பதன்

முன்னும் கூட்டியுரைக்க. அந்தணர் முனிந்து கூறினும், அருளிக் கூறினும் அவற்றிற் கிலக்கானோர் யாவராயினும் அவை அப்பயனைத் தந்தே விடுமாதலால், தேவருள்ளும் அந்தணரால் நொந்துளாரையும் உயர்வடைந்தவரையும் எண்ணிச் சொல்லவியலா தென்றார். "ஐந்தவித்தா னாற்றல் அகல்விசும்பு ளார்கோமான், இந்திரனே சாலுங் கரி" (குறள்-25) என்றபடி. வசிட்ட முனிவர் இராமபிரானுக்கு 'ஞானபிதா' ஆகலின், 'மைந்த' என்றார். ஆம், கொல்: அசை; ஓ: எதிர்மறை.'தேவருள்' என்றவிடத்து உயர்வு சிறப்பும்மை தொக்கது.

(பி - ம்.) 1. அங்கவர், இங்கவர்.
2. சிந்தையர்ரருள்; தேவரில், தேவரின், தேவரும்; செல்வ கேள்.
3. நொந்தினரையும், உந்தினரையும், நந்தினரையும்; நோய்தவிர்ந்தாரையும், நோவகன்றாரையும், நொய் தவிந்தாரையும்.
4. உண்டாகுமே, உண்டாகுமோ. (8)

106. அனைய ராதலி னையவவ் வெய்யதீ
வினையி னீங்கிய மேலவர் தாளிணை
புனையுஞ் சென்னியை யாய்ப்புகழ்ந் தேத்துதி
இனிய கூறிநின் றேயின செய்தியால்.

ஐய - ஐயனே, அனையர் ஆதலின் - (அந்தணர்) அத்தன்மை யுடையராதலின், வெய்ய - கொடியனவான, தீவினையின் நீங்கிய - பாவங்களினின்றும் நீங்கின, அ மேலவர் - அந்த மேன்மையுடையவர்களின், தாள் இணை - திருவடிகளை, புனையும் சென்னியை ஆய்- சூடும் தலையை உடையையாகி (எப்போதும் வணங்கி), புகழ்ந்து ஏத்துதி - மிகவும் துதிப்பாயாக; இனிய கூறி - (அவர்களிடத்து எப்போதும்) இன்சொற்களையே பேசி, நின்று - (அவர்கள் காட்டும் நெறியில்) நின்று, ஏயின செய்தி - அவர்கள் கட்டளையை மாறாது செய்வாயாக. ஆல்: அசை.

முன் இரண்டு பாடல்களால், எல்லா நலனும் எய்துதற்குக் காரணமான அந்தணரின் பெருமைகளை எடுத்துக் கூறி, இப் பாடலால், அவ்வந்தணர் வழிநிற்றலில் என்றும் சோர்வுபடாதிருத்தல் வேண்டுமென வற்புறுத்திக் கூறுகின்றார்.

புகழ்ந்தேத்தல்: ஒருபொருட் பன்மொழி. "இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த, நான்மறை முனிவர் ஏந்துகை யெதிரே" (புறநா. 6) என்பது இங்கே நினைத்தற்குரியது.

ஒரு சுவடியில் இதுவும் அடுத்த பாடலும் முன்பின்னாக உள்ளன.

(பி - ம்.) 1. அனையதாதலில், அனையதாதலின்; ஐயவிவ், அனையவவ், ஐயவியைய நீ.
2. வேதியர் தாளினைப், தாளிணைப்,
3. சென்னியையாய்ப் புகன்று. சென்னியை வாய்புகன்று; ஏத்தமே;

ஏத்திநீ, ஏத்தி நின்று.
4. இனிய கூறநின்று, இனிய கூறிப்பின், இனைய கூறிநின்று; ஏயின செய்தியே, ஏயது செய்தியே, ஏயது செய்தியால், எய்துபு செய்தியால். (9)

107. ஆவ தற்கு மழிவதற் கும்மவர்
ஏவ நிற்கும் விதியுமென் ருலினி
ஆவ தெப்பொரு ளிம்மையு மம்மையும்
தேவ ரைப்பர வுந்தகை சீர்த்ததே.

விதியும் - யாவராலும் வெல்லப்படாத விதியும், ஆவதற்கும் - (ஒருவன்) ஆக்கம் பெறுதற்கும், அழிவதற்கும் - தாழ்ந்து கெடுதற்கும், அவர் ஏவ - அவ்வந்தணர் ஏவுதலால், நிற்கும் என்ருல் - அந்த ஏவலின் வழி நிற்பதாகுமென்ருல், இனி - இதனினும் வேருக, ஆவது எ பொருள் - (ஒருவர்க்கு) ஆகத்தக்க பொருள் யாதுளது? (ஆதலால்) இம்மையும் - இம்மைக்காயினும், அம்மையும் - மறுமைக்காயினும், தேவரை பரவும் தகை - பூதேவராகிய அவரைப் போற்றுந் தன்மை, சீர்த்ததே - சிறப்புடையதேயாகும்.

அந்தணர் அருளிக் கூறுதலால் ஆக்கமும், வெகுண்டு கூறுதலால் கேடும் தேவர்க்கும் பொருந்தும் என முன்னே கூறினவர், 'ஊழிற் பெருவலி யாவுள' எனத்தக்க ஊழையும் மாற்றும் ஆற்றல் அவர்கள் கூற்றினுக்குளது என்று இங்கே கூறி, இதனுல், இம்மை மறுமைப் பயன்களெல்லாம் எய்துவித்தல் அவ்வந்தணரால் ஆகும், எனவே, அவரைப் போற்றுதல் எவ்வகையிலும் சிறப்புடையதே எனக் கூறி முடிக்கின்ருர். விதியும் : உம்மை, உயர்வு சிறப்பு. சீர்த்ததே: ஏகாரம், தேற்றம்.

(பி - ம்.) 1. அழிவதற்கு மவர், அழிவதற்கு மருள், இழிவதற்கும் மவர்.
2. ஏவல் நிற்கும், மேவநிற்கும், மேவிநிற்கும்; விணையு மென்ருல், கதியு மென்ருல்.
3. யாவதெப்பொருள், யாவதிப்பொருள், யாவரெப்பொருள்; இம்மையுமும்மையும், இம்மைக்கு மம்மைக்கும், அம்மையுமிம்மையும், எம்மையுமம்மையும்.
4. தேவரைப் பெறவும்; துணைசேர்த்ததே, சேர்த்தவே, சேரிதே, துணைச் சேர்த்ததே. (10)

108. உருளு நேமியு மொண்கவ ரெஃகமும்
மருளில் வாணியும் வல்லவர் மூவர்க்கும்
தெருளு நல்லற மும்மனச் செம்மையும்
அருளு நீத்தபி ஞவதுண் டாகுமோ.

உருளும் நேமியும் - எங்கும் செல்லத்தக்க சக்கராயுதமும், ஒண் - ஒளி பொருந்திய, கவர் - (மூன்று) பிரிவான, எஃகமும் - சூலப் படை

யும், மருள் இல் - திரிபில்லாத (தெளிவான), வாணியும் - வாக்கும், (ஆகியவற்றில்) வல்லவர் - திறமையுடையவர்களான, மூவர்க்கும் - (முறையே திருமால், உருத்திரன், பிரமன் என்ற) மூவருக்குங்கூட, தெருளும் நல் அறமும் - தெளியும் நல்ல தருமத்தையும், மனம் செம்மையும் - மனத்தின் செப்பமுடைமையையும், அருளும் - தயையையும், நீத்தபின் - கைவிட்டால், ஆவது - (அவரவரால்) ஆகத்தக்க நன்மை, உண்டு ஆகுமோ? - உளதாகுமோ? (ஆகாது).

'உலகத்துக்கு இன்றியமையாத முத்தொழிலும் வல்ல முதல் தேவர் மூவருக்குங்கூட, அவர்கள் தருமத்தையும், நடுவுநிலைமையையும், அருளையும் கைவிட்டால் அவரால் ஆகத்தக்கது எதுவும் இல்லை' என்றது, 'நாடுகாவல் மேற்கொள்ளும் அரசர்க்கு இப்பண்புகள் இன்றியமையாதன' என்பதனைக் குறிப்பதற்காகும். மூவர்க்கும் : உம்மை உயர்வு சிறப்பு. வாணி - வாக்கு; வேதம். திருமாலையும், உருத்திரனையும் முறையே அவர்களுக்குரிய ஆயுதங்களாலே குறித்தமையின், வாணி என்றது பிரமனுக்குரிய, சொல் வடிவாகிய வேதத்தைக் குறிப்பதாகும்; "சூலமுந் திகிரியுஞ் சொல்லுந் தாங்கிய, மூலம்வந் துதவிய மூவர்க் காயினும்" (1148) என்பதும் காண்க. தெருளும் நல் அறம் - நூல்களால் தெளியப்பெறும் நல்ல தருமம்.

இது முதல் பதினொரு பாடல்களால், பொதுவான நீதிகள் பலவற்றை எடுத்துக் கூறுகின்றார்.

(பி - ம்.) 2. மருளில் வாளியும், அருணல் வாணியும், அருளும் பாசமும், மருளினல்லதற்கும் வரமேவர்க்கும்.
3. தெருளில்; மனச்செய்கையும், அயன்செம்மையும்.
4. அருளின் ; ஆவதுண்டாகுமே, ஆயதுண்டாகுமே, உண்டாகுமோ.
(11)

109. சூது முந்துறச் சொல்லிய மாத்துயர்
நீதி மைந்த நினக்கிலை யாயினும்
ஏத மென்பன யாவையு மெய்துதற்
கோது மூல மவையென வோர்தியே.

நீதி மைந்த - நேர்மையையுடைய குழந்தாய், சூது முந்து உற சொல்லிய-சூது முதலாகச் சொல்லப்பட்ட, மா துயர் - பெருந் துன்பத்திற்குக் காரணமான தீய செயல்கள், நினக்கு இலை-நின்னிடம் இல்லை; ஆயினும்—, ஏதம் என்பன யாவையும் எய்துதற்கு - குற்றமாயின எல்லாவற்றையும் (ஒருவன்) அடைவதற்கு, ஓதும் - நீதிநூல்களில் சொல்லப்பெற்ற, மூலம் அவை என-காரணங்கள் அவையாகுமென்று, ஓர்தி - அறிவாயாக. ஏகாரம்: அசை.

துயருக்குக் காரணமானவற்றைத் துயர் எனக் காரியமாகக் கூறினர். அரசர்க்குத் தகாத குற்றங்களாக, "வேட்டம் கடுஞ்சொல்

மிகுதண்டம் சூதுபொரு, ளீட்டங்கள் காமமிவை யேழு'' என்பவற்றைக் கூறுவர்; வடநூலார் இவற்றை 'வியஸனம்' என்பர். காமந்தக: அத். 11, சு. 124. "இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறும், திருநீக்கப் பட்டார் தொடர்பு'' (குறள். 920) என்பர் வள்ளுவர். இராமபிரானிடத்து இத்தகைய குற்றங்களுக்கிடமின்மையின் 'நீதிமைந்த' என்று விளித்து, 'அவை நின்னிடத்து இப்போதில்லையாயினும், எக்காலத்தும் அவை சாராதிருக்கும்படி கருத்துடன் நடத்தல் வேண்டும்' என அறிவுறுத்துகின்றார் முனிவர்.

(பி - ம்.) 1. சூதுமுந்திய, சோதிமுந்தரச்; மாதுயர்.
2. நீதிவித்தக; நினக்கில்லையாமெனில், நினைக்கில்லையாயினும், மிற்கில்லையாயினும், மிகர்க்கில்லையாயினும்; நினைந்து புரிவரேல்.
4. மூலம் அதுவென, இவையென; ஓர்தியால், ஒதியே. (12)

110. யாரொ டும்பகை கொள்ளல னென்றபின்
போரொ டுங்கும் புகழொடுங் காது தன்
தாரொ டுங்கல்செய் யாதது தந்தபின்
வேரொ டுங்கெட வேண்டலுண் டாகுமோ.

யாரொடும் பகை கொள்ளலன் என்றபின் - (அரசன் ஒருவன்) எவரிடத்தும் பகை யுணர்ச்சியை மேற்கொள்ளாதவன் என்ற நிலை உண்டாயின், (அதனால்) போர் ஒடுங்கும் - (பலரும் அழிதற்குக் காரணமான) போர் இல்லையாகும்; (ஆதலால்) தன் தார் ஒடுங்கல் செய்யாது - அவன் படை அழிவுறாது; புகழ் ஒடுங்காது - அவன் புகழும் குறைவுபடாது (வளரும்); அது தந்தபின் - அத்தகைய நிலையைத் தனதாக்கிக்கொள்ளுதலால், வேரொடும் கெட வேண்டல் - (அவ்வரசன்) அடியோடு கெடவேண்டிய நிலை, உண்டாகுமோ—? (உண்டாகாது).

'போர் வெற்றியே அரசன் புகழுக்குக் காரணம்' என்பார் கூற்றை மறுத்து, 'பகையும், அதனாலாகும் போரும் இல்லாமலே செய்துகொள்ளுதலால், புகழ் மிகுவதோடு படை, பொருள் முதலியன அழியாமை ஆகிய நன்மையும் உளதாகும்; எனவே, எவரோடும் தான் பகை கொள்ளுதலின்றிப் பிறர் தன்னைப் பகைத்தற்கிடமில்லாமலும் செய்துகொள்ளுதல் சிறப்புடையது' என்கின்றார். பகையே போருக்குக் காரணமாதலின், அஃதின்றேல் போருமில்லை; புகழ் குறைதலுமில்லை; அனைவரும் நண்பராவர். "இகலென்னும் எவ்வநோய் நீக்கிற் றவலில்லாத், தாவில் விளக்கந் தரும்'' (குறள். 853) என்பது காண்க. இங்கே, 'தாவில் விளக்கம் - எஞ்ஞான்றும் உளனாதற்கேதுவாகிய புகழ்' என்பது பரிமேலழகர் உரை. 'தார்' என்பது தூசிப்படையாயினும் இங்கே பொதுவாக எல்லாப் படையையும் குறித்தது.

(பி - ம்.) 1. ஆரொடும்; பகை கொள்ளிலன், கொள்கிலே, கோளிலது, மனக் கோளிலது, கோளிலன், ஆனபின்; ஆரொடும் பகை கொள்ள தனிற் னற்பின், யாரொடும்பகை கொள்ளுமதனிற்பின், ஊரொடுங்கு மனக் கோளில் தானையின்.
2. பேரொடுங்கும்; புகழொடுங்காதுதான், ஒடுங்காதென்ப, ஒடுங்கா தன, ஒடுங்குந்திரு.
3. ஒடுங்கல் செல்லாதது; ஒடுங்கு செய்யாததும், ஒடுங்கு செயுமது; தக்கபின்.
4. வேரொடுங் கெடல்; உண்டாகுமே. (13)

111. கோளு மைம்பொறி யுங்குறை யப்பொருள்
நாளுங் கண்டு நடுவுறு நோன்மையின்
ஆளு மவ்வர சேயர சன்னது
வாளின் மேல்வரு மாதவ மைந்தனே.

மைந்தனே - வீர குமாரனே, ஐந்து பொறியும் - பஞ்ச இந்திரியங் களும், கோளும் - (அவை) கொள்ளுதற்குரிய ஐம்புல நுகர்ச்சியும், குறைய - அடங்க, பொருள் நாளும் கண்டு - (நாடுகாவற்கு இன்றி யமையாத) பொருளை நாள்தோறும் (உரிய நன்னெறியால்) ஈட்டி, நடு உறு நோன்மையின் - நடுநிலைமையோடு பொருந்திய மனவுறுதி யுடனே, ஆளும் - ஆளுகின்ற, அ அரசே - அத்தகைய அரசாட்சியே, அரசு - உண்மையான ஆட்சியாகும்; அன்னது - அவ்வாட்சி, வாளின் மேல் வரும் - வாளின்மேல் நின்று செய்கின்ற, மாதவம் - பெருந்தவம் போன்றது. (மிகவும் கடினமானது என்றவாறு).

அரசன், தான் இன்பம் நுகர்தலும், தன் அதிகாரத்தைச் செலுத்து தலுமே அரசாட்சி எனக் கருதாது, தன் இன்ப நுகர்ச்சியைக் குறைத் துக்கொண்டு, குடிகளின் நன்மைக்காகவே பொருளை நன்முறைகளில் ஈட்டி, அவ்வகையிலே செலவிட்டு, மன்னுயிரைத் தன்னுயிராகக் கருதி நடுநிலை தவருது ஆளுதல் வேண்டும். அதுவே உண்மையான அரசு எனப்படுவது; ஆதலால் அத்தகைய ஆட்சி எளிதன்று; வாளின் முனையில் நின்று செய்யுங் கடுந்தவம் போன்றது. மன்னுயிரைத் தன் னுயிராகக் கருதி ஆளும் அரசனுக்கு, "மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம், பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம், குடிபுர வுண்டும் கொடுங் கோ லஞ்சி, மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல், துன்ப மல்லது தொழுதகவில்" (சிலப். 25 : 100 - 104) என்றபடி, 'தனதாட்சியில் பிழைகள் நேர்ந்துவிடுமோ' என அஞ்சி நடத்தல் இன்றியமையாதது. எனவே, அது கடுந்தவம் போன்றதேயாகும்.

இப்பாடல் ஒரு பிரதியில் இல்லை.

(பி - ம்.) 1. ஐம்பொருளுங் குறையப் பெரு.
2. நாளுங்கொண்டு; நடுக்குறுநோன்பயம், நோன்பினுர்; நோன் பினில், நோன்மையால், மொய்ம்பினுல், நடுக்கற்ற நோன் பராய், நடுக்கறு நோன்மையில், நடுநின்ற நோன்மையின், நடுவுறு

நோன்பராய், நடுக்குறு நோன்பினும், நயக்குறு நோன்பினும்.
3. அவ்வரசேயரிது, அவ்வரசெய்தரிது, பேரரசாகியது; அன்னவை,
4. மாதவ மன்னனே. (14)

112. உமைக்கு நாதற்கு மோங்குபுள் ளூர்திக்கும்
இமைப்பி னாட்டமோ ரெட்டுடை யானுக்கும்
சமைத்த தோள்வலி தாங்கின ராயினும்
அமைச்சர் சொல்வழி யாற்றுத லாற்றலே.

உமைக்கு நாதற்கும் - உமையாள் நாயகனான உருத்திரனுக்கும், ஓங்குபுள் ஊர்திக்கும் - உயர்ந்து பறக்கும் கருடவாகனனான திருமாலுக்கும், இமைப்பு இல் நாட்டம் ஓர் எட்டு உடையானுக்கும் - இமைத்தலில்லாத எட்டுக் கண்களையுடைய பிரமனுக்கும், சமைத்த-பொருந்திய, தோள்வலி - புயவலிமையை, தாங்கினர் ஆயினும் - (ஒருங்கே) பெற்றிருப்பவரானாலும், அமைச்சர் சொல்வழி ஆற்றுதலே - (மதிநுட்பமும் பிறவும் வாய்ந்த) அமைச்சர் கூறும் அறிவுரையின்படி செயலாற்றுதலே, ஆற்றல் - வலிமையாம்.

அரசனொருவன், திரிமூர்த்திகளுக்கும் உரிய ஆற்றலை ஒருங்கே பெற்றிருப்பினும், அதனால் தருக்கடைந்து தன்னிச்சைப்படி அரச காரியங்களைச் செய்தல் தகாது, நல்லமைச்சரின் ஆலோசனையைக் கேட்டு நடத்தல் வேண்டும் என்பது இதிற் கூறப்பெற்றது. பிரமனுக்கு முகம் நான்காதலின், நாட்டம் எட்டுடையான் என்றார்; "எண்கணனைக் குட்டிய குட்டு" (வள்ளலார் சாத்திரம்.) சமைத்த - சமைந்த; அமைந்த. சமைத்த : வலித்தல் விகாரம். இறுதியிலுள்ள ஏகாரம், பிரித்து முன்னே கூட்டி உரைக்கப்பெற்றது; அது பிரிநிலைப் பொருளது. ஆற்றுதல் - செய்தல். ஆற்றல் - வலிமை.

(பி - ம்.) 3. சமைக்கும் தொல்வினை; தாங்குநராயினும்.
4. அமைத்த சொல்வழி, அமைத்த சிந்தையர்; ஆற்றுவது, ஆகுவது, ஆகுதல். (15)

113. என்பு தோலுடை யார்க்குமெல் லார்க்குந்தம்
வன்ப கைப்புல மாசற மாய்ப்பதென்
முன்பு பின்பின்றி மூன்றுல கத்தினும்
அன்பி னல்லதோ ராக்கமுண் டாகுமோ.

என்புதோல் உடையார்க்கும் - எலும்பும் தோலும் மட்டும் உடையாரைப்போலே தோற்றும் முனிவருக்கும், எல்லார்க்கும் - மற்ற யாவருக்கும், தம் - அவரவருடைய, வன் பகை புலம் - வலிய பகையாகிற ஐம்புலன்களை, ஆசு அற - சிறிதும் எஞ்சாதவாறு, மாய்ப்பது - அடக்கிவிடுவதால் மட்டும், என் - என்ன பயன்? முன்பு பின்பு இன்றி -

முற்காலம் பிற்காலம் என்பதின்றி (எக்காலத்தும்), மூன்று உலகத்தி னும் - (சுவர்க்கம், பூமி, பாதாளம் என்னும்) மூன்றுலகங்களிலும், அன்பின் அல்லது - தூய அன்பினுலல்லாமல் ஒர், ஆக்கம் - ஒரு சிறிதாக்கமும், உண்டாகுமோ—? உண்டாகாதென்றபடி.

முன்னே 111-ஆம் கவியில் அரசர்க்குப் புலனடக்கம் இன்றியமை யாதென்ருர், 'அப்புலனடக்கத்தோடு, புறப்பகை வெல்லும் பேராற்ற லும் பெற்றிருப்பினும், அவர் தேவரேயாயினும், அன்பென்னும் அருங் குணமில்லையேல் ஆக்கமெய்தார். அவ்வன்பு நெறியால், பகைவரே யிலராவர்; குடிகளும் வசப்பட்டு நிற்பர்; இவற்ருல் எல்லா நன்மை களும் எய்தலாகும்' என அன்பின் உயர்வை இங்கே கூறினுர். அன்பு செலுத்துதற்குக் காலவேறுபாடும் இடவேறுபாடும் இல்லை யென்பார், 'முன்புபின்பு இன்றி, மூன்றுலகத்தினும்' என்ருர். அரசன் யாரொடும் பகை கொள்ளலனுகி ஆக்கமெய்துதற்கும், தேவர்க்குங் கூட, அன்பு நெறியே சிறந்ததென்க.

பகைப்புலம் - பகையாகிய புலன்கள்; 'பகைவர் நாடு' என்ற பொருளுந் தருவதால் புறப்பகை வெல்லுதற்கும் பொருந்தும். 'அன்பின் நல்லது' எனப் பிரித்துப் பொருள் கொள்ளலும் ஆம், இறுதி ஓகாரம், எதிர்மறைப் பொருளது.

(பி - ம்.) 1. *தோலுடை யாக்கையர்; இலார்க்குந்தம், இலார்க்குந்தன், எல்லார்க்குந்தன், எவர்க்குந்தம், யார்க்குந்தம்.*
2. *வன்புலப் பகை யாசற ; மாய்ப்பதால், மாய்ப்பதேல், மாய்ப்பரேல், மாய்ப்பபோல், வாய்ப்பதென்,*
3. *பின்பன்றி, பின்பற்றி, பின்பது, பின்பினும்; நின்றுயர்; மூவுலகத்தினும்.*
4. *அன்பினன்றியோர், அன்பிலல்லதோர், அன்பிலன்றியோர்; ஆக்க முண்டாகுமோ, ஆற்றலுண்டாகுமோ, அன்பினன்றியோதியுண் டாகுமோ.* (16)

114. வைய மன்னுயி ராகவம் மன்னுயிர்
உய்யத் தாங்கு முடலன்ன மன்னனுக்
கைய மின்றி யறங்கட வாதருள்
மெய்யி னின்றபின் வேள்வியும் வேண்டுமோ.

வையம் - (தன் நாட்டில் உள்ள) குடிகள், மன் உயிராக - நிலை பெற்ற உயிராக, அ மன் உயிர் உய்ய - அவ்வுயிர்கள் நல்வாழ்வுபெறும் வண்ணம், தாங்கும் - அவற்றைத் தாங்குகின்ற, உடல் அன்ன மன்ன னுக்கு - உடம்பு போன்ற அரசனுக்கு, அறம் கடவாது - (அவன் எப் போதும்) தரும நெறியைக் கடவாமல், அருள் - அருள் நெறியிலும், மெய்யின் - சத்திய மார்க்கத்திலும், ஐயம் இன்றி நின்றபின் - (சிறிதும்) ஐயத்திற்கிடமின்றி வழுவாது நின்ருெழுகுவானுயின், வேள்வியும் வேண்டுமோ - (அவன்) வேள்விகளைச் செய்தலும் வேண்டற் பாலதோ? (வேண்டா).

'அரசனுடைய கடமை, தன் காவலுக்குட்பட்ட குடிகளெல்லாம் தன்னுயிராகக் கருதி, அவற்றினிடம் அன்பும் அருளும் கொண்டு, தருமம் கெடாதபடி சத்திய மார்க்கத்தில் நின்று செங்கோல் செலுத்துவதாகும்' என்பது இதிற் கூறப்பெற்றது. "செயிரிலா வுலகினில் சென்று நின்றுவாழ், உயிரெலா முறைவதோ ருடம்பு மாயினான்" (பால. 178) எனத் தசரதனைக் கம்பர் கூறியுள்ளதையும், "தன்னுயிர் போலத் தழீஇ யுலகத்து, மன்னுயிர் காக்கும் மன்னனும்" (கலி. 143), "மன்னுயி ரெல்லாம் மண்ணாள் வேந்தன், தன்னுயிர்" (மணி. 7 : 8) என்பவற்றையும் காண்க. உயிரில்லாத உடம்பு பயனற்றதாதல் போலக் குடிகளின்றிக் கோனில்லையாதலின், குடிகள் உயிரும் அரசன் உடம்புமாக ஆன்றோர் கூறுகின்றனர். அரசன், உயிர்களைப் பாதுகாத்தற்கே உளனாதலின், அதற்குரியன நாடிச் செங்கோல் வழுவாது நிற்றலின் பின்னதே, தனது நன்மை கருதிய வேள்வி செய்தல் என்பார், 'வேள்வியும் வேண்டுமோ' என்றார்.

"மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்" (புறநா.) என்றும், "மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம், கண்ணு மாவியு மாம் பெருங் காவலன்" (பெரிய.) என்றும் பிறர் மன்னனை உயிராகக் கூற, கம்பர் குடிமக்களை உயிராகவும் மன்னனை உடலாகவும் கூறினது அறிதற்குரியது.

(பி ம்.) 1. மன்னுயிராகவும் மன்னுயிர், மன்னுயிராய்த்தல மன்னுயிர், இன்னுயி ராகவம் மன்னுயிர்.
2. உடலன்ன மன்னருக்கு.
3. ஐயமன்றி; அகங்கடவாது.
4. மெய்யுள். (17)

115. இனிய சொல்லின னீகைய னெண்ணினன்
வினையன் றூயன் விழுமியன் வென்றியன்
நினையு நீதி நெறிகட வானெனின்
அனைய மன்னற் கழிவுமுண் டாகுமோ.

(அரசனொருவன்) இனிய சொல்லினன் - இன்சொற்களை உடைய வனாகவும், ஈகையன் - (வறியோர்க்கும் நன்னெறிகளிலும்) பொருள் ஈயும் வண்மையுடையனாகவும், எண்ணினன் - (வினை செய்தற்கண்) ஆலோசனையுடையவனாகவும், வினையன் - வினைத்திட்பமுடையவ னாகவும், தூயன் - (உள்ளும் புறமும்) தூய்மையுடையவனாகவும், விழுமியன் - உயர்ந்த கருத்துக்களையுடையவனாகவும், வென்றியன் - (எப்போதும்) வெற்றியுடையவனாகவும், நினையும் - யாவரும் மதிக்கத் தக்க, நீதிநெறி கடவான் எனில் - அரச நீதி முறை தவறாதவனாகவும் இருப்பானேல், அனைய மன்னற்கு - அத்தகைய அரசனுக்கு, அழிவும் உண்டாகுமோ - (பகைவராலும் பிற வகையிலும்) கேடெய்துதலும் உளதாகுமோ? (ஆகாது).

அரசியலுக்கின்றியமையாத பல பண்புகள் இதனுள் தொகுத்துக் கூறப்பெற்றன. ''இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொல்லாற், ருன்கண் டனைத்திவ் வுலகு'' (குறள். 387) என்பதும், திருக்குறளில் வரும் வினை செயல்வகை, வினைத்திட்பம், வினைத் தூய்மை முதலிய அதிகாரங்களும், ''உள்ளுவ தெல்லா முயர்வுள்ளல்'' (குறள். 597) என்பதும் நோக்கற்பாலன. அரசன், தான் இகலிலானுகிப் போருக்கு வலியச் செல்லாதவனுயினும், குறும்பர் எவரேனும் மாறுகொண்டு பொருதற்கு வரின், அதனுல் நாட்டுக்குத் தீமை நேருமாதலின், அப்போது தன் வெற்றியை நாட்டவேண்டியவனுவான்; ஆகவே, 'வென்றியன்' என்ருர். பகைவர் தன்மேல் வருதற்கு அஞ்சத்தக்க ஆற்றலும் பிறவும் உடையனுதல் வேண்டும் என்றபடி.

(பி - ம்.) 1. இனிய சொல்லன், இனிய சொல்லின்; ஈகையை, இயற்கையை, இயற்கையின், இயற்கையன்; எண்ணின.
2. வினையின், வினையும்.
3. கடவானெனின், கடவானறன், கடவாதவவ்.
4. உண்டாகுமே, உண்டாங்கொலோ. (18)

116. சீல மல்லன நீக்கிச்செம் பொற்றுலைத்
தால மன்ன தனிநிலை தாங்கிய
ஞால மன்னற்கு நல்லவர் நோக்கிய
கால மல்லது கண்ணுமுண் டாகுமோ.

சீலம் அல்லன நீக்கி-நல்லொழுக்கமல்லாதவற்றைக் கடிந்து, செம் பொன் துலை - செவ்விய பொன்னை நிறுக்கும் துலாக்கோலின், தாலம் அன்ன - நாக்கைப் போன்ற, தனி நிலை தாங்கிய - ஒப்பற்ற நடுநிலையை ஏற்ற, ஞாலம் மன்னற்கு - நாடாளும் மன்னனுக்கு, நல்லவர் நோக்கிய - நல்லவராகிய அமைச்சர் முதலியோர் கருதிச் சொல்லுகிற, காலம் அல்லது - காலத்தையன்றி, கண்ணும் உண்டாகுமோ - (வேறு) கண்ணும் உண்டோ?

அரசன், தன் பெருமிதத்தால், சீலத்தினின்று சிறிதும் வழுவாமல், நடுநிலையும் உடையனுய்க் காலங்கருதிச் செய்வன செய்து குடிபுறங் காத்தல் வேண்டும் என்கின்றது இது.

பொன்னை நிறுக்கும் துலாக்கோல் மிக நுட்பமான அளவையும் பிழைபடாது காட்டுதற்குரியதாகலின், அதன் நாக்கை நடுநிலைக்கு எடுத்துக்காட்டாக்கினுர். நட்பு, பகை, நொதுமல் என்ற மூன்றிடத்தும் ஒப்ப நாடி அத்தக வியற்றுதல் நடுநிலை; அந் நடுநிலை நிற்றலின் சிறப்பும் அருமையும் நோக்கி, 'தனி' என விசேடித்ததோடு, தாங்கிய எனவுங் கூறினுர். ''ஞாலங் கருதினுங் கைகூடும் காலம், கருதியிடத் தாற் செயின்'' (குறள்-484) என்றபடி, அரசன் வினை செய்தற்குக் காலங் கருதுதல் மிகச் சிறப்பாக வேண்டப்படுவது; அதுவும் நல்லமைச்சர்

கருதிக் கூறும் காலம் தவருமை பெரும் பயனளிக்கவல்லது; ஆகலின், 'நல்லவர் நோக்கிய காலம்' என்ருர். ஏதிரதாக வரக் கடவனவற்றை முன்நோக்குடன் நோக்கி யறியப்படுங் காலத்தைக் 'கண்' என்ருர். புறக்கண் நோக்கினும் அகக்கண்ணுற் காலத்தை நோக்குதல் சிறப் புடைத்து. துலே, தாலம்; வடசொற் சிதைவுகள். துலேத் தாலமன்ன தனிநிலே: கலி. 42 : 14 - 5; புறநா. 6 : 9 - 16; குறள். 118; "துலே நா வன்ன சமநிலே யுளப்பட" (தொல். பேர். பொதுப்பாயிரம்).

(பி - ம்.) 1. *நீக்கித்தன் பெற்றுலேத், நோக்கிச் செம்பொற்றுலேத்.*
2. *தாலமென்னத், தாலுவன்ன; தனிநிலேத், தனிநிலம், தரணியைத்.*
3. *ஞாலமன்னர்க்கு; நல்லவை, நல்லறம்.*
4. *காலமன்னது.* (19)

117. ஓர்வி னல்வினை யூற்றத்தி ஞருரை
பேர்வி ரெல்விதி பெற்றுள தன்றரோ
தீர்வி லன்பு செலுத்தலிற் செவ்வியோர்
ஆர்வ மன்னவற் காயுத மாவதே.

ஓர்வின் - (தம்முடைய) நுண்ணறிவாலும் நூலறிவாலும் ஆராயும் ஆராய்ச்சியோடு, நல்வினை ஊற்றத்தினர் உரை - நற்செயல்களிலேயே ஊன்றுதலுடைய பெரியோரின் சொற்களுக்குள்ள ஆற்றலே, பேர்வு இல் - நீங்குதலில்லாத, தொல்விதி - பழமையான ஊழுங்கூட, பெற்றுளது அன்று - பெற்றுள்ளதாகாது; தீர்வு இல் அன்பு செலுத் தலின் - (அவரிடத்து) என்றும் மாருத அன்பைச் செலுத்துவதனுல், செவ்வியோர் ஆர்வம் - அச் செம்மையுடையாரது விருப்பம், மன்ன வற்கு - (அவ்விருப்பத்திற்காளாகும்) மன்னவனுக்கு, ஆயுதம் ஆவது - பெரும் பகைகளேயும் வெல்லத்தக்க ஆயுதமாக அமையும். அரோ, ஏ: அசை.

அமைச்சர், புரோகிதர் முதலியோர் ஆராய்ந்து கூறும் நல்லுரைகள் ஊழையும் உப்பக்கம் காணும் ஆற்றலுடையன வாதலால், அத்தகையோரிடத்து மாருத அன்பு செலுத்தி, அதனுல் அவர்களுடைய விருப்பத்தைப் பெறும் மன்னன், அகப்பகை புறப் பகைகளே எளிதில் வென்று ஏற்றமுடையவனுவான் என்று அரச னுடைய கடமையைக் கூறுகின்றது இச்செய்யுள்.

ஈற்றடியில் ஆர்வம் அன்னவற்கு எனப் பிரித்துக் கோடலும் ஆம். ஊற்றம் - ஊன்றுகோலுமாம். விதி என்றவிடத்து உயர்வு சிறப்பும்மை தொக்கது.

(பி - ம்.) 1. *ஓரினல்வினை, ஒரு நல்வினை, ஓர்வினல்லுரை, ஒருநல்லுரை; ஊற்றத் திஞலுரை, ஊற்றத்திஞனுரை, ஊற்றத்திருத்திஞர்.*

2. சோர்விருெல்விதி, சோர்விருெல்வினை, சோர்வில் சொல்விதி; பெற்றுள தென்றரோ.
3. திரவன்பு, திரிலன்பு; செவ்வியோய்.
4. ஆர்வமன்னவர்க்கு, ஆவமன்னவற்கு, ஆயமன்னவற்கு, ஆரமன்ன வற்கு; ஆயுதமானதே, அற்புதமாவதே. (20)

118. தூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வரும்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனும்
நாம மில்லை நரகமு மில்லையே.

புவிக்கு தூமகேது என - பூமிக்குத் துன்பமுண்டாக்கப் புகைக் கொடி தோன்றுதல் போல, தோன்றிய - உண்டாகிய, வாமம் மேகலை - அழகிய மேகலாபரணம் அணிந்த, மங்கையரால் - பெண்களாலே, வரும் - வளர்கின்ற, காமம் இல்லை எனில் - சிற்றின்பத்திற்காளாதல் இல்லை யெனில், கடும் கேடு எனும் நாமம் இல்லை - கொடுங் கேடென்ற பெயரும் இல்லையாகும்; (அதனால்), நரகமும் இல்லை - (மறுமையில் அடையத்தக்க) நரகத் துன்பமும் இல்லையாகும். ஏ : அசை.

காமம் - ஆசை. வருதல் - வளர்தல். பொதுவாக ஆசைகள் எல்லாம் தீங்கு விளைக்கத்தக்கனவாயினும், அவற்றுட் பெண்ணாசை அனைவரையும் எளிதிற் பற்றிப் பெருந் தீங்குகள் விளைக்கத்தக்க தாகலின், அதனைத் தனியே எடுத்துக் கூறினர். நரகமும் : உம்மை இறந்தது தழுவியது.

தூமகேது - புகைக்கொடி; இக்காலத்து இதனை வால் நட்சத்திரம் என்பர்; இதன் தோற்றம் உலகிற்குத் தீங்கு விளைவிக்கும். "மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினும்" (புறநா. 117), "கரியவன் புகை யினும் புகைக்கொடி தோன்றினும்" (சிலப். 10 :102) என்பன காண்க.

(பி - ம்.) 1. தூமமேது, தூமமேதுக, தூமமேவு: புகழ்க்கெனத், கனற்கெனத், தழற்கெனத்.
2. மங்கையரால்வரு.
3. இல்லையெனும்.
4. நரகமுமில்லையால். (21)

வசிட்டர் இராமனை அரங்கநாதன் சந்நிதிக்கு அழைத்துச் செல்லல்

119. ஏனை நீதி யினையன வையகப்
போன கற்கு விளம்பிப் புலங்கொளீஇ
ஆன வன்னெடு மாயிர மௌலியான்
தான நண்ணினன் றத்துவ நண்ணினன்.

தத்துவம் நண்ணினன் - மெய்ப்பொருளுணர்ந்த வசிட்ட முனிவன், வையகம் போனகற்கு - உலகையுண்ட பெருமானுக்கு

(இராமபிரானுக்கு), இனையன - இவை போன்றனவான, ஏனை நீதி - மற்றும் பல நீதிகளையும், விளம்பி - எடுத்துச் சொல்லி, புலம் கொளீஇ - அறிவு கொளுத்தி, (பின்பு) ஆனவனொடும் - அவ்விராம பிரானுடனே, ஆயிரம் மௌலியான் தானம் - ஆயிரந் திருமுடிகளை யுடைய (திருமாலாகிய) அரங்கநாத மூர்த்தியின் ஆலயத்தை, நண்ணினான் - அடைந்தான்.

முன்னே கூறியனவும், அவை போன்ற வேறு பலவுமான நீதிகளை வசிட்ட முனிவர் இராமபிரானுக்கு உபதேசித்து முடித்தபின், மேலே செய்யவேண்டுவனவற்றைச் செய்விக்கும் பொருட்டு, அவனை உடனழைத்துக்கொண்டு அவர்கள் தொழுகுலமாகிய அரங்கநாத மூர்த்தி எழுந்தருளியவிடம் சென்று சேர்ந்தார் என்றவாறு.

இராமபிரானுடைய அவதார உண்மையை நினைவுறுத்த 'வையகப் போனகன்' என்றார். போனகம் - உணவு. அவன் வையகப் போனக னானாலும், இப்போது கொண்டுள்ள கோலத்திற்கேற்ப வழிபாடு செய்தல் கடமையாதலின், அவனோடு முனிவர் ஆயிர மௌலியான் தானம் நண்ணினார் என்க. பெருமானது விசுவ ரூபத்தை நினைவு கூர்ந்து, 'ஆயிர மௌலியான்' என்றார். மௌலி, ஆகுபெயராகிச் சிரங் களைக் குறித்தது. 'ஸஹஸ்ரசீர்ஷ: புருஷ:' என்பது வேதவாக்கு.

(பி - ம்.) 1. நீதி இனியன், இனையவும், எனையவும்; வையகம்.
2. போனகற்கும்; விளம்பப்; புலன்கொளீஇ, கொள, பொலன் கொளீஇ, பொலங்குரு.
3. மோலியான், மவுலியான்.
4. தானநண்ணினன், நண்ணுவான்; தத்துவநண்ணுவான். (22)

முனிவர் இராமபிரானுக்குரிய சடங்குகள் இயற்றல்

120. நண்ணி நாகணை வள்ளலை நான்மறைப்
புண்ணி யப்புன லாட்டிப் புலமையோர்
எண்ணு நல்வினை முற்றுவித் தேற்றினான்
வெண்ணி றத்த தருப்பை விரித்தரோ.

நண்ணி - (அரங்கநாதன் சந்நிதியை) அடைந்து, நாகம் அணை வள்ளலை - சேஷசயனனான இராமபிரானை, நால் மறை-நான்கு வேதங் களின் மந்திரங்களால் தூய்மை செய்யப் பெற்ற, புண்ணியம் புனல் ஆட்டி - புண்ணிய தீர்த்தத்தினால் திருமஞ்சனம் செய்வித்து, புலமை யோர் எண்ணும் - அறிவுடையோர் (முடிசூடுதற்குமுன் செய்ய வேண்டுவனவாக) மதிக்கின்ற, நல்வினை - நல்ல சடங்குகளை, முற்று வித்து - நிறைவேற்றி, வெண் நிறத்த தருப்பை விரித்து - வெண்மை யான நிறமுடைய தருப்பைப் புல்லைப் பரப்பி, ஏற்றினான் - (அதில்) அமரச் செய்தான். அரோ : அசை.

இராமனுடன் அரங்கன் சந்நிதியடைந்த வசிட்ட முனிவர், அங்கே வேத மந்திரங்களால் அபிமந்திரித்த புண்ணிய தீர்த்தத்தால் இராமபிரானை நீராட்டி, பட்டாபிஷேகத்துக்கு முன்னால் செய்தற்குரிய சடங்குகளைச் செய்வித்து, நோன்பின்பொருட்டுத் தருப்பாசனத்தில் அப்பிரானை அமர்த்தினர்.

முன்பாட்டில், 'ஆயிரமௌளியான் தானம் நண்ணினான்' என்பதனை அநுவதித்து இங்கே முதலில் 'நண்ணி' என்றெடுத்துக் கொண்டார். 'நாகணை வள்ளலை நண்ணி' என்று கூட்டியும் பொருள் கொள்ளலாம். அரசர் பட்டாபிஷேகம் செய்து கொள்வதற்கு முன்னர், தூயராய்ச் சில சடங்குகள் செய்து தருப்பாசனத்திலமர்ந்து உபவாசமிருத்தல் வேண்டுமென்பது விதியாகலின், முனிவர் இராமபிரானை அவ்வாறு செய்வித்தார். தருப்பையின் தூய்மை குறித்தற்கு 'வெண்ணிறத் தருப்பை' என்றார். கம்பநாடர் இராமபிரானது உயர்வு கூறும் வகையில் 'நாகணை வள்ளலை' என்றார். வள்ளலைப் புனலாட்டி, நல்வினை முற்றுவித்துத் தருப்பை யேற்றினான் எனக் கூட்டி முடிக்க.

இனி இச் செய்யுளுக்கு, 'அரங்கநாத மூர்த்திக்கு அபிஷேக ஆராதனைகள் செய்வித்து வழிபாடாற்றி, அவன் சந்நிதியிலே இராமபிரானைத் தருப்பாசனத்தில் அமர்த்தினான்' எனப் பொருள் கோடலும் ஆம்.

(பி - ம்.) 1. நண்ணி காதனை, நண்ணினர்களவ்.
2. புனலாடப்; புலமையோடு, புதுமையோர்.
3. எண்ணு நூல்வினை; ஏறினன், ஏத்தினன்.
4. வெண்ணிறத்தருப்பை விரித்தாரரோ, விரித்தேயரோ. (23)

முனிவர் தம் கடன் முற்றினமை உணர்த்தலும்
தயரதன் நகரணி சமைக்க முரசறைவித்தலும்

121. ஏற்றிட வாண்டகை யினிதி ருந்தபின்
நூற்றட மார்பனு நொய்தி னெய்தப்போய்
ஆற்றல்சால் மன்னவற் கறிவித் தானவன்
சாற்றுக நகரணி சமைக்க வென் றனன்.

ஏற்றிட - (வசிட்ட முனிவன் தருப்பாசனத்தில்) அமர்த்த, ஆண்தகை - ஆண்மைத்தகுதி மிக்க இராமபிரான், இனிது - இனிதாக, (முறையாக), இருந்த பின் - பதுமாசனங் கொண்டு (தியானத்தில்) அமர்ந்தபின்பு, நூல்-முப்புரி நூலாகிய பூணூலணிந்த, தடமார்பனும் - அகன்ற மார்பையுடைய முனிவனும், நொய்தின் - விரைவாக, எய்த போய் - (சக்கரவர்த்தியிடம்) அணுகிச் சென்று, ஆற்றல் சால் மன்னவற்கு - எல்லா ஆற்றலும் மிக்க அவனுக்கு, அறிவித்தான் - (தான் செய்து முடித்தவற்றைத் தெரிவித்தான்; அவன் - (அதையறிந்த) மன்னவன், நகர் அணி சமைக்க - நகரை அலங்காரம் செய்யும்வண்ணம்,

சாற்றுக என்றனன் - முரசறைக என்று வள்ளுவருக்குக் கட்டளை யிட்டான்.

வசிட்ட முனிவர், இராமபிரானுக்குச் செய்வித்தற்குரிய சடங்கு களை முடித்த செய்தியை மன்னனுக்குத் தெரிவிக்க, அஃதறிந்த மன்னன், மறுநாள் இராமபிரான் முடிசூடும் செய்தியை நகருக்கு அறிவித்து, நகரை அலங்கரிக்க முரசறையுமாறு கட்டளையிட்டா னென்றவாறு.

முனிவருடைய நியமனத்தின்படி இராமபிரான் தருப்பாசனத் தில் அமர்ந்து தியானம் முதலியவற்றைச் செய்து, அந்நாளிரவிலும் அத்தருப்பைப் பாயிலே துயில் கொண்டானென்பர்.

(பி - ம்.) 1. ஏற்றிய, இனிதிருந்துழி, இனிதிருந்துழிஇ; (மு) ஏற்றியாண்டகை யினிதிருந்த பின்னையே.
2. நூற்றட மார்பினன், நூற்றொடர்மார்பனும்; எய்திப் போய்.
3. ஆற்றல்சா லரசனுக்கு, மன்னனுக்கு, ஆற்றலி னரசனுக்கு; உணர்த்தி னனவன்.
4. சாற்றுக வணிகர், சாற்றுக பறைகர், சாற்றுக தாரணி; சமைக்க வெண்ணியே. (24)

வள்ளுவர் முரசறைதல்

122. ஏவிய வள்ளுவ ரிராம னாளையே
பூமகள் கொழுநனுய்ப் புனையு மோலியிக்
கோநக ரணிகெனக் கொட்டும் பேரிகை
தேவருங் களிகொளத் திரிந்து சாற்றினுர்.

ஏவிய வள்ளுவர் - மன்னனால் ஏவப்பட்ட வள்ளுவர்கள், இராமன்- இராமபிரான், நாளையே-நாளைக்கே, பூமகள் கொழுநன் ஆய் - பூமியை ஆளுதற்குரியவனாகி, மோலி புனையும்-மகுடம் சூடுவான்; (ஆதலால்) இ கோ நகர் - இவ்விராசதானி நகரத்தை, தேவரும் களிகொள-(வந்து காணும்) தேவர்களும் மகிழுமாறு, அணிக என - அலங்கரிப்பீராக என்று, திரிந்து - (நகர முழுதும்) சுற்றி, கொட்டும் பேரிகை - அடித் தற்குரிய முரசத்தை (அடித்து), சாற்றினுர் - தெரிவித்தனர்.

அரசன் கட்டளையின்படி, வள்ளுவர் முரசைக் கொட்டிக் கொண்டு நகர முழுதும் சுற்றி, மறுநாள் இராமபிரானுக்கு முடி சூட்டு விழா நடைபெறுமென்பதையும், அதன்பொருட்டு நகர மெங்கும் நன்கு அலங்கரித்தல் வேண்டுமென்பதையும் நகரத்தாருக்குத் தெரி வித்தனர் என்க.

வள்ளுவர் - அரசின் செய்திகளை அவ்வப்போது முரசறைந்து தெரிவித்தற்குரிமை பூண்ட ஒரு பிரிவினர். முரசு மூவகைப்படும்; அவை வெற்றி, கொடை, மங்கலம் ஆகியவற்றை அறிவித்தற் குரியன. இங்கே கொட்டப்பட்டது மங்கல முரசென்க. வள்ளுவர்,

முரசத்தை யானை மீதேற்றித் தாமும் இருந்து அடித்துத் தெரிவித்தல் மரபு. நகரத்தின் எல்லாப் பகுதிகளிலும் விரைந்து தெரிவித்தற்குப் பலர் சென்றனரென்க. ஒப்பு: பால. 815.

(பி - ம்.) 1. ஏவின, ஏவினன், ஏவலின்; வள்ளுவன்.
2. பூவருங், பூவியல், பூவினள்; புனையுமௌலியிக், புனையுமௌலியைக், புணருமௌலியன், புணரு மௌலியிக்.
3. கோசக ரணிகொளக், கோவணி நகரெனக்; கொட்டும் பேரிபத், பேரிகள், பேரியம், பேரியில்; தேவர்பொன்னகரென நகர் திருத்து மென்று.
4. தேவரு மருள்கொளத், ஏவருங் களிகொளத்; திரிந்து சாற்றினன், தெரிந்து சாற்றினர், திரிதந்தெற்றினர்; ஆவலினணிமுரசறைந்து சாற்றினன். (25)

நகர மாந்தரின் மகிழ்ச்சி

123. கவியமை கீர்த்தியக் காளை நாளையே
புவியமை மணிமுடி புனையு மென்றசொற்
செவியமை நுகர்ச்சிய தெனினுந் தேவர்தம்
அவியமு தானதந் நகரு ளார்க்கெலாம்.

கவி அமை கீர்த்தி - பாடலில் அமையத்தக்க புகழையுடைய, அ காளை - அவ்விராமபிரான், நாளையே - நாளைக்கே, புவி அமை - பூமி தன் ஆளுகையின் கீழாதற்குரிய, மணிமுடி புனையும் என்ற சொல் - இரத்தின கிரீடம் சூடுவானென்ற வார்த்தை, செவி அமை நுகர்ச்சியது எனினும் - செவியால் நுகர்தற்குரியதே யாயினும், அ நகர் உள்ளார்க்கு எல்லாம் - அவ்வயோத்தி நகரில் உள்ளவர்களுக்கெல்லாம், தேவர் தம் அவி - தேவர்களின் உணவாகிய, அமுது ஆனது - அமிழ்தத்தை உண்டது போலாயிற்று.

இராமபிரான் முடிசூடும் செய்தி செவிப்பட்டவுடன், அயோத்தி நகரத்தாரனைவரும், கிடைத்தற்கரிய தேவாமிர்தத்தைப் பெற்று உண்டவர் போலப் பெருமகிழ்ச்சி கொண்டனரென்க.

இராமபிரான் திறத்து மக்களுக்குள்ள பேரன்பினால், அவனெய்தும் நன்மையெல்லாம் அவரவர் எய்தினாற் போல மகிழ்கின்றனர். இராமபிரான் அத்தகையனாதலை 38 - 41 பாடல்களிற் காண்க; பால. 312 - 13 - ஆம் பாடல்களும் ஈண்டு நோக்கத்தக்கன.

காளை - காளைப் பருவமுடையோன்; காளைபோன்றவனென்றலுமாம். இராமபிரான் 'புலவர் பாடும் புகழுடையோன்' என்பார் 'கவியமை கீர்த்தியக் காளை' என்றார்; புறநா. 27: 3-5 பார்க்க. அவன் முடிசூடும் மகிழ்ச்சிச் செய்தி செவியிற் கேட்டு நுகரப் படுவதாயினும், வாயால் சுவைத்து நுகர்தற்குரியதும், கிடைத்தற்கரியதுமான தேவாமிர்தத்தையே பெற்று நுகர்ந்தாற் போன்றதாயிற்றென்று

அதன் சிறப்பைக் கூறினர். அவி - உணவு; 'அவியும் அமுதும் என் உம்மைத் தொகையாக்கி உரைத்தலுமாம்.

(பி - ம்.) 1. கவியமை சீர்த்தியக், கவியமை சீர்த்திய.
2. கெடுமுடி.
3. செவியுறு; நுகர்ச்சிய வெனினும், நுகர்ச்சியதேனும்.
4. அவியமுதன்னதம், அவியமு தானதன், அவியமு தானவம்; நகருளோர்க்கெலாம். (26)

124. ஆர்த்தனர் களித்தன ராடிப் பாடினர்
வேர்த்தனர் தடித்தனர் சிலிர்த்து மெய்ம்மயிர்
போர்த்தனர் மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தினர்
தூர்த்தன ரிருநிதி சொல்லி னர்க்கெலாம்.

(மகிழ்ச்சி மேலிட்ட நகரமாந்தர்) ஆர்த்தனர் களித்தனர் - ஆரவாரித்துக் களிப்பை அடைந்தனர், ஆடி பாடினர் - (சிலர்) கூத்தாடிக்கொண்டு பாடினர், வேர்த்தனர் - (சிலர்) உடம்பு வேர்வையுற்றனர்; தடித்தனர் - (சிலர்) மிகவும் பூரித்தனர், மெய் மயிர் சிலிர்த்து - (பலர்) உடம்புகள் மயிர் சிலிர்க்கப் பெற்று, போர்த்தனர் - உடம்பு முழுதும் மூடப் பெற்றனர், மன்னனை - சக்கரவர்த்தியை, புகழ்ந்து - (இராமபிரானுக்கு அரசளித்தலைக் குறித்துப்)புகழ்ந்து, வாழ்த்தினர்—; சொல்லினர்க்கு எல்லாம் - இச்செய்தியைச் சொன்னவர்க்கெல்லாம், இரு நிதி தூர்த்தனர் - மிக்க பொருளை வாரி வழங்கினர்.

முன் கவியில், நகர மக்கள் தேவாமிர்தம் உண்டதுபோன்ற மகிழ் வெய்தினர் எனக் குறிப்பித்து, இங்கே அம்மகிழ்ச்சி மிகுதியால் அவர்களிடையே நிகழ்ந்தவற்றைக் கூறுகின்றார். இவையும் இராமபிரானிடத்து மக்களுக்குள்ள அன்பு மிகுதியைப் புலப்படுத்துவன.

இப்பாடல் சில பகுதிகளில் இல்லை.

(பி - ம்.) 1. ஆர்த்தனர் தடித்தனர்.
2. வேர்த்தனர் களித்தனர், வேர்த்தனரயிர்த்தமெய்; சிலிர்த்து மெய்ம் மயிர், சிலிர்த்த மெய்யினர், மயிர் சிலிர்த்தனர்.
3. போர்த் தொழில் மன்னனைப்; வாழ்த்தினர்.
4. நீணிதி, அணிநிதி; சொல்லினோர்க்கெலாம். (27)

நகரை அலங்கரித்தல்

125. திணிசுட ரிரவியைத் திருத்து மாறுநற்
பணியிடைப் பள்ளியான் பரந்த மார்பிடை
மணியினை வேகடம் வகுக்கு மாறும்போல்
அணிநக ரணிந்தன ரருத்தி மாக்களே.

அருத்தி மாக்கள் - ஆர்வம் மிக்க அந்நகர மக்கள், திணிசுடர் - செறிந்த கிரணங்களுடைய, இரவியை - சூரியனை, திருத்தும் ஆறும் -

சீர்திருத்துதலும், நல் பணி இடை பள்ளியான்-நல்ல ஆதிசேடன்மீது பள்ளி கொள்ளும் பரந்தாமனது, பரந்த மார்பிடை - விரிந்த மார்பிலே உள்ள, மணியினை - கௌஸ்துப மணியை, வேகடம் வகுக்கும் ஆறும்-சாணைபிடித்துத் தூய்தாக்குதலும், போல் = போல, அணிநகர்-(இயல்பிலே) நல்லழகமைந்த அயோத்தி நகரத்தை, அணிந்தனர் - (செயற்கையால்) அலங்கரித்தனர். ஏ: அசை.

இதுமுதல் ஆறு கவிகளால், மகிழ்ச்சி மிக்க நகரமாந்தர் நகரைச் சிறப்பாக அலங்கரித்தது கூறுகின்றார். வைகுந்தத்தின் பெயரான அயோத்தியென்பதைத் தனக்குப் பெயராகப் பெற்றும், அப்பரந்தாமனே தன்னிடம் வந்து தங்கப் பெற்றும் முன்னமே அழகும் சிறப்பும் மிக்க அவ்வயோத்தி நகரைச் செயற்கையாக அலங்கரித்தல் வேண்டுவதில்லையாயினும், நகரமக்கள் தமக்குள்ள ஆர்வமிகுதியால் அவ்வாறு செய்தனர் என்று கூறி, அதற்குப் பொருந்திய உவமை இரண்டைக் கூறினார். வேகடம் வகுத்தல்: "வேக டஞ்செய் மணியென மின்னினார்" (பால. 1027). பணத்தையுடையது பணி; பணம் - படம்.

(பி - ம்.) 1. திருத்துமாறுமப், திருத்துமாறுபைப், திருத்துமாறுபோல், திருத்துவார்களும்.
2. பணியுடைப் பள்ளியான்; பரமன் மார்பினின், பாரமார்பினில்.
3. மணியிடை, வகுக்குமாறுபோல்; செய்யுமாறுபோல்.
4. நகர்திருத்தினர், அடுத்தமாக்களே, அழகு காணவே. (28)

கொடிகள்

126. வெள்ளிய கரியன செய்ய வேறுள
கொள்ளைவான் கொடிநகர்க் குழாங்கொண் டாடுவ
கள்ளவிழ் கோதையான் செல்வங் காணிய
புள்ளெலாந் திருநகர் புகுந்த போன்றவே.

வெள்ளிய - வெண்ணிறமுடையனவும், கரியன - கருநிறமுடையனவும், செய்ய - செந்நிறமுடையனவும், வேறு உள - வேறு உள்ள பல நிறமுடையனவுமாய், நகர் -அந்நகர முழுவதிலும், கொள்ளை கொண்டு-மிக்க கூட்டமாக, ஆடுவ - ஆடியசைகின்றனவான, வான் கொடி-சிறந்த கொடிகளின் பரப்புக்கள், கள் அவிழ் கோதையான் - தேனோடு மலரும் பூமாலையணிந்த இராமபிரானது, செல்வம் காணிய - அரசச் செல்வ மடைதற்குரிய வைபவத்தைக் காணும்பொருட்டு, புள் எலாம்-பல நிறப் பறவைகளெல்லாம், திரு நகர் - செல்வ மிக்க அவ்வயோத்தி நகரத்திலே, புகுந்த போன்ற - வந்து புகுந்திருந்ததை ஒத்தன. ஏ: ஈற்றசை.

பல நிறமுள்ளதுகிற்கொடிகள் மிக உயரத்திலே பறக்கும் தோற்றம் பல நிறமுள்ள பறவைகள் பட்டாபிஷேக வைபவத்தைக் காணுதற்கு

வந்து கூடின வென்னும்படி இருந்தது எனத் தற்குறிப்பேற்றமாகக் கூறுகின்றார்.

கொடி புகுந்த போன்ற எனக் கூட்டுக. வெள்ளிய, கரியன, செய்ய: குறிப்பு வினையாலணையும் பெயர். திரு நகர் - கண்டாரால் விரும்பப்படும் அழகுடைய நகர் என்றலும் ஆம்.

(பி - ம்.) 1. வெள்ளியங்கிரியன, வெள்ளியகிரியெனச்; சிவந்த.
2. கொள்ளைவான் கொடிநிரைக், கொடிநகர், கொடிகளின், கொள்ளை வண் கொடிநிரைக், கொள்ளையாய்க் கொடிநகர்; குமாங்கடோன்றுவ, குமாங்கொடாடுவ, குமா னின்றுடுவ, குமாங்கொண்டோடுவ.
3. கள்ளவிழ் துணரியான், துளவினன், தெரியலான், தொங்கலான்.
4. புள்ளொலா மொருவழி. (29)

127. மங்கையர் குறங்கென வகுத்த வாழைகள்
அங்கவர் கழுத்தெனக் கமுக மார்ந்தன
தங்கொளி முறுவலிற் றாம நான்றன
கொங்கையி னிரைத்தன கனக கும்பமே.

அங்கு - அவ்வயோத்தி நகரத்தில், மங்கையர் குறங்கு என - மகளிரின் துடையைப்போல அழகுடைய, வாழைகள் - வாழை மரங்கள், வகுத்த - (அங்கங்கே) வகையாக நாட்டப்பெற்றன, அவர் கழுத்து என - மகளிரின் கழுத்தைப்போல அழகுடைய, கமுகம் - பாக்கு மரங்கள், ஆர்ந்தன - (அங்கங்கே நாட்டப்பெற்று) நிறைந்தன, ஒளி தங்கு - வெள்ளொளி நிலைத்த, முறுவலின் - (மங்கையரின்) பற்களைப்போல, தாமம் நான்றன - முத்துமாலைகள் இடங்கள் தோறும் தூக்கப்பெற்றன, கொங்கையின் - (மங்கையரின்) தனங்களைப் போல, கனகம் கும்பம் - பொன்னாலாகிய பூர்ண கும்பங்கள், நிரைத்தன - வரிசை வரிசையாக வைக்கப்பெற்றன. ஏகாரம்: ஈற்றசை.

நகரமாந்தரனைவரும் தம் தம் இல்லங்களில் நிகழும் மங்கல நிகழ்ச்சியெனக் கொண்டு, வீடுகளின் முன்னே பந்தல்கள் அமைத்தும், அவற்றில் வாழை, கமுகு மரங்களை அழகுற நாட்டியும், முத்து மாலைகளை அங்கங்கே தொங்கவிட்டும் அலங்கரித்தனர் என்பது இதனாற் கூறப்பட்டது.

வகுத்த, ஆர்ந்தன, நான்றன, நிரைத்தன என்பவை, செயப்படு பொருளைச் செய்ததுபோலக் கூறிய வழுவமைதி. கமுகு அம் சாரியை பெற்றுக் கமுகம் என்றானது. உபமேயப் பொருள்களை உபமான மாக்கிக் கூறுதலின், எதிர் நிலையணி கொண்டது.

(பி - ம்.) 2. கமுகமார்த்தன, கமுக மான்றன, கமுகுமார்ந்தன, கமுகமாக்கினர்.
3. தங்கிய முறுவலித்தாமம்; நான்றென, நாற்றினர்.
4. கொங்கையை நிகர்த்தன, கொங்கைகள் நிகர்த்தன, கொங்கையி னிரைந்தன, கொங்கையினிரைத்தனர்; கனகக்கும்பமே. (30)

128. முதிரொளி யுயிர்த்தன முடுகிக் காலையிற்
கதிரவன் வேறொரு கவின்கொண் டானென
மதிதொட நிவந்துயர் மகர தோரணம்
புதியன வலர்ந்தன புதவ ராசியே.

புதியன - புதியனவாகி, மதி தொட - சந்திர மண்டலத்தைத் தொடும் வண்ணம், நிவந்து உயர் - ஓங்கி உயர்ந்த, மகர தோரணம் அலர்ந்தன - மகர தோரணங்கள் (அமைக்கப்பெற்று) விளங்கியன வாகிய, புதவம் ராசி - (நகர) வாயில்கள், காலையில் கதிரவன் - உதய சூரியன், முடுகி - விரைந்து (அங்கே) வந்து, வேறு ஒரு கவின் கொண்டான் என - வேறோர் அழகிய வடிவங் கொண்டுள்ளா னென்னும்படி, முதிர் ஒளி உயிர்த்தன - மிக்க ஒளியை வீசி விளங்கின. ஏகாரம்: ஈற்றசை.

நகரத்தின் நாற்புறமும் உள்ள கோட்டை வாயில்களில், மணி களின் ஒளி வீசிக்கொண்டு மிகவுயர்ந்தனவாக அமைக்கப்பெற்ற மகர தோரணங்கள், கதிரவனே அவ்வடிவங் கொண்டு அங்கே வந்து பிரகாசிக்கின்றானோ என்னும்படி சிறந்து விளங்கின என்றபடி.

கவின் - அழகு; வடிவத்திற்காயிற்று. நிவந்துயர்: ஒருபொருட் பன்மொழி. புதவம் - வாயில், கதவு என்ற பொருள்களையுடையது; இச்சொல் 'புதவு' எனவும் வழங்கும். ராசி - இராசி, வரிசை; கூட்டம். இங்கே வாயில்களின் பன்மை குறித்து நின்றது.

சில பிரதிகளில் இப்பாடல், 'முத்தினின் முழுநிலா' (130) என்பதன்பின் காணப்படுகின்றது.

(பி - ம்.) 1. உகுத்தன, உதிர்த்தன, உய்த்தன, மிகர்த்தன; முடுகக்காலையில்; மொய்கொள்சோதியைக்.
2. கவின்கொண்டாலென, கவின்கள் காட்டின.
3. மதிகெட; கிவக்தன, நிவந்ததொர், மதிநிவக் துயர்ந்தன.
4. வலக்தன, மலர்ந்தன; புதியவாய் நிலத்தன, நலத்தன, நலத்தவம், புதியவா கலத்தன, புதியவாய் நல்கித்தன்; புட்பராசியே; புதவு ராசியே, புதவிராசியே, புதுவராசியே, புலவராசியே. (31)

129. துனியறு செம்மணித் தூண நீறுதோய்
வனிதையோர் கூறினன் வடிவு காட்டின
புனைதுகி லுறைதொறும் பொலிந்து தோன்றின
பனிபொதி கதிரெனப் பவளத் தூண்களே.

புனை - அலங்கரித்த, துகில் உறைதொறும் - வெள்ளாடையால் ஆகிய உறைகளில் (அடங்கிய), துனி அறு - குற்றமற்ற, செம்மணி தூணம் - மாணிக்கக் கற்களாலான தூண்கள், நீறு தோய் - (திருமேனி முழுதும்) திருநீறு பூசிய, வனிதை ஓர் கூறினன் வடிவு - உமாதேவியை ஒரு பங்கில் உடைய சிவபெருமானது திருவுருவத் தோற்றத்தை,

காட்டின - தோற்றுவித்தன; பவளம் தூண்கள் - (மேற்கண்டவாறு வெள்ளுறையிடப்பெற்ற) செம்பவளத் தூண்கள், பனிபொதி கதிர் என - பனியால் மூடப் பெற்ற கதிரவனைப் போல, பொலிந்து தோன்றின - அழகு பெற்று விளங்கின. ஏகாரம் : ஈற்றசை.

அரண்மனையிலும் பிறவிடங்களிலும் உள்ள மாணிக்கத் தூண் களும், செம்பவளத் தூண்களும் சித்திர வேலைப்பாடமைந்த வெண் சிலை உறைகளிடப்பெற்று அழகுற விளங்கிய தோற்றத்திற்கு, முறையே, முழு நீறு பூசிய சிவபெருமான் திருமேனியையும், பனி மூடிய கதிரவனையும் உவமை கூறினர். தூண்களுக்கு உறையிடுதலை, இக் காலத்தும் பெருஞ் செல்வர் மாளிகைகளிலே காணலாம். சிவபெருமான் மாணிக்க நிறமுடையவன்; "மற்றவ ரறியா மாணிக்க மலையை" (திருவிசைப்பா, 5 : 2.) 'புனைதுகி லுறைதொறும் பொலிந்து' என்பன இடைநிலை விளக்காக நின்று முன்னும் பின்னும் கூட்டப் பெற்றன.

(பி - ம்.) 1. துனியுறு ; தூண நீ னிறம், தூணினீனிறம், தூண்கள் நீறுதோய்.
2. கூற்றினன், கூறினன், பாதியன்; வடிவுமான வெண்.
3. புனைதுகிலணிதொறும், புனைதுகிலுறைகளால்; பொலிந்து தோன்றுவ, பொலிந்து மின்றன, பொதிந்து தோன்றின, பொதிந்து தோன்றுவ.
4. பவளத் தூணெலாம், பவழத்தூண்களே. (32)

வீதிகள்

130. முத்தினுன் முழுநிலா வெறிப்ப மொய்ம்மணிப்
பத்தியி னிளவெயில் பரப்ப நீலத்தின்
தொத்தின மிருள்வரத் தூண்டச் சோதிட
வித்தகர் விரித்தநா ளொத்த வீதியே.

வீதி - (அயோத்தி நகரத்) தெருக்கள், மொய் மணி பத்தியின் - (அங்கங்கே அலங்கரிக்கப்பெற்ற) நெருங்கிய செம்மணி வரிசை களால், இள வெயில் பரப்ப - இளவெயில் போன்ற ஒளியைப் பரப்பவும், தொத்து நீலத்தின் இனம் - கொத்தான நீலமணிகளின் கூட்டம், இருள் வர தூண்ட - இருள் உண்டாகச் செய்யவும், முத்தினுன் - முத்துக்களால், முழுநிலா எறிப்ப - நல்ல நிலவொளி போன்ற வெள்ளொளி வீசவும், சோதிடம் வித்தகர் - சோதிடத்தில் வல்ல வர்கள், விரித்த - (திதி முதலிய ஐந்து அங்கங்களையுடையதாய்) விரித்துச் சொல்லுகிற, நாள் ஒத்த - நாளைப் போன்றனவாயின. ஏ: ஈற்றசை.

ஒரு நாளில், செந்நிறமுடைய கதிரவனொளி, கருநிறமுடைய இருள், வெண்ணிறமுடைய நிலவொளி ஆகிய மூன்றும் அமைந் திருத்தல் போல, வீதிகளிலும் மேற்கூறியவாறு அம்மூன்றும் அமைதலால் 'நாளொத்த' என்றார். "சோதிடவித்தகர் விரித்த'

என்பது நாளுக்கு விசேடணம். 'இளவெயில் பரப்ப' என்றதனால், மணி, இளஞ் சிவப்பு நிறமுடைய பதுமராக மணியெனலாம்.

"நீல மாலைத், தஞ்சுடைய இருள்தழைப்பத் தரள மாங்கே தண்மதியின் நிலாக்காட்டப் பவளந் தன்னால், செஞ்சுடர வெயில் விரிக்கும் அழகார் காழி'' (பெரிய திருமொழி, 3. 3 : 4). பால. 863-உம் அதன் விசேடக் குறிப்பும் பார்க்க.

(பி - ம்.) 1. முத்தினால், முத்திடை; முழுமிலவு, இளநிலா; விரிப்ப, முளைப்ப, முளைத்த.
2. பத்திகள், பத்தியால், பத்தியான்; பரந்த; நீலத்தில்.
3. தொத்தின, தொத்தினால், கொத்துகள்; இருளினை, இருள்வந்து; தொடரச், தொடர்ந்த, குலைப்பச்.
4. விதித்தநாள் ; ஒதவிதியே. (33)

தேர்களும் யானைகளும்

131. ஆடன்மான் றேர்க்குழா மவனி காணிய
வீடெனு முலகின்வீழ் விமானம் போன்றன
ஓடைவெங் கடகளி றுதய மால்வரை
தேடருங் கதிரொடுந் திரிவ போன்றவே.

ஆடல்மான் - ஆடுதலையுடைய குதிரைகள் பூட்டப்பெற்ற, தேர் குழாம் - (வீதிகளிலே ஓடும்) தேர்களின் கூட்டங்கள், அவனி காணிய - இவ்வுலகத்தைக் காணும் பொருட்டு, வீடு எனும் உலகில் - பாவத்தினின்றும் விடுபட்டது என்று சொல்லப்படுகிற சுவர்க்கத்தினின்றும், வீழ் - விரும்பி (அங்கு வந்துள்ள), விமானம் போன்றன - தேவ விமானங்களைப் போன்றிருந்தன; ஓடை - நெற்றிப் பட்டம் அணிந்த, வெம் கடம் களிறு - கொடிய மதங் கொண்ட ஆண் யானைகள், உதயம் மால்வரை - பெருமை பொருந்திய உதயகிரிகள் பல, தேட அரு கதிரொடும் - (உவமை) தேடியறிதற்கரிய சூரியனுடனே, திரிவ போன்ற - (தனித்தனியே) திரிதலை யொத்திருந்தன. ஏ : அசை.

நகர வீதிகளை முன் கவியாற் கூறியவர், அவ்வீதிகளிற் செல்லும் தேர்கள், யானைகள் ஆகியவற்றை இங்கே சிறப்பிக்கின்றார். தேர்கள் பொன்மயமானவை யாதலின் தேவ விமானங்களை உவமித்தார். உருவத்தாற் பெரிய யானைகளுக்கு உதயகிரியையும், அவற்றின் நெற்றியிலணிந்த ஒளிமிக்க பட்டங்களுக்குக் கதிரவனையும் முறையே உவமை கூறினார். உதயகிரிகள் பலவாதலும், அவை தனித்தனியே தம்மிடம் ஒவ்வொரு சூரியனைக் கொண்டு திரிதலும் இன்மையின் இஃது இல்பொருளுவமை. அவனி, ஈண்டு அயோத்தி; தசரதனுக்குப் பூமியே அயோத்தி போன்றது எனவும், தேவரும் அங்கு வந்து தங்க விரும்பும் சிறப்புடையது அந்நகர் எனவும் பாலகாண்டத்துள் ஆசிரியர் கூறியுள்ளமை காண்க. குதிரைகள் ஐந்து வகையான

கதிகளிற் செல்லுதல் தாளத்திற்கியைய ஆடுதல் போன்றிருக்கு மாதலால் ஆடல்மா எனப்பட்டன; அன்றி, அடல் என்பதன் விகாரம் 'ஆடல்' எனக் கொண்டு, வலிமிக்கவை என்றலும் ஆம்.

(பி - ம்.) 1. ஆடன்மாத், ஆடுமான்.
2. விடுசேருலகின்வீழ், வீடு சேருலகின்வாழ், வீடுசேர் விமானங்கீழ்; வீழ்வ போன்றன.
3. ஓடைவெங்கடகரி, ஓடைமாக் கடகளிறு, ஓடைமால்கடகளிறு, ஓடையொண்கடகளிறு.
4. சேடருங்கதிரொடு; திரிவபோன்றன, திரிவபோன்றதே. (34)

132. வளங்கெழு திருநகர் வைகும் வைகலும்
பளிங்குடை நெடுஞ்சுவ ரடுத்த பத்தியில்
கிளர்ந்தெழு சுடர்மணி யிருளைக் கீறலால்
வளர்ந்தில விரிந்தில செக்கர் வானமே.

வளம் கெழு திரு நகர் - வளம் மிக்க அழகிய அவ்வயோத்தி நகரத்திலே, வைகும் வைகலும் - தங்கும் ஒவ்வொரு நாளிலும், பளிங்கு உடை(ய) நெடு சுவர் - (மாளிகைகளின்) பளிங்கினாலான பெரிய சுவர்களில், பத்தியில் அடுத்த - வரிசை வரிசையாகப் பொருந்திய, கிளர்ந்து எழு சுடர் - மேன்மேலெழுந்து வீசும் ஒளியையுடைய, மணி - (பலவகை) மணிகள், இருளை கீறலால் - இருட்டைக் கிழித்து அகற்றி விடுதலால், வளர்ந்தில - (இராப்பொழுதிலும்) இருள் தங்குதலில்லை; செக்கர் வானம் - (அந்திப் பொழுதில் காணப்படும்) செவ்வானமும், விரிந்தில - பரந்து காணப்படுதல் இல்லை. ஏ : ஈற்றசை.

நகரத்து மாளிகைகளெல்லாம் மணிகள் பதித்த பளிங்குச் சுவரையுடைமையின், அவற்றின் பேரொளியால் இரவு பகல் வேறுபாடு காணப்படுதல் இல்லை; இரவு வருதற்கு அறிகுறியாக அந்தியில் தோன்றும் செவ்வானமும் தோன்றுதலில்லை. சுவர்களில் மணிகள் பதிக்கப்பெறாத இடங்களிலும் இப்போது மணிகளாலும் முத்தாலும் அலங்கரித்தல் உடைமையின், எங்கும் எப்போதும் ஒளிவீசுகின்றதென்க. 'இருள்' என்பதனை 'வளர்ந்தில' என்பதனோடுங் கூட்டுக. வளர்தல் - தங்குதல்; "திருவளர் தாமரை" (திருச்சிற். 1).

(பி - ம்.) 1. வளங்கிளர்.
2. பளிங்கிடை; படுத்தபத்தியில், அடுத்த பந்தியில், முத்தின் பந்தியில்.
3. கிளர்ந்தெரி, கிளர்ந்தெறி, கிளர்ந்த செம்மணிச்சுடர், கெழுஞ்சுடர் கெடுமணி; இருளைச் சீறலால்.
4. தளர்ந்தில, தெளிந்தில; பிரிந்தில, பிறந்தில; சக்ரவாகமே, சக்கரவாகமே, சக்கிரவாகமே, சக்கரப்புளே, சக்கரவாளமே, தக்கவானமே. (35)

133. பூம்மழை புனன்மழை புதுமென் சுண்ணத்தின்
தூமமழை தரளத்தின் றோமில வெண்மழை
தாமிழை நெரிதலிற் றகர்ந்த பொன்மழை
மாமழை நிகர்த்தன மாட வீதியே.

மாடம் வீதி - மாளிகைகள் நிறைந்த வீதிகளிலே, பூ மழை - (மகிழ்ச்சியால் மக்கள் தூவும்) பூ மழையும், புனல் மழை - (புழுதி அடங்கத் தெளிக்கும்) வாசநீர் மழையும், தூம் - தூவுகிற, புது மென் சுண்ணத்தின் மழை - புதிய மென்மையான நறுமணச் சுண்ண மழையும், தோம் இல் - குற்றமில்லாத, வெண்தரளத்தின் மழை - வெண் முத்துக்களின் மழையும், இழைதாம் நெரிதலின் - (சன நெருக் கத்தால் அவர்கள் அணிந்துள்ள) ஆபரணங்கள் நெரிதலால், தகர்ந்த பொன்மழை - (அவைகள்) சிதைந்து உண்டான பொன் மழையும் (கூடி), மாமழை நிகர்த்தன - பெரு மழையை ஒத்திருந்தன. ஏ : ஈற்றசை.

நகர மக்கள் தம் உள்ளக் கிளர்ச்சியால் தெருக்களில் பனிநீர் தெளித்தும், பூ, சுண்ணம், முத்து முதலியவற்றை அள்ளித் தூவியும் தம் மகிழ்ச்சி மிகுதியைப் புலப்படுத்தினர் என்க. புது மென் சுண்ணம் என்றது அப்போதே புதிதாகச் செய்யப்பட்ட சுண்ணத்தை. சுண்ணம் - சூர்ணம்; பொடி. பூமழை - தேவர்கள் பொழிந்த கற்பகப் பூமாரி யென்றலும் ஆம்.

'தூவும்' என்ற செய்யுமெனெச்ச ஈற்றுயிர்மெய் கெட்டுத் 'தூம்' என நின்று புணர்ந்தது; தூ மழை - தூய மழை என்றலும் ஆம்.

(பி - ம்.) 1. பூமழை நன்மழை ; புனேமென் சுண்ணத்தின்.
2. தரளத்தின் ஒளியின், தரளத்தின் றெழிலின், தரளத்தின்றெழில, தரளத்தின்றுகளில், தரளவான்றுகிலின்.
3. தாமிடை ; தெரிதலிற், நெரித்தலிற், நெருக்கலிற், நெரிதரத், தருதலிற்சார்ந்த. (36)

134. காரொடு தொடர்மதக் களிறு சென்றன
வாரொடு தொடர்கழன் மைந்த ராமெனத்
தாரொடு நடந்தன பிடிக டாழ்கலைத்
தேரொடு நடக்குமத் தெரிவை மாரினே.

காரொடு தொடர் - மேகத்தோடொத்த, மதம் களிறு - மத யானைகள், வாரொடு தொடர் - வாரோடு கட்டிய, கழல் - வீரக்கழலை யணிந்த, மைந்தர் ஆம் என - வீரஇளைஞரைப் போல, சென்றன - (கம் பீரமாக வீதிகளிலே) போயின; பிடிகள் - பெண் யானைகள், தாழ்கலை - தங்கிய ஆடையால் மறைக்கப்பெற்ற, தேரொடு நடக்கும் - தேர்த் தட்டுப் போன்ற அல்குலுடனே நடக்கின்ற, அ தெரிவைமாரின் - அம்

மகளிரைப் போல, தாரொடு நடந்தன - (கழுத்தில் அணிந்த) மாலை யோடு அழகுநடை யிட்டன. ஏ: அசை.

இளைஞரும் இளமங்கையரும் குதூகலத்தோடு வீதிகளிலே அங்குமிங்கும் திரிதல்போல, ஆண் யானைகளும் பெண் யானைகளும் திரிந்தன; களிறு பெருமிதத்துக்கும், பிடி மகளிர் நடைக்கும் உவமை கூறப்படுவன; இங்கே எதிர்நிலையுவமமாகக் கூறினர்.

காரொடு தொடர் : தொடர், உவம வுருபு. காரொடு தொடர் என்பதனை மதத்துக்கு விசேடணமாக்கினும் அமையும். வார் - கழலைக் கட்டிய வார். தேர் : உவமவாகு பெயர்.

(பி - ம்.) 1. காரொடும்.
2. வாரொடும், வாளொடும்; தொடுகழல், தொடர்புகழ்; மைந்த ராடுகெனத், மைந்தராமெனப்,
3. தாரோடு நடந்தமென், தாரென நடந்தன, போரொடு நடந்தன; பிடிகள் மேகலைத், பிடிகடாழல்குல். (37)

135. ஏய்ந்தெழு செல்வமு மழகு மின்பமும்
தேய்ந்தில வனையது தெரிகி லாமையால்
ஆய்ந்தனர் பெருகவு மமர ரிம்பரிற்
போந்தவர் போந்தில மென்னும் புந்தியால்.

ஏய்ந்து எழு செல்வமும் - (அயோத்தி மாநகரில்) பொருந்தி வளர் கின்ற செல்வச் சிறப்பும், அழகும் - பேரழகும், இன்பமும் - அங்குள்ளார் அடையும் இன்பமும், தேய்ந்தில - (எந்நாளும்) குறைந்ததில்லை; அனையது - அத்தன்மையை, தெரிகிலாமையால் - தெரிந்துகொள்ளா மையினால், இம்பரில் போந்தவர் அமரர் - இங்கே (அயோத்தியில் இராம பட்டாபிஷேகம் காணும்பொருட்டு) வந்தவரான தேவர்கள், போந்திலம் என்னும் புந்தியால் - (அயோத்திக்கு இன்னும்) வந்து சேரவில்லையென்ற எண்ணத்தோடு, பெருகவும் ஆய்ந்தனர் - மிகவும் ஆலோசிக்கலாயினர்.

இராம பட்டாபிஷேக வைபவம் காணும்பொருட்டு அயோத் தியை நாடிவந்த தேவர்கள், அங்கு வந்தும், அந்நகர் செல்வச்சிறப்பு முதலியவற்றால் தமது பொன்னகரைப் போலவே இருந்தமையால், வேறுபாடு காணாதவராய், 'நாம் இன்னும் நமது பொன்னகரிலேயே இருக்கின்றோமோ?' என ஐயமுற்று ஆலோசிக்கலாயினர் என்னுமுகத் தால் அயோத்தியின் பெருமையை மிகுத்துக் காட்டுகின்றார்.

இதுகாறும் அயோத்தி நகரின் செயற்கைச் சிறப்பையும் இயற்கை யழகையும் எடுத்துக் கூறி, மேலே வரலாற்று நிகழ்ச்சி கூறத் தொடங்குகின்றார்.

(பி - ம்.) 1. ஏங்தெழு.
2. தேய்ந்திலதனையது, தேய்ந்தில ரனையது, தேய்ந்திலா வனையது; தெரிகலாமையால், தெரிக்கலாமையில், தெரிக்கிலாமையின், தெரிக லாமையின், தெரிந்திலாமையால்.
3. ஆய்ந்துணர் பெருகவும்; அமரரும்பரில்.
4. போக்தனர், போக்திலர், பொலிந்திலம்; புந்தியார். (38)

கூனியின் தோற்றம்

136. அந்நக ரணிவுறு மமலை வானவர்
பொன்னக ரிதுவெனப் பொலியு மேல்வையில்
இன்னல்செ யிராவண னிழைத்த தீமைபோல்
துன்னருங் கொடுமனக் கூனி தோன்றினாள்.

அ நகர்-அவ்வயோத்தி நகரத்தை, அணிவு உறும் அமலை - அலங் கரிக்கும் ஆரவாரத்தால், வானவர் பொன்நகர் இது என - தேவர்கள் வாழும் சுவர்க்கமே இது என்னும்படி, பொலியும் ஏல்வையில் - சிறந்து விளங்கிய அப்போது, இன்னல்செய் இராவணன் - உலகிற்குத் துன் பத்தைச் செய்யும் இராவணன், இழைத்த தீமை போல் - செய்துள்ள தீமைகள் ஒரு வடிவுகொண்டு வந்ததுபோல, துன்ன அரு — பிறர் அணுகுதற்கரிய, கொடு மனம் - கொடுமை மிக்க மனத்தையுடைய, கூனி - கூனியாகிய மந்தரை யென்பவள், தோன்றினாள் - வெளிப்பட வந்தாள்.

உடற் கூனலோடு உள்ளக் கோணலுமுடைய மந்தரை யென்ப வள், கைகேயியின் தோழி; கைகேயியின் நன்மனத்தைத் திரித்து, அதன்மூலம் இராமபிரான் நாடு துறந்து காடேகுவதற்குக் காரணமான வள்; அவள் செய்கை இராவண சங்காரத்துக்குக் காரணமாயிற்று: எனவே, இராவணன் இழைத்த தீமையே இக்கூனியின் வடிவு கொண்டு வந்து, அவனழிவுக்குரியவற்றைச் செய்யலாயிற்று எனக் காரணகாரியத்துடன் அழகுறக் கூறுகின்றார். 'அந்தப்புரத்தில் எங் கேயோ மறைந்து கிடக்க வேண்டிய இவள், வெளிப்பட வந்தாள்' என்பதுபட, 'கூனி தோன்றினாள்' என நாடகம்போலக் குறிப்பிடு கின்றார். "உள்ளமுங் கோடிய கொடியாள்" (178) என்பர் பின்னும். துன்னரு : தொகுத்தல் விகாரம்.

(பி - ம்.) 1. அணியுறும், அணியுமவ்.
2. பொன்னகரியல்பெனப்; பொலியுமெல்லையில், எல்லையின், எல்லையுள், பொலியுங் காலையில், காலையின், காலையுள்.
3. தீமையால். (39)

அவளது சினமும் செயலும்

137. தோன்றிய கூனியுந் துடிக்கு நெஞ்சினாள்
ஊன்றிய வெகுளியா ளுளைக்கு முள்ளத்தாள்
கான்றெரி நயனத்தாள் கலிக்குஞ் சொல்லினாள்
மூன்றுல கினுக்குமோ ரிடுக்கண் மூட்டுவாள்.

தோன்றிய கூனியும் - வெளிப்படத் தோன்றிய அந்த மந்தரை, மூன்று உலகினுக்கும் - மூவுலகத்தோர்க்கும், ஓர் இடுக்கண் மூட்டு வாள் - (தன் செயலால்) ஒரு பெருந் துன்பமுண்டாக்குபவளாகி, துடிக்கும் நெஞ்சினுள் - துடிதுடிக்கும் நெஞ்சுடையவளாய், ஊன்றிய வெகுளியாள் - (மனத்தில்) நிலைத்த சினமுடையவளாய், உளைக்கும் உள்ளத்தாள் - (அச்சினமானது) குடையும் மனமுடையவளாய், கான்று எரி நயனத்தாள் - சினத் தீயை வெளிப்படுத்தி எரியும் கண்கள் உடையவளாய், கலிக்கும் சொல்லினுள் - உரத்த பேச்சுடையவளாய்.

இதுவும் அடுத்த பாட்டும் குளகம். 'தோன்றிய' என்பது முந்திய பாடலோடு அந்தாதித் தொடை கொண்டது.

வெளிப்பட்டு வந்த கூனி நகரத்தாரின் குதூகலத்தைக் கண்டும், இராம பட்டாபிஷேகச் செய்தியைக் கேட்டும் மிக்க சினங்கொண்டு, நேரே கைகேயி இருக்குமிடம் சென்றடைந்தாள். நகர முழுதும் மகிழ்ச்சியாரவாரத்தோடு இருக்கும்போது, இவள்மட்டும் அதற்கு மாருகச் சினமும் குழப்பமும் உடையவளானுள். காரணம், அடுத்த பாடலிற் பெறப்படும். இவ்விரண்டு பாடல்களாலும் கூனியின் நிலையை விரித்துக் கூறுகின்ருர். கூனியின் செயலால் இராமபிரான் நாடு துறந்து காடு சென்றமை மூவுலகத்தவர்க்கும் மனத்திற் பெருந் துன்பமூட்டுதலால், 'மூவுல கினுக்குமோ ரிடுக்கண் மூட்டுவாள்' என்ருர். ஏனையவை அவள் சினத்தைப் புலப்படுத்துவன.

நெஞ்சினுள், வெகுளியாள், உள்ளத்தாள், நயனத்தாள், சொல் லினுள், மூட்டுவாள் என்ற முற்றுக்கள் எச்சப் பொருளில் வந்தன. கூனியும் : உம்மை, இசை நிறை.

'கூனி, மேனிலை மாடத்தில் ஏறி, நகரம் அலங்கரிக்கப்படுதலையும், மக்களின் மகிழ்ச்சிப் பெருக்கையும் கண்டு, அவற்றிற்குக் கார ணத்தைத் தன்னருகில் இருந்த இராமபிரானுடைய செவிலித்தாயிடம் வினவி, இராமபிரான் முடிசூடவிருக்கும் செய்தியை அறிந்தாள்' என வான்மீகத்துள் கூறப்படுகிறது.

(பி - ம்.) 1. நெஞ்சினள்.

2. வெகுளியள், வெகுளியின்; உலைக்கு முள்ளத்தள், கொதிக்குமுள் ளத்தள், உள்ளத்தான்.

3. கான்றெரி நயனத்தள், தான்றிரி நயனத்தள், நயனத்தாள், தான் றெரி நயனத்தள்; கறிக்குஞ் சொல்லினள், சொல்லினுள், கரிக்குஞ் சொல்லினள், கலிக்குஞ் சொல்லினள், சவிக்குஞ் சொல்லினள்.

4. மூன்றுலகிற்குமோர், மூன்றுலகுக்குமோர், மூன்றுலகினுக்குமல்; இறுதி மூட்டுவாள், உறுத மூட்டுவாள். (40)

138. தொண்டைவாய்க் கேகயன் றோகை கோயின்மேல்
மண்டினள் வெகுளியின் மடித்த வாயினள்
பண்டைநா ளிராகவன் பாணி வில்லுமிழ்
உண்டையுண் டதனைத்தன் னுள்ளத் துள்ளுவாள்.

(அந்தக் கூனி) பண்டை நாள் - முன்னாளில், இராகவன் பாணி - இராமபிரான் கையில் உள்ள, வில் உமிழ் உண்டை - வில்லானது வெளிப்படுத்திய மண்ணுருண்டையால், உண்டதனை - (தான்) அடி யுண்ட நிகழ்ச்சியை, தன் உள்ளத்து உள்ளுவாள் - தன் மனத்தில் அப்போது நினைவுகூர்பவளாய், வெகுளியின் - அதனாலுண்டான வெகுளியால், மடித்த வாயினள் - (அவ்வெகுளி) புலப்படும் வகை யில்) கீழுதட்டை மடித்தவளாய், தொண்டைவாய் - கொவ்வைக் கனி போன்ற (சிவந்த) அதரங்களையுடைய, கேகயன் தோகை - கேகய ராசன் மகளான மயில்போலும் சாயலுடைய கைகேயியின், கோயில் மேல் - அரண்மனையிடத்து, மண்டினள் - விரைந்து சென்றாள்.

முந்திய பாடலும் இதுவும் குளகமாய், இப்பாடலில் உள்ள 'மண் டினள்' என்னும் முற்றோடு முடிந்தன. வாயினள், உள்ளுவாள் என்பன முற்றெச்சம்.

இதனுள், கூனியின் கோபத்துக்குக் காரணம் குறிக்கப்பட்டது. இராமபிரான் இளமைப் பருவத்தில், வில்லிலே மண்ணுண்டையை வைத்தெய்தலை விளையாட்டாகச் செய்துவருங்கால், ஒரு நாள் தலையில் நீர்க்குடத்தோடு வந்த கூனியைக் கண்டு, இவள் நம் அரண்மனை வேலைக்காரிதானே என்ற உரிமையோடு விளையாட்டாக அவள் கூன லின்மேல் மண்ணுண்டையை ஏவ, அதனால் அவள் நீர்க்குடம் கீழே விழுந்து உடையவும், உடன் வந்த மகளிரும் பிறரும் நகையாடவும் இடமாயிற்று. அதனால் கூனி அவமானமுற்று மிக்க சினங்கொண்ட வளாய், அரசகுமாரனாதலின் தான் அப்போது நேரே ஒன்றும் சொல்லவியலாமல், மனத்தில் கறுவுடன் காலம் பார்த்திருந்து, இப் போது பெருந் தீங்கிழைக்கத் துணிந்தாள். இராமபிரான் நாடு துறந்து செல்லுதலாலேயே இராவண சங்காரம் நடைபெறுமாதலால், அதன் பொருட்டுத் தேவர்களால் அனுப்பப்பெற்றவள் இக்கூனி என்பது கதை. இது வான்மீகத்தில் இல்லையாயினும் ஆழ்வார்கள் முதலிய ஆன்றோர்கள் வாக்கில் வந்துள்ளது. அதனால் கம்பநாடர் இதனைப் பயன்படுத்திக்கொண்டனர் போலும். "கூனே சிதைய வுண்டை வில் நிறத்திற் றெறித்தாய்" (திருவாய்மொழி, 1·5 : 5), "கூனகம் புகத்தெறித்த கொற்றவில்லி", "கொண்டைகொண்ட கோதைமீது தேனுலாவு கூனிகூன், உண்டைகொண் டரங்கவோட்டி யுண்மகிழ்ந்த நாதனூர்" (திருச்சந்த. 30, 49) என வந்துள்ளன காண்க.

பண்டை நாள் என்றது, இராகவன் இளமைப் பருவக் காலத்தைக் குறித்தது. இராகவன் - இரகுவமிசத்திற் பிறந்தோன். பாணி - கை.

உண்டையுண்டல் - உண்டையால் அடிபடுதல். தொண்டை,தோகை: ஆகுபெயர்கள். மேல்: ஏழனுருபு. கூனியின் கோபாவேசத்தைக் குறிக்க 'மண்டினுள்' என்ருர்.

(பி - ம்.) 1. கைகயன்ரேகை; கோயில்வாய், கோயிலின்.
2. மண்டினள்; வெகுளியால்; வாயினள்.
3. வில்லூரும்.
4. உண்டையுண்டது தனது, உண்டையான் மெலிந்ததை; உள்ளத் துள்ளினுள், உள்ளத்துன்னுவாள். (41)

139. நாற்கடற் படுமணி நளினம் பூத்ததோர்
பாற்கடற் படுதிரைப் பவள வல்லியே
போற்கடைக் கண்ணருள் பொழியப் பொங்கணை
மேற்கிடந் தாடனை விரைவி னெய்தினுள்.

நால் கடல் படுமணி - (பூமியைச் சூழ்ந்து) நான்கு புறத்தும் உள்ள கடலிலே உண்டான மணிகளுடனே, நளினம் பூத்தது - தாமரை மலரப்பெற்றதும், ஓர் - ஒப்பற்ற, பால்கடல் படுதிரை - திருப் பாற்கடலில் உண்டாகும் அலையினிடத்தே உள்ளதுமாகிய, பவள வல்லியேபோல் - ஒரு பவளக்கொடி போல, பொங்கு அணைமேல் - உயர்ந்து விளங்கும் ஒரு படுக்கையின்மேல், கடைகண் அருள் பொழிய - தன் கடைக் கண்கள் அருளை வெளிப்படுத்த, கிடந்தாள் தனை - சயனித்திருந்தவளாகிய கைகேயியை, விரைவின் எய்தினுள் - விரைந்து சென்று அணுகினுள்.

கூனியென்ற எழுவாய் வருவித்துக்கொள்க.

முன் கவியில், கூனி கைகேயியின் அரண்மனையைக் குறித்து 'மண்டினுள்' என அவள் விரைவு குறித்தார்; அவ்வாறு மண்டியவள் கைகேயி இருந்தவிடத்தைச் சென்றடைந்தாள் என இங்கே கூறினுர். கூனி சென்றபோது கைகேயி துயில்கொண்டிருந்த நிலையை அழகுற வருணிக்கின்ருர். பூத்ததாகிய பவளவல்லி, படுதிரையில் உள்ள பவள வல்லி என்க. கடலில் மணிகள் உண்டாதல், 'இரத்தினுகரம்' என்று அதற்குப் பெயருண்மையால் அறியலாம். கைகேயி படுத்திருந்த பஞ்ச சயனம்,பாற்கடல் படுதிரை; பவளவல்லி, கைகேயியின் மேனி; நளினம், அவளுடைய முகம், கை, கால் ஆகிய அவயவங்கள்; நாற் கடல் படுமணி, அவளணிந்திருந்த ஆபரணங்கள் எனப் பொருத்திக் காண்க. கைகேயி இயல்பிலே அருட்குணமுடையாள் என்பது புலப் பட, 'கடைக்கண் அருள்பொழியக் கிடந்தாள்' என்ருர். அவளதருட் பண்பு கூனியின் சொல்லாற்றலாலே திரிந்தது என்பது மேலே பெறப் படும்.

"அரக்கர் பாவமும் அல்லவ ரியற்றிய அறமும், துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்" (173) என மேலே வருதலுங் காண்க.

கிடந்தாடனை : தன், சாரியை.

பாற்கடல்.........வல்லியேபோல்: "பாற்கடல் முளைத்ததோர் பவளப் பூங்கொடி, போற்சுடர்ந் திலங்கொளிப் பொன்செய் கோதை" (சீவக. 2413).

(பி-ம்.) 1. பருமணி; களினம்பூத்தன, களினம் பூத்துவெண்.
2. பாற்கடற் படர்திரைப், பாற்கடலிடையுறும்.
3. கடைக்கண்ணளி, கடைக்கண்ணொளி, கடற்கண்ணருள்; பொழியப்பூவணை, பெர்லியப் பொங்கணை.
4. மேற்கிடந்தாளையே. (42)

கூனி கைகேயியைத் துயிலுணர்த்துதல்

140. எய்தியக் கேகயன் மடந்தை யேடவிழ்
நொய்தலர் தாமரை நோற்ற நோன்பினாற்
செய்தபே ருவமைசால் செம்பொற் சீறடி
கைகளிற் றீண்டினள் காலக் கோளனாள்.

காலம் கோள் அன்னாள் - நெடுங்காலத்தை உண்டாக்கும் தீய கோள் (கிரகம்) போன்றவளாகிய அக்கூனி, எய்தி - (கைகேயியை) அணுகி, அ கேகயன் மடந்தை - கேகயராசன் மகளாகிய அக் கைகேயியின், ஏடு அவிழ் - இதழ்கள் முறுக்கவிழ்ந்ததும், நொய்து அலர் - மென்மையாக மலர்ந்ததுமாகிய, தாமரை - தாமரை மலர், நோற்ற நோன்பினால் - தான் செய்த தவத்தினால், செய்த - பெற்ற, பேர் உவமைசால் - சிறந்த உவமையாதற்குப் பொருந்திய, செம்பொன் சிறு அடி - நல்ல பொன்னணிகள் பூண்ட சிறிய பாதத்தை, கைகளின் தீண்டினள் - தன் கைகளால் தொட்டாள்.

மடந்தையின் சீறடி, உவமைசால் செம்பொற் சீறடி எனத் தனித்தனி இயைக்க. அடி சிறுத்திருத்தல் பெண்டிர்க்கழகு. இப் பாடலும் அந்தாதித் தொடை கொண்டது. 'தீண்டினாள்' என்னும் சொற்கிடக்கை பாம்பு தீண்டிற்று என்னும் வழக்கிற்கியைய, இராகு கேதுக்களுள் ஒருவரைக் குறித்த தென்றலும் பொருந்தும். கூனியாகிய கோள் கைகேயியைத் தீண்டியது, தயரதன் இறத்தற்கும் வேறு பல தீமைகட்கும் காரணமாகியது. உறங்குவோரை எழுப்புவோர், அடி தொட்டு எழுப்புதல் வழக்கு; "எல்லாழித் தேரிரவி யிளங்கரத்தா லடிவருடி யனந்தல் தீர்ப்ப" (பால. 708.) தாமரை மலர் தவங்கிடந்து கைகேயியின் சிற்றடிக்குவமையாகும் பேறு பெற்றதென அவளடிகளைச் சிறப்பித்தார்.

(பி-ம்.) 1. எய்திய, செப்பவாய்க்; சேடவிழ்.
2. நொய்யதாம்.
3. செய்தபேருவமைத்தாம், செய்தவப் பெருமைசால், செய்தவப் பெருமைத்தாம்; சீரடி.
4. திண்டினள்; கோளன்னாள், கோளினாள். (43)

மந்தரை கூறுதல்

141\. தீண்டலு முணர்ந்தவத் தெய்வக் கற்பினள்
நீண்டகண் ணனந்தலு நீங்கு கிற்றிலள்
மூண்டெழு பெரும்பழி முடிக்கும் வல்வினை
தூண்டிடக் கட்டுரை சொல்லன் மேயினள்.

தீண்டலும் - (கூனி தன் கைகளால்) தொட்ட அளவிலே, உணர்ந்த - துயில் நீத்த, அ - அந்த, தெய்வம் கற்பினள் - தெய்வத் தன்மை வாய்ந்த (அருந்ததி போன்ற) கற்பினையுடைய கைகேயி, நீண்ட கண் - (தன்னுடைய) காதளவும் நீண்ட கண்களிலே, அனந்தலும் நீங்குகிற்றிலள் - உறக்க மயக்கமும் நீங்கியவளாகவில்லை; (அந் நிலையிலேயே கூனி) மூண்டு எழு பெரு பழி - (பின்னே) தீப்போல மூண்டு வரவிருக்கும் பெரிய பழிக்கிடமான செயலை, முடிக்கும் - செய்து முடித்தற்குரிய, வல்வினை தூண்டிட - வலிய தீவினை (தன்னைத்) தூண்டுதலால், கட்டுரை - தன்னுடைய சொற்களை, சொல்லல் மேயினள் - கைகேயியிடம் சொல்லத் தொடங்கினள்.

கூனி, தன் ஆவேச வேகத்தினால், கைகேயி துயிலுணர்ந்தும் நன்கு தெளியாத நிலையில் அவளிடம் தன் கருத்தை வெளியிடத் துணிந்து சொல்லலானாள். இப் பாடலும் அந்தாதித் தொடை கொண்டது.

கூனியின் சொற்கள் கைகேயியின் நன்மனத்தையும் திரித்து, இராமபிரான் நாடு துறத்தலாகிய பெருந்தீவினையை வருவிக்கக் காரணமாயிருந்தமையின், 'பெரும் பழி முடிக்கும் வல்வினை தூண்டிடக் கட்டுரை சொன்னாள்' என்றார். தூண்டிட: இடு, துணைவினை. பழி: ஆகுபெயர்.

(பி - ம்.) 1. உவந்தவத்.
2. நீண்டகணனந்தரும், அனந்தரின்; நீங்குகிற்கிலாள், நீங்ககிற்கிலாள், நீங்ககிற்றிலள்.
3. மூண்டெழும்; வெவ்வினை.
4. சொல்லன்மேவினள், சொல்லமேயினள், சொல்லின்மேயினள். (44)

142\. அணங்குவாள் விடவரா வணுகு மெல்லையும்
குணங்கெடா தொளிவிரி குளிர்வெண் டிங்கள்போல்
பிணங்குவான் பேரிடர் பிணிக்க நண்ணவும்
உணங்குவா யல்லைநீ யுறங்கு வாயென்றாள்.

(கூனி கைகேயியை நோக்கி) அணங்கு - துன்பந் தருகின்ற, வாள்விடம் - கொடிய விடம் பொருந்திய, அரா - இராகுவென்னும் பாம்பு, அணுகும் எல்லையும் - தன்னைப் பற்ற வருங்காலத்தும், குணம் கெடாது - தனது (குளிர்ந்த) இயல்பு கெடாமல், ஒளி விரி - ஒளி

வீசுகின்ற, குளிர் வெண் திங்கள்போல் - குளிர்ச்சியான வெள்ளிய சந்திரனைப்போல, பிணங்கு - (உனது நன்மைக்கு) மாறுபட்ட, வான் பேர் இடர் - மிகப் பெருந்துன்பமானது, பிணிக்க நண்ணவும் - (உன்னைப்) பிடிக்க வரும்போதும், நீ—, உணங்குவாய் அல்லை - சிறிதும் வருந்துகின்றாயல்லை; உறங்குவாய் - (கவலையற்று) உறங்கு கின்றாய்; என்றாள்—.

உம்மைகள், உயர்வு சிறப்பு. அணங்குவாள்......திங்கள் போல்: "ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை, அங்கண்மா ஞாலம் விளக்குறூஉந் திங்கள்போல்" (நாலடி. 148).

(பி - ம்.) 1. அணங்குவான், அனுதுமேல்வையும், அனுகும் வேலையும், அனுகு மேல்வயின்.
2. ஒளிர்விரி; கொழுவெண்.
3. பிணங்குவான், பிணங்குமா.
4. உணங்குவாயல்ல நீ, உணங்குவாயன்றி வேறு. (45)

கைகேயி கூறுதல்

143. வெவ்விட மனையவள் விளம்ப வேற்கணாள்
தெவ்வடு சிலைக்கையென் சிறுவர் செவ்வியர்
அவ்வவர் துறைதொறு மறந்தி றம்பலர்
எவ்விட ரெனக்குவந் தடுப்ப தீங்கெனா.

வெவ்விடம் அனையவள் - கொடிய விடம் போன்றவளாகிய கூனி, விளம்ப - (மேற்கண்டவாறு) சொல்ல, (அது கேட்ட) வேல் கண்ணாள் - வேல்போலுங் கண்களையுடைய கைகேயி (கூனியை நோக்கி), தெவ் அடு - பகையைத் தொலைக்கத் தக்க, சிலை கை - வில் தாங்கிய கைகளையுடைய, என் சிறுவர் - என் மக்கள் (நால்வரும்), செவ்வியர் - உடல் நலமுடையோர், அவ் அவர் துறை தொறும் - அவரவர்க்குரிய துறைகளிலெல்லாம், அறம் திறம்பலர் - தருமம் தவறாது நடப்பவராவர்; (அங்ஙனமாக), ஈங்கு - இங்கே, எவ் இடர் எனக்கு வந்து அடுப்பது - எத்தகைய துன்பம் எனக்கு வந்து பொருந்துவதாகும்; எனா - என்று சொல்லி.

எனா என்னும் எச்சம் அடுத்த பாட்டின் ஈற்றிலுள்ள 'என்றாள்' என்பதனோடு முடியும். வேற்கணாள் : தொகுத்தல் விகாரம்.

'உனக்கு மிகப் பெருந் துன்பம் வரவிருக்கவும், நீ சிறிதும் கவலையின்றி உறங்குகின்றாயே' என்ற கூனிக்கு விடையாகக் கைகேயி, தனக்கு எத்தகைய துன்பமும் வரக் காரணமில்லை யென்கின்றாள். துன்பம் வருவதாயின், பகைவராலோ, தன்னைச் சார்ந்தோர் அறநெறி திரிதலாலோ வரக்கூடும். தன் மக்கள் அறநெறி திறம்பாமையோடு பகையை எளிதில் வென்று அழிக்கும் ஆற்றலும் உடையரா யிருத்தலால் துன்பம் இங்கே வருதற்கிடமில்லை யென்று கூனியின்

கூற்றை மறுத்தாள். கைகேயி, பரதன் ஒருவனையே பெற்றவளாயினும், அவனை யொப்ப ஏனை மூவரிடத்தும் வேறுபாடில்லாத அன்புடையவ ளென்ற அவளது நல்லியல்பு புலனாகின்றது.

வெவ்விட மனையவள்: "நஞ்சு தீர்க்கினுந் தீர்கிலா ததுநலிந் தென்ன" (165).

(பி - ம்.) 1. வேற்கண்ணாள்.
2. தெவ்வரு சிலைக்கையென், தெவ்வடுஞ் சிலைக்கையெம்; மைந்தர் செவ்வியர்.
3. அவ்வவை; திறம்பலர், திறம்பிலார்.
4. எவ்விடரெமக்கு; அடுப்ப தீண்டெனா, அடுப்ப தின்டென்றாள், அடுப்பதின்றென்றாள், அடுப்பதின்றெனா, அடுப்பதிங்கெனா, அடுப்ப திங்கென்றாள். (46)

144. பராவரும் புதல்வரைப் பயக்க யாவரும்
உராவருந் துயரைவிட் டுறுதி காண்பரால்
விராவரும் புவிக்கெலாம் வேத மேயன
இராமனைப் பயந்தவெற் கிடருண் டோவென்றாள்.

(மேலும் கூறுகின்ற கைகேயி), யாவரும் - (உலகத்திலுள்ள) எத்தகையோரும், பராவு - அனைவரும் புகழ்தற் கொத்த, அரு புதல் வரை பயக்க - சிறந்த புதல்வரைப் பெறுதலால், உராவு - வலியனவான, அரு துயரை விட்டு - (இம்மை மறுமையிரண்டிலும் வரத்தக்க) அரிய துன்பங்களின் நீங்கி, உறுதி காண்பர் - நன்மை எய்துவர்; (அங்ஙனமாக), விராவு - (பல்வகை உயிர்களும்) கலந்து வாழ்கிற, அரு புவிக்கு எல்லாம் - அரிய எல்லாவுலகங்களுக்கும், வேதமே அன்ன - வேதமே போன்ற (நீதியிற் சிறந்துள்ள) இராமனை பயந்த எற்கு - இராமனை மகனாகப் பெற்ற எனக்கு, இடர் உண்டோ - துன்பமும் வருவதுண்டோ? என்றாள்—.

'உலகத்தில் பொதுவாகவே, நற்புதல்வரைப் பெற்றோர் யாவரும், இம்மையில் புகழ் முதலிய நற்பயன்களைப் பெறுதலோடு, மறுமையில் நரகத் துன்பத்தினின்று விடுபட்டோருமாவர்; நானோ, உலக மெல்லாம் கொண்டாடும் உயர்குணமிக்க இராமனையே மகனாகப் பெற்றவள்; எனக்கு எத்தகைய துன்பமும் வருவதற்கிடமில்லை' என உறுதியாகக் கூறுகின்றாள் கைகேயி. இராமபிரானிடம் அவள் கொண்டுள்ள தூய தாய்மையன்பு இதனாற் புலப்படுகின்றது. "தாய்கையின் வளர்ந்திலன் வளர்த்தது தவத்தால், கேகயன் மடந்தை" என ஊரவர் கூற்றாகவும், "வள்ளலிராமன் உன் மைந்தன் ஆணை" எனத் தயரதன் கூற்றாகவும் மேலே வருவனவுங் காண்க. 143-44 - ஆம் பாடல்களில் உள்ள கைகேயி கூற்றுக்கு மறுப்பாகக் கூனி கூறியதை, 167-68 - ஆம் பாடல்களிற் காண்க. இன்னவாறு மக்கள் ஒழுக வேண்டுமென்பதை விதிப்பன

விதித்து விலக்குவன விலக்கிக் காட்டுவது வேதம்; இராமனும் தன்னுடைய ஒழுக்கத்தால் இன்னவாறு ஒழுகவேண்டுமென்று காட்டினான். வேதம்மேற்கோளாதல் போல இராமனது ஒழுக்கமும் மேற்கோளாயிற்று. ஆதலின், 'வேதமேயன இராமன்' என்றாள்.

பராவுதல் - துதித்தல்; புகழ்தல். பயக்க: செயவெனெச்சம் காரணப் பொருளில் வந்தது. உராவு: உரவு என்பது எதுகை நோக்கி நீண்டது. ஆல்: அசை. வேதமே: ஏகாரம், தேற்றம்.

புதல்வரால் இம்மை மறுமைப் பயன் பெறுதல்: "இம்மை யுலகத் திசையொடும் விளங்கி, மறுமை யுலகமு மறுவின் றெய்துப, சிறுவர்ப் பயந்த செம்மலோர்" (அகநா. 66); இராமனுக்கு வேதம்: "சுருதி யன்ன சேவகன் சிருமுன்னம்" (சுந்தர. 20).

(பி - ம்.) 1. பராவரு; பயந்த.
2. உராவருந் துயரம், உராவரு துயரம்; காண்பரேல், காண்குவார்.
3. விராவரு; வேதமேயென, வேதமேயெனும்.
4. இராகவற் பயந்தவெற்கு, இடருண்டாகுமோ. (47)

கூனி கூறுதல்

145. ஆழ்ந்தபே ரன்பினா ளனைய கூறலும்
சூழ்ந்ததீ வினைநிகர் கூனி சொல்லுவாள்
வீழ்ந்தது நின்னலந் திருவும் வீந்தது
வாழ்ந்தனள் கோசலை மதியி னாலென்றாள்.

ஆழ்ந்தபேர் அன்பினாள் - (இராமபிரானிடத்து) ஆழ்ந்த பெரிய அன்பினையுடைய கைகேயி, அனைய கூறலும் - (முற்கூறியவாறு) அவற்றைச் சொல்லுதலும், சூழ்ந்த - (அவளை விடாது) சூழ்ந்து கொண்ட, தீவினை நிகர் கூனி - தீவினையை யொத்தவளான கூனி, சொல்லுவாள் - (மீண்டும்) சொல்பவளாய், நின் நலம் வீழ்ந்தது - உனக்கு வரும் நன்மை யனைத்தும் கெட்டது; திருவும் வீந்தது - நின் செல்வமும் அழிந்ததாயிற்று; கோசலை —, மதியினால் வாழ்ந்தனள் - தன் அறிவால் நல்வாழ்வு பெற்றனள்; என்றாள் —.

இங்கும் கைகேயியின் அன்பின் திறத்தைப் புலப்படுத்தினார். "மற்றொன்று சூழினும் தான்முந் துறும்" என்றவாறு, தன் பயனைத் தப்பாது தரும் தீவினைபோலக் கைகேயியின் மனத்தைத் திரித்து அவள் தன் கருத்துக்கியையும்படி செய்ததனால் கூனியை, 'சூழ்ந்த தீவினை நிகர் கூனி' என்றார். அவள் சொல்லாற்றல் புலப்பட வீழ்ந்தது, வீந்தது, வாழ்ந்தனள் என வினைமுற்றுக்களை முன்னர் வைத்து இறந்த காலத்தாலுங் கூறினார். துணிவுபற்றி இறந்த காலத்தாற் சொன்னாள். 'நின் மாற்றாளாகிய கோசலை தன் மதிவன்மையினால் சிறந்த வாழ்வு பெற, நீ மதிகெட்டு நின் நலமெல்லாம் இழக்கின்றனை'

எனக் கைகேயியின் மனத்தில் உறுத்தும்வண்ணம் உரையாடு கின்றாள் கூனி. பெண் ஒருத்தி, எத்துணை நல்லவளாயினும், தன் மாற்றாளுக்கு வாழ்வும் தனக்குத் தாழ்வும் வருதலைப் பொருள்; இஃது உலக இயல்பு; எனவே, கைகேயியின் மனத்தை மாற்றுதற்குச் சிறந்த உபாயமாக இவ்வாறு கூறினாள்.

ஆழ்ந்த பேரன்பினாள் : "ஆயபே ரன்பெனு மளக்கர்" (149).

(பி - ம்.) 3. நன்னலம்; விழ்ந்தது, வீய்ந்தது.
4. வாழ்ந்தது; மதியினாள். (48)

கோசலையின் வாழ்வுச் சிறப்பு யாதெனக் கைகேயி வினவல்

146. அன்னசொ லனையவ ளுரைப்ப வாயிழை
மன்னவர் மன்னனேற் கணவன் மைந்தனேற்
பன்னரும் பெரும்புகழ்ப் பரதன் பார்தனில்
என்னிதன் மேலவட் கெய்தும் வாழ்வென்றாள்.

அனையவள் - அக் கூனியானவள், அன்ன சொல் உரைப்ப - அந்த வார்த்தைகளைச் சொல்ல, ஆய் இழை - ஆராய்ந்தெடுத்த ஆபர ணங்களை அணிந்த கைகேயி, (கூனியை நோக்கி), கணவன் - அவள் கணவன், மன்னவர் மன்னனேல் - சக்கரவர்த்தியானால், பன்ன அரு பெரு புகழ் - (அளவிட்டுச்) சொல்லுதற்கரிய மிக்க புகழையுடைய, பரதன் - பரதனுவான், மைந்தனேல் - புதல்வனானால், பார்தனில் - இவ் வுலகத்தில், இதன்மேல் - இந்தச் சிறப்பினும் மேலாக, அவட்கு எய்தும் வாழ்வு என் - அந்தக் கோசலைக்குக் கிட்டும் வாழ்வு யாதுளது? என்றாள்—.

'தயரதனைக் கணவனாகவும் பரதனை மைந்தனாகவும் பெற்ற பெருவாழ்வை இப்பொழுதே உடைய கோசலைக்கு இதனினும் பெருவாழ்வு இனிமேல் என்ன வரப்போகிறது?' என்றாள். இதனால் கைகேயி இராமனையே தன் மகனாகவும் பரதனைக் கோசலையின் மகனாகவும் எண்ணியிருக்கும் உளப்பாங்கு தெரியவரும்.

(பி - ம்.) 1. அன்னவளவ்வுரை, அன்னவ ளன்னசொல், அன்னவளனைய சொல்.
2. மன்னவர் மன்னனென், மன்னவர் மன்னனேல், மன்னவர் மன்னவன்; இராமன்.
3. பன்னிரும்; பார்தனித்து, பாரதில்.
4. என்னதன் மேலவட்கு, என்னிதன் மேலும் வந்து, இன்னதின்மேலும் வந்து; எப்துவாழ் வென்றாள், ஏது வாழ்வென்றாள். (49)

கூனி கூறுதல்

147. ஆடவர் நகையுற வாண்மை மாசுறத்
தாடகை யெனும்பெயர்த் தைய லாள்படக்
கோடிய வரிசிலை யிராமன் கோமுடி
சூடுவ னாளைவாழ் விதெனச் சொல்லினாள்.

ஆடவர் நகை உற - ஆண் மக்கள் (வீரர்) எள்ளி நகைக்கவும், ஆண்மை மாசுஉற - ஆண்மை இழுக்கு அடையவும், தாடகை எனும் பெயர் தையலாள்பட - தாடகை யென்னும் பெயருடைய ஒரு பெண் அழியும்படி, கோடிய - வளைந்த, வரி சிலை - கட்டமைந்த வில்லைத் தாங்கிய, இராமன்—, நாளை—, கோ முடி சூடுவன் - அரசுக் குரிய முடியைச் சூட இருக்கின்றான்; வாழ்வு இது என - கோசலைக்கு வரும் பெருவாழ்வு இதுவே என்று, சொல்லினள் - (கூனி) சொன்னாள்.

கோசலையின் வாழ்வு எவ்வகையில் சிறந்தது என வினவிய கைகேயிக்கு, 'அவள் மகன் இராமன் நாளை முடிசூடப் போகின்றான்; அதனால் அவள் வாழ்வு சிறக்கும்' எனச் சொல்லவந்த கூனி, 'இராமன் முதல் முதலாகச் செய்த கன்னிப் போரில் ஆண்மை என்ற பண்புக்கே ஒரு மாசு வந்து பொருந்தும்படி, ஒரு பெண்ணைக் கொன்று பழியேற்றவன்; முடி சூடுதற்குத் தகுதியற்றவன்; அத்தகையவன் நாளை முடிசூடுவது உறுதியாகிவிட்டது' என்று, இராமபிரானது ஆண்மைக்கொரு குறையைக் கற்பித்துக் கூறு கின்றாள். தாடகை வதத்தின் உண்மைத் தன்மை உலகறிந்து போற்றப்படுவதொன்றாயினும், இவள் தன் கோடிய மதியால் அதற் கொரு மாசு கற்பிக்கின்றாள். 'முதற் போரிலேயே நாணாது பெண்ணைக் கொன்றவன், பெண்பாலாரிடத்து இரங்கும் தன்மையுடையவனாகான்; அதனால் அவன் முடி புனைந்து அரசெய்தியபின், உனக்கும் கேடு சூழ்தல் கூடும்' என்ற கருத்துப்படக் கூறி, கைகேயியின் மனம் திரியும் வகை சூழ்கின்றாள். முன்னே 'வாழ்ந்தனள் கோசலை மதியினால்' (145) என்றும், மேலே, 'மறந்திலள் கோசலை யுறுதி' (153) என்றும் கோசலை தன் மகன் அரசெய்துதலை உறுதியாக்கிக் கொண்டனள், நீ அஃதின்றித் தாழ்வடைய இருக்கின்றாய் என்பதனைச் சுட்டுதலும் நோக்கற்பாலது.

முதல் முதலாகப் போரில் இராமன் கையில் வளைந்தது பெண் கொலைக்கே என்பாள், 'தையலாள் படக் கோடிய வரிசிலை' என்றாள். 'கோடிய' என்பதனை இராமனுக்கு அடைமொழியாக்கி, 'ஆண்மையில் திறம்பிய இராமன்' என்றலும் ஆம்.

(பி - ம்.) 1. நகைசெய; மாசுணத்.
4. சூடுவானுளை, சூடுநாள்நாளை; இதுவெனச் சொல்லினள், இதுவெனச் சொனாள், என்னச் சொல்லினன். (50)

கைகேயியின் மகிழ்ச்சி

148. மாற்றமஃ துரைசெய மங்கை யுள்ளமும்
ஆற்றல்சால் கோசலை யறிவு மொத்தவால்
வேற்றுமை யுற்றிலள் வீரன் றாதைபுக்
கேற்றவ ளிதயத்தி னிருக்க வேகொலாம்.

மாற்றம் அஃது உரைசெய—அந்த வார்த்தையைக் கூனி சொல்ல, மங்கை உள்ளமும்-(அதைக் கேட்ட) கைகேயியின் மனமும், ஆற்றல்சால் கோசலை அறிவும் - கற்புவலிமை மிக்க கௌசலையின் அன்புணர்ச்சியும், ஒத்த - ஒத்திருந்தன; ஆல்: அசை; வேற்றுமை உற்றிலள் - (கைகேயி) மன வேறுபாடெய்தினாளல்லள்; (அவ்வாறாகிய தன்மை) வீரன் தாதை - இரகுவீரனுடைய தந்தையான சக்கரவர்த்தி, அவள் இதயத்தின் புக்கு - அவள் மனத்திலே புகுந்து, ஏற்று - (அதனைத் தனக்கு இருப்பிடமாகக்) கொண்டு, இருக்கவே கொல் ஆம் - இருத்தலாலேயே போலும்!

இராமபிரான் முடி சூடுதலைக் கூனி தன் மன வேறுபாட்டாலே வேறு வகையாகக் கூறினும், கைகேயி இராமபிரான்பால் உண்மையன்பு உடையளாதலோடு தசரதன் மகிழ்ச்சியையே தன் மகிழ்ச்சியாகக் கொள்ளுதலும் உடைமையின், அச்செய்தி கேட்டு மகிழ்வுற்றனளே யன்றி மனம் திரிந்தாளில்லை. அவள், கோசலையினும் இளையளாய், சக்கரவர்த்தியின் தனி அன்புக்குரியவளானமையின் 'மங்கை' என்ற சொல்லால் அவளைக் குறித்தார். இராமபிரான் முடிசூடுதலில், பெற்ற தாயான கோசலையைப் போலவே அயோத்தி நகரத்து மாதர் பலரும் மகிழ்ச்சியுற்றனரென்பதை, "மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலை மனத்தை யொத்தார்" (கைகேயி சூழ்.66) என மேலே கூறுகின்றார். 'ஏற்றவள்' என வினையாலணையும் பெயராகக் கொண்டு, வீரன் தாதை புக்கிருத்தற்கேற்ற தகுதியுடையாள் எனக் கூறுதலும் ஆம்.

(பி - ம்.) 1. மாற்றம துரைசெய, மாற்றம துரைத்தலும்.
2. ஆற்றல்சால் கௌசலை, மாற்றவள் கவுசலை; ஒத்ததால், ஏற்றதால்.
3. வேற்றுமை மற்றிலை; வீரன்றாதையும், இராமன்றாதையும், வீரர் வீரனும், வீரர்வீரன்புக்கு.
4. ஏற்றவளிருதயத்து, ஏற்றவரிதயத்தில், ஏற்றவளிதயத்தில், ஏற்றவனிருதயத்து; இருக்கையேகொலாம், இருக்கவென்கொலாம். (51

மணிமாலையை மந்தரைக்குப் பரிசளித்தல்

149. ஆயபே ரன்பெனு மளக்க ரார்த்தெழத்
தேய்விலா முகமதி விளங்கித் தேசுறத்
தூயவ ளுவகைபோய் மிகச்சு டர்க்கெலாம்
நாயக மனையதோர் மாலை நல்கினாள்.

தூயவள் - மனத்தூய்மை யுடையளான கைகேயி, ஆய - தன் மனத்தே பொருந்திய, பேர் அன்பு எனும் அளக்கர் - (இராமன் பால் கொண்ட) பேரன்பென்னும் கடல், ஆர்த்து எழ - ஆரவாரித்து (பொங்கி) எழவும், (அதனால்) முகம் - அவளுடைய முகமாகிய, தேய்வு இலா மதி - (என்றும்) குறைதல் இல்லாத பூர்ணசந்திரன், விளங்கி தோன்ற - மேலும் அழகாக விளங்கவும், தேசு உற - (அத்தகைய முகத்திலே ஒரு) புத்தொளி மிகவும், உவகை போய் மிக -

உள்ளத்தில் உளதான பெருமகிழ்ச்சி கரைகடந்து போகவும், சுடர்க்கு எல்லாம் நாயகம் அனையது - (கோளும் விண்மீனும் முதலான) ஒளி கட்கெல்லாம் தலைமை கொள்ளும் தகுதியுடையதான, ஓர் மாலை - ஒப்பற்றதொரு மணி மாலையை, நல்கினள் - (கூனிக்குக்)கொடுத்தாள்.

இராமன் முடிசூடுதலாகிய உவகைச் செய்தி கேட்டு மிகப் பெரு மகிழ்ச்சி கொண்ட கைகேயி, அதனைச் சொன்ன கூனிக்கு, தன் பெரு மகிழ்ச்சியின் அறிகுறியாகப் பெருஞ்சிறப்புடைய மணிமாலையொன் றைப் பரிசாக அளித்தாள் என்க. அகத்தினழகு முகத்தில் தெரியுமாத லால், அது புலப்பட அவள் முகத்தைச் சிறப்பித்தார். உவகை கூறினார்க்குப் பரிசளித்தல் இயல்பு. மேலே கோசலையும் அவ்வாறு செய்தல் காணலாகும். பாலகாண்டத்துள், இராமபிரானது திருமணச் செய்தியை வந்து சொன்ன தூதுவர்க்குத் தயரதன் பரிசளித்த தன்மை யும் காண்க: புறநா. 67 : 11-14; சூளா. கல்யாண: 182-பார்க்க.

போய் மிக : ஒருபொருட் பன்மொழி.

(பி - ம்.) 1. *அன்பினும்.*
3. *உவகை போன்மிகச், உவகை கைமிகச், உவகை மேற்பொங்கச், உவமைமீமிகச், உவகையான்மிகச்; சூழ்சுடர், கோட்கெலாம்.*
4. *நாயகனனையதோர்.* (52)

கூனியின் செயல்

150. தெழித்தன ளுரப்பினள் சிறுகண் டீயுக
விழித்தனள் வைதனள் வெய்து யிர்த்தனள்
அழித்தன ளழுதன ளம்பொன் மாலையால்
குழித்தன ணிலத்தையக் கொடிய கூனியே.

அ கொடிய கூனி - கொடுமை மிக்க அந்தக் கூனி, (பரிசின் பொருட்டுப் பெருமகிழ்ச்சிக்கு மாருகப் பெருஞ்சினங்கொண்டு) தெழித்தனள் - இரைந்தாள்; உரப்பினள் - அதட்டினாள்; சிறு கண் தீ உக - தன் சிறிய கண்களினின்றும் தீப்பொறி சிதற, விழித்தனள் - (கைகேயியை) உறுத்துப் பார்த்தாள்; வைதனள் - (அவளை)வைதாள்; வெய்து உயிர்த்தனள் - வெப்பமாகப் பெருமூச்சுவிட்டாள்; அழித்த னள் - (தன் கோலத்தைக்) கெடுத்துக்கொண்டாள் (அலங்கோல மாக்கிக் கொண்டாள்); அழுதனள் - வாய்விட்டழுதாள்; அம் பொன் மாலையால் - (பரிசாக அளித்த) அழகிய பொலிவு பெற்ற மாலையால், நிலத்தை குழித்தனள் - (அதை வீசி எறிந்து) தரையைக் குழிபடச் செய்தாள். ஏகாரம்: ஈற்றசை.

மந்தரை, இராமபிரான் முடிசூடுதல் தகாதென வற்புறுத்த வந்தவ ளாதலின், கைகேயி கொடுத்த பரிசை அவமதித்துத் தன் கொடுமை யைப் பலவாறு புலப்படுத்துகின்றாள். அவள் கைகேயியின் அன்புக் குரியவளாதலால், அவ்வுரிமையாலே, தன் செயல்குறித்துச்

சிறிதும் கூசினுளல்லள். மாலையை எறிந்த விசையால் தரை குழிவுற்றது என்றது அவள் சின மிகுதியைப் புலப்படுத்தியவாறு. மணிகளைப் பொன்னிற் பதித்துச் செய்யப்படுதலின் பொன்மாலை யெனப்பட்டதெனலுமாம். மந்தரைக்கு, உடற்கூனலோடு பிற அங்கங் களும் அழகற்றன என்பார் 'சிறுகண்' என்ருர். அவள் உடல், உள்ளம், குணம், செயல் ஆகிய எல்லாவற்றிலும் சிறுமையும் கொடுமையும் உடையவள்.

இப்பாடல் சில பிரதிகளில் இல்லை.

(பி-ம்.) 1. தெழித்தனளார்த்தனள், உயிர்த்தனள், உயிர்ப்பினள்; சிறுக்கண்.
2. வைத்தனள்.
8. அழித்தனள் சிரித்தனள். (53)

மந்தரை கூறுதல்

151. வேதனைக் கூனிபின் வெகுண்டு நோக்கியே
பேதைநீ பித்திநிற் பிறந்த சேயொடு
மாதுயர்ப் படுகநா னெடிதுன் மாற்றவள்
தாதியர்க் காட்செயத் தரிக்கி லேனென்ருள்.

வேதனை கூனி - மனவேதனை கொண்ட அந்த மந்தரை, பின் - பின்னும், வெகுண்டு நோக்கி - (கைகேயியைச்) சினந்து பார்த்து, நீ பேதை - நீ அறிவிலி, பித்தி - பைத்தியக்காரி; நின் பிறந்த சேயொடு - உனக்குப் பிறந்த மகனேடு (நீயும்), நெடிது - நெடுங்காலம், மாதுயர் படுக - பெருந்துயர முறுவாயாக; நான் —, உன் மாற்றவள் தாதியர்க்கு ஆள் செய - உன் மாற்ருளான கோசலையின் தாதியர்க்குத் தாதியாகி ஏவல் செய்ய, தரிக்கிலேன் - பொறுக்க மாட்டேன், என்ருள்

இதுமுதல் ஒன்பது பாடல்களால், கூனி கைகேயியைத் தன் கருத்துக்கு இயைவிக்க முயலுதல் கூறப்படும்.

கூனி, முன்பு இராமபிரான் கைவில்லுண்டையுண்டதனுலான மன வேதனையோடு, இப்போது கைகேயி தன் கருத்துக்கு இயையாள் போலும் என்ற ஐயத்தால் வேதனை மிக்கவளாதலின், 'வேதனைக் கூனி' என்ருர்; பிறர்க்கு வேதனை தரும் கூனி என்றலும் பொருந்தும். பேதை - வெள்ளை மனம் உடையவள். பித்தி - பித்துடையவள். 'இராமன் முடிசூடுதலால், கோசலை இன்னும் மேன்மை பெற்றவளா வள்; அப்போது நீயும் பிறரும் கோசலைக்குக் கீழ்ப்படிந்திருக்க நேரும். பரதனும் உயர்வற்றவனுவன். அவ்வாறிருக்க நீ மனமொப்பினும், நான் அவளுடைய தாதியர்க்கும் தாதியாகிக் கீழ் நிலையுற்றிருக்கத் தரியேன்' என்று கைகேயியின் மனம் மாறுதற்குரிய வகையில் உரை யாடுகின்ருள். வாழ்நாள் முழுதும் கீழ்நிலை யுற்றிருத்தல் வேண்டும்

என்பாள், 'நெடிது துயர்ப்படுக' என்றாள்; இதன் விளக்கத்தை 168-ஆம் பாடல் முதலியவற்றிற் காண்க.

(பி - ம்.) 1. வெகுண்டு நோக்கியப், வெதண்ட நோக்கியப்.
2. பேதையைப் பித்திறிற், பேதையைப் பித்தினிற், பேதைநீ பித்தரிற், பேதைநீ பித்தனிற், பேதைநீள் வயிற்றினில், பேதைமைப் பித்திறிற்; பிரிந்த.
3. நீ துயர்ப்படுக நான், நீ துயருழக்க நான், நீ துயர்ப்படுந்தரம், மாதுயர் படுகநான்; நெடிதுமற்றவள். (54)

152. சிவந்தவாய்ச் சீதையுங் கரிய செம்மலும்
நிவந்தவா சனத்தினி திருப்ப நின்மகன்
அவந்தனாய் வெறுநிலத் திருக்க லானபோ
துவந்தவா றென்னிதற் குறுதி யாதென்றாள்.

சிவந்த வாய் சீதையும்—, கரிய செம்மலும்-கருநிறமுடைய இராமனும், நிவந்த ஆசனத்து - உயர்ந்த சிங்காசனத்தின்மேல், இனிது இருப்ப - இனிதாக வீற்றிருக்க, நின் மகன் - உன் மகன் பரதன், அவந்தன் ஆய் - கீழ்ப்பட்டவனாகி, வெறும் நிலத்து இருக்கல் - வெறுந்தரையில் இருக்கும் நிலை, ஆனபோது-உண்டாகியிருக்கும்போது, இதற்கு - இம்முடி சூடுதலுக்கு, உவந்த ஆறு என் - நீ மகிழ்ச்சி கொள்ளுதல் எங்ஙனம்? உறுதி யாது - (இதனால் உனக்கு வரும்) நன்மை யாதுளது? என்றாள்—.

இது முதல் ஐந்து பாடல்களில் எழுவாய் வருவித்துரைக்க.

இராமன் முடிசூடுவானாகில், சீதையும் பட்டத்தரசியாகிப் பெருமிதமுற்றுச் சிங்காதனத்தின்மேல் இராமனுடன் ஒருங்கிணைந்து வீற்றிருப்பாள். அப்போது உன் மகன் பரதன் அவர்களெதிரிலே கைகட்டித் தலைகுனிந்து நிற்கவேண்டிய நிலை வந்தெய்தும். இராமனோடொத்த உரிமையுள்ள பரதன் நிலை அவ்வாறாகும்போது அவனுக்கும் உனக்கும் தாழ்வேயாகும். உயர்வு எவ்வாற்றானும் இராது, நீ இப்போது மகிழ்வது எனக்கு வியப்பையே தருகின்றது' என்று பேத உபாயத்தை ஆளுகின்றாள் கூனி.

சிவந்த வாய் என்ற அடை, இனிதிருத்தற் சிறப்பைக் குறிக்கும். பரதன் என்னாது, 'நின்மகன்' என்றது கைகேயியின் மனவெழுச்சியைத் தூண்டுதற்கு.

அவந்தன் = அவந்த்யன் - பிறரால் வணங்கப்படாதவன்; 'அவத்தன்' என்பதன் திரிபென்றலுமாம்; அவத்தன் - வீணானவன்.

கரிய செம்மல் : பால. 406.

(பி - ம்.) 2. ஆசனத்தினில், ஆசனத்தின்மேல்; இருக்க நின்மகன், உன்மகன்.
3. அவந்தனுய் வறுமிலத்து, அவந்தனுல் வெறுமிலத்து; இருக்கவான போது.
4. என்னிதன், என்னிதில், என்னிதின்; அளிதினும், எளிதினும்; உணர் வதியாதென்ருள். (55)

153. மறந்திலள் கோசலை யுறுதி மைந்தனும்
சிறந்தனன் றிருவினிற் றிருவி னீங்கினுன்
இறந்தில னிருந்தன னென்செய் தாற்றுவான்
பிறந்திலன் பரதனீ பெற்ற தாலென்ருள்.

கோசலை—, உறுதி மறந்திலள் - (தனக்கு) உறுதியைத் தேடிக் கொள்வதில் அயர்ந்திலள்; (அதனுல்) மைந்தனும் - அவள் மகன் இராமனும், திருவினின் சிறந்தனன் - அரசுச் செல்வத்தாற் சிறப்படைகின்ருன்; பரதன்—, நீ பெற்றதால் - நீ (அவனை மகனுகப்) பெற்றதனுல், திருவின் நீங்கினுன் - செல்வச் சிறப்பின் நீங்கினுன்; இறந்திலன் இருந்தனன் - இறவாமல் (நடைப்பிணம் போல) இருப்பவனுவான்; என் செய்து - (அவன்) என்ன உபாயம் செய்து, ஆற்றுவான் - (தன் இழிநிலையால் வருந்துயரை) ஆற்றிக் கொள்வான்? பிறந்திலன் - (அவன் இவ்வுலகத்தில் பிறந்தும்) பிறவாதவனே யாவான்; என்ருள் —.

'கோசலை, தன்மகன் அரசெய்துதலில் விழிப்புடனிருந்து, தன் கணவனைத் தூண்டி அதனை நிறைவேற்றிக்கொண்டாள்; நீயோ, அது செய்யாமல், உன்மகனையுங் கெடுத்து நீயுங் கெடுகின்ருய். அதனை உணராது இப்போது பெருமகிழ்ச்சியும் கொள்கின்ருய். உன் பேதைமை இருந்தவாறு என்!' என்பது பட மொழிகின்ருள் கூனி. இவை இவள் கற்பனையே. இராமன் முடிசூடுதல் தந்தையின் உறுதியால் நிகழ்வதொன்ருதலால், அதனைத் தவிர்த்துத் தன்னை உயர்த்திக் கொள்ளல் பரதனுல் ஆவதன்று; எனவே, அவன் தனக்குத் தாழ்வால் வருந்துயரை 'என் செய்து ஆற்றுவான்' என்ருள். அரசுச் சிறப்புக்கு உரிமையோடு பிறந்தும், அஃதெய்துதலின்றித் துயரோடு பயனற்ற வாழ்க்கை நடத்த இருத்தலால், பரதன் தான் பிறந்ததன் பயனை அடையாமல் பிறந்திலனுவான். 'மாற்ருள் திறமையுள்ளவள்; நீ அஃதில்லாதவள்' என்று ஒரு பெண்ணிடம் கூறினுல், பொருமையால் அவள் மனம் தூண்டப்படுதல் உலக இயல்பு. இதனையே கைகேயியிடம் எதிர் நோக்குகின்ருள் கூனி.

பிறந்திலன் பரதன் : "பிறந்தில னென்பதிற்பிறிதுண் டாகுமோ" (28). இறந்திலன் : முற்றெச்சம். முற்றுக்கள் தெளிவுபற்றி வந்த கால மயக்கங் கொண்டன.

(பி - ம்.) 2. சிறந்த நற்றிருவினிற் றிருவு மெய்தினுன், சிறந்தனன் நின்மகன் றிருவி னீங்கினுன், திருவுநீங்கினுன்.

3. இறந்திலனிருந்திலன், இறந்திலனிறந்திலன், இறந்திலனின்னதில்.
4. பரதனிற்பெறுதலால், பரதனீ பெறுதலால், பெறுதலான். (56)

154. சரதமிப் புவியெலாந் தம்பி யோடுமவ்
வரதனே காக்குமேல் வரம்பில் காலமும்
பரதனு மிளவலும் பதியி னீங்கிப்போய்
விரதமா தவஞ்செய விடுத னன்றென்ருள்.

வரதனே - அந்த இராமனே, தம்பியோடும் - தம்பியான இலக்குவனுடன் கூடி, இ புவி எலாம் - இந்தப் பூமி முழுவதும், வரம்பு இல் காலமும் - அளவற்ற காலமெல்லாம், காக்குமேல் - ஆள்வானுயின், சரதம் - உண்மையாக, பரதனும் இளவலும் - பரதனும் அவன் தம்பியான சத்துருக்கனும், பதியின் நீங்கி போய் - நகரத்தை விட்டு (வனத்திற்குப்) போய், விரதம் மாதவம் செயவிடுதல் - விரதத்தையுடைய பெருந் தவம் செய்யும்படி அனுப்பி விடுதல், நன்று என்ருள் - நல்லதாகும் என்ருள்.

பரதனும் அரசுக்குரிமை பூண்டவனுதலால், அவனுக்குப் பாதி இராச்சியம் பகிர்ந்தளித்தல் வேண்டும்; அல்லது இராமனும் பரதனும் ஒவ்வொரு குறித்த காலவளவு தனித்தனியே அரசாள வேண்டும். இவ்வாறின்றி இராமனே முழுமையும் ஆள இருக்கின்றமையின் புவியெலாம் என்றும், வரம்பில் காலமும் என்றும் விதந்து கூறினுள். இராமனும் இலக்குவனும், பரதனும் சத்துருக்கனும் இளமைமுதல் இவ்விருவராக இணைந்தே பழகி வந்தமையின் (பால. 807, 808 பார்க்க) இங்கும் அவ்வாறு இணைத்துக் கூறினுள். உரிமையுள்ளவன் அதனை இழந்து தாழ்வுற்று நகரில் இருத்தலினும் காடேகுதலே நன்று என்ருள். விரதம் - பட்டினியும் நோன்பும் உடைமை, இவை தவத்திற்கு அங்கமானவை. மேலே பரதன் நாடாளவும் இராமன் காடாளவும் வகை செய்யப் போகும் கூனி இப்போது இதனைக் கூறினுள். ஒருவர் நாடாள மற்றவர் காடாளுதல் என்னும் எண்ணத்தைக் கைகேயியின் உள்ளத்தில் முன்னதாகவே விதைக்கின்ருள்.

(பி - ம்) 1. தம்பியோடுமிவ், தம்பியோடுமே.
2. வரதனே காக்குமால், வரதனே புரக்குமேல், வரதனுக்காக்குமேல்.
4. தவஞ்செய விடுத்தல், விடுகை, தவஞ்செய்து விடுதல். (57)

155. பண்ணுறு கடகரிப் பரதன் பார்மகள்
கண்ணுறுங் கவினரா யினிது காத்தவம்
மண்ணுறு முரசுடை மன்னர் மாலையில்
எண்ணுறப் பிறந்தில னிறத்த னன்றென்ருள்.

பண் உறு - அலங்கரிக்கப் பெற்ற, கடம் கரி - மதயானையையுடைய, பரதன் - நம்முடைய பரதன், பார்மகள் கண் உறும் கவினர் ஆய் -

பூமிதேவி காண்பதற்குரிய அழகுடையவர்களாய், இனிது காத்த - இனிதாக நாட்டை ஆண்ட, அ - அந்த, மண் உறு முரசு உடை(ய), மார்ச்சனை யமைந்த பேரிகைகளையுடைய, மன்னர் - (இட்சுவாகு குலத்து) மன்னர்களின், மாலையில் எண் உற - வரிசையில் வைத்து எண்ணுதற்குப் பொருந்த, பிறந்திலன் - (அத்தகைய பேறு உடையனாகப்) பிறக்கவில்லை; (ஆதலால்) இறத்தல் நன்று - (அவன் இனி உயிர் வாழாமல்) இறந்து படுதலே நல்லதாகும், என்றாள்.—

அரசகுமரனாகிய பரதன் யானையேற்றம் முதலியன பயின்றவனாத லின் யானையை உடையவன் ஆனான். கரி போன்ற பரதன் என்றலும் பொருந்தும். அரசர் நிலமக்களுக்கு நாயகராகும் நிலையுள்ளவ ராதலின் அம்மகள் அவர் கவினை நோக்குவதாகக் கூறினாள்.

அரச குலத்திலே பிறந்து நல்லிலக்கணங்களும் அமையப் பெற்றோராயினும் முடிசூடி அரசெய்துவோர் பெயர்களே என்றும் எண்ணப்படும். அத்தகுதி பெற்றோர், குலமுறை கிளத்து படலத்துட் கூறப்பெற்ற அரசர்கள்; அவ்வரிசையில் இராமன் வைத்தெண்ணப் பெறுவான். பரதன் அவ்வாறெண்ணப்பெறான். ஆதலால், மிக்க சிறப் புற்ற இக் குலத்திலே பிறந்தும், அரசரின் வரிசையில் வைத்தெண்ணப் பெறும் பேறு பெறாத பரதன், இருந்தும் இல்லாதவனே, இந்நிலையில் உள்ளவன் இறத்தலே நன்று என்று நெடுந்தொலைவு செல்கின்றது கூனியின் கற்பனை.

(பி - ம்.) 1. பண்ணுறும். 2. கண்ணுறும்; கவினனுப், கவிகையின்; காத்தவ, காக்கவம், காப்பவோர், காப்பதோர்.
3. மண்ணுறு முலகிடைமாலையின்.
4. பிறத்தநின்; நன்றரோ. (58)

156. பாக்கியம் புரிந்திலாப் பரதன் றன்னைப்பண்
டாக்கிய பொலங்கழ லரச னாணையால்
தேக்குயர் கல்லதர் கடிது சேணிடைப்
போக்கிய பொருளெனக் கின்று போந்ததால்.

பாக்கியம் புரிந்து இலா - (முற் கூறியவாறு அரசனாதற்குரிய) நல் வினை செய்யாத, பரதன் தன்னை - பரதனை, பொலம் ஆக்கிய கழல் அரசன் - பொன்னாலாக்கிய வீரக்கழலையணிந்த தயரத மன்னன், பண்டு-முன்னே, தேக்கு உயர் கல் அதர் - தேக்கு மரங்கள் உயர்ந்து வளர்ந்துள்ள கற்கள் நிறைந்த வழியினையுடைய, சேண் இடை - நெடுந் தொலைவில் உள்ள கேகய நாட்டுக்கு, ஆணையால்-தன் கட்டளையால், கடிது போக்கிய பொருள் - விரைந்தனுப்பியதன் உட்கருத்து, எனக்கு இன்று போந்தது - எனக்கு இப்போது மனத்தில் உதித்தது. ஆல் : அசை.

'என்றும் இராமன்பால் தனிப்பற்றுள்ளங் கொண்ட நம் அரசர், குமாரர்கள் திருமணம் முடிந்து வந்தவுடனே இராமனுக்கு முடி சூட்டுதலை மனத்துட்கொண்டு, பரதன் இங்கிருப்பது ஒருகால் அதற் கிடையூறுதல் கூடும் என்ற அச்சத்தாலே அவனைக் கேகய நாட்டுக்கு விரைந்தனுப்பியுள்ளார்' என்ற உண்மை இப்போது எனக்குப் புல னாகின்றது என்றாள். காக தாலிய நியாயமாக, இதுவும் இவள் கற்பனைக் குப் பொருந்துவதாயிற்று. பரதன் அப்போது தன் மன விருப்புடன் சென்றானில்லை, தந்தையின் ஆணை காரணமாகவே சென்றான். அவ்வாறு அவனை ஆணையிட்டு, விரைந்தும் அனுப்பிவைத்தார் அரசர் என்பாள், 'ஆணையால் சேணிடைக்கடிது போக்கிய பொருள்' என்றாள். பரதன் கேகய நாடு செல்லுங்கால், இராமபிரானைப் பிரிய மனமின்றித் தந்தையின் ஏவலாலேயே சென்றான் என்பது, "ஏவலு மிறைஞ்சிப்போ யிராமன் சேவடிப், பூவினைச் சென்னியிற் புனைந்து போயினான், ஆவியங் கவனல தில்லை யாதலான், ஓவலி லுயிர்பிரிந் துடல்சென் றென்னவே" (பால. 1387) என்பதனால் அறியலாம்.

(பி - ம்.) 1. புரிந்திலன், புரிவிலாப்.
3. தேக்குறு, தேக்கிய; கல்லதர் கெடிது, கல்லதர்க்கடிது, கவறதர்கடிது.
4. போக்கிய பொருளுனக்கு, போக்கிய பொருளென, போக்கிய திப்பொருள்; என்று போந்ததால், இன்று போயிற்றால், இன்று போய்த்தென்றாள், இன்று போந்தென்றாள். (59)

157. மந்தரை பின்னரும் வகைந்து கூறுவாள்
அந்தரந் தீர்ந்துல களிக்கு நீரினால்
தந்தையுங் கொடியனற் றாயுந் தீயளால்
எந்தையே பரதனே யென்செய் வாயென்றாள்.

மந்தரை—, பின்னரும் - மேலும், வகைந்து கூறுவாள் - (கைகேயிக்கு ஏற்கும் முறையில்) வகைப்படுத்துச் சொல்பவளாய், அந்தரம் தீர்ந்து - நடுவுநிலை தவிர்ந்து, உலகு - நாட்டை, அளிக்கும் நீரினால் - (இராமனுக்கே) கொடுக்கும் தன்மையினால், தந்தையும் கொடியன் - தந்தையும் (உன்பால்) கொடுமையுடையவனாகின்றான்; நல் தாயும் - பெற்ற தாயும், தீயள் - கொடியளாகின்றாள்; எந்தையே, பரதனே - என் அப்பா பரதா, என் செய்வாய் - நீ யாது செய்வாய்? என்றாள்—.

பரதன்பால் மிக்க பரிவுடையாள் போல நடிக்கும் கூனி, அவன் எதிரில் இல்லாதபோதும், அவனை முன்னிலைப்படுத்தி, 'தந்தையும், பெற்ற தாயும் உன்பால் பரிவிலராகின்றனர்; ஒத்த உரிமையையுடைய நும்மிருவருள் ஒருவனுக்கே நாடு முழுமையும் தந்தை அளிக்கின்றான்; நின்னைப் பெற்ற தாயும், உனதுரிமையை நீ பெறமுயலாது வாளாவிருத்த லோடு, மாற்றாள் மகன் நாடு பெறுதலில் பெருமகிழ்ச்சியும் கொள் கின்றாள். இவ்வாறு இருவரும் உன்பால் பரிவிலராகியுள்ள நிலையில்,

நீ யாது செய்வாய்? உன் கதி யாதாகுமோ?' எனக் கூறி அரற்றுகின்றாள். கைகேயியின் மனம் திரிவுறத்தக்க முறையில், வகைப்படுத்திக் கூறப்படுவன இவை யாதலால், 'வகைந்து கூறுவாள்' என்றார்.

(பி - ம்.) 1. வகுத்துக், வரைந்து.
2. அந்தரத்திருந்துலகு, அந்தரத்திறந்துலகு, அந்தரம் தீர்த்துலகு, அந்தரந்தீர்த்துனக்கு; சீரினன், சீர்மையால், சீர்மையத், சீர்மை செய், சீரால்.
3. எந்தையும்; கடியனன்றும், கொடிய சுற்றும் தீயவள்.
4. என்செய்தா யென்றாள், என்செய்தாற்றுவாய். (60)

158. அரசரிற் பிறந்துபின் னரச ரில்வளர்ந்
தரசரிற் புகுந்துபே ரரசி யானநீ
கரைசெயற் கருந்துயர்க் கடலில் வீழ்கின்றாய்
உரைசெயக் கேட்கிலை யுணர்தி யோவென்றாள்.

அரசர் இல் பிறந்து - அரசர் குடியிலே பிறந்து, பின் அரசர் இல் வளர்ந்து - பின்பு (உரிய பருவம் வருமளவும்) அரண்மனையிலேயே வளர்ந்து, அரசர் இல் புகுந்து - அரசர் குடியிலே வாழ்க்கைப்பட்டு, பேர் அரசி ஆன நீ - சக்கரவர்த்தியின் பட்டத்தேவியாகும் பேறு பெற்ற நீ, கரைசெயற்கு அரு - கரை காணுதற்கரிய, துயர் கடலில் வீழ்கின்றாய் - பெருந்துயரமாகிய கடலில் (இப்போது) விழவிருக்கின்றாய்; உணர்தியோ - (இந்நிலையை நீ) உணர்கின்றாயோ? (உணர்ந்திலை); உரைசெய - நான் எடுத்துச் சொல்லவும், கேட்கிலை - என்னுரையைக் கேட்கின்றா யல்லை; என்றாள்—.

'நீ அரசர் குடியில் சிறப்போடு பிறந்து வளர்ந்து, அதனினும் மேலான இடத்திற் புகுந்து சக்கரவர்த்தியின் பட்டத்தேவியுமாகியிருந்தும், உன் மகனை அரசுரிமை பெறுவித்து நீயும் மேன்மையடையும் வகையை நீயே உணர்ந்திலை, நான் சொல்லியும் கேட்கிலை; நான் வருந்தி என் செய்வது!' என்று மிகவும் குறைப்படுகின்றாள் கூனி. 'தனக்கேயுந் தெரியாது; சொன்னாலுங் கேட்பதில்லை' என்ற முதுமொழியை நினைப்பூட்டுகின்றது இது. 3-ஆம் அடியின் விளக்கம் மேலே 168-ஆம் பாடல் முதலியவற்றில் காண்க. வீழ்கின்றாய்: தெளிவு பற்றி வந்த காலமயக்கம்.

(பி - ம்.) 1. அரைசரிற் பிறந்து, அரைசனிற் பிறந்து, அரைசரிற்பிறந்த நல், அரசனில் வளர்ந்து; அரசினி வளர்ந்து.
2. அரைசரிற் புகுந்து, அரைசனிற் புகுந்து, அரைசரிற் சிறந்த; அரசினுள, அரசிலாத.
3. கடலில் ஆழ்கின்றாய், கடலுள் வீழ்கின்றாய், கடலின் வீழ்கின்றாய்.
4. கேட்கலை; உணர்விலோய். (61)

159. கல்வியு மிளமையுங் கணக்கி லாற்றலும்
வில்வினை யுரிமையு மழகும் வீரமும்
எல்லையில் குணங்களும் பரதற் கெய்திய
புல்லிடை யுகுத்தநல் லமுதம் போலுமால்.

கல்வியும் - கல்வியறிவும், இளமையும் - இளமைப்பருவச் சிறப்பும், கணக்கு இல் ஆற்றலும் - வரம்பற்ற செய்வினைத் திறனும், வில் வினை உரிமையும் - வில் தொழில் நேர்ச்சியும், அழகும் - (இளமைக்கேற்ற) நல்லழகும், வீரமும்—, எல்லை இல் குணங்களும் - அளவில்லாத பல நல்ல குணங்களும் (ஆகிய), பரதற்கு எய்திய - பரதனுக்குப் பொருந்திய நலன்களெல்லாம், புல் இடை உகுத்த - இழிவான (தூய்மையற்ற) இடத்திலே சிந்திய, நல் அமுதம் போலும் - நல்ல தேவாமிருதம் போல் ஆகின்றன. ஆல்: அசை.

'பரதன், இராமனுக்கு எவ்வகையிலுந் தாழ்விலனாகி, அரசுக்குரிய எல்லா நலன்களும் எய்தப் பெற்றவன்; அவன் அரசெய்தினன்றி அவை யெல்லாம் வெளிப்படத் தோன்றி விளங்காவாதலால், அவை சிறிதளவும் எடுத்துப் பயன்படுத்தத் தகாத தூய்மையற்ற இடத்திலே கொட்டிய அமுதம் போலாகின்றன' என்கிறாள். புன்மை - தூய்மையற்ற தன்மை. இடை - இடம். புல்லிடை - புல்லிலே என்றலுமாம். எய்திய! வினையாலணையும் பெயர். புல்லிடை யுகுத்தல்: "வில்லினும் வாளினும் விரிந்த வாண்டொழில், புல்லிடை யுகுத்தவன்" (பள்ளி படைப். 113).

(பி - ம்.) 1. கணக்கினாற்றலும்.
2. வில்வினையுடைமையும், வில்லிமையுரிமையும்.
3. பரதற்கேயது, பரதற்கெய்துபு.
4. புல்லிடை யுக்கநல், புல்லிடை யுக்கமது, புல்லிடை யுகுத்தமது, புல்லிடை புக்கமது, புல்லிடை யுக்கன, புல்லித புல்லும்; ஏயும் போலென்றாள், ஏயும்போலுமால், யோலுமாலென்றாள், அமுதம் போலென்றாள். (62)

கைகேயி கூறுதல்

(கலிநிலைத்துறை)

160. வாய்க யப்புற மந்தரை வழங்கிய வெஞ்சொல்
காய்க னற்றலை நெய்சொரிந் தெனக்கதங் கனற்றக்
கேக யர்க்கிறை திருமகள் கிளரிள வரிகள்
தோய்க யற்கண்கள் சிவப்புற நோக்கினள் சொல்லும்.

மந்தரை—, வாய் கயப்பு உற - (சொன்ன தன்னுடைய) வாயும் கசக்கும்படி, வழங்கிய - (இதுவரை) வரையாது சொல்லிய, வெம் சொல் - கொடுஞ் சொற்கள், காய் கனல்தலை - எரிகிற நெருப்பிலே, நெய் சொரிந்தது என - நெய்யை ஊற்றினாற்போல, கதம் கனற்ற -

சினத்தீயை எழுப்ப, கேகயர்க்கு இறை திருமகள் - கேகய நாட்டரசன் திருப் புதல்வியாகிய கைகேயி, கிளர் இள வரிகள் தோய் - விளங்குகின்ற மெல்லிய செவ்வரிகள் பரந்த, கயல் கண்கள் - கயல் மீனைப் போன்ற (தன்) கண்கள், சிவப்பு உற- (சினத்தால்) சிவக்க, நோக்கினுள்- (கூனியை உறுத்துப்) பார்த்தவளாய், சொல்லும் - சொல்லுகிறுள்.

கைகேயி கூனியை வெறுத்துச் சினந்து சொல்லியவை, மேலே நான்கு பாடல்களால் கூறப்படும்.

மந்தரையின் சொற்கள், கோசலை, இராமபிரான் என்ற பழுதற்றவர்களுக்குங் குற்றங்கற்பித்தனவாதலால், அவற்றைச் சொன்ன அவள் வாயே கசப்பெய்தத் தக்கவை யென்ருர். அத்தீய சொற்கள், கைகேயியின் நன்மனத்துட் சினத்தீயை முதற்கண்ணே மூட்டின; மேலும் அவள் தொடர்ந்து கூறியவை, தீயில் நெய் சொரிந்தாற்போலாயின. ஆதலால், 'காய்கனற்றலை.........கதங்கனற்ற' என்ருர். கைகேயியின் நல்லியல்பு குறித்துத் திருமகள் என்ருர். கொடுஞ் சொற்களை மந்தரை வரையாது கூறினமையை 'வழங்கிய' என்ற சொல்லாற்றல் குறிக்கும்.

சொரிந்தென: தொகுத்தல் விகாரம்.

(பி - ம்.) 1. மைந்தரை; கொடுஞ்சொல், செஞ்சொல்.
2. காயெரித்தலை; நெய்சொரிந்தாலெனக்; கனற்ரு, கனன்ற.
3. கேகயத்திறை; இளவகிர்கள்.
4. செவப்புற, சேப்புற. (63)

161. வெயின்மு றைக்குலத் திறையவன் முதலிய மேலோர்
உயிர்மு தற்பொரு டிறம்பினு முரைதிறம் பாதோர்
மயின்மு றைக்குலத் துரிமையேய் மனுமுதன் மரபைச்
செயிரு றப்புலைச் சிந்தையா லென்சொனுய் தீயோய்.

(கைகேயி மந்தரையை நோக்கி), தீயோய் - கொடியவளே, வெயில் முறை குலத்து - சூரியன்முதல் முறையாக வந்த குலத்தில் உதித்த, இறையவன் முதலிய மேலோர் - நம் அரசன் முதலாகிய முன்னோர் யாவரும், உயிர்முதல் பொருள் திறம்பினும் - தம் உயிர் முதலான பொருள்களே மாறுபடினும் (அழிவதாயினும்), உரை திறம் பாதோர் - தமது வாக்குத் தவருதவராவோர்; மயில் முறை குலத்து உரிமை ஏய் - மயிலின் முறையைக் கொண்ட குலத்துரிமை பொருந்திய, மனுமுதல் மரபை - மனுமுதலாக வந்த இக்குலத்துக்கு, செயிர் உற - இழுக்கு உண்டாகும்படி, புலை சிந்தையால் - (உனது) இழிவையுடைய புத்தியால், என் சொனுய் - என்ன வார்த்தை சொன்னுய்?

இதுமுதல் நான்கு பாடல்கள் தொடர்ந்து 164-ஆம் பாட்டின் இறுதியில் உள்ள 'என்ருள்' என்பது கொண்டு முடியும்.

'மூத்த புதல்வனே முடிசூடி அரசாளுதல் சூரிய குலத்திலே தவருது வந்த முறையாகும். அம்முறைப்படி இராமனுக்கு முடி

சூட்டுதலை மேற்கொண்ட நம் அரசர், அவனுக்கு முடிசூட்டுவதாகச் சொன்ன சொல் எவ்வகையிலும் பிறழார். இக்குலத்து முன்னோரும் தம்முயிர் போவதாயினும் சொன்ன சொல் தவறார்; அங்ஙனமாக, நீ உனது அற்பப் புத்தியால் தகாத சொற்களைச் சொல்லுகின்றாய், கொடியவளே!' என்று மந்தரையைக் கடிந்தனள் கைகேயி. "மூத்தவ னிருக்கவே முறைமை யானிலங், காத்தவ ருளரெனிற் காட்டிக் காண்டிரால்' (அயோத். 958; ஆறுசெல். 16).

மேலோர் - மேன்மையுடைய முன்னோர். உயிரினும் சிறந்த பொருள் இன்மையால் 'உயிர் முதற் பொருள்' என்றாள். 'மயில் முறை' என்றது, மயில் ஒன்று, பல முட்டைகளிட்டுக் குஞ்சு பொரித்தாலும், அவற்றுள் மூத்த பார்ப்புக்கே பொன்னிறத் தோகை முளைத்து வளர்த லாகிய முறை. மூத்தவனே அரசுக்குரியவன் என்பதற்கு இது கூறப் பட்டது. "பலாவம் பொழிலின் ஒருதா யுயிர்த்த பலமயிற்கும், கலாவம் புனைந்த களிமயில் மூத்த தெனக்கருத" (தணிகைப். களவுப். 244) என்பது காண்க. சூரியன் புதல்வனாகிய மனுவே முதன்முதல் அரச னாகிப் பல நீதிகளையும் வகுத்து முறைப்படி ஆண்டவனாதலால், 'மனு முதல் மரபை' எனப்பட்டது.

மரபை - மரபுக்கு; வேற்றுமை மயக்கம். சொனாய் ; தொகுத்தல்.

'மயின்முறைக்குலத் தூய்மையை' என்ற பாடத்திற்கு, 'நான் பிறந்த குலமாகிய கேகய அரசன் மரபின் தூய்மையை' என்று பொருள் கொள்க.

(பி - ம்.) 1. முறைக்குலக் கதிரவன், முதற்குலக் கதிரவன், முறைக்குலத் திறைவனை, முறைக்குலத் திராகவன், முறைக் கதிரவன் முதல், முதலினை, முதலினர்; விளங்கிய.
2. முதற்பொருட் டிறம்பினும், முதற்பொரு டுறப்பினும், முறைப் பொரு டிறம்பினும்; முறை திறம்பாதோர்.
3. மயின்முதற் குலத்து; உரிமையை மனுமுதல், மனுகுல.
4. செயிருறப்புலச், செயிருரைப்புலைச், செயிருறைப்புலைச், செயிர் முறைப் புலச்; சிந்தையான், சிறுமையால்; என் சொன்னாய்; நீ போய். (64)

162. எனக்கு நல்லையு மல்லைநீ யென்மகன் பரதன்
தனக்கு நல்லையு மல்லையத் தருமமே நோக்கின்
உனக்கு நல்லையு மல்லைவந் தூழ்வினை தூண்ட
மனக்கு நல்லன சொல்லினை மதியிலா மனத்தோய்.

(கைகேயி பின்னும் மந்தரையை நோக்கி) நீ—, எனக்கு நல்லையும் அல்லை - எனக்கு நல்லவளும் ஆகாய்; என் மகன் பரதன் தனக்கு நல்லை யும் அல்லை - என் மகன் பரதனுக்கும் நல்லவள் ஆகாய்; அ தருமமே நோக்கின் - அவ்விராச தருமத்தைப் நோக்குங்கால், உனக்கு நல்லையும் அல்லை - உனக்கே (நீ) நல்லவளும் ஆகாய்; மதி

இலா மனத்தோய் - அறிவற்ற மனமுடையவளே, ஊழ்வினை தூண்ட - உனது தீயூழ்வினை உன்னைத் தூண்டுதலால், வந்து - இங்கே வந்து, மனக்கு நல்லன சொல்லினை - (உன்) மனத்துக்கு நல்லனவாகத் தோன்றியவற்றைக் கூறினாய்.

'நீ எனக்கும் என் மகனுக்கும் நன்மை சொல்வதாக உன் மதியீனத்தாலும் ஊழ்வினை தூண்டுதலாலும் உன் மனத்தில் எண்ணிக் கொண்டு இங்கு வந்து ஏதேதோ சொன்னாய்; அவையெல்லாம் முறையும் அல்ல; எமக்கு நன்மை தருவனவும் அல்ல. உனக்கே தீமை தருவனவாம்; உன் மனம் இவற்றையெல்லாம் மதியாதாயிற்று' என்றாள்.

அ : உலகறி சுட்டு. மனக்கு : அத்துச் சாரியை பெறாது வந்தது.

(பி - ம்.) 2. அல்லையித், அல்லை நீ; நோக்கில்.
3. அல்லைநீ யூழ்வினை.
4. நல்லன சொல்லினய், வந்தன சொல்லினை; மதியிலு மறந்தாய், மதியிலி மறந்தாய், மதியிலி மனத்தாய், மதியின மறந்தாய். (65)

163. பிறந்தி றந்துபோய்ப் பெறுவது மிழப்பதும் புகழே
நிறந்தி றம்பினு நியாயமே திறம்பினு நெறியின்
திறந்தி றம்பினுஞ் செய்தவந் திறம்பினுந் செயிர்தீர்
மறந்தி றம்பினும் வரன்முறை திறம்புதல் வழக்கோ.

பிறந்து - (மானிடராகப்) பிறந்தும், இறந்துபோய் - இறந்து மறுவுலகம் போயும், பெறுவதும் - (ஒருவர்) அடைய வேண்டுவதும், இழப்பதும் - (அடையாமல்) இழந்துபோவதும், புகழே - கீர்த்தியேயாகும்; (அங்ஙனமாக) நிறம் திறம்பினும் - (தன்) ஒளி வேறுபட்டாலும், நியாயமே திறம்பினும் - நீதியே கெடினும், நெறியின் திறம் திறம்பினும் - நன்னெறியின் தன்மை கெடினும், செய்தவம் திறம்பினும் - செய்த தவம் (பயன் தராது) மாறுபடினும், செயிர் தீர் - குற்றமற்ற, மறம் திறம்பினும் - வீரம் கெடுவதாயினும், வரன்முறை (தன் குலத்துக்குரிய) ஒழுங்கினின்றும், திறம்புதல் வழக்கோ - மாறுபடுதல் முறையாகுமோ?

'மக்களாய்ப் பிறந்தோர் இம்மையில் தம் வாழ்நாளிலே நல்ல புகழெய்தி, இறந்த பின்னரும் அப்புகழ் நிலைக்கும்வண்ணம் தம்மைச் செய்துகொள்வதே முறை; என்ன தீங்கு வரினும் புகழுக்கிழுக்காகும் செயலைச் செய்தல் தகாது; மூத்தவனே அரசுக்குரியவன் என்ற இக்குலத்து வரன்முறை தவறுதல் புகழுக்கு இழுக்கந் தருவதாகும்; அது செய்யத் தக்கதன்று' என நியாயத்தை எடுத்துக் கூறினாள் கைகேயி. "வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும், எச்சம் பெறாஅ விடின்" (குறள். 238) என்பதனால், ஒருவரெய்தும் புகழ் அவர்

இறந்த பின்னும் நிற்குமாறு செய்துகொள்ளுதலே சிறந்தது என்பது பெறப்படும்.

'திறம்பினும்' என்பவற்றில் உம்மை எதிர்மறை உணர்த்தும். 'வழக்கோ' என்ற வினாவும் வழக்கன்று என எதிர்மறை உணர்த்துவது.

(பி - ம்.) 1. போய்த் திரிவது பேரினும் புகழே, இறப்பதும் புகழேல், இறப்பதும் புகழேல், புகழே, நிற்பதும் புகழே.
2. அறந்திறம்பினும்.
3. மைதிர், நவைதிர், தீரா.
4. அறந் திறம்பினும், அறன்முறை, உயர்முறை, மயிர்முதல், மயின் முறை, மனுமுறை, யான் முறை; திறம்புதலழகோ, திறம் புவதழகோ. (66)

164. போதி யென்னெதிர் நின்றுநின் புன்பொறி நாவைச்
சேதி யாதிது பொறுத்தனென் புறஞ்சில ரறியின்
நீதி யல்லவு நெறிமுறை யல்லவு நினைந்தாய்
ஆதி யாதலி னறிவிலி யடங்குதி யென்றாள்.

அறிவு இலி - நல்லறிவில்லாதவளே, என் எதிர் நின்றும் போதி - இனிமேலும் என்னெதிரில் நில்லாது போய்விடு; நின் புன் பொறி நாவை - அற்பப் பேச்சுக்களைப் பேசுதற்குக் கருவியாகிய உனது நாக்கை, சேதியாது - அறுத்தெறியாமல், இது பொறுத்தனென் - இக்குற்றத்தை (நான்) பொறுத்துக்கொண்டேன்; புறம் சிலர் அறியின் - (உன் கருத்தை) வெளியே சிலர் அறிவராயின், நீதி அல்லவும் - அரச தருமமல்லாதனவும், நெறி முறை அல்லவும் - ஒழுங்குமுறையல்லாதனவுமாகிய தீயவற்றை, நினைந்தாய் ஆதி - நீ சூழ்ந்தாய் என்னும் குற்றத்துக்குள்ளாவாய்; ஆதலின்—, அடங்குதி - இவ்வளவோடு நிறுத்திக்கொள்; என்றாள் - என்று கூறி முடித்தாள்.

'மதிகெட்டவளே, நீ பேசிய பேச்சுக்கு உன் நாக்கை அறுத்திருக்கவேண்டும். நீ என் பழமையான தோழியாதலால் அது செய்யாது நான் பொறுத்துக்கொண்டேன். நீ கூறியவற்றை வெளியே எவரேனும் அறிந்தால், அரசுக்குக் கேடு சூழ்ந்தாய் என்னும் பெருங் குற்றத்திற்காளாகி அதற்குரிய தண்டனையையும் பெறுவாய்; ஆதலால், இவ்வளவோடு உன் நாவை அடக்கிக்கொள்; இனி என்னெதிரிலும் நில்லாதே போய்விடு' என்று கடுமையாகக் கூறி முடித்தாள் கைகேயி.

161-ஆம் பாடல்முதல் இதுகாறும் ஒரு தொடராய், 'என்றாள்' என்றது கொண்டு முடிவுற்றன. சேதித்தல் - துண்டித்தல். அல்ல: வினையாலணையும் பெயர். ஆதி: முன்னிலை வினைமுற்று. அறிவிலி: விளி.

(பி - ம்.) 1. மின்று நின்புன்மொழி, மின்று முன்புன்பொறி, மின்றமின் புன்பொறி புகன்ற நின்புன்பொறி.
2. அது பொறுத்தனென், இது பொறுத்தனள்.
3. நீதியல்லன.
4. ஆதியாதலில்; அடங்குதி யறிவிலி. (67)

கூனி மேலும் கூறுதல்

165. அஞ்சி மந்தரை யகன்றில ளம்மொழி கேட்டும்
நஞ்சு தீர்க்கினுந் தீர்கிலா ததுநலிந் தென்னத்
தஞ்ச மேயுனக் குறுபொரு ளுணர்த்துகை தவிரேன்
வஞ்சி போலியென் றடிமிசை வீழ்ந்துரை வழங்கும்.

நஞ்சு - (ஒருவருடலுட் சென்ற) விஷம், தீர்க்கினும் - மந்திரத்தாலே (அதனைத்) தீர்க்க முயன்றாலும், தீர்கிலாது - தீராமல், அது—, நலிந்தது என்ன - வருத்துமாறுபோல, மந்தரை—, அம்மொழி கேட்டும் - (கைகேயி கூறிய) அக்கடிந்துரையைக் கேட்டும், அஞ்சி அகன்றிலள் - அஞ்சி அவ்விடம்விட்டகலாதவளாய் (கைகேயியை நோக்கி), வஞ்சி போலி - வஞ்சிக் கொடி போன்றவளே, தஞ்சமே - (எனக்குப்) பற்றுக்கோடானவளே, (நீ என்னை வெகுளினும்) உனக்கு உறுபொருள் - உனக்கு நன்மை தரும் உறுதியான பொருளை, உணர்த்துகை தவிரேன் - உனக்கறிவுறுத்தலை விடேன், என்று - என்று சொல்லி, அடிமிசை வீழ்ந்து - அவள் பாதங்களில் விழுந்து வணங்கி, உரை வழங்கும் - (மேலும்) தன்னுரைகளை விரித்துக் கூறலுற்றாள்.

'நின் நாவைச் சேதியாது இது பொறுத்தேன்' எனக் கைகேயி முன்னர்க் கூறியவதனால், மந்தரை சிறிது இடம் பெற்றவளாய் அவளுள்ளம் நெகிழும் வகையில் அவளைப் பணிந்தெழுந்து, 'எனக்குப் பற்றுக்கோடாவார் உன்னையன்றி வேறில்லை; ஆதலால், நீ என்னை எவ்வளவு கடிந்தாலும், நான் உனக்கு நன்மை தருமவற்றைக் கூறாது விடேன்' என்று துணிந்து மேலும் கூறலானாள்.

'கைகளிற்றீண்டினள்' (140) எனக் கூனியை முன்னர்க் கூறியதற்கேற்ப இங்கே அவளுக்கு நஞ்சை உவமையாக்கினார். "வெவ்விடமனையவள்" (143) எனவும் கூறினார். கூனியின் சொல்லாகிய நஞ்சு, கைகேயியின் கடிந்துரையாகிய மந்திரத்தாலே தீராமல் மீண்டும் அவளை வருத்துவதாயிற்று. வழங்கும் : 160 - ஆம் பாடலின் விசேடக் குறிப்புக் காண்க.

நலிந்தென்ன : தொகுத்தல். உணர்த்துகை : தொழிற் பெயர்.

(பி - ம்.) 2. தீர்க்கினும் தீர்க்கிலாதது, தீர்க்கவும் தீர்கிலாதது, தீர்க்கவுந் தீர்க்கிலாதது, தீர்க்கிலாவது, தீர்க்கிலுந் தீர்கிலாதது, தீர்க்கலுந் தீர்க்கலாதது.
3. உணர்த்துதல்.
4. பஞ்சுகோலிய, பஞ்சுபோலியென்று; அடிமிசை விழுந்துரை, வீழ்ந்திலவ, வீழ்ந்திது, அடிமிசைப் படித்துரை, அடியிணை வீழ்ந்துரை பகரும். (68)

166. மூத்த வற்குரித் தரசெனு முறைமையி னுலகம்
காத்த மன்னனி னிளையனன் றேகடல் வண்ணன்
ஏத்து நீண்முடி புனைவதற் கிசைந்தன னென்றால்
மீத்தருஞ் செல்வம் பரதனை விலக்குமா றெவனோ.

மூத்தவற்கு உரித்து அரசு எனும் முறைமையின் - (ஒரு குடியில்) மூத்தவனுக்கே அரசுரிமை யுண்டென்னும் முறைப்படி (பார்த்தால்), உலகம் காத்த மன்னனின் - இதுகாறும் உலகை ஆண்டுவரும் நம் சக்கரவர்த்தியினும், கடல் வண்ணன் இளையன் அன்றே - கடல் போலும் நீலமேனியுடைய இராமன் இளையவனல்லனோ? (அங்ஙனமாக, அவனுக்கு) ஏத்தும் நீள் முடி புனைவதற்கு - யாவரும் புகழ்தற்கொத்த பெரிய முடியைச் சூட்டுதற்கு, இசைந்தனன் என்றால் - நம் அரசர் ஒருப்பட்டாரெனின், மீதரும் செல்வம் - மேன்மையுடைய அவ்வரசுச்செல்வம் அடைதலில், பரதனை விலக்கும் ஆறு எவனோ - பரதனை நீக்கும் வகை யாதோ?

இதுமுதல் எட்டுப் பாடல்கள் கூனியின் உரை.

'ஒரு குடியில் மூத்தவனே அரசாளுதற்குரியன் என்றால், அத்தகுதியுடைய ஒருவன் உள்ளவரையில் வேறொருவருக்கு அரசு உரிமையாதல் தகாது; எனவே, நம் அரசர் உள்ளபோதே இராமனை அரசனாக்குதல் பொருந்தாது; அது பொருந்துமெனின், பரதனுக்கு அரசளித்தலும் பொருந்துவதே யன்றோ? அவனை விலக்கி இராமனுக்கே அரசுரிமை முழுதும் அளித்தல் ஏன்? இதனை நீ சிந்தித்துப் பார்' என்று குழப்புகின்றாள் கூனி. மூத்தவன் - மூத்த புதல்வன் என்பதனை வயதில் மூத்தவன் என்றாக்கிக்கொண்டு கூறுகின்றாள்.

அரசன் இருக்கவும் இராமன் முடிசூட இசைந்தமை: 961, 1190 பார்க்க.

(பி - ம்.) 1. மூத்தவர்க் குரித்து, மூத்தவர்க்குளது; அரசெனின் முறைமையின், அரசெனின் முறையினின், அரசது முறைமையின்.
2. மன்னனுக்கு.
3. ஏத்துநன்முடி, ஏத்தகன்முடி; புனைவதற்கியைந்தனன்.
4. ஏத்தரும், பாத்தரும், பார்த்தரும், பரதற்கங்காகுவதிலதோ. (69)

167. அறநி ரம்பிய வருளுடை யருந்தவர்க் கேனும்
பெறல ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதாம்
மறநி னைந்துமை வலிகில ராயினு மனத்தால்
இறலு றும்படி யியற்றுவ ரிடையரு வின்னல்.

அறம் நிரம்பிய - துறவறம் முற்றிய, அருள் உடை(ய) அருதவர்க்கேனும் - (மிக்க) அருட்குணமுடைய அரிய தவசியர்க்குங்கூட, பெறல் அரு திரு பெற்றபின் - பெறுதற்கரிய பெருஞ் செல்வத்தை (அவர்கள்) அடைந்த பின்னர், சிந்தனை பிறிது ஆம் - (அவர்கள்) மன

நிலை வேறுபடும்; மறம் நினைந்து - (கோசலையும் இராமனும் இதுகாறும் உமக்குத்) தீமையை எண்ணி, உமை வலிகிலர் ஆயினும் - உங்களை (பரதனையும் உன்னையும்) துன்புறுத்தாவிடினும், (செல்வம் பெற்றபின்) மனத்தால் இறல் உறும்படி - (நீங்கள்) மனம் முறிந்து இறக்கும் வண்ணம், இடையரு இன்னல் இயற்றுவர் - இடைபருத துன்பங் களை (உங்களுக்கு)ச் செய்வார்கள்.

'பெருஞ் செல்வம் பெற்றால் எத்தகையவரும் மனந் திரிவர்; அருட்குண முடையோரையும் வன்னெஞ்சராக்க வல்லது செல்வம்; ஆதலால், இராமனும் கோசலையும் இதுகாறும் உங்களிடம் அன்புள்ள வராயிருப்பினும், அரசெய்தியபின் அவர்கள் மனம் வேறுபட்டு, நீங்களே மனமுடைந்து உயிர்விடத் துணியுமளவுக்கு உங்களைப் பெருந் துன்பத்திற்குள்ளாக்குவர்' என்றவாறு. 'மனத்தால்... இயற்றுவர்' என்றது, அவர்கள் உமக்குச் செய்யும் தீங்குகள் வெளிப்படை யாகத் தோற்ற என்றபடி. மூன்றமடி முதலில், அருளுடை யருந்தவர் என்றதனால், அறம் ஈண்டுத் துறவறம் எனப்பட்டது. இறல் - சாவு.

செல்வத்தால் மனம் வேறுபடல்: "செல்வம்வந் துற்ற காலைத் தெய்வமும் சிறிது பேணார், சொல்வன வறிந்து சொல்லார் சுற்றமுந் துணையு நோக்கார்...மண்ணின்மேல் வாழு மாந்தர்" (வி. பா. கிருட்டினன் தூது. 143); குறிஞ்சிப். 244 - 5. ந. உரை பார்க்க.

(பி - ம்.) 1. அறனிரம்பிய; அருந்தவர்க்கேயும், அருந்தவர்க்கெனினும், அருந் தவற்கேனும்.
3. நினைந்துமை வலிகலர், நலிகிலர், நினைந்துமெய் வலியிலர், நினைந்துனை வலிகிலர்; ஆயினுமறத்தால்.
4. இறவிறும்படி, இறனினைக்கிட, இயற்றுவார். (70)

168. புரியுந் தன்மக னரசெனிற் பூதல மெல்லாம்
எரியுஞ் சிந்தனைக் கோசலைக் குடைமையா மென்றால்
பரியு நின்குலப் புதல்வற்கு நினக்குமிப் பார்மேல்
உரிய தென்னவ ளுதவிய வொருபொரு ளல்லால்.

எரியும் சிந்தனை கோசலைக்கு - பொறாமை உள்ளமுள்ள கோசலைக்கு, தன் மகன் அரசு புரியும் எனின் - தன் மகன் இராமன் அரசு புரிவானாகில், பூதலம் எல்லாம் உடைமை ஆம் - பூமி முழுதும் தன் உடைமையாகும்; என்றால் - அவ்வாறாயின், (அதன்பின்) இ பார்மேல் - இவ்வுலகத்தில், பரியும் நின் குலம் புதல்வற்கும் - இரங்கத் தக்க உன்னுடைய சிறந்த புதல்வனாகிய பரதனுக்கும், நினக்கும் - உனக்கும், அவள் உதவிய ஒரு பொருள் அல்லால் - அவள் பார்த்துக் கொடுக்கும் சிறு பொருளையன்றி, உரியது என் - (உனக்கே) உரிமை யாகவுள்ளது என்ன இருக்கும்?

ஒரு பெண்ணின் மனம் திரிதற்குரிய வகையை நாடி, அதற்கேற்றவாறு உரையாடுகின்ருள் கூனி. 'கோசலை பெருமைக்குணமுடையவள்; நீ பெருமையோடும் இன்பத்தோடும் வாழப் பொருள். இப்போது அவள் தன் கருத்தின்படி எதுவுஞ் செய்தற்கிடமின்மையால் வாளாவிருக்கின்ருள். இராமன் அரசெய்தியபின் அவள் கை மேலோங்குவது உறுதி; அப்போது அவள், நீயும் உன் மகனும் தன் கீழ் அடங்கித் தன் கையை எதிர்பார்த்திருக்கவே வகை செய்வாள். இராமனும் அவள் சொற்கேட்டு நடப்பான். அவற்றின் விளைவை நீயே ஓர்ந்துகொள். நீ வெள்ளை யாதலின் எதனையும் சிந்திக்கின்ருயில்லை' என்கின்ருள், 'இராமனைப் பயந்தவெற்கிடருண்டோ' (144) என்று கூறிய கைகேயியின் மனத்தை மாற்றுதற்கு.

பரியும் - இரங்கத்தக்க நிலைமையுடைய; நீ அன்பு செய்தற்குரிய என்றலும் ஆம். ஒரு : சிறுமை குறித்தது.

(பி - ம்.) 1. தன்மகற் கரசெனின்.
2. விரியுஞ் சிந்தனைக்; உடைமையாமென்ருர், உடைமையாமன்றே, உடைமையாய்மேவி.
3. பிரியும், புரியும்; நின்மகன் பரதற்கும்; உனக்குமிப்படிமேல், பார்மேல், நினக்குமிப்படிமேல்.
4. உரியதென்னவர், உரியதென்னிவள், உரியவென்னவள், உரியவென்னவர்; உதவியதொருளல்லால், உதவியதொருபொருளிலவால், உதவியவொண்பொருளல்லால், உறுபொருளுதவியதல்லால். (71)

169. தூண்டு மின்னலும் வறுமையுந் தொடர்தரத் துயரால்
ஈண்டு வந்துனை யிரந்தவர்க் கிருநிதி யவளை
வேண்டி யீதியோ வெள்குதி யோவிம்ம ஞேயால்
மாண்டு போதியோ மறுத்தியோ வெங்ஙனம் வாழ்தி.

தூண்டும் இன்னலும் - (இரக்கும்படி தம்மைத்) தூண்டும் பசித் துன்பமும், வறுமையும் - நுகர் பொருளில்லாமையும், தொடர்தர - (தம்மைத்) தொடர்ந்தே வர, துயரால் - அந்த மனக் கலக்கத்துடன், ஈண்டு வந்து - (உன்னிடம் பொருள் பெறக்கருதி) இங்கே வந்து, உனை இரந்தவர்க்கு - உன்னை யாசிப்பவர்க்கு, இரு நிதி - (அவர் வறுமையைத் தீர்த்தற்குரிய) பெரும்பொருளை, அவளை வேண்டி ஈதியோ - அவள்பால் இரந்து பெற்றுக் கொடுப்பாயோ? (அன்றி) வெள்குதியோ - (அந்த நிலை குறித்து) நாணுவையோ? (அன்றி) மறுத்தியோ - (இல்லையென வந்தோர்க்கு) இல்லையென்று மறுப்பாயோ? (அன்றி) விம்மல் நோயால் - (அப்போதுண்டாகும்) மனவருத்தமாகிய நோயினுல், மாண்டு போதியோ - இறந்து படுவாயோ? எங்ஙனம் வாழ்தி - நீ எவ்வாறு வாழப்போகின்ருய்?

இதில், மந்தரையின் கூற்று, கைகேயிக்கு வரவிருக்கும் தீழ்மையை மிகைப்படச் சித்திரிக்கின்றது.

இன்னல் - பசித்துன்பம்; வறுமை - நுகர் பொருளின்மை; இவை ஒருவரைத் துணிந்து இரத்தற்குத் தூண்டிவிட்டுத் தீராது பற்றி நிற்பன; ஆதலால், 'தூண்டும்...தொடர்தர' என்றாள். "சாதலி னின்னாத தில்லை யினிததூஉம், ஈத லியையாக் கடை" (குறள். 230) என்பவாகலின், 'மாண்டுபோதியோ' என்றாள். "ஈத லிரந்தார்க்கொன் றாற்றாது வாழ்தலிற், சாதலுங் கூடுமா மற்று" (குறிஞ்சிக்கலி, 61) என்பதும், "இன்மை யுரைத்தார்க் கதுநிறைக்க லாற்றாக்கால், தன்மெய் துறப்பான் மலை" (ஷை. 43) என்பதும் ஈண்டு நோக்கத் தகுவன. இரந்தார்க்கில்லையென மறுத்தல் குலனுடையார்க் கழகன் மையின் 'மறுத்தியோ' என்றாள். இவற்றால், 'ஈதலும் இசைபட வாழ்தலுமாகிய ஊதியத்தை நீ பெறாது மானக்கேடுறுவாய்' எனக் கைகேயிக்குக் குத்திக் காட்டியவாறும்.

துயரால் - துயரோடு; உருபு மயக்கம்.

(பி - ம்.) 1. தூண்டுமின்மையும்; துயராய்.
2. அருமிதி; அவனே, இவனே.
3. வெஃகுதியோ விம்மனோயால், ஓர்தியோ விம்மனீ நோயால்.
4. மாண்டுபோகுதி; மறுத்தியே; எங்ஙனீ வாழ்தி, எங்ஙனீவாழுதி யென்றாள். (72)

170. சிந்தை யென்செயத் திகைத்தனை யினிச்சில நாளில்
தந்த மின்மையு மெளிமையு நிற்கொண்டு தவிர்க்க
உந்தை யன்னையுன் கிளைஞர்மற் றுன்குலத் துள்ளோர்
வந்து காண்பதுன் மாற்றவள் செல்வமோ மதியாய்.

என் செய சிந்தை திகைத்தனை - என்ன செய்யும்பொருட்டு மனம் திகைத்து நிற்கின்றாய்; இனி சில நாளில் - மேலே சில நாட்களில், உந்தை - உன் தந்தை, அன்னை - (உன்) தாய், உன் கிளைஞர் - உன் சுற்றத்தார், மற்று உன் குலத்து உள்ளோர் - அவரல்லாத உன் குடியைச் சார்ந்தோர் பிறர் (ஆகிய பலரும்), தம் தம் இன்மையும் - தத் தமக்கு ஒன்று இல்லாமையையும், எளிமையும் - (பொருளின்மையால் வரும்) தாழ்வையும், நின்கொண்டு - உன்னைக்கொண்டு, தவிர்க்க - போக்கிக்கொள்ளுமாறு, வந்து - (உன்னை நாடி இங்கே) வந்து, காண்பது - (அப்போது அவர்கள்) பார்ப்பது, உன் மாற்றவள் செல்வமோ - உன் மாற்றாளாகிய கோசலையின் பெருவாழ்வையோ? மதியாய் - இதனை நினைத்துப் பார்.

'காலத்தின் கூறுபாட்டால், உன் தந்தை, தாய் முதலிய உன்னை சேர்ந்தோர் யாவரேனும், தமக்கொரு குறையுண்டாக, நீ பேரரசியா யிருத்தலால் அக்குறையை உன்னாலே நீக்கிக்கொள்ளக் கருதி இங்கே வந்து நீ யாதொன்றும் செய்தற்கியலாத நிலையில் இருத்தலைக் காணின் அப்போது நேர்வது யாதென்பதனைச் சிந்தித்துப் பார்' என்கின்றாள்.

அயலார் இரக்கும்பொழுது கொடுக்க இயலாமையைக் கைகேயி உளங்கொள்ளாவிட்டாலும், அவனைச் சேர்ந்தோருக்கே அவளால் உதவிசெய்ய இயலாத நிலை உண்டாகும் என்று கூறி, அவள் உள்ளம் வேறுபடும் வகையை நாடுகிறாள். கைகேயியின் தந்தை முதலியோருக்கு மேலே வரக்கடவ இன்னல் சிலவற்றைக் கூனி எடுத்துக் கூறுகின்றாள். தாய்வீட்டாரிடத்துத் தனிப் பரிவுடைமை பெண்டிர் இயல்பு. இங்ஙனம் சக்களத்திக் காய்ச்சலை இவள் தூண்டுகின்றாள்.

(பி · ம்.) 1. சிந்தை செய்கையில், சிந்தையென் செய்து.
2. நிற்கொண்டு தவிர்க்கும்.
3. உந்தையுன்னையுன், உந்தையுன்னையர், உக்தையன்னையர், உக்தமன்னையுன்; குலத்துள்ளார்.
4. காண்பது மாற்றவள், மற்றவள். (73)

171. காத லுன்பெருங் கணவனை யஞ்சியக் கனிவாய்ச்
சீதை தந்தையுன் றாதையைத் தெறுகில னிராமன்
மாது லன்னவ னுந்தைக்கு வாழ்வினி யுண்டோ
பேதை யுன்றுணை யாருளர் பழிபடப் பிறந்தார்.

அ கனிவாய் சீதை தந்தை – கொவ்வைக் கனி போலச் சிவந்த வாயினையுடைய அந்தச் சீதையின் தந்தை, உன் பெருங் காதல் கணவனை அஞ்சி – உன்னிடத்துப் பெருங் காதலையுடைய உன் கணவனுக்கஞ்சியே, உன் தாதையை தெறுகிலன் – உன் தந்தையை (இதுகாறும்) அழித்தானில்லை; அவன் இராமன் மாதுலன் – அந்தச் சனகன் (இப்போது அரசனாகப் போகிற) இராமனுக்கு மாமன்; (ஆதலால்) உந்தைக்கு – உன் தந்தைக்கு, இனி வாழ்வு உண்டோ – இனி நல்வாழ்வு உளதாகுமோ? (ஆகாது); பேதை – அறிவிலியே, பழிபட பிறந்தார் – (தனக்கும் தன்னைச் சார்ந்தாருக்கும்) பழியுண்டாகும்வண்ணம் பிறந்திருப்பவர், உன் துணை யார் உளர் – உன்னைப் போல (வேறு) எவர் உளர்?

'சனகன் முன்னமே உன் தந்தையிடத்துப் பகையுடையவன்; உன் கணவனுக்கு அஞ்சி அவன் இதுவரை அதனை வெளிக்காட்டாது வைத்துள்ளான்; இனி இராமன் அரசனாகிவிடின், அவன் தன் மாமன் கருத்துக்கியையவே நடப்பான்; ஆதலால் இனி உன் தந்தை அரசோடு வாழ்தலரிது; அதற்கும் நீயே காரணமாகின்றாய்' என்றாள். எனவே, 'தனக்கும் தன்னைச் சார்ந்தார்க்கும் நல்வாழ்வுக் கிடனின்றிக் கெடுக்கும் பேதை நீ' எனக் கைகேயியின் மனத்தில் உறைக்குமாறு கூறுகின்றாள்.

கனிவாய்ச் சீதை : "சிவந்தவாய்ச் சீதை" (152) என முன்னும் இவள் கூறினமை காண்க. சீதை தந்தை என்றதோடமையாது, 'இராமன் மாதுலன் அவன்' என மீண்டும் கூறியது, இராமன் அர

செய்துதலால் சீதையும் மேன்மையடைவாள், இராமன் அவள் பொருட்டுத் தன் மாமன் வசப்பட்டு நடப்பான் என்பது குறித்தது. 'அவனும் கோசலையும் நீ பெருமையுறுதலைக் கருதார். எனவே, எவ்வகையிலும் உனக்கும் உன்னைச் சார்ந்தார்க்கும் இனி வாழ்வில்லை' என்றவாறு.

(பி - ம்.) 1. அஞ்சிய கனிவாய்ச்.
2. உந்தாதையைத்; தெறுகலன்.
3. உந்தைக்கு வாழ்வினையுண்டோ, உந்தை வாழ்வினியுண்டோ மதியாய், உந்தை வாழ்வுண்டது மதியாய், வாழ்வுண்பது மதியாய்.
4. பேதை நின்றனை; பழிபடப் பிறந்தாய், வழிபடப் பிறந்தார், வழி கெடப் பிறந்தார். (74)

172. மற்று நுந்தைக்கு வான்பகை பெரிதுள மாற்றார்
செற்ற போதிவர் சென்றுத வாரெனிற் செருவிற்
கொற்ற மென்பதொன் றெவ்வழி யுண்டது கூறாய்
சுற்ற முங்கெடக் கடுந்துயர்க் கடல்விழத் துணிந்தாய்.

நுந்தைக்கு - நின் தந்தைக்கு, மற்றும் வான்பகை பெரிது உள - (சனகனையன்றி) வேறும் சிறந்த பகைகள் மிகவுள்ளன; மாற்றார் - அப்பகைவர், செற்றபோது – கோபித்து (நின் தந்தைமீது) போர் தொடுத்தபோது, செருவில் - அப்போரில், இவர் சென்று உதவார் எனில் - இவ்விராமன் முதலியோர் (உன் தந்தைக்குத் துணையாகச்) சென்று உதவாராயின், கொற்றம் என்பது ஒன்று - வெற்றி யென்னும் ஒரு சிறப்பு, எவ்வழி உண்டு - அவர்களுக்கு எவ்வாறு உளதாகும்? அது கூறாய் - அதனை நீயே சொல்; (ஆதலால்) சுற்றமும் கெட - உன் சுற்றத்தாரும் அழிய, கடு துயர் கடல் விழ துணிந்தாய்-(நீயும்) கடுமையான துயரமாகிய கடலிலே விழத் துணிந்து நிற்கின்றாய் (இது வியப்பே).

'சனகனேயன்றி, வேறு சில கடும் பகைவரும் உன் தந்தைக்கு உள்ளனர். அவர்கள் காலமும் இடமும் பெற்றுப் போர் செய்ய வருங்கால், நின் தந்தைக்குத் துணையாவாரின்றிப் போரில் அழிந்துபட நேரும். எனவே, அவர்களும் அழிய, நீயும் கண் காண முடியாத துயர்க் கடலில் வீழ்ந்தழிவாய்; இக்கேடுகளுக்கு நீயே துணிந்து நிற்கின்றாய்' என்கிறாள். 'அரசை இராமனுக்களித்தபின், சக்கரவர்த்தி தவநெறிச் செல்வராய்ப் போரிற் புகுதல் இலராவார்; இராமனோ துணை போகமாட்டான். இராமனெவ்வழி இலக்குவனவ்வழி' என்ப, வற்றை யுட்கொண்டு, 'இவர் சென்றுதவாரெனில்' எனப் பன்மையாற் கூறினாள். 'தன் சுற்றத்தையுங் கெடுத்துத் தானுங் கெட அறிவுடையோர் எவரும் விரும்பார்; நீ அக்கேட்டுக்குத் துணிந்த அறிவிலியாகின்றாய்' எனக் கூனி கைகேயியின் மனவெழுச்சியைத் தூண்டுகிறாள்.

(பி - ம்.) 1. மற்றுன் றந்தைக்கு. மற்று முந்தைக்கு; பகை பெரிதுற, பகை பெரிதினம்; மறத்தார், மறத்தால்.
3. என்பதென்று, எவ்வழியுள்ளது.
4. கெடச் சுடுதுயர்க். (75)

173. கெடுத்தொ ழிந்தனை யுனக்கரும் புதல்வனைக் கிளர்நீர்
உடுத்த பாரக முடையவ னொருமகற் கெனவே
கொடுத்த பேரர சவன்குலக் கோமைந்தர் தமக்கும்
அடுத்த தம்பிக்கு மாம்பிறர்க் காகுமோ வென்றாள்.

உனக்கு அரு புதல்வனை - உன் அருமைப் புதல்வனாகிய பரதனை, கெடுத்தொழிந்தனை - (நீயே) கெடுத்துவிட்டாய்; கிளர் நீர் உடுத்த - மிக்க கடல் நீரை ஆடையாக உடுத்த, பாரகம் உடையவன் - பூமி முழுதும் உடைமையாகக் கொண்ட நம் அரசர், ஒரு மகற்கு எனவே கொடுத்த பேர் அரசு - தன் அருமைப் புதல்வன் ஒருவனுக்கே (உரிமையாகக்) கொடுத்துள்ள இப்பேரரசு, (இனி, அவனுக்குப் பின்) அவன் குலம் கோ மைந்தர் தமக்கும் - அவ்விராமன் குலமென்று தோன்றும் சிறந்த புதல்வருக்கும், அடுத்த தம்பிக்கும் - (அவனை எப் போதும்) அடுத்துள்ள தம்பியாகிய இலக்குவனுக்கும், ஆம் - உரிய தாகும்; பிறர்க்கு ஆகுமோ - (அவரன்றிப்) பிறருக்கு உரியதாகுமோ? (ஆகாது); என்றாள் - என்று சொல்லி முடித்தாள்.

'கோசலையைப் போல நீயும் முயன்றிருந்தால், உன் மகன் பரதனை அரசனாக்கியிருக்கலாம்; அஃதின்மையின் அவனை நீ கெடுத்தவ ளாகின்றாய். இருவருக்கும் பகிர்ந்தளித்தற்குரிய அரசை, நம் அரசர் ஒரு மகனுக்கே கொடுத்துவிட்டதனால், இனி அரசு, இராமன் வழி வரும் குலத்தோன்றல்களுக்கும், அஃதின்றேல் இலக்குவனுக்குமே உரியதாகும். பரதனும், சத்துருக்கனும் நிலைகெட்டுத் தடுமாறுவர்'. என்கின்றாள். 'மன்னவனுக்கு அரும்புதல்வன் இராமனென்றால், உனக்குப் பரதன் அரும் புதல்வன்; எவ்வகையிலும் இராமனுக்குக் குறைவில்லாதவன்' என்பாள், 'உனக்கரும்புதல்வனை' என்றாள். 151 பார்க்க.

இதன்பின், ஓரேட்டில் பின்வரும் பாடல் ஒன்று காணப் படுகின்றது :

"உன்னை யீன்றவ ளுனக்கடைக் கலமென வுரைத்த
முன்னை வாசகத் தாலுமென் ணுக்கைபோய் முடிந்த
பின்னை யாவரும் பழிபடப் பேசுவ ரென்றும்
நின்னை வேண்டியு மீதுரைத் தேனென நின்றாள்."

கைகேயியின் தாய்வீட்டிலிருந்து அவளுடனே வந்தவள் கூனி என்பது இப்பாடலால் புலனாகின்றது.

(பி - ம்.) 1. உன்னரும்.
2. பாரகமுடையவர்க்கு. பார்முழுதுடையவன், பாரெலாமுடையவன்; ஒரு மகனெனவே.
3. கொடுத்த பேரரசவனது, கொடுத்ததோ ரரசவனது, கொடுத்த போதவன்றன் குலக்; கோமைந்தன் றனக்கும், கொளமைந்தர் தமக்கும்.
4. கம்பிக்கும். (76)

கைகேயி மனம் திரிதல்

174. தீய மந்தரை யிவ்வுரை செப்பலுந் தேவி
தூய சிந்தையுந் திரிந்தது சூழ்ச்சியி னிமையோர்
மாயை யும்மவர் பெற்றநல் வரமுண்மை யாலும்
ஆய வந்தண ரியற்றிய வருந்தவத் தாலும்.

தீய மந்தரை - கொடியவளாகிய கூனி, இவ்வுரை செப்பலும் - இந்த வார்த்தைகளைச் சொன்னவளவில், இமையோர் மாயையும் - தேவர்களின் மாயையாலும், அவர் பெற்ற - அவர்கள் (திருமால்பால்) பெற்றுள்ள, நல்வரம் உண்மையாலும் - நல்ல வரம் இருத்தலாலும், ஆய - ஆக்கமுடையோராகிய, அந்தணர் இயற்றிய - முனிவர்கள் செய்துள்ள, அரு தவத்தாலும் - அரிய தவத்தின் பயனாலும், தேவி தூய சிந்தையும் - கைகேயி தேவியின் தூய மனமும், சூழ்ச்சியின் - மந்தரையின் வஞ்சனைச் சூழ்ச்சியுரைகளால், திரிந்தது - வேறுபட்டது.

இதுவரை கூனி சொல்லிவந்த வார்த்தைகளால், சிறிது சிறிதாகக் கைகேயியின் தூய மனமும் திரியத் தொடங்கி, இறுதியில் பரதன் இனி அரசு பெறுதற்கும் பெருமையுறுதற்கும் இடமேயில்லை யென்ற சொல்லால் முழுதும் வேறுபட்டது என்க. அவ்வேறுபாட்டுக்குக் கூனியின் சொற்கள் மட்டுமன்றி, தேவர்கள் அரக்கரை யழித்தற் பொருட்டுத் திருமால்பால் வரம் பெற்றமை, அது காரணமாக அவர்கள் செய்த மாயை, தண்டகவனத்துத் தவமுனிவர் முதலியோரின் அரிய தவப் பயன் ஆகியவையும் காரணமாயின என்று கவி கூறுகின்றார். கூனி தேவர்களால் தூண்டப்பட்டு வந்தவள் என்பது பழைய வரலாறு; அதனை 'இமையோர் மாயை' எனக் குறித்தார். கைகேயியின் மனத் தூய்மை, முன்னே அவள் சொற்களாலும் செயலாலும் அறியப்பட்டது.

சிந்தையும் : உம்மை, உயர்வு சிறப்பு. மாயையும் என்றதில் மூன்றனுருபு விரிக்க.

(பி - ம்.) 1. மந்தரை யவ்வுரை, கூனிமற்றிவ்வுரை.
2. தூய சிந்தனை; சூழ்ச்சியினினியோர்.
3. மாயை யுண்மையும், மாயை யுந்தவும், மாயையார்லுமற்; பெற்றுள வரவுண்மையாலும், வரம்பெற்ற வரன் முறையாலும், பெற்றுள வரமுண்மையாலும், அவர்பெற்ற வரமுண்மையாலும், அவர் பெற்ற வரம் பலத்தாலும், வேண்டிய வரவுண்மையாலும்.
4. ஆயுமந்தணர்; மாதவத்தாலும், நல்லறத்தாலும். (77)

175. அரக்கர் பாவமு மல்லவ ரியற்றிய வறமும்
துரக்க நல்லரு டுறந்தன டூமொழி மடமான்
இரக்க மின்மைய னன்றேயின் றிவ் வுலகங்க ளிராமன்
பரக்குந் தொல்புக ழமுதினைப் பருகநின் றதுவே.

அரக்கர் பாவமும் - அரக்கர் செய்த பெரும் பாவமும், அல்லவர் - அவ்வரக்கரல்லாதோர் (நல்லோர்), இயற்றிய அறமும் - செய்த தருமப் பயனும், துரக்க - தூண்டுதலால், தூமொழி - தூய சொற்களைப் பேசிய, மடம் மான் - இளமான் போன்றவளாகிய கைகேயி, நல் அருள் துறந்தனள் - (தன் மனத்திலிருந்த) நல்ல அருளை (முற்றும்) விட்டவளானாள்; இரக்கம் இன்மை அன்றே - (அவ்வாறுண்டான அவளுடைய) இரக்கமில்லாக் குணமன்றோ, இ உலகங்கள் - இந்த எல்லாவுலகங்களும், இராமன் - இராமபிரானுடைய, பரக்கும் - எங்கும் பரந்து விரிகின்ற, தொல்புகழ் அமுதினை - பழமையான புகழென்னும் அமுதத்தை, இன்று பருக நின்றது - இன்றும் பருகி மகிழக் காரணமாகி நின்றது? ஏகாரம் : ஈற்றசை.

முன் கவியுள், 'தேவியின் தூய சிந்தை திரிந்தது' என்றவர், இங்கே, அத்திரிபு, அவள் அருட்குண முழுதும் துறத்தற்கிடமாயிற்று என்கின்றார். சிந்தை திரிதலுக்கு முன்னே சொல்லியவற்றோடு, அருளைத் துறப்பித்தற்கு இரண்டு காரணங்கள் இங்கே கூறுகின்றார். அவள் சிந்தை போலச் சொற்களும் தூயன என்பார், தூமொழி மடமான் என்றார். அவள் அருளைத் துறந்தது, இராமபிரான் காடேகுதலும், இராவணன் முதலியோர் அழிவும் நிகழ்தற்கும், அவற்றால் இராமபிரான் பெரும்புகழ் என்றும் அழியாது நின்று நிலவுதற்கும் காரணமாயிற்றென்பதைச் சமத்காரமாகக் குறிக்கின்றார். ஒரு தீமை, பின்னர்ப் பெருநன்மைக்குக் காரணமாயிற்றென்ற நயம் ஓர்தற்பாலது. முன் கவியுள் அந்தணர் தவத்தைக் குறித்து, இங்கே பொதுவாக நல்லோர் அனைவரும் செய்த அறத்தைக் குறிக்கின்றார். கைகேயியை 'இரக்கமில்லாள்' என்று பின்னும் (1071) குறித்தல் காண்க.

(பி - ம்.) 1. இயற்றிய தவமும்.
2. துரக்க நல்லறம், தூய்மொழி மடமான், தூய்மொழி மடமாது, தூயவளனையாள், கேகயன்றோகை, கைகயன்றேலைக்கு.
3. அன்றேவன்றிவ்.
4. பருகுகின்றனவே; பருகுகின்றதுவே. (78)

கைகேயி கூறுதல்

176. அனைய தன்மைய ளாகிய கேகய னன்னம்
வினைநி ரம்பிய கூனியை விரும்பின ணோக்கி
எனையு வந்தனை யினியையென் மகனுக்கு மனையாள்
புனையு நீண்முடி பெறும்படி புகலுதி யென்றாள்.

அனைய தன்மையள் ஆகிய - (முன்னே கூறியவாறு, மனந்திரிந்து அருளையுந் துறந்த) அத்தன்மையுடையவளாகிய, கேகயன் அன்னம்-கைகேயி, வினை நிரம்பிய கூனியை - (தான் வந்த) காரியம் முற்றுப் பெற்ற கூனியை, விரும்பினள் நோக்கி - விரும்பிப் பார்த்து, எனை உவந்தனை - (நீ) என்னை மிகவும் விரும்புகின்றாய்; (எனக்கு நல்லவள்) என் மகனுக்கும் இனியை-என்மகன் பரதனுக்கும் இனியவளாகின்றாய்; (ஆதலால்), அனையான் - பரதன், புனையும் நீள் முடி - (அரசனாகிச்) சூடுதற்குரிய அப்பெரிய கிரீடத்தை, பெறும்படி - பெறும் வகையை, புகலுதி - சொல்வாயாக, என்றாள்—.

வினை நிரம்பிய - வஞ்சனை நிறைந்த எனவும், தேவர்கள் காரியம் முற்றுப்பெறக் காரணமான எனவும் கூறலாம்.

மனம் மாறியதனால் கைகேயி, முன்னே கூனியைக் கண்கள் சிவப்புறச் சினந்து நோக்கியவள், இப்போது விரும்பி நோக்கினாள்; ''எனக்கு நல்லையு மல்லை என்மகன் பரதன் றனக்கு நல்லையுமல்லை'' என்றவள், ''எனையுவந்தனை, என் மகனுக்கும் இனியை'' என்கின்றாள். ''வரன்முறை திறம்புதல் வழக்கோ'' என்றவள், ''பரதன் முடிபுனைதற் குரிய வழியைச் சொல்'' என்கின்றாள்.

விரும்பினள் : முற்றெச்சம்.

(பி - ம்.) 1. அனைய சிந்தையளாகிய, சிந்தனையாகிய; கைகய னன்னம், கேகயன்றனயை, கைகயன் றனயை, கைகயன்றனையள், கைகயத் தன்னம்.
3. இனியையுன் மகனுக்கும், இனியையென் மகனுக்கு மிங்கு; இனை யான், அனையாய்.
4. புனையுகன்முடி. (79)

மந்தரை கூறுதல்

177. மாழை யொண்கணி யுரைசெயக் கேட்டமந் தரையென்
தோழி வல்லளென் றுணைவல்ல ளென்றடி தொழுதாள்
தாழு மென்னினி யென்னுரை தலைநிற்பி னுலகம்
ஏழு மேழுமு னொருமகற் காக்குவெ னென்றாள்.

மாழை ஒண் கண்ணி - மாவடுவின் பிளவுபோலும் ஒளி பொருந்திய கண்களையுடைய கைகேயி, உரைசெய கேட்ட மந்தரை - (மேற் கண்டவாறு) கூறக் கேட்ட கூனி; என் தோழி வல்லள் - என் தோழி அறிவாற்றலுடையவள், என் துணை வல்லள் - (எப்போதும்) எனக்குத் துணையானவள் வல்லவளே, என்று - என்று கைகேயியைப் புகழ்ந்து சொல்லி, அடிதொழுதாள் - அவளடிகளை வணங்கி, என் உரை தலை நிற்பின் - (நீ) என் சொற்படி முன்னின்று செய்வாயாகில், இனி என் தாழும் - இனி எது (நடவாது) நிற்கும்? உலகம் ஏழும் ஏழும் - கீழேழும் மேலேழுமாகிய பதினான்கு உலகங்களையும், உன் ஒரு மகற்கு

ஆக்குவேன் - உன்னுடைய ஒரே மகனை பரதனுக்கு உரிமையாக்கு வேன்; என்றாள்—.

இதுகாறும் அறிவிலியெனக் கைகேயியைப் பழித்துரைத்த கூனி, இப்போது அவள் அறிவாற்றல்களில் வல்லவளே யென்று புகழ்ந்துரைத்து, தன் சொல்லைத் தட்டாது கேட்டு நடந்தால் பரதனை முடிசூடச் செய்தல் ஒரு தலையென்று அவளுக்கு உறுதி கூறு கின்றாள். கைகேயி முழுதும் தன் வசப்படுதற் பொருட்டு, அவளை வல்லள் என இருமுறை புகழ்ந்து அடி வணங்குதலும் செய்து தன் நிலையை உறுதிப்படுத்திக்கொண்டாள். முன்னே கைகேயியை 'நீயே எனக்குத் தஞ்சம்' என்றதனைத் தொடர்ந்து, இங்கே, எனக்கு எப்போ தும் துணையாவாள் நீயே' என்கின்றாள்.

தோழி, துணை என்பன முன்னிலையிற் படர்க்கை வந்தன. தொழுதாள் : முற்றெச்சம்.

பி - ம்.) 1. மாழையுண்கணி, உண்கண்ணி, ஒண்கண்ணி, மென்கணி; உரை செயக்கொடிய, உரை செய்யக் கேட்ட மந்தரைதான்.
2. வல்லளென் றுணை நல்லள், வல்லளென்றடியிணை, அடிமலர், நல்லையென்றடியிணை; இறைஞ்சினள் தொழுதாள், விதிமுறைதொழுதாள்.
3. தாழு மன்னிலை, அங்கிலை, தாழமென்னினி, தாழ்தலென்னினி, தாழ்வதென்னினி, தாழுமென்னுரை; கேட்டுமீதலை மிற்பின்.
4. ஏழு முன்னொரு, ஏழுமின்னெடும்; பெருமகற்கு, திருமகற்கு. (80)

178. நாடி யொன்றுநன் குரைசெய்வெ னளிர்மணி நகையாய்
தோடி வர்ந்ததார்ச் சம்பரன் றொலைவுற்ற வேலை
ஆடல் வென்றியா னருளிய வரமவை யிரண்டும்
கோடி யென்றன ளுள்ளமுங் கோடிய கொடியாள்.

உள்ளமும் கோடிய - (உடல் போல) மனமும் கோணுதலையுடைய, கொடியாள் - கொடியவளான மந்தரை (கைகேயியை நோக்கி), நளிர் மணி நகையாய் - குளிர்ந்த முத்துப்போலும் பற்களை உடையவளே, நன்கு நாடி ஒன்று உரை செய்வென் - நன்றாக ஆராய்ந்து (உனக்கு) ஒன்றைச் சொல்கின்றேன்; (கேள்); தோடு இவர்ந்த தார் - மலர்கள் நெருங்கிய மாலையை அணிந்த, சம்பரன் - சம்பராசுரன், தொலைவுற்ற வேலை - அழிவுற்றபோது, ஆடல் வென்றியான் - போரில் வெற்றி கொண்ட உன் கணவன், அருளிய - மனமுவந்து (உனக்கு) அளித்த, வரம் அவை இரண்டும் - இரண்டு வரங்களையும், கோடி - (இப்போது கேட்டுப்) பெற்றுக்கொள்வாயாக, என்றனள்—.

இதுவும் அடுத்த பாடலும் பரதன் முடிசூடுதற்குக் கூனி கூறிய உபாயத்தைக் கூறும். "நான் நன்கு ஆராய்ந்து கூறுகின்றேன். அத னைக் கேள்" என்று தொடங்குகிறாள் அவள்.

கைகேயி இப்போது முகமலர்ந்து முறுவலுடன் கூனி சொல் வந்தக் கேட்க விரும்பினமை புலப்பட 'நளிர்மணி நகையாய்' என்றாள். மணி - இங்கே முத்து. சம்பராசுர யுத்தத்தில் கைகேயி தேரூர்ந்து தன துயிரைக் காத்த பேருதவியின்பொருட்டுத் தசரதன் மனமுவந்து அவளுக்கு இரண்டு வரங்கள் தருவதாக வாக்களிக்க, அவற்றைக் கைகேயி அப்போது கேட்டுப் பெறவில்லை; ஆதலால், தருணம் வாய்த்த இப்போது, அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு முதற் கண் கூறி, வரங்கள் இன்னவென்பதை அடுத்துக் கூறுகின்றாள்.

'அருளிய' என்றது, தானே மனமுவந்து தர விரும்பினமை குறிக்கும். 'உள்ளமும்' என்றதில் உம்மை இறந்தது தழுவியதாய், உடலும், சொல்லும், செயலுமாகிய அனைத்தினும் என்ற பொருளைத் தரும். இரண்டும் முற்றும்மை. கூனியைக் கொடியவள் எனப் பல விடத்துங் குறித்தல் காண்க.

வரமவை : அவை, பகுதிப்பொருள் விகுதி.

(பா - ம்.) 1. ஒன்றுனக்குரை செய்வென், ஒன்று நின்றுரை செய்வாள், ஒன்று நன்றுரை செய்வென், நன்று மொன்றுரை செய்வன், நின்றுமொன்றுரை செய்வாள்; நளிமணி, நளிமதி, நளிர்மதியனையாள், நகு மணியனையாய், நகுமணி நகையாய், அருமணியனையாய், நளிர்மலர்க் கையாய்.
2. தோடலர்ந்த.
3. வென்றியன்; வரமிரண்டவையும். (81)

179. இருவ ரத்தினு ளொன்றினு லரசுகொண் டிராமன்
பெருவ னத்திடை யேழிரு பருவங்கள் பெயர்ந்து
திரிதரச் செய்வ தொன்றினற் செழுநில மெல்லாம்
ஒருவ ழிப்படு முன்மகற் குபாயமீ தென்றாள்.

இரு வரத்தினுள் - (நீ பெறும்) இரண்டு வரங்களுள், ஒன்றினால் - ஒரு வரத்தால், அரசு கொண்டு - (பரதனுக்கு) அரசைப் பெற்றுக் கொண்டு, ஒன்றினால் - மற்றொரு வரத்தால், இராமன் —, பெயர்ந்து - (நாட்டை விட்டு) நீங்கி, ஏழ் இரு பருவங்கள் - பதினான்கு ஆண்டுகள், பெருவனத்திடை திரிதர செய்வது - பெரிய காட்டிலே சுற்றித் திரியும்படி செய்க; செழு நிலம் எல்லாம் - வளமிக்க பூமிமுழுதும், உன் மகற்கு ஒரு வழி படும் உபாயம் - உன் மகன் பரதனுக்கு ஒருங்கே சேருதற்குரிய உபாயம், ஈது - இதுவாகும்; என்றாள் —.

பரதனுக்கு அரசைக் கேட்டுப் பெற்று அவன் ஆண்டாலும், இராமன் நாட்டிலேயே இருப்பின் அரசுக்குத் தீங்கு நிகழ்தல் கூடுமாதலால், பதினான்கு வருடகாலம் இராமனை நாட்டினின்றும் வெளிப் படுத்தல் வேண்டுமென்றாள். அவ்வாறாயின், பரதனோடு நீண்ட காலம் நாட்டு மக்களும் பயின்று அவனிடம் பற்றுடையராவர், அரசும்

இடையூறின்றி நிலைபெறும் என்பது கூனியின் உட்கோள். 'என் மகனுக்கும் இனியை; அனையான் நீண் முடி பெறும்படி புகலுதி' (176) என்ற கைகேயிக்குக் கூறத் தொடங்கிய கூனி, 'என் உரை தலை நிற்பின் உலகம் ஏழும் ஏழும் உன் ஒரு மகற்கு ஆக்குவேன்' (177), 'வரமவையிரண்டுங்கோடி' (178), 'உபாயம் ஈது' (179) எனக் கூறி முடித்தாள்.

பருவம் - ஆண்டு; பால. 523. திரிதரல் - திரிதல். செய்வது - செய்க; வியங்கோள்.

(பி - ம்.) 1. இருவரத்தினில், வரத்தினின், வரத்தினும்.
2. ஏழிருபருவமும், ஈரேழுபருவமும், பருவங்கள், பதினாலு பருவமும், பதினான்கு பருவமும்.
3. திரிதரச் செய்தி; என்றபின் தேயம்; செல்நிலமெல்லாம்.
4. ஒருவகைப்படும்; உபாயமிது, உபாயமிஃது. (82)

கைகேயியின் மகிழ்ச்சி

180. உரைத்த கூனியை யுவந்தன ளுயிருறத் தழுவி
நிரைத்த மாமணி யாரமு நிதியமு நீட்டி
இரைத்த வேலைசூ ழுலகமென் னொருமகற் கீந்தாய்
தரைக்கு நாயகன் றாயினி நீயெனத் தணியா.

உரைத்த கூனியை - (உபாயம்) சொன்ன மந்தரையை, (கைகேயி) உவந்தனள் - மகிழ்ந்தவளாய், உயிர் உற தழுவி - அழுந்தத் தழுவிக்கொண்டு, மாமணி நிரைத்த ஆரமும் - சிறந்த மணிகள் பதிக்கப் பெற்ற மாலையையும், நிதியமும் - பொருளையும், நீட்டி - (பரிசாக) மிகக் கொடுத்து, (அவளை நோக்கி), இரைத்த வேலை சூழ் உலகம் - ஒலிக்கும் கடல் சூழ்ந்த இந்த உலகத்தை (நாட்டை), என் ஒரு மகற்கு ஈந்தாய் - என் ஒரே மகனான பரதனுக்கு அளித்தவளானாய்; (ஆதலால்) இனி, நீ—, தரைக்கு நாயகன் தாய் என - உலகத்தலைவனான பரதனுக்குத் தாய் என்று கூறி, தணியா - மனம் மகிழ்ந்து (என்றாள்).

இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்; 'நீ அவனுக்கு அரசைத் தந்ததனால் அரசனுக்குத் தாயாகி என்னினும் மேன்மையுறுகின்றாய்' என்றும் கூறுகின்றாள். கைகேயி உயிர் உறத்தழுவுதலாவது, உயிரும் உயிரும் பொருந்துவதுபோல இறுகத் தழுவுதல். ஒரு மகன் - ஒரே புதல்வன்; ஒப்பற்ற என்றலுமாம்; 177 - பார்க்க. தணிதல் - மனமகிழ்தல்: "தணி பொன் சொரியும்" (தஞ்சைவாணன். கோவை, 25). ஈந்தாய் : துணிவுபற்றி வந்த காலமயக்கம். 'என்றாள்' என முடிபு வருவிக்க.

(பி - ம்.) 1. உள்ளுறத்.
2. நிரைக்கு மாமணி;

3. இரைக்கும், கிரைத்த; உலகமுமொரு மகற்கு.
4. தாயுநீயே யெனத், தாயுநீ யினியெனத்; தாயென நீயென; தணியா, தருவாய், தணியாள், தழுவா தனியாய். (83)

181. நன்று சொல்லினை நம்பியை நளிமுடி சூட்டல்
துன்று கானகத் திராமனைத் துரத்தலிவ் விரண்டும்
அன்ற தாமெனி லரசன்மு னுருயிர் துறந்து
பொன்றி நீங்குதல் புரிவென்யான் போதிநீ யென்றாள்.

(கைகேயி மேலும் கூனியை நோக்கி) நன்று சொல்லினை - (உபாயத்தை நீ) நன்றாகச் சொன்னாய்; நம்பியை - பரதனுக்கு, நளிமுடி சூட்டல் - பெருமை மிக்க முடியைச் சூட்டுதல், இராமனை—, துன்று கானகத்து துரத்தல் - அடர்ந்த காட்டிலே துரத்தல் (ஆகிய), இ இரண்டும் - இந்த இரண்டு காரியங்களும், அன்று ஆம் எனில் - நடவாவிடில், யான் - நான், அரசன்முன் - அரசரெதிரிலே, ஆர் உயிர் துறந்து - எனதரிய உயிரை விட்டு, பொன்றி நீங்குதல் புரிவென் - இறந்துபோதலைச் செய்வேன்; நீ போதி - நீ போவாயாக, என்றாள்—.

'நீ கூறிய உபாயம் மிக நன்று; அதைச் செய்தே முடிப்பேன். அஃதில்லையெனின் என் உயிர் துறப்பேன்' எனச் சூளுறவு போலக் கூறினாள் கைகேயி.

அன்றது : அது, பகுதிப் பொருள் விகுதி; அன்று - மாறுபாடு என்றலுமாம். பொன்றி நீங்குதல் - இறந்து போதல்; இராமன் நாட்டை விட்டு நீங்குதல் இல்லையாயின் நான் உலகை விட்டே நீங்குவேன் என்றொரு நயம் தோன்றுதல் காண்க. போதி நீ - நீ கவலையின்றிப் போவாயாக; கூனிக்குத் தேறுதல் கூறியவாறு.

சில ஏட்டுச் சுவடிகளிலும், சில அச்சுப் பதிப்புக்களிலும் மந்தரை சூழ்ச்சிப் படலம் இப்பாடலுடன் முடிவுற, அடுத்த பாடலில் கைகேயி சூழ்வினைப் படலம் தொடங்குகின்றது. அது பொருத்தமுடையதாகவே காண்கின்றது.

(பா - ம்.) 1. நன்றி செய்தனை, நன்கு சொல்லினை; நளிர்முடி; சூட்டித். (84)

கைகேயின் அலங்கோல நிலை

182. கூனி போனபின் குலமலர்க் குப்பைநின் றிழிந்தாள்
சோனை வார்குழற் கற்றையிற் சொருகிய மாலை
வான மாமழை நுழைதரு மதிபிதிர்ப் பாள்போல்
தேன வாவுறும் வண்டின மலமரச் சிதைத்தாள்.

கூனி போனபின் - (விடைபெற்ற) மந்தரை போன பிறகு, (கைகேயி), குலம் மலர் குப்பை நின்று - சிறந்த மலர்க் குவியலா

லாகிய படுக்கைக் கட்டிலினின்று, இழிந்தாள் - இறங்கியவளாய், சோணே - கருமேகம் போன்ற, வார் குழல் கற்றையில் சொருகிய - (தனது) நீண்ட கூந்தற்றெகுதியில் சொருகியிருந்த, மாலை - பூ மாலையை, வானம் - ஆகாயத்திலே, மா மழை நுழைதரு மதி - பெரு மேகத் திடையே புகுந்துள்ள சந்திரனை, பிதிர்ப்பாள் போல் - (இழுத்துச்) சிதறுவிப்பவள் போல, தேன் அவா உறும் வண்டு இனம் அலமர - (பூவிலுள்ள) தேனை விரும்பி மொய்க்கும் வண்டுக் கூட்டங்கள் (நிலை கெட்டுச்) சுழலுமாறு, சிதைத்தாள் - (கூந்தலினின்றும் இழுத்து) அறுத் தெறிந்தாள்.

இதுமுதல் மூன்று பாடல்கள் கைகேயி தன்னைச் செய்துகொண்ட அலங்கோல நிலையைக் குறிப்பன. தமக்கு உண்டான வருத்தத்தைப் புலப்படுத்தற்குத் தம்முடைய அலங்காரத்தை அழித்துக்கொள்ளுதல் மகளிர் இயல்பு. 'மலர்க் குப்பை' என்றது மலர்களின் மிகுதி குறித்தது. குப்பை, ஆகுபெயராய் மலர்ப் படுக்கையைக் குறித்தது. இழிந்தாள் : முற்றெச்சம். கூந்தலுக்கு மேகமும், அதிலே சொருகியிருந்த பூ மாலைக்கு மேகத்திடை நுழைந்த சந்திரனும் உவமை. மாலையை மதி பிதிர்ப்பாள் போல் சிதைத்தாள், வண்டினம் அலமரச் சிதைத்தாள் எனத் தனித்தனி இயைக்க. 'அவாவுறும் வண்டினம் அலமர' என்றது, மேலே இராமபிரான் முடிசூடும் பேரணி காண விரும்பிவரும் மக்கள் அது காணாது அலமரும் நிலையைக் குறிப்பித்தல் உணரத் தக்கது.

சோண வார் குழல்: பால. 1019.

(பி - ம்.) 1. குவைமலர்க் குப்பை யின்றெழிந்தாள். 2. சுற்றிய மாலை.
3. வானலார்மழை, வானமார்மழை; விதிர்ப்பாள்போல்.
4. தேனவாவுறு, தேனவாவுற; வண்டினமலம்வரச். (85)

183. விளையுந் தன்புகழ் வல்லியை வேரறுத் தென்னக்
கிளைகொண் மேகலை சிந்தினள் கிண்கிணி யோடும்
வளைது றந்தனள் மதியினின் மறுத்துடைப் பாள்போல்
அளக வாணுத லரும்பெறற் றிலகமு மழித்தாள்.

விளையும் - வளர்கின்ற, தன் புகழ் வல்லியை - தன்னுடைய புகழா கிற கொடியை, வேர் அறுத்தது என்ன - வேரோடு அறுத்துவிட்டாற் போல, கிளைகொள் - வடமாகிய கிளையைக் கொண்ட, மேகலை - மேக லாபரணத்தை, சிந்தினள் - அறுத்தெறிந்தாள்; கிண்கிணியோடும் - பாத கிண்கிணியுடனே, வளை - கை வளையல்களையும், துறந்தனள் - (கழற்றி) அகற்றினள்; மதியினில் மறு - சந்திரனிடத்துள்ள களங் கத்தை, துடைப்பாள் போல் - அழிப்பாள் போல, அளகம் - முன் மயிர் படிந்த, வாள் நுதல் - ஒளிபொருந்திய (தன்) நெற்றியில் உள்ள, பெறல் அரும் - பெறுதற்கரிய, திலகமும் - திலகத்தையும், அழித்தாள் —.

கைகேயிக்கு இப்போதுண்டாகி வளர்ந்துவரும் புகழ் இனி அழிந்து, அதற்கு மாருன பழி வந்தெய்தவிருத்தலின், 'புகழ் வல்லியை வேரறுத்தென்ன' என்ருர். மேகலை ஏழு வடங்களுடையதாகலின், கிளைகொள் என்ற அடையும், இடையைச் சுற்றியிருத்தலால் வல்லி யென்ற உவமையும் பொருந்தக் கூறினுர். புகழுக்கு வெண்ணிறம் கூறுவது மரபு; மேகலை, முத்தும் வயிரமுமான வெண்மணிகளால் இயன்றமை புகழென்றதற்குப் பொருந்துவதாகும். அவள் முகம் மதி போன்றிருக்க, அதில் அமைந்த திலகம் மதியின் மறுப்போன்றிருந்தது. திலகத்தை அழித்தது மதியின் மறுவைத் துடைத்தது போன்றது. திலகத்தின் அருமை நோக்கி அரும்பெறற்றிலகம் என்ருர். அளகம் நெற்றிக்கு அழகு செய்தலின், அளக வாணுதல் எனப்பட்டது.

அறுத்தென்ன: தொகுத்தல்.

அளகவாணுதல்: கலி. 4. 19; குறுந். 34; ஐங்குறு. 67; பெருங். 1. 33: 119; தக்க. 25.

(பி - ம்.) 1. வேரறுத்தன்னக்.
2. சிந்தின; இண்கிணியென்ன; மேகலையோடும்.
3. மதியினை.
4. திலதமும். (86)

184. தாவின் மாமணிக் கலன்மற்றுந் தனித்தனி சிதறி
நாவி யோதியை நானிலந் தைவரப் பரப்பிக்
காவி யுண்டகண் ணஞ்சனங் கான்றிடக் கலுழாப்
பூவு திர்த்ததோர் கொம்பெனப் புவிமிசைப் புரண்டாள்.

தா இல் - குற்றமில்லாத, மாமணி கலன்கள் - சிறந்த இரத்தினுபரணங்கள், மற்றும் - பிற உள்ளவற்றையும், தனி தனி சிதறி - வேறுவேருகச் சிதைத்தெறிந்து, நாவி ஓதியை - புழுகுநெய் பூசப்பெற்ற கூந்தலை, நால் நிலம் தைவர பரப்பி – தரையிற் புரளுமாறு பரப்பிக்கொண்டு, காவி உண்ட கண் - நீல மலர்போன்ற கண்கள், அஞ்சனம் கான்றிட - மையைக் கரைத்துச் சிந்தும்படி, கலுழா – கண்ணீர் பெருக்கி அழுத வாறு, பூ உதிர்த்து ஓர் கொம்பு என - பூக்களையெல்லாம் உதிர்த்து விட்ட ஒரு வெறுங்கொம்பு போல, புவிமிசை புரண்டாள் - தரையிலே புரண்டாள்.

அழகும் மங்கலமும் தரும் பொருள்கள் அனைத்தையும் தன் உடலினின்றும் களைந்தும், அழுதுகொண்டும் கழிகல மகள்போலாயின கைகேயியின் தோற்றம், பின்னே தனக்கு வரவிருக்கும் நிலையை இப்போதே அவள் மேற்கொண்டதைக் குறிப்பாற் புலப்படுத்தியது.

நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நால்கு பாகுபாடு கொண்ட பூமி; இங்கே அது தரையைச் சுட்டுவது; புவிமிசை என்றவிடத்தும், புவி - தரை. கொடிமிசைப் புரண்டாள் என்பதும் பாடம். கான்றிட - கால. இடு : துணைவினை.

(பி - ம்.) 1. தாவினன்மணிக், தாவிநன்மணிக்; கலன்முற்றும் தனித் தனிச் சிதறி.

2. நாவி நன்குழல், நாவிமென்குழல்; கானிலத்தைவரப், நானிலக் கைவரப்; நாவியோதியை நறைவரப் பிலசதரப் பரப்பிக்.

3. காவியுண்கண்கள், ஒண்கண்கள், உண்கணின், காவியன்னகண், காவியானகண்; கலுழப், கவிழாப், கலுழ்ந்து, கவிழ்ந்து.

4. பூவுதிர்ந்ததோர்; படிமிசைப், பார்மிசைப், பொடி மிசைப்: மண்ணிடைப். (87)

185. நவ்வி வீழ்ந்தென நாடக மயிறுயின் றென்னக்
கவ்வை கூர்தரச் சனகியாங் கடிகமழ் கமலத்
தவ்வை நீங்குமென் றயோத்திவந் தடைந்தவம் மடந்தை
தவ்வை யாமெனக் கிடந்தனள் கேகயன் றனயை.

கேகயன் தனயை - கேகயராசன் மகளாகிய கைகேயி, நவ்வி வீழ்ந்தது என - (துள்ளி விளையாடும்) மான் வறிதே விழுந்து கிடந்தது போலவும், நாடகம் மயில் - (தோகை விரித்து மகிழ்ந்து) ஆடும் இயல்புடைய மயில், துயின்றது என்ன - (ஆடுதலோய்ந்து) தூங்குவது போலவும், கவ்வை கூர்தர - துயரம் மிக, சனகி ஆம் - சானகியாகிற, கடிகமழ் கமலத்து அவ்வை - மணங்கமழும் செந்தாமரையில் வீற்றிருக்கின்ற தாய் (திருமகள்), நீங்கும் என்று - (அயோத்தியைவிட்டு) நீங்குவாளென்று கருதி, அயோத்தி வந்து அடைந்த - (அவளிருந்த இடத்திலே தான் இருக்கவெண்ணி) அயோத்தி நகரத்திலே வந்து சேர்ந்த, அ மடந்தை தவ்வை ஆம் என - அத்திருமடந்தையின் தமக்கையாகிய மூதேவி (இவள்) என்னும்படி, கிடந்தனள் - சோர்ந்து கிடந்தாள்.

கேகயன் தனயை கிடந்தனள் என முடிக்க. எப்போதும் இன்முகமுடையளாய், எழிலுறத் திரியும் மானும் மயிலும் போன்ற தன்மையையுடைய கைகேயி அத்தன்மை யொழிந்து சோர்ந்து கிடந்தமைக்கு அத்தகைய மானையும் மயிலையும் உவமித்துக் கூறி, எப்போதும் மடியுற்றுக் கிடக்கும் இயல்புடைய மூதேவி போலவும் தோன்றினாள் அவள் என்கிறார்.

சானகியைத் திருமகளாகப் பலவிடத்தும் கூறுவர் ஆசிரியர். இராமபிரான் நாடு நீங்கிச் செல்லுங்கால், அத்திருமகளும் உடன் செல்லுதல் உறுதியாதலால், அவள் இருந்தவிடத்தை நாம் கைப்

பற்றுவோமென்று கருதி இப்போதே மூதேவி அங்கு வந்து கிடந்தாள் போலும் எனத் தற்குறிப்பேற்றமாக்கிக் கூறுகின்றார். கவ்வை கூர்தர - நாட்டு மக்கள் துன்பமிக எனலுமாம்.

அவ்வை - தாய். சனகியாம் கமலத்து அவ்வை என்க. கடிகமழ்: கமலத்திற்கு விசேடணம். தவ்வை - தமக்கை.

(பி - ம்.) 1. விழ்ந்தென்ன. 2. கடிகமலத்தில், கொவ்வை கூரிதழ்ச் சனகியாங் கடிகமழ் கமலத்.
3. அடைத்த மாமடந்தை, அயோத்தியில் அமர்தருமடந்தை.
4. கைகயன் றனையை, தனையள், கேகயன்றனயை. (88)

மந்தரை சூழ்ச்சிப் படலம் முற்றும்.

3. கைகேயி சூழ்வினைப் படலம்

இது, கைகேயி சூழ்ந்து செய்த வினையைக் கூறும் படலம் என விரியும்.

இராமபிரான் முடி சூடுதலைத் தவிர்த்து அவனைக் காட்டிற் செலுத்தும் பொருட்டுக் கைகேயி ஆலோசித்து உறுதியுடன் செய்த தீச்செயலையும் அதன் பயனையும் விரித்துக் கூறுவது இப்படலம். மந்தரையின் போதனையால் கைகேயி தசரத மன்னன்பால் இரண்டு வரங்களைக் கேட்டுப் பெறுதலும், அதற்கு அவள் மேற்கொண்ட உபாயங்களும், விவரமறிந்த மன்னன் மிக வருந்தி இரந்து வேண்டியும் மற்றும் பல வகையிலும் அவள் கோட்பாட்டை மாற்ற முயன்றும் அம்முயற்சி பயன்பெறாது மூர்ச்சை யுறுதலும், இராமபிரானிடம் கைகேயி 'மன்னவன் பணி இது' என்று தெரிவித்து அவன் காடு செல்லத் தூண்டுதலும், அப்பணியையேற்ற இராமபிரான் அதனை நிறைவேற்றத் துணிதலும், அதனை யறிந்த பிராட்டியும் இளைய பெருமாளும் உடன்செல்லத் துணிந்து புறப்படுதலும், இவற்றை யறிந்த நகரமாந்தரின் மனநிலையும் செயல்களும் இப்படலத்துள் விரித்துக் கூறப்படுகின்றன.

மந்தரையின் சூழ்ச்சி சொல்லளவில் நின்றதனைச் செயற்படுத்திய வள் கைகேயியாதலின் இது கைகேயி சூழ்வினைப்படலம் எனப்பட்டது.

இப்படலத்தின் பெயர் சில சுவடிகளில், 'கைகேசிப் படலம்' எனவும், சிலவற்றில் 'முடிதவிர்த்த படலம்' எனவும் காணப்படு கின்றது. 'சூழ்வினைப் படலம்', 'விடை பெறு படலம்' என இரண்டு பகுதிகளாக இப்படலம் ஒரு சுவடியில் எழுதப்பட்டுள்ளது.

தசரதன் செயல்

(கலிநிலைத்துறை)

186. நாழிகை கங்குலி னள்ள டைந்த வேலை
யாழிசை யஞ்சிய வஞ்சொ லேழை கோயில்
வாழிய வென்றயன் மன்னர் துன்ன வந்தான்
ஆழி நெடுங்கை மடங்க லாளி யன்னான்.

ஆழி நெடு கை - ஆணைச் சக்கரம் தாங்கும் நீண்ட கையை யுடைய, ஆளி மடங்கல் அன்னான் - ஆண் சிங்கம் போன்றவனான தசரதன், கங்குலின் நாழிகை - இராப்பொழுது, நள் அடைந்த வேலை - நடுவை அடைந்தபோது, (நடு யாமத்தில்), வாழிய என்று - நெடிது

வாழ்கவென்று வாழ்த்தெடுத்துக்கொண்டு, மன்னர் அயல் துன்ன - பல அரசர்கள் பக்கலில் சூழ்ந்து வர, யாழ் இசை அஞ்சிய அம் சொல் ஏழை கோயில் - வீணையிசையையும் (இனிமைக்குத்) தோல்வி யுறத்தக்க அழகிய சொற்களைப் பேசவல்ல கைகேயியின் மாளிகைக்கு, வந்தான்—.

மறுநாள் முடிசூட்டு விழாவுக்குரியவற்றைச் செய்தலில் பொழுது கழிந்தமையின், இரவிலே காலம் தாழ்த்து மகிழ்ச்சியோடு கைகேயியின் இருப்பிடம் சென்றான் மன்னன்.

நாழிகை என்றது இங்கே நேரம் என்ற பொருளில் வந்தது. நள் - நடு. கைகேயி தன் அழகாலும் சொல்லாலும் அரசன் மனங் கவரும் ஆற்றலுடையவளாதலின் அவள் சொல் இனிமைக்கு யாழ் ஓசையும் தோற்கும் என்றார். ஏழை - பெண்; பிறர் சொல்வழி நிற்றலால் அறிவிலியென்ற குறிப்பும் தோன்ற வைத்தார். கூனியால் நிகழ்ந்த வற்றை மன்னன் அறியானாதலின் மகிழ்ச்சிச் செய்தியைக் கைகேயிக்குத் தெரிவித்து அவள் கூறும் இன்மொழிகளையும் கேட்கக் கருதி வந்தான். நெடுங்கை - தாள் தோய் தடக்கை.

(பி - ம்.) 1. நள்ளடைந்த பின்றை, நள்ளிடைந்த பின்றை, நள்ளடைந்த வெல்லை
2. செஞ்சொலேழை; கோவில்.
3. வாழிய வென்றயின், வாழிய வென்றியன், வாழிய வென்றிய, வாழிய வென்றிசை, வாழிய வென்றடி.
4. நெடுங்கண்; யாளி யன்னான், யானை யன்னான். (1)

187. வாயிலின் மன்னர் வணங்கி நிற்ப வந்தாங்
கேயின செய்யு மணங்கினர் சூழ வேகிப்
பாய றுறந்த படைத்த டங்கண் மென்றோள்
ஆயிழை தன்னை யடைந்தன னாழி மன்னன்.

ஆழி மன்னன் - சக்கரவர்த்தி, மன்னர் - (உடன் வந்த) அரசர்கள், வணங்கி - அஞ்சலி செய்து, வாயிலின் நிற்ப - (மாளிகை) வாயிலில் நிற்க, ஆங்கு - அவ்விடத்தே, ஏயின செய்யும் அணங்கினர்- ஏவியவற்றைச் செய்யும் பணிப்பெண்கள், வந்து சூழ - வந்து தன்னைச் சூழ்ந்துகொள்ள, ஏகி - (உள்ளே) சென்று, பாயல் துறந்த - படுக்கையை நீத்த, படை தட கண் - வேற்படை போலும் பெரிய கண்களையும், மென் தோள் - மென்மையான கைகளையும் உடைய, ஆய் இழை தன்னை - கைகேயியை, அடைந்தனன்—.

பாயல் துறந்த ஆயிழை என்றியைக்க. சக்கரவர்த்தி மாளிகையினுள்ளே சென்று, தரையிலே அலங்கோலமாகக் கிடந்த கைகேயியைக் கண்டான் என்றவாறு. அந்தப்புரத்தில் அயல் ஆடவர் செல்லவொண்ணாதாகலின், மன்னர் வெளியே நின்றனர். கைகேயி அணிகலன்களையெல்லாம் நீத்து, 'பூவுதிர்த் தோர் கொம்பென' இருந்தன

ளென முன்னர்க் கூறினமையின், ஆயிழை யென்றது 'பெண்' என்னும் பொருட்டாய் நின்றது. ஏயின - ஏவியன.

கைகேயி இயல்பாகப் படுக்கும் பஞ்சணையின் நீங்கி, ஊடல் அறையில் (கோபக் கிருகத்தில்) படுத்திருந்தாளென முதனூல் கூறும்.

(பி - ம்.) 1. வாயலின்.
2. ஏயது செய்யும்; மடந்தைமாரொடு; அணங்கனர், சூழுமணங்கினர், செய்யணங்கனர்கள், செய்ம்மணங்கர், செய்யு மணங்கினர்கள், செய்யு மணங்கினரொடு, மடந்தையாரொடு, மடந்தையரொடு, செய்யுமின்னர்கள் சூழ, செய்யு மணங்கனர்கள் சூழப்.
3. பாய றுறந்து; படைத்தடக்கண், பணைத்தடங்கண்.
4. அடைந்த வாழி மன்னன். (2)

188. அடைந்தன னோக்கி யரந்தை யென்கொல் வந்து
தொடர்ந்த தெனத்துயர் கொண்டு சோரு நெஞ்சன்
மடந்தையை மாலை யெடுக்கு மானை யேபோல்
தடங்கைகள் கொண்டு தழீஇ யெடுக்க லுற்றான்.

அடைந்தனன் - அடைந்து, நோக்கி - (கைகேயியின் நிலையைப்) பார்த்து (துணுக்குற்று), வந்து தொடர்ந்தது - (இவளுக்கு) வந்து பற்றியதான, அரந்தை என்கொல் என - துன்பம் எதுவோ என்று, துயர் கொண்டு - வருத்தமடைந்து, சோரும் நெஞ்சன் - வாடுகின்ற மனமுடையவனாகி, மடந்தையை - (அந்தக்) கைகேயியை, மாலை எடுக்கும் ஆனையே போல் - ஒரு மாலைத் (துதிக்கையாலே தூக்கி) எடுக்கின்ற யானையைப் போல, தட கைகள் கொண்டு தழீஇ - (தன் இரு) பெரிய கைகளாலுந் தழுவி, எடுக்கலுற்றான்-எடுக்க முயன்றான்.

மகிழ்ச்சியோடு வந்த மன்னன், கைகேயியின் அவலநிலை கண்டு துணுக்குற்று வருந்தி, அவளைத் தழுவியெடுத்துத் தேற்ற முயன்றான் என்க.

முன்னே, 'நவ்வி வீழ்ந்தென' எனக் கைகேயிக்கு மாலை உவமை கூறியதற்கேற்ப, இங்கே, 'மாலை எடுக்கும் ஆனை போல' என்றார். தசரதனுக்கு யானையைப் பலவிடத்தும் உவமை கூறுவர். தசரதனுடைய பெரிய (தாள் தோய்) கைகளுக்கு யானைத் துதிக்கை உவமை. அடைந்தனன், நெஞ்சன் : முற்றெச்சம். இப்பாடல் அந்தாதித் தொடை கொண்டது.

தசரதனுக்கு யானை : 196, 200, 201.

(பி - ம்.) 1. அடைந்தவனோக்கி, அடைந்து நோக்கி, அடைந்தவர் நோக்கி; அரந்தைய தென்கொல், ஆனதென்கொல், அரந்தையென் சொல்,
3. யானை யெடுக்கும், மாலை எடுக்கும்; யானையே போல். (3)

கைகேயி செயல்

189. நின்று தொடர்ந்த நெடுங்கை தம்மை நீக்கி
மின்றுவள் கின்றது போல மண்ணில் வீழ்ந்தாள்
ஒன்று மியம்பல ணீடு யிர்க்க லுற்ருள்
மன்ற லருந்தொடை மன்ன ஞவி யன்ஞள்.

மன்றல் அரு தொடை மன்னன் - மணங் கமழும் அரிய மலர் மாலையை யணிந்த மன்னனுடைய, ஆவி அன்ஞள் - உயிர் போன்றவளான கைகேயி, நின்று - தன் நிலையில் மாருது நின்று, தொடர்ந்த— தன்னைத் தழுவ நீண்ட, நெடு கை தம்மை - (மன்னனுடைய) நீண்ட கைகளை, நீக்கி - விலக்கி, மின் துவள்கின்றது போல - மின்னற்கொடி துவண்டு வீழ்தல் போல, மண்ணில் வீழ்ந்தாள் - தரையில் விழுந்து, ஒன்றும் இயம்பலள் - (வாய் திறந்து) ஒன்றும் சொல்லாதவளாய், நீடு உயிர்க்கல் உற்ருள் - பெருமூச்செறியலாஞள்.

பட்டத் தேவியர் மூவருள்ளும் கைகேயிபால் மன்னவன் காதலன்பு மிக்கவஞதலாலும், அவளும் அதற்கேற்ற தகுதியுடையவளாய் அவனுயிர் காத்தவளாதலாலும், முன்பு அவள் அவனுக்கு உயிர்போற் சிறந்தவள். மன்னனது மனத்துயர் கண்டும் அவள் தன் னெஞ்சு சிறிதும் நெகிழாதிருந்தமை தோன்ற 'நின்று' என்ருர். மன்னன் தழுவி எடுத்தமையின் தரையினின்று சற்று மேலெழுந்த நிலையிலிருந்தவள், அவன் கைகளை விடுவித்துக்கொண்டு மீண்டும் தரையிலே வீழ்ந்தாள். இவ்வாறு வீழ்ந்ததும் ஒன்றுங் கூருது பெருமூச்செறிந்ததும் தன் கருத்தைச் சாதித்துக்கொள்ளுதற்காம்.

கை தம்மை - கைகளை. வீழ்ந்தாள், இயம்பலள்: முற்றெச்சங்கள்.

(பி - ம்.) 1. நின்று தொடர்ந்து; நெடுங்கை தன்னை, நெடுந்தகை தன்னை, நெடுந் தலக் கையை, நெடுந்தகையை, நெடுங்கை நீக்கியேழை, நெடுங் கை யேழைநீக்கி.
2. மன்னனின்.
3. விளம்பலள், விளம்பிலள்.
4. மன்றலர் தாரவன், மன்றல் தாரவன், மன்றுள தாரவன், மன்னுளர் தாரவன், வென்றிகொள் தாரவன்; ஆவியன்ன மன்ஞள், ஆவியன்ன மின்ஞர், ஆவியுண்ண வல்லாள், ஆவியன்ன மங்கை. (4)

தசரதன் நிகழ்ந்ததைக் கூறும்படி வினவுதல்

190. அன்னது கண்ட வலங்கன் மன்ன னஞ்சி
என்னை நிகழ்ந்ததிவ் வேழு ஞாலம் வாழ்வார்
உன்னை யிகழ்ந்தவர் மாள்வ ருற்ற தெல்லாம்
சொன்னபி னென்செயல் காண்டி சொல்லி டென்ருன்.

அன்னது கண்ட - (கைகேயியின்) அச்செயலைப் பார்த்த, அலங்கல் மன்னன் - மாலையை அணிந்த மன்னவன், அஞ்சி—

நிகழ்ந்தது என்னை - நடந்தது யாது, இ ஏழு ஞாலம் வாழ்வார் - இவ்வேழுலகங்களிலும் வாழ்பவருள், உன்னை இகழ்ந்தவர் - உனக்கு இழிவு செய்தவர் (எவராயினும் அவர்கள்), மாள்வர் - என் கையால் மாண்டொழிவர்; உற்றது எல்லாம் - நிகழ்ந்ததை எல்லாம், சொன்ன பின் - (நீ) சொன்ன பிறகு, என் செயல் காண்டி - என் செய்கையைக் காண்பாயாக: சொல்லிடு - (தாழ்த்தாது) சொல், என்றான்—.

கைகேயி கிடந்த கோலத்தைக் கண்டபோதே மனம் துணுக்குற்ற மன்னன், அவள் செயலால் மேலும் அச்சங் கொண்டு, 'உன் மனம் வருந்துமாறு செய்தவர் எவராயினும் அவரை இப்போதே அழிப்பேன்; நிகழ்ந்ததை விவரமாகச் சொல்' என்று கூறி அவளைத் தேற்ற முயன்றான். அலங்கல் - மனந் தவித்தலுமாம்.

சொல்லிடு : இடு - துணைவினை.

(பி - ம்.) 1. என்னை யிகழ்ந்தது, என்னை யிகழ்ந்தவர், என்ன நிகழ்ந்தது; இஞ் ஞால மேழின் வாழ்வார், இவ்வேழுலகும் வாழ்வார்; இவ்வேழு ஞால மாழ்வார், ஏழு ஞாலமாள்வார்.
3. மாள்குவருற்ற வெல்லாம்.
4. சொன்ன பின்னே செயல்; கண்டு சொல்லிடு, காண்டி சொன்னி, காண்டி சொல்லினி, சொல்லி தென்றான், சொல்லு கென்றான். (5)

கைகேயி கூறுதல்

191. வண்டுளர் தாரவன் வாய்மை கேட்ட மங்கை
கொண்ட னெடுங்கணி னுவி கொங்கை கோப்ப
உண்டுகொ லாமரு ளென்கணுண்மை நாட்டின்
பண்டைய வின்று பரிந்தளித்தி யென்றாள்.

வண்டு உளர் தாரவன் - வண்டுகள் மகரந்தத்தைக் கிண்டுதற்கு இடமான மாலையை யணிந்த மன்னனுடைய, வாய்மை - வார்த்தைகளை, கேட்ட மங்கை - கேட்ட கைகேயி, நெடுங்கண் - தன் நீண்ட கண்களாகிற, கொண்டலின் ஆலி - மேகங்களின் நீர்த் துளிகள், கொங்கை கோப்ப - தனங்களின் மேல் (முத்துக் கோவை போல) வீழ (அழுதுகொண்டு), என் கண் அருள் உண்டு ஆம்கொல் - (உனக்கு) என்பால் கருணை உள்ளதோ? உண்மை நாட்டின் - அஃதுள்ள தன்மையை நிலைநாட்டுவதாயின், பண்டைய - முன்னே எனக்கு வாக்களித்தவற்றை, இன்று - இப்போது, பரிந்து அளித்தி - அன்புகொண்டு தந்திடுக, என்றாள்—.

உண்மை நாட்டின் - உன் வாய்மையைக் காப்பதாயின் எனவுமாம்.

மன்னன் வினவியதற்கெதிர்மொழியாக, நிகழ்ந்தவை கூறுதல் பொருந்தாதாகலின், கைகேயி தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ளு

தற்கு உபாயமாக, 'என்பால், உனக்கு உண்மையன்பும் அருளும் உண்டெனில், முன்னே எனக்கு அளித்தவற்றை இப்போது உகந்து தருக' எனப் பொதுவகையாற் கேட்டு மன்னவனது சூளுறவைப் பெற வகை செய்கின்றாள். அவ்வுபாயம் பயனளித்தமை அடுத்த பாடலிற் காணப்படும்.

மங்கை: பருவம் குறியாமல் பெண் என்பது குறித்தது. நெடுங்கண் கொண்டலின் ஆலி எனப் பிரித்துக் கூட்டுக; ஆலி - நீர்த்துளி. 'கோப்ப' என்றதனால் முத்துக்கோவை எனப்பட்டது. உண்டு ஆம் கொல் - உண்டென்பது உண்மையாகுமோ? கொல் : ஐயப்பொருளது.

தன் கருத்தை அறிந்தபின் மன்னன் அதற்கு மனமியைதல் அரிதாகலின், 'பரிந்து அளித்தி' என்றாள். பரிந்து - வருந்தி என்ற பொருளும் உண்மையின் வருந்தியேனும் மறாது தந்திடுக என்ற குறிப்பும் தோன்றுதல் காணத் தக்கது.

(பி - ம்.) 1. வண்டுள, வண்டணி; கேட்ட நங்கை.
2. கொண்ட நெடுங்கணின், கொண்ட நெடுங்கண்ணின், கொண்ட நெடுங்கணுலி, கொண்டு நெடுங்கணினுலி கொங்கை போர்ப்ப.
3. என்கணுன்கணுெக்கில், ஒக்கின், என்கணுண்மை நோக்கின், நோக்கிப், என்கையுண்மை நோக்கில், உன்கணென்கணுெக்கின்.
4. பண்டைய நின்று, பண்டையதென்று, பண்டையதொன்று; பரிக்துதாமே, பரிந்துதானி, பரிக்து தாரல். (6)

மன்னன் வாக்களித்தல்

192. கள்ளவிழ் கோதை கருத்துண ராத மன்னன்
வெள்ள நெடுஞ்சுடர் மின்னின் மின்ன நக்கான்
உள்ள முவந்தது செய்வெ னொன்று லோவேன்
வள்ள லிராமனுன் மைந்த னாணை யென்றான்.

கள் அவிழ் கோதை - தேன்வழியும் கூந்தலையுடைய கைகேயியின், கருத்து உணராத மன்னன் - உட்கிடக்கையை அறியாத சக்கரவர்த்தி, வெள்ளம் நெடு சுடர் மின்னின் மின்ன - மிக்க பேரொளியையுடைய மின்னல்போல(த் தன் பல்லொளி) வீச, நக்கான் - பெருநகை செய்து, உள்ளம் உவந்தது செய்வென் - உன் மனம் விரும்பியதைச் செய்வேன், ஒன்றும் உலோவேன் - (அதில்) சிறிதும் உலோபம் செய்வேனல்லேன், உன் மைந்தன் - உன் மகனும், வள்ளல் - பெருவள்ளலுமான, இராமன் ஆணை - இராமன்மேல் ஆணை (சத்தியம்), என்றான் —.

கைகேயியின் உபாயம் பலித்தது இதனாற் கூறப்பட்டது. தனது அன்பில் ஐயங்கொண்ட கைகேயியின் பேதைமை நோக்கி மன்னன் நக்கான் என்க. உனக்கு விருப்பமானதைத் தவறாது செய்வேனென்ற உறுதிபற்றி இராமன் ஆணை என்றான்; இவ்வாறு ஆணையிட்டுக்

கூறுதல் வழக்கு. கைகேயி இராமன்பால் பேரன்புடையவளென்ற பண்டை நிலை கருதியே, உன் மைந்தன் இராமன் என்றான்.

கள்ளவிழ் கோதை: அடையடுத்த ஆகுபெயர். இவறன்மை என்னும் பொருளுடைய 'லோபம்' என்னும் வடசொல் உலோவமெனத் திரிந்து அதனடியாக 'உலோவேன்' என்ற முற்றுப் பிறந்தது; "உயிர்தர உலோவினீரே." (பால. 787) ஒன்றும்-ஒரு சிறிதும்; உம்மை தொக்கது.

(பி - ம்.) 1. கருத்துணர்ந்த, கருத்துணரா, கருத்துள்ளாத, கருத்தெனத.
2. வெள்ளை நெடுஞ்சுடர்; மின்னினன்ன, மின்னின் மின்னநக்காங்கு, மின்னின் மின்னின் நக்காங்கு.
3. உள்ளமுவந்துள, உள்ளமுவந்து; ஒன்றுலோபேன், ஒன்றும் லோபேன், ஒன்றுமுலோபேன்.
4. இராமனின் மைந்தன், இராமனென் மைந்தன், மின்மைந்த னிராமன். (7)

பழைய வரங்களை இப்போது தருமாறு கைகேயி கேட்டல்

193. ஆன்றவ னவ்வுரை கூற வைய மில்லாள்
தோன்றிய பேரவ லந்து டைத்த லுண்டேல்
சான்றிமை யோர்குல மாக மன்ன முன்னீ
ஏன்ற வரங்க ளிரண்டு மீதி யென்றாள்.

ஆன்றவன் - குணங்களால் நிறைந்த சக்கரவர்த்தி, அ உரை கூற - அவ்வுறுதி மொழியைச் சொல்ல, (அதனைக் கேட்ட) ஐயம் இல்லாள் - (தன் கருத்து முற்றுதலில்) ஐயம் நீங்கியவளான கைகேயி, மன்ன - அரசே, தோன்றிய - (இப்போது) எனக்குண்டாகிய, பேர் அவலம் - பெருங்கவலையை, துடைத்தல் உண்டேல் - போக்குவது உண்மை யாயின், முன் - முன்னொருகால், இமையோர் குலம் சான்று ஆக - தேவர் கூட்டம் சாட்சியாக, நீ ஏன்ற வரங்கள் இரண்டையும் - நீ (எனக்களிப்பதாக) ஏன்று கொண்ட வரங்கள் இரண்டையும்; ஈதி - (இப்போது) தருக, என்றாள் —.

மன்னன் இராமன்மேல் ஆணையிட்டுக் கூறியதனால், கைகேயி தன் கருத்து முற்றுதலில் ஐயம் நீங்கினாளேனும், வரங்கள் மன்னவன் கருத்துக்கு முரண்படுவன வாதலின், பின்னர் அவன் எவ்வகையிலும் மாறு கூறுதற்கு இடமின்றி உறுதி செய்து கொள்ளுதற்பொருட்டு, 'இமையோர் குலம் சான்றாக ஏன்ற வரங்கள் இரண்டும் தருக' என்கின்றாள். சம்பராசுர யுத்தம் நிகழ்ந்தபோது அது காணுதற்குத் தேவர்களும் கூடியிருந்தமையின் அவ்வாறு கூறினாள். வரங்கள் தருவதாக மன்னவன் தானே மனமுவந்து வாக்களித்தமையின், 'ஏன்ற' என்றாள்.

(பி - ம்.) 1. ஆன்றவனஃதுரை, ஆண்டவனவ்வுரை; அன்னமன்னாள், அம்பொன் மெய்யாள்.
2. ஈண்டிய; பேரவலந்துடைப்பதீ உண்டோ.

3. இமையோர் குலமாக முன்னம், குலமாதர்கள் முன்னம், குலமாக மன்னர்; நீயன்று, எற்கீது, நீதந்து, நீபெற்கு வானவர் வானவ; மன்னர் மன்ன முன்னி.
4. தோன்ற வரங்கள். (8)

வரம் அளிக்க மன்னன் உடன்படுதல்

194. வரங்கொள வித்துணை மம்மர லல்ல லெய்தி
இரங்கிட வேண்டுவ தில்லை யீவ னென்பால்
பரங்கெட விப்பொழு தேப கர்ந்தி டென்றான்
உரங்கொண் மனத்தவள் வஞ்ச மோர்கி லாதான்.

உரம் கொள் மனத்தவள் - வன்மை கொண்ட மனமுடைய கைகேயியின், வஞ்சம் - வஞ்சனையை, ஓர்கிலாதான் - அறியாதவனான மன்னன், (அவளை நோக்கி) வரம் கொள - வரங்களைப் பெற்றுக் கொள்ளுதற்கு, இத்துணை மம்மர் அல்லல் எய்தி - இவ்வளவு தடுமாற்றமும் துன்பமும் அடைந்து, இரங்கிட வேண்டுவது இல்லை - நீ வருந்த வேண்டுவதில்லை; என்பால் பரம் கெட - என்பால் உள்ள சுமை நீங்குமாறு, இ பொழுதே ஈவென் - இப்போதே தருகிறேன், பகர்ந்திடு - சொல், என்றான்—.

"வாக்களித்த வரங்களை நேரே கேட்டுப் பெற்றுக்கொள்ளாமல், அதற்கு இவ்வளவு துன்பப்படுவதேன்? தந்தே தீரவேண்டிய அவற்றைத் தாராதிருத்தல் எனக்கொரு பெருஞ் சுமையேயாகும்; அதனால் இப்போதே தருகின்றேன்; தாழ்த்தலின்றிச் சொல்" என்றான் மன்னன். அவளுடைய கபடமான எண்ணத்தை அறியாமல் இவ்வாறு கூறினான். இயல்பிலே மென்மையான கைகேயியின் மனம் இப்போது வன்மை கொண்டிருத்தலின், 'உரங்கொள் மனத்தவள்' என்றார். அவள் கேட்கப்போவது இன்னதென்று ஊகித்தற்கும் இடமில்லாத நிலையாகலின், 'ஓர்கிலாதான்' என்றார். கில் : ஆற்றலுணர்த்தும் இடைச்சொல்.

பி - ம்.) 1. இத்துணை மன்னும், இத்தனைமலல்; மம்மர்; மறுகி, மாழ்கி.
2. வேண்டுவ திவனே கேளென்பால், ஈவனென்பால்.
3. இப்பகலே பகர்ந்திடு.
4. மனத்தவளுள்ளம், மனத்தவன் வஞ்சம்; ஓர்வதில்லான்; ஓர்கில்லான். (9)

கைகேயி வரங்கள் இன்னவை என்றல்

195. ஏய வரங்க ளிரண்டி னொன்றி னாலென்
சேயுல காள்வது சீதை கேள்வ னொன்றால்
போயுவன மாள்வ தெனப்பு கன்று நின்றாள்
தீயவை யாவையி னுஞ்சி றந்த தீயாள்.

தீயவை யாவையினும் - கொடியவை என்றுள்ள எல்லாவற்றினும், சிறந்த தீயாள் - மேம்பட்ட கொடுமையையுடைய கைகேயி, ஏய வரங்கள் இரண்டின் - உடன்பட்டுள்ள வரங்கள் இரண்டில், ஒன்றினல் - ஒரு வரத்தினுல், என் சேய் உலகு ஆள்வது - என் மகன் பரதன் நாட்டையாளுக; ஒன்ருல் - மற்ரென்றினுல், சீதை கேள்வன் - சீதையின் கணவன், போய் - (நாட்டை விட்டு) நீங்கிப்போய், வனம் ஆள்வது - காட்டை யாளுக; என புகன்று - என்று சொல்லி, நின்ருள் - (சலியாது) நின்ருள்.

கைகேயிக்கு இப்போதுள்ள மனக்கொடுமையை விளக்குதற்கு, 'தீயவை யாவையினுஞ் சிறந்த தீயாள்' என்ருர். 'இராமனைப் பயந்த வெற்கிடருண்டோ' (144) என இராமனைத் தான் பெற்ற புதல்வனுகவே கருதிக் கூறியவள், இப்போது அப்பெயரைத் தானும் நேரே சொல்லாமல், 'சீதை கேள்வன்' என்கின்ருள். 'சிவந்த வாய்ச் சீதையும் கரிய செம்மலும், நிவந்தவா சனத்தினி திருப்ப நின்மகன், அவந்தனுய் வெறுநிலத் திருக்க லானபோது, உவந்தவாறென்' (152) எனக் கூனி முன்னர்க் கூறியது கைகேயியின் உள்ளத்தில் நன்கு பதிந்துள்ளமையை இது காட்டுகின்றது. தசரதன்முன்னே இத்தகைய சொல்லை அஞ்சாது சொல்லி நிற்றல் இவளையன்றிப் பிறர்க்கு அரிதாகலின், 'புகன்று நின்ருள்' என்ருர். இராமன் வனத்தில் இருத்தல் 'பதினுன்காண்டுகள்' என்று கூனி கூறிய காலவளவையுங் குறியாது 'வனம் ஆள்வது' என்கின்ருள். ஆள்வது: வியங்கோள். ஏய-பொருந்த, உடன்பட்ட.

(பி - ம்.) 1. இரண்டில் ஒன்ருலேயென்.
2. சேய் அரசாள்வது, அரசாள்வகை, நிலனுள்வது; சீதைகேள்வனென்றில், ஈதி சீதை கேள்வன்.
3. வனமாளுவது, வனம் வாழ்வது.
4. தியன. (10)

தசரதனது துயரம்

196. நாக மெனுங்கொடி யாட ளுவின் வந்த
சோக விடந்தொட ரத்து ணுக்க மெய்தி
ஆக மடங்கலும் வெந்த ழிந்த ராவின்
வேக மடங்கிய வேழ மென்ன வீழ்ந்தான்.

(தசரதன்) நாகம் எனும் - பாம்பென்று சொல்லத்தக்க, கொடியாள் தன் - கொடியவளாகிய கைகேயியின், நாவின் வந்த - நாக்கினின்றும் வெளிப்பட்ட, சோகவிடம் தொடர - துன்பந் தரும் சொல்லாகிய நஞ்சு (தன்னைப்) பற்றுதலால், துணுக்கம் எய்தி - நடுக்கம் அடைந்து, ஆகம் அடங்கலும் - (தன்) உடல் முழுதும், வெந்து - வெதும்பி, அழிந்து - சோர்ந்து, அராவின் - விடப் பாம்பினுல், வேகம் அடங்கிய - தன் வேகம்

தணியப்பெற்ற, வேழம் என்ன - யானைபோல, வீழ்ந்தான் - (தரையில்) விழுந்தான்.

கைகேயியின் சொற்கள் உயிரை வாங்கத்தக்க கொடுமை யுடையனவாயிருந்தன என்றவாறு.

நாகத்துக்கு விடம் பல்லில் உள்ளது. நாகத்தின் விடம் அது கடித்தவரின் உடம்பிற் புகுந்தபின் துன்பந் தரும். இந்த விடம் காதின் வழியே சென்று துன்புறுத்துகின்றது. உருவகத்தோடு வந்த வேற்றுமை அணி. அராவின்: இன் ஏதுப்பொருளது. வேகம் மடங்கிய எனப் பிரித்துக் கோடலும் ஆம்.

(பி - ம்.) 1. நாகநெடும்; நாவினீந்த, நாவில்வந்த, நாவின்வேய்ந்த; கொடியா டன்னால் நயந்த, கொடியாடனு நயந்த.
2. தொடராத்; எய்த, எய்தா.
3. மாகமடங்கலும்; வெந்திமிர்ந்தராவின், வெந்திழிந்த மன்னன்.
4. வேக மிகுந்திடு. (11)

197. பூதல முற்றத னிற்பு ரண்ட மன்னன்
மாதுய ரத்தினை யாவர் சொல்ல வல்லார்
வேதனை முற்றகம் வெந்து வெந்து கொல்லன்
ஊதுலை யிற்கன லென்ன வெய்து யிர்த்தான்.

பூதலம் உற்று - தரையில் விழுந்து, அதனில் புரண்ட - அதன்மீது (நிலை கொள்ளாது) புரண்ட, மன்னன் - சக்கரவர்த்தியின், மா துயரத்தினை - பெருந்துயரத்தை, சொல்ல வல்லார் யாவர் - அளவிட்டுச் சொல்ல வல்லவர் யாவருளர்? (எவருமில்லை); வேதனை முற்று அகம் - வேதனை மிகுந்த (தன்) மனம், வெந்து வெந்து - மிகவும் வெதும்பி, கொல்லன் ஊது உலையில் கனல் என்ன - கொல்லன் (துருத்தியால்) ஊதுகின்ற உலைக்களத்துத் தீயைப்போல, வெய்து உயிர்த்தான் - வெப்பமிக்க பெருமூச்செறிந்தான்.

இது கவிக்கூற்று; தயரதன் அளவிடற்கரிய துயரமுற்றான் என்கின்றது. அடுத்த பாடலும் அத்துயர நிலையை விளக்குவது. கொல்லன் உலைக்களத்தில் அடங்கிய தீ ஊதுந்தோறும் மேலெழுந்து மீண்டும் அடங்குதல் போல, மன்னனது வெப்பம் மிக்க உயிர்ப்பு மிக்கும் அடங்கியும் நிகழ்ந்ததென்க. கைகேயியின் சொல்லைக் கேட்டபொழுதினும், அதனை நினைக்குந்தொறும் துன்பம் மிகுதலின் ‘வேதனை முற்றகம்’ எனப்பட்டது. வெந்து வெந்து என்ற அடுக்கு மிகுதி குறித்தது. முற்றகம்: வினைத்தொகை. ஊதுலையிற் கனலென்ன வுயிர்த்தல்: 427, பால.603, ஆரணிய. 317, 644; சிலப். 18: 14, 22: 151 - 2; மணி. 2 : 42 - 3, 19 : 27 - 8.

(பி - ம்.) 1. பூதல முற்றுந் தனிப்புரந்த, பூதலமுற்றத்.
2. யாவர் மதிக்க வல்லார்.
3. வேதனைமுற்றிட, வேதனையுற்றிட; வெந்து நைந்து. (12)

198. உலர்ந்தது நாவுயி ரோட லுற்ற துள்ளம்
புலர்ந்தது கண்கள் பொடித்த பொங்கு சோரி
சலந்தலை மிக்கது தக்க தென்கொ லென்றென்
றலந்தலை யுற்ற வரும்பு லன்க ளைந்தும்.

(தசரத மன்னனுக்கு) தக்கது என்கொல் என்று என்று - இப்போது செய்யத்தக்கது யாது என்று எண்ணி எண்ணி, நா உலர்ந்தது - நாக்கு வறண்டது; உயிர் ஓடல் உற்றது - உயிர் போகத் தொடங்கியது; உள்ளம் புலர்ந்தது - மனம் வாடியது; கண்கள் பொங்கு சோரி பொடித்த - கண்கள் மிக்க இரத்தத்தைச் சிந்தின; சலம் தலைமிக்கது - கோபம் தலைக்கேறியது; அரு புலன்கள் ஐந்தும் - அரிய ஐம்புலன்களும், அலந்தலை உற்ற - கலக்கமுற்றன.

மன்னன் மரணாவஸ்தை யுற்றானென்பது கருத்து. அந்நிலையைப் பலபட விரித்துக் கூறுகின்றார். கண்கள் சோரி பொடித்தல், சினக் குறிப்பு. கைகேயிபால் சினம் ஒரு பக்கம் மிகினும், செய்வதற் கொன்றும் இல்லையாதலால், மன்னவன் மனமும் புலன்களும் ஒரு நிலையின்றிக் கலங்கலுற்றன. புலன்கள் தடுமாறுதல் மரண காலத் தென்பார்; "புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறி வழிந்திட்டு" (சம்பந்தர், திருவையாற்றுத் தேவாரம்).

அலந்தலை — ஒருசொல்; கலக்கம் என்பது பொருள். "இவள் பேச்சும் அலந்தலையாய்" (திவ். பெரியாழ்வார் 3. 7 : 1); அலந்து அலையுற்ற எனவும், அலம் தலையுற்ற எனவும் பிரித்துப் பொருள் கோடலும் உண்டு. சலம் - சஞ்சலமும் ஆம்.

(பி - ம்.) 1. உலந்தது, உலர்ந்தன; நாவுமோடலுற்றது, நாவுயிரோடவுற்றது.
2. புலந்தது, புலர்ந்தன; பொடித்தது பொங்குசோரி, பொடித்த செய்யசோரி, பொடித்தனபொங்குசோரி, ஓங்குஞ்சோரி, சோரி யெங்கும், பொடித்த சோரிபொங்கி, சோரிபொங்கும்.
3. என்கொலீதென்று.
4. அலந்தலையுற்றது. (13)

துயரம் மிக்க மன்னன் செயல்

199. மேவி நிலத்தி லிருக்கு நிற்கும் வீழும்
ஓவிய மொப்ப வுயிர்ப்ப டங்கி யோயும்
பாவியை யுற்றெதிர் பற்றி யெற்ற வெண்ணும்
ஆவி பதைப்ப வலக்க ணெய்தி நின்றான்.

ஆவி பதைப்ப - உயிர் துடிக்குமாறு, அலக்கண் எய்தி நின்றான் - பெருந் துன்பமுற்றிருந்த மன்னன், நிலத்தில் மேவி இருக்கும் - தரையில் (சிறிது) பொருந்தி அமர்வான்; நிற்கும் - எழுந்து நிற்பான்; வீழும் - (மீண்டும்) விழுவான்; ஓவியம் ஒப்ப - சித்திரம் போல,

உயிர்ப்பு அடங்கி - மூச்சொடுங்கி, ஓயும் - ஓய்ந்திருப்பான்; பாவியை- பாவியாகிய கைகேயியை, எதிர் உற்று - அவள் எதிரில் போய், பற்றி- (அவளைப்) பிடித்து, எற்ற எண்ணும் - மோத எண்ணுவான்.

இப்பாடலும் மன்னவன் கலக்க நிலையைப் பலபடக் கூறுகின்றது. உயிர்ப்படங்கி ஓய்தல் - மூர்ச்சையுறுதல்; அந்நிலைக்கு 'ஓவியம்' உவமை. தனக்கும் உலகுக்கும் உயிரனைய இராமன் திறத்துக் கன்னெஞ்சமுடையளாய்க் கடுந்தீங்கு விளைக்கின்றமையின் கைகேயியைப் பாவி என்றார். நின்றான் : எழுவாய்.

(பி-ம்.) 1. மிலத்தினிலிருக்கும், நிலத்தினிற்கும், மேவு மிலத்திலிருக்கும்; விம்மும் வீழும்.
2. ஓவிய மென்ன; அடங்கி வீழும்.
3. எற்ற வென்னும்.
4. ஆவி பதைக்கும்; எய்துகின்றான். (14)

200. பெண்ணென வுட்கும் பெரும்ப ழிக்கு நாணும்
உண்ணிறை வெப்பொ டுயிர்த்து யிர்த்து லாவும்
கண்ணில னொப்ப வயர்க்கும் வன்கை வேல்வெம்
புண்ணுழை கிற்க வுழைக்கு மானை போல்வான்.

வன்கை வேல் - வலிய கையினாலெறியப்பட்ட வேல், வெம்புண்ணுழைகிற்க - நொந்த புண்ணிலே நுழைதலால், உழைக்கும் - மிக வருந்துகின்ற, ஆனை போல்வான் - ஆண்யானை போன்ற மன்னன், (கைகேயியைப் பற்றி எற்ற நினைத்தவன்) பெண் என - அவள் பெண்ணாயிற்றே யென்று கருதி, உட்கும் - அஞ்சுவான்; பெரும் பழிக்கு - (பெண்கொலையால் வரும்) பெரிய பழியின் பொருட்டு, நாணும் - நாணுவான்; உள் நிறை வெப்பொடு - தன்னுள்ளே துயரத்தால் மிக்கிருந்த வெப்பத்தோடு, உயிர்த்து உயிர்த்து - பலகால் பெருமூச்செறிந்து, உலாவும் - அங்கு மிங்குமாக நடப்பான்; கண்ணிலன் ஒப்ப - கண்பார்வையற்றவன்போல, அயர்க்கும் - (நின்று) சோர்வான்.

இதுவும் மன்னன் செய்வதறியாது கலங்கிய நிலையில் நிகழ்ந்தவற்றைக் கூறுகின்றது.

கைகேயியைப் பற்றி மோதித் தொலைத்துவிடலாமா என்று சினங்கொண்டவன், அது செய்தால் பெண் கொலையாகிய குற்றம் நேருமே யென்றஞ்சியும், அதனால் வரும் பழிக்கு நாணியும் அதனைச் செய்யாது தவிர்ந்து, பெருமூச்செறிந்து உலாவியும் அயர்ந்து நின்றும் பலவாறு துயருற்றான். அவன் கொடுத்த வரங்களே வேல்போல அவன்மீது பாய்தலுற்றன; முதல் வரமே முதலிற் கொடும்புண் செய்ய, இரண்டாவது வரம் அப்புண்ணில் வேலை யெடுத்து நுழைத்தாற் போன்று தாங்கொணாத துன்பம் தந்தது. ஆண் யானை போன்ற பெருமிதமுடைய அவனும் இத்தகைய நிலை எய்தினான். எழுவாய் வரு

வித்து, உழைக்கும் ஆனைபோல்வானாயினான் என முடித்தலுமாம். பெருவீரமும் பெருஞ்சிறப்பு முடையவரேனும் அஞ்சத்தக்கவற்றை யஞ்சுதலும் தமக் கொவ்வாத கருமங்களில் நாணுதலும் அறிவுடைமை யாகும். ''அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது, அஞ்சல் அறிவார் தொழில்'', ''கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல் நல்லவர் நாணுப் பிற'' (குறள் 428, 1011) என்பவற்றைக் காண்க.

(பி - ம்.) 1. பெண்ணென வுற்ற, பெண்ணென வெட்கும்; மிகப்பழிக்கு நாணும்.
2. உயர்த்துலாவி வாழும், உயிர்ப்படங்கி ஓயும்.
3. கண்ணினி னேக்கும், கண்ணினி னேக்க, கண்ணில னேக்கும், கண்ணிலனெக்க, கண்ணிலனெக்கும், மண்ணினை நோக்கும்; அயிர்க்கும் அங்கை வேல்வெம், மிக்க கைவேல், அங் கவைவேல், வன்கை வைவேல்.
4. புண்ணுழை கிற்ப, புண்ணுழை தைக்க, புண்ணுறை தைக்க, புண்ணிடை யிற்க, புண்ணினுழைக்க; உழக்கும் யானை, உழைக்கும் யானை, உளைக்கும் யானை. (15)

தேவர்கள் நடுங்குதலும் கைகேயியின் உள்ள நிலையும்

201. கம்ப நெடுங்களி யானை யன்ன மன்னன்
வெம்பி விழுந்தயர் விம்மல் கண்டு வெய்துற்
றும்பர் நடுங்கின ரூழி பேர்வ தொத்த
தம்பன கண்ணவ ளுள்ள மன்ன தேயால்.

கம்பம் - கட்டுத்தறியிற் பிணிப்புண்ட, நெடு களி யானை அன்ன மன்னன் - பெரிய மதக் களிப்புடைய யானைபோன்ற தசரதன், வெம்பி - மனம் நொந்து, விழுந்து அயர் விம்மல் - தடுமாறி விழுந்து சோரும் துன்ப நிலையை, உம்பர் கண்டு - தேவர்கள் பார்த்து, வெய்துற்று நடுங்கினர் - மனம் புழுங்கி நடுங்கினார்கள்; ஊழி பேர்வது ஒத்தது - பிரளயகாலம் வந்தாற் போன்றிருந்தது; (அந்நிலையிலும்) அம்பு அன்ன கண்ணவள் உள்ளம் - அம்பு போன்ற கொடிய கண்களையுடைய கைகேயின் மனம், அன்னதே - (முன்பிருந்த) அத்தன்மையினதாகவே இருந்தது. ஆல்: அசை.

தசரதனுடைய நிலைமை கண்டு யாது நேருமோ வெனத் தேவரும் அஞ்சி நடுங்க, ஊழிக்காலம்போல அனைவரும் கலக்க மெய்திய நிலையிலும், கைகேயி சிறிதும் மனம் வருந்தாமல் உறுதி யோடு இருந்தாள் என அவளது கொடுமையைக் குறித்தார். தசரதனால் இராமபிரான் வனம் புகுதல் தவிர்க்கப்படின், தங்கள் காரியம் தடைப் படுமோ வெனத் தேவர்கள் அஞ்சினர். சக்கரவர்த்திக்கு யானையைப் பலவிடத்தும் உவமை கூறும் ஆசிரியர், இங்கே கம்பத்தை விசேடித்துக் கூறினமை, வரத்தால் அவன் பிணிப்புண்ட யானை போலானான் என்பது குறிக்கும்.

அயர் விம்மல்: வினைத்தொகை. ஊழிபேர்வதொத்தது: பால. 328.

(பி - ம்.) 1. யானையான, யானைமன்னர்.
2. வெம்பி விழுந்தழும், விழுந்தெழும்; வெய்துயிர்த்து.
3. போவதொத்த. 4. அம்பன்ன, கண்ணவர். (16)

202. அஞ்சல ளையன தல்லல் கண்டு முள்ளம்
நஞ்சில ஞணில ளென்ன நாண மாமால்
வஞ்சனை பண்டு மடந்தை வேட மன்றே
தஞ்சென மாதரை யுள்ள லார்க டக்கோர்.

ஐயனது அல்லல் கண்டும் - (தன்) தலைவனுடைய துன்ப நிலையைக் கண்டும், அஞ்சலள் - அஞ்சாதவளாகிய கைகேயி, உள்ளம் நஞ்சிலள் - மனம் (சிறிதும்) இரங்கினுளல்லள்; நாணிலள் - பழிக்கு நாணவுமில்லை; என்ன - என்று அவள் நிலையைக் கூற, நாணம் ஆம் - (நமக்கே) நாணமுண்டாகும்: பண்டு - தொன்றுதொட்டே, வஞ்சனை - வஞ்சனை என்பது, மடந்தை வேடம் அன்றே - பெண்வடிவினதே யன்றே? (ஆதலால்) தக்கோர் - சால்புடைய பெரியோர், மாதரை - பெண்களை, தஞ்சு என உள்ளலார்கள் - ஓர் ஆதரவென்று கருதார். ஆல்: அசை.

பெண்மைக்கே சிறப்பாக வுள்ள அச்சம், நாணம், இரக்கம் என்பன இப்போது கைகேயிபால் இல்லை. இவ்வாறு அவள் நிலைபற்றிக் கூறுவது நாணந் தருகின்றது என்கின்றார் கவி. வஞ்சனை பண்டு மடந்தை வேடம் என்றது உலக இயல்பு கூறியவாறு. பெண்கள் நெஞ்சின் ஆழம் எவர்க்கும் அறிதலரிதாகலின் அவர்களை நம்புதல் அறிவுடையோர்க்குத் தக்கதன்று எனக் கூறுமுகத்தால் தசரதன் கைகேயி மிக நல்லவளென்று நம்பி அவள்பால் அன்பு மீக்கூர்ந் திருந்தது தவறு என்பதனைக் குறிப்பிக்கின்றார்.

ஐயன் - தலைவன்; உலக நாதனைப் பெற்ற தந்தையாதலால் தேவரும் வணங்கும் பெருமை உடையவன். கண்டும்: உம்மை, உயர்வு சிறப்பு. நஞ்சிலள்: நைந்திலள் என்பதன் போலி. தஞ்சு: தஞ்சம் என்பதன் கடை குறைந்தது.

இப்பாடல் ஒரு பிரதியில் இல்லை.

(பி - ம்.) 1. அஞ்சிலள்.
2. நைஞ்சிலள், எஞ்சலன், எஞ்சிலள்; எண்ண, என்ன ஞாயம், என்ன ஞானம்.
3. வேடமென்றே, வேடமின்றே.
4. தஞ்சமில், தஞ்சமிம், தஞ்சன; உள்ளுவாள் கொல், உன்னுவார் கொல், உள்ளுவாரோ, உள்ளிடார்கள், உள்ளுவரோ மிகு. (17)

தசரதன் வினவுதல்

203. இந்நிலை நின்றவ டன்னை யெய்த நோக்கி
நெய்ந்நிலை வேலவ னீதி சைத்த துண்டோ
பொய்ந்நிலை யோர்கள் புணர்த்த வஞ்சமுண்டோ
உன்னிலை சொல்லென தாணை யுண்மை யென்றான்.

நெய் நிலை வேலவன் - நெய் பூசப்பெற்ற வேலையுடைய தயாதன், இ நிலை நின்றவள் தன்னை - (சிறிதும் நாணுதும் இரங்காதும்) இந்த நிலையில் நின்ற கைகேயியை, எய்த நோக்கிப் - பொருந்தப் பார்த்து, நீ திசைத்தது உண்டோ - நீ மனம் பிரமித்திருக்கின்றாயோ? (அல்லது) பொய் நிலையோர்கள் புணர்த்த - பொய்த்தன்மையுடையோர் எவரேனும் கட்டிச்சொன்ன, வஞ்சம் உண்டோ - வஞ்சனை ஏதேனும் உண்டோ ? எனது ஆணை-என்மேல் ஆணையாக, உன் நிலை உண்மை சொல் - உனது இந்த நிலையின் காரணத்தை உண்மையாகச் சொல், என்றான்—.

இதுவரை கைகேயிலைய ஏறெடுத்துப் பாராத மன்னன் இராம னிடம் பேரன்பு பூண்டிருந்த அவள் இந்நிலையெய்தக் காரணத்தை அறிய வேண்டி, அவள் முகத்தைப் பார்த்து, "என்மேலாணையாக உனது மாறுபட்ட நிலையின் காரணத்தை மறையாது உண்மையாகச் சொல்" என்று வினவினான். அவளை நன்கு பார்த்துக் கேட்டானென் பது புலப்பட 'எய்த நோக்கி' என்றார். மன்னன் வலியவேல் தாங்கு பவனேனும் அதனைப் பயன்படுத்த இப்போது இடமில்லை என்ற குறிப் போடு, 'நெய்ந்நிலை வேலவன்' என்று விசேடித்துக் கூறினார். கைகேயி யின் மாறுபட்ட நிலை மிக்க வியப்புத் தருதலின், 'நீ திசைத்தாயோ அல்லது தீயோர் எவரேனும் உன் மனத்தைக் கெடுத்தனரோ? உண்மையைச் சொல்' என்று கேட்டான். உறுதி கூறுங்கால் ஆணை யிட்டுக் கூறுதல் மரபு. முன்பு இராமன்மேல் ஆணையிட்டுக் கூறினவன் கைகேயிக்கு இப்போதவன்பால் அன்பின்மையை உணர்ந்து தன் மேல் ஆணையிட்டான். கூனியின் வார்த்தைகள் கட்டிச் சொன்னவை யாதலால் புணர்த்த வஞ்சம் என்பது பொருந்துவதே. திசைத்தல் - திகைத்தல், பிரமித்தல்.

இந்தப் பாடலும் ஒரு பிரதியில் இல்லை.

(பி- ம்.) 1. நிற்பவடன்னை. ஈன்றவடன்னை; எய்தி நோக்கி, எய்தனோக்கா.
2. திகைத்ததுண்டோ, இசைத்ததுண்டோ.
3. புன்னிலையோர்கள்; புணர்ந்த வஞ்சம், புகன்ற வஞ்சம்.
4. அந்நிலை சொல். (18)

கைகேயியின் மறுமொழி

204. திசைத்தது மில்லை யெனக்கு வந்து தீயோர்
இசைத்தது மில்லைமு னீந்த வரங்க ளென்பால்
குசைப்பரி யோய்தரி னின்று கொள்வெ னன்றேல்
வசைத்திற நின்வயி னிற்க மாள்வ னென்றாள்.

(மன்னன் கூறக்கேட்ட கைகேயி அவனை நோக்கி) குசை பரியோய் - கடிவாளமுடைய குதிரைகளை உடைய அரசே, திசைத்ததும் இல்லை - நான் திகைத்ததும் இல்லை, தீயோர் - கொடியோர் எவரும், எனக்கு வந்து இசைத்ததும் இல்லை - என்பால் வந்து (வஞ்சனையாகச்) சொன்னதும் இல்லை, முன் என்பால் ஈந்த வரங்கள் - முன்பு என்னிடம் வழங்கிய வரங்களை, இன்று தரின் - இப்போது தந்தால், கொள்வென் - பெற்றுக் கொள்வேன், அன்றேல் - தராவிடில், வசை திறம் நின்வயின் நிற்க - பழியின் கூறுகள் நின்னிடம் நிலைக்குமாறு, மாள்வென் - (நான்) உயிர் விடுவேன், என்ருள் —.

தசரதன், 'நீ திகைத்ததுண்டோ? அல்லது பொய்ந்நிலையோர் புணர்த்த வஞ்ச முண்டோ?' என்று வினவியதற் கெதிராக அவ்விரண்டும் இல்லை என்று முதலிற் கூறி, 'நீ வழங்கிய வரங்களை வேண்டும் போது பெற்றுக் கொள்வதாக முன்னர் நான் சொல்லியபடி, இப்போது அவற்றை நானே தெளிவோடு கேட்கின்றேன்; தந்தால் சரி; இல்லையேல் இப்போதே என் உயிரை மாய்த்துக் கொள்வேன், அதனால் நீ பழிக்காளாக நேரும்' என்று அரசனை அச்சுறுத்துகின்ருள். மன்னன் வினவிய வகையில் அவள் கேட்ட வரங்களைத் தருதற்கு அவன் மனமிசையவில்லையென்ற குறிப்புத் தோன்றுதலின், 'அன்றேல் மாள்வென்' என்ற தனது உறுதியைப் புலப்படுத்தினள். முன்பு கூனிபால் இவள், "நம்பியை நளிர் முடிசூட்டல், துன்று கானத்தி ராமனைத் துரத்தலிவ் விரண்டும், அன்ற தாமெனில் அரசன்முன் ஆருயிர் துறந்து, நீங்குதல் புரிவென்யான்' (181) எனக் கூறியுள்ளமை காண்க. குசைப் பரியோய் என்றது கருத்துடையடைகொளி யணி, அப்பரியைத் தூண்டித் தான் உதவியபோது அளித்தவை வரங்கள் என்பதை நினைப்பூட்டும். கைகேயி உயிர் நீப்பின் மன்னவனுக்கு, பொய்பட்டமை, மனைவி உயிர்விடக் காரண மாயினமை எனவரும் பழிகள் பலவாதலின் 'வசைத்திறம்' என்ருர்.

(பி - ம்.) 1. திகைத்ததும்; வந்த தீயோர்.
2. முனீந்ததவ் வரங்கள், இரண்டு வரங்கள், வரமிரண்டும், வரங்களிரண்டும், முன்னீந்ததவ் வரங்கள், முன்னீவரங்களென்பால், முன்னீந்தவை வரங்கள்.
3. தரினின்று திரிந்தெ வனின்றது.
4. வசைத்திறம் மின்வயின், வசைப்பொரு ணின்வயின், நிற்ப அமைத்து. (19)

மன்னனது துயர் மிகுதியும் அதனாலாகிய செயல்களும்

205. இந்த நெடுஞ்சொலவ் வேழை கூற முன்னே
வெந்த கொடும்புணில் வேனு ழைந்த தொப்பச்
சிந்தை திரிந்து திகைத்த யர்ந்து வீழ்ந்தான்
மைந்த னலாதுயிர் வேறி லாத மன்னன்.

இந்த நெடுஞ்சொல் - இந்தப் பெரிய வார்த்தையை (வஞ்சினத்தை), அ ஏழை கூற - அறிவிலியான அக் கைகேயி சொல்ல, (அது செவிப் பட்ட வளவில்), மைந்தன் அலாது - இராமனை யன்றி, உயிர் வேறு இல்லாத மன்னன் - தன்னுயிர் என்று வேறொன்றில்லாத தசரதன், முன்னே வெந்த கொடும் புண்ணில் முன்பே தீயினால் சுட்ட கொடிய புண்ணில், வேல் நுழைந்தது ஒப்ப - கூரிய வேல் பாய்ந்தாற் போல, சிந்தை திரிந்து - மனம் தடுமாறி, திகைத்து - பிரமித்து, அயர்ந்து வீழ்ந்தான் - சோர்ந்து (தரையில் மீண்டும்) விழுந்தான்.

கைகேயி உயிர் துறப்பேன் என்று சொன்ன வார்த்தை, எவரும் நினைத்தற்கும் அரியதாகலின், 'நெடுஞ் சொல்' எனப்பட்டது. தலைவன் உயிர் போகுமென்பதும், தான் பேசத் தகாத சொல் இதுவென்பதும் அறியாத அறிவிலியாக நிற்றலின், ஏழை' என்றார். வரங்கள் இன்ன வென்றபோதே மன்னன் மனம் வெந்த புண்ணாயிருக்க, இப்போது அவள் உயிர் துறப்பேன் என்றது, அப்புண்ணில் வேல் நுழைந்தாற் போலாயிற்று. தசரதனுக்கு இராமன் உயிர்; 217; பால. 302-பார்க்க. வெந்த புண்ணில் வேலும் கனலும் நுழைதல் இலக்கியங்களுட் பல விடத்தும் கூறப்படுவது; பால. 200, 326, 1131. ஆரணிய. 926; கிட்கிந். 503; சுந்தர. 341; "வெந்ததோர் புண்ணின்கண் வேல் கொண்டு நுழைப்பான் போல்" (கலி. 110); "தழலுறு புண்மேற் கருவி பாய்ந்தென்ன" (பெருங். 4, 13 : 130); தஞ்சை. 113.

(பி - ம்.) 1. நெடுஞ்சொலையேழை, விடச்சொலவ்வேழை; கூறமுன்னே.
2. கொடும்புணின், நெடும்புணில்.
3. சிந்தை கரிந்து: திசைத் தயர்ந்து; சாய்ந்தான்.
4. மற்றொன்றிலாத. (20)

206. ஆகொடி யாயெனு மாவி காலு மந்தோ
ஓகொடி தேயற மென்னு முண்மை யொன்றும்
சாக வெனவெழு மெய்த ளாடி வீழும்
மாகமு நாகமு மண்ணும் வென்ற வாளான்.

மாகமும் - மேலுலகத்தையும், நாகமும் - கீழுலகத்தையும், மண்ணும் - பூவுலகத்தையும், வென்ற வாளான் - வென்ற வாட் படையையுடைய தசரதன், (கைகேயியை) ஆ கொடியாய் எனும் - ஓ கொடியவளே என்பான்; ஆவி காலும் - உயிர் சோர்வான்; அந்தோ - ஐயோ! அறம் ஓ கொடியதே என்னும் - தருமம் மிகவும் கொடியதே என்பான்; உண்மை ஒன்றும் - சத்தியமென்பதொன்று, சாக என - சாகட்டும் என்று சொல்லிக்கொண்டு, எழும் - மேலெழு வான்; மெய் தள்ளாடி வீழும் - உடம்பு (நிலைகொள்ளாமல்) தள்ளாடி விழுவான்.

மன்னவன் நிலையைப் படம் பிடித்துக் காட்டுகின்றது இது. இராமன் வனம் போகவேண்டும் என்ற சொல்லை வாய் கூசாது கூறி,

அதில் பேருறுதியுங் கொண்டிருந்தமையின் கைகேயியை, 'ஆ! கொடியாய்!' என்றான். ஆ: இரக்கக் குறிப்பு. அறந் திறம்பாத வகையில், கைகேயி கேட்ட வரங்களைத் தந்தே தீர வேண்டியிருத்தலாலும், அதனால் தன்னுயிர் போகும் நிலையெய்துதலாலும், அவளையும் ஒன்றும் செய்தற்கின்மையாலும் 'அறம் கொடிதே' என்கின்றான். வரம் தந்த பின், வாய்மை காத்தற் பொருட்டு இராமபிரானைக் காடு புகுத்தலும் தவறாது செய்ய வேண்டுதலின், 'வாய்மை யொன்றும் சாக' என்கின்றான். இடையே மனவேகத்தால் எழுந்தாலும், உடற்சோர்வினால் நிலை கொள்ளாது தள்ளாடி விழுகின்றான்; மூவுலகும் வென்றி கொண்டவனேனும், அவ்வாற்றல் ஈண்டுப் பயன்படாதொழிந்த தென்பதனை ஈற்றடி குறிப்பிக்கின்றது. மாகம் - சுவர்க்கம்; நாகம் - பாதாளம்.

'அறம் கொடிது', 'உண்மை யொன்றும் சாக' : சந்தர்ப்பத்துக் கேற்ப இவ்வாறு கூறுதலை விபரீதலக்ஷணை என்பர் வடநூலார். "அறத்தி னூங்கினிக் கொடிதென லாவதொன் றியாதே" (46); "மெய்யுரை குற்றமெனப் புழுங்கி வீழும்" (208). தயரதன் மூவுலகும் வென்றமை : 18.

(பி - ம்.) 1. ஆவிசோரும்.
2. ஓகொடி தோவரம்; உண்மை யென்றும்;
3. சாக வென வெனும், சாகவென்றேயெழும்; மெய்தளாடி விழும், மெய் கடாவி வீழும், மெய் தளர்ந்து விழும், சாயும். (21)

207. நாரிய ரில்லையிஞ் ஞால மெங்கு மென்னக்
கூரிய வாள்கொடு கொன்று நீக்கி யானும்
பூரிய ரெண்ணிடை வீழ்வெ னென்று பொங்கும்
வீரியர் வீரம் விழுங்கி நின்ற வேலான்.

வீரியர் வீரம் - மிக்க வீரமுள்ளோர் வீரமுழுதும், விழுங்கி - (வென்று) தன்னுள் அடக்கி, நின்ற - அந்நிலையில் எப்போதும் நிலை பெற்ற, வேலான் - வேற்படை தாங்கிய தசரதன், இ ஞாலம் எங்கும் - இப்பூமியில் எல்லாவிடத்தும், நாரியர் இல்லை என்ன - பெண்களே இல்லை யென்னுமாறு, கூரிய வாள் கொடு - என் கையிலுள்ள கூரிய வாளைக் கொண்டு, கொன்று நீக்கி - அவர்களைக் கொலைசெய்து போக்கி, யானும்—, பூரியர் எண்ணிடை வீழ்வென் என்று - கீழோர் எண்ணிக்கையில் சேரக்கடவேன் என்று சொல்லி, பொங்கும் - சினம் மிகுவான்.

கைகேயியின் செயலால், 'பெண்களே வஞ்சனை மிக்கோர்; குலக் கேடர்' என்று கருதி, 'அவளோடு பெண்குலத்தையே கொன்று வேரறுத்து அத்தகாத செயலால் வரும் பழியை ஏற்றுக் கீழ் மக்கள் வரிசையில் நானும் சேரினும் குற்றமில்லை' என்று பொங்கி யெழுந்தான். பின்னே இலக்குவன் சீற்றம் மிக்கு, "பெண்ணாட்ட மொட்டே

னிப்பேருல கத்துள்'' என்று கூறுவதையும் காண்க. அப்போது துண்டான மனக் கொதிப்பு அவ்வாறெண்ணச் செய்ததேயன்றி, அச் செயல் தகாததென்பதனை மன்னன் அறியாதவனல்லன். இப்பாடலிலும் ஈற்றடி, முன் பாடலைப் போன்றது. மன்னன் வீரத்தைச் சிறப்பிப்பார், இலக்கணையாக அவன் வேலைச் சிறப்பித்தார்.

பூரியரெண்ணிடை வீழ்வென் : ''மன்னர் மாலையில், எண்ணுறப் பிறந்திலன்'' (155).

(பி - ம்.) 1. ஞாலமேழும்.
2. நீக்கி நானும், குறைத்து யானும்.
3. பூரியரென்றிடை; வீழ்வரெனறு, வீய்வதொன்று.
4. விரியர் விரியம்; விழுங்க நின்ற, விழுங்குகின்ற. (22)

208. கையொடு கையைப் புடைக்கும் வாய்க டிக்கும்
மெய்யுரை குற்ற மெனப்பு ழுங்கி விம்மும்
நெய்யெரி யுற்றென நெஞ்ச ழிந்து சோரும்
வையக முற்று நடந்த வாய்மை மன்னன்.

வையகம் முற்றும் நடந்த - உலக முழுதும் (பெயர்) பரந்த, வாய்மை மன்னன் - சத்திய சீலனான தயரதன், (சினத்தால்) கையொடு கையை புடைக்கும் - கையோடு கையை ஓங்கித் தட்டுவான்; வாய் கடிக்கும் - உதட்டைக் கடிப்பான்; மெய் உரை குற்றம் என - உண்மையுரைத்தல் குற்றமாகுமென்று, புழுங்கி - மனம் புழுங்கி, விம்மும் - பொருமுவான்; எரி நெய் உற்றது என - நெருப்பு நெய்யோடு சேர்ந்தது போல, நெஞ்சு அழிந்து - மனமுடைந்து, சோரும் - அயர்வான்.

இவையும், சினத்தாலும் மனத் தடுமாற்றத்தாலும் நிகழ்ந்தவையே. வையகமுற்றும் நடந்த வாய்மை மன்னனையே, 'மெய்யுரை குற்றம்' என்றெண்ணச் செய்தது, அவனுக்கு இராமபிரான்பாலுள்ள பேரன்பு. 'உண்மையென்றும் சாக' (206) என முன்னர்க் கூறியதுங் காண்க. கை புடைத்தல், வாய் கடித்தல் சினத்தால் நிகழும் மெய்ப்பாடுகள். விம்முதலும் சோர்தலும் அவலம் பற்றியவை.

உற்றென : தொகுத்தல் விகாரம். வாய்மை மன்னன் : 209, 310.

(பி - ம்.) 1. கையொடு கைகள், கைகொடு கைகள்; வாய்மடிக்கும், நாவொடுக்கும்.
2. பொய்யுரை குற்றம்; புழுங்க விழும், புழுங்கி வாடும்.
3. எரியுற்றன; நெடுஞ்செரிந்து.
4. முற்று நடக்கும், நடத்தும். (23)

மன்னன் கைகேயியை இரந்து வேண்டத் துணிதல்

209. ஒறுப்பினு மந்தர முண்மை யொன்று மோவா
மறுப்பினு மந்தர மென்ற வாய்மை மன்னன்
பொறுப்பினு மந்நிலை போகி லாளை யாவி
இறுப்பினு மாவ திரப்ப தென்றெ ழுந்தான்.

ஒறுப்பினும் - (இவளைத்) தண்டித்தாலும், அந்தரம் - தீமை, உண்மை ஒன்றும் ஓவா - சத்தியம் என்ற ஒன்றினின்றும் நீங்கி, மறுப்பினும் - வரங்களைத் தர மறுத்தாலும், அந்தரம் - தீமையே, என்ற - என்று சிந்தித்த, வாய்மை மன்னன் - சத்திய சீலனான மன்னன், பொறுப்பினும் - எவ்வளவு பொறுத்துப் போனாலும், அ நிலை போகிலாளை - (தான் கொண்ட) அந்நிலையைக் கைவிடாத இவளை, ஆவி இறுப்பினும் - உயிர் முடித்தலினும், இரப்பது - யாசிப்பது, ஆவது என்று - (இப்போது) செய்யத்தக்கதாகுமென்று கருதி, எழுந்தான் - அது செய்யத் துணிந்தான்.

துன்பத்தால் பலபடியாகச் சிந்தித்த தயரதன், 'ஒன்றுஞ் செய்யாது பொறுத்து நான் படும் பெருந்துன்பம் கண்டும், சிறிதேனும் மனமிரங்கித் தன் நிலையினின்று மாருத இவளை, இரந்து வேண்டுதல் ஒருகால் பயனளித்தல் கூடும்' என்று கருதி அவ்வாறு செய்யத் துணிந்தானென்க.

அந்தரம் - தீமை. ஓவுதல் - நீங்குதல். இறுப்பு : தொழிற்பெயர்.

(பி - ம்.) 1. ஒறுப்பினு மாவதென்; உண்மையின்றெடாவி, உண்மை யென்று மோவா, உண்மையொன்று மொவ்வா.
2. மறப்பினும், இறப்பினும்; அந்தரமென்று, அந்தரமென்றும்.
3. பொறுப்பினு மிங்கில, மன்னிலை, அறுப்பினு மங்கிலை, இங்கிலை, இறப்பினு மின்னிலை; போகிலாளை யாவி, வாளால் போகிலாளை, வாளா போக்கிலாளை யாவி உறுப்புறு மிங்கிலை.
4. இறுப்பினு மாவதன்று, இறப்பினும் பாவம், இறுப்பினும் யாவது, இறப்பினு மாவது, இரப்பினு மாவது, அறுப்பினுமாவது, இரப்ப வென்று, இசைப்பனென்று; இரந்தான், இரப்பான். (24)

மன்னன் கைகேயியை வணங்குதல்

(கலிநிலைத்துறை)

210. கோன்மேற் கொண்டுங் குற்ற மகற்றக் குறிகொண்டார்
போன்மே லுற்ற துண்டெனி னன்றும் பொறையென்னுக்
கான்மேல் வீழ்ந்தான் கந்துகொல் யானைக் கழன்மன்னர்
மேன்மேல் வந்து முந்தி வணங்க மிடைதாளான்.

கந்துகொல் யானை - கட்டுத்தறியை முறிக்கும் யானைப் படையையும், கழல் - வீரக்கழலையுமுடைய, மன்னர் - அரசர் பலரும், மேல் மேல் முந்தி வந்து - மேலே மேலே (ஒருவர்க்கொருவர்) முற்பட்டு வந்து, வணங்க மிடை - வணங்கும் பொருட்டு நெருங்குறற்கிடமான, தாளான் - பாதங்களையுடைய சக்கரவர்த்தி, கோல் மேல் கொண்டும் - (தாம்) அரசாளுதலை மேற் கொண்டிருப்பினும், குற்றம் அகற்ற குறி

கொண்டார் போல் - (அதில் வரும்) குற்றங்களை (எவ்வகையானும்) நீக்குதலைக் குறியாகக் கொண்ட உத்தம அரசரைப் போல, மேல் உற்றது உண்டு எனின் - மேலே (வரும்) நன்மை உண்டென்றால், பொறை நன்று ஆம் என்னு - (எவ்வளவும்) பொறுத்தல் நல்லதாகும் என்றெண்ணி, கால் மேல் வீழ்ந்தான் - கைகேயியின் கால்களில் விழுந்து வணங்கினான்.

நாட்டின் நன்மையே கருதும் அரசர், அதற்காயினவற்றைச் செய்தலில் தமக்குத் தாழ்வு வரினும் அதனைப் பொருட்படுத்தாது செய்தல் முறையாகும். சக்கரவர்த்தி அவ்வகையில் தன் பெருமையைக் கருதாமல் கைகேயியை வணங்கி வேண்டுதலால் மேலே நன்மை யுண்டாமெனின் அதனையும் செய்வோமென்று கருதி அவளை வணங்கினான் என்றவாறு. பேரரசர் பலரும் தன்னை வணங்குதற்கு நெருங்கி வந்து இடம் பெறாமல் காத்திருக்கும் பெருமையுடையவன் ஒரு பெண்ணின் காலில் விழுந்தான் என அவன் பெருமையும் அவன் வணங்குதலின் சிறுமையும் குறித்து அவ்வாறு வணங்கினமை மேலே நன்மையுண்டாக்கலாமென்னுங் குறிக்கோளுடையதென்றார். தான் வணங்குதலால் கைகேயி உளம் நெகிழ்ந்து வரங்களை மாற்றிக் கொண்டால், அவளுக்கு வரந்தர மறுத்தலால் வரும் குற்றமும், இராம பிரானுக்கு அரசளிப்பதாகச் சொன்ன வாக்குப் பொய்படுதலும் நீங்கி நன்மையுண்டாகலாம் என்று கருதியே வணங்கினான். "நின்றீமின் மன்னீர் நெருநல் திறைகொணர்ந்து, முன்றந்த மன்னர் முடிதாக்க - இன்றும், திருந்தடி புண்ணாகிச் செவ்வி, யிலனே, பெருந்தண் உறைந்தையார் கோ" (முத்தொள். 67); "எந்தை கழலிணையில் எம்மருங்கும் காணலாம், கந்து சுளியுங் கடாக்களிற்றின், - வந்து, பணிமுடியிற் பார்காக்கும் பார்வேந்தர் தங்கள், மணிமுடியிற் றேய்ந்த வடு" (நள. 376). உற்றது : காலமயக்கம்.

(பி - ம்.) 1. கோன் மேற்கொண்டு, மேல்கொண்டு; குற்றமகற்றிக் குறிக் கொண்டார், குறிகொண்டே, குறிகொண்டோர், குறைகொண்டோர்.
2. போன்மேல் கொண்டது, நாண் மேல்கொண்டது, நான் மேல் கொண்டது; உண்டென வின்றும், வின்றான்; பொறையன்றான், பொறையன்னாள்.
3. கான்மேல் விழுந்தான்; கந்துகொலானைக் களிமன்னர்.
4. வணங்கி மிடை, வணங்கு மிடை. (25)

மன்னனது வேண்டுகோள்

211. கொள்ளா னின்சே யிவ்வர சன்னான் கொண்டாலும்
நள்ளா திந்த நானில ஞாலந் தனிலென்றும்
உள்ளா ரெல்லா மோத வுவக்கும் புகழ்கொள்ளாத்
தெள்ளா நிற்கும் வன்பழி கொண்டேன் பயனென்றான்.

(கைகேயியின் காலில் விழுந்தெழுந்த மன்னன் அவளை நோக்கி) நின் சேய் - உன் மகன் பரதன், இவ் அரசு கொள்ளான் - (நீ விரும்பினும்) இந்த அரசாட்சியை ஏற்க மாட்டான்; அன்னான் கொண்டாலும் - அவன் (ஒருகால்) ஏற்றுக்கொண்டாலும், இந்த நால்நிலம் நள்ளாது - இவ்வுலகம் (அதனை) விரும்பி உடன்படாது; (ஆதலால்), ஞாலம்தனில் உள்ளார் எல்லாம் - உலகத்தில் உள்ள எல்லோரும், என்றும் ஓத - எக்காலமும் எடுத்துச் சொல்லுதலால், உவக்கும் - மகிழ்தற்குக் காரணமான, புகழ் கொள்ளாது - புகழை அடையாமல், எள்ளா நிற்கும் - (என்றும் எல்லோரும்) இகழ்தற்குரிய, வன்பழி கொண்டு - வலிய பழியைப் பெற்று, என் பயன் - என்ன பயனுண்டு? என்றான்—.

இதுமுதல் நான்கு பாடல்களால் தசரதன் வேண்டுகோள் கூறப்படும்.

மன்னன், பரதன் பண்புகளை நன்கு அறிந்தவனாதலின், 'மூத்தவற்குரித்தரசு' என்ற இக்குல முறைப்படி, இராமன் நிற்கத் தான் அரசு மேற்கொள்ளான் என்றான். கைகேயி வரங் கேட்குங்கால், 'என்சேய் அரசாள்வது' என்றமையின் 'இங்கே நின்சேய்' என்றான்; "நின்மகனாள்வான்" (217). கூனியின் சொல்லால் மனம் வேறுபடுமுன் கைகேயி, "பிறந்தி றந்துபோய்ப் பெறுவது மிழப்பதும் புகழேல்...... வரன்முறை திறம்புதல் வழக்கோ" (163) எனக் கூறியதும் ஈண்டு நோக்கத்தகும்.

உவக்கும் புகழ் - உவத்தற்குக் காரணமான புகழ்; எனவே, இதற்கு மறுதலையான 'வன்பழி' என்றவிடத்துத் 'துயருறுதற்குக் காரணமான வன்பழி' என்க. 'உள்ளாரெல்லாம் என்றும் ஓத' என்பதனைப் பழியோடும் இயைக்க.

(பி - ம்.) 1. உன்சேய்; அவ்வரசு, இவ்வரம்.
2. ஞாலத்தினிலென்றும், ஞானத்தினிலென்றும்.
3. புகழ்கொள்ளாய், புகழ்கொள்ளார், பொருள் கொள்ளாய். (26)

212. வானோர் கொள்ளார் மண்ணவ ருய்யா ரினிமற்றென்
ஏனோர் செய்கை யாரொடு நீயிவ் வரசாள்வாய்
யானே சொல்லக் கொள்ள விசைந்தான் முறையாலே
தானே நல்கு முன்மக னுக்குத் தரை யென்றான்.

வானோர் கொள்ளார் - (உன் கருத்தின்படி, இராமனைக் காடு புகுத்திப் பரதன் அரசாள வேண்டுமென்பதனைத்) தேவரும் ஒப்ப மாட்டார்கள்; மண்ணவர் உய்யார் - (இராமன் பிரிந்தால்) இவ்வுலக மக்கள் உயிர் வாழார்; ஏனோர் செய்கை - மற்றைப் பாதலத்தோர் செயல், இனி மற்று என் - இனி வேறென்ன சொல்ல இருக்கின்றது? (அவ்வாறாயின்), யாரொடு நீ இ அரசு ஆள்வாய் - யாரோடிருந்து நீ

இவ்வரசை ஆள்வாய்? (இராமனேவெனில்), யானே சொல்ல - நானே அவனை அரசேற்குமாறு சொல்ல, முறையாலே - முறைப்படி, கொள்ள இசைந்தான் - ஏற்றுக்கொள்ள உடன்பட்டான்; (ஆதலால், அவன்) உன் மகனுக்கு - உன் மகன் பரதனுக்கு, (உன் விருப்பத்தை அறிந்தால்) தானே தரை நல்கும் - தானாகவே நாட்டை அளித்திடுவான்; என்றான் —.

எழுவாய் வருவிக்க.

'இராமன் நாடுதுறத்தலை மூவுலகத்தவரும் விரும்பார்; அவன் வனம் புகின், இந்நாட்டு மக்கள் பலர் உயிர்விடுவர்; அல்லது அவனுடனே தாமும் செல்வர்; பரதன் அரசு கொள்ளானென்பதும் உறுதி; அங்ஙனமாக, சூனியமான இவ்வரசை நீ தனித்திருந்து ஆளுதல் கூடுமோ?' என்று கூறினான் மன்னன். 'இராமன் அரசில் ஆசைகொண்டு தானே முயன்று பெற்றானல்லன்; நான் சொன்னதனால், தந்தைசொல் மருமை, மூத்த மகன் என்ற முறைகள்பற்றி அவன் அதற்கிசைந்தான். பரதன் அரசு பெறும்பொருட்டு இராமனைக் காட்டிற்குத் துரத்தவேண்டுவதில்லை; என்னிடம் வரம் பெற வேண்டுவதுமில்லை. நீ விரும்பினால் தானாகவே பரதனுக்கு நாட்டையளித்து விடுவான்; அப்போது முறைகேடொன்றும் நேராது' என்றபடி.

தன்னை விட்டுப் பிரிந்து இராமன் வனம் புகுதல் கூடாதென்பதே மன்னன் குறிக்கோள்; "மண்ணே கொள்நீ மற்றைய தொன்றும் மற" என அவன் அடுத்துக் கூறுதலும் காண்க. முறையாலே என்பதனை இராமன் நல்குதலுக்கியைத்து, தனக்கு அடுத்தபடி பரதன் மூத்தவன் என்பதும், தாயின் விருப்பம் தட்டாமையென்பதும் முறையாகக் கொண்டு இராமன் நாட்டையளித்திடுவான் என உரைத்தலுமாம். மண்ணக மக்கள் உண்ணும் நீரினும் உயிரினும் இராமனையே உவப்பவராதலின் 'மண்ணவருய்யார்' எனப்பட்டது. வானோரையும் மண்ணவரையும் முற்கூறினமையின், ஏனோர் என்றது கீழுலகத்தவரை. இங்கும் பரதனை உன் மகன் என்றல் காணத்தக்கது.

(பி - ம்.) 1. மன்னவருய்யார், மன்னவர்கொள்ளார்.
2. ஏனோர்கொள்ளார்,
3. முறையானே.
4. உன்மகனுக்கும், நின்மகனுக்குத். (27)

213. கண்ணே வேண்டு மென்னினு மீயக் கடவேனென்
உண்ணே ராவி வேண்டினு மின்றே யுனதன்றோ
பெண்ணே வண்மைக் கேகயன் மானே பெறுவாயேல்
மண்ணே கொண்ணீ மற்றையதொன் றும் மறவென்றான்.

(மன்னன் மேலும் கூறுவானாகி) பெண்ணே - பெண்ணாகப் பிறந்தவளே; வண்மை கேகயன் மானே - வண்மைக் குணமிக்க கேகயன் மகளே, கண்ணே வேண்டும் என்னினும் - என்

கண்களையே (நீ) வேண்டுமென்று கேட்டாலும், ஈய கடவேன் - கொடுக்க (நான்) கடமைப்பட்டுள்ளேன்; என் உள் நேர் ஆவி வேண்டினும் - என்னுடலினுள்ளே பொருந்திய உயிரை நீ பெற விரும்பினாலும் (அது), இன்றே உனது அன்றோ - இப்போதே உன் வசமுள்ளதன்றோ? (ஆதலால்), நீ பெறுவாயேல் - (வரமாக) நீ பெறுவதாயின், மண்ணே கொள் - நாட்டை மட்டும் பெற்றுக் கொள்வாயாக; மற்றையது ஒன்றும் - மற்றொரு வரத்தை மட்டும், மற - மறந்துவிடு; என்றான்—.

'பெண்கள் இரக்கம் மிக்கவர்; நீ அஃதின்றியிருக்கின்றாயே' என்ற குறிப்போடு 'பெண்ணே' என்றும், 'வள்ளன்மையையுடைய அரசன் மகளாகப் பிறந்தும் நீ அதற்கு மாறாகப் பெறுவாயாயின்' என்பான், 'வண்மைக் கேகயன்மானே பெறுவாயேல்' என்றும் கூறினான். 'கண்ணிற் சிறந்த உறுப்பில்லை; உயிர் அதனினும் சிறந்தது; இவ்விரண்டையும் நீ பெற விரும்பினும் பெற்றுக்கொள்' என முன்னர்க் கூறி, 'இராமன் வனம் புகுதலைத் தவிர்த்தால் என்னுயிர் நிற்கும்; இல்லையேல் அது போய்விடும்; ஆதலால் எனது உயிர் இப்போதே உன் அதீனத்தில் உள்ளது' என்றான். அரசை 'மண்' என அலட்சியமாகக் கூறினான், அதில் தனக்கு விருப்பமின்மை குறித்தற்கு. 'அதனையும் பரதன் விரும்பி யேற்க மாட்டான்; உனக்கு வேண்டுமாயின் பெற்றுக்கொள்' என்ற கருத்தோடு 'மண்ணேகொள் நீ' என்றான். இராமன் வனம் புகுதலை வாயால் சொல்லவும் கூசி, 'மற்றையது' என்றும், 'அதனை வரமாகக் கேட்டு, நான் மறுத்தே னென்ற குற்றம் வராமல் நீயே மறந்துவிடு' என்றும் கூறினான். எவ்வகையிலும் இராமபிரான் வனம் புகுதலைத் தவிர்த்தல் வேண்டுமென்பது மன்னன் குறிக்கோளாதல் காண்க.

'மண்ணே கொள்நீ' என்றதில், 'நீ வெறும் மண்ணைத்தான் பெறுவாய்' என்ற குறிப்பும் தோன்றுதல் காணத்தக்கது.

(பி - ம்.) 1. கண்ணேவேணும்; கடவேனன்; கடவேன்யான், கடவேனோ.
2. உனதன்றே.
3. கைகயன்மாதே, கேகயன்மாதே, கேகயர் மானே; பெறுவாயால், பெறுவானேல், பெறுவேனேல், பெறுவேனென்.
4. மண்ணேகொள்ளம்; மற்றையதொன்று, மற்றையவொன்று. மற்றையவொன்றும். (28)

214. வாய்தந் தேனென் றேனினி யானே வதுமாற்றேன்
நோய்தந் தென்னை நோவன செய்து நுவலாதே
தாய்தந் தென்னத் தன்னை யிரந்தாற் றழல்வெங்கட்
பேய்தந் தீயு நீயிது தந்தாற் பிழையாமோ.

(மன்னன் மேலுங் கூறுவான்): யானே வாய்தந்தேன் என்றேன் - நானே வாயால் (வரங்களைத்) தந்தேனென்று சொல்லிவிட்டேன்; (ஆதலால்), இனி அது மாற்றேன்-இனி அதனை மறுக்கமாட்டேன்;(நீ) நோய் தந்து - எனக்குப் பெருந் துன்பத்தைத் தந்துவிட்டு,நுவலாதே - மேலும் அத்தகைய வார்த்தைகளைப் பேசாதே; தழல் வெம் கண்பேய்-தீப் போன்ற கொடிய கண்களையுடைய பேயும், தன்னை இரந்தால் - தன்னை (ஒருவர்) இரந்து வேண்டின், தாய் தந்தது என்ன - தாய் ஒருத்தி மனமிரங்கித் தருவது போல, தந்து ஈயும் - (மனம் இரங்கி வேண்டிய தைத்)தந்துவிடும்; இது தந்தால் - (நான் உன்னை வேண்டும்) இதனைத் தருவாயாகில், பிழை ஆமோ - குற்றமாகுமோ? (ஆகாது என்றான் என முடிபு வருவிக்க).

'நான் சொன்ன சொல் தவற மாட்டேன்; தவறினால் அது குற்ற மாகும்; நீ மனமிரங்கி நான் உன்னை வேண்டும் இவ்வரத்தைத் தருவா யாகில், ஒருவர் பாலும் குற்றமில்லாது போகும். இரக்கமற்றது எனப் படும் பேயுங்கூட, வருந்தி ஒருவர் தன்னை யாசித்தால், இரங்கி அவர் வேண்டியதைத் தந்துவிடும்; நீ தரலாகாதோ?' என்கின்றான். 'நீ தாயா யிருந்தும் பேயினுங் கொடியளாக இப்போதிருக்கின்றாயே!' என்றபடி.

தந்தீயும் - தரும்; வினைத் திரிசொல். பேயும் எனற்பால இழிவு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது.

(பி - ம்.) 1. வாய்தந்தன்றே மற்றினி, தந்தின்றே மற்றினி, தந்தன்றே பெனின் மற்று, தந்தே னென்றின்னினி; அது மாறேன்.
2. நோதந்து : நோவன செய்தே, நுவல்வாயே.
3. தாய்தந்தென்னைத்
4. பிழையுண்டோ. (29)

கைகேயியின் கொடிய மறுமொழி

215. இன்னே யின்ன பன்னி யிரந்தா னிகல்வேந்தன்
தன்னே ரில்லாத் தீயவ ளுள்ளந் தடுமாறாள்
முன்னே தந்தா யிவ்வர நல்காய் முனிவாயேல்
என்னே மன்னா யாருளர் வாய்மைக் கினியென்றாள்.

இகல் வேந்தன் - வலிமை மிக்க தயரத மன்னன், இன்னே- இவ்வாறாக, இன்ன - இவைபோல்வனவற்றை, பன்னி - பலகாலும் சொல்லி, இரந்தான் - (கைகேயியை) வேண்டினான்; தன் நேர் இல்லா தீயவள் - தனக்கு ஒப்பில்லாத கொடுமையையுடைய கைகேயி, உள்ளம் தடுமாறாள் - மனம் சிறிதும் மாறி இரங்காதவளாய், மன்னா - அரசே, இ வரம் முன்னே தந்தாய்-இந்த வரங்களை முன்னே (வாயால்) தந்துவிட்டாய்; நல்காய் - இப்போது (செயலில் அவற்றைத்) தாராது, முனிவாயேல் - கோபித்தால், என்னே- (உன் வாய்மை) என்னாவது? வாய்மைக்கு இனி யார் உளர் - வாய்மையைக் காத்தற்கு இனி வேறு யாவர் இருக்கின்றனர்? என்றாள்—.

மன்னன் மனம் நொந்து எவ்வளவு வேண்டியும், சிறிதும் இரங்காமையின், 'தன்னேரில்லாத் தீயவள்'' என்றார். முன்னும், 'தீயவை யாவையினுஞ் சிறந்த தீயாள்' (195) என்றமை காண்க. தடுமாறுதல் - இங்கே தன் நிலையினின்று மாறுபடுதல். கணவனை 'மன்ன' என்று விளித்தது வாய்மை காத்தற்குரியவன் அவன் என்றமை புலப்பட. 'வையக முற்றும் நடந்த வாய்மையன்' அவனாதலால், அவனே வாய்மை தவறினால் இனி வேறு யார் தவறாதிருத்தல் கூடும் என்பதுபட, 'யாருளர் வாய்மைக்கினி' என்றாள். 'உன்னைப் போல வாய்மை தவறுவோர் யாருளர்' என இகழ்ச்சிக் குறிப்பும் தோன்றுதல் காண்க.

தடுமாறுள், நல்காய் : முற்றெச்சங்கள்.

ஒப்பு: ''இனி வாய்மைக் காருளரோ?'' (1133)

(பி - ம்.) 1. இன்னே யின்னே, இன்னே யின்னன; இகல் மன்னன், இயல் மன்னன்.
2. தடுமாறு; முனிவாயே, முனிவாயோ, நல்கா முனிவாயேல்.
4. என்னும், என்னே; ஆருளர். (30)

மன்னன் மேலும் இரத்தல்

216. அச்சொற் கேளா வாவி புழுங்கா வயர்கின்றான்
பொய்ச்சொற் பேணா வாய்மொழி மன்னன் பொறைகூர
நச்சுத் தீயே பெண்ணுரு வன்றோ வெனநாணா
முச்சற் றார்போற் பின்னு மிரந்தே மொழிகின்றான்.

பொய் சொல் பேணா - பொய்ச் சொற்களைப் பொருளாகக் கருதிச் சொல்லாத, வாய் மொழி மன்னன் - உண்மையே உரைத்தலுடைய தயரதன், அ சொல் கேளா - (கைகேயி சொன்ன) அந்த வார்த்தையைக் கேட்டு, ஆவி புழுங்கா - வெய்துயிர்த்து, அயர்கின்றான்-சோர்கின்றவன், (அவளை ஒன்றும் செய்தற்கின்மையால்) பொறை கூர-பொறுமை மேலிட, நச்சு தீயே - (கொல்லுந் தன்மையுள்ள) விடமும் தீயுமே, பெண் உருஅன்றோ என - இந்தப் பெண்ணின் வடிவமாக வந்துள்ளனவன்றோ என்று, நாணா - நாணங்கொண்டு, மூச்சு அற்றார் போல் - மூச்சு அடங்கியவரைப் போல இருந்து, பின்னும் - மேலும், இரந்தே மொழிகின்றான் - (அவளை) யாசித்தே பேசுபவனானான்.

'நீ வாய்மை தவறினாய்' என்ற கைகேயியின் சொல்லால் மன்னன் மிக்க சினங்கொண்டாலும், அவளை ஒன்றும் செய்தற்கின்மையால், சினம் அடங்க, பொறுமையும் நாணமும் மீதூர அமைதியாக அவளை மீண்டும் யாசிக்கலுற்றான். அவன் சினம் அடங்கப்பெற்று, செயலொழிந்து நின்ற அந்நிலைக்கு மூச்சற்றவர் நிலை உவமை. முச்சு : மூச்சு என்பதன் விகாரம். முச்சத்தார் என்று பாடங்கொண்டு, மன

மடங்கிய பெரியோர் என்று சோடசாவதானம் தி. க. சுப்பராய செட்டியார் உரை கண்டார். முச்சம் - சாதல் என்பது திருமயிலை வித்வான் சண்முகம் பிள்ளையவர்களுரை.

(பி - ம்.) 1. பொய்ச்சொற்பேணு; பொறைகூற, கூறு; பொறையின்றுன்.
3. அச்சத் தீயே; பெண்ணுரு வன்றும், பெண்ணு ருவன்றே, பெண்ணுரு வென்றே; என நாணும், எனவுண்ணு, மனநாணு
4. முச்சற்றுர்; பின்னுமிருந்தே. (31)

217. நின்மக ஞள்வா னீயினி தாள்வாய் நிலமெல்லாம்
உன்வய மாமே யாளுதி தந்தே னுரைகுன்றேன்
என்மக னென்க ணென் னுயி ரெல்லா வுயிர்கட்கும்
நன்மக னிந்த நாடிற வாமை நயவென்றுன்.

(தயரதன் கைகேயியை நோக்கி) நிலம் எல்லாம் தந்தேன் - நாடு முழுதும் கொடுத்துவிட்டேன்; உரை குன்றேன் - (என்) சொல் தவற மாட்டேன்; உன் வயமே ஆம் - (நாடு) உன் வசப்பட்டதேயாகும்; (அப்போது) நின் மகன் ஆள்வான் - உன் மகன் பரதன் ஆள்வானுக; (அல்லது), நீ இனிது ஆள்வாய் - நீயே இனிதாக ஆள்வாய்; ஆளுதி - (எவ்வாறேனும்) உன் அதிகாரத்தைச் செலுத்து; என் மகன் - என் அரும் புதல்வனும், என் கண் - என் கண் போன்றவனும், என் உயிர் - எனக்கு உயிர் போன்றவனும், எல்லா உயிர்கட்கும் - (உலகத்திலுள்ள) எல்லா உயிர்களுக்கும், நல் மகன் - நல்லவனுமான இராமன், இந்த நாடு இறவாமை - இந்த நாடு கடந்து செல்லாமையை மட்டும், நய - விரும்பி (வரமாகத்) தருக, என்றுன் - என்று கூறி வேண்டினுன்.

'வயமாமே' என்றதில் ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது.

'என் சொல் தவருது, நாடாளுதலை வரமாகத் தந்துவிட்டேன்; இனி நாடு முழுதும் உன் வயப்பட்டதேயாகும்; அதனை நீ எவ்வகையிலேனும் ஆள்க. நீ மனமிரங்கி, இராமன் நாடு கடந்து செல்லா திருத்தலைமட்டும் எனக்கு வரமாகத் தருக' என்கின்றுன் மன்னன். பரதன் அரசை யேற்க விரும்ப மாட்டானுதலால் நீயே உன் அதிகாரத்தை நன்கு செலுத்தலாம் என்ற கருத்து முதலிரண்டடிகளிற் கூறப்பெற்றது. பின் இரண்டடிகளில், இராமன்பால் மன்னனுக்குள்ள அன்பின் மிகுதியும் இராமபிரான் சிறப்பும் கூறப்பெற்றன. "உன்னுயிர்க்கென நல்லன்மன் னுயிர்க்கெலாம்" (38) என்ற வசிட்டன் கூற்று ஈண்டு நோக்கத் தகும். 'நாடிறவாமை நல்கு' என்னுது 'நய' என்றதில் மன்னன் அவளை நயந்து பணிவோடு வேண்டுதல் புலனுகும்.

(பி - ம்.) 1. ஆள்வானியுமிது; உலகெல்லாம்.
2. உன்வயமாமேல், உன்வசமாகும், உன்வசமாமால், உன்வய முன்னுவ் உற்றதுகந்தேன்; உரை நின்றேன், உரைக்கின்றேன்.
3. எல்லா வுலகுக்கும்.
4. நன்மகனென்னிர்; நாடிகவாமை, நாடகலாமை, நாடகலாமல், நாடிறவாமல்; நல்கென்றான், நன்கென்றான். (82)

218. மெய்யே யென்றன் வேரற நூறும் வினைநோக்கி
நையா நின்றே னாவு முலர்ந்தே னளினம்போற்
கையா னின்றென் கண்ணெதிர் நின்றுங் கழிவானேல்
உய்யே னங்கா யுன்னப யம்மென் னுயிரென்றான்.

(மேலும் மன்னன்) நங்காய் - பெண்ணே, மெய்யே - வாழ்விக்கின்ற சத்தியமே, என்றன் வேர் அற - என்னுடைய மூலமும் கெடும்படி, நூறும் - அழிப்பதற்குக் காரணமான, வினை நோக்கி - என் ஊழ்வினையை எண்ணி, நையா நின்றேன் - வருந்துகின்றேன்; நாவும் உலர்ந்தேன் -(உன்னிடம் இரந்து இரந்து) என் நாவும் வறளப் பெற்றேன்; நளினம் போல் கையான் - தாமரை மலர்போலும் கைகளையுடைய இராமன், இன்று - இப்பொழுது, என் கண் எதிர் நின்றும் கழிவானேல் - என் கண் முன்னேயிருந்து நீங்குவானேல், உய்யேன் - நான் பிழைத்திரேன்; என் உயிர் உன் அபயம் - என்னுடைய பிராணன் உன் அடைக்கலமாகும்; என்றான்—.

'இராமனைக் கண்முன்னே காணாதிருக்க நேர்ந்தால் நான் பிழைத்திரேன்; ஆதலால் எனதுயிர் உனதடைக்கலமாக இப்போது உன் கையில் உள்ளது; அது போகாவண்ணம் காக்கவேணும் நீ மனம் இரங்குவாயாக' என வேண்டுகின்றான். இராமபிரானது திருக்கையில் காப்பு நாண் அணிதல எண்ணியிருந்தவனாதலின் அவனது நளினம் போற் கையை நினைந்தான். உன்னபயம் மென்னுயிர் ! "இவனும் மெனதுயிரும் முனதபயம்" (பால. 1358).

(பி - ம்.) 1. என்றன் பேரற, என்றேனலமர, ஏன்றேன் வேரற, இன்றென் வேரற; வினை நோக்கின்.
2. நாவுமுலக்தேன்.
3. கையால் நின்றேன்.
4. உய்யான்; மின்னபயம். (83)

கைகேயி கொண்டது விடாமை

219. இரந்தான் சொல்லு மின்னுரை கொள்ளாண் முனிவஞ்சான்
மரந்தா னென்னு நெஞ்சின ளாணுள் வசைபாராள்
சரந்தாழ் வில்லாய் தந்த வரத்தைத் தவிர்கென்றல்
உரந்தா னல்லா னல்லற மாமோ வுரையென்றாள்.

மரம் தான் என்னும் நெஞ்சினள் - மரமே என்று சொல்லத்தக்க (இளகாத) மனமுடைய கைகேயி, இரந்தான் சொல்லும் இன் உரை - (மன்னன்) குறையிரந்து சொல்லும் இனிய வார்த்தைகளை, கொள்ளாள் - மனத்திற் கொள்ளாமலும், முனிவு அஞ்சாள் - அவன் சினத்திற்கு அஞ்சாமலும், நாணாள் - (தன் செயலுக்கு) நாணாமலும், வசை பாராள் - (பின்வரும்) பழியைக் கருதாமலும், (மன்னனை நோக்கி) சரம் தாழ் வில்லாய் - அம்புகள் தங்கும் (வலிய) வில்லை யுடைய அரசே, தந்த வரத்தை - முன்னே நீ கொடுத்த வரத்தை, தவிர்க என்றல் - விட்டுவிடு என்று சொல்லுவது, உரம் அல்லால் - வலிமையல்லாது, நல் அறம் ஆமோ - நல்ல தருமமாகுமோ? உரை - (நீ) சொல்வாயாக, என்றாள்—.

கைகேயியின் இளகாத வன்னெஞ்சுக்கு மரத்தை உவமித்தார். அத்தகைய நெஞ்சினளாதலின், எதனையும் கருதாமல், மன்னன்மீது குற்றங் கூறுதலையே குறியாகக் கொண்டு அவள் உரையாடினாள். 'நீ வில் வலிமை யுடைமையால், இரப்பது போல மென்மையாகக் கூறினும், அஃது என்னை வலியுறுத்தும் ஆணையே; அஃது அறமாகாது' என்ற கருத்துப்பட, 'சரந்தாழ் வில்லாய்......உரந்தானல்லால் நல்லறமாமோ?' என்றாள். சரம் தாழ்வு இல்லாய் எனப் பிரித்து, அம்பு செலுத்தலில் தாழ்வில்லாதவனே என்றுரைத்தலுமாம். உரம் - அறிவு எனப் பொருள் கொண்டு உரந்தான் (ஆமோ) என்றியைத்து அறிவுடைமையாகுமோ எனவுரைத்தலும் ஆம். "வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும், கோலொடு நின்றான் இரவு" (குறள். 552) என்பது ஈண்டு நினைக்கத்தகும். இரந்தான், கொள்ளாள், எஞ்சாள், நாணாள், பாராள் என்னும் முற்றுக்கள் எச்சப் பொருளவாய் நின்றன. இரந்தான்: வினையாலணையும் பெயரென்றலுமாம். நெஞ்சினள் : வினையாலணையும் பெயர். தவிர்கென்றல் : தொகுத்தல்.

மரந்தானென்னு நெஞ்சினள் : "மரங்கள்போல் வலிய நெஞ்ச வஞ்சனேன்" (திவ். திருமாலை. 27).

(பி - ம்.) 1. இரந்தான் கொள்ளும்; முனிவாருள், கேளாள் முனிவெஞ்சாள்.
2. மரந்தானன்ன; நெஞ்சினளானள்; வசைப் பாராள், பழிமாற்றாள்.
3. சரந்தா வில்லாய்; தவிர்கென்றால்.
4. உரந்தனல்லா நல்லறம், உறந்தானில்லா னல்லறம். (34)

மன்னன் சோகமுற்று விழுதல்

220. கொடியா ளின்ன கூறினள் கூறக் குலவேந்தன்
முடிசூ டாமல் வெம்பரன் மொய்கா னிடைமெய்யே
நெடியோ னீங்கு நீங்குமெ னாவி யினியென்னா
இடியே றுண்ட மால்வரை போன்மண் ணிடைவீழ்ந்தான்.

கொடியாள் - கொடியவளாகிய கைகேயி, இன்ன கூறினள் - இந்த வார்த்தைகளைச் சொன்னாள்; கூற-சொல்லலும், குலம்வேந்தன் - சிறந்த சக்கரவர்த்தி, நெடியோன் - இராமன், முடிசூடாமல் - திருமுடியைச் சூடிக்கொள்ளாமல், மெய்யே - உண்மையாக, வெம்பரல் மொய் கான் இடை நீங்கும் - வெப்ப மிக்க பருக்கைக் கற்கள் நிறைந்த காட்டிலே செல்வான்; இனி - இனிமேல், என் ஆவி நீங்கும் - என் உயிரும் போய்விடும், என்னு - என்று கருதி, இடி ஏறு உண்ட-இடி தாக்கப் பெற்ற, மால்வரை போல்-பெரிய மலையைப் போல, மண்ணிடை வீழ்ந்தான் - தரையில் விழுந்தான்.

இவ்வளவு குறையிரந்தும் கைகேயி மனம் இரங்காமை கண்ட சக்கரவர்த்தி, 'இனி இராமன் காடு புகலும் தப்பாது; அதனால் நம் உயிர் போவதும் உறுதி' என்று கருதி அயர்வுற்று விழுந்தான். கைகேயியின் சொல் மன்னவனுக்குப் பேரிடி போலாயிற்று. திருமாலாதலின் இராமபிரான் நெடியோன் எனப்பட்டான்.

(பி - ம்.) 1. அன்ன கூறினள்.
2. காத்ததும், திர்த்தலும், சூடாமற் காத்தலும்.
3. நெடியோனீங்க, நெடியோனீங்கென; நீங்குமென்னாவி, நீங்குமெனுருயிர், நீக்கலு நீங்கான், நீக்கலு நீங்காது, நீத்தலினீங்கான். (35)

221. வீழ்ந்தான் வீழா வெந்துய ரத்தின் கடல்வெள்ளத்
தாழ்ந்தா னாழா வக்கட லுக்கோர் கரைகாணான்
சூழ்ந்தா டுன்ப மக்கொடி யாள்சொற் கொடுசித்தம்
போழ்ந்தா ளுள்ளப் புன்மையை நோக்கிப் புரள்கின்றான்.

வீழ்ந்தான் - விழுந்த தசரதன், வீழா வெம் துயரத்தின் கடல் வெள்ளத்து - (அதுவரை தான்) விழுந்தறியாத கொடிய துயரக் கடலின் வெள்ளத்தில், ஆழ்ந்தான் - அழுந்தினன்; ஆழா - அழுந்தி, அ கடலுக்கு - அத்துயரக் கடலுக்கு, ஓர் கரை காணான் - ஒரு கரை காணாதவனாகி, துன்பம் சூழ்ந்தாள் - தனக்குப் பெருந் துன்பத்தைச் சூழ்ந்து செய்தவளும், சொல் கொடு - சொல்லாகிய வாளைக்கொண்டு, சித்தம் போழ்ந்தாள் - தன் மனத்தைப் பிளந்தவளுமான, அ கொடியாள் - அந்தத் தீயவளுடைய, உள்ளம் புன்மையை நோக்கி - மனத்தின் அற்பத் தன்மையை எண்ணி, புரள்கின்றான் - (நிலை கொள்ளாது) புரளலுற்றான்.

இதுவரை, இனியவளாகப் பழகிவந்த இவளிடத்து இத்துணைக் கொடுமையும் அற்பத்தனமும் உள்ளனவா என்று எண்ணுந்தோறும் மன்னன் துயரம் கரை காணாததாயிற்று. 'தரையில் விழுந்தவன் மீண்டும் ஒரு கடலில் விழுந்துவிட்டான்' எனக் கடுந் துயரத்தைக் கடலாக உருவகித்தார்; அதற்கேற்பக் கரை காணான் என்றார்.

சூழ்தல் - தீய ஆலோசனை. இராமனைக் காட்டிற்கு அனுப்பவேண்டும் என்ற சொல்லே மன்னன் மனத்தைப் பிளத்தலின், 'சொல் கொடு சித்தம் போழ்ந்தாள்' என்றார். நோக்கல் - கருதுதல்.

வீழ்ந்தான் : வினையாலணையும் பெயர்; முற்றுக்கலுமாம். காணான் : முற்றெச்சம். சூழ்ந்தாள், போழ்ந்தாள் : வினையாலணையும் பெயர்கள். துயரத்தின் கடல் : அத்தும் இன்னும் சாரியை.

(பி - ம்.) 1. வீழா வெந்துயரத்தன், வீயா வெந்துயரத்தின், விழ்ந்தான் வெந்துயரத்தின்.
2. ஆழ்கின்றக் கடலுக்கே, அக்கடலுக்கோர், தாழ்கின்றக் கடலுக்கோர், ஆழ்ந்தவக் கடலுக்கோர், ஆழ்ந்திடுகின்ற கடற்கோர்.
3. துன்பஞ் சொற் கொடியாள், துன்பச் சொற் கொடியாள்; நெஞ்சம், சிந்தை.
4. போழ்ந்தாளென்னப், போழ்ந்தானென்னப்; புலர்கின்றான், புகல்கின்றான். (36)

மன்னன் கைகேயியை வெறுத்து மொழிதல்

222. ஒன்று நின்ற ஆருயி ரோடு முயர்கேள்வர்
பொன்று முன்னம் பொன்றின ரென்னும் புகழல்லால்
இன்றோர் காறு மெல்வளை யார்தம் மிறையோரைக்
கொன்றா ரில்லைக் கொல்லுதி யோநீ கொடியோளே.

(மன்னன் கைகேயியை நோக்கி) எல் வளையார் - ஒளி வாய்ந்த வளையல்களணிந்த பெண்கள், ஒன்று நின்ற - (தம்மோடு) ஒன்று பட்டுக் கலந்த, ஆர் உயிரோடும் உயர் - அரிய உயிர்போற் சிறந்த, கேள்வர் - கணவர், பொன்று முன்னம் - இறப்பதற்கு முன்னே, பொன்றினர் - (தாமும்) இறந்தனர், என்னும் - என்று சொல்லப் படுகிற, புகழ் அல்லால் - புகழைக் கொண்டனரே யல்லாமல், இன்றுகாறும் - இந்நாள் வரையில், தம் இறையோரை கொன்றார் - தம் கணவரைக் கொன்ற மகளிர், இல்லை - (இவ்வுலகத்தில்) இல்லை; கொடியாளே - ஏ கொடியவளே, நீ கொல்லுதியோ - நீ (அவ்வுலகியலுக்கு மாறாக என்னைக்) கொல்லுகின்றாயோ?

ஒன்றுநின்ற கேள்வர், உயிரோடும் உயர் கேள்வர் என இயைக்க.

இதுமுதல் ஐந்து பாடல்கள் ஒரு தொடர்; 226-ஆம் பாட்டோடு முடிவுறும். அதன் இறுதியில் உள்ள 'குவிதோளான்' என்பது இவற்றிற்கு எழுவாயாகும்.

'தம் கணவர் இறந்தபோது தாமும் உடன் இறந்து நல்ல புகழைக் கொண்ட மகளிர் பலர் உண்டு; அதற்கு மாறாகக் கணவனையே கொல்லும் உன்னைப் போலக் கொடியார் ஒருவரும் இலர்' என்று கைகேயியை வெறுத்து மொழிந்தான் வேந்தன். பொன்று முன்னம் என்றது விரைவு குறித்தது. 'இறையோரைக் கொன்றாரில்லை' என்றதனால், 'நீ என்னைக் கொன்று பழி எய்துவாய்' என்றபடி.

ஓர் : அசை. எல் - ஒளி; 1124, கிட்கிந்தை 34; பெருங். 1 : 33 : 162. பத்தினிப் பெண்டிர் இயல்பு ! "பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற, வள்ளித ழவிழ்ந்த தாமரை, நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே" (புறநா. 246 : 13 - 15), "இன்னுயி ரன்னாற் கெனைத் தொன்றுந் தீதின்மை, யென்னுயிர் காட்டாதே" (கலி. 143), "போரில், விடனேந்தும் வேலாற்கும் வெள்வளையி னுட்கும், உடனே யுலந்த துயிர்" (பு. வெண். 262), "தன்னுயிர் கொண்டவனுயிர் தேடினள் போல், பெருங்கோப் பெண்டும் தன்னுயிர் மாய்ந்தனள்" (சிலப். 25 : 78 - 9), "காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி, ஊதுலைக் குருகி னுயிர்த்தகத் தடங்காது, இன்னுயி ரீவர் ஈயா ராயின், நன்னீர்ப் பொய்கையி னளியெரி புகுவர்..........பத்தினிப் பெண்டிர்" (மணி. 2 : 42 - 48), "தரைமகளுந் தன்கொழுநன் உடலந் தன்னைத் தாங்காமல் தன்கரத்தால் தாங்கி விண்ணாட், டரமகளிர் அவ்வுயிரைப் புணரா முன்னம் ஆவியொக்க விடுவாளைக் காண்மின் காண்மின்" (கலிங். 483).

(பி - ம்.) 1. ஒன்றாய் நின்ற, ஒன்றாய் நின்றவ்; அவ்வுயிரோடும்; உயிர்க் கேள்வர், உயிர் கேள்வர் கேள்வன்.
2. பொன்றின ளென்னும், போதின ரென்னும்; புகழல்லா.
3. இன்றே காறும், இன்றோ காறும்; பெய்வளையார்தம்.
4. கொன்றாளில்லை, கொல்லுதியேல், கொல்லுதி நீயோ கொடியோளே.
(37)

223. ஏவம் பாரா யின்முறை நோக்கா யறமெண்ணாய்
ஆவென் பாயோ வல்லை மனத்தா லருள்கொன்றாய்
நாவம் பாலென் னாருயி ருண்டா யினிஞாலம்
பாவம் பாரா தின்னுயிர் கொள்ளப் படுகின்றாய்.

ஏவம் பாராய் - (என்) துன்பத்தையும் பார்க்கின்றாயில்லை; இல் முறை நோக்காய் - இக்குடியின் முறையையும் பார்க்கின்றாயில்லை; அறம் எண்ணாய் - தருமத்தையும் கருதாய்; ஆ என்பாயோ அல்லை - ஐயோ என்று இரங்குவாயுமல்லை; மனத்தால் அருள் கொன்றாய் - உன் மனத்தில் அருள் என்ற பண்பையே அழித்துவிட்டாய்; நா அம்பால் - உன் நாக்காகிய அம்பினால், என் அரு உயிர் உண்டாய் - எனது அரிய உயிரையும் அழித்தாய்; (இவற்றால்), இனி—, ஞாலம் - இவ்வுலகத்தாரால், பாவம் பாராது - (பெண் கொலை) பாவமாயிற்றே யென்று பாராமல், இன் உயிர் கொள்ளப்படுகின்றாய் - உனது இனிய உயிரைக் கொள்ளப்படப் போகின்றாய்.

ஏவம் - குற்றமுமாம்.

'நீ பெண்பாலாயிருந்தும், அதற்குரிய பண்புகள் சிறிதுமின்றி உலகத்தார் மனமொவ்வாத செயல்களைச் செய்து, கணவனையே

கொல்லவும் துணிந்துவிட்டாய்; அதற்குரிய தண்டனையை இனி உலகத்தாராலேயே நீ அடைவாய்; உலகம் முழுதும் தன் உயிரெனக் கருதும் இராமனைக் காட்டிற் போக்கி, என் உயிரையும் போக்கத் துணிந்த உன்னை, நான் கொல்லாவிடினும் உலகத்தாரே கொன்றொழிப்பர்' என்று கூறுகின்றான். இராமன் காடு புகவேண்டு மென்ற சொல்லே மன்னன் உயிர்விடக் காரணமாதலின், 'நா அம்பால் என் ஆருயிர் உண்டாய்' என்றான்.

ஏவம் : எவ்வமென்பதன் விகாரம்; 1018. ஆ : இரக்கக் குறிப் புணர்த்தும் இடைச்சொல். மனத்தாலருள்-மனத்திலருள்: வேற்றுமை மயக்கம். உண்டாய் : தெளிவுபற்றி வந்த கால மயக்கம், ஞாலம்: ஆகுபெயர். 'இன முறை' என்று பாடங்கொண்டு, 'பெண்ணினத்துக் குரிய முறை' என உரைப்பவும் பொருந்தும்.

(பி - ம்.) 1. இன்முறை, இன்னுயிர்; அறமென்னாய்.
2. ஆமென்பாயோவல்லை.
3. ஆருயிர்கொண்டாய், கொன்றாய், ஆகமழித்தாய்.
4. பாராதுன்னுயிர், பாராதென்னுயிர், பாராயின்னுயிர்; கொள்ளப் படுவாயோ, கொள்ளப்போகின்றாய், கொல்லப்படுகின்றாய். (38)

224. ஏண்பா லோவா நாண்மட மச்ச மிவையேதம்
பூண்பா லாகக் காண்பவர் நல்லார் புகழ்பேணி
நாண்பா லோரார் நங்கையர் தம்பா னணுகாரே
ஆண்பா லாரே பெண்பா லாரோ டடைவம்மா.

ஏண்பால் ஓவா - (பெண்மைக்கு) வலிமைப் பகுதியின் நீங்காத, நாண் மடம் அச்சம் இவையே - நாணம், மடம், அச்சம் என்னும் இப் பண்புகளையே, தன் பூண்பால் ஆக காண்பவர் - தம் அணிகலப் பகுதிகளாகக் கருதுபவர்கள், நல்லார் - பெண்களாவர்; (அங்ஙன மன்றி) புகழ் பேணி-தம் புகழைப் பாதுகாத்து, நாண்பால் ஓரார் - நாணின் பான்மையை அறியாத மகளிர், நங்கையர் தம் பால் நணுகார் - பெண்களின் பகுதியைச் சேர்ந்தவராகார்; ஆண்பாலாரே - (அவர்கள்) ஆண்மக்களே; பெண்பாலாரோடு அடைவு - (உருவத்தி னால் மாத்திரம்) பெண்பாலாரைச் சார்ந்தவராவார்.

பெண்களுக்குச் சிறப்பாக அணிகலம் போல்வன நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்பன; இங்கே உபலக்ஷணத்தால் பயிர்ப்பும் கொள்ளத்தகும். இவையே பெண்மைக்குப் பாதுகாப்பும் வலிமையு மாவன. இவற்றோடு பிற நற்பண்புகளுடைய பெண்டிரே புகழெய்து வர். இந்நான்கனுள்ளும் நாணம் தலைசிறந்ததாகலின், 'நாணமில்லார் நங்கையராகார்; அவர்கள் உருவத்தால் பெண்பாலாராயினும், ஆண் பாலாரே' என்று கூறுமுகத்தால் கைகேயியின் நாணமின்மையைப் புலப்படுத்தினான்; "பெண்பா லவர்கட்கணியாய்ப் பிரியாத நாணும்".

(சிவக. 1961), "உயிரினுஞ் சிறந்தன்று நாணே" (தொல். பொருள் 113) என்பன காண்க.

காணுதல் - கருதுதல். நல்லார் - மகளிர். அடைவு - சேர்க்கை. ஏகாரங்கள்: இவையே, பிரிநிலை; ஆண்பாலாரே, தேற்றம்; நணுகாரே, அசை. அம்மா : வியப்பிடைச் சொல்.

(பி - ம்.) 1. ஏண்பாலோவாய், ஏண்பா லொவ்வா; அச்சம் பயிர்ப்பெல்லாம். அச்சமிவையோதப், அச்சு மிவையேதம், அச்சமிவை யெய்தப்.
2. காண்பயனிந்தப், காண்பயனந்தப், காண் பயனுய்க்கும், காண் பயனுகும்; காண்குவர் கற்பிற், காண்பன தந்தம், காண்பன நல்ல; தன்மையினந்தப்; பூண்பாலாகத் தன்னையயர்ந்தாய்ப்;புகழ்வேண்டி; பயனீத்த; பொருவில்லார்.
3. நாண்பாலோயா, நாண்பாலோவா, நாண்பாலோராய், நாண்பா லோரா; நணுகாதோ, நணுகாதோர்; நசைசெய்யார்.
4. ஆண்பாலாரோ, ஆண்பாலாரோடு, ஆண்பாலாவா, ஆண்பாலான; பெண்பாலுளரோடு, பெண்பொருளாளும்; பேரருளாரோடு, பேரரு ளாரோ, பேரறிவாளர்க்கு, அப்பொருளாரோடு, அப்பொருளாரும்; எவ்வருளாலாம்; அவரம்மா. (39)

225. மண்ணாள் கின்றா ராதி வலத்தான் மதியால்வைத்
தெண்ணா நின்றா ரியாரையு மெல்லா விகலாலும்
விண்ணோர் காறும் வென்ற வெனக்கென் மனைவாழும்
பெண்ணால் வந்த தந்தர மென்னப் பெறுவேனோ.

மண் ஆள்கின்றார் ஆதி - பூமியை ஆளுகின்றவர் முதல், விண்ணோர்காறும் - தேவர்கள் வரையில், வலத்தால் - வலியாலும், மதியால் - மதிநுட்பத்தாலும், வைத்து எண்ணா நின்றார் - சிறப்பாக வைத்து எண்ணப்படுவோர் எவரையும், எல்லா இகலாலும் - எல்லா வகை வல்லமையினாலும், வென்ற எனக்கு - வென்று சிறப்புற்ற எனக்கு, என் மனை வாழும் பெண்ணால் - என் மனையில் வாழும் மனைவி யாகிய ஒரு பெண்ணாலே, அந்தரம் வந்தது - முடிவு (மரணம்) நேர்ந்தது, என்ன பெறுவேனோ-என்று உலகோர் கூறப் பெறுவேனோ?

'உடல்வலி, படைவலி, மதிவன்மை முதலிய எல்லாச் சிறப்பும் பெற்ற மண்ணரசர் பலரையும், தேவரையும் வென்று தசரதன் என்று பேர் பெற்ற நான், அவ்வகைச் சிறப்பெதுவும் இல்லாத ஒரு பெண்ணாலே, மனைவியாலே, கேடுற்று மாண்டேன் என்ற இழி சொல்லுக்காளாவதோ?' என்று தன் நிலை குறித்து வருந்திக் கூறினன் என்க. "காய்ந்தே கடந்தான் பகைவேலை" எனத் தசரதன் சிறப்பிக் கப்பட்டமை காண்க.

இகல் - வலி; போருமாம். அந்தரம் - கேடு; முடிவு.

(பி - ம்.) 1. ஆன்றோராகி, ஆள்கின்றோராதி; வலத்தின், வலத்தார்; மதியால் வந்து; வையத்தில், வையத்திலவோ.

2. என்று நின்றோர், எண்ணுள்கின்றார், என்று நின்று.
3. எனக்கே, எனக்கோர்.
4. வந்ததிதாமினி, வந்ததிதாம், வந்தவந்தரம்; பெறுகேனே. (40)

மன்னனது சோர்வு

226. என்றென் றுன்னும் பன்னி யிரங்கு மிடர்தோயும்
ஒன்றொன் றொவ்வா வின்ன லுழக்கு முயிருண்டோ
இன்றின் றென்னும் வண்ண மயங்கு மிடையும்பொன்
குன்றொன் றொன்றோடொன் றியதென்னக் குவிதோளான்.

பொன் குன்று ஒன்று - ஒரு பொன்மலை, ஒன்றோடு - மற்றொரு பொன்மலையுடன், ஒன்றியது என்ன - இணைந்த தென்னும்படி, குவி தோளான் - திரண்ட இரண்டு தோள்களையுடைய தசரதன், என்று என்று உன்னும் - (முற்கூறியவாறு) பலவகையாக எண்ணுவான்; பன்னி - வாய்விட்டுப் பல சொல்லி, இரங்கும் - வருந்துவான்; இடர் தோயும் - துன்ப வெள்ளத்தில் மூழ்குவான்; ஒன்று ஒன்று ஒவ்வா - ஒன்றுக்கொன்று பொருந்தாத, இன்னல் - பலவகைத் துன்பங்களால், உழக்கும் - வருந்துவான்; உயிர் உண்டோ - உயிர் இருக்கின்றதோ, இன்று இன்று - இல்லை இல்லை, என்னும் வண்ணம்-என்று (கண்டோர்) சொல்லும்படி, மயங்கும் - மூர்ச்சையுறுவான்; இடையும் - சோர்வான்.

தன்னிலை கண்டும் தான் பலவாக இரந்து வேண்டியும் மனம் சிறிதும் தளராத கைகேயியின் நிலைகண்டு மனமுடைந்தவன் அவளை முன்னிலைப்படுத்தியும், தானேயும் பலவாறு சொல்லியும், எண்ணியும் இடருற்றமை 'ஒன்று நின்ற' என்பதுமுதல் இதுகாறும் ஐந்து பாடல்களாற் கூறப்பெற்றது. இவை ஒரு தொடராய், இப்பாடலில் என்றென்றும் என்பதனோடு முடிபு கொண்டன. குவிதோளான் : எழுவாய். தோயும் என்பதற்கேற்ப இடர் வெள்ளம் என உரைக்கப்பெற்றது. 'என்றென்று' என்னும் அடுக்குப் பன்மை குறித்தது. 'இன்றின்று' என்பது துணிவு பற்றியது.

(பி - ம்.) 1. என்னும், எண்ணும்; இரக்கும், இரங்குமுயிரோடும், இரங்குமிடரோயும், உயிர்க்குமிடரோயும்; மிடலாயும்.
2. ஒன்றொன்றல்ல, ஒன்றொன்றல்லா; உயிரோடும்.
3. இன்றின்றெண்ணும், அன்றன்றென்னும், அன்றென்றுன்னும்; இடியும்பொன், இடைகின்றான், இடைதேறான், மயக்குமிடைதேறான், அயர்க்கு மிடியும் பொன்; வண்மை யயர்க்கு மிடைதேரான், அயர்க்கு மிடைதேரான், தேறான், அயர்க்கு மிடைகின்றான்.
வண்ண மயர்க்கு மிடைதேரான், தேறான், அயர்க்கு மிடைகின்றான்.
4. குன்றொன்றோடொன்று; ஒன்றியவென்னக். (41)

கைகேயி கூற்று

227. ஆழிப் பொற்றேர் மன்னவ னிவ்வா றயர்வெய்திப்
பூழிப் பொற்றோண் முற்று மடங்கப் புரள்போதில்
ஊழிற் பெற்றா யென்றுரை யன்றே லுயிர்மாய்வென்
பாழிப் பொற்றார் மன்னவ வென்றாள் பசையற்றாள்.

ஆழி பொன் தேர் மன்னவன்-உருளைகள் பூண்ட பொன்னாலியன்ற தேரையுடைய தசரதன், இவ்வாறு—, அயர்வு எய்தி - தளர்ச்சியுற்று, பொன் தோள் முற்றும் - அழகிய (தன்) தோள்கள் முழுவதும், பூழி அடங்க - புழுதி போர்க்க, புரள்போழ்தில் - (தரையிலே) புரளும் போது, பசை அற்றாள் - நெஞ்சில் ஈரமற்றவளாகிய கைகேயி, பாழி - பெருமை தங்கிய, பொன் தார்-பொன்மாலை சூடிய, மன்னவ - அரசே, ஊழில் பெற்றாய் என்று உரை - (நீ கேட்ட வரங்களை) முறையாகப் பெற்றாய் என்று (உன் வாயாற்) சொல்; அன்றேல் - அவ்வாறு இணங்கிக் கூறாவிடின், உயிர் மாய்வென் - (நான்) உயிரிழப்பேன், என்றாள்—.

இதுவும் அடுத்த பாடலும் கைகேயியின் உறுதிமிக்க கொடுங் கூற்றைக் கூறும்.

தசரதனது பரிதாப நிலையைக் கண்டும் கைகேயி தன் நிலையில் சிறிதும் தளராமல், அவனை நோக்கி, 'அரசே! பலபடியாகக் கூற வேண்டா; நீ கேட்ட வரங்களைத் தவறாது பெற்றாய் என இசைந்து கூறுக; இல்லையேல் நான் இப்பொழுதே உயிர்துறப்பேன்' என்றாள். 'நான் மனைவி என்ற முறையில் இப்போது பேசவில்லை. சொற்காத்தலும், அறங்காத்தலும் அரசனாகிய உன் கடமையாகவின், அதனைத் தவறாது செய்யுமாறு அறிவுறுத்துகின்றேன்' என்ற கருத்துப் பட, 'மன்னவ' என்று விளித்துக் கூறினாள். மூன்றாமடி அவளுடைய கொடுமையை நன்கு புலப்படுத்தும். நான் கேட்ட வகையிற் சிறிதும் தவறலாகாதென்பாள், ஊழில் பெற்றாயென்றுரை என்றாள். பசை யற்றவளாதலின் அவ்வாறு துணிந்து கூறினாள்.

(பி - ம்.) 1. பொற்றேரேன்; அவ்வாறு; இன்னன.
2. பொற்றார் முற்றும், பொற்றோள்முற்றம்; போதில், போதின்.
3. ஊழித் பொய்த்தால், பொய்த்தாய், ஊழிப்பொய்த்தாய், ஊழிற் பெற்றால், ஊழிப்பெற்றாய்; என்னுரை, அன்றுரை; இன்றேயுயிர் மாய்வென், மாள்வன், அன்றேலுயிர் மாய்ப்பன், என்றே யுயிர் மாய்வன், என்றேலுயிர் மாய்வன்.
4. பாழிப்பொற்றோள், வாழிப் பொற்றாள், பொற்றேர், பொற்றோள்; வசையுற்றாள், வசையற்றாள். (42)

228. அரிந்தான் முன்னோர் மன்னவ னன்றே யருமேனி
வரிந்தார் வில்லாய் வாய்மை வளர்ப்பான் வரநல்கிப்
பரிந்தா லென்னா மென்றனள் பாயுங் கனலேபோல்
எரிந்தா றாதே யின்னுமி ருண்ணா மெரியன்னாள்.

பாயும் கனல்போல் - பரந்து எரியும் தீப்போல, எரிந்து ஆருதே - (ஒரு பொருளைப் பற்றி) எரிந்து அடங்காமல், இன் உயிர் உண்ணும் - இனிய உயிரைப் பற்றி எரிக்கின்ற, எரி அன்னுள் - (புதுவகையான) தீப்போன்ற கைகேயி (மீண்டும்), வரிந்து ஆர் வில்லாய் - வரிந்து கட்டிய வில்லையுடைய அரசே, வாய்மை வளர்ப்பான் - சத்தியத்தைக் காக்கும்பொருட்டு, முன் ஓர் மன்னவன் - (உங்கள் குல) முன்னோனுகிய ஓர் அரசன், அரு மேனி - அரிய தன்னுடலையே, அரிந்தான் அன்றே - அரிந்து கொடுத்தானல்லனே? (அங்ஙனமிருக்க) வரம் நல்கி - நீ (முன்னே) வரத்தைக் கொடுத்துவிட்டு, பரிந்தால் - (இப்போது) வருந்தினுல், என் ஆம் - என்ன பயன் உண்டாகும்? என்றனள்—.

'நின் குல முன்னேன் ஒருவன் வாய்மை காத்தற் பொருட்டுத் தன்னுடலையே கொடுத்தான். அக்குலத்திற் பிறந்த நீ வாய்மை காவாதொழிவது முறையாகாது' என முடுக்கி மன்னவனை உடன்படச் செய்கின்ருள். 'நின்னுயிரீந்தேனும் வாய்மை காத்தல் வேண்டும்; வேறெதற்கும் நான் உடன்படேன்' என்றவாறு. வளர்த்தல் - அழியாது காத்தல். 'தீ, தான் பற்றத்தக்க பருப்பொருளைப் பற்றி, எரிந்து அடங்கி விடும்; இவள் சொல்லாகிய தீ, மன்னனது உயிராகிய நுண் பொருளைப் பற்றி ஆருமலே எரிக்கின்றது' என வேற்றுமை தோன்றக் கூறலின், இது வேற்றுமையணி. முதலடியிற் குறிக்கப்பெற்ற மன்னவன், சிபி.

(பி - ம்.) 1. மன்னவனன்றே; அருள்மேனி.
2. வரிந்தார் வில்லான், விரிந்தார் வில்லாய்; வாய்மைவிரிப்பான்.
3. பரிந்தாலென்னை என்னே, பரிந்தா யென்னே, பிரிந்தாலென்னை, பிரிந்தாயென்னும்; பெய்யுங்கனலே.
4. எரிந்தாராதே, எரிந்தேருதே; உண்ணுங் கனலன்னுள். (43)

தசரதன் வரம் அளித்தல்

229. வீந்தா ளேயிவ் வெய்யவ ளென்ன மிடல்வேந்தன்
ஈந்தே னீந்தே னிவ்வர மென்சேய் வனமாள
மாய்ந்தே நான்போய் வானர சாள்வென் வசைவெள்ளம்
நீந்தாய் நீந்தாய் நின்மக னேடு நெடிதென்ருன்.

(கைகேயி கூற்றைக் கேட்ட) மிடல் வேந்தன் - வலிமை மிக்க மன்னவன், வெய்யவள் - இக்கொடியவள், வீந்தாளே என்ன - (நாம் உடன்படாவிட்டால்) இறந்துவிடுவாள் என்று கருதி, இ வரம் - இந்த வரத்தை, ஈந்தேன் ஈந்தேன் - கொடுத்தேன் கொடுத்தேன், என் சேய் வனம் ஆள - என் மகன் இராமன் காடாளட்டும்; நான் மாய்ந்து போய்—, வான் அரசு ஆள்வென் - விண்ணுலக அரசை ஆள்வேன், (நீ) நின் மகனேடும் - உன் மகன் பரதனுடனே கூடி, வசைவெள்ளம் -

பழியாகிய பெருவெள்ளத்தில் (விழுந்து), நெடிது - நெடுங்காலம், நீந்தாய் நீந்தாய் - நீந்திக்கொண்டிரு, என்றான்—.

கைகேயி தான் கொண்டது விடாள் என்றுணர்ந்த மன்னன் அவள் உயிரை விடுதலும் உறுதி யென்றெண்ணி அஞ்சி, 'ஈந்தேன் ஈந்தேன்' என்று விரைந்து கூறினான். துணிவுபற்றி 'வீந்தாளே' என இறந்த காலத்தாற் கூறப்பட்டது. 'வசைத்திறம் நின்வயினிற்க மாள்வென்' (204) என்றும், 'ஊழிற் பெற்று யென்றுரை யன்றே லுயிர் மாய்வென்' (227) எனவும் இருமுறை அவள் கூறியிருத்தலால் மன்னன் அஞ்சினான். அவன் மிடல் இங்கே பயனற்றதாயிற்று. 'இராமன் எங்கிருந்தாலும் சிறப்புற்றிருப்பான்; நானும் விண்ணரசாள்வேன்; நீயும் உன் மகனுமே மீளாத பழிக்காளாவீர்கள்' என்று இறுதியாகக் கூறினான் மன்னன். பழியில் பரதனுக்கும் பங்குண்டன்றோ? வசையை வெள்ளமாக உருவகித்ததற்கேற்ப 'நீந்தாய்' என்றான். பரதன் நாடாளுதலை முன்னமே மன்னன் அளித்துவிட்டதனால் இங்கே இவ்வரம் என்றது இராமன் காடாளுதலைக் குறித்தது. அடுக்கு இரண்டனுள் முன்னது தெளிவுபற்றியது; பின்னது மிகுதிபற்றியது. ஆள: அகரவீற்று வியங்கோள்.

(பி - ம்.) 1. வீய்ந்தாளேயிவ், வீய்ந்தாளென்றும்.
2. ஈய்ந்தேனீய்ந்தேன்; இவ்வாறு; வனமாள்வான்.
3. மாய்ந்தேன், வாய்ந்தேன்; வானுலகாள்வென், ஆள்வேன், விண்ணுல காள, ஆள்வென்.
4. நீய்ந்தாய் நீய்ந்தாய். (44)

230. கூறு முன்னம் கூறு படுக்குங் கொலைவாளின்
ஏறு மென்னும் வன்றுய ராகத் திடைமூழ்கத்
தேறு னாகிச் செய்கை மறந்தான் செயன்முற்றி
ஊறு நின்ற சிந்தையி னாளுந் துயில்வுற்றாள்.

(தசரதன்) கூறு முன்னம் - (இவ்வரம் ஈந்தேன் என்று) கூறிய அளவிலே, கூறு படுக்கும் - கூறு கூறாகப் பிளக்கின்ற, கொலைவாளின் ஏறு ஆம் என்னும் - கொலைத்தொழிலுடைய வாளேறுண்டது போன்ற, வன் துயர் - கொடிய துயரம், ஆகத்து இடை மூழ்க - தன் இதயத்தில் அழுந்த, தேறான் ஆகி - உணர்வற்றவன் ஆகி, செய்கை மறந்தான் - செயல் மறந்து மூர்ச்சித்தான்; செயல் முற்றி - (தன் காரியம்) முடிவுற்றதனால், ஊறு நின்ற சிந்தையினாளும் - மகிழ்ச்சி ஊறுகின்ற மனமுடைய கைகேயியும், துயில்வு உற்றாள் - (கவலையின்றித்) துயில் கொண்டாள்.

வேறு வகையின்றி வரம் தந்தவுடனே மன்னன், 'இனி இராமன் காடு செல்லுதல் ஒருதலை' என்ற எண்ணம் வந்து கூரிய வாள்போல் இதயத்தைப் பிளக்க, செயலற்று மயங்கிக் கிடந்தான்;

கைகேயியும் தன் காரியம் முடிந்த மகிழ்ச்சியால் கவலையின்றித் துயிலில் ஆழ்ந்து கிடந்தாள்.

மன்னன் கூறுதலும், செய்கை மறத்தலும் இடையீடின்றி நிகழ்ந் தமையின் 'கூறுமுன்னம்' என்றார். வாள் ஏறு - வாளின் பாய்ச்சல்.

இதன்பின் ஒரு பிரதியில் 'சூழ்வினைப் படலம் முற்றும்' என்ற தொடரும், அதனையடுத்து 'மன்பதை மகிழ்ச்சிப் படலம்' என்று தொடங்குதலும் காணப்படுகின்றன.

(பி - ம்.) 1. கூறுமன்னன்; கொலைவாளி.
2. ஏறுவண்ணம், ஆறுவென்னும்; வன்றுயரத்தினிடை.
3. செயன்முற்றித்.
4. ஆறுமின்ற, தூறுய்மின்ற; சிந்தையினானும் துயில்வுற்றான், உணர் வற்றான், துயிலுற்றாள். (45)

கங்குல் கழிதல்

(எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

231. சேணு லாவிய நாளெ லாமுயி
ரொன்று போல்வன செய்துபின்
ஏணு லாவிய தோளி னானிட
ரெய்த வொன்று மிரங்கிலா
வாணி லாநகை மாத ராள்செயல்
கண்டு மைந்தர்மு னிற்கவும்
நாணி னாளென வேகி னாளிர்
கங்கு லாகிய நங்கையே.

சேண் உலாவிய - நீட்சி பொருந்திய, நாள் எல்லாம் - மிகப் பல நாளும், உயிர் ஒன்று போல்வன - (இருவருக்கும்) உயிர் ஒன்றே யென்பதற்கு ஒத்த செயல்களை, செய்து - (இதுகாறும்) செய்து வந்து, பின் - பின்பு (இப்போது), ஏண் உலாவிய தோளினான் - வலிமை மிகுந்த தோள்களையுடைய கணவன், இடர் எய்த - பெருந்துன்பம் உறவும், ஒன்றும் இரங்கிலா - சிறிதும் இரங்காத, வாள் நிலா நகை மாதராள் - ஒளிமிக்க பற்களையுடைய கைகேயியின், செயல் கண்டு - தீச்செயலை நோக்கி, நளிர் கங்குல் ஆகிய நங்கை - குளிர்ந்த இரவாகிய பெண், மைந்தர் முன் நிற்கவும் நாணினாள் என - ஆடவர் முன்னே நிற்பதற்கும் நாணங்கொண்டாள் என்னும்படி, ஏகினாள் - அகன்று போனாள் (இரவு கழிந்தது என்றவாறு).

சேணுலாவிய நாள் - திருமணம் ஆனதுமுதல் அதுவரை உள்ள நீண்ட காலம். 'இவ்வளவு காலமும் கணவனுக்கும் தனக்கும் உடல் இரண்டேயன்றி உயிர் ஒன்றே என்னும்படி இன்பில் மகிழ்ந்தும் துன்பிற் கலங்கியும் ஒன்றுபட்டு வாழ்ந்தவள்,

இப்போது முற்றும் மாறுபட்டுக் கணவனது பெருந்துயர் கண்டும் சிறிதும் இரங்காத வன்னெஞ்சினளாகிப் பழியேற்றமை பெண் குலத்துக்கே இழுக்காகும்' என்று கங்குலாகிய நங்கை கருதி, ஆடவர் முன் நிற்கவும் நாணி அகன்றுள் என இரவு கழிந்ததைத் தற்குறிப் பேற்ற வகையாகக் கூறினுர். கங்குலை நங்கையாகக் கூறியது உருவகம். வடமொழியுள் 'ராத்ரி' என்பது பெண்பாற் சொல் என்பதும் கருதத்தக்கது. நங்கை என்பதற்கேற்ப ஏகினுள் என உயர்திணை முடிவு கொடுத்தார். கைகேயி தன் வெற்றி கண்டு பற்கள் வெளியே தோன்ற நகைத்து மகிழ்ந்தாள் என்ற குறிப்புத் தோன்ற, 'வாணிலா நகை மாதராள்' என விசேடித்தார். வாணிலா: ஒருபொருட் பன்மொழி. ஒன்றும், நிற்கவும்: உம்மை இழிவு சிறப்பு. ஏண் - எண் என்பதன் விகாரமாகக் கொண்டு மதிப்பு என்றலுமாம்.

(பி - ம்.) 1. போர்பல செய்துபின், செய்தபின்.
2. இடராயும்; இரங்கலா, இரங்கலாள். (46)

கோழி கூவுதல்

232. எண்ட ருங்கடை சென்ற யாம
மியம்பு கின்றன வேழையால்
வண்டு தங்கிய தொங்கன் மார்பன்
மயங்கி விம்மிய வாறெலாம்
கண்டு நெஞ்சுக லங்கி யஞ்சிறை
யான காமர்து ணைக்கரம்
கொண்டு தம்வயி றெற்றி யெற்றி
விளிப்ப போன்றன கோழியே.

எண்தரும் - எண்ணப்படுகின்ற, கடை சென்ற யாமம் - நாளின் கடைசியாகக் கழியும் யாமத்தை, இயம்புகின்றன - தெரிவிப்பனவாகிய, கோழி-கோழிகள், ஏழையால் - பெண்ணாலே (கைகேயியால்), வண்டு தங்கிய தொங்கல் மார்பன் - வண்டுகள் மொய்க்கும் பூமாலை யணிந்த மார்பையுடைய சக்கரவர்த்தி, மயங்கி - அறிவு கலங்கி, விம்மிய ஆறு எலாம் கண்டு - துன்புற்ற வகையெல்லாம் பார்த்து, நெஞ்சு கலங்கி - மனம் கலங்கி, அம் சிறை ஆன - அழகிய சிறகுகளாகிய, காமர் துணை கரம் கொண்டு - அழகிய இரு கைகளால், தம் வயிறு எற்றி எற்றி - தம் வயிற்றில் பன்முறை அடித்துக்கொண்டு, விளிப்ப போன்றன - அழுவன போன்றிருந்தன. ஏ : ஈற்றசை.

இதுமுதல் பதினுன்கு கவிகளால் வைகறைப் பொழுதில் நிகழ்ந்த வற்றைத் தற்குறிப்பேற்றமாகக் கூறுகின்றுர்.

பொழுது புலர்வதன் முன், இரவின் கடையாமத்தில் கோழிகள் இயல்பாகக் கூவுதலை மன்னவன் துன்பங் கண்டு பொருமல் அழுவன

போன்றிருந்தன என்றது தற்குறிப்பேற்றம். ஒரு நாளில் எட்டாக எண்ணப்படும் யாமங்களில் கடைசி யாமமாதலின் 'கடை சென்ற எண் தரும் யாமம்' என மாற்றி உரைத்தலுமாம். வைகறையாகிய அவ்வியாமம் பல நற்செயல்களுக்குஇடமாதலின், எண்தரும்-சிறப்பாக மதிக்கப்படுகின்ற என்றலும் பொருந்தும். இயம்புதல் - கூவுதலுமாம். கோழிகள் கூவுங்கால் சிறகை விரித்து அடித்துக்கொண்டு கூவுதல் இயல்பு; ஆசிரியர் தம் கற்பனைக்கேற்ப, அச் சிறகுகளைக் கைகளாக உருவகித்து, அவை துயரந் தாங்காமல் வயிற்றில் அடித்துக்கொண்டு அழுவதாகக் கூறினர். 'எற்றி எற்றி' என்ற அடுக்கு, பலகால் தொழில் நிகழ்தல் குறித்தது. கோழி: பால்பகா அஃறிணை. "தையல் துயர்க்குத் தரியாது தஞ்சிறகாம், கையால் வயிறலைத்துக் காரிருள்வாய்—வெய்யோனை, வாவுபரித் தேரேறி வாவென் றழைப்பனபோல், கூவினவே கோழிக் குலம்" (நள. 280) என்பது ஈண்டு ஒப்பிடத் தக்கது.

(பி - ம்.) 1. என்றருங்கடை; ஏழைபால்.
2. வண்டு தொங்கிய.
3. அஞ்சிறையாய.
4. தம்வயின், தன்வயிறு; விளிப்ப போன்றது, அரற்றல் போன்றன. (47)

பறவைகள் ஒலித்தல்

233. தோய்க யத்து மரத்து மென்சிறை
துள்ளி மீதெழு புள்ளெலாம்
தேய்கை யொத்த மருங்குன் மாதர்
சிலம்பி னின்று சிலம்புவ
கேக யத்தர சன்ப யந்த
விடத்தை யின்னதோர் கேடுசூழ்
மாக யத்தியை யுட்கொ தித்து
மனத்து வைவன போன்றவே.

தோய் கயத்தும் - (நீர்ப்பறவைகள்) தங்கும் குளங்களிலும், மரத்தும் - மரங்களிலும், மென் சிறை துள்ளி - மெல்லிய சிறகுகளை உதறிக்கொண்டு, மீது எழு - மேலெழுகின்ற, புள் எலாம் - பறவைகள் எல்லாம், தேய்கை ஒத்த மருங்குல் - (நாளுக்கு நாள்) தேய்வது போன்ற சிற்றிடையினையுடைய, மாதர் - பெண்களின், சிலம்பின் - பாதச் சிலம்புகள்போல, நின்று சிலம்புவ - நின்று ஒலிப்பன, கேகயத்து அரசன் பயந்த விடத்தை-கேகயராசன் பெற்றெடுத்த விடம் போன்றவளை, இன்னது ஓர் கேடு சூழ் - இத்தகையதொரு பெருங் கேட்டினைச் சூழ்ந்து செய்த, மா கயத்தியை - மிக்க கீழ்மைக் குணமுடையவளான கைகேயியைக் குறித்து, மனத்துள் கொதித்து - தம் மனத்துள்ளே கோபம் கொண்டு, வைவன போன்ற-வைது இகழ்வன போன்றன. ஏ: அசை.

புள்ளெலாம் சிலம்புவ வைவபோன்றன என முடிக்க.

பறவைகள் வைகறையில் எழும்போது, சிறகுகளை உதறிக் கொண்டு குரலெழுப்புதல் இயல்பு. அதனை, அவை கைகேயிபாற் கோபங்கொண்டு அவளை வைவன போன்றன எனத் தற்குறிப் பேற்றமாக இயைத்துக் கூறினர். கோழி யல்லாத பிற பறவைகளின் குரல் மெல்லியதாகலின், அக் குரலுக்குச் சிலம்பொலியை உவமித்தார். கணவனுயிரை வாங்கக் காரணமாதலின் 'விடத்தை' என்றார். கயம் - கீழ்மை; கயத்தி - கீழ்மையுடையவள். அவள் செயலின் கொடுமை நோக்கி மாகயத்தி என்றார். பறவைகளுள் அன்னத்தின் குரலுக்குச் சிலம்பொலியை உவமை கூறுவர்; பால. 158, 336, 970; சீவக. 2890. இங்கே பொதுப்படக் கூறினர். தோய் - மூழ்குதற்குரிய என்றலுமாம்.

(பி - ம்.) 1. தோயகத்து.
2. தேய்கையுற்ற; மருங்கின்மாதர்; சிலம்பிகின்று, சிலம்புகின்று, சிலம்பலால்; புலம்புவ.
3. விடத்தையன்னதோர், அன்னவக், மடந்தை யின்னதொர்.
4. மாகயத்தி யெனக்கொதித்து; மனத்துள் வைவன; போன்றதே. (48)

யானைகள் துயிலெழல்

234. சேம மென்பன பற்றி யன்பு
திருந்த வின்றுயில் செய்தபின்
வாம மேகலை மங்கை யோடு
வனத்துள் யாரும றக்கலா
நாம நம்பி நடக்கு மென்று
நடுங்கு கின்ற மனத்தவாய்
யாமு மிம்ம ணிறத்து மென்பன
போலெ ழுந்தன யானையே.

யானை - (அரசுக்குரிய) யானைகள், சேமம் என்பன - (தமக்குப்) பாதுகாப்பான இடங்களெனப்படும் கூடங்களில், அன்பு பற்றி - அன்புகொண்டு, திருந்த இன்துயில் செய்தபின் - (இரவிலே) நன்றாக இனிய உறக்கம் கொண்ட பின்பு (விழித்தவுடன்), யாரும் மறக்க அல்லா நாமம் நம்பி - எவரும் (எப்போதும்) மறத்தற்கு இயலாத திருநாமத்தையுடைய இராமபிரான், வாமம் மேகலை மங்கையோடு - அழகிய மேகலையணிந்த மங்கைப் பருவமுடைய சீதாபிராட்டியுடனே, வனத்துள் நடக்கும் என்று - காட்டிற்குச் செல்வான் என்று (அறிந்து), நடுங்குகின்ற மனத்த ஆய் - துயரால் நடுங்கும் மனமுடையனவாகி, யாமும் இ மண் இறத்தும் - நாமும் இந்த மண்ணை (நாட்டை) விட்டுச் செல்வோம், என்பன போல் - என்று சொல்வன போல, எழுந்தன - எழுந்து நின்றன. ஏ: அசை.

யானைகள் உறக்கத்தினின்றும் விழித்தெழுந்து நிற்கும் இயல்பான நிகழ்ச்சியை, இராமபிரான் காடு செல்வதறிந்து அவை தாமும் காடு செல்லச் சித்தமாக நின்றன என்றது தற்குறிப்பேற்றம். யானை : பால் பகாவஃறிணை. சேமம்-பாதுகாப்புள்ள இடமான கூடங்கள். பிராணிகள் தாம் இருக்குமிடத்தின்பால் அன்பு கொள்ளுதல் இயல்பு. யாரும் மறக்கலா நாமம் - இராம நாமம்; இது தாரக மந்திரமாதலின் யாரும் மறக்கலாதது. நம்பி - புருஷோத்தமன்; சீவக. 1909. நச். உரை. நடக்கும் : செய்யுமென் முற்று. துயில் செய்த - துயில் செய்தவை எனப் பெயராக்கி உரைப்பினும் அமையும்.

(பி - ம்.) 1. என்பதியற்றி; திருந்து மின்றுயில், திருத்து மின்றுயில், தெரிந்த வின்றுயில்; செய்துபின், செய்வபின்.
2. மங்கையோடும் வனத்து; மறக்கிலா, மறந்திலா, மறுக்கிலா, மறுக்கலா.
4. இறந்தும்; எழுந்தன வானையே, எழுந்தது யானையே. (49)

விண்மீன்கள் மறைதல்

235. சிரித்த பங்கய மொத்த செங்கணி
ராம னைத்திரு மாலையக்
கரிக்க ரம்பொரு கைத்த லத்துயர்
காப்பு நாணணி தற்குமுன்
வரித்த தண்கதிர் முத்த தாகியிம்
மண்ண னைத்து நிழற்றமேல்
விரித்த பந்தர் பிரித்த தாமென
மீனொ ளித்தன வானமே.

சிரித்த பங்கயம் ஒத்த - சிரிக்கின்ற தாமரை மலரைப் போன்ற, செம் கண் - அழகிய கண்களையுடைய, திருமாலை - இராமனை (திருமாலாகிய இராமனுக்கு), கரி கரம் பொரு-யானைத் துதிக்கை போன்ற, அ கைத்தலத்து - அந்தக் கையில், உயர் காப்பு நாண் - (முடிசூட்டுக்குரிய) மேலான ரட்சா பந்தனத்தை, அணிதற்கு முன் - தரித்தற்கு முன்னமே, இ மண் அனைத்தும் நிழற்ற - இப்பூவுலகம் முழுதும் நிழல் செய்யும்வண்ணம், மேல் - மேலே, வானம் - ஆகாயத்தில், வரித்த - அழகுறக் கட்டிய, தண்கதிர் முத்தது ஆகி - குளிர்ந்த ஒளி பொருந்திய முத்து வரிசைகளையுடையதாய், விரித்த - பரப்பி வேயப் பெற்றிருந்த, பந்தர் - (முத்துப்) பந்தலை, பிரித்தது ஆம் என - பிரித்துவிட்டாற் போல, மீன் ஒளித்தன - விண் மீன்கள் மறைந்தன. ஏ : அசை.

இராமபிரானது முடி சூட்டு விழாவை உலக முழுதும் திரண்டு கண்டு களித்தற் பொருட்டு மேலே வேய்ப்பெற்ற முத்துப் பந்தலைப் போலக் காட்சியளித்தன, இரவிலே ஆகாயத்திலுள்ள நட்சத்திரங்கள். பகலொளியால் அவை மறைந்தமை பந்தலைப் பிரித்தாற் போன்று.

இருந்தது. இவ்வாறு இயல்பிலேயே நிகழ்வதை இடத்துக்கேற்பத் தற்குறிப்பேற்றமாகப் பொருத்தியமைத்தார். தெய்விகமான பந்தராதலால் அது முடிசூட்டு விழாத் தடைப்பட்டதை முன்னதாக உணர்ந்து பிரித்தது போன்றது என்ற நயமும் காண்க. மங்கல காரியங்களுக்கு முன், அதற்குரிய தலைவன் வலக்கரத்திலே காப்பு நாண் (இரட்சா பந்தனம்) அணிந்து விரதம் செய்தல் மரபு; 344.

சிரித்த பங்கயம் : இல்பொருளுவமை. மகிழ்ச்சி கண்ணினும் தோன்றுமாதலின் இவ்வாறு கூறினர். அகரச் சுட்டு பிரித்துக் கூட்டப்பெற்றது. இராமனை - இராமனுக்கு; இராமனை என்றே வைத்து, அணிதற்கு - அணிவித்தற்கு என்றுரைப்பினும் அமையும். முத்ததாகி விரித்த பந்தர் என்றியைக்க. யானைத்துதிக்கை திரட்சியாலும் நீட்சியாலும் ஆடவர் கைக்கு உவமை.

(பி - ம்.) 1. இராமனுக் கிருண்மாலையில்.
2. கரித்தரம் பொரு.
3. விரித்த, விரைத்த; முத்ததாகிய, முத்தமாகியும்; விழுற்றுமேல்.
4. பந்தல்; திரைத்ததாமென, தரித்ததாமென; ஒளித்தது. (50)

236. நாம விற்கை யிராம னைத்தொழு
நாள டைந்த துமக்கெலாம்
காம விற்குடை கங்குன் மாலை
கழிந்த தென்பது கற்பியாத்
தாமொ லித்தன பேரி யவ்வொலி
தாரை மாரி தழங்கலால்
மாம யிற்குல மென்ன வுள்ள
மலர்ந்தெ ழுந்தனர் மாதரே.

உமக்கு எலாம் - உங்களுக்கெல்லாம், காமன் விற்கு உடை - மன்மதன் வில்லுக்குத் தோற்றுத் துன்புறுதற்கிடமான, கங்குல் மாலை கழிந்தது - இராப் பொழுது கழிந்தது; நாமம் வில் கை - (பகைவர்க்கு) அச்சந்தரும் கோதண்டம் ஏந்திய கையையுடைய, இராமனை தொழும் நாள் - இராமபிரானை (அரசனாகக் கண்டு) வணங்கும் நாள், அடைந்தது என்பது - வந்துவிட்டது என்ற செய்தியை, கற்பியா - தெரிவித்துக்கொண்டு, பேரி ஒலித்தன - (மங்கல) முரசங்கள் ஒலித்தன; அ ஒலி - அந்த ஓசை, தாரை மாரி தழங்கலால் - மழை மேகம் போல முழங்கியதனால், மாமயில் குலம் என்ன - சிறந்த மயிலினம் போல, மாதர் - பெண்கள், உள்ளம் மலர்ந்து - மனமகிழ்ந்து, எழுந்தனர் - (துயிலினின்றும்) எழுந்தனர். ஏ : ஈற்றசை.

முடிசூட்டு விழா நாட் காலையில் அரண்மனையிலே, மங்கல முரசுகள் ஒலிக்க, அவ்வொலி கேட்ட மகளிர் மனமகிழ்ந்து ஆடவர்க்கு முன்னே படுக்கை விட்டெழுந்தனர் என்கின்றது இக்கவி. முரசொலி மேக முழக்கம் போன்றிருந்தது; மேகமுழக்கங் கேட்டால் மயில்கள்

மகிழ்ந்தெழும்; அம்மயில்களை மகளிர்க்கு உவமையாக்கி, மேக முழக்கங் கேட்ட மயில்போல அவர்கள் மகிழ்ந்தெழுந்தனர் என்றார். அரண்மனைகளில் நாட் காலையிலும் மாலையிலும் முரசு முழக்குதல் வழக்கு. யாமத்தை அறிவித்தற்கு அவ்வப்போது முழங்குதலும் உண்டு. ''யாமபேரி இசைத்தலால்'' (242) என்பது காண்க; ''மாலை வெண் குடைப் பாண்டியன் கோயிலிற், காலை முரசங் கனைகுர லியம்பும்'' (சிலப், 17, (1) 5 : 6).

நாமம் - அச்சம். கங்குலாகிய மாலை. கற்பியா: செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். தாம் : அசை. மாரி - மேகம்.

(பி - ம்.) 1. நாளடைந்த நமக்கெலாம். நாளிழந்த நமக்கெலாம்.
2. காமர்விற்குடை; கழிந்த வென்பன.
3. ஒலித்தது, பேரியத்தொலி; சாரன் மாரி, சார மாரி, காலமாரி; தழங்கலா, தழங்கலாய், முழங்கலான், முழக்கலா.
4. என்ன முன்னம், என்ன வந்து. (51)

237. இனமலர்க்குலம் வாய்விரித்திள
வாச மாருதம் வீசமுன்
புனைதுகிற்கலை சோர நெஞ்சு
புழுங்கினார்சில பூவைமார்
மனவனுக்கம் விடத்தனித்தனி
வள்ளலைப்புணர் கள்ளவின்
கனவினுக்கிடை யூறடுக்க
மயங்கினார்சில கன்னிமார்.

இனம் - பலவகையான, மலர் குலம் - மலக்கூட்டங்களை, வாய் விரித்து - வாய் நெகிழச் செய்து, வாசம் இளமாருதம் வீச - நறுமணந் தோய்ந்த இளங்காற்று வீசுதலால், சில பூவைமார் - சில பெண்கள், முன் புனை-முன்னே தாம் (அரையில்) கட்டியிருந்த, துகில் கலை சோர- ஆடையும் மேகலையும் அவிழ, நெஞ்சு புழுங்கினார்-(காமவிகாரத்தால்) மனம் வெதும்பினார்கள்; சில கன்னிமார் - (மணமாகாத) சில கன்னிப் பெண்கள், மனம் அனுக்கம் விட - (தங்கள்) மனத்துயரம் தீர, தனி தனி - தனித் தனியே (ஒவ்வொருவரும்), வள்ளலை புணர் -இராம பிரானைச் சேர்வதாகக் கண்ட, கள்ளம் இன் கனவுக்கு - பொய்யான இனிய கனவுக்கு, இடையூறு அடுக்க - (காற்றினால்) இடையூறு நேர் தலால், மயங்கினார் - மனங்கலங்கினர்.

குளிர்ந்த இளங்காற்று வீசிப் பொழுது புலர்ந்ததை அறிவித்தலால், சில சில பெண்கள் தம் தம் கருத்து முற்றப்பெறாது கலங்கினர் என்கின் றது இக்கவி. முதலிற் கூறப்பெற்றவர், தம் கணவனோடு ஊடி, அது தீர்ந்து கூடக் கருதி அனந்தரில் இருந்தோர்; அவர்கள் காற்றி னால் அனந்தர் தீர்ந்து, பொழுது புலர்ந்தமை உணர்ந்து, கணவரைக்

கூடுதற்கில்லையே யென்று கலங்கினர்; பின்னே கூறப்பெற்ற கன்னிப் பெண்களில் ஒவ்வொருவரும் இராமபிரானைத் தழுவும் நினைவோடே துயில, அந்நினைவின் வலிமையால் அது கை கூடுவதாகக் கனாக் கண்டு, காற்றினால் துயிலுணர்ந்து, கனவு கலையவே உண்மையறிந்து மயங்கினர் என்றவாறு. இக்கனவு ஒருபோதும் பலியாதாகலின் 'கள்ளக் கனவு' எனப்பட்டது. மலராத பேரரும்புகள் இளங் காற்றினால் அசைந்து மலர்தலின், 'மலர்க்குலம் வாய் விரித் திளமாருதம் வீச' என்றார். அனுக்கம்: அனுங்கு என்ற முதனிலை அடியாக வந்த தொழிற்பெயர்; தளர்ச்சியென்ற பொருளுடையது.

(பி - ம்.) 1. வாய்விடாதிள, வாய்விடாவிள, வாயவிழ்த்திள, வாய் விடுத்திள,
2. புனைதுகில்கலை, புழுங்கியங்க மெலிந்தம், மெலிந்துதம்.
3. மனமனுக்கம் விடா, மனமறுக்க மிடத், மனவனுக்கம் விடார்; கள்ளவன், கண்ணகன்.
4. இடையூறடுக்க நடுங்கினர், இடையூடுபுக்கு நடுங்கினர், இடையூற புக்கு நடுங்கினர், இடையூடுறக்க மயங்கினர். (52)

குமுதங்கள் குவிதல்

238. சாய டங்க நலங்க லந்து
தயங்கு தன்குல நன்மையும்
போய டங்க நெடுங்கொ டும்பழி
கொண்ட ரும்புகழ் சிந்துமத்
தீய டங்கிய சிந்தை யாள்செயல்
கண்டு சீரிய நங்கைமார்
வாய டங்கின வென்ன வந்து
குவிந்த வண்குமு தங்களே.

சாய் அடங்க - (தன்) பெருமை கெட்டவும், நலம் கலந்து தயங்கும் - நன்மை பொருந்தி விளங்குகின்ற, தன் குலம் நன்மையும் - தன் பிறந்த குலத்தின் பெருமையும், பேர்ய் அடங்க - கெட்டழியவும், நெடு கொடு பழி கொண்டு - நெடிய கொடிய பழியையேற்று, அரு புகழ் சிந்தும் - பெறுதற்கரிய புகழைச் சிதைத்துக்கொண்டே, அ - அந்த, தீ அடங்கிய சிந்தையாள் - தீப்போலும் கொடுமை தங்கிய மனமுடைய கைகேயியின், செயல் கண்டு - தகாத செயலைக் கண்டு, சீரிய நங்கைமார் வாய் - சிறந்த கற்புடைப் பெண்டிரின் வாய்கள், அடங்கின என்ன - அடங்கி மூடினாற்போல், வண் குமுதங்கள் - வளமிக்க செவ்வாம்பல் மலர்கள், வந்து குவிந்தன - (இதழ்கள் கூடி) வந்து வாய் குவிந்தன. ஏ : அசை.

குமுத மலர்கள் காலையில் குவிதலும் மாலையில் விரிதலுமுடையன. இயல்பிலே நிகழும் இந்நிகழ்ச்சியை, கைகேயியின் கொடுமை கண்டு

உயர்குல. மகளிர் வெட்கி வாயடங்கியிருந்தாற் போன்றிருந்தது என்றது தற்குறிப்பேற்றம். கணவனைக் கொல்லும் கைகேயியின் கொடுஞ் செயல் மகளிரினத்துக்கே குறைவு தருதலால், நற்பெண்டிரனை வரும் அதனை வாய்திறந்து சொல்லவும் கூசி வாய்மூடி யிருந்தன ரென்க. கைகேயி தன் செயலால், தானுங் கெட்டுத் தன் குலப்பெருமை யையுங் கெடுத்தவளாகிறுள். அவள் கொள்ளும் பழி மிக நெடுங்காலம் அழியாது நிற்பதாகலின் 'நெடுங்கொடும் பழி' என்றார். பழியைக் கொண்டு புகழைச் சிந்துதல்: பரிவர்த்தனுலங்காரம். தீ; உவமவாகு பெயர். பெண்களின் வாய்க்குச் செவ்வாம்பல் மலரை உவமை கூறுதல் மரபு.

(பி - ம்.) 1. சாயடங்கு, சாயலர்ந்த; கலங்கரந்து, கலங்கலங்க, கலங்கலந்தொளி; தங்கு கன்குல, தழங்கு கன்குல, தயங்கு கன்குலத், தழங்கு தன்குல, அலர்ந்த தன்குல, அலர்ந்தகன்குல; தன்மையும்; கங்கையும்.
3. சிரிய மங்கைமார், சிறிய கங்கைமார்.
4. அடங்கினரென்ன, அடங்கினதென்ன; வன்குமுதங்களே. (53)

சில மாதர் நிலை

239. மொய்ய ராக நிரம்ப வாசை
முருங்கு தீயின் முழங்கமேல்
வைய ராவிய மாரன் வாளியும்
வானி லாநெடு வாடையும்
மெய்ய ராவிட வாவி சோர
வெதும்பு மாதர் த மென்செவிப்
பைய ராநுழை கின்ற போன்றன
பண்க னிந்தெழு பாடலே.

மொய் அராகம் நிரம்ப - அடர்ந்த காமவேட்கை (உள்ளே) நிறைத லால், ஆசை - அந்த ஆசையானது, முருங்கு தீயின் - உட்கனலும் நெருப்பைப்போல, முழங்க - மிக்கு வெதும்பவும், மேல் - வெளியே, வை அராவிய மாரன் வாளியும் - அராவப்பட்ட கூர்மையான மன் மதன் அம்பும், வான் நிலா - ஆகாயத்திலுள்ள நிலவின் ஒளியும், நெடு வாடையும் - தொடர்ந்து வீசுங் காற்றும், மெய் அராவிட - (தம்) உடம்பை வருத்தவும், ஆவி சோர - உயிர் (உடம்பினின்று) நழுவ, வெதும்பும் - உள்ளம் வெதும்புகின்ற, மாதர் தம் - பெண்களின், மென்செவி - மெல்லிய காதுகளில் (புகுகின்ற), பண் கனிந்து எழு பாடல் - இசை வளங் கனிந்து எழுகின்ற பாடல்கள், பை அரா நுழை கின்ற போன்றன - படத்தையுடைய பாம்பு நுழைவது போன்றிருந்தன. (துன்புறுத்தின என்றவாறு).

கணவனைப் பிரிந்த மாதர் காமவேட்கை மீதூரலால் இரவில் உடம்பின் உள்ளேயும், மன்மதபாணம், நிலா, வாடை ஆகியவற்றால்

வெளியேயும் நொந்து வருந்த, காலையில் அவர்கள் காதில் விழும் இன்னிசைப் பாடல்கள் அவர்களுக்கு நாராசமாக இருந்தனவென்க. காமத்தால் வருந்துவோருக்கு, நிலவும், இனிய காற்றும், இன்னிசையும் போல்வன அக் காமத்தை மிகுவித்து வருத்துதல் இயல்பு.

அராகம்: ராகம் என்ற வடசொல்லின் திரிபு; இது முதலில் தோன்றும் உள்ளப்பற்று; ஆசை - உள்ளம் பற்றியதனைப் பெறவேண்டு மென்றெழுவது. முருங்குதல் - அடங்கி யெரிதல்; கனலுதல். முழங்குதல் - மிகுதல். வாடை: இங்கே காற்று என்ற பொருளில் வந்தது. நெடுவாடை - தொடர்ந்து வீசுங்காற்று. பை: பாம்புக்கு விசேடணம். பாடல் - பள்ளியெழுச்சிப் பாடல். பாடலைப் பாம்பென்றமை: சுந்தர. 287.

நிலா என்றவிடத்து எண்ணும்மை தொக்கது. வால்நிலா எனப் பிரித்து வெள்ளிய நிலவென்றலுமாம்.

(பி - ம்.) 1. மெய்யராக, மொய்யராக மிமிர்ந்த; நெருங்க; வாச முருகுதியின்; வாச முருங்குதியின்; முமங்குமேல், அழுங்கமேல்.
2. மையராவிய; மாரவாளியும், மானவாளியும்; வானிலாவொடு, வாணிலாவொடு, வாணிலாநெடு.
3. விரும்புமாதர்தன்; இன்செவிப். 4. பண்களித்தெழு. (54)

ஆடவர் படுக்கைவிட்டு எழுதல்

240. ஆழி யான்முடி சூடு நாளிடை
யான பாவியி தோரிரா
ஊழி யாயின வாறெ னுவுயர்
போதின் மேலுறை பேதையும்
ஏழு லோகமு மெண்ட வஞ்செய்த
கண்ணு மெங்கண் மனங்களும்
வாழு நாளி தெனுவெ ழுந்தனர்
மஞ்சு தோய்புய மைந்தரே.

மஞ்சு தோய்புயம் - அழகு தங்கிய தோள்களையுடைய, மைந்தர் - (அந்நகரத்து) ஆடவர்கள், ஆழியான் - சக்கரப்படையையுடைய (திருமாலான) இராமபிரான், முடிசூடும் நாள் இது - மகுடம் தரித்தற்குரிய நாளாகிய இது, போதின்மேல் உறை பேதையும் - தாமரை மலரில் தங்கும் திருமகளும் (இராச்சியலட்சுமியும்), எண் தவம் செய்த - (அப்பிரானை அரசனாகப் பெறுதற்கு) எண்ணுவதற்குரிய தவத்தைச் செய்த, ஏழு லோகமும் - ஏழுலகங்களும், எங்கள் கண்ணும் - (முடிசூட்டு விழாவைக் காணத் தவஞ் செய்த) எங்கள் கண்களும், மனங்களும் - (அதனைக் கண்டு இன்பம் நுகரும்) எங்கள் மனங்களும், வாழும் நாள் என - நல்வாழ்வு பெறும் நாள் என்றும், இடை ஆன பாவி - (அந்நாளுக்கு) இடையே வந்த பாவியாகிய, இது ஓர் இரா-

இந்த ஓரிரவு, ஊழி ஆயின ஆறு - ஓர் ஊழி போல நீட்டித்ததென்னே என்றும் (சொல்லிக்கொண்டு), எழுந்தனர் - படுக்கையை விட்டெழுந் தார்கள்.

நகரத்து ஆடவர்கள், முடிசூட்டு விழாவைக் காணும் அவா மேலீட்டால் 'பொழுது எப்பொழுது புலரும்' என்று முதல்நாள் இரவு முழுதும் துயில் கொள்ளாது காத்திருந்தமையின், அவ்விரவு மிக நீட்டித்ததாகத் தோன்றவே, இந்தப் பாவி இரா இப்படி வந்து குறுக் கிட்டதே என்று அதனை வைதுகொண்டிருந்து, பொழுது புலர்ந்த வுடன் எழுந்தனர் என்றவாறு. 'இராமபிரான் முடிசூடும் நாள், எல்லா உலகத்தவரும் நல்வாழ்வு பெறுவதற்குக் காரணமானது' என்று அதனைச் சிறப்பித்து அந்த வைபவத்தை நேரே கண்டு அனுபவிப்பவர் கண்களும் மனங்களும் மிக்க தவஞ் செய்தவை என்றனர். எண்தவம் - மதிக்கத்தக்க தவம்; இஃது இடைநிலை விளக்காய் நின்றது. போதின்மேலுறை பேதை - சீதையென்றலுமாம். பேதை, இங்கே பருவப்பெயரன்று; பெண் என்பது குறித்தது.

இரவைப் பாவி என்றது, "அழுக்கா றெனவொரு பாவி" (குறள். 168) என்றாற்போல.

(பி - ம்.) 2. ஊழியாயுயராறெனா, ஆழியாயினவாறெனா.
4. மைந்துதோய், வஞ்சிதோய்; மஞ்சரே, மன்னரே. (55)

மகளிர் எழுதல்

241. ஐயு றுஞ்சுடர் மேனி யானெழில்
காண மூளு மவாவினால்
கொய்யுறுங்குல மாம லர்க்குவை
நின்றெ ழுந்தனர் கூர்மைகூர்
நெய்யு றுஞ்சுடர் வேனெ டுங்கண்
முகிழ்த்து நெஞ்சி னினைப்பொடும்
பொய்யு றங்கு மடந்தை மார்குழல்
வண்டு பொம்மென விம்மவே.

கூர்மை கூர் - கூர்மை மிக்க, நெய் உறும் - நெய் பூசிய, சுடர் வேல் - ஒளி பொருந்திய வேல்போன்ற, நெடுகண் - பெரிய கண்களை, முகிழ்த்து - மூடிக்கொண்டு, நெஞ்சில் நினைப்பொடும் - மனத்தில் (இராமபிரானைப் பற்றிய) எண்ணத்தோடு, பொய் உறங்கு மடந்தை மார் - பொய்யாக உறங்கிய (சில) பெண்கள், ஐ உறும் சுடர் மேனியான் - (காண்போருக்கு) வியப்பை மிகுவிக்கும் ஒளியமைந்த திருமேனியையுடைய இராமபிரானது, எழில் காண - (முடிசூடிய புதிய) அழகைக் காணும்பொருட்டு, மூளும் அவாவினால் - மிக்கெழுகின்ற ஆசையினாலே, கொய் உறும் குலம் மாமலர் குவை நின்று - காம்பரித

லுற்ற மிகச் சிறந்த மலர்ப்படுக்கையினின்றும், குழல் வண்டு பொம் என விம்ம -(தங்கள்) கூந்தலில் மொய்த்த வண்டுகள் 'பொம்' என்னும் ஒலியோடு மிக்கெழ, எழுந்தனர்—.

அலங்காரமான பொருள்களைக் காணுதலில், ஆடவரினும் பெண் களுக்கு விருப்பம் அதிகம். முன்னமே இராமபிரானுடைய பேரழகில் ஈடுபட்ட பெண்களுக்கு, அவனை முடிசூடிய கோலத்திற் காண்பதில் அவா மூளுதல் இயல்பே. அதனால் அவர்கள், இரவிலே உறக்கங் கொள்ளாவிடினும், விடிதலை யெதிர்நோக்கி, மெத்தென்ற மலர்ப் படுக்கையை விட்டெழ மனமின்றி உறங்குவதுபோலப் படுத்திருந்தன ராதலின், 'பொய்யுறங்கு மடந்தைமார்......எழுந்தனர்' என்றார். கூந்தலிலே மொய்த்து நறுமணமுந் தேனும் நுகர்ந்த வண்டுகள், அவர்கள் எழுந்தவுடனே தாமும் எழுந்து ரீங்காரத்துடன் பறக்க லாயின; அதனால், 'குழல் வண்டு பொம்மென விம்ம எழுந்தனர்' என்றார். பொம்மென: அநுகரணம். வைகறை யாமத்து முரசொலி கேட்டு மாதர் கண்விழித்தெழுந்தமை முன்னே 236-ஆம் பாட்டில் கூறினார். கண் விழித்தனராயினும் அஃது இருள் மயங்கு கால மாதலால், இன்னும் சிறிது பொழுது கிடப்போமென்று சிலர் இருத்தல் கூடுமாதலின், அவருட்பட, மாதரனைவரும் எழுந்தமையை இங்கே கூறினாரென்க.

இராமபிரான் திருமேனியொளி (சாயல்), காண்போரை வியப் புறுத்த வல்லதாகலின், 'ஐயுறுஞ் சுடர் மேனியான்' எனப்பட்டது. ஐ: வியப்பு; உறும் - உறுவிக்கும்; பிறவினைப் பொருளில் வந்தது. படுக்கையிற் பரப்பும் மலர்களிற் காம்புகள் இருப்பின் உறுத்து மாதலால், காம்பு களைந்தமை தோன்றக் கொய்யுறும் என்றும், மலர்களின் சிறப்பும் மிகுதியும் தோன்றக் குல மாமலர்க் குவை என்றும் விசேடித்துக் கூறினார். முகிழ்த்தல் - குவிதல்; இங்கே மூடுதல். கொய்: முதனிலைத் தொழிற்பெயர். கூர: உரிச்சொல். ஏகாரம்: ஈற்றசை.

(பி - ம்.) 1. ஐயிறுஞ்சுடர் கேமியான்; காணுமுளும்; அவாவினர்.
2. எழுந்தன.
3. நெய்யினுஞ் சுடர்; நெஞ்சு மினைப்பொடும்.
4. விம்முமே. (56)

ஆடவர் நிலை

242. ஆட கந்தரு பூண முந்திட
வஞ்சி யஞ்சி யனந்தரால்
ஏட கம்பொதி தார்பொ ருந்திட
யாம பேரி யிசைத்தலால்

சேட கம்புனை கோதை மங்கையர்
சிந்தை யிற்செறி திண்மையால்
ஊடல் கண்டவர் கூடல் கண்டிலர்
நையு மைந்தர்க ளுய்யவே.

சேடு அகம் புனை கோதை - அழகை யுடையதாய்ப் புனைந்த பூமாலை சூடிய, மங்கையர் = மகளிர் (மனைவிமார்), சிந்தையின் செறி திண்மையால் - மனத்திலே மிக்க உறுதியோடு, ஊடல் கண்டு - (தம்மிடம்) புலத்தலைக் கண்டு, நையும் மைந்தர்கள் - (அவர்களைக் கூடும் அவாவினால்) வருந்தும் ஆடவர்கள், (மனைவியரை நயந்து கூடும் பொருட்டு) ஆடகம் தரு பூண் - (தம் மார்பிலணிந்த) ஆடகப் பொன்னாலாகிய மாலை, அழுந்திட அஞ்சி அஞ்சி - (மகளிர் மார்பில்) உறுத்துமேயென்று மிகப் பயந்து, அனந்தரால் - மனத் தடுமாற்றத் துடன், ஏடு அகம் பொதி தார் பொருந்திட - பூக்களாற் கட்டிய மாலையைப் புனைந்துகொள்ள, (அப்போது) யாமம் பேரி இசைத்தலால்- கடையாமத்தை அறிவிக்கும் பேரிகை முழங்கியதால், உய்ய - (காமத் துன்பத்தினின்றும்) தப்பும்படி, அவர் கூடல் கண்டிலர் - அம் மனைவியர் முயங்குதலை நுகர இயலாதவராயினர். ஏகாரம், ஈற்றசை.

கணவனும் மனைவியும் ஓரமளியிலே உடனுறையுங்கால் கணவனுக்குப் புணர்ச்சி விருப்பம் உண்டாக, அப்போது மனைவி மிக ஊடினாளாக, அவ்வூடலை நயந்து தீர்த்துக் கூடக் கருதிய கணவன் மனந் தடுமாறிப் பல உபாயங்களைச் செய்துகொண்டிருக்க, இவ்வாறு பொழுது கழிந்தது. அப்போது கடையாமத்தை அறிவிக்கும் பேரிகை முழங்கவே, இனிக் கூடுதற் கிடனில்லை யென்று மனக்குறையோடு பிரிய நேர்ந்தது என்றவாறு.

அஞ்சி அஞ்சி என்ற அடுக்கு காலநீட்டிப்புப் பற்றி வந்தது. ஏடு, ஆகு பெயராய்ப் பூக்களை யுணர்த்திற்று. அனந்தரால், திண்மையால்: ஆல் உருபு ஒடு உருபின் பொருளில் வந்தது. கண்டவர் மைந்தர்கள் எனக் கூட்டி, கண்டவர்களாகிய மைந்தர்கள் என உரைப்பினும் அமையும்.

(பி - ம்.) 1. பூண்முயங்கிட; அகந்தராய், அனந்தலாய், அகந்தரான், அகந்தரில்.
2. ஏடகம்பொரு, ஏடகந்தரு; பொதிந்திட, பொருந்திடும்.
3. புனைகொங்கை; சிந்தையின்செறி, சிந்தையின் சிறு தண்மையால், சிறுதிண்மையால், சிறிதின்மையால், சிறிதுண்மையால், சிந்தை நைந்து கரைந்ததால், கரைதலால். (57)
4. ஊடல் கண்டிலர்; உறையுமைந்தர்கள்.

பலவகை ஒலிகள்

243. கழையொ லித்தன வண்டொ லித்தன
காரொ லித்தன பேரியாம்
முழவொ லித்தன தேரொ லித்தன
முத்தொ லித்தன மல்குபேர்.

இழையொ லித்தன புள்ளொ லித்தன
யாழொ லித்தன வெங்கணும்
மழையொ லித்தன போலொ லித்த
மனத்தின் முந்துறு வாசியே.

எங்கணும் - (நகரில்) எல்லா இடங்களிலும், கழை ஒலித்தன - வேய்ங்குழல்கள் இன்னிசை எழுப்பின; வண்டு ஒலித்தன - வண்டுகள் ரீங்காரம் செய்தன; கார் ஒலித்த அன்ன - மேகங்கள் முழங்கினாற்போன்ற, பேரி ஆம் முழவு ஒலித்தன - பேரிகையாகிய வாத்தியங்கள் முழங்கின; தேர் ஒலித்தன - தேர்கள் (வீதியில் ஓடும்போது) எதிரொலி செய்தன; முத்து ஒலித்தன - (அங்கங்கே அலங்கரித்த) முத்து மாலைகள் ஒன்றோடொன்று உராய்ந்து ஒலித்தன; மல்கு பேர் இழை ஒலித்தன - நிறைந்த பெருவிலை அணி கலன்கள் (ஆடவரிடத்தும் மகளிரிடத்தும்) ஒலித்தன; புள் ஒலித்தன - பறவைகள் (இனிமையாகக்) கூவின; யாழ் ஒலித்தன - வீணைகள் இசைத்தன; மனத்தின் முந்து உறு - மன வேகத்தினும் முந்திச் செல்கின்ற, வாசி - குதிரைகள், மழை ஒலித்தன போல - மேகங்கள் கர்ச்சித்தாற்போல, ஒலித்த - கனைத்தன.

இப்பாடலுள், 'ஒலித்தன' என்பது சொற்பின் வருநிலையாகப் பல முறை வந்தது, வைகறைப்பொழுதில் இயற்கையாகவும் செயற்கை யாகவும் எழும் ஒலிகள் பல கூறப்பெற்றன. மக்கள் மகிழ்ச்சியோடு அவரவரிடங்களை அலங்கரித்துத் தம்மையும் அணிகலன்களால் அழகு செய்துகொண்டமையும் கூறப்பெற்றது.

கழை - கரும்பும் ஆம். 'காரொலித்தன' என்ற இடத்து 'ஒலித்தன' என்பது முற்றாகவன்றித் தொகுத்தல் விகாரம் பெற்ற தொடர் மொழியாக அமைந்தது. முழவு : வாத்தியப் பொதுப் பெயர். மனவேகம் எவற்றினும் மிக்கதாகச் சொல்லப்படுதலின், அதனினும் மிக்கது குதிரைகளின் வேகம் எனச் சிறப்பித்தார். மனத்தின் - பாகனது மனம்போல; அவன் குறிப்பறிந்து என்றலும் பொருந்தும். "உள்ளம் போல வுற்றுழி யுதவும், புள்ளியற் கலிமா" (தொல். பொருள். 194).

(பி - ம்.) 1. தழையொலித்தன தாயொலித்தன; பேரிமா.
2. முழையொலித்தன; முத்தொலித்தெழு மல்குலார், முத்தொலித்தன வல்குலார்.
3. புனலொலித்தன.
4. போற்கலித்த மனத்து முந்துறு, போற்கலித்தனமா மதக்கரி, போலொலித்தன மனத்தின், ஒலித்த; மனத்தின் முந்துறும். (58)

தீபங்கள் ஒளி மழுங்கினமை

244. வைய மேழுமொ ரேழு மாருயி
ரோடு கூட வழங்குமம்
மெய்யன் வீரருள் வீரன் மாமகன்
மேல்வி ளைந்தெழு காதலால்
நைய நைய நலம்பு லன்கள
விந்த டங்க நடுங்குவான்
தெய்வ மேனி படைத்த சேயொளி
போன்ம ழுங்கின தீபமே.

வையம் ஏழும் ஓர் ஏழும் - (தன் ஆட்சியுட்பட்ட) பதினான்கு உலகங்களையும், அரு உயிரோடுகூட - (தனது) அரிய உயிருடனே, வழங்கும் - கொடுத்த, அ மெய்யன் - அத்தகைய மெய்ம்மை உடையவனும், வீரருள் வீரன் - (மிகச் சிறந்த) வீரருக்குள் வீரனான வனும், மாமகன் மேல் - (தன்) பெரிய புதல்வனிடத்து, விளைந்து எழு காதலால் - தோன்றி வளர்கின்ற பேரன்பினால், நைய நைய - (தான்) மிக வருந்துதலால், புலன்கள் - ஐம்புலன்களும், நலம் அவிந்து - நன்மை (இயற்கையாற்றல்) கெட்டு, அடங்க - அடங்கிப்போக, நடுங்குவான் - நடுங்குகின்றவனுமான தசரதனது, தெய்வம் மேனி படைத்த - தெய்வத் தன்மை வாய்ந்த உடம்பு (முன்னே) பெற்றிருந்த, சேய் ஒளி போல் - செவ்விய ஒளி (படிப்படியாக மழுங்குதல்) போல, தீபம் மழுங்கின - விளக்குகள் ஒளிமழுங்கின. ஏகாரம்: ஈற்றசை.

இராமனது பிரிவால் தான் உயிர் இழப்பது உறுதி என்று உணர்ந்த பின்னும், வாய்மை காத்தற்பொருட்டு வரங்களை வழங்கியதனால், 'வையமேழும் ஏழும் உயிரோடுகூட வழங்கும் மெய்யன்' என்றார். வையமேழுமேழும் : உயர்வு நவிற்சி. சம்பரனைத் தொலைத்து, இந்திரனுக்கே அரசு நிலையிட்டவனாதலால் 'வீரருள் வீரன்' என்றார், அத்தகையவன், அளவிறந்த துயருற்றதனால், புலன்களின் ஆற்றல் கெட, உடம்பும் ஒளி மழுங்குவதாயிற்று. அந்நிலையை, பகலொளியில் விளக்குகள் ஒளி மழுங்குதலுக்கு உவமையாக்கினார். திருமாலை மகனாகப் பெற்றமையின் அவன் மேனி 'தெய்வ மேனி' எனச் சிறப்பிக்கப்பெற்றது; 329-பார்க்க. உயிர் பிரியும் நிலையில், புலன்கள் கலங்கி ஒடுங்குதலும், உடம்பினொளி குன்றுதலும் உளதாகும். "புலன் ஐந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி அறிவழிந்திட் டைம்மே லுந்தி, அலமந்த போதாக." (தே. திருஞான. ஐயாறு).

'நைய நைய' என்ற அடுக்கு மிகுதிப் பொருளது. மாமகன் - அறிவாற்றலாலும், ஆண்டாலும் மூத்த மகன்.

(பி- ம்.) 1. ஏழி னொடேழு மாருயிரோடு, ஏழுமாயுயிரோடு; வழங்குமெம்,
2. மையின், மெய்ய; வீரமாமகன்; விளைந்ததோர், விளைத்ததோர், விளைந்தன.

3. ஐயகைய, ஐயன் கைய; கலேம்புலன்கள், கலன்புலன்கள், ஐம்புலங்கள்; அவிந்தடங்கி, அவித்தடங்க; கடுங்குமான்.
4. அடைந்த சேயொளி, படர்ந்த சேயொளி, மடந்தை சேயொளி, மடந்தையே யொளி; மழுங்கிய, மயங்கின, மருங்கின தெய்வமே. (59)

பலவகை இசைகள்

245. வங்கி யம்பல தேன்வி ளம்பின
வாணி முந்தின பாணியின்
பங்கி யம்பர மெங்கும் விம்மின
பம்பை பம்பின பல்வகைப்
பொங்கி யம்பல வுங்க றங்கின
நூபு ரங்கள்பு லம்பவெண்
சங்கி யம்பின கொம்ப லம்பின
சாம கீத நிரந்தவே.

வங்கியம் பல - இசைக் குழல்கள் பலவும், தேன் விளம்பின - தேன் போன்ற இனிய பண்களை இசைத்தன; வாணி முந்தின - வாயினால் வாழ்த்தும் வாழ்த்துக்கள் முற்பட்டன; பாணியின் பங்கி - இசைப்பாட்டின் வரிசைகள், அம்பரம் எங்கும் விம்மின - எல்லாத் திக்கிலும் நிறைந்தன; பம்பை பம்பின - பம்பை என்னும் வாத்தியங்கள் ஒலித்தன; பல்வகை - பல வகையான, பொங்கு இயம் பலவும் - ஓசை மிகும் வாச்சியங்கள் பலவும், கறங்கின - ஒலித்தன; நூபுரங்கள் புலம்ப - மகளிரின் காற்சிலம்புகள் ஒலியாநிற்க, வெண் சங்கு இயம்பின - வெள்ளிய சங்குகள் ஒலித்தன; கொம்பு அலம்பின - ஊதுகொம்புகள் ஒலித்தன; சாம கீதம் நிரந்த - சாம வேத இசை நிரம்பின. ஏ : ஈற்றசை.

பொழுது புலர் காலையில் கோயில்களிலும் பிற இடங்களிலும் வாத்தியங்கள் முழங்குதல் இயல்பு; அன்று இராமபட்டாபிஷேக தினமாதலால், வாத்திய முழக்கத்தோடு, வாழ்த்திசை, சாம கீதம் முதலியனவும் சிறப்பாக எழுந்தன. 'வாணி முந்தின பாணி' என இயைத்து, சொற்கள் முந்திய பாடல்கள் என்றுரைத்தலுமாம். பங்கி - பங்க்தி; வரிசை. அம்பரம் - ஆகாயமுமாம். கொட்டுவன, தட்டுவன, ஊதுவன முதலியவாத்தியங்கள் பலவகை. ஒலித்தன என்ற பொருளில் பலவேறு சொற்கள் வந்தன; பொருட்பின்வருநிலையணி.

(பி - ம்.) 1. பங்கியம் பல; பாணி முந்தின, பாணி முந்துற, வாணி முந்துற, வாணி முந்திய; பாணியிற், வாணியின், வாணியிற்.
2. பங்கியம்பலம், பங்கியம்பல; பம்பை பம்மின.
4. சங்கியங்கின; நிரம்பவே, நிரைந்தவே, நிறைந்தவே, நிறைத்தவே. (60)

சூரியோதயம்

246. தூப முற்றிய காரி ருட்பகை
துள்ளி யோடிட வுள்ளெழும்
தீப முற்று மொளித்த கன்றன
சேய தாருயிர் தேயவெம்
பாப முற்றிய பேதை செய்த
பகைத்தி றத்தினில் வெய்யவன்
கோப முற்றி மிகச்சி வந்தன
ஞெத்த னன்குண குன்றின்மேல்.

சேயது-தன் குலத் தோன்றலாகிய தசரதனது, அரு உயிர் தேய - அரிய உயிர் போம்படி, வெம் பாபம் முற்றிய பேதை-கொடிய தீவினை முதிர்ந்த கைகேயி, செய்த—, பகை திறத்தினில் - பகைச் செயலால், குணகுன்றின்மேல் வெய்யவன் - உதயகிரியிலே (தோன்றிய) சூரியன், கோபம் முற்றி - சினம் மிகுந்து, மிக சிவந்தனன் ஒத்தனன் - மிகவும் செந்நிறங் கொண்டவன் போலக் காணப்பட்டான்; (அப்போது) தூபம் முற்றிய - கடும் புகை போல் எங்கும் சூழ்ந்த, கார் இருள் பகை - கரிய இருட்டாகிய பகை, துள்ளி ஓடிட - குதித்து ஓடிவிட, உள் எழும் - வீடுகளினுள்ளே எரிந்த, தீபம் முற்றும் - விளக்குக ளெல்லாம், ஒளித்து அகன்றன - அவிந்துபோயின.

சூரியோதயத்தால் எங்கும் ஒளி பரவுதலின், இயற்கையாக இருளும் அகன்றிட, அங்கங்கே இருந்த விளக்குகளும் அணைக்கப் பெற்றன. உதயத்தில் சூரியன் சிவந்து காணப்படுதலை, அவன் கைகேயிபால் சினமிக்கதனால் மிகச் சிவந்தனன் போன்ருன் என்று ஏதுத் தற்குறிப்பேற்றமாகக் கூறினர். இருள் ஒளிக்குப் பகையாதலின் 'இருட்பகை'என்ருர். கைகேயியின் செயல் தசரதன் உயிர் போதற்குக் காரணமாயினமையின், 'செய்த பகைத்திறம்' என்ருர். அவளையும் பேதை எனக் குறித்தார். சேய் - குலத்தில் தோன்றினவன். குண குன்று - கிழக்கிலுள்ள மலை; உதயகிரி.

(பி - ம்.) 1. துள்ளியோடிய, ஓடின, ஓடிடப் புள்ளெழும்; உள்ளமும், உள்ளவும்.

2. முற்றவு நீத்தகன்றன, நீர்த்தகன்றன, நீர்த்தகன்றெனச், முற்ற வுதித்தகன்றன, உதித்தனன்றன, முற்றவும் விட்கடன்றன, நீத்த தன்றென, நீர்த்தனன்றன; சேயனுருயிர், செய்யதாருயிர், செய்ய வாருயிர், செய்ததாருயிர், செம்மலாருயிர்; தேய்தலால், தேயவப், தேயவே, தியவெம்; சென்றலாற்.

3. பாவ முற்றிய, பாவை முற்றிய; பகைத் திறத்திறல்; வெய்யன.

4. கோபமுற்றும்; சிவந்தன, சிவந்தென, சினந்தனன்; வந்தனன்; குண குன்றிலே, குன்றினே, குணக் குன்றின்மேல். (61)

தாமரை மலர்தல்

247. மூவ ராய்முத லாகி மூலமு
மாகி ஞாலமு மாகுமத்
தேவ தேவர் பிடித்த போர்வி
லொடித்த சேவகன் சேணிலம்
காவன் மாமுடி சூடு மாரெழில்
காண லாமெனு மாசைகூர்
பாவை மார்முக மென்ன முன்ன
மலர்ந்த பங்கய ராசியே.

மூவர் ஆய் - (படைப்பு முதலிய முத்தொழிலுக்கும் உரிய) மூர்த்திகளாகி, முதலாகி - (அவர்களுள்ளும்) முதன்மையாகி, மூலமும் ஆகி - (இவை எல்லாவற்றுக்கும்) ஆதாரமுமாகி, ஞாலமும் ஆகும் - உலகத்துயிர்கள் யாவும் (தானே) ஆகி நின்ற, அ தேவ தேவர்-அந்த மகாதேவரான சிவபெருமான், பிடித்த - கைக்கொண்ட, போர்வில் - போருக்குரிய பெருவில்லை, ஒடித்த - (சீதை திருமணத்தின் பொருட்டு) முறித்த, சேவகன் - பெருவீரனான இராமபிரான், சேண் நிலம் காவல் - மிகப் பரந்த உலகம் முழுதும் காத்தற்குரிய, மாமுடி சூடும் - சிறந்த கிரீடத்தைச் சூட்டிக்கொள்கிற, அரு எழில் - அரிய பேரழகை, காணலாம் எனும் - (இன்று) காணலாகுமென்ற, ஆசை கூர் - ஆவல்மிக்க, பாவைமார் முகம் என்ன - மங்கையரின் முகம் போல, பங்கயம் ராசி - தாமரை மலர்க் கூட்டங்கள், முன்னம் மலர்ந்த - முந்தி மலர்ந்தன. ஏ : ஈற்றசை.

சூரியோதய காலத்தில் தாமரைகள் மலர்ந்தமை தெரிவிக்கும் இதில், 'அவை மகளிர் முகம் போல மலர்ந்தன' என உவமேயத்தை உவமானமாக்கி, எதிர்நிலை உவமையாகக் கூறுகின்றார். அழகைக் கண்டு சுவைத்தலில், ஆடவரினும் மகளிரே முற்படுவர்; அம்மகளிர் மலர்ந்த முகத்தோடு வெளிவரு முன்னமே தாமரைகள் மலர்ந்து காட்சி அளித்தன என்றார். கதிரவன் கமலநாயகன் ஆதலால், அவன் குலத் தோன்றலான இராமபிரான் முடிசூடும் எழில் காண அவை முந்தின. காணுமாசை என்னாது காணலாமெனு ஆசை என்றதனால் அது நிறை வெய்தாமைக் குறிப்பும் தோன்றும். சேண் - நெடும் பரப்பு. பாவை; உவமையாகு பெயர். மலர்ந்த : அஃறிணைப் பன்மை வினைமுற்று.

இதன்பின் ஒரு பிரதியில்,

"விலைம டந்தையர் சீற வும்மவர் வீடு விட்டக லாதுநின்
றுலையு மவ்வழி வேறொ ருத்த னுற்றப்பி ரித்தவ னாமெனக்
கலைநி ரம்பிய திங்க ளந்தி கழிந்து மேகில தாசைவாய்
அலைத ருங்கட லூடெ ழுங்கதி ரான்ம ழுங்கி யகன்றதே"

என்ற பாடல் காண்கின்றது.

பி - ம்.) 1. மூவராம்: முதலாக மூலமதாகி, முதலாதி மூலமதாகி; ஞாலமுமாகியத், ஞாலமதாகுமத், ஞாலமுமாகியே, ஞானமுமாகியே.
2. தேவர்தேவர், தேவன், தேவு; போர்விலிறுத்த, ஒர்விலிறுத்த, பேர்விலிறுத்த, வல்விலுறுத்த; சேவகர்.
3. சூடுபேரெழில்; சூடுமாவெழில்; காணமுளுமவாவினல், அவாவினர்.
4. பாவையார்; முந்து மலர்ந்த, வந்து மலர்ந்த; பங்கய வாவியே. (62)

248. இன்ன வேலையி னேழு வேலையு
மொத்த போல விரைத்தெழுந்
தன்ன மாநகர் மைந்தன் மாமுடி
சூடும் வைக லிதாமெனத்
துன்னு காத றுரப்ப வந்தவை
சொல்ல லாம்வகை யெம்மனோர்க்
குன்ன லாவன வல்ல வென்னினு
முற்ற பெற்றி யுணர்த்துவாம்.

இன்ன வேலையின் - இப்படிப்பட்ட வேளையில், மைந்தன் - சக்கரவர்த்தி குமாரன், மாமுடி சூடும் வைகல் - பெருமைக்குரிய மகுடம் சூடும் நாள், இது ஆம் என - இதுவாகும் என்று, துன்னு காதல் துரப்ப - (மனத்தில்) நிறைந்த ஆசை தூண்ட, அன்ன மா நகர் - அந்த அயோத்தி மாநகரத்திலுள்ளார் அனைவரும், ஏழு வேலையும் ஒத்த போல - ஏழு கடல்களும் ஒன்றுகூடி ஆரவாரித்தாற் போல, இரைத்து எழுந்து வந்தவை - ஆரவாரித்துக் கிளர்ந்து வந்து செய்தவற்றை, சொல்லல் ஆம் வகை - விரித்துச் சொல்லுதல், எம்மனோர்க்கு - எம் போல்வாருக்கு, உன்னல் ஆவன அல்ல என்னினும் - நினைத்தற்கும் இயல்வன அல்லவாயினும், உற்ற பெற்றி - இயன்றவாறு, உணர்த்துவாம் - சொல்லுவோம்.

இராமபிரான் முடிசூட்டு விழாக் காண்டலில் நகர மக்களுக்கு இருந்த பேரவாவும் மகிழ்ச்சியும் அளவிறந்தன என்பதனைக் கூறுகின்றவர், 'எம்மனோர்க் குன்னலாவன வல்ல' என உளப்பாட்டுப் பன்மையிற் கூறுகின்றார். நேரே கண்டார்க்கன்றி, அதனை நினைத்து வகைப்படுத்திச் சொல்லுதல் பிறருக்கு இயல்வதன்று என்பது கருத்து. இராமபிரானை அனைவரும் தம் தம் மகனாகக் கருதலின், மைந்தன் எனப் பொதுப்படக் கூறினர்.

வேலை - முன்னது வேளை; பின்னது கடல். 'உன்னல்' என்ற இடத்துச் சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது.

(பி - ம்.) 1. வேலையில், வேலையுமே யிரைத்து விரைத்தெழும்; விரைந்தெழும், விரைந்தெழுந்து.
2. அன்ன மாநில; மன்னன்னகர், மன்னன் மாநகர், மன்னமாநில; வேந்தன் மாமுடி, வேந்தனைமுடி; சூடும் வைகலிதாமெனத், சூடுமார்கலிதானென, தானெனத், சூடுமாறவை காணென, சூடு மாரெழில் காணவே.

3. வத்தன, வத்திவை.
4. உன்னலாயனவல்ல, உன்னலாயினவல்ல, உன்னலாவ்னவில்ல, என்னிலும், ஆயினும்; உற்றதன்றன பெற்றியாம். (63)

இளநங்கையர் செயல்

(கலிவிருத்தம்)

249. குஞ்சர மனையார் சிந்தைகொ ளிளையார்
பஞ்சிக ளணிவார் பால்வளை தெரிவார்
அஞ்சன மெனவா ளம்புக ளிடையே
நஞ்சினை யிடுவார் நாண்மலர் புனைவார்.

குஞ்சரம் அனையார் - யானை போன்ற பெருமிதமுடைய ஆடவர்களின், சிந்தைகொள் - மனத்தைக் கவர்கின்ற, இளையார் - இள மங்கையர், பஞ்சிகள் அணிவார் - (தம் பாதங்களில்) செம்பஞ்சுக் குழம்பை அழகுறப் பூசுவர்; பால் வளை தெரிவார் - பால் போல் வெள்ளிய சங்கு வளையல்களைத் தேர்ந்து அணிவர்; அஞ்சனம் என - மை என்று பேர் சொல்லிக்கொண்டு, வாள் அம்புகள் இடை - கூரிய அம்பு போன்ற (தம்) கண்களில், நஞ்சினை இடுவார் - விடத்தை இடுவர்; நாள் மலர் புனைவார் - அன்றலர்ந்த மலர்களை அழகுறச் சூடுவர்.

மகளிர் தம்மை அலங்கரிந்துக்கொள்ளும் வகைகளில் நான்கைப் பாதாதி கேசமாகக் கூறியுள்ளார். இளையார் - இளம் பெண்கள், "பந்தினை யிளையவர் பயிலிடம்" (பால. 80) என்புழிக் காண்க. வளை - சங்கு; ஆகுபெயராய்க் கைவளையலை உணர்த்திற்று. அம்புகளுக்கு நஞ்சு ஊட்டுவதுபோல இவர்கள் தம் கண்களாகிய அம்புகளுக்கு மை என்ற விடத்தை ஊட்டுகின்றனர். அம்புகள் : ஆகுபெயர். இடை : ஏழனுருபு. அஞ்சன மென நஞ்சையிடுதல்: "திவளுமஞ் சனமென் றேய்ந்த நஞ்சினைத் தெரியத் தீட்டி" (255).

இப்பாடல் ஒரு பிரதியில் இல்லை.

(பி - ம்.) 1. கோளினையார், கொங்கையின் எழிலார், கோளினையினியார்.
2. பஞ்சினை யணிவார்.
3. அஞ்சனமெனவான்; நஞ்சயில் போல்வாள் நயனமதிடையே.
4. நஞ்சினை யணிவார், நாண்மலர் தெரிவார். (64)

குமாரின் மகிழ்ச்சி

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

250. பொங்கிய வுவகை வெள்ளம் பொழிதரக் கமலம் பூத்த
சங்கையின் முகத்தார் நம்பி தம்பிய ரனைய ரானோர்
செங்கய னறவ மாந்திக் களிப்பன சிவணுங் கண்ணார்
குங்குமச் சுவடு நீங்காக் குவவுத்தோட் குமர ரெல்லாம்.

நறவம் மாந்தி - தேனையுண்டு, களிப்பன - களிக்கின்றனவான செம் கயல் சிவணும் கண்ணார் - செவ்விய கெண்டை மீன்கள் போன்ற மதர்த்த கண்களையுடைய மங்கையரின், குங்குமம் சுவடு நீங்கா - (தனங்களில் அப்பிய) குங்குமக்குழம்பு படிந்த அடையாளம் நீங்கப் பெறாத, குவவு தோள் - திரண்ட புயங்களையுடைய, குமரர் எல்லாம் - காளையர் எல்லோரும், கமலம் பூத்த - தாமரைபோல் மலர்ந்த, சங்கை இல் முகத்தார் - களங்கமில்லாத (தெளிந்த) முகத்தை உடையவராய், பொங்கிய - மேலிட்ட, உவகை வெள்ளம் பொழிதர - மகிழ்ச்சிக் கண்ணீர் (ஆனந்த பாஷ்பம்) பெருக, நம்பி - இராமபிரானுடைய, தம்பியர் அனையர் ஆனார் - தம்பிமார்களைப் போன்றவர் ஆயினர்.

இதனுள்ளும் அடுத்த கவியுள்ளும், நகர மாந்தருட் பலதிறப் பட்டார் நிலையை ஒவ்வோர் உவமை தந்து கூறுகின்றார். அவற்றுள் இங்கே, பருவத்தால் இராமபிரானினும் இளையராகிய குமரர்நிலை கூறுபவர், அவருள் ஒவ்வொருவரும் தம்தம் தமையன் முடி சூடுவது போன்ற மகிழ்ச்சியை எய்தினர், அம்மகிழ்ச்சியின் அறிகுறியாக இன்பக் கண்ணீர் பெருக்கினர் என்றார்.

சங்கை - குற்றம்; களங்கம். சிவணல் - ஒத்தல்.

(பி - ம்.) 1. உவகையூடு, உவகையென்னப்.
2. சங்கையின் முகத்தர், சங்கையர் முகத்தர், சங்கையின் முகத்தானம்பி, சங்கையின் முகத்தானமத், சங்கையின் முகத்தராகி; தம்பியை யனையரானார், தயரதன் றனையரானார், தசரதன்றனையனைத்தார், தயரதனனையரானர்.
3. செங்கையினறவம்; களிப்பெனச் சிவக்கும், செவக்கும், களிப்பன சிவக்கும், களித்தெனச் சிவக்கும், களிப்பின சிவணும், களிக்கும்.
4. குங்குமக் குவடு; குலவுதோள். (65)

பலருடைய மனநிலை

251. மாதர்கள் கற்பின் மிக்கார் கோசலை மனத்தை யொத்தார்
வேதியர் வசிட்ட னொத்தார் வேறுள மாத ரெல்லாம்
சீதையை யொத்தா ரன்ன டிருவினை யொத்தா ளவ்வூர்ச்
சாதுகை மாந்த ரெல்லாந் தயரதன் றன்னை யொத்தார்.

அ ஊர் - அவ்வயோத்தி நகரிலே, கற்பில் மிக்கார் மாதர்கள் - திருமணம் செய்துகொண்டு கற்பொழுக்கமாகிய இல்லறத்தில் ஈடு பட்ட மங்கைமார் யாவரும் - கோசலை மனத்தை ஒத்தார் - கௌசல்யா தேவியின் மனம் போன்ற மனமுடையவராயினர்; வேறு உள மாதர் எல்லாம் - திருமணமாகாத இளம்பெண்களெல்லாம், சீதையை ஒத்தார் - சீதாபிராட்டிபோல மகிழ்ச்சியிற் சிறந்தனர்; அன்னாள் - அச்சீதை, திருவினை ஒத்தாள் - இலக்குமியை ஒத்திருந்தாள்; சாதுகை மாந்தர் எல்லாம் - சாதுக்களான (பருவமுதிர்ந்த) ஆண் மக்களெல்லாம்,

தயரதன் தன்னை ஒத்தார் - தசரத மன்னனைப் போன்றிருந்தனர்; வேதியர் வசிட்டர் ஒத்தார் - வேதம் வல்ல அந்தணர்கள் வசிட்ட முனிவரைப் போன்றிருந்தனர்.

நகர மக்களுள் அவரவர் தகுதிக்கேற்ப மனநிலையை அழகுற அமைத்துக் காட்டுகின்றார். மணம் புரிந்துகொண்டு கற்பிற் சிறந்து வாழ்ந்த பூவையர், தம் தம் புதல்வர் முடிசூடுவதுபோல மகிழ்ந்தனர் என்பார் கௌசல்யா தேவியை உவமித்துக் கூறினார். கற்பொழுக்கம், களவொழுக்கம் என்ற இரண்டுவகைக் கைகோளில் திருமணத்தின் பின் மேற்கொள்ளும் கற்பொழுக்கத்தை இங்கே கற்பு என்று குறித்தார். பிற மகளிர் மணமாகாதவர். இவர் காதன்மையுடையராதல் இயல்பாதலின், இவர்களுக்குச் சீதையை உவமித்தார். காளையரை முன் கவியுட் கூறிவிட்டதனால், பருவமுதிர்ந்து அடங்கிய பெரியோரைச் சுட்டி, அவர்களுக்குத் தசரதனை உவமித்தார்; பிராட்டியையும் உளப்படுத்தி 'அன்னாள் திருவினை யொத்தாள்' என்றது, இராமபிரானை அடையவிருக்கும் ராஜ்யலக்ஷ்மியே அவ்வடிவிற் கலந்திருந்தனள் என்றபடி. இவ்விரண்டு பாட்டாலும், அந்நகரத்துள்ள இளையரும் முதியருமாகிய ஆடவரும் மகளிரும் இராமபிரான் முடிசூடுதலைத் தமக்குற்ற பெரும்பேறாகக் கருதி மகிழ்ந்தனர் என்பது கூறப்பெற்றது; பால.310 ஈண்டு ஒப்புநோக்கத் தகும்.

சாதுகை - சாத்துவிகம். சாதுதை எனவும் பாடம். "சாதுகை மாந்தர்" (யுத்த. 3946).

(பி - ம்.) 1. கௌசலை, கவுசலை.
2. வதிட்டனொத்தார், வசிட்டரேனும்; மகளிரெல்லாம்.
3. அன்னாட்டிருவினை; ஒத்தாரவ்வூர். இவ்வூர்ச், ஒத்ததவ்வூர்.
4. சாதுதை மாந்தர், சாதுலாமாந்தர்; ஏதமில் மனத்தார்; தசரதன் றன்னை; இமையவரென்ன நின்றார். (66)

அரசர் கூட்டம்

252. இமிழ்திரைப் பரவை ஞால மெங்கணும் வறுமை கூர
உமிழ்வதொத் துதவு காத லுந்திட வந்த தன்றே
குமிழ்முலைச் சீதை கொண்கன் கோமுடி புனைதல் காண்பான்
அமிழ்துணக் குழுமு கின்ற வமரரி னரச வெள்ளம்.

அரச வெள்ளம் - அரசரின் பெருங்கூட்டம், குமிழ் முலை சீதை கொண்கன் - குவிந்த தனங்களையுடைய சீதையின் கேள்வனான இராமபிரான், கோமுடி புனைதல் காண்பான் - அரசுக்குரிய மகுடம் தரித்தலைக் காணும்பொருட்டு, உமிழ்வது ஒத்து உதவு காதல் உந்திட - (உள்நிரம்பி) வெளிப்படுவது போன்று மிகுகின்ற விருப்பம் (தம்மைத்) தூண்ட, இமிழ் திரை பரவை ஞாலம் எங்கணும் - ஒலிக்கின்ற அலைகளையுடைய கடல் சூழ்ந்த உலகில் எல்லா இடங்களும்,

வறுமை கூர - (தாம் இராமையால்) வெறுமை மிக (வெறிச்சென்றிருக்கும்படி), அமிழ்து உண - அமிர்தத்தை உண்ண, குழுமுகின்ற அமரரின் - (ஆவலோடு) கூடின தேவர் கூட்டம்போல, வந்தது - அரண்மனை நோக்கி) வரலாயிற்று. அன்று, ஏ: அசை.

அரசவெள்ளம் காண்பான் வறுமை கூர அமரரின் வந்தது எனக் கூட்டி முடிக்க. வெள்ளம், மிகுதி குறித்தது. அரசர்கள் எல்லோரும் இராமபிரான் முடிபுனைவிழாக் காண்டலிற் பெருவிருப்புடனே வந்து கூடினர் என்பது கருத்து. அவ்விருப்ப மிகுதி புலப்பட, 'உமிழ்வதொத்துலவுகாதல்' என்றதோடு, 'அமிழ்துணக் குழுமுகின்ற அமரரையும்' உவமையாக்கினர். தேவர்களனைவரும் அமிழ்துண்ணலால் தத்தமக்குளதாகும் நன்மை கருதி ஓரிடத்தும் ஒருவரும் ஒவுதலின்றிப் பாற்கடலில் வந்து கூடினாற்போல, அரசர்களும் இராமபிரான் முடிசூடுதலால் அவரவர் பெருநன்மை எய்துதல் போலக்கொண்டு அனைவரும் அயோத்திநகரிலே வந்து கூடினார்கள் என விரித்துக் கொள்க. அவ்வாறு அவர்கள் தம் நாடு விட்டு வருதலால் அவரவர் நாடு வெறுமை கூர்வதாயிற்று. அதனால், 'ஞாலமெங்கணும் வறுமை கூர' என்றார். "சிலைவலாய் நீயிங் கெய்தச் சிறப்புடைப் புவனந் தம்மில், பொலிவிழந் திருந்த தெந்தப் புவனம்" (நைட. நளன் தூது. 113) என்பதனை ஈண்டொப்பிடுக. அரசருக்கு அமரரும், விழாக்காணலுக்கு அமிழ்துண்ணலும், அயோத்தி நகருக்குப் பாற்கடலும் உவமையாயின.

(பி - ம்.) 1. வறுமை தீர.
2. உதவு, உலவு, உலாவு; உய்த்திட, உயர்த்திட, உய்த்திட; வந்ததங்காள்.
3. குமிண்முலைச், குமிழிதழ்ச்; கோமுடியணிதல் காண்பார்.
4. குழுவுகின்ற, குலவுகின்ற; அமரரில் அரசவெள்ளம், இராசவெள்ளம். (67)

வீதிகளில் மக்கள் நெருக்கம்

253. பாகியல் பவளச் செவ்வாய்ப் பணைமுலைப் பரவை யல்குல்
தோகையர் குழாமு மைந்தர் சும்மையுந் துவன்றி யெங்கும்
ஏகுமி னேகு மென்றென் றிடையிடை நிற்ற லல்லால்
போகலர் மீள்க லில்லார் பொன்னகர் வீதி யெல்லாம்.

பொன்நகர் - இலக்குமி தங்கும் அவ்வயோத்தி நகரின், வீதி எல்லாம் - தெருக்களிலெல்லாம், பாகு இயல் பவளம் செம் வாய் - சர்க்கரைப்பாகின் இனிமையியல்பும் பவளம் போன்ற செந்நிறமும் பொருந்திய வாயையும், பணை முலை - பருத்த தனங்களையும், பரவை அல்குல் - பரந்த அல்குலையும் உடைய, தோகையர் குழாமும் - மகளிர் கூட்டமும், மைந்தர் சும்மையும் - ஆடவர் கூட்டமும், எங்கும் துவன்றி - எவ்விடத்தும் நெருங்கி, ஏகுமின் ஏகும் என்று என்று - போங்கள் போங்கள் என்று சொல்லிக்கொண்டு, இடை இடை

நிற்றல் அல்லால் - (அவரவர் நின்ற) இடங்களிலேயே நிற்பதையன்றி, போகலார் - (மேலே) போக இயலாதவராயினர்; மீள்கல் இல்லார் - திரும்புதலும் இலராயினர்.

நகரத்தின் தெருக்களிலெல்லாம் மக்கள் திரள் மேன்மேலும் மிகுதலால், மேலே தொடர்ந்து போதற்கும், வேண்டாவென்று திரும்புவதற்கும் இடமின்றி நெருக்குண்டு மக்கள் அங்கங்கே நிற்பாராயினர். விழாக் காணும் விருப்பால், மேலே போகவேண்டும் என்பதையன்றித் திரும்புவதை நினைப்பார் எவரும் இலர்; அவ்வாறு நினைப்பினும் அது செய்தல் இயலாது.

தோகையர் - மயில்போலும் சாயலுடையார். சும்மை - கூட்டம். பொன் - அழகும் ஆம். ஏகுமினேகுமென்றென்று: "நீங்குமி னீங்கு மென்றென்று" (பால. 1141).

(பி - ம்.) 1. பாயெயற்பவளச்.
3. ஏகுமின்னென்று, ஏகுமென்றே; மிற்றலாற்ருர். நிற்பதல்லால், நின்றதல்லால்.
4. போகில மீளகில்லா, போகொணு மீள்கலாகாப், போகலர் மீள்க லல்லார், போகொணு மீளலாகாப், போகுகர் மீளலாகா, மீள்கலா காப், போகொணு மீள்கலில்லார். (68)

கூட்டத்தில் எழும் குரல்கள்

254. வேந்தரே பெரிதென் பாரும் வீரரே பெரிதென் பாரும்
மாந்தரே பெரிதென் பாரு மகளிரே பெரிதென் பாரும்
போந்ததே பெரிதென் பாரும் புகுவதே பெரிதென் பாரும்
தேர்ந்ததே தெரிவ தல்லால் யாவரே தெரிய வல்லார்.

வேந்தரே பெரிது என்பாரும் - (வந்துள்ளவர்களில்) அரசர் தொகுதியே பெரிதென்பார் சிலரும், வீரரே பெரிது என்பாரும் - படை வீரர் தொகுதியே பெரிதென்பார் சிலரும், மாந்தரே பெரிது என்பாரும் - ஆடவர் கூட்டமே பெரிதென்பார் சிலரும், மகளிரே பெரிது என்பாரும் - பெண்கள் கூட்டமே பெரிது என்பார் சிலரும், போந்ததே பெரிது என்பாரும் - இங்கு வந்து சேர்ந்த கூட்டமே பெரிதென்பாரும், புகுவதே பெரிது என்பாரும் - இனி வரும் திரளே மிகப் பெரியதாயிருக்கும் என்பார் சிலரும் (ஆக), தேர்ந்ததே தெரிவது அல்லால் - (அவரவர்) கண்டறிந்த அளவே பெரிதாகத் தோற்றுவதையன்றி, தெரியவல்லார் யாவர் - முழுதும் அறிந்து சொல்ல வல்லார் எவர்? (எவரும் இல்லை).

விழாக் காண வந்தோர் இன்னாரின்னாரென்று பகுத்து அளவிட்டுக் கூறவொண்ணாதபடி திரள் அளவிறந்ததாயிருந்த தென்பது கருத்து. 'பெரிது' என்ற ஒருமை முடிபுக்கு ஏற்ப, 'வேந்தர்' முதலியன அவரவர் தொகுதி யெனக் கொள்க; ஆகுபெயர். மகளிரைப் பின் சொன்னமையின் மாந்தர், ஆடவரைக் குறித்தது.

(பி - ம்.) 1. வேதியர் பெரிது.
3. புகுந்ததே, புக்கதே.
4. தேரினல்லால், தேர்வதல்லால், தேர்ந்ததல்லால்; யாவரே, யாவதே; தெரியக்கண்டார். (69)

பெண்கள் வருகை

255. குவளையி னெழிலும் வேலின் கொடுமையுங் குழைத்துக் கூட்டித்
திவளுமஞ் சனமென் றேய்ந்த நஞ்சினைத் தெரியத் தீட்டித்
தவளவொண் மதியின் வைத்த தன்மைசா றடங்க ணல்லார்
துவளுநுண் ணிடையா ராடுந் தோகையின் குழாத்திற் றொக்கார்.

குவளையின் எழிலும் - நீல மலரின் அழகிய வடிவத்தையும், வேலின் கொடுமையும் - வேலின் கொலைத்தன்மையையும், குழைத்து கூட்டி - (நன்றாகக்) கலந்து சேர்த்து, திவளும் - விளங்குகின்ற, அஞ்சனம் என்று ஏய்ந்த - அஞ்சனம் என்று பேர் பொருந்திய, நஞ்சினை - விடத்தை, தெரிய தீட்டி - விளங்க எழுதி, தவளம் ஒள் மதியின் வைத்த தன்மை சால் - வெள்ளிய ஒளிமிக்க சந்திரனிடத்தே பதித்து வைத்த தன்மை அமைந்த, தடம் கண் - பெரிய கண்களை உடைய, நல்லார் - பெண்களாகிய, துவளும் நுண் இடையார் - துவளுகின்ற நுண்ணிய இடையுடையவர்கள், ஆடும் தோகையின் குழாத்தின் - (தோகை விரித்து) ஆடுகின்ற மயிற் கூட்டம்போல, தொக்கார் - வந்து கூடினர்.

அழகிற்கும் நிறத்திற்கும் குவளை மலரும், ஆடவரைக் கொல்லும் கொடுமைக்கு வேலும் உவமையாக, இவற்றை நன்கு கலந்தமைத்த தொரு படைக்கு, அஞ்சனமென்னும் நஞ்சையும் தீட்டிச் சந்திர னிடத்தே பதித்துவைத்தாற்போலும் கண்கள் என்ற அபூத கற்பனை யின் அழகை ஓர்க. தோகை : ஆகுபெயர்.

அஞ்சனமென்ற நஞ்சு; 249.

(பி - ம்.) 1. எழிலின்; குழைத்து தீட்டித், இழைத்து தீட்டி, கூட்டி தீட்டி.
2. அஞ்சநஞ்சினைத், அஞ்சிச் சிந்தனை.
3. ஒண்மதியுள், வெண்மதியுள், வெண்மதியின்; தன்மைசார், தகைமை சார், தண்மைசால், தண்மையார்.
4. தோகையங் குழாத்தின், தோகையர் குழாத்துத். (70)

முடிபுனை விழாவிற்கு வாரதோர்

256. நலங்கிளர் பூமி யென்னு நங்கையை நறுந்து ழாயின்
அலங்கலான் புணருஞ் செல்வங் காணவந் தடைந்தி லாதார்
இலங்கையி னிருத ரேமற் றீரெழு புவனத் துள்ள
விலங்கலு மரமு மாதி வேறுள பொருள்க ளெல்லாம்,

நலம் கிளர் - நன்மை மிக்க, பூமி என்னும் நங்கையை - பூமிதேவி என்கிற பெண்ணை, நறு துழாயின் அலங்கலான் - நறுமணமுள்ள

துழாய் மாலை சூடும் (திருமாலான) இராமபிரான், புணரும் - சேர்கின்ற, செல்வம் காண - விமரிசையைக் காண்பதற்கு, வந்து அடைந்திலாதார் - (அயோத்தியை) வந்து அடையாதவர்கள், இலங்கையில் நிருதரே - இலங்கையிலுள்ள அரக்கரேயாவர்; மற்று - அவரன்றி, ஈர் எழு புவனத்து உள்ள - பதினான்கு உலகங்களிலுமுள்ள, விலங்கலும் மரமும் ஆதி - மலைகளும் மரங்களும் முதலான, வேறு உள - (உயர்திணையின்) வேறாகவுள்ள, பொருள்கள் எல்லாம் - அஃறிணைப் பொருள்கள் எல்லாம் (வாராதன).

இராமபிரான் முடிபுனையும் விமரிசையைக் காண்பதற்கு ஆவல் கொண்டு வாராதோர், (மானிடர்க்குப் பகைவரான) அரக்கரேயாவர் என்றதனால், ஏனைய மக்களும், தேவரும், நரகரும் ஆகிய உயர்திணையோர் அனைவரும் வந்தனர் என்றபடி. அஃறிணைப் பொருள்கள் வரலாகாமையின் அவையும் வந்தில என்பார், 'விலங்கலும் மரமுமாதி வேறுள பொருள்களெல்லாம்' என்றார். 'வாராதன' என வருவித்து முடிக்க. முன்னமே சீதையாகிய சீதேவியைச் சேர்ந்த இராமபிரான், இப்போது பூதேவியையும் சேர்தல் முறையே; "பெருமகன் என்வயிற் பிறக்கச் சீதையாம், திருமகள் மணவினை தெரியக் கண்டயான், அருமகள் நிறைகுணத் தவனி மாதெனும், ஒருமகள் மணமுங்கண் டுவப்ப வெண்ணினேன்" (29) என்றதும் காண்க. இராமபிரான் துழாய்மாலையன் : 273; யுத்த. 2859.

இதன்பின் ஒரு பிரதியில் காணப்படும் பாடல் :

வந்துமன் னகரிற் றத்தம் வகைப்படு முருவ மாற்றிச்
சுந்தரத் தடந்தோண் மாந்தர் தொல்லுருச் சுமந்து தோன்ற
தந்தரத் தமரர் சித்த ரரம்பைய ராதி யாக
இந்திரை கொழுநற் போற்றி யிரைத்துமே லெய்தி நின்றார்.

(பி - ம்.) 1 பூமேல்வைகும், பூவென்றேங்கும்.
2. காணவந் தடைகிலாதார், காணிய வந்திலாதார்.
3. இலங்கையினிருதரேயிவ் வேழுலகத்து வாழும், ஏழுலகத்திலுள்ள, இலங்கையினிருந்தா ரேயிவ் வேழுலகத்தினுள்ள, ஏழுலகனைத்து வாழும்.
4. விலங்கினி லாசையின்ற, விலங்கலே யாகசின்ற, விலங்கலுமாருமாதி, விலங்கலு மாசைமின்ற, விடாமதவிலங்கலேயால், விலங்குமேயால், விலங்கலேயாம், விடாமதக்கரியுமேயால். (71)

அரசரெல்லாம் முடிசூட்டு மண்டபம் அடைதல்

257. சந்திரர் கோடி யென்னத் தரளவெண் கவிகை யோங்க
அந்தரத் தன்ன மெல்லா மார்ந்தெனக் கவரி துன்ன
இந்திரற் குவமை சாலு மிருநிலக் கிழவ ரெல்லாம்
வந்தனர் மவுலி சூட்டு மண்டப மரபிற் புக்கார்.

இந்திரற்கு உவமை சாலும் - தேவேந்திரனுக்கு உவமையாதற்குப் பொருந்திய, இரு நிலம் கிழவர் எல்லாம் - பெரிய நாடுகளுக்கு உரியராகிய பேரரசர் எல்லோரும், சந்திரர் கோடி என்ன - சந்திரர் அளவிறந்தோர் என்று சொல்லும்படி, தரளம் வெண் குடைகள் ஓங்க - முத்துக்களால் இயன்ற வெள்ளைக் குடைகள் மேலோங்கவும், அன்னம் எல்லாம் - (உலகத்திலுள்ள) அன்னப் பறவைகளெல்லாம், அந்தரத்து ஆர்ந்த என - விண்ணிலே (வந்து) நிறைந்தன என்னுமாறு, கவரி துன்ன - வெண் சாமரங்கள் நெருங்கவும், வந்தனர் - வந்து, மவுலி சூட்டும் மண்டபம் - (இராமபிரான்) திருமுடிபுனைதற்குரிய மண்டபத்தினுள், மரபின் புக்கார் - முறைப்படி புகுந்தனர்.

வந்த அரசரைச் சிறப்பித்த வகையால், அவருள் ஒவ்வொருவரும் செல்வத்தாலும் இன்ப நுகர்ச்சியாலும் தேவேந்திரனை ஒத்தவர் என்றபடி. வெண்சாமரங்கள், அசைவாலும் நிறத்தாலும் அன்னம் போல்வன. வந்தனர் : முற்றெச்சம். கோடி, மிகுதி குறித்தது. ஆர்ந்தென : தொகுத்தல்.

(பி - ம்.) 1. சந்திரகோடி; தவளவெண் கவிகை, தவளவெண் சிவிகை.
2. ஆர்த்தன, ஆர்த்தன்ன, ஆர்த்தெனக்.
3. இந்திரர்க்குவமை, இருமிதிக் கிழவர்.
4. மௌலிசூடும்; மண்டபமதனிற், மண்டபத்தரிதிற். (72)

வேதபாரகர் வருகை

258. முற்பயந் தெடுத்த காதற் புதல்வனை முறையி னோடும்
இற்பயன் சிறப்பிப் பாரி னீண்டிய வுவகை தூண்ட
அற்புதன் திருவைச் சேரு மருமணங் காணப் புக்கார்
நற்பயன் றவத்தி னுய்க்கு நான்மறைக் கிழவ ரெல்லாம்.

தவத்தின் - (தம்) தவ வல்லமையால், நல் பயன் உய்க்கும் - (உலகத்துக்கு) நல்ல பயனைத் தருகின்ற, நால் மறை கிழவர் எல்லாம் - நான்கு வேதங்களுக்கும் உரிய அந்தணரெல்லோரும், முன் பயந்து எடுத்த - (தாம்) முதலாகப் பெற்றெடுத்த, காதல் புதல்வனை - அன்புக்குரிய புதல்வனை, முறையினோடும் - விதிப்படி, இல் பயன் சிறப்பிப்பாரின் - இல்வாழ்க்கையாகிய பயனில் மேம்படச் செய்வார்போல, ஈண்டிய உவகை தூண்ட - (தம் மனத்துள்) மிக்கெழும் மகிழ்ச்சி (தம்மைத்) தூண்ட, அற்புதன் - இராமபிரான், திருவை சேரும் - இராச்சிய லட்சுமியைச் சேர்கிற, அருமணம் - அரிய திருமணத்தை (மகுடாபிஷேகத்தை), காண புக்கார் - காண (மண்டபத்தை) வந்தடைந்தனர்.

அந்தணருள் ஒவ்வொருவரும், தம் தம் மூத்த புதல்வனுக்குத் திருமணம் செய்வித்துக் காண்டலில் கொள்ளும் மகிழ்ச்சிபோல, இராமபிரான் முடிசூடுதலை மகிழ்ந்தனர் என்க.

இற்பயன் சிறப்பித்தல் - மணம் செய்வித்தல்; அதற்கேற்ப. 'அற்புதன் திருவைச் சேரும் அருமணம்' என்றார். திரு - ராஜ்யலக்ஷ்மி. அற்புதன் - அழகுடையவன்; மாய விளையாட்டுடையவன்; திருமாலைச் சுட்டியது; பால. 433. ஒன்னாரைத் தெறலும் உவந்தாரை ஆக்கலு மாகிய இருவகைப் பயனும் தவத்தால் உளவாமாயினும், தமக்கு ஒன்னார் இன்றி, உவந்தாரை ஆக்கலாகிய நற்பயனே நோக்குவாரென அந்தணரைச் சிறப்பித்தார்.

சிறப்பிப்பாரின் : இன், ஒப்புப்பொருளது.

(பி - ம்.) 1. முறையினுய, முறையின் வேள்வி.
2. இற்பயம்; சிறப்பிற்பாரின், சிறப்பின்பாரின், சிறப்பப்பாரின், சிறக்க பாரின், இற்பயன் செறிவிப்பாரின், இற்சிறப்பாய நீரான்; ஈட்டிய, நீட்டிய; உவகைதோன்ற. 3. காணவந்தார்.
4. நற்பயம்; நயந்து துய்க்கும்; நான்மறைப்புலவர். (73)

பலவகை நிகழ்ச்சிகள்

259. விண்ணவர் விசும்பு தூர்த்தார் விரிதிரை யுடுத்த கோல
மண்ணவர் திசைக டூர்த்தார் மங்கல மிசைக்குஞ் சங்கம்
கண்ணகன் முரசி னோதை கண்டவர் செவிக டூர்த்த
எண்ணருங் கனக மாரி யெழுதிரைக் கடலுந் தூர்த்த.

(முடிசூட்டு விழாக் காணும் பொருட்டு வந்த) விண்ணவர் விசும்பு தூர்த்தார் - தேவர்கள் (திரண்டு) ஆகாயத்தை நிரப்பினர்; விரிதிரை உடுத்த - பரந்த கடல்களை (ஆடையாக) உடுத்த, கோலம் - அழகிய, மண்ணவர் - பூமியிலுள்ளவர்கள், திசைகள் தூர்த்தார் - எட்டுத் திக்குக்களையும் நிரப்பினர்; மங்கலம் இசைக்கும் - மங்களகரமாக ஒலிக்கின்ற, சங்கம் - சங்கின் முழக்கமும், கண் அகல் முரசின் ஓதை - அகன்ற கண்ணையுடைய பேரிகைகளின் ஒலியும், கண்டவர் செவிகள் தூர்த்த - விழாக் காண வந்தோர் அனைவர் காதுகளையும் நிரப்பின; எண்ண அரு - அளவிடற்கரிய, கனகம் மாரி - பொன்மழை, எழுதிரை கடலும் தூர்த்த - அலைகளையுடைய ஏழு கடல்களையும் நிரப்பின.

விழாக் காண வந்த மக்கள் திரளைத் தனித்தனியே கூறி வந்தவர், இங்கே அவற்றைத் தொகுத்துக் கூறியதோடு, சங்கும் முரசுமாகிய வற்றின் மங்கல முழக்கத்தையும், அவரவர் மகிழ்ச்சியால் அள்ளி வீசிய பொன்னையும் உடன் கூறினார். தூர்த்தல், பலமுறை ஒரு பொருளில் வந்தது சொற்பொருட்பின்வருநிலையணி; தூர்த்தல் - நிரப்புதல்.

திரை : ஆகுபெயர். உடுத்த என்றதனால் ஆடையென்பது வருவித் துரைக்கப்பட்டது. கோலம்-மண்ணுக்கு அடை. சங்கம் : ஆகு பெயர்.

சங்கும் முரசும் மங்கலம் குறிப்பன. முரசில் அடிக்குமிடம் 'கண்' எனப் படும். கண்டவர்-மேலே குறித்தவராகிய விண்ணவரும் மண்ணவரும் என்றலுமொன்று. பெருஞ் செல்வர் பெருமகிழ்ச்சியால் பொற்காசுகளை அனைவரும் கொள்ளும்படி வாரி வீசுதலைக் கனகமாரி என்றார்; மாரிக் கேற்பக் கடலைத் தூர்த்தன என்றார். தூர்த்த : அன் சாரியை பெறாது வந்த வினைமுற்று.

(பி - ம்.) 1. உடுத்தனுால, அடுத்தகோல.
2. மண்ணவரிடங்கள்.
3. ஓதை கேட்டவர், ஓசை கண்டவர், கண்டகர்.
4. கனகவாரி; எழுதிரைக் கடல்கள்; தூர்த்தார். (74)

260. விளக்கொளி மறைத்து மன்னர் மின்னொளி மகுட கோடி
துளக்கொளி விசும்பி னூருஞ் சுடரையு மறைத்துச்சூழ்ந்த
அளக்கர்வெண் முத்த மூரன் முறுவலா ரணியின் சோதி
வளைக்கலா மென்றவ் வானோர் கண்ணையு மறைத்த வன்றே.

மன்னர் - (அங்கு வந்த) அரசர்கள், (தம்முடைய) மின் ஒளி - மின்னல் போலும் ஒளியுடைய, மகுடம் கோடி - மகுடங்களின் தொகுதிகள், துளக்கு ஒளி - அசைத்தலால் உண்டாகும் பேரொளி வகைகள், விளக்கு ஒளி மறைத்து - அங்குள்ள விளக்குகளின் ஒளியையும் மறைத்து, விசும்பின் ஊரும் - ஆகாயத்திலே செல்கின்ற, சுடரையும் மறைத்து - சூரியனொளியையும் மறைத்துக்கொண்டு, சூழ்ந்த - எங்கும் வியாபித்தன; அளக்கர் - கடலில் தோன்றுகின்ற, வெண் முத்தம் மூரல் - வெள்ளிய முத்துப்போன்ற பற்களையும், முறுவலார் - புன்னகையினையுமுடைய பெண்களுடைய, அணியின் சோதி - அணிகலன்களின் பேரொளிகள், வளைக்கலாம் என்று-(தேவர் களையும்) வளைத்துக்கொள்ளலாம் என்று கருதி, அ வானோர் கண்ணையு மறைத்த - அந்த விண்ணோர் கண்களையும் மறைத்தன. அன்று, ஏ : அசை.

வந்த அரசர் மிகப் பலர் என்பது தோன்ற 'மகுட கோடி' என்றார். கோடி, மிகுதி குறித்தது. மகுடங்களும், மாதர் அணிகலன்களும் பேரொளி விடும் அணிகளானமையின், அவ்விருவகை ஒளியும் எங்கும் பரவிச் சூழ்ந்து பிற ஒளிகளை மறைத்தன வென்றார்.

விளக்கொளி என்ற விடத்து, எதிரது தழீஇய எச்சவும்மை தொக்கது. ஊர்தல் - செல்லுதல்.

(பி - ம்.) 1. மின்னொளிர், விரிமணி; மகுடங்கோடி.
2. விசும்பில்; மறைத்த, மறைத்தும், மறையச்.
3. அளக்கர்வாய், அளக்கர்வாழ், அளக்கர்வான்; வாய்த்தரள மூரல், வாண்முக மூரல்; முறுவலாரணியும்.

4. வளைக்கலாமென்று, வளைக்கலாலொன்றி, வளைத்தெலாமொன்றி, வளைத்தெலாமன்றி, வளைத்தலாலொன்றி, வளைத்தலாமென்றவ், வளைத்தவாற்றுலங்கும், மறைத்தது, புதைத்தது. (75)

வசிட்டர் வருகை

261. ஆயதோ ரமைதி யின்க ணையனை மகுடஞ் சூட்டற்
கேயுமங் கலங்க ளான யாவையு மியையக் கொண்டு
தூய நான் மறைகள் வேத பாரகர் சொல்லத் தொல்லை
வாயில்க ணெருக்க நீங்க மாதவக் கிழவன் வந்தான்.

ஆயது ஓர் அமைதியின்கண் - அவ்வாறாகிய தருணத்தில், மா தவம் கிழவன் - பெருந்தவத்திற்குரிமை பூண்ட வசிட்ட முனிவன், ஐயனை - இராமபிரானை, மகுடம் சூட்டற்கு ஏயும் - திருமுடி தரிப்பித்தற்கு அமைந்த, மங்கலங்கள் ஆன யாவையும் - மங்கலப் பொருள்களான எல்லாவற்றையும், இயைய கொண்டு-பொருத்தமுற எடுத்துக் கொண்டு, வேதம் பாரகர் - வேதம் கரைகண்ட அந்தணர், தூய நால் மறைகள் சொல்ல - தூய நான்கு வேத மந்திரங்களையும் ஓதிவர, தொல்லை வாயில்கள் - பழமையான வாயிலிடங்களில், நெருக்கம் நீங்க - (மக்களின்) நெருக்கம் அகன்று வழிவிட, வந்தான் (முடிசூட்டு மண்டபத்துக்கு) வந்தான்.

பல வாயில்களைக் கடந்து முடிசூட்டு மண்டபம் சேர வேண்டுதலின், 'வாயில்கள் நெருக்கம் நீங்க' என்றார். வசிட்ட முனிவர்பாலுள்ள மரியாதையால், அங்கங்கே நெருங்கி நின்றவர்கள் விலகி வழிவிட்டனரென்க.

(பி - ம்.) 1. அளவையின்கண்; சூடற்கு, சூட்ட.
2. மங்களங்களான, மங்கலங்களாய, ஏயமங்கலங்களான; இசையக்;
3. பாரகர்சுற்றத், பாரகன்சொல்லத்.
4. செருக்கி, செருங்க, செருங்கின்; நீங்கா, நீங்கி, நீக்க, நீக்கா, நீக்கி, நீந்தா, போக்கி; மாதவக்கிழவர், மாதவர்க்கரசன், மாதவத்தரசன், மந்திரக்கிழவன்; வந்தார். (76)

வசிட்டர் செயல்

262 கங்கையே முதல வாகக் கன்னியீ றாய தீர்த்த
மங்கலப் புனலு நாலு வாரியி னீரும் பூரித்
தங்கியின் வினைகட் கேற்ற யாவையு மமைத்து வீரச்
சிங்கவா தனமும் வைத்துச் செய்வன பிறவுஞ் செய்தான்.

கங்கை முதல் ஆக - (வடபால்) கங்கையாறு முதலாக, கன்னி ஈறு ஆய - (தென்பால்) குமரியாறு ஈறாகவுள்ள, தீர்த்தம் - புண்ணிய தீர்த்தங்களின், மங்கலம் புனலும் - மங்களகரமான நீரையும், நாலு வாரியின் நீரும் - நாற்புறத்துமுள்ள கடல் நீரையும், பூரித்து - குடங்களில் நிரப்பி, அங்கியின் வினைகட்கு - அக்கினி காரியங்களுக்குரிய

எல்லாவற்றையும், அமைத்து - பொருந்தச் செய்து, வீரம் சிங்க ஆதனம் - வீரசிங்காசனத்தையும், வைத்து-(உரிய இடத்தில்) இருத்தி, செய்வன பிறவும் - மற்றும் செய்யவேண்டுவனவற்றையும், செய் தான்—. எழுவாய் வருவிக்க.

மண்டபத்துள் வந்த வசிட்டமுனிவர், அங்கே ஓமத்திற்கும் பட்டாபிஷேகத்துக்கும் வேண்டுவன யாவும் சித்தம் செய்து வைத்தா ரென்றபடி. கங்கை முதலான தீர்த்தங்கள் ஏழென்பர்; அவை: கங்கை, யமுனை, கோதாவரி, சரஸ்வதி, நர்மதை, சிந்து, காவேரி என்பன. இவற்றோடு குமரியாற்றையும் சேர்த்துக்கொண்டார். நான்கு திக்குகள்பற்றி 'நாலு வாரி' என்றார். இவை அபிஷேகத்துக்குரிய புண்ணிய தீர்த்தங்கள். அங்கியின் வினை - ஓமம்; அதற்குரியன அட்சதை, தருப்பை, சமித்து, நெய், அகப்பை முதலியன. ஸிம்ஹாஸநம் என்ற வடமொழித் தொடரை, சிங்க ஆதனம் எனத் தமிழ்முறைக் கேற்பப் பிரித்தமைத்தார்; முன்னே பாலகாண்டத்துள் 'சந்திரவுதயம் கண்டார்' என்றாற் போல. செய்வன பிறவும் செய்தான் என்றதனால், ஓமத்திற்குரிய புரோகிதர் முதலாயினோரை வரித்தல், அங்குரார்ப்பணம் (பாலிகை தெளித்தல்), சுமங்கலி அமைத்தல், யானை, குதிரை, அத்திமரத்தாற் செய்த பீடம் முதலியன வாகப் பட்டாபிஷேகத்திற்கு வேண்டுவன அமைத்தல் போன்ற பிறவற்றையும் விடாது அமைத்தா ரென்க.

(பி - ம்.) 1. முதலவாய, முதலவாய்க், முதலாவன, முதலாயுள்ள; கன்னியீறன.
2. புனலினொடு, வாரியின் புனலும்.
3. அங்கிசெய், அங்கியேய், இங்கிவை; வினையிற்கேற்ற, வினையிற் கொத்த, வினையிற் செய்யும், வினையிற்செய்வ; யாவையும் புரிந்து வீரச், அமைத்து வீர.
4. சிங்கவாசனமும்; உய்த்துச், சேர்த்து, தந்து; செய்தார். (77)

மன்னனை அழைத்துவரச் சுமந்திரன் செல்லுதல்

263. கணிதநூ லுணர்ந்த மாந்தர் காலம்வந் தடுத்த தென்னப்
பிணியற நோற்று நின்ற பெரியவன் விரைவி னெய்தி
மணிமுடி வேந்தன் றன்னை வல்லையிற் கொணர்தி யென்னப்
பணிதலை நின்ற காதற் சுமந்திரன் பரிவிற் சென்றான்.

கணிதம் நூல் உணர்ந்த மாந்தர் - சோதிட நூலில் வல்ல சோதி டர்கள், காலம் வந்து அடுத்தது என்ன - முகூர்த்த வேளை வந்துவிட்டது என்று கூற, பிணி அற - பிறவி நோய் நீங்கும்படி, நோற்று நின்ற - பெருந்தவம் இயற்றி நிலைபெற்ற, பெரியவன் - வசிட்ட முனிவன், (சுமந்திரனை நோக்கி) விரைவின் எய்தி - நீ விரைந்து போய், மணி முடி வேந்தன் தன்னை - இரத்தின கிரீடம் அணிந்த சக்கரவர்த்தியை, வல்லையில் கொணர்தி - விரைவில் (இங்கே) அழைத்து வருக,

என்ன - என்று கூற, பணி தலைநின்ற - அக்கட்டளையைத் தலைமேற் கொண்ட, காதல் சுமந்திரன் - அனைவர் அன்புக்கும் உரிய சுமந்திரன், பரிவின் சென்றான் - அன்போடு (விரைந்து) சென்றான்.

வசிட்ட முனிவரின் பலவகைப் பெருமைகளையும் நோக்கிப் பெரியவன் என்றார். நோற்று நின்ற - தவஞ் செய்து, அத்தவ நெறியிலே சிறிதும் பிறழாது நின்ற. சுமந்திரன் சென்றான் என்றதனால், முனிவன் சுமந்திரனுக்குக் கூறினமை பெறப்பட்டது.

(பி - ம்.) 1. கனித நூலுரைத்த, உரைக்கும், கணிய நூல் வல்ல, கணிகை நூலுணர்ந்த; மாக்கள்; வந்துற்றது.
2. நோற்று வென்ற; விரைவினோடு.
3. வல்லிதிற் கொணர்தி.
4. பணிதலை நின்று; பரிவிற் செல்வான், பரிவிற் போனான், பரிவிற் செல்வான். (78)

கைகேயி இராமனை அழைத்துவரக் கட்டளையிடுதல்

264. விண்டொட நிவந்த கோயில் வேந்தர்தம் வேந்தன் றன்னைக்
கண்டிலன் வினவக் கேட்டான் கைகயன் கோயி னண்ணித்
தொண்டைவாய் மடந்தை மாரிற் சொல்லமற் றவருஞ் சொல்லப்
பெண்டிரிற் கூற்ற மன்னாள் பிள்ளையைக் கொணர்க வென்றாள்.

(சக்கரவர்த்தியை அழைக்கச் சென்ற சுமந்திரன்) விண் தொட நிவந்த கோயில் - ஆகாயத்தை அளாவி நின்ற அரண்மனையில், வேந்தர் தம் வேந்தன் தன்னை - சக்கரவர்த்தியை, கண்டிலன் - காணாதவனாகி, வினவ - (அங்குள்ளாரைக்) கேட்க, கேட்டான் - (அவர்கள் கூறியதைக்) கேட்டு, கைகயன் கோயில் நண்ணி - கைகேயியின் அரண்மனையை, அடைந்து, தொண்டைவாய் மடந்தைமாரில் - கொவ்வைக்கனி போன்ற வாயினையுடைய தாதியரிடத்தில், சொல்ல - (தன் வருகையைத் தெரிவிக்கச்) சொல்ல, அவரும் - அத்தாதியரும், சொல்ல - கைகேயியிடத்திற் தெரிவிக்க, பெண்டிரில் கூற்றம் அன்னாள் - மகளிரில் யமனைப் போன்ற அவள், (சுமந்திரனிடத்துப்) பிள்ளையைக் கொணர்க என்றாள் - இராமனை இங்கே அழைத்து வருக என்று பணித்தாள்.

சக்கரவர்த்தி கைகேயியின் அரண்மனையில் இருப்பதைக் கேட்டு அறிந்த சுமந்திரன் அங்கே சென்று தன் வருகையின் காரணத்தைக் கூற, சக்கரவர்த்தியை அவன் காணுமுன்பே கைகேயி அவனை எதிர்ப்பட்டு, இராமனை அங்கே அழைத்து வருமாறு பணித்தனள்.

கணவனைக் கொல்லலுற்றவளாதலின் 'கூற்ற மன்னாள்' என்றார். பிள்ளை - மன்னனுக்கு உயிர் போன்றவனும், பட்டாபிஷேகத்திற்கு உரியவனுமான பிள்ளை. கண்டிலன், கேட்டான் : முற்றெச்சம். மற்று : அசை.

இவ்விடத்து, முதனூலுட் காண்பது:

வசிட்டமுனிவர் கட்டளையின்படி, சுமந்திரன் அரசனைக் காண அந்தப்புரத்திற் சென்று அவனைக் கண்டு அவனது உண்மை நிலை உணராமல் வழக்கம்போல அவனைப் பலவாறு புகழ்ந்து துயிலெழுப்ப, அரசன் சிறிது நினைவு பெற்று, ''முன்னமே நொந்திருக்கிற எனக்கு உன் புகழுரைகள் மர்மத்தில் வேல் பாய்வது போலப் பாய்ந்து துன்புறுத்துகின்றன'' என்று கூறி, மீண்டும் அயர்வுற, சுமந்திரன் செய்தியறியாது திகைத்து வருந்தி நிற்கையில், கைகேயி அவனை நோக்கி, ''அரசர் இராமபட்டாபிஷேக மகிழ்ச்சி மிகுதியால் இரவு முழுதும் கண் துயிலாதிருந்து இப்போதுதான் சற்றுக் கண்ணயர்கிறார்; வேறொன்றும் இல்லை; நீ விரைந்து சென்று இராமனை இங்கே அழைத்து வருக'' என்று கூற, அவள் நிலையறியாதவனாகையால், சுமந்திரன், இராமன்பால் பேரன்புடைய இவள் ஏதோ நன்மையின் பொருட்டே இராமனை அழைத்துவரச் சொல்கிறாளென்று கருதி அவனை அழைத்துவரச் சென்றான் என்பது.

(பி - ம்.) 1. நிமிர்ந்த கோயில்; வேந்தர்தம் வேந்தர் வேந்தை, எய்தின வேந்தர் வேந்தை.
2. வினவிக், விரைவிற்; கைகயி, கைகையை, கைகைதன்.
3. சொல்லி மற்றவரும், சொல்ல வந்தவரும்.
4. பெண்டிருட். (79)

சுமந்திரன் செயல்

265. என்றன ளென்னக் கேட்டா னெழுந்தபே ருவகை பொங்கப்
பொன்றிணி மாட வீதி பொருக்கென நீங்கிப் புக்கான்
தன்றிரு வுள்ளத் துள்ளே தன்னையே நினையு மற்றக்
குன்றிவர் தோளி னானைத் தொழுதுவாய் புதைத்துக் கூறும்.

என்றனள் - (பிள்ளையைக் கொணர்க என்று அவள்) சொல்லினளாக, என்ன கேட்டான் - அவ்வாறு கூறக் கேட்ட சுமந்திரன், எழுந்த பேர் உவகை பொங்க - (மனத்துள்) எழுந்த பெருமகிழ்ச்சி வெளிப்பட, பொன் திணி மாடம் வீதி - பொன்னைச் செறித்து அமைக்கப்பெற்ற மாளிகைகளையுடைய அரச வீதியை, பொருக்கென நீங்கி - விரைவாகக் கடந்து சென்று, புக்கான் - இராமபிரானது மாளிகையை அடைந்து, தன் திருவுள்ளத்து உள்ளே - தன் மனத்திலே, தன்னையே நினையும் - தன்னையே தியானித்துக்கொண்டிருந்த, அ குன்று இவர் தோளினானை - மலைபோன்ற தோள்களையுடைய அவ்விராமபிரானைக் (கண்டு), தொழுது - (முறைப்படி) வணங்கி; வாய் புதைத்து - (கையால்) வாயைப் பொத்திக்கொண்டு, கூறும் - சொல்லலானான்.

அவன் சொன்னவை அடுத்த பாடலில் கூறப்படும். இராமபிரான் பட்டாபிஷேகத்தின்பொருட்டு விரதமிருந்து, தம் குல தெய்வமான அரங்கநாதனைத் தியானித்திருந்தமையை, 'தன்னையே நினையும்'

என்றார். சுமந்திரன் இராமபிரானைக் கண்டபோது பிராட்டியும் உடன் இருந்தனள் என வான்மீகம் கூறுகின்றது. இராமனை ஆசீர்வதித்துத் தந்தையுடன் சேர்த்தனுப்பக் கருதியே கைகேயி அவனை இங்கே தருவிப்பதாகச் சுமந்திரன் எண்ணி மகிழ்ந்தான். உயர்ந்தோர் முன்பு பேசுங்கால் கையால் வாய் பொத்திப் பேசுதல் மரபு.

கேட்டான்: வினையாலணையும் பெயர். புக்கான் : முற்றெச்சம். மற்று : அசை. இவர் : உவம உருபு.

(பி - ம்.) 2. பொன்றணி, பொன்மணி; நீங்கப், நீங்கிப், நீந்திப், நெருக்கிப்; விதிக்கேகினன் நோக்கிப்.
3. உள்ளத்துள்ள; வினையுமற்றைக், வினையுமந்தக்.
4. குன்றன, குன்றெனத்; வினைந்துவாய்; கை புதைத்துக். (80)

266. கொற்றவர் முனிவர் மற்றுங் குவலயத் துள்ளா ருன்னைப்
பெற்றவன் றன்னைப் போலப் பெரும்பரி வியற்றி நின்றார்
சிற்றவை தானு மாங்கே கொணர்கெனச் செப்பி னாளப்
பொற்றட மகுடஞ் சூடப் போதுதி விரைவி னென்றான்.

கொற்றவர் - அரசர்களும், முனிவர் - முனிவர்களும், மற்றும் - இன்னும், குவலயத்து உள்ளார் - இப் பூமியிலுள்ள மக்களும், உன்னை பெற்றவனை போல - உன்னைப் பெற்ற சக்கரவர்த்தியைப் போலவே, பெரு பரிவு இயற்றி - பெரு விருப்பங் கொண்டு, நின்றார் - காத்து நிற்கின்றார்கள்; சிறு அவ்வையும் - உன் சிற்றன்னையாகிய கைகேயியும், ஆங்கு கொணர்க என செப்பினாள் - அவளிடம் உன்னை அழைத்து வருமாறு சொன்னாள்; (ஆதலால்) அ பொன் தட மகுடம் சூட - பொன்னாலியன்ற அந்தப் பெரிய முடியை (நீ) சூடுதற்கு, விரைவின் போதுதி - விரைவில் வருக, என்றான் - என்று சுமந்திரன் சொன்னான்.

தன், தான், ஏ: அசைகள். அ : பண்டறி சுட்டு. கொணர்கென : தொகுத்தல். அவ்வை - தாய்; இடை குறைந்தது.

(பி - ம்.) 1. முனிவோர் மற்றும், அமைச்சர் மற்றும்.
2. பரிவியற்றுகின்றார், பரிசியற்றுகின்றார், பரிசியற்றி நின்றார்.
3. இங்கே, ஈங்கே, ஏகிக்; சிற்றவை விரைவினங்கே; வருகென்ச்; செப்பினாள் செம்.
4. சூட்டப் போததி, போகுதி; விதியென்றான், வீரவென்றான். (81)

இராமபிரான் புறப்பட்டுச் செல்லுதல்

267. ஐயனு மச்சொற் கேளா வாயிர மௌலி யானைக்
கைதொழு தரசர் வெள்ளங் கடலெனத் தொடர்ந்து சுற்றத்
தெய்வகீ தங்கள் பாடத் தேவரு மகிழ்ந்து வாழ்த்தத்
தையலா ரிரைத்து நோக்கத் தாரணி தேரிற் போனான்.

ஐயனும் - இராமபிரானும், அ சொல் கேளா - (சுமந்திரன் கூறிய) அந்த வார்த்தையைக் கேட்டு, ஆயிரம் மௌலியானை கை தொழுது - அரங்கநாதனைக் கை கூப்பித் தொழுது, அரசர் வெள்ளம் - அரசர் கூட்டம், கடல் என - கடல் போல, தொடர்ந்து சுற்ற - பின்தொடர்ந்து சூழ்ந்து வரவும், தெய்வ கீதங்கள் பாட - கடவுள் துதியான இசைகளை (இசைவாணர்) பாடி வரவும், தேவரும் - (மேலே கூடின) தேவர்களும், மகிழ்ந்து வாழ்த்த - மகிழ்ச்சி கொண்டு வாழ்த்துக் கூறவும், தையலார் - (நகரத்துப்) பெண்கள், இரைத்து நோக்க - ஆரவாரித்துத் தன்னையே பார்க்கவும், தார் அணி தேரில் - மாலைகளால் அலங்கரிக்கப்பெற்ற தேரில் ஏறி, போனான்—.

மங்கலங் கருதிப் புறப்படுதலால் குலதெய்வமான அரங்கநாத மூர்த்தியை நினைந்து அஞ்சலி செய்து புறப்பட்டான். ஆயிர மௌலியான் 'ஸஹஸ்ர சீர்ஷ: புருஷ:'–(புருஷசூக்தம்);—''பதுமத் தாளும்... ......மாயன் ஆயிர மௌலி மேலரள்'' (சுந்தர. திருவடி. 67). தெய்வ கீதங்கள் : சீவக. 2052, இரைத்தல் பெருமகிழ்ச்சியாலாவது; இரைத்தல் மோகித்தலுமாம்; தக்க. 129, உரை காண்க.

(பி - ம்.) 1. மவுலியானை, மோலியானை.
2. அரச வெள்ளம்; வந்து சுற்றத்.
3. தேவர்கள்.
4. இரைந்து; தாரணித் தேரிற், தடமணித் தேரிற்; சென்றான். (82)

மக்களின் மகிழ்ச்சி

268. திருமணி மகுடஞ் சூடச் சேவகன் செல்கின் றானென்
றொருவரி னொருவர் முந்திக் காதலோ டுவகை யுந்த
இருகையு மிரைத்து மொய்த்தா ரின்னுயிர் யார்க்குமொன்றாய்ப்
பொருவரு தேரிற் செல்லப் புறத்திடைக் கண்டார் போல்வார்.

சேவகன் - வீரனாகிய சீராமன், திரு மணி மகுடம் சூட - அரசுக்குரிய இரத்தினகிரீடம் தரித்தற்பொருட்டு, செல்கின்றான் என்று - (தேரிலே) போகின்றானென்று (அறிந்து), காதலோடு உவகை உந்த - அன்பும் மகிழ்ச்சியும் (தம்மைத்) தூண்ட, ஒருவரின் ஒருவர் முந்தி - ஒருவருக்கொருவர் முந்திக்கொண்டு, இரு கையும் இரைத்து மொய்த்தார் - (வீதியின்) இரண்டு பக்கங்களிலும் ஆரவாரித்துக்கொண்டு நெருங்கினவர்கள் எல்லோரும், யார்க்கும் இன் உயிர் - எவர்க்கும் இனிதாகிய (அவரவர்) உயிர்கள், ஒன்று ஆய் - (இராமன் என்ற) ஒரு வடிவு கொண்டு, பொரு அரு தேரில் - ஒப்பற்ற தேரின்மீது, புறத்து இடை - வெளியே (வீதியில்), செல்ல கண்டார் போல்வார் - போகக் கண்டவர் போல் ஆயினர்.

இராமபிரான் தேரிலே செல்வதைக் காண வீதியின் இருபுறத்தும் மக்கள் திரண்டு நின்று கண்டு மகிழ்ந்தமை இதனாற் கூறி, மேலே

மூன்று பாடல்களால் மகளிரின் செயலைக் கூறுகின்றார். ஒவ்வொரு வரும் இராமபிரானைத் தம் உயிர் போலக் கருதினமை, "உயிரினு மவனையே உகப்பார்" (40) என முன்னும் கூறப்பெற்றது. உயிர் ஓர் உருவங்கொண்டு பலர் காணப் புறத்தே போதல் என்றும் இல்லை; இத்தகைய இல்பொருளாக ஈண்டுவமையாக்கிக் கூறிய அருமை நோக்கத்தக்கது. உயிர்க்கெல்லாம் உயிராகிய பரம்பொருளே இராம னுகையால் இது பொருந்துவதாகும்.

சேவகன் - வீரன்; இராமபிரான், கை - பக்கம்.

(பி - ம்.) 1. மகுடஞ்சூட்டச்; போகின்றானென்று, வருகிறானென்று.
2. ஒருவரில்; முந்தக்; காதலொடு; உவகை யுந்தி, முந்த, பொங்க.
3. இருகையு நிரைத்து, நிறைத்து, இருகையிலிரைத்து; மொய்த்த இன்னுயிராகும்; ஒன்றாய்.
4. பொருவரும்; புரத்திடை; கண்ட போல்வார். (83)

மகளிர் திரள்

269. துண்ணெனுஞ் சொல்லாள் சொல்லச் சுடர்முடி துறந்து தூய
மண்ணெனுந் திருவை நீங்கி வழிக்கொளா முன்னம் வள்ளல்
பண்ணெனுஞ் சொல்லி னார்தந் தோளெனும் பணைத்த வேயும்
கண்ணெனுங் கால வேலு மிடைநெடுங் கானம் புக்கான்.

துண் எனும் சொல்லாள் சொல்ல - (கேட்டோர்) திடுக்கிடும் கொடுஞ்சொல்லையுடைய கைகேயி ஏவ, வள்ளல் - இராமபிரான், சுடர் முடி துறந்து - ஒளி பொருந்திய முடியைத் துறந்து, தூய மண் எனும் திருவை நீங்கி - தூய நிலமென்னும் செல்வியையும் நீங்கிவிட்டு, வழி கொளா முன்னம் - (காடு) செல்லுமுன்பே, பண் எனும் சொல்லி னார் தம் - இசை போலும் இனிய சொற்களையுடைய பெண்களினுடைய, தோள் எனும் - புயங்களாகிற, பணைத்த வேயும் - பருத்த மூங்கில்களும், கண் எனும் - கண்களாகிய, காலன் வேலும் - யமனைப்போன்ற வேல் களும், மிடை - அடர்ந்த, நெடு கானம் புக்கான் - பெருங் காட்டிலே புகுந்தான்.

வீதியில் இருபாலும் மொய்த்தவர்களுள், மகளிரே மிகுதி யாதலின் அவர்கள் நிறைந்த இடத்தைக் காடென்றாக்கி, அக்காடு மூங்கிலும் வேலும் மிக்குக் கொடிதாயிருந்ததென்றார். வேல் என்பது வேல மரத்தை நினைக்கச் செய்தது. பின்னே கொடிய காட்டிற் புகுந்து உழல வேண்டி வருதலின் இப்போதே அதற்குரிய பழக்கம் அமைந்தது போலும் என்னும் நினைவினது இது. பூமிதேவி என்னும் வழக்குப்பற்றி 'மண்ணெனுந் திரு' என்றார். இராமபிரானைப் பலவிடத் தும் வள்ளல் என்பார். பின்வரும் நிகழ்ச்சியை முன்னே பொருத்திக் கூறுதலும், அதனை உவமையாக்கிக் கூறுதலும் கம்பர் இயல்பு. பால. 408; ஆரணிய. 315, 638; சுந்தர. 20. கண்ணெனுங் காலவேல்: பால. 836.

(பி - ம்.) 1. துய்ய, வெய்ய.
2. மண்ணெடும்; வழிக்கொள்ளா.
4. புக்கார். (84)

மகளிர் செயல்

270. சுண்ணமு மலருஞ் சாந்துங் கனகமுந் தூவ வந்து
வண்ணமே கலையு நாணும் வளைகளுஞ் சிந்துவாரும்
புண்ணுற வனங்கன் வாளி புழைத்ததம் புணர்மென் கொங்கை
கண்ணுறப் பொழிந்த காம வெம்புனல் கழுவு வாரும்.

(பெண்கள்) சுண்ணமும் - நறுமணப் பொடியையும், மலரும் - பூக்களையும், சாந்தும் - சந்தனத்தையும், கனகமும் - பொற்காசுகளையும், தூவ வந்து - (தெருவிலே)சிதறுதற்கு வந்து,(வந்த காரியத்தை மறந்து) வண்ணம் மேகலையும் - அழகிய மேகலாபரணங்களையும், நாணும் - நாணத்தையும், வளைகளும் - கைவளைகளையும், சிந்துவாரும் - நெகிழ விடுபவர்களும், அனங்கன் வாளி - மன்மதன் அம்புகள், புண் உற - புண்ணுண்டாகும்படி, புழைத்த - துளைத்த, தம் புணர் மென் கொங்கை - தம்முடைய இரண்டு மென்மையான தனங்களை, கண் உற பொழிந்த - தங்கள் கண்கள் மிகுதியாக வடித்த, காம வெம்புனல் - காமத்தாலாகிய வெப்பமுள்ள நீரால், கழுவுவாரும் - கழுவுகின்றவர்களும்; (ஆகி என ஒருசொல் வருவிக்க)

இதுவும் அடுத்த பாட்டும் குளகம்; அதில் வரும் 'நைவார்' என்ற வினை கொண்டு முடியும்.

இராமபிரான் செல்லும் வழியில் மங்கலப் பொருள்களைச் சிந்தக் கருதி அவற்றைக் கையிற் கொண்டுவந்த மகளிர் அதனை மறந்து, இராமபிரான்பால் உண்டான காதலாலே தடுமாறினர் என்றவாறு. வீதியிலே சிந்துவதற்குப் பொருள்களைக் கொணர்ந்தோர் அவற்றைச் சிந்தாமல் தம்மிடமுள்ள பொருள்களைச் சிந்தினர் என்றார். நாணே மகளிர்க்குச் சிறந்த பூண் எனப்படுதலின், அதனையும் பூண்களுடன் சேர்த்துச் சிந்தினர் என்றார். புண்ணை வெந்நீரினாற் கழுவுதல் மருத்துவர் செயல்.

(பி - ம்.) 1. சந்தும்; களபமும்; தூவுவாரும்.
2. வளைகளும் தூவுவாரும்.
3. புண்ணுறும் அனங்க வாளி; புழைத்தபுண், புதைத்ததம், தைத்த தம், தைத்தபுண், புதையத் தம்; பிழைத்தன.
4. காமவெம்புனற், காமங் கனற்றரக் கலுழுவாரும். (85)

271. அங்கண னவனி காத்தற் காமிவ னென்ன லாமோ
நங்கணன் பிலனென் றுள்ளந் தள்ளுற நடுங்கி நைவார்
செங்கணுங் கரிய கோல மேனியுந் தேரு மாகி
எங்கணுந் தோன்று கின்ற னெனவரோ விராம ரென்பார்;

அம் கண்ணன் - அழகிய கண்களையுடைய இவ்விராமன், நம் கண் அன்பு இலன் - (மெல்லியலாராகிய) நம்மிடத்தே அன்பில்லாத வனாயிருக்கின்றான்; இவன் அவனி காத்தற்கு ஆம் என்னல் ஆமோ - இத்தகையவன் இவ்வுலகைக் காத்தற்குரியவ னென்றல் பொருந்துமோ? என்று—, உள்ளம் தள்ளுற - மனம் தடுமாற, நடுங்கி - உடல் நடுங்கி, நைவார் - வருந்துவர்; செம் கண்ணும் - சிவந்த (அழகிய) கண்களும், கரிய கோலம் மேனியும் - கருநிறம் வாய்ந்த அழகிய திருமேனியும், தேரும் ஆகி—, எங்கணும் தோன்றுகின்றான் - எங்குப் பார்த்தாலும் அவனாகக் காணப்படுகின்றான்; இராமர் எனைவரோ - இராமன் வடிவுடையோர் எத்தனை பேரோ! என்பார்—.

தன்னாலே துன்புறும் ஒரு சிலரையே அன்பு கொண்டு ஆதரிக்காதவன் உலகத்தை அன்புகொண்டு ஆள்வது எப்படி என மகளிர் ஐயுற்றனர். காம மிகுதியால் அவர்கள் நோக்கும் இடமெல்லாம் இராமனாக உருவெளித் தோற்றத்தைக் கண்டனர்.

(270) பெண்கள் சிந்துவாரும், கழுவுவாரும் ஆகி, (271) நைவார், என்பார் எனக் கூட்டி வினை முடிபு செய்க. இவ்விரண்டு பாட்டாலும் சிறப்பாக மகளிர் நிலை கூறி, மேலே ஆடவர் நிலை கூறுகின்றார்.

(பி - ம்.) 1. என்னலாமே, என்னலாமேல்.
2. வைவார்.
4. தோன்றுகின்றார் எனைவரோ, எனையரோ, எவரே, ஏனைய, தோன்றுகின்றானெவன் கொலோ, யாவனோ; இராமனென்பான்·(86)

முனிவர் முதலியோர் கூற்று

272. இனையரா மகளி ரெல்லா மிரைத்தனர் நிரைத்து மொய்த்தார்
முனைவரு நகர மூதூர் முதியரு மிளைஞர் தாமும்
அனையவன் மேனி கண்டா ரன்பினுக் கெல்லை காணார்
நினைவினர் மனத்தால் வாயா னிகழ்ந்தது நிகழ்த்த லுற்றும்.

இனையர் ஆம் மகளிர் எல்லாம் - இத்தகையவராகிய பெண்கள் எல்லோரும், இரைத்தனர் - (மகிழ்ச்சியால்) ஆரவாரித்து, நிரைத்து மொய்த்தார் - வரிசையாக (இராமபிரானை) நெருங்கினர்; (இவர்கள் நிலை இங்ஙனமாக) முனைவரும் - பற்றற்ற முனிவரும், நகரம் முது ஊர் - அயோத்தி நகரமாகிய அப்பழைய ஊரிலே வாழும், முதியரும் - வயது முதிர்ந்தோரும், இளைஞர் தாமும் - வாலிபரும், அனையவன் மேனி கண்டார் - அவ்விராமபிரானது திருமேனியழகைக் கண்டு, அன்பினுக்கு எல்லை காணார் - அவன்பால் உளதாகிய பேரன்புக்கு ஓர் எல்லை காணாதவராய், மனத்தால் நினைவினர் - தம் மனத்தாலே (அப்பிரானைப்பற்றிப் பலபல) நினைப்பாராயினர்; வாயால் நிகழ்ந்தது - அவர்கள் வாயாற் சொல்லியதை, நிகழ்த்தல் உற்றும் - (தனித்தனியே) சொல்லலாற்றேம்.

இராமபிரானுடைய சிறந்த அழகும் பெருங்குணங்களும் அனைவரையும் கவரவல்லனவாகலின், முற்றத் துறந்த முனிவரும் அப்பிரானது முடிசூட்டு விழாக் காண்டலில் விருப்பங்கொண்டு அங்கே வந்தனர். அவர்கள் நகருக்கு வெளியே தங்குபவராதலால், அவர்களை முதலிற் கூறி, நகரத்து முதியரும் இளைஞரும் எனப் பிற்கூறினர். முனைவன், கடவுளுக்குரிய பெயர்; அக்கடவுளைத் தம் அகத்தே கொண்டு, ஆக்கலும் அழித்தலும் வல்லவராகலின், தவ முனிவரையும் 'முனைவர்' என்றார். 'நிகழ்த்தலுற்றும்' என்று தொடங்கி, அடுத்ததுமுதற் பதினொரு பாடல்களால் அவற்றை நிகழ்த்துகின்றார்.

(பி - ம்.) 1. இளையராய் மகளிர், இளையனமகளிர்; எங்கணுமிரைத்து; மொய்க்க, மொய்ப்ப.
2. முனிவரு நகர, முனைவருந் தாமும்; முதிஞரும்; இளையர்தாமும், இளையர்தாமும்.
3. மேனி காண்பார்; அன்பினுக்கவதி.
4. மினைவன, மினைவரு; மனத்தான், மினைந்தது; நிகழ்த்துவாம்யாம். (87)

273. உய்ந்ததிவ் வுலக மென்பா ரூழிகாண் கிற்பா யென்பார்
மைந்தநீ கோடி யெங்கள் வாழ்க்கைநாள் யாவு மென்பார்
ஐந்தவித் தரிதிற் செய்த தவமுனக் காக வென்பார்
பைந்துழாய்த்தெரிய லாய்க்கே நல்வினைபயக்கவென்பார்.

இ உலகம் உய்ந்தது என்பார் - இந்த உலகம் துன்பத்தின் நீங்கியது என்பார் சிலர்; ஊழி காண்கிற்பாய் என்பார் - (நீ) ஊழியின் இறுதி கண்டு வாழ்வாய் என்பார் சிலர்; மைந்த - ஐயனே, எங்கள் வாழ்க்கை நாள் யாவும் நீ கோடி என்பார் - எங்கள் ஆயுளை எல்லாம் சேர்த்து நீ கொண்டு வாழ்வாயாக என்பார் சிலர்; ஐந்து அவித்து - ஐம்புலன்களையும் அடக்கி, அரிதின் செய்த தவம் - (நாங்கள்) அரிதாகச் செய்த தவப் பயன், உனக்கு ஆக என்பார் - உனக்கு உளதாகுக என்பார் சிலர்; பசு துழாய் தெரியலாய்க்கே - பசுமையான திருத்துழாய் மாலைசூடும் உனக்கே, நல்வினை பயக்க - எங்கள் புண்ணியமெல்லாம் பயனளிப்பனவாகுக, என்பார்—என்று சொல்லுவார் சிலர்.

உலகம் உய்ந்தது, நீடூழி வாழ்க என்றவர், இளைஞர் முதலிய யாவரும்; எங்கள் வாழ்க்கை யாவும் கோடி என்றவர், இளைய மகளிரும் இளைஞரும்; தவம் உனக்காக என்றவர் முனிவர்; நல்வினை பயக்க என்றவர் முதிஞர். 'எங்கள் வாழ்நாளையும் கொண்டு வாழ்க' என வாழ்த்துதல் பெரியோர் மரபு; "யான்வாழு நாளும் பண்ணன் வாழிய" (புறநா. 173) என்பது ஈண்டு ஒப்புநோக்கத் தகும். 'பைந்துழாய்த் தெரியலாய்' என்றது, இராமபிரானது அவதார உண்மை யறிந்தோர் கூற்றெனலாம்; 256, குறிப்புப் பார்க்க.

(பி - ம்.) 1. ஊர்ந்ததில்; உலகமெல்லாம், உலகுமென்பார்.
2. மைந்தனி; நான் பலவும்.
3. ஐந்தவிந்து; அரிதிற் பெற்ற.
4. பைந்துணர்த், பைந்தொடைத்; தெரியலாற்கே. (88)

274. உயரரு ளொண்க ணொக்குந் தாமரை நிறத்தை யொக்கும்
புயல்பொழி மேக மென்ன புண்ணியஞ் செய்த வென்பார்
செயலருந் தவங்கள் செய்திச் செம்மலைத் தந்த செல்வத்
தயரதற் கென்ன கைம்மா றுடையம்யாந் தக்க தென்பார்.

உயர் அருள் ஒண் கண் ஒக்கும் தாமரை - (எவற்றினும்) உயர்ந்த கருணை நிரம்பிய ஒளியமைந்த (இவன்) கண்களுக்கொப்பான தாமரை மலரும், நிறத்தை ஒக்கும் புயல் பொழி மேகம் - (இவன் திருமேனி யின்) நிறத்தைப் போன்ற நீர் பொழியும் கார்மேகங்களும், என்ன புண்ணியம் செய்த - (அவ்வாறு ஒப்புமை பெறுதற்கு) எத்தகைய புண்ணியம் செய்தனவோ, என்பார் - என்று கூறுவர் சிலர்; செயல் அரு தவங்கள் செய்து - செய்தற்கரிய தவம் மிகச் செய்து, இ செம்மலை தந்த - இந்த நம்பியை(நமக்கு அரசனாக)த் தந்த, செல்வம் தயரதற்கு - செல்வமிக்க சக்கரவர்த்திக்கு, தக்கது - (நாம்) செய்யத் தக்கதான, என்ன கைம்மாறு யாம் உடையம்—, என்பார் - என்று கூறுவர் சிலர்.

தாமரைக் கண்ணன், மேகவண்ணன் என வழங்கும் தொடர்களில் உவமையாக வருபவற்றை உவமேயமாக மாற்றிச் சிறப்புக் கருதி எதிர்நிலையுவம அணியாற் கூறினர். அவை போலப் பேறு பெற நமக்கு வாய்ப்பில்லையே என வருந்தினர் சிலர். தசரதன் இராமபிரானைத் தந்தது, செய்யாமற் செய்த உதவி, அதற்குத் தக்க கைம்மாறு எதுவு மில்லை என்றபடி. நிறத்தை யொக்கும், புயல்பொழி மேகம் என்ன புண்ணியஞ் செய்த: "மேகங்களோ வுரையீர் திருமால் திருமேனி யொக்கும், யோகங்க ளுங்களுக் கெவ்வாறு பெற்றீர்" (நம்மாழ்வார், திருவிருத்தம், 32).

(பி - ம்.) 1. ஒண்கணேய்க்கும், உண்கணேய்க்கும்; நிறத்தையேய்க்கும்; நிற் லவையோ, நிறவொக்கும்.
2. புயலலர்மேகம், புயலணிமேகம், புயலெழிற் பூவை; செய்ததென்பார். செய்தபாரச், புயல்பொழி மேக மீரப்புண்ணியத்து நவமென்பார்.
3. செயறருஞ், செயிரறுக்; செய்து; தக்க தெய்வத்.
4. கைம்மாறுடைமையாம், உடையம் நாம், உதவயாம், உதவநாம்; தயரதற் கென்ன மாறு தவமெனுந் தக்கதென்பார். (89)

275. வாரண மழைக்க வந்து மகரங்கோள் விடுத்த நேமி
நாரண னொக்கு மிந்த நம்பிதன் கருணை யென்பார்
ஆரண மறித றேற்ரு வையனை யணுகி நோக்கிக்
காரண மின்றி யேயுங் கண்கணீர் கலுழ நிற்பார்.

இந்த நம்பி தன் கருணை - இந்தப் புருஷோத்தமனுடைய கருணை, வாரணம் அழைக்க - கஜேந்திரன் என்ற யானை ஆதிமூலமே என்று கூப்பிட, வந்து - உடனே அங்கு எழுந்தருளி, மகரம் கோள் விடுத்த - முதலையின் பற்றுதலினின்றும் (யானையை) விடுவித்த, நேமி நாரணன் (கருணை) ஒக்கும் - சக்கரப் படையையுடைய திருமாலின் அருளை யொத்ததாகும், என்பார்—; ஆரணம் அறிதல் தேற்று - வேதங்களும் அறியவொண்ணாத, ஐயனை - (திருமாலான) இராம பிரானை, அணுகி நோக்கி - நெருங்கி நன்கு பார்த்து, காரணம் இன்றி யேயும் - காரணமில்லாமலே, கண்கள் நீர் கலுழ - கண்கள் இன்பக் கண்ணீரைச் சொரிய, நிற்பார் - (பரவசமாகி) நிற்பார் பலர்.

இப்பாடலுட் குறிக்கப்படுவோர் சால்புமிக்க சான்றோராவர். கஜேந்திரன் வரலாற்றை நினைவு கூர்ந்தது, மேலே இராமபிரான் அரக்கரை அழித்து நல்லோரை ஆக்கி அறங்காக்கும் அருஞ்செயல் குறித்ததாகும். இராமபிரானைக் காணுந்தோறும் அவர்கள் மனத்துள் இன்பம் பெருகுதலின், இன்பக் கண்ணீர் பெருகுகின்றது.

'நாரணன்' என்பதன்பின், 'கருணை' என ஒரு சொல் வருவிக்க.

ஆரணமறிதல் தேற்று வையன்: இராமபிரானது பரத்துவங் குறித்தது; அயோத். 137, 276, 1154; ஆரணிய. 101, 257, 1171; கிட்கிந்தா. 1,67, 87, 350, 352, 360, 376; சுந்தர 1123.

(பி - ம்.) 1. *வாரணமரற்ற வந்து கராவுயிர் மாற்றும், கராங்கொள விடுத்த, கராக்கொள விடுத்த, கராங்கொள மாற்றும், கராப்பட விடுத்த, கராம்பட விடுத்த; மகரக்கோள் விடுத்த; வரங்கொடுத்தருளும்.*
2. *ஒக்குமேயிந்; கருணைக்கென்பார்.*
3. *அறிதரேன்று; அணுகி நோக்காக், அணுகநோக்கிக்.*
4. *கவிழநிற்பார்.* (90)

276 நீலமா முகிலன் னான்ற னிறைவினோ டறிவு நிற்க
சீலமார்க் குண்டு கெட்டேன் றேவரி னடங்கு வானோ
காலமாக் கணிக்கு நுண்மைக் கணக்கையுங் கடந்து நின்ற
மூலமாய் முடிவி லாத மூர்த்தியிம் முன்ப னென்பார்.

நீலம் மாமுகில் அன்னான்தன் - நீலநிறம் பொருந்திய பெரிய மேகம் போன்றவனான இவ்விராமனுடைய, நிறைவினோடு - குண நிறைவும், அறிவும் - பேரறிவும், நிற்க - (ஒரு புறம்) இருக்க, சீலம் ஆர்க்கு உண்டு - இவனது சீலத் தன்மை வேறெவர்க்கு உண்டு? (எவர்க்கு மில்லை); இ முன்பன் - இந்த முன்னவன், தேவரின் அடங்கு வானோ - தேவர்களுக்குள் ஒருவனாய் அடங்குவானோ? (அடங்கான்); காலம் ஆக கணிக்கும் - கால அளவாகக் கணக்கிடப்படுகிற, நுண்மை கணக்கையும் கடந்து நின்ற - மிக நுட்பமான அளவையுங் கடந்து அப்பால் நின்ற, மூலம் ஆய் - முதற் பொருளாகி, முடிவு

இல்லாத மூர்த்தி(யே) - அழிவில்லாத பரம்பொருளே யாவன்; கெட்டேன் -(இதுவரை இஃது அறியாது) கெட்டேன்! என்பார் - என்று (தனித்தனியே) சொல்வர்.

'இவ்விராமனுடைய குண நிறைவு, பேரறிவு, சீலம் இவற்றைக் கருதுங்கால் இவன் மானிடனல்லன்; தேவர்களுக்குள் ஒருவனே வெனில் அவர்களும் கால நியதிக்கு உட்பட்டவர்களாதலின் அவருள்ளும் அடங்கான்; இவன் கால தத்துவத்தையுங் கடந்து நின்ற முதற்பொருளே; இவ்வுண்மையை இப்பொழுதுதான் உணர முடிகின்றது' என்கின்றார்கள்.

சீலமாவது, தான் மிக உயர்ந்தவனானாலும், மிகத் தாழ்ந்த வருடனும் வேறுபாடின்றிப் பழகுதல். ஆர்க்குண்டு என்ற வினா, எவர்க்கும் இல்லை என்ற எதிர்மறைப் பொருள் தந்தது. அடங்குவானோ என்றதில் ஓகாரமும் எதிர்மறைப் பொருளது. காலம் தேசம் என்னும் இரண்டு அளவுகளுள் தேசம் திட்பமானது; காலம் நுட்பமானது; ஆதலின், காலமாகக் கணிக்கும் நுண்மைக் கணக்கு என்றார். கெட்டேன் : கழிவிரக்கப் பொருளது. ஒவ்வொருவரும் தனித்தனியே சொல்லுதலைக் 'கெட்டேன்' என ஒருமையாகக் குறித்து, அவ்வாறு பலருங் கூறினரென்றதனை 'என்பார்' எனப் பன்மையால் முடித்தார். முன்பன் - முன்னவன்; வலிமையுடையோன் என்றலுமாம். கெட்டேன்: கிட்கிந்தா. 833; யுத்த: 430; காலமாக் கணிக்கும்...... மூர்த்தி: "காலமுங் கணக்கு நீத்த காரணன்" (சுந்தர: 1122); மு : ஆரணிய : 904.

(பி - ம்.) 1. முகிலன்னான்றன், முகிலினன்றன்; மிறையினோடு; அறிவு மிக்கச், அறிவு மீதி, அழிவு மீதிச், அறிவினிற்க.
2. தேரிற்றெவரில்.
3. காலமாய்க் கணிக்கும், கணித்த, குணித்த, காலமாக் குணித்த, கணித்த; நுண்மைக் கடையையும், கடையுகம்.
4. மூலமாம், மூர்த்தியிம் முதல்வன், மொய்ம்பன், மூர்த்தியாமுன்பன், மூர்த்தியின் முன்பன், மூர்த்தி மற்றிவனும்; என்றார். (91)

277. ஆர்கலி யகழ்ந்தோர் கங்கை யவனியிற் றந்தோர் முந்தைப்
போர்கெழு தேவர்க் காகி யசுரரைப் பொருது வென்றோர்
பேர்கெழு சிறப்பின் வந்த பெரும்புகழ் நிற்ப நையன்
தார்கெழு திரடோ டந்த புகழினைத் தழுவி யென்பார்.

முந்தை - முற்காலத்தில், ஆர்கலி அகழ்ந்தோர் - கடலைத் தோண்டினவரும், கங்கை அவனியில் தந்தோர் - ஆகாய கங்கையைப் பூமியில் கொணர்ந்து தந்தவரும், போர் கெழு தேவர்க்கு ஆகி -(அசுர ரோடு) போர்மிக்க தேவர்களுக்குத் துணையாகி, பொருது - கடும் போர் செய்து, அசுரரை வென்றோர் -(பகையான) அசுரர்களை வென்றவரும் (ஆகிய இக் குலத்து முன்னோர் பலருக்கும்), பேர்கெழு சிறப்பின் வந்த

பெரு புகழ் - பெருமை பொருந்திய சிறப்பால் வந்த பெரிய கீர்த்தி, நிற்பது - (என்றும்) நிலைத்து நிற்பது, ஐயன் - இவ்விராமனுடைய, தார் கெழு - மாலை யணிந்த, திரள் தோள் - திரண்ட புயங்கள், தந்த - ஈட்டின, புகழினை தழுவி - உயர்ந்த புகழைத் தழுவியேயாம்; என்பார்—.

இராமபிரான் தோன்றிய சூரிய குலத்திலே முன்னோர் பலர் அருஞ் செயல் புரிந்து பெரும்புகழ் பெற்றிருப்பினும், அவை எல்லாவற்றினும் மேம்பட்டது இப்பிரான் புகழே என்பது கருத்து. ஐயன் திரள் தோள் தந்த புகழ்: தாடகை வதம், சிவதனுசை முறித்தது, பரசுராமனை அடக்கியது ஆகியவற்ருல் வந்தது. ஆர்கலி அகழ்ந்தோர் - சகர புத்திரர்; கங்கையை அவனியில் தந்தோர் - பகீரதன்; ஒருவரைக் கூறும் உயர்கிளவி. அசுரரைப் பொருது வென்ருேர் - ககுத்ஸ்தன், முசுகுந்தன் முதலியோர். இவர்கள் புகழாகிய கொடிகள் இராமபிரான் புகழாகிய கொழுகொம்பைத் தழுவியே நிற்கின்றன.

கடல் தோண்டியதும், கங்கை கொணர்ந்ததும், அசுரரை வென்றதுமாகிய வரலாறுகள் பாலகாண்டத்துட் கூறப்பெற்றன. சகரர் புகழ் : 320, பார்க்க.

ஆர்கலி : நிறைந்த ஒலியுடையதென்ற காரணத்தால் வந்தது; வினைத்தொகையன்மொழி. அகழ்ந்தோர், தந்தோர், வென்ருேர் : வினையாலணையும் பெயர்கள். கெழு : உரிச்சொல்.

(பி - ம்.) 1. அகழ்ந்து, அகழி; கொணர்ந்தோர்.
2. போர்கெழும்; புலவர்க்காகி, தேவர்க்காக, தேவர்க்காகி, அமரர்க்காக, அமரர்க்காகி; வென்ருேன், வென்ருன், வென்ருர்.
3. பேர்புகழ், தேர்கெழு; சிறப்பின் வாய்ந்த, சிறப்பின் வந்தோர்; புகழ் நிறுப்பது.
4. திரடோடந்தை; என்ருர். (92)

பலர் செயல்

(கலிவிருத்தம்)

278\. சந்தமிவை தாவின்மணி யாரமிவை யாவும்
சிந்துரமு கங்கிளர் தெரிந்தமத வேழம்
பந்திகள் வயப்பரி பசும்பொனணி யாவும்
மைந்தவறி யோர்கொள வழங்கென நிரைப்பார்.

மைந்த - வீரனே, இவை சந்தம் - இவை சந்தனக் கலவைகள், (இவை) தா இல் மணி ஆரம் - இவை குற்றமற்ற இரத்தினமாலைகள், இவை யாவும் - இவை எல்லாம், சிந்துரம் முகம் கிளர் - சிந்துரத் திலகமிட்ட முகத்தோடு விளங்குகிற, தெரிந்த - தேர்ந்தெடுத்த, மதம் வேழம் பந்திகள் - மதயானையின் வரிசைகள், வயம் பரி - வெற்றி யுடைய குதிரைகள் (இவை), பசுமை பொன் அணி - இவை பசிய

பொன்னுல் இயன்ற அணிகலன்கள்; யாவும் - இவற்றையெல்லாம், வறியோர் கொள வழங்கு - வறியோர்கள் பெற்றுக்கொள்ளும்படி (உன் கையால்) கொடுத்தருள்க, என - என்று சொல்லி, நிரைப்பார் - வரிசையாகக் கொணர்ந்து வைப்பார் பலர்.

இவை என்பது வேண்டும் இடங்களிற் கூட்டப்பெற்றது.

இராமபட்டாபிஷேக காலத்தில் அவரவரால் இயன்றவற்றை எல்லாம் அப்பெருமான் கையாலே தானம் செய்விக்கவேண்டும் என்ற விருப்பத்துடன் மக்கள் இவ்வாறு பலவற்றையும் கொணர்ந்தனர் என்க. மணி ஆரம் - மணிகளும் முத்துக்களும் எனலும் ஆம். மைந்த: புத்திரன் என்ற முறையில் விளித்தலும் ஆம். வழங்குதல் - வரையறை யின்றிக் கொடுத்தல்: "வறியார்க்கொன்றீவதே ஈகை" யாதலால் வறியோர் கொள வழங்குக என்றனர்.

(பி - ம்) 1. இவையாகச், அவைதாமம், உவையாவும்.
2. சித்தரமு மிங்கிவை, இங்கவை, சிந்திமறுகின்புகர்; செறிந்த மதவேழப், சிறந்த மதவேழப்.
3. பந்திகள் வயங்குறு, வழங்குறு, பந்தமிவையங்கொளிர், பந்தர்முன் மயங்கவொர், பந்தமு வயப்பரிகள்; பசும்பொனின் வெறுக்கை, பசுஞ்சுடர் வெறுக்கை.
4. மைந்தர் வறியோர்கொள, வந்தவறி யோர்கொள; மங்கையர் மிறத்தார். (93)

279. மின்பொருவு தேரின்மிசை வீரன்வரு போழ்தில்
தன்பொருவில் கன்றுதனி தாவிவரல் கண்டாங்
கன்புருகு சிந்தையொடு மாவுருகு மாபோல்
என்புருக நெஞ்சுருக யாருருக கில்லார்.

வீரன் - இராமபிரான், மின் பொருவு தேரின்மிசை வருபோழ்தில் - மின்னலையொத்த தேரின்மேல் ஏறி வரும்போது, (அவனைக் கண்டு) தன் பொருவில் கன்று - தன்னுடைய ஒப்பில்லாத இளங் கன்றுனது, தனி தாவி வரல் கண்ட ஆங்கு - தனியே துள்ளிக் குதித்து வருவதைக் கண்டவிடத்து, ஆ - தாய்ப்பசுவானது, அன்பு உருகு சிந்தையொடும் - அன்பால் மகிழ்ந்த மனத்தோடு, உருகும் ஆறுபோல் - உருகும் வகை போல, நெஞ்சு உருக - (அன்பால்) மனம் உருக, என்பு உருக - உடம்பும் நெகிழ, உருககில்லார் யார் - உள்ளும் புறமும் நெகிழாதவர் யாவர்? (எவரும் இலர்)

இராமபிரானைக் காண்போர் எவருக்கும், தம்மை அறியாமலே அவனிடத்து ஓர் அன்பு தோன்ற, உள்ளும் புறமும் உருகி நிற்பர் என்றவாறு. இது, பொதுவாகப் பிராயம் முதிர்ந்தோருக்கும் அவருள்ளும் சிறப்பாக மாதருக்கும் உளதாகும் தன்மை. தாய்ப் பசுவை உவமை கூறியிருத்தலால், மாதர்க்குச் சிறப்பாதல் பெறப்படும். தாய்ப்பசு தன் இளங்கன்றினிடத்துச் செலுத்தும் அன்பு

வாத்ஸல்யம் எனப்படும். சிறந்த அன்புக்கு இதனையே உவமை கூறுவர். ஒளியாலும், விரைந்து சென்று கட்புலனாகாது மறைதலாலும் தேருக்கு மின் உவமை. தலையாய அன்பு எழும்போது என்பும் உருகும் என்பர். "என்பெலா முருக நோக்கி அம்பலத் தாடு கின்ற" (திருவாச. 516). பிற நூல்களிலும் காணலாம்.

கண்டாங்கு : அகரம் தொகுத்தல். உருகுமா: இறுதி தொக்கது. என்பும் என்ற சிறப்பும்மை தொக்கது. கில்: ஆற்றலுணர்த்துவது.

(பி - ம்.) 1. வருபோதில், போதின்.
2. தாவிவரல் கண்டங்கு, தாய்வரவு கண்டாங்கு.
3. சிந்தையினொடு, சிந்தையிடர்.
4. என்புருகி நெஞ்சுருகி கஞ்சுருகி நிற்பார், மில்லார், நெஞ்சுருகி யாருருகி மில்லார். (94)

280. சத்திர நிழற்றநிமிர் தானையொடு நானா
அத்திர நிழற்றவரு ளோடவனி யாள்வார்
புத்திர ரினிப்பெறுதல் புல்லிதென நல்லோர்
சித்திர மெனத்தனி திகைத்துருகி நிற்பார்.

நல்லோர் - நன்மனமும் பண்புகளுமுடைய பலர், சத்திரம் நிழற்ற- வெண்கொற்றக் குடை நிழல் செய்ய, நிமிர் தானையொடு - பெருகிய சேனையுடையராய், நானா அத்திரம் நிழற்ற - பலவகைப் படைகள் ஒளி வீச, அருளோடு - அருளுடன், அவனி ஆள்வார் - பூமியை ஆளும் அரசர்கள், இனி - இவ்விராமன் தோன்றியபின், புத்திரர் பெறுதல் - (தங்கள்) புதல்வரைப் பெறுவது, புல்லிது என - (தமக்குத்) தாழ்வு தருவதே என்று கூறி, தனி - தனித்தனியே, திகைத்து - (இராமபிரானது தோற்றப் பொலிவு கண்டு) திகைத்தும், உருகி - (அவன் குணநலன்களை எண்ணி) மனம் உருகியும், சித்திரம் என நிற்பார் - எழுதிய சித்திரம்போல (அசைவற்று) நிற்பார்கள்.

நல்லோர் : எழுவாய். இராமபிரானைக் காணுந்தோறும், அவனது புத்தெழிலும், குணநலங்களும் நல்லோர் அனைவரையும் வியந்து மனமுருகும்படி செய்தலின் சித்திரமென நிற்பாராயினர். நல்லோர் - பெண்டிர் எனவும் உரைப்பர். "முன்னோர் புகழெல்லாம் இராமபிரான் புகழைத் தழுவியே நிற்கின்றன" என முன்பு கூறியபடி, அவனைப் போன்றோர் முன்னும் பிறந்ததில்லை, இனிப் பிறக்கப்போவதும் இல்லை என அனைவரும் கருத விளங்குபவனாதலால், இனிப் புதல்வரைப் பெறும் அரசர் எவரும் அப்புதல்வராற் பெருமையடையார் என்ற கருத்துப் பட, 'அவனியாள்வார் புத்திரரினிப் பெறுதல் புல்லிது' என்றனர். - "நின்குல மன்னவர் நேமிபண் டுருட்டிப், பெருமை எய்தினர் யாவரே யிராமனைப் பெற்றார்" (35) என்பது இங்கே நினைக்கத் தகும்.

சத்திரம், அத்திரம்: வடசொற் சிதைவு. படைகள் எய்வன, எறிவன, குத்துவன, வெட்டுவன எனப்படுதலின் நான்கு அத்திரம் என்றார்.

இப்பாடல் ஒரு பிரதியில் இல்லை.

(பி - ம்.) 2. ஆள்வான்.
3. புத்திரன்; புல்லிதென நல்லார், என்றுமட நல்லார்.
4. அருகு மிற்பார். (95)

281. கார்மினொடு லாயதென நூல்கனலு மார்பன்
தேர்மிசைநம் வாயில்கடி தேகுதல்செய் யாமல்
நேர்மினிமிர் கோடிமணி யாலுநிதி யாலும்
தூர்மினெடு வீதியினை யென்றுசொரி வாரும்.

கார் மின்னொடு உலாயது என - மேகம் மின்னலோடு உலாவியது போல, நூல் கனலும் மார்பன் - முப்புரிநூல் விளங்கும் மார்புடைய இராமன், தேர்மிசை - தேரிலே, நம் வாயில் கடிது ஏகுதல் செய்யாமல் - நம் வாயிலை விரைந்து கடந்து செல்லாதபடி, நேர்மின் - (தேரை) எதிர்ப்படுங்கள்; நிமிர் கோடி மணியாலும் - மிக்க அளவற்ற மணிகளாலும், நிதியாலும் - பொன்னாலும், நெடுவீதியினை தூர்மின் என்று - பெரிய வீதியைத் தூர்த்து நிரப்புங்கள் என்று சொல்லிக்கொண்டு, சொரிவாரும் - (மணியையும் பொன்னையும் கொணர்ந்து) கொட்டு வாரும் (சிலர்).

இராமபிரானழகை நன்கு பருகவெண்ணிய மகளிர் செயல் இது என்னலாம். தேர் விரைந்து சென்றுவிடின் தமதெண்ணம் கைகூடாதாகலின், அவ்வாறு செல்லவொட்டாதபடி தடுத்து நிறுத்தும்பொருட்டு மணிகளையும் பொன்னையும் வீதியிலே தாமும் நிரப்பி, அயலில் உள்ளவர்களையும் அவ்வாறு செய்யத் தூண்டினர் அவர்கள். இதனால் அந்நகரத்துச் செல்வச் சிறப்புப் புலனாகும். தலைவன் செல்லும் வழியில், மகிழ்ச்சியால் பொன் முதலியவற்றைத் தூவும் மரபின்படி செய்வதுபோலக் காட்டி, அதனை மிகுவித்துத் தேரைத் தடை செய்யக் கருதினர். பொன் முதலியன வீதியில் தூவுதல் : 270, பார்க்க.

கார் : இராமபிரான் திருமேனி; மின் : பூணூல்; "விண்ணிழிந்த மின்போலு நூன்மார்பா" (நள. 12). நிமிர்தல் - உயர்தல்; மிகுதல். நிதி - பொன். இறுதியில் சிலர் என ஒரு சொல் வருவித்து முடிக்க. சொரிவாரும் என்றதில் 'உம்' அசைநிலையாகக்கொண்டு உரைப்பதும் ஆம்.

(பி - ம்.) 1. நூல்கனலுமும், கனலும், மார்வன்.
2. வாயல் கடிது, வாயினிது; ஏகுதல் செய்வானே.
3. கோடியணியாலும்; மு : கூர்கனக ராசியொடு கோடிமணியாலும்.
(96)

சிலர் கூற்று

282. தாய்கையில் வளர்ந்திலன் வளர்த்தது தவத்தால்
கேகயன் மடந்தைகிளர் ஞாலமிவ னாள
ஈகையி லுவந்தன ளியற்கையிது வென்றால்
தோகையவள் பேருவகை சொல்லவரி தென்பார்.

தாய் கையில் வளர்ந்திலன் - (இவ்விராமன்) பெற்ற தாயாகிய கௌசல்யையின் கையில் வளர்ந்தானில்லை; வளர்த்தது - அவனை வளர்த்தது, தவத்தால் - முன் செய்த தவப் பயனால், கேகயன் மடந்தை - கேகயராசன் மகளாகிய கைகேயியே; (அதனால்), கிளர் ஞாலம் - விளங்குகின்ற இராச்சியத்தை, இவன் ஆள ஈகையில் - இவ்விராமன் ஆளக் கொடுப்பதில், உவந்தனள் - (பெற்ற தாய் போலவே) மகிழ்ச்சி யுற்றாள்; இயற்கை இது என்றால் - அவளியல்பு இதுவாயின், தோகை அவள் பேர் உவகை - மயில் போன்றவளாகிய அவளுக்கு இப்போது உள்ள பெருமகிழ்ச்சி, சொல்ல அரிது - எடுத்துச் சொல்ல முடியாது; என்பார்—.

கைகேயி முன்பு இராமபிரானிடத்துப் பேரன்புடையளாயிருந்தமையை அனைவரும் அறிவராதலின், இவ்வாறு சிலர் கூறினர் என்க. இராமபிரானை வளர்த்தெடுக்கும் பேறு பெறுதல் அரிதாகலின், தவத்தால் என்றனர்.

தோகை : ஆகுபெயர்.

(பி - ம்.) 1. வளர்ந்தது, வளர்ந்தன.
2. இவனாள்வான், இவையாள.
3. ஈகையிலுதவவ், உவந்ததும், உவந்தவள், ஈகையினு உயர்ந்தவள் வந்தனள், ஈகையினும் வந்ததன்; இயற்கையவள் வென்றத், இயற்கையிதுவென்றே.
4. தோகையிவள்; பெற்றவை; சொல்லலரிதென்பார், சொல்ல முடியாதே. (97)

283. பாவமு மருந்துயரும் வேர்பறியு மென்பார்
பூவலய மின்றுமுத லன்றுபொது வென்பார்
தேவர்பகை யுள்ளவுமிவ் வள்ளறெறு மென்பார்
ஏவல்செயு மன்னர்தவம் யாவதுகொ லென்பார்.

பாவமும் - (இவனைக் காண்போருடைய) பாவங்களும், அரு துயரும் - தீர்த்தற்கரிய துன்பங்களும், வேர் பறியும் - வேரோடு அழியும், என்பார்—; பூவலயம் - இந்தப் பூமண்டலம், இன்று முதல்—, பொது அன்று - (பிறர்க்கும் உரியது என்னும்) பொதுத் தன்மையுடையது ஆகாது, என்பார்—; இ வள்ளல் - இவ்விராமன், தேவர் பகை உள்ளவும் தெறும் - தேவர்க்குப் பகையாக உள்ளவற்றையும் அழிப்பான், என்பார்—; ஏவல் செயும் மன்னர் - (இவனுக்கு) ஏவல் செய்யும்

பேறுபெற்ற அரசரின், தவம் - நல்வினை, யாவதுகொல் - எத்தகையதோ, என்பார்—.

'பார்த்தால் பசிதீரும்' என்ற பழமொழிக்கொப்ப, இராமபிரானைத் தரிசித்தவரெல்லாம் பாவமும் துயரும் தீர்ந்து நன்மையடைவர் என்பது முதலடியிற் கூறப்பெற்றது. அவன் பேர் கூறவே இடையூறெல்லாம் போம் என வசிட்டமுனிவன் கூற்றுக முன்னே (39) கூறினமையுங் காண்க. இங்ஙனமன்றிப் பொதுவாக உலகத்தில் பாவமும் துன்பமும் தீரு மென்றலுமாம். இரண்டாமடியால், 'இராமன் பூமியைப் பொது நீக்கியாள்வான்' என்ற சிறப்பும் அதனுல் உலகத்தில் இனி நன்மையன்றித் தீமையிராது என்பதும் கூறப்பெற்றன. மூன்றுமடியில் வருவது, மகிழ்ச்சியால் உபசாரமாகக் கூறப்பெற்றதாயினும் இராமபிரான்திறத்து அஃது உண்மையாதல் பெறப்படும். அவர்கள் வருவது உணர்ந்து கூறினரென்றலுமாம். நான்காமடியால், 'உயர்ந்த அரசரும் இவனுக்கு ஏவல் செய்யும் பேறு பெறுவர்; நமக்கு அது கிட்டாதே' எனச் சிலர் அவனேவல் செய்தலின் சிறப்புக் குறித்தமை கூறப்பெற்றது. நிகழ்த்தலுற்றும் (272) என்று தொடங்கியவர், 273 முதல் இதுகாறும் உள்ள பதினொரு பாடல்களால் பலவும் கூறிமுடித்தார்.

'உள்ளவும்' என்றதில் உம்மை, இறந்தது தழுவிய எச்சமும், உயர்வு சிறப்பும் ஆம். கொல் : ஐயப்பொருளது.

(பி-ம்.) 1. பாலமுழுதுந் துயரும்.
2. இன்றுதனி யன்றுபொது, இன்றுமுதல் நன்றுபொது.
3. உள்ளனவிவ், உள்ளவவும்,. உள்ளதையிவ், உள்ளவுமவ், உள்ளதுமிவ்; தெறுமென்றே. (98)

284. ஆண்டினைய ராயினைய கூறவடல் வீரன்
தூண்டுபுர விப்பொருவில் சுந்தர மணித்தேர்
மாண்டகொடி மாடநெடு வீதிமறை யப்போய்ப்
பூண்டபுகழ் மன்னனுறை கோயிலவை புக்கான்.

(நகர மக்கள்) ஆண்டு - அவ்விடத்து (வீதியில்), இனையர் ஆய் - இத்தன்மையராகி, இனைய கூற - மேற்சொல்லிய பலவற்றையும் கூறு நிற்க, அடல் வீரன் - வெற்றி வீரனுகிய இராமபிரான், தூண்டு புரவி - விரையச் செலுத்தும் குதிரைகள் பூட்டப்பெற்ற, பொரு இல் - ஒப்பில்லாத், சுந்தரம் - அழகையுடைய, மணி தேர் - மணிகள் கட்டிய தேரிலே, மாண்ட கொடி மாடம் - மாட்சிமைப்பட்ட கொடிகள் கட்டிய மாளிகைகளையுடைய, நெடு வீதி - பெரிய அரசவீதி, மறைய - (பார்வைக்கு) மறையும் வண்ணம், போய் - கடந்து சென்று, பூண்ட புகழ் - (அணிகலனுகப்) பூண்ட புகழினையுடைய, மன்னன் உறை - சக்கரவர்த்தி தங்குகிற, கோயில் - அரண்மனையில் (உள்ள), அவை - புக்கான் - சபாமண்டபத்தை அடைந்தான்.

இனையர், இனைய : குறிப்பு வினையாலணையும் பெயர். அடல்-வலிமையுமாம். தூண்டு புரவி : வினைத்தொகை. எழுவாய் வருவிக்க.

இதன்பின், 'மன்பதை மகிழ்ச்சிப் படலம் முற்றும்' என ஒரு பிரதியில் உள்ளது.

(பி - ம்.) 1. இனையராயவினைய, இனையராவினைய, அனையராயினைய, இனைஞரா யினைய; நிற்கவடல்.
2. பொருசுமந்திரன் மணித்தேர்; தூண்டு புரவித் தொகைகொள் தேர் மிசையனுகி.
3. நீண்டகொடிமாடவிரை வீதி நிறையப் போய்.
4. கோயில் புகலோடும். (99)

சபையில் இராமன் அரசனைக் காணாமை

(அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்)

285. ஆங்குவந் தடைந்த வண்ண லாசையின் கவரி வீசப்
பூங்குழன் மகளி ராடும் புதுக்களி யாட்ட நோக்கி
வீங்கிருங் காதல் காட்டி விரியரி சுமந்த பீடத்
தோங்கிய வுவகை யோடு மரசன்வீற் றிருப்பக் காணான்.

ஆங்கு வந்து அடைந்த அண்ணல் - அங்கே வந்து சேர்ந்த இராமபிரான், ஆசை இன் கவரி வீச - பொன் காம்பமைந்த இனிய சாமரைகள் இருபுறமும் வீச, பூ குழல் மகளிர் ஆடும் - பூவைச் சூடிய கூந்தலையுடைய நடனமாதர் ஆடுகின்ற, புது களி ஆட்டம் நோக்கி - புதிய மனக்களிப்பைத் தரும் ஆடலைப் பார்த்துக்கொண்டும், வீங்கிரு காதல் காட்டி - (தன் வருகையில்) மிகுந்த விருப்பத்தைக் காட்டிக் கொண்டும், ஓங்கிய உவகையோடும் - மிகப் பெருமகிழ்ச்சியுடனே, அரசன் - சக்கரவர்த்தி, விரி அரி சுமந்த பீடத்து - இடமகன்ற சிங்கம் தாங்கும் ஆசனத்தில், வீற்றிருப்ப காணான் - வீற்றிருக்கக் கண்டானிலன்.

கைகேயி அழைத்துவரச் சொன்னது கேட்ட இராமபிரான் அவளோடு அரசன் இருக்கக் கூடுமென்று கருதி முதலில் சபாமண்டபத்தை அடைந்தானாக, அங்கே அவர்களைக் காணாதவனானான். அங்கிருந்து போய்க் கைகேயியின் அரண்மனையை அடைந்தமை அடுத்த பாடலில் கூறுகிறார். மகளிராடல், அத்தாணி மண்டபத்தில் நிகழும் மரபுபற்றிக் கூறப் பெற்றது. சபா மண்டபம் பொலிவற்றிருந்த தென்பது கருத்து.

(பி - ம்.) 1. அடைந்த வீரன்; கவரி வீசிப், ஆசையின் கவரிவீசப், அரசிபல் கவரிவீச.
2. பூங்குழை மகளிருள்ளம்; ஆடநோக்கி, ஆடல் நோக்கி, ஆட்ட நோக்க.
3. விரிமுகக் கமல, விரியரி கமல; வியனரிச் சுமந்த.

4. ஓங்கரு, ஓங்கருள், ஓங்கிரு, ஓங்கொளி; மகுடஞ் சூடி, மகுடஞ் சூட்டி; உவகைவீற்றிருப்பக்; காணார், காண, கண்டான், கண்டார். (100)

இராமன் கைகேயியின் அரண்மனையை அடைதல்

286. வேத்தவை முனிவ ரோடும் விருப்புறக் களிக்கு மெய்ம்மை
ஏத்தவை யிசைக்குஞ் செம்பொன் மண்டபத் தினிதி னெய்தான்
ஓத்தவை யுலகத் தெங்கு முள்ளவை யுணர்ந்தா ருள்ளம்
பூத்தவை வடிவை யொப்பான் சிற்றவை கோயில்புக்கான்.

ஓத்து அவை - வேதத் தொகுதியையும், உலகத்து எங்கும் உள்ளவை - உலகத்திலே எங்கும் உள்ள பிற அறிவு நூல்களையும், உணர்ந்தார் - நன்குணர்ந்த பெரியோர்களின், உள்ளம் பூத்தவை - மனத்திலே தோன்றுவனவாகிய, வடிவை - திருவுருவங்களை, ஒப்பான்- மகிழ்ந்தேற்பவனாகிய இராமபிரான், வேந்து அவை - அரசர் குழாம், முனிவரோடும் - முனிவர்களுடனே கூடி, விருப்பு உற - (முடிபுனை விழாக் காணும்) விருப்பம் மிக, களிக்கும் - மகிழ்ந்திருத்தற்குரியதும், மெய்ம்மை ஏத்து அவை இசைக்கும் - (தன்னுடைய) மெய்க்கீர்த்திகளைப் பாடுதற்கு இடமானதும் ஆகிய, செம்பொன் மண்டபத்து-நல்ல பொன்னாலியன்ற மண்டபத்தினுள்ளே, எய்தான் — புகாதவனாகி, சிற்றவை கோயில் புக்கான் - சிற்றன்னையாகிய கைகேயியின் அரண்மனையை அடைந்தான்.

இராமபிரான், அரசரும் முனிவரும் கூடிக் களித்துத் தன்னையும் சக்கரவர்த்தியையும் ஆவலோடு எதிர்நோக்கியிருக்கும் விழா மண்டபத்தினுள்ளே புகாமல், கைகேயியின் அரண்மனை சென்றடைந்தான் என்க. அவன் பரம்பொருளே என்பதைக் குறிப்பாராய், 'உணர்ந்தாருள்ளம் பூத்தவை வடிவை யொப்பான்' என்றார். ஞானிகள் எவ்வுருவிலே தியானிக்கிறார்களோ அவ்வுருவாகி ஆங்கிருப்பவன் என்றபடி. "தமருகந்த தெவ்வுருவம் அவ்வுருவம் தானே" (திவ். இயற்பா, 1-44)எனவும், "யாதொரு தெய்வங் கொண் டீரத்தெய்வ மாகி ஆங்கே, மாதொரு பாகனார்தாம் வருவர்" (சிவஞான சித்தியார் சுபக்கம், 25) எனவும் வரும் ஆன்றோர் வாக்குகள் காண்க.

வேத்தவை - அரசர் கூட்டம். மெய்ம்மை ஏத்து - மெய்க்கீர்த்தி. களிக்கும் மண்டபம், இசைக்கும் மண்டபம் என இயைக்க. பூத்தவை: வினையாலணையும் பெயர்.

(பி - ம்.) 1. விருப்பொடு, விருப்பொடும்.
2. இமைக்கும்; மண்டபமினிதின், மண்டபமதனின்; எய்தா, எய்தாது, எய்த, எய்தி.
3. ஓர்த்தவை, வார்த்தைவை; உணர்ந்தானுள்ளம், உணர்ந்தாலுள்ளம், உணர்ந்தோருள்ளம், உணர்ந்தோனுள்ளம்.

4. பூத்தமை, பூத்தவன்; வடிவை யொப்பாள், ஒக்கும், வடிவே யொப்பான், வடிவேயொக்கும், ஒப்பாம்; அன்ன; சிற்றமை கோயில். (101)

287. புக்கவன் றன்னை நோக்கிப் புரவலர் முனிவ ரெல்லாம்
தக்கதே நினைந்தான் றாதை தாமரைச் சரணஞ் சூடித்
திக்கினை நிமிர்த்த கோலச் செல்வனே செம்பொற் சோதி
மிக்குயர் மகுடஞ் சூட்டச் சூடுதல் விழுமி தென்றார்.

புக்கவன் தன்னை நோக்கி - கைகேயியின் அரண்மனைக்குச் சென்ற இராமபிரானைப் பார்த்து, புரவலர் – (மண்டபத்திலிருந்த) அரசரும், முனிவர் - முனிவர்களும், எல்லாம்-மற்றுமுள்ள எல்லோரும், தக்கதே நினைந்தான்–(இராமன்) தகுதியான காரியத்தையே எண்ணிச் செல்கின்றான்; தாதை தாமரை சரணம் சூடி – தந்தையின் தாமரை மலர் போன்ற திருவடிகளை (முந்தி) வணங்கி, திக்கினை நிமிர்த்த கோல்-எல்லாத் திக்குகளிலுமுள்ள மாறுபாடுகளையெல்லாம் (போக்கி) ஒழுங்குபடுத்திய செங்கோலையுடைய, அ செல்வனே - அந்தச் சக்கர வர்த்தியே, செம்பொன் சோதி மிக்கு உயர் மகுடம் - நல்ல பொன்னா லியன்று ஒளிமிக்கு மேம்பட்ட முடியை, சூட்ட - அணிவிக்க, சூடுதல்-தான் சூடுதல், விழுமிது - சிறந்ததாகும், என்றார்—.

இராமபிரான் தந்தை இருக்கும் இடம் தேடிச் செல்வதை உணர்ந்த சபையிலுள்ளோரெல்லாம், தந்தையை வணங்கி ஆசி பெற்றுத் தந்தை கையாலேயே முடி சூட்டுவிக்கக் கருதிய இச்செயல் மிக நேரிது என இராமபிரானைப் பாராட்டினர் என்க.

தந்தையை அடிவணங்குலைத் தக்க செயல் என்றார். சரணம் சூடுதல் - திருவடிகளில் முடிபடும்படி வணங்குதல். திக்கு - நாட்டின் எல்லாப் பகுதிகளையும் குறித்தது. நிமிர்த்தல் - கோணலை நிமிரச் செய்தல்; குற்றங்கடிதல். மகுடத்திற்கு உயர்வு, தொன்று தொட்டு வந்த சிறப்பு. விழுமிது; விழுமம் என்னும் உரிச்சொல்லடியாக வந்த முற்று. புக்கவன்: வினையாலணையும் பெயர்.

(பி - ம்.) 1. முனிவர் யாவரும்.

2. தக்கது, தக்கவை; தாயரைச்.

3. திக்கினை நிமிர்ந்த, நிவந்த, நினைந்த, திக்கிவை நிமிர்ந்த, திக்கினி னிமிர்ந்த, திக்கினி னிகழ்ந்த; கீர்த்திச் செங்கதிர்ச்; கோலச் செல்வனைத் தெய்வச் சோதி, கோலச் செங்கதிர்ச் செல்வனேய்ந்த, செல்வனேயம்.

4. சூட்டச் சூட்டுதல், சூடச் சூட்டுதல், சூடச் சூடுதல், சூடிச் சூடுதல், சென்னி சூட்டுதல். (102)

இராமபிரான் கைகேயியைக் காணுதல்

288. ஆயன நிகழும் வேலை யண்ணலு மயர்ந்து தேருத்
தூயவ னிருந்த சூழல் துருவினன் வருத னேக்கி
நாயக னுரையான் வாயால் நானிது பகர்வே னென்னுத்
தாயென நினைவான் முன்னே கூற்றெனத் தமியள் வந்தாள்.

ஆயன நிகழும் வேலை - (விழா மண்டபத்துள்) அத்தகைய உரையாடல் நிகழ்ந்துகொண்டிருக்கும்போது, அண்ணலும் - இராமபிரானும், அயர்ந்து தேரு - சோகமுற்றுத் தெளிவடையாத, தூயவன் - தூய்மையையுடைய தசரதன், இருந்த சூழல் - இருந்த இடத்தை, துருவினன் வருதல் நோக்கி - (கைகேயியின் அரண்மனையுள்) தேடிக் கொண்டு வருதலை (கைகேயி) அறிந்து, நாயகன் வாயால் இது உரையான் - அரசன் தன் வாயால் இச்செய்தியை (இராமனுக்கு)ச் சொல்லமாட்டான், நான் பகர்வேன் - நான் போய்ச் சொல்வேன், என்னு - என்று மனத்துட் கொண்டு, தாய் என நினைவான் முன்னே - (தன்னைப்) பெற்ற தாய் போலக் கருதும் இராமனெதிரில், கூற்று என - எமனைப் போல, தமியள் வந்தாள் - (அரசன் இன்றித் தான்மட்டும்) தனியளாக வந்தாள்.

இராமபிரான் வருதலை அறிந்த கைகேயி, 'அவன் சென்று அரசனைக் கண்டால் மேலே யாது நிகழுமோ? அரசன் நினைவுற்று எழுந்தாலும், இச்செய்தியைத் தன் வாயால் இராமனுக்குச் சொல்லத் துணியமாட்டான்: ஆதலால், முன்னதாகவே நான் போய் இராமனிடம் சொல்லுவேன்' என்று எண்ணி விரைந்து வெளியே வந்து இராமபிரானைச் சந்தித்தனள் என்க.

அரண்மனையுட் புகுந்த இராமபிரான், அங்கே மகிழ்ச்சிக்குரிய அறிகுறிகள் காணப்படாமையாலும், தந்தையும் கைகேயியும் தன் வருகையை எதிர்நோக்கி இருத்தற்குரிய இடத்தில் இல்லாமையாலும், மனக்கலக்கத்துடன் அவர்கள் இருக்குமிடம் தேடிச் செல்ல நேர்ந்தது; அதனுல், 'துருவினன் வருதல் நோக்கி' என்ருர். "அகந் தூய்மை வாய்மையாற் காணப்படும்" என்பதற்கேற்ப, வாய்மை பிழையாத மன்னனைத் தூயவன் என்ருர். நாயகனுயிரைப் பிரிப்பவளாதலால் கைகேயியைக் கூற்று என்ருர்; 264, 290, பார்க்க. அயர்ந்து தேரு என்பதனை இராமபிரானுக் காக்கி, அரண்மனையுள் இருந்த நிலை கண்டு முதலில் சிறிது அயர்வுற்றுப் பின்பு மனம் தேறி என்று உரைத்தலுமாம். இவ்வுரைக்குத் தேரு என்பதனைச் செய்யா வென்னும் வாய்பாட்டெச்சமாகக் கொள்க; தயரதனுக்காக்கும்போது அஃது ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சமாம். துருவினன்: முற்றெச்சம். வேலை - வேளை.

(பி - ம்.) 1. ஆயன நிகழ்ந்த வேலை, ஆயது நிகழும் வேலை, ஆயவை நிகழும் வேலை, ஆயவணிகழும் வேலை; அண்ணலு மயர்ந்து தேருன், ஐயனு மயர்ந்து தேருத், ஐயனுமைது தேருத்.

2. கிடந்த சூழல்; துருவினன் வருதலோடும், குறுகினனவனை நோக்கி, குறுகினன் வருதனேக்கி, குறுகினன் வருந்த நோக்கி.

3. உரையானுவால்; நானிது சொல்வன், நானது பகர்வன், நானிவை பகர்வென், பகர்வல்; என்னத்.

4. நினைவான் முன்னர்க், நிகர்வான் முன்னே; தமியள் சென்ருள். (103)

இராமபிரான் செயல்

289. வந்தவ டன்னைச் சென்னி மண்ணுற வணங்கி வாசச்
சிந்துரப் பவளச் செவ்வாய் செங்கையிற் புதைத்து மற்றைச்
சுந்தரத் தடக்கை தானை மடக்குறத் துவண்டு நின்ருன்
அந்திவந் தடைந்த தாயைக் கண்டவான் கன்றி னன்னுன்.

(கைகேயியைக் கண்டு) அந்தி வந்து அடைந்த - மாலைக் காலத்தில் தன்னை நாடி வந்து அணுகின, தாயை கண்ட - தாய்ப் பசுவைக் கண்ட, ஆன்கன்று அன்னுன் - இளம் பசுவின் கன்றுபோன்ற அன்புள்ளங்கொண்ட இராமன், வந்தவள் தன்னை - தன் எதிரில் வந்த அக் கைகேயியை, சென்னி மண் உற வணங்கி - நெற்றி நிலத்தில் தோய வணங்கி, வாசம் - வாசனையுடையதும், சிந்துரம் பவளம் - செம் பவளம் போன்றதுமான, செ வாய் - (தனது) செந்நிறம் பொருந்திய வாயை, செ கையின் புதைத்து - சிவந்த (ஒரு) கையால் பொத்திக் கொண்டு, மற்றை சுந்தரம் தட கை - மற்ருேர் அழகிய பெரிய கையானது, தானை மடக்குற - ஆடையை மடக்கிக்கொள்ள, துவண்டு நின்ருன் - பணிவு தோன்றத் தலைகுனிந்து நின்ருன்.

இதனுல், இராமபிரானுக்குக் கைகேயி பாலுள்ள அன்பும் மரியாதையும் ஒருங்கே கூறப்பெற்றன. "தாயென நினைவான்" என முன்னே கூறினமைக்கேற்ப, இங்கே தாயைக் கண்ட ஆன்கன்றன்னுன் என்ருர். தாய்ப் பசுவுக்கும் அதன் இளங்கன்றுக்கும் உள்ள அன்புத் தொடர்பு மிகச் சிறந்ததாகும். அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்கள் செய்யும்போது நெற்றி நிலத்தில் தோயச் செய்தல் மரபாதலின், சென்னி மண்ணுற வணங்கி என்ருர். சென்னி இங்கே இலக்கணையாக நெற்றியைக் குறிக்கும். இராமபிரானுடைய வாய் இயல்பாகவே மணமும் செந்நிறமும் அமைந்ததென்பர். பெரியோர் முன் துவண்டு (வளைந்து) நிற்றலும், அவ்வாறு நிற்கும்போது வலக்கையால் வாயைப் பொத்தி இடக்கையால் ஆடையைக் காற்றில் அலையாது மடக்கிக் கொள்ளுதலும் மரியாதைக்குரிய முறைகளாகும்.

சிந்துரம் - சிவப்பு. கையின் : இன்னுருபு கருவிப்பொருளில் வந்தது.

(பி - ம்.) 1. வணங்கி வாழ்த்த.
2. பவளவாயோர்; செங்கையாற்.
3. தடக்கை தன்னை மடக்குறத் தொழுது, மண்ணுறத் தொழுது.
4. கண்டவான் கன்றே யன்னான், கண்டனன் கன்றினன்னான். (104)

கைகேயி கூற்று

290. நின்றவன் றன்னை நோக்கி யிரும்பினு லியன்ற நெஞ்சிற்
கொன்றுழல் கூற்ற மென்னும்பெயரின்றிக் கொடுமைபூண்டாள்
இன்றெனக் குணர்த்த லாவ தேயதே யென்னி னாகும்
ஒன்றுனக் குந்தை மைந்த வுரைத்ததோ ருரையுண்டென்றாள்.

இரும்பினால் இயன்ற நெஞ்சின் - இரும்பாலாகிய மனத்தோடு, கொன்று உழல் - உயிர்களைக் கொன்று திரிகின்ற, கூற்றம் என்னும் பெயர் இன்றி - யமனென்னும் பேர் இல்லாமல், கொடுமை பூண்டாள் - அவனுடைய கொடுந்தன்மையை மேற்கொண்டவளாகிய கைகேயி, நின்றவன் தன்னை நோக்கி - தன் முன் (துவண்டு பணிவோடு) நின்ற இராமனைப் பார்த்து, மைந்த - பிள்ளாய், ஒன்று உனக்கு - (கேட்டு நடத்தற்குப்) பொருந்திய உனக்கு, உந்தை உரைத்தது ஓர் உரை உண்டு - உன் தந்தை (தெரிவிக்கச்) சொன்னதாகிய ஓர் உறுதிமொழி உண்டு; இன்று உனக்கு உணர்த்தல் ஆவது - (அதை) இப்போது உனக்குத் தெரிவித்தலாகிய செயல், ஏயதே என்னின் - எனக்குப் பொருந்தியதே என்று நீ கருதினால், ஆகும் - (நான்) அதனை உணர்த்தலாகும், என்றாள்—.

கைகேயி, தான் சொல்லப்போவது இன்னாச்சொல், ஆதலால், அதனை விரைந்து கூறாமலும், இராமபிரானது உடன்பாடு பெறும் வகையிலும் உபாயமாகக் கூறுகின்றாள். அதனால், மைந்த என முறைப் பெயரிட்டு விளித்து, 'உன் தந்தை என்மூலம் உனக்குத் தெரிவிக்கச் சொன்ன கட்டளையொன்றுள்ளது; அதனை நான் சொல்லாமென்றால் சொல்லுகிறேன்' என்று தொடங்குகின்றாள்.

(பி - ம்.) 1. இரும்பினால் இயைந்த, இசைந்த, நெருப்பென எரியும்.
2. கொன்றுறழ்; பெயரன்றிக், பெயரினால்.
3. உணரலாயது, உணரலாவது, உனக்குறுதலாவது, உணர்த்தலாவது; ஆயதெ யென்னலாகும், ஒருவனில் உணரலாகாது.
4. மைந்தா; உரைப்பதோருரை, உரைக்க ஒருரை, உரைத் தவசவுரை. (105)

இராமபிரான் பணிவுரை

291. எந்தையே யேவ நீரே யுரைசெய வியைந்த துண்டேல்
உய்ந்தனெ னடியே னென்னிற் பிறந்தவ ருளரோ வாழி
வந்ததென் றவத்தி னாய வருபயன் மற்றொன் றுண்டோ
தந்தையுந் தாயு நீரே தலைநின்றேன் பணிமி னென்றான்.

(கைகேயி கூறியது கேட்ட இராமன்) எந்தையே ஏவ - என் தந்தையாரே கட்டளையிட, (அதனை) நீரே உரை செய இயைந்தது உண்டேல் - (தாயாகிய) நீரே எனக்குச் சொல்ல வாய்த்ததானால், அடியேன் உய்ந்தனென் - நான் ஈடேறிவிட்டேன்; பிறந்தவர் - மேம்படப் பிறந்தவர்கள், என்னின் உளரோ - என்னைப்போல் எவரேனும் இருக்கின்றனரோ? (இல்லை); என் தவத்தின் ஆய பயன் வந்தது - எனது முன்னைத் தவத்தாலாகிய பயன் இப்போது நேர்ந்தது; வரு பயன் மற்றொன்று உண்டோ (இதனினும் மேலாக) வரக்கடவதாகிய நற்பயன் பிறிதொன்று உளதாகுமோ? (ஆகாது); தந்தையும் தாயும் நீரே—; தலைநின்றேன் - (நும் பணியைத்) தலைமேற்கொண்டு நிற்கின்றேன்; பணிமின் - கட்டளையிடுங்கள், என்றான்—.

'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை, தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லையாதலால், தந்தை ஒன்றைச் சொல்ல, அதனைத் தொழுகுலமாகிய தாயே பணிக்க நேர்ந்தால் அதனினும் சிறந்த பேறு யாதுளது? தந்தை தாய் இருவர் சொல்லையும் ஒருங்கே கேட்டு அதன்படி நடக்கும் பெரும்பேறு யானே பெற்றேன்; தயக்கமின்றிக் கட்டளையிடுங்கள்; அதனைத் தவறாது நிறைவேற்றுவேன்' எனத் தனது பணிவும் உறுதியும் புலப்பட இராமபிரான் கூறினான்.

நீரே : பிரிநிலை ஏகாரம் சிறப்புணர்த்தியது. வாழி : முன்னிலையசை. தலைநின்றேன் : தெளிவுபற்றி வந்த காலமயக்கம். பயன் : இடைநிலை விளக்காக நின்று முன்னும் பின்னும் இயைந்தது.

(பி - ம்.) 1. நீரும்; எந்தை சொல் தாயே நீரும்; இயைவதுண்டேல், இசைந்ததுண்டேல்; உரைசெய்யும் படியொன்றுண்டோ.
2. உய்ந்தனனடியேன்; பிறந்தவருளவே, பிறந்தன உளரோ வாழ்வு.
3. வந்தவென் தவத்தினுய வரும்பயன்; மற்றுமுண்டோ, இனிபொன்றுண்டோ.
4. தாயு நீயே; பணியாது, பணியேது. (106)

கைகேயி கூறுதல்

292. ஆழிசூ முலக மெல்லாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைக டாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப் புண்ணியத் துறைக ளாடி
ஏழிரண் டாண்டின் வாவென் றியம்பின னரசனென்றாள்.

ஆழி சூழ் உலகம் எல்லாம் - கடல் சூழ்ந்த இவ்வுலகம் முழுவதையும், பரதனே ஆள - பரதனே (முடி சூடி) ஆட்சி செய்ய, நீ போய் - நீ இங்கிருந்து போய், தாழ் இரு சடைகள் தாங்கி - நீண்ட பெரிய சடைகளைத் தாங்கிக்கொண்டு, தாங்க அரு தவம் மேல்கொண்டு - (பிறர்) தாங்குதற்கரிய தவத்தை யேற்று, பூழி வெம் கானம் நண்ணி - புழுதியை உடைய வெம்மையான காட்டை அடைந்து, புண்ணியம்

துறைகள் ஆடி - புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, ஏழ் இரண்டு ஆண்டின் வா என்று - பதினான்காண்டுகளின் பின் திரும்பி வருக என்று, அரசன் இயம்பினன் என்றாள் - அரசன் சொன்னான் என்றனள் (கைகேயி).

உலகம்-தயரதனாட்சிக்கு உட்பட்ட இராச்சியம். பரதனே: ஏகாரம், பிரிநிலை; இராச்சியம் உனக்கில்லை, அவனுக்கே என்றபடி. தாழ்வு - நீட்சி; நீண்ட சடைதாங்குதல் தவக் கோலத்திற்குச் சிறப்பு; கானஞ் சேர்வதனால், தவம் மேற்கொள்ளல், புண்ணியப் புனல்களாடல், பிற தவசியரோடு பழகுதல் முதலிய நற்பயன்களெய்தலாகும் என்பது கருதியே அரசன் இவ்வாறுன்னைப் பணித்தனன் என்றாள். முன்னே 'உந்தை' என்றவள் இங்கே 'அரசன்' என்றது, அரசன் கட்டளையை மாறாது நிறைவேற்றுதல் வேண்டுமென்பது கருதி. பதினான்கென்னாது 'ஏழிரண்டு' என்றது, கால அளவு சுருங்கத் தோற்றுதற்காகும்; "ஆண்டவை பத்தும் நாலும்" (317). தானே கூறவில்லை யென்பதை வற்புறுத்தற்கு, 'இயம்பினன் அரசன்' என்றாள். இராமபிரான் சடை தாங்கி யிருந்தமை : யுத்த : 354.

(பி - ம்.) 1. ஆழிநீருலகம்; ஆள்க.
2. தாங்கிரும்.
3. பூழியங் கானம், பூழிருங்கானம், சூழிருங்கானம்; புண்ணியப்புனல் களாடி, நதிகளாடி.
4. ஏழிரண்டாண்டில், வாவென்றேயினன், ஏவினன், ஏழிரண்டாண்டு வாழ்தி யென்றனன். (107)

இராமனது மகிழ்ச்சி

293. இப்பொழு தெம்ம னோரா லியம்புவ் தெளிதோ யாரும்
செப்பருங் குணத்தி ராமன் திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பவ் வாசக முணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா.

யாரும் - ஒன்றை நன்கு விளக்கிச் சொல்லும் ஆற்றலையுடைய எவரும், செப்ப அரும் குணத்து இராமன் - சொல்வதற்கு அரிய நற் பண்புகளையுடைய இராமபிரானது, திருமுகம் செவ்வி நோக்கின் - திரு முகத்தின் அழகைப் பார்த்தால், முன்பு - கைகேயியின் வார்த்தை களைக் கேட்பதற்கு முன்பும், பின்பு - அதைக் கேட்டுப் பிறர்பால் விடைபெறச் சென்றபின்பும், ஒப்பதே -(செந்தாமரை அம்முகத்துக்கு) ஒப்பாக உள்ளதே ஆகும்; (ஆனால்), அ வாசகம் - கைகேயி சொன்ன அந்த வாய்மொழியை, உணர - நன்கு தெளியும்படி, கேட்ட அப்பொழுது—, செந்தாமரையினை—, வென்றது - வென்றுவிட்டது.

அம்மா : வியப்பை உணர்த்தும் இடைச்சொல். கைகேயி கூறும் சொல்லைக் கேட்டபோது பிறரைப்போல இருப்பவனாயின் மிக வாடுதற்

குரியதாகும் முகம், இராமன் திறத்து நேர்மாறாக மிகச் சிறந்து ஒளிர்வ தாயிற்று. அதைக் கேட்ட பின்பு தாமரை மலர் அம்முகத்தை ஒத்தது என்பதனை, சீதையைக் கண்டபோது அம்முகம் இருந்தபடியை அப் பிராட்டி நினைத்துப் பார்த்தலைச் சொல்லும் கவியால் உணரலாம்; "மெய்த்தி ருப்பத மேவென்ற போதினும், இத்தி ருத்துறந் தேகென்ற போதினும், சித்தி ரத்தி னலர்ந்தசெந் தாமரை, ஒத்தி ருக்கு முகத்தினை உன்னுவாள்". கேட்ட என்ற எச்சம் பொழுது என்ற பெயரைக் கொண்டு முடிந்தது. உணரக் கேட்ட - கைகேயியின் உள்ளக்கிடக் கையை நன்கு உணரும் வகையில் செவிமடுத்த.

(பி-ம்.) 1. இப்பொருள்; எம்மனோருக்கு, எம்மனோர்கட்கு, எம்மனோர்க்கிங்கு; இயம்புதற்கு; எளிதேயாகும், எளிதேயார்க்கும், எளிதோ யார்க்கும், எளிதோ வார்க்கும், எளிய தேயால்.
2. நோக்கின்.
3. முன்பு பின்பு, பின்பு முன்பு, முன்பு பின்பின்; உணர்த்தக் கேட்ட, உரைக்கக் கேட்ட, உரைப்பக் கேட்ட; கேட்ட போதோ.
4. வென்ற தன்றே, ஒத்த தம்மா. (108)

294. தெருளுடை மனத்து மன்ன னேவலிற் றிறம்ப வஞ்சி
இருளுடை யுலகந் தாங்கு மின்னலுக் கிசைந்து நின்றான்
உருளுடைச் சகடம் பூட்டி யுடையவ னுய்த்த காரே
றருளுடை யொருவ னீக்க வப்பிணி யவிழ்ந்த தொத்தான்.

தெருள் உடை(ய) மனத்து - தெளிவமைந்த மனத்தையுடைய, மன்னன் ஏவலின் - சக்கரவர்த்தியின் கட்டளையினின்று, திறம்ப அஞ்சி - மாறுபடுதற்குப் பயந்து, இருள் உடை(ய) உலகம் தாங்கும் இன்னலுக்கு - அஞ்ஞான இருளை உடைய உலகத்தைக் காக்கும் துன்பத்திற்கு, இசைந்து நின்றான் - ஒருப்பட்டு நின்ற இராமபிரான், உருள் உடை(ய) சகடம் பூட்டி - ச்க்கரங்களையுடைய (பெரிய) வண்டியிலே பூட்டி, உடையவன் உய்த்த - வண்டியை உடையவன் செலுத்திய, கார் ஏறு - கரிய காளையானது, அருள் உடை(ய) ஒருவன் - கருணையுள்ள ஒருவன், அ பிணி நீக்க - (வண்டியிற் பூட்டிய) அந்தக் கட்டை அவிழ்த்துவிட, அவிழ்ந்தது ஒத்தான் - (அதனினின்றும்) விடுபட்டது போல் ஆனான்.

அரசாட்சி, அரச பாரம் எனப்படும்; அதனை வண்டியாகவும் ஆள்வோனை வண்டியிற் பூட்டிய எருதாகவும் கூறுதல் மரபு. அரச பாரம் எளிதன்று; "மாரி பொய்ப்பினும் வாரி குன்றினும், இயற்கை யல்லன செயற்கையில் தோன்றினும் காவலர்ப் பழிக்குமிக் கண்ணகன் ஞாலம்" (புறநா. 35); "மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம், பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்,......மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல், துன்ப மல்லது தொழுதக வில்" (சிலப். 25 : 100-104) என்பன காண்க. அரச பாரத்தின் அருமை யுணர்ந்த இராமபிரான்,

தந்தையின் ஏவலை மறுத்தற்கஞ்சி அதற்கு இசைந்தான்; இப்போது கைகேயி அத்துன்பத்தினின்றும் நீக்கிவிட்டதனுல் மிக மகிழ்ந்தான். இதனை உவமை முகத்தால் விளக்கினர். சகடம் அரசாட்சி; காரேறு இராமன்; உடையவன் தயரதன். அரசாட்சியை இராமபிரான் தானே விரும்பி ஏற்கவில்லை யென்பது, "யானே சொல்லக் கொள்ள விசைந்தான்" (212) என்றதனுலும் அறியலாம். 69-70-ஆம் பாடல்களும் பார்க்க. காரேறு - மயிலைக் காளை; இஃது எருதுகளுட் சிறந்த தென்பர். இராமபிரானுக்கு நிறத்தாலும் வலிமையாலும் இஃது உவமை. இருள்: உலகத்து மக்களின் தன்மை உலகத்தின் மேல் ஏற்றிக் கூறப்பட்டது. இருளுடை உலகம் : கிட்கிந்தா. 679. அருளுடை யொருவன் : யுத்த. 2522. நான்கடிகளிலும் உடைய என்பதன் ஈறு தொகுத்தல்.

(பி - ம்.) 1. தெருளுடை மனத்தன், மனத்தின், தெருளுறு மனத்த, மனத்து; மன்னனேவலின், மன்னனேவலைத்; திறம்பலஞ்சி, திறம்பானுகி.
2. இருளுறும்; உலகங் காக்கும்; இயைந்து, இசையா.
3. சகடம் பூட்ட பூண்ட, சகட்டிற் பூட்டி, சகட வாழ்க்கை, சகடம் பூண்ட; பாசமதகற்றிப் பின்னர்.
4. அப்பரமகன்றது, அப்பிணி யவிழ்த்தது, அப்பணி யவிழ்த்தது, நீக்கியப்பிணியவிழ்த்தது. (109)

இராமபிரான் விடைகொள்ளுதல்

295. மன்னவன் பணியன் ருகி னும்பணி மறுப்ப னேவென்
பின்னவன் பெற்ற செல்வ மடியனேன் பெற்ற தன்றே
என்னினி யுறுதி யப்பா லிப்பணி தலைமேற்கொண்டேன்
மின்னொளிர் கான மின்றே போகின்றேன் விடையுங் கொண்டேன்.

(மனமகிழ்ந்த இராமபிரான் கைகேயியை நோக்கி) மன்னவன் பணி அன்று ஆகில் - அரசன் கட்டளையன்ருயினும், நும் பணி - நுமது கட்டளையை, மறுப்பனே - (நான்) மறுப்பேனே? என் பின்னவன் பெற்ற செல்வம் - என் தம்பி பரதன் பெறும் இவ்வரசச் செல்வம், அடியனேன் பெற்றது அன்றே - நான் பெற்றது போலேயன்றே? என் இனி உறுதி அப்பால் - இப்போது இதற்கும் புறம்பான உறுதி வேறு எது? இ பணி - இக்கட்டளையை, தலைமேல்கொண்டேன் - தலைமேல் ஏற்றுக்கொண்டேன்; மின் ஒளிர் கானம் - மின்னல் போல வெயிலொளி வீசும் காட்டிற்கு, இன்றே போகின்றேன் - இப்பொழுதே போகின்றேன்; விடையும் கொண்டேன் - (நும்மிடம்) விடையும் பெற்றுக்கொள்கின்றேன்.

இதுவும் அடுத்த பாட்டும் குளகம். அதன் முதலில் வரும், 'என்று கொண் டினைய கூறி' என்பதனேடு இயைந்து, 'புக்கான்' என்பது கொண்டு முடிவுறும்.

'தாய் சொற்கேட்டு அதன்படி நடப்பது பெருமையேயன்றிச் சிறுமையன்று; பரதன் அரசு பெறுவது எனக்கு மிக்க மகிழ்ச்சியே; நான் வேறு அவன் வேறு அல்லேம். நான் காடு செல்வதனுல் அங்கே முனிவரையும், ஞானியரையுங் கண்டு அவர்களோடு பழகிப் பல நன்மை எய்துதல் கூடுமாதலால் அதுவும் எனக்குப் பேருறுதியே; ஆதலால், நும் கட்டளையைச் சிரமேற்கொண்டு இப்போதே விடை கொள்கின்றேன்' என்றனன் இராமபிரான். முன்னே கைகேயி, 'இயம்பினன் அரசன்' என்றதனுல், 'மன்னவன் பணி அன்ருகிலும்' என்ருன்; உம்மை தொக்கது. விரைவு பற்றி விடையுங் கொண்டேன் என இறந்தகாலத்தாற் கூறப்பட்டது. பணி தலைமேற்கொள்ளல்: யுத்த. 1218.

(பி-ம்.) 1. பணியன்ருகில் உம் பணி, மின்பணி, பணியன்ருயினும் பணி, பணியன்றேனு மின் பணி, பணியானுகில் மின் பணி; மறுப்பனோ யான்.
3. என்னினி யுறுதி, என்னிதி லுறுதி; இப்பால்; தலைமேற்கொண்டு.
4. மின்னெளி கானம், மின்னெடுங் கானம்; இன்னே. (110)

கைகேயி சூழ்வினைப் படலம் முற்றும்.

4. நகர் நீங்கு படலம்

நகரின் நீங்கியதைக் கூறும் படலம் என இதன்பொருள் விரியும்.

கைகேயிபால் விடைகொண்ட இராமபிரான், தன்தாய், சுமித்திரை, வசிட்ட முனிவர் முதலிய பலரிடத்தும் தனித்தனியே செய்தி தெரிவித்து, தன் பிரிவு குறித்து வருந்தியும் தான் வனம் புகுவதைத் தடுத்தும் அவரவர் கூறியவற்றிற்கெல்லாம் அவரர்க்கு ஏற்றவாறு சமாதானம் சொல்லுதலும், செய்தியறிந்து மிக வெகுண்டெழுந்த இலக்குவனது கடுஞ்சினத்தைத் தணிவித்தலும், பிராட்டிக்குச் செய்தி கூறிப் பல இன்னல்களுக்கிடமான காட்டிற்குத் தன்னுடன் வந்து துன்புறுமல் நகரிலேயே இருக்கவென, அவள், 'நின் பிரிவினும் சுடவல்லதன்று பெருங்காடு' என்று கூறி உடனெழ, அவளுடனும், அவ்வாறே எழுந்த இலக்குவனுடனும் சீரையுடுத்துத் தேரேறிப் புறப் படுதலும், அரண்மனையிலுள்ளாரும் நகர மக்களும் அஃறிணையுயிர் களுங்கூடக் கடுந்துயரெய்துதலும் மிக விரிவாக இப்படலத்துட் கூறப்படுகின்றன.

இராமபிரான் கோசலை இருப்பிடம் செல்லுதல்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

296. என்றுகொண் டினைய கூறி யடிதொழு திறைஞ்சி மீட்டும்
தன்றுணைத் தாதை பாத மத்திசை நோக்கித் தாழ்ந்து
பொன்றிணி போதி னாளும் பூமியும் புலம்பி நையக்
குன்றினு முயர்ந்த தோளான் கோசலை கோயில் புக்கான்.

என்று கொண்டு இனைய கூறி - என்று இவ்வாறுனவற்றைச் சொல்லி, மீட்டும் அடிதொழுது இறைஞ்சி - மீண்டும் (கைகேயியை) அடிவணங்கிப் போற்றி, தன் துணை தாதை பாதம் - தனக்குத் தானே ஒப்பாகிய தந்தையின் திருவடிகளை, அ திசை நோக்கித் தாழ்ந்து - இருக்கும் அத்திக்கு நோக்கித் தெண்டனிட்டு, குன்றினும் உயர்ந்த தோளான் - மலையினும் சிறந்த தோள்களையுடைய இராமபிரான், பொன் திணி போதினாளும் - பொற்றாமரையில் தங்கும் இலக்குமியும், பூமியும் - பூமிதேவியும், புலம்பி நைய - தனிமையுற்று வருந்த, (அங்கு நின்றும் போய்), கோசலை கோயில் புக்கான் - கௌசல்யாதேவியின் மாளிகை யைச் சேர்ந்தான்.

என்றினைய என்றது முன் கவியிற் கண்டவற்றை. மரியாதைக்குரிய பெரியோரை முதலிற் பார்க்கும்போதும், மீண்டும் அவரைப் பிரியும் போதும் வணங்குதல் முறையாகலின், கைகேயியை மீட்டும்

வணங்கினான் இராமபிரான். நினைவிழந்த நிலையிலிருந்த தந்தையை நேரே பார்த்து வணங்கி விடைபெறுதல் இயலாமையின், அத்திசை நோக்கித் தாழ்ந்தான். இயல்பாகவே குன்றையொத்த தோள்கள், இப்போது அரச பாரம் நீங்கியதென்ற மகிழ்ச்சியால் மேலும் பூரித்து உயர்ந்தன. போதினாள் - இராச்சியலட்சுமி. இராமபிரானைச் சேரலா மென்று மகிழ்ந்திருந்த போதினாளும் பூமகளும் அது கைகூடாமையின் புலம்புற்று நைந்தனர். புலம்பு-தனிமை. என்று கொண்டு; கொண்டு, இங்கே பொருளற்ற துணைவினை; இடு என்றதுபோல.

பெரும்பான்மையான அச்சுப் புத்தகங்களில் இப்பாடல் அடுத்த படலத்தின் முதற் பாடலாக உள்ளது. ஆயினும் சில ஏட்டுப் பிரதி களிற் கண்டபடி இஃது இங்கிருத்தல் மிக்க பொருத்தமுடைமை கருதி அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பிலும், எஸ். ராஜம் அவர்கள் பதிப்பிலும் வைத்துள்ள முறை இங்கும் மேற்கொள்ளப் பட்டது.

(பி - ம்.) 1. அனைய கூறி, இனது கூறி; அடியிணை யிறைஞ்சி, அடியிணை தொழுது, இணையடியிறைஞ்சி; மீட்டுத், மீண்டு.
2. நோக்கித் தாழ்த்து.
3. போதினரும், போதனளும், பொன்றணி போதினளும்.
4. குன்றிலும்; கோயிற்புக்கான். (1)

இராமன் கோசலையைக் காணுதல்

297. குழைக்கின்ற கவரியின்றிக் கொற்றவெண் குடையு மின்றி
இழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம்பின் னிரங்கி யேக
மழைக்குன்ற மனையான் மௌலி கவித்தனன் வருமென் றென்று
தழைக்கின்ற வுள்ளத் தன்னாள் முன்னொரு தமியன்சென்றான்.

மழை குன்றம் அனையான் - மேகம் படிந்த மலைபோன்ற இராமன், மௌலி கவித்தனன் வரும் - முடிசூட்டிக்கொண்டு வருவான், என்று என்று - என்றெண்ணியெண்ணி, தழைக்கின்ற உள்ளத்து - பூரிக்கின்ற மனமுடைய, அன்னாள் முன் - அக்கோசலையின் எதிரில், குழைக்கின்ற கவரி இன்றி - (இரு புறமும்) வீசுகின்ற சாமரை இல்லாமல், கொற்றம் வெண்குடையும் இன்றி - வெண்கொற்றக் குடையும் இல்லாமல், இழைக்கின்ற விதி முன் செல்ல (நன்மை தீமைகளைச்) செய்கின்ற விதி முன்னே செல்லவும், தருமம் இரங்கி பின் ஏக-அறமானது வருந்திப் பின்தொடர்ந்து செல்லவும், ஒரு தமியன் சென்றான் - தன்னந் தனியனாகச் சென்றான்.

இராமனை, முடிசூடிய அரசக் கோலத்துடனும், அதற்குரிய சாமரம், குடை ஆகிய சிறப்புக்களோடும் காணப்போகின்றோம் என்றெண்ணி மகிழ்ச்சியுற்றிருந்த கோசலையின் எதிரில் அவன், அவை யொன்றும் இன்றி வறிதே சென்றான் என்க.

குழைத்தல் - விரித்தல்; இங்கே இரட்டுதலைக் குறித்தது. இராமபிரான், தான் கொண்ட மானிடக் கோலத்துக்கேற்ப, விதியின் செயலுக்குட்பட்டு நடத்தலின், விதி அவனை இழுத்துக்கொண்டு முன் சென்றதென்றார். மேலே 'விதியின் பிழை' என்று இலக்குவனுக்கு இராமபிரான் கூறுதலும் (426) காண்க.

இராமன் செல்லும் நெறியே அறமும் செல்வதாதலின், 'இரங்கி ஏக' என்றார். நிறமும் திண்மையும்பற்றி மழைக்குன்றம் உவமையாயிற்று. அரசச் சின்னங்களும் அவற்றைத் தாங்குவோரும் இன்மையின் ஒரு தமியனானான்.

என்றென்று: அடுக்கு; தழைப்பின் மிகுதி குறித்தது. விதியின் செயல்: 720, பார்க்க. கோசலையைக் காண இராமபிரான் சென்ற போது இலக்குவனும் உடனிருந்தானென வான்மீகம் கூறுகின்றது.

(பி - ம்.) 2. இரங்கிச் செல்ல.
3. வருமென்றென்னித், வருமென்றன்பு. (2)

கோசலை இராமனை வினவுதல்

298. புனைந்திலன் மௌலி குஞ்சி மஞ்சனப் புனித நீரால்
நனைந்திலனென்கொலென்னு மையத்தா ணளின பாதம்
வனைந்தபொற் கழற்கால்வீரன் வணங்கலுங் குழைந்து வாழ்த்தி
நினைந்ததென் னிடையூறுண்டோ நெடுமுடி புனைதற் கென்றாள்.

(கோசலை) மௌலி புனைந்திலன் - (இவன்) முடிசூட்டிக் கொண்டானல்லன்; மஞ்சனம் புனிதம் நீரால் - திருமஞ்சனத்திற்குரிய தூய நீரினால், குஞ்சி நனைந்திலன் - தலைமயிர் நனையப் பெற்றானல்லன்; என்கொல் என்னும் - காரணம் யாதோ என்கிற, ஐயத்தாள் - ஐயமுடையவளாய், நளினம் பாதம் - தாமரை மலர்போன்ற (தன்) பாதங்களை, வனைந்த பொன்கழல் கால் வீரன் - அணிந்த பொன்னாலாகிய வீரக் கழலையுடைய கால்களைப் பெற்ற இராமன், வணங்கலும் - வணங்கிய அளவிலே, குழைந்து வாழ்த்தி - மனம் நெகிழ்ந்து அவனை வாழ்த்தி, நினைந்தது என் - (இவ்வாறு இங்கே வருதற்கு நீ) நினைந்தது யாது? நெடு முடி புனைதற்கு - தொன்று தொட்டு வந்த முடியை நீ சூடுதற்கு, இடையூறு உண்டோ - ஏதேனும் இடையூறு நேர்ந்துளதோ? என்றாள் - என்று வினவினாள்.

இராமன் முடிசூடி அரசுக் கோலத்துடன் வருவானென்று எதிர் பார்த்த கோசலை, வேறு வகையாக அந்த நேரத்தில் அவனைக் கண்ட வுடன், மனத்தில் துணுக்கமும் ஐயமும் கொண்டு அவனைக் காரணம் கேட்டாள். முடிசூட்டுதற்கு முன் மந்திரித்த தீர்த்தங்களால் மஞ்சன மாட்டுதல் மரபு; இதன் பொருட்டுக் கங்கையே முதலவாய தீர்த்தங்களை வசிட்ட முனிவன் சித்தஞ் செய்து வைத்தமை

முன்னே (262) கூறப்பட்டது. 'முடியுமில்லை; கேசம் மஞ்சன நீரால் நனையவுமில்லை; இந்நிலையில் இவன் இங்கே வருகின்றானே; காரணம் யாதோ?' என்று ஐயுற்றாள் கோசலை; அதனால் அவனைக் காரணங் கேட்டாள். நினைந்தது என் - சக்கரவர்த்தி உனக்கு முடிசூட்ட நினைந்தது யாதாயிற்று என்றலுமாம். குஞ்சி - ஆண்களின் தலைமயிர்.

(பி - ம்.) 1. மஞ்சனம் புனிதநீரால், அஞ்சனப் புனிதநீரால்.
2. நனைந்திலனே கொலென்னும், நனைந்தில தென்கொ லென்னும்; நளினப்பாதம்.
3. மகிழ்ந்து வாழ்த்தி.
4. இடையூறுண்டே, நினைந்த தெனிடை யூறுண்டோ, மினைந்தன னிடையூறுண்டோ. (3)

இராமன் விடை

(கலிவிருத்தம்)

299. மங்கை யம்மொழி கூறலு மானவன்
செங்கை கூப்பிநின் காதற் றிருமகன்
பங்க மில்குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின் றானென்றான்.

மங்கை - கோசலை, அ மொழி கூறலும் - அந்த வார்த்தையைச் சொன்னவுடன், மானவன் - (அது கேட்ட) இராமபிரான், செம் கை கூப்பி - தன் செவ்விய கைகளை அஞ்சலி செய்துகொண்டு, நின் காதல் திருமகன் - உன் அன்பிற் சிறந்த மகனும், பங்கம் இல் குணத்து - குறைவில்லாத குணங்களையுடைய, எம்பி - என் தம்பியுமான, பரதனே—, துங்கம் மா முடி சூடுகின்றான் - தூய பெரிய கிரீடத்தைத் தரிக்கின்றான், என்றான்—.

தன் செய்தியைத் தாயிடம் விரைந்து தெரிவிப்பின், அவள் மன முடைந்து பெரிதும் கலங்குவாளென்று கருதிய இராமபிரான், தானாக ஒன்றும் கூறாது, அவள் கேட்டபின் மெல்லக் கூறுகின்றான்; அவ்வாறு கூறுவதிலும், தான் வனம் போகவேண்டியதையும் சேர்த்துக் கூறாமல், அவள் கேட்டதற்கு விடையாகப் பரதன் முடி சூடுதலைமட்டும் முன்னர்த் தெரிவிக்கிறான். தனக்கு எவ்வகை யிலும் தாழ்வில்லாதவன், முடிசூடும் தகுதியும் உடையவன் பரதன் என்பதனை அறிவித்தற்கு, 'நின் காதல் திருமகன், பங்கமில் குணத்து எம்பி' என்றான்; 'நான் முடிசூடவில்லை' என்ற மறைவிடை தரவில்லை.

மங்கை: பருவம் குறிக்காது, 'பெண்' என்பது குறித்தது. மானவன் - பெருமையுடையவன்; மனு குலத்தவன் என்றலுமாம்.

(பி - ம்.) 1. கூறலுமாதவன், மன்னவன்.
2. உன் காதற்றிருமகன், நுங்காறிதற்குமகன்.
4. சூட்டுகின்றான். (4)

கோசலை கூறுதல்

300. முறைமை யன்றென்ப தொன்றுண்டு மும்மையின்
நிறைகு ணத்தவ னின்னினு நல்லனோர்
குறைவி லன்னெனக் கூறின ளுல்வர்க்கும்
மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினள்.

நால்வர்க்கும் - குமரர் நால்வரிடத்தும் வைக்கும், மறு இல் அன்பினில் - குற்றமற்ற அன்பில், வேற்றுமை மாற்றினள் - வேறுபாடில்லாத கோசலை, (இராமன் கூறியது கேட்டு) முறைமை அன்று என்பது ஒன்று உண்டு - (மூத்தவனிருக்க இளையவன் முடி சூடுதல் நம் குலத்து) வழி முறையன்று என்ற ஒரு குறையே இதில் உளது; (பரதன்) நின்னினும் - உன்னைக் காட்டிலும், மும்மையின் நிறை குணத்தவன் - மும்மடங்கு நிறைந்த குணங்களையுடையவன்; நல்லன் - யாவருக்கும் நல்லவன்; ஓர் குறைவு இலன் - (முடி சூடுதற்கு) ஒரு குறையுமில்லாதவனே; என கூறினள் - என்று கூறினள்.

இராமன் முடி சூடாமையிலும், பரதன் அது சூடுவதிலும் கோசலை வருத்தம் கொள்ளவில்லை. தன் மகன் வேறு, சக்களத்திகள் மக்கள் வேறு என்ற மன வேறுபாடு என்றும் இல்லாதவள் அவள் என அவளது இயல்பை விளக்கினர். பரதனுடைய சிறப்பையும் அவள் கூற்றுக்கினர். 'அவன் முடி சூடத் தகுதியுடையவனே; மூத்தவனிருக்க இளையவன் முடி சூடுதல் இதுவரை இக்குலத்தில் நிகழாத ஒன்று என்பதே குறை' எனத் தன் கருத்தை ஒளியாது உரைத்தனள்.

மாற்றினள் : வினையாலணையும் பெயர்.

(பி - ம்.) 1. முறைமை யொன்றென்பது; ஒன்றுண்டதல்லது, ஒன்றுண்டு முன்னவர், உண்டது முன்னது, உண்டது வல்லது.
2. நின்னிலும்; நல்லனல், நல்லனோர்.
3. கூறினளாதலால்.
4. மறுவி லன்பன்றி, அன்பின்றித், அன்பெனும். (5)

301. என்று பின்னரு மன்னவ னேவிய
தன்றெ னுமை மகனே யுனக்கறன்
நன்று நும்பிக்கு நானில நீகொடுத்
தொன்றி வாழுதி யூழி பலவென்றாள்.

என்று - என்று இவ்வாறு கூறி, பின்னரும் - மேலும், மகனே - குழந்தாய், மன்னவன் ஏவியது - அரசன் கட்டளையை, அன்று எனுமை - முறையன்று என மறுக்காமையே, உனக்கு அறன் - உனக்குத் தருமமாகும்; (ஆதலால்) நும்பிக்கு - உன் தம்பி பரதனுக்கு, நால் நிலம் - இப்பூமியை, நீ நன்று கொடுத்து - நீ உவகையோடு கொடுத்து, ஒன்றி - அவனோடு ஒன்றுபட்டு, ஊழி பல வாழுதி - பல்லூழி காலம் வாழ்வாயாக, என்றாள் —. எழுவாய் வருவிக்க.

அரசன் கட்டளை மற்றென்றும் உண்டென்பதனை அறியாத நிலையில் கோசலை இவ்வாறு கூறினாள். பரதன் முடிசூடுதல் அரசனனுமதி யின்றி நிகழாதென்பதனை ஊகித்து, அவன் அரசாளுதலை எக்காலத்தும் நீ மறுக்காமல், அவனோடு மனமொன்றி வாழ்க என்றாள். இதனாலும் கோசலையின் நல்லியல்பு நன்கு புலனாகும். நன்று ஒன்றி வாழுதி என்றியைத்துக் கூறலுமாம். 'நீ கொடுத்து' என்றது, மூத்த மகன் என்ற காரணத்தால் தந்தை உனக்கு அளித்ததை, அடுத்தபடி மூத்தவனுக்கு நீ விட்டுக் கொடுத்தல் முறையே என்பது குறித்தது.

(பி - ம்.) 2. அன்றெனு மகனே யுனக் கன்புடை, அன்புற, அன்றெனுப் மகனே யுனக் கன்றுதான், உனக்கறம்.
3. னன்று தம்பிக்கு, நம்பிக்கு; நின்று தம்பிக்கு, நம்பிக்கு; நிலனி கொடுத்து.
4. பல வென்பாள். (6)

இராமபிரான் கூறுதல்

302. தாயு ரைத்தசொற் கேட்டுத் தழைக்கின்ற
தூய சிந்தையத் தோமில் குணத்தினன்
நாய கன்னெனை நன்னெறி யுய்ப்பதற்
கேய துண்டோர் பணியென் றியம்பினான்.

தாய் உரைத்த சொல் கேட்டு - தன் தாய் சொல்லிய வார்த்தையைக் கேட்டு, தழைக்கின்ற - மகிழ்ச்சி மிகுகின்ற, தூய சிந்தை - தூய உள்ளத்தையும், அ தோம் இல் குணத்தினன் - குற்றம் இல்லாத பண்புகளையும் உடைய அவ்விராமன், எனை நல் நெறி உய்ப்பதற்கு - என்னைச் சிறந்த நெறியிலே செலுத்தற் பொருட்டு, நாயகன் ஏயது ஓர் பணி உண்டு - அரசன் கட்டளையிட்டதொரு காரியம் உளது, என்று இயம்பினான் - என்று சொன்னான்.

பரதன் அரசெய்துதல் குறித்துத் தாய் யாது கூறுவளோவெனச் சிறிது ஐயமுற்ற இராமபிரான், அவளுரையால் மகிழ்ந்தான். பின்னர்த் தான் காடு செல்வதையும் அவள் துணுக்குறாத வகையில் மெல்லத் தொடங்குகின்றான். தந்தை என்னாது நாயகன் என்றமையின், அரச கட்டளையாகிய அது நடத்தியே தீரவேண்டியதாகுமென்றபடி.

ஏயது - ஏவியது.

(பி - ம்.) 2. தூயசிந்தனைத்; தோமில் குணத்தினன், தொய்யில் குணத்தினன்.
3. நாயக னென்னை; உய்வதற்கு.
4 ஏய வுண்டோர் பணி; ஏயதுண்டென்பணி. (7)

கோசலை வினாதலும் இராமன் விடையும்

303. ஈண்டு ரைத்த பணியென்னை யென்றவட்
காண்டொ ரேழினொ டேழகன் கானிடை
மாண்ட மாதவத் தோருடன் வைகிப்பின்
மீண்டு நீவர வேண்டுமென் றானென்றான்.

(இராமன் கூறியது கேட்டு) ஈண்டு உரைத்த பணி என்னை - இப்பொழுது அரசன் சொன்ன காரியம் என்ன, என்றவட்கு - என்று வினவிய தாய்க்கு, (இராமபிரான்) ஓர் ஏழினோடு ஏழ் ஆண்டு - பதினான்கு வருடங்கள், அகன் கான் இடை - பரந்த காட்டிலே, மாண்ட - மாட்சிமைப்பட்ட, மாதவத்தோருடன் = பெருந்தவசியருடன், நீ வைகி - நீ தங்கியிருந்து, பின் மீண்டு வர வேண்டும் என்றான் - அதன் பின் இங்கே திரும்பி வர வேண்டும் என்று (அரசன்) சொன்னான், என்றான் —.

நன்னெறி உய்ப்பதற்கு ஏயதுண்டு ஓர் பணி என்று தனக்கு வரும் நன்மை அது என்று கூறியதற்கு ஏற்ப வனவாசத்தை, 'மாண்ட மாதவத்தோருடன் வைகுத'லாகக் கூறினான்.

பரதன் முடி சூடுதலையும், தான் காடு செல்லுதலையும் கோசலை கேளாமலே இராமபிரான் கூறியதாக வான்மீகம் கூறுகின்றது. மாண்ட மாதவத் தோருடன் வைகி: "மாமுனி வர்க்குற வாகி வனத் திடை யேவாழும், கோ" (1024).

(பி - ம்.) 1. பணியென்கொல் என்றலும்.
2. யாண்டொர் ஏழினொடேழ், ஏழுடனேழ்; அருங்கானிடை, இருங் கானிடை.
3. மாண்ட மாதவத்தோருடன், மாண்டவத்தோ ருறைவிடம் வைகியே, வைகினை.
4. வரல் வேண்டும். (8)

கோசலையின் துயரம்

304. ஆங்கவ் வாசக மென்னு மனல்குழை
தூங்கு தன்செவி யிற்றொட ராமுனம்
ஏங்கி னாளிளைத் தாடிகைத் தான்மனம்
வீங்கி னாள்விம்மி னாள்விழுந் தாளரோ.

ஆங்கு - அப்பொழுது, அ வாசகம் என்னும் அனல் - அந்த வார்த்தையென்கிற நெருப்பு, குழை தூங்கு தன் செவியில் தொடரா முன்னம் - (பொன்னாலாகிய) குண்டலம் தொங்கும் தன் காதுகளில் படுவதற்கு முன்னமே (பட்டவளவிலே), ஏங்கினாள் - மிக வருந்தினாள்; இளைத்தாள் - உடல் மெலிந்தாள்; மனம் திகைத்தாள் - மனம் மயங்கினாள்; விம்மினாள் - விம்மி அழலானாள்; வீங்கினாள் - (அழுகையால் முகம்) வீங்கப் பெற்றாள்; விழுந்தாள் - (சோகமுற்றுத் தரையில்) விழுந்தாள். அரோ : அசை.

எழுவாய் வருவிக்க. இதுமுதல் ஆறு பாடல்கள், கோசலை கடுந்துயர் எய்திக் கூறியனவும் செய்தனவும் கூறும்.

தொடரா முன்னம் என்றது விரைவு குறித்தது. தொடர்ந்த உடன் என்றபடி. வாசகம் அவள் மனத்தைச் சுடுதலால் அதனைத்

தீயாக உருவகித்து, காரணத்தின் முன்னே காரியம் நிகழ்வதாகக் கூறியது. 'அரோ' என்னும் அசைச் சொல், துன்ப மிகுதியை உணர்த்தத் துணையாய் நின்றது,

(பி - ம்.) 1. ஆங்கவாசக மென்னு மனற்குழை.
2. தொடராமுன்னம்.
3. ஏங்கினுளிரைத்தாள், திகைத்தாள், மெலிந்தாள், அயர்ந்தாள் மனம், இளைத்தாள் மனம்.
4. விங்கினுள், விழுந்தாள் விம்மினுளரோ, மெலிந்தாள் விழுந் தாளரோ. (9)

305. வஞ்ச மோமக னேயுனை மாநிலம்
தஞ்ச மாகநீ தாங்கென்ற வாசகம்
நஞ்ச மோவினி நானுயிர் வாழ்வெனே
அஞ்சு மஞ்சுமென் னுருயி ரஞ்சுமால்.

மகனே - குழந்தாய், உனை - உன்னை, மாநிலம் - இப்பெரிய பூமியை, தஞ்சம் ஆக - பற்றுக் கோடாக (இருந்து), நீ தாங்கு - நீ பாதுகாப்பாயாக, என்ற வாசகம் - என்று முன்னே அரசன் சொன்ன வார்த்தை, வஞ்சமோ - வஞ்சனை யானதோ? நஞ்சமோ - அன்றி என்னைக் கொல்ல வந்த நஞ்சோ? இனி நான் உயிர் வாழ்வெனே - இனி நான் உயிரோடிருப்பேனே? என் அரு உயிர் - எனது அரிய உயிர், அஞ்சும் அஞ்சும் - மிகவும் நடுங்குகின்றது (என்றாள்). ஆல் : அசை.

'முன்னே உனக்கு நாடாளத் தருவது போலத் தந்து, இப்போது அதனைப் பறித்ததோடமையாது, உன்னைக் காட்டிற்கும் துரத்துவத னுல், முன்னே சொன்னது உள்ளொன்று வைத்துச் சொன்ன கள்ள மான வார்த்தை போலும்! இனி நான் உயிர் தரியேன்' என்கின்றாள் தாய்.

அஞ்சும் என்ற அடுக்கு மிகுதிப் பொருளது. தஞ்சம் - அடைக் கலமுமாம்; "தஞ்சமிவ் வுலகநீ தாங்குவாய்" (954.)

(பி - ம்.) 1. உன்னை, மினை, நின்னை.
3. நஞ்சமேயினி; வாழ்வனே.
4. எஞ்சுமெஞ்சும், ஆருயிரெஞ்சுமால், ஆருயிரென்னுமால். (10)

306. கையைக் கையி னெரிக்குந்தன் காதலன்
வைகு மாலிலை யன்ன வயிற்றினைப்
பெய்வ ளைத்தளி ராற்பிசை யும்புகை
வெய்து யிர்க்கும் விழுந்து புழுங்குமால்.

(கோசலை) கையை கையின் நெரிக்கும் - தன் ஒரு கையை மற்றொரு கையால் நெரிப்பாள்; தன் காதலன் வைகும் - தனதன்புக்

குரிய புதல்வன் (இராமன்) தங்கிய, ஆல் இலை அன்ன வயிற்றினை-ஆலிலை போன்ற (தன்) வயிற்றை, வளை பெய் தளிரால் பிசையும் - வளைகள் பூண்ட தளிர்போன்ற கையால் பிசைவாள்; புகை வெய்து உயிர்க்கும் - தீப்புகை போல வெப்பமாகப் பெருமூச்செறிவாள்; விழுந்து - கீழே விழுந்து, புழுங்கும் - மனம் புழுங்குவாள். ஆல் : அசை.

துன்பம் மிக்க காலத்துக் கையை நெரித்தல் மகளிர் இயல்பு. காதலன் - புதல்வன். பெண்களின் வயிற்றுக்கு ஆலிலையை உவமை கூறுதல் மரபு. இராமன் காடேகும் செய்தி தன் வயிற்றைக் கலக்குதலால் ஆறுதலாக வயிற்றைக் கையாற் பிசைந்தாள். செய்யுமென் முற்றுக்கள் உயர்திணைப் பெண்பாலில் வந்தன. தளிர் - தளிர் போன்ற கைகள். ஆகுபெயர்.

(பி - ம்.) 1. கைகள் கைகள் நெரிக்குந்தன், கைகள் கைநெரிக்கும்தன்; கான் முளை, காவலன்.
3. பிசையும் பகை.
4. வெய்துயிர்த்து விமுங்கும். அழுங்கும்; புலம்புமால். (11)

307. நன்று மன்னன் கருணை யெனுநகும்
நின்ற மைந்தனை நோக்கி நெடுஞ்சுரத்
தென்று போவ தெனுவெழு மின்னுயிர்
பொன்றும் போதுற்ற துற்றனள் போலுமே.

மன்னன் கருணை நன்று எனு நகும் - அரசன் கருணை மிக நன்றாயிருக்கின்றதென்று சொல்லிச் சிரிப்பாள்; நின்ற மைந்தனை நோக்கி - தன்னெதிரில் நின்ற இராமனைப் பார்த்து, நெடு சுரத்து - பெருங் காட்டிற்கு, என்று போவது எனு - என்றைக்கு நீ போகின்றாய் என்று சொல்லிக்கொண்டு, எழும் - எழுவாள்; இன் உயிர் பொன்றும் போது உற்றது - இனிய உயிர் நீங்குங்காலத்து அடையும் அவத்தையை, உற்றனள் போலும் - அடைந்தவள்போல் ஆனாள். ஏ : ஈற்றசை.

நன்று : குறிப்புச் சொல். நகுதல், எள்ளற் குறிப்பு. முன்னே அவள் விழுந்தா ளென்றமையின், இப்போது எழும் என்றார். எழுதல், தானும் உடன் செல்லும் நோக்கங் கொண்டது. இராமன் வனவாழ்க்கை எளிதும், பயனுடையதுமாம் எனக் கூறினாலும் தாயன்பு அதன் கொடுமையையே கருதுவதாகலின் 'நெடுஞ்சுரத்து' என்றாள்; சுரம் - பாலைவனம்.

(பி - ம்.) 1. என்னு நகும்.
3. போவதெனவெழு மாருயிர், எனுவெழு மன்னுயிர், எனுவிழுமின் னுயிர், என்னுய்மு மின்னுயிர்.
4. பொன்றும் போதற்றது, பொன்று போதுற்றது, உற்றது, உற்றன; பெற்றியில், போலுமா. (12

308. அன்பி ழைத்த மனத்தர சற்குநீ
என்பி ழைத்தனை யென்றுநின் றேங்குமால்
முன்பி ழைத்த வறுமையின் முற்றினோர்
பொன்பி ழைக்கப் பொதிந்தனர் போலவே.

அன்பு இழைத்த மனத்து - உன்பால் அன்பைப் பதித்த மன முடைய, அரசற்கு - நம் அரசனுக்கு, நீ என் பிழைத்தனை - நீ என்ன தவறு செய்தாய்? என்று - என்று சொல்லி, நின்று - திகைத்து நின்று, முன் பிழைத்த வறுமையில் - முன்பு பாவம் செய்ததனால் ஆன வறுமை யில், முற்றினோர் - முதிர்ந்திருந்தவர்கள், பொன் - (இடையில் தமக்குக் கிடைத்த) பொன்னை, பிழைக்க - கைநழுவுமாறு, பொதிந்தனர் போல - (துணியில்) முடிந்துவைத்து இழந்தவரைப்போல, ஏங்கும் - ஏங்குவாள். ஆல், ஏ: அசைகள்.

'எல்லாரினும் பார்க்க நின்பால் பேரன்பு கொண்டு நீயே உயிரெனக் கருதிய நம் அரசன், அதற்கு முற்றும் மாறாக உன்னைக் காட்டிற்கு அனுப்பும் வகையில் நீ ஏதேனும் தவறு செய்து விட்டாயோ?' என்கின்றாள்: இராமன் தவறேதும் செய்யான் என்ற உறுதியுடையவளாயினும், அவனைப் பிரிய நேர்கின்றதே என்ற தாயன்பு மீதூர்தலால் அவ்வாறு ஐயமுற்றவள் போல வினவினாள். நெடுங்காலம் மகப்பேறு இன்றி வருந்தி, வேள்விப் பயனாக அரிதிற் பெற்ற இராமனை இப்போது பிரிய நேர்ந்தமைக்கு, நெடுங்காலமாக வறுமையின் உச்சநிலையில் இருந்தவர்களுக்கு, ஏதோ நல்வினை காரண மாக இடையே பொன் கிடைக்க, அதனை நன்கு பாதுகாக்க வகை யறியாது கை நழுவவிட்டு, மீண்டும் அவர் பெருந்துயருறும் நிலையை உவமையாக்கினார். பிழைத்த வறுமை - பிழைத்ததனாலான வறுமை; காரணகாரியப் பொருள். இப்போது ஒருவர் வறுமையுறுதற்குக் காரணம் முன்னே அவர்கள் செய்த நல்வினையின்மையே; சீவக. 2929. பொன் பிழைக்கப் பொதிதல் : ''பொன்னைப் பெற்றுந் தப்ப முடிந்தேன் பொறியற்றேன்'' (உத்தர : 14: 9). இழைத்தல் - அன்பைப் பதித்தல்; ''மணியிழைத்த செய்குன்றின்'' (நைடத. நகர. 6) என்பதும், 'கல் லிழைத்த நகை' என்ற உலக வழக்கும் காண்க.

(பி - ம்.) 1. அரசர்க்கு.
2. மின்றேங்குவாள்.
3. முற்றினர்.
4. பொதித்தனர் போலுமே, பொதிந்தன போலுமே, போலவே, பொருந்தினர் போலவே, புலம்பினர் போலவே. (13)

309. அறமெ னக்கிலை யோவெனு மாவிறைந்
திறவ டுத்ததென் றெய்வதங் காளெனும்
பிறவு ரைப்பதென் கன்று பிரிந்துழிக்
கறவை யொப்பக் கரைந்து கலங்கினாள்.

அறம் எனக்கு இல்லையோ எனும் - (நான் செய்துள்ள) தருமம் எனக்குத் துணையாவதில்லையோ என்பாள்; தெய்வதங்காள் - தெய்வங்களே, ஆவி நைந்து இற - என் உயிர் தேய்ந்து அழியும்படி, எடுத்தது என் - அதற்குக் காரணமாக நேர்ந்த தீவினை யாது? எனும் - என்பாள்; (இங்ஙனமாக) கன்று பிரிந்த உழி - தனது இளங்கன்று பிரிந்த இடத்து, கறவை ஒப்ப - தாய்ப் பசு கலங்குவது போல, கரைந்து - மனமுருகி, கலங்கினுள் —. பிற உரைப்பது என் - வேறு பல சொல்வதிற் பயன் என்ன? (ஒன்றும் இல்லை.)

'இம்மையில் நான் எத்தனையோ அறங்கள் செய்துள்ளேனே யன்றித் தீவினை செய்யவில்லை; அங்ஙனமாகவும் இத்தகைய தீமை நேர்ந்ததற்கு முன் செய்த தீவினை யாதேனுமுள்ளதோ? தெய்வங்களே, நீங்கள் சொல்லுங்கள்' என்கின்றாள். தெய்வங்கள் எதற்கும் சான்றென்பராகலின் இவ்வாறு தெய்வங்களை விளித்துக் கூறுகின்றாள். அன்பிற் சிறந்தது கறவைப் பசுவுக்கு அதன் இளங்கன்றின்பாலுள்ள அன்பென்பது முன்னமே கூறப்பெற்றது; 279-பார்க்க; அதனை இங்கே உவமை கூறினார். "கன்றுபிரி காராவின் துயருடைய கொடி" (1062) எனக் கோசலையை மேலே கூறுதலும் காண்க. 'பிரிவுழி' என்னாது 'பிரிந்துழி' என இறந்தகாலத்தாற் கூறியது தெளிவு பற்றியது.

"ஆங்கவ் வாசகம்" (304) என்பதுமுதல் இதுகாறும் கோசலையின் துயரநிலை கூறப்பெற்றது.

(பி - ம்.) 1. இலையோ வென்னும், இலையோவென; ஆவிநொந்து, ஆவிநோம், ஆய்வினைத்.
2. இறவடுத்தன, இறவடுக்குமென், இறவிடுக்குமென், இறுவதொத்த தென், இறவடுத்தலின், திறமடுத்ததென், இறலடுக்குமென், திறமடுத்தலித்; தெய்வங்களாலெனும், தெய்வதைகாளெனும், தெய்வதைதானெனும், தெய்வத்தை நோக்குமால், தேவதை காளெனும்.
3. பிறவிசைப்பதென்; கன்று பிரிந்துழிஇக், கன்றை நினைந்தழும், நினைத்தழும்.
4. ஒப்பத் தளர்ந்து; புலம்பினுள். (14)

கோசலையை இராமன் தேற்றுதல்

310. இத்தி றத்தி னிடருறு வாடனைக்
கைத்த லத்தி னெடுத்தருங் கற்பினேய்
பொய்த்தி றத்தின னுக்குதி யோபுகல்
மெய்த்தி றத்துநம் வேந்தனை நீயெனு.

இ திறத்தின் - இவ்வாறாக, இடர் உறுவாள் தன்னை - துயரம் மிகுகின்ற தாயை, (இராமபிரான்), கை தலத்தின் எடுத்து - தன் கைகளாலே தாங்கி யெடுத்து, அரு கற்பினேய் - அரிய கற்பிற் சிறந்த

தாயே, மெய் திறத்து நம் வேந்தனை-மெய்ம்மையிற் சிறந்த நம் அரசனை, நீ—, பொய் திறத்தினன் ஆக்குதியோ-பொய்யின்பாற்பட்டவன் ஆக்கு வாயோ? புகல் - சொல்வாயாக, என - என்று.

இதுவும் அடுத்த பாட்டும் குளகம். இதுமுதல் நான்கு பாடல்கள் இராமபிரான் கோசலைக்குப் பல நியாயங்களை எடுத்துச் சொல்லித் தேற்றுதல் கூறப்படும்.

இடருறுவாள்தனைக் கைத்தலத்தினெடுத்து என்றதனால், எழுந்த வள் மீண்டும் தரையில் விழுந்திருந்தாளாதல் வேண்டும். அவ்வாறு இருந்தவளை ஆதரவோடு தாங்கியெடுத்து, இனியனவும் தக்கனவுமான சொற்களால் தேற்றுவானானான். தான் வனம் புகுதலை அவள் தடை செய்யக் கூடுமெனக் கருதி, 'கானிடைப் போதல் வேண்டுமென்ற கட்டளையை மீறி நான் இங்கிருப்பின், அரசன் வாக்குப் பொய்த்தவ னுவான்; ஆதலால் அது செய்தல் தகாது' என்று முதற்கண் தான் வனம் போதலை உறுதியாக்கிக்கொள்கின்றான். 'கற்பிற் சிறந்த நீ தந்தையை மெய் திறம்பும் குற்றத்துக்குள்ளாக்குதல் தகாது' என்று அவளை வற்புறுத்துவானாகி, 'அருங் கற்பினோய்' என விளித்து, 'நம்வேந்தனைப் பொய்த்திறத்தினன் ஆக்குதியோ? புகல்' என்றான்.

மெய்த்திறத்து வேந்தன் : 209, குறிப்புப் பார்க்க.

(பி-ம்.) 1. இத்திறத்தில், இத்திறத்தினில், இத்தலத்தில்; ஏலுறுவாடனை.
2. கைத்திறத்தின்; அருங்கற்பினய்.
3. பொய்த்திறத்தனன்; புகழ்.
4. மெய்த்திறத்தினம்; நீ யென்றான். (15)

311. பொற்பு றுத்தன மெய்ம்மை பொதிந்தன
சொற்பு றுத்தற் குரியன சொல்லினன்
கற்பு றுத்திய கற்புடை யாடனை
வற்பு றுத்தி மனங்கொளத் தேற்றுவான்.

கற்பு உறுத்திய - இரு முதுகுரவர் முதலியோர் கற்பித்த, கற்பு உடையாள் தன்னை - அருங் கற்புடைய கோசலையை, வற்புறுத்தி - உறுதிப்படுத்தி, தேற்றுவான் - தெளிவிக்கும்பொருட்டு, பொற்பு உறுத்தன - அழகு மிக்கனவும், மெய்ம்மை பொதிந்தன - உண்மை நிறைந்தனவும், சொற்பு உறுத்தற்கு உரியன - சொல்லி(த் தன் கருத்தை) வலியுறுத்தற்கு உரியனவும் ஆனவற்றை, மனம் கொள சொல்லினன் - அவள் மனத்தில் ஏற்குமாறு சொன்னான்.

"விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது, சொல்லுதல் வல்லார்ப் பெறின்" (குறள். 648) என்றபடி, சொலல் வல்லனாகிய இராமபிரான், கோசலை தன் கருத்துக்கு இயையும்வண்ணம் பேசு கின்றான். அவ்வாறு அவன் சொல்லியவை மேல் இரண்டு பாடல்களால் கூறப்படும். முன் பாட்டில் 'என'வென நின்ற எச்சம், இங்கே சொல்லி

ஞன் என்பதனோடு முடியும். 'கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்றெனவும், அவனை இன்னவாறே வழிபடுகெனவும் இரு முதுகுரவர் கற்பித்தாலானும், அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும் ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும் ஒழுகும் ஒழுக்கம் தலைமகன் கற்பித்தலானும் கற்பாயிற்று' (தொல். கற்பியல், 1, நச். உரை) என்பராதலின் கற்பு உறுத்திய என்பதற்குக் கற்பித்தலைச் செலுத்திய என்று பொருள் கொள்ள வேண்டும்.

(பி - ம்.) 1. பொற்புறத்தை, பொற்புறத்தன், பொய்ப் புறத்தின; மென்மை; பொதிந்தென, புரிந்தன, புரிந்தென. 2. சொற் பொறுத்தற்கு, சொற்புறத்திற்கு, சொற்புரத்தற்கு, சொற்பொருத்தற்கு; அரியன, இனியன. 3. கற்பனை யாடனை. 4. வைப்புறுத்தி, அற்புறுத்தி; மனக்கொளத், அகங்கொளத் தேற்றினன். (16)

312. சிறந்த தம்பி திருவுற வெந்தையை
மறந்தும் பொய்யில னாக்கி வனத்திடை
உறைந்து பேரு முறுதிபெற் றேனிதிற்
பிறந்தி யான்பெறும் பேறென்ப தியாவதோ.

சிறந்த தம்பி திரு உற - எவ்வகையிலும் சிறந்தவனான என் தம்பி பரதன் அரசுச் செல்வத்தை அடைய, எந்தையை - என் தந்தையை, மறந்தும் பொய்யிலன் ஆக்கி-தவறியும் பொய்யில்லாதவனாகச் செய்து, யான் வனத்து இடை உறைந்து பேரும் உறுதி பெற்றேன் - நான், காட்டிற்குப் போயிருந்து (குறித்த காலங் கடந்தபின்) திரும்பும் உறுதியையும் பூண்டேன்; பிறந்து - (நான் இக்குடியில்) பிறந்து, பெறும் பேறு என்பது - அடையத் தக்க சிறந்த பாக்கிய மென்பது, இதின் யாவது - இதனினும் (மேலானது) யாதுளது? ஓ: அசை.

பரதன் சிறந்தவனென்பதைக் கோசலையே முன்பு(300) கூறியுள்ளமையின், 'சிறந்த தம்பி' என்றான். வனத்திடை உறைதலால் வரும் நன்மையும் முன்பு கூறப்பெற்றது; எனவே, இதனினுஞ் சிறந்த பேறு எனக்கு வாய்ப்பதரிது என்றான். "பிறந்தி யான்பெறும் பேறென்ப தியாவதோ" என இவ்வடியே பின்னும் (ஆரணிய. 136) வருதல் காண்க.

(பி - ம்.) 1. சிறந்த வெம்பி, நம்பி.
2. மறந்து; பொய்யிலனாக, பொய்யிலனாகி.
3. உறைந்துதிரும்; பெற்றேனிதற், பெற்றேனினிப்.
4. பிறந்து யான், பிறந்து நான், பிறந்துகான், இறந்து நான்; யாவதே. (17)

313. விண்ணும் மண்ணுமிவ் வேலையு மற்றும்வே
றெண்ணும் பூத மெலாமழிந் தேகினும்
அண்ண லேவன் மறுக்க வடியனேற்
கொண்ணு மோவிதற் குள்ளழி யேலென்றான்.

விண்ணும் - ஆகாயமும், (இ) மண்ணும் - இந்தப் பூமியும், இவேலையும் - இந்தக் கடலும் (நீரும்), மற்றும் - இன்னும்; வேறு எண்ணும் - வேருக எண்ணப்படுகின்ற, பூதம் எல்லாம் - தீயும் காற்றும் உளப்பட ஐம்பெரும் பூதங்களும், அழிந்து ஏகினும் - அழிந்து போனுலும், அடியனேற்கு - அடியவனுன எனக்கு, அண்ணல் ஏவல் மறுக்க ஒண்ணுமோ - சக்கரவர்த்தியின் பணியை மறுக்கத் தகுமோ? (தகாது); இதற்கு உள் அழியேல் - இதற்கு (நீ) மனங் கலங்காதே; என்ருன் - என்று கூறினுன்.

இவ்விரண்டு பாட்டிலும், இராமபிரான் தன் உறுதியும் அதற்குரிய நியாயங்களும் கூறி, 'நான் காடு செல்லுதற்கு நீ வருந்துதலாற் பயனில்லை; தேறியிருத்தல் வேண்டும்' எனத் தாயைத் தேற்றினமை கூறப்பெற்றது. ஐம்பூதங்களும் அழிந்தேகலாவது, அவை ஒன்றின் ஒன்று ஒடுங்கிச் சூனியமாதல்; அது பிரளய காலத்தில் நிகழ்வது. அத்தகைய நிலை வருவதாயினும் அண்ணலேவலை மறுத்தல் எனக் கொண்ணுது என்றது, உறுதி குறித்ததாகும். ஏகினும் என்ற உம்மை எதிர்மறை. இதற்கு - காடு செல்லும் இதற்கு. வேலை, நீரைக் குறிக்கும்.

(பி - ம்.) 1. அவ்வேலையும், வெவ்வேலையும்.
2. எண்ணுபூதமெலாம்; இழிந்தேகினும், இழிந்தேகலும், அழித்தேகினும், இறந்தேகினும்.
3. அண்ணலாணை மறுக்க, அண்ணலேவன் மறுக.
4. ஒண்ணுமோவதற்கு, ஒண்ணுமேயிதற்கு. (18)

கோசலை கூறுதல்

314. ஆகி லைய வரசன்ற னாணையால்
ஏக லென்ப தியானு முரைக்கிலேன்
சாக லாவுயிர் தாங்கவல் லேனையும்
போகி லுன்னெடுங் கொண்டனை போகென்ருள்.

(இராமன் கூறியது கேட்ட கோசலை), ஆகில் - உன் உறுதி இதுவாகில், ஐய - ஐயனே, அரசன்தன் ஆணையால் - அரசன் கட்டளையினுல், ஏகல் என்பது - நீ (வனம்) போகாதே என்பதை, யானும் உரைக்கிலேன் - நானும் சொல்லவில்லை; போகில் - நீ போனுல், சாக அல்லா உயிர் - (நீ பிரிவாய் என்பதைக் கேட்டவளவிலே) சாகாத இந்த உயிரை, தாங்க வல்லேனையும் - (நீ பிரிந்த பிறகும்) தாங்குவதற்கு வன்மையில்லாளாகிய என்னையும், உன்னெடும் கொண்டனை போக - உன்னேடு அழைத்துக்கொண்டு போவாயாக; என்ருள்—.

'இராமா, நீ காடு செல்வாய் என்பதைக் கேட்ட மாத்திரத்திலே என்னுயிர் போயிருத்தல் வேண்டும்; அது போகவில்லை: ஆனுல், நீ என்னைப் பிரிந்து சென்றபின் அவ்வுயிரைத் தாங்கியிருத்தல் என்னுல்

ஆவதன்று; ஆதலால் என்னையும் உன்னுடன் அழைத்துச் செல்வாயாக' எனத் துயர மிகுதியாற் கூறுகின்றாள் கோசலை. அரசன் பணியை மறுத்தல், அவனுரை பொய்த்தல் என்ற இரு குற்றமும் நிகழாவண்ணம் நான் காடுபோய்த் தீரவேண்டும் எனப் பன்முறை இராமபிரான் வற்புறுத்திக் கூறியதனால், 'அரசனது கட்டளையின்படி உன்னைப் போகாதே யென்று நான் மறுக்கவில்லை' என்றாள்.

தந்தை சொற்படி வனம் போகின்றேன் என்ற இராமனை, 'உன் தாயாகிய நான் அது செய்ய வேண்டாமென்கின்றேன். என்னுரையை மட்டும் நீ மீறிச் செல்லலாமா?' எனக் கோசலை கேட்டதாக வான்மீகி கூறியுள்ளார். சாகலாவுயிர் ; "போகாவுயிர்" (443).

ஏகல்: எதிர்மறை வியங்கோள். கொண்டனை: முற்றெச்சம். போகென்றாள் : தொகுத்தல்.

(பி - ம்.) 1. ஆகினை, ஆகிலயவரசனது, ஆகிலவ்வரசன்றனது.
2. ஏகல் நீயென, நீயென்று, நீயென்றது, ஏகில் நீயெனத், கானும்; உரைக்கலன், உரைக்கலேன், உரைக்கிலென், இசைக்கிலேன், இயம்பலன்.
3. சாகிலா; தாங்கவலேனையும்.
4. போகில் நின்னொடும், உன்னொடு, உன்னுடன், போகிலென்னையும்; போவென்றாள்; போதென்றாள், கொண்டுடன் போகென்றான், கொண்டெனைப் போகென்றாள். (19)

இராமபிரான் மீண்டும் கூறுதல்

315. என்னை நீங்கி யிடர்க்கடல் வைகுறும்
மன்னர் மன்னனை வற்புறுத் தாதுடன்
துன்னு கானந் தொடரத் துணிவதே
அன்னை நீயறம் பார்க்கிலை யாமென்றான்.

(இராமபிரான் கோசலையை நோக்கி) அன்னை - தாயே, என்னை நீங்கி - என்னைப் பிரிந்து, இடர் கடல் வைகு உறும் - துன்பக் கடலில் மூழ்கப்போகும், மன்னர் மன்னனை - சக்கரவர்த்தியை, வற்புறுத்தாது - (இங்கிருந்து) தேற்றாமல், துன்னு கானம் - அடர்ந்த காட்டிற்கு, உடன் - என்னோடு, நீ தொடர துணிவதே - நீயும் வரத் துணிவதா? (அது முறையாகுமா?) அறம் பார்க்கிலை ஆம் - (நீ) தருமத்தைப் பார்க்கின்றாயல்லை யென்பதாகும்; என்றான்—.

'தாயே, என்னைப் பிரிதலால் சக்கரவர்த்தி மிக்க துயரமுறுவார் என்பது உனக்குத் தெரியும்; அப்போது நீ அவருடன் இருந்து அவருக்குத் தேறுதல் கூறி உபசரிப்பது உன் கடமையன்றோ? அதனைப் பாராமல் என்னுடன் காட்டுக்கு வருவது முறையாகுமோ?' என்கின்றான். இதுமுதல் ஏழு பாடல்கள் இராமபிரான் கூறுவன.

துன்பமிகுதி தோன்றக் கடலாக உருவகித்தார்; கடலென்றமைக்கேற்ப மூழ்குதல் என உரைக்கப்பெற்றது. துணிவதே: ஏகாரம், எதிர்மறை.

(பி - ம்.) 1. என்னை நீக்கி, என்னினீங்கி; இடர்க்கடல் வைகும், வைகுமா, வைகுமிம், வைகுமம்.
3. படரத்; துணிவதோ, துணிவதென்.
4. அன்னையே, அன்னைநீர், என்னை நீ; பார்க்கிலையாமென, பார்க்கிலையாலென்றான், பார்க்கிலிராமென, பார்க்கிலரா லென்றான், பார்க்கிலிராமென்றான். (20)

316. வரிவி லெம்பியிம் மண்ணர சாயவற்
குரிமை மாநில முற்றபின் கொற்றவன்
திருவி னீங்கித் தவஞ்செயு நாளுடன்
அருமை நோன்புக ளாற்றுதி யாமன்றே.

வரி வில் எம்பி - கட்டமைந்த வில்லேந்திய என் தம்பி பரதன், இ மண் அரசு ஆய் - இந்நாட்டுக்கு அரசனாகி, அவற்கு மாநிலம் உரிமை உற்றபின் - அவனுக்கு இப்பெரு நாடு உரிமையானபின், கொற்றவன் - சக்கரவர்த்தி, திருவின் நீங்கி - அரசச் செல்வத்தினின்று நீங்கி, தவம் செய்யும் நாள் - (வனத்திலே போய்த்) தவம் செய்யும் காலத்தில், உடன் - அவரோடு, அருமை நோன்புகள் ஆற்றுதி - அருமையான விரதங்களைச் செய்வாயாக; ஆம் அன்றே - இது முறையாகுமன்றோ?

'நீ என்னுடன் காட்டிற்கு வருதல் தருமமன்று' எனத் தாய்க்குக் கூறிய இராமபிரான், 'முறைப்படி நீ வனம் போகவேண்டிய தருணம் அண்மையில் வாய்க்கும்; அதாவது, பரதன் இந்நாட்டரசனாகி நிலை பெற்றபின், தந்தையார் வானப்பிரத்தராகி வனம் புகுவார்; அப்போது நீயும் அவருடன் இருந்து உற்றன செய்தற்குரியை யாவாய்' என்றான். இவ்வாறு தவம் மேற்கொள்ளல் அரசர் மரபு. தசரதனும் இந் நோக்குடையவனென்பது, "தொய்யன் மாநிலச் சுமையுறுஞ் சிறை துறந் தினியான், உய்ய லாவதோர் நெறிபுக வுதவிடல் வேண்டும்" (62) என முற்கூறியவதனால் அறியப்படும். பரதன் முடிசூடி அரசெய்தினும் அவனது உரிமையை நாட்டு மக்கள் உணர்ந்து மனங்கொள நாட்கள் பலவாகுமாதலின், 'அவற்கு மாநில முரிமை யுற்றபின்' எனப்பட்டது.

(பி - ம்.) 1. எம்பியும், எம்பியம், எம்பியர்; மண்ணரசாள்வதற்கு, ஆள்வதுக்கு, ஆயவர்க்கு, மன்னரசாள்வதற்கு.
2. உரிமையா நிலம், உரிமையா னிலம், உரிமையாய் நிலம், உரிய மாநிலம்; உற்றவன்.
3. திருவினீங்கத், திருவு நீங்கித்; தவஞ்செய நாளுடன், திருத்தவஞ் செய்யு நாள், திருவினீங்கிச் செமுத்தவஞ் செய்யுநாள்.
4. ஆற்றுதி யாமென்றான், ஆற்றுதி யாலென்றான், ஆற்றுதியா மென்றே, ஆற்றுதி ராமென்றான். (21)

317. சித்த நீதிகைக் கின்றதென் தேவரும்
ஒத்த மாதவஞ் செய்துயர்ந் தாரன்றே
எத்த னைக்குள வாண் டுக ளீண்டவை
பத்து நாலும் பகலல வோவென் ருன்.

நீ சித்தம் திகைக்கின்றது என் - நீ மனம் திகைப்புறுதல் ஏன்? தேவரும் - தேவர்களுங்கூட, ஒத்த மாதவம் செய்து - தமக்கேற்ற பெருந் தவத்தைச் செய்து, உயர்ந்தார் அன்றே - தம் நிலையில் உயர்ந் துள்ளாரன்ருே? ஈண்டு - இங்கே, ஆண்டுகள் எத்தனைக்கு உள - (நான் வனத்தில் தங்கவேண்டிய) ஆண்டுகள் எத்தனை இருக்கின்றன? அவை பத்தும் நாலும் - அவ்வருடங்கள் பதினுன்கும், பகல் அலவோ - பதினுன்கு நாட்கள் போலல்லவோ (ஆகும்), என்ருன்—.

'இந்திரன் முதலிய பெருந் தேவர்களும், அப்பதவி எய்துதற்கு மிக நெடுங்காலம் தவம் செய்தன்ருே அதனை எய்துகின்றனர்? இதனுல், தவத்தால் உயர்வெய்தல் தெளிவு; எனவே, நானும் உயர் வெய்துவேன். நான் வனத்தில் இருக்கவேண்டிய காலமோ மிகக் குறுகியது; அப் பதினுன்கு வருடங்களும் பதினுன்கு நாட்கள் போலக் கழியும்; நீ கவலையுருதே' எனத் தேற்றினன். முன்னே பல எடுத்துச் சொல்லியும் தாயின் மனக் கலக்கம் மாருமையின், 'சித்தம் நீ திகைக்கின்றதென்' என்ருன். கால நீட்சி தோற்ருதவாறு, 'பத்தும் நாலும்' என்றும், 'அவை பகல்' என்றும் கூறினுன். மானிடர்க்கு ஓராண்டு தேவர்க்கு ஒரு நாள் ஆதலின் அத்தேவ மானத்தால் கூறின குறிப்பும் இதிற் பெறப்படும். 'ஒத்த' என்றது, 'அவ்வந் நிலைக்கேற்பக் கால நீட்சியுங் கடுமையுங் கொண்ட' என்பதாம். அங்ஙனமன்றி, 'நான் குறுகிய காலத்திற் பெருநன்மை எய்துவேன்' என்பதும் குறித்தவாரும்.

(பி - ம்.) 1. நீ திகைக்கின்றனை, நீர் திகைக்கின்றதென்.
2. மொய்த்த மாதவம்; உயர்ந்தா ரென்றே, உயிர்த்தா ரென்றே.
3. எத்துணைக்குள; யாண்டுகள்; ஈண்டிவை, ஆண்டவை, யாண்டவை, இன்றவை.
4. பத்துநாலு பகலலவோவென, பகலல்லவோ வென்ருன், பத்த நாலுமன்ருே பகரென்றனன். (22)

318. முன்னர்க் கோசிக னென்னு முனிவரன்
தன்ன ருட்டலை தாங்கிய விஞ்சையும்
பின்ன ரெய்திய பேறும் பிழைத்தவோ
இன்ன நன்றவர்க் கேயின செய்தலே.

முன்னர் - முன்னே, கோசிகன் என்னும் முனிவரன்தன் - கௌசிகனென்ற முனிச் சிரேட்டனது, அருள் தலை - அருளால், தாங்கிய - (நான்) பெற்ற, விஞ்சையும் - வித்தைகளும், பின்னர் -

அதன்பின், எய்திய பேறும் - (அவனாலே நான்) அடைந்த பாக்கியமும், பிழைத்தவோ - குற்றமுடையனவோ? (ஆதலால்), இன்னம் - இன்னமும், அவர்க்கு ஏயின செய்தல் - அத்தகைய முனிவர்களுக்குப் பொருந்திய பணிகளைச் செய்தல், நன்றே - நன்மையே யாகும்.

இதுமுதல் நான்கு பாடல்கள் ஒரு தொடர்.

'முன்னே கௌசிக முனிவரோடு நான் சென்றதனால் சிறந்த மந்திரங்களையும், அஸ்திரசஸ்திர வித்தைகளையும் அவர்பால் பெற்று, அப்போதே அரக்கர் சிலரை அழித்து முனிவர் வேள்வி காத்து நற்பெயரெய்தினேன்; பின்னர் விவாகமும் அவரால் முடிவுற்றது; இவற்றில் குறை ஏதேனும் உண்டோ? அவர் ஒருவரால் இத்துணை நன்மையெனின், அவர் போன்ற பல முனிவரோடு பழகி அவர்களுக்கு உற்றது செய்வதனால் இன்னும் பல நன்மைகள் எய்துதல் கூடும் அன்றோ?' என, வனம் புகுதலால் வரும் நன்மைகளைத் தெளியக் கூறினான். கோசிகன் - கௌசிகன்; விசுவாமித்திரன். விஞ்சை - பலை, அதிபலை என்ற மந்திரங்களும், அத்திர சத்திர வித்தைகளும். பின்னர் எய்திய பேறு என்றது, சீதையின் திருமணத்தைக் குறித்தது. அருட்டலை : 'தலை' என்ற ஏழனுருபு கருவிப் பொருளில் வந்தது. பிழைத்தவோ - பிழைபட்டனவோ. இறுதி ஏகாரம் பிரித்து நன்று என்பதனோடு கூட்டி உரைக்கப் பெற்றது. நன்றே - நன்மையே.

(பி - ம்.) 1. முன்னர்க் கௌசிகன், முன்னக் கோசிகன், முன்னெர் கோசிகன்; என்ற முனிவரன்.
3. பிழைத்ததோ.
4. இன்ன நன்றவர், இன்ன னின்றவர்க்கு, இன்னு னன்றவர்க்கு; ஏயின செய்வதே, ஏயது செய்தலே, ஏயது செய்வதே, ஏயதும் செய்தலே, எய்துதல் செய்தலே. (23)

319. மாத வர்க்கு வழிபா டிழைத்தரும்
போத முற்றிப் பொருவரு விஞ்சைகள்
ஏத மற்றன தாங்கி யிமையவர்
காதல் பெற்றிந் நகர்வரக் காண்டியால்.

மாதவர்க்கு வழிபாடு இழைத்து - (வனத்திலே) பெருந் தவசியர்க்கு வழிபாடுகளைச் செய்து (அதனால்), அரு போதம் முற்றி - அரிய ஞானம் நிறைந்து, ஏதம் அற்றன - குற்றமற்றனவும், பொருவு அரு - தமக்கு ஒப்பில்லாதனவுமான, விஞ்சைகள் தாங்கி - பல (மந்திரம் முதலிய) வித்தைகளையும் பெற்று, இமையவர் காதல் பெற்று - தேவர்களின் அன்பையும் பெற்று, இ நகர் வர காண்டி - (மிக்க சிறப்போடு) இந்த நகருக்கு நான் திரும்பி வர நீ காண்பாய். ஆல் : அசை.

'இன்ன நன்றவர்க் கேயின செய்தலே' என முன்னர்க் கூறியதன் விளக்கம் போன்றது இப்பாடல்.

'வனத்தில் வாழும் பெருந் தவமுனிவர்களை வழிபட்டு அவர்களோடு பழகுவதனுல், அவர்கள் அருளுக்குப்பாத்திரமாகி, மறுமைக்கு உதவும் அரிய வீட்டுலக ஞானத்தையும், இம்மைக்கு உதவும் பல மந்திர வித்தைகளையும் பெறலாகும்; அதனுல் நம் முன்னோர்போல, தேவர்க்கும் உதவும் பேற்றையும், அவர்கள் அன்பையும் ஒருங்கே பெறலாம்; இத்தகைய நன்மைகளைப் பெற்றுப் பெருமையுடன் மீண்டு வரும் என்னை நீ கண்குளிரக் கண்டு மகிழ்வாய்' எனத் தாய் மனங்கொளக் கூறுகின்முன்.

(பி - ம்.) 1. மாதவற்கு, மாதவர்க்கும்.
2. பொருவரும், பொருள்தரும்.
3. ஏதமற்றவை; இளையவர்.
4. பெற்று நன்காவரக், பெற்று நன்காய்வரக், பெற்றனை நான்வரக், பெற்றின்னகர் வரக்; காண்டியே. (24)

320. மகர வேலைமண் டொட்டவண் டாடுதார்ச்
சகரர் தாதை பணிதலை நின்றுதம்
புகரில் யாக்கையி னின்னுயிர் போக்கிய
நிகரின் மாப்புகழ் நின்றதன் ரேவெனு.

மகரம் வேலை - சுருமீன்கள் தங்கும் பெருங்கடல் சூழ்ந்த, மண் தொட்ட - பூமியைத் தோண்டியெடுத்த, வண்டு ஆடு தார் சகரர் - வண்டுகள் சுழலும் மாலையை அணிந்த சகரபுத்திரர்கள், தாதை பணி தலை நின்று - (தம்) தந்தையின் பணியில் முற்பட்டு நின்று (அதன் பொருட்டு), தம் - தம்முடைய, புகர் இல் யாக்கையின் - குற்றமற்ற உடம்பினின்றும், இன் உயிர் போக்கிய - இனிய உயிரைப் போக்கிக் கொண்ட, நிகர் இல் மா புகழ் - இணையில்லாத பெரும் புகழ், நின்றது அன்ரே - இன்றும் நிலைத்துள்ளதன்ரே? எனு - என்று கூறி...

இது, அடுத்த கவியின் இறுதியில் உள்ள 'என்ருன்' என்பதனேடு முடியும்.

இதுவரை இராமபிரான், வனவாழ்க்கையால் வரும் நன்மைகளை எடுத்துக் கூறி, இதில், தம் முன்னேரான சகரர், தந்தை பணிதலை நின்று ஒருங்கே மடிந்து புகழ் பெற்ற வரலாற்றைக் குறித்து, உயிரைக் கொடுத்தேனும் தந்தை பணி தவருது செய்தலே சிறப்புடையதென்பதனை வற்புறுத்துகின்ருன். அடுத்த பாடலுள்ளும் பரசுராமன் வரலாற்ருல் இது பேசப்படுகின்றது.

சகரர் தோண்டியதனுற் கீழ்கடல் 'சாகரம்' எனப் பெயர் பெற்றது. அப்பெயர் இன்றும் நின்று அவர்களுக்குப் புகழ் தருகின்றது. பல்லாயிரவரான அவர்கள், தம் தந்தை தொடங்கிய பரிவேள்வியை முற்றுவித்தற் பொருட்டுச் செய்த முயற்சியிலே அனைவரும் ஒருங்கே

மடியவும் நேர்ந்தது. இவ்வரலாற்றை, பாலகாண்டத்துள் (504 - 512) விரிவாகக் காண்க.

மண் தொட்ட சகரர், வண்டாடு தார்ச் சகரர் எனத் தனித்தனிக் கூட்டுக. போக்கிய புகழ் - போக்கியதனால் வந்த புகழ்.

(பி - ம்.) 1. வண்டாட்டு தார்ச், வண்டோட்டதார்ச், வண்டோட்டினர்ச், தண்டோட்டினர்ச், தண்டோட்டினர்ச்; தொட்டவர் வச்சிரச், தொட்டவண்டாடற்றார், மகர வேலையின் மண்டொட்டவன்பிலர்.
2. தந்தை பணி.
3. யாக்கையினின்றுயிர். புகழில்யாக்கையுளின்னுயிர், ஆக்கையினின்னுயிர், புகழில் யாக்கையினின்னுயிர், புகரிலாமையினின்னுயிர்.
4. நிகரிலாப் புகழ் மின்றதன்றே, நிகரிலாய் புகழ்சின்ற தன்றே; என்றான். (25)

321. மான்ம றிக்கரத் தான்மழு வேந்துவான்
தான்ம றுத்திலன் றாதைசொற் றாயையே
ஊன றக்குறைத் தானுர வோனருள்
யான்ம றுப்பதென் றெண்ணுவ தோவென்றான்.

மான் மறி கரத்தான் மழு - மான் கன்றை யேந்திய திருக்கரத்தை உடைய சிவபிரானுக்குரிய மழுப்படையை, தான் ஏந்துவான் - தான் தாங்கும் பெருமை பெற்ற பரசுராமன், தாதை சொல் மறுத்திலன் - தந்தை சொல்லை மறுக்காதவனாய், தாயையே - தன் தாயையே, ஊன் அற குறைத்தான் - உடம்பு இரண்டாக அறும்படி (தலையைத்) துணித்தான்; (அங்ஙனம் இருக்க), உரவோன் அருள் மறுப்பது என்று யான் எண்ணுவதோ - அறிவாற்றல் மிக்க என் தந்தையின் அருளாணை மறுக்கத்தக்கதென்று நான் கருதுவதோ? (கருதுவது முறையோ?) என்றான்—.

'பரசுராமன் பேராற்றலுடையவனாயிருந்தும் தந்தை சொல்லை மறுக்காமல் தாயையே தலை துணித்தான்; எனக்குத் தந்தையிட்ட பணி அத்தகையதும் அன்று; எனக்கு நன்மை தருவது. எனவே, தந்தை சொல்லை நான் மறுத்து வனம் போகாமலிருப்பது முறையன்று' என இதனாலும் தான் வனம் புகுதலை வற்புறுத்துகின்றான் இராமன்.

பரசுராமன் மழுவையேந்தி உருத்திர மூர்த்தியைப் போலவே அழித்தற்றொழிலை மேற்கொண்டதனால், 'மான்மறிக் கரத்தான் மழுவேந்துவான்' என விசேடிக்கப் பெற்றான். இராமபிரான், தந்தை சொல்லைத் தான் மறுக்கக் கருதலும் தவறாகுமென்றதன் நுணுக்கம் நினைக்கத் தக்கது. யான் மறுப்பதென்றெண்ணுவதோ - நான் மறுக்கத் தகுமென்று நீ கருதுவதோ எனக் கருதுதலைக் கோசலைக்கு ஆக்கி உரைப்பினும் ஆம். பரசுராமன் தந்தை, ஜமதக்கினி முனிவன். தாய், இரேணுகா தேவி; அவள் கற்பில் குற்றம் கண்டு சினங் கொண்ட ஜமதக்கினி முனிவன், தன் புதல்வர்களைக் கூவி, 'கற்பில் இழுக்குற்ற

இவனை நீங்கள் தயக்கமின்றிக் கொன்றுவிடுக' எனக் கட்டளையிட, அதனைக் கேட்ட மூத்த புதல்வர் நால்வரும் அது செய்யத் தயங்கி நின்றனர். அது கண்ட முனிவன், கடைசிப் புதல்வனான பரசுராமனை நோக்கி, 'என் கட்டளைப்படி, உன் தாயையும் என் சொற்கேளாத உன் தமையன்மாரையும் நீ அழிக்க' என, பரசுராமன் அவ்வாறே செய்து முடித்தான்: பின்னர்ச் சினந் தணிந்து மனம் நெகிழ்ந்த முனிவன் பரசுராமனைப் பாராட்டி, 'நீ வேண்டும் வரம் கேள்; தருகிறேன்' என, 'என்னால் உயிரிழந்த என் அன்னையும், உடன் பிறந்தோரும் மீண்டும் உயிர் பெற்று எழல் வேண்டும்' எனப் பரசுராமன் வேண்ட, முனிவன் அவ்வாறே அருள் சுரந்து அவர்களை உயிர் பெற்றெழச் செய்தான் என்பது இதிற் கண்ட வரலாறு. தந்தையின் சொல்லால் பசுவை வதைத்த கண்டு மகரிஷி சரித்திரமும் இவ்விடத்து முதல்நூலில் கூறப்படுகின்றது.

மறி என்பது ஆடு, குதிரை, மான் ஆகியவற்றின் இளமைப் பெயர். ஊன் என்பது ஆகுபெயராய் உடம்பைக் குறித்தது.

(பி - ம்.) 2. தான் மறுக்கிலன்; தாதை சொற்றுயினை, தாதை சொற்றுய்தலே.
3. ஊன்றனைக் குறைத்தான்; உரவோனுரை, உரவோன் பணி.
4. யான் மறுப்பதொல் று, யான் மறப்பனென்று; எண்ணுவதோவென, எண்ணுவதெவனோ. (26)

கோசலையின் எண்ணம்

322. இத்தி றத்த வெனைப்பல வாசகம்
உய்த்து ரைத்த மகனுரை யுட்கொளா
எத்தி றத்து மிறக்குமிந் நாடெனு
மெய்த்தி றத்து விளங்கிழை யுன்னுவாள்.

இ திறத்த - இத்தன்மையனவான, எனை பல வாசகம் - மற்றும் பல வார்த்தைகளை, உய்த்து உரைத்த - வற்புறுத்திச் சொன்ன, மகன் உரை - இராமன் சொற்களை, உள் கொள்ளா - மனத்துட் கொண்டு, எ திறத்தும் - எவ்வகையிலும், இ நாடு இறக்கும் எனு - இந்த நாட்டை விட்டு (இவன்) நீங்கியே திருவான் என்று கருதி, மெய் திறத்து விளங்கு இழை - உண்மைத் தன்மையையுடைய விளங்குகின்ற அணியைப் பூண்ட கோசலை, உன்னுவாள் - (இராமனைத் தடுக்கும் வகையை) ஆலோசிப்பவளானாள்.

இராமன், தான் வனம் போவதைத் தடை செய்தாலும், தன்னுடன் அவள் காட்டிற்கு வருதலும் தகாதென்று காரணங்காட்டிக் கூறினமையின், அவனைத் தடுத்தல் நம்மாலாவதன்றெனத் தெளிந்த கோசலை, அதற்குரிய வேறு வழியை ஆலோசித்து, கட்டளை தந்த அரசனை வணங்கி வேண்டி அவனைக் கொண்டே அது செய்விக்கலாமென்ற முடிவுக்கு வருகின்றாள். அஃது அடுத்த பாடலால் பெறப்

படும். கோசலையும் மெய் திறம்பாத் தன்மையுடையவளாதலால், 'மெய்த்திறத்து விளங்கிழை' எனப்பட்டாள்.

திறத்த : வினையாலணையும் பெயர். கொளா, எனா : செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். இறக்கும் : செய்யுமென் முற்று.

(பி - ம்.) 1. இத்திறத்தி லெனைப் பல, இத்திறத்தன ஏனைப்பல.
2. உய்த்துரைக்கும், ஓத்துரைத்த; உட்கொளாள், உட்கொளாது.
3 எத்திறத்தில்; இறக்குமிங்காளென, இங்காளெனா, இன்றுனெனா, இன்றேடெனா, என்றேடெனா, இறக்குமின்றேடெனா.
4. மெய்த்திறத்த, மெய்த் திறத்தலை; உள்ளுவான். (27)

323. அவனி காவல் பரதன தாகுக
இவனிஞ் ஞால மிறந்திருங் கானிடைத்
தவனி லாவகை காப்பென் றகவினல்
புவனி நாதற் றொழுதென்று போயினள்.

அவனி காவல் - நாடு காத்தல், பரதனது ஆகுக - பரதனுடைய தாகட்டும்; இவன் - இந்த இராமன், இ ஞாலம் இறந்து - இந்த நாட்டைக் கடந்து, இரு கான் இடை - பெரிய காட்டிலே (போய்), தவன் நிலாவகை - தவத்தில் நிலைபெறுவண்ணம், தகவினல் - முறையாக, புவனி நாதன் தொழுது - சக்கரவர்த்தியை வணங்கி (வேண்டி அவனது இசைவால்), காப்பென் என்று - தடுப்பேனென்று உட்கொண்டு, போயினள் - (சக்கரவர்த்தி இருக்கும் இடம் நாடிச்) சென்றாள்.

தன்னால் இராமன் காடு புகுதலைத் தடுக்கவொண்ணுதென்று உணர்ந்த கோசலை, பரதன் அரசுசெய்துதலில் தனக்கு வேறுபாடில்லாமையால், 'அஃதங்ஙனமே யாகுக; இராமன் வனம் புகுதலை மட்டும் சக்கரவர்த்தியைத் தொழுது வேண்டித் தடை செய்விப்போம்' என்று கருதிச் சென்றாள்.

அவனி - நாட்டைக் குறித்தது. தவன் : இறுதிப் போலி. புவனி : புவனம் என்ற வடசொல்லின் திரிபு; இஃது இவ்வாறு வருதலை, "பொன்னுல காளீரோ புவனி முழுதாளீரோ" (திருவாய். 6. 8: 1.), "புவனியெலாம் நீரேற்றளந்த நெடியபிரான்" (நம்மாழ். திருவிருத் - 69) என்ற பெரியார் வாக்குக்களிலும் காண்க.

இராமபிரான் கோசலைக்கு அவள் கடமையையும் தன் கடமையையும் எடுத்துச் சொன்னதோடு, 'பரதன் தருமம் அறிந்தவனாதலால், கைகேயியால் உனக்கு அவமரியாதை உண்டாகாதபடி பார்த்துக் கொள்வான்; என்னை வற்புறுத்தாது அநுமதி தருக' என்று கூறி வேண்ட, கோசலை அவனது உறுதி கண்டு, அவன் புறப்படுமு தருணத்தில அழுதல் அமங்கலமாகுமென்று கருதித் தன் அழுகையை மாற்றிக்

கொண்டு, அவனுக்கு இரட்சை கட்டி வாழ்த்துக் கூறியனுப்பினுள் என்பது முதல்நூலில் காண்பது.

(பி - ம்.) 1. அவனி காத்தல்; பரதன்ருனுகுக.
2. இவனிஞால மிறந்தானிடை, அவனி ஞால மிறந்திருங் கானிடை.
3. தவமிலாப் பகை, தவமிலாவகை, தவமிலாதறத் தவிர்ப்பென். தகைவிலாப், தகலாப். தகவுடைப்.
4. புவனிகாதர்த் தொழுதெனப், புவனிகாத எழுகென்று. (28)

இராமன் சுமித்திரையிடம் செல்லுதல்

324. போகின் ருளைத் தொழுது புரவலன்
ஆக மற்றிவ டன்னையு மாற்றியிச்
சோகந் தீர்ப்பவ ளென்று சுமித்திரை
மேகந் தோய்மணிக் கோயிலை மேயினுன்.

போகின்ருளை - சென்ற கோசலையை, தொழுது - (இராமன்) வணங்கிவிட்டு, புரவலன் - அரசனுேடு, இவள் தன்னையும் - இவளையும், ஆகம் ஆற்றி - மனம் தேறச்செய்து, இ சோகம் தீர்ப்பவள் என்று - (நம் பிரிவினுல்ஆகும்) இந்தச் சோகத்தைத் தீர்க்கத்தக்கவள் (சுமித்திரை) என்று கருதி, சுமித்திரை - சுமித்திரையின், மேகம் தோய் - மேகங்கள் தங்குதற்கிடமான, மணி கோயிலை - அழகிய மாளிகையை, மேயினுன் - அடைந்தான்.

கோசலைக்கு அடுத்தபடியாக, சுமித்திரையிடம் செய்தி கூறி விடைபெறக் கருதிய இராமபிரான், தன் தந்தை, தாய் இருவரையும் ஆறுதல் கூறித் தேற்றவல்லவள் அவள் என்று அவள் தகுதியையும் மனத்துட் கொண்டு சென்ருன் என்க.

புரவலன் - இராமனுமாம். ஆகம் மாற்றி எனப் பிரித்துக் கோடலும் பொருந்தும். மற்று : அசை.

கோசலைக்கு அடுத்தபடி, சீதையிடம் இராமபிரான் சென்றதாக வான்மீகம் கூறும்.

(பி - ம்.) 2. ஆகமற்றவள், ஆகமுற்றவள், ஆகமுற்றவை, ஆகுமற்றவள், மற்றிவள்; ஆற்றியச்.
3. சோகந் தீர்ப்பளெனுவச், தீர்ப்பனெனுவச்.
4. மேகந்தோய்தனிக்கோவிலை, அணிக்கோயிலை, திருக்கோயிலை, மேகந் தோய்ந்திடு கோயிலை; மேவினுன். (29)

தசரதனைக் கண்ட கோசலையின் நிலை

325. நடந்த கோசலை கேகய நாட்டிறை
மடந்தை கோயிலை யெய்தினன் மன்னவன்
கிடந்த பார்மிசை வீழ்ந்தனள் கெட்டுயிர்
உடைந்த போழ்தி னுடல்விழுந் தென்னவே.

நடந்த கோசலை - (சக்கரவர்த்தி இருந்த இடம் தேடிச்) சென்ற கோசலை, கேகய நாட்டு இறை மடந்தை - கேகய நாட்டு அரசன் மகளாகிய கைகேயியின், கோயிலை எய்தினள் - அரண்மனையை அடைந்து, மன்னவன் கிடந்த பார்மிசை - அரசன் (மூர்ச்சையுற்றுக்) கிடந்த தரையில், உயிர் உடைந்த போதின் - உயிர் பிரிந்தபோது, உடல் கெட்டு விழுந்தது என்ன - உடம்பு தன் நிலை கெட்டு விழுந்தது போல, வீழ்ந்தனள் - சாய்ந்தாள்.

அரசன் கைகேயியின் அரண்மனையில் இருத்தலை அறிந்து கோசலை அங்கே சென்று, அரசன் மூர்ச்சையுற்றுத் தரையில் கிடத்தலைக் கண்டு துயரம் தாங்காமல் தானும் மயங்கித் தரையில் சாய்ந்தாள். கோசலையும் தசரதனும் உடலும் உயிரும் போல் ஒன்றுபட்டவர் என்பதை உவமையால் விளக்கினர். நடந்த என்பது, போயினுள் (323) என முன்னுள்ளதை அநுவதித்தது. மடந்தை, பெண் என்பது குறித்தது. எய்தினள்: முற்றெச்சம். விழுந்தென்ன: தொகுத்தல்.

இதன்பின் ஒரு சுவடியில்,

விழுந்து பார்மிசை வெய்துயிர்த் தாவிசோர்ந்
தெழுந்தென் னுயக னேதுய ரேதெனத்
தெளிந்தி லேனிது செப்புதி நீயென்
அழுந்தி னள்பின் னரற்றத் தொடங்கினள்.

என்ற பாடலும், அதன்கீழ், 'விடைபெறு படலம் முற்றும்' என்ற தொடரும் காணப்படுகின்றன. மேலே 366 வரை உள்ள பாடல்கள் இச்சுவடியில் 'சாபவசனப் படலம்' என்ற தலைப்பின்கீழ் உள்ளன.

(பி - ம்.) 1. கடந்த; கேகய நாடன்றன், கைகயநாடன்றன், கைகய நாட்டிறை.
2. கோவிலை; மன்னவர், மற்றவன்.
4. உடைந்த போதின், போதில், போதத்து. (30)

கோசலை புலம்பல்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

326. பிறியார் பிரிவே தென்னும் பெரியோய் தகவோவென்னும்
நெறியோ வடியோ நிலைநீ நினையாய் நினைவே தென்னும்
வறியோர் தனமே யென்னுந் தமியேன் வலியே யென்னும்
அறிவோ வினையோ வென்னு மரசே யரசே யென்னும்.

(மயங்கி விழுந்த கோசலை சிறிது தெளிவுற்று), பிறியார் பிரிவு ஏது என்னும் - இதுவரை பிரியாதவர்கள் இப்பொழுது பிரிதற்குக் காரணம் என்ன என்பாள்; பெரியோய் - (எவ்வகையிலும்) பெரியோனே, தகவோ - (இது) தகுதியோ, நெறியோ - நீதியோ, என்னும்.

என்பாள்; அடியோம் நிலை - உன் அடியவராகிய எங்கள் நிலையை, நீ நினையாய் - நீ எண்ணினாயில்லை; நினைவு ஏது - உன் எண்ணந் தான் என்ன? என்னும் - என்பாள்; வறியோர் தனமே என்னும் - பொருளற்றார்க்குப் பொருளானவனே என்பாள்; தமியேன் வலியே என்னும் - துணையற்ற எனக்கு வலிமையானவனே என்பாள்; அறிவோ - (இது) நீ அறிந்து நிகழ்ந்ததோ? (அல்லது) வினையோ - (பிறருடைய) சூழ்ச்சியோ? என்னும் - என்பாள்; அரசே அரசே என்னும் - என் அரசே, அரசே என்று கதறுவாள்.

இதுமுதல் நான்கு பாடல்கள் கோசலை பலவாறு பிரலாபித்தலைக் கூறும்.

இராமன், தசரதனையும் கோசலையையும் விட்டு இதுவரை பிரிந்ததில்லை; அவன் இப்போது பிரிதல் பிரியார் பிரிவு. தகவோ, நெறியோ என்னும் எனக் கூட்டுக. அடியோம் என்றது பிற தேவிமார்களையும் உளப்படுத்தியது. அறிவோ வினையோ - இது நின்னறிவுக் கேற்றதோ நீ செய்யத்தக்க காரியமோ எனவும், வினையோ - எனது தீவினையோ எனவும் கூறலாம். அறிவு ஓ வினையோ எனப் பிரித்துக் கூறலுமாம். அரசே, அரசே என்ற அடுக்கு அவலத்தால் வந்தது. பிரிவு என்ற பொருளில் 'பிறிவு' என்பதும் ஆன்றோர் வாக்கில் அமைந்துள்ளது காணலாம். "பிறிவினை யறியா நிழலது போல" (திருவா. 4 : 75), "பிறிந்தேன் பெற்ற மக்கள்" (திருமங்கையாழ்வார்); எதுகை நோக்கி வந்ததெனக் கோடலும் ஒன்று.

(பி - ம்.) 1. *பிரியார் பிரிவோ, பிறிவார், பிரிவோவிதுதான், பிரிவோவிவைதாம், பிரிவெய்தியதாம், பிறிவேயென்னும், பிறிவேவிதுதான், பெரியாய், பெரியோர்; தகவோவென்றான், தகவோவென்னும், தகைவோவென்னும்.*

2. *அடியே நிலைநீ, அடியோ நிலைதான், நெறியோ யடியம் நிலைநீ, அடியோம் நிலைநீ, அடியேம்நிலைநீ; நெறியோ நெறியோவென்னும், நெறியோ வடிதாள் என்னும்; நினையா, நினைவாய், நிலையா, நிறைசேர்; நினைவேயென்னும், நிலையாயென்னும், நிலையேதென்னும், நிலையோவென்னும், நிலையேனென்னும், அருளேயென்னும்.*

3. *வலியோவென்னும், வலியென்னென்னும்.*

4. *அறிவோ விலையோ, அறிவோ வயர்வோ, அறிவோ வினையே.* (31)

327. இருளற் றிடவுற் றெளிரு மிரவிக் கெதிருந் திகிரி
உருளத் தனியுய்த் தொருகோ னடையிற் கடைகா ணுலகம்
பொருளற் றிடமுற் றுறுமப் பகலிற் புகுதற் கென்றே
அருளிற் கருதுற் றதுநீ யரசர்க் கரசே யென்னும்.

அரசர்க்கு அரசே - சக்கரவர்த்தியே, நீ—, அருளின் கருது உற்றது - உனதருளால் (இராமனை வனம் போக்க) எண்ணியது, இருள்

அற்றிட உற்று ஒளிரும் - (உலகத்து) இருள் நீங்க மிக்கு விளங்குகின்ற, இரவிக்கு எதிரும் - சூரியனுக்கு ஒப்பான, திகிரி - (உனது) ஆஞ்ஞா சக்கரத்தை, தனி உருள உய்த்து - ஒப்பு அற (விண்ணிலும் மண்ணிலும்) உருளும்படி செலுத்தி, ஒரு கோல் நடையில் - தனிச் செங்கோல் நடாத்துதலில், கடைகாண் - முற்றுறக் கண்ட, உலகம் - இவ்வுலகமானது, பொருள் அற்றிட முற்று உறும் அ பகலில் - எல்லாப் பொருள்களும் அழிவெய்த முடிவுறும் அவ்வூழிக்கால நிலையில், புகுதற்கு என்றோ - செல்லுதற்காகவோ? என்னும் - என்பாள்.

'உலகமெல்லாம் தம் உயிரெனக் கருதும் இராமனைக் காட்டிற்குச் செலுத்துவதனால், உலகம், ஊழி புடை பெயர்வது போன்ற பெருந் துன்பத்திற்குள்ளாகும்; இதற்காகவோ இந்த எண்ணம் உமக்கு உதித்தது?' என்கின்றாள். சக்கரவர்த்தியின் ஆஞ்ஞா சக்கரத்துக்கு இரவி உவமை; இரவி விண்ணில் ஊர்ந்து உலகத்திருளைப் போக்கும்; ஆஞ்ஞாசக்கரமும், விண்ணிலும் மண்ணிலும் சென்று, வறுமை, அறியாமை, பகை முதலிய துன்பவிருளைப் போக்கும் என ஒப்புமை காண்க. திகிரி தனி உய்த்தலும், ஒரு கோல் நடாத்துதலும் சக்கர வர்த்தியின் ஒப்பற்ற உயர்வு குறித்தன; "குன்றென வுயரிய குவவுத் தோளினான், வென்றியந் திகிரிவெம் பரிதி யாமென, ஒன்றென வுலகிடை யுலாவி மீமிசை, நின்றுநின் றுயிர்தொறு நெடிது காக்குமே" (பால. 179) என்றது ஈண்டு ஒப்புநோக்கத் தகும். கடை - கடைசி வரை; நீ ஆண்ட இந்நாள் வரை. காணுதல் - அநுபவித்தல். அப்பகல் - அந்நாள். அருளின் என்றது குறிப்பு மொழி; அருளின்மை குறித்தது.

(பி - ம்.) 1. இருளிற்றிட.
2. தனியுற்று, ஒருகோனடவிக், ஒருகோனடைஇக், ஒருகோனடையிற்றிடைகாண், ஒருகோனடையிற் கடைகாண், ஒருகோவிடையிற் கடைகாண், ஒருகானடையிற்றடைகாண், ஒருதேர்நடையிற் றிடைகாண், ஒருதொன்னடையிற் கடைகாண்.
3. பொருளிற்றிட, பொருளிற்றிடை, பொருளுற்றிட; முற்றுறுமிப், முற்றிடுமப், முற்றியவிப்; புகவிற் புகுதற்கன்றோ.
4. அருளக்கருதிற்றிதுவோ, அருளக்கருதிற்றதுவோர், அருளக் கருதுற்றது, அருளக்கருதிற்றிதுவே. (32)

328. திரையார் கடல்சூ ழுலகின் றவமே திருவின் றிருவே
நிரையார் கலையின் கடலே நெறியார் மறையின் னிலையே
கரையா வயர்வே னெனைநீ கருணா லயனே யென்னென்
றுரையா யிதுதா னழகோ வுலகே ழுடையா யென்னும்.

திரை ஆர் கடல் சூழ் உலகின் தவமே - அலைகள் நிரம்பிய கடல் சூழ்ந்த உலகத்தின் தவமாக இருப்பவனே, திருவின் திருவே - செல்வத்தின் செல்வம் போன்றவனே, நிரை ஆர் கலையின் கடலே - வரிசை

யாக நிறைந்த கலைகளின் கடல் போன்றவனே, நெறி ஆர் மறையின் நிலையே - நல்ல நெறிகள் நிறைந்த வேதங்களின் நிலைக்களமாக உள்ளவனே, கருணை ஆலயனே - கருணைக்கு இருப்பிடமானவனே, உலகு ஏழு உடையாய் - ஏழு உலகங்களையும் உரிமையாகக் கொண்டவனே, கரையா அயர்வேன் எனை - மனமுருகிச் சோர்கின்ற என்னை, நீ—, என் என்று உரையாய் - என்ன என்று (வாய் திறந்து ஒரு வார்த்தையும்) சொல்லாதிருக்கின்றாய்; இது அழகுதானோ - இவ்வாறு இருப்பது உனக்கு அழகுதானோ? என்னும் - என்பாள்.

தசரதன், தன் நினைவிழந்திருந்த நிலையில், கோசலையின் அரற்றலைக் கேட்டு யாதொன்றும் உரையாதிருந்தமையின், 'என் துயர நிலை கண்டும் இவ்வாறிருத்தல் அழகோ?' எனக் கரைந்து கதறுகின்றாள்; அப்போது அவனுடைய பல பெருமைகளையும் எடுத்துச் சொல்லுகின்றாள்.

உலகின் தவமே : "தவமொக்கும் நலம் பயப்பின்" (பால. 172). அரசச் செல்வமும் இவனாற் சிறப்பெய்துமென்பாள், 'திருவின் திருவே' என்றாள். கலையின் கடலே என்றதனோடு, "எண்ணில் நன்னூல், ஆய்ந்தே கடந்தான் அறிவென்னு மளக்கர்" (பால. 173) என்றது ஒப்பிடத் தகும். மறையின் நிலையே: "வேதத் துறைவேந்தருக்கேய்ந்த யாரும், செய்யாத யாக மிவன்செய்து முடித்த" (பால. 171) என்றது காண்க. "உலகே ழுடையாய்": "செம்மாண் தனிக்கோலுலகேழினுஞ் செல்ல நின்றான்" (பால. 169); மகா சக்கரவர்த்திகளை உலகேழு முடையான், புவனமுழுதுடையான் என்றல் மரபு.

(பா - ம்.) 1. கடல்சூழுலகிற், கலிசூ முலகின்.
2. நிரையார் அலையில் கடலே, கவியின் கடலே, நுரையார் கவியின் கடலே, நிலையார் கலையின் கடலே. மலையின்னிலையே.
3. அயர்வேன் தனிநீ; என்னீ, எனினென்று, எனிலொன்று, இனியொன்று, ஒன்றும்.
4. உரையாவிதுதான். (33)

329\. மின்னின் றனைய மேனி வெறிதா யழகற் றழிய
உன்னுந் தகைமைக் கடையா வுறுநோ யுறுகின் றுணரான்
என்னென் றுரையா னென்னே யிதுதா னேதென் றறியேன்
மன்னன் றன்மை காண வாராய் மகனே யென்னும்.

மின் நின்ற அனைய மேனி -மின்னல் (மறையாது) நின்றது போன்ற ஒளியுடைய திருமேனி, வெறிது ஆய் - ஒளியற்றதாகி, அழகு அற்று அழிய - அழகும் போய்க் கெட, உன்னும் தகைமைக்கு அடையா - எண்ணுதற்கு இயலாத, உறுநோய் உறுகின்று உணரான்-மிக்கவேதனையுறுகின்றதையும் உணரமாட்டான்; என் என்று உரையான் - என்ன என்று ஒரு வார்த்தையும் சொல்லமாட்டான்: என்னே-என்ன வியப்பு; இதுதான் ஏது என்று அறியேன்-இவ்வாறு இருப்பது ஏனென்று அறிய

கில்லேன்; மகனே—, மன்னன் தன்மை காண வாராய் - அரசன் நிலையைக் காண (விரைந்து) வருவாயாக, என்னும் - என்பாள்.

மன்னன், தன் உடம்பின் இயற்கையழகும் ஒளியும் கெட்டுப் பேச்சற்று நினைவின்றிக் கிடத்தலின், உயிர் நீங்கியதோ என்று ஐயம் உற்றவளாய்த் துயரமிக்கு, 'இராமா, தந்தையின் நிலையை வந்து காண்' என்கின்றாள். மின்னல் நிலத்து நிற்றல் இயல்பன்மையின், 'மின்நின்றனைய' என இல்பொருளுவமையாகக் கூறினர்.

நின்றனைய: தொகுத்தல் விகாரம். உறுகின்ற - உறுகின்றது.

(பி - ம்.) 1. மின்னின் றனையம் மேனி, மின்னினனையமேனி; வெறிதாய்விட மின்றதுபோல், வறிதாய்விட மின்றதுபோல், வெறிதாய்விட மின்றதுவோ.

2. தகைமைக் கடையாய், தகைமைக் குடையா, தன்மைக் கடையா, தன்மைக் கிடையா; உறுநோயுணர்கின்றுணரான், உணரானுரையான், உறுகின்றுரையாய், உறுகின்றுணரா, உறுநோவுறுகின்றுணரான்.

3. இன்னென்று; உரையானென்றே, உரையாயிதுதான், உரையாயிது நாள், உரையாயின்னே, உரையானிதுநாள்; இதுதான் யாதென்றறியேன், ஏனென்றறியேன், இது நான் ஏதென்றறியேன், இதுநாள் ஏதென்றறியேன், இடையூறியாதென்றறியேன், இடையூறேதென்றறியேன்.

4. மன்னன்றகைமை, மன்னற்றகைமை; காணவாரா. (34)

வசிட்ட முனிவன் வருகை

330. இவ்வா றழுவா ளிரியற் குரல்சென் றிசையா முன்னம்
ஒவ்வா தொவ்வா தென்னு வொளிர்வா ணிருபர் முனிவர்
அவ்வா றறிவா யென்ன வந்தான் முனிமன் னவனும்
வெவ்வா ளரசன் னிலைகண் டென்னே வினைவென் றுன்னு.

இவ்வாறு அழுவாள் - இங்ஙனம் (புலம்பி) அழுகின்ற கோசலையின், இரியல் குரல் - அழுகைக் குரல், சென்று இசையா முன்னம் - (மண்டபத்திலே) போய்க் கேட்பதற்கு முன்னம், ஒளிர் வாள் நிருபர் - (அங்குக் குழுமியிருந்த) ஒளிவீசும் வாளேந்திய அரசரும், முனிவர் - முனிவர்களும், ஒவ்வாது ஒவ்வாது என்னு - (இவ்வழு குரல்) தகாது தகாது என்று (தம்முட்) சொல்லிக்கொண்டு, அ ஆறு அறிவாய் என்ன - அவ்வழுகையின் காரணத்தை அறிக என்று வேண்ட, வந்தான் முனி மன்னவனும் - (தசரதன் இருந்த இடத்துக்கு) முனி அரசனான வசிட்டன் வந்தான்; வெம் வாள் அரசன் நிலை கண்டு - கொடிய வாளையுடைய சக்கரவர்த்தியின் (மூர்ச்சையுற்ற) நிலையைக் கண்டு, வினைவு என்னே என்று உன்னு - (இங்கு) நிகழ்ந்தது என்னவோ என்று யோசித்து...

இதுமுதல் மூன்று கவிகள் ஒரு தொடர்; மூன்ருவதன் இறுதியில் வரும் 'சொன்னுள்' என்பதனேடு முடிவுறும்.

கோசலை பெருங்குரலிட்டு அழுததனுல், அது விழா மண்டபத்தில் குழுமியிருந்த அரசர், முனிவர் செவிகளுக்கு எட்ட, 'மங்கலம் நிகழ இருக்கும் இவ்வேளையில் அமங்கலமாக அழுகுரல் கேட்கின்றதே!' என்று அவர்கள் தம்முட் பேசிக்கொண்டு, அதன் காரணத்தை அறிந்து வருமாறு, எங்கும் தடையின்றிச் செல்லவல்ல வசிட்டமுனிவனை வேண்ட, அம்முனிவனும் சென்று அரசன் நிலையைக் கண்டு சங்கை கொண்டானென்க. விரைவுபற்றி, 'இசையா முன்னம்' என்ருர். முனி மன்னவன் - வசிட்டன்.

(பி - ம்.) 1. இவ்வாறழுதாள்; அழிவாள் விழுவாளிரியக் குரல் சென்றிசைய.
2. ஒவ்வாதொல்லாது; என்ன, என்னே; ஒளிவாணிருபர் முனிவர்.
3. இவ்வாறறிவாயென்னு, அறிவாமென்னு, அறியாயென்ன; முனிவனவனும்; அந்தார் முனிவன் வந்தான், அந்தாரவனும் வந்தான்.
4. நிலைகண் டென்னும், நிலைகண்டென்னு, நிலைகண்டன்னே, வினையென்றுன்னு. (35

முனிவன் உட்கோள்

331. இறந்தா னல்ல னரச னிறவா தொழிவா னல்லன்
மறந்தா னுணர்வென் றுன்னுள் வண்கே கயர்கோன் மங்கை
துறந்தா டுயரந் தன்னைத் துறவா டுயர்கோ சலையிற்
பிறந்தார் பெயருந் தன்மை பிறரா லறிதற் கெளிதோ.

அரசன் இறந்தான் அல்லன் - (தசரதன்) இப்போது இறந்துவிடவில்லை; (ஆயினும்), இறவாது ஒழிவான் அல்லன் - இறவாதிருக்கவும் மாட்டான்; (விரைவில் இறந்துவிடுவான்); (அங்ஙனம் இருத்தலால்) வண் கேகயர் கோன் மங்கை - வளமிக்க கேகய அரசன் மகளாகிய கைகேயி, உணர்வு மறந்தான் என்று உன்னுள் - (கணவன்) தன் நினைவிழந்திருக்கின்ருனேயென்று நினையாதவளாய், துயரம் தன்னை துறந்தாள் - மனத்துயரத்தை முற்றும் விட்டுவிட்டாள்; கோசலை துயர் துறவாள் - கௌசல்யாதேவி துயரத்தை விடாதவளாய் இருக்கின்ருள் (மிக்க துயரமுறுகின்ருள்); இல் பிறந்தார் - நற்குடிப் பிறந்தவராகிய இவர், பெயரும் தன்மை - வெவ்வேருக மாறி நிற்கும் தன்மை, பிறரால் அறிதற்கு எளிதோ - மற்றவர்களால் அறிந்துகொள்ளுதற்கு எளிதாகுமோ (ஆகாது).

'எளிதோ' என்றது, 'என்னு வுன்னு' என்ற அடுத்த பாட்டின் முதலோடு தொடரும்.

மன்னன் நிலையைக் கூர்ந்து நோக்கிய வசிட்டமுனிவன், அவன் மரணுவஸ்தை கொண்டு மூர்ச்சையுற்றிருத்தலை முகக்குறி முதலியவற்ருல் உணர்ந்து, 'இவன் இறத்தல் உறுதி. இந்நிலை கண்டு

கைகேயி துயரமின்றி இருந்தாள்; கோசலையோ துயருற்றுள். இருவரும் சிறந்த இல்லிற் பிறந்தும் இருவேறு நிலையில் உள்ளனரே!' என எண்ணினுன்.

(பி - ம்.) 1. இறந்தானரசனல்லன்; இறவாதொழியானல்லன், இறவாதொழிந் தானல்லன்.
2. மறந்தானுணர் வென்றறன்னுன், மறந்தோனுணர்வென்றுன்ஞெ வன்கேகயர்கோன் மங்கை, வண்கைகயர் கோன் மங்கை, வன்கைகயர் கோன் மங்கை, அங்கேகயர்கோன் மங்கை.
3. துறவாதொழிவாளிவளே, துறவா தொழிவா ளென்னே, துறவா தொழிவா ளென்னுய், துறவா தொழிவாளென்ன, ஒழிவா னென்னே, என்னே, துறவா தொழிவரவளே, துறவா வொழி வளிவளே.
4. பிறந்தாள்; பெருந்தன்மை, பிறமும் தன்மை. (36)

கைகேயி நிகழ்ந்தவை கூறுதல்

332. என்னு வுன்னு முனிவ னிடரா லழிவா டுயரம்
சொன்னு ளாகா ளெனமுன் ருெழுகே கயர்கோன் மகளை
அன்னு யுரையா யரச னயர்வா னிலையே தென்னத்
தன்னு னிகழ்ந்த வெல்லாந் தானே தெரியச் சொன்னுள்.

என்னு உன்னு - என்றெண்ணி, முனிவன் - வசிட்ட முனிவன், இடரால் அழிவாள் - துன்பத்தாற் கலங்கும் கோசலை, துயரம் சொன்னுள் ஆகாள் என - இத்துயர நிலைக்குக் காரணத்தைச் சொல்ல வல்லள் ஆகாள் என்று கருதி, முன் தொழு கேகயர் கோன் மகளை - தன் முன் வந்து அஞ்சலி செய்த கைகேயியை நோக்கி, அன்னுய் - அம்மா, அரசன் அயர்வான் நிலை ஏது - அரசன் இவ்வாறு அயர்வ தற்குக் காரணமான நிலைமை என்ன? உரையாய் என்ன - (அதனைச்) சொல்வாயாக என்று கேட்க, (அவள்) தன்னுல் நிகழ்ந்த எல்லாம் - தன்னுல் அங்கு நடந்தவற்றையெல்லாம், தானே தெரிய சொன்னுள் - தானே விளங்கக் கூறினுள்.

ஏதோ விபரீதம் நிகழ்ந்துள்ளதென்பதனை முதலில் உணர்ந்து, பின்பு கைகேயி இருந்த நிலையால் அவளே இதற்குக் காரணமானவள் என்பதையும் ஊகித்த வசிட்ட முனிவன், இப்போது கௌசலையை வினவுவதனுற் பயன் இராது, கைகேயியைக் கேட்போம் என்று கருதும் போதே, அவள் வந்து அஞ்சலி செய்ய, நிகழ்ந்ததைக் கூறுமாறு அவளை முனிவன் கேட்டான்; அவளும் நிகழ்ந்தவற்றை விளங்கக் கூறினுள். சொன்னுள் ஆகாள் - சொன்னவளாக ஆக மாட்டாள் : சொல்லவியலாதவளாவாள். கைகேயியின் தோற்றம் அவளே ஏதோ சொல்லக் கருதினுள் என்பதைக் குறிப்பித்தது என்னலாம். அவள் சிறிதுங் கலக்கமின்றி வாய் கூசாமல் எல்லா வற்றையும் சொன்னுள் என்பார், 'தன்னுல் நிகழ்ந்தவெல்லாம் தானே

தெரியச் சொன்னாள்' என்றார். துயரம் - துயரத்துக்குக் காரணம் ஆகுபெயர். 'அன்னாய்' என்றது, அரசன் தேவியாகலின்.

(பி - ம்.) 1. என்னா முன்னா; முனிவன்னிடரால்; அழுவாடுயரம், அழுவா ளயர்வைச், அழிவாளயர்வைச்.

2. சொன்னலாகாள்; எனுமுன்; தொழுகைகயர் கோன், கைகயர் கோ.

3. அன்னாவுரையாய். உன்னாவுரையாய்; நின்னா வுரையால்; அயர்வா னிலையென்னென்னத், என்னாத், அயர்வா னிலையென்னென்னத்.

4. நிகழ்ந்த தன்மைதானே, நிகழுந் தன்மைதானே, நிகழ்ந்த தெல்லாந்தானே, நிகழ்ந்த தன்மை யெல்லாக். (37)

முனிவன் மன்னவனை எடுத்துத் தேற்றுதல்

333. சொற்றாள் சொற்றா முன்னஞ் சுடர்வா ளரசர்க் கரசைப்
பொற்றா மரைபோற் கையாற் பொடிசூழ் படிநின் றெழுவிக்
கற்றா யயரே லவளே தருநின் காதற் கரசை
எற்றே செயலின் றொழிநீ யென்றென் றிரவா நின்றான்.

சொற்றாள் சொற்றாமுன்னம்-சொன்ன கைகேயி சொல்லி முடிக்கு முன்னமே (முனிவன்), சுடர் வாள் அரசர்க்கு அரசை - ஒளிமிக்க வாளேந்திய சக்கரவர்த்தியை, பொன் தாமரைபோல் கையால் - பொலிவு பெற்ற தாமரை மலர் போன்ற (தன்) கைகளால், பொடிசூழ் படி நின்று எழுவி - புழுதி படிந்த தரையினின்றும் (தழுவி) எடுத்து, கற்றாய் - எல்லாங் கற்றவனே, அயரேல் - வருந்தாதே; அவளே - அக் கைகேயியே, நின் காதற்கு அரசை தரும் - உனதன்புக்குரிய இராம னுக்கு அரசைத் தருவாள்; செயல் எற்று - நின் செயல் எத்தன்மையது? இன்று ஒழி நீ - இப்போதே நீ (அதனை) விட்டிடுக; என்று என்று - என்று பல முறை சொல்லி, இரவா நின்றான் - வேண்டிக்கொண்டான்.

கைகேயியால் செய்தியறிந்த வசிட்டமுனிவன், அரசனைத் தரையி னின்றும் தூக்கித் தாங்கிக்கொண்டு, பலபடியாகச் சொல்லித் தேற்ற லானான். 'எல்லாம் அறிந்த நீ, இதன்பொருட்டு இவ்வாறு கலங்கி அயர்தல் தக்கதன்று; கைகேயியே இராமனுக்கு மீட்டும் அரசைத் தருமாறு செய்வோம்' என முதற்கட் கூறினான்.

சொற்றாள் : வினையாலணையும் பெயர். சொற்றா முன்னம் : விரைவு குறித்தது. எழுவி - எழுப்பி; எடுத்து. காதல் : ஆகுபெயராய் இராமனைக் குறித்தது; காதற்கு - நின் விருப்பத்திற்கு இயைய என்றலுமாம்.

(பி - ம்.) 1. சொல்லாமுன்னம்.

2. பொற்றாமரைப் பொற்கையால்; பொடிசேர்படி நின்று; எழுவக், தழுவக்.

3. காதற்கரசன்று, காதற்கரசென்று, காதற் கரசே, காளைக்கரசின்ற, காளைக்கரசென்று, காளைக்கரசை; புதல்வர்க்கரசன்று, புதல்வற் கரசென்று, புதல்வற்கரசின்று.

4. இற்றே, இற்ளே; செயலென்ளெழிகீ, செயலென்றறியேன், செய லொன்றறியேன், செயவென்றறியேன்; என்றென்றிரவா னின்றே, என்றென்றிசைய னின்ளுன், என்னென்றிரவானின்ளுன், என்னென் றிசையா னின்றே, இசையா னின்ளுன், எனனின்றிரவா னின்ளுன். (38)

மன்னன் தன்னுணர்வு பெறுதல்

334. சீதப் பனிநீ ரளவித் திண்கா லுக்க மென்காற்
போதத் தளவே தவழ்வித் தின்சொற் புகலா நின்ளுன்
ஓதக் கடனஞ் சனையா ளுரைநஞ் சொருவா றவியக்
காதற் புதல்வன் பெயரே புகல்வா னுயிருங் கண்டான்.

சீதம் பனி நீர் அளவி - குளிர்ச்சியையுடைய பனிநீரைத் தெளித்து, திண் கால் - திண்ணிய காம்பையுடைய, உக்கம் மென்கால்-விசிறியின் மெல்லிய காற்றை, போதத்து அளவு தவழ்வித்து - (மன்னன்) உணர்வு வரும் வரையில் வீசச் செய்து, இன்சொல் புகலா நின்ளுன் - இனிய வார்த்தைகளையும் சொல்லிக்கொண்டிருந்த முனிவன், ஓதம் கடல் - குளிர்ந்த பாற்கடலில் தோன்றிய, நஞ்சு அனையாள் - ஆல கால விடம்போற் கொடுமையையுடைய கைகேயியின், உரை நஞ்சு - சொல்லாகிய விடத்தின் வேகம், ஒருவாறு அவிய - ஒருவாறு தணிதலால் (சிறிது உணர்வுற்று), காதல் புதல்வன் பெயரே புகல்வான் - தன் அன்புக்குரிய புதல்வனுன இராமன் பெயரையே சொல்லலுற்ற மன்னனது, உயிரும் கண்டான் - உயிர் தங்கியிருத் தலையும் அறிந்தான்.

முனிவன் செய்த சைத்தியோபசாரங்களால் சோகம் தணிந்து சிறிது உணர்வுற்ற மன்னன், இராமா, இராமா என்று அவன் பெயரைச் சொல்லிக்கொண்டே கண் திறக்க, முனிவன் அதனைக் கண்டு சிறிது மனம் உவந்தான். இராமனைப் பிரிய நேருமே யென்ற வருத்தமிகுதியினுலே சோகமுற்றதனுல், உணர்வு வந்த வுடன் இராமன் நினைவாகவே அவன் பெயரைச் சொல்லலுற்ளுன் மன்னன்.

உக்கம் - ஆலவட்டம்; விசிறி. கால் - காம்பு; பிடி. தவழ்வித்தல் - மெல்லிதாக வீசச்செய்தல். ஓதக்கடல் நஞ்சனையாளுரை நஞ்சு: "நாகமெனுங் கொடியாடன் நாவின் வந்த, சோகவிடம் (196)" "நாவின் நஞ்ச முடைய நங்கை" (342).

(பி - ம்.) 1. பனிநீர்தெளியாத், பனிநீருதவித், பன்னீரளவித்; திண்காலுதவுந் தண்கால், திண்காலுதவ மென்கால், திண்காலுக்க மன்கால், திண்காலுக்க தண்கால், தன்சாலூரவ மென்கால்.

2. தவழ்வித்தன சொல், தழுவத் தன் சொல், தழுவித் தன் சொல், தழுவித்தின் சொல், தழுவுற்றின் சொல்.
4. பேரே புகல்வான்; காதற் புதல்வனுயிரு மிவனுருயிருங் காண்பான். (39)

வசிட்டன் மொழிதல்

335. காணு வையா வினிநீ யொழிவாய் கழிபே ரவலம்
ஆணு யகனே யினிநா டாள்வா னிடையூ றுளதோ
மாணு வுரையா டருமா மழையே யனையான் மகுடம்
பூணு தொழிவா னெனின்யா முளமோ பொன்றே லென்றான்.

காணு-(மன்னன் உணர்வுற்றதைக்) கண்டு, ஐயா-ஐயனே, இனி நீ கழி பேர் அவலம் ஒழிவாய் - இனி நீ மிகப் பெருந்துயரம் தவிர்க; ஆண் நாயகனே இனி நாடு ஆள்வான் - ஆண்களிற் சிறந்த இராமனே இனி நாட்டை ஆள்வான்; இடையூறு உளதோ - (வேறு) தடையேதும் உண்டோ? (இல்லை); மாணு உரையாள் தரும் - பெருமையில்லாத உரைகளைச் சொன்ன கைகேயி தானே அரசைத் தருவாள்; மா மழையே அனையான் - கருமேகம் போன்ற இராமன், மகுடம் பூணுது ஒழிவான் எனின் - (ஒருவேளை) தான் முடிசூடாது காடு செல்வானுனால், யாம் உளமோ - நாம் இங்கிருப்போமோ? பொன்றேல் - மனம் அழியாதே, என்றான்—.

முனிவன் என்ற எழுவாய் வருவிக்க. காணு என்றது, முன் பாட்டின் இறுதியிற் கண்டான் என்பதனை அநுவதித்தது.

வருந்துவோர்க்குத் தேறுதல் கூறும் முறையிலும், கைகேயியை மனமொப்பச் செய்யலாமென்ற துணிவாலும் முனிவன், 'கைகேயி தானே தருவாள்' என்றான். 'கைகேயி தந்தாலும் இராமன் அதனை ஏலாது, முதற் கட்டளையையே உறுதியாகக் கொண்டு வனம் புகுவானேல்' என்ற சங்கையையும் வருவித்துக்கொண்டு, 'அவ்வாருயின் அவனை வற்புறுத்தி ஏற்கச் செய்வோம்; அல்லது நாமும் உடன் செல்வோம்' என்பதுபட, 'யாமுளமோ' என்றான். யாம் உளமோ - நாம் இங்கு வறிதேயிருப்போமோ?

(பி - ம்.) 1. காணுவையோ, காணுயையா.
2. ஆணுயகனே புரநீடு; ஆள்வானையூறுளதோ.
3. மாணுவுரையாடானே தருமா மழையே யனையான், உரையாடருமம், தருமழையனையான் மகுடம், தருவாளொழியாவகையான்.
4. பூணு தொழிவானெனின்; யாமுளமே, நாமுளமோ; பொன்றலென். (40)

மன்னனது வேண்டுகோள்

336. என்றம் முனிவன் றன்னை நினையா வினையே னினியான்
பொன்றும் முன்னம் மவனைப் புனைமா மகுடம் புனைவித்
தொன்றும் வனமென் றுன்னு வண்ணஞ் செய்தென் னுரையும்
குன்றும் பழிபூ ணுமற் காவாய் கோவே யென்றான்.

என்ற முனிவன் தன்னை - (மேற்கண்டவாறு) சொன்ன வசிட்ட முனிவனை நோக்கி, (தசரதன்) நினையா - (இவ்வாறு வருமென்று) நினையாத, வினையேன் - தீவினையாளனானேன்; இனி நான் பொன்றும் முன்னம் - இனி நான் இறப்பதற்கு முன்பே, அவனை - அவ்விராமனுக்கு, புனை மா மகுடம் புனைவித்து - சூட்டுதற்குரிய பெரிய மகுடத்தைச் சூட்டி, வனம் என்று ஒன்றும் உன்னா வண்ணம் செய்து - காடு போதல் என்று ஒரு சிறிதும் (அவன்) நினையாதபடி செய்து, என் உரை குன்றும் பழியும் பூணாமல் - என் சொல் பழுதுறும் பழியையும் நான் ஏலாதவாறு, காவாய் - காப்பாயாக; கோவே - என் ஐயனே, என்றான் —.

கைகேயி தானே இராமன் அரசேற்க இயைவாள் என்றும், இராமனையும் வற்புறுத்தி ஏற்கச் செய்யலாமென்றும் வசிட்ட முனிவன் கூறினமையின், அவ்வாறு முடிந்தால், தன் விருப்பம் நிறைவேறுவதுடன், தான் கொடுத்த வரத்தைத் தானே மறுத்தானென்ற பழி தன்னைச் சாராது எனக் கருதி, அவ்வாறே செய்விக்கும்வண்ணம் முனிவனை வேண்டிக்கொண்டான் தசரதன். குலகுருவாகும் சிறப்பு நோக்கி, 'கோவே' என்றான்.

என்றம்முனிவன் : ஓசை நயம் கருதி மகரவொற்று விரித்தல். உரையும் என்றதில் உம்மையைப் பிரித்து, பழி என்றதனோடு கூட்டி உரைக்கப் பெற்றது. அவனை என்றது பரதனைச் சுட்டியதெனக் கொண்டு உரை கூறுவாருமுளர். முனிவன்றன்னை நினையா - முனிவனைபற்றி எண்ணி என்றலுமாம்.

(பி - ம்.) 1. என்ற முனிவன், நினையாவினையோன், நினையாவினியன், நினையா வினியென், நினைய வினையேன், இமையா வினையேன்.
2. பொன்றும் மளவில்.
3. என்றும் வனமென்று; உள்ளா; என்னுயிரும்.
4. குன்றுபழி; கோவே காவாய். (41)

முனிவன் கைகேயியை வேண்டுதல்

337. முனியும் முனியுஞ் செய்கைக் கொடியாள் முகமே முன்னி
இனியுன் புதல்வற் கரசும் மேனை யோருக் குயிரும்
மனுவின் வழிநின் கணவற் குயிரும் முதவி வசைதீர்
புனிதம் மருவும் புகழே புனையாய் பொன்னே யென்றான்.

முனியும் - (மன்னனுரை கேட்ட) வசிட்ட முனிவனும், முனியும் செய்கை - (யாவரும்) வெறுக்கும் செயலை மேற்கொண்ட, கொடியாள் - கொடியவளான கைகேயியின், முகம் முன்னி - முகத்தைப் பார்த்து, பொன்னே - பொன் போன்றவளே, இனி — இப்போது, உன் புதல்வற்கு - உன் மகனான இராமனுக்கு, மனுவின் வழி அரசும் - மனுகுல முறைப்படி அமைந்த அரசையும், நின் கணவற்கு உயிரும் - உன்

கணவனை சக்கரவர்த்திக்கு உயிரையும், ஏனையோருக்கு உயிரும் - மற்றவர்களுக்கும் (அவரவர்) உயிரையும், உதவி - (நீ) கொடுத்து, (அதனால்) வசை தீர் - பழியின் நீங்கின, புனிதம் மருவும் - தூய்மை பொருந்திய, புகழே - கீர்த்தியையே, புனையாய் - பூண்பாயாக; என்றான்—.

முனிவன் கைகேயியிடம், 'இராமன் தன் தந்தைக்கும் மற்றும் அனைவர்க்கும் உயிர் போன்றவன் என்பதை நீ அறிவாய்; அவனை நாட்டினின்றும் நீக்குவதனால், மன்னனோடு பிறர் பலரும் உயிர் விடுவர்; நீ பெரும் பழிக்கு ஆளாவாய். இராமனுக்கு அரசு நல்கி விடின், நீ பழியின் நீங்கிச் சிறந்த புகழையும் பெறுவாய்; ஆதலால் உன் கருத்தை மாற்றிக்கொண்டு அதனை உதவுக' எனக் கூறி வேண்டினான். 'தங்கமே' என்றால் எவர்க்கும் மகிழ்ச்சி தருதல் இயல்பாதலின், 'பொன்னே' என விளித்துக் கூறினான். புகழை விரும்பாதார் எவருமில்லையாதலால், 'வசைதீர், புனிதம் மருவும் புகழ் புனையாய்' என்றான். புகழே : ஏகாரம், பிரிநிலை. கைகேயி இராமனைத் தான் பெற்ற புதல்வனைப் போலக் கருதி அன்பு செலுத்தியவளாதலால் 'உன் புதல்வற்கு' என்றான்.

(பி - ம்.) 1. கொடியாள் முகமே யுன்னி, முகமே நோக்கி; முனியும் மொழி கேளாமுன். முனிவான் முகமே முன்னி, முனியுஞ் செய்கைக் கொடியாள் முகமே முனியு முன்னி.
2. இனிநின்; ஏனையோர்க்கின் னுயிரும், ஏனையோருயிருக்குயிரும்.
3. கணவன்னுயிரும், கணவனுயிரும்.
4. புனிதமருவும்; புகழே புனைவாய், புரிவாய்; பெண்ணே. (42)

கைகேயியின் மறுமொழி

338. மொய்ம்மாண் வினைவேரறவென் றுயர்வான் மொழியா முன்னம்
விம்மா வழுவா ளரசன் மெய்யிற் றிரிவா·னென்னின்
இம்மா வுலகத் துயிரோ டினிவாழ் வுகவே னென்சொல்
பொய்ம்மா ணுமற் கின்றே பொன்ரு தொழியே னென்றாள்.

மொய் மாண் வினை - வலிமை மிக்க இரு வினைகளையும், வேர் அற வென்று - வேரோடு கெடும்வண்ணம் (அவற்றை) வென்று, உயர் வான் - மேம்பட்ட வசிட்ட முனிவன், மொழியா முன்னம் - சொல்லி முடிக்கு முன்னமே, விம்மா அழுவாள் - விம்மி அழத்தொடங்கிய கைகேயி, அரசன் மெய்யில் திரிவான் என்னின் - சக்கரவர்த்தி உண்மையினின்று மாறுபடுவானானால், இனி இ மா உலகத்து - இப்போது இப் பெரிய உலகத்தில், உயிரோடு வாழ்வு உகவேன் - உயிரோடு வாழ்தலை விரும்பமாட்டேன்; என் சொல் - என்னுடைய வார்த்தை, பொய் மாணுமற்கு - பொய்படாதிருத்தற் பொருட்டு, இன்றே பொன்றுது ஒழியேன் - இப்போதே சாவாதிரேன்; என்றாள்—.

இப்போதே உயிர்விடுவேன் என்றபடி.

கைகேயி, 'எனக்கு மன்னன் தந்த வரம் இரண்டும் தந்தபடியே நடவாதொழியின் அவனுரை பொய்த்ததாகும். என் கருத்தும் நிறை வேருது; அவ்வாருயின் நான் உயிர் விடுவேன் என்று முன்னமே கூறியுள்ளேன்; அது பொய்யாகாமல் இப்போதே உயிர் நீப்பேன்' என்கின்ருள். 'பரதன் அரசெய்துதல், இராமன் வனம் புகுதல் என்ற இரண்டும் நடவாவிடின் அரசன் முன்னே இறந்துபடுவேன்' (181) என முதற்கண் கூனியிடத்தும், "ஊழிற் பெற்ருய் என்னுரை அன்றேல் உயிர்மாய்வென்" (227) எனப் பின்னர் மன்னனிடத்தும் அவள் கூறினமை காண்க.

மொழியா முன்னம்: விரைவுகுறித்து வந்தது; "இசையா முன்னம்" (330); "சொற்ரு முன்னம்" (333) என வந்துள்ளனவும் காண்க.

(பி-ம்.) 1. மொய்மாண், மொய்ம்மான், மும்மாண்.
2. விம்மா விழுவாள்; நிர்வா னென்னில், தெரிவானென்னில்.
3. இம்மாணுலகத்து.
4. பொய்ம்மாணுமல், பொய்மாணுகாது, எம்மாணழியாது; இன்னே, இந்நாள்; ஒழியானென்ருள். (43)

முனிவன் கடிந்துரைத்தல்

339. கொழுநன் றுஞ்சும் மெனவுங் கொள்ளா துலகம் மெனவும்
பழிநின் றுயரும் மெனவும் பாவம் முளதா மெனவும்
ஒழிகின் றிலையன் றியுமொன் றுணர்கின் றிலையா னினிமேல்
மொழிகின் றனவென் னென்ஞு முனியும் முறையன்றென்பான்.

முனியும் - வசிட்டனும், கொழுநன் துஞ்சும் எனவும் - (நம் தீச் செயலால்) கணவன் இறப்பானே யென்றும், உலகம் கொள்ளாது எனவும் - உலகம் இதனை ஏற்காதேயென்றும், பழி நின்று உயரும் எனவும் - (நமக்குப்) பழி நிலைபெற்று மிகுமே யென்றும், பாவம் உளது ஆம் எனவும் - பாவம் உண்டாகுமேயென்றும் (நீயே உணர்ந்து), ஒழிகின்றிலை - (நீ பிடித்த பிடியை) விடுகின்ருயில்லை; அன்றியும் - அல்லாமலும், ஒன்று உணர்கின்றிலை - (பிறர் கூறுவதையும்) சிறிதும் மதிக்கின்ருயில்லை; யான் இனிமேல் மொழிகின்றன என் - நான் இதற்கு மேலும் சொல்வன யாவுள? என்ஞு - என்று கூறி, முறை அன்று - (உன் செய்கை) நேர்மையன்று, என்பான் - எனப் பின்னும் சில சொல்வானுனன்.

முனிவன் தான் நயந்து சொல்லி வேண்டவும், கைகேயி கொண்டது விடாமை கண்டு, அவளைக் கடிந்துரைக்கலுற்று, 'உன் செயலால் பழியும் பாவமும் பெருகி நீ தாழ்வுறுவாயென்பதனை நீயே உணரவில்லை; பிறர் எடுத்துச் சொல்லியுங் கேட்கவில்லை;

இத்தகைய உனக்கு நான் மேலும் பலபடக் கூறுவதிற் பயனில்லை; ஆனால், உன் செயல் நேர்மையற்றது என்பது உறுதி' என மொழிந்து பின்னும் சில கூறலானான். அவற்றை மேல் இரண்டு பாடல்களிற் காணலாம். 'நீ கேட்பன இரண்டும் நேர்மையற்றன வென்றே உலகம் கூறும்; பரதன் அரசெய்துதலை ஒருவாறு ஏற்பினும், இராமன் வனம் புகுதலை எவ்வகையிலும் உலகம் ஏலாது. அவன் வனம் புகுவதனால் உன் கணவன் மட்டுமன்றி மற்றும் பலரும் உயிர் விடுவர்; அப்பெரும் பழியும் பாவமும் உன்னையே சாரும்' என விளக்கிக் கூறினான். உலகம் என்றது உயர்ந்தோரை. ஒன்றும் எனற்பால உம்மை தொக்கது. ஓசைபற்றி மகரவொற்று நான்கு இடங்களில் விரிந்தது.

(பி - ம்.) 1. துஞ்சு மெனவும்; கொள்ளா வுலகமெனவும்.
2. உயருமெனவும்; பாவமுளதாம்.
3. மொழிகின்றில; கனிமேல்.
4. மொழிகின்றன என்னென்றான்; என்னுளதோ, என்றுளதோ; முனியு முறையன்றென்பாள்; முறையன்றென்றான், முறையன் றென்ற; முனியே லெனவே மொழிவான். (44)

340. கண்ணோ டாதே கணவ னுயிரோ டிடர்கா ணாதே
புண்ணூ டோடுங் கனலோ விடமோ வென்னப் புகல்வாய்
பெண்ணா குதியோ மாயப் பேயோ கொடியாய் நீயிம்
மண்ணோ டுன்னோ டென்னா மனமே வலிதே யென்றான்

கொடியாய் - கொடியவளே, கண்ணோடாதே - (சிறிதும்) தாட்சிண்யமின்றி, கணவன் உயிர் ஓடு இடர் காணாதே - கணவன் உயிர் பிரியும் துன்பத்தையும் (மனத்தால்) நோக்காமல், புண் ஊடு ஓடும் கனலோ - புண்ணினுள்ளே புகும் தீயோ? விடமோ - கடு நஞ்சோ, என்ன - என்று சொல்லும்படி, புகல்வாய் - பேசுகின்றாய்; நீ பெண் ஆகுதியோ - நீயும் ஒரு பெண்ணோ? (அன்றி), மாயம் பேயோ - மாயமாக(ப் பெண்வடிவுடன்) வந்துள்ள பேயோ? இ மண்ணோடு உன்னோடு என் ஆம் - (நீ விரும்பிக் கைக்கொள்ளும்) இந்த மண்ணால் உனக்கு யாது பயன் உளதாகும்? மனம் வலிதே - உன் மனம் (எதற்கும் இரங்காத) அத்துணை வலியதோ? என்றான்—.

கைகேயியின் நிலை கண்ட வசிட்ட முனிவன், கடுமையாகக் கழறுகின்றான். 'உன்னால் உனக்கும் பிறருக்கும் வரும் தீங்குகளை எடுத்துச் சொல்லவும் நீ கேட்கின்றாயல்லை; நீ பெண் வடிவுடன் வந்துள்ள பேய்போலும்! பெண்ணாயின் இத்தகைய வன்னெஞ்சோ டிருத்தல் ஒவ்வாது' என்கின்றான். 'இராமன் வனம் புகுதலால் மன்னவனும் பிறர் பலரும் உயிர்விட, நாடு முழுதும் உன்னை வெறுத்துப் பழிக்க, நீ பெற்ற நாட்டை இனிதாக உன்னால் ஆள முடியாது' என்பான், 'இம்மண்ணோடுன்னோ டென்னாம்' என்றான்.

ஓடிடர்: வினைத்தொகை. மணன்ஞேடு: ஓடு கருவிப் பொருளில் வந்தது. உன்னேடு: உருபுமயக்கம். மனமே: ஏகாரம், அசை. புண்ணூடோடுங்கனல்: "புண்ணிலாம் பெரும்புழையிற் கனல் நுழைந்தாலென" (பால. 326).

(பி - ம்.) 1. கண்ணேடாதோர்; கணவன்னுயிரோடு, கணவன்றுயரோடு.
2. புண்ணேடோடும், புண்ணேடாடும், புண்ணூடோரும், புண்ணூடாடும்; கோலோவிடமோ.
3. பெண்ணே தீயோ, பெண்ணே தீய, பெண்ணே தீயோ; மாயாப் பேயோ; கொடியாய் நீயும், கொடியாயினிநீ, கொடியாயறியேன்.
4. உன்னேடென்று, என்னே, என்ன, என்னே, எண்ணு; அறியேன்; வசையே, வசையோ, வகையே, பகையோ; மானே, மறனே; வலியேனென்ருன். (45)

341. வாயான் மன்னன் மகனை வனமே கென்று முன்னம்
நீயே சொன்னு யவனே நிமிர்கா னிடைவன் னெறியிற்
போயோ புகலோ தவிரான் புகழோ டுயிரைச் சுடுவெந்
தீயோய் நின்போற் றீயோ ருளரோ செயலென் னென்ருன்.

(மேலும் முனிவன்), மன்னவன் - சக்கரவர்த்தி, வாயால் - தன் வாயால், மகனை - இராமனை, வனம் ஏகு என்று முன்னம் - காட்டுக்குப் போ என்று சொல்லும் முன்பே (சொல்லாமலே), நீயே சொன்னாய் - நீயாகவே (மன்னன் பணி என்று) சொல்லிவிட்டாய்; (அதனுல்), அவனே - அவ்விராமனே, நிமிர் கானிடை - பரந்த காட்டிலே, வல் நெறியில் - வன்மையான வழிகளைக் கடந்து, போய் புகல் தவிரான் - போய்ச் சேருதலைக் கைவிடமாட்டான்; புகழோடு - (மன்னனது) புகழுடனே, உயிரை சுடு - உயிரையும் அழிக்கின்ற, வெம் தீயோய் - கொடிய தீயைப் போன்றவளே, நின்போல் தீயோர் உளரோ - உன்னைப் போலக் கொடியவர் (இவ்வுலகத்தில் எவரேனும்) இருப்பரோ? செயல் என் - நின் செயல்தான் எத்தகையது? என்ருன்—.

'இராமனைப் பார்த்து, நீ காட்டுக்குப் போ என்ற வார்த்தையை மன்னன் தன் வாயால் சொல்லவே மாட்டான்; வரம் என்ற பெயரால் அவனை வற்புறுத்திக் கட்டுப்படுத்தி, அவன் பணி என்று நீயே இராமனுக்குச் சொல்லிவிட்டாய்; இராமனும் அதனை மனமுவந்து ஏற்றுக்கொண்டுவிட்டான்; இனி அவன் அதனைச் செய்யாதிரான். இதனுல் ஒரு பெண்ணின் வசப்பட்டுத் தகாததைச் செய்தான் என்று மன்னனுக்கு நிந்தையும், அவனுயிர் பிரிதலுமாகிய பெருந் தீங்குகள் உளவாம். இதற்குக் காரணமான உன் கொடுமையை என்னென்பது!' என இடித்துரைத்தான் முனிவன். புகழைச் சுடுதல் = பழிப்புண்டாகுதல்.

நீயே: ஏகாரம் பிரிநிலை. அவனே, புகலோ என்ற இடங்களில் ஓகாரம், தேற்றப்பொருளது. போயோ என்றதில் ஓ, அசை.

(பி - ம்.) 1. வாயான் மகனை மன்னன்; வனமேகென்றான், வனனேகென்று.
2. நீயோ சொன்னாய்; கானிடை வெங்நெறியில், கானிடையின் னெறியில்.
3. போயே புகலோ, போயேகுதலோ; தவிரப், சுடுமத்.
4. நீயோ, நீயே; நின்போற்றியார், நின்போலறியார்; அறிவார், உளரார். (46)

தசரதன் வெறுத்துக் கூறுதல்

342. தாவின் முனிவன் புகலத் தளரா நின்ற மன்னன்
நாவின் னஞ்ச முடைய நங்கை தன்னை நோக்கிப்
பாவி நீயே வெங்கான் படர்வா யென்றென் னுயிரை
ஏவி னாயோ வவனு மேகி னானோ வென்றான்.

தா இல் முனிவன் புகல - குற்றமில்லாத வசிட்ட முனிவன் (இவ்வாறு) சொல்ல, தளரா நின்ற மன்னன் - தளர்ச்சியுறுகின்ற தசரதன், நாவில் நஞ்சம் உடைய நங்கைதன்னை நோக்கி - நாவிலே விடமுள்ள கைகேயியைப் பார்த்து, பாவி - பாவியே, நீயே - நீயாகவே, என் உயிரை - என் உயிரைப் போன்ற இராமனை, வெம் கான் படர்வாய் என்று ஏவினாயோ - கொடிய காட்டிற்குப் போ என்று ஏவிவிட்டாயோ? அவனும் ஏகினானோ - அவனும் போய்விட்டானோ? என்றான்—.

மன்னன் மூர்ச்சையுற்றிருந்த நிலையில், கைகேயி இராமனை ஏவிய செய்தியறியான்; இப்போது சிறிது தெளிவு பெற்ற நிலையில் அதனை முனிவன் சொல்லால் அறிந்து, 'பாவீ, இவ்வாறு செய்தாயோ?' என்று அவளை நோகின்றான். இராமன் புறப்பட்டுவிட்டானோ என்ற ஐயமுங் கொண்டான். நாவில் நஞ்சமுடைய நங்கை: 196, 334.

(பி - ம்.) 1. முனிவன்னகலத்; தளராநின்றம் மன்னன், நின்றதன்னான், தாழா நின்ற மன்னன்.
2. நாவினஞ்சும், நாவினஞ்சம்; உடையாள்.
3. பாவீ வெங்கானிடையே; படர்வாயென்றன்னுயிரை, படர்வாயே றென்னுயிரை.
4. ஏவினாயே; ஏகின்னானோ; என்ன, என்னா. (47)

343. கண்டே னெஞ்சங் களியாற் கனிவாய் விடநா னெடுநாள்
உண்டே னதனா னீயென் னுயிரை முதலோ டுண்டாய்
பண்டே யெரிமுன் னுன்னைப் பாவீ தேவி யாகக்
கொண்டே னல்லேன் வேறோர் கூற்றந் தேடிக்கொண்டேன்.

(மேலும் மன்னன்), பாவீ—!, நெஞ்சம் கண்டேன் - உன் மன நிலையை அறிந்தேன்; களியால் - காமக் களிப்பால், நான்—, கனிவாய் விடம் - கொவ்வைக் கனிபோன்ற உன் வாயில் ஊறும் விடத்தை, நெடுநாள் உண்டேன் - நெடுங்காலம் அருந்தியுள்ளேன்; அதனால்—, நீ முதலோடு என் உயிரை உண்டாய் - நீ அடியோடு என்னுயிரையே

குடித்துவிட்டாய்; பண்டே - முன்னமே, எரிமுன் - அக்கினிசாட்சியாக, உன்னை தேவி ஆக கொண்டேன் அல்லேன் - உன்னை என் பட்டத்துத் தேவியாக ஆக்கிக்கொள்ளவில்லை; வேறு ஓர் கூற்றம் - வேறு (புதிய) வகையான ஒரு யமனை, தேடிக்கொண்டேன் - நானே தேடிக் கொண்டவனானேன்.

இஃது அடுத்த பாட்டோடு தொடர்ந்து முடியும்.

கனிவாய் விடம் என்றது வரலெயிறூறிய நீரை. அவள் வாய்ச் சொல் இப்போது தன்னுயிரை வாங்குதலால், கனிவாய் விடம் என்றான். இயல்பாக வருங்கூற்று, சாற்றுநாளற்ற தெண்ணித் தருமம் பார்த்து விண்ணேற்றுவது; இவளோ தான் நினைத்தபோதே உயிரை வாங்குகின்றாளாதலால் 'வேறோர் கூற்றம்' என்றான். 'நீ உயர் குடிப் பிறந்தவளாதலின் நற்குணமுடையவளென்று கருதியே உன்னை அக்கினி சாட்சியாக மணந்துகொண்டேன்; நீ இத்தகைய கொடுமை உள்ளவளென்பது இப்போதுதான் தெரியவருகின்றது' என்பது கருத்து. கைகேயியைக் கூற்றென்றமை : 288, 290.

இப்பாடல் ஒரு பிரதியில் இல்லை.

(பி - ம்.) 1. நெஞ்சங்கனிவாய்க், கனிவாக், கனிவாய், களிநின், கனியக், கரியாய்க்; கொண்டுன்; நஞ்சங்களிநின், நஞ்சக்கனிவாய்; கடுவாய் விடனொனெடுநாள்; விடநானெடுநாளுன்றோடு; விடநானெடுநாளினி தென்று.
2. முதலோடுண்டோய்.
3. எரிமுன்னுனைவன்; பாவி; தேவியாகக்.
4. கொண்டேனல்லன், கொண்டேனல்லோர். (48)

344\. விழிக்குங் கண்வே றில்லா வெங்கா னென்கான் முளையைச்
சுழிக்கும் வினையா லேகச் சூழ்வா யென்னைப் போழ்வாய்
பழிக்கு நாணாய் மாணாப் பாவி யினியென் பலவுன்
கழுத்தி னாணுன் மகற்குக் காப்பு நாணா மென்றான்.

(மன்னன் பின்னும் சொல்வான்) மாணா பாவி - மாட்சிமைப்படாத (கொடும்) பாவியே, விழிக்கும் கண்வேறு இல்லா என் கால் முளையை - விழித்துப் பார்க்கத்தக்க கண் தன்னையன்றி வேறு இல்லாத என் குலக் கொழுந்தான இராமனை, வெம் கான் ஏக - வெம்மையான காட்டிலே போகுமாறு, சுழிக்கும் வினையால் - (உனது) வஞ்சச் செயலால், சூழ்வாய் - சூழ்ச்சி செய்கின்றாய்; (அதனால்) என்னை போழ்வாய் - என்னைப் பிரிந்து உயிர் வாங்குகின்றாய்; பழிக்கும் நாணாய் - (எத்தகைய கொடும்) பழிக்கும் வெட்காமல் இருக்கின்றாய்; இனி பல என் - மேலும் பல சொல்லி என்ன பயன்? உன் கழுத்தில் நாண் - உன் கழுத்திலுள்ள மங்கல சூத்திரம், உன் மகற்கு - உன் மகன் பரதனுக்கு, காப்பு நாண் ஆம் - முடியணி விழாவில் காப்புக் கயிறாக அமையும்; என்றான்—.

விழிக்கும் கண்வேறு இல்லா என் கான்முளையை என்று கூட்டிப் பொருள் செய்க. வெங்கான்: இடைப் பிறவரல்; "இரும்புதிரித் தன்ன மாயிரு மருப்பிற், பரலவ லடைய விரலை தெறிப்ப" (அகநா. 4 : 3-4) என்புழிப் போல வந்தது. சுழிக்கும் வினை - சூழ்வினை. அனைவர்க்கும் உயிரான இராமனைக் காடு போக்கி என்னுயிரை வாங்கும் கொடுமையைச் சிறிதுங் கூசாது செய்தலோடு, அதனால் வரும் பழிக்கும் நாணுவாயல்லை என்றதனால், உம்மை இறந்தது தழுவியது. காப்புநாண் - பட்டாபிஷேகத்திற்கு முன் அதற்குரியார் கையில் மந்திரத்துடன் கட்டும் இரட்சா பந்தனம். 'பரதனுக்குப் பட்டங்கட்டு முன் நான் இறந்து படுவேன்; அதனால் நீ மாங்கலியம் இழப்பாய்' என்பதனைக் குறிப்பித்தது.

(பி - ம்.) 1. கண்வேறில்லேன்; என் கார்முளையைச், எங்கான் முளையைச், வெங் கானிடை கான் முளையைச்.
2. என்னைப் பேழ்வாய்ப், என்னப்பேழ்வாய், என்னிற்பேழ்வாய், போழ்வாய்.
3. பழிக்குங்காணுப், பழிக்குங்காணுப் பாவி.
4. கழுத்தின்னுணுன், கழுத்து நாணுன், கழுத்திணுணுன்; காப்பின் ணுணும்; என்ணு. (49)

345. இன்னே பலவும் பகர்வா னிரங்கா தாளை நோக்கிச்
சொன்னே னின்றே யிவளென் றார மல்ல டுறந்தேன்
மன்னே யாவான் வருமப் பரதன் றனையும் மகனென்
றுன்னேன் முனிவா வவனு மாகா னுரிமைக் கென்றான்.

இன்னே பலவும் பகர்வான் - இவ்வாறாகப் பலவற்றையும் சொன்ன தசரதன், இரங்காதாளை நோக்கி - சிறிதும் இரங்காத கைகேயியைக் குறித்து, (வசிட்ட முனிவனிடம்), முனிவா —, இன்றே சொன்னேன் - இப்போதே சொல்லுகின்றேன்: இவள் என் தாரம் அல்லள் - இக் கைகேயி என் மனைவியல்லள்; துறந்தேன் - (இவளை முற்றும்) நீக்கிவிட்டேன்; மன் ஆவான் வரும் - அரசனாக வரவிருக்கின்ற, அ பரதன் தன்னையும் - அந்தப் பரதனையும், மகன் என்று உன்னேன் - (இனி) என் மகனென்று கருதமாட்டேன்; அவன் உரிமைக்கும் ஆகான் - அவன் என் இறுதிச் சடங்கு செய்தற்கும் உரியவனாகான், என்றான் —.

மன்னன், தான் கல்லுங் கரையும்படி சொல்லி வேண்டியும் கைகேயி சிறிதும் இரங்காதது கண்டு, அவள்பால் உண்டான வெறுப்பு மிகுதியால் அவளைத் தாரம் அல்லள் என்று விலக்கியவன், அவள் வயிற்றிற் பிறந்தவனாதலால் பரதனையும் வெறுத்துக் கூறினான்.

வசிட்டமுனிவன் குலகுருவாய், மேல் நிகழவேண்டுவனவற்றைச் செய்தற்குரியவனாதலால், அவனிடம் இவற்றைச் சொன்னான்.

பகர்வான், இரங்காதாள் : வினையாலணையும் பெயர்கள். நோக்கி என்றது இங்கே குறித்து, சுட்டி என்ற பொருளில் வந்தது. சொன்னேன்: காலவழுவமைதி. மன்னே : ஏகாரம், அசை. அவனும் என்றதில் உம்மை பிரித்துப் பின்னே கூட்டியுரைக்கப்பட்டது.

(பி - ம்) 1. இன்னேயினைய; இரங்காதவனை நோக்கிச், இரங்காதவளும் மறியச், இன்னே பலவும் பன்னி யேதமில்லா விறைவன்.
2. சொன்னேன் முன்னே; தாரமல்லாள்; சொன்னே னிவளென்றுர மல்லள் துறந்தேன் துறந்தேன்.
3. மன்னேயாள்வான்.
4. அவனென் னுரிமைக்காகான், அவனுமுரிமைக்காகான். (50)

தசரதன் கோசலையைக் கண்டு தளர்தல்

346. என்னைக் கண்டு மேகா வண்ண மிடையூ றுடையான்
உன்னைக் கண்டு மிலனோ வென்று வுயர்கோ சலையைப்
பின்னைக் கண்டா னனையான் பிரியக் கண்ட துயரம்
தன்னைக் கண்டே தவிர்வா டளர்வா ணிலையிற் றளர்வான்.

(தசரதன்) உயர் கோசலையை - குணங்களால் உயர்ந்த கோசலையினிடம், என்னை கண்டும் ஏகாவண்ணம் - என்னைத் தான் கண்ணுற் பார்த்துக்கூடப் போகாதவாறு, இடையூறு உடையான் - (இந்தப் பாவியால்) இடையூறுற்ற இராமன், உன்னையும் கண்டிலனோ - உன்னையும் பார்க்கவில்லையோ? என்று - என்று கூறி, பின்னை - பிறகு, கண் அனையான் பிரிய - கண்போன்ற இராமன் பிரிவதனால், கண்ட துயரம் - உளதாகிய வருத்தத்தை, தன்னை கண்டு தவிர்வாள் - தன்னைப் பார்த்துப் போக்கிக்கொள்ள எண்ணியவளாய் (வந்து), தளர்வாள் - (தன் நிலை கண்டு) தளர்கின்ற அவளுடைய, நிலையின் - நிலையால், தளர்வான் - தளர்ச்சியுற்றான்.

கோசலையை என்று, பின்னைத் தளர்வான் என்று கூட்டுக. முனிவன்பால் வெறுத்துக் கூறிய தயரதன், கோசலை அங்கிருப்பதையும் அவளுடைய பரிதாப நிலையையும் கண்டு, "இராமன் போகும்போது என்னைக் கண்டு விடை பெறுதற்குரியவன். என்னைக் காணவொட்டாதபடி இந்தப் பாவி தடுத்துவிட்டாள்; அவன் உன்னையும் காணாமலே போய்விட்டானோ?" என்று கூறிப் பின்னும் தளர்ச்சியுற்றான். மன்னனை வணங்கி வேண்டி, இராமன் வனம் புகுவதை எவ்வாறேனும் தவிர்க்கக் கருதி வந்த கோசலை, இங்கே அதற்கு இடமின்றி இடர்ப்படுகின்றாள். அவளைக் கண்ட மன்னன், இராமன் போகும்போது அவளையும் காணவில்லை போலும் என ஐயுற்று வினவினன்.

உன்னைக் கண்டும் என்றதில் உம்மை பிரித்துக் கூட்டப் பெற்றது. கண்தான் என்றவிடத்துத் தான் என்பதும், தன்னைக் கண்டே என்பதில் ஏகாரமும் அசை. காணுதல் - உளதாதல்.

(பி - ம்.) 1. கண்டும் மேகாவண்ணம், கண்டு போகாவண்ணம், என்னக் கண்டு மோராவண்ணம்; இடையூறுடையாய்.
2. கண்டும் மிலனே; என்றுனுயிர், என்னவுயிர்.
3. கண்டானனையாள், கண்டவனையான்; பிரியக் கண்டாடுயரம், கண்டான்றுயரம், கண்டேதுயரம், காணுத்துயரம்.
4. தன்னைக் கண்டு; தளர்வானிலையில், தளராநிலையில், தனையிக்நிலையில், தனையன்னிலையில், தனையின்னிலையில். (51)

கோசலையின் நிலை

347. மாற்றாள் செயலா மென்றுங் கணவன் வரமீந் துள்ளம்
ஆற்று தயர்ந்தா னென்று மறிந்தா ளவளும் மவனைத்
தேற்று நின்றாண் மகனைத் திரிவா னென்று வரசன்
தோற்றான் மெய்யென் றுலகஞ் சொல்லும் பழிக்குஞ் சோர்வாள்.

மாற்றாள் செயல் ஆம் என்றும் - (இது) தன் மாற்றாளாகிய கைகேயியின் செயலாகுமென்றும், கணவன் வரம் ஈந்து - கணவன் (அவளுக்கு) வரத்தைக் கொடுத்துவிட்டு, உள்ளம் ஆற்றுது - மனம் பொறுமல், அயர்ந்தான் என்றும் - தளர்ச்சியுற்றானென்றும், அறிந்தாள் அவளும் - அறிந்தவளாகிய கோசலையும், அவனை தேற்று நின்றாள் - தசரதனைத் தேற்றலானாள்; மகனை - இராமனைக் குறித்து, திரிவான் என்றான் - (எப்படியும் அவன்) திரும்பிவருவான் என்று கூறினாள்; (ஆயினும்) அரசன் மெய் தோற்றான் என்று - அரசன் உண்மை தவறினான் என்று, உலகம் சொல்லும் பழிக்கும் - உலகத்தார் சொல்லத்தக்க பழிச் சொல்லுக்கும், சோர்வாள் - மனம் தளர்வாள்.

கோசலை, தசரதனைக் கண்டதுமுதல், அவன் நிலைகுறித்து வருந்திப் புலம்பியிருந்தாளே யன்றி, அதன் காரணம் அறிந்தாளில்லை. பின்பு நிகழ்ந்தவற்றால் உண்மையை உணர்ந்த அவள், அரசனைத் தேற்றும் பொருட்டு, 'இராமன் திரும்பிவிடுவான்' என்று கூறினாள். ஆயினும், இராமன் திரும்பிவிடின் அரசன் உரை பொய்த்த பழிக்கு ஆளாக நேருமே என்ற அச்சமும் அவளை வருத்திற்று.

மாற்றாள் - சக்களத்தி; கைகேயி. அவளால் இடுக்கட்பட்டு மன்னன் வரம் ஈந்தானேயன்றி, மனமொப்பி இராமனுக்கு விடை தர வில்லை என்ற உண்மையைக் கோசலை யுணர்ந்தாள். இப்போது அவள் இருதலைக் கொள்ளி எறும்புபோல் ஆனாள்.

(பி - ம்.) 1. மாற்றாள் சொல்லா மென்றும்; வரமீந்துள்ளான், வரத்தாலுள்ளம்.
2. மாற்றுது; அறிந்தாளவளும் மனத்தைத்; வழுவாமவனைத்; தேற்றாண்மகனைத்திரிவாய், திரிவானென்னுளரசன், திரிவானென்று லரசன், திரிவானென்னுவரசன், திரிவாயென்றுளரசன், என்னுளரசன்.
4. பழிக்குச் சோர்வாள். (52)

கோசலை கணவனுக்குத் தேறுதல் கூறுதல்

348. தள்ளா நிலைசான் மெய்ம்மை தழுவா வகைதா னெய்தின்
எள்ளா நிலைகூர் பெருமைக் கிழிவா மெனலா லுரவோய்
விள்ளா நிலைசே ரன்பான் மகன்மேன் மெலியின் னுலகம்
கொள்ளா தன்றே வென்றாள் கணவன் குறையக் குறைவாள்.

கணவன் குறைய - கணவன் (துயரால்) மெலிதலால், குறைவாள் - தானும் மெலிகின்ற கோசலை, (கணவனை நோக்கி) உரவோய் - அறிவாற்றல் மிக்கோய், தள்ளா நிலை சால் மெய்ம்மை - தவறலாகாத நிலையிற் சிறந்த வாய்மையை, தழுவா வகை எய்தின் - தழுவாத (கைவிட்ட) தன்மையை நீ பெற்றால், எள்ளா நிலைகூர் பெருமைக்கு - (எவரும்) இகழப்படாத நிலையில் மேம்பட்ட நின் பெருமைக்கு, இழிவு ஆம் எனலால் - குறைவாகும் என்பதனால், மகன்மேல் - இராமன்பால் (உள்ள), விள்ளா நிலை சேர் அன்பால் - பிரிக்கமுடியாத நிலையை உடைய பேரன்பினால், மெலியின் - (வாய்மை காத்தலில் இப்போது) சோர்வுபடின், உலகம் கொள்ளாது அன்றே - உயர்ந்தோர் அதனை ஏற்றுக்கொள்ளாரன்றோ? என்றாள் —.

தன் கணவனது மேம்பாடே கருதும் கோசலை, இராமன்பால் உள்ள பேரன்பால் அவன் பிரிவுக்கு வருந்தி அதனைத் தவிர்த்தலால் வாய்மை தவறின குற்றம் வாராமல், மனந்தேறி யிருத்தல்வேண்டு மெனக் கணவனைத் தேற்றுகின்றாள்.

தான்: அசை. மகன்மேல் அன்பால் என மாற்றுக. உலகம் - உயர்ந்தோர்,

(பி - ம்.) 1. தள்ளா நிலைசால் வெம்மை, தள்ளா நிலையான்; தழுவா வழுவாவகை நின்று, தழுவா வகைதானெய்தி, எய்தின், வகையா லெய்தி, எய்தின், தம்மைத் தழுவா வகை கின்று; தன்னைத் தழுவா வகை கின்று, தன்னைத் தழுவா வகை நின்று.
2. இழிவாமென்றாலுரவோய், உயர்வோய், இழிவாமென்றுளுரவோய், இழவா மென்றாலுரவோய். அழிவாமென்றாலுரவோய்.
3. மகன்மேன்மெலியி லுலகம், மகன்மே லினியுன்னுலகம், இனியிவ் வுலகம்.
4. குறையைக் குறைவாள், குழையக் குறைவாள். (53)

கோசலையின் வருத்தமிகுதி

349. போவா தொழியா னென்றாள் புதல்வன் றன்னைக் கணவன்
சாவா தொழியா னென்றென் றுள்ளந் தள்ளுற் றயர்வாள்
காவா யென்னுண் மகனைக் கணவன் புகழுக் கழிவான்
ஆவா வுயர்கோ சலையா மன்ன மென்னுற் றனளே.

உயர் கோசலை ஆம் அன்னம் - குணங்களால் உயர்ந்த, கோசலையாகிய அன்னம் போன்றவள், புதல்வன் தன்னை - புதல்வனுன

இராமனைக் குறித்து, போவாது ஒழியான் என்றாள் - (அவன் காட்டிற் குச்) செல்லாதிரான் என்று தன் மனத்துட் சொல்லிக் கொண்டாள்; (அவன் போனால்) கணவன் சாவாது ஒழியான் என்று என்று - கணவனான மன்னன் இறவாமல் இரானே என்று மீண்டும் மீண்டும் எண்ணி, உள்ளம் தள்ளுற்று அயர்வாள் - மனம் தடுமாறிச் சோர்வாள்; (ஆயினும்) கணவன் புகழுக்கு அழிவாள் - கணவனுடைய புகழ்க் குறைவுக்காக மிக வருந்துவாளாய், மகனை காவாய் என்னாள் - மகனை (வனம் ஏகாதவண்ணம்) காப்பாயாக என்று (கணவனுக்குச்) சொல்ல மாட்டாள்; ஆ ஆ - ஐயோ! என் உற்றனள் - எத் தகைய வேதனையுற்றாள்! (அது நம்மாற் சொல்லலாகாது.)

இராமன் வனம் போதலும், அதனால் மன்னன் உயிர் போதலும் தவிரா என்பதனை எண்ணி எண்ணி மன மறுகும் கோசலை, வனம் போதலை மன்னனைக் கொண்டே தவிர்ப்பிப்போமெனில், அதனால் மன்னன் புகழுக்கு ஊறு வருவதால் அதுவுஞ் செய்யலாகாதென்று கைவிட்டாள். முன்னர் அவள் அது செய்யக் கருதியே வந்தாள் என்பது நினைக்கத் தக்கது. மன்னன் உயிர் வேண்டின் புகழ் இல்லை என்ற நிலையில், பின்னதையே பெரிதாகக் கருதினாளென்றலின், கோசலையின் உயர் பண்பு புலனாகுமன்றோ? அவளை 'உயர் கோசலை' என்றார் முன்னும்; 346 பார்க்க.

புதல்வன் தன்னை என்றதன் பின், 'குறித்து' என்றது சொல் எச்சம். என்றென்று என்னும் அடுக்கு மிகுதி குறித்தது. ஆ ஆ: இரக்கக் குறிப்பு.

இதன்பின் ஒரு பிரதியில் கீழ்க்காணும் ஒரு பாடல் உள்ளது:

அன்னா ளின்ன பன்னி யழியத் துயரான் மன்னர்
மன்னா னவனும் மிடரின் மயங்கி மைந்தா மைந்தா
முன்னே வனமே கிடனீ முறையோ முதல்வா முறையோ
என்னே யான்செய் குறைதா னென்றே யிரங்கிமொழிவான்.

(பி - ம்.) 1. போவா தொழியா னென்னாள், போவானொழிவானென்னாப், போவானொழிவாயென்றாள், போவானொழியானென்னாள், போவா ளொழிவானென்னாள்; புதல்வனகலக் கணவன், புதல்வன்றனையக் கணவன்.

2. சாவா தொழிவான். சாவானொழிவான், சாவானொழியான்; என்னா வுள்ளம், அன்றென் றுள்ளம்; தள்ளுற்றுயர்வாள், தளர்வுற்றயர் வாள், தளர்வுற்றழிவாள்.

3. காவா யென்றாள்.

4. உயர்கௌசலையாம்; அன்னம் மென்னுற் றனளோ. (54)

தசரதனுடைய வருத்த மொழிகள்

350. உணர்வா னனையா ளுரையா லுயர்ந்தா னுரைசால் குமரன்
புணரா னிலமே வனமே போவா னேயா மென்னு
இணரார் தருதா ரரச னிடரா லயர்வான் வினையேன்
துணைவா துணைவா வென்றான் றோன்றா றோன்றா யென்றான்.

இணர் ஆர் தரு தார் அரசன் - பூங்கொத்துக்கள் நிறைந்த மாலை சூடிய தசரதன், அனையாள் உரையால் - அந்தக் கோசலையின் சொல்லால், உயர்ந்தான் - குணங்களால் உயர்ந்தவனும், உரைசால் - புகழ்மிக்கவனுமான, குமரன் - இராமன், நிலம் புணரான் - நாட்டில் இரான், வனம் போவானே ஆம் - காட்டிற்குப் போவானேயாவன், என்னு உணர்வான் - என்று உணர்ந்து, இடரால் அயர்வான் - மிக்க துன்பத்தால் தளர்பவனாகி, வினையேன் துணைவா - தீவினையுடைய எனக்குத் துணையானவனே, துணை வா - இப்போது எனக்குத் துணையாக (இங்கே) வா, என்றான்—; தோன்றால் - உத்தமனே, தோன்றாய் - (என் கண்முன்னே) தோன்றுவாயாக, என்றான்—.

இராமன் வனஞ் சென்றுவிட்டானோ என்று ஐயங் கொண்டிருந்த தசரதன், கோசலையின் வார்த்தைகளால், 'அவன் இன்னும் போக வில்லை; ஆனால் போகாதிரான்' என்பதை உணர்ந்து மிகவும் வருந்திப் புலம்பலுற்றான். இதுமுதல் பன்னிரண்டு கவிகள் தசரதன் புலம்பலைக் கூறும்.

உரை - புகழ். நிலமே, வனமே என்ற இடங்களில் ஏகாரம், அசை. போவானேயாம் என்றதில் ஏகாரம் தேற்றம். ஆர்தரு: தா, துணை வினைப்பகுதி, தரு என்றாகி நின்றது. துணைவா துணை வா : மடக்கு.

ஒரு பிரதியில் இப்பாடல் பின்வருமாறு காண்கின்றது:

உணர்வே துமிலா ளுரையா லுயர்சால் குமரன் னெடுநாட்
புணரா னிலமா வனமே போவா னேயா மென்னில்
இணரே பொலிதார் நிருபா விடரா லயர்வா யிதுவும்
துணையோ துணைவா வென்றாள் துயரேல் துயரே லென்றாள்.

(பி - ம்.) 1. உணர்வாளனையாள்; உரையாலுய்ந்தான், உரையாலுணர்ந்தான், உரையாலுந்தான்; உண்மைக்குமரன்.
2. நிலமா, நிலமாம்.
3. தருந்தாராசன், தருதார்மார்பன், தரிதாரரசன், இணரா தரித்த தாரான்.
4. துணைவா துணைவாவென்றே, துணையே துணையே யென்றான்; தோன்றால் தோன்றா யென்றாள், தோன்றாய் தோன்றலென்றான், தோன்றாய் தோன்றாயென்றாள், தோன்றால் தோன்றாலென்றான். (55)

351. கண்ணு நீரா யுயிரு மொழுகக் கழியா நின்றேன்
எண்ணு நீரான் மறையோ ரெரிமுன் னின்மேற் சொரிய
மண்ணு நீராய் வந்த புனலை மகனே வினையேன்
உண்ணு நீரா யுதவி யுயர்கா னடைவா யென்றான்.

(தசரதன் இராமனை விளித்து) மகனே - என் புதல்வா, கண்ணும் நீர் ஆய் ஒழுக - கண்களிலும் நீர் மிகப் பெருகி வழிய, உயிரும் கழியா நின்றேன் - உயிரும் நீங்கும் நிலையில் இருக்கின்றேன்; எண்ணும் நீரால் - (அனைவரும்) மதிக்கும் வகையில், மறையோர் - வேதம் வல்ல அந்தணர், எரி முன் - ஓமத்தீயின் முன்னே, நின்மேல் சொரிய - (மந்திரத்தோடு) உன்னை அபிடேகஞ் செய்விக்கும்பொருட்டு, மண்ணும் நீர் ஆய் வந்த - திருமஞ்சனத் தீர்த்தங்களாகக் கொண்டுவந்த, புனலை - அந்த நீரையெல்லாம், வினையேன் - பாவியாகிய நான், உண்ணும் நீர் ஆய் உதவி - (இறந்தபின் இறுதிக் கடனாக) எனக்குக் கொடுத்தற்குரிய நீராக அளித்துவிட்டு, உயர் கான் அடைவாய் - (மரங்கள்) உயர்ந்த காட்டை அடைக, என்றான்—.

இராமபிரான் தன்முன் நிற்பது போலக் கருதிப் புலம்புகின்றான் மன்னன். இது துயரமிக்கோர் இயல்பு. 'உன் பட்டாபிஷேகத்தின் பொருட்டு வந்த புண்ணிய தீர்த்தங்களையெல்லாம், பிரேதவடிவில் உள்ள எனக்குச் செய்யவேண்டிய உதகக் கிரியைக்குப் பயன் படுத்தி என்னை ஈடேற்றியபின் நீ வனம் செல்' என்றதனால், 'நான் இப்போதே இறந்துவிடுவேன்' என்பது கருத்து.

பட்டாபிஷேகம் செய்வதாகச் சொல்லிவிட்டு, அஃதின்றிக் கழிதலால், 'வினையேன்' என்றான். நீரும் ஒழுக, உயிரும் கழியா நின்றேன் என நிரல்நிரையாக இயைக்க.

(பி - ம்.) 1. கண்ணுங் நீராய், நீரா; கண்ணினீராய்; ஒழுகக் கழியாநின்றே, ஒழுகிக் கழியா நின்றேன், ஒழியக் கழியா நின்றேன்.
2. எண்ணுங்நீர் நரன், எண்ணும் நீரான், எண்ணும் நீரார்; எரி முன்னின் மேற் சொரியும், என்மேற் சொரிய, அனன்மேற் சொரிய; நெய்மேற் சொரியாய், நெய் மேற்சொரியா, என்றன் மேற் சொரியும், உன்றன் மேலே சொரியும்.
3. மண்ணினீராய்; புனலை மகனே வினையேற்கு, புனலும் மகனே வினையேற்று, புனலை வினையேன் மகனே.
4. உய்ர் கான்டைய்ா யென்றான், அடையாயென்னே, இடையா யென்றான். (56)

352. படைமா ணரசைப் பலகான் மழுவா ளதனா லெறிவான்
மிடைமா வலிதா னனையான் வில்லா லடுமா வல்லாய்
உடைமா மகுடம் புனையென் றுரையா வுடனே கொடியேன்
சடைமா மகுடம் புனையத் தந்தே னந்தோ வென்றான்.

படை மாண் அரசை - படைகளால் மாட்சிமைப்பட்ட அரசர் பலரை, பலகால் - பல முறை, மழு வாள் அதனுல் எறிவான் - (தன்கை) மழுப் படையினுல் எறிந்து வென்ற பரசுராமனது, மிடை மா வலி - செறிந்த மிக்க வலிமையை, அனையான் வில்லால் - அவனுடைய வில்லாலே, அடும் ஆறு வல்லாய் - தொலைக்கும்படி வல்லவனே, கொடியேன் - கொடியவனுன யான் (உன்னை), உடை மா மகுடம் புனை என்று உரையா - உனக்குரிய பெரிய முடியைச் சூடுவாயாக என்று (முன்னர்ச்) சொல்லி, உடனே—, சடை மா மகுடம் புனைய தந்தேன் - பெரிய சடை முடியை நீ புனையும்படி கொடுத்துவிட்டேன், அந்தோ - ஐயோ, என்றுன்—.

'இராமா, உன்னைப் பரம்பரையாக உரிமையுள்ள மகுடஞ் சூடும் படி வாயாரச் சொன்ன நான், செயலில், நீ சடை முடி புனையச் செய்து விட்டேன்! என்ன விபரீதம்!' என்று இரங்குகின்றுன். கைகேயிக்கு வரத்தால் இயைந்தமையான், இதனையும் தன் செயலாகவே கூறுகின்றுன். இராமபிரான் பரசுராமனை வலி தொலைத்து அடக்கி யிராவிடில், அவன் தசரதனை வென்று, அவனது அரசைத் தனதாக்கிக் கொண்டிருப்பான்; அங்ஙனமாகாது அவ்வரசை நிலைபெறச் செய்தமை யின், மரபுபற்றிய உரிமையோடு, இவ்வகையாலும் அரசு இராம பிரானுக்கு உரியதாகின்றது. எனவே, இங்குப் பரசுராமன் செய்தியைக் குறித்தது மிகவும் பொருத்தமுடையது. ''மூவெழு முறைமையெங் குலங்கண் முற்றுறப், பூவெழு மழுவினுற் பொருது போக்கிய, சேவகன் சேவகஞ் செகுத்த சேவகற், காவதிவ் வுலகமீ தறனென் றுரரோ'' (77) என்றதும் காண்க. 'பலகால்' என்றது மூவெழு முறையை.

மழு வாள் - மழுப்படை. வலிதான் என்றதில் 'தான்' அசை. 'உடைய' என்பதன் இறுதி தொக்கது. உரையா : செய்யா வென்னும் வாய்பாட்டு வினையெச்சம். அந்தோ : இரக்கக் குறிப்பு.

(பி - ம்.) 1. பகுவாய் மழுவால், பழுவாய் மழுவால்.
2. மிடைமான், மிடன்மா, மிடன்மாண்; வில்லோடடுமா வல்லாய்: அடலோடவன்மாதவமு மழியச் சிறு போரது செய்த.
3. உடையாய் மகுடம், உடையா மகுடம்; உடனேயுன்னைச். (57)

353. கறுத்தா யுருவம் மனமுங் கண்ணுங் கையுஞ் செய்யாய்
பொறுத்தாய் பொறையே யிறைவன்புரமூன் றெரித்த போர்வில்
இறுத்தாய் தமியே னென்னு தென்னை யிம்மூப் பிடையே
வெறுத்தா யினிநான் வாழுன் வேண்டேன் வேண்டே னென்றுன்.

உருவம் கறுத்தாய் - திருமேனி கருநிறமானவனே, மனமும் கண்ணும் கையும் செய்யாய் - மனமும் கண்களும் கைகளும் செம்மையானவனே. பொறையே பொறுத்தாய் - பொறுமையையே

தாங்குபவனே, புரம் மூன்று எரித்த இறைவன் - திரிபுரங்களை எரித்த சிவபெருமானது, போர்வில் - போருக்குரிய வில்லை, இறுத்தாய் - ஒடித்தவனே, இ மூப்பிடை - இம்முதுமைப் பருவத்தில், தமியேன் என்னுது - (நான்) துணையற்றவன் என்று கருதாமல், என்னை வெறுத்தாய் - என்னை வெறுத்து விட்டுச் செல்கின்றாய்; இனி - இப்போது, நான்—, வாழ்நாள் வேண்டேன் வேண்டேன் - வாழ்ந்திருத்தலை விரும்பேன் விரும்பேன்; என்றான்—.

இராமபிரானது திருமேனியழகு, குணநிறைவு, வீரம் ஆகியவற்றை நினைந்து வியந்து கூறுகின்றான். செம்மை என்ற பண்படியாக வந்த 'செய்யாய்' என்றது மனத்துக்கு விசேடண மாகுங்கால் நேர்மைப் பண்பையும், ஏனையவற்றிற்கு ஆகுங்கால் செந்நிறத்தையும் குறிக்கும். "கண்ணும் திருவடியுங் கையுந் திருவாயுஞ் செய்ய கரியவனை" (சிலப். ஆய்ச்சியர் குரவை); "கையு மலரடியுங் கண்ணுங் கனிவாயுஞ், செய்ய கரிய திருமாலே" (விக்கிரம சோழனுலா, இறுதி வெண்பா) என்பன ஈண்டு ஒப்பு நோக்கத் தகும். பொறுத்தல் - தாங்குதல். உயிர்த்துணை இராமபிரானையன்றிப் பிறரின்மையால், 'தமியேன்' என்றான். வெறுத்தல் - உடனிருந்து தேற்றாது விட்டுச் செல்லுதல். வேண்டேன் என்றதன் அடுக்கு அவலம் பற்றியது. நீயின்றி நான் உயிர் தரியேன் என்பது கருத்து.

(பி - ம்.) 1. கறுத்தா புருவுங்; மனமுங் காலுங் கையும், கண்ணுங் கையுங்காலுஞ், கண்ணும் மனமுங் கையும், கண்ணுங் காலுங்கையும்; செய்ய.
2. புரமுன்றெரித்த பொருவில், ஒருவில், புரமன்றெரித்த பொருவில்.
3. என்னுயென்னை.
4. வெறுத்தாவினியான். (58)

354. பொன்னின் முன்ன மொளிரும் பொன்னே புகழின் புகழே
மின்னின் மின்னும் வரிவிற் குமரா மெய்யின் மெய்யே
என்னின் முன்னம் வனநீ யடைதற் கெளியே னல்லேன்
உன்னின் முன்னம் புகுவே னுயர்வானகம்யா னென்றான்.

பொன்னின் முன்னம் ஒளிரும் - பொன்னினும் மேலாக ஒளி வீசுகின்ற, பொன்னே - பொன் போன்றவனே, புகழின் புகழே - புகழுக்கும் புகழானவனே, மின்னின் மின்னும் - மின்னலைப்போல் பிரகாசிக்கிற, வரிவில் குமரா - கட்டமைந்த வில்லையேந்திய மைந்தனே, மெய்யின் மெய்யே - உண்மையின் வடிவமானவனே, என்னின் முன்னம் நீ வனம் அடைதற்கு - எனக்கு முன்னே நீ காடு சேர்வதற்கு, எளியேன் அல்லேன் - (நான் அத்துணை) எளியவனல்லேன்; உன்னின் முன்னம் - உனக்கு முன்னே, யான் உயர் வான் அகம் புகுவேன் - நான் உயர்ந்த சுவர்க்க மடைவேன்; என்றான்—.

முதல் இரண்டடிகளில் இராமபிரானுடைய பலவகைச் சிறப்புக்கள் கூறப்பெற்றன. பொன், ஒளிக்கும் குண நலனுக்கும் உவமை கூறப்

படுவது. புகழின் புகழ்: புகழ் என்பதும் இராமபிரானுற் பெருமை அடைகின்றது. மின்னின் மின்னும் வில் : இராமபிரான் திருமேனி மேகம் போன்றதாயிருக்க, அதனிற் சார்ந்த வில் மின்னலாகின்றது. மெய்யின் மெய் - ஸத்யஸ்வரூபி. 'இளைஞனை நீ அண்மையிலுள்ள வனம் சென்றால், முதியவனாகிய யான் சேய்மையிலுள்ள வானஞ் சேர்வேன்; உனக்கு நான் இளைத்தவனல்லேன்' என்றதிலுள்ள நயம் ஓர்தற்பாலது. ''கானகமே மிகவிரும்பி நீதுறந்த வளநகரைத் துறந்து நானும், வானகமே மிகவிரும்பிப் போகின்றேன்'' (பெருமாள் திருமொழி, 9 : 10) எனத் தசரதன் புலம்பலாகக் குலசேகரப் பெருமாள் அருளிச் செய்ததுங் காண்க.

இப்பாடல் ஒரு பிரதியில் இல்லை.

(பி - ம்.) 2. மின்னின் மின்னுள், மின்னும் வரிவிற் குமரா மெய்யின் மெய்யே வினையேன்.
3. வனநீ யிடைதற்கு, அவனிபடைதற்கு; எளியேனல்லன், இனி யேனல்லேன்.
4. உன்னின் முன்னின்; புகுவன்; உயர்வானியான், உயர் வான் றமியேன். (59)

355. நெகுதற் கொத்த நெஞ்சு நேயத் தாலே யாவி
உகுதற் கொத்த வுடலு முடையே னுன்போ லல்லேன்
தகுதற் கொத்த சனகன் தையல் கையைப் பற்றிப்
புகுதக் கண்ட கண்ணாற் போகக் காணே னென்றான்.

நெகுதற்கு ஒத்த நெஞ்சும் - நெகிழ்ந்துருகுதற்கேற்ற மனமும், நேயத்தாலே - அன்பாலே, ஆவி உகுதற்கு ஒத்த உடலும் - உயிர் (உடனே) பிரிதற்கேற்ற (தளர்ந்த) உடம்பும், உடையேன் - உடையவன் நான்; உன்போல் அல்லேன் - (திண்ணிய நெஞ்சும் உடம்பும் உடைய) உன்னைப்போலல்லேன்; தகுதற்கு ஒத்த - நின் தகுதிக்கேற்ற, சனகன் தையல் - சனக மன்னன் புதல்வியான சீதையின், கையைப் பற்றி - கையைப் பிடித்து உடன் அழைத்துக்கொண்டு (திருமணக் கோலத்துடன்), புகுத கண்ட கண்ணால் - (இந்நகரினுள்ளே) நீ வந்ததைக் கண்ட என் கண்களாலே, போக காணேன் - (நகரினின்றும் நீ தவக்கோலத்துடன்) போதலைக் காணப் பொறேன்; என்றான்—.

'இராமா, நீ மணக் கோலத்தோடு, சானகியையும் உடன் கொண்டு இந்நகரினுட் புகுந்து நெடுநாளாகவில்லை; இப்போது நீ மீண்டும் தவக் கோலத்துடன் காடு செல்லுதலைக் காண என் மனம் பொறாது; நீ சென்றால் உடனே நான் உயிர் விடுவேன்' என்பது கருத்து. 'புகுதக் கண்ட கண்ணால் போகக் காணேன்' என்றது சீதையும் உடன் செல்லும் குறிப்பை உணர்ந்தவன் என்பதை உணர்த்திற்று. 'நீ இளைஞனாதலால் திண்ணிய நெஞ்சும், உடலும்

படைத்தவன்; இந்தத் தளர்ந்த முதுமைப் பருவத்தில், என் நிலையை நோக்கி இரங்காது என்னை விட்டுச் செல்கின்றாய்' என்று குறை கூறுவான், 'உன்போல் அல்லேன்' என்றான்.

தகுதல்-தகுதி; தகுதிக் கொத்தலாவது, ஒத்த குலனும், நலனும், உருவும், திருவும், பிற சிறப்புக்களும் உடைமை.

(பி - ம்.) 1. ஒத்த கெஞ்சின், கெஞ்சம்; கேயத்தா லென்னவி, கேசத்தாலே யாவி.
2, உடையோன்; நின்போலல்லன்.
4. புகுதற் கண்ட, புகுதல் கண்ட; போகக் கண்டேன். (60)

356. எற்றே பகர்வே னினியா னென்னே யுன்னிற் பிரிய
வற்றே யுலகம் மெனினும் வானே வருந்தா தெனினும்
பொற்றே ரரசே தமியேன் புகழே யுயிரே யுன்னைப்
பெற்றே னருமை யறிவேன் பிழையேன் பிழையே னென்றான்.

பொன் தேர் அரசே - பொன்னால் அமைந்த தேரையுடைய அரசனே, தமியேன் புகழே - துணையற்ற என் புகழுக்குக் காரண மானவனே, உயிரே - என் உயிரானவனே, என்னே - (இவ்வாறு நேர்ந்ததுதான்) என்னையோ! இனி யான் எற்று பகர்வேன் - இப்போது நான் (என் நிலையை) எவ்வாறு கூறுவேன்? உலகம் - இந்நாடு முழுதும், உன்னில் பிரியவற்றே எனினும் - உன்னைப் பிரிந்திருக்க வல்லாதாயினும் வான் வருந்தாது எனினும் - (உன் பிரிவால்) வானுலகமும் வருந்தா தாயினும், அருமை - உனதருமையை, பெற்றேன் அறிவேன் - உன்னை (நோற்றுப்) பெற்ற நானே அறிவேன்; (ஆதலால்), பிழையேன் பிழையேன் - இனி நான் பிழைத்திரேன் பிழைத்திரேன்; என்றான்—.

"அரசாகாத நிலையிலே இவ்வுலகத்தார் உன்னைத் தம் உயிராகக் கருதினர்; தமக்குச் சிறப்போடு பூசனை செல்ல ஆளவல்லாயாதலின் தேவரும் உன்னை உயிரெனப் போற்றுவர்; எனவே, இவ்விரு வகை யினரும் நீ அரசு துறந்து செல்லுதற்கு வருந்தாதிரார். எவர் எங்ஙன மாயினும், பிள்ளையின் அருமையைப் பெற்ற நானே மற்றவரினும் நன்கு அறிவேனாதலின், நீ பிரிந்தால் நான் உயிர்தரியேன்; இதனை நான் இன்னும் எவ்வாறுதான் கூறுவது?" என்று புலம்புகின்றான். உம்மை யிரண்டும் எதிர்மறைப் பொருளன. அடுக்குத் துணிவுப் பொருள்து. பிழையுடையவனான யான் பிழையேன் எனக்கோடாலுமாம். உன்னில்- உன்னை; உருபுமயக்கம்.

சில பிரதிகளில் இப்பாடல் இல்லை.

(பி - ம்.) 1. எற்றே பகர்வான், பகர்வன்; என்னை; உன்னிப் பிரிய, உள்ளிற்பிரியா.
2. வற்றே யுலக மெனினும், வற்றேவுலகம் மெனினும், மற்றே யுலகத் தேனும்; வருந்தா னெனினும், வருந்தா வெனினும், உறைத மெனினும்.

3. பொன்னேயுயிரே, பொன்னேவுயிரே, போனவுயிரே.
4. அருமையறியேன், அருமையறிவன், அறிவல்; நீர்மையறிவன்; பிழையேனினியானேனென்ருன். (61)

357. அள்ளற் பள்ளப் புனல்சூ ழகன்மா நிலமு மரசும்
கொள்ளக் குறையா நிதியின் குவையு முதலாமெவையும்
கள்ளக் கைகே சிக்கே யுதவிப் புகழ்கைக் கொண்ட
வள்ளற் றனமென் னுயிரை மாய்க்கு மாய்க்கு மென்ருன்.

அள்ளல் - சேற்றையுடைய, பள்ளம் - ஆழமான, புனல்சூழ் கடல் நீர் சூழ்ந்த, அகல் மா நிலமும் - பரந்த பெரிய நாட்டையும், அரசும் - (அதனை ஆளுதற்குரிய) அரசுரிமையையும், கொள்ள குறையா - (இரவலர் முதலியோர் எவ்வளவு) கொள்ளினும் குறையாத, நிதியின் குவையும் முதல் ஆம் - நிதிக் குவியலும் முதலான, எவையும் - எல்லாவற்றையும், கள்ளம் கைகேசிக்கே உதவி - வஞ்சகமுள்ள கைகேயிக்கே கொடுத்துவிட்டு, புகழ் கைகொண்ட - (அளவிடற்கு அரிய) புகழைப் பெற்றுக்கொண்ட, வள்ளல் தனம் - (உன்னுடைய) வள்ளன்மை, என் உயிரை மாய்க்கும் மாய்க்கும் - என்னுயிரை அழிக்கின்றது, என்ருன்—.

'இராமா, நீ மிகவும் திறமையுள்ளவன்; நிலையாதவற்றையெல்லாம் கைகேயிக்குக் கொடுத்துவிட்டு, நிலைத்த பெரும் புகழை எளிதிற் பெற்றுக்கொண்டாய்; அதனுல் என் உயிர் போதலை ஓர்ந்தாயல்லை', என்கின்ருன். இராமன் தனக்கென அமைந்த அரசை விட்டுப் பிரிதலையே 'கைகேயிக்கே உதவி' என்பதனுல் குறித்தான். 'தனம்' என்பது உலக வழக்குச் சொல்லாட்சி. நாடு, அதனை ஆளும் உரிமை, அதற்குத் துணையான செல்வம் முதலியவெல்லாம் எனச் சிறப்புநோக்கித் தனித்தனியே எண்ணப்பட்டன. இங்கும், மாய்க்கும் என்ற அடுக்குத் துணிவுபற்றியது. இராமன் பிரிந்தால் தன் உயிர் பிரிவது திண்ணம் என்பதனை இதுகாறும் பலபடியாக எடுத்துக் கூறினுன் மன்னன்.

(பி - ம்.) 1. அள்ளற் பழனப்; புனல்சூழ்கனுளிலனும்; நிலமும், அகன் மா நிலனும், மாநிலமாய்.
2. குவையு முதலா வெவையும்.
3. கைகேயிக்கே யுதவிப், கைகேசிக்கினியானுதவிப், கைகேசிக்கி யானுதவப் புகழைக் கொண்ட.
4. வள்ளற் பிரிவென், உயிரா லன்றி மறையேன், உயிராலன்றி மறையேல், உயிரை மாய்க்கு மாய்க்கு மென்ருன். (62)

358. ஒலியார் கடல்சூ ழுலகத் துயர்வா னிடைநா கரினும்
பொலியா நின்ருருன்னைப் போல்வா ருளரோ பொன்னே
வலியா ருடையா ரென்ருன் மழுவா ளுடையான் வரவும்
சலியா நிலையா யென்ருற் றவிர்வா ருளரோ வென்ருன்.

ஒலி ஆர் கடல்சூழ் உலகத்து - ஓசைமிக்க கடல் சூழ்ந்த இவ்வுலகத்திலும், உயர் வான் இடை - உயர்ந்த வானுலகத்திலும், நாகரினும் - பாதலத்திலும், பொலியா நின்றார் - விளங்கி நின்றவர்களுள், உன்னை போல்வார் உளரோ - உன்னையொப்பார் (எவரேனும்) உளரோ? பொன்னே - பொன் போன்றவனே, மழு வாள் உடையான் - (அரசரையெல்லாம் இருபத்தொருகால் கொன்றொழித்த) மழுப்படையை உடைய பரசுராமன், வலி யார் உடையார் என்றான் வரவும் - (என்னைப் போல்) வலிமையுடையார் யாவர் என்று வீரம் பேசிக்கொண்டு (நின் முன்) வரவும், சலியா நிலையாய் என்றால் - (அவனைக் கண்டு சிறிதும்) கலங்காத உறுதியுடையை நீ என்றால், தவிர்வார் உளரோ - (உன்னைப் புதல்வனாகப் பெற்றும் இவ்வாறு வனம் போக) விட்டிருப்பார் எவரேனும் இவ்வுலகில் இருப்பரோ? (இரார்), என்றான்—.

'இராமா, குணங்களாலும் வீரத்தாலும் உன்னைப்போல் உயர்ந்தோர் மூவுலகிலும் இல்லை; பிறர், நினைத்தாலே நடுங்கத்தக்க பரசுராமன் நின்னெதிர் வரவும், அவனைக் கண்டு சிறிதும் கலங்காது நின்று வெற்றி கொண்டாய்; இத்தகைய உன்னை எப்படி நான் விட்டிருப்பேன்?' என்கின்றான். பரசுராமனை வென்ற வீரச் சிறப்பை முன்னும் (352) குறித்தமை காண்க. "மலைகுவென், வல்லை யாகில் வாங்கிடிச் சிலையை" (பால. 1373) என்ற பரசுராமன் கூற்று இங்கே நோக்கத் தகும். பெறற்கருமையும், குணமும், ஒளியும் பொருந்தி, வழுவாது போற்றற்குரியது பொன்னாதலால், 'பொன்னே' என்றான். "பொன்னின் முன்ன மொளிரும் பொன்னே" (354) என முன்னர்க் கூறியது காண்க.

நாகர் - நாக லோகம்; தானியாகுபெயர். உலகத்து, வானிடை என்ற இடங்களில் எண்ணும்மை தொக்கது.

(பி - ம்.) 1. உயர் வானிறு நாகரினும், வானக நாகரினும், வானிடை நாகரிலும், வானிடை நாகத்துப்.
2. போல்வா ருளரே, பொருவாருள்ளார் போனாய், பொருவாருளரே; நிருவே.
3. வலியாருடையானென்றான், உடையாரென்றால்; மழுவாளவனேர் வரினும்; அன்றோ மின்மா நிலமாம், மின் மாநிலம்யான்.
4. நிலையாய் நின்றால், நிலையா நின்றால், நிலையானென்றால், நிலைநின்றாய் போல், நிலைநின்றார்போல்; தவிரா ருளரோ, தருவா ருளரோ, தடுப்பா ருளரோ. (63)

359. கேட்டே யிருந்தே னெனினுங் கிளர்வா னின்றே யடைய
மாட்டே னாகி லன்றோ வன்க ணெனன்கண் மைந்தா
காட்டே யுறைவாய் நீயிக் கைகே சியையுங் கண்டிந்
நாட்டே யுறைவே னென்று னன்றென் றன்மை யென்றான்.

கேட்டே - (நீ காடு செல்வதைக்) கேட்டும், இருந்தேன் எனினும் - (இதுவரை) நான் உயிரோடிருந்தாலும், இன்றே - இப்போதே, கிளர் வான் அடைய மாட்டேனுகில் அன்றோ - விளங்குகின்ற விண்ணுலகத்தை அடைய மாட்டாதவனுயிருந்தாலன்றோ, என்கண் வன்கண் - என்பால் வன்கண்மையுள தென்ருகும்; மைந்தா - என் மகனே, நீ காட்டே உறைவாய் - நீ காட்டிலே போய்த் தங்குவாய்; (அப்போது), இ கைகேசியையும் கண்டு - இந்தக் (கொடுமை செய்த) கைகேயியையும் கண்ணெதிரே பார்த்துக்கொண்டு, இ நாட்டே உறைவேன் என்ருல் - இந்த நாட்டிலே நான் தங்கியிருப்பேனுனல், என் தன்மை நன்று - என் தன்மை மிக நன்ருயிருக்கும்; என்ருன்—.

'இராமா, நீ காடு செல்வாய் என்பதைப் பிறர் சொல்லக் கேட்டே தான் அறிந்தேன்; உன் செலவைத் தவிர்க்கலாமோவென்று கருதி, இதுவரை உயிரைத் தாங்கியிருக்கின்றேன். நீ காடு சென்றே தீர்வாய் என்ருல், அதன்பின் நான்மட்டும் இந்தப் பாவி கைகேயி முகத்தில் விழித்துக்கொண்டு இங்கே இருப்பேனுனல் நான் வன்கண்ணன் அன்றோ? உலகமும் என்னை இகழாதோ? அதற்கு இடமின்றி இப்போதே நான் விண்ணுலகம் புகுகின்றேன்' என்கின்ருன். 'இருந்தேனெனினும்' என்றது, இருத்தற்குக் காரணத்தைக் குறிப்பாகக் கூறியவாறும். "உன்போலல்லேன்" (355) என முன்னர்க் கூறியதும் ஈண்டு நோக்கத்தகும். 'என் தன்மை நன்று' என்றது எதிர்மறை யிலக்கணையாகிய குறிப்பு; நன்றன்று என்பது பொருள்.

(பி - ம்.) 1. கேட்டே இருந்தேனேனும், இருந்தேனெனிலும், ஈந்தேனெனிலும், ஈந்தேனெனவும், வியந்தே னெனினும், வீழ்ந்தே யின்னும், கேட்டே னிருந்தேனெனினும்; இன்றே மடிய.
2. மாட்டே னுயினன்றோ; வன்கண்ணென்கண்.
3. நீயுங் கைகேசியையுங் கண்டியான்; கண்டு.
4. உறைவா னென்ருல்; உறைய வென்ருல்; தன்மை யென்பான், தன்மை யென்ருன். (64)

360. மெய்யார் தவமே செய்துன் வியன்மார் பரிதிற் பெற்ற
செய்யா ளென்னும் பொன்னு நிலமா தென்னுந் திருவும்
உய்யா ருய்யா வினையே னுன்னைப் பிரிந்து மிருந்தால்
ஐயா கைகே சியைநே ராகே னேநா னென்ருன்.

ஐயா - என் ஐயனே (குழந்தாய்!), மெய் ஆர் தவம் செய்து - உண்மை நிறைந்த தவத்தைச் செய்து, உன் வியல் மார்பு - உனது பரந்த திருமார்பை, அரிதின் பெற்ற - அரிதாகச் சேரப்பெற்ற, செய்யாள் என்னும் பொன்னும் - செய்யாள் என்று சொல்லப்படும் திருமகளும், நிலம் மாது என்னும் திருவும் - பூமிதேவி எனப்படும் பிராட்டியும், உய்யார் - (உன் பிரிவால்) பிழைத்திரார்; உய்யா வினையேன் - (கைகேயி பிடியினின்றும்) தப்பும் வகையில்லாத செயலுடைய நான்,

உன்னை பிரிந்தும் இருந்தால் - உன்னைப் பிரிந்த பின்னும் உயிரோடு இருந்தால், நான் கைகேயியை நேர் ஆகேனோ - நானும் கைகேயியைப்போலப் (பெரும் பாவியும் வன்கண்ணனும்) ஆகமாட்டேனோ? என்றான்—.

இதிலும் இராமனைப் பிரிந்து தான் உயிரோடு இருத்தல் இயலாது என்பதனை வலியுறுத்துகின்றான் மன்னன். பிறரெல்லாம் தவங்கிடந்து பெறுதற்குரிய திருமகளும் நிலமகளும் உன்னைச் சேரத் தவங் கிடந்தனர் என்றது, இராமபிரானது ஏற்றம் குறித்தது. 'பொன்' என்பது திருமகளுக்குரிய பெயர்களுள் ஒன்று. 'நானும்' என்றபால 'உம்மை' தொக்கது.

இராமபிரானைப் பிரிந்தால், திருமகளும் நிலமகளும் வருந்தல் : "பொன்றிணி போதி னாளும் பூமியும் புலம்பி நைய" (296).

(பி - ம்.) 1. மெய்யா, மெய்யே; மிடன் மார்பு.
2. செய்யா ளென்னுந் திருவுந் நிலமா தென்னு மயிலும்.
3. உய்யாருய்யார் கெடுவேன், உன்னைப் பிரியின்; வினையேற்கு, வினையான், உன்னைப் பிரிவுற்றதனால்.
4. ஐயா கைகேசியையே நேராருளரா மென்றான், கைகேசியை நேராருரைதானென்றான், கைகேசியை நேராமுகனோதானென்றான், கைகேசியையுங் காவா ரென்றுஞ் சொன்னான், கைகேசிய்யே நேராருளரா மென்றான், கைகேசிகை தன்னேராகேனோ வென்றான், கைகேசிக்கே நிகராகேனோ வென்றான். (65)

361. பூணா ரணியும் முடியும் பொன்னா சனமுங் குடையும்
சேணார் மார்புந் திருவுந் தெரியக் காணக் கடவேன்
மாணா மரவற் கலையு மானின் றோலும் வனைதல்
காணா தொழிவே னென்றா னன்றாய்த் தன்றோ கருமம்.

பூண் ஆர் அணியும் - பூணுதற்குப் பொருந்திய பல அணிகலன்களும், முடியும் - கிரீடமும், பொன் ஆசனமும் - பொன்னாலாகிய சிங்காதனமும், குடையும் - வெண்கொற்றக் குடையும், சேண் ஆர் மார்பும் - அகலமான (உனது) திருமார்பும், திருவும் - (மார்பில் வீற்றிருக்கும்) ஜயலட்சுமியும் (ஆகியவற்றை), தெரிய காண கடவேன் - கண்ணாரக் காணுதற்குரிய நான், (அவற்றிற்கு மாறாக), மாணா மரம் வற்கலையும் - (உனக்கு) மாட்சிமைப்படாத மரவுரியையும், மானின் தோலும் - மான்தோலையும், வனைதல் - நீ தரித்தலை, காணாது ஒழிவேன் என்றால் - பாராது (இவ்வுலகை விட்டு) நீங்குவேனாகில், கருமம் - அச் செயல், நன்று ஆய்த்து அன்றோ - நல்லதாகுமன்றோ?

இஃது அடுத்த கவியுடன் தொடரும்.

'இராமா, நீ அரசக் கோலத்துடன் சிங்காதனத்தில் வீற்றிருக்கக் காணவேண்டிய நான், அதற்கு மாறாக நீ தவக்கோலம் பூணுதலைக்

காணுதல் தகாது; எனவே, அதனைக் காணாமல் நான் உயிர் விடுதலே பொருந்திய செயலாகும் என்கின்றான்.

வற்கலை - மரவுரி; வல்கலா என்ற வடசொற் சிதைவு. அரசுக்கும், இராமபிரானது மென்மை பொருந்திய திருமேனிக்கும் பொருந்தாத வன்மையுடையதென்பார் மாறா மரவற்கலை என்றார். ஆய்த்து - ஆயிற்று. "கூடிய கூட்டத்தி னுலுள தாய்த்திக் குவலயமே" (ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி, 80). "பூமருவு நறுங்குஞ்சி புன்சடையாப் புனைந்துபூந் துகில்சே ரல்குல், காமரெழில் விழலுடுத்துக் கலனணியா தங்கங்கள் அழகு மாறி, ஏமருதோ ளென்புதல்வன் யானின்று செலத்தக்க வனந்தான் சேர்தல், தூமறையீ ரிது தகவோ சுமந்திரனே வசிட்டனே சொல்லீர் நீரே" (பெருமாள் திருமொழி, 9 : 7) என்ற பாசுரம் இங்கு நினைக்கத்தகும்.

(பி - ம்.) 1. பூணார் மார்பும் வடிவும், பூணார் முடியுந் திருவும்; பொன்னுதனமும்; கொடையும், சிறப்பும்.
2. சேணாரழகும், தோளும், தெரியக் காணத் திரிவேன், திருவுங் காணத் தெரியேன், மார்பும் திருவுங் காணுஞ் சிந்தையுடையேன்.
3. மாணார், மாவற் கலையும், மரைவற் கலையும், வரைவற் கலையும், மானின் றோலும்ீ மவை நான், அவைதான், அவைமின்.
4. காணுதொழிந்தே னென்றால், ஒழிவனன்றே, ஒழிவேனின்றே, ஒழிவே னென்றான்; நன்றென் கரும மென்றான்; நன்றுமன்றே கருமம், நன்றே கரும மென்றான்; காணுதொழிந்தே னன்றுய்த்து, ஒழியே னன்றுய்த்து. (66)

வசிட்டர் கூறுதல்

362. என்று வொன்றொன் றொவ்வா விசைதந் தரசன் னுயிரும்
சென்று னின்றே டென்னுந் தன்மை யெய்தித் தேய்ந்தான்
மென்றோன் மார்பின் முனிவன் வேந்தே யயரே லவனை
இன்றே யேகா வண்ணந் தகைவெ னுலகோ டென்றான்.

என்று - என்றிவ்வாறாக, ஒன்று ஒன்று ஒவ்வா இசை தந்து - ஒன்றுக்கொன்று இயல்பில்லாதனவற்றைச் சொல்லிக்கொண்டு, அரசன் இன்றோடு உயிர் சென்றான் - நம் அரசன் இன்றோடு உயிர் மாண்டான், என்னும் தன்மை எய்தி - என்று (கண்டோர்) சொல்லும் நிலையை அடைந்து, தேய்ந்தான் - மெலிந்தான்; (அது கண்டு), மென் தோல் மார்பின் முனிவன் - மெல்லிய மான் தோல் பொருந்திய மார்பையுடைய வசிட்டமுனிவன், (மன்னனை நோக்கி), வேந்தே - அரசே, அயரேல் - வருந்தாதே; இன்றே - இப்போதே, உலகோடு - உயர்ந்தோர் பலரோடு (சென்று), அவனை - அவ்விராமனை, ஏகா வண்ணம் தகைவென் - (காட்டிற்குப்) போகாதபடி தடுப்பேன், என்றான்—.

தாங்க முடியாத வருத்தத்தோடு புலம்புதலின், அரசன் உரைகள் ஒன்றேடொன்று பொருந்தாதனவாயின. மன்னன் கருத்துணர்ந்த முனிவன், அவனைத் தேற்றும்பொருட்டு, 'நான் உயர்ந்தோர் பலரோடும் சென்று, இராமன் வனம் போகாதபடி தடுத்து நிறுத்துவேன்' என்று கூறி எழுந்தான். முனிவனால் அது முடியலாமென்ற நம்பிக்கையும் மன்னனுக்குண்டாயிற்றென்பது அடுத்த பாட்டால் அறியலாகும். அவனை உலகோடு தகைவென் - இராமனை நாட்டோடு பிணைப்பேன்; அதாவது, நாடாட்சியையும் ஏற்கச் செய்வேன் என்று உரைத்தலுமாம்.

என்று: முன் பாட்டோடு தொடர்பு பற்றியது. ஒவ்வா - ஒவ்வாதன; வினையாலணையும் பெயர். இசைதரல் - இசைத்தல் - சொல்லுதல்; தா: துணைவினைப்பகுதி. உயிரும் : உம்மை, இசை நிறை.

மென்றோல் மார்பின் முனிவன் : "மானின், உரிவை தைஇய ஊன்கெடு மார்பின், என்பெழுந் தியங்கும் யாக்கையர்" (முருகு. 128-30.)

(பி - ம்.) 1, ஒன்றேடொன்றென் றெவ்வா, ஒன்றெடொன் றெவ்வாத, ஒன்றேடொன்றே டொவ்வா, ஒன்றே டொன்றே டொன்று.
2. சென்று னின்று னென்னும், சென்றுனிக்காளென்னும், சென்றே னின்றுனென்னும்; தன்மை யெய்திற்றென்ன, எய்திற் றென்னு எய்திற் றென்றான், சென்றேவிடுமின் றென்னுத், தெளியாதயர் போதினினவாய்.
3. மென்றேன் முனிவன் வந்தான், மென்றேள் மரபின் முனிவன், மென்றேன் மார்பின் முனிவன், மென்றேன் முனிவன் வந்தான், வென்றுயுலகத்தனை நீ, வேந்தே யினியுன் மகனை.
4. இன்றேகாதவண்ணம்; தகைவன், தகைவேன், தகைவான், தருவேன்; உலகோ டென்னு, உரைகொண் டென்றான், உரைகொள் கென்றான், உரைகொள்ளென்றான், நகரோ டென்றான். (67)

தசரதன் நிலை

363. முனிவன் சொல்லு மளவின் முடியுங்கொல் லென் றரசன்
தனிநின் றுழறன் னுயிரைச் சிறிதே தகைவா னிந்தப்
புனிதன் போனு லிவனுற் போகா தொழிவா னென்னு
மனிதன் வடிவங் கொண்ட மனுவுந் தன்னை மறந்தான்.

முனிவன் சொல்லும் அளவில் - வசிட்ட முனிவன் (இராமனைத் தகைவேன் என்று) சொன்னபோது, முடியும் கொல் என்ற அரசன் - (இப்போதே) இறந்துபடுவானோ என்ற நிலையிலிருந்த அரசனாகிய, மனிதன் வடிவம் கொண்ட மனுவும் - மனித வடிவங்கொண்டு வந்துள்ள மனுநீதியே போன்ற தயரதனும், இந்த புனிதன் போனால் - இந்தத் தூயவன் (இராமனிடம்) போனால், இவனால் - இவன் திறமையால், போகாது ஒழிவான் என்னு (இராமன்) வனம் போகாமல் நிற்பான் என்று கருதி, தனி நின்று உழல் தன் உயிரை - (காப்பாரின்

றித்) தனியே நின்று தவிக்கும் தன் உயிரை, சிறிதே தகைவான் - சிறிது தடுத்து நிறுத்திக் கொள்பவனுகி, தன்னை மறந்தான் - (மீண்டும்) தன் நினைவை இழந்தான்.

வசிட்ட முனிவன் வார்த்தையால் சிறிது நம்பிக்கை பெற்ற மன்னன், மனம் சிறிது தளிர்ப்புற்று, ஊசலாடிக் கொண்டிருந்த தன் உயிரை உடனே போகாதவாறு சிறிது தடுத்துக்கொண்டான்; ஆயினும் சோர்வு மிகுதியால் மீண்டும் அவசமுற்ருன்.

அரசனுகிய மனு என்றியைக்க. தயரதனது நீதிச் சிறப்பு நோக்கி, 'மனிதன் வடிவங் கொண்ட மனு' என்ருர். வசிட்ட முனிவன் திரி கரணங்களாலும் தூய்மையுடையவனென்பார் 'புனிதன்' என்ருர். என்றரசன்; தொகுத்தல்.

(பி - ம்.) 1. சொல்லும் மளவின்; மு. முனிவன் போன பின்னை முடிசே ரரசர்க்கரசன்.
2. தகைவானந்தப், தகையா விந்தப்.
3. போனு லவனுல், அவனே; போகாதொழிவன், போக லொழிவான்.
4. மனிதன் வடிவுகொண்ட, மனுவின் வடிவங்கொண்ட; மன்னன் றனையு மறந்தான், மன்னன் றன்னை மறந்தான், மன்னும் தன்னை மறந்தான்; மறையோன்ருனும் போனுன். (68)

கோசலையின் நிலை

364. மறந்தா னுணர்வு முயிரும் மன்ன னென்ன மறுகா
இறந்தான்கொல்லோ வறியே னென்னு விடருற் றழிவாள்
துறந்தான் மகன்முன் னெனையுந் துறந்தாய் நீயுந் துணைவா
அறந்தா னிதுவோ வையா வரசர்க் கரசே யென்ருள்.

மன்னன் - தசரதன், உணர்வும் உயிரும் மறந்தான் என - தன் நினைவும் உயிரும் சோர்ந்தான் என்று எண்ணி, மறுகா - மனம் மறுகி, இறந்தான் கொல்லோ - இறந்தே விட்டானே? அறியேன் - அறி கிலேனே! என்னு - என்று, இடர் உற்று - துன்பமிக்கு, அழிவாள் - கலங்குகின்ற கோசலை, ஐயா, - என் ஐயனே, அரசர்க்கு அரசே - சக்கரவர்த்தியே, மகன் முன் எனையும் துறந்தான் - இராமன் முதலில் உன்னேடு என்னையும் கைவிட்டான்; (அத்துயரம் ஆறுவதற் குள்) துணைவா நீயும் துறந்தாய் - எனக்குற்ற துணையானவனே நீயும் (என்னைக்) கைவிட்டாய்; இது அறம்தானே - இது தருமந்தானே? என்ருள் - என்று கதறினுள்.

மன்னன் நிலைகண்ட கௌசல்யாதேவி, அவன் இறந்து விட்டானே என்று ஐயமுற்றுப் புலம்பலுற்ருள். 'இராமனைப் பிரிந்து பரிதவிக்கும் என்னை நீயும் கைவிட்டுச் சென்ருல், என் நிலை யாதாகும்? இது தருமமோ?' என்று கதறுகின்ருள்.

அவள் சிறிது தேறி மன்னனைத் தேற்றுதல் அடுத்த பாட்டிற் கூறப்படும். அழிவாள் கோசலை யென்றது, 366-ஆம் பாட்டால் பெறப் படும்.

கொல்: ஐயப் பொருளது. என்று-என்று. எனையும் என்ற உம்மை யால், உன்னோடு என்பது வருவித்துரைக்கப்பட்டது. அறந்தான் இதுவோ என்றதில் ஓகாரம் பிரித்துக்கூட்டி உரைக்கப்பட்டது.

(பி - ம்.) 1. மினைவு முயிரும், மினைவு முணர்வும், மினைவும் மன்னன்; மன்ன னென்ன மறுகி, மன்னன் மறுகி மறுகி, என்ன முன்ன முறுகி, உயிரும் மறுகி மறுகி.
2. இறந்தான் கொல்லோ வரசன், இறந்தான் கொல்லோ வின்னே, இறந்தான் கொல்லோ வென்றென்று, இறந்தானரசன் கொல்லோ; என்றென்றிடருற்றழுவாள், அழிவாள், என்னே யிடருற்றழிவாள், இடருற்றழிவாளேங்கி.
3. துறந்தாய், இறந்தாய்; மகனே யுலகோடு; எமையும் என்றுள் துணைவற்கு, எமையும் மென்னத்; துணையாம், துணையாள், துணைவா, துணைவாழ், எமையும் மென்னைத் துணையாம், எவையும் மென்னத் துணைவா.
4. ஐயாவரசற்கு; என்றான், என்னு. (69)

கோசலை மன்னனைத் தேற்றல்

365. மெய்யின் மெய்யே யுலகின் வேந்தர்க் கெல்லாம் வேந்தே
உய்யும் வகைநின் னுயிரை யோம்பா திங்ஙன் றேம்பின்
வைய முழுதுந் துயரான் மறுகும் முனிவன் னுடனம்
ஐயன் வரினும் வருமா லயரே லரசே யென்றாள்.

(சிறிது தேறிய கோசலை), மெய்யின் மெய்யே - உண்மையின் வடிவமானவனே, உலகின் வேந்தர்க்கு எல்லாம் வேந்தே-உலகத்தி லுள்ள அரசர்கட்கெல்லாம் பேரரசே, உய்யும் வகை-(நாங்களெல்லாம்) உய்யும்படி, நின் உயிரை ஓம்பாது - உனதுயிரைப் பாதுகாத்துக் கொள்ளாமல், இங்ஙன் தேம்பின் - இவ்வாறு நீ வருந்தினால், வையம் முழுதும் - இவ்வுலகம் முற்றும், துயரால் மறுகும் - துயரால் கலங்கும்; முனிவனுடன் - வசிட்ட முனிவனோடு, நம் ஐயன் - நம் குழந்தை, வரினும் வரும் - திரும்பி வந்தாலும் வருவான்; அயரேல் அரசே - சோராதே எம்மரசனே, என்றாள்—.

கோசலை, மன்னன் இறக்கவில்லையென்பதை உணர்ந்து, அவனைத் தேற்றுவாளாய், 'குடிகளும் நாங்களும் உய்யும் பொருட்டேனும், நீ வருந்தியழியாது தேறியிருத்தல் வேண்டும்; வசிட்ட முனிவனால் இராமன் திரும்பி வருதலுங் கூடும்; ஆதலால் ஐயனே, இவ்வாறு வருந்தாதொழிக' என்றாள். மன்னன் வாய்மை காத்தற் பொருட்டே உயிர் துறக்கின்றானாதலின் 'மெய்யின் மெய்' எனப்பட்டான். வருமால்: ஆல், அசை.

(பா - ம்.) 1. உலக வேந்தர்க்கு.
2. இங்கன்; தேம்பில்; வெம்பின்; உய்யுங் கொல்லெம் முயிரு மொவ்வாதிங்ஙன்; மு. உய்யுமங்கை நின்றனுயிரையோம்பா தேம்பில்.
3. முனிவனுடனெம், முனிவனொடு நம்.
4. அரசே யயரேலென்றாள். (70)

மன்னன் உணர்வு பெற்று உரையாடல்

366. என்றென் றரசன் மெய்யு மிருதா ளிணையும் முகனும்
தன்றன் செய்ய கையாற் றைவந் திடுகோ சலையை
ஒன்றுந் தெரியா மம்ம ருள்ளத் தரசன் மெள்ள
வன்றிண் சிலைநங் குரிசில் வருமே வருமே யென்றான்.

என்று என்று - என்று இவ்வாறு சொல்லிக்கொண்டு, அரசன் மெய்யும் - அரசனுடம்பையும், இரு தாள் இணையும் - இரண்டு கால் களையும், முகனும் - முகத்தையும், தன் செய்ய கையால் - தனது சிவந்த கையினால், தைவந்திடு கோசலையை - தடவிய கோசலையிடம், ஒன்றும் தெரியா - சிறிதும் தெளிவில்லாத, மம்மர் உள்ளத்து - மயக்கம் பொருந்திய மனமுடைய, அரசன் - தசரதன், மெள்ள - தாழ்ந்த குரலில், வல் திண் சிலை நம் குரிசில் - வலிய திண்ணிய வில்லை உடைய நம் இராமன், வருமே வருமே - வருவானா வருவானா? என்றான்—.

கால்களிலும், நெற்றியிலும், உடம்பிலும் வெப்பமுண்மை உயிருண்மைக்கு அறிகுறியாதலின், அஃது அறிதற்பொருட்டுத் தொட்டுத் தடவிப் பார்த்தாள் கோசலை. அவளுடைய மெல்லிய கை பட்டமாத்திரத்தில் மன்னன் சிறிது உணர்வு பெற்று, 'ஐயன் வரினும் வரும்' என்ற வார்த்தை செவிப்பட்ட நினைவோடு, 'குரிசில் வருமே வருமே' என்றான். சோர்வுற்ற நிலையில் அவன் குரல் தாழ்ந் தொலிக்கின்றதனால் 'மெள்ள' என்றார்.

முகன் : இறுதிப் போலி. தன்றன் : தன், சாரியை. திண்மை - கனம். குரிசில் : ஆண்பாற் சிறப்புப் பெயர். வரும் : செய்யுமென் முற்று. ஏகாரம், வினா.

362-66 எண்ணுள்ள ஐந்து பாடல்கள் ஒரு சுவடியில் 384-க்குப் பின் தொடர்ந்து காணப்படுகின்றன. 366-ஆம் பாட்டின் பின் இரண்டடிகள் இங்குக் கண்ட பாடபேதங்களுடன் உள்ளன. இப்பாட லின் இறுதியில், சாபவசனப் படலம் முற்றும் என்று காணப்படுகிறது. மேலே, சூழ்வினைக் கேள்விப்படலம் என்று மற்றொரு பிரதியில் தொடங்குகின்றது.

(பா - ம்.) 1. முகமும்.
2. தன்றென், தன்றண், தன்மென்; தைவந்திடு கௌசலையை, கோசலைதான்.

4. குருசில், வருமோ வருமோ.
3-4. பொன்றுங்கால மின்றே புகுந்த துனக்குள் புகழும், இன்றே போமோ வரசே யென்று விடருற்றனளே. (71)

367. வன்மா யக்கை கேசி வரத்தா லென்ற னுயிரை
முன்மாய் விப்பத் துணிந்தா ளென்றுங் கூனி மொழியால்
தன்மா மகனுந் தானுந் தரணி பெறுமா றன்றி
என்மா மகனைக் கானே கென்றா ளன்றே யென்றான்.

(அதன் பின் மன்னன்), வல் மாயம் கைகேசி - வலியவஞ்சனையை யுடைய கைகேயி, கூனி மொழியால் - கூனியின் சொற்படி, வரத்தால்—, தன் மாமகனும் தானும் - தன் பெரிய மகனும் தானுமாக, என்றும் தரணி பெறும் ஆறு அன்றி - என்றும் நாடாளுதலை உரிமையாகப் பெறுவதையன்றி, என் மாமகனை - என் மூத்த புதல்வனை இராமனை, கான் ஏகு என்றாள் அன்றே - காட்டிற்குப் போ என்றும் சொன்னாளன்றே? (ஆதலால்), என்தன் உயிரை முன் மாய்விப்ப துணிந்தாள் - என்னுயிரை முதலில் மாய்க்கத் துணிந்துவிட்டாள்; என்றான்—.

'இராமன் பிரிந்தால் என் உயிர் நில்லாதென்பதனைக் கைகேயி அறிவள்; அறிந்தும், என் கட்டளை என்று சொல்லி இராமனைக் காட்டிற்கு அனுப்பியதனால், அவள் என்னுயிரை மாய்க்கத் துணிந்தவளே' என்கின்றான் மன்னன். இதனால், இனி எவர் தடுப்பினும் இராமன் வனம் போகாதிரான், என் உயிரும் போகாதிராது என்றவாறும். மேலே மன்னன் சொல்லும் சாபவரலாற்றால் இது தெளியப்படும். பரதன் முடிசூடுதலைத் தசரதன் வெறுக்கவில்லை. இராமன் கான் புகுவதே அவனை மிகவும் வருத்துவது என்பது, "மண்ணே கொள் நீ மற்றைய தொன்றும் மற" என முன்னர்க் கூறியதனால் அறியப்படும். கைகேயியின் மனம் மாறியது கூனியா லென்பதனை மன்னன் அறிந்து கொண்டானென்பது வான்மீகத்தில் இல்லை. சீதையோடும் இலக்குவனோடும் இராமன் வனம் புகுவானென்ற செய்தியை, முடிசூடக் குறித்த நாளுக்கு முந்தின நாளே, தசரதன், கோசலை, சுமித்திரை ஆகிய மூவரும் இரகசியமாக அறிந்திருந்தன ரென்று ஆனந்த ராமாயணம் கூறும்.

இப்பாடலின் இறுதியடியில், 'என்றாள் எறும்பின் கதையாள்' என்றொரு பாடம் உளது; இது குறிக்கும் வரலாறு :

கைகேயியின் தந்தையாகிய அசுவபதி மன்னன், எறும்பு, ஈ முதலிய சிற்றுயிர்களின் பாஷையை நன்கறிந்தவன். ஒருநாள் அவன் தன் மனைவியுடன் இருந்தபோது, தன் கட்டிலின் கீழ்ச் சென்று கொண்டிருந்த ஓர் எறும்பின் பேச்சைக் கேட்டுச் சிரித்தான். அவன் மனைவி, அவன் சிரித்ததன் காரணத்தைக் கேட்க, 'அது சொல்லத்

தக்கதன்று; தேவரகசியம்; சொன்னால் நான் இறந்துபடுவேன்' என்றானாக, 'நீர் என்னை எள்ளி நகையாடினீர் போலும்; சிரித்ததன் காரணத்தை எங்ஙனமாயினும் சொல்லியே தீரவேண்டும்' என்று வற்புறுத்தவே, அவன் அவளைத் துரத்திவிட்டு நலமாக வாழ்ந்தான் என்பது. தாயின் குணம் மகளுக்கும் உளதாயிற்றென்று கைகேயியைச் சுமந்திரன் பழித்துக் கூறியவிடத்து இதனைச் சொல்வதாக வான்மீகத்தில் வந்துள்ளது. இப்பாடல் ஒரு சுவடியில் இல்லை.

(பா-ம்.) 1. வன்மாயக் கைகேசி வாக்கால், வன்மாயக் கைகேசி தன் வாக்கால், வன்மாக் கைகேசிதன் வாக்கால், வரத்தால், வன்மா கைகேசிதன் வரத்தால், வன்மாமனக்கைகேசி வரத்தால், வன்மா மாயக்கேசி வரத்தால்; என்றன்னுயிரை, இன்றென்னுயிரை.
2. துணிந்தாளெனினும், துணிந்தாளன்றேல், துணிந்தாளெனலும், துணிந்தாளென்னும்.
3. மகனுக்தரணி, மகனுக்குந்தான்; தரணி பெருமாறுன்னி, பெருமாறின்றி, தானே பெருமாறன்றி.
4. கானே கென்னுள், என்றுளென்றுன், என்றுளென்றுள், என்றுனென்றுன், என்னேவென்றுன்; எறும்பின் கதையாள்; அன்றேயென்றுன், அந்தோ வென்றுள்; இது கேளென்றுன். (72)

தசரதன் தன் சாப வரலாற்றைக் கூறுதல்

368. பொன்னார் வலயத் தோளான் கானே புகுத றவிரான்
என்னா ருயிரோ வகலா தொழியா திதுகோ சலைகேள்
முன்னா ளொருமா முனிவன் மொழிந்த சாப முளதென்
றந்நா ளுற்ற தெல்லா மவளுக் கரச னறைவான்.

(மன்னன் பின்னும் சொல்வான்) : பொன் ஆர் வலயம் தோளான் - பொன்னாலியன்ற வாகுவலயம் அணிந்த தோள்களையுடைய இராமன், கான் புகுதல் தவிரான் - காடு புகுதலைக் கைவிடான்; என் ஆர் உயிரோ அகலாது ஒழியாது - எனது அரிய உயிரும் நீங்காதிராது; கோசலை—, இது கேள்-(நான் சொல்லும்) இதனைக் கேட்பாயாக; முன் நாள் - முன்னொரு காலத்தில், ஒரு மா முனிவன் மொழிந்த சாபம் உளது - ஒரு பெரிய முனிவன் எனக்குச் சொன்ன சாபம் ஒன்றுள்ளது; என்று—, அந்நாள் உற்றது எல்லாம் - அந்நாளில் நிகழ்ந்ததை யெல்லாம், அரசன் அவளுக்கு அறைவான் - அரசன் அக்கோசலைக்குச் சொல்லலுற்றான்.

என்னுயிர் நீங்குதற்குக் காரணமாக, இராமன் பிரிவு முன்பு எனக்குள்ள சாபத்தால் நிகழ்ந்தே தீரும் என்று அச்சாப வரலாற்றைக் கூறுகின்றான்; அது மேலே பதினாறு கவிகளால் கூறப்படும். முனிவன்-சலபோசனன் எனப்படுவான்.

(பா-ம்.) 1. பொன்னார் தோளான்; கானே புகுதப் புகுதல்; கானே புகுதப் புகுதல், வலயத்தோளான் கானே போகை; தானே புகுதல், தானே புகுதல்.

2. ஒழியாதிது கோசலை கொள், ஒழியாதினி கோசலைகேள், கௌசலை கேள், ஒழியாதன கோசலைகேள், ஒழியாயென் கோசலை கேள், ஒழியாதது கோசலை கேள்; மு. என்னுருயிரோய்வதலா தொழியா தென கோசலை கேள்.
3. முனிவன் மொழியும், மொய்ந்தான், முனிவன்னறைந்த. (73)

369. வெய்ய கானத் திடையே வேட்டை வேட்கை மிகவே
ஐய சென்றே கரியோ டரிக டுருவித் திரிவேன்
கையிற் சிலையுங் கணையுங் கொடுகார் மிருகம் வருமோர்
செய்ய நதியின் கரைவாய்ச் சென்றே மறைய நின்றேன்.

வேட்டை வேட்கை மிக - வேட்டையாடும் விருப்பம் மிகுதலால், (ஒரு நாள்), செய்ய கானத்திடை சென்று - கொடிய காட்டினுள்ளே போய், ஐய கரியோடு - வியக்கத்தக்க யானைகளுடன், அரிகள் - சிங்கங்களையும், துருவி திரிவேன் - தேடிக்கொண்டு திரிந்த நான், கையில் சிலையும் கணையும் கொடு - கையிலே வில்லையும் அம்புகளையும் கொண்டு, கார் மிருகம் வரும் - யானைகள் (நீரருந்த) வரத்தக்க, ஓர் செய்ய நதியின் கரைவாய் சென்று - ஒரு செம்மையான ஆற்றின் கரையிற் சென்று, மறைய நின்றேன் - (வெளியே தோற்றாதவாறு) மறைந்து நின்றேன்.

மன்னன், தனக்கு நேர்ந்த சாபவரலாற்றை விரிவாகக் கூறுதலுற்றான். கொடிய வன விலங்குகளால் நல்லுயிர்கட்கு ஊறு விளையாதிருத்தற் பொருட்டு வேட்டையாடுதல் அரசர் கடமை. அதனைச் செய்யும் விருப்பத்தால், காட்டிற்குச் சென்ற தசரதன், முதலில் யானை வேட்டையில் நாட்டங்கொண்டு, யானைகள் நீரருந்த வரும் ஒரு நதிக் கரையில் அவற்றின் கண்ணுக்குப் புலனாகாதவாறு ஓரிடத்தில் மறைந்திருந்தான்.

ஏகாரங்கள் ஓசை நிறைக்க வந்தன. ஐய : ஐ என்னும் இடைச் சொல்லடியாக வந்த பெயரெச்சம். ஐ - வியப்பு.

(பா.ம்.) 2. ஐய சென்று, சென்ற, ஐயே சென்றே.
3. கையார் சிலையும், கையுஞ் சிலையும், கையின் சிலையும், கைவெஞ் சிலையும், கைய சிலையும்; கணையும் கொடு மாமிருகம்; இறுகக் கதமா, மிருகக் கதமா, மிறுகத்தமரம்.
4. செய்யார் நதியின், சென்றேன். (74)

370. ஒருமா முனிவன் மனையோ டொளியொன் றிலவா நயனம்
தருமா மகனே துணையாய்த் தவமே புரிபோழ் தினின்வாய்
அருமா மகனே புனல்கொண் டணைவான் வருமா றறியேன்
பொருமா கணைவிட் டிடலும் புவிமீ தலறிப் புரள.

ஒரு மா முனிவன் - (சலபோசனன் என்னும்) ஒரு சிறந்த முனிவன், மனையோடு - தன் மனைவியோடு, ஒளி ஒன்றில ஆம் நயனம்

தரு - (இருவர்க்கும்) ஒளி பொருந்தாதனவாகிய (பார்வையிழந்த) கண்களுக்குக் கண்ணுக உதவுகிற, மா மகனே துணை ஆய் - உத்தமனுன புதல்வனே துணையாக, தவம் புரி போழ்தினின் வாய் - தவம் செய்துகொண்டிருந்தபோது, அரு மா மகனே - அரிய பெரிய அப் புதல்வனே, புனல் கொண்டு அணைவான் - தண்ணீர் கொண்டு போதற் பொருட்டு, வரும் ஆறு அறியேன் - (அந்த ஆற்றுக்கு) வருகின்ற வகையை அறியாதவனுகி, பொரு மா கணை விட்டிடலும் - தாக்குதற்குரிய சிறந்த அம்பை (நான்) விட்ட அளவில், (அவ்வம்பு அவன்மீது பாய்ந்ததனுல்) அலறி புவி மீது புரள - (அவன்) அலறித் தரையில் விழுந்து புரண்டானுக.

இஃது அடுத்த பாடலுடன் தொடர்ந்து முடியும்.

ஆற்றின் கரையில் மன்னன் மறைந்திருந்தபோது முனி குமாரன் நீர் கொண்டுபோதற் பொருட்டு வந்து வாய் குறுகிய பாத்திரம் ஒன்றில் நீர் மொள்ளுவதனுல் உண்டான ஓசை, யானை நீரருந்தல் போல மன்னன் செவியிற் பட, உடனே ஒன்றும் பாராமல், யானை யென்றே கருதிச் சத்தவேதி என்ற அத்திரத்தை எய்ய, அது முனி குமாரன்மீது பாய்ந்ததனுல் அவன் மரணுவஸ்தையுடன் தரையில் விழுந்து புரளலுற்றுன். 'சப்தபேதி' என்பது, ஒலி வரும் வழியே சென்று ஒலிக்குக் காரணமான பொருளைத் தாக்கவல்லது; அடுத்த பாடலிற் காண்க. இங்ஙனமாக, மன்னன் அறியாது செய்த தவறு பெரும் பழிக்குக் காரணமாயிற்று. தாய் தந்தையர் இருவரும் கண் பார்வையற்றவரென்பது மேலே 374-ஆம் பாடலால் அறியப்படும்.

மணை : ஆகுபெயர். துணையாய் : ஆய் என்பதனை 'ஆக' எனத் திரிக்க. போழ்தினின் : இரண்டு இன்னும் சாரியைகள்.

(பி - ம்.) 1. ஒளியொன்றிலவாய், இலதாய், இலதாம்; இலவாநயனன், ஒளியொன்றின்றி யன்பார், அன்பால், ஒளியொன்றிலதா மெலிவான், ஒளியொன்றுமிலன் காதல், ஒளியொன்றில்லா நயனம், ஒளியொன்று மிலார் நயனம், ஒளியொன்றிலதால் நயனம், ஒழியவினிதா நயனம், ஒளியின் றெவையு முதவ.
2. தருமாமகவே, திருமா மகனே, திருமா மகவே; துணையாம்; புரி போதினின் வாய்; புரிபோதனனுர்க்கு.
3. மகனும், மைந்தன்; புனல் கொண்டகல்வான், மொண்டகல்வான்; வருமென்றறியேன்.
4. பொருமால்; புவிமீதலறிப் புரள்வான், பூமி மீதிற் புரள, பூமீதலறிப் புரள, புதல்வனலறிப் புரள. (75)

371. புக்குப் பெருநீர் நுகரும் பொருபோ தகமென் றெலிமேற்
கைக்கட் கணைசென் றதலாற் கண்ணிற்றெரியக் காணேன்
அக்கைக் கரியின் குரலே யன்றீ தென்ன வெருவா
மக்கட் குரலென் றயர்வேன் மனநொந் தவண்வந் தனெனுல்.

புக்கு - (அங்கே) வந்து, பெரு நீர் நுகரும் - மிக்க நீரைப் பருகு கின்ற, பொரு போதகம் என்று - (எதிர்ப்பட்டவரைப்) பொரவல்ல யானை யென்று கருதி, ஒலிமேல் - (வந்த) ஓசையின் வழியே, கை கண் கணை - என் கையம்பு, சென்றது அல்லால் - போய்ப் பாய்ந்ததையன்றி, கண்ணில் - என் கண்களால், தெரிய காணேன்-நேரே பார்க்கவில்லை; (அலறிய குரல் கேட்டபின்), ஈது - இக்குரல், அ கை கரியின் குரலே அன்று என்ன - (நாம் நினைத்தபடி) அந்தத் துதிக்கையை உடைய யானையின் குரலே அன்று எனவும், மக்கள் குரல் என்று - மனிதக் குரல் என்றும் (உணர்ந்து), வெருவா - அஞ்சி, மனம் நொந்து அயர்வேன் - மனம் வருந்திச் சோர்வேனாகி, அவண் வந்தனென் - (குமரன் கிடந்த) அவ்விடத்துக்கு வந்தேன்.

ஆல் : அசை. முதலிரண்டடிகளால் கணையின் (சத்தவேதியின்) தன்மை உணரலாகும். பொருதல், யானைக்கு இயற்கை யடை. குரலே: ஏகாரம், பிரிநிலை.

(பி - ம்.) 1. பொரு நீர், புது நீர்; பொரும் போதகமென்றொலிமேல், பொருப்புக் கரமென்றொலியோ, பொலி போதகமென்றொலிமேல்.
2. கணைசென்றதனாற், கணைசென்றல்லால்.
3. இக்கைக் கரியின் குரலோ, இக்கற்கரியின் குரலே, மிற்கத் திரியற் குரலே, மிற்கைக் கரியின் குரலே, விற்கைக் கரியின் குரலே, விக்கல் கரியின் குரலே; அன்றீதென்றுவெருவா, எனவோ வொருவா, அன்றீதென்னவொருமா, அன்றிதெனவோருருமா.
4. என்றமர்வேன், என்றறியா, என்றியானே; மனநொந்தவண், வந்தன்றன், அவணுற்றனனால், இவண்வந்தனெனால், மனநெக்கவண் வந்தனனால், இவண் வந்தனனால். மனநொந்தவ லந்தன்னால். (76)

372. கையுங் குடமுந் நெகிழக் கணையோ டுருள்வோற் காணா
வெய்ய தனுவு மனனும் வெறிதே கிடவே வீழா
ஐய நீதான் யாவ னந்தோ வருள்கென் றயரப்
பொய்யொன் றறியா மைந்தன் கேணீ யென்னப் புகல்வான்.

கையும் குடமும் நெகிழ - நீர்க்குடம் கையினின்றும் நழுவ, கணையோடு - (உடலில் பாய்ந்த) அம்போடு, உருள்வோன் காணா - (தரையில்) புரளுகின்ற அம்மைந்தனைக் கண்டு, வெய்ய தனுவும் - (என் கையிற் பிடித்திருந்த) கொடிய வில்லும், மனனும்-என் மனமும், வெறிது ஏகிட - பயனற்றுப் போக, வீழா - அவன் பக்கலில் விழுந்து, ஐய - ஐயனே, நீ யாவன் - நீ யார்? அந்தோ-ஐயோ, அருள்க என்று- (உன்னைப்பற்றிச்) சொல்லியருள்வாயாக என்று வேண்டி, அயர - (நான்)வருந்த, பொய் ஒன்று அறியா மைந்தன் - பொய்யைச் சிறிதும் கூறவறியாத அம் முனி குமாரன், கேள் நீ என்ன - நீ இதனைக் கேள் என்று சொல்லி, புகல்வான் - சொல்லலானான்.

முனிகுமாரன் நிலை கண்ட மன்னன் மிக வருந்தி, வில் கைப் பிடியினின்று நழுவி விழ; மனமும் சோர்வடையக் கீழே விழுந்து, முனி குமாரனை வேண்ட, அவன் தன் வரலாற்றைக் கூறலுற்றான். தனு வெறிதேகிடல் - வில் பயனற்றுத் தரையில் விழுதல். மனம் வெறிதேகிடல் - வருத்தத்தால் நிலை கெடல். ஆண்டில் இளையவனாகிலும், முனி குமாரனாதலால் 'அருள்க' என மரியாதையாக வேண்டினான். அந்தோ : இரக்கக் குறிப்பு. ஏ, தான்: அசை. பொய்யொன்றறியா மைந்தன் : 377 பார்க்க.

இதன் பின், பெரும்பாலான அச்சுப் புத்தகங்களிலும் சில ஏட்டுச் சுவடிகளிலும் "சேலாகிய" எனவும், "அந்நாள்" எனவும் தொடங்கும் இரண்டு பாடல்கள் உள்ளன. அவற்றுள் முதலது, சொற்பொருட் டொடர்பும், இவ்விடத்துக்கின்றியமையாமையும் உடையதாக இல்லை. இரண்டாவது ஈண்டைக்குத் தொடர்புடையதாகக் காண்கின்றது. இரண்டிலும் பாடபேதங்களும் மிக உள. அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பிலும், எஸ். ராஜம் அவர்கள் பதிப்பிலும் இவை மிகைப் பாடலெனவே கொண்டு தனியே காட்டப்பெற்றுள்ளன. இந்நிலையத்தின் முந்திய பதிப்பில் முன்னது நேராகவும், பின்னது மிகையாகவும் கொண்டு பதிப்பிக்கப் பெற்றுள்ளன. ஆயினும், பின்னதே இவ்விடத்துக்குப் பொருத்தமுடையதாயிருத்தலின், அதனை நேராகவும், முன்னதை மிகையெனவும் கொண்டு இங்கே பதிப்பிக்கலாயிற்று. அம் மிகைப் பாடல் வருமாறு :

சேலா கியமா முதல்வன் றிருவுந் தியின்மா மலரின்
மேலா கியநான் முகனூர் வேதங் களின்மா முறையின்
பாலா கியயோ னிகளிற் பலவாம் வருண நந் தருவான்
நாலா கியதாம் வருண நந் தனிமே லெமைநல் கினனால்.

(பி - ம்.) 1. கையுங் கடனும், கடமும் குடனும்; நெகிழாக், நிகழக்; உழல்வோர்க்காண.
2. மெய்யுந் தனுவும், மெய்யும் மனமும்; மண்ணும், மண்மேல், காணும், நெகிழ, வறிதே கிடமேல் வீழா, மண்மேல் விழமேல் வீழா.
3. ஐயன் னிதான், ஐயாநீ தான், ஐயா நீவிர், ஐயோ நீதான்; யாவன்னனந்தோ, அயர்வானந்தோ; அருள்கென் றரையப், அருள்கென்றுரையாப், அருள்கென்றயராப், அருளென்றயரப். அறைகென்றயரப்.
4. பொய்யொன்றறியான், பொய்யென்றறியா; புகலும். (77)

373. அந்நாண் மலரோன் வழியா லருள்கா சிபனன் மைந்தன்
மின்னூர் புரிநூன் மார்பன் விருத்தே சனன்மெய்ப் புதல்வன்
நன்னான் மறைநூ றெரியு நாவான் சலபோ சனெனச்
சொன்னான் முனிவன் புதல்வன் சுரோச னனியா னென்றான்.

அ நாள் - அந்த நாளில், மலரோன் - பிரமதேவன், வழியால் அருள் - முறையாகப் படைத்த, காசிபன் நல் மைந்தன் - காசிப முனிவனுடைய நல்ல புதல்வனுன, மின் ஆர் புரி நூல் மார்பன் - ஒளியமைந்த முப்புரி நூலணிந்த மார்புடைய, விருத்தேசனன் - விருத்தேசனனுக்கு, மெய் புதல்வன் - சற்புத்திரனுகி, நல் நால்மறை - நல்ல நான்கு வேதங்களையும், நூல் - சாத்திரங்களையும், தெரியும் - ஓதியுணர்ந்த, நாவான் - நாவன்மையுடையவனுன, சலபோசன் என சொன்ஞன் முனிவன் - சலபோசனனென்று பேர் சொல்லப் பெற்ற முனிவனுடைய, புதல்வன் - புத்திரனுன, சுரோசனன் யான் சுரோசனன் என்பவன் நான், என்ருன்—.

காசிப முனிவன் வழியில் வந்த சலபோசன னென்ற முனிவன் மகன், சுரோசனனென்ற பெயருடையவன் நான் என்று தன்னை அறிவித்துக்கொண்டான் முனி மைந்தன்.

(பி - ம்.) 1. அந்நான் மறையேன்; வழியி லருள், வழியின் னருள், வழியி னருள்; காசிபன்றன்மைந்தன்.
2. விருத்தேசன்றன் புதல்வன், விருத்தேசன் மெய்ப் புதல்வன்.
3. தெரியு நாவின்; சலபோசனப்பேர், சலபோசன்னெனச்.
4. முனிவன் தருசுரோச னன்யான், புதல்வன் சுரேசனன்யான், சுரேசனனேயான், சுரேசனேயான், சுரேசனினியான், தருசுரேசனன்யானென்ருன், தருசுரோசனனேயர் னென்ருன். (78)

374. இருகண் களுமின் றியதாய் தந்தைக் கும்மிங் கவர்கள்
பருகும் புனல்கொண் டகல்வான் படர்ந்தேன் பழுதாயினதால்
இருகுன் றனைய புயத்தா யிபமென் றுணரா தெய்தாய்
உருகுந் துயரந் தவிர்நீ யூழின் செயலீ தெனவே.

(தன்னை அறிவித்துக்கொண்ட முனிமைந்தன்), இரு கண்களும் இன்றிய - இரண்டு கண்களும் இல்லாத, தாய் தந்தைக்கும் - (என்) தாய்க்கும் தந்தைக்கும், அவர்கள் பருகும் புனல் கொண்டு அகல்வான் - அவர்கள் பருகுதற்குரிய நீரைக் கொண்டு போதற்கு, இங்கு படர்ந்தேன் - இங்கே வந்தேன்; பழுது ஆயினது - (வந்த காரியம் ஈடேருமல்) பழுதாயிற்று; இரு குன்று அனைய புயத்தாய் - இரண்டு மலைகள் போன்ற (திண்ணிய) தோள்களை உடையவனே; உணராது - (உண்மையை) உணராமல், இபம் என்று - யானை யென்று (தவருகக்) கருதி, எய்தாய் - நீ அம்பெய்தாய்; (ஆதலால்), ஈது ஊழின் செயல் என - இது விதியின் செயலென்று கொண்டு, நீ உருகும் துயரம் தவிர் - (எனக்காக) நீ மனமுருகும் துயரத்தை விடுக (என்று மேலுங் கூறுவான்).

முனிகுமாரன், மன்னனது நிலையைக் குறிப்பாலுணர்ந்து, அவன் வேட்டைமேல் வந்த அரசனெனவும் அறிந்து, 'ஐயா, நீ வேண்டுமென்று என்னைக் கொன்ருயல்லை; யானையென்று தவருக நினைத்து

அம்பெய்தாய்; அஃது என்மேற் பாய்ந்தது; எனவே, இது விதியால் நேர்ந்ததென்று துணிந்து நீ என்பொருட்டு வருந்தா தொழிக' என்றான்.

இன்றிய : எதிர்மறைப் பெயரெச்சம். தாய் என்றதன் பின் நான்கனுருபும் எண்ணும்மையும் விரிக்க. ஆல், ஏ : அசைகள்.

(பி - ம்.) 1. இருகண்களுமின்றியார்க்கும், இருகண்களுமின்றியவாய், இருகண்களுமின்றாய்க்கும், இருகண்களுமில்லாத, இருகண்களுமில் தாய்க்கும், யாய்க்கும், ஆய்க்கும், இருகண்களுமேயின்றி; எந்தைக்கும் மிங்கவர்கள், தந்தைக்கும் மிங்கிவர்கள், ஈங்கிவர்கள், தந்தைக்கு மிங்கவர்கள், எந்தைக்கு மென்றிவர்கள், யாய்க்கு முயரெந்தைக்கும்; யாய்க்கு மெந்தை தனக்கும்.
2. புனல் கொண்டணைவான், புனல் கொண்டேயான்; பழுதொன்றில்லா, பழுதொன்றில்லை, பழுதாயினவால்.
3. உணரா வெய்தாய்.
4. ஊழின் செயலீ தென்றே, செயலி தென்றே. செயலீதென்றான், செயலீ தென்ன. (79)

375. உண்ணீர் வேட்கை மிகவே யுயங்கு மெந்தைக் கொருநீ
தண்ணீர் கொடுபோ யளித்தென் சாவு முரைத்துப் புதல்வன்
விண்மீ தடைவான் றொழுதா னெனவும் மவர்பால் விளம்பென்
றெண்ணீர் மையினான் விண்ணோ ரெதிர்கொண் டிடவேகினனால்.

உண் நீர் வேட்கை மிக - பருகுதற்குரிய நீர் வேட்கை மிகுதலால், உயங்கும் எந்தைக்கு - வருந்துகின்ற என் தந்தைக்கு, ஒரு நீ - ஒப்பற்ற நீ, தண் நீர் கொடுபோய் அளித்து - குளிர்ந்த நீர் கொண்டு போய்க் கொடுத்து, என் சாவும் உரைத்து - நான் இறந்ததையும் சொல்லி, உம் புதல்வன் - உங்கள் புத்திரன், விண்மீது அடைவான் - சுவர்க்கம் புகுகின்றவன், தொழுதான் எனவும் - உங்களை வணங்கினான் என்றும், அவர்பால் விளம்பு என்று - அவர்களிடம் சொல்வாயாக என்று சொல்லிவிட்டு, எண் நீர்மையினான் - (யாவரும்) மதிக்கும் பண்புகளை யுடைய அக்குமரன், விண்ணோர் எதிர்கொண்டிட - தேவர்கள் எதிர்கொண்டழைக்க, ஏகினன் - (விண்ணுலகம்) போனான். ஆல் : அசை.

'என் பெற்றோர் நீர் வேட்கையால் துன்புறுவர்; ஆதலால் நீ உடனே அவர்களுக்குத் தண்ணீர் கொண்டு போய்க் கொடுத்து, என் நிலையையும், நான் இறுதியாக அவர்களை வணங்கினேன் என்பதையும் சொல்லுக' என்று மன்னனுக்குக் கூறி, உயிர் நீத்தனன் குமரன். தந்தையைக் கூறினும், இனம்பற்றித் தாயையுங் கொள்ளலாகும். தான் செய்த தவற்றுக்காக வருந்தும் மன்னன் இயல்பைக் கண்டு அவனை, 'ஒரு நீ' என்றான்.

அடைவான் : வினையாலணையும் பெயர். சாவும், எனவும் என்ற உம்மைகள் முறையே எதிரதும், இறந்ததும் தழீஇய எச்சவும்மை.

(பி - ம்.) 1. யாய்க்கும்; எந்தைக்குதவி, எந்தைக் கொருநீர்.
2. சாவும் முணர்த்துன், சாவும் முரைத்துன்.
3. விண்மீதடைந்தான், விண்ணுடடைவான்; தொழுதான் வருந்தே லெனவும், வருந்தலெனவும், வருக்தேலென்ன, தொழுவான் வருந்தே லெனவும், வருந்தேலென்று மவர்பால்.
4. எண்ணீர்மையினுல்; வானேர். (80)

376. மைந்தன் வரவே நோக்கும் வளர்மா தவர்பான் மகனே
டந்தண் புனல்கொண் டணுக வையா விதுபோ தளவாய்
வந்திங் கணுகா யென்னே வந்த தென்றே நொந்தேம்
சந்தங் கமழுந் தோளாய் தழுவிக் கொளவா வெனவே.

மைந்தன் வரவே நோக்கும் - தம் புதல்வன் வருகையையே எதிர்நோக்கியிருந்த, வளர் மாதவர் பால் - மிக்க தவத்தையுடைய முனிவனும் முனிபத்தினியுமாகிய இருவரும் உள்ள இடத்துக்கு, மகனேடு - அப்புதல்வனது உடம்போடு, அம் தண் புனல் கொண்டு - நல்ல குளிர்ந்த நீரையும் எடுத்துக்கொண்டு, அணுக-(நான்) சென்று சேர்தலும், (அவர்கள்) ஐயா - குழந்தாய், இது போது அளவாய் - இவ்வளவு நேரமாக, இங்கு வந்து அணுகாய் - (நீ) இங்கு வந்து சேரவில்லை; (அதனுல்), வந்தது என்னே என்று - (உனக்கு) வந்த இடையூறு யாதோ வென்று கருதி, நொந்தேம் - மனம் வருந்தினேம்; சந்தம் கமழும் தோளாய் - சந்தன மணம் வீசும் புயங்களையுடையவனே, தழுவி கொள வா - நாங்கள் உன்னைத் தழுவிக் கொள்ளும்படி (கிட்ட) வா, என - என்று கூற. ஏ: ஈற்றசை.

என என்பது மேலே தொடரும் 379-ஆம் பாட்டோடு முடியும்.

முனி மைந்தன் கூறியவாறு, அவன் பெற்றோருக்குத் தண்ணீருடன் இறந்த அவனது உடம்பையும் எடுத்துக்கொண்டு மன்னன் அம் முதியோர் இருந்த இடம் செல்ல, அடியோசை கேட்டு அவர்கள் தம் மைந்தன் வருவதாகக் கருதி ஆவலுடன் உரையாடினர். காளிதாஸ மகாகவியும் இதுபோலவே, உயிர் நீத்த மகனுடலை மன்னன் கொண்டு போனதாகக் கூறியுள்ளார். வான்மீகத்துள், நதிக்கரையிலே அவ்வுடல் கிடந்தவிடத்துக்கு அம் முதியோரை யிட்டுக்கொண்டுபோய், அதனை அவர்கள் தொட்டுப் பார்க்கும்படி செய்தான் மன்னன் என்று உள்ளது.

வரவே: ஏகாரம், பிரிநிலை. என்னே வந்தது என்றே - ஏதோ உனக்கு ஆபத்து நேர்ந்துவிட்ட தென்றே கருதி எனலுமாம்.

(பி - ம்.) 1. வரவு, வரவை; வளமாதவன்பால், வள மாதவர்பால், வளர் மாதவன்பால், வளர் மாதவன்பால் யானே, வளர்மாதவன்பாய் வசையோடு.
2. அணுகா வையா; இது போதளவா, இது போழ்தளவா, அது போழ் தளவாய்.

3. அணுகா தென்னே, அணுகாவென்னே, அணுகாயென்ன, அணுகா யென்ன, அணுக நயனம்; வந்ததென்றே ரொந்தேன், வந்ததென்ன ரொந்தேன், வந்ததென்னே ரொந்தேம், வந்த தென்ன ரொந்தேம், வந்தேன் மார்பி லுன்றன்.
4. தோளா, தோளால்; தழுவிக் கொளவா வெனலும்; வாவென்ருன். வாவென்ன; தழுவிக் கொள்வா யெனவே, எனவும், தழுவிக் கொள்ளா யெனவே. (81)

377. ஐயா யானே ரரச னயோத்தி நகரத் துள்ளேன்
மையார் களபந் துருவி மறைந்தே வதிந்தே னிருள்வாய்
பொய்யா வாய்மைப் புதல்வன் புனன்மொண் டிடுமோ தையின்மேற்
கையார் கணைசென் றதலாற் கண்ணிற் றெரியக் காணேன்.

ஐயா - ஐயனே, யான் ஓர் அரசன்—, அயோத்தி நகரத்து உள்ளேன் - அயோத்தி நகரத்தில் இருப்பவன்; மை ஆர் களபம் துருவி-(வேட்டையின்மேல் வந்து) கருநிறமுடைய யானைகளைத் தேடிக் கொண்டு, இருள்வாய் - இருண்ட இடத்தில், மறைந்து வதிந்தேன் - மறைந்து தங்கியிருந்தேன்; (அப்போது), பொய்யா வாய்மை புதல்வன் - குற்றமில்லாத வாய்மையே பேசும் (நும்) புதல்வன், புனல் மொண்டிடும் ஓதையின்மேல் - (ஆற்றில்) - நீர் மொண்ட ஓசையின் வழியே, கை ஆர் கணை சென்றது - என் கையிலிருந்த அம்பு (நான் செலுத்தச்) சென்றது; அல்லால் - அதனையன்றி, கண்ணில் தெரிய காணேன் - என் கண்களால் நேரே (நும் மகனை) நான் காணவில்லை.

இதுமுதல் மூன்று கவிகளால், தசரதன் நிகழ்ந்தவற்றைக் கூறித் தன்னைப் பொறுக்கும்படி முனிவனை வேண்டிக்கொண்டமை கூறப் படும். இலக்கை நேரே காணுமலே ஓசையின் மேற்சென்று இலக்கைத் தாக்கவல்ல அத்திரத்தை எய்தேனென்பான், 'ஓதையின்மேல் கையார்கணை சென்றது' என்ருன். ஆளிருப்பது தெரிந்தால் யானைகள் வாராவென்ற கருத்தோடு தான் மறைந்திருந்தமையும் கூறினுன்.

(பி - ம்.) 1. யானே வரசன், நானேரரசன்.
2. மையார் கடகம்; நதியின் கரைவாய் வதியப், நதிவாய்மறைய வதியப், மறைந்தேன் வாவிக் கரைவாய், மறைந்தே வதிந்தேன் றருவாய்ப், திருவாய், மறைந்தே வந்தே னதிவாய்ப், மறைந் தேனின்றே னிருள்வாய்.
3. புனல் கொண்டிடும்; ஓதையினுல், ஓசையின்மேல், ஓசையினுல்.
4. கணைசென் றுறலால், கணை சென்றதனுல். (82)

378. வீட்டுண் டலறுங் குரலால் வேழக் குரலன் றெனவே
ஓட்டந் தெதிரா நீயா ரெனவுற் றதெலா முரையா
வாட்டந் தருநெஞ் சினனுய் நின்ருன் வணங்கி வானோர்
ஈட்ட மெதிர்வந் திடவே யிறந்தே கினன்விண் ணிடையே.

வீட்டுண்டு - (அம்பினுல்) வீழ்த்தப்பட்டு, அலறும் குரலால் - அலறிய (மானிடக்) குரலால், வேழம் குரல் அன்று என - யானையின் குரல் அன்றென்று அறிந்து, ஓட்டந்து - (அங்கே) ஓடி, எதிரா - (நும் மகனைக்) கண்டு, நீ யார் என - நீ யார் என்று (நான்) கேட்க, உற்றது எலாம் உரையா - நேர்ந்ததையெல்லாம் (அவன்) சொல்லி, வாட்டம் தரு நெஞ்சினன் ஆய் - துயரமிக்க மனமுடையனுகி, வணங்கி - நுமக்கு வணக்கம் தெரிவித்து, நின்ருன் - (பேச்சு) அடங்கினவன், இறந்து - உயிர் நீங்கி, வானேர் ஈட்டம் எதிர் வந்திட - தேவர் கூட்டம் (தன்னை) எதிர்கொண்டு வர, விண் இடை ஏகினன் - சுவர்க்கம் புகுந்தான்.

எதிரா, உரையா என்பன செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். எதிரா - எதிர்ப்பட்டு; கண்டு. வந்திட - வர; இடு: துணை வினைப்பகுதி. ஓட்டம் தந்து என்பது ஓட்டந்து என மருவியது; ''பொல்லா தாள் ஓட்டந்தாள்'' (ஆரணிய. 339.)

(பி - ம்.) 1. அறியும் குரலான்.
2. ஓட்டந் தெதிரே, எதிராய். ஓட்டத் தெதிரா; யாரென்றுற்ற தெல்லாம், நீயா ரெனவுற் றெல்லாம்.
3. நின்ருள், நின்றேன், னின்ருய், மின்ருேன், ழுந்தாள்; வணங்கா; மயங்கி.
4. ஈட்டம் மெதிர் வந்திடவே; விண்ணெனவே. (83)

379. அறுத்தாய் கணையா லெனவே யடியேன் றன்னை யையா
கறுத்தே யருளா யானே கண்ணிற் கண்டே னல்லேன்
மறுத்தா னில்லான் வனமொண் டிடுமோ தையினெய் தனெனுல்
பொறுத்தே யருள்வா யென்னு விருதாள் சென்னி புனைந்தேன்.

ஐயா - ஐயனே! கணையால் அறுத்தாய் என - (எம் புதல்வனை நீ) அம்பெய்து கொன்றுவிட்டாய் என்று, அடியேன் தன்னை - என்னை, கறுத்தே அருளாய் - கோபித்தருளாதீர்; யானே கண்ணில் கண்டேன் அல்லேன் - நானே (நும்மகனைக்) கண்ணெதிரே பார்த்தேனல்லேன்; மறு தான் இல்லான் - குற்றம் சிறிதும் இல்லாத அவன், வனம்மொண்டிடும் ஓதையின் - நீர்மொண்டதால் வந்த ஓசையினுல், எய்தனென் - அம்பெய்தேன்; (ஆதலால்) பொறுத்தே அருள்வாய் என்னு - (என்னைப்) பொறுத்தருள்க என்று (வேண்டி), இருதாள் (முனிவனுடைய) இரண்டு பாதங்களையும், சென்னி புனைந்தேன் - தலையில் சூடிக்கொண்டேன் - அடிகளில் முடிபட வணங்கினேன்).

'ஐயா, இலக்கை நான் நேரே பாராமலே, ஓசையின் வழியே சென்று இலக்கைத் தாக்கவல்ல சத்தவேதி யென்னும் அத்திரத்தை எய்துவிட்டேன்; அது தவருய் முடிந்தது. நான் தெரியாமற் செய்த பிழையாகலின், என் மீது சினங்கொள்ளாது மன்னித்தருள வேண்டும் என்று முனிவனை வேண்டிக்கொண்டேன்' என்ருன். முனிவனுதலின்,

கருத்தருளாய், பொறுத்தருள்வாய் என அருளுதலை இணைத்து மரியாதையாகக் கூறினன்.

அறுத்தல், ஈண்டுக் கொல்லுதல். வனம் - நீர்.

(பி - ம்.) 1. கணையா லென்றே; ஐய.
2. அருளாதியானே, அருளேல் யானே, கருத்தா யருள யானே; அல்லன்.
3. மருத்தானில்லோன், மருத்தானில்லா, மருத்தானில்லாப் புனல் மொண்டிடும்; ஓதையி னெய்ததலால், எய்தனன, ஓதையினலெய் தேன்.
4. பொறுத்தாயருள்வா யென்ன; சென்னி பூண்டேன். (84)

380. வீழ்ந்தா ரயர்ந்தார் புரண்டார் விழிபோ யிற்றின்றென்றார்
ஆழ்ந்தார் துன்பக் கடலு ளையா வையா வென்றார்
போழ்ந்தாய் நெஞ்சை யென்றார் பொன்னா டதனிற் போய்நீ
வாழ்ந்தே யிருப்பத் தரியேம் வந்தேம் வந்தே மினியே.

(மைந்தனின் பெற்றோர் நான் சொன்னது கேட்டு) வீழ்ந்தார் அயர்ந்தார் - (தரையில்) விழுந்து சோர்ந்தனர்; புரண்டார் - புரண்டனர்; இன்று விழி போயிற்று என்றார் - இன்றே எங்கள் கண்போயிற்று என்றனர்; துன்பம் கடலுள் ஆழ்ந்தார் - துக்க சாகரத்துள் மூழ்கினவராய், ஐயா ஐயா என்றார் - (மகனைக் குறித்து) ஐயனே, ஐயனே என்று அலறினர்; நெஞ்சை போழ்ந்தாய் என்றார் - (நீ எங்கள்) நெஞ்சைப் பிளந்துவிட்டாய் என்றனர்; நீ - நீமட்டும், பொன் நாடு அதனில் போய் வாழ்ந்து இருப்ப தரியேம்-சுவர்க்கத்தில் போயிருக்கப் பொறுக்க மாட்டோம்; இனியே - இப்போதே, வந்தேம் வந்தேம் - (நாங்களும் உன்னைத் தொடர்ந்து) வந்துவிட்டோம், வந்துவிட்டோம். (இஃது, அடுத்த பாட்டின் முதலில் உள்ள என்றென்று என்பதனோடு தொடரும்).

புத்திர சோகத்தினால், பெற்றோர் இருவரும் மிக்க துயருற்றனர் என்பது கூறியவாறு. கண்ணில்லாத எங்களுக்குக் கண்போல் உதவியவன் போய்விட்டானே என்பார், 'விழி போயிற்றின்று' என்றனர். துயர மிகுதி கடலாக உருவகிக்கப்பெற்றது. உன்னைப் பிரிந்து உயிரோடிருத்தல் இயலாதென்பார், 'வந்தேம் வந்தேம்' என்றனர். வந்தேம் : தெளிவுபற்றி வந்த கால வழுவமைதி.

(பி - ம்.) 1. புரண்டாரயர்ந்தார்; விழிபோயிற்றின் றென்(று), போயிற்றின் றென்றே, போயிற்றென்றென்றார், போயிற்றே யென்றார், போயிற்றின் றெனவே.
2. கடலுள்ளளையா, கடல்புக்கையா.
3. நெஞ்ச மென்றார், நெஞ்சே யென்றார், என்றோர்; அதனிற் போனாய்.
4. வாழ்ந்தாயிருப்பத், இருப்பத்தரியோம், இருப்பதறியேம், இருப் பத்தமியேம், இருப்பத்தனியோம்; வந்தோம் வந்தோ மினியே, மணியே, என்றார்; வந்தேம் வந்தே மணியே. (85)

381. என்றென் றயருந் தவரை யிருதாள் வணங்கி யானே
இன்றும் புதல்வன் னினிநீ ரேவும் பணிசெய் திடுவேன்
ஒன் றுந் தளரே லையா வொழிமின் றுயரென் றிடலும்
வன்றின் சிலையாய் கேண்மோ வென்று வொருசொல் வகுத்தான்.

என்று என்று - என்று பலபல கூறி, அயரும் - வருந்துகிற, தவரை - அத்தவ முதியோரை, இரு தாள் வணங்கி - அடிகளில விழுந்து வணங்கி, இன்று - இன்றுமுதல், யானே உம் புதல்வன் - நானே (உங்கள்) மகன்; இனி நீர் ஏவும் பணி செய்திடுவேன் - இனி மேல் நீங்கள் ஏவும் பணிகளைத் தவருது செய்வேன்; ஐயா—, ஒன்றும் தளரேல் - சிறிதும் மனந் தளர்ச்சி அடையாதீர்கள்; துயர் ஒழிமின் - (உங்கள்) வருத்தத்தை இப்போதே விடுங்கள்; என்றிடலும் - என்று (நான்) சொன்ன அளவில், (முனிவன்) வல் திண் சிலையாய் - வலிய திண்ணிய வில்லையுடையவனே, கேண்மோ என்னு - இதைக் கேள் என்று சொல்லி, ஒரு சொல் வகுத்தான் - ஒரு வார்த்தை சொல்லலானுன்.

"'உங்கள் மகனைப்போல் இருந்து நான் உங்களுக்கு வேண்டுவன வெல்லாம் செய்வேன்; கவலையையும் வருத்தத்தையும் விடுங்கள்' என்று நான் தேறுதல் கூறவும், முனிவன் எனக்கு மறுமொழி கூறலானுன்" என்ருன் மன்னன். முனிவன் கூறியவை மேல் இரண்டு கவிகளுள் பெறப்படும். தம் மகனைக் கொல்லக் காரணமாயிருந்தது மன்னன் கைவில்லாதலின் 'வன்திண் சிலையாய்' என்ருன் முனிவன்.

என்றென்று: முன்கவியின் தொடர்பு. மோ : முன்னிலை யசை.

வன்றிண் சிலை : "வன்றிண் சிலைநங் குரிசில்" (366).

(பி · ம்.) 1. *அயருமவரை.*

2. *இன்றும் புதல்வன்றனினீர், இன்றும் புதல்வன்னனி நீர், இன்று முதனுஞ் சேய்போல், இன்று முதனுஞ் சேயா, என்றும் புதல்வன் னினிநும்; ஏவற்பணி, ஏயபணி, செய்திடுவன்.*

3. *தளரலையா, தளரேலைய, தவிரேனைய, தளர்வுற்றயரீர்; ஒழிமின் னிடர், ஒழியாய்துயர். ஒழியும்மிடர், ஒழிமீயிடர்.*

4. *சிலையோய்; என்ன வொருசொல், எனவே யொரு சொல், என்றே யொருசொல்; வகுத்தார், வழங்கும்.* (86)

382. கண்ணுண் மணிபோன் மகவை யிழந்து முயிர்கா தலியா
உண்ண வெண்ணி யிருந்தா லுலகோ ரென்னென் றுரையார்
விண்ணின் றலைசே ருதும்யா மெம்போல் விடலை பிரியப்
பண்ணும் பரிமா வுடையா யடைவாய் படர்வா னென்னு.

(முனிவன்) கண்ணுள் மணிபோல் மகவை இழந்தும் - கண்ணுட் கருமணி போன்ற எங்கள் புதல்வனை இழந்த பிறகும், உயிர் காதலியா-

(நாங்கள்) உயிரோடிருத்தலை விரும்பி, உண்ண எண்ணி இருந்தால் - (வயிற்றை நிரப்ப) உண்ண நினைத்து இவ்வுலகத்தில் இருந்தால், உலகோர் என் என்று உரையார் - உலகத்தார் எங்களை என்ன வென்றிகழ்ந்து கூறுரர், (ஆதலால்) யாம் விண்ணின் தலை சேருதும் - நாங்கள் இப்போதே விண்ணுலகை அடைவோம்; பண்ணும் பரி மா உடையாய் - அலங்கரித்த குதிரைகளையுடைய அரசே, எம்போல் - எங்களைப் போல (நீயும்), விடலை பிரிய - மகன் பிரிவதனால், படர் வான் அடைவாய் - பரந்த விண்ணுலகை அடைவாயாக, என்னு - என்று.

இஃது அடுத்த பாடலுடன் தொடரும். இவ்விரண்டு பாடலாலும் முனிவன் மன்னனுக்கு ஈந்த சாப மொழியும், முனிதம்பதிகளின் முடிவும் கூறப்படும்.

எவ்வாறேனும் உண்டு உயிர்வாழ வேண்டுமென்ற விருப்பமோ, இன்றியமையாமையோ எங்களுக்கு இல்லை; அரும் பெறற் புதல்வனை இழந்த பின் உலகோர் பழிக்க நாங்கள் உயிர் வாழோம் என்றனன் முனிவன்.

மகன், கண்ணில்லாத தன் பெற்றோருக்குக் கண்போல் உதவியவ னென்பது முன்னமே (370) கூறப்பெற்றது; அவர்களும் முன்பு இன்றே எங்கள் கண் போயிற்று என்றனர் (380); இங்கும் 'கண்ணுண் மணிபோல் மகவு' என்றனர். அருமையன்புக்குரியவரைக் கண்மணி, கண் என்றல் மரபு; "என்மகன் என்கண்" (217) என்ற தசரதன் வாக்கும் காண்க.

(பி - ம்.) 1. இழந்தும்முயிர், இழந்தெமுயிர்.
2. உண்ணு; எண்ணு விருந்தால்; உரைப்பார்.
3. தலைசேர்ந்தும்யாம்; தலையேகுதும்யாம், தலைசேர் துய்ரால், நிலை சேருதும்யாய்; வெம்போர் விடலை.
4. படர்வா னெனவே, படர்வ்ானென்றான், பரவானென்னு, படர்வான டைவாயெனவே, படர்வானடைவாயென்றார். (87)

383 தாவா தொளிருங் குடையாய் தவறிங் கிதுநின் சரணங்
காவா யென்ரு யதனற் கடிய சாபங் கருதேம்
ஏவா மகவைப் பிரிந்தின் றெம்போ லிடருற் றனைநீ
போவா யகல்வா னென்னுப் பொன்னுட் டிடைபோ யினரால்.

(பின்னும் முனிவன்) தாவாது ஒளிரும் குடையாய் - (என்றும்) கெடாது நின்று நிழல் செய்து விளங்கும் குடையை உடையவனே, இங்கு இது தவறு - நான் அம்பெய்த இது தவறேயாகும், நின் சரணம் - (நான்) உன் அடைக்கலம், காவாய் - என்னைக் காப்பாயாக, என்ருய் - என்று நீ (உண்மை கூறி) இரந்தாய்; அதனல்—, கடிய சாபம் கருதேம் - கடுமையான சாபத்தை உனக்குக் கொடுக்க நாங்கள் கருத

மாட்டோம்; இன்று எம்போல் - இன்று (அரும் புதல்வனைப் பிரிந்து துன்புறும்) எங்களைப்போல, நீ - நீயும், ஏவர் மகவை பிரிந்து - ஏவாது குறிப்பறிந்து செய்யவல்ல அரிய புதல்தவனைப் பிரிந்து, இடர் உற்றனை - துன்பமுற்று, அகல் வான் போவாய் - பரந்த விண்ணுலகு செல்வாய், என்னு - என்று சாபமுரைத்து, பொன் நாடு இடை போயினர் - (அவ்விருவரும்) சுவர்க்கம் போனார்கள்.

ஆல்: அசை.

சக்கரவர்த்தியாயிருந்தும், தன் பிழையை உணர்ந்து உண்மை கூறி இரந்த நற்பண்பு முனிவன் மனத்தை நெகிழ்வித்ததனுல், 'எங்களைப் போலவே நீயும் நன்மகனைப் பிரிந்து துன்புற்று இறத்தல் வேண்டும்' என்ற அளவோடு சாபத்தை நிறுத்திக் கொண்டான். மகவை 'இழந்து' என்னுது 'பிரிந்து' என்றதே கடிய சாபமன்று என்பதைத் தெரிவிக்கும். ஏவா மகவு-சற்புத்திரன்; "ஏவா மக்கள் மூவா மருந்து" (கொன்றை வேந்தன்). தந்தை நேராக ஏவாமலே இராமபிரான் பிரிவானென்ற குறிப்பும் 'ஏவா மகவைப் பிரிந்து' என்றதில் பெறப்படும்.

ஒரு பிரதியில் இந்தப் பாடலுக்குப் பதில்,

தாவா தவருந் தவர்சொற் றவரு ததனுற் றமியேன்
சாவா தவரு முளரோ தண்டா மகவுண் டென்றே
ஓவா தவர்முன் னின்றே னெருசொல் லுரையா தவரும்
பூவா ரனலுட் பொன்றிப் பொன்னு டதனிற் போனுர்.

என்பது காணப்படுகிறது.

(பி - ம்.) 1. ஒளிரங்குடையாய்; தவறிங்கிது; நீசரணம்.
2. என்றவதனுல்.
3. பிரிந்துற்று, பிரிந்திங்கு; இடருற்றினையாப், இடருற்றனையாய்ப், இடருற்றினையாப், இடருற்றினைந்து, இடரினையப்; நைந்து, நைந்தே, இடரானையாப், உடலுற்றுளையாப்.
4. அகல்வானென்னப்; பொன்னுடிடைபோயினனுல். (88)

384. சிந்தை தளவுற் றயர்தல் சிறிது மிலனு யின்சொல்
மைந்த னுளனென் றதனுன் மகிழ்வோ டிவண்வந் தனெனுல்
அந்த முனிசொற் றதுவு மண்ணல் வனமே குதலும்
என்ற னுயிர்வீ குதலு மிறையுந் தவரு வென்ருன்.

இன் சொல் மைந்தன் உளன் என்றதனுல் - இன்மொழி பேசும் நன்மைந்தன் உளனுவன் என்ற குறிப்பால், சிந்தை தளர்வுற்று அயர்தல் சிறிதும் இலன் ஆய் - (சாபத்தின் பொருட்டு) மனம் தளர்ந்து சோர்தல் சிறிதும் இல்லாதவனுய், மகிழ்வோடு இவண் வந்தனென் - மகிழ்ச்சியோடு இங்கே மீண்டு வந்தேன்; அந்த முனி சொற்றதுவும் -

அந்த முனிவன் சொன்ன சாபமொழியும், (அதன்படி) அண்ணல் வனம் ஏகுதலும் - இராமன் காடு போதலும், என் உயிர் வீகுதலும் - என் உயிர் பிரிதலும், இறையும் தவரு - சிறிதும் தவறமாட்டா; என்ருன்—.

ஆல்: அசை.

கோசலையிடம், தன் சாப வரலாற்றைக் கூறத் தொடங்கிய தசரதன், அதனை விரிவாகக் கூறி (369-83), 'அந்தச் சாபமுள்ளதனுல், இப்போது இராமன் என்னைப் பிரிதலும், அதனுல் என்னுயிர் பிரிதலும் தவிர்க்க முடியாதவை' என்று முடித்தான்.

என்றன் என்பதில் 'தன்' என்பதும், 'வீகுதல்' என்பதில் குவ்வும் சாரியைகள்.

இதனை அடுத்துக் கீழ்க்காணும் ஒரு பாடல், அச்சுப் பிரதிகளில் உளது; அது பல சுவடிகளில் இல்லாமையாலும், சொல், பொருள், தொடர்புச் சிறப்பின்மையாலும் அதனை மிகைப் பாடலாகவே கொள்ளல் தகும்.

இம்மா மொழிதந் தரசன் னிடருற் றினைபேர் தினின்வாய்ச்
செம்மா மயில்கோ சலையுந் திகையா வுணர்வோ வினளால்
மெய்ம்மா னெறியும் விதியின் விளைவுந் தளர்வின் றுணரும்
அம்மா தவனும் விரைவோ டவலந் தருநெஞ் சினனுய்.

(பி - ம்.) 1. தளர்வுற்றயர்வும், தளர்வுற்றயரல், தளர்வு மயர்வும், துயர் வுற்றயரல்.
2. உளதென்றதனுல்; வந்தனனுல்.
3. முனிசொற்றமையும்; சொற்றமையின், சொற்படியெம்.
4. இமையும், இயையும், இவையும்; தவருதென்ருன், தவிரா வென்ருன். (89)

வசிட்ட முனிவன் அரசவை சேர்தல்

தரவு கொச்சகக் கலிப்பா

385. உரைசெய் பெருமை யுயர்தவத்தோ ரோங்கல்
புரைசை மதகளிற்ருன் பொற்கோயின் முன்னர்
முரச முழங்க முடிசூட்ட மொய்த்தாண்
டரச ரினிதிருந்த நல்லவையி னுயினன்.

உரைசெய் பெருமை - யாவரும் புகழ்ந்து உரைக்கும் பெருமையை யுடைய, உயர் தவத்து - உயர்ந்த தவநெறியிலே, ஓர் ஓங்கல் - ஒப்பற்ற மலைபோன்ற வசிட்ட முனிவன், புரைசை மதம் களிற்ருன் - கழுத்திடு கயிற்றையும் மதத்தையுமுடைய யானைப் படைகள் மிக்க மன்னனது, பொன் கோயில் முன்னர் - அழகிய அரண்மனையின்

முன்னே, முரசம் முழங்க முடிசூட்ட - பேரிகை முதலிய வாத்தியங்கள் முழங்க (இராமபிரானுக்கு) முடிசூட்டும்படி, அரசர் மொய்த்து இனிது இருந்த - அரசர்கள் நெருங்கக் கூடி இனிதாக அமர்ந்திருந்த, ஆண்டு - அவ்விடமாகிய, நல் அவையின் ஆயினன் - அழகிய சபா மண்டபத்தை அடைந்தான்.

இராமபிரான் பிரிவுக்குக் காரணமாகச் சாபம் ஒன்று முன்னமே உள்ளதனை மன்னன் கூறி, அவன் பிரிவும் தன் உயிர் பிரிதலும் தவிர்க்க முடியாதன என்று முடிவு கட்டி அயர்ந்திருக்க, உடன் இருந்த வசிட்டமுனிவன் அங்கிருந்து போய் அரசர் முதலியோர் கூடி இருந்த முடிசூட்டு விழா மண்டபத்தை அடைந்தான். அங்கிருந்தோர் அனைவரும், இராமபிரான் முடிசூடுதலைக் காணும் ஆவலும் மகிழ்ச்சியும் உடையரா யிருந்தமையின், 'அரசர் இனிதிருந்த நல்லவை' எனப் பட்டது. மங்களகரமான இந்த வேளையில், அழுகை ஒலி (கோசலையி னுடையது) கேட்டு ஐயமுற்று, அதன் காரணத்தை அறிந்து வருமாறு அவர்கள் வசிட்ட முனிவனை அனுப்பினமை முன்பு (330) கூறப் பெற்றது. அவ்வாறு சென்ற முனிவன், அங்கு நிகழ்ந்தவெல்லாம் அறிந்தபின், அவையோருக்குச் செய்தியைச் சொல்லும்பொருட்டு மீண்டும் அவைக்கு வந்தான்.

புரைசை: அகர ஐகாரப் போலி; எதுகை நோக்கியது.

(பி - ம்.) 1. பெருமையுரை; குணத்தானுயர்; தவத்தினேங்கற், தவத்தானேங்கற், தவத்தோ னேங்கல், ஒங்கற், குணத்தானேங்கல், குணத்தோ ரோங்கல், குணத்தோனேங்கல், உரைசெம் பெருமா தவத்தோனுமோங்கல்.
2. புரைசெய், புரசை, புரிசை; மதக்களிற்றான், மகிழ்களிற்றான்; முன்னம்.
3. முரைசம், முரசு; முடிசூட.
4. அரைசர், அரசன்; கல்லவையன், பேரவையின்; அரசிருந்த நல்லவைக்கண், நல்லவையின், இருந்தவோர் கல்லவையின்; ஆனான். (90)

வசிட்ட முனிவனை அவையினர் வினவுதல்

386. வந்த முனியை முகநோக்கி வாள்வேந்தர்
எந்தை புகுதற் கிடையூறுண் டாயதோ
அந்தமில் சோகத் தழுதகுர லெனென்கொல்
சிந்தை தெளிந்தோய் தெளிவியெமக் கென்றுரைத்தார்.

வந்த முனியை முகம் நோக்கி - (அவையில்) வந்த வசிட்ட முனிவனது முகத்தை நோக்கி, வாள்வேந்தர் - வாளை ஏந்திய அரசர்கள், சிந்தை தெளிந்தோய் - மனத்தெளிவுடைய பெரியீர், எந்தை புகுதற்கு இடையூறு உண்டாயதோ - எம் தந்தை போன்ற சக்கரவர்த்தி இங்கே வருவதற்கு இடையூறு ஏதேனும் நேர்ந்ததோ? அந்தம் இல்

சோகத்து - அளவற்ற சோகத்தோடு, அழுத குரல்தான் என்கொல் - அழுகையொலி வந்தது எதனுலோ? எமக்கு தெளிவி - எங்களுக்கு (இவற்றைத்) தெளிவாகத் தெரிவிப்பீராக, என்று உரைத்தார் - என்று சொன்னுர்கள்.

முன்பு சபையிலிருந்து சென்ற முனிவன் திரும்பி வந்தவுடன் முனிவன் முகத் தோற்றத்தால் ஏதோ துன்பமுளதென்று உணர்ந்த அரசர்கள், அதனை அறியும் ஆவலோடு முனிவனை வினவலாயினர். முந்தியே சபாமண்டபத்துக்கு வரவேண்டிய சக்கரவர்த்தி காலந் தாழ்த்தும் வாராமையாலும், அந்த வேளையில் அழுகுரலின் காரணம் அறியாமையாலும் அவற்றைத் தெரிவிக்கும்படி முனிவனை வேண் டினர். ஆண்டினுலும் பிற தகுதிகளாலும் முதிர்ந்த சக்கரவர்த்தியை, 'எந்தை' என்றனர். இன்பதுன்பங்களால் மாறுபடாத மனத் தெளிவுடைய முனிவன் முகமே நெஞ்சங் கடுத்தது காட்டிற்ருதலின், முகம் நோக்கி ஐயுற்று வினவினர்.

(பி - ம்.) 1. முகனேக்கி வாழ்வேந்தர்.
2. புகுந்தவிடையூறு, புகுந்தஇடையூறு, எதுவுமிடையூறு உண்டா னதோ.
3. அந்தமிலாச்; அழுதகுரற்ருனென்ன, தானென்னே, தானென்னே. அழுதகுரற்ருனென், அழுதகுரல் தாமறியேம், அழுதகுர லாங்கறியேம், அழுத குரலென்கொல், அழுகுரல் யாதென்ன; மு. அந்தமிலாச் சோகத் தழுங்குரல் தானேது.
4. சிந்தை தெளிந்தாய், தெளியத், தெளித்திடநீ; தெரியெமக்கிவ் வென்றுரைத்தார், தெரியெமக்கி தென்றுரைத்தார், தெரியெமக் கென்றுரைத்தார், தெரியெமக்குச் செப்பென்றுர், தெளியவெம் பாற் செப்பென்றுர், தெளியெமக்கி தென்றுரைத்தார். (91)

வசிட்டர் கூறுதல்

387. வேந்தன் பணியினுற் கைகேசி மெய்ப்புதல்வன்
பாந்தண் மிசைக்கிடந்த பார்காப்பா னுயினுன்
ஏந்து தடந்தோ ளிராமன் றிருமடந்தை
காந்த னெருமுறை போய்க் காடுறைவா னுயினுன்.

வேந்தன் பணியினுல் - (நம்) அரசன் கட்டளையினுல், கைகேசி மெய் புதல்வன் - கைகேயியின் உண்மையுடைய புதல்வனுன பரதன், பாந்தள் மிசை கிடந்த - ஆதிசேடன் தலைகளிலே தங்குகிற, பார் காப்பான் ஆயினுன் - இவ்வுலகத்தை ஆள்பவனுனன்; திருமடந்தை காந்தன் - இலக்குமியின் கேள்வனுன, ஏந்து தட தோள் இராமன் - உயர்ந்த பெரிய புயங்களையுடைய இராமன், ஒரு முறை - ஒரு வகையாக, காடு போய் உறைவான் ஆயினுன் - காட்டில் போய்த் தங்கவேண்டியவனுனன்.

இதுவும் அடுத்த கவியும் ஒரு தொடர்; வசிட்ட முனிவன், தன்னை வினவிய வேந்தர்க்கு நிகழ்ந்தவை கூறல். இக்கவியுட் சுருங்கக் கூறி, அடுத்த கவியால் விளங்க வைக்கின்றான்.

வேந்தன் பணியினால் என்றது, தசரதன் தான் நேரே பணித்த தில்லையேனும், வரம் ஈந்ததனால் பணித்தது போலவேயாதலின். இராமனுக்குக் கூறிய விசேடணங்கள், முறையாக நாட்டைப் பெற்று ஆளுதற்குரியவன் அவனே என்பது குறித்தன. 'ஒரு முறை' என்றது, காட்டில் தங்கவேண்டியது நிரந்தரமாகவன்று, ஒரு காலவரையறைக் குட்பட்டதே என்றவாறு. அன்றி 'மூத்தவற்கே அரசு என்று இருந்த ஒரு முறை மாறிப்போக' என்று உரைத்தலுமாம்.

சில சுவடிகளிலும் அச்சுப் பிரதிகளிலும் இப்பாடலும், அடுத்ததும் முன்பின்னாக மாறியுள்ளன.

(பி - ம்.) 1. வேந்தன் பணியினிற்; மதிமயங்கக்; அப்புதல்வன்.
2. பார்தளிடைக் கிடந்த, முடிக் கிடந்த; பாரளிப்பானுயினான், பார்காப்பதாயினான், பார் புரப்பதாயினான், புரப்பானுயினான், பார்முழுதும்தான்புரக்க.
3. ஏந்தும்தடந்தோள், ஏந்து திருத்தோள்.
4. காந்தனொரு முறையே, காந்த னரசிழந்து; காடுறைவதாயினான், காடுறைவானு மென்றான், காட்டகத்த னுயிடவே. (92)

388. கொண்டாள் வரமிரண்டுங் கேகயர்கோன் கொம்ப வட்குத்
தண்டாத காதற் றயரதனுந் தானளித்தான்
ஒண்டார் முகிலைவனம் போகென் றொருப்படுத்தாள்
எண்டானும் வேறில்லை யீதடுத்த வாறென்றான்.

கேகயர்கோன் கொம்பு - கேகயராசன் மகளாகிய கைகேயி, இரண்டும் வரம் கொண்டாள் - இந்த இரண்டையும் (கணவனிடம்) வரமாகப் பெற்றுக்கொண்டாள்; தண்டாத காதல் தயரதனும் - (அவளிடம்) தடையில்லாத அன்புடைய சக்கரவர்த்தியும், அவட்கு அளித்தான் - அவளுக்கு அவற்றைக் கொடுத்தான்; (அதனால் அவள்) ஒள் தார் முகிலை - ஒளி அமைந்த பூமாலை அணிந்த மேகம் போன்ற இராமனை, வனம் போக என்று ஒருப்படுத்தாள் - காட்டிற்குப் போ என்று சொல்லி (அதற்கு) உடன்படச் செய்தாள்; ஈது அடுத்த ஆறு - இது நிகழ்ந்த வகை யாகும்; எண் வேறு இல்லை - (இனி இதுபற்றி) நினைத்தற்கு வேறு வகை ஏதும் இல்லை; என்றான் - என்று கூறி முடித்தான்.

மன்னன் வரமாக அளித்துவிட்டதனால், இனி இவற்றை மாற்று தற்கு வகையில்லை என்பான், 'எண் வேறில்லை' என்றான். வாய்மை காத்தலில் வழுவாதவாறு மன்னனை அகப்படுத்தி வரங்களை வலிந்து பெற்றமை தோன்ற, 'கொண்டாள் வரம்' எனப்பட்டது.

கொம்பு, முகில் : ஆகு பெயர்கள். தான், தானும் : அசைகள், போகென்று: தொகுத்தல் விகாரம். முந்திய பாடலும் இதுவுந் தொடர்ந்து என்ருன் என்பதனேடு முடிவுறுகின்றன.

(பி - ம்.) 1. வரமிரண்டு; கைகயர் கோன் கொம்பவட்குத், கைகயர் கோன்தன் மகடான், கோமகடான், கோமடந்தை, கைகயர் கோன்மகடான், கைகயர் கோமான்மகடான், கேகயர் கோன் கோமகடான்.
2. தண்டாத செங்கோல், செஞ்சொல்; தசரதனும், தலைமகனும்; தான் கொடுத்தான், தந்தளித்தான், தந்தழிந்தான்.
3. ஒண்டாரவனையுநீ, ஒண்டாரவனை நீ, ஒண்டாரவன்வன நீ, ஒண்டா ரவனும், ஒண்டாரவனை, ஒண்டாரிராமன்; வனம்போகவொருப் பட்டான், வனம் போகென்றொருப்படுத்தான், போகென்றொருப் படுத்தாள், போகென்றுளொருப்படுத்தாள். (93)

கேட்டோர் துயரம்

389. வாரார் முலையாரு மற்றுள்ள மாந்தர்களும்
ஆராத காத லரசர்களு மந்தணரும்
பேராத வாய்மைப் பெரியோ னுரைசெவியுள்
சாராத முன்னந் தயரதனைப் போல்வீழ்ந்தார்.

வார் ஆர் முலையாரும் - கச்சை அணிந்த தனங்களையுடைய பெண்டிரும், மற்று உள்ள மாந்தர்களும் - (அவர்கள் அல்லாத) வேறு உள்ள ஆடவர்களும், ஆராத காதல் அரசர்களும் - (இராமபிரானிடத்து) தணியாத பேரன்புடைய (அவையிலிருந்த) அரசர்களும், அந்தணரும் - (அவ்வாருகிய) அந்தணர்களும், பேராத வாய்மை பெரியோன் உரை - தவருத வாய்மையினையுடைய பெரியோனுன வசிட்ட முனிவன் வார்த்தைகள், செவியுள் சாராத முன்னம் - (தம்) காதுகளில் முழுதுங் கேளா முன்னமே, தயரதனைப்போல் வீழ்ந்தார் - தசரத மன்னனைப் போலவே (மயங்கி) விழுந்தார்கள்.

நாட்டிலுள்ள மேலோர், கீழோர், ஆடவர், பெண்டிர் ஆகிய எத்திறத்தவரும் இராமபிரான்பால் கொண்டிருந்த பேரன்பு இதனுல் விளக்கப்பெற்றது. இராமபிரான் முடிசூடும் மகிழ்ச்சியில், மாதர்கள் கௌசலையையும், மாந்தரிற் பெரியோர் தசரதனையும் ஒத்தனர் என முன்னே (251) கூறினமை காண்க. ஆராத காதல், அனைவர்க்கும் பொருந்தும்.

அரசர்களும் அந்தணரும் என விதந்து கூறினமையின். 'மற்றுள்ள மாந்தர்' என்றது அவரல்லாத பிறரைக் குறித்தது. பெண்டிரைப் பொதுப்படக் குறித்தார். செய்தி வசிட்ட முனிவன் வாக்கால் வந்ததாகலின், பொய்யோவென ஐயுறுதற்கிடனின்றென்பார், 'பேராத வாய்மைப் பெரியோனுரை' என்றார். கேட்டதும் வீழ்ந்தார் என்பதனை, விரைவு தோன்றக் கேளாத முன்னமே வீழ்ந்தார் என்றார்.

நகரில் உள்ள ஆடவர், பெண்டிர், அஃறிணை உயிர்கள் உட்படத் துயருற்ற செய்தியை இதுமுதல் 19 பாடல்களில் விரித்துக் கூறுகின்றார்.

(பி - ம்) 1. மற்றுமுள்ள, மைந்துள்ள, மைந்தர்களும்.
3. செவியில்.
4. சாராத முன்னர்த், சாராதமுன்னம்தத்; தசரதனே, தசரதனைப்; விழுந்தார். (94)

390. புண்ணுற்ற தீயிற் புகையுற் றுயிர்பதைப்ப
மண்ணுற் றயர்ந்து மறுகிற் றுடம்பெல்லாம்
கண்ணுற்ற வாரி கடலுற்ற தந்நிலையே
விண்ணுற்ற தெம்மருங்கும் விட்டழுத பேரோசை.

உடம்பு எல்லாம் - எல்லா உடம்புகளும், புண் உற்ற தீயின் - புண்ணிலே தீப்பட்டாற்போல, புகையுற்று - வெதும்பி, உயிர் பதைப்ப - உயிர் துடிக்க, அயர்ந்து - சோர்ந்து, மண் உற்று மறுகிற்று - தரையிற் கிடந்து புரண்டன; அ நிலையே - அப்போது, கண் உற்ற வாரி - (அவ்வுடம்புகளின்) கண்களினின்றும் பெருகிய நீர், கடல் உற்றது - வெள்ளமாக ஓடிக் கடலை அடைந்தது; எ மருங்கும் - எல்லாப் பக்கங்களிலும், விட்டு அழுத பேர் ஓசை - வாய்விட்டு அழுததனால் உண்டான பேரொலி, விண் உற்றது - ஆகாயத்தை அடைந்தது.

துயர மிகுதி குறித்தற்குப் புண்ணிலே தீப் புகுதல் உவமையாகப் பலவிடத்தும் கூறப்படும்; "புண்ணிலாம் பெரும்புழையிற் கனல் நுழைந்தா லெனச்செவியிற் புகுத லோடும்" (பால. 326) என்பது பார்க்க. 'புண் தீயுற்றதின்' என மாற்றிக்கொள்க.

உடபெல்லாம் மறுகிற்று: சாதி ஒருமை.

(பி. ம்.) 1. புகையினுயிர்பதைப்ப, புகையின்னுயிர்பதைப்ப, புகையினுரை பதைப்ப, புழுங்கியுரைபதைப்ப, புழுங்கியுயிர்பதைப்ப, புகையுற்றுயிர்பதைத்து.
2. மண்ணுற்றலர்ந்து, மண்ணுற்று நின்று; மறுகுற்றுடம்பெல்லாம், மறுகுற்றுடலமெங்கும்.
4. பேரோதை. (95)

391. மாத ரருங்கலமு மங்கலமும் சிந்தித்தங்
கோதை புடைபெயரக் கூற்றனைய கண்சிவப்பப்
பாத மலர்பதைப்பத் தாம்பதைத்துப் பார்சேர்ந்தார்
ஊதை யெறிய வொசிபூங் கொடிபோல்வார்.

மாதர் - பெண்டிர் பலர், அரு கலமும் - தம் அரிய அணிகலன் களையும், மங்கலமும் - மங்கல அணியையுங்கூட, சிந்தி - (வெறுப்பினால்) களைந்தெறிந்து, தம் கோதை புடை பெயர - தம் கூந்தல் அவிழ்ந்தலையவும், கூற்று அனைய கண் சிவப்ப - (ஆடவருக்கு)

எமன் போன்ற தம் கண்கள் சிவக்கவும், பாதம் மலர் பதைப்ப - பூப்போன்ற தம் பாதங்கள் (தரையில் ஊன்றுது) தவிக்கவும், தாம் பதைத்து - தாங்கள் மிகவும் துடித்து, ஊதை எறிய - வாடைக்காற்று வீசுவதனுல், ஒசி - அசைந்து சாய்கிற, பூ கொடி போல்வார் - பூங்கொடி போன்றவர்களாய், பார் சேர்ந்தார் - தரையில் விழுந் தார்கள்.

பெண்கள் மெல்லியலாராதலாலும், அவர்களுக்கு இராமபிரான் பாலுள்ள காதலன்பு மிகுதியாலும் அவர்கள் அடைந்த இரங்கத்தக்க நிலையைத் தனியே எடுத்துக் கூறுகின்ருர். சிந்தத் தகாத மங்க லத்தையும் சிந்தினர் என்றதனுல் தம் உடலையே வெறுத்த அவர்கள் மன்நிலை புலனுகும். உம்மை: உயர்வு சிறப்பு. கூற்றனைய கண்: இளமங்கையர் கண்ணின் இயல்பு குறித்தது. அவற்றைக் கூற்ற மெனவும் நஞ்செனவும் கூறுதல் கவிஞர் மரபு. பூங்கொடிகள் ஊதையால் அலைந்து சாயுமுன், அவற்றை அழகு செய்யும் பூக்களும் இலைகளும் உதிர்ந்துபோக, வெறுங் கொடியே இறுதியிற் சாயும்; அதுபோல, மாதரும் அணிகலன்களையெல்லாம் துறந்து, வெற் றுடம்போடு சாய்ந்தனர் என உவமையின் நயமும் காணத் தக்கது.

(பி - ம்.) 1. கமலமும் சிந்தித்தம்.
3. மலர்சிவப்பத்; தாம்பதைப்பப்; பார்சோர்ந்தார், பார்விழ்ந்தார்.
4. ஊதையறைய; கொடியொப்பார், கொடியன்னர், கொடியனையார், ஒசியுங் கொடியன்னர். (96)

392. ஆவா வரச னருளிலனே யாமென்பார்
காவா தறத்தையினிக் கைவிடுவோம் யாமென்பார்
தாவாத மன்னர் தலைத்தலைவீழ்ந் தேங்கினுர்
மாவாதஞ் சாய்த்த மராமரமே போல்கின்ருர்.

தாவாத மன்னர் - (இராமபிரான்பால் அன்பு) கெடாத மன்னர்கள், ஆ ஆ—, அரசன் அருள் இலனே ஆம் என்பார் - சக்கரவர்த்தி சிறிதும் அருளில்லாதவனேயாவன் என்பாரும், யாம்-நாமும், இனி—, அறத்தை காவாது கைவிடுவோம் என்பார் - தருமத்தைப் பாது காவாது விட்டிடுவோம் என்பாரும் (ஆக), மா வாதம் சாய்த்த மரா மரம் போல்கின்ருர் - பெருங்காற்று மோதிச் சாய்த்த மராமரம் போன்றவர்களாய், தலை தலை வீழ்ந்து - அங்கங்கே (தாம் இருந்த இடங்களிலே) விழுந்து, ஏங்கினுர்—.

'சக்கரவர்த்தி இராமபிரானைக் காட்டிற்கு அனுப்புதல் அருளுமன்று; அறமுமன்று. உலகுக்கு எடுத்துக்காட்டாக உள்ளவரே இங்ஙனம் செய்வதாயின், நாமும் இனி அறம் வழுவி நடந்தாலென்ன?' என்கின் றனர் அரசர். அவர்கள் அறம் வழுவுதலாவது, இனி வரும் அரசனுக்கடங்கி நடவாமைபோல்வன. அங்ஙனம் செய்தல் அவர்கள்

கருத்தன்று; அன்புள்ளம் அவ்வாறு சொல்விக்கின்றது. மாதருக்கு ஊதையெறிய ஒசி பூங்கொடியையும், அரசருக்கு மாவாதம் சாய்த்த மராமரத்தையும் உவமை கூறியதன் அழகு ஓர்தற்பாலது.

ஆ ஆ : இரக்கக் குறிப்பு. மாவாதம் - பெருங்காற்று. மராமரம் - சாலவிருட்சம்; வெண் கடம்பு என்பர் சிலர்.

(பி - ம்.) 1. அருளிலனே யாமென்றும், அருளிலனென்பாரென்பார்.
2. காவா, காவார்; கைவிடுவேம், கைவிடுவாம், கைவிடுவம், கைவிடுதும்; யாமென்றும்.
4. மாவாதஞ் செற்ற, மாவாயன் சாய்த்த; மராமரமேபோல் வீழ்ந்தார், மராமரம்போல் நின்றார், மராமரம் போலாகின்றார், மாமரமே போல்வீழ்ந்தார். (97)

393. கிள்ளையொடு பூவை யழுத கிளர்மாடத்
துள்ளுறையும் பூசை யழுத வுணர்வறியாப்
பிள்ளை யழுத பெரியோரை யென்சொல்ல
வள்ளல் வனம்புகுவா னென்றுரைத்த மாற்றத்தால்.

வள்ளல் - வள்ளலாகிய இராமபிரான், வனம் புகுவான் என்று உரைத்த மாற்றத்தால் - காடு செல்வான் என்று சொன்ன வார்த்தையால், கிளர் - அழகு விளங்குகின்ற, மாடத்து உள் உறையும் - மாளிகைகளினுள்ளே தங்குகின்ற, கிள்ளையொடு - கிளிப் பிள்ளைகளோடு, பூவை - நாகணவாய்ப் புட்களும், அழுத - அழுதன; பூசை அழுத - பூனைகளும் அழுதன; உணர்வு அறியா பிள்ளை அழுத - பகுத்துணர்தலை அறியாத சிறு குழந்தைகளும் அழுதன; (அவ்வாறான போது), பெரியோரை - (பகுத்துணரவல்ல) பெரியோர்களைப்பற்றி, என் சொல்ல - யாது சொல்லக்கடவேன்!

இராமபிரான் காடு செல்லுதல்பற்றிப் பகுத்துணர்வில்லாத அஃறிணையுயிர்களும் வருந்தினவென்றற்குக் கிள்ளை, பூவை, பூசை ஆகியவற்றை எடுத்துக்காட்டிய ஆசிரியர், உயர்திணையான மக்கட் குழவிகளையும், பகுத்துணர்வில்லாத ஒற்றுமையால் அவற்றோடு சார வைத்தார். பிள்ளையென்பது, உயர்திணையிருபாலுக்கும் பொதுவாக வரும் இளமைப்பெயர்.

கிளியும் பூவையும் மகளிரால் வீடுகளில் வைத்துப் போற்றி வளர்க்கப்படுவன. சீதாபிராட்டியே மிகவும் அன்போடு கிளியை வளர்த்தமை காண்க. பூவையும் கிளிபோலப் பேசவல்லதாகலின், அதனையும் விரும்பி வளர்ப்பர்; தமக்கு விருப்பமான பெயர்களை அவை சொல்லும்படி கற்பித்து அவை சொல்லக் கேட்டு மகிழ்வர். அவையும் அவர்களோடு ஒன்றிப் பழகும் இயல்புடையனவாகலின், மகளிர் துன்புறுவதுணர்ந்து, காரணம் அறியாமலே தாமும் வருந்தின. வீடுகளிற் பழகிய பூனைகளும் அவ்வாறே. சிறு குழந்தைகளும்

தாய்மார் முதலியோர் படுந்துயரங்கண்டு தாமும் அழுதன. இவற்றின் நிலையே இவ்வாறுகும்போது, பெரியோர் நிலை சொல்லாமலே தெரிய வருமென்பார், 'பெரியோரை யென்சொல்ல' என்றார்.

கிள்ளை, பூவை, பூசை : பால்பகா அஃறிணைப் பெயர்கள்; பன்மை குறித்தன. பிள்ளையென்பதும் சொல்லால் அஃறிணையாகலின், 'அழுத' என்னும் அஃறிணைப் பன்மை முடிபே கொடுத்தார். அழுத : அன் சாரியை பெறாத பலவின்பால் வினைமுற்று. 'மாடத்துள்ளுறையும்' என்பதனைப் பெரியோரல்லாத ஏனைய எல்லாவற்றோடும் இயைக்க.

(பி - ம்.) 2. உள்ளுறை; பூளை; உருவறியாய், உரையறியாய்.
3. பெரியாரை; என்சொல்லி, என்சொல்லில்.
4. வனம் புகுந்தான்; என்றெழுந்த, எனவுரைத்த. (98)

394. சேதாம்பற் போதனைய செங்கனிவாய் வெண்டளவப்
போதாம்பற் றோன்றப் புணர்முலைமேற் பூண்டரள
மாதாம்பற் றென்ன மழைக்கண்ணீ ராலியுக
நாதாம்பற் றாமழலை நங்கைமா ரேங்கினார்.

நா பற்றாத மழலை - நாவில் பொருந்தாத (நிரம்பாத) மழலைச் சொற்களையுடைய, நங்கைமார் - பெண்கள், செம்மை ஆம்பல் போது செம் கனி அனைய வாய் - செவ்வல்லிப் பூவும் சிவந்த கொவ்வைக் கனியும் போன்ற (தம்முடைய) வாய்களில், வெள் தளவம்போது ஆம் - வெள்ளிய முல்லைப் பேரரும்பு போன்ற, பல் தோன்ற - பற்கள் (வெளியே) தெரியவும், புணர் முலைமேல் பூண் - நெருங்கிய தனங் களின்மேலே அணிந்த, மா தரளம் தாம்பு - சிறந்த முத்துவடம், அற்றது என்ன - அறுந்து சிந்துதல்போல, மழைகண் நீர் ஆலி உக - குளிர்ந்த கண்களிலிருந்து நீர்த்துளிகள் சிந்தவும், ஏங்கினார் - ஏங்கி அழுதார்கள்.

நங்கைமார் - உயர்குடிப் பிறந்த மகளிர். அவர்கள் நகைக்கும் போதும் தம் பற்கள் தெரியும்படி நகையார்; அத்தகையோர், இப்போது வாய்விட்டழுதலால், பற்கள் தெரியலாயின. மழலைச் சொற்களுடைமை, மகளிர்க்கியல்பாகிய விசேடணம். அவர்கள் அழும்போது கண்ணீருகுத்ததனை, முத்துவடம் அறுந்து சிந்தியது போன்றிருந்ததென்றார். மகளிர் வாயின் இயல்பான நறுநாற்றத் திற்கும், குவிந்த தோற்றத்திற்குமாகச் செவ்வல்லிப் போதும், இதழ் களின் நிறத்திற்குக் கொவ்வைக் கனியும் உவமை கூறப்பெற்றன. போது - பேரரும்பு. போதனைய வாய், கனியனைய வாய் என்க. போதாம்: ஆம், உவமையுருபு. தாம்பு - வடம். நாதாம் : தாம், அசை.

"அரக்காம்பல் நாறும்வாய்" (நாலடி. 396) என்பதும், "ஒண்ணுத லாயத்தார் ஓராங்குத் திளைப்பினும், முண்ணுவ தோன்றாமை முறுவல்

கொண் டடக்கித்தம், கண்ணினும் முகத்தினும் நகுபவர்'' (கலி. 141) என்பதும் ஈண்டு நோக்கத்தக்கன.

இப்பாடல் சில பிரதிகளில் இல்லை.

(பி - ம்.) 1. பூவனைய; வெண்டவளப், வெண்டரளப்.
2. போதாம்பல்போற்றேன்றப்; புணர் முலையார்; பூந்தரள, பூந்தரளம், பூத்தரள, தண்டரள, வெண்டரள.
3. மாதாம் பற்றன்ன.
4. நங்கைமார் வைந்தமுதார். (99)

395. ஆவு மழுதவதன் கன்றழுத வன்றலர்ந்த
பூவு மழுதபுனற் புள்ளழுத கள்ளொழுகும்
காவு மழுத களிறழுத கால்வயப்போர்
மாவு மழுதனவம் மன்னவனை மானவே.

அ மன்னவனை மானவே - அந்தத் தசரத மன்னனைப்போலவே, ஆவும் அழுத - பசுக்களும் அழுதன; அதன் கன்று அழுத - அப்பசுவின் கன்றுகளும் அழுதன; அன்று அலர்ந்த பூவும் அழுத - அப்போது மலர்ந்த புதிய பூக்களும் அழுதன; புனல் புள் அழுத - நீர் வாழ் பறவைகளும் அழுதன; கள் ஒழுகும் காவும் அழுத - தேன் பொழியும் சோலைகளும் அழுதன; களிறு அழுத - யானைகள் அழுதன; கால் வய போர் மாவும் அழுதன - கால்கள் வலிய போர்க் குதிரைகளும் அழுதன.

ஊர் முழுதும் துயரத்திலாழ்ந்ததென்பார், ஓரறிவுயிர்களையும் ஐயறிவுயிர்களையும் தனித்தனி எடுத்துக் கூறி, இடையிலுள்ளவற்றையும் உபலட்சணத்தாற் கொள்ள வைத்தார்.

அதன் என்ற சுட்டு, பசுவின் என்ற அளவில் சாதியொருமையாக நின்றது. ஆ முதலிய பால்பகாவஃறிணைப் பெயர்களெல்லாம் பன்மை குறித்தன. அழுத : அன் சாரியை பெருத பலவின்பால் வினைமுற்று, 393-ஆம் பாடலிற்போல. கால்வயம் - காற்றுப்போன்ற விசையும் வெற்றியுமுடைய என்றுரைப்பினுமாம். வய - வலிமை; உரிச்சொல்; வயம் - வெற்றி; பெயர்ச்சொல்.

(பி - ம்.) 1. ஆவுமழுதன, ஆவுமழுதததன், அழுததன்; வண்டலர்ந்த.
2. பூவுமழுதனவப், பூவுமழுதவம், பூவுமழுதனவன். பூவுமழுததன், பூவுமழுதவதன்; அழுதவதிற், அழுதனவாற், அழுதன; கள்ளொழுகு.
4. அழுதவம், அழுதன, அழுதன்வால், அழுதவால், அழுதனகோ, அழுதனவம்; மன்னவரை; மானுமே. (100)

396. நானீயு முய்கலா மென்றெண்ணி நாயகனைக்
கானீயு மென்றுரைத்த கைகேசி யுங்கொடிய
கூனீயு மல்லாற் கொடியார் பிறருளரோ
மேனீயு மின்று வெறுநீரே யாயினர்.

நான் (உம்) நீயும் உய்கல் ஆம் என்று எண்ணி - நானும் நீயும் உயர்வாக வாழ்தலாகும் என்று (இருவருமாகச்) சூழ்ந்து, நாயகனை - இராமனுக்கு, கான் ஈயும் என்று உரைத்த - காட்டைக் கொடும் என்று (மன்னனுக்குச்) சொன்ன, கைகேசியும்—, கொடிய கூனியும் - கொடுமை மிக்க மந்தரையும், அல்லால் - அல்லாமல், கொடியார் பிறர் உளரோ - (அத்தகைய) கொடுமையுடையார் பிறர் எவரேனும் இருப்பரோ? (இரார்); (பிறரெல்லாம்) மேனியும் இன்றி - உருவந் தானுமின்றி, வெறும் நீரே ஆயினர் - வெறும் நீராகவே உருகிப் போயினர்.

'இராமபிரான் காடு செல்லுதல் குறித்து வருந்தாதார், அதற்குக் காரணமாயிருந்த இருவரையன்றி வேறெவரும் இலர்; பிறரெல்லாம் உருக்குலைந்து போயினர்' எனக் கூறுமுகத்தால் துயரமிகுதியைப் புலப்படுத்துகின்றார். கைகேயியின் தூய மனத்தையும் மாற்றிய கொடியவளாதலின், 'கொடிய கூனியும்' என்றார். கூனியைப்பற்றிக் கூறுமிடங்களிலெல்லாம் அவள் கொடுமையைச் சுட்டிக் கூறுதலை, மந்தரை சூழ்ச்சிப் படலத்துட் பரக்கக் காணலாம். இவ்வயோத்தியா காண்டத்தின் கடவுள் வாழ்த்திலே, 'கூனுஞ் சிறிய கோத்தாயுங் கொடுமை யிழைப்ப' என்றலும் காண்க.

நான் என்பதன்பின் எண்ணும்மை விரிக்க. எண்ணுதல் - சூழ்தல், நாயகனை : உருபு மயக்கம், நாயகன் - நாடாளுதற்குரியவன்; அவனுக்குக் 'காடாளக் கொடுக்க' என்றவள் கைகேயி. ஈயும் : உம்மீற்று வியங்கோள். கூனியும், மேனியும் எனற்பாலன, எதுகை நோக்கி நீண்டன. உளரோ என்ற ஓகாரம் எதிர்மறைப் பொருளது.

(பி - ம்.) 1. ஞானியும், ஞானியும், நானிலமும்; உய்கலானென் னுதே, என்னு தென், உய்கிலாதென்னுதே, உய்கிலா னென்னுதே, என்னுதென், உய்யலா னென்னுதே, உய்யொண்ணுதென்னுதே.
2. கானியுமென்றிருந்த, கானேபோ வென்றுரைத்த; கைகேயியுங் கடிய.
3. கூனியுமன்றி, கூனியுமன்றுக், கூனியுமல்லாற்; பிறருளரே.
4. மேனியுமன்றி, மேனியுமல்லால், மேனியு மெல்லாம், மேனியு மெல்லாம்; வெறு நீராராயினர். (101)

397. தேரு தறிவழிந்தா ரெங்குலப்பார் தேரோட
நீருகிச் சுண்ண நிறைந்த தெருவெல்லாம்
ஆருகி யோடின கண்ணீ ரருநெஞ்சம்
கூருகி யோடாத வித்தனையே குற்றமே.

தேருது - (மீண்டும்) தெளியாதபடி, அறிவு அழிந்தார் - அறிவு மயங்கிப்போனவர்கள், எங்கு உலப்பார் - எங்ஙனம் எண்ணில் அடங்குவர்? தேர் ஓட - தேர்கள் (மிகுதியாக) ஓடுதலால், நீறு ஆகி-

துகள்மிக்கு, சுண்ணம் நிறைந்த - புழுதி நிறைந்த, தெரு எல்லாம் - தெருக்களிலெல்லாம், கண் நீர் - (மிகப் பலர் அழுததனாலான) கண்ணீர்ப் பெருக்கு, ஆறு ஆகி ஓடின - பல ஆறுகளாகி ஓடின; அரு நெஞ்சம் - (அவர்களுடைய) அரிய நெஞ்சுகள், கூறு ஆகி ஓடாத - (பல) துண்டங்களாகிப் போகாத, இத்தனையே குற்றம் - இவ்வளவே குறை. ஏ : ஈற்றசை.

அறிவு பேதுற்றுத் தெளியாமலே திகைத்து நின்றோர் மிகப் பலர்; அவர்கள் எண்ணில் அடங்கார். 'அவர்களல்லாத பிறர் அழுத கண்ணீர் பல ஆறுகளாகப் பெருகி ஓடின' என்றதனால், இதுவும் மக்கள் துயரநிலை குறித்ததே. "கண்ணுற்ற வாரி கடலுற்ற" (390) என்றார் முன்னும்.

உலத்தல், ஈண்டு எண்ணில் அடங்குதல். ஓட - ஓடுதலால். நீறு - துகள். சுண்ணம் - நுண்புழுதி. தேரோடத் துகள் கெழுமின தெருக்களிலெல்லாம், துகளடங்கி ஆறாகி ஓடும் வண்ணம் கண்ணீர் பெருகிற்றென்றல் உயர்வு நவிற்சி. அரு - அருவாகிய என்றலுமாம். கண்ணீர் ஓடுவதுபோல நெஞ்சம் பிளந்தோடுவது இயலாததாகலின், அஃதின்றி நின்றது. 'ஓடின' என்ற பன்மையால் பல ஆறுகள் என்பது பெறப்படும். "தாறுமாய்" (பால. 561) என்ற பாடல் ஈண்டு ஒப்புநோக்கத் தகும்.

(பி - ம்.) 1. அழிவழிந்தார்; எங்குலத்தார், எங்குலப்பர், எங்குமுள்ளார், யாவர்களும்.
2. நீருகச்; நிரைந்த, நிரைத்த, நிரந்த, நிமிர்ந்த, நிகர்த்த; தெருவெலாம்.
3. ஆருகவோடின; கண்ணீரு நன்னெஞ்சம், கண்ணீருண்ணெஞ்சம், கண்ணீரருணெஞ்சம், கண்கணீருண்ணெஞ்சம், கண்ணீரருணெஞ்சம், கண்ணுண்ணீரருநெஞ்சம், வன்கண்ணீரருள்நெஞ்சம்.
4. ஓடாதது, ஓடிலவால்; இத்தனையே, அத்துணையே; கூற்றமே, கூற்றமோ, குற்றமே. (102)

398. மண்செய்த பாவ முளதென்பார் மாமலர்மேற்
பெண்செய்த பாவ மதனிற் பெரிதென்பார்
புண்செய்த நெஞ்சை விதியென்பார் பூதலத்தோர்
கண்செய்த பாவங் கடலிற் பெரிதென்பார்.

மண் செய்த பாவம் உளது என்பார் - மண்மகள் செய்த பாவம் ஏதோ உள்ளது என்பார் (சிலர்); மா மலர்மேல் பெண் செய்த பாவம் - சிறந்த தாமரை மலரில் தங்கும் திருமகள் செய்துள்ள பாவம், அதனில் பெரிது என்பார் - (மண்மகள் செய்த) அப்பாவத்தினும் பெரிதாகும் என்பார் (சிலர்); விதி நெஞ்சை புண் செய்த(து) என்பார் - விதி எல்லோர் மனத்தையும் புண்படுத்தி விட்டது என்பார் (சிலர்); பூதலத்தோர் கண் செய்த பாவம் - இப்பூமியில்

உள்ளோர் கண்கள் (இராமபிரான் அரசு துறந்து சடை தாங்கிக் காடு செல்லுதலைக் காணுமாறு) செய்துள்ள பாவம், கடலின் பெரிது - கடலினும் மிக்கதாகும், என்பார் - என்று கூறுவார் சிலர்.

இதுமுதல் பத்துப் பாடல்களால், மக்கள் பலவாறு பேசுவதைக் கூறுகின்றார்.

பூமியையும் செல்வத்தையும் முறையே பூதேவி, சீதேவி (பூமகள், திருமகள்) என்றல் மரபாகலின், மண் என்பதற்கு மண் மகள் என்று கொள்க. இராமபிரான் காடு சென்றாலும் அவன் திரு வடிகள் தன்மேற் படும் பேறு மண்மகளுக்குள்ளது, திருமகளுக்கு அதுதானும் இல்லையென்பார், அவள் பாவம் அதனிற் பெரிது என்றனர். இராமபிரான் பிரிவுச் செய்தி கேட்ட மாத்திரத்திலே அனைவர் நெஞ்சும் புண்பட்டன. கண்கள் அதனைக் கண்டு கலங்க இருக்கின்றன; ஆதலால், விதி நெஞ்சைப் புண் செய்தது; கண்கள் பெரும் பாவம் செய்துள்ளன என்கின்றனர்.

செய்தது என்பது ஈறு குறைந்து நின்றது.

(பி - ம்.) 1. மண் செய்தார்; உளவென்பார்; மாமலரில்.
2. அதிலும், இதனில்.
3. புண்செய்தார் நெஞ்சம்.
4. கடலென்பா ராயினர், கடலென்பதாயினர், கடனென்பா ராயினர். (103)

399. ஆளான் பரத னரசென்பா ரையனினி
மீளா னகர்க்கு விதிகொடிதே காணென்பார்
கோளாகி வந்தவா கொற்றமுடி தானென்பார்
மாளாத நம்மின் மனம்வலியா ராரென்பார்.

பரதன் அரசு ஆளான் என்பார் - பரதன் இவ்வரசை யேற்று ஆள மாட்டான் என்பார் (சிலர்); ஐயன் இனி நகர்க்கு மீளான் என்பார் - இராமன் இனி மனம் திரும்பி நகருக்கு வாரான் என்பார் (சிலர்); விதி கொடிதே என்பார் - விதி மிகவும் கொடியதே என்பார் (சிலர்); கொற்றம் முடிதான் - வெற்றியையுடைய முடிசூட்டல் என்பதே, கோள் ஆகி வந்த ஆ(று) என்பார் - உலகிற்குத் தீக்கோளாக விளைந்ததுதான் என்னே என்பார் (சிலர்); மாளாத நம்மின் - இச் செய்தி கேட்டும் (இதுவரை) மாளாதிருக்கிற நம்மைக் காட்டிலும், மனம் வலியார் ஆர் என்பார் - வன்னெஞ்சம் உடையார் எவருளர் என்பார் (சிலர்).

'பரதன் நீதி தவறாதவனாதலால், தாய் கொடுத்தாலும் இராமனுக் குரிய அரசைத் தான் ஏற்று ஆளமாட்டான்; அவன் இராமனையே அரசேற்க வேண்டுவான்; அவன் வேண்டினும் இராமன் இனி வனஞ் செல்லாமல் மீளான்; முடி சூட்டல் என்பது இங்ஙனம் பெருந்

தீங்காக விளைந்தது விதியின் செயலே; எங்ஙனமாயினும், இத் துன்ப நிலையில் இன்னும் உயிர் வைத்துக்கொண்டிருக்கும் நம்மைப்போல வன்னெஞ்சர் எவரும் இரார்' எனப் பலரும் அவரவருக்குத் தோற்றிய வாறு பேசிக்கொண்டனர். அன்பும், மரியாதையும்பற்றி இராம பிரானை 'ஐயன்' என்றனர்.

கோள் - தூமகேது போன்ற தீக்கோள்; இடையூறுமாம். காண்: அசை.

(பி - ம்.) 2. மீளா நமக்கு; விதிகொடிது, விதிகொடிதே தானென்பார், விதியே கொடிதென்பார்.
3. கோளாகி வந்தவால், வந்தது, வந்ததொரு, வந்ததோர், கோளாக வந்ததோ; கொற்றமுடி யாமென்பார், கொற்ற முடியேயென்பார், கொற்ற முடியென்பார்.
4. நம்மில்; மனம்வலியர், மனவலியார், வலியார்கள்; யாரென் பார். (104)

400. ஆதி யரச னருங்கே கயன்மகண்மேற்
காதன் முதிரக் கருத்தழிந்தா னுமென்பார்
சீதை மணவாளன் றன்னோடுந் தீக்கானம்
போது மதுவன்றேற் புகுது மெரியென்பார்.

ஆதி அரசன்-முதன்மையுடைய நம் சக்கரவர்த்தி, அரும் கேகயன் மகள்மேல் - அருமையான கைகேயிபால், காதல் முதிர - ஆசை மிகுந்ததனால், கருத்து அழிந்தான் - அறிவு கலங்கிப்போனான், என்பார்—; சீதை மணவாளன் தன்னோடும் - சீதையின் நாயகனான இராமனுடன், தீ கானம் போதும் - (நாமும்) கொடிய காட்டிற்குப் போவோம்; அது அன்றேல் - அது நேராதாயின், எரி புகுதும் - தீயிற் புகுவோம், என்பார்—.

அரசன் பல வகையில் சிறப்பும் அறிவாற்றலும் மிக்கவனாக இருந்தும், இந்த முதுமைப் பருவத்தில் பெண்ணிடம் மயங்கி அறிவிழந்தானே என அவனைக் குறைகூறுகின்றனர். இது இராம பிரான்பாலுள்ள அன்பு மிகுதியாலானது. அதனால், அவனுள்ள இடத்திலே நாமும் இருப்போம் என்று அவனோடும் தீக்கானம் போதும் என்றும், அதற்கு அவன் இடங் கொடாவிடின், இங்கே அவனின்றி வாழ்தலினும் உயிர் விடுதல் மேல் என்பதுபட எரிபுகுதும் என்றும் கூறுகின்றனர்.

ஆம் : கட்டுரை நயம்பட நின்ற இடைச்சொல். அதுவன்றேல் எரி புகுதும்: "பசைந்தாரிற் றீர்தலிற் றீப்புகுதல் நன்று" (நான்மணி. 13).

(பி - ம்.) 1. அருங்கைகயர் கோன்மாமகண்மேல், கைகயர் கோன்றன் மகண்மேல், அருள்கைகயன் மகண்மேல், அருள்கேகயன் மகண்மேல், கேகயர் கோன்மா மகண்மேல்.

2. கருத்தழிந்தான் காண், கருத்தழிந்தானும்.
4. போதுமதுவன்றிப், போதுமதுவென்றால், அதுவன்றால், போதுவது வென்றால். (105)

401. கையா னிலந்தடவிக் கண்ணீர் மெழுகுவார்
உய்யாள்பொற் கோசலையென் றோவாது வெய்துயிர்ப்பார்
ஐயா விளங்கோவே யாற்றுதியோ நீயென்பார்
நெய்யா ரழலுற்ற துற்றாரந் நீணகரார்.

கையால் நிலம் தடவி - கைகளால் தரையைத் தடவி, கண் நீர் மெழுகுவார் - தங்கள் கண்களிலிருந்து சொரியும் நீரால் மெழுகுவார்கள்; பொன் கோசலை உய்யாள் என்று - பொன் போன்ற கௌசல்யாதேவி (மகனைப் பிரிதலால்) பிழைத்திராள் என்று சொல்லிக்கொண்டு, ஓவாது வெய்துயிர்ப்பார் - இடைவிடாது பெருமூச்செறிவார்கள்; இளம் கோவே - இளைய பெருமானே, ஐயா - எம் ஐயனே, நீ ஆற்றுதியோ - நீ (தமையனைப் பிரிந்தால்) பொறுத்திருப்பாயோ! என்பார்—; (இவ்வாறாக), அ நீள் நகரார் - அப் பெரிய நகரத்தில் உள்ளவர் எல்லாம், நெய் ஆர் அழல் உற்றது உற்றார் - நெய் சொரிந்த தீப்பட்டது போன்ற பெருந் துன்பம் உற்றனர்.

அயலார்க்கே துயரம் தாங்காதபோது, பெற்ற தாய் எங்ஙனம் பொறுப்பாள் என்ற கருத்துடன் 'கோசலை உய்யாள்' என்றும், அவளது நல்லியல்புகள்பற்றிப் 'பொற்கோசலை' என்றும் கூறினர். இளங்கோ - இலக்குவன்; அவன் பாவிற் குழல்போல அண்ணலோடு இணைபிரியாதவனாதலின், 'இளங்கோவே நீ ஆற்றுதியோ!' என்றனர். 'இராமனோடு வனம் புகுவோம்; அது தீராதேல் தீப் புகுவோம்' என்றவர்கள், தீப்புகு முன்னமே அதுபோன்ற துன்பமுற்றனர் என ஊரார் துயர மிகுதியை எடுத்துக் காட்டுகின்றார். ''அழுத லானாக் கண்ணள், மெழுகு மாப்பிகண் கலுழ்நீ ரானே'' (புறநா. 249 : 13 - 4) என்பது ஈண்டு ஒப்பு நோக்கத் தகும்; சீவக. 2984 பார்க்க.

(பி - ம்.) 1. நிலத்தடித்துக்; மெழுகுவாள்.
2. உய்யாள் போல், உய்யார்போல்; கவுசலை; என்றோதுவார்.
3. ஆற்றுதியே நீ, ஆற்றுதி நீயோ.
4. உற்றாரக்கன்னகரார், உற்றார்கணீணகரார். (106)

402. தன்னூறு வேறில்லை தன்மகற்குப் பார்கொள்வான்
என்னூறு தீக்கரும நேர்ந்தா ளிவளென்னாக்
கள்ளூறு செவ்வாய்க் கணிகையருங் கைகேசி
உள்ளூறு காத லிலள்போலென் றுள்ளழிந்தார்.

கள் ஊறு செம்மை வாய் கணிகையரும் - தேனைச் சுரக்கும் சிவந்த வாயினையுடைய வேசையரும், தன் மகற்கு பார் கொள்வான் - தன்

மகனுகிய பரதனுக்கு நாடாட்சியைப் பெறும்பொருட்டு, கைகேசி - இந்தக் கைகேயி, எள் ஊறு தீ கருமம் நேர்ந்தாள் - இகழ்ச்சி மிக்க இத் தீச் செயலுக்குத் துணிந்துள்ளாள்; தள்ளூறு வேறு இல்லை - இதற்குப் பரிகாரம் வேறு இல்லை, என்னு - என்று சொல்லி, (இதனுல்), இவள் உள் ஊறு காதல் இலள் போல் என்று - இவள் (இராமனிடத்து) மனத்தொடு பொருந்திய அன்பு இல்லாதவளே போலும் என்று, உள் அழிந்தார் - மனம் வருந்தினர்.

காதலரிடத்து உள்ளன்பு வையாத இயல்புடைய வேசையருங் கூட, இராமபிரான் காடு செல்லுதற்கு வருந்தி, அதற்குக் காரணமான கைகேயியைத் தூற்றுவாராயினர். ‘கைகேயி இராமன்பால் உள்ளன்பு உடையவ்ள்போலக் காட்டி வந்தது பொய்யே; அதனுலேதான் தன் மகனுக்கு அரசு நிலையிடும் பொருட்டு, வரம் என்ற பெயரால் இப்போது இதற்குக் கொடுமையைச் செய்யத் துணிந்திருக்கின்ருள்; இப்படியா செய்யவேண்டும்?’ என்று கூறி வருந்தினர்.

தள்ளூறு - தள்ளுதலுறல்; என்றது மாற்றுதற்குரிய பரிகாரத்தைக் குறித்தது. உம்மை இழிவு சிறப்பு. இராமபிரான் வனம் புகுதல் அனைவரையும் வருத்துதலோடு, அரசன் உயிரிழக்கவும் காரணமாயிருத்தலின்,‘எள்ளூறு தீக்கருமம்’ எனப்பட்டது. ‘எள்ளோடு செய்யப் படும் இறுதிக் கடன்’ என்ற தொனியும் இதில் பொருந்துதல் காண்க. வேசையர் வாலெயிறூறிய நீர் தீங்கு பயத்தலின், ‘கள்’ என்ருர்.

(பி - ம்.) 1. தள்ளூறல் வேறில்லாத்; பார்கொள்வான்.
2. எள்ளூறிய கருமம், தருமம், எள்ளூறுதிக் கருமம்; நோக்காள் இவளென்பார்.
3. கள்ளூறு, கள்ளூறும்: கணிகை காண், கணிகையர்போல், கணிகையாம், கணிகையெனும், கணிகைபோல்; கயற்கண்ணி.
4. உள்ளூறு, உள்ளூறும்; இலர்போல்; உள்ளழிவார், உள்ளழிவாள், உள்ளழிந்தாள். (107)

403. நின்று தவமியற்றித் தான்றீர நேர்ந்ததோ
அன்றி யுலகத்து ளாருயிராய் வாழ்வாரைக்
கொன்று களையக் குறித்த பொருளதுவோ
நன்று வரங்கொடுத்த நாயகன்ற னெண்ணமென்பார்.

வரம் கொடுத்த நாயகன் தன் எண்ணம் - கைகேயிக்கு வரம் கொடுத்த நம் அரசன் நினைவு, தான் நின்று தவம் இயற்றி தீர நேர்ந்ததோ - தான் துறவு நெறியில் நின்று தவஞ் செய்து உயிர் துறக்கக் கருதியதோ? அன்றி - அவ்வாறன்றி, உலகத்துள் - இவ்வுலகத்தில், ஆர் உயிராய் வாழ்வாரை - தனது அரிய உயிர்போல வாழும் மக்களை எல்லாம்; கொன்று களைய குறித்த பொருள்

அதுவோ - கொன்றொழித்துவிட எண்ணிய எண்ணமோ? நன்று - மிக நன்றாயிருக்கிறது, என்பார்—.

'அரசன் கைகேயிக்கு வரங் கொடுத்ததன் நோக்கம், நாடு எங்ஙனமாயினும் தான் துறவு பூண்டு சில காலம் இருந்து உயிர் விட்டுத் தன் மறுமைக்கு வழி தேடிக்கொள்ளலாம் என்பதா? அன்றி நாட்டில் உயிர்களெல்லாம் ஒழியட்டும் என்பதா? எதுவாயிருப்பினும், அவன் செய்கை நல்லதன்று' என்கின்றனர். 'நன்று' என்றது குறிப்பு மொழி. இராமன் பிரிவால் தான் வருந்தி உயிர் துறப்பது போல மக்களும் அங்ஙனமாக நேருமே என்பதை அவன் எண்ணினானில்லையே என்பது கருத்து.

(பி - ம்.) 1. தவமுயற்றி, தவமுனாற்றித், தவமாற்றித், மின்ற தவமியற்றிக், தவமியற்றக்; கான்றரவும், கானந்தான், கானேக.
2. அன்றிவ்வுலகத்துள், ஆருயிரா; ஆருயிரை, உணர்வுயிராய்;
3. கொடுத்த பொருளன்றோ, பொருளென்றோ, பொருளொன்றோ.
4. கொடுத்த நாயகற்கு, கொடுத்தல் நாயகற்கு; மன்றென் பார். (108)

404. பெற்றுடைய மண்ணவளுக் கீந்து பிறந்துலகம்
முற்றுடைய கோவைப் பிரியாது மொய்த்தீண்டி
உற்றுறைதும் யாரு முறையவே சின்னாளில்
புற்றுடைய காடெல்லா நாடாகிப் போமென்பார்.

பெற்று உடைய மண் - (தான் வரமாகப்) பெற்றுக்கொண்டுள்ள பூமியை, அவளுக்கு ஈந்து - அக் கைகேயிக்குக் கொடுத்துவிட்டு, யாரும் - நாம் எல்லோரும், பிறந்து உலகம் முற்றும் உடைய கோவை பிரியாது - (மூத்தவனாகப்) பிறத்தலால் உலகம் முழுதும் தனக்கு உரிமையாக உடைய தலைவனாகிய இராமனை விட்டு நீங்காமல், மொய்த்து ஈண்டி - நெருங்கிச் சூழ்ந்து, உற்று உறைதும் - (காட்டில்) சேர்ந்து தங்குவோம்; உறையவே - (அவ்வாறு) தங்கவே, சில நாளில்—, புற்று உடைய காடு எல்லாம் - பலவகைப் புற்றுக்களை யுடைய காடு முழுதும், நாடு ஆகி போம் - நாடு ஆகிவிடும், என்பார்- என்று கூறுவர் சிலர்.

'இராமன் பிறப்பிலேயே நாடாளும் உரிமை உடையவன்; பரதன் அங்ஙனம் அல்லன்; அதனால் கைகேயி அதனை வரமாக வேண்டிப் பெற்றாள். அவள் பெற்றது வெறும் நாடே; அதில் உள்ள மக்களையும் உளப்படுத்தியதன்று. அந்நாட்டை அவள் ஆளட்டும். நாமெல்லாம் இராமனை விடாது தொடர்ந்து காட்டிலே போய்த் தங்கிவிட்டால், காடும் நாடாகிவிடும். இராமன் உள்ள இடம் அயோத்தி; ஆதலால் அனைவரும் எழுக' என்கின்றனர். 'பெற்றுடைய மண்', 'பிறந்துடைய

உலகம்' என்றவற்றின் வேறுபாடு நோக்கத்தக்கது. இராமனே அரசன் என்பதுபடக் 'கோ' என்றனர். "மண்ணே கொள்நீ" (213) என்ற தசரதன் வாக்கும் ஈண்டு நோக்கத் தகும். இராமபிரானது பிறப்புரிமை: 484, 1174-பார்க்க. முற்றுடைய : உம்மை தொக்கது.

(பி - ம்.) 1. மன்னவனுர்க்கேந்து; பிறிந்துலகம்.
2. முற்றுடையனேவப்; பிரியாது.
3. உற்றுறையும்; உறையச், மொழியச்; சில நாளில், இந்நாளில்.
4. காடெலாம்; நாடாகப். (109)

405. என்னே நிருப னியற்கை யிருந்தவா
தன்னே ரிலாத தலைமகற்குத் தாரணியை
முன்னே கொடுத்து முறைதிறம்பத் தம்பிக்குப்
பின்னே கொடுத்தாற் பிழையாதோ மெய்யென்பார்.

தாரணியை - பூமியை, முன்னே - முதலில், தன் நேர் இலாத தலைமகற்கு கொடுத்து - தன்னை யொப்பார் எவரும் இல்லாத தலைவனும் மூத்த மகனுமான இராமனுக்கு (முறைப்படி) கொடுத்துவிட்டு, பின்னே - பின்பு, முறை திறம்ப - வரன் முறை கெட, தம்பிக்கு கொடுத்தால் - (அதனையே) தம்பியான பரதனுக்குக் கொடுத்தால், மெய் பிழையாதோ - வாய்மை தவறியதாகாதோ ? நிருபன் இயற்கை இருந்த ஆறு என்னே - நம் அரசன் இயல்பு இருந்த வகைதான் என்ன வியப்பு! என்பார்—.

'என் சுமை நீங்க, நாட்டை நீ பெற்று ஆளவேண்டும் என்று இராமனுக்குச் சொல்லி, அவன் இயைவு பெற்று, முடி சூட்டுதற் குரியனவும் செய்தபின், நாட்டைப் பரதனுக்குக் கொடுக்கும் நம் அரசன் இயல்பை என்னவென்பது! இது வாய்மை தவறியதாகாதோ? வரன் முறையும் அன்றே!' என்கின்றனர்.

என்னே: வியப்பு. இருந்தவா : ஈறு தொக்கது; தலைமகன் - மூத்த மகன், தலைவன்.

(பி - ம்.) 1. நிருபன்னியற்கை, நிருபரியற்கை.
2. தன்னேரில்லாத, தன்னேரொன் றில்லாத், தன்னேரொன்றிலா; தன்மகற்குத், தனி மகற்குத்.
3. முறைதிறம்பாத்.
4. பிழையாதே மெய்யென்பார், பிழையாகாதோவென்பார். (110)

406. கோதை வரிவிற் குமரற் கொடுத்தநில
மாதை மகன்புணர வெண்ணியே வஞ்சித்த
பேதை சிறுவனைப் பின்பார்த்து நிற்குமே
சீதை பிரியினுந்தான் தீரா டிருவென்பார்.

கோதை வரி வில் - வெற்றிமாலை சூடிய கட்டமைந்த வில்லை ஏந்திய, குமரன் கொடுத்த - இராமனுக்கு(ப் பலர் அறிய)க் கொடுத்த, நிலம் மாதை - பூமிதேவியை, மகன் புணர எண்ணி - தன் மகன் சேரக் கருதி, வஞ்சித்த - கணவனை (வரம் என்ற பெயரால்) வஞ்சித்துப் பெற்ற, பேதை சிறுவனை - அறிவிலியான கைகேயியின் புதல்வனை, திரு - சீதேவி, பின் பார்த்து நிற்குமே திரும்பிப் பார்த்து (இங்கே) நிற்பாளா? சீதை பிரியினும் - சீதை (ஒருகால்) பிரிந்து இங்கே இருந்தாலும், தான் தீராள் - தான் (இராமனைப்) பிரிந்திராள், என்பார்—.

'இராமனுக்கு வரன்முறையாக உரிய பூமியை அரசன் அவையினர் பலரும் அறியக் கொடுத்து மேலும் உறுதியாக்கி யிருக்க, கைகேயி வீண் ஆசையால் வஞ்சித்து அதனைத் தன் மகனுக்கு ஆக்க எண்ணினால் அது கைகூடுமோ? திருமகளின் அம்சமாக வந்துள்ள சீதை ஒருகால் இராமனோடு வனஞ் செல்லாது நிற்பினும், திருமகள் அவனைப் பிரிந்து இங்கே நில்லாள்; பரதனைத் திரும்பியும் பாராள். ஆதலால் கைகேயியின் தீய எண்ணம் நிறைவெய்தாது' என்கின்றனர். பிரியினும் என்ற உம்மை, பிரியாள் என்பது குறித்தது. எனவே, சீதையும் நில்லாள், திருவும் நில்லாள் என்பதாயிற்று.

குமரற் கொடுத்த நான்கனுருபு தொக்கது. எண்ணியே: ஏகாரம்: அசை. நிற்குமே : ஏகாரம் எதிர்மறை.

(பா-ம்.) 2. மாதை யொருவர் புணர்வரா, புணர்வராம், புணர்வாராம், புணர்வரோ.
3. சிறுவனைத்தன், சிறுவனையே; அவள்மகனைப்; நிற்குமா, நிற்குமோ, நிற்குமோர்.
4. பிரியத்; தீராத், தீராதோ, தான்றீராள். (111)

407. உந்தாது நெய்வார்த் துதவாது காலெறிய
நந்தா விளக்கி னடுங்குகின்ற நங்கைமார்
செந்தா மரைத்தடங்கட் செவ்வி யருணோக்கம்
அந்தோ பிரிதுமோ வாவிதியே யோவென்பார்.

உந்தாது - தூண்டாமல், நெய் வார்த்து உதவாது - வேண்டும் போது நெய்யை வார்த்து எரிதற்கு உதவி புரியாமல், கால் எறிய - காற்று வேகமாக வீச, நடுங்குகின்ற - அலைகின்ற, நந்தா விளக்கின் - அவியாத விளக்கைப் போன்ற நிலையையுடைய, நங்கைமார் - உயர் குடி மகளிர், அந்தோ - ஐயோ! செம் தாமரை தட கண் - (இராமனுடைய) செந்தாமரை மலரைப் போன்ற பெரிய கண்களின், செவ்வி - அழகுமிக்க, அருள் நோக்கம்-அருட் பார்வையை, பிரிதுமோ- (பெருது) பிரிந்திருப்போமோ? ஆ—, விதியேயோ - இதுவும் நமது விதியோ, என்பார் - என்று சொல்லித் துயரம் மீக்கூர்வர்.

இதிற் கூறப் பெற்றவர்கள், வேறு கருத்தின்றி இராமபிரானது அருள் நோக்கில் ஈடுபட்ட உயர்ந்த பண்புடைய மகளிராவர். இராம பிரான் பிரிவால், அவ்வழகிய கண்களின் அருள் நிறைந்த பார்வையை அவ்வப்போது பெறுதிருக்கும் நிலையே தமக்குப் பேரிழப்பாகக் கொண்டு வாடுபவர்கள். எவரையும் குறை கூருது தம் விதியை நோகின்றனர். இயல்பாக நந்தாவிளக்குப் போன்ற நங்கைமார் இப்போது நடுங்கும் விளக்குப் போலாயினர். நகரத்தாரின் துயர மிகுதியைப் பலபடியாகக் கூறிவந்த ஆசிரியர், இதனோடு அதனை முடித்து, மேலே இலக்குவனது சீற்ற நிலையைக் கூறுகின்ருர்.

அந்தோ, ஆ! இரக்கக் குறிப்பு.

(பி - ம்.) 1. நெய்வந்தறியாது, நெய் வந்துதவாது, நெய் வந்துறையாது; காலெறியா, காலெறிந்து.
3. செந்தாமரைப் பெருங்கண்; செவ்வித் திருநோக்கம், செல்வத் திருநோக்கம்.
4. பிரிந்திழந்தோ மாவிதியே; என்ருர். (112)

408. கேட்டா னிளையோன் கிளர்ஞாலம் வரத்தி ளுலே
மீட்டா ளளித்தாள் வனந்தம்முனின் வெம்மை முற்றித்
தீட்டாத வேற்கட் சிறுதாயென யாவ ராலும்
மூட்டாத காலக் கடைத்தீயென மூண்டெ ழுந்தான்.

தீட்டாத வேல் கண் - (உலையிலே காய்ச்சிக்) கூராக்கப்படாத வேல் போன்ற கண்களையுடைய, சிறு தாய் - சிற்றன்னையாகிய கைகேயி, தம் முனின் - தமையனிடத்து, வெம்மை முற்றி - கொடுமை மிக்கு, கிளர் ஞாலம் - (அவனுக்குரியதாய்) விளங்குகின்ற நாட்டை, வரத்திளுலே - வரம் என்ற பெயரால், மீட்டாள் - (அவனுக்கின்றி) மீட்டுக்கொண்டு, வனம் அளித்தாள் என - (அவனுக்குக்) காட்டைக் கொடுத்தாளென்று, கேட்டான் இளையோன் - இலக்குவன் கேள்விப் பட்டான்; (உடனே) யாவராலும் மூட்டாத - எவராலும் மூட்டப்படாத, காலம் கடை தீ என - ஊழியிறுதித் தீப்போல, மூண்டு எழுந்தான் - (சினம்) பொங்கி எழுந்தான்.

இதுமுதல் ஒன்பது பாடல்களால் இலக்குவனது சீற்ற நிலையும் அவன் செயல்களும் கூறுகின்ருர். அதற்கேற்ப, இம் முதற் செய்யுள் வல்லோசை பயின்று, கேட்டான், அளித்தாள் என வினைமுற்றை முதலிலும் செயப்படுபொருளை இறுதியிலும் கொண்டு, படிப்போர் உள்ளத்தைக் கிளர்த்துவதாய் அமைந்திருத்தல் காண்க. கிளர் ஞாலம் - இராமன் ஆளப்போகின்ருனென்று மகிழ்ச்சி மிக்க நாடு. ஞாலம் பெற்ருள் என்னுது 'மீட்டாள்' என்றமை நோக்கத்தக்கது. வனம் அளித்தாள் என்றது இகழ்ச்சிக் குறிப்பு. வேல் போலச் செயற்கையானன்றி இயற்கையாகவே கூரிய கண் என்பார், 'தீட்டாத

வேற்கண்' என்றார். 'சிறு தாய்' என்றதில் அற்பத்தன்மை உடைய வள் என்ற பொருளும் தொனித்தல் காணலாம்.

(பி - ம்.) 2. மீட்டா னளித்தான்; வனந்தம் முனீ, வனந்தானென, வனந்தம் முனும், அவன்றம்முனும்; முற்றற்.
3. வெங்கற்; யாவரானும்.
4. காலக்கடற்றீ யென, காலத்திடைத்தீயென. (113)

409. கண்ணிற் கடைத்தீயுக நெற்றியிற் கற்றை நாற
விண்ணிற் சுடருஞ் சுடர்நாணமெய் நீர்வி ரிப்ப
உண்ணிற் குமுயிர்ப் பெனுமூதை பிறக்க நின்ற
அண்ணற் பெரியோன் றனதாதியின் மூர்த்தியொத்தான்.

கண்ணில் கடை தீ உக - கண்களிலிருந்து ஊழித்தீப் பொறி சிந்தவும், நெற்றியில் கற்றை நாற - நெற்றியில் புருவமயிர்க் கற்றை ஏறித் தோன்றவும், மெய் நீர் விரிப்ப - உடம்பு (வியர்வை) நீரை மிக வெளிப்படுத்தவும், உள் நிற்கும் - உடம்பினுள்ளே இருக்கின்ற, உயிர்ப்பு எனும் ஊதை பிறக்க - மூச்சு என்கிற பெருங்காற்று வெளிப் படவும், விண்ணில் சுடரும் சுடர் நாண - ஆகாயத்திலே ஒளி வீசும் சூரியனும் (தன் தோற்றத்தைக் கண்டு) நாணும்படி, நின்ற - (உக்கிர மான தோற்றத்துடன்) நின்ற, அண்ணல் பெரியோன் - பெருமை மிக்க பெரியோனான இலக்குவன், தனது ஆதியில் மூர்த்தி ஒத்தான் - தனது மூல மூர்த்தியான ஆதிசேடனைப் போன்றிருந்தான்.

இலக்குவன் ஆதிசேடனது அமிசமாதலின் (பால. 202), சினமிக்கு நின்ற அவனை, 'தனது ஆதியின் மூர்த்தி யொத்தான்' என்றார். 'காலக் கடைத்தீயென மூண்டெழுந்தான்' என முன் கவியிற் கூறியதை அநுவதித்து, 'கண்ணிற் கடைத்தீ உக' என்றார். ஊழியிறுதியில் ஐம்பூதங்களுள் ஆகாய மொழிந்த ஏனைய, தத்தம் நிலையின் மிக்கெழுந்து உலகை யழிக்க, எல்லாம் ஆகாயத்துள் ஒடுங்கும் என்பர். கடையில் எழுந்தீ - ஊழித் தீ. சினம் மிக்கபோது நெற்றி சுருங்க, புருவங்கள் வளைந்து நெற்றியில் ஏறல் இயல்பாதலின் 'நெற்றியிற் கற்றை நாற' என்றார்; "மேனிவந்தகொழுங் கடைப்புருவம் நெற்றி முற்றச் சென்றன" (பால. 328) என்றது காண்க.

(பி - ம்.) 1. கடை தியுக; நெற்றியின் வேர்வை, வேர்வு, நெற்றி வியர்வு, வெயர்வு, வியர்ப்பு; கற்றை ஆற முற்ற, கால.
2. சுடர்வீய, சுடர் தோன்ற, தோன்றி, தோன்றிட, சுடரஞ்ச, சுடருங் கெடத்தோன்றி, தோன்ற; மெய்ந்நீர் விரிப்ப, விரிக்கும், விரிந்த, வெயர்க்க, விரிக்க, விண்ணிற் சுடருங்கெட; மெய்யினில் நீர் விரிக்க.
3. உண்ணிற்கு முயிர்ப்பென்னும், உயிரெனும், உண்ணிற்கு முமித் தனி ஊதை பிறங்க.
4. பெரியான், மூர்த்த மொத்தான். (114)

410. சிங்கக் குருளைக் கிடுதீஞ்சுவை யூனை நாயின்
வெங்கட் சிறுகுட் டனுக்கூட்ட விரும்பி னளே
நங்கைக் கறிவின் றிறநன் றிது நன்றி தென்னாக்
கங்கைக் கிறைவன் கடகக்கை புடைத்து நக்கான்.

கங்கைக்கு இறைவன்-கங்கைத் துறைத்தலைவனான இலக்குவன், (கைகேயியின் செயல் குறித்து), சிங்கம் குருளைக்கு இடு தீம் சுவை ஊனை - சிங்கக் குட்டிக்கு இடுதற்குரிய இனிய சுவையினையுடைய புலாலுணவை, வெம் கண் - கொடிய கண்ணையுடைய, நாயின் சிறு குட்டனுக்கு - சிறிய நாய்க்குட்டிக்கு, ஊட்ட விரும்பினளே—; நங்கைக்கு-இக் கைகேயிக்கு, அறிவின் திறம் நன்று இது நன்று இது- அறிவின் இயல்பாகியது நன்று நன்று என்னா - என்று சொல்லி, கடகம் கை புடைத்து - கடகம் அணிந்த கைகளைக் கொட்டி, நக்கான் - இகழ்ச்சி நகை செய்தான்.

இராமபிரானுக்குரிய அரசைப் பரதனுக்கு உரிமையாக்க ஆசைப் படுகிறாளே என்ற உபமேயத்தை, உவமானத்தால் பெற வைத்தார். பரதன் அரசாளுந் தகுதி உடையவனல்லன் என்பது இலக்குவன் கருத்து. கங்கை கோசல நாட்டெல்லையில் பாய்தலால் 'கங்கைக்கு இறைவன்' என்றார். கடகம் - கங்கணம். கை புடைத்து நகுதல், பிறரிடம் கண்ட பேதைமைபற்றி வந்தது. அடுக்கு, இகழ்ச்சிப் பொருளது.

குட்டன் - குட்டி என்ற பொருளில் வருதலை, "தன்சிறு குட்டன் களைக் குடங்கைக் கொண்டு மந்திகள் கண் வளர்த்தும்" (3. 5: 7) என்ற பெரியாழ்வார் வாக்கிலும் காண்க.

(பா - ம்.) 1. இடுந்திஞ்சுவை, இடுதீன்சுவை; ஊணை.
2. சிறுகுட்டனை, கடுங் குட்டியை, கருங்குட்டனை, சிறு குட்டியை; அட்ட; விரும்பினளால், விரும்பினளா, விரும்பினளோ, விரும்பினளம்.
3. அறிவின்றிது; நன்றிதென்னக்.
4. கமலக்கை. (115)

இலக்குவனது போர்க்கோலம்

411. சுற்றார்ந்த கச்சிற் சுரிகைபுடை தோன்ற வார்த்து
விற்றாங்கி வாளிப் பெரும்புட்டில் புறத்து வீக்கிப்
பற்றார்ந்த செம்பொற் கவசம்பனி மேரு வாங்கோர்
புற்றா மெனவோங் கியதோளொடு மார்பு போர்க்க.

சுற்று ஆர்ந்த கச்சில் - (அரையைச்) சுற்றிக் கட்டிய அரைப் பட்டிகையில், சுரிகை - உடைவாளை, புடை தோன்ற ஆர்த்து - வெளியே தோன்றக் கட்டி, வில் தாங்கி - வில்லை இடக்கையில் பற்றி,

பெரு வாளி புட்டில் - பெரிய அம்பருத் தூணியை, புறத்து வீக்கி - முதுகுப் புறத்திலே கட்டி, பற்று ஆர்ந்த - பிணைப்புமிக்க, செம் பொன் கவசம் - நல்ல பொன்னாலாகிய போர்க் கவசமானது, பனி மேரு ஓர் புற்று ஆம் என ஓங்கிய - குளிர்ந்த மேருமலையும் (ஒப்பிடுங்கால்) ஒரு புற்றாகும் என்னும்படி உயர்ந்துள்ள, தோளொடு - புயங்களோடு, மார்பு - (அகன்ற) மார்பையும், போர்க்க - மூடும்வண்ணம் (அணிந்து).

இதுமுதல் நான்கு பாடல்கள் ஒரு தொடர்; இலக்குவன் போர்க் கோலம் பூண்டு வீரவுரை கூறுதலைக் கூறும்; 414-ஆம் பாட்டின் இறுதியில் வரும் 'என்றான்' என்பதனோடு முடிவுறும்.

இலக்குவன் மேனி பொன்னிற மென்பர்; ஆதலால் மேருவைச் சுட்டி, அதுவும் மிகத் தாழ்ந்தது என்று கூறும்வண்ணம் உயர்ந்த தோள்களும், மார்பும் என்று உயர்வு நவிற்சியாகக் கூறுகின்றார். கவசம் போர்க்க 'அணிந்து' என ஒரு சொல் வருவித்துரைக்க. பற்றார்ந்த கவசம், செம்பொற் கவசம் என இயைக்க. பற்றார்ந்த - பொடி வைத்துப் பற்றவைத்தலுடைய என்றலுமாம்.

ஆங்கு : அசை. இலக்குவனுக்கு மேரு உவமை : பால. 311, யுத்த. 435.

(பி - ம்.) 1. சுற்றார் மணியார் வடிவாள்; சுற்றார் மணியின் வடிவாள்; புடைத் தோன்ற.
2. விற்றாங்கு; புறத்தில் வீக்கி.
3. பற்றார்ந்து; பணிமேரு, படர்மேரு; ஆங்கோர்.
4. ஓங்கின, வீங்கிய, வாங்கிய; புற்றாமெனப் பொங்கிய; மார்பு போர்ப்ப, பொங்க, மார்பு மொப்ப. (116)

412. அடியிற் சுடர்பொற் கழலார்கலி நாண வார்ப்பப்
பிடியிற் றடவுஞ் சிலைநாண்பெரும் பூச லோசை
இடியிற் றொடரக் கடலேழு மடுத்து ஞால
முடிவிற் குமுறும் மழைமும்மையின் மேன்மு ழங்க.

அடியில் சுடர் - கால்களில் பூண்டு ஒளி வீசுகின்ற, பொன் கழல் - பொன்னாலாகிய வீரக் கழல், ஆர்கலி நாண ஆர்ப்ப - கடல் ஒலியும் நாணும்படி ஒலிக்கவும், பிடியில் தடவும் - கைப்பிடியால் தடவி யிழுக்கிற, சிலை நாண் - வில் நாணினது, பெரு பூசல் ஓசை - பேரிரைச்சலான ஓசை, இடியின் தொடர - இடியோசை போலத் தொடர்ந்து ஒலிக்கவும், (இவ்விரண்டு ஒலிகளுங் கூடி) ஞாலம் முடிவில் - உலகம் அழிவுறும் ஊழி இறுதிக் காலத்தில், கடல் ஏழும் மடுத்து - எழு கடல் நீரையும் உண்டு, குமுறும் - முழங்குகிற, மழையின்மேல் - மேகத்தினும் பார்க்க, மும்மை முழங்க - மூன்று மடங்காகப் பேரொலி செய்ய.

போர்க் கோலம் பூண்ட இலக்குவன், காலில் வீரக் கழல் ஒலிக்க, வில்நாணொலி செய்ததை உயர்வு நவிற்சியாகக் கூறுகின்றார். இலக்குவனது சீற்றத்தால் உலகமே அழியுமோ என்று ஐயுறத்தக்க நிலை நேர்ந்தது என்பார், இங்கும் ஊழி இறுதிக்கால நிலையையே குறிக்கின்றார். ஆர்கலி: மிக்க ஓசையுடைமையின் உண்டான காரணப் பெயர். ஊழி இறுதியில் ஏழு மேகங்களும் திரண்டு எழுந்து ஏழு கடல்களையும் குடித்துப் பெருமழை பெய்து உலகை அழிக்கும் என்பர்.

(பி - ம்.) 2. பொடியிற் றடவும், பொடியுற்றிடவும்; சிறுகாண்; பூசலோதை.
3. இடியுற்றடரக், கடிதிற்றடரக், கடிதிற்றொடராக், கடிதிற்றொடரக்; மடுத்திஞ்ஞாலம், மடுத்த ஞாலம், எடுத்து ஞாலம், எடுத்திஞ்ஞாலம், திமிர்ந்து ஞாலம்.
4. முடியிற்; குமிறும். (117)

413. வானுந் நிலனும் முதலீறில் வரம்பில் பூதம்
மேனின்று கீழ்காறும் விரிந்தன வீழ்வ போலத்
தானுந் தனதம் முனுமல்லது மும்மை ஞாலத்
தூனு முயிரு முடையார்க ளுளைந்தொ துங்க.

வானும் நிலனும் முதல் ஈறில் - ஆகாயமும் பூமியும் (முறையே) முதலும் கடைசியும் என்ற முறையில், மேல்நின்று கீழ்காறும் விரிந்தன - மேலிருந்து கீழ்வரை (ஒன்றினொன்று தோன்றிப்) பரவியுள்ளனவான, வரம்பு இல் பூதம் - எல்லையற்ற ஐம்பெரும் பூதங்களும், வீழ்வ போல - (நிலை தடுமாறி) அழிவனபோலக் காணப்பட, (அது கண்டு) மும்மை ஞாலத்து-மூவுலகங்களிலும், தானும் தன தம்முனும் அல்லது - தானும் தன் தமையனான இராமபிரானுந் தவிர, ஊனும் உயிரும் உடையார்கள் - உடம்பும் உயிரும் உடையவர்களெல்லாம், உளைந்து - மனமுளைந்து, ஒதுங்க - புகலிடம் தேட.

இதுவும் முன் பாடலைப் போல உயர்வு நவிற்சியே. ஊழியிறுதிபோன்ற தோற்றத்தால் உயிர்களெல்லாம் அஞ்சி நிலைகுலைந்தன; அத்தோற்றத்திற்குக் காரணமானவன் இலக்குவனாதலின் அவனும், அவனோடு எப்போதும் பழகுதலால் அவனியல்புணர்ந்த இராமபிரானும் அஞ்சவில்லை. வானினின்று வளியும், வளியினின்று தீயும், தீயினின்று நீரும், நீரினின்று மண்ணும் தோன்றுமென்பது பூதங்களின் தோற்ற முறையாகும். முதலிரண்டடிகளில் இது குறிக்கப்பெற்றது; ''வானின் றிழிந்து வரம்பிகந்த மாபூதம்''(அயோத்தி, காப்பு.) சிறப்புப்பற்றி 'உடையார்கள்' என உயர்திணையுயிர்களைக் கூறினும், ஏனையுயிர்களும் கொள்ளத்தகும்.

போல - போல் ஆக. மும்மை: எண் குறித்தது. ஈற்றில் எனற்பாலது ஓசைநோக்கி ஈறில் என நின்றது. தன : அகரச் சாரியை பெற்றது.

(பி - ம்.) 1. வானு நிலனும்; முதலொன்றில், முதலொன்றி; வரம்பிலேழு, வரம்பிலொன்றன்.
2. பிரிந்தன, உலந்தன; மீள்வபோலத்.
3. தன்றமுனும்.
4. உடையாரும், உடையோர்கள்; உடைந்தொதுங்க, உளைத் தொதுங்க. (118)

414. புவிப்பாவை பரங்கெடப் போரில்வந் தோரை யெல்லாம்
அவிப்பானு மவித்தவ ராக்கையை யண்ட முற்றக்
குவிப்பானு மின்றென் குணக்கோவினைக் கொற்றமௌலி
கவிப்பானு நின்றே னிதுகாக்குநர் காமி னென்றான்.

இன்று - இப்போது, போரில் வந்தோரை எல்லாம் - என்னோடு போரேற்று வந்தவர்களையெல்லாம், புவி பாவை பரம் கெட - பூமி தேவியின் பாரம் குறையும்படி, அவிப்பானும் - கொன்றழிக்கவும், அவித்தவர் ஆக்கையை-அவ்வாறு அழிக்கப்பெற்றவர்களின் உடம்பை யெல்லாம், அண்டம் முற்ற குவிப்பானும் - அண்டத்தை முட்டும்படி குவிக்கவும், (அவ்வாறானபின்) என் குணம் கோவினை - குணங்களால் நிறைந்த என் அரசனான இராமனுக்கு, கொற்றம் மௌலி கவிப்பானும் - அரசுரிமைக்குரிய முடியைச் சூட்டவும், நின்றேன் - (உறுதிகொண்டு) நிற்கின்றேன்; இது காக்குநர் - இதைத் தடுக்க வல்லோர், காமின் - (வந்து) தடுமின்; என்றான்—.

வீராவேசங்கொண்ட இலக்குவன், 'இராமபிரான் முடிசூடுதற்குத் தடையாக நிற்பவர் எவராயினும் அவர்களைக் கொன்றொழித்துத் தடையை நீக்கி முடிசூட்ட உறுதிபூண்டு நான் நிற்கின்றேன்; அதனைச் செய்தே தீர்வேன்' என்றான். இவ்வாறு பொதுப்படக் கூறியவன், அடுத்து இதைத் தடுக்கும்பொருட்டுத் தேவரும், மூவரும், மற்றும் எவராயினும் வந்தாலும், அதனையும் ஒரு பொரு ளாகக் கருதேன் என வியந்து கூறுகின்றான்.

(பி - ம்.) 1 பாரங்கெடப்; போருவந்தோரை, போருகந்தோரை, போர்க்கு வந்தோரை, பொருது வந்தாரை.
2. இன்றேயவித்தாக்கையை; அண்டமுட்டக், அண்டமுற்றும்.
3. எனக்கொரு; இன்றேயென, இன்றேயெம், இன்றேயென்; நின்றென் குணக், நின்றேன் குணக், நின்றேனினிக், கோனினைக்; மோலி.
4. கவிப்பானு மின்றே; காண்மினென்றான், காக்கவென்றான். (119)

415. விண்ணாட்டவர் மண்ணவர் விஞ்சையர் நாகர் மற்றும்
எண்ணாட்டவர் யாவரு நிற்கவொர் மூவ ராகி
மண்ணூட்டுநர் காக்குநர் நீக்குநர் வந்த போதும்
பெண்ணூட்ட மொட்டே னினிப்பேருல கத்து ளென்னா,

விண் நாட்டவர் - தேவலோகத்திலுள்ளவர்களும், மண்ணவர் - இப்பூவுலகத்திலுள்ளவர்களும், விஞ்சையர் - வித்தியாதரரும், நாகர் -

பாதலத்திலுள்ளவர்களும், மற்றும் எண் நாட்டவர் யாவரும் - வேறும் எண்ணப்படுகிற எந்த நாட்டிலுமுள்ளார் அனைவரும், நிற்க - ஒரு புறம் இருக்கட்டும்; ஓர் மூவர் ஆகி - ஒப்பற்ற மும்மூர்த்திகளாய், மண் நாட்டுநர் - உலகங்களைப் படைப்பவரும், காக்குநர் - (அவற்றைக்) காப்பவரும், நீக்குநர் - அழிப்பவரும் ஆன பிரம விட்டுணு உருத்திரர்களே, வந்தபோதும் - (என்னை எதிர்த்து) வந்தாலும், இ பேர் உலகத்துள் - இப்பெரிய உலகத்திலே, இனி—, பெண் நாட்டம் ஒட்டேன் - ஒரு பெண்ணின் நோக்கம் நிறைவேறுவதைத் தரியேன்; என்னு - என்று சொல்லிக்கொண்டு.

இஃது அடுத்த பாடலுடன் தொடரும். "இராமனுக்கு அரசில்லை யென்று எவர் வந்து சொல்லித் தடை செய்யினும் பொருட்படுத்த மாட்டேன்; கைகேயியின் நோக்கம் நிறைவேற வொட்டேன்" எனத் தன் உறுதி தோன்றக் கூறுகின்றான் இலக்குவன். உலகத்திலேயே பெண்கள் நோக்கம் முற்ற இடங்கொடேன் என்றானென உரைத்தலும் ஆம். 'எல்லா உலகங்களுக்கும் தலைமையுடைய மூவரையுமே பொருட்படுத்தாத எனக்கு, மற்றவர்கள் ஒரு பொருளோ' என்பான், 'யாவரும் நிற்க' என்றான். பெண் ஆட்டம் ஒட்டேன் எனப் பிரித்துப் பெண்ணின் அசைவையும் நிகழவிட மாட்டேன் என்று பொருள் கொள்ளுதலும் ஆம்.

(பி - ம்.) 1. மண்ணினர்; விஞ்சையர் மண்ணவர்.
2. நிற்கவோர்.
3. மண்ணுட்டினர்; காட்டுநர் வீட்டுநர்; நீக்கினர், நீங்குநர்; ஆயவர்.
4. பெண்ணுட்ட வொட்டேன்; உலகத்து ளென்ருன், உலகத்தினென்ருன், உலகத்து மன்னே, உலகத்திலென்னு. (120)

416. காலைக் கதிரோ னடுவுற்றதோர் வெம்மை காட்டி
ஞாலத் தவர்கோ மகனந்நக ரத்து நாப்பண்
மாலைச் சிகரத் தனிமந்தர மேரு முந்தை
வேலைத் திரிகின் றதுபோற்றிரி கின்ற வேலை.

காலை கதிரோன் - காலையில் உதிக்கும் சூரியன், நடு உற்றது ஓர் வெம்மை காட்டி - வானின் நடுவை அடையும் உச்சிப்போதுபோன்றதொரு கடுமையைத் தன்னிடம் தோற்றுவித்தவனாகி, ஞாலத்தவர் கோமகன் - உலகத்தவருக்கெல்லாம் சக்கரவர்த்தியின் திருமகனான இலக்குவன், அ நகரத்து நாப்பண் - அவ்வயோத்தி நகரத்தின் நடுவிலே, மாலை சிகரம் தனி மந்தரம் மேரு - வரிசையான சிகரங்களையுடைய ஒப்பற்ற மந்தரமாகிய மேருவின் பகுதி, முந்தை - முன்னாளில், வேலை திரிகின்றதுபோல் - பாற்கடலில் (மத்தாகிச்) சுழன்றதுபோல, திரிகின்ற வேலை - சுழன்று திரியும்போது.

(415) என்று, (416) வெம்மை காட்டி, கோமகன் திரிகின்ற வேலே எனக் கூட்டுக. இதுவும் அடுத்த பாடலோடு தொடரும். கைகேயியால் நேர்ந்த செய்தி கேட்டதுமுதல், இலக்குவனுக்குச் சினம் மூண்டு வளர்ந்து உச்சநிலே அடைந்ததென்பார், 'காலேக் கதிரவன் நடுவுற்றதோர் வெம்மை' என்ருர். பாற்கடலில் மத்தாக அமைந்த மந்தரமலே, கடலின் நடுவில் தான் சுழன்று கடலேயும் கலக்கியதுபோல, இலக்குவன் கோபாவேசத்தோடு நகரின் நடுவில் சுற்றித் திரிந்து நகரம் கலங்கும்படி செய்தான் என்க.

மந்தரம் - மேருவின் ஒரு பகுதி. மேரு, மலே என்பது குறித்து நின்றதும் ஆம். திரிகின்றது: கால வழுவமைதி. வேலே - வேளே.

(பி - ம்.) 1. காலக்கதிரோன்; நடுவுற்றதொர், நடுவுற்றன; காட்ட, கூட்டி.
2. கோமக னன்னகரத்து.
3. திணி மந்தரமேரு, தணிமக்தரமேல, தனி மக்தரமேல.
4. போல விளங்கி நின்ருன். (121)

நாணெலியை இராமபிரான் கேட்டல்

417. வேற்றுக் கொடியாள் விளேவித்த விணக்கு விம்மித்
தேற்றத் தெளியா தயர்சிற்றவை பாலி ருந்தான்
ஆற்றற் றுணேத்தம்பி தன்விற்புய லண்ட கோளம்
கீற்றுற் றுடையப் படுநாணுரு மேறு கேளா.

வேறு கொடியாள் - வேறுபட்ட கொடியவளாகிய கைகேயி, விளேவித்த - உண்டாக்கிய, விணக்கு - தீமைக்காக, விம்மி - தேம்பி அழுது, தேற்ற தெளியாது - தான் தேற்றவும் தெளிவடையாமல், அயர் - சோர்கின்ற, சிற்றவைபால் இருந்தான் - சிற்றன்னேயாகிய சுமித்திரையிடம் இருந்த இராமபிரான், ஆற்றல் - பேராற்றலுடைய, துணே தம்பி தன் - (தன்னேப் பிரியாத) துணேயாய் அமைந்த தம்பியான இலக்குவனது, வில் புயல் - வில்லாகிய மேகத்தினின்றும், அண்டகோளம் கீற்று உற்று உடைய படு - அண்ட உருண்டை கீற்றுக் கீற்ருகப் பிளந்துபோகும்படி உண்டாகின்ற, நாண் உரும் ஏறு - நாணெலியாகிய பேரிடியை, கேளா - கேட்டு.

இதுவும் அடுத்த பாடலோடு தொடர்ந்து, அதன் இரண்டாம் அடியில் உள்ள 'வந்தான்' என்பதனேடு முடியும்.

கைகேயி முன்பு அன்பு பூண்டிருந்து இப்போது வேறுபட்டவளாதலின் 'வேற்றுக் கொடியாள்' என்ருர்; பிறர் யாவரினும் வேறுபட்ட கொடுமையுடையவள் என்றுமாம். இராமபிரான் சுமித்திரைபால் சென்றமை முன்னே (324) கூறப்பெற்றது. அங்ஙனம் சென்றவுடன், செய்தியறிந்த சுமித்திரை, கோசலேபோலவே மிக்க துயருற்ருளாதலின், அவளேத் தேற்றிக்கொண்டு அங்கே இருந்தான் இராமபிரான்;

இருந்தான் - இருந்தவன்; வினையாலணையும் பெயர். இலக்குவன், இராமபிரானை நிழல்போலப் பிரியாத துணையாய், ஆற்றல் மிக்கவனு மாதலால், 'ஆற்றற்றுணைத் தம்பி' எனப்பட்டான். அவன் செய்த நாணொலியைப் பேரிடியாக உருவகித்ததற்கேற்ப, வில்லைப் 'புயல்' என்றார். "சிலைநாண் பெரும் பூசலோசை, இடியிற்றெடர" (412) என்றார் முன்னும். நாண் - நாணொலி; ஆகுபெயர்.

(பி - ம்.) 1. வேற்றுக் கொடையான்; முடித்துற்ற, முடிப்பித்த, முடிவித்த; விளைக்கும்.
2. தெளியாதவள், தெளியாதவச், தெளியாதுயர்; சிற்றம்மை.
3. ஆற்றத்தனித்தம்பிதன்; விற்புடை, விற்புடைப்பு, விற்படை, விற்றெழில்.
4. கீற்றெத்துடையப், கீற்றெத்துடைப்பப், கீற்றெத்துடையப் பொரு; கேட்டான். (122)

இராமபிரான் இலக்குவன்பால் வருதல்

418. வீருக் கியபொற் கலன்வில்லிட வார மின்ன
மாருத் தனிச்சொற் றுளிமாரி வழங்கி வந்தான்
காருக்க நிமிர்ந்து புகைந்து கனன்று பொங்கும்
ஆருக் கனலாற் றுமொரஞ்சன மேக மென்ன.

வீறு ஆக்கிய - தனிச் சிறப்புடையனவாகச் செய்யப்பெற்ற, பொன் கலன் - பொன்னுபரணங்கள், வில் இட - வானவில்லைப்போல் ஒளி வீசவும், ஆரம் மின்ன - முத்து மாலைகள் மின்னவும், கால் தாக்க - காற்று மோதுதலால், நிமிர்ந்து புகைந்து கனன்று பொங்கும் - ஓங்கிப் புகைந்து சுடர்விட்டு மேலிடுகின்ற, ஆரு(த) கனல் - அணையாத நெருப்பை, ஆற்றும் - அணைக்கத்தக்க, ஓர் அஞ்சனம் மேகம் என்ன - ஒரு கார்மேகம்போல, மாரு(த) - (கேட்டவர்) மாறவியலாத, தனி சொல் துளி மாரி - ஒப்பற்ற சொற்களாகிய துளியைக்கொண்ட மழையை, வழங்க - பொழிவதற்கு, வந்தான் - (இலக்குவன் உள்ள இடத்துக்கு) வந்தான்.

(417) சிற்றவைபாலிருந்தான், கேளா, (418) வந்தான் எனக் கூட்டி முடிக்க.

நாணொலி கேட்ட இராமபிரான், அஃது இலக்குவனுடையதென் றும், அவன் கடுஞ் சினங்கொண்டுள்ளானென்றும் உணர்ந்து, அவனை ஆற்றுவித்தற்கு விரைந்து வந்தான். இலக்குவனது கடுஞ் சீற்றத்தைத் தணியாத பெருநெருப்பாகவும், இராமபிரானைப் பெருமழை பொழிந்து அந்நெருப்பைத் தணிவிக்கத்தக்க மேகமாகவும் உருவகித்தார். மேகம் என்றதற்கேற்ப வானவில்லும், மின்னலும், மழையும் கூறினர். இந்த மேகம், இடிக்காமலே குளிர்ந்த மழையைப் பொழியவல்லது என்பதும் பெறவைத்தார். மாரு - குளிர்ச்சி மாருத என்றலுமாம்.

சீற்றத் தீயைத் தூண்டும் காற்றாக அமைந்தது கைகேயியின் கொடுமை. இராமபிரானுக்கு மேகம் உவமையாதல் பலவிடத்துங் காணலாம். மழை பொழிதலை 'வழங்குதல்' எனல், ''வானம் வழங்கா தெனின்'' (குறள். 19) என்றவிடத்துக் காண்க.

(பி - ம்.) 1. விருகிய; பொற்கலன் மின்னிட, பொற்கல வில்லிடை, பொற்கலம் வில்விட.
2. மாரி வழங்க, வாரி வழங்க.
3. கனன்று புகைந்து பொங்கி, புகைந்த செந்தீ.
4. கனல் மாற்றும்; மேகமன்னான், மேகமான. (123)

இலக்குவனை வினுதல்

419. மின்னொத்த சீற்றக் கனல்விட்டு விளங்க நின்ற
பொன்னொத்த மேனிப் புயலொத்த தடக்கை யானை
என்னத்த னென்னீ யிறையேனு முனிந்தி லாதாய்
சன்னத்த னாகித் தனுவேந்துதற் கேது வென்றான்.

(இலக்குவன்பால் வந்த இராமபிரான்) மின் ஒத்த சீற்றம் கனல் விட்டு - மின்னலைப் போன்ற கோபக் கனலை வெளிப்படுத்திக்கொண்டு, விளங்க நின்ற - அது யாவர்க்கும் தெரியும்படி நின்ற, பொன் ஒத்த மேனி - பொன் போன்ற மேனியையும், புயல் ஒத்த தட கையானை - மேகம்போல விளங்கும் பெரிய கைகளையுமுடைய இலக்குவனை (நோக்கி), என் அத்தன் - என் ஐயனே, இறையேனும் முனிந்து இலாதாய் நீ - (இதுகாறும்) சிறிதும் சினங்கொண்டிராத நீ, சன்னத்தன் ஆகி - (இப்போது) போருக்கு ஆயத்தனாகி, தனு ஏந்து தற்கு ஏது என் - வில்லையேந்தி நிற்றற்குக் காரணம் யாது? என்றான் - என்று வினவினான்.

இலக்குவன் சினம் தணிதற்பொருட்டு இராமபிரான் முதவிலேயே, 'நீ என்றும் சினங்கொள்ளாதவன் இன்று ஏன் இப்படி ஆனாய்' என்று சாதுரியமாகத் தொடங்குகின்றான். அத்தன் - அப்பன்; அண்மை விளி. அன்பும் அருமையும் தோன்ற, 'என் அத்தன்' என்று விளித்தான். இலக்குவன் மேனி பொன்னிறமுடைய தென்பது. 411, குறிப்புப் பார்க்க.

(பி - ம்.) 1. சிற்றத்தனல்; விளங்கி.
3. என்னத்த வென்னீ, என்னத்தனெண்ணி, என்னத்தவென்னில், என்னத்த வென்ன, என்னத்தனே நீ, என்னத்தையுன்னி, என் னைத்தவென்னீ; இமையோரை, இமையோரின்; முனிவிலாதாய்.
4. மு. சின்னத்தனு வேந்துதற் கேதுவென் செப்பு கென்றான். (124)

இலக்குவன் விடை

420. மெய்யைச் சிதைவித்து நின்மேன்முறை நீத்த நெஞ்சம்
மையிற் கரியா ளெதிர்நின்னையம் மௌலி சூட்டல்
செய்யக் கருதித் தடைசெய்குநர் தேவ ரேனும்
துய்யைச் சுடுவெங் கனலிற்சுடு வான்று ணிந்தேன்.

(இராமபிரான் வினவியதற்கு எதிராக இலக்குவன்) மெய்யை சிதைவித்து - சத்தியத்தைக் கெடச்செய்து, நின்மேல் முறை நீத்த - உனக்குரிய பழைய முறையைக் கெடுத்த, நெஞ்சம் மையின் கரியாள் எதிர் - மனம் மைபோலக் கறுத்த அந்தக் கைகேயியின் கண்ணெதிரிலேயே, நின்னை அ மௌலி சூட்டல் செய்ய கருதி - உனக்கு அந்தக் கிரீடத்தைச் சூடுதலைச் செய்ய எண்ணி, தடை செய்குநர் - (அதற்குத்) தடை செய்பவர், தேவரேனும் - தேவர்களாயினும், (அவர்களை) துய்யை சுடு வெம் கனலின் - பஞ்சை எரிக்கும் கொடிய நெருப்பைப்போல, சுடுவான் துணிந்தேன் - அழிக்கவும் துணிந்துள்ளேன்.

இது, மேலே தொடர்ந்து அடுத்த பாடலோடு முடியும். இதனுல் இலக்குவன் தான் யுத்த சன்னத்தனுனமைக்குக் காரணம் கூறுகின்ருன்.

கைகேயி தீய எண்ணத்தை மனத்துள் மறைத்து வைத்தவளாதலின் 'மையிற் கரியாள்' என்ருர்; "மைபொதி விளக்கே என்ன மனத்தினுட் கறுப்பு வைத்து" (பெரிய. மெய்ப்பொருள்). சக்கரவர்த்தி இராமபிரானுக்கு முடிசூட்டுதல்பற்றிப் பலர் அறிய வாக்களித்ததைக் கெடுத்தமையால், மெய்யைச் சிதைவித்ததாயிற்று; 405-ஆம் பாடல் பார்க்க. 'அவ்வாறு கெடுத்த அவள் எதிரிலேயே, அந்த முடியையே நினக்குச் சூட்டக் கருதித் துணிந்தேன்' என்றதில் இலக்குவனது மன உறுதி புலப்படுகின்றது. "ஓர் மூவ ராகி, மண்ணுாட்டுநர் காக்குநர் நீக்குநர் வந்தபோதும், பெண்ணுாட்டமொட்டேன்" (415) என இவன் முன்னே கூறியிருத்தலால், இங்கே 'தேவர்' என்றது மூவரைக் குறித்த தெனலாம். மேல் முறை - மூத்தவற் குரித்து அரசு என்று தொன்று தொட்டு வந்த முறை. நீத்த: பிறவினைப் பொருளில் வந்தது. தேவரேனும்: உம்மை, உயர்வு சிறப்பு.

(பி - ம்.) 1. மெய்ம்மை சிதைவித்துநம், சினவித்தினி, மெய்ம் முறை நீத்த, மேன்முறை வித்த, முன்முறை நீத்து; நெஞ்சின்.
2. மையிற் கரியான், கரியார், மையற் கொடியாள்; நின்னை நன்மௌலி, நின்னை மவுலி சூட்டச்.
3. கருதிற்றடை; தேவரேயும்.
4. துய்யச், துய்யிற், தொய்யைச். (125)

421. வலக்கார்முக மென்கைய தாகவவ் வானு ளோரும்
விலக்காரவர் வந்து விலக்கினு மென்கை வாளிக்
கிலக்காவெரி வித்துல கேழினெ டேழு மன்னர்
குலக்காவலு மின்றுனக் கியான்றரக் கோடி யென்றான்.

(இலக்குவன் தொடர்ந்து கூறுகின்றவன்) வலம் கார்முகம் என் கையது ஆக - வலிமை மிக்க வில் என் கையில் இருக்கும்போது, அ வான் உளோரும் - அந்த வானுலகத்தில் உள்ளவர்களும், விலக்கார் - (என்னைத்) தடை செய்யார்; அவர் வந்து விலக்கினும் - (ஒரு வேளை) அவர்கள் வந்து தடுத்தாலும், என் கை வாளிக்கு இலக்கு ஆ(க) - என் கையால் விடும் அம்புக்கு (அவர்கள்) இலக்காகும்படி, எரிவித்து - (அவர்களை) அழித்து, உலகு ஏழினெடு ஏழும் - கீழேழும் மேலேழு மாகவுள்ள பதினான்கு உலகங்களையும், மன்னர் குலம் காவலும் - அவற்றிற்கு அரசர்களாகவுள்ள பலருடைய அரசுரிமையையும், இன்று உனக்கு யான் தர —, கோடி - நீ பெற்றுக்கொள்க, என்றான் —.

'எனது வில்லாண்மைக்கு அஞ்சி எவரும் என்னை எதிர்க்கத் துணியார்; ஒருவாறு எவரேனும் துணிந்து வந்தாலும், அவர்களை அழித்து, எல்லா உலகாட்சியையும் என்ன தாக்கிக்கொண்டு, பின்னர் அதனை உனக்குத் தருவேன்; நீ பெற்றுக்கொள்ள வேண்டும்' எனத் தனது ஆற்றல் தோன்றக் கூறுகின்றான். 'தந்தை முன்னே கொடுத்துப் பின்னே மாற்றியது கோசல நாட்டு ஆட்சி ஒன்றேயாக, இப்போது நான் எல்லா உலக ஆட்சியையும் தருகின்றேன்; மாற்றியதும் ஒரு வகையில் நல்லதாயிற்று' என்பது குறிப்பு.

வானுளோரும்: உம்மை, உயர்வுசிறப்பு. இலக்காக என்பதன் ஈறு தொக்கது.

(பி - ம்.) 2. விலக்காதவர்; என்கைவாளி, மேன்மைவாளிக்கு.
3. இலக்காயெரிவித்து, இலக்காக வெரித்து.
4. உனக்காக்குவன். (126)

இராமபிரான் நல்லுரை

422. இளையானிது கூற விராம னியைந்த நீதி
வளையாவரு நன்னெறி நின்னறி வாகு மன்றே
உளையாவறம் வற்றிட வூழ்வழு வுற்ற சீற்றம்
விளையாத நிலத்துனக் கெங்ஙன் விளைந்த தென்றான்.

இளையான் இது கூற - இலக்குவன் இதனைச் சொல்ல, இராமன் - இராமபிரான், இயைந்த நீதி - (யாவர்க்கும்) பொருந்திய நீதி முறை, வளையா(து) வரும் - கோணாது வருகின்ற, நல் நெறி - நல்லவழியிலேயே, நின் அறிவு ஆகும் அன்றே - உனது அறிவு சேருமன்றோ? (அங்ஙன

மிருக்க), உளையா அறம் வற்றிட - கெடாத தருமம் கெடும்படி, ஊழ் வழுவு உற்ற சீற்றம் - முறை தவறிய கோபம், விளையாத நிலம் உனக்கு - உண்டாகாத இடமாகிய உன்னிடத்து, எங்ஙன் விளைந்தது - (இப்போது) எவ்வாறு உண்டாயிற்று? என்றான்—.

இலக்குவன் தான் சன்னத்தனாகி வில்லேந்தியதற்குக் காரணம் கூற, அதுகேட்ட இராமபிரான், 'நீதியே வடிவான நீ இங்ஙனம் தகாத வழியில் சினம் கொள்ளுதல் முறையன்று' என அவனுக்கு எடுத்துரைத்தான். 'உனது அறிவு செல்லும் வழியே நல்வழி; அதாவது நல்ல வழியிலன்றி அறிவைச் செலுத்தாதவன் நீ; ஆனால் இப்போது அது தவறிவிட்டது' என்றான். 'நிலத்துனக்கு' என்றதில் அத்துச் சாரியை வேண்டாத வழி வந்தது. உனக்கு: உருபு மயக்கம். இங்ஙனமன்றி, விளையாத நிலத்து - கோபம் உண்டாகத் தகாத இடத்தில் என்று உரைத்தலும் பொருந்தும். அடுத்த பாடலின் பொருளமைதியைப் பார்க்க.

இளையான் - இளையபெருமாள்; வீரத்தில் இளையாதவன் என்ற பொருளும் பெறப்படும். வளையா : ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். உளையா : ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். அறம் உளையா என்று கூட்டி அறம் வருந்த எனலும் ஆம்.

(பி - ம்.) 1. அதுகூற, அதுசொல்ல, அவைசொல்ல; இசைந்த, இசைத்த, எழுந்த.
2. இளையாவரு; நின்னெறி யாகுமின்றே, என்றே.
3. அறமுற்றிட, அறமற்றிட, அறம்விற்றிட, வற்றிய, வரமற்றிட; ஊழ்வழுவற்ற, ஊழ்வினையுற்ற.
4. விளையா நிலத்தின்றுனக்கு, விளையாத மனத்துளக்கு; எங்கண், எங்கன். (127)

இலக்குவன் கூறுதல்

423. நீண்டா னதுகூறலு நித்திலந் தோன்ற நக்குச்
சேண்டான் றொடர்மாநில நிற்கெனத் தாதை செப்பப்
பூண்டாய் பகையாலிழந் தேவனம் போதி யென்றால்
யாண்டோ வடியேற்கினிச் சீற்ற மடுப்ப தென்னோ.

நீண்டான் - (எவற்றிலும்) மேம்பட்ட இராமபிரான், அது கூறலும் - அதைச் சொன்னவுடன், (இலக்குவன்) நித்திலம் தோன்ற - முத்துப் போன்ற பற்கள் வெளித்தோன்ற, நக்கு - சிரித்து, சேண் தொடர் மா நிலம் - நெடுங்காலமாகத் தொடர்ந்து வரும் இப் பெருநில ஆட்சி, நிற்கு என தாதை செப்ப - உனக்கு உரியது என்று தந்தை சொல்ல, பூண்டாய் - அதனை ஏற்றுக்கொண்ட நீ, பகையால் இழந்து - (இடையே தோன்றியதொரு) பகையினால் அதனை இழந்து, வனம் போதி என்றால் - காட்டுக்குப் போகின்றாய் என்றால், அடியேற்கு

சீற்றம் அடுப்பது - உன்னடியவனுகிய எனக்குக் கோபமுண்டாவது, இனி யாண்டோ - இதனினும் வேறு எவ்விடத்தோ? என்று - என்று சொல்லி.

இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்; அடுத்த பாடலின் இறுதியில் வரும் 'என்ருன்' என்பதனேடு முடியும்.

'தகாதவிடத்துச் சினங்கொண்டாயே' என்று உரைத்த இராம பிரானுக்கு, 'அடியேன் சினம் கொள்ளத்தக்க இடம் இதனினும் வேறில்லை' என்று தன் கருத்தை எடுத்துரைத்தான் இளையவன். நகையும் அதனுலே தோன்றியது.

நீண்டான் - குணம், செயல், அழகு, வீரம் முதலிய எல்லா வற்றிலும் மேம்பட்டவன்; 'நெடுமால்' என்ற குறிப்பும் இதனில் உளது. அது - முன்கவியுட் கூறியது. நித்திலம்: ஆகுபெயர். நிலம் - நில ஆட்சி. 'அவ்வாட்சி, உனக்குப் பரம்பரையாகத் தொடர்ந்து வந்த உரிமையுடையது; தந்தையும் முறைப்படி அதனைக் கொடுக்க நீ பெற்ருய். அதனை விலக்க வந்த பகை முறையற்றது; அப்பகை, அதனேடு நில்லாமல் உன்னை வனம் போகும்படியும் செய்தது பெருங்கேடு. இந்நிலையில் நான் சினங்கொள்ளாதிருத்தல் இயலுமோ?' என்ருன்.

தான், ஏ: அசை.

(பி - ம்.) 1. நீண்டான துரைத்தலும், அஃதுரைத்தலும், அதுணர்த்தலும், நீண்டானுரை செய்தலும்; தோற்க.
2. சேண்டான் சுடர் மானிலம், சேண்டாண்டுரமா னிலம்; மின்னதென் றுந்தை, மின்னதுன் றந்தை, மின்னது தாதை, மின்னதுன்ருதை, மிற்கெனத் தம்தை; சேண்டா னிலமிற்கெனத் தந்தைமுன் செப்ப முன்னம்.
3. இறந்தாய்வனம், நலிந்தேவனம்.
4. ஆண்டோவடியேற்கு, ஆண்டாயடியேற்கு! அடுப்பதென்ருன், அடுப்பதன்ருல். அடுப்பதென்னே. (128)

424. நின்கட்பரி வில்லவர் நீள்வனத் துன்னை நீக்கப்
புன்கட்பொறி யாக்கை பொறுத்துயிர் போற்று கேனே
என்கட்புல முன்னுனக் கீந்துவைத் தில்லை யென்றே
வன்கட்புலந் தாங்கிய மன்னவன் போல வென்ருன்.

என் கண்புலம் முன் - என் கண்ணெதிரே, உனக்கு ஈந்து வைத்து - உனக்கு (நாட்டை முன்னே) கொடுத்துவிட்டு, (பின்பு) இல்லை என்று - உனக்கு நாடில்லை என்று சொல்லி, வன்கண்புலம் தாங்கிய - வன்கண்மை உணர்வைப் பெற்றுள்ள, மன்னவன் போல - அரசனைப்போல (நானும்), நின்கண் பரிவு இல்லவர் - உன்பால் அன்பில்லாத சிலர், உன்னை நீள் வனத்து நீக்க - உன்னை(த் தாம் பெற்ற வரத்தால்) பெருங் காட்டிற்குப் போகச் செய்ய, புன்கண் பொறி

யாக்கை பொறுத்து - துன்பந் தரும் ஐம்பொறிகளை உடைய இவ் வுடம்பைச் சுமந்துகொண்டு, உயிர் போற்றுகேனோ - என் உயிரைக் காத்துக்கொள்ளுவேனோ? என்றான் —.

தசரதன் இராமனை அழைத்து அவனுக்கு அரசு தருவதாக உறுதி கூறியபோது, இலக்குவனும் உடன் இருந்தானாதலின், 'என் கட்புல முன் உனக்கீந்துவைத்து' என்றான். 'பின்பு அது மாறி, உன்னைக் காட்டுக்கு அனுப்பக் காரணமாயிருந்த கைகேயியின் செயல், பிறருடன் சூழ்ந்து செய்ததாயிருத்தல் வேண்டும்' என்ற கருத்துடன், 'நின்கண் பரிவில்லவர் உன்னை நீக்க' எனப் பன்மையாற் கூறினான். அன்றிக் கைகேயியையே இகழ்ச்சிக் குறிப்பாகப் பன்மையாற் கூறினானென்றலுமாம். 'அச் சூழ்ச்சிச் செயலால் நீ நாடு துறந்து காடு செல்லவும் அநுமதி அளித்துவிட்டு, இன்னும் உயிர் வைத்துக் கொண்டுள்ள அரசனைப்போல நான் இரேன்; உனக்கு மீண்டும் அரசு நிலையிடும் முயற்சியில் வெற்றி காணாவிடில் உயிர் துறப்பேன்' என்பதுபட, 'மன்னவன்போல உயிர் போற்றுகேனோ' என்றான்.

ஓகாரம்: எதிர்மறை. இராம கைங்கரிய துரந்தரனான இலக்குவ னுக்குத் தந்தைபாலுள்ள மதிப்பும் இப்போது குறைவதாயிற்று; அதனால், தந்தையென்னாது 'மன்னவன்' என்றான்; 450–பார்க்க. மன்னவன்போல உயிர் போற்றுகேனோ என்றியைக்க. வல் கண் புலம் தாங்கிய - நீ 'காடு செல்வதைக் கண்டிருக்க வலிய கண்களைப் பெற்றுள்ள என்றலும் ஒன்று. என்றே : ஏ, அசை.

இதன்பின் சில பிரதிகளில் பின்வரும் பாடல் ஒன்று காணப்படு கின்றது:

என்றென்று சீற்றத் திளையோனிஃ தியம்பி டாமுன்
கன்றென்று மாவிற் பலயோனியுங் காத்த நேமி
வன்றிண் சிலைக்கை மனுவென்னும் வயங்கு சீர்த்திக்
குன்றென்று தோளான் மருமானிவை கூற லுற்றான்.

(பி - ம்.) 1. பரிவில்லவன், பரிவில்லவள், பரி வில்லனை; உன்னையேவப்.
2. போற்றுகேனு, போற்றுவேனோ, போக்குவேனோ.
3. புலமுன்றனக்கீந்து, புலன் முன்னுனக் கீந்து, புலமுக்துனக் கீந்து, இல்லை யென்ற, இல்லை யென்று, இல்லை யென்ன.
4. புலன் ருங்கிய. (129)

இராமபிரான் அமைதி கூறல்

425. பின்குற்ற மன்னும் பயக்கும்மர சென்றல் பேணேன்
முன்கொற்றமன்னன் முடிகொள்கெனக்கொள்ளமூண்ட
தென்குற்ற மன்றி யிகன்மன்னவன் குற்றம் யாதோ
மின்குற்றளிரும் வெயிறீக்கொ டமைந்த வேலோய்,

மின் குற்று - மின்னலை வென்று தொலைத்து, ஒளிரும் வெயில் தீ கொடு அமைந்த - ஒளி செய்யும் வெயில் தீ ஆகியவற்றின் வெம்மையையும் கொண்டு பொருந்திய, வேலோய் - வேற்படையை உடையவனே, அரசு - அரசாட்சி, பின் மன்னும் குற்றம் பயக்கும் என்பது பேணேன் - பின்னே மிகவும் குற்றங்களைத் தரவல்ல தென்பதனைக் கருதாமல், கொற்றம் மன்னன் - வெற்றியுடைய நம் சக்கரவர்த்தி, முன் - முன்னே, முடி கொள்க என - முடியை ஏற்றுக் கொள் என்று சொல்ல, கொள்ள - நான் ஏற்றுக்கொண்டதனால், மூண்டது - இவ்வாறு விளைந்தது, என் குற்றம் அன்றி - என்னுடைய தவறே யல்லாது, இகல் மன்னவன் குற்றம் யாதோ - வலிமிக்க சக்கரவர்த்தியின் தவறு எதுவோ? (தவறேதும் இல்லை).

"அரசை எனக்குக் கொடுத்த மன்னன்மீது குற்றமேது மில்லை; அதனை ஆராயாது ஏற்றுக்கொண்ட குற்றம் என்னுடையதே; அதனால் விளைந்ததே இது என்று சொல்லி இப்போது நீ தண்டிப்பது என்றால் என்னையே தண்டித்தல் வேண்டும்" என்பதனைக் கூறுது கொள்ள வைத்தான் இராமபிரான். இலக்குவன் கை வேல், ஒளியால் மின்னலைத் தோற்பிக்கவல்லது, வெயில், தீ ஆகியவற்றின் வெம்மையுமுடையது எனச் சிறப்பித்தது, நினைத்தவாறு பிறரைக் கடியும் ஆற்றலுடையான் அவன் என்ற குறிப்புடையது. கொள்ள என்ற செயவெனெச்சம் காரணப் பொருளில் வந்தது. வெயில், தீ: உம்மைத் தொகை அன்மொழியாய் அவற்றின் வெம்மையைக் குறித்தது. 'யாதோ' என்ற வினா எதிர்மறைப்பொருளைத் தந்தது.

அரசு குற்றம் பயப்பது: புறநா. 35: 27-9; சிலப். 25: 100-104.

(பி. ம்.) 1. குற்ற மின்னும்; பயக்கும் மவற்கென்றல், அவற்கென்று, அவர்க் கென்றல், அவர்க்கென்று; பேணுய்.
2. முன் குற்ற மன்னன், முன்சொற்ற மன்னன், கொற்ற மன்னர், கொற்ற மன்ன; முடிகொள்ளெனக்.
3. அன்றே, அன்ருே; இயன்மன்னவன் குற்ற முண்டோ, குற்றமன்றே,
4. வெயிலிற் கொண்டு, வெயினீக் கொண்டு, வெயில்கொண்டு, எழில் மீக் கொண்டு; ஒளிர் மெய்யுடை விற்கொள் வேலாய். (130)

426. நதியின்பிழை யன்று நறும்புன லின்மை யற்றே
பதியின்பிழை யன்று பயந்து நமைப்பு ரந்தாள்
மதியின்பிழை யன்று மகன்பிழை யன்று மைந்த
விதியின் பிழைநீ யிதற்கென்னை வெகுண்ட தென்றான்.

மைந்த - குமாரனே, நறு புனல் இன்மை - நல்ல நீர் இல்லாதிருத்தல் (வற்றிப் போதல்), நதியின் பிழை அன்று - ஆற்றின் தவறன்று; அற்றே - அது போலவே, (நமக்கு நேர்ந்துள்ள இது) பதியின் பிழை அன்று - அரசருடைய குற்றம் அன்று; பயந்து நம்மை

புரந்தாள் - நம்மைப் பெற்றெடுத்து வளர்த்தவளாகிய கைகேயி அன்னையின், மதியின் பிழை அன்று - அறிவின் குற்றமுமன்று; மகன் பிழை அன்று - அவள் மகன் பரதனது குற்றமும் அன்று; (பின்னை யாதெனின்) விதியின் பிழை - நம் ஊழ்வினையினுல் அமைந்த குற்றமே யாகும்: (ஆதலால்) இதற்கு நீ வெகுண்டது என்னை - இதன் பொருட்டு நீ கோபங் கொண்டது ஏன்? (வெகுண்டு பயனில்லை என்றபடி.) என்ருன்—.

'ஆற்றில் நீர் வற்றி வறண்டு போனுல், அதற்கு மழையின்மை காரணமே யன்றி, ஆறு குற்றமுடையதாகுமோ? அதனிடம் சினங் கொண்டு நோதல் கூடுமோ? அதுபோலவே, இப்போது விதியின் செயலால் நேர்ந்துள்ள இதற்கு நீ எவரையும் குற்றங் கூறிக் கடிந்து கொள்வதிற் பயனில்லை. எய்தவனிருக்க அம்பை நோவது போன்ற செயலாகும் இது' என்று இலக்குவனைத் தெருட்டினுன் இராமபிரான். இலக்குவன், தந்தையையும் கைகேயியையும் பகையாகக் கருதியது முன்னமே பெறப்பட்டது. அவன் பரதன்மாட்டும் ஐயுறுதல் கூடு மென்று கருதி, 'மகன் பிழையன்று' எனவும் குறித்தான். பதி - தலைவன்; அரசன். கைகேயி குற்றங் காணத் தகாதவள் என்பதைக் குறிக்க, 'பயந்து நமைப் புரந்தாள்' என்ருன். இவற்ருல் விதியை வெல்வது எத்தகைய ஆற்றலுடையார்க்கும் ஆகாது; அதனை நினைந்து அமைதி யுறுக என்பது கூறியவாருயிற்று. மைந்த என்றது, அன்பு காரணமாக.

(பி - ம்.) 1. நறும் பெயல்; அற்ருல், இற்றே, அன்றே, மற்றுப், மற்றப், நந்தம்.
2. பயந்து நம்மைப்; புரந்தார், புரந்தான், புரந்தோள், புரிந்தாள்.
3. மைந்தா.
4. நீ யிதற்கென்கொல், இதற்கெங்ஙன் வெகுண்டது. (131)

427. உதிக்கும் முலையுள் ளுறுதீயென வூதை பொங்கக்
கொதிக்கும் மனமெங் ஙனமாறுமிக் கோளி ழைத்தாள்
மதிக்கும் மதியாய் முதல்வானவர்க் கும்வ லீஇதாம்
விதிக்கும் விதியாகு மென்விற்ெறுழில் காண்டி யென்ருன்.

ஊதை பொங்க - (துருத்தியின்) காற்று மிகுதலால், உலை உள் உதிக்கும் உறு தீ என - கொல்லன் உலையில் தோன்றும் மிக்க தீப் போல், கொதிக்கும் மனம் - கொதிக்கின்ற என் மனம், எங்ஙனம் ஆறும் - எவ்வாறு ஆறுதல் பெறும்? இ கோள் இழைத்தாள் - இந்தத் தீங்கு செய்த கைகேயியின், மதிக்கும் மதி ஆய் - அறிவுக்கும் அறிவு மூட்டுவதாய், முதல் வானவர்க்கும் வலிது ஆம் - முதன்மையுடைய திரிமூர்த்திகளுக்கும் மேம்பட்டதான (வெல்ல முடியாததான), விதிக் கும் விதி ஆகும் - விதிக்கும் ஒரு விதிபோல் அமையத்தக்க, என் வில் தொழில் - என் வில்லின் செயலை, காண்டி - காண்பாயாக, என்ருன்—.

'விதியின் பிழை; இதற்கு நீ வெகுண்டது என்னை?' என்ற இராம பிரானுக்கு விடையாக இலக்குவன், 'விதி எவ்வளவு வலியதாயினும் அதனையும் தோற்பித்து, நீ காடு செல்வதை மாற்றி, உனக்கு முடி சூட்டினாலன்றி என் மனக் கொதிப்பு அடங்காது' என்பான், 'என் விற்றொழில் விதிக்கும் விதியாகும்' என்றும், 'அந்தக் கைகேயிக்கும் என் செயலால் புத்தி கற்பிப்பேன்' என்றும் கூறினான். விதியை வெல்லல் எவர்க்கும் ஆகாது என்ற இராமபிரான் கருத்துக்கு எதிராக முயற்சியால் ஊழையும் வெல்லலாகும் என்ற எண்ணத்தைக் கொண்டவன் இலக்குவன். 'என் விற்றொழில் காண்டி' என்றதற் கேற்ப, முன்னே அவன் கூறியதையும் (421) நோக்குக.

ஊதை - காற்று; இங்கே துருத்தியால் வெளிப்படுவது.

ஒரு சுவடியில் இப்பாடல் இல்லை.

(பி - ம்.) 1. உலையுள்ளெழ.
2. ஆற்றுமிக், ஆற்றுவென், ஆற்றுவன், ஆறுவன்.
3. மதியா, மதியால், வலிதாமுதல், மதியாலுயர்; வானவரும், வந்த வானவற்கும், வலிதாம்; மற்றும், மற்றை.
4. விதியாமென், விதியாமென; காண்டிவிர, விரா, காண்டி ரென்றான். (132)

இராமன் இலக்குவனிடம் தாய்தந்தையரைச் சபித்தலாகாதெனல்

428. ஆய்தந்தவ னவ்வுரை கூறலு மைய நின்றன்
வாய்தந்தன கூறுதி யோமறை தந்த நாவால்
நீதந்ததன் றேநெறி யோர்க ணிலாத தீன்ற
தாய்தந்தையென் றாலவர் மேற்சலிக் கின்ற தென்னே.

ஆய் தந்தவன் - நூல்களை ஆராய்ந்தவனான இலக்குவன், அ உரை கூறலும் - அந்த வார்த்தையைச் சொன்னவுடன், ஐயன் - இராமபிரான், (அவனை நோக்கி), மறை தந்த நாவால் - வேதம் பயின்ற நாவினால், நின்றன் வாய் தந்தன கூறுதியோ - உன் வாயில் வந்தவற்றைச் சொல்லுவாயோ? நீ தந்தது - நீ இப்போது கூறிய செயல், நெறியோர் கண் நிலாதது அன்றே - நன்னெறி யொழுகு வோரிடத்து இருக்கத் தகாதது அல்லவா? ஈன்ற தாய் தந்தை என்றால்- (நின் கருத்துக்கு ஒவ்வாதவர்கள்) பெற்ற தாயும் தந்தையுமாயிருக்கும் போது, அவர்மேல் சலிக்கின்றது என்னே - அவர்கள்மேல் நீ கோபம் கொள்வது என்ன முறையோ? (முறையன்று என்றபடி)

இலக்குவன் நீதி நூல்களை ஆராய்ந்து பயின்றவன் என்பார், 'ஆய்தந்தவன்' என்றார். அவன் வேதத்தையும் கலைகளையும் வசிட்டர் பால் பயின்றமை, பால. 304-இல் பார்க்க. அவன் செயல் தகுதியற்ற தென்பதனை இராமபிரான் அறிவுறுத்தினான். தாய் தந்தையர் தவறு

செய்யினும் அவர்களைக் கடிதல் மகனுக்கு முறையன்று என்றான். கைகேயிபாலுள்ள அன்பினால் அவளை ஈன்ற தாய் என்று குறிப்பிட்டு, 'நீ கூறியவை, உன் வாயால் வரத்தக்கவையல்ல' என்பான், 'மறை தந்த நின்றன் நாவால் வாய் தந்தன கூறுதியோ' என்றான். ஆய்தருதல் - ஆய்தல்; தா; துணைவினைப் பகுதி. 'நெறியோர் கண் இலாதது' என்று பிரித்துரைப்பினும் ஆம். தாய் தந்தை ! உம்மைத் தொகை.

(பி - ம்.) 1. ஆய் தந்தனன்; ஐயனின்றான், ஐய நின்றன், ஐயன் ஓதும்.
2. வாய்தந்ததத; சொல்லுதியோ; மறை தந்த நாவ, நாவன், நாவாய், மறைதந்த நீதி, மறை வந்த நாவால்.
3. நீதந்த; அன்றே, நன்றே; நெறியின்கண்ணே இலத்துளின்ற, இனக்கு நின்ற, இனத்தின் மிக்க, இனத்தினின்ற, இனிது நின்ற, அளித்து நின்ற, அனைத்து மீன்ற.
4. தாய் தந்தையர் என்றிவர் மேல், என்றுமிவர் மேல். (133)

இலக்குவன் கூறுதல்

429. நற்றா தையுநீ தனிநாயக னீவ யிற்றிற்
பெற்றா யுநீயே பிறரில்லை பிறர்க்கு நல்கக்
கற்றா யிதுகா ணுதிநீயெனக் கைம்ம றித்தான்
முற்றா மதியம் மிலைந்தான்முனிந் தானை யன்னான்.

முனிந்தான் - கோபங்கொண்டவனான, முற்றா மதியம் மிலைந்தானை அன்னான் - இளம் பிறை சூடிய உருத்திரனைப் போன்ற இலக்குவன், (தமையனை நோக்கி) பிறர்க்கு நல்க கற்றாய் - மற்றவர்களுக்கு (எதையும்) கொடுக்கக் கற்ற அண்ணலே, நல் தாதையும் நீ -(எனக்கு) நல்ல தந்தையும் நீயே; தனி நாயகன் நீ - ஒப்பற்ற கடவுளும் நீ; வயிற்றில் பெற்ற ஆயும் நீயே - (என்னை) வயிற்றில் (சுமந்து) பெற்ற தாயும் நீயே; பிறர் இல்லை - வேறெவரும் இல்லை; இது நீ காணுதி - இதனை நீ (மனத்தால்) நோக்குக, என - என்று சொல்லி, கை மறித்தான் - கையசைத்தான்.

பெற்றோரைக் கடிதல் பிள்ளைக்கு முறையன்று என்றறிவுறுத்திய அண்ணலுக்கெதிராக இலக்குவன், 'எனக்கு உண்மையான தந்தையும், தாயும், அவர்க்கும் மேலாகக் கடவுளும் நீயேயாதலால், நீ கூறும் அவர்களைப் பெற்றோராக நான் கருதவில்லை; எனவே, என் செயல் பிழையாகாது' என்று சமாதானம் கூறுகின்றான். 'நல் தாதை நீ' என்றதனால், முறை தவறிய தந்தை நல் தந்தையல்லன் என்பதாயிற்று. நாயகன் - தலைவன்; அரசன் என்றலும் ஆம். 'உனக்கு வழி வழி உரிமையாகி, மன்னனாலும் கொடுக்கப் பெற்ற அரசை நீ பரதனுக்குக் கொடுத்துவிட்டாயே' என்பான், 'பிறர்க்கு நல்கக் கற்றாய்' என்றான். காணுதல் - கருதுதல். கை மறித்தல், பிறர் கருத்தை மறுத்தலில் இயல்பாக நிகழ்வது. ஊழியிறுதிக் காலத்தில் எல்லாவற்றையும் அழிக்கப் பொங்கி யெழும் உருத்திரமூர்த்தியைக் காலருத்திரன்,

காலாக்கினிருத்திரன், காலக்கடவுள் என்பர். கடுஞ்சினங் கொள்வோருக்கு அவ்வுருத்திர மூர்த்தியை ஒப்புக் கூறுதல் மரபா கலின், இங்கே இலக்குவனை அவ்வாறு குறித்தார். அவன் சீற்றநிலைக்கு 413-பார்க்க. 'முனிந்தானை' என்றதிலுள்ள இரண்டனுருபு பிரித்து முன்னே கூட்டப் பெற்றது. ''கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்'' (புறநா. 56) என்பதால், சீற்றத்திற்கு உருத்திரனை உவமை கூறுதல் அறியலாம்.

(பி - ம்.) 1. நாயகனீ வயிற்றுப், நாயக நீ வயிற்றில், நின்வயிற்றில்.
2. பெற்றேயும், பெற்றாளும்; நீயேல், நீ பிறரில்லைப்; பிறிதில்லை.
3. கற்றாயிவை காணுதி, கற்றாயது காணுதி, கற்றாயிது நீயில்வ, கற்றாயு நீயிது காணெனக், கற்றாயிது காணுதியின்றெனக்; கையமைத்தான், கட்டுரைத்தான்.
4. மதிய மிலைக்தான், மதிய மிலைத்தான், மதியம் மிலைத்தான், மதியம் மிலையா; முனியேயும், முனிவேயும்; ஓத்தான். (134)

இராமபிரான் மீண்டும் கூறுதல்

430. வரதன் பகர்வான் வரம்பெற்றவ டானிவ் வையம்
சரதம் முடையா ளவளென்றனித் தாதை செப்பப்
பரதன் பெறுவா னினியான்படைக் கின்ற செல்வம்
விரதம் மிதினல் லதுவேறினி யாவ தென்றான்.

வரதன் - இராமபிரான், பகர்வான் - மீண்டும் சொல்வானாகி, இ வையம் - இந்த நாட்டை, வரம் பெற்றவள் தான் - வரமாக வேண்டிப் பெற்ற கைகேயியே, சரதம் உடையாள் - உண்மையாக உரிமையுடையவள்; அவள் - அவளும், என் தனி தாதை - ஒப்பற்ற என் தந்தையும், செப்ப - சொல்லுதலால், பரதன் பெறுவான் – பரதன் நாட்டைப் பெறுகின்றான்; இனி - இனிமேலே, யான் படைக்கின்ற செல்வம் -நான் பெறவிருக்கும் செல்வம், விரதம் - தவம்; இதின் நல்லது - இதனினும் சிறந்தது, இனி வேறு யாவது - இனி வேறு யாதுளது? என்றான் —.

'நாடு எனக்கு என்று தந்தை சொன்னது வாய்ச்சொல்; கைகேயியோ, முன்னமே எதனையும் தந்தைபால் வரமாகப் பெறுதற்கு உரிமை பூண்டவள்; அதன்படி அவள் நாட்டை வரமாக வேண்டிப் பெற்றதனால், நாடு அவளுக்கே தனி உரிமையுடையதாகிறது; அதனை அவள், தந்தையின் அநுமதியோடு பரதனுக்கு அளிக்க, அவன் பெறு கின்றான்; ஆதலால், இதில் எவர்மீதும் குற்றஞ் சொல்ல இடமில்லை. இனி நான் பெற இருக்கும் தவச் செல்வமோ நிலையற்ற அரசச் செல்வத்தினும் மிகச் சிறந்ததென்பது தெளிவு; அதனை நான் விரும்பி ஏற்கின்றேன்; எனவே, நீ உன் முறையற்ற சீற்றத்தை மாற்றிக் கொள்' என்றான் இராமபிரான். கைகேயியின் சிறப்புரிமைபற்றி,

'வரம் பெற்றவள்தான் சரதம் உடையாள்' எனத் தேற்றப் பொருளிற் கூறினான். வரங்கொடுத்த தந்தையும் எதனையும் ஆராயாது செய்யா னென்பது படத் 'தனித் தாதை' என்றான். படைத்தல் - உரியதாகப் பெறுதல்.

(பி - ம்.) 1. பெற்றவடன்னின் வையம்.
2. என்றனித் தாயரன்றே, என்றனித் தாயவள் சொல், தாயவன் சொல், என்றனித் தாதையன்றே, என்றலைத் தாதையன்றே.
3. அளியான்.
4. விரதம்மிதின் வல்லது, இதனல்லது, அதினல்லது, மு. விரதம் மிதன் மேலெனக் கென்கொல் விளைந்த தென்றான், இதன் மேலெனக் கொள்வது யாவதென்றான். (135)

431. ஆன்றான் பகர்வான் பினுமையவிவ் வைய மையல்
தோன்றா நெறிவாழ் துணைத்தம்பியைப் போர்தொ லைத்தோ
சான்றோர் புகழுந் தனித்தாதையை வாகை கொண்டோ
ஈன்றாளை வென்றோ வினியிக்கதந் தீர்வ தென்றான்.

ஆன்றான் - அறிவாலும் பண்பாலும் நிறைந்த இராமபிரான், பின்னும் பகர்வான் - மேலுஞ் சொல்வானாகி, ஐய - என் ஐயனே, இனி - இப்போது, இ வையம் மையல் தோன்றா(த) நெறி வாழ் - இவ்வுலக மயக்கம் தலை காட்டாத நல்ல நெறியில் வாழ்கின்ற, துணை தம்பியை - தனக்குத் தானே ஒப்பாகிய தம்பி பரதனை, போர் தொலைத்தோ - போரில் தொலைத்த பின்னரோ, சான்றோர் புகழும் - உயர்ந்தோர் எல்லாம் புகழ்கின்ற, தனி தாதையை - ஒப்பற்ற தந்தையை, வாகை கொண்டோ - வெற்றி கொண்ட பின்னரோ, ஈன்றாளை வென்றோ - பெற்ற தாயாகிய கைகேயியையும் வென்ற பின்னரோ, இ கதம் தீர்வது - இந்தக் கோபம் நீங்குவது, என்றான்—.

இலக்குவன் பரதன்பாலும் ஐயத்தோடு சீற்றங் கொண்டிருத்தல் கூடுமாகலின், பரதனது சிறப்பியல்பு தோன்ற, அவன் அரசை விரும்பி யேற்பானல்லன், உயர்ந்த நெறியுடையவன் என்பதுபட, வைய மையல் தோன்றா நெறி வாழ் தம்பி என்று அவனைச் சிறப்பித்தும், தந்தையின் பெருமையை மீண்டும் எடுத்துச் சொல்லியும், இத்தகைய வரையும் தாயையும் கொன்ற பின்புதான் உன் கோபம் தணியுமோ என்றான் இராமபிரான். 'உடன் பிறந்தவனையும், தந்தையையும், தாயையும் தொலைக்க நினைத்தல் எவ்வகையிலும் தகாது; நீ நினைப்பது போல அவர்கள் குற்றமுடையவரும் அல்லர்' என்றபடி.

(பி - ம்.) 1. புகல்வான்; வையமெங்கும், பினுமையவோரைய மெய்யில், பகரையவிவ் வையமெங்கும், வையமெய்யில், பகரையவோரைய மையல், ஐயவோரைய மெங்கும்.
2. தோன்றான்; நெறிவாழ் துணைத் தம்முனைப், நெறியாவது நம்பியைப், நெறியாள் துணைத் தம்பியைப்.

3. சான்ருர்; புகழுந்தவத், புகழ்கின்றநற், புகழத்தன, புகழத்தனித், புகழ்நற்றனித், புகழ் கற்றுணைத், புணரத்தவற், புணரத்தனித்; வாதை கொண்டே.
4. ஈன்ருனே, ஈன்ருளை, தீர்வனென்ருள், தீர்ப்பதென்ருன், தீர்க் வென்ருன். (136)

இலக்குவன் கூற்று

432. செல்லுஞ்சொல் வல்லா னெதிர்தம்பியுந் தெவ்வர் சொல்லும்
சொல்லுஞ் சுமந்தே னிருதோளெனச் சோம்பி யோங்கும்
கல்லுஞ் சுமந்தேன் கணைப்புட்டிலுங் கட்ட மைந்த
வில்லுஞ் சுமக்கப் பிறந்தேன்வெகுண் டென்னை யென்ருன்.

செல்லும் சொல் வல்லான் எதிர் - (எவர் மாட்டும்) செல்லத்தக்க சொற்களைப் பேசவல்ல இராமபிரானெதிரே, தம்பியும் - இலக்குவனும், தெவ்வர் சொல்லும் சொல்லும் சுமந்தேன் - பகைவர் சொல்லத்தக்க பழிச் சொற்களையும் சுமப்பவனுனேன்; இரு தோள் என - இரண்டு புயங்கள் என்று பெயர் கொண்டு, சோம்பி ஓங்கும் - வறிதே உயர்ந் துள்ள, கல்லும் சுமந்தேன் - மலைகளையும் சுமக்கின்றேன்; கணை புட்டிலும் - அம்பருத் தூணியையும், கட்டு அமைந்த வில்லும் - வரிந்து கட்டப்பெற்ற வில்லையும், சுமக்க பிறந்தேன் - (பயனில்லாது) சுமந்து கொண்டிருக்கப் பிறந்த நான், வெகுண்டு என்னை - கோபங்கொண்டு பயனென்ன? என்ருன்—.

'நான் வீரனுயிருந்தும் வீரத்தைச் செயலிற் காட்ட வழியில்லாதவ னுனேன்: என் சினம் பயனற்றதாயிற்று' என்று இலக்குவன் தாழ்ந்து கூறினுன். செல்லும் சொல் - கேட்போர் மறுது ஏற்கத்தக்க சொல்; இராமபிரானது சொல்லாற்றலைக் குறித்தது. "செலச் சொல்லல்" (குறள், 424). தெவ்வர் சொல்லும் சொல் - பெருவீரனுன இலக்குவன் இருந்தும் இராமனைக் காடு புகாதவாறு தடுத்து அரசாளச் செய்யவில்லையே என்பது. அவ்வாறு பிறர் கூறுவரென்று தானே யேறிட்டுக் கொள்கின்ருன். சுமத்தல், பயனின்மை குறித்தது.

(பா - ம்.) 1. சொல்லுஞ் சொல்; தேவர் சொல்லும், தேவர் தேவ.
2. சோம்பி னேங்கும். சோம்பி யேங்கும்.
3. சுமந்தொண்; கட்டமைத்த, கட்டிமைந்த.
4. பிறந்தான்; என்னை யென்னே. (137)

இராமன் கூறுதல்

433. நன்சொற் கடந்தாண் டெனை நாளும் வளர்த்த தாதை
தன்சொற் கடந்தெற் கரசாள்வது தக்க தன்ருல்
என்சொற் கடந்தா லுனக்கியாதுள தூற்ற'மென்ருன்
தென்சொற் கடந்தான் வடசொற்கலைக் கெல்லை தேர்ந்தான்.

தென்சொல் கடந்தான் - தமிழ் மொழியில் உள்ள நூல்களைக் கற்றுத் துறை போனவனும், வடசொல் கலைக்கு எல்லை தேர்ந்தான் - வடமொழியிலுள்ள வேதம் முதலான எல்லாக் கலைகளுக்கும் எல்லை கண்டவனுமாகிய இராமபிரான், நன் சொற்கள் தந்து எனை ஆண்டு - நல்ல பயனுள்ள சொற்களைக் கற்பித்து என்னைப் பாதுகாத்து, நாளும் வளர்த்த - இவ்வளவு காலமும் வளர்த்த, தாதை தன் சொல் கடந்து - தந்தையின் சொல்லை மீறி, அரசு ஆள்வது தக்கது அன்று - (யான்) அரசாள்வது தக்க செயலன்று; என் சொல் கடந்தால் - என் வார்த்தையை மீறினால், உனக்கு யாது உளது ஊற்றம் - உனக்கு என்ன வலிமை இருக்கின்றது? என்றான் - என்று முடித்தான். ஆல்: அசை.

தந்தை, தாய் எல்லாமும் நீயே என்று இலக்குவன் கூறியதை மனத்துட் கொண்டு இராமபிரான், 'தந்தை சொல்லை நான் தட்டி நடவேன்' என்று தன் உறுதியைப் புலப்படுத்தி, 'என்னைத் தந்தையாகக் கருதும் நீ என் சொல்லைத் தட்டுவதும் தகாது' என்றான். 'யாதுள தீனம்' என்ற பாடத்திற்கு, 'நன்மை யாதுளது; உளது ஈனமே' என உளதென்பதனை நடுநிலை விளக்காக்கிப் பொருள் கொள்க.

(பி - ம்.) 1. நஞ்சொற்கள், வன்சொற்கள்; தந்தாண்டெனை நாளும், தந்தானெனை நாளும், தந்தென்னை நாளும்; வளர்த்த மேலோன்.
2. தஞ்சொல்; கடந்தேறரசாள்வது, கடக்தெற் கரசானது; தக்கதன்றேல், தக்க தென்றால், தக்க தன்றே.
3. யாதுள தீனமதாகும், யாது கொலூற்றம், யாது சொல்லூனம், ஈனமதாகு மென்றான்.
4. வன்; வடசொற்கடற் கெல்லை கண்டான். (128)

இலக்குவன் சினம் முழுதும் அடங்கி நின்றமை

434. சீற்றந் துறந்தா னெதிர்நின்று தெரிந்து செப்பும்
மாற்றந் துறந்தான் மறைநான்கென வாங்கல் செல்லா
நாற்றெண் டிரைவே லையினம்பித ஞணை யாலே
ஏற்றந் தொடங்காக் கடலிற்றணி வெய்தி நின்றான்.

நம்பிதன் - இராமபிரானுடைய, மறை நான்கு என - நான்கு வேதங்களைப் போல, வாங்கல் செல்லா - மறுக்க மாட்டாத, ஆணையால் - வாய்ச் சொல்லாகிய கட்டளையினாலே, சீற்றம் துறந்தான் - (இலக்குவன்) தன் சினத்தை நீத்து, எதிர்நின்று - அவன் முன் துணிவாக நின்று, தெரிந்து செப்பும் - ஆராய்ந்து சொல்லும், மாற்றம் துறந்தான் - சொற்களைக் கைவிட்டான்; நால் தெண்டிரை - நாலாகிய தெள்ளிய அலைகளையுடைய, வேலையின் - கரையினின்றும், ஏற்றம் தொடங்கா - மீதூர்ந்து செல்வதைச் செய்யாத, கடலின் - கடலைப் போல, தணிவு எய்தி - தணிதலைப் பெற்று (அடங்கி), நின்றான்—.

மறை நான்கென வாங்கல் செல்லா ஆணையாலே, துறந்தான் வேலையின் ஏற்றம் தொடங்காக் கடலின் தணிவெய்தி நின்றான் என்று கொண்டு கூட்டுக.

வேதம் விதித்தபடியே செய்தல் அறமாதலின் அதனைப் பிரபு ஸம்மிதை என்பது மரபு. அதனை மறுக்க வொண்ணாது. இராமனுடைய ஆணையும் அத்தகையது. கரையை உடைத்தெறியும்படி அலைகள் குமுறிய கடல் அவ்வாறு செய்யாது அடங்கியது போலச் சீற்றம் மிக்கிருந்த இலக்குவன் அடங்கினான். வேலை - கரை.

கோபம் தணிதலுக்கு அலை எறியாத கடல்: பால - 243; சுந்தர. 2. 222.

(பி - ம்.) 1. திறத்து, துறந்து.
2. வாங்கல் செல்லும், சொல்லா.
3. வேலை யின்னம்பிதன். (139)

இலக்குவனுடன் இராமன் சுமித்திரையிடம் போதல்

435. அன்னான்றனை யையனு மாதியோ டந்த மென்றும்
தன்னாலு மளப்பருந் தானுந்தன் பாக நின்ற
பொன்மானுரி யானுந் தழீஇயெனப் புல்லிப் பின்னைச்
சொன்மாண்புடை யன்னை சுமித்திரை கோயில் புக்கான்.

ஐயனும் - இராமபிரானும், ஆதியொடு அந்தம் - (தன்) முதலையும் முடிவையும், என்றும் - எக்காலத்தும், தன்னாலும் அளப்பு அரும் தன்னாலேயே அளந்தறிய முடியாத, தானும் - (திருமாலாகிய) தானும், தன் பாகம் நின்ற - தன் திருமேனியின் ஒரு பாதியாக நின்ற, பொன்மான் உரியானும் - பொன்னிற மான்தோல் போர்த்த சிவனும், தழீஇயது என - (ஒருவரையொருவர்) தழுவிக்கொண்டாற்போல், அன்னான்தனை புல்லி - (சினம் அடங்கி நின்ற) அவ்விலக்குவனை இறுகத் தழுவிக்கொண்டு, பின்னை - பின்பு, (அவனுடன்) சொல் மாண்பு உடைய - சொல்லின் மாட்சிமையுடைய, அன்னை - தாயாகிய, சுமித்திரை கோயில் புக்கான் - சுமித்திரையின் மாளிகையை அடைந்தான்.

சினம் அடங்கி நின்ற இலக்குவனை இராமபிரான் இறுகத் தழுவி, அவனையும் உடன் கொண்டு சுமித்திரையிடம் சென்றான் என்பது இதிற் கூறப்பட்டது இலக்குவனுக்குச் சினத்தால் உவமை கூறப் பெற்ற உருத்திரமூர்த்தியை, இங்கே நிறத்தால் உவமையாக்கினார். நாராயணனும் சங்கரனும் பாதி பாதியாக இணைந்துள்ள மூர்த்தியை, 'சங்கரநாராயணன்' என்பர். இம்மூர்த்தியின் வருணனையை ஆழ்வார்கள் பாசுரங்களிற் காணலாம். இராமபிரான் இலக்குவனைத் தழுவினமைக்குக் கூறப்பெற்ற இவ்வுவமையால், ஈருடலும் ஓருடலாகுமாறு இறுகத் தழுவினான் என்பது பெறப்படும். பரம்பொருளே

இராமன் என்பதனை, ஆதியந்தம் தன்னாலேயே அறிய முடியாதவன் என்றார்.

இராமபிரான், கோசலையிடமிருந்து சுமித்திரைபால் சென்றான் என்பது முன்னமே (324) கூறப்பட்டது. அவன் சுமித்திரையைத் தேற்றிக்கொண்டு அங்கிருக்கும்போது இலக்குவனது வில் நாணொலி கேட்டு விரைந்து வந்தான் என்பதும் 417, 418-ஆம் பாடல்களால் அறியலாம். இப்போது இராமபிரான் இலக்குவனுடன் மீண்டும் சுமித்திரைபால் சென்றான். முதலில் இராமபிரான் சுமித்திரைபால் செல்லும்போதே இலக்குவனும் உடன் இருந்ததாக வான்மீகம் கூறுகின்றது. சுமித்திரையின் சொன் மாண்புடைமை, 324, 443-4 - ஆம் கவிகளிற் காண்க.

ஐயனும், தழீஇயெனப் புல்லி, கோயில் புக்கான் எனக் கூட்டி முடிக்க. தழீஇயென : இன்னிசை நிறைக்க வந்த அளபெடை. தழீஇயென, உடையனை : தொகுத்தல் விகாரம் பெற்றன.

(பி - ம்.) 1. அந்தமென்று, அந்தமென்னும், அந்தமொன்றும், அந்தமொன்றும், அந்தமொன்றத், அந்தமாகத்.
2. பாங்கர் நின்ற, பாகமொன்றும், பாகனென்னும், பாகனென்ற.
3. பொன்மானுரியானைத், பொன்மானு முவந்து; பின்னர்ச்.
4. புக்கார். (140)

மக்களைக் கண்ட சுமித்திரையின் துயரம்

436 கண்டாண் மகனும் மகனுந்தன கண்கள் போல்வார்
தண்டா வனஞ்செல் வதற்கேசமைந் தார்க டம்மைப்
புண்டாங்கு நெஞ்சத் தினளாய்ப் புரண்டாள் படிமேல்
உண்டாய துன்பக் கடற்கெல்லை யுணர்ந்தி லாதாள்.

தன் கண்கள் போல்வார் - தன் இரு கண்களையும் போன்றவர்களான, மகனும் மகனும் - தான் பெற்ற மகனும் மற்றொரு மகனும், தண்டா வனம் செல்வதற்கு - தண்டகாரணியம் போவதற்கு, சமைந்தார்கள் தம்மை - ஆயத்தமாகி வந்தவர்களை, கண்டாள் - கண்ட சுமித்திரை, உண்டாய துன்பம் கடற்கு - அப்போது உண்டான கடல் போன்ற பெருந்துன்பத்திற்கு, எல்லை உணர்ந்திலாதாள் - எல்லை காண முடியாதவளாகியும், புண் தாங்கும் நெஞ்சத்தினள் ஆய் - (அத்துன்பத்தால்) பெரிதும் புண்பட்ட மனமுடையவளாகியும், படி மேல் புரண்டாள் - தரையில் (விழுந்து) புரளலானாள்.

முன்னமே, இராமன் வனஞ் செல்லுதல் குறித்து வருந்தி மனம் தேறியிருந்த சுமித்திரை, இப்போது அவன் இலக்குவனோடு வந்தது கண்டு, இனி இவ்விருவருமாக வனஞ் செல்லுதலை எவரும் தடுத்தல் இயலாது என்றுட் கொண்டு, மீளாத் துயரெய்தித் தரையில் விழுந்து

புரளலானுள் என்க. அவளுக்கு இராமன்பால் இருந்த மறுவற்ற அன்பைப் புலப்படுத்த, 'தன கண்கள் போல்வார் மகனும் மகனும்' என்றுர். துன்ப மிகுதியைக் கடலாக உருவகித்தார். செல்வதற்கே : ஏகாரம், தேற்றம். படி - பூமி; தரை.

(பி - ம்.) 1. மகனுந்தன், மகனுமிரு.
2. தண்டார் வனம்; சார்வதற்கே, சேர்வதற்கே.
3. நெஞ்சத்தனளாய்ப், நெஞ்சத்தளாய்ப்; புரண்டாள் பொடிமேல், பொடிம்மேல், பொடியில், பொடியின், பொடித்தாள்; விழுந்து, விழுந்தாள்; படிமேற் புரண்டாள், பொடிமேற் புரண்டாள். (141)

இராமன் சுமித்திரையைத் தேற்றல்

437. சோர்வாளை யோடித் தொழுதேந்தினன் றுன்ப மென்னும்
ஈர்வாளை வாங்கி மனந்தேற்றுதற் கேற்ற செய்வான்
போர்வா ளரசர்க் கிறைபொய்த்தன ளுக்க கில்லேன்
கார்வா னெடுங்கா னிறைகண் டிவண் மீள்வெ னென்றுன்.

சோர்வாளை - மனம் சோர்ந்து புரண்டு அழும் சுமித்திரையை, (இராமன்) ஓடி தொழுது - ஓடிப்போய் வணங்கி, ஏந்தினன் - (தன் கைகளில் எடுத்துத்) தாங்கி, துன்பம் என்னும் - (அவள் மனத்தி லுள்ள) துன்பமாகிற, ஈர்வாளை - அறுக்கும் வாளை, வாங்கி - அங்கு நின்று அகற்றி, மனம் தேற்றுதற்கு ஏற்ற செய்வான் - அவள் மனத்தைத் தேற்றுதற்கு ஏற்றவற்றைச் செய்பவனுகி, (தாயே) போர்வாள் அரசர்க்கு இறை - போருக்குரிய வாளை ஏந்தும் அரசர்க்கு அரசனுன தந்தையை, பொய்த்தனன் ஆக்ககில்லேன் - (சொல்) பொய்பட்ட வனுகச் செய்ய இயலாதவனுய் இருக்கின்றேன்; (ஆதலால்), கார்வான் நெடு கான் - கருமேகங்கள் தவழும் பெரிய காட்டை, இறை கண்டு - சிறிது பார்த்துவிட்டு, இவண் மீள்வென் - இங்கே திரும்பி வந்துவிடுவேன், என்றுன்—.

சுமித்திரையைத் தேற்ற முயன்ற இராமபிரான், தான் வனம் போவது நியாயமானது, தவிர்க்க முடியாதது என்பதனைக் காரணத் துடன் அவள் மனங்கொளக் கூறி, அப்படியே போனுலும் விரைவில் மீண்டும் இங்கே வந்துவிடுவேன், நீ வருந்தாதே என்றுன். காட்டிற்குச் சொன்ன அடைமொழி, காடு துன்பத்திற்கிடமானதன்று என்பதைக் குறிக்கும். மனத்தை அறுக்கும் துன்பத்தை, 'ஈர்வாள்' என்றுர். ஏந்தினன் : முற்றெச்சம். 'கில்' என்னும் ஆற்றலுணர்த்தும் இடைச் சொல், இயலாமை குறித்தது.

(பி - ம்.) 1. ஓடித்தொழு தேத்தினன், சூடித் தொழுதேத்தினன், ஏந்தினன், அடிதொழு தேந்தினன், ஏந்தித் தொழுதேத்தினன்.
2. வாங்கா; தேறுதற்கெற்ற செய்தான்.
3. அரசன்றனைப்; ஆக்கிலேன்யா

4. கார்வா னெடுங்கானது, கார் வாழ் நெடுங் கானிறை; கண்டிங்ஙன், கண்டுடன், கண்டு யான், கண்டு பின், கண்டனன்; மீள்வ தென்றுன், மீள்வனென்றன். (142)

438. கான்புக் கிடினுங் கடல்புக்கிடி னுங்க லிப்பேர்
வான்புக் கிடி னு மெனக்கன்னவை மாண யோத்தி
யான்புக்க தொக்கு மெனையார் நலி கிற்கு மீட்டார்
ஊன்புக் குயிர்புக் குணர்புக்குலை யற்க வென்றான்.

(பின்னும் கூறும் இராமபிரான்) கான் புக்கிடினும் - (நான்) காட்டிலே சென்றாலும், கடல் புக்கிடினும் - கடலுக்குட் புகுந்தாலும், கலி பேர் வான் புக்கிடினும் - ஒலிக்கிடமான பெரிய வானிலே சென்றாலும், எனக்கு—, அன்னவை - அவைகளெல்லாம், மாண் அயோத்தி - பெருமை மிக்க அயோத்தியிலே, யான் புக்கது ஒக்கும் - நான் புகுந்திருத்தலைப் போலவே ஆகும்; (எங்கே சென்றாலும்) எனை நலிகிற்கும் ஈட்டார் யார் - என்னைத் துன்புறுத்துமளவு வலிமை உடையார் யாவருளார்? (எவருமில்லை; ஆதலால்) ஊன் புக்கு-(துயரம்) உடம்பினுள்ளே புக, உயிர்புக்கு - உயிரினுள்ளே புக, உணர் புக்கு - உணர்வினுள்ளே புகும்படி, உலையற்க - வருந்தாதே. என்றான்—.

'நான் எங்கே சென்றாலும் என்னைத் துன்புறுத்தும் வலிமை உடையார் எவரும் இலராதலால், அங்கங்கே நான் இவ்வயோத்தியில் இருப்பதுபோலவே மகிழ்வுடன் இருப்பேன்; நீ கவலைப்படாதே' என்றான். அயோத்தி - பகைவரால் வெல்ல முடியாதது என்ற காரணப் பொருள் உடையதாதலால், 'நான் செல்லும் இடமெல்லாம் அயோத்தியாகும்' என்றான். 'இராமன் இருக்குமிடம் அயோத்தி' என்ற பழமொழியும், "ஆகாத தன்று லவ்வனம் இவ்வயோத்தி" (438) என்ற சுமித்திரை கூற்றும் இங்கே நோக்கத் தகும்.

'புக்கு' என்பது சொற்பொருட்பின்வரு நிலையாக மீண்டும் மீண்டும் வந்துளது. செய்தென் வாய்பாட்டெச்சம் செய வென்னும் பொருளில் வந்தது. உணர் : முதல்நிலைத் தொழிற்பெயர்.

(பி - ம்.) 1. கலிப்போர்.
2. அன்னவாம்; மாண்பயோத்தி.
3. நான்புக்கது
4. உணர்விற்கு, உணர்வுக்கு; உலைவாக. (143)

ஏவல் மகளிர் மரவுரி கொணர்தல்

439. தாயாற் றுகிலா டனையாற்று கின் றார்க டம்பால்
தீயாற்று கின்று ரெனச்சிந்தையி னின்று தேற்ற
நோயாற்ற கில்லா வுயிர்போல நுடங்கி டையார்
மாயாப் பழியா டரவற்கலை யேந்தி வந்தார்.

ஆற்றுகிலாள் தாய் தன்னை - துயரம் தாங்க இயலாத தாயாகிய சுமித்திரையை, ஆற்றுகின்றார்கள் நம்பால் - (துயரத்தைத்) தணிவித்துக்கொண்டிருந்த இராமன் இலக்குவரிடத்தில், தீ ஆற்றுகின்றார் என - தீயை அவிப்பாரைப் போல, சிந்தையின் நின்று தேற்ற - கவலையினின்றும் தெளிவிக்கவும், நோய் - மன நோயாகிய வருத்தத்தினின்றும், ஆற்றகில்லா - ஆறுதல் பெறும் வன்மை இல்லாத, உயிர் போல - அந்தச் சுமித்திரையின் உயிரைப்போல, நுடங்கு - துவண்டு மெலிகின்ற, இடையார் - (நுண்ணிய) இடையையுடைய பணிப் பெண்கள், மாயா(த) பழியாள் - (என்றும்) அழியாத பழியை ஏற்ற கைகேயி, தர - (இராமனுக்குக் கொடுக்கும்படி) தம்மிடம் கொடுக்க, வற்கலை - (அவ்வாறு கொடுத்த) மரவுரியை, ஏந்தி - எடுத்துக் கொண்டு, வந்தார் - வந்தார்கள்.

இராமனைத் தவக்கோலத்தோடு விரைந்து வனத்திற் போகக் கருதிய கைகேயி, மரவுரியைப் பணிப்பெண்கள் வாயிலாக அனுப்பி வைக்க, அவர்கள் அதனைக் கொணர்ந்தனர். அவர்கள் கைகேயியின் சீற்றத்திற்கு அஞ்சி அதனைச் செய்தனரேயன்றி, மனத்தோடு பொருந்திச் செய்தாரல்லர்; மிக்க வருத்தத்துடன் உயிர் பதைக்க வந்தனர் என்பதைக் குறிக்க, 'நோயாற்றுகில்லா உயிர் போல நுடங்கிடையார் வந்தார்' என்றார். சிந்தை - சிந்தாகுலம்; கவலை. மாயாப் பழி - என்றும் அழியாத பழி; அதனை ஏற்றவளைப் 'பழியாள்' என்றார். சதி செய்து தீங்கு விளைத்தோரைப் பழிகாரன், பழிகாரி என்னும் உலக வழக்கு ஈண்டு நோக்கத்தக்கது.

(பி - ம்.) 1. தாயாற்ற இல்லாடனை, ஆற்றகிலாடனை, ஆற்ற இல்லானை, ஆற்றுகின்றான்றனக்குத்.
2. தியாற்றுகிலார்தனிச்; தியாற்றுகின்றேரெனச், தியாற்று சிலாடனைச், ஆற்ற இலாடனைச், சிந்தையினின்று செற்ற, சிந்தையிற்றேங்கி யோங்கும்
3. நோயாற்று இல்லார், நோயாற்று இல்லா, ஆற்றகிலா; உளம்போல்; நுடங்கு மீட்டார், நுடங்கும் மிடையார்.
4. பழி தீர்ந்தற, கொண்டு வந்தார். (144)

மரவுரி வந்தமையை ஏவல் மகளிர் அறிவித்தல்

440. கார்வான மொப்பான் றனைக்காண்டோறுங் காண்டோறும்போய்
நீரா யுகக்கண் ணினுநெஞ்சழி கின்ற நீரார்
பேரா விடர்ப்பட் டயலாருறு பீழை கண்டும்
தீரா மனத்தா டரவந்தன சீர மென்றார்.

(பணிப்பெண்கள்) கார்வானம் ஒப்பான் தன்னை - காளமேகம் போன்ற இராமபிரானை, காண்தொறும் காண்தொறும் - பார்க்கப் பார்க்க, கண்ணினும் நீர் ஆய் உக - கண்களினின்றும் அழுகை

நீர் மிகச் சொரிய, நெஞ்சு போய் அழிகின்ற நீரார் - மனம் மிகவும் உலைகின்றவர்களாய் (அருகில் வந்து), பேரா(த) இடர்பட்டு - மீளாத் துயருக்குள்ளாகி, அயலார் உறு பீழை கண்டும் - அயலார் எல்லாம் படும் துன்பங்கண்டும், தீரா(த) மனத்தாள் தர - (தன் கொள்கையினின்றும்) விலகாத மனமுடைய கைகேயி அனுப்ப, வந்தன சீரம் - வந்துள்ளன இம்மரவுரிகள், என்றார் —.

முன்னமே துயருற்றிருந்த பணிப்பெண்கள், இராமபிரானை எதிரே கண்டவுடன், 'இவ்வழகனை மீண்டும் நாம் என்று காண் போமோ' என்ற ஏக்கம் மேலிட, அழுத கண்ணீரோடு அருகில் வந்து, கைகேயி அனுப்பிய மரவுரிகள் வந்துள்ளன என்றனர். அவள் தர நாங்கள் கொணர்ந்தோம் என்று கூற மனமின்றி 'வந்தன' என்றனர்; உறவுமுறைத் தொடர்பற்ற அயலாரும் வருந்துகையில், "தாய்கையில் வளர்ந்திலன் வளர்த்தது தவத்தால், கேகயன் மடந்தை" (282) என்னும்படி வளர்த்தவள் சிறிதும் வருத்தமின்றித் தன் மனம் மாறாதிருக்கின்றனளே என்பது அவர்கள் உட்கோள். கார்வரனம்: உருவாலும் பயனாலும் வந்த உவமை. இராமபிரானை நெருங்கிக் காணக் காண அவர்கள் துயரம் மேலிடுகின்றதென்பார், காண்டொறும் என்பதனை அடுக்கிக் கூறினர். 'நெஞ்சு போய் அழிகின்ற' எனக் கூட்டுக. போதல் - மிகுதல். அயலாரும் எனற்பால உம்மை தொக்கது. சீரம்: வடசொல். கண்டும்: உம்மை, இழிவு சிறப்பு.

(பி - ம்.) 1. காண்டலுங் காண்டலும்.
2. நீராயுகு; கண்ணினும்; அழுகின்ற.
3. பேரா விடர்பட்டு, பேராவிடப்பட்டு; உறும்பீழை, உயர்பீழை, உறுமேதம்; கண்டு.
4. வந்தது கொணர்ந்தனம்; வந்ததும்; சீரமென்றாள். (145)

இலக்குவன் கூறுதல்

441. வாணித் திலநன் னகையார்களை வள்ள றம்பி
யாணர்த் திருநா டிழப்பித்தவ ரீந்த வெல்லாம்
பூணப் பிறந்தானு நின்றானது போர்வி லோடும்
காணப் பிறந்தேனு நின்றேனவை காட்டு மென்றான்.

வள்ளல் தம்பி - இலக்குவன், வாள் நித்திலம் நல் நகை யார்களை - ஒளி பொருந்திய முத்துப் போன்ற அழகிய பல் வரிசை யுடைய அப்பணிப் பெண்களை (நோக்கி), யாணர் திருநாடு - புது வருவாயையுடைய செல்வமிக்க நாடாட்சியை, இழப்பித்தவர் - இழக் கும்படி செய்தவர், ஈந்த எல்லாம் - கொடுத்த எல்லாவற்றையும், பூண பிறந்தானும் - (தடையின்றிப்) புனைந்துகொள்ளப் பிறந்த தமையனும், நின்றான் - இதோ நிற்கின்றான்; போர் வில்லோடும் - கையிலேந்திய போருக்குரிய வில்லுடன், அது காண பிறந்தேனும் -

அந்நிலையை வறிதே கண்டு நிற்கப் பிறந்த நானும், நின்றேன் - இங்கிருக்கின்றேன்; அவை காட்டும் - அம்மரவுரிகளைக் காட்டுங்கள், என்றான் —.

'கைகேயி சொல்வது எதுவாயினும் அதனைத் தட்டாது கேட்டு நடக்கக் காத்திருக்கின்றான் தமையன்; நான் எதுவுஞ் செய்ய இயலாது வறிதே நிற்கின்றேன்' என்று குறைப்படுகின்றான் இளையவன். 'இழப்பித்தவர்' என்ற பன்மை இகழ்ச்சியால் வந்தது. பூண - மேற்கொள்ள, அணிய என்ற இரு பொருளில் வந்தது. முதலில் 'நாட்டை விடு; காட்டுக்குப் போ' என்ற கட்டளையைக் கொடுத்தாள்; பின்பு மரவுரியைக் கொடுத்தாள்; இன்னும் என்ன என்ன கொடுக்க இருக்கின்றாளோ என்ற கருத்துடன் 'ஈந்தவெல்லாம்' என்றான். "வலக்கார் முகம் என்கையதாகஅவ் வானுளோரும் விலக்கார்" எனவும், "விதிக்கும் விதியாகும் என விற்றொழில் காண்டி" எனவும் கூறியவன், அவ்வில்லால் தானெண்ணிய எதனையும் செய்ய வகை இன்றி நிற்றலின், 'போர் வில்லுடன் அது காணப் பிறந்தேனும் நின்றேன்' என்றான்.

(பி - ம்.) 1. மித்தில வெண்ணகையார்தர, ஒண்ணகையார்தர, வெண்ணகை யார்களை, ஒண்ணகையார்களை, கன்னகையார்தமை.
2. திருநாடிழந் திந்தவர், இழந்திந்தவன், திருநாட திகழ்ந்தவர், நாடி திகழ்ந்தவர், நாடி கந்தேயவை; ஈந்ததெல்லாம்.
3. பிறந்தோனும்; அவைபோர்விலோடும், அது போர்விலேந்தி.
4. நின்றேனது; காட்டுகென்றான். (146)

இலக்குவன் அன்னைபால் தமையனுடன் செல்ல விடைகேட்டல்

442. அன்னா னவர்தந் தனவாதரத் தோடு மேந்தி
இன்னா விடர்தீர்ந் துடனேகென வெம்பி ராட்டி
சொன்னா லதுவே துணையாமெனாத் தூய நங்கை
பொன்னா ரடிமேற் பணிந்தானவ ளும்பு கல்வாள்.

அன்னான் - அவ்விலக்குவன், அவர் தந்தன - அப்பெண்கள் தந்த மரவுரிகளை, ஆதரத்தோடும் ஏந்தி - விருப்போடு பெற்றுக் கொண்டு, (தாயை நோக்கி) எம்பிராட்டி - எம் தாயே, இன்னா இடர் தீர்ந்து - நீ இக் கொடுந் துயரினின்றும் நீங்கி (மனம் தேறி), உடன் ஏகு என சொன்னால் - நீயும் இராமனுடன் செல் என்று எனக்குச் சொல்வாயாயின், அதுவே துணை ஆம் - அதுவே (எனக்கு வலிமை தரும்) துணையாகும், என - என்று சொல்லி, தூய நங்கை - மனந் தூயளாகிய அச்சுமித்திரையின், பொன் ஆர் அடிமேல் - பொன் போன்ற திருவடிகளில், பணிந்தான் —; அவளும் புகல்வாள் - அவளும் சொல்வாளானாள்.

தமையனுடன் கான் செல்லக் கருதிய தம்பி, அதற்குத் தாயின் உடன்பாட்டை வேண்டுகின்றான்; "தாயே! நீ வருந்துதலொழிந்து, 'நீயும் அண்ணனுடன் செல்' என்று உன் வாயால் எனக்கு அநுமதி தரவேண்டும். அதுதான் எனக்குப் பெருவலிமை தரவல்லது" என்றான். இனித் தமையன் கருத்துக்கு இயையவே தான் நடக்க வேண்டியவனாதலின், மரவுரிகளை விருப்பத்தோடு பெற்றுக் கொண்டான்.

அன்னான் : சுட்டு இலக்குவனைக் குறித்தது. சுமித்திரையின் மனத் தூய்மை, மேலே அவள் சொல்லால் விளங்கும். அத்தன்மை கருதியே அவளைத் தூய நங்கை என்றும், அவளடிகளைப் பொன்னா ரடி என்றும் சிறப்பித்தார்.

ஒரு பிரதியில் இக்கவியின் முதல் மூன்றடிகள்

"அன்னார் தருவற் கலையையனு மங்கை வாங்கி
இன்னா விளவற் கிசைத்தா னிவையெம் பிராட்டி
சொன்னா ளவைசு மத்தல் கடனெ னச்சிற் றவ்வை"

என்று காணப்படுகின்றன.

(பி - ம்.) 1. அண்ணாரவர் தந்தன, அன்னான் வயினம், அன்னானவையம்; ஆதரத்தோடுமேந்த, வந்தவனத்தொடேகி, மடவார் கையினங்கை நல்கி, மடவார் வயினங்கையேந்தி, மடவார் வயினங்கை நல்கி, மடவாரவை யங்கை நல்க.
2. இந்நாளவையிந்து, எண்யேகென, இன்னா விடர்தீர்த்தனையேகென.
3. சொன்னாள்; தூய்நகையாள்.
4. அவனும் புகன்றாள். (147)

சுமித்திரை கூறுதல்

443. ஆகாத தன்றா லுனக்கவ்வன மிவ்வ யோத்தி
மாகாத லிராம னம்மன்னவன் வைய மீந்தும்
போகாவுயிர்த் தாயர்நம் பூங்குழற் சீதை யென்றே
ஏகாயினி யிவ்வயி னிற்றலு மேத மென்றாள்.

(இலக்குவனுக்குச் சொல்லலுற்ற சுமித்திரை) உனக்கு—, அ வனம் - (இராமன் செல்லும்) அந்தக் காடு, இ அயோத்தி - இந்த அயோத்தியேயாகும்; ஆகாதது அன்று - தங்குவதற்கு ஆகாத இடம் அன்று; மா காதல் இராமன் - (உன்பால்) பேரன்பு உடைய இராமன், நம் மன்னவன் - நம் அரசனாகிய தந்தை; வையம் ஈந்தும் - நாட்டை(ப் பிறருக்குக்) கொடுத்தபின்பும், போகா(த) உயிர் - போகாத உயிரைத் தாங்கியுள்ள, தாயர் - தாய்மாராகிய கோசலையும் நானும், நம் பூ குழல் சீதை - பூச்சூடிய கூந்தலையுடைய நம் சீதை;

என்று - என்று இவ்வாறு மனத்துட்கொண்டு, ஏகாய் - (இராமனோடு) செல்வாயாக; இனி—, இ வயின் நிற்றலும் ஏதம் - நீ இங்கே (சிறிது தாழ்த்து) நிற்பதும் குற்றமாகும்; என்றாள்—.

சுமித்திரை இலக்குவனை, 'நீ இப்போதே புறப்படு' என்கின்றாள். இராமபிரான், 'நான் செல்லுமிடமெல்லாம் எனக்கு அயோத்தி ஆகும்' என்றான்; அதுவே இவள் கருத்துமாயிற்று. இலக்குவன் இராமபிரானை, 'எனக்குத் தந்தை, தாய் எல்லாம் நீயே' என்றான்; இவளும், 'இராமன் தந்தை சீதை, தாய்' என்றாள். சீதையும் உடன் செல்லாது நில்லாள் என்பது முடிந்த கருத்து 'இனி இவ்வயின் நிற்றலும் ஏதம்' என்றதனால் இராமனுக்கு முன்னே நீ விரைந்து புறப்படு என்பதாயிற்று. தாயர் எனப் பன்மையாற் கூறியது கோசலை யையும் உளப்படுத்தியவாறு.

(பி - ம்.) 1. அவ்வனமைய செய்ய.
2. இராமனிம் மன்னவன்; வையமீந்து, வையமீது; காதல் மன்னனிவன் வையக மீந்து வானம், மன்னனிவன் வையக மீதும் வானிற், மன்னனிவன் வையக மீக்து மெய்யிற், வையக மீது வானிற்.
3. போகாவுயிர்த் தாயரும், போகா விருதாயரும், போகா திருத் தாயரும்; யாமெனில், யாமினிப்; சீதையன்றே, போக நன்றே, போகை நன்றே,போகை நன்றல். (148)

444. பின்னும் பகர்வாண் மகனேயிவன் பின்செ றம்பி
என்னும் படியன் றடியாரினு மேவல் செய்தி
மன்னுந் நகர்க்கே யிவன்வந்திடின் வாவ தன்றேல்
முன்னம் முடியென் றனள்பான்முலை சோர நின்றாள்.

முலை பால் சோர நின்றாள் - (மகன்பாலுள்ள அன்பால்) தனங்களி னின்று பால் வடிய நின்ற சுமித்திரை, பின்னும் பகர்வாள் - மேலும் சொல்வாளாய், மகனே - குழந்தாய், இவன்பின் செல் - இவ்விராமன் பின்னே போ; தம்பி என்னும்படி அன்று -(போவது) அவன் தம்பி என்ற முறையில் அன்று; அடியாரினும் ஏவல் செய்தி - ஏவலடியார்களினும் பார்க்க அவன் ஏவல்களைச் செய்; மன்னும் நகர்க்கு - நிலைபெற்ற இந் நகருக்கு, இவன் வந்திடின் - இவ்விராமன் மீண்டும் வந்தால், வா - நீயும் உடன் வா; அது அன்றேல் - அவ்வாறு அவன் வராவிடில், முன்னம் முடி - அவனுக்கு முன்னே நீ முடிந்துவிடு; என்றனள் - என்று சொன்னாள்.

சுமித்திரை இலக்குவனுக்குக் கட்டளையாக, 'நீ இராமனுடன் சென்று, தம்பியும் உடன் வந்தான் என்ற பெயரளவிலன்றி, மனங் கோணாது அவனுக்கும் சீதைக்குமுரிய பணிவிடைகளையெல்லாம் செய்தல் வேண்டும்; நகருக்கு அவனின்றி நீ தனியே வருதல் கூடாது' என்றாள். இராமனுக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்து அவன்

திரும்பிவர இயலாவிடின் என்பதனைக் குறிப்பாக 'அதன்றேல்' என்று கூறி, 'அவன் இறந்துபட நேர்ந்தால், அவனுக்குமுன் நீ இறந்துவிடு' என்றாள். ஏகாரம்: அசை. சுமித்திரையின் கட்டளையைப் பின்னே இலக்குவன் நினைவிற்கொண்டு கூறுதல் ஆரணிய. 1160-இல் காண்க.

இதன்பின் ஒரு பிரதியில்,

ஆய்தந்த மென்சீரை யணிந்தடி தாழ்ந்து நின்ற
சேயுந்து நிலைநோக் கினள்சேயரிக் கண்க டேம்ப
வேய்தந்த மென்றோளி தன்மென் முலைபா லுகுப்ப
தாய்நிந்தை யின்றிப் பலவூழி தழைத்தி யென்றாள்.

என்ற செய்யுளும், அதனடியில், 'சூழ்வினை கேள்விப் படலம் முற்றும்' என்பதும் காணப்படுகின்றன. இச்சுவடியில் இதன்மேல் வருவன நகர்நீங்கு படலத்தைச் சேர்ந்தவை.

(பி - ம்.) 1. பகர்வாடன் மகற்இவன்; பின் செல்வகம்பி, பின் சொல்தம்பி.
2. என்னும்படியன்றி, என்னும்படியான்; அடியாரினிலேவல், அடியாரினினேவல், அடியார்களினேவல்.
3. மன்னுங்நகர்க்கு, மன்னன் னகர்க்கு, மன்னிக் நகர்க்க, நகர்க்கிண்டிவன், நகர்க்கிண்டிவண்; வந்திட, வந்திடில், அவன் வந்திடில்.
4. வார்விழி சோர. (149)

இராம இலக்குவர் புறப்படுதல்
(கலிவிருத்தம்)

445. இருவருந் தொழுதன ரிரண்டு கன்றொரீஇ
வெருவரு மாவெனத் தாயும் விம்மினாள்
பொருவருங் குமரரும் போயி னார்புறம்
திருவரைத் துகிலொரீஇச் சீரை சாத்தியே.

இருவரும் - இராமன் இலக்குவன் ஆகிய இருவரும், தொழுதனர் - (புறப்பட ஆயத்தமாகிச்) சுமித்திரையை வணங்கினர்; தாயும் - தாயாகிய அவளும், இரண்டு கன்று ஒரீஇ - தன் இரு கன்றுகளை ஒருங்கே பிரிந்து, வெருவரும் ஆ என - கலங்கும் பசுவைப் போல, விம்மினாள் - மனங்கலங்கிப் புலம்பினாள்; பொரு அரு குமரரும் - ஒப்பற்ற அக்குமரர் இருவரும், திரு அரை துகில் ஒரீஇ - தம் அழகிய அரையில் உடுத்தியிருந்த உயர்ந்த ஆடையைக் களைந்து, சீரை சாத்தி - மரவுரிகளை உடுத்துக்கொண்டு, புறம் போயினர் - வெளியே போனார்கள். ஏ: ஈற்றசை.

தாயன்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது பசுவாகலின், அதனை இங்கே உவமை கூறினர். அவ்வன்பு வாத்ஸல்யம் எனப்படும்.

(பி-ம்.) 1. கண்ணேரீஇ.
2. வெருவருமாவினில், வெருவருந்தாயெனத், வெருவருதாயெனத்; தானும், விம்மினள்.
3. குமரனும்; போயினர் புனே, போயினர் பொனின், போயினன் பொனின்; புறத்துப் போயினர்.
4. திருவரைதனிஞெரு, திருவருந்துகிலொரீஇச், தருவரைத் துகிலொரீஇச்; சேரஞ்சாத்தியே, சாத்தவே. (150)

இராமபிரான் இலக்குவனுக்குக் கூறல்

446. தான்புனை சீரையைத் தம்பி சாத்திடத்
தேன்புனை தெரியலான் செய்கை நோக்கினன்
வான்புனை யிசையினாய் மறுக்கி லாதுநீ
யான்புக றகையதோ ருறுதி கேளெனா.

தான் புனை சீரையை - தான் தரித்ததுபோன்ற மரவுரியை, தம்பி சாத்திட - தம்பியும் தரிக்க, தேன் புனை தெரியலான் - தேன் பொருந்திய மாலையை அணிந்த இராமபிரான், செய்கை நோக்கினன் - (தம்பியின்) அச் செய்கையை நோக்கி, வான் புனை இசையினாய் - வானளாவிய புகழையுடையவனே, யான் புகல் - நான் இப்போது சொல்லுகின்ற, தகையது ஓர் உறுதி-தகுதியுடையதொரு நல்லுரையை, நீ மறுக்கிலாது கேள் - நீ மறுக்காது கேட்டு நடப்பாயாக, எனா - என்று.

இப்பாட்டுக் குளகம்; அடுத்ததனோடு தொடர்ந்து முடியும். இலக்குவனும் தன்னைப் போலவே மரவுரி தரித்ததைக் கண்ட இராமபிரான், அவன் தன்னுடன் கான் வர ஆயத்தமானான் என்பதுணர்ந்து அவனுக்குக் கூறலானான். கூறுவது அடுத்த பாடலில் வரும். அவனை 'வான்புனை இசையினாய்' என்று புகழ்ந்தது தன்னுரையை ஏற்றற் பொருட்டு. அவன் மறுப்பானென்பது கருதியே 'மறுக்கிலாது கேள்' என்றான்; நோக்கினன் : முற்றெச்சம்.

(பி-ம்.) 1. சிரையத், சிரமத்; தானும் சாத்துமத், தானும் சுற்றும், சுற்றுமத்.
2. தேன்புரை, தேன்பொதி; செவ்வி நோக்கினன், தெரிய நோக்கினன்.
3. வான்புகழ், வான்புரை; மறுக்கலாது.
4. எனையதோருறுதி, தக்கதோருறுதி, யான்புகலுறுதியைக் கேளென் றோதுவான். (151)

447. அன்னைய ரனைவரு மாழி வேந்தனும்
முன்னைய ரல்லர்வெந் துயரின் மூழ்கினர்
என்னையும் பிரிந்தன ரிடரு ருவகை
உன்னைநீ யென்பொருட் டுதவு வாயென்றான்.

அன்னையர் அனைவரும் - தாய்மாரெல்லாரும், ஆழி வேந்தனும் - ஆஞ்ஞா சக்கரத்தையுடைய அரசனும், முன்னையர் அல்லர் - முன்

நிலையில் உள்ளாரல்லர்; வெம் துயரில் மூழ்கினர் - கொடுந் துயரத்தில் மூழ்கியுள்ளனர்; என்னையும் பிரிந்தனர்—; (ஆதலால்), இடர் உறு வகை - அவர்கள் துன்புறாதபடி, என் பொருட்டு - எனக்காக, உன்னை நீ உதவுவாய் - உன்னை நீ அவர்களுக்கு உதவியாக்குக; என்றான்—.

'கைகேயி யொழிந்த ஏனைய தாய்மாரும், தந்தையும் நான் அரசு இழந்ததோடு அவர்களைப் பிரியவும் இருத்தலால், ஆறாத் துயருள் அழுந்தியுள்ளனர்; நீ இங்கிருந்தால் அவர்களுக்குச் சிறிது ஆறுதலாக இருக்கும்; என்பொருட்டு இந்த உதவியை நீ மறுக்காது செய்க' என்று இராமபிரான் இலக்குவனை வேண்டினான். அன்னையர் அனைவரும் என்றது, கோசலை சுமித்திரையோடு, தசரதனுக்குரிமை பூண்ட ஏனையோரையும் குறித்தது. நீ தந்தையாகக் கருதும் என் சொல்லைத் தட்டுதல் கூடாதென முன்னமே இராமபிரான் கூறியிருத்தலின், இப்போதும், 'என்பொருட்டு உதவுவாய்' என்றான். இங்ஙனமே தசரதன் இராமனை முடிபுனையப் பணிந்தபொழுது, ''உய்ய லாவதோர் நெறிபுக உதவிடவேண்டும்'' என்றது ஒப்புநோக்கற்குரியது. முந்திய பாடலின் தொடர்பு, இதில் 'என்றான்' என்பதனோடு முடிந்தது.

(பி - ம்.) 2. முன்னையரல்லர் மூழ்கினர்.
4. உன்னி மீ. (152)

இலக்குவனது மறுமொழி

448\. ஆண்டகை யம்மொழி யருள வன்பனும்
தூண்டகு திரள்புயந் துளங்கத் துண்ணென
மீண்டதோ ருயிரிடை விம்ம விம்முவான்
ஈண்டுனக் கடியனேன் பிழைத்த தியாதென.

ஆண் தகை - ஆண்களிற் சிறந்த இராமபிரான், அ மொழி அருள - அந்த வார்த்தையைச் சொல்லியருள, அன்பனும் - (அதுகேட்ட) மாறாத அன்புடைய இலக்குவனும், தூண் தகு திரள் புயம் துளங்க - தூணின் தன்மை பொருந்திய திரண்ட (தன்) தோள்கள் குலுங்க, துண் என - திடுக்கிட்டு, மீண்டது ஓர் உயிர் - (முன்னமே போகும் நிலையிலிருந்து) மீண்டதாகிய தனது ஒப்பற்ற உயிர், இடை விம்ம - இடையே (மீண்டும்) போகும் நிலையை அடைய, விம்முவான் - தேம்புவானாகி (அண்ணலை நோக்கி), அடியனேன் - உன்னடியவனாகிய நான், ஈண்டு - இப்போது, உனக்கு பிழைத்தது யாது - உனக்கு இழைத்த தவறு யாதோ, என - என்று.

இது முதல் ஐந்து பாடல்கள் ஒரு தொடர்; இலக்குவன் கூறுவன.

அண்ணல் அரசிழந்து காடு புகுவானென்ற செய்தி கேட்டதும் உயிர் போகும் நிலையுற்ற இலக்குவன், சுமித்திரை, 'நீ இராமனுடன் செல்'என்றபின் தேறுதலுற்ருன்;இப்போது இராமபிரான், 'நீஇங்கேயே நில்' என்றதனுல் மீண்டும் விம்மலுற்ருன் என்பது குறிக்க, 'மீண்ட தோருயிர் இடை விம்ம' என்ருர். இராமபிரானைப்பிரியாது அவனுக்குத் தொண்டு செய்தலே தன் கடமையாகக் கொண்ட இலக்குவன், அந்நிலை மாறுமே யென்று அஞ்சி, 'அடியனேன் ஈண்டுனக்குப் பிழைத்தது யாது?' என்ருன்.

(பி - ம்.) 1. அம்மொழி பகர, கூற; ஐயனும்.
2. தூண்டரு, தூண்டருப; துளங்கித், துயங்கத்; துண்ணென, திண்ணென.
3. உயிரொடு, உயிரோடும், உயிர்ப்பொடும்; விம்மி விம்மினன்.
4. பிழைத்த தியாதென்ருன். (153)

449. நீருள வெனினுள மீனு நிலமும்
பாருள வெனினுள யாவும் பார்ப்புறின்
நாருள தனுவுளாய் நானுஞ் சீதையும்
ஆருள ரெனினுள மருளு வாயெனு.

நீர் உள எனின் - குளத்தில் நீர் இருந்தால், மீனும் நீலமும் உள- மீன்களும் நீல மலர்களும் உளவாகும்; பார் உள எனின் - பூமி இருந்தால், யாவும் உள - எல்லாப் பொருள்களும் உளவாகும்; (அவை போல), பார்ப்பு உறின் - பார்த்தலுற்ருல், நார் உள தனு உளாய் - நாணொடு பொருந்திய வில்லை யேந்திய ஐயனே, நானும் சீதையும்—, ஆர் உளர் எனின் உளம் - யாரிருந்தால் உயிரோடிருப்போம்? அருளுவாய் - நீயே அருளிச் செய்க, எனு - என்று.

'ஆதாரமான பொருளின்றி ஆதேயமான பொருள்கள் நிலைத்திட வொண்ணுது; எனக்கும் சீதைக்கும் உன்னையன்றி ஆதாரம் வேறில்லாத போது, நாங்கள் உன்னைப் பிரிந்து எவ்வாறு உய்வோம்? நீயே அருளுக' என்கின்ருன். நீரும், பாரும் இராமபிரானைக் குறிப்பன; மீனும், நீலமும், யாவும் என்பன இலக்குவனையும், சீதையையும் குறிப்பன. யாவும் - உலகத்தில் உள்ள இயங்குதிணை, நிலைத்திணைப் பொருள்கள் எல்லாம். பார்ப்பு : தொழிற்பெயர். சீதாபிராட்டியும் என்போன்றவளே யாதலால், அவளிடமும் இவ்வாறு கூறவேண்டா என்ற குறிப்போடு, 'நானும் சீதையும் ஆருளரெனின் உளம்' என்ருன். நீலம் என்பது இனஞ்சுட்டலாக, நீர்ப் பூங்கொடிகளை யெல்லாம் கொள்ளலாம்.

(பி - ம்.) 1. மீனு நீடுயர், மீனியாவையும், மீனும் யாவையும், மீனினீடுயிர், நீரிலுள்ளன, நீரில்வாழ்வன, நிலையின் மீனமும்.

2. யாவும் பொற்புறீஇ, பார்ப்புறில், பார்ப்பும் பொற்புறு, பார்ப்பும் பார்ப்புறு, பார்ப்புறும், பார்ப்புறும் புகழ், பாரம் பார்ப்புறு, பாரம் பொற்புறு, பாரமார்புற, பாரிலுள்ளன, பாரில் வாழ்வன.
3. தனுவினுய், தனுவுள; யானும்.
4. ஆருளரெனில், ஆருளமெனில்; உளமருளு நீ, உளேமருளுவாய்; நீயென்ருன், நீயலால். (154)

450. பைந்தொடி யொருத்திசொற் கொண்டு பார்மகள்
நைந்துயிர் நடுங்கவு நடத்தி கானெனு
உய்ந்தன னிருந்தன னுண்மை காவலன்
மைந்தனென் றினையசொல் வழங்கி னுயெனு.

பார்மகள் - பூமிதேவி, உயிர் நைந்து நடுங்கவும் - (உன் பிரிவால்) உயிர் நலிந்து நடுக்கமுறவும், (அதனைப் பொருட்படுத்தாது) பசுதொடி ஒருத்தி சொல் கொண்டு - பசுமையான வளையல்கள் அணிந்த பெண்ணொருத்தியின் சொல்லைக் கொண்டு, கான் நடத்தி எனு - (உன்னைக்)காட்டுக்குப் போ என்று சொல்லிவிட்டு, உய்ந்தனன் இருந்தனன் - (இன்னும்) உயிர் வாழ்ந்திருக்கின்ற, உண்மை காவலன் மைந்தன் என்று - வாய்மை காக்கும் மன்னன் மகன் நானுமென்ற தனுல், இனைய சொல் வழங்கினுய் - இத்தகைய சொல்லைச் சொன்னுய் போலும்! எனு - என்று.

'வாய்மை காப்பவன் என்று உலகோர் கூற, உன்னைக் காட்டுக்கு அனுப்பிவிட்டு இன்னும் உயிர் வாழ்ந்திருக்கும் நம் தந்தையைப் போல நானும் வன்கண்ணன் அல்லேன்; உன்னைப் பிரிந்தால் உயிர் வாழேன்' என்கின்ருன். இக்கருத்துப்பட முன்னும் இலக்குவன் மொழிந்தது (422) காண்க.

உய்ந்தனன், இருந்தனன் : முற்றெச்சங்கள்.

(பி - ம்.) 2. உயிரொடுங்கவும்; நடத்தி கானென, கானென, நடக்கின்ருனெனு.
3. உண்மைக் காவலன், ஊழி காவலன்.
4. அனையசொல் வழங்கினு யென்ருன். (155)

451. மாறினி யென்னைநீ வனங்கொள் வாயென
ஏறின வெகுளியை யாது முற்றுரு
தாறினை தவிர்கென வைய வானையின்
கூறின மொழியினுங் கொடிய தாமென்ருன்.

மாறு இனி என்னை - இதற்கு மாருக இனி (நான் கூறுவதற்கு) என்ன இருக்கின்றது? ஐய - ஐயனே, நீ வனம் கொள்வாய் என - நீ காடடைவாய் என்று அறிந்து, ஏறின வெகுளியை - எனக்கு மூண்டு எழுந்த சினத்தை, யாதும் முற்று உருது - (நீ எண்ணியபடி) எதையும்

செய்யாமல், ஆறினை தவிர்க்க என - தணிந்து முழுதும் நீக்கி விடுக என்று, ஆணையின் கூறிய மொழியினும் - கட்டளையாக (அப்போது நீ)சொன்ன வார்த்தையினும், கொடியது ஆம் (இப்போது சொல்வது) கொடியதாகும், என்றான்—;

இதுகாறும் இலக்குவன் தன் கருத்தைப் பலபடியாகச் சொல்லி வந்தவன், இறுதியாக, "முன்னே நான் சினங்கொண்டெழுந்தபோது, 'உன் சினம் முறையற்றது; அதனை முற்றும் தவிர்க என்று நீ கட்டளையிட்ட அதனினும், இப்போதென்னை உடன் வராதிருக்கச் சொல்வது எனக்குக் கொடியதாகும்" என்று கூறி முடித்தான். 'சினத்தை முற்றும் விட்டொழி என்று நீ ஆணை தந்தபோது எனக்கு மனம் இல்லையாயினும் உன் சொல்லுக்கு அஞ்சி அடங்கினேன். அப்போது நானும் உன்னைத் தொடர்ந்து வரலாமென்ற நம்பிக்கை இருந்தது; இப்போது அதனையும் நீ கெடுப்பதனால் இது மிகக் கொடியது' என்கின்றான்.

448-முதல் இதுவரை ஒரு தொடராய், 'என' என்ற எச்சங்கள் இப்பாடலின் இறுதியிலுள்ள 'என்றான்' என்பதனோடு முடிந்தன.

இப்பாடல் சில பிரதிகளில் இல்லை.

(பி-ம்.) 1. மாறினை என்னினி; வனங்கொள்வாயென, மனங்கொள்வாயென, வனம் வரேலென.
2 ஏறிய வெகுளித்தீ; யாது முற்றுற, யாது மற்றற, யாதுமிற்றிற.
3. ஆறினி, ஆறி நீ, ஐயா ஆணையால், ஐயனாணையில்.
4. கூறிய, கூறினும்; கொடியதாலென்றான், கொடிதிதா மென்றான், கொடிதிதாலென்றான். (156)

452. செய்துடைச் செல்வமோ டியாதுந் தீர்ந்தெமைக்
கைதுடைத் தேகவுங் கடவை யோவையா
நெய்துடைத் தடையலார் நேய மாதர்கண்
மைதுடைத் துறைபுகும் மறங்கொள் வேலினாய்.

ஐயா - ஐயனே, நெய் துடைத்து - நெய் பூசப் பெற்று, அடையலார் - பகைவர்களுடைய, நேயம் மாதர் - அன்புக்குரிய மனைவிமாரின், கண் மை துடைத்து - கண்களில் எழுதப்பெற்ற மையை அழியச் செய்து, உறை புகும் - (அழிந்ததற்குப் பகைவர் இல்லாமையால்) உறைக்குள் வந்து புகுகின்ற, மறம் கொள் - வீரங்கொண்ட, வேலினாய் - வேற்படையுடையவனே, செய்து உடை(ய) - நீ பாக்கியம் செய்தலால் உரிமையாகப் பெற்றுள்ள, செல்வமோடு - அரசச் செல்வத்தோடு, யாதும் - (மற்றும் நீ அடையத்தக்க இன்பம்) எதையும், தீர்ந்து - (கொள்ளாது) கைவிட்டு, எமையும் கைதுடைத்து ஏக கடவையோ - எம்மையும் துறந்து (வனம்) போகக் கடவாயோ? என்றான் என ஒரு சொல் வருவித்து முடிக்க.

'ஐயனே, அரசச் செல்வமும் பிற இன்பங்களும் பொருளல்ல வெனக் கருதி அவற்றைத் துறந்து நீ சென்றாலும், என்னையும் பிராட்டியையும் நீ விட்டுச் செல்லுதல் பொருந்துமோ?' என்கின்றான். பிராட்டியையும் உளப்படுத்தி 'எமை' என்றான். கைதுடைத்தல் - கைவிடுதல். யாதானும் ஒன்றினைப் பற்றற நீக்கினவனை, 'அவன் அதற்குக் கை கழுவிவிட்டான்?' என்ற உலக வழக்கு இங்கே நோக்கத் தகும். செய்து - முன்னோர்கள் ஈட்டி என்றேனும், உன் வீரத்தால் உனக்குரியதாகச் செய்து என்றேனும் கொள்ளுதலும் பொருந்தும். பரசுராமனை வென்றபோதே வீரத்தால் அரசு இராம பிரானுக்கு உரியதாயிற்று; 77-பார்க்க. துருப்பிடியாதிருத்தற் பொருட்டு ஆயுதங்களுக்கு நெய் பூசுவர். நெய் - நச்சு நெய் என்றலுமாம். மாதர் கண் மை துடைத்தலாவது, அவர்கள் தம் கணவன்மாரை இழத்தலால் கண்களுக்கு மை தீட்டப் பெறாத நிலையை அடையச் செய்தல். கண்களுக்கு மை தீட்டுதல் மங்கல மகளிர்க்கே உரியது. உடையவன் வீரம் உடைமைமேல் ஏற்றிக் கூறப்பட்டது. வேல் - ஆயுதப் பொது. உறை புகுதல், பகைவராய், அழித்தற்குரியார் இன்மையாலாவது. 'ஏகவும்' என்றதில் உள்ள உம்மை பிரித்து முன்னே கூட்டப்பெற்றது.

(பி - ம்.) 1. யானும், தீர்த்தெனைக், தீர்ந்தெனக், தீர்த்தெனைக், தீதெனைக்.
2. கடவையோ வென, கடவையே யையா, கடவைபோலென்றான்.
3. அடையலர், அயல்வர்.
4. வயங்கொள், வியங்கு; வாளினுய். (157)

இராமன் செயல்

453. உரைத்தபி னிராமனொன் றுரைக்க நேர்ந்திலன்
வரைத்தடந் தோளினன் வதன நோக்கினன்
விரைத்தடந் தாமரைக் கண்ணின் மிக்கநீர்
நிரைத்திடை யிடைவிழ நெடிது நிற்கின்றான்.

உரைத்தபின் - (இலக்குவன் இவ்வாறு) கூறியபின்பு, இராமன் - இராமபிரான், ஒன்று(ம்) உரைக்க நேர்ந்திலன் - (இலக்குவனுக்கு எதிராக) ஒன்றும் கூற இயலாதவனாகி, வரை தட தோளினன் வதனம் - மலைபோலப் பெரிய புயங்களையுடைய அவ்விலக்குவனது முகத்தை, நோக்கினன் - (கூர்ந்து) நோக்கியவாறு, விரை - மணம் பொருந்திய, தட தாமரை கண்ணின் - பெரிய தாமரை மலர் போன்ற (தன்) கண்களினின்றும், மிக்க நீர் - மிக்கு வடிந்த நீர், நிறைந்த - வரிசையாக, இடை இடை விழ - தரையிலே விழ, நெடிது நிற்கின்றான் - நெடுநேரம் நிற்பானானான்.

இலக்குவனுடைய உள்ளன்பு கலந்த பணிமொழிகளும், அவன் நிலையும், மெய்த்திரு வந்துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும் ஒத்திருக்

கும் உள்ளத்து உரவோனான இராமபிரானையே கலங்கச் செய்தன. இலக்குவனது முகத்தோற்றத்தால், அவன் அகத்துள்ளது நன்கு புலனாயிற்று என்பார் 'வதனம் நோக்கினான்' என்றார். நேர்தல் - வாய்த்தல். ஒன்றும் எனஎற்பால உம்மை தொக்கது. நோக்கினான்: முற்றெச்சம். இடை : முன்னது இடம்; தரை; பின்னது ஏழனுருபு.

(பி - ம்.) 1. நேர்கலன், நேர்கலான், நேர்கிலான், நோக்குறான், உன்னிலன்.
3. கண்ணை, கண்ண; மிக்கு நீர்.
4. இடைவிழா; நெடிதுயிர்க்கின்றான், நெடிது நீங்கினான். (158)

வசிட்டன் வருகை

454. அவ்வயி னரசவை யகன்று நெஞ்சகத்
தெவ்வமி லிருந்தவ முனிவ னெய்தினான்
செவ்விய குமரருஞ் சென்னி தாழ்ந்தனர்
கவ்வையின் பெருங்கடல் முனியுங் கால்வைத்தான்.

அ வயின் - (குமரர் இங்ஙனம் இருந்த) அப்பொழுது, நெஞ்சு அகத்து - மனத்திலே, எவ்வம் இல் - துன்ப அநுபவம் இல்லாத, இரு தவ முனிவன் - பெருந்தவச் சிரேட்டனான வசிட்ட முனிவன், அரசு அவை அகன்று - அரசர் இருந்த மண்டபத்தைவிட்டு, எய்தினான் - (அங்கு) வந்தானாக, செவ்விய குமரரும் - செப்பமுடைய குமரர் இருவரும், சென்னி தாழ்ந்தனர் - தலை தாழ்த்து (முனிவனை) வணங்கினர்; முனியும் - (அவர்களைக் கண்ட) வசிட்ட முனிவனும், கவ்வையின் பெரும் கடல் கால் வைத்தான் - துன்பம் என்கிற பெரிய கடலிலே அடிவைத்தான் (துன்புற்றான் என்றபடி).

வசிட்ட முனிவன் அரசவைக்குச் சென்றமை, 'அரசர் இனிதிருந்த நல்லவையி னுயினான்' (385) என முன்னர்க் கூறினமையின், அரசவை அகன்று எய்தினான் என்றார். வயின் - இங்கே பொழுதை உணர்த்திற்று; அவ்விடத்துக்கு என்றலுமாம் குமரரின் நிலை, இன்ப துன்பங்களைப் பொருட்படுத்தாத மனவலி யுடைய முனிவனையும் துன்புறச் செய்தது. முனியும்: உம்மை உயர்வு சிறப்பு. துன்பத்தைக் கடலாக உருவகித்து, அதனில் அடிவைத்தான் என்று இங்கே கூறி, அதனில் மூழ்கினான் என்பதனை அடுத்த கவியுட் பெற வைக்கின்றார். குமரர் இருவரும் மனங் கலங்கி நின்ற நிலையிலும், முனிவனுக்குச் செய்ய வேண்டிய மரியாதையை மறந்திலர் என்பது குறிக்க, 'செவ்விய குமரரும் சென்னி தாழ்ந்தனர்' என்றார். கவ்வையின் : இன், சாரியை.

(பி - ம்.) 1. அரசவை நின்று மன்பினன், அன்பினல்.
2. அழிந்தவ.
3. செங்கை கூப்பினர்,
4. கவ்வையம், கௌவையம்; கடலிடை. (159)

வசிட்டனுடைய துயரமும் நினைப்பும்

455. அன்னவர் முகத்தினே டகத்தை நோக்கினன்
பொன்னரைச் சீரையின் பொலிவு நோக்கினன்
என்னினி யுணர்த்துவ தெடுத்த துன்பத்தால்
தன்னையு முணர்ந்தில னுணருந் தன்மையான்.

உணரும் தன்மையான் - (எவற்றிலும்) மெய்ப்பொருளைக் காணும் தன்மையையுடைய வசிட்ட முனிவன், அன்னவர் முகத்தினோடு அகத்தை - அக்குமாரரின் முகத்தோற்றத்தோடு உள்ளக் கருத்தையும், நோக்கினன் - கண்டு உணர்ந்தான்; பொன் அரை - அவர்களுடைய அழகிய அரையிலே (உடுத்த), சீரையின் பொலிவும் நோக்கினன் - மரவுரியின் விளக்கத்தையும் கண்டான்; எடுத்த துன்பத்தால் - அப்போது எழுந்த மன வேதனையினால், தன்னையும் உணர்ந்திலன் - தன் வசம் இழந்தவனானான்; இனியும் என் உணர்த்துவது - (அவர்கள் நிலைபற்றி) இன்னும் யாது சொல்வது ?

குமரருடைய துயர நிலையை அவர்கள் வாயால் கூறுவிடினும், ''முன்னம், முகம்போல முன்னுரைப்ப தில்'' (நான்மணி.) என்றபடி முகம் அறிவுறுத்தலின், முகத்தினோடு அகத்தை நோக்கினன் என்றார். அவர்கள் உடுத்ததனால், மரவுரியும் பொலிவுபெற்றதெனச் சிறப்பித்தார். முனிவன் துன்பத்தால் தன்னையும் உணர்ந்திலன் என்றது துன்பக் கடலுள் ஆழ்ந்தான் என்னும் குறிப்பை உடையது.

(பி - ம்.) 1. அன்னவன் முகத்தினொடு; நோக்கினன், நோக்குவான்.
2. சிரையின் பொலிவை; புனைவும், சீரத்தின் பொலிவும், சீரையும், சடையும், உரியும் பொற்சடையும்.
3. அடுத்த துன்பத்தால். (160)

456. வாழ்வினை நுதலிய மங்க லத்துநாட்
டாழ்வினை யதுவரச் சீரை சாத்தினன்
சூழ்வினை நான்முகத் தொருவன் சூழினும்
ஊழ்வினை யொருவரா லொழிக்கற் பாலதோ.

வாழ்வினை நுதலிய - (முடி புனையும்) நல்வாழ்வைக் குறித்துச் சொல்லிய, மங்கலம் நாள் - மங்களகரமான அந்த நாளிலே, தாழ்வினை அதுவர - தாழ்வடைதற்குக் காரணமான தீவினை வருதலால், சீரை சாத்தினன் - மரவுரியைத் தரித்தான்; சூழ்வினை - ஆராய்ந்து செய்தலே தொழிலாகவுடைய, நால் முகத்து ஒருவன் சூழினும் - நான்கு முகங்களையுடைய ஒப்பற்ற பிரம தேவனே (உபாயம்) சூழ்ந்து சொன்னாலும், ஊழ்வினை - (அவரவருடைய) ஊழ்வினை, ஒருவரால் - எத்தகைய ஒருவராலும், ஒழிக்கல் பாலதோ - தவிர்க்கக் கூடியதாகுமோ? (ஆகாது).

விதித்தல் கடவுளாகிய பிரமதேவனே சூழ்ந்தாலும், ஊழ்வினையை விலக்குதல் அவனாலும் ஆகாது எனின், பிறரைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. ''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினுந் தான்முந் துறும்'' என்றதன் கருத்தைத் தழுவியது இது. ''வென்றவ ருளரோ மேலை விதியினை'' (588) என்பதும், ''கடப்பா ரெவரே கடுவினையை'' (நள. 220) என்ற பாடலும் ஈண்டு ஒப்பு நோக்கத் தகும்.

மங்கலத்து : அத்து, சாரியை. வினையது: யது, பகுதிப் பொருள் விகுதி. ஈற்றிலுள்ள ஓகாரம் எதிர்மறை.

சூழ்வினை ஊழ்வினை என்று இயைத்து, தன்னைச் செய்தாரை விடாது சூழுந் தொழிலுடைய ஊழ்வினை என்றலுமாம்.

ஒரு பிரதியில் இப்பாடல் இல்லை.

(பி - ம்.) 1. வாழ்வினை நுவலிய, முதலிய, வாழ்வினில் உயரிய; மங்கலத்தினுள், மங்கலத்தினுல்.
2. சிரம்.
3. ஒருவற் சூழினும், ஒருவன் சூழ்வினும், ஒருவன் தோன்றினும், தோன்றிலும்.
4. ஒழிக்க லாகுமோ, ஒழிக்கற் பாலதோ. (161)

457. வெவ்வினை யவடர விளைந்த தேயுமன்
றிவ்வினை யிவன்வயி னெய்தற் பாற்றுமன்
றெவ்வினை நிகழ்ந்ததோ வேவ ரெண்ணமோ
செவ்விதி னொருமுறை தெரியும் பின்னெனா.

இ வினை - (இராமன் மரவுரி உடுத்துக் கானகம் செல்ல நின்ற) இச் செயல், வெம் வினையவள் தர - கொடுவினையுடைய கைகேயி உண்டாக்க, விளைந்ததும் அன்று - உண்டானதும் அன்று; இவன் வயின் - (புண்ணிய மூர்த்தியாகிய) இவனுக்கு, எய்தல் பாற்றும் அன்று - வரத்தக்கதும் அன்று; எ வினை நிகழ்ந்ததோ - (இதற்குக் காரணமாக) என்ன காரியம் நிகழ்ந்துள்ளதோ? ஏவர் எண்ணமோ - (இஃது) எவருடைய சூழ்ச்சியோ? (இவையெல்லாம்) பின் - பின்பு ஒரு முறை - ஒரு வழியாக, செவ்விதின் தெரியும் - நன்கு தெரிய வரும், எனா - என்று எண்ணிக் கொண்டு.

இதுவும் அடுத்த பாடலும் குளகம்.

'சிந்தையும் செயலும் செப்பமுடைய இராமனுக்கு இது நிகழக் காரணம் கைகேயி என்பது, தலைக்கீடு மாத்திரமேயன்றி உண்மை யன்று; உண்மையான காரணம் வேறொன்று இருத்தல் வேண்டும். அது பின்னே தெரிய வரும்' என முனிவன் கருதினானென்றலின், அவன் சிந்தை மேல் நிகழ இருக்கும் தேவகாரியத்தை நோக்கியது

என்பது குறிப்பு. "செவ்வியான் கேடும் நினைக்கப்படும்" (குறள்.169) என்பவாகலின், முனிவனால் இராமனது கேட்டுக்குக் காரணம் ஆராயப்பட்டது.

(பி - ம்.) 1. வெவ்வினை யடரவே; விளைந்த தேனுமற், விளைந்த தாயினும்.
2. இவ்வினையிவன்வனம்; இவ்வினையவன்வயி, எய்தற் பாலதோ.
3. வெவ்வினை, தெவ்வினை; தேவர், மேலோர்.
4. வெவ்விதென் றொருமுறை, செவ்விதன் றொருமுறை; பின்னென்றான். (162)

வசிட்ட முனிவன் இராமனுக்குக் கூறுதல்

458. விற்றடந் தாமரைச் செங்கை வீரனை
உற்றடைந் தையநீ யொருவி யோங்கிய
கற்றடங் காணுதி யென்னிற் கண்ணகன்
மற்றடந் தானையான் வாழ்கி லானென்றான்.

(முனிவன்) வில் - வில்லை ஏந்திய, தட தாமரை செம் கை - பெரிய தாமரை மலர் போன்ற சிவந்த கைகளையுடைய, வீரனை உற்று அடைந்து - வீரனாகிய இராமபிரானைக் கிட்டிச் சென்று, ஐய—, நீ ஒருவி - நீ இந்நாட்டை விட்டு, ஓங்கிய கல் தடம் காணுதி என்னின்- உயர்ந்த மலைகளையுடைய காட்டை அடைவா யென்றால், கண் அகல்- பரப்பு மிக்க, மல் தட தானையான் - மற்போர் வல்ல பெரிய சேனையை உடைய நம் மன்னன், வாழ்கிலான் - உயிர் வாழ மாட்டான், என்றான்—.

இராமபிரானுக்கு உற்றது கூறி, அவன் காடு செல்லுதலைத் தவிர்க்கக் கருதிய முனிவன் முதற்கண், 'நீ காடு சென்றால் சக்கரவர்த்தி உயிர்வாழ்தல் அரிது' என்றான். முன் பாடலில் 'என' என்று நின்ற வினையெச்சம், இப்பாடலில் அடைந்து, என்றான் என இயைந்து முடியும். காணுதல், இங்கே அடைதலைக் குறிக்கும்.

(பி - ம்.) 1. வெங்கண் வீரனை, வீரனே, வீரமே.
2. உற்றடைந்தியாது நீ, உற்றடையாது நீ; ஒருவி நாயக, ஒரு வினையகன், ஒருவ னையகன், ஒருவி நேங்கிய, அருவி யோங்கிய; உற்றடைந்தாய் மறை பொருவியோங்குகான்.
3. கற்கடம்; என்னக், எண்ணிற்.
4. மற்றடந்தோளினன், தோளினன்; வாழ்விலான். (163)

இராமபிரான் மறுமொழி

459. அன்னவன் பணிதலை யேந்தி யாற்றுதல்
என்னது கடனவ னிடரை நீக்குதல்
நின்னது கடனிது நெறியு மென்றனன்
பன்னகப் பாயலுட் பள்ளி நீங்கினான்.

பன்னகம் பாயலுள் பள்ளி நீங்கினன் - பாம்பணையிற் பள்ளி கொள்ளுதலை விட்டு வந்துள்ள (திருமாலாகிய) இராமபிரான், (முனிவன் உரை கேட்டு), அன்னவன் பணி - அவ்வரசனது கட்டளையை, தலை ஏந்தி - தலைமேற்கொண்டு, ஆற்றுதல் - செய்து முடித்தல், என்னது கடன் - எனது கடமையாகும்; அவன் இடரை நீக்குதல் - அரசன் (என் பிரிவால் எய்தும்) துன்பத்தைப் போக்குதல், நின்னது கடன் - உன்னுடைய கடமையாகும்; நெறியும் இது - முறையும் இதுவே; என்றனன்—.

'மன்னவன் பணியை முற்றுவித்தல் என் கடமை; அதனில் நான் பிறழேன். மன்னனுக்கு ஆறுதல் கூறித் தேற்றுதல் குருவாகிய நும் கடமையாகும். இவ்விரண்டும் நிகழ்தலே முறையாகும்' என்று தன் உறுதியைக் கூறினன் இராமபிரான். அவனது அவதார உண்மையைக் குறிக்கப் பன்னகப் பாயலுட் பள்ளி நீங்கினன் என்றார். மன்னவன் பணி என்ற வியாஜத்தால், தேவர்க்கும் முனிவர்க்கும் தான் அளித்த வாக்கைக் காத்தல் தன் கடமை, அது தான் வனஞ் செல்வதனாலேயே நிறைவெய்தும் என்பதனைக் குறிப்பித்தான் என்க.

(பி - ம்.) 1. பணிதனை; ஏற்றியாற்றுதல்.
2. என்னுடன்; அவனிடரு நீக்குதல்.
3. கடனது.
4. பாயலம் பள்ளி, பாயலிற் பள்ளி. (164)

வசிட்டன் கூறுதல்

460. வெவ்வரம் பயில்சுரம் விரவென் றனலன்
தெவ்வரம் பனையசொற் றீட்டி னுடனக்
கவ்வரம் பொருதவே லரச னாய்கிலா
திவ்வரந் தருவெனென் றேன்ற துண்டென்றான்.

(இராமபிரான் கூற்றுக்கு எதிராக முனிவன்), தெவ்வர் அம்பு அனைய சொல் தீட்டினுள் தனக்கு - (வரம் என்ற பெயரால்) பகைவரின் அம்பு போலப் பாயும் கடுஞ் சொல்லைக் கூறிய கைகேயிக்கு, அரம் பொருத வேல் அ அரசன் - அரத்தால் அராவிக் கூர்மை செய்யப் பெற்ற வேலையுடைய அத்தசரதன், ஆய்கிலாது - ஆராயாமல், இ வரம் தருவென் என்று - (நீ கேட்கும்) இந்த வரத்தைத் தருவேன் என்று, ஏன்றது உண்டு - உடன்பட்டுக் கூறியதுண்டு; (அவ்வளவே); வெம் அரம் பயில் சுரம் விரவு என்றான் அல்லன் - கொடிய அரம்போன்ற பரற்கற்கள் நிறைந்த காட்டுக்கு நீ போ என்று (தன் வாயால்) கூறினன் அல்லன்; என்றான்—.

''இராமா, வரம் என்ற பெயரால் கைகேயி கேட்டதற்கு, 'தரு கிறேன்' என்று ஆராயாமல் உடன்பட்டதை யன்றி, நீ வனம் போ என்று மன்னன் தன் வாயால் உன்னைப் பணித்தானல்லன்; எனவே,

அஃது அவன் பணியாகாது'' என்று கூறி இராமபிரானைத் திருப்ப முயன்றான் முனிவன். ஆராய்ந்திருப்பின் உடன்படான் என்பது கருத்து.

அரம் போன்ற கூர்மையுடைய கற்களை அரம் என்றது ஆகு பெயர். விரவுதல் - போதல். கைகேயி சொல்லின் கொடுமையைக் குறிக்கத் தெவ்வர் அம்பை உவமித்தார்: அம்பென்றதற்கேற்பத் 'தீட்டினாள்' என்றார். தீட்டுதல் - இங்கே சொல்லுதல். அரம்பொருத வேல் அவ்வரசன் என இயைக்க. சுரம் - வெப்பமுள்ள காடு.

(பி - ம்.) 1. சுரம் ஈகின்றானலன், மு. வெவ்வரம்பனைய சொல்வீரன் வென்ற நாள், வெவ்வரம் பொருமயில் வீரன் வென்ற நாள், வெவ்வரம் பனைய சம்பரனை வென்ற நாள், எவ்வரம் பயில் சுரமீதென்று லென்றே, வெவ்வரம் பசுரனை வீரன் வென்ற நாள்.
2. நிட்டினாளுடன்.
3. பொருதுவெல்; அரசனாணையால், அரசனீங்கிலான், அரச னீகலான், அரசனீக்கிலாது.
4. தருவனானென்றது. தருவனானென்பது, கொடுத்தன னென்றது; உண்டென்று, உண்டரோ. (165)

இராமபிரான் மறுமொழி

461. என்றன னெந்தையிவ் வரங்க ளேவினாள்
ஈன்றவள் யானது சென்னி யேந்தினேன்
சான்றென நின்றநீ தடுத்தி யோவென்றான்
தோன்றிய நல்லற நிறுத்தத் தோன்றினான்.

தோன்றிய நல் அறம் - விளக்கம் பெற்றுத் தோன்றிய நல்ல தருமத்தை, நிறுத்த தோன்றினான் - (அழியாது) நிலைநிறுத்தும் பொருட்டு அவதரித்த இராமபிரான் (முனிவனை நோக்கி), எந்தை இவரங்கள் ஏன்றனன் - தந்தை இவ்வரங்களைத் தர இயைந்தான்; (அதனால்), ஈன்றவள் ஏவினாள் - தாயாகிய கைகேயி என்னை ஏவினாள்; யான் அது சென்னி ஏந்தினேன் - நான் அதனைச் சிரமேற் கொண்டேன்; சான்று என நின்ற நீ - (இவற்றிற்கெல்லாம்) சாட்சியாக நிற்கும் தேவரீர், தடுத்தியோ - (என்னைத்) தடுப்பீரோ? (தடுப்பது முறையாகுமோ), என்றான் —.

'தந்தை இயைந்ததனாலே தாய் என்னை ஏவினாள்; நானும் உடன்பட்டு அவளுக்கு உறுதி கூறிவிட்டேன்; இவ்வளவும் அறிந்த நீர், தந்தை வாயால் போவென்று கூறவில்லை யென்றொரு போக்குக் காட்டி என்னைத் தடுப்பது, சகல சாத்திரங்களும் உணர்ந்த நுமக்கு முறையன்று'. என்கின்றான் இராமபிரான். அறங்காத்தற்கென்றே அயோத்தியுள் தோன்றினவனாதலால் 'நல்லறம் நிறுத்தத் தோன்றினான்' என்றார். தோன்றுதல் - விளங்குதல். கைகேயிபாலுள்ள அன்பினால், அவளை, 'ஈன்றவள்' என்றான். முன்பு இயம்பினன்

அரசன், (292) என்று கைகேயி கூறியபோது, "இப்பணி தலைமேற் கொண்டேன்; கானம் இன்றே புகுகின்றேன்" என்றுரைகவின், 'யானது சென்னியேந்தினேன்' என்கின்றான்.

(பி - ம்.) 1. ஏன்றவன்றந்தை, ஏன்றபினெந்தை; இவ்வரத்தின் ஏவினள், அவ்வரத்தினையுள, அவ்வரத்தினேவினள்.
2. யானிது.
3. சான்றென நீபது.
4. நிறுவத், நிறுப்பத். (166)

குமாரர்கள் அரண்மனையை நோக்கிச் செல்லல்

462. என்றபின் முனிவனொன் றியம்ப நேர்ந்திலன்
நின்றன னெடுங்கணீர் நிலத்து நீர்த்துகக்
குன்றன தோளவன் றொழுது கொற்றவன்
பொன்றிணி நெடுமதில் வாயில் போயினான்.

என்றபின் - (இராமன் இவ்வாறு) கூறியபின், முனிவன் - வசிட்ட முனிவன், ஒன்று இயம்ப நேர்ந்திலன் - (மேலே) ஒன்றும் சொல்ல மாட்டாதவனாகி, நெடு கண் நீர்-மிக்க கண்ணீர், நீர்த்து நிலத்து உக- தாரையாகத் தரையிலே சொரிய, நின்றனன்—; குன்று அன்ன தோள் அவன் - மலைபோன்ற புயங்களையுடைய அவ்விராமபிரான், தொழுது - (முனிவனை) வணங்கிவிட்டு, கொற்றம் வல் பொன் திணி நெடுமதில் வாயில் - வெற்றியையுடைய வலிய பொன்னால் இயன்ற பெரிய அரண்மனை மதிலின் வாயிலைக் கடந்து, போயினான்-செல்வானானான்.

செல்லும் சொல் வல்லவனான இராமபிரானுக்கு மாறாக முனிவன் யாதொன்றும் கூறமாட்டாதவனானான். ஒன்றும் எனற்பால உம்மை தொக்கது.

முதல் அடியோடு ஒப்பிடுக; "உரைத்தபி னிராமனொன் றுரைக்க நேர்ந்திலன்" (453).

(பி - ம்.) 1. என்றனன்; இயம்பல், உரைக்க; நேர்ந்திலான், நோக்கிலன், எண்ணிலன்.
2. நின்றபின்; நிலத்துக்கண் நெடிது நீர்விழ, நிலத்தின் நீர்த்துக, நெடிது நீர்விழ, நிலத்தின் மீதுக.
3. குன்றணி; தோளினன், தோளினர், தோளவற்றொழுது, தோளன் றாள் தொழுது; கொற்றமாப்.
4. பொன்றணி; நெடுமதிள். (167)

கண்டோர் நிலை

463. சுற்றிய சீரையன் றொடரும் தம்பியன்
முற்றிய வுவகையன் முளரிப் போதினும்
குற்றமின் முகத்தினன் கொள்கை கண்டவர்
உற்றதை யொருவகை யுணர்த்து வாமரோ.

சுற்றிய சீரையன் - அரையில் உடுத்த மரவுரி உடையவனும், தொடரும் தம்பியன் - தன்னைத் தொடரும் தம்பி (இலக்குவன்) பின்னே வரப்பெற்றவனும், முற்றிய உவகையன் - மகிழ்ச்சி நிரம்பியவனும், முளரி போதினும் - தாமரை மலரினும் (அழகு மிக்கதாய்), குற்றம் இல் - சிறிதும் கலக்கமில்லாத, முகத்தினன் - திருமுகத்தையுடையவனுமான இராமபிரானது, கொள்கை கண்டவர் - மனக் கோலையுணர்ந்த பலரும், உற்றதை - அடைந்த நிலையை, ஒருவகை உணர்த்துவாம் - ஒருவாறு கூறுவோம். அரோ: அசை.

குமாரர்கள் வீதியிலே செல்லும்போது அவர்களைக் கண்டு நகர மக்களும் பிறரும் உற்ற பெருந்துயர நிலையை இதுமுதல் பல படியாக விரித்துக் கூறுகின்றார். முளரிப் போதினும் குற்றமில் முகத்தினன்: 293 - குறிப்புப் பார்க்க.

(பி - ம்.) 1. சீரத்தன்; தொடர்ந்த தம்பியன், சடையின் சும்மையன்.
3. கொள்கை கண்டவன், கொண்டவர். (168)

464. அந்தண ரருந்தவ ரவனி காவலர்
நந்தலி னகருளோர் நாட்டு ளோர்கடம்
சிந்தையென் புகல்வது தேவ ருள்ளமும்
வெந்தனர் மேல்வரு முறுதி வேண்டலர்.

(குமரர், தவக்கோலத்தோடு சென்றபொழுது) தேவரும் - தேவர்களுங்கூட, மேல் வரும் உறுதி வேண்டலர் - மேலே (இராமனால் தமக்கு வர இருக்கும் நன்மையையும் வேண்டாதவர்களாய், உள்ளம் வெந்தனர் - மனம் வெதும்பினர்; (என்றால்) அந்தணர் - அந்தணர்களும், அரு தவர் - அரிய தவத்தையுடைய முனிவர்களும், அவனி காவலர் - அரசர்களும், நந்தல் இல் நகர் உளோர் - தாழ்தல் இல்லாத அந்நகரத்தில் உள்ளவர்களும், நாடு உளோர்கள்தம் - கோசல நாட்டில் உள்ளவர்களும் ஆன பல திறத்து மக்களுடைய, சிந்தை - மன நிலையை, என் புகல்வது - என்னவென்று சொல்வது?

இராமபிரான் வனம்புகக் காரணர்களாய், மேலே அரக்கர் பயம் ஒழிந்து பெருநன்மை அடைய இருத்தலால் மகிழ வேண்டிய தேவர்களே, இராமபிரானது தவக்கோலங் கண்டு மனம் வெம்பினரெனின், மற்றவர்களைப்பற்றிச் சொல்வானேன் என்று தொடங்கி, முதற்கண் அந்தணர் முதலிய சிலரைப் பொது வகையாற் குறித்தார். அயோத்தியின் சிறப்பு நோக்கி நந்தலில் நகர் என்றார். சிந்தை - மன நிலை; கவலையென்றலும் ஆம். உள்ளமும் என்றதில் உள்ள உம்மை பிரித்துக் கூட்டப்பெற்றது.

இப்பாடல் சில பிரதிகளில் இல்லை; சில பிரதிகளில் 479-க்குப் பின் உள்ளது.

(பி - ம்.) 1. அந்தண ரருமறை முனிவர்.
2. நகருளார், நகருள்ளார்; நாட்டுளார்கடம், நாட்டுளார்கடாம்.
4. வெந்தன, நொந்தனர்; வேண்டலார், வேண்டிலார். (169)

மாதர் செயல்

465. ஐயனைக் காண்டலு மணங்க னாரெலாம்
மொய்யிளந் தளிர்களான் முளரி மேல்விழும்
மையலின் மதுகரங் கடியு மாறெனக்
கைகளின் மதர்நெடுங் கண்ணி னெற்றினர்.

அணங்கு அன்னார் எல்லாம் - தேவமாதர் போன்ற மகளி ரெல்லாம், ஐயனை காண்டலும் - இராமபிரானை (தவக்கோலத்திலே) கண்ட அளவில், முளரி மேல் விழும் - தாமரை மலரில் மொய்க்கின்ற, மையல் மதுகரம் - மது மயக்கமுடைய வண்டுகளை, மொய் இள தளிர் களால் கடியும் ஆறு என - அடர்ந்த இளந்தளிர்களால் ஓட்டுதல் போல, கைகளின் - தங்கள் கைகளால், மதர் நெடு கண்ணின் - மதர்த்த நீண்ட கண்களிலே, எற்றினர் - புடைத்துக் கொண்டனர்.

இராமபிரானைத் தவக்கோலத்துடன் கண்ட நகரத்து மகளிர் பலர், இவ்வாறு காண நேர்ந்த கண்களைத் தம் கைகளால் புடைத்துக் கொண்டு வருந்தினர். மகளிரையும் அவர்களுடைய முகம், கண், கை ஆகிய உறுப்புக்களையும் உவமைகளால் சிறப்பித்தார். முளரி முகம், மதுகரம் கண், இளந்தளிர் கை எனக் கொள்க. முன் பாடலில், பொதுவகையால் சிலரைக் குறித்தார்; இதுமுதல் தனித் தனியே சிறப்பு வகையாற் கூறுகின்றார்.

மையலின் : இன், சாரியை.

(பி - ம்.) 1. அணங்கனார்கடாம், அணங்கினார்கடம், அணங்கனார்கடம், அணங்கனா ரெல்லாம்.
2. தளிரினால்.
3. மையறு, மையினை, மையரி, மையணை; குடையுமாறெனக்.
4. கைகளான்; மானெடுங், அமர்நெடுங்; கண்களெற்றினர், கண்ணி னெற்றினர். (170)

இராமனைக் கண்ணுற்றார் செயல்

466. தம்மையு முணர்ந்திலர் தணப்பி லன்பினால்
அம்மையி னிருவினை யகற்ற வோவன்றேல்
விம்மிய பேருயிர் மீண்டிலா மைகொல்
செம்மறன் றுதையிற் சிலவர் முந்தினர்.

சிலவர் - (இராமபிரானைக் கண்ணுற்ற) சில மாந்தர், தணப்பு இல் அன்பினால் - (அவன்பால்) நீங்குதல் இல்லாத அன்பினால்,

தம்மையும் உணர்ந்திலர் - தம்மையும் உணராத அவச நிலை எய்தின வராகி, செம்மல் தன் தந்தையின் - இராமபிரானுடைய தந்தையாகிய தசரதனிலும், முந்தினர் - முற்பட்டுத் துறக்கம் எய்தினர்; (அவ்வாறு கியது), அம்மையின் இரு வினை அகற்றவோ - மறுமையில் வரக் கடவதாகிய இருவினைகளின் தொடர்பை நீக்கிக்கொள்ளவோ? அன்றேல் - அங்ஙனமல்லாவிடின், விம்மிய பேர் உயிர் - (தம் உடம்பி னின்றும்) மிக்கெழுந்த தம் பெரிய உயிர்கள், மீண்டு இலாமை கொல் - திரும்பி வந்ததில்லாமையாலோ? (இன்னதென்றறிகிலேம்)

இராமபிரானைக் கண்ணுற்ற சிலர், அவன்பால் உள்ள அன்பின் முதிர்ச்சியினால் வருத்தம் மீதூர, அதனைத் தாங்க முடியாமல் அப்பொழுதே உயிர் நீத்தனர் என்று கூறி, அதற்கு இரண்டு காரணங் களைக் கூறுகின்றார். இராமன் இல்லாத இடத்திலிருந்து உயிர் வாழ்வதினும் உயிரை நீத்து மறுமையில் இருவினை அகற்றலாம் என்ற எண்ணத்தோடு உயிர் விட்டார்களோ, அன்றி இராமபிரான்பால் உள்ள பேரன்பு காரணமாக அவன் பிரிவான் என்று உணர்ந்த அளவிலே உயிர்கள் தாமே போய்விட்டனவோ என்று காரணங்களைக் கூறியபடி. இதில் குறிக்கப்பெற்றவர் "சாதுகை மாந்தர் எல்லாம் தசரதன் றன்னை யொத்தார்" (251) என முன்னே கூறப்பெற்றவரைப் போன்றார் ஆதல் வேண்டும். முன்னே அவர்கள் மகிழ்ச்சியில் தசரதனை யொத்தனர்; இப்போது துயரிலும் அவனை முந்தினர் என்றபடி. விம்முதல் - மீறி எழுதல்.

(பி - ம்.) 1. உணர்ந்திலார், தணிப்பிலன்பினான்.
2. அம்மையிலருவினை, அம்மையினருவினை, அம்மையிவிருவினை; அகற் றவோவென்றல், அன்றே, என்றே, அற்றவோ வன்றேல், அற்றவோ வென, அற்றவோ வென்றே, அற்றவோ வன்றே, அற்றவோ வன்றேல், இயற்றவோ வன்றே.
3. பேருயிர் மீண்டிலாமையின், மீட்டிலாமையில், பெருவரமிரண் டிலாமையால், இரண்டிலாமையில்
4. செம்மறன்றுதைமுன், செம்மையின்றுதையில்; சிலவராயினர், சிலரும் முந்தினர். (171)

467\. விழுந்தனர் சிலர்சிலர் விம்மி விம்மிமேல்
எழுந்தனர் சிலர்முகத் திழிக ணீரிடை
அழுந்தினர் சிலர்பதைத் தளக வல்லியின்
கொழுந்தன லுற்றெனத் துயரங் கூர்கின்றார்.

சிலர் விழுந்தனர் - சிலர் (துயரம் தாங்காமல்) விழுந்தார்கள்; சிலர் - வேறு சிலர், விம்மி விம்மி - தேம்பி அழுது, மேல் எழுந்தனர் - (அழுகையில்) மேலிட்டவராயினர்; சிலர் - மற்றுஞ் சிலர், முகத்து இழி - தம் முகத்திலிருந்து வழிகிற, கண் நீர் இடை அழுந்தினர் - கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கினர்; சிலர்—, பதைத்து - துடிதுடித்து,

அளகம் வல்லியின் - கூந்தலாகிய கொடியில், கொழுந்து அனல் உற்ருல் என - தீக்கொழுந்து அடைந்தாற்போல, துயரம் கூர்கின்ருர் - துயர் மிக்கவர் ஆயினர்.

பலரும் எய்திய துயரமிகுதியைப் பலவகையாகக் கூறுகின்ருர். அளகவல்லி - நீரில் தோன்றிய கொடி எனலும் ஆம்.

(பி - ம்.) 2. முகத்திழி கண்ணீரிடை, சிலரிழி கணீரிடை, சிலரெழு கண்ணீரிடை, சிலரிழி கண்ணீரிடை, சிலர் கண்ணினீரிடை.
3. அழுங்தினர் சிலர் மனத்து, அழுந்தினர் பகைத்தனர்; அளகவல்லி நீர், அளகவல்லியர், அளகவல்லியங், ஆங்கண் வல்லியங், அணிகொள் வல்லியங்.
4. கொழுங்தெரி, கொழுங்கனல். (172)

468. கரும்பன மொழியவர் கண்ப னிக்கிலர்
வரம்பறு துயரினுன் மயங்கி யேகொலாம்
இரும்பன மனத்தவ ரென்ன நின்றனர்
பெரும்பொரு ளிழந்தவர் போலும் பெற்றியார்.

கரும்பு அன்ன மொழியவர் - கரும்புபோல இனிக்கும் சொற்களையுடைய பெண்கள் சிலர், பெரு பொருள் இழந்தவர் போலும் பெற்றியார் - மிக்க செல்வத்தை இழந்தவர் போன்ற தன்மையுடையவராய், கண் பனிக்கிலர் - கண்ணீர் துளிக்கவும் பெருமல், இரும்பு அன்ன மனத்தவர் என்ன - இரும்பு போலும் வன்னெஞ்சு உடையவர் இவர் என்று எண்ணும்படி, நின்றனர் - அசைவற்று நின்ருர்கள்; (அதற்குக் காரணம்) வரம்பு அறு துயரினுல் - (இராமன் பிரிவால் உண்டான) எல்லே கடந்த துயரத்தினுல், மயங்கியே கொல் ஆம் - தம் உணர்வு மயங்கியே போலும்!

துயருற்றபோது மனம் உருகிக் கண்ணீர் சொரிதல் மகளிர் இயல்பு. அங்ஙனமாகவும் சிலர் அச் செயல்களின்றி வறிதே நின்றனர்; அதற்குக் காரணம் அவர்கள் துயரம் வரம்பு கடந்ததே போலும் என்கின்ருர். அந் நிலேக்குப் பெரும் பொருள் இழந்தவர் நிலேயை உவமிக்கின்ருர். பெரும் பொருள் இழந்தவர் சிலர், 'திக்பிரமை' யுற்றுச் செயலற்று நிற்பர்; அளவு கடந்த துயரம் அங்ஙனம் ஆக்க வல்லது.

'மொழியவர், பெற்றியராய் என்ன நின்றனர்; மயங்கியே போலும்' எனக் கூட்டி முடிக்க, வன்னெஞ்சுக்கு இரும்பை உவமை கூறுதல் மரபு; "இரும்பினுல் ஏன்ற நெஞ்சு" (292).

(பி - ம்.) 1. மொழியினர்; பனித்திலர், பனிக்கலர்.
2. மயங்கியே கொலோ, மறுகியே கொலாம், மறுகியேய்தலால்.
3. மனத்தினர், மனத்திஞர்; எண்ண.
4. இழக்தனர்போலும், இழங்தனரென்னும். (173)

469. நெக்கன வுடலுயிர் நிலையி னின்றில
இக்கண மிக்கண மென்னுந் தன்மைய
புக்கன புறத்தன புண்ணிற் கண்மலர்
உக்கன நீர்வறந் துதிர வாரியே.

உடல் நெக்கன - (சிலருக்கு) உடம்புகள் நெகிழ்ந்து போயின; உயிர் நிலையில் நின்றில - அவர் உயிர்கள் ஒரு நிலையில் நில்லாதன வாயின; இ கணம் இ கணம் என்னும் தன்மைய - (உடலை விட்டு நீங்குதல்) இந்தக் கணம் இந்தக் கணம் என்று சொல்லத் தக்கன வாகி, புறத்தன புக்கன - வெளியே போவதும் (மீண்டு) உடலுட் புகுவதும் ஆயின; கண் மலர் - மலர் போன்ற கண்கள், நீர் வறந்து - (மிக்க அழுகையினால்) நீர் வற்றிப்போய், புண்ணின் புண்களைப் போல, உதிரம் வாரி உக்கன - குருதி நீரைச் சிந்தின. ஏ ; ஈற்றசை.

துயர நிலையை உயர்வு நவிற்சியாகக் கூறுகின்றார். உயிர்கள் ஒரு நிலையில் இல்லை என்றதன் விளக்கமாகப் போவனவும் வருவனவுமா யிருந்தன என்றார். உயிர் : பால்பகாவஃறிணைப் பெயர். 'நீங்கும்', 'ஆயின' என்ற வினைகள் வருவிக்க. புறத்தனவும், புக்கனவும் என உம்மை விரிக்க.

(பி - ம்.) 1. நெக்கனருடல், நெக்கனவுயிரிடை, நெக்கனருயிருடன்; நிலையினின் றிலர், நிலையினின்றென, நிலையுனின்றிலாது.
2. ஒன்றும்; தன்லமயும்.
4. உக்கநீர் வறந்தன, வறந்தனர். (174)

470. இருகையிற் கரிநிக ரெண்ணி றந்தவர்
பெருகையிற் பெயர்த்தனர் தலையைப் பேணலர்
ஒருகையிற் கொண்டன ருருட்டு கின்றனர்
சுரிகையிற் கண்மலர் சூன்று நீக்கினர்.

இரு கையின் கரி நிகர் - இரண்டு கைகளையுடைய யானை போன்ற, எண் இறந்தவர் - எண்ணிலாத பல வீரர்கள், தலையை பேணலர் - தம் தலையையே பொருட்படுத்தாமல், பெரு கையின் பெயர்த்தனர் - (தங்கள்) பெரிய கைகளால் (திருகி) எடுத்து, ஒரு கையில் கொண்டனர் - ஒரு கையில் ஏந்தினவராய், உருட்டுகின்றனர் - (அம்மனை யாடுதல் போல) உருட்டுவாராயினர்; (எண்ணிறந்தவர்) கண்மலர் - தங்கள் மலர் போன்ற கண்களை, சுரிகையின் - உடைவாளால், சூன்று நீக்கினர் - தோண்டி எறிந்தார்கள்.

இராமன் இல்லாத நாட்டில் உயிர் வாழ்தல் வேண்டா என்று தம் தலையையே கொய்துவிடுவாரும், இராமபிரானை இந்தக் கோலத்தில் காணும் கண்கள் பயனற்றவை என்று அவற்றைத்

தோண்டி எறிபவரும் பலராயினர் என்றவாறு. 'எண்ணிறந்தவர்' என்பதனைப் பின்னுங் கூட்டுக. பெருங்கை எனற்பாலது எதுகை நோக்கிப் 'பெருகை' என நின்றது. 'எண்ணிறந்தவர்' எனப் பொதுப் படக் கூறினும், செயலின் அருமை நோக்கி 'வீரர்' எனப் பொருள் உரைக்கப்பெற்றது. இரு கையிற் கரி; இல்பொருளுவமை; "இருகை வேழத் திராகவன்" (பால).

(பி-ம்.) 1. எண்ணிறந்தனர்.
2. பொருகையிற்; பெயர்ந்தனர், பெயர்த்ததம், பிறமகள், பேணலார், பேணல், பேணலால்.
3. ஒருகையாற்; கொண்டுடல்; உருட்டுகின்றன, உருளுகின்றனர், உருகுகின்றனர்.
4. சூழ்ந்து; துடைத்து மீங்கினர். (175)

471. சிந்தின வணிமணி சிதறி வீழ்ந்தன
பைந்துணர் மாலையிற் பரிந்த மேகலை
நந்தினர் நகையொளி விளக்க நங்கைமார்
சுந்தர வதனமு மதிக்குத் தோற்றவே.

நங்கைமார் - மகளிரின், அணி சிந்தின - அணிகலன்கள் (எங்கும்) சிந்தின; மணி சிதறி வீழ்ந்தன - அவ்வணிகலன்களின் மணிகள் (எங்கும்) சிதறி விழுந்தன; பசு துணர் மாலையின் - பசுமையான பூங்கொத்துக்களாகிய மாலைகளைப் போலவே (மாலைகள் அறுபட்டது போல), மேகலை பரிந்த - (அவர்களுடைய) மேகலாபாரணங்களும் அறுபட்டன; நகை ஒளி விளக்கம் நந்தினர் - (முகத்தில்) புன் முறுவலால் ஆகும் ஒளிப் பொலிவையும் இழந்தனர்; (அதனால்) சுந்தர வதனமும் - (அவர்களுடைய) அழகிய முகங்களும், மதிக்கு தோற்றன - சந்திரனுக்குத் தோற்றனவாயின. ஏ: ஈற்றசை.

பெண்கள் பலர், தம் அணிகலன்களையும், மலர்மாலைகளையும் வெறுத்து நீக்கித் துயரத்தினால் தம் முகப்பொலிவுங் குன்றி நின்றனர். அவர் முகங்கள் முன்னே மதியைத் தோற்பிப்பன; இப்போது மதிக்குத் தோற்றன.

(பி-ம்.) 1. சிந்தினரணிமணி, சிந்தின மணியணி, சிந்தினபணிமணி; சிதற வீழ்த்தனர், வீழ்கின்றார்.
2. பைந்துணை; மாலைகள்; பரிந்து.
3. நந்தின; விளங்க, இழந்த, அவிக்க; நங்கையர்.
4. மதிக்குத் தோற்றதே. (176)

அரசன் தேவிமார் அழுகை

472. அறுபதி னாயிர ரரசன் றேவியர்
மறுவறு கற்பினர் மழைக்கண் ணீரினர்
சிறுவனைத் தொடர்ந்தனர் திறந்த வாயினர்
எறிதிரைக் கடலென விரங்கி யேங்கினர்.

மறு அறு கற்பினர் - குற்றமற்ற கற்புடையவர்களான, அரசன் தேவியர் - சக்கரவர்த்தியின் தேவிமார், அறுபதினாயிரர் - அறுபதினாயிரம் பேர், மழை கண் நீரினர் - மழைபோலச் சொரியும் கண்ணீருடையவர்களாயும், திறந்த வாயினர் - (அழுகையால்) திறந்த வாயுடையவர்களாயும், சிறுவனை தொடர்ந்தனர் - இராமனைத் தொடர்ந்து, எறி திரை கடல் என இரங்கி - அலையெறியும் கடல் போலத் திரண்டு வாய் விட்டழுது, ஏங்கினார் - மனம் வாடினர்.

இதுகாறும் பிறர் துயரநிலையைக் கூறி வந்தவர், இதுமுதல் ஆறு கவிகளால் அரசன் தேவிமாரின் நிலையைக் கூறுகின்றார். சக்கரவர்த்தி ஆண்ட ஆண்டுகள் அறுபதினாயிரமென்றாற்போல, அமைச்சர், மனைவியர் தொகையும் அறுபதினாயிர மென்பர் கம்பர். முதனூல் மனைவியர் முந்நூற்றைம்பதின்மர் என்கின்றது. இவர்கள் எத்துணைய ராயினும் 'பட்டமகிஷியர்' என்ற பெருமைக்குரியவர் மூவரே. பெருந் தொகையினரின் பரப்பாலும், அவர்கள் வாய்விட்டழுத பேரொலியாலும் கடல் உவமையாயிற்று. சிறுவன் - மகன். நீரினர், வாயினர், தொடர்ந்தனர் ; முற்றெச்சங்கள்.

சில பிரதிகளில் 'கிளையினு நரம்பினும்' (474) என்ற பாடல் இவ்விடத்துள்ளது.

(பி - ம்) 1. அறுபதினாயிரம்; தேவிமார்.
2. கற்பினார்.
3. சிறுவரைத்; சிறந்தவாயினர், செங்கண்மோதிக்கை.
4. ஏங்குவர், ஏங்குவார். (177)

473. கன்னிநன் மயில்களுங் குயிற்க ணங்களும்
அன்னமுஞ் சிறையிழந் தவனி சேர்ந்தன
என்னவீழ்ந் துழன்றன ரிராம னல்லது
மன்னுயிர்ப் புதல்வரை மற்றும் பெற்றிலார்.

இராமன் அல்லது - இராமனையன்றி, மற்றும் மன் உயிர் புதல்வரை பெற்றிலார் - வேறு நிலைபெற்ற தம் உயிர் போன்ற புதல்வரைப் பெறாத அவர்கள், கன்னி நல் மயில்களும் - இளமையான நல்ல மயில்களும், குயில் கணங்களும் - குயிலின் கூட்டமும், அன்னமும் - அன்னப் பறவைகளும், சிறை இழந்து - தம் தம் சிறகுகளை இழந்து, அவனி சேர்ந்தன என்ன - தரையில் விழுந்தன என்னும்படி, வீழ்ந்து - விழுந்து, உழன்றனர் - நிலைதடுமாறினர்.

தேவிமாரின் சாயல், குரல், நடை ஆகியவற்றுக்கு முறையே மயில், குயில், அன்னம் என்ற மூன்றும் உவமையாயின. இராமன் சிறகு; அவன் பிரிதலால் சிறகு இழந்த பறவைகளைப் போலாயினர். இவருள் ஒருவருக்கும் புதல்வர்ப் பேறின்மையின், இவரனைவரும் இராமனையே தாம் தாம் பெற்ற புதல்வனாகக் கருதியிருந்தனர்.

(பி - ம்.) 1. கன்னிமார்; குயிலிற் நண்கஞம்.
2. சிறகழிந்து; சேர்ந்தென, சோர்ந்தன, விழ்ந்தன, வீழ்ந்தென, வீந்தன.
3. உழந்தனர், உழந்தன, உழைத்தனர், உளைந்தனர், உளைத்தனர், இரைத்தனர்.
4. புதல்வனை; பேறிலார். (178)

474 கிளையினு நரம்பினு நிரம்புங் கேழன
அளவிறந் துயிர்ப்புவிட் டரற்றுந் தன்மையால்
தொளைபடு குழலினே டியாழ்க்குந் தோற்றன
இளையவ ரமுதினு மினிய சொற்களே.

இளையவர் - இளம் பருவத்தினரான அம் மங்கையரின், அமுதினும் இனிய சொற்கள் - அமுதத்தைவிட இனியனவான சொற்கள், கிளையினும் - குழலோசையினும், நரம்பினும் - யாழொலியினும், நிரம்பும் கேழன - நிரம்பிய சுவையுடனவாய் முன்பு இருந்தன; (இப்போது) அளவு இறந்து உயிர்ப்பு விட்டு - அளவு கடந்து பெருமூச்செறிந்து, அரற்றும் தன்மையால் - புலம்பும் தன்மையினுல், தொளைபடு குழலினேடு - தொளைகள் பொருந்திய குழலோசைக்கும், யாழ்க்கும் - யாழோசைக்கும், தோற்றன - தோற்று நயமிலாதனவாயின. ஏ : ஈற்றசை.

இம்மங்கையர், பட்டத்தரசியர்க்குப் பின் அவ்வப்போது சக்கரவர்த்தியால் மணந்துகொள்ளப்பெற்றவராதலின், இளையவர் என்ருர். அவர்களுடைய சொற்கள் குழலையும், யாழையும் வென்று, அமுதினும் மிக்க சுவை யுடையனவெனச் சிறப்பித்து, அத்தகையவை இப்போது அழுகை காரணமாகத் தம் தன்மை கெட்டு, அக் குழலுக்கும் யாழுக்கும் தோற்றன என்ருர்.

கிளை - மூங்கில்; குழலுக்கு ஆகுபெயராய் அதனிசையைக் குறித்தது. நரம்பையும் இவ்வாறே கொள்க. கேழ் - சுவை.

முதல் இரண்டடிகள் ஒரு பிரதியில்,

இளபயி னரம்பினு மினிய வோசையர்
அளவறு துயரியை யரற்றுந் தன்மையால்

என்று காணப்படுகின்றன.

(பி - ம்.) 1. கிளையெனும், கிளியினும்; நரம்பிலும்; நிரம்பும் கேழன, கேழென, கேண்மைய, கேளன, கேளென, நிரம்புகேழன, கேளென.
2. அளவிறந்துயிர்க்கவிட்டு, அளவிறந்துயரவிட்டு, அளவறு துயர்க் கழிந்து, துயரம்விட்டு, அளவறுந்துயர்க்கழிந்து.

3. தொளைபடும், தொளைபயில், துளைபடு, துளைபயில்; யாழ்க்குத், யாழும். (179)

475. புகலிடங் கொடுவனம் போலு மென்றுதம்
மகன்வயி னிரங்குறு மகளிர் வாய்களால்
அகன்மதி னெடுமனை யரத்த வாம்பல்கள்
பகலிடை மலர்ந்ததோர் பழனம் போன்றவே.

புகல் இடம் கொடு வனம் போலும் என்று - (நீ) புகுதற்குரிய இடம் கொடிய காடுதானோ என்று சொல்லி, தம் மகன் வயின் - தம் மகனான இராமனைக் குறித்து, இரங்கு உறும் - அழுதல் மிக்க, மகளிர் வாய்களால் - அத்தேவியருடைய (சிவந்த) வாய்களின் தோற்றத்தால், அகல் மதில் நெடு மனை - அகன்ற மதில்கள் சூழ்ந்த பெரிய மாளிகைகள், அரத்தம் ஆம்பல்கள் - செவ்வல்லிப் பூக்கள், பகல் இடை மலர்ந்தது ஓர் பழனம் போன்ற - பகற்காலத்திலே மலரப் பெற்றதொரு வயல் போன்று இருந்தன. ஏ : ஈற்றசை.

மகளிரின் திறந்த வாய்களுக்கு மலர்ந்த செவ்வல்லிப் பூக்கள் உவமை. ஆம்பல் இரவில் மலர்வதாகலின், 'பகலிடை மலர்ந்தாற் போல' என இல்பொருளுவமையாற் கூறினர். அவர்கள் தங்கியிருந்த அந்தப்புர மாளிகை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பழனம் போன்றிருந்தது என்க. அரத்தம் - செந்நிறம்.

சில பிரதிகளில் இப்பாடல், 'தாயருங் கிளைஞரும்' (478) என்ற தன்பின் உள்ளது.

(பி - ம்.) 1. புகலியல் கொடுவனம் போதும்; என்றதம், என்றுதன்.
2. மகவயின்; இரங்குமம்; வாய்களாம், வாய்கடாம்.
3. மதினெடுநகர், மதினெடுமிலை, மதிணெடுமனை; ஆர்த்தவாம்பல்கள், திகழ்செடு மனையுளாரரத்த வாம்பல்கள். (180)

476. திடருடைக் குங்குமச் சேறுஞ் சாந்தமும்
இடையிடை வண்டலிட் டார மீர்த்தன
மிடைமுலைக் குவடொரீஇ மேகலைத்தடம்
கடலிடைப் பரந்தகட் கலுழி யாறரோ.

கண் கலுழி ஆறு - (அவர்களுடைய) கண்ணீர்ப் பெருக்கா லாகிய ஆறுகள், மிடை முலை குவடு ஒரீஇ - நெருங்கிய தனங்க ளாகிய மலைச் சிகரங்களை விட்டு நீங்கி, திடர் உடை(ய) - (அத்தனங் களிலே) மேடாக அப்புதலுடைய, குங்குமம் சேறும் - குங்குமக் குழம்பும், சாந்தும் - சந்தனக் குழம்பும், இடை இடை வண்டல் இட்டு - இடையிடையே வண்டலாகப் படிய, ஆரம் ஈர்த்தன - முத்து வடங்களை இழுத்துக்கொண்டு (ஓடி), மேகலை திடம் கடல் இடை -

மேகலையணிந்த கடிதடமாகிய கடலினுள், பரந்த - (புகுந்து) பரவின. அரோ : அசை.

கண்ணீர்ப் பெருக்கை ஆறாக உருவகித்து, ஆற்றின் தொழில் களையும் ஏற்றிக் கூறுகின்றார். மலைமீது பெய்யும் மழைநீர் அருவியாக விழுந்து ஆறாகிச் சில பொருள்களை வண்டலாகப் படிவித்தும், சில பொருள்களை இழுத்துக்கொண்டும் ஓடிக் கடலில் புகுவதுபோல, மாதர்களின் தனங்களாகிற மலையில் மழையாகப் பொழிந்த கண்ணீர் ஆறாகி அதிற் கரைந்த குங்குமச் சந்தனச் சேறு வண்டலிட மாலையின் முத்துக்களை இழுத்துக்கொண்டு ஓடிக் கடிதடமாகிய கடலினுட் புகுந்தது. ஆற்றின் உருவகத்துக்கேற்பத் தனங்களை மலையாகவும், கடிதடத்தைக் கடலாகவும் உருவகித்தார். ஆற்றுக்குக் காரணமான மழையும் கொள்க.

சில பிரதிகளில் இப்பாடலின் 2, 3-ஆம் அடிகள் முன்பின்னாக மாறியுள்ளன. ஒரு பிரதியில் இப்பாடல் இல்லை.

(பி - ம்.) 1. திடருடை குங்குமம் சேறும்; சந்தமும்.
3. குவட்டொரீஇ, கோட்டொரீஇ, மிடன்முலைக் குவட்டொரீஇ, மிடன்மலைக் கோட்டொரீஇ, மிடருடைக்குவட்டொரீஇ, இடை முலைக்குவடொரீஇ.
4. கடலெனப்; புகுந்தகட், புகுந்ததந், பாய்ந்தகட், பரந்ததக், கலந்ததக், பெயர்ந்தகட். (181)

477. தண்டலைக் கோசலத் தலைவன் மாதரைக்
கண்டன னிரவியுங் கமல வாண்முகம்
விண்டலத் துறையுநல் வேந்தற் காயினும்
உண்டிட ருற்றபோ தென்னு றுதன.

தண்டலை - சோலைகள் சூழ்ந்த, கோசலம் தலைவன் மாதரை - கோசல நாட்டு இறைவனான தசரதன் உரிமைத் தேவியருடைய, கமலம் வாள் முகம் - தாமரை மலரைப் போன்ற ஒளியுள்ள முகங்களை, இரவியும் கண்டனன் - (இதுவரை கண்டிராத) சூரியனும் (அன்று) கண்டான்; விண் தலத்து உறையும் - சுவர்க்கத்தில் வாழ்கிற, நல் வேந்தற்கு ஆயினும் - சிறப்புடைய தேவேந்திரனுக்கே யானாலும், இடர் உண்டு-துன்பம் என்பது உண்டு;(இடர்)உற்றபோது- அத்துன்பம் வந்தபோது, உறுதன என் - வாராத தாழ்வுகள் யாவுள?

தசரதன் தேவிமார் இதுவரை அந்தப்புரத்தை விட்டு வெளியே வந்தறியாதவர்கள்; ஆதலின் இரவி அவர்களைக் கண்டதில்லை; இப்போது இராமன்பொருட்டு அவர்கள் வெளியே வந்ததனால் இரவியும் கண்டனன். தாமரையை இரவியின் மனைவியென்பர்; இவர்கள் முகத்தை அவன் தாமரையென்று கருதிக் கூர்ந்து நோக்கு தலால் தாழ்வாயிற்று. 'எத்தகைய சிறப்புடையவர்க்கும் இடர்

வருதலும், அதனுல் அவர்கள் தாழ்வெய்துதலும் இயல்பு' என்ற பொதுப் பொருளை, இம்மாதர் செய்தியாகிய சிறப்புப் பொருளால் பெற வைத்தலின் வேற்றுப்பொருள் வைப்பணி.

தண்தலை - குளிர்ந்ததாகிய இடம்; பண்புத் தொகை அன்மொழி யாய்ச் சோலைக்காயிற்று. வேந்தன் - இந்திரன்; "வேந்தன் மேய தீம்புன லுலகமும்" (தொல். பொருள்). வேந்தற்காயினும் : உம்மை, உயர்வு சிறப்பு. இந்திரனுக்கும் இடர் வருவதுண்டெனின், தசரதனும் அவனைச் சார்ந்தாரும் இடருற்றமை இயல்பே என்க. இடர், இடை நிலை விளக்காய் முன்னும் பின்னும் இயைந்தது.

ஒரு பிரதியில் இதனையடுத்து 507-ஆம் பாடல் காணப்படுகின்றது.

(பி - ம்.) 1. கோசலை தலைவன்.
2. கண்டனனிரவியங்.
3. விண்டலத்துறையுநர், விண்டலத்துறையுளாம், விண்டலத்துறை யுனல், விண்டலத்துறையுளார்; வேந்தர்க்காயினும்.
4. உண்குடரொத்தபோது, எண்டவருற்றபோது; என்னுருதவே, என்னுருதென. (182)

478. தாயருங் கிளைஞருஞ் சார்ந்து ளார்களும்
சேயரு மணியருஞ் சிறந்த மாதரும்
காயெரி யுற்றன ரனைய கவ்வையர்
வாயிலு முன்றிலு மறைய மொய்த்தனர்.

தாயரும் - (முற்கூறிய) தாய்மார்கள் அறுபதினுயிரவரும், கிளைஞரும் - பிற உறவினரும், சார்ந்து உள்ளார்களும் - அவர்களைச் சார்ந்துள்ளவர்களுமாய், சேயரும் அணியரும் - சேய்மை யிலும் அண்மையிலும் உள்ளவர்களான, சிறந்த மாதரும் - சிறந்த பெண்டிரும், காய் எரி உற்றனர் அனைய - எரியும் தீயிற் புகுந்தவர் போன்ற, கவ்வையர் - துன்பமுடையவராய், வாயிலும் முன்றிலும் மறைய - மாளிகைகளின் வாயில்களும் முற்றங்களும் மறையும் வண்ணம், மொய்த்தனர் - கூடி நெருங்கினர்.

இதனுல், இராமபிரான்பால் பெண்டிர் அனைவருடைய அன்பு மிகுதியும் அதனுல் அவர்களுற்ற துன்பமும் புலனுகும். அத்துன்ப மிகுதிக்குத் தீயிற் புகுந்தாற்போன்ற தன்மையை உவமித்தார். 'சிறந்த மாதர்' என்றமையின், இவரனைவரும் அரண்மனையின் தொடர்பு உடையவர் என்பது பெறப்படும்.

ஒரு பிரதியில் இப்பாடல் இல்லை.

(பி - ம்.) 1. சார்ந்துளோர்களும்.
2. சேயருமகளிரும், முதியரும்; சிறந்தமாந்தரும், சிறந்துளோர்களும்,
3. உற்றனரனையர், உற்றனவனைய; கௌவையர், கௌவையால்.
4. வாயினும். (183)

இராமபிரான் தன் மாளிகையை நோக்கிச் செல்லல்

479. இரைத்தன ரிரைத்தெழுந் தேங்கி யெங்கணும்
திரைப்பெருங் கடலெனத் தொடர்ந்து பின்செல
உரைப்பதை யுணர்ந்தில னொழிப்ப தோர்கிலன்
வரைப்புயத் தண்ண றன் மனையை நோக்கினான்.

(மொய்த்த பெண்டிர் எல்லோரும்), இரைத்தனர் - ஆரவாரித்தனர்; இரைத்து எழுந்து - ஆரவாரித்து எழுந்து, எங்கணும் - எல்லாப் பக்கமும், திரை பெரு கடல் என - அலைகளையுடைய பெருங் கடலைப் போல, பின் தொடர்ந்து செல - (இராமபிரானைப்) பின் தொடர்ந்து செல்லாநிற்க, வரை புயத்து அண்ணல் - மலைபோன்ற தோள்களை உடைய இராமபிரான், உரைப்பதை உணர்ந்திலன் - (அவர்களுக்கு) யாது சொல்வதென்று அறியாமலும், ஒழிப்பது ஓர்கிலன் - (அவர்கள் தொடர்வதை) நிறுத்தும் வகையை அறியாமலும், தன் மனையை நோக்கினான் - தன் மாளிகையை நோக்கிச் செல்லலானான்.

தாய்மார் அறுபதினாயிரவரைப்பற்றிச் சொல்லத் தொடங்கிய போதே, "எறிதிரைக் கடலென விரங்கி யேங்கினார்" (472) என்றவர், இங்கே அவர்களோடு பிற மகளிரும் சேரத் திரள் மிகப் பெரிதாயினமையின், 'திரைப்பெருங் கடலென' என்றார். ஆரவாரம், பேரழுகையால் ஆகியது. உணர்ந்திலன், ஓர்கிலன் : முற்றெச்சம்.

(பி - ம்.) 1. இரைத்தழுதேங்கி, உரைத்தன ரிரைத்தெழுந்தோங்கி.
3. உரைப்பவொன்று, உரைப்பவென்று; உணர்கிலர், உணர்கிலன்; ஒழிப்பதோர்கிலர், ஒழிப்பதோர்ந்திலன், ஒழியப்போகிலான், ஒழிவதோர்கிலர், ஒளிப்பதோர்கிலன். (184)

ஊரவர் செயல்

480. நன்னெடு நளிமுடி சூட நன்மணிப்
பொன்னெடுந் தேர்மிசைப் பவனி போனவன்
துன்னெடுஞ் சீரையைச் சுற்றி மீண்டுமப்
பொன்னெடுந் தெருவிடைப் போத னோக்கினர்.

நல் நெடு நளி முடி சூட - அழகுமிக்க பெருமை தங்கிய முடியைச் சூட்டிக்கொள்ளும்பொருட்டு, நல்மணி - நல்ல மணிகள் பதிக்கப்பெற்ற, பொன் நெடு தேர்மிசை - பொன்னால் இயன்ற பெரிய தேரில், பவனி போனவன் - உலாப் போன இராமன், துன் நெடு சீரையை சுற்றி - தைக்கப்பட்ட நீண்ட மரவுரியை அரையிலே சுற்றிக்கொண்டு, மீண்டும் - திரும்பவும், அ பொன் நெடு தெரு இடை போதல் - அந்த அழகிய பெரிய வீதியிலே நடந்து செல்லுதலை, நோக்கினர் - பலரும் பார்த்தனர்.

முன்னே இராமபிரான் முடி சூடுதற்பொருட்டுத் தேரிற் சென்றதும், அப்போது நிகழ்ந்த மகிழ்ச்சிச் செயல்களும் 267–ஆம் கவி முதலிய வற்ருல் விளங்கும். அப்போது பொன்னுடையும் அணிகலன்களும் உடையவனுய்க் கண்டோர் கண்ணும் மனமும் களிக்கச் சென்றவன், இப்போது அணிகலன் ஏதுமின்றி, அரையிலே மரவுரி சுற்றிக் கொண்டு, கண்டோர் துயர் கூர, அந்த வீதியிலே நடந்து சென்ருன்.

நளி - பெருமை; உரிச்சொல். முடியின் சிறப்புக் குறிக்க, 'நன்னெடு நளி முடி' என விசேடித்துக் கூறினர். பவனி - உலா; சிறப்பு நாட்களில் ஊர்வலஞ் செல்லுதல் போன்றது. மரவுரி ஒன்ரே டொன்று இணைத்துத் தைக்கப்பெற்றதாகலின், 'துன்நெடுஞ் சீரை' என்ருர். அதன் இழிவு தோன்றச் 'சுற்றி' என்ருர்.

(பி.ம்.) 1. களிர்முடி, மணிமுடி, கன்னெடுங் கதிர்முடி, மு. மின்னெடு மணிமுடிசூட வேந்தனிப்.
2. பன்னெடும் தேரொடும், தேரொடு, தேரிடைப்; போயவன்.
3. துன்னரும், வன்னெடும்.
4. போதல் மேயினுன். (185)

481. அஞ்சன மேனியிவ் வழகற் கெய்திய
வஞ்சனை கண்டபின் வகிர்ந்து நீங்கலா
நெஞ்சினும் வலிதுயிர் நினைப்ப தென்சில
நஞ்சினும் வலியநந் நலமென் ருர்சிலர்.

அஞ்சனம் மேனி - கரிய மை போன்ற திருமேனியையுடைய, இ அழகற்கு எய்திய - இந்தப் பேரழகனுன இராமனுக்கு நேர்ந்த, வஞ்சனை கண்டபின் - வஞ்சனையாலாகிய தீமையை உணர்ந்த பின்னும், வகிர்ந்து நீங்க அல்லா - பிளந்து போகாத, நெஞ்சினும் - நம் நெஞ்சைக் காட்டிலும், உயிர் வலிது - உயிர் வலியதா யிருக் கின்றது; சில நினைப்பது என் - வேறு சில வகையாக நினைப்பதென்ன பயன்? நம் நலம் நஞ்சினும் வலிது - நாம் இதுகாறும் பெற்ற நன்மை விடத்தினும் மிக்க கொடியது, என்ருர் சிலர் - என்று கூறினர் சிலர்.

குமரரைத் தவக் கோலத்தோடு கண்ட பலரும் பலவாறு கூறி வருந்துவாராயினர். அதனை இதுமுதற் பதினுன்கு பாடல்களிற் கூறுகின்ருர். வஞ்சனை : ஆகுபெயர். முடி சூடும்படி முதலிற் கூறிப் பின்னர் அதனை மாற்றினமையின் வஞ்சனையென்றனர். 'இராமனுக்குத் தீங்கு நேர்ந்ததை அறிந்தவுடனேயே நம் நெஞ்சு பிளந்து உயிர் போயிருத்தல் வேண்டும். அவ்வாறின்றி நாம் இப்போது இவனை இந்தக் கோலத்தோடு கண்ட பின்னும் உயிரோடு இருக்கின்ருேம்; நம் மனமும், உயிரும் உடம்பும் மிக வலியன' என்று குறைப்படுகின்றனர். இதுகாறும் அமுதுபோன்றிருந்த வாழ்வு முதலிய நலங்கள் இராமனைப்

பிரிந்ததனால் நஞ்சுபோல ஆயின என்றார். நஞ்சுக்கு வலிமை அதன் கொடுமையாதலின் இங்கே அப்பொருளைக் கொள்க.

(பி - ம்.) 1. மேனியவ்.
2. வருந்து, வரிந்து; நீக்கலா, நீங்கிலா, நீங்கலான்.
3. வலித்துயிர், வலிதுயரம், வலிதுரு, வலியரு, வலியன, வலியினுன், வலியரா; என்கடி; மு. நெஞ்சினே மினிப்பல வினைப்பதென்னமுல்.
4. வலியனநலம், வலியநன்னலம், வலியது நலம், வலிது நம்மனம், வலிய நம்மனம், கொடிது நந்நலம். (186)

482. மண்கொடு வருமென வழியி ருந்ததியாம்
எண்கொடு சுடர்வனத் தேகல் காணவோ
பெண்கொடு வினைசெயப் பெற்ற நாட்டினில்
கண்கொடு பிறத்தலுங் கடையென் றார்சிலர்.

மண்கொடு வரும் என - (இராமன்) நாட்டை ஆளும் அரசுரிமையைப் பெற்று முடி சூடி வருவானென்று கருதி, யாம் வழி இருந்தது - நாமெல்லாம் அவன் வரும் வழியில் எதிர்பார்த்து இருந்தது, எண் கொடு - (அவன் நம்) மனத்தையெல்லாம் கவர்ந்து கொண்டு, சுடர் வனத்து ஏகல் காணவோ - கடு வெயில் காயும் காட்டிற்குச் செல்வதைக் காண்பதற்கோ? பெண் - பெண் ஒருத்தி, கொடுவினை செய பெற்ற நாட்டினில் - (தகாத முறையில்) கொடுஞ் செயல் செய்ய அமைந்த இந்த நாட்டிலே, கண்கொடு பிறத்தலும் கடை - (பார்க்கும்) கண்களைக் கொண்டு பிறந்திருப்பதும் கீழாகும், என்றார் சிலர்—.

முடிசூடிப் பவனி வருதலைப் பார்க்கலாமென்று கருதியிருந்த தமக்கு, அதற்கு மாறான காட்சியைக் காண நேர்ந்ததனால், தம் கண்கள் பயனற்றவை என்கின்றனர். குருடராயின், இத்தகைய காட்சியைக் காணப்பெறாராகலின், 'கண்கொடு பிறத்தலும் கடை' என்றனர். உயர்வாகக் கருதப்படும் கண்ணுடையவராய்ப் பிறத்தலும் இங்கே கடையாயிற்று என்றபடி. கணவன் வழி நிற்க வேண்டியவள், கணவனைத் தன் வழிப்படுத்தித் தாழ்விழைத்தனள்; அஃது இந் நாட்டில் நிகழத் தக்கதன்று என்பார், 'பெண்கொடு வினைசெயப் பெற்ற நாட்டினில்' என்றனர். எண்கொடு - தான் ஓர் எண்ணத்தைக் கொண்டு என்றலுமாம்.

(பி - ம்.) 1. வருமென்று; வழியிருந்தநாம், வழியிருந்துயாம், வழியிருந்தயாம், வழியிழிந்தவர், வாழ்ந்திருந்தயாம், மகிழ்ந்திருந்தயாம்.
2. எண்கொடும், துடர்வனத்து, துயர்வனத்து, தொடர்வனத்து; எய்தல்; காணவா, காணவே, காணவோர், காண்கவோ.
3. மனைசெயப்; நாட்டினிக்.
4. பிறத்தலில் என்பார் சிலர். (187)

483. முழுவதே பிறந்துல குடைய மொய்ம்பினேன்
உழுவைசேர் கானகத் துறைவென் யானெனு
எழுவதே யெழுதல்கண் டிருப்ப தேயிருந்
தழுவதே யழகிதிவ் வன்பென் ருர்சிலர்.

பிறந்து - மூத்த மகனுகப் பிறந்து, உலகம் முழுவதே உடைய - உலகம் முழுவதுமே தனக்குரிமை பூண்ட, மொய்ம்பினேன் - வலிமையுடைய இராமன், (அவ்வுரிமையைக் கைவிட்டு) உழுவை சேர் - புலிகள் வாழ்கின்ற, கானகத்து உறைவென் யான் - காட்டிலே வசிப்பேன் நான், எனு - என்று சொல்லி, எழுவதே - காட்டுக்குப் புறப்படுவதோ! எழுதல் கண்டு - (அவ்வாறு அவன்) புறப்படுதலைப் பார்த்துக்கொண்டு. இருப்பதே - (வறிதே நாம் இங்கு) இருப்பதோ! இருந்து அழுவதே - அவ்வாறு இருந்துகொண்டு (அவன் பிரிவுக்காக) அழுவதோ! இ அன்பு அழகிது - இவ்வாருகிய நம் அன்பு மிக அழகாயிருக்கின்றது! என்ருர் சிலர்—.

'நாமெல்லாம் இராமன்பால் உண்மையான அன்புடையோமென்ருல், முன்னமே உயிர் துறந்திருத்தல்வேண்டும்; அல்லது அவனுடன் காடு செல்லவேண்டும்; இரண்டுமின்றி வறிதே இருந்து அழுவதனுல், நமது அன்பு பயனற்றதே' என்கின்றனர். இராமன் பிறப்பினுலேயே அரசுக்கு உரிமை பூண்டவன்; அது மட்டுமின்றிப் பரசுராமனை வென்ற வலிமையாலும் உரிமையுடையவன் என்ற குறிப்பினுல் 'மொய்ம்பினேன்' என்றனர். அத்தகையவன், தந்தைக்கு இணங்கி நான் காடு செல்வேனென்று எழுகின்ருனே யென்பார், 'கானகத் துறைவென் யானெனு எழுவதே' என்கின்றனர். முழுவதுமே எனற்பால உம்மை தொக்கது.

சில பிரதிகளில் இப்பாடலும் அடுத்ததும் முன்பின்னுக உள்ளன.

(பி - ம். 1. உலகடைய; முன்பினன், முன்பினேன்.
2. உழுவையங்கானகத்த.
3. எழுவகண்டு; இருப்பதேயிழுந்து.
4. அழகிதில்வன்பென்பார், அழகிதேயன்பென்ருர், அழகிதெம்மன்பென்ருர், அழகிதில்வனமென்ருர். (188)

484. வலங்கடிந் தேழைசொற் கொண்ட மன்னனை
நலங்கடிந் தறங்கெட நயத்தி யோவெனுக்
குலங்கடிந் தான்வலி கொண்ட கொண்டலை
நிலங்கடிந் தாளொடு நிகரென் ருர்சிலர்.

சிலர்—, வலம் கடிந்து - தன் வலிமையை விட்டு, ஏழை சொல் கொண்ட - பெண்ணின் சொல்லைப் பெரிதாகக் கொண்ட, மன்னனை - (தந்தையாகிய) அரசனை, நலம் கடிந்து - நன்மையை நீக்கி, அறம்

கெட நயத்தியோ - தருமம் கெட விரும்புகின்றாயோ, எனு - என்று (மறுத்துக்) கேளாத, குலம் கடிந்தான் வலிகொண்ட கொண்டலை - அரசர் குலத்தைப் பழித்த பரசுராமனது வலிமையைத் தனதாக்கிக் கொண்ட மேகவண்ணனான இராமனை, நிலம் கடிந்தாளொடு நிகர் - (இவனும்) தனக்கு நாட்டை ஆளும் உரிமையை நீக்கிய அக் கைகேயிக்கு ஒப்பாவான், என்றார்—.

'பெண்ணின் பேச்சைக் கேட்டு முறை தவறிய தந்தையை, இராமன் நியாயங் கூறி மறுத்து, வனம் போகாதிருத்தற்குரியன். அங்ஙனமன்றி, நாடு முழுதும் நலங் கெட நான் காடு செல்வேன் என்பதனால், நாட்டுக்குத் தீங்கு விளைத்த அக் கைகேயி போன்றவனே இவனும்' என அன்பு மேலீட்டாற் கூறுகின்றனர்.

எனு - என்னாத; ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். எனாத கொண்டல், குலங்கடிந்தான் வலிகொண்ட கொண்டல் என இயைக்க. கொண்டல், நிறத்தாலும் உலகு புரக்கும் தன்மையாலும் இராமபிரானுக்கு ஆயிற்று; ஆகுபெயர். நிலம் - நிலத்தையாளும் உரிமை; "மண்கொடு வரும்" (482) என்றாற்போல. இதுவும் ஆகு பெயர்.

இக்கவியிற் பாடபேதங்கள் பல; உரை வேறுபாடுகளும் பல.

(பி - ம்.) 1. வலங்கடந்து, வளங்கடிது; ஏழையராய, ஏழையரான, ஏழையனை, ஏழையினைய, மன்னரை, மன்னருள், மன்னனும், மன்னரு.
2. நலங்கடத்து; நயத்திபோலெனக், நயக்கிலாததம், நயத்திரோ வெனக், நயத்திரோறும, நயத்தலோம்மிக, நயந்திரோ வெனக், நயத்திராலெனக்; நடந்த மன்னர்தம்.
3. குலங்கடிந்தவன்வலி, குலங்கடிந்தாள்வலி, குலங்கடிந்தனர்வரி, குலங்க்டிந் திவ்வணம், குலங்கடந்தான்வலி, கொண்டலின்.
4. நலங்கடிக்தாளொடு. ( )

485. திருவரை சுற்றிய சீரை யாடையன்
பொருவருந் துயரினன் றொடர்ந்து போகின்றான்
இருவரைப் பயந்தவ ளீன்ற காளை
ஒருவனே யிவற்கிவ் வூருறவென் றார்சிலர்.

இருவரை பயந்தவள் ஈன்ற - இரண்டு குமாரர்களை உலகுக்கு அளித்த சுமித்திரை பெற்ற, காளை - (மூத்த) புதல்வனான இலக்குவன், திரு அரை சுற்றிய - (தனது) அழகிய அரையைச் சூழ்ந்த, சீரை ஆடையன் - மரவுரி உடையைக் கொண்டவனும், பொருவு அரும் துயரினன் - இணையில்லாத பெருந் துயரம் உடையவனும் ஆகி, தொடர்ந்து போகின்றான் - (இராமனைப்)பின் தொடர்ந்து செல்கின்றான்; இவற்கு - இந்த இராமனுக்கு, இ ஊர் - இந்த நகரத்தில், உறவு ஒருவனே - உறவாயுள்ளவன் அவனொருவன்தானே? என்றார் சிலர்—.

'ஊரில் எல்லோரும் இராமன்பால் அன்புடையவர் போலப் பேசுகின்றாரேயன்றி, அவனைத் தொடர்ந்து வனம் போவார் இலக்குவன் ஒருவனைத் தவிரப் பிறரில்லையே! அதிலும், அண்ணனைப் போலவே தவக்கோலங் கொண்டு தாங்கொணாத் துயரோடு செல்கின்றான். அவனுடைய அன்பன்றோ அன்பு!' என்கின்றனர். "இராமன் பின்பு, பிறந்தானு முளனென்னப் பிரியாதான்" (1068) எனப் பின்னர் இலக்குவனைக் கூறும் பரதன் கூற்றும் காண்க. பட்டத்துத் தேவிமாருள் சுமித்திரையே இரு புதல்வரைப் பெற்றவளாதலின், 'இருவரைப் பயந்தவள்' எனப்பெற்றாள்.

(பி - ம்.) 1. திருவரையுரியினன், சீரவாடையன், சடையின் சென்னியன், சடையன், சென்னியின்.
2. பொருவருந் துயரினும்.
3. கார்முனை.
• ஒருவனேயிவற்கவ்வூர். (190)

486. முழுக்கலின் வலியநம் மூரி நெஞ்சினை
மழுக்களிற் பிளத்துமென் றோடு வார்வழி
ஒழுக்கிய கண்ணினிற் கலுழி யூற்றிடை
இழுக்கலி னிழுக்கிவீழ்ந் திடருற் றார்சிலர்.

சிலர்—, முழு கல்லின் வலிய - பெரும் பாறையினும் வலிமையுடைய, நம் மூரி நெஞ்சினை - நம்முடைய கடிய நெஞ்சத்தை, மழுக்களின் பிளத்தும் என்று - கோடரியாற் பிளப்போமென்று கருதி, ஓடுவார் - ஓடுகின்றவர்கள், வழி - வழியிலே, ஒழுக்கிய - (தாங்கள்) சொரிந்த, கண்ணினில் கலுழி ஊற்று - கண்ணீர்ப் பெருக்காலாகிய ஊற்று, இடை இழுக்கலின் - இடையிடையே (சேருகி) வழுக்குதலால், இழுக்கி வீழ்ந்து - வழுக்கி விழுந்து, இடர் உற்றார் - துன்பமுற்றனர்.

'இராமனுக்குற்ற துன்பம் கண்டும், தாமே பிளந்து போகாத வலிய நெஞ்சத்தைக் கருவி கொண்டாயினும் பிளந்துவிடுவோம் என்று கருதிக் கோடரியைத் தேடிப் போகின்றனர்' என அவர்கள் துயர நிலையைப் புலப்படுத்துகின்றார்; 481 பார்க்க. மூரி - வலிமை; இங்கே கடினத் தன்மையை உணர்த்திற்று. கண்ணீர் இடையறாதொழுகுதலின், ஊற்றுப்போலாயிற்று.

(பி - ம்.) 1. வலியன, வலியவன்.
2. பிளந்தும்; ஓடுவார்வரித்து, வழித்து.
3. கண்ணினிற்; கலுழியாற்றிடை, கண்ணினீர்க் கலுழியுற்றிடை, ஊற்றிடை, ஆற்றிடை, கலுழியாற்றிடையிழிந்திட, இடையிழிந்துடல், இடைவிழுந்துயிர், இடைவிழுந்துயர், இடைவிழுந்துய்யார்.
4. இழுக்கலில், ஒழுக்கலில்; வழுக்கி வீழ்ந்து, இழுக்கவிழ்ந்து. (191)

487. பொன்னணி மணியணி மெய்யிற் போக்கினர்
மின்னென மீனென விலக்கி மெய்விலைப்
பன்னிறத் துகிலினைப் பறித்து நீக்கியே
சின்ன நுண் டுகிலரைச் செறிக்கின் றூர்சிலர்.

சிலர் - சில பெண்கள், மின் என - மின்னற்கொடி போலவும், மீன் என - விண்மீன்கள் போலவும், மெய்யில் - தம் உடம்பிலே விளங்குகின்ற, பொன் அணி - பொன்னுபரணங்களையும், மணி அணி - இரத்தினுபரணங்களையும், விலக்கி போக்கினர் - கழற்றி யெறிந்தவர்களாய், மெய் விலை பல்நிற துகிலினை - விலைமிக்க பல வண்ணப் பட்டாடைகளையும், பறித்து நீக்கி - அவிழ்த்தொதுக்கிவிட்டு, சின்னம் நுண் துகில் - சிதைந்த சிறு நூலாடைகளை, அரை செறிக்கின்றூர் - அரையில் உடுத்துக்கொண்டனர். ஏ: அசை.

இராமபிரான் முடிசூடி வரும் திருக்கோலத்தைக் கண்டு மகிழ்தற் பொருட்டுத் தம்மை விலையுயர்ந்த ஆடையணிகளால் அலங்கரித்துக் கொண்டு வந்த மகளிர் சிலர், இப்போது அவற்றை வெறுத்து நீக்கி, மானங் காத்தற்பொருட்டு, அரையிலே பழந் துணிகளைமட்டும் உடுத்தனர் என்றவாறு. வெறுப்பு மிகுதி தோன்ற, துகிலினைப் பறித்து நீக்கி என்றூர். சின்னம் - சிதைவு. சின்ன - சிறிய என்றலுமாம்.

(பி.ம்.) 2. மின்னென்மின்னென; மின்னெனமின்னெளி; விளங்கு, விலங்கு; மெய்யிலாம், மெய்யினர், மெய்யிறப், மெய்பிடைப், மெல்லிழைப், மேகலை, மேகலைப், மேனியார்.
3. துகிலிடை, துகிலிடைப், துகிலுடை, துகிலெனப்; நீக்கினர், நீக்கினர், வீசினூர்.
4. நுண்டுகிலினைப், நுண்டுகில்களைப், அரை, இழை; புனைகின்றூர். (192)

488. நிறைமக வுடையவர் நெறிசெ லைம்பொறி
குறைமகக் குறையினுங் கொடுப்ப ராமுயிர்
முறைமகன் வனம்புக மொழியைக் காக்கின்ற
இறைமகன் றிருமன மிரும்பென் றூர்சிலர்.

சிலர்—, நிறை மக உடையவர் - பல புதல்வர்களை உடையவரும், (அப்புதல்வருள்ளே) நெறி செல் - புலன்களின் வழிச்செல்லும், ஐந்து பொறி - ஐம்பொறிகளுள், குறை மக - ஊனமுள்ள ஒரு புதல்வன், குறையினும் - குறைந்தாலும் (இறந்தாலும்), உயிர் கொடுப்பர் - (அம்மகன் பொருட்டுத்) தம் உயிரைக் கொடுப்பர்; ஆம் - இஃது உலக இயற்கையாகும்; (அங்ஙனம் இருக்க) முறை மகன் - (அரசுக்குரிய) முறையையுடைய சிறந்த மகன், வனம் புக - காடு புகவும், மொழியை காக்கின்ற - தன் சொல்லைக் காப்பாற்றுகின்ற, இறைமகன் - நம்

அரசனது, திருமனம் - அழகிய மனம், இரும்பு என்றார் - இரும்புதான் என்றனர்.

'பல குழந்தைகளைப் பெற்றிருந்து, அவற்றுள் அங்கவீனமுள்ள ஒரு குழந்தை போவதாயினும் அதன்பொருட்டு உயிரையுங் கொடுத்தல் உலக இயற்கை. அதற்கு மாறாக, நம் அரசன், வாய்மை காத்தல் என்ற பெயரால், உத்தமபுத்திரனைத் தானே காட்டிற்கு அனுப்பி விட்டு, இன்னும் உயிரோடு இருக்கின்றான்; அவன் மனம் இரும்பே' என்கின்றனர். நிறை மகவு : பன்மை குறித்தது. ஐம்பொறி குறைதல் - குருடு, செவிடு, முடம் முதலிய ஊனமுண்மை. திருமனம் : இகழ்ச்சிக் குறிப்பு.

(பி - ம்.) 1. செறியினைம்பொறி, செறிசெலைம்பொறிக்.
2. கொடுப்பர்தம்முயிர், கொடுப்பாருயிர், கொடுப்ப தம்முயிர்.
3. மொழியைக்காக்குநம், மொழியைத்தாங்கிய, மொழியய வேர்கின்ற
4. இருமனம். (193)

489. வானமே யனையதோர் கருணை மாண்பலால்
ஊனம்வே றிலானுட னுலகம் யாவையும்
கானமே புகுமெனிற் காதன் மைந்தனும்
தானுமே யாளுங்கொ றரையென் றார்சிலர்.

வானமே அனையது - மேகத்தையே ஒத்ததான, ஓர் - வேறு உவமை யற்ற, கருணை - அருளும், மாண்பு - பிற குணப் பெருமைகளும், அல்லால் - உடைமையல்லாமல், வேறு ஊனம் இலானுடன் - வேறு குறை ஒன்றும் இல்லாத இராமனுடன், உலகம் யாவையும் - நாடு முழுதும், கானமே புகும் எனில் - காட்டிற்கே போய்விட்டால், (அதன் பின் நம் அரசன்) காதல் மைந்தனும் தானுமே - தன் அன்புக்குரிய மகன் பரதனும் தானுமாகவே, தரை ஆளும் கொல் - வெறுந்தரையை (வறிதான நாட்டை) ஆள்வான்போலும்! என்றார் சிலர்—.

'நம் அரசன், இராமன்பால் அன்பை நீக்கிப் பரதனிடம் அதனை முழுதும் செலுத்துகின்றான் போலும்! இராமன் இருக்கும் இடம் அயோத்தியாதலால், நாடே திரண்டு அவனுடன் காடு புக விட்டுப் பின்னர்த் தானும் தன் மகனுமாக நாடு ஆட்சி நடத்தட்டும்' என்கின்றனர் சிலர்; இதுவும் இகழ்ச்சிக் குறிப்பே.

இப்பாடல், முந்திய அச்சுப் பதிப்புக்கள் பலவற்றிலும், சில ஏட்டுப் பிரதிகளிலும் இல்லை. சில சுவடிகளில் 'வாங்கிய' என்ற அடுத்த பாடலின் பின் உள்ளது. அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பிலும், எஸ். ராஜம் அவர்கள் பதிப்பிலும் இதனை மிகைப்

பாடலாகக் கொண்டனர். பாடல் பொருத்தமுடையதாக இருத்தலின் இங்கே மூலத்திலேயே சேர்க்கப்பெற்றது.

இப்பாட்டுச் சில பிரதிகளில் இல்லை.

(பி . ம்.) 1. மானமே, மானமெய்.
2. ஊனமேவேறிலான், ஊனமேவேறிலா; உலகம் மையவும், உவகை விட்டொழி, உவகைமையவும்.
3. புகுமினிக், புகவினிக்; காவல்மைந்தனும்.
4. ஆள்வதெத் தரையென்பார் சிலர். (194)

சில பெண்களின் செயல்

490. வாங்கிய மருங்குலை வருத்துங் கொங்கையார்
பூங்கொடி யொதுங்குவ போலொ துங்கினர்
ஏங்கிய குரலின ரிணைந்த காந்தளின்
தாங்கிய செங்கைதந் தலையின் மேலுளார்.

வாங்கிய மருங்குலை - உள் வாங்கி மெலிந்த இடையை வருத்தும் - வருந்தச் செய்கிற, கொங்கையார் - (பாரமான) தனங்களை உடைய மகளிர் சிலர், ஏங்கிய குரலினர் - (அழுகையால்) ஒடுங்கிய குரலை உடையவர்களாகியும், இணைந்த காந்தளின் - ஒன்றோடு ஒன்று இணைந்த காந்தள் மலரைப்போல, தம் தலையின் மேல் தாங்கிய செம் கை உள்ளார் - தம் தலைமேலே தாங்கப்பெற்ற (கூப்பிய) சிவந்த கைகளை உடையவர்களாகியும், பூ கொடி ஒதுங்குவபோல் - பூங்கொடிகள் நடந்து செல்வது போல, ஒதுங்கினர் - (ஒரு புறமாக) மெல்ல நடந்தனர்.

இம் மகளிர், இராமபிரான் ஒருகால் தன் மனந் திரும்பி வனம் போகாதிருத்தல் கூடுமோ என்ற ஆவலுடன் தம் கடவுளரைக் கைகூப்பித் தொழுதவாறு ஏங்கினர் என்னலாம். 'இணைந்த காந்தளின்' என்று உவமை கூறினமையின், இரு கையும் இணைத்துக் கூப்பினர் என்பது பெறப்படும்.

ஒரு பிரதியில் இப்பாடல் இல்லை.

(பி - ம்.) 1. மருங்குலா, மருங்குலாம்; வருத்துங்கொங்கையர், வைத்த கொங்கையர், மத்தகொங்லகயர்.
2. ஓதுங்கினர்.
3. ஒங்கிய; கையினர்; அணைத்த, இளைத்த, இழைத்த, இனைந்த.
4. தலைகள்மேலுள்ளார். (195)

491. தலைக்குவட் டயன்மதி தவழு மாளிகை
நிலைக்குவட் டிடையிடை நின்ற நங்கைமார்
முலைக்குவட் டிழிகணீ ராலி மொய்த்துக
மலைக்குவட் டயர்வுறு மயிலின் மாழ்கினர்.

தலை குவடு அயல் - உச்சியாகிய சிகரங்களின் அண்மையில், மதி தவழும் - சந்திரன் ஊர்ந்து செல்லுதற்கு இடமான, மாளிகை - மாளிகைகளின், குவடு நிலை இடை இடை - மேலிடங்களின் இடையிடையே, நின்ற - (வீதியை நோக்கியவாறு) நின்ற, நங்கைமார் - பெண்கள், முலை குவடு இழி - மலை போன்ற (தம்) தனங்களிலே ஓடிய, கண் நீர் ஆலி - கண்ணீர்த்துளிகள், மொய்த்து உக - திரண்டு கீழே விழ, மலை குவடு அயர்வு உறும் - மலைச் சிகரத்திலிருந்து வாடுகின்ற, மயிலின் - மயில்களைப்போல, மாழ்கினர் - வாடி வருந்தினர்கள்.

மாளிகைகளின் உயர்வு தோன்ற மதி தவழ்தல் கூறி, மலையையும் உவமித்தார். மகளிர்க்கு மயில் உவமை; அவர்கள் நிலையைக் கருதி 'அயர்வுறும் மயில்' என்றார். மயில் : பால்பகா அஃறிணைப் பெயர்; பன்மை குறித்தது.

இந்தப் பாடலும் சில பிரதிகளில் இல்லை.

(பா - ம்.) 1. அயின்மதி, இயன்மதி; தழுவு மாளிகை.
2 மங்கைமார்.
3. இடுகண் தூராலி, கண்ணீரருவி, கணீரருவி, இழைகணீராலி, அழுகணீராலி.
4. அகவுறு. (196)

492 மஞ்செ‌ன வகிற்புகை வழங்கு மாளிகை
எஞ்சலில் சாளரத் திரங்கு மின்சொலார்
அஞ்சனக் கண்கணீ ரருவி சோர்தரப்
பஞ்சரத் திருந்தழுங் கிளியிற் பன்னினர்.

மஞ்சு என - மேகங்களென்னும்படி, அகில் புகை வழங்கும் மாளிகை - அகிற் புகையை வெளிவிடும் மாளிகைகளின், எஞ்சல் இல் சாளரத்து - குறைவில்லாத பலகணிகளின் அருகே இருந்து, இரங்கும் - வருந்துகின்ற, இன் சொல்லார் - இனிய சொல்லையுடைய மங்கையர், அஞ்சனம் கண்கள் - மை தீட்டப்பெற்ற தம் கண்களிலிருந்து, நீர் அருவி சோர்தர - அருவிபோல நீர் பெருக (நின்று), பஞ்சரத்து இருந்து அழும் கிளியின் - கூட்டிலே தங்கியிருந்து அழுகின்ற கிளிகளைப்போல, பன்னினர் - பல சொல்லிப் புலம்பினர்.

மகளிர் தம் கூந்தற்கும், துகிலுக்கும் ஊட்டும் அகிற் புகையின் மிகுதியால் மஞ்சு என மருளுமாறு இருந்தது. வழங்குதலைச் சாளரத்துக்காக்கலும் ஆம். சாளரத்திற்கு உரிய அமைப்பில் குறையேதும் இல்லாதவை, எஞ்சலில் சாளரம். அவற்றின் அருகே நிற்கும் மகளிர், கூட்டிலுள்ள கிளி போன்றனர் என்ற உவமையின் நயம் ஓர்தற்பாலது.

(பி-ம்.) 1. மஞ்சன.
2. இயங்குமென்சொலார்.
3. கண்ணினீர.
4. இருந்தருங், இருந்தபூங்; பற்றினர். (197)

493. நன்னெடுங் கண்களி னான்ற நீர்த்துளி
தன்னெடுந் தாரைக டளத்தின் வீழ்தலால்
அந்நெடுங் குமரனுக் கழுங்கி மாடமும்
பொன்னெடுங் கண்குழித் தழுவ போன்றவே.

நல் நெடு கண்களின் நான்ற - (உப்பரிகையில் உள்ளவருடைய) நல்ல நீண்ட கண்களினின்றும் வழிந்த, நீர் துளி தன் நெடு தாரைகள் - நீர்த்துளிகள் சேர்ந்து உண்டான நீண்ட தாரைகள், தளத்தின் வீழ்தலால் - (அவை விழுந்த) மேற்றளத்திலிருந்து கீழே விழுதலால், மாடமும் - உப்பரிகைகளும், அ நெடு குமரனுக்கு அழுங்கி - அந்தப் பெரிய சக்கரவர்த்தி குமாரன் பொருட்டு வருந்தி, பொன் நெடு கண் குழித்து - அழகிய நெடிய கண்களைக் குழித்துக் கொண்டு, அழுவ போன்ற - அழுவனபோலக் காணப்பெற்றன. ஏ ஈற்றசை.

மேல் மாடங்களிலிருந்து பலர் இராமபிரானைக் கண்டு ஆற்ருது கண்ணீர் வடித்தலால், அது தளத்தில் விழுந்து பெருகி அங்கிருந்து நீர் வெளிப்படுதற்குரிய துளைகளின் வழியே கீழே விழுந்து ஓடுவது, மாளிகைகளும் அழுதல் போன்று இருந்தது எனத் தற்குறிப்பேற்றமாகக் கூறுகின்ருர். மக்களேயன்றி மாளிகைகளும் அழுதன என்றதனுல், உம்மை இறந்தது தழுவியது. மாடமாகிய ஜடப்பொருளும் அழுதது என்றலின் இழிவு சிறப்புமாம். குமரனுக்கு நெடுமை, தோற்றம், பெருமை, பண்பு முதலிய பலவற்ருலும் பொருந்தும். அழுங்கால், கண் மலர்ச்சியின்றிக் குழிந்து காணப் படுதல் இயல்பாகலின், 'கண்குழித்தழுவ' என்ருர். மக்கள் அழுத கண்ணீர் தரை குழிபட வீழ்ந்தது என்ற குறிப்பும் பெறப்படும். கண் - இடம், கண்கள் என்ற இருபொருளுடையது. தளம் - மேற்றளம்.

நீர்த்துளி தன் : தொகுதி ஒருமை.

(பி-ம்.) 1. கண்களினின்ற.
2. தலத்தின், தலத்தில், தலத்து; நிலத்து; வீழ்த்ததால், விழ்வன.
3. மன்னெடுங், அன்னெடுங்; குமரன்மாட்டு, குமரர்மாட்டு.
4. கண்குவித்து, கண்குழிந்து; அழுவபோன்றதே. (198)

494. மக்களை மறந்தனர் மாதர் தாயரைப்
புக்கிட முணர்ந்திலர் புதல்வர் பூசலிட்
டுக்கன ருயங்கின ருருகிச் சோர்ந்தனர்
துக்கநின் றறிவினைச் சூறை யாடவே.

துக்கம் நின்று - பெருந்துயரம் நிலைபெற்று, அறிவினை சூறை ஆடவே - (அவரவர்) அறிவினைக் கொள்ளை கொண்டுவிட்டதனால், மாதர் - பெண்கள், மக்களை மறந்தனர் - தம் மக்களையும் மறந்து விட்டனர்; புதல்வர் - பிள்ளைகள், தாயர் புக்க இடம் உணர்ந்திலர் - தம் தாய்மார் போன இடத்தை உணரவில்லை; (அவர்) பூசல் இட்டு - அழுது ஆரவாரித்து, உக்கனர் - கண்ணீர் சிந்தினர்; உயங்கினர் - வாடினர்; உருகி சோர்ந்தனர் - மனமும் உடலும் உருகிச் சோர்வுற்றனர்.

இராமபிரானைக் காணும்பொருட்டு வீட்டைவிட்டு வெளியே வந்த மகளிர், அங்கே உண்டான சோகத்தால், வீட்டையும் குழந்தைகளையும் மறந்து அங்கங்கே நின்றுவிட்டனர். குழந்தைகள் தாயரைத் தேடாமல் வருந்தினர் என்றபடி. தாயரை: ஐ, சாரியை. புக்கிடம்: தொகுத்தல் விகாரம். 'கண்ணீர்' என ஒரு சொல் வருவிக்க.

(பி - ம்.) 1. மாந்தர்.
2. புக்கிலம் அறிந்திலம்.
3. உக்கினர் உலைந்தனர், உருகினருயங்கிச் சோர்ந்தனர்.
4. தீவினை, இருவினை. (199)

மாடங்கள் பொலிவு இழந்தமை

495. காமரங் கனிந்தெனக் கனிந்த மென்மொழி
மாமடந் தையரெலா மறுகு சேர்தலால்
தேமரு நறுங்குழற் றிருவி னீங்கிய
தாமரை யொத்தன தவள மாடமே.

காமரம் கனிந்தது என - சீகாமரம் என்னும் பண்ணிசை பழுத்தாற் போல, கனிந்த - சுவை முதிர்ந்த, மெல்மொழி - மெல்லிய சொற்களையுடைய, மா மடந்தையர் எல்லாம் - சிறந்த (திருமகள் போன்ற) மகளிர் எல்லாரும், மறுகு சேர்தலால் - (வீட்டை விட்டு) வீதியிலே வந்துவிட்டதனால், தவளம் மாடம் - வெள்ளொளி உடைய அம் மாளிகைகள் எல்லாம், தேம் மரு - இனிமை அமைந்த, நறு குழல் - நறுமணமுள்ள கூந்தலை உடைய, திருவின் நீங்கிய - திருமகளைப் பிரிந்த, தாமரை ஒத்தன - தாமரை மலரைப் போன்று (பொலிவிழந்து) இருந்தன. ஏ: ஈற்றசை.

இராமபிரானைக் காணும் பொருட்டு மகளிர் எல்லோரும் தம் தம் வீட்டை விட்டு வெளியே வந்துவிட்டதனால் வீடுகள் பொலிவிழந்து இருந்தன என்கின்றார். "மனைக்கு விளக்கம் மடவாள்" (நான்மணி). மகளிர் 'கிருகலக்ஷ்மி' எனப்படுவர். சீகாமரம், முதல் குறைந்தது. கனிந்தென: தொகுத்தல் விகாரம். "திருப்புறக் கொடுத்த செம்பொற்

ருமரை போன்று கோயில், புரிக்குழல் மடந்தை போகப் புலம்பொடு மடிந்த தன்றே'' (சீவக. 560).

(பி - ம்.) 1. கனிந்தன; தம்மொழி.
2. மருகினேகலால், மருகிலேகலால், மருகிற் சேர்தலால்.
3. திருவவ நீங்கிய, தெரிவை நீங்கிய.
4. ஒத்தது, ஒத்ததத். (200)

நகரம் பொலிவிழந்தமை

496. மழைக்குலம் புரைகுழல் விரிந்து மண்ணுறக்
குழைக்குல முகத்தியர் குழாங்கொண் டேங்கினர்
இழைக்குலஞ் சிதறிட வேவுண் டோய்வுறும்
உழைக்குல முழைப்பன வொத்தொர் பாலெலாம்.

ஓர் பால் எலாம்-ஒரு பக்க முழுதும், குழை-குண்டலம் அணிந்த, குலம் முகத்தியர் - ஒளி சிறந்த முகத்தையுடைய மகளிர், குழாம் கொண்டு - கூட்டமாகக் கூடி, மழை குலம் புரை - மேகக் கூட்டம் போன்ற, குழல் - தங்கள் கூந்தல், விரிந்து மண் உற - அவிழ்ந்து தரையிலே புரளவும், இழை குலம் சிதறிட - (தங்கள்) அணிகல வகைகள் சிதறி விழவும், ஏ உண்டு ஒய்வு உறும் - அம்பு தாக்குண்டு சோர்கின்ற, உழை குலம் - மான் கூட்டங்கள், உழைப்பன ஒத்து - வருந்துவனபோல, ஏங்கினர் — வருந்தினர்.

மங்கையர்க்கு மானை உவமித்தல் மரபாகலின், அம்பு தாக்குண்ட மான்கள் பல ஓர் இடத்திலே கூடித் துன்புறுவது போல மகளிர் துயருற்றனர் என்றார். மகளிர் மான், இராமபிரான் பிரிவு அம்பு எனக் கொள்க. குலம் - கூட்டம், சிறப்பு, வகை என்ற பல பொருள் குறித்தது. உழைத்தல் - வருந்துதல்.

(பி - ம்.) 1. மழைக்குரல்; புரிகுழல் விரித்து.
2. குழாங் கொண்டேகினர், கொண் டேகின, கொண்டோங்கின, கொண்டோங்கினர், கொண்டேங்கின, குழாங்களேங்கினர், குழாங் களேங்கின.
3. ஒய்தரும்.
4. உழைத்தன, உழைத்தென; ஒத்தபாரெலாம். (201)

497. கொடியடங் கினமனைக் குன்றங் கோமுர
சிடியடங் கினமுழக் கிழந்த பல்லியம்
படியடங் கலுநிமிர் பசுங்கண் மாரியால்
பொடியடங் கினமதிற் புறத்து வீதியே.

மனை குன்றம் - மாளிகைகளாகிற மலைகளில், கொடி அடங்கின - கொடிகள் (பறவாமல்) அடங்கின; கோ முரசு - அரசுக்கு உரிய

முரசங்கள், இடி அடங்கின - இடிபோல ஒலித்தல் அடங்கின; பல் இயம் முழக்கு இழந்த - பல வாச்சியங்களும் முழங்குதலொழிந்தன; படி அடங்கலும் - தரையிடமெல்லாம், நிமிர் - பெருகிய, பசு கண் மாரியால் - பசிய கண்ணீர் மழையால், மதில் புறத்து வீதி - மதிற் பக்கத்திலுள்ள வீதிகளிலும், பொடி அடங்கின - புழுதிகள் அடங்கி விட்டன. ஏ: ஈற்றசை.

மணிக் குன்றம்: உருவகம்; மலைபோல் உயர்ந்த மாளிகைகள் என்க. முடிபுனை விழா நிகழாமையின், மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சிகளும் நிகழ்தலிலவாயின. மாளிகைகளில் பறக்கவிட்ட கொடிகளை இறக்கி விட்டனர். முரசும் ஏனைய வாச்சியங்களும் முழக்குவார் இலராயினர். இடி - இடிக்குரல்; ஆகுபெயர். அகநகரிலன்றிப் புறநகரிலும் அனைவரும் துயருற்றமை புலப்பட, மதிற்புறத்து வீதி பசுங்கண் மாரியாற் பொடியடங்கின என்றார். 'வீதியும்' எனற்பால உம்மை தொக்கது. கோமுரசு - சிறந்த முரசு என்றலுமாம்.

(பி- ம்.) 3. வாரியால்.
4. மதிட்புறத்து. (202)

498. அட்டிலு மிழந்தன புகைய கிற்புகை
நெட்டிலு மிழந்தன நிறைந்த பால்கிளி
வட்டிலு மிழந்தன மருங்கு கான்மணித்
தொட்டிலு மிழந்தன மகவுஞ் சோர்ந்தவே.

(வீடுகளில்) அட்டிலும் - சமையல் அறைகளும், புகை இழந்தன - (சமையல் தொழில் இன்மையால்) புகைதலை இழந்தன; நெடு இல்லும் - உயர்ந்த மேன் மாடங்களும், அகில் புகை இழந்தன —; கிளி வட்டிலும் - கிளிகளை ஊட்டுதற்குரிய வட்டில்களும், நிறைந்த பால் இழந்தன - பால் நிறைந்திருத்தலை இழந்தன (வறிதே யிருந்தன என்றபடி); மருங்கு கால் - பக்கங்களிலே ஒளி வீசுகிற, மணி தொட்டிலும் - மணிகள் பதித்த தொட்டில்களும், மகவு இழந்த - குழந்தை களின்றி வறிதே இருந்தன; மகவும் சோர்ந்த - குழந்தைகளும் (எடுப்பாரின்றிச்) சோர்ந்து கிடந்தன. ஏ: ஈற்றசை.

மகளிரெல்லாம் வெளியே சென்றுவிட்டதனால், வீடுகளில் அவர் களால் நிகழ்தற்குரியனவெல்லாம் நிகழாமல், அவை வெறிச்சிட்டுக் கிடந்தன என்றபடி. "மக்களை மறந்தனர் மாதர்" (494) என முன்னே கூறியதை யொட்டி, 'மகவைத் தொட்டிலில் இட்டும் பிறவாறும் சீராட்டுவாரின்றி அவை சோர்ந்து கிடந்தன' என்றார். மகளிர் தம் பிள்ளைகளையும், தாம் வளர்க்கும் கிளிப்பிள்ளைகளையும் மறந்தனர். வட்டிலில் பாலூற்றி வைத்துக் கிளிகளை ஊட்டி வளர்ப்பர்;

வட்டில் பாலிழந்தன என்றதனால், கிளிகளும் தமக்கு உணவின்றியும், பழகுவார் இல்லாமலும் வாடின என்க. வட்டில் - கிண்ணம் போன்ற உண்கலம். கால் - தொட்டிலின் கால்கள் என்றலுமாம். மகவு, இடைநிலை விளக்காக முன்னும் பின்னும் இயைந்தது.

(பி - ம்.) 1. அட்டிலு மறந்தன.
2. கெட்டிலு மறந்தன; பாற்கிளி, பால்களின்.
3. இழந்தனர், மறந்தன, மறந்தனர்; மகளிர்; காழ்மணித், சால்மணித், வான்மணித், கண்மணித்.
4. மறந்தன, மறந்தனர்; சோரவே. (203)

499. ஒளிதுறந் தனமுக முயிர்து றந்தெனத்
துளிதுறந் தனமுகிற் றொகையுந் தூயவாம்
தளிதுறந் தனபலி தான யானையும்
களிதுறந் தனமலர்க் கள்ளுண் வண்டினே.

முகம் - (மக்களுடைய) முகங்கள் எல்லாம், உயிர் துறந்தால் என - உயிர் பிரிந்தாற்போல, ஒளி துறந்தன - காந்தியை இழந்தன; முகில் தொகையும் - மேகக் கூட்டங்களும், துளி துறந்தன - நீர் துளித்தலை நீங்கின; தூய ஆம் தளி - பரிசுத்தமான கோயில்கள், பலி துறந்தன - (செய்வாரின்மையின்) பூசையை நீங்கின; மலர்கள் உண் வண்டின் - பூக்களில் உள்ள தேனை உண்டு களிக்கும் வண்டுகள் (களிதுறந்தது) போலவே, தானம் யானையும் - மதமுடைய யானைகளும், களி துறந்தன - களித்தலை நீங்கின. ஏ: அசைநிலை.

கோயில்களில் பூசை செய்வாரின்மையின் அவை பலி துறந்தன. தளி-கோயில், பலி- பூசை. வண்டுகள் தேனுண்ணுதற்குரிய பூக்களைப் போற்றுவார் இன்மையின், வண்டுகள் தேன் பெறாது வாடின; யானைகளும் ஆள் இல்லாமையால் கவளம் பெறாமல் களிதுறந்தன என்க.

(பி - ம்.) 1. துறந்தனமுகத்து, துறந்தனவுடல், உயிர் துறந்தமெய், உயிர் துறந்தன, உயிர்துறந்தன வுடல்.
2. தூயமா, தூயவர்.
3. அளிதுறந்தன; பரிதானயானையும், கானவானையும், பரித்தான யானையும், பலித்தானமானையும், மதந்துறந்தயானையும், வலித்தானம் யானையும்.
4. கள்ளுண்வண்டென. (204)

500. நிழல்பிரிந் தனகுடை நெடுங்க ணேழையர்
குழல்பிரிந் தனமலர் குமரர் தாளிணை
கழல்பிரிந் தனசினக் காமன் வாளியும்
அழல்பிரிந் தனதுணை பிரிந்த வன்றிலே.

குடை நிழல் பிரிந்தன - குடைகள் நிழல் செய்தலை நீங்கின; நெடு கண் - நீண்ட கண்களை உடைய, ஏழையர் குழல் - பெண்களின் கூந்தல்கள், மலர் பிரிந்தன - மலர் சூடுதலை நீங்கின; குமரர் தாள் இணை - வீர குமரர்களின் கால்கள், கழல் பிரிந்தன - வீரக்கழலை நீங்கின; சினம் காமன் வாளியும் - சினமுள்ள மன்மதன் அம்புகளும், அழல் பிரிந்தன - (இணை பிரிந்தவரைச்) சுடுந் தன்மை நீங்கின; அன்றில் துணை பிரிந்த - அன்றிற் பறவைகளும் தம் துணையைப் பிரிந்தன. ஏ : ஈற்றசை.

குடைகளை எடுத்து விரித்துப் பிடிப்பார் இன்மையின் அவை நிழல் துறந்தன. காமன் வாளி அழல் பிரிதலாவது, காம விகாரங் கொள்வார் எவரும் இலர் என்றபடி. அன்றிற் பறவைகள் அன்பு மிகுதியால் எப்போதும் ஆணும் பெடையும் இணை பிரியா என்பர்; அவையும் பிரிந்தனவென்று அவல நிலையைப் புலப்படுத்துகின்றார்.

(பி - ம்.) 2. குழல்பிரிந்தனர்; தாளிணைக்.
3. சிலைக்காமன் வாளியும், சினக்காமவாளியும், சினக்காமர் பாணியும், வாணியும்.
4. துணைப்பிரிந்த; அன்னமே, வண்ணமே. (205)

501. தாரொலி நீத்தன புரவி தண்ணுமை
வாரொலி நீத்தன மழையின் விம்முறும்
தேரொலி நீத்தன தெருவுந் தெண்டிரை
நீரொலி நீத்தன நீத்தம் போலுமே.

புரவி - குதிரைகள், தார் ஒலி நீத்தன - கிண்கிணி மாலையின் ஒலியை இழந்தன; தண்ணுமை - மத்தளங்கள், வார் ஒலி நீத்தன - தம்முடைய மிக்க ஒலியை இழந்தன; மழையின் விம்முறும் - மேகம் போல ஒலிக்கும், தேர் ஒலி - தேர் ஓசையை, தெருவும் நீத்தன - தெருக்களும் இழந்தன; (அதனால் அத்தெருக்கள்) தெள் திரை - தெளிந்த அலைகளையுடைய, நீர் ஒலி நீத்தன நீத்தம் போலுமே - நீரோடும் ஓசையற்ற ஆறுகள் போன்றன.

நகரம் வறுவிதாயினமையைப் பலபடக் கூறுவதில், இங்கே சிலவற்றைக் கூறுகின்றார்.

தார் - கிணிகிணிமாலை; குதிரைகளின் கழுத்தை அலங்கரித்துக் கொண்டு, ஓசையுடையதாயும் இருப்பது. குதிரைகளைப் பண்ணுவாரின்மையின் அவை தாரொலி அடங்கின. வார் - நீட்சி; நீண்ட ஒலியாவது, மிக்க ஒலி எனப்பட்டது. தெருவுக்கு யாற்றை உவமை கூறுவது மரபாதலின், இங்கே நீரொலியற்ற ஆறு என்றார். நீத்தம் - வெள்ளம்; இங்கே ஆறு.

(பி - ம்.) 1. புரவித்.
2. ஏரொலி; மணியின் விம்முறு, மழைமுந்துறு, முந்துறத், கவினி விம்முறும்.
3. தெஞ்வு; திண்டிரை, தெண்டிரைச்.
4. நீத்தமும், நீரமும், நீத்த, பேரி, சீரொலி நீத்தன சித்தம் போலவே. (206)

502. முழவெழு மொலியில முறையின் யாழ்நரம்
பெழவெழு மொலியில விமைப்பில் கண்ணினர்
விழவெழு மொலியில வேறு மொன்றில
அழவெழு மொலியெழு மரச வீதியே.

அரசவீதி - அரச வீதிகள், முறையின் - முறையாக, முழவு எழும் ஒலி இல - முரசங்களில் எழும் ஓசைகள் இல்லாதன ஆயின; யாழ் நரம்பு எழ எழும் ஒலி இல - வீணைகளின் நரம்பு தெறித்தலால் ஆகும் (இனிய) ஓசைகள் இலவாயின; இமைப்பு இல் கண்ணினர் - இமையா நாட்டத்தவராகிய தேவர்களுக்கு, விழவு எழும் ஒலி இல - விழா வெடுத்தலால் உளதாகும் ஓசை இலவாயின; வேறு ஒன்றும் இல - வேறு மங்கல ஒலி எவையும் இலவாயின; அழ எழும் ஒலி எழும் - பலரும் அழுதலால் எழுகின்ற அமங்கல ஒலியே அங்கே எழும். ஏ : ஈற்றசை.

முறையின் என்பதனை முழவுக்கும் கூட்டுக. முழவு, குடமுழாவு மாம். முறையாக நிகழும் மங்கல ஒலி ஏதும் இன்றி, எங்கும் அழுகை ஒலியே எழுந்தது என்றார். 'வேறும்' என்றதில் உம்மையைப் பிரித்துப் பின்னே கூட்டியுரைக்கப்பெற்றது.

(பி - ம்.) 1. ஒலியல; முறையின் வாரணம், முறையின் ஆரணம், முறையில் யாணரம்பு.
2. ஒலியல; இமைப்பில் கண்ணுநீர், இமைப்பில் யாக்கையர், இமைப் பிலாதவர், இமைப்பில் கண்ணினர், கண்ணநீர், இமைக்கும் கண்ணில.
3. ஒலியல; வேறு மொன்றிலது, வேறு மொன்றல.
4. ஒலியல தரச, ஒலியிலவரச, ஒலியிலதரச, ஒலியலா தரசர், ஒலியலா தரச, ஒலியவதரசர், ஒலியலாலரசர், ஒலியலாலரச. (207)

503. தெள்ளொலிச் சிலம்புகள் சிலம்பு பொன்மனை
நள்ளொலித் திலநளிர் கலையு மன்னவே
புள்ளொலித் திலபுனல் பொழிலு மன்னவே
கள்ளொலித் திலமலர் களிறு மன்னவே.

தெள் ஒலி சிலம்புகள் - தெளிவான ஓசையையுடைய கால் சிலம்புகள், சிலம்பு பொன் மனை நள் ஒலித்தில - ஒலிக்கும் அழகிய வீடுகளின் நடுவிடங்களில் ஒலி செய்தில; நளிர் கலையும் அன்னவே -

பெருமையையுடைய மேகலைகளும் அத்தன்மையனவே (ஒலித்தில); புனல் - நீர் நிலைகளில், புள் ஒலித்தில - நீர்ப் பறவைகள் ஒலி செய்தில; பொழிலும் - சோலைகளும், அன்னவே - அத்தன்மையனவே; (பறவைகளும், வண்டுகளும் ஒலிக்கப் பெருவாயின); மலர் - பூக்களில், கள் ஒலித்தில - வண்டுகள் ஒலி செய்தில; களிறும் அன்னவே - மதயானைகளும் அத்தன்மையனவே (வண்டுகள் மதநீரையுண்ணு தற்கு வந்து ஒலிக்கப் பெருவாயின).

மக்களேயன்றி ஐயறிவுயிர்களும், நாலறிவுயிர்களும் துயர வுணர்ச்சி மேலிட்டிருந்தன என்றபடி. வீடுகளில் மகளிர் இன்மையின், சிலம்பொலியும் மேகலை ஒலியும் எழாவாயின. வண்டுகள் தேனை உண்ணுதல் போலவே யானையின் மத நீரையும் விரும்பியுண்ணும். யானைகள் மெலிந்து, மதம் பொழிதல் இன்மையின், வண்டுகள் வந்து மொய்க்கப் பெருவாயின.

நள், நளிர்: உரிச்சொல். கலை - மேகலை; முதல் குறைந்தது. கள்: தேன் என்பது போல, வண்டுகளுக்கு ஆகுபெயர்.

இப்பாடல் சில பிரதிகளில் இல்லை.

(பி - ம்.) 1. சிலம்புதன், சிலம்பு போன்மனை, சிலம்பத் தான்விழும், சிலம்பு போன்மழை, சிலம்பு மொண்மனை, செம்பொன் மாமனை.
2. கள்ளொலித்தில; நளிர்க்கலையும், நளிகலையும், நனி கலையும்; அன்னதே.
3. புனற்பொழிலும், பொழில் புனலும்; அன்னதே.
4. மலர்க்களிறும்; அன்னதே. (208)

504. செய்ம்மறந் தனபுனல் சிவந்த வாய்ச்சியர்
கைம்மறந் தனபசுங் குழவி காந்தெரி
நெய்ம்மறந் தனநெறி யறிஞர் யாவரும்
மெய்ம்மறந் தனரொலி மறந்த வேதமே.

செய் - வயல்கள், புனல் மறந்தன - நீரை மறந்தன (நீர் பெருவாயின); சிவந்த வாய்ச்சியர் கை - (பவளம்போலச்) சிவந்த வாயை உடைய பெண்களின் கைகள், பசு குழவி மறந்தன - பச்சிளங்குழவிகளை எடுத்தலையும் மறந்தன; காந்து எரி - எரிக்கும் தீக்கள், நெய் மறந்தன - நெய்யாகுதியை மறந்தன; நெறி அறிஞர் யாவரும்-நன்னெறியையுடைய வேதங்களை உணர்ந்தோர் அனைவரும், மெய் மறந்தனர் - தம் உடம்பை மறந்து நின்றனர்; (ஆதலால்) வேதம் ஒலி மறந்த - வேதங்கள் (உரிய இடங்களில்) ஒலித்தலை மறந்தன. ஏ : ஈற்றசை.

வயல்களில் வேலை செய்வோரின்மையின், அவை நீரற்றுக் கிடந்தன; மகளிர் தம் பசுங் குழவிகளையும் மறந்தனர்; "மக்களை மறந்தனர் மாதர்'' (494) என்றார் முன்னும். நெறி அறிஞர் - வேத

மார்க்கங்களை உணர்ந்தோர்; அவர்கள் மெய்ம் மறத்தலின், முத்தீ வளர்த்தலும், வேதமோதலும் இலவாயின; இவற்றைக் குறிக்கக் 'காந்தெரி நெய்மறந்தன; வேதம் ஒலி மறந்தன' என்றார்.

(பி - ம்.) 1. செய்மறந்தன; சிவந்தவாச்சியர்.
2. கை மறந்தன; அருங்குழவி, அழுகுழவி, அழுங்குழவி, இளங் குழவி.
3. நெய்ம் மறந்தற நெறி, நெய் மறந்தனர் நெறி, நெய் மறந்தனநெறி; அறிஞரியாவரும், அறிஞர் நாலரும்.
4. மெய்மறந்தன. (209)

505. ஆடின ரழுதன ரமுத வேழிசை
பாடின ரழுதனர் பரிந்த கோதையர்
ஊடின ரழுதன ருயிரி னன்பரைக்
கூடின ரழுதனர் குழாங்கு ழாங்கொடே.

குழாம் குழாம் கொடு - (மகளிர்) கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து, ஆடினர் அழுதனர் - அரங்கில் ஆடினவர்களும் (ஆடலை விட்டு) அழுதனர்; அமுதம் ஏழ் இசை பாடினர் அழுதனர் - தேவாம்ருதம் போன்ற ஏழிசைப் பண்களைப் பாடிக்கொண்டிருந்தவர்களும் (அதனை விட்டு) அழுதனர்; பரிந்த கோதையர் - அறுத்த பூமாலையுடையராய், ஊடினர் அழுதனர் - (கணவரோடு) ஊடினவர்களும் அழுதனர்; உயிரின் அன்பரை கூடினர் அழுதனர் - உயிர்போன்ற அன்புடைய கணவரைக் கூடி இன்புற்றவர்களும் அழுதனர். ஏ : ஈற்றசை.

ஆடல் பாடல் நிகழ்த்தியவரும், கணவரோடு ஊடலும் கூடலும் கொண்டவரும் ஆகிய பலதிறத்து மகளிரும் அவ்வவற்றைக் கைவிட்டு, அங்கங்கே கூடி அழலாயினர் என்க. குழாங் குழாங் கொடு என்பது கடைநிலை விளக்காய் எல்லாவற்றோடும் இயையும்.

இப்பாடல் ஒரு பிரதியில் இல்லை.

(பி - ம்.) 1. அமுதவின்னிசை.
2. பரித்த கோதையர், பரிந்த தோகையர்.
4. குமாங்குமாங் கொண்டே, குமாங்குமாங்களாய். (210)

506. நீட்டில களிறுகை நீரின் வாய்புதல்
பூட்டில புரவிகள் புள்ளும் பார்ப்பினுக்
கீட்டில விரைபுனிற் றீன்ற கன்றையும்
ஊட்டில கறவைநைந் துருகிச் சோர்ந்தவே.

களிறு - யானைகள், கை நீரின் நீட்டில - தம் துதிக்கையை (நீருண்ணும்படி) நீரில் நீட்டவில்லை; புரவிகள் - குதிரைகள், வாய் - தம் வாயில், புதல் பூட்டு இல - புல்லைப் பற்றித் தின்னவில்லை; புள்ளும் - பறவைகளும், பார்ப்பினுக்கு - (தம்) குஞ்சுகளுக்கு, இரை ஈட்டில-

இரை தேடி வரவில்லை; கறவை - கறவைப் பசுக்கள், ஈன்ற புனிறு கன்றையும் ஊட்டு இல - (தாம்) ஈன்ற மழவிளங் கன்றுகளுக்கும் பால் ஊட்டவில்லை; (இவ்வாறுள்ள யாவும்) நைந்து உருகி - மனங் கனிந்து, சோர்ந்த - வாடி நின்றன. ஏ : ஈற்றசை.

இதில், ஐயறிவுயிர்களாகிய விலங்கும் புள்ளும் உற்ற துயர மிகுதியைக் கூறினர். கறவை - கறத்தலுடையது என்ற காரணப் பெயர். புதல் - புல். பார்ப்பு : பறவைகளின் இளமைப் பெயர். "புதல்புல்லென்பன புற்பிறப் பாகும்", "பார்ப்பும் பிள்ளையும் பறப்ப வற் றிளமை" (திவா.)

(பி - ம்.) 1. கைக்நீரின், கைகிமிர, கைந்நிமிரு; வாய் முகம், நீரின் வரய்.
2. பூட்டிய, பூட்டியல், பூட்டிலர்; பார்ப்பினும், பார்ப்புரு, பார்ப்புரும்.
3. ஈட்டியவிரை, ஊட்டிலவிரை, ஈட்டிடுவன, ஈட்டினவென்.
4. ஊட்டிய; கறவை கன்று, கறவை,நன்று, கறவையும், கறவை பால்; சோரவே. (211)

507\. மாந்தர்த மொய்ம்பினின் மகளிர் கொங்கையாம்
ஏந்திள நீர்களும் வறுமை யெய்தின
சாந்தமம் மகிழ்நர்தம் முடியிற் றையலார்
கூந்தலும் வறுமைய மலரின் கூலமே.

மாந்தர்தம் மொய்ம்பினில் - ஆடவருடைய தோள்களைப்போலவே, மகளிர் - பெண்களுடைய, கொங்கை ஆம் - தனங்களாகிற, ஏந்து இளநீர்களும் - நிமிர்ந்த இளநீர்களும், சாந்தம் வறுமை எய்தின - சந்தனத்தின் வறுமையைப் பெற்றன; அ மகிழ்நர்தம் முடியில் - அம் மைந்தருடைய மயிர் முடிகளைப்போலவே, தையலார் கூந்தலும் - மகளிரின் கூந்தலும், மலரின் கூலம் வறுமைய - மலர்க் கூட்டத்தின் வறுமையைப் பெற்றன. ஏ : ஈற்றசை.

ஆடவரும் மகளிரும் சந்தனம் பூசாமலும் மலர் சூடாமலும் வறிதே இருந்தனர் என்றபடி. தம் கொழுநர் வழிநிற்பார் மகளிராகலின், ஆடவரை இரண்டிடத்தும் முற்கூறினர். மொய்ம்பு - தோள். கூலம் - கூட்டம்; தொகுதி. ஐந்தனுருபு இரண்டிடத்தும் ஒப்புப்பொருளது.

(பி - ம்.) 1. மாந்தர்தம் மொய்ம்பின; கொங்கையாய்.
2. இளநீர்களில், இளநீர்களின்; வெறுமை; எய்தினர்., ஏந்தின.
3. சாந்தையர், சாந்தயர், சாந்தணி, சாந்தமும்; கடையவர், கடையலர், சடையவாம், சடையவம், சடையலார், தடையலர், தவ்வையர்; முடியிற் குஞ்சியர், தார்பெய் குஞ்சியின்.
4. கூந்தலின், கூந்தல; வறுமையம், வறுமையாம், வறுமை செய்; மலர் பெய் கூந்தலே. (212)

(கலிநிலைத் துறை)

508. ஓடை நல்லணி முனிந்தன வுயர்களி றுச்சி
சூடை நல்லணி முனிந்தன சுடர்மணிக் கொடியின்
ஆடை நல்லணி முனிந்தன வம்பொன்செ யிஞ்சி
பேடை நல்லணி முனிந்தன மென்னடைப் புறவம்.

உயர் களிறு - உயர்ந்த யானைகள், ஓடை - நெற்றிப் பட்டமாகிய, நல் அணி - நல்ல அலங்காரத்தை, முனிந்தன - வெறுத்திருந்தன; உச்சி - (மகளிரின்) தலைகள், சூடை நல் அணி முனிந்தன - தலையில் அணிதற்குரிய சூடாமணியாகிய நல்ல அணியை வெறுத்திருந்தன; அம்பொன் செய் இஞ்சி - அழகிய பொன்னால் இயன்ற மதில்கள், சுடர் மணி கொடியின் ஆடை - ஒளி வீசும் அழகிய கொடிச் சீலைகளாகிற, நல் அணி - நல்ல அலங்காரத்தை, முனிந்தன - வெறுத்திருந்தன; மெல் நடை புறவம் - மெல்லிய நடையையுடைய (ஆண்) புருக்கள், பேடை நல் அணி முனிந்தன -(தம்) பெண் புருக்களின் நல்ல அழகை (நுகர்தலையும்) வெறுத்திருந்தன.

யானையும், மதில்களும் முறையே அணி செய்வாரின்றியும் கொடிச் சீலைகள் நீக்கப்பெற்றும் வறிதேயிருந்தமையை, 'அவை வெறுத் திருந்தன' என அவற்றின்மே லேற்றிக் கூறினர். பெடைகளோடு குலாவும் இயல்புள்ள புருக்களும் அதனை வெறுத்தன என்றது, முன்னே பறவை முதலியவற்றிக்குக் கூறியாங்குக் கொள்க.

(பி - ம்.) 1. களிறுச்சிச், களிற்றுச்சி.
2. சூட நல்லணி; தொடர்மனை, தொடர்மனைக், தொடர்மணிக், சுடர் மணி, சுடர்மனை, சுடர்மனைக்; கொடிகள்; மனையின்.
3. ஆடநல்லணி; அம்பொன் செயன்ன, அம்பொன் செய்யிஞ்சிப், அம் பொன் செயன்னப்; அன்னம், செம்பொன் செயன்னம், சிறு வியரன்னம்.
4. மேடை; வெள்ளிடைப் பிறக்கம், வெள்ளிடை பிறவும், வெள்ளடைப் பிறக்கம். (213)

யோகிகளும் துயருற்றமை

509. திக்கு நோக்கிய தீவினைப் பயனெனச் சிந்தை
நெக்கு நோக்குவோர் நல்வினைப் பயனென நேர்வோர்
பக்க நோக்கலென் பருவர லின்பமென் றிரண்டும்
ஒக்க நோக்கிய யோகரு மருந்துய ருழந்தார்.

தீவினை பயன் - தீவினையின் பயனான துன்பம், திக்கு நோக்கிய - உங்கள் திக்கை நோக்கி வருகின்றது, என - என்று ஒருவர் சொல்ல, சிந்தை நெக்கு - (அதனால்) மனம் நெகிழ்ந்து, நோக்குவோர் - (அச்சத்துடன்) எதிர்பார்ப்பவரும், நல் வினை பயன் என - நல்

வினையின் பயனான இன்பம் வருகின்றது என்று சொல்ல, நேர்வோர் பக்கம் - (உடனே) மகிழ்ந்து உடன்படுவோருமான மக்களின் தன்மையை, நோக்கல் என் - பார்ப்பதென்ன? பருவரல் இன்பம் என்ற இரண்டும் - துன்பம் இன்பம் என்ற இரண்டையும், ஒக்க நோக்கிய - ஒருபடியனவாகப் பார்க்கின்ற, யோகரும் - யோகியருங் கூட, அருதுயர் உழந்தார் - மீளுதற்கரிய துயரத்தால் வருந்தினர்.

துன்பம் என்றால் அது வருதற்கு முன்னேயே வந்துவிடுமோ என்று அஞ்சுதலும், இன்பமென்றால் மகிழ்ந்திருத்தலும் பொதுவான உலகவியற்கை. அத்தகையோர் இராமபிரானுக்கு வந்த துன்பத்தின் பொருட்டு வருந்துதல் ஒரு பொருளன்று; இன்ப துன்பங்களைப் பொருட்படுத்தாத யோகியரே பெருந்துயருற்று வருந்தினரெனின், அதனை எவ்வாறு கூறுவது என்கின்றார்.

யோகரும் : உம்மை, உயர்வு சிறப்பு.

(பி - ம்.) 1. நோக்கில; பயனிது, பயமிது.
2. நக்கு; நோக்கிய, நோக்கலர், நோக்கியர்; பயமென; நேரார். நேரா, நேரப், நேராப், ஞானப்.
3. நோக்கலர், நோக்கிலர், நோக்கலாப், நோக்கிலே, நோக்கிலேன், நோக்கிலன், நோக்கிலென், நோக்கலின்; இன்பமொன் றிரண்டும், இன்பமென் றெருங்கே, இன்பமென் றெருங்க; போகமென் றிரண்டும், போகமென்றெருங்க.
4. யோகியும், யோகியர்; உழன்றார், உழந்தான். (214)

நகரத்தின் நிலை

510. ஓவி னல்லுயி ருயிர்ப்பினோ டுடல்பதைத் துலைய
மேவு தொல்லழ கெழில்கெட விம்மனோய் விம்மத்
தாவி லைம்பொறி மறுகுறத் தயரத னென்ன
ஆவி நீக்கின்ற தொத்ததவ் வயோத்திமா நகரம்.

அ அயோத்தி மா நகரம் - அயோத்தியாகிய அப்பெரிய நகரம் முழுதும், ஓவு இல் நல் உயிர் - (தன்னின்) நீங்குதல் இல்லாத நல்ல சீவராசிகளெல்லாம், உயிர்ப்பினோடு - பெருமூச்சுடன், உடல் பதைத்து உலைய - உடம்பு பதறி நிலைகுலைதலாலும், மேவு தொல் அழகு - (இயல்பாகப்) பொருந்திய பழைய அழகும், எழில் - செயற்கையழகும், கெட - கெடுதலாலும், விம்மல் நோய் விம்ம - துன்ப நோய் மிகுதலாலும், தா இல் ஐந்து பொறி மறுகு உற - வலிமை இல்லாத பஞ்சேந்திரியங்களும் கலங்குதலாலும், தயரதன் என்ன - தசரத மன்னனைப் போலவே, ஆவி நீக்கின்றது ஒத்தது - உயிர் விடுகின்றதை ஒத்திருந்தது.

வாழும் உயிர்களின்றி நகரமில்லையாதலால், நகரத்தையே ஓர் உயிர்ப் பொருளாக்கி, அஃது உயிர் விடுவதை ஒத்திருந்ததென்றார்.

அதற்குத் தசரதனை உவமித்தார். உயிர் பிரியுங்கால் நிகழ்வன வற்றையும் விரித்துக் கூறினுர். தசரதனுக்கே அன்றி, மக்கள் அனை வர்க்குமே இராமன் உயிராதலால், எல்லாரும் தசரதனை ஒத்தனர். "மேனியுமின்றி வெறுநீரே யாயினுர்" (396) எனவும் பிறவாறும் முன்னே கூறினமையும், "இயங்கு பல்லுயிர்க் கோருயி ரெனநின்ற இராமன்" என வருஞ் செய்யுளில் வருவதும் காண்க. தா - வலிமை.

(பி - ம்.) 1. ஒவினல்லுணர்வு, ஓவி நல்லுயிர்; ஒவ நல்லுணர்வு, ஒவ நல்லுயிர், ஒவு நல்லுயிர்; உணர்வினேடு; அலைப, உலையும்.
2. மேவி நல்லழகு, மேவி நல்லுலகு, மேவு தொல்லுலகு, மேவு நல்லழகு; விம்மி நோய், விம்மித்; விளப்பத், மல்கத், உலகர்.
3. மறுகுறு, மறுகுறும், மயங்குறும்; தசரதனென்ன, தசரதனென்னும்.
4. நீக்கினது, நீக்கியது, நீங்கினது, நீங்கியது, நீங்கின்றது. (215)

இராமபிரான் பிராட்டி இருப்பிடம் சேர்தல்

511. உயங்கி யந்நக ருலைவுற வொருங்குழைச் சுற்றம்
மயங்கி யேங்கினர் வயின்வயின் வரம்பிலர் தொடர
இயங்கு பல்லுயிர்க் கோருயி ரெனநின்ற விராமன்
தயங்கு பூண்முலைச் சானகி யிருந்துழிச் சார்ந்தான்.

அ நகர் - அவ்வயோத்தி நகரம், உயங்கி உலைவு உற - (முற் கூறியவாறு) வாடி வருந்தாநிற்க, உழை சுற்றம் - உடனிருக்கும் ஏவலர் பலரும், வயின் வயின் - பலஇடங்களிலுமுள்ள, வரம்பு இலர் - அளவற்ற பலரும், ஒருங்கு - ஒருங்கே, மயங்கி ஏங்கினர் - அறிவு கலங்கி ஏங்கியவர்களாய், தொடர - தன்னைத் தொடர்ந்து வர, இயங்கு பல் உயிர்க்கு - இடம் பெயரும் பற்பல உயிர்களுக்கும், ஓர் உயிர் என நின்ற - மூலமான ஒருயிராகத் தான் உள்ள, இராமன்—, தயங்கு பூண் முலை - விளங்குகின்ற அணிகலன்கள் பூண்ட தனத்தை உடைய, சானகி இருந்த உழி - சானகிப் பிராட்டி இருந்த இடத்தை, சார்ந்தான் - அடைந்தான்.

இராமன், தொடர, சார்ந்தான் எனக் கூட்டி முடிக்க.

உழைச் சுற்றம் - பக்கத்தே சூழ்ந்து நின்று ஏவல் கேட்போர். "உழைச்சுற் ருளர்" எனவும் வழங்கப்பெறுவர் (பெருங். 1, 33-14). சுற்றமும் வரம்பிலரும் ஒருங்கு தொடர என்க. மூன்றும் அடியில் இராம பிரானது பரத்துவம் குறிக்கப்பெற்றது. வரம்பிலர் : வினைப்பெயர். ஏங்கினர் : முற்றெச்சம். இருந்துழி : தொகுத்தல்.

(பி - ம்.) 1. உயங்கு நன்னகர்; ஒருங்குழை, ஒருபுடை, ஒருபுடைச், ஒருங்குடைச், ஒழிவரும்; சுற்ற.
2. ஏங்கின; வரம்பில, வாழ்விலர்.
3. பல்லுடற்கு; ஒருயிரென்னின்ற, ஆருயிரென னின்ற, உயிரென னின்றவவ்.
4. இருந்துழி சார்ந்தான். (216)

பிராட்டியின் துணுக்கம்

512. அழுது தாயரொ டந்தண ரருந்தவ ரரசர்
புழுதி யாடிய மெய்யினர் புடைவந்து பொருமப்
பழுது சீரையி னுடையினன் வரும்படி பாரா
எழுது பாவையன் ஞண்மனத் துணுக்கமொடெழுந்தாள்.

தாயரொடு - தாய்மாரும், அந்தணர் - அந்தணரும், அரு தவர் - அரிய தவசியரும், அரசர் - அரசரும் (ஆகிய பல திறத்தவரும்), புழுதி ஆடிய மெய்யினர் - புழுதி படிந்த உடம்போடு, அழுது புடை வந்து - அழுதுகொண்டு பக்கங்களிலே சூழவந்து, பொரும - பொருமாநிற்க, பழுது சீரையின் உடையினன் - தாழ்வுடைய மரவுரி உடுத்தவனுகி, வரும்படி பாரா - (இராமபிரான்) வருதலைக் கண்டு, எழுது பாவை அன்னுள் - எழுதிய சித்திரப்பாவை போன்ற பிராட்டி, மனம் துணுக்கமொடு - மன நடுக்கத்துடன், எழுந்தாள் - (இருக்கை விட்டு) எழுந்து நின்ருள்.

முடி சூடிய திருக்கோலத்துடன் வருதற் குரியவன், அதற்கு மாருன தவக்கோலத்துக்குரிய மரவுரியுடன் மிகப் பலர் தன்னைச் சூழ்ந்து வருந்தும் நிலையில் வரக் கண்டதனுல், பிராட்டி துணுக்குற்று எழுந்தாள். முந்திய செய்யுளில் 'வயின்வயின் வரம்பிலர்' என்றதன் விளக்கமாக, அந்தணர், அருந்தவர், அரசர் ஆகியோரைக் கொள்ள லாம். இவரல்லாத பிறரும் அதில் அடங்குவர். பழுது - அரச நிலைக்குத் தகாதது. சீரையின் : இன், அல்வழிச் சாரியை. உடையினன் : முற்றெச்சம்.

(பி - ம்.) 1. அழுத; தாயரோடு; அருந்தவ ரந்தணரரசர், அருந்தவ முனிவரொ டரசர், முனிவர்களரசர், முனிவரோடரசர்.
2. புழுதி யாடின; புடைவரப் போதும்.
3. பழுதில் சீரத்தினுடையினன், சீரையன், சடையினன்; பார்த்தாள்.
4. மனந்துணுக்க மொடு, மனந்துணுக்கென. (217)

பின் நிகழ்ச்சி

513. எழுந்த நங்கையை மாமியர் தழுவின ரேந்திப்
பொழிந்த வுண்கணீர்ப் புதுப்புன லாட்டினர் புலம்ப
அழிந்த சிந்தைய ளன்னமு மின்னதென் றறியாள்
வழிந்த நீர்நெடுங் கண்ணினள் வள்ளலை நோக்கி.

எழுந்த நங்கையை - (துணுக்குற்று) எழுந்த பிராட்டியை, மாமியர் - மாமிமார்கள், தழுவினர் ஏந்தி - தழுவித் தாங்கிக்கொண்டு; பொழிந்த - ஊற்றிய, உண் கண் நீர் புது புனல் - மையுண்ட கண் களின் நீராகிய புதிய மஞ்சன நீரால், ஆட்டினர் - (அவளை) நீராட்டின வர்களாய், புலம்ப—, அன்னமும் - அன்னம் போன்ற பிராட்டியும், இன்னது என்று அறியாள் - (அவர்கள் செயலுக்குக் காரணம்) இன்ன

தென்று அறியாதவளாய், அழிந்த சிந்தையள் - கலங்கிய மனத் துடனும், நீர் வழிந்த நெடு கண்ணினள் - நீர் சொரிந்த நெடிய கண் களுடனும், வள்ளலை நோக்கி - இராமபிரானைப் பார்த்து.

இது மேற்செய்யுளோடு தொடர்ந்து, அதில் வரும் 'இறைஞ் சினுள்' என்பதனேடு முடியும்.

மாமியர் - அறுபதினுயிரவருட் சிலர் என்னலாம். அவர்கள் இதுகாறும் அழுதறியாதவர்களாதலின் 'கண்ணீர்ப் புதுப்புனல்' என்றுர். கண்ணீராட்டுதலாவது, அஃது அவள்மீது சொரிய நிற்றல். அன்னம்: உவம வாகுபெயர். பிராட்டியை அன்னம் எனப் பல இடத்துங் கூறுவர். தழுவினர், ஆட்டினர் என்ற முற்றெச்சங்கள், புலம்ப என்ற எச்சவினை கொண்டன. சிந்தையள், அறியாள், கண்ணினள் என்பன 'நோக்கி' என்னும் எச்சவினை கொண்டன.

(பி - ம்.) 1. மங்கையை; மாமிமார்; ஏங்கிப்.
2. கண்கணீர்ப், புன்கணீர்ப், வெங்கணீர்ப், ஒண்கணீர், வெங்கனில்; ஆடினர்; புலம்பி.
3. அன்னமதின்னதென்று, அன்னமிதின்னதென்று, அன்னமீதின்ன தென்று, அன்னமீதென்னதென்று, சிந்தையளன்னவ ளின்ன தென்று, அன்னளிதின்னதென்று, அன்னளீ தின்னதென்று அன்னுண்மதியின்ன தென்று; அறியா.
4. கண்ணினுள்; நோக்கா. (218)

பிராட்டி இராமனை வினுதல்

(கலிவிருத்தம்)

514. பொன்னை யுற்ற பொலங்கழ லோய்புகழ்
மன்னை யுற்றதுண் டோமற்றிவ் வன்றுயர்
என்னை யுற்ற தியம்பென் றிறைஞ்சினுள்
மின்னை யுற்ற நடுக்கத்து மேனியாள்.

மின்னை உற்ற - மின்னற் கொடிபோன்ற, நடுக்கத்து மேனியாள் - நடுக்கமுற்ற திருமேனியினளான பிராட்டி, பொன்னை உற்ற பொலம் கழலோய்-பொன்னுல் இயன்ற வீரக்கழல் அணிந்தவரே, இ வன் துயர் உற்றது என்னை - இப்பெருந்துயரம் நேர்ந்ததற்குக் காரணம் என்ன? புகழ் மன்னை உற்றது உண்டோ - புகழ்மிக்க சக்கரவர்த்திக்கு நேர்ந்த தீங்கு ஏதேனும் உண்டோ? இயம்பு என்று - சொல்லுக என்று, இறைஞ்சினுள் - (இராமனை) வணங்கினுள். மற்று: அசை.

(513) வள்ளலை நோக்கி (514) மேனியாள் இறைஞ்சினுள் எனக் கூட்டி முடிக்க.

'மாமியர் இவ்வாறு என்னைச் சூழ்ந்து அழுது புலம்புதற்கு உரிய காரணம் என்னை? சக்கரவர்த்திக்கு ஏதேனும் நேர்ந்ததோ?' என்று பிராட்டி வினவினள் என்க. மின்னையுற்ற மேனியாள், நடுக்கத்து

மேனியாள் என இயைக்க. பொன்னே உற்ற - பொன்னைப் பொருந்திய; பொன்னால் இயன்ற. மின்னே உற்ற: உற்ற, உவமவுருபு.

(பி - ம்.) 1. பொன்னே யொத்த; பொலன் கழலோய்; புகல்.
2. உற்றதன்றே; மற்றிவ் வான்றுயர், மற்றி வான்றுயர், மற்று வன்றுயர், அன்றி வான்றுயர், வினை வன்றுயர்.
3. இயம்பென்றியம்பினள்.
4. மின்னே யொத்த; கடுக்கத்த, கடுக்குற்ற, கடுவுற்ற. (219)

இராமபிரான் மறுமொழி

515. பொருவி லெம்பி புவிபுரப் பான்புகழ்
இருவ ராணையு மேந்தினெ னின்றுபோய்க்
கருவி மாமழைக் கற்கடங் கண்டுநான்
வருவெ னீண்டு வருந்தலை நீயென்றான்.

(பிராட்டிக்கு விடையாக இராமபிரான்), பொருவு இல் எம்பி - தனக்கு ஒப்பு வேறு இல்லாத தம்பியான பரதன், புவிபுரப்பான் - நாட்டை ஆள்வான்; நான்—, புகழ் இருவர் ஆணையும் ஏந்தினென் - புகழுக்குரிய தாய் தந்தை என்ற இருவர் பணியையும் சிரமேற் கொண்டு, இன்று போய் - இன்றே புறப்பட்டுச் சென்று, கருவி மா மழை கல் கடம் கண்டு - தொகுதியான மேகங்கள் தவழும் மலைகளை உடைய காட்டைக் கண்டு, வருவென் - மீண்டு வருவேன்; ஈண்டு நீ வருந்தலை - இங்கே நீ வருந்தாதிரு, என்றான்—.

'பரதன் நாடு ஆளவும், நான் காடு செல்லவும் பெற்றோர் பணித்தனர்; அதனை மேற்கொண்டு நான் இன்றே காடு சென்று மீண்டு வருவேன்; நீ இங்கே வருந்தாதிரு' எனச் சுருங்கக் கூறினன் இராமபிரான்.

இருவர் - தாய்தந்தையர். தாய் இன்னாரெனக் குறியாமலும், தான் காட்டில் இருத்தற்குரிய கால அளவைக் கூறாமலும் செய்தி சொல்லிய திறம் ஓர்க. பதினான்கு ஆண்டுகள் எனின் பிராட்டிபொருள் என்று கருதி, 'கடம் கண்டு வருவென்' என எளிதாகக் கூறினான்.

(பி - ம்.) 1. புரப்பான் புகல்.
2. ஏந்தினனின்று போய்க், ஏந்தி னெனின்றெனக்.
3. கற்றடம்; கண்டனன், கண்டுடன், கண்டுயான், கண்டு பின்.
4. வருவனீண்டு, வருவெனின்று; வருந்திலை. (220)

பிராட்டியின் துயர்

516. நாய கன்வன நண்ணலுற் றானென்றும்
மேய மண்ணிழந் தானென்றும் விம்மலள்
நீவ ருந்தலை நீங்குவென் யானென்ற
தீய வெஞ்சொல் செவிசுடத் தேம்புவாள்.

(பிராட்டி) நாயகன் வனம் நண்ணல் உற்ருன் என்றும் - தலைவன் காடு செல்லலுற்ருனே என்றும், மேய மண் இழந்தான் என்றும் - தனக்கு உரிமையாகப் பொருந்திய அரசை இழந்தானே என்றும், விம்மலள் - வருந்தினுளில்லை; யான் நீங்குவென் - நான் இங்கிருந்து (காடு) போகின்றேன், நீ வருந்தலை - நீ வருந்தாதே, என்ற - என்று சொல்லிய, தீய வெம் சொல் - கொடிய கடுஞ்சொல், செவி சுட - தன் காதுகளைச் சுடுதலால், தேம்புவாள் - வருந்தலானுள்.

இராமபிரான் கூறிய சொற்கள், தான் உடன் வருதலைத் தவிர்த்த குறிப்பினுல், அப்பிரிவுத் துயரே பிராட்டியைப் பெரிதும் வருத்திற்று. தலைவன் எங்கிருப்பினும் அங்குத் தானும் உடன் இருத்தலே தனக்குச் செல்வம் என்ற கருத்தினள் அவள். "நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு" (520) எனப் பின்னே கூறுதலுங் காண்க. பிரிவு குறித்த சொல்லைத் தீய வெம் சொல் என இரண்டடை கொடுத்துக் கூறினுர். சுட - சுடுதலால்.

(பி - ம்.) 1. சுர நண்ண லுற்ருனென்று.
2. இழந்தானென்று, இழந்தானென; விம்மிலள்.
3. நீங்குவெனுனென்ற, நீங்குவனுமென்ற, நீங்குவனுமெனத், நீங்குவன் யானென்ற, நீக்குவன் யானென்ற.
4. வெஞ்சொற், செஞ்சொற்; செவிசுட விம்முவாள், விம்மினுள், ஏங்கினுள். (221)

517. துறந்து போமென்று சொற்றசொற் றேறுமோ
உறைந்த பாற்கடற் சேக்கை யுடனொரீஇ
அறந்தி றம்பல்கண் டைய னயோத்தியில்
பிறந்த பின்பும் பிரிவில ளாயினுள்.

ஐயன் - எம்பெருமான், அறம் திறம்பல் கண்டு - பூவுலகில் தருமம் கெடுதலை அறிந்து (அதனைக் காத்தற் பொருட்டு), உறைந்த பால் கடல் - தாம் இருந்த திருப்பாற் கடலிலே, உடன் சேக்கை ஒரீஇ - (பாம்பணையில்) ஒருங்கே சயனித்தலை விட்டு, அயோத்தியில் பிறந்த பின்பும் - அயோத்தியிலே (இராமனுக வந்து) பிறந்த பின்னும், பிரிவு இலள் ஆயினுள் - (தான் சீதையாகப் பிறந்து) ஐயனைப் பிரியாத நிலையை எய்திய பிராட்டி, துறந்து போம் என்று சொற்ற சொல் - (அவளைப்) பிரிந்து போவான் என்று சொன்ன வார்த்தையை, தேறுமோ - (நல்லதென்று) தெளிந்திருப்பாளோ? (இராள் அன்றே).

பிராட்டி, எம்பெருமானை 'அகலகில்லேன்' என்று எப்போதும் உடனுறைபவள் ஆதலின், அவன் இராமனுக வந்தவுடன் தானும் சீதையாகி வந்து அவனைக் கூடினுள்; அத்தகையவள் இப்போது பிரிவைப் பொறுப்பாளோ என்கின்ருர். "கருங்கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப், பிரிந்தவர் கூடினுற் பேசல் வேண்டுமோ" (பால. 593) என்ருர் முன்னும். ஆயினுள் தேறுமோ என்க.

(பி - ம்.) 1. போமெனச்; தேறுமே.
2. உறைந்து; சேக்கையுட் சேர்ந்தொரீஇ.
3. திறம்புமென்றையன்.
4. பின்பு, பின்னும்; போதும்; பிரிவிலன், பிரியலள், பிரிபவள்; ஆகினுள், ஆயினுன். (222)

பிராட்டி கூறுதல்

518. அன்ன தன்மைய ளையனு மன்னையும்
சொன்ன செய்யத் துணிந்தது தூயதே
என்னை யென்னை யிருத்தியென் றுயென்றுள்
உன்ன வுன்ன வுயிருமி ழாநின்றுள்.

அன்ன தன்மையள் - அத்தன்மையினளான பிராட்டி (ஐயனை நோக்கி), ஐயனும் அன்னையும் சொன்ன - தந்தையும் தாயும் சொல்லிய வற்றை, செய்ய துணிந்தது - (தேவரீர்) செய்யத் துணிந்தது, தூயதே - நல்லதே; (ஆயினும்) என்னை என்னை இருத்தி என்றுய் - என்னை ஏன் (இங்கேயே) இரு என்று சொன்னீர்; என்றுள் - என்று சொல்லிய வளாய், உன்ன உன்ன - (பிரிவுகுறித்த வார்த்தையை) நினைக்க நினைக்க, உயிர் உமிழாநின்றுள் - உயிர் விடுவது போன்ற துயர முற்றுள்.

அன்ன தன்மை - பிரிவை ஆற்றுமை. 'தந்தை தாயர் சொல்லை ஏற்று, அதனைக் கடமையாகச் செய்யத் துணிந்தது சிறந்ததே ஆயினும், என்னைப் பிரித்து இங்கிருக்கச் சொல்வதேன்? அதனை நான் பொறேன்' என்கின்றுள். உயிர் உமிழ்தல் - உயிரை விடுதல். என்னை : முதலது இரண்டாம் வேற்றுமை விரி; பின்னது வினு; உன்ன என்றதன் அடுக்கு, நினைக்குந்தோறும் எனப் பன்மை குறித்தது.

(பி - ம்.) 1. அன்னையும் தாதையும்.
3. என்னையிங்ஙன், என்னைபிஞ்ஞன், என்னவென்னை; இருத்தியென்று னெனு, இருத்தி யென்றுனருள், இருத்தி யென்றுயென, இருத்தி யென்றேயென்றுள்.
4. உன்னவுன்னி. (223)

இராமபிரான் மறுமொழி

519. வல்ல ரக்கரின் மால்வரை மேல்விழுந்
தல்ல ரக்கி னுருக்கழற் காட்டதர்க்
கல்ல ரக்குங் கடுமைய வல்லநின்
சில்ல ரக்குண்ட சேவடிப் போதென்றுன்.

நின் - உன்னுடைய, சில் - சிறிய, அரக்கு உண்ட - செம்பஞ்சு ஊட்டப்பெற்ற, செஅடி போது - சிவந்த மலர் போன்ற பாதங்கள்,

வல் அரக்கரின் - வலிய அரக்கரின் இருப்பிடமான, மால்வரை மேல் விழுந்து - பெரிய மலைகளின்மேற் படிந்து, அல் - இரவிலும், அரக்கின் உருக்கு - (கற்களை) அரக்கைப்போல உருக்கத் தக்க, அழல் - வெப்பத்தையுடைய, காடு அதர் - காட்டு வழிகளிலே உள்ள, கல் அரக்கும் - பருக்கைக் கற்கள் உறுத்துதலைத் தாங்க வல்ல, கடுமைய அல்ல - கடினமுடையன அல்ல; என்றான்—.

'என்னை யென்னை யிருத்தி என்றாய்' என்று பிராட்டி வினவியதற்கு எதிர்மொழியாக இராமபிரான், 'உனது நன்மை கருதியே சொல்லு கின்றேன்; காட்டு வழிகளிலே நடத்தற்கு, வெப்பத்தையும், பரல்களின் உறுத்தலையும் உன் மெல்லிய பூப் போன்ற பாதங்கள் தாங்கவல்லன வல்ல' என்றான். 'கொடு வெயிலின் வெப்பம் மலைகள்மீது படிந்து எதிர்த்து, இரவிலும் ஆறாது சுடும்; அவ் வெப்பமுடைய கற்களில் அடி வைத்து நடத்தல் உன்னால் ஆகாது' என்று கூறினான். அரக்கர் வாழும் மலை என்றதனால் எப்போதும் அச்சந் தருவது என்பதும் குறித்தவாறு. வரைமேல் விழுதல் வெயிலின் தொழில். 'அல்லிலும்' என, ஏழனுருபும் உம்மையும் விரிக்க. உருக்கழல்: வினைத்தொகை. அரக்குங் கடுமை - அரக்குதலைத் தாங்கும் கடினத் தன்மை.

(பி - ம்.) 1. அரக்கர்திண்; மால்வரைபோய், விழுந்து போயெழுந்து, போல் விழுந்து, ஊடெழும், ஊடெழுந்து.
2. அரக்கினுருக்கழல், அரக்கியுருக்கழல், உருக்கழற்; காட்டதர், காட்டயற், காட்டகக், காட்டிடை, காட்டினிற், காட்டியல், காடதாம், காடயற், காடெனும்.
4. பூவென்றான். (224)

பிராட்டி பிரிவுத்துன்பமே பெரிதெனல்

520. பரிவி கந்த மனத்தொடு பற்றிலா
தொருவு கின்றனை யூழி யருக்கனும்
எரியு மென்பன யாண்டைய வீண்டுநின்
பிரிவி னுஞ்சுடு மோபெருங் காடென்றாள்.

(பிராட்டி), பற்று இலாது - என்பால் பற்றின்றி, பரிவு இகந்த மனத் தொடு - இரக்கத்தையும் விட்ட மனத்தோடு, ஒருவுகின்றனை - என்னை விட்டுச் செல்கின்றீர்; ஊழ் அருக்கனும் - (சுடுதலில் வல்ல) பிரளய காலத்துச் சூரியனும், ஊழி எரியும் - பிரளயகால அக்கினியும், என்பன - என்று சொல்லப்படுவன, யாண்டைய - (நும் பிரிவை நோக்க) எங்குள்ளன? ஈண்டு நின் பிரிவினும் - இங்கே நும்மைப் பிரிந்திருத்தலினும், பெரு காடு - (நீர் செல்லும்) பெரிய காடு, சுடுமோ - என்னை எரிக்குமோ? என்றாள் - என்று விடையிறுத்தாள். எழுவாய் வருவிக்க.

'காட்டின் வெப்பத்தை நீ தாங்க மாட்டாய் என்பது வெறும் போக்கே; உண்மையில் என்னிடத்து அன்பு இல்லாமலும், பெண்ணுயிற்றே என்ற இரக்கமின்றியும் என்னை விட்டுச் செல்கின்றீர். நும்மைப் பிரிந்திருத்தலாகிய தீயே என்னைச் சுடவல்லது; ஊழித் தீயும், ஊழியருக்கனுங்கூட அதன் முன் நில்லா; அவ்வாருகும்போது, காடு எம்மாத்திரம்?' என்கின்ருள் பிராட்டி. ஊழியை எரியோடும் ஒட்டுக. தலைவன் பிரிவைத் தீ எனல்: ''மல்லுறை யலங்கன் மார்பன், பிரிவெனு மெரியுள் வீழ்ந்து...மாதர் வெந்தனள் கிடப்ப'' (சீவக. 1527) என்பது ஈண்டு ஒப்பிடத் தகும்.

(பி - ம்.) 1. பரிவிகழ்ந்த, பரிவிழந்த; மனத்தொடும், மனத்தொரு; பற்றலாத.
3. என்பதியாண்டையது, என்பதியாண்டைய, என்பனயாண்டையத, என்பனவாண்டைய; இன்றுமின்.
4. கானென்ருள். (225)

இராமபிரான் நிலை

521. அண்ண லன்னசொற் கேட்டன னன்றியும்
உண்ணி வந்த கருத்து முணர்ந்தனன்
கண்ணி னீர்க்கடற் கைவிட நேர்கிலன்
எண்ணி நின்றன னென்செயற் பாற்றெனு.

அண்ணல் - இராமபிரான், அன்ன சொல் கேட்டனன் - (பிராட்டி கூறிய) அந்த வார்த்தையைக் கேட்டான்; அன்றியும் - கேட்டதன்றியும், உள் நிவந்த - அவள் உள்ளத்தில் மேலிட்டு நின்ற, கருத்தும் உணர்ந்தனன் - கருத்தையும் உணர்ந்துகொண்டான்; (அதன்மேல் அவளை) கண்ணின் நீர் கடல் - கண்ணீர்ப் பெருக்காகிய கடலிலே (மூழ்கும்படி), கைவிட நேர்கிலன் - கைவிட்டுச் செல்ல மனமொவ்வாமல், என் செயல்பாற்று எனு - இப்போது செய்யத் தக்கது யாது என்று, எண்ணி நின்றனன் - (சிறிது) ஆலோசித்து நின்ருன்.

கண்ணீர்க் கடலில் கைவிடுதல் - அழுது ஏங்கும்படி விட்டுச் செல்லுதல். ''பிழையலள் மாதோ பிரிதும்நா மெனினே'' (அகநா. 5) என்பதை ஒப்பு நோக்குக. பிராட்டியின் மென்மையை நோக்குங்கால் அவள் உடன் வர ஒவ்வாமையும், அவள் கருத்தை நோக்குங்கால் உடன்படலும் மாறிமாறி மனத்தே தோன்றினமையின், என் செயற் பாற்றென எண்ணி நின்ருன்.

(பி - ம்.) 2. உன்னிவர்ந்த, உண்ணிகழ்ந்த, உண்ணிறைந்த; உணர்ந்தின்ன.
3. கைவிட நேர்கலன், கைவிடல் நேர்கலன், கைவிட நோக்கலன், நோக்கிலன், நோக்கினன், நோக்கினுன், கைவிடல் நோக்கலன்.
4. எண்ணுகின்றனன்; என் செயற்பாற் றென்ருன், செயற்பாற்றென் ருன், செயப்பாற்றெனு. (226)

பிராட்டி மரவுரி உடுத்து வந்து வள்ளல் கை பற்றி நிற்றல்

522\. அனைய வேலை யகமனை யெய்தினள்
புனையுஞ் சீரை துணிந்து புனைந்தனள்
நினையும் வள்ளல்பின் வந்தய னின்றனள்
பனையி னீள்கரம் பற்றிய கையினள்.

அனைய வேலை - (இராமபிரான் சிறிது எண்ணி நின்ற) அவ்வமயம், (பிராட்டி) அகம் மனை எய்தினள் - அந்தப்புரத்தினுள்ளே போய், புனையும் சீரை - (பிரானுக்கு ஏற்பத் தானும்) உடுத்துதற்குரிய மரவுரியை, துணிந்து புனைந்தனள் - (ஒருவர் அநுமதியும் இன்றித் தானே) துணிந்து உடுத்தவளாய், நினையும் வள்ளல்பின் வந்து - சிறிது எண்ணி நின்ற இராமபிரானது பின்பக்கமாக வந்து, பனையின் நீள் கரம் பற்றிய கையினள் -(அவனது) பனைபோலத் திரண்டு நீண்ட ஒரு கையைத் தன் கையால் பற்றிக்கொண்டு, அயல் நின்றனள் - (அவன்) பக்கத்தில் நின்றாள்.

பற்றிய கையினள் - கையாற் பற்றியவளாய். எய்தினள், புனைந்தனள், கையினள் என்ற முற்றெச்சங்கள் நின்றனள் என்பதனோடு முடிந்தன.

இங்கே அமைந்த காட்சியைப் பின்னே சுந்தர காண்டத்தில் இராமன் கூறிய அடையாளங்களில் ஒன்றாக அனுமன் விரிக்கும் செய்யுளிலும் காணலாம் :

நடத்தலரி தாகுநெறி நாள்கள்சில தாயர்க்கு
அடுத்தபணி செய்திவ ணிருத்தியென வச்சொற்கு
உடுத்ததுகி லோடுமுயி ருக்கவுட லோடும்
எடுத்தமுனி வோடுமய னின்றதுமி சைப்பாய்.

(பி - ம்.) 1. அனைய வெல்லை; அகன் மனை; எய்தியப், எய்தியே.
2. சிரம்; துணித்துப்.
3. நினைவின், நினைவில்; வந்தவனின்றனள்.
4. பனையினன்கரம், பனைய நீள்கரம். (327)

கண்டோர் வருந்தல்

523\. ஏழை தன்செயல் கண்டவர் யாவரும்
வீழ மண்ணிடை வீழ்ந்தனர் வீந்திலர்
வாழு நாளுள வென்றபின் மாள்வரோ
ஊழி பேரினு முய்குந ருய்வரே.

ஏழைதன் செயல் கண்டவர் யாவரும் - பிராட்டியின் இச்செயலைக் கண்டவர் அனைவரும், வீழ மண் இடை வீழ்ந்தனர் - இறந்து விழுந்து கிடப்பதற்குரிய தரையிலே (மயங்கி) விழுந்தனர்; (ஆனால்) வீந்திலர் -

இறந்தாரில்லை; (ஏனெனில்) வாழும் நாள் உள என்றபின் - (அவர்கள் உலகத்தில்) வாழ்தற்குரிய நாட்கள் (ஆயுள்) மேலும் உளவான போது, மாள்வரோ - மாள்வார்களோ? (மாளார்); ஊழி பேரினும் - ஊழியே புடைபெயருங் காலமாயினும், உய்குநர் உய்வரே - பிழைத்தற்குரியவர் பிழைத்தே இருப்பர்.

பிராட்டி மரவுரி உடுத்தாள் என்றபோது, அணிகலன்களை அகற்றினுள் என்பதும் பெறப்படும். அவளுடைய அத்தோற்றம் அனைவரையும் கலங்கச்செய்தது. இறந்து செயலற்று விழுவதற்குரிய தரையின்மேல் விழுந்தாலும் அவர்கள் இறந்திலர் என்று சொன்னபடி.

(பி - ம்.) 1. கண்டபின்.
2. வீந்திலார், வீய்ந்திலர், வீஇலர்.
3. நாளுளதென்றபின், நாளள வென்றபின்; வாழ்வரோ, வாழ்வரே.
4. உய்குவருய்குவார். (228)

தாய்மார் முதலியோர் வருந்தல்

524. தாயர் தவ்வையர் தன்றுணைச் சேடியர்
ஆய மன்னிய வன்பின ரென்றிவர்
தீயின் மூழ்கின ரொத்தனர் செங்கணான்
தூய தையலை நோக்கினன் சொல்லுவான்.

தாயர் - (பிராட்டிக்குத்) தாய் முறையில் உள்ளவர்களும், தவ்வையர் - தமக்கை முறையில் உள்ளவர்களும், தன் துணை சேடியர் - தனக்குத் துணையாக உற்றது புரியும் பணிப்பெண்களும், ஆயம் - விளையாட்டாயத்தாரும், மன்னிய அன்பினர் என்ற இவர் - நிலைத்த அன்புடைய வேறு பலருமாகிய இவர்களெல்லாம், தீயில் மூழ்கினர் ஒத்தனர் - தீக்குளித்தவர் போன்ற துன்பமுற்றனர்; செம் கண்ணான் - இராமபிரான், தூய தையலை நோக்கினன் சொல்லுவான் - தூயவளாகிய பிராட்டியை நோக்கிச் சொல்லலுற்றான்.

சீதையின் தோற்றமும் செயலும் கண்டு, மாதர் அனைவரும் பெருந்துயருற்றிருக்க, இராமபிரான் அவளை நோக்கிச் சொல்லுகின்றான்; சொல்லியது இன்னதென்பது அடுத்த பாடலுள் வரும். அது சினக்குறிப்புடையதாகலின் இங்கே 'செங்கணான்' எனக் குறித்தார். அவன் இயல்பிலே செந்தாமரைக் கண்ணனே யாயினும், இங்கே அச்சொற்கிடக்கை மிகப் பொருத்தமுடையதாகின்றது.

(பி - ம்.) 2. மன்னவரன்பினர், மங்கையரன்பினர்; என்றவர்.
3. ஒத்தனர் சேவகன்.
4. சொல்லினன். (229)

இராமபிரான் கூற்று

525. முல்லை யுங்கடன் முத்து மெதிர்ப்பினும்
வெல்லும் வெண்ணகை யாய்விளை வுன்னுவாய்
அல்லை போத வமைந்தனை யாதலின்
எல்லை தீர்ந்த விடர்தரு வாயென்றான்.

(செங்கணான் பிராட்டியை நோக்கி) முல்லையும்-முல்லையரும்பும், கடல் முத்தும்-கடலில் தோன்றும் நன்முத்தும், எதிர்ப்பினும்-எதிர்த்தாலும், வெல்லும் - (அழகாலும் ஒளியாலும்) அவற்றை வெல்ல வல்ல, வெள் நகையாய் - வெள்ளிய பற்களை உடையவளே, விளைவு உன்னுவாய் அல்லை - மேல் விளைவுகளை நினையாதவளாய், போத அமைந்தனை ஆதலின் - என்னுடன் வரத் துணிந்தாயாகலின், எல்லை தீர்ந்த இடர் தருவாய் - அளவற்ற துன்பங்களை எனக்குத் தருபவளாவாய், என்றான்—.

நீ அவசரப்பட்டுத் துணிந்த செயல் உனக்கு மகிழ்ச்சி தருவதாயினும் எனக்குப் பெருந்துன்பம் தருவதாகும் என்றான். இது, மேல் விளைவுகள் பலவற்றையும் மனத்துட்கொண்டு கூறியதாகும். பிராட்டி, உடன் செல்லுதலை மகிழ்ந்தாளென்பதை அவளது புன்னகை புலப்படுத்தியதாதலின், 'வெண்ணகையாய்' என விளித்தான்.

(பி-ம்.) 1. முல்லையங்கடன் முத்தும்.
2. விளைவெண்ணுவாய், வினையெண்ணுவாய், வினையுன்னுவாய்.
3. போதலமைந்தனை; ஆதலில், ஆமெனின்.
4. எல்லை அற்ற; இல்லா; வீந்த. (230)

பிராட்டியின் மறுமொழி

526. கொற்ற வன்னது கூறலுங் கோகிலம்
செற்ற தன்ன குதலையள் சீறுவாள்
உற்று நின்ற துயரமி தொன்றுமே
எற்று றந்தபி னின்பங்கொ லாமென்றாள்.

கொற்றவன் - இராமபிரான், அது கூறலும் - அந்த வார்த்தை சொன்னவுடன், கோகிலம் செற்றது அன்ன குதலையள் - குயிலை வென்றது போன்ற இனிய மழலைச் சொல்லையுடைய பிராட்டி, சீறுவாள் - சீற்றங் கொண்டவளாய் (நாயகனை நோக்கி), உற்று நின்ற துயரம் - (இப்போது உமக்கு) நேர்ந்துள்ள துன்பம், இது ஒன்றுமே - இந்த ஒன்றுதானோ? என் துறந்தபின் - என்னைக் கைவிட்டபின், இன்பம் ஆம் கொல்-(எல்லாம்) இன்பமே யாகும் போலும், என்றாள்—.

'நாடு துறந்ததும், தவக்கோலங் கொண்டு காடு செல்வதுமாகியவை துன்பமல்லவோ? காட்டு வாழ்க்கை எவர்க்காயினும் துன்பம் தருவதேயன்றி, நான் இல்லாவிடின் அஃது இன்பமாகுமோ?'

என்பன போன்றவற்றை உட்கொண்டு, 'துயரம் இது ஒன்றுமே; எற்றுறந்தபின் இன்பமாங்கொல்' என்றாள்.

(பி - ம்.) 1. சொற்றவனது.
2. செற்றவன்ன, சொற்றதன்ன, சொற்றதென்னக்; குதலையிற் சொல்லுவாள்.
4. எற் பிரிந்தபின்; இன்பங் கொலோ, இன்பங்களாம். (231)

இராமபிரான் புறப்படுதல்

527. பிறிதொர் மாற்றம் பெருந்தகை பேசலன்
மறுகி வீழ்ந்தழ மைந்தரு மாதரும்
செறுவின் வீழ்ந்த நெடுந்தெருச் சென்றனன்
நெறிபெ றுமை யரிதினி னீங்குவான்.

பெருந்தகை - (பிராட்டியின் சொல்லைக் கேட்ட) இராமபிரான், பிறிது ஓர் மாற்றம் பேசலன் - மறு வார்த்தை ஒன்றும் பேசாதவனாகி, மைந்தரும் மாதரும் - ஆடவரும் மகளிரும், மறுகி வீழ்ந்து அழ - மனங்கலங்கி மண்ணில் வீழ்ந்து அழுதலால், செறுவின் வீழ்ந்த - (சேறுகி) வயல்போலக் கிடந்த, நெடு தெரு சென்றனன் - பெரிய வீதியிலே சென்று, நெறி பெறுமை - (சன நெருக்கத்தால்) நேர்வழி பெறாமல், அரிதினின் நீங்குவான் - அரிதாக அதனைக் கடந்து செல்வானானான்.

இராமபிரான் மேலும் வேறு பேசாமல் புறப்பட்டது உடன்படற் குறிப்பு; எனவே, அவனோடு மற்றிருவரும் புறப்பட்டனர். மூவரும் சென்ற முறை அடுத்த கவியுட் கூறப்படும். பெருந்தகை - பெருமையாகிய தகுதி உடையவன்: பண்புத்தொகையன்மொழி. செறுவின்: இன், ஐந்தனுருபு; ஒப்புப்பொருளது.

இப்பாடல், சில அச்சுப்பதிப்புக்களிலும், சில சுவடிகளிலும் இல்லை.

(பி - ம்.) 1. பேசிலன்.
2. விழ்ந்தழு, விழ்ந்தெழு, விழ்ந்தரு, வீழ்தரு; மாதரு மைந்தரும்.
3. செறுவில், செறிவில், செறிவின், செறிய, நெறியின்; சென்றனர், சென்றென.
4. பெறுமல்; அரிதென; நீங்குவார். (232)

மூவரும் செல்லுதல்

528. சீரை சுற்றித் திருமகள் பின்செல
மூரி விற்கை யிளையவன் முன்செலக்
காரை யொத்தவன் போம்படி கண்டவவ்
வூரை யுற்ற துணர்த்தவு மொண்ணுமோ.

திருமகள் - பிராட்டி, சீரை சுற்றி - மரவுரியை (இடையில்) சுற்றிக்கொண்டு, பின் செல - தன் பின்னே வரவும், மூரி வில் கை இளையவன் - வலிய வில்லேந்திய கையையுடைய இளையபெருமாள், (இலக்குவன்), முன் செல - முன்னே செல்லவும், காரை ஒத்தவன் - கார்மேக வண்ணனான இராமபிரான், போம்படி - (அவர்கள் நடுவிலே) போன வகையை, கண்ட - கண்ணெதிரே பார்த்த, அ ஊரை உற்றது - அவ்வூரார்க்கு உண்டான துன்பத்தை, உணர்த்தவும் ஒண்ணுமோ - நம்மால் சொல்லவும் இயலுமோ? (இயலாது என்றபடி).

முன்னே இராமனையும் இலக்குவனையும் மரவுரி தரித்த கோலத்தோடு கண்டவர்கள், இப்போது சீதையையும் சேர்த்து அவ்வாறு கண்டதனால், துயரம் முன்னிலும் பெரிதாயிற்று. மரவுரியைக் கையால் தொட்டும் அறியாத பிராட்டி, அதனை எடுத்து மிக விரைவில் உடுத்து வந்தமையின், ஏதோ ஒருவாறு சுற்றிக்கொண்டது போன்றிருந்த தென்பார், 'சீரை சுற்றி' என்றும், அதனையுடுத்தும் இன்றியமையாமையும் இல்லாதவள் என்பது தோன்ற 'திருமகள்' என்றும் கூறினார். ஊர்: ஆகுபெயர். ஊரை - ஊர்க்கு; உருபு மயக்கம். 'பின்செல' என்ற இடத்தில், செல என்பது வர என்ற பொருளில் வந்தது. திருமகள் பின்னே வர அவளுக்கு முன்னே இளையவனும், அவ்விருவர்க்கும் பின்னே இராமனுமாகச் சென்றார்கள் எனவும் பொருள் கொள்ளலாம்.

(பா. ம்.) 1. சீரஞ் சுற்றி; முன்செல.
2. இளையவன் பின்செல.
3. உற்றவன்; கண்டதவ்.
4. ஒன்றுமோ, வேண்டுமோ. (233)

மக்கள் செயல்

529. ஆரும் பின்ன ரழுதவ லித்திலர்
சோருஞ் சிந்தையர் யாவருஞ் சூழ்ந்தனர்
வீரன் முன்வன மேவுதும் யாமெனாப்
போரொன் றொல்லொலி கைமிகப் போயினர்.

பின்னர் - அவ்வாறாகிய பின்னர், ஆரும் அழுது அவலித்திலர் - ஒருவரும் வாய்விட்டு அழுது அவலம் கொள்ளவில்லை; சோரும் சிந்தையர் யாவரும் - சோர்ந்த மனமுடைய எல்லோரும், சூழ்ந்தனர் - ஒன்று கூடினவராய், யாம் வீரன் முன் வனம் மேவுதும் எனா - நாமெல்லாம் இராமனுக்கு முன்னே காட்டை அடைவோம் என்று சொல்லிக்கொண்டு, போர் ஒன்று ஒல் ஒலி கைமிக - போர் போன்ற பேரொலி வரம்பு கடந்து ஒலிக்க, போயினர் - விரைந்து முன்னே சென்றனர்.

பின்னர் - மூவரையும் அந்தக் கோலத்தோடு கண்டு அவர்கள் வனம்போதல் தவிராதென்று உணர்ந்த பின்பு. 'இனி அழுது கவலைப்

படுவதால் ஆவது ஒன்றுமில்லை; நடக்கவேண்டியது, இராமனுக்கு முந்தி நாமெல்லாம் காடு போய்ச் சேர்வதே' என்று பேசிக்கொண்டு எழுந்தனர். இதுவரை அவர்கள் அழுது சோர்ந்திருப்பினும், இனிச் செயலில் அதனைத் தவிர்த்து முன்செல்வதே தக்கது என்ற முடிவுகொண்டனர் என்றவாறு. அவ்வாறு முன்னே சென்றால், இராமன் முதலியோர் வருவதற்குள், காட்டைத் திருத்தி உறைவிடம் ஆக்கிவிடலாம் என்பதும் அவர்கள் கருத்தெனலாம்; 404 - பார்க்க. ஒல் : ஒலிக்குறிப்பு.

(பி - ம்.) 1. பின்னர் அழுது வலித்திலர், அழுதவலித்திலார், பின்னை யழுதவலித்திலர், அன்பினமுதவலித்திலர்.
3. வனமேகுதும் யாமெனப்.
4. போரென்றெல்லொலி, போரொன்றுலொலி, போருமென்றெலி, பேரென்றுலொலி; கைம்மிகப். (234)

இராமபிரான் தன்னைத் தொடர்ந்த தாயரை நிற்கச்செய்தல்

530. தாதை வாசல் குறுகினன் சார்தலும்
கோதை வேலவன் றாயரைக் கும்பிடா
ஆதி மன்னனை யாற்றுமி னீரென்றான்
மாத ராரும் விழுந்து மயங்கினார்.

கோதை வேலவன் - மாலை சூட்டிய வேலையுடைய இராமபிரான், தாதை வாசல் குறுகினன் சார்தலும் - தந்தையின் மாளிகை வாயிலை நெருங்கியவுடன், தாயரை கும்பிடா - (தன்னைத் தொடர்ந்த) தாய்மாரை அஞ்சலி செய்து வணங்கி, நீர் - நீங்கள், ஆதி மன்னனை ஆற்றுமின் என்றான் - முதல்வராகிய நம் அரசரைத் தேற்றுங்கள் என்று கூறினான்; மாதராரும் - (அது கேட்ட) தாய்மாரும், விழுந்து மயங்கினார் - கீழே விழுந்து மூர்ச்சித்தனர்.

தன்னைத் தொடர்ந்த தாய்மார் அறுபதினாயிரவரை நிறுத்த வேண்டி இராமபிரான் கூறிய குறிப்பை அவர்கள் உணர்ந்து, விழுந்து மூர்ச்சித்தனர். இராமபிரான், பிராட்டி யிருப்பிடம் நோக்கிப் புறப்பட்டபோதே தாய்மார் முதலிய பலரும் அவனைத் தொடர்ந்தமையும், அவர்களை நிறுத்தும் வகை அறியாது பிரான் சென்றமையும் 478 - 79-ஆம் பாடல்களிற் காணலாம். ஆதி-முதன்மை.

(பி - ம்.) 1. வாயில், வாயிற்; குறுகினர்; மு. தாதை கோயிலின் வாசலைச் சார்ந்தவக், வாய்தலிற் சார்ந்தவக், வாயிலிற் சார்ந்தவக், வாசலிற் சார்ந்தவச், தாதை வாசல் குறுகித் தயங்குறும்.
2. கோதை வில்லவன்; கும்பிட்டவ்.
3. ஆற்றுமினீண்டென்றான்.
4. அயர்ந்து மயங்கினார். (235)

தாய்மார் செயல்

531. வாழ்த்தி னார்தம் மகனை மருகியை
ஏத்தி னாரிளை யோனை வழுத்தினர்
காத்து நல்குமின் றெய்வதங் காளென்றார்
நாத்த ழும்ப வரற்றி நடுங்குவார்.

நா தழும்ப - நாக்குத் தழும்பேறும்படி, அரற்றி - புலம்பி, நடுங்குவார் - நடுங்குகின்ற தாய்மார், தம் மகனை - தம் மகனான இராமனை, வாழ்த்தினார் - வாழ்த்தினார்கள்; மருகியை ஏத்தினார் - மருமகளாகிய சீதையைப் புகழ்ந்தார்கள்; இளையோனை வழுத்தினர் - இலக்குவனைப் பாராட்டினார்கள்; தெய்வதங்காள் - தெய்வங்களே, காத்து நல்குமின் - (மூவரையும்) காத்தருளுங்கள், என்றார் - என்று (தெய்வங்களை) வேண்டினர்.

காட்டுக்குப் போதலை எண்ணி, தீங்கு நேராமல் வாழ்க என்று இராமனை வாழ்த்தினர்; காட்டுக்குப் போக வேண்டிய அவசியம் இன்றி இருந்தும் நாயகனைப் பிரியாமற் செல்ல எண்ணிய செயற்கருஞ் செயலை எண்ணிச் சீதையை ஏத்தினர்; அவ்வாறே அண்ணனைப் பிரியாமற் செல்லும் அரிய செயலைச் செய்த இலக்குவனை வழுத்தினர்.

அவரனைவரும், புதல்வர்ப் பேறின்றி இராமனையே தம் மகனாகக் கருதியிருந்தவராகலின், 'மகனை' எனக் குறித்தார். நல்குதல் - அருளுதல்; திரும்பத் தருதல். காத்தற்குத் தெய்வங்களை வேண்டுதல்: "தீக்கான கத்துறையும் தெய்வங்காள் வீமன்றன், கோக்கா தலியைக் குறிக்கொண்மின்" (நள. 273).

(பி - ம்,) 1. ஏத்தினர்.
2. வாழ்த்தினர்; ஏத்தினாரிளையோனையு மின்சொலால்.
3. தெய்வதைகாள், தேவதைகாள், தேவதங்காள். (236)

மூவரும் தேரேறிச் செல்லல்

532. அன்ன தாய ரரிதிற் பிரிந்தபின்
முன்னர் நின்ற முனிவனைக் கைதொழாத்
தன்ன தாருயிர்த் தம்பியுந் தாமரைப்
பொன்னுந் தானுமோர் தேர்மிசைப் போயினான்.

அன்ன தாயர் - அத்தன்மையினரான தாய்மார், அரிதில் பிரிந்த பின் - அரிதாகப் (பிரிய மனமில்லாமல்) பிரிந்த பிறகு, முன்னர் நின்ற - தன் எதிரில் நின்ற, முனிவனை கை தொழா - வசிட்ட முனிவனை அஞ்சலி செய்துவிட்டு, தன்னது அரு உயிர் தம்பியும் - தனதாருயிர் போன்ற தம்பி இலக்குவனும், தாமரை பொன்னும் - தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமியாகிய சீதையும், தானும் -

தானுமாக, ஓர் தேர் மிசை போயினன் - (சுமந்திரன் கொணர்ந்த) ஒரு தேரில் ஏறிப் போனான்.

. இராமன் என்ற எழுவாய் வருவிக்க. தலைமைப் பொருளுக்குக் கொடுக்கும் வினையோடு தலைமையில் பொருளும் சார்ந்து முடியுமாகலின், 'போயினன்' என ஒருமை முடிபு கொடுத்தார், ''தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்'' (பழம்பாடல்) என்பதிற் போல.

ஒரு பிரதியில், அடியிற் காணும் ஒரு மிகைப் பாடலோடு இப் படலம் முடிகின்றது.

போயி னனகர் நீங்கிப் பொலிதரு
தூய பேரொளி யாகித் துலங்கருள்
ஆயு மூவரு மாகி யுயிர்த்தொகைக்
காயு மாகி யளித்தரு ளாதியான்.

இவ்விடத்து வான்மீகம் கூறுவது வேறுபடுகின்றது. அஃதாவது:

பிராட்டி உடன் வருதலையே அரிதின் இசைந்த இராமபிரான் தான் உடன் வருதல்பற்றி யாது கூறுவனோ என்று ஐயுற்ற இலக்குவன், பிரானுடைய திருவடிகளைப் பற்றிக்கொண்டு, 'நானும் உடன் வருவதனால் உமக்குத் தொண்டு செய்தலையன்றி விபரீதமொன்றும் நிகழாது; என்னைக் கைவிடாது உடனழைத்துச் செல்லவேண்டும்' என்று வற்புறுத்தி இரந்து வேண்ட, இராமபிரானும், 'அங்ஙனமாயின், நீ உன் நண்பர் முதலியோரிடத்து விடைபெற்றுக்கொண்டு, காட்டில் நமக்குப் பாதுகாப்பாக வேண்டிய படைக்கலங்கள் முதலியவற்றையும் கொணர்க' என, இலக்குவன் அவ்வாறே செய்தனன். பின்னர் இராமபிரான், தனக்கு உரிமையாக உள்ள சொத்துக்களையெல்லாம் தானம் செய்யக் கருதி, அது பெறுதற்குரியாரை வருவித்துப் பிராட்டியோடும் இளையவனோடும் இருந்து தானங்களையெல்லாம் செய்தான். பின்பு, மூவருமாக வனம் போதலைக் குறித்துத் தசரதனிடம் அநுமதி பெறக் கருதி அவனுள்ள இடம் செல்ல, அவர்களைக் கண்ட மன்னன் துயரம் மேலிட்டு மூர்ச்சிக்க, மிக்க பிரயாசையுடன் எல்லோருமாக அவனைத் தேற்ற, அரிதில் அவன் தேறியபின், இராமபிரான் அனுகித் தங்களுக்கு விடை தர வேண்டினன். அப்போது மன்னன் இராமனைத் தழுவி மீண்டும் மூர்ச்சையுற, அங்கிருந்தோர் அனைவரும் சோகத்தில் ஆழ்ந்தனர். அப்போது, சிறிதும் சகியாது அங்கிருந்த கைகேயியைச் சுமந்திரன் பலபடியாக வெறுத்துப் பேசி, இராமனுடைய சிறப்பியல் புகளையும், அவனிடத்து அனைவர்க்கும் உள்ள பற்றுதலையும் எடுத்துச் சொல்லி, எவ்வகையிலும் இராமனுக்கு முடிசூட்டுவதே முறை என்று கூறவும், கைகேயி தன் பிடியைச் சிறிதும் தளர்த்தவில்லை. பின்பு, இராமனோடு நால்வகைப் படைகளையும் வனத்திற்கு அனுப்ப

வேண்டும் என்று மன்னன் கருத, கைகேயி அதனையும் தடுத்தாள். சித்தார்த்தர் என்பவர் அவளுக்கு எவ்வளவோ அறிவுறுத்தியும் அவள் கேட்கவில்லை. அதுகண்டு மன்னன் மிகவும் வருந்த, இராமன், 'எல்லாவற்றையும் துறந்து வனத்திற் செல்லும் எனக்குச் சதுரங்க சேனை ஏன்?' என்று மன்னனைச் சமாதானப்படுத்தினான். பின்பு கைகேயி, வனம் செல்லுதற்குரிய மூவர்க்கும் மரவுரியைக் கொடுப்பிக்க, சீதைக்கு அது தருதலும் அவள் அதனைத் தரித்தலும் கூடாவென்று வசிட்ட முனிவனும் மன்னவனும் கண்டித்தனர். பின்பு சீதைக்குச் சிறந்த ஆடையாபரணங்களைத் தருமாறு செய்ய, அவற்றை அவள் அணிந்து விளங்கினளாக, கௌசல்யை அவளைந் தழுவி உச்சி மோந்து பல நல்லுரைகள் கூறினள். சீதையும் அவற்றை ஏற்றுத் தன் மனநிலையை அறிவித்தாள். பின்னர்த் தாய்மாரையும் மன்னனையும் வணங்கி விடைபெற்று மூவரும் புறப்பட, சுமந்திரன் தேர் சித்தமாயிருத்தலைத் தெரிவித்து, அவர்களைத் தேரில் ஏற்றிக் கொண்டு அதனைச் செலுத்தினான். அவர்கள் செல்வதைக் கண்ட நகர மக்கள் பலபடியாகப் பேசிக்கொண்டு, துயரோடு தேரைத் தொடர்ந்தனர்.

இராமபிரான் புறப்படும்போது தானம் செய்தமையைக் கம்பர் இங்கே கூறாமல், சுந்தர காண்டத்துள் பிராட்டியின் கூற்றாகக் குறிக்கின்றார்.

(பா-ம்.) 1. பிரிந்தனர்.
2. முன்னை, முன்னம், பின்னர்.
4. தேர்மிசை போயினார். (237)

நகர் நீங்கு படலம் முற்றும்.

5. தைலமாட்டு படலம்

தைலத்துள் மூழ்குவித்தமை கூறும் படலம் என இதன் பொருள் விரியும். இராமன் வனம் சேர்ந்தமை அறிந்த அளவில் தசரத மன்னன் உயிர் நீத்தானாக, அவன் உடலைப் பரதன் வருமளவும் கெடாது பாதுகாத்தற்பொருட்டு எண்ணெய்க் கொப்பரையுள் இட்டு வைத்தமை படலத் தலைப்புப் பெயராற் குறிக்கப்படுவது.

சில சுவடிகளில் இப்படலப் பெயர் 'இலம்பாட்டுப் படலம்' என்று உள்ளது. இலம்பாடு - வறுமை; இல்லாமை. இராமபிரான் இன்றித் தசரத மன்னனும் உயிர் நீத்தமையால், நகரம் முழுதும் துக்கமயமாகிப் பொலிவிழந்திருத்தற்கு இப்பெயர் பொருத்தமுடையதாகவே தோற்றுகிறது. இப்படலத்துப் பாடல் தொகை 87. இவற்றுள் முதல் 48 பாடல்கள் வரை 'சுமந்திரன் மீட்சிப் படலம்' எனவும், எஞ்சிய பகுதி 'தசரதன் மோட்சப் படலம்' எனவும் இரண்டு பகுதியாக ஒரு பிரதியில் இப்படலம் காணப்படுகின்றது.

சுமந்திரன் செலுத்திய தேரில் இராமபிரான் முதலிய மூவரும், திரளான மக்கள் பின் தொடரச் சென்று நகரைக் கடந்து அதன் புறத்தே உள்ளதொரு சோலையில் இரவு தங்கினர். நள்ளிரவு வரை அனைவரும் விழித்திருந்தனர். அதன்பின் அயர்ச்சியால் மக்கள் அங்கங்கே படுத்து உறங்குவாராயினர். அவ்வமயம் இராமபிரான் சுமந்திரனை நோக்கி, "இவர்களை மேலும் உடன் தொடர விடுதல் முறையன்று; இவர்களாகத் திரும்புவதும் அரிதெனத் தோன்றுகிறது. ஆதலால், நீர் சந்தடியின்றித் தேரைத் திருப்பி நகருக்குட் செலுத்திக் கொண்டுபோனால், விழித்த பின் தேர்ச் சுவட்டைக் கண்டு இவர்களும் நகருக்கு மீள்வர். பொழுது விடிவதற்குள் நாங்களும் நெடுந் தூரம் சென்றுவிடுவோம். இவ்வுதவியை நீர் புரிதல் வேண்டும்" என வற்புறுத்த, சுமந்திரனும் மிக வருந்தி, முடிவில் இராமபிரான் கூறியவாறு செய்தான். இராமபிரானும் அப்பொழுதே புறப்பட, மூவரும் பொழுது புலருமுன் இரண்டு யோசனை தூரம் கடந்து சென்றனர்.

ஐந்து நாழிகையளவில் நகரை அடைந்த சுமந்திரன், வசிட்ட முனிவனை அணுகிச் செய்தி கூற, முனிவனும் சுமந்திரனோடு தசரதன் மாளிகையை அடைந்தான். தேர் வந்தமை அறிந்த அமைச்சர் முதலிய பலரும், இராமன் திரும்பி வந்திருத்தல் கூடுமென்று கருதி வந்து பார்த்து, இராமபிரானைக் காணாது துயருற்றனர். மன்னனும் சிறிது தெளிவுற்று, "இராமன் வந்தானோ?" என்று முனிவனை வினவ,

முனிவன் விடை கூற மாட்டாமல் அகன்றான். இவன் முகக் குறியால், இராமன் வரவில்லை என்று உணர்ந்த மன்னன், சுமந்திரனை நோக்கி, "இராமன் அணியனோ, சேயனோ?" என வினவ, அவன், "இராமன் மனைவியோடும் தம்பியோடும் பெருங் கான் புகுந்தான்" என்றானாக, அது கேட்ட மன்னனது ஆவி அப்போதே பிரிந்தது. மன்னன் இறந்தமை அறிந்த தேவிமாரும் பிறரும் வந்து கூடிப் பலவாறு புலம்பினர். வசிட்ட முனிவனும் அங்கு வந்து, கலம் கவிழ்த்த மீகாமனைப் போலக் கலங்கி பின்னர்த் தெளிவுற்று, மன்னனுடைய உத்தரக் கிரியைகளைப் பரதன் வந்து செய்யுமளவும் இவ்வுடலைப் பாதுகாத்தல் வேண்டுமென்று கூறி, அதனை எண்ணெய்க் கொப்பரையில் இடுவித்தபின், பரதனுக்கு ஓலையோடு தூதுவரைப் போக்கினான்.

இங்கே இவ்வாறாக, நகர்ப்புறச் சோலையில் உறங்கிய மக்கள் விழித்தெழுந்து, இராமபிரான் தங்கிய இடத்தில் ஒருவரையும் காணாது வருந்திப் பின்னர்த் தேர்ச் சுவட்டைக் கண்டு, இராமன் நகருக்குத் திரும்பியிருத்தல் கூடுமென்று கருதி மீண்டு நகருக்கு வந்து, இராமன் வனம் புக்கதும் மன்னன் வான் புக்கதும் அறிந்து மிகப் பெருந் துயருற்று, வசிட்ட முனிவன் நல்லுரையால் ஒருவாறு தேறியிருப்பாராயினர். இது இப்படலச் சுருக்கம்.

இராமபிரான், குகனால் கங்கையைக் கடந்து சித்திரகூடம் நோக்கிப் புறப்பட்டபோது சுமந்திரனை அயோத்திக்கு மீளும்படி விடை கொடுத்து அனுப்ப, அவன் குகனோடு சிருங்கிபேரபுரத்தில் சில நாள் தங்கி, இராமபிரான் சித்திரகூடம் சேர்ந்தது தெரிந்தபின்பு புறப்பட்டு அயோத்தி சேர்ந்தான் என்று வான்மீகம் கூறும்.

இராமனை யாவரும் தொடர்ந்து சென்றமை

(கலிவிருத்தம்)

533. ஏவிய குரிசில்பின் யாவ ரேகிலார்
மாவிய றானையின் மன்னை நீங்கலாத்
தேவியர் தவிர்ந்தனர் தெய்வ மாநகர்
ஓவிய மொழிந்தன வுயிரி லாமையால்.

மாஇயல் தானையின் - மிக்க பெருமை தங்கிய சேனையையுடைய, மன்னை - தசரத மன்னனை, நீங்க அல்லா(த) - பிரிதலாகாத, தேவியர் தவிர்ந்தனர் - கோசலை முதலிய தேவிமார் (இராமனுடன் செல்லுதலைத்) தவிர்ந்தனர்; தெய்வம் மா நகர் - தெய்வத் தன்மை வாய்ந்த அப் பெரிய நகரத்திலுள்ள, ஓவியம் - சித்திரங்கள், உயிர் இலாமையால் - தங்கட்கு உயிரில்லாமையால், ஒழிந்தன - போகாதொழிந்தன; (இவர்களையன்றி) ஏவிய குரிசில் பின் - (வனம் போகுமாறு) ஏவப் பட்ட இராமன் பின்னே, ஏகிலார் யாவர் - போகாதவர் எவர்?

"வீரன் முன்வன மேவுதும் யாமெனுப், போரொன் றெல்லொலி கைமிகப் போயினுர்" (529) என முன்னே நகர மக்களின் தன்மையைக் கூறியவர், இங்கே, 'நகரை விட்டுப் போகக்கூடிய எவரும் போகாது ஒழிந்திலர்' என எதிர்மறையாலும் அதனை உறுதியாக்கினுர். தேவிமார் எப்போதும் அந்தப்புரத்தை விட்டகலாதவர்; இப்போது சரமதசையிலுள்ள மன்னனை விட்டுப் பிரிதலும் அவர்களுக்குத் தக்கது அன்று; ஆதலால் அவர்கள் போகவில்லை.

அயோத்தி நகரம், முத்திதரும் தலம் ஏழனுள் முதலதாகி, எம் பெருமான் அவதரித்தற்கும் இடமாயினமையின் 'தெய்வ மாநகர் என்ருர்.

(பி-ம்.) 1. ஏவியல் குரிசில்பின், ஏவிய குருசில் பின்; யாரும் ஏகினர், யாவரேகலார்.
2. மாவியன்ருனையம், மாவியருனையிம், மாவியருனையும்; மன்னன் நீங்கலாத்.
3. தேவியர் ஒழிந்தனர், ஒழிந்தவர், தவிர்த்தனர், மின்றனர்; தெய்வ மானகர், தெய்வமாணகர்.
4. ஒழிந்தனர், ஒழிந்தன, ஒத்தன, ஒத்தனர்; உயிரிலாமையே. (1)

தேர் சென்ற வகை

534. கைகணீர் பரந்துகா றொடரக் கண்ணுகும்
வெய்யநீர் வெள்ளத்து மெள்ளச் சேறலால்
உய்யவே ழுலகுமொன் றுன நீருலாம்
தெய்வமீ னொத்ததச் செம்பொற் றேரரோ.

அ செம் பொன் தேர் - (இராமபிரான் ஏறிச் சென்ற) அந்தச் செம் பொன்னுல் இயன்ற தேர், கைகள் - பக்கங்களிலே, நீர் பரந்து - நீர் பரவி, கால் தொடர - தேர்ச் சக்கரத்தைத் தொடரும்படி, கண் உகும் - (துயருற்ற மக்கள்) கண்களிலிருந்து பொழியும், வெய்ய நீர் வெள்ளத்து - வெப்பமுள்ள நீர்ப் பெருக்கினிடையே, மெள்ள சேறலால் - மெல்லச் செல்லுதலால், ஏழு உலகும் ஒன்று ஆன நீர் - ஏழு உலகங்களும் தன்னுள் அடங்கும்படி பரந்த ஊழி வெள்ளத்தில், உய்ய - அவ்வுலகங்களெல்லாம் உய்யும் வண்ணம், உலாம் - உலாவிய, தெய்வம் மீன் ஒத்தது - தெய்வத் தன்மையுள்ள (திருமால் அவதாரமான) மீனைப் போன்றிருந்தது. அரோ : அசை.

பின் இரண்டு அடிகளில் திருமாலின் மச்சாவதாரத்தைக் குறித்து, அந்தத் தெய்வ மீன் கடலுள் உலாவியது போன்று, கண்ணீர்ப் பெருக்காலாகிய கடலிலே தேர் மெல்லச் சென்றது என உவமையாக்கிக் கூறினுர். "தெருவெல்லாம், ஆருகி யோடின கண்ணீர்" (397) என்ருர் முன்னும். துயரக் கண்ணீர் வெப்பமுடையது. கை - பக்கம். கால் - தேர்ச் சக்கரம். உலாம் - உலவும்.

(பி - ம்.) 1. நீர்வந்து; கண்ணுகு, கண்ணுறு, கண்ணுறும்.
2. மெய்யநீர்; வெள்ளத்துள், மெல்லச், மேவிச்.
3. உய்யவேமுலகம், உய்யவேறுலகம், உய்யுமேழுலகம், வந்தொதுங்க, வந்தொதுங்கும், வந்தொதுங்கி; நீருமல்.
4. ஒத்தவச், ஒத்தது. (2)

கதிரவன் மறைதல்

535. மீன்புகல் பெறவெயி லொதுங்க மேதியோ
டான்புகக் கதிரவ னத்தம் புக்கனன்
கான்புகக் காண்கிலே னென்று கல்லதர்
தான்புக முடுகின னென்னுந் தன்மையான்.

கதிரவன் - சூரியன், கான்புக காண்கிலேன் என்று - (இராமன்) காட்டிற் புகக் காணப்பொறேன் என்று, தான் கல் அதர் புக முடுகினன் என்னும் தன்மையான் - தான் மலைகளுள்ள காட்டு வழியிலே செல்ல விரைந்தான் என்று சொல்லத்தக்க தன்மையனாகி, மீன் புகல் பெற - விண்மீன்கள் தோன்றவும், வெயில் ஒதுங்க - வெயில் மறையவும், மேதியோடு ஆன் - (மேய்ச்சலிற் சென்ற) எருமைகளும் பசுக்களும், புக - நகருக்குட் புகவும், அத்தம் புக்கனன் - தான் அஸ்தமன கிரியை அடைந்தான்.

சூரியன் மறையும் காலத்தில், வெளியே மேய்ச்சலுக்காகச் சென்றிருந்த பசுக்களும் எருமைகளும் ஊருக்குத் திரும்பி வருதலும், வெயில் மறைதலும், நட்சத்திரங்கள் தோன்றுதலும் இயல்பாக நிகழ்வன; அஸ்தமனத்துக்குத் தற்குறிப்பேற்றமாக ஒரு காரணம் கற்பித்து, தன் குலத் தோன்றலான இராமன் வனம் புகுதலைத் தான் காணப்பொறாமல், அவனுக்கு முன்னே தான் மலைக்காட்டு வழியிலே செல்வான்போல அஸ்தமன கிரியை அடைந்தான் என்றார். அத்தம் - அத்தமன கிரி. கதிரவன், தன்மையனாய், புகல் பெற, ஒதுங்க, புக, புக்கனன் எனக் கூட்டிமுடிக்க.

(பி - ம்.) 1. மீன் புகழ்பெற, பொலிதர; ஒதுங்கி, ஒதுங்கும்.
2. அத்தமாயினன்.
3. கல்விடைத்.
4. முடுகுவன், முடுகுவான், முழுகினன்; தன்மையோன். (3)

தாமரைகள் குவிதல்

536. பகுத்தவான் மதிகொடு பதுமத் தண்ணலே
வகுத்தவா ணுதலியர் வதன ராசிபோல்
உகுத்தகண் ணீரின வொளியு நீங்கிட
முகிழ்த்தழ கிழந்தன முளரி யீட்டமே.

பகுத்த வான் மதிகொடு-பாதியான சிறந்த சந்திரனைக் கொண்டு, பதுமத்து அண்ணலே வகுத்த - தாமரையில் வீற்றிருக்கும் பிரம தேவனே (சிறப்பாகப்) படைத்தமைத்த, வாள் நுதலியர் - ஒளி அமைந்த நெற்றியையுடைய (அயோத்தி நகரத்து) மகளிரின், வதனம் ராசிபோல் - முகத் தொகுதியைப் போலவே, முளரி ஈட்டம் - தாமரை மலர்க் கூட்டங்கள், உகுத்த கண்(கள்) நீரின - கண்ணீர் உகுத்தன வாய், ஒளியும் நீங்கிட-(தம் இயற்கையான) ஒளியும் கெட, முகிழ்த்து - கூம்பி, அழகு இழந்தன - அழகை இழந்தன.

சூரியாஸ்தமனத்தின் பின், தாமரை மலர்கள் வாடிக் குவிந்து பொலிவிழந்திருத்தல் இயல்பு. அதற்கு, இராமபிராமன் பிரிவால் வருந்தி அழுது மலர்ச்சியின்றியிருந்த நகரத்து மகளிரின் முகங்களை உவமையாக்கினர். எதிர்நிலையுவமை: குவிந்த தாமரை, வாடிய மகளிர் முகத்துக்கு: 548 பார்க்க. மகளிரின் முகங்கள், கண்ணீர் சிந்தி மலர்ச்சியின்றி வாடின; தாமரை மலர்களும் கள்ளாகிய நீர் சிந்தி வாடிக் குவிந்தன. கண்ணீர் : சிலேடை. பகுத்த மதி - பாதி மதி; நெற்றிக்கு உவமை. ஒளியும்: உம்மை, எதிரது தழுவிய எச்சம். இராமபிரானுக்கு முடிசூட்டு விழாக் குறித்த நாட் காலையில் தாமரைகள் மலர்ந்தமையை ஆசிரியர் கூறிய வகை (247) இங்கே ஒப்புநோக்கத் தகும்.

(பி - ம்.) 1. வாண்மதி கொடு, வான்மதிக்கெதிர்.
3. கண்ணீரன, கண்ணீரென, கண்ணீரினர், கண்ணீரினின், கண்ணீருனல்; ஒலியு நீங்கின, ஒலியுமஃகின, ஒலிமயங்கின, ஒளியினீங்கின, ஒளித்து நீங்கினர்.
4. முகிழ்த்தழ கொழிந்தன, முகிழ்த்தனர் கிளர்ந்தனர். (4)

வானம் இருளுதல்

537. அந்தியின் வெயிலொளி யழிய வானகம்
நந்தலில் கேகயன் பயந்த நங்கைதன்
மந்தரை யுரையெனுங் கடுவின் மட்கிய
சிந்தையி னிருண்டது செம்மை நீங்கியே.

அந்தியின் வெயில் ஒளி அழிய - அந்திக் காலத்து வெயிலின் ஒளி மறைதலால், வான் அகம் - ஆகாயம், மந்தரை உரை எனும் கடுவின் மட்கிய - கூனியின் கொடு மொழியாகிய விடத்தால் மழுங்கின, நந்தல் இல் கேகயன் பயந்த நங்கை தன் சிந்தையின் - கெடுதலில்லாத கேகய மன்னன் பெற்ற கைகேயியின் மனம்போல, செம்மை நீங்கி இருண்டது - செக்கர்த் தன்மை நீங்கப்பெற்று இருள் அடைந்தது. ஏ : ஈற்றசை.

மாலைக் காலத்தில் அழகிய தோற்றமுடைய செவ்வானம் கதிரவன் மறைவால் செம்மை நீங்கி இருண்டமைக்குக் கைகேயியின் திரிந்த மனத்தை உவமித்தார். "வஞ்சனை யரக்கர்தம்......நெஞ்சினி னிருண்டது நீல வானமே" (கிட்கிந்தா. 435) கைகேயியின் மனம், கூனியால் திரியுமுன் செம்மையுடையது; கூனி மொழியாகிய விடத்தின் கருமை பாய்ந்து மனத்தின் செம்மையைக் கெடுத்ததனால் அஃது இருண்டது. செவ்வானம், சிந்தை; இருள், மந்தரையுரையெனும் கடு எனக் கொள்க. செம்மை, சிலேடை வகையால், செம்மைப் பண்பையும், செக்கரையும் உணர்த்திற்று. நங்கை தன் சிந்தை, கடுவின் மட்கிய சிந்தை என இயையும். மட்குதல் - மழுங்குதல். கைகேயி இயல்பிலே மனத் தூய்மை உடையவளென்பது, "தேவி தூய சிந்தையும் திரிந்தது" (174) என்பதனால் விளங்கும்.

(பி - ம்.) 1. அந்தியில்; ஒளியவிய, அருக, ஒழிய, ஒளியற்ற.
2. கந்தலில் கைகயன், கந்தலிற் கைகயன்.
3. மைந்தரை; கடுவின் வட்கிய, மாழ்கிய, வைகிய, கடுமடங்கிய.
4. சிந்தையில்; செம்மையின்மையே, செம்மையின்றியே. (5)

விண்மீன் நிறைந்த வானின் தோற்றம்

538. பரந்துமீ னரும்பிய பசலை வானகம்
அரந்தையின் முனிவர னறைந்த சாபத்தால்
நிரந்தர மிமைப்பிலா நெடுங்க ணீண்டிய
புரந்தர னுருவெனப் பொலிந்த தெங்குமே.

மீன் பரந்து அரும்பிய - விண்மீன்கள் பரவித் தோன்றிய, பசலை வான் அகம்-பசிய நிறமுடைய ஆகாயம் எங்கும், அரந்தை இல் முனிவரன் அறைந்த சாபத்தால் - துன்பம் இல்லாத முனிச் சிரேட்டனான கௌதமன் சொல்லிய சாபத்தால், நிரந்தரம்-எப்போதும், இமைப்பு இலா நெடுகண் ஈட்டிய - இமைத்தல் இல்லாத நீண்ட கண்கள் நிறையப்பெற்ற, புரந்தரன் உரு என பொலிந்தது - இந்திரன் வடிவம்போல விளங்கியது.

இந்திரன் கருநிறமுடையவன்; அவன் உடம்பு முழுதும் ஆயிரங் கண்கள் உண்டு. அவ்வடிவை விண்மீன்கள் அரும்பிய ஆகாயத்துக்கு உவமை கூறினார். முனிவரன் - முனிவருட் சிறந்தோன். முனிவர்கள் புலனடக்கத்தால் இன்பதுன்பங்களைப் பொருட்படுத்தாதவர்கள்; துன்பம் என்பது அவர்கள்பால் தோன்றாதாகலின், 'அரந்தையில் முனிவரன்' என்றார்.

(பி - ம்.) 1. வானரும்பிய.
2. முனிவனன்று.
3. இமைப்பில; நெடுங்கணீடிய, நெடுங்கணீட்டிய.
4. புரந்தரனுலகெனப். (6)

இராமன் இரவில் ஒரு சோலையில் உறைதல்

539. திருநகர்க் கோசனை யிரண்டு சென்றொரு
விரைசெறி சோலையை விரைவி னெய்தினான்
இரதநின் றிழிந்துபி னிராம னின்றுணை
உரைசெறி முனிவரோ டுறையுங் காலையே.

இராமன் - இராமபிரான், விரைவின் - விரைவாக, திருநகர்க்கு ஓசனை இரண்டு சென்று-செல்வமிக்க நகரினின்றும் இரண்டு யோசனை தூரம் சென்று, விரை செறி -(மலர்களின்) மணம் மிகுந்த, ஒரு சோலையை எய்தினான் - ஒரு சோலையை அடைந்தான்; பின்—, இரதம் நின்று இழிந்து - தேரினின்றும் இறங்கி, இன் துணை - நல்ல துணையாகி, உரை செறி - நல்லுரைகள் மிக்க, முனிவரோடு - (அச்சோலையில் வாழ்ந்த) முனிவர்களுடன், உறையும் காலை - அங்கே தங்கி இருந்த போது. ஏ : ஈற்றசை.

இதுவும் அடுத்த பாட்டும் குளகம். நகர்க்கு : உருபுமயக்கம். ஓசனை - யோசனை. இராமன் எய்தினான், இழிந்து உறையுங்காலை என இயைக்க. உரை - புகழும் ஆம்.

(பி - ம்.) 1. திருநகர்க்கியோசனை; இரண்டும்.
2. எய்தினர்.
3. இரத மின்றிழிந்தபின், இரதமுமிழிந்தபின், இரதமுமிழிந்துபின்; இராமனன்றுணை, இராமன்றன்றுணை, இராமனின்புறும்.
4. உறையுங் காலையில், உறைந்த காலையே, உறைந்த காலையில். (7)

வேந்தர் முதலியோர் அச்சோலையைச் சூழ்ந்து தங்குதல்

540. வட்டமோ ரோசனை வளைவிற் றாய்நடு
எட்டனை யிடவுமோ ரிடமி லாவகை
புட்டகு சோலையின் புறத்தைச் சூழ்ந்துதாம்
விட்டிலர் குரிசிலை வேந்தர் வேறுளோர்.

வேந்தர் - அரசர்களும், வேறு உளோர்தாம் - மற்றும் உள்ள மக்களும், வட்டம் - சுற்றிலும், ஓர் ஓசனை வளைவிற்று ஆய் - ஒரு யோசனை தூரம் பரப்புடையதாய், நடு - இடையே, எள்தனை இடவும் - எள்ளை இடவும், ஓர் இடம் இலாவகை - ஓர் இடைவெளி இல்லாதபடி, புள் தகு - பறவைகள் நிறைந்த, சோலையின் புறத்தை சூழ்ந்து - (இராமன் தங்கிய) சோலையின் வெளிப்புறத்தைச் சூழ்ந்துகொண்டு, குரிசிலை விட்டிலர் - இராமனைப் பிரியாதவராயினர்.

இராமபிரானைத் தொடர்ந்து சென்றோர் அனைவரும் அவன் தங்கிய சோலையைச் சுற்றி மிகவும் நெருக்கமாகச் சூழ்ந்துகொண்டு அங்கங்கே தங்கினர் என்றபடி. அவருள் அரசரும் இருந்தனர் என்பது இப்பாடலால் பெறப்படும். ஒரு யோசனைப் பரப்பில்

எள்ளிடவும் இடைவெளியின்றி நிறைந்தனர் என்றதனுல், அத்திரளின் மிகுதி புலப்படும். 'கூட்டத்தில் எள்ளுப் போட்டால் எள் விழாது' என்று வழங்கும் பழமொழியை இது நினைப்பூட்டுகின்றது. இராமன் உறையுங்காலை (539); வேந்தரும் வேறுளோரும் சூழ்ந்து விட்டிலர் (540) எனக் கூட்டி முடிக்க. எள் தனை - எள்ளை; தன்: சாரியை. ஓர் இடம் - சிறிய இடமும் என்றலுமாம். தகுதல் - மேம்படுதல்; நிறைதல்;

(பி - ம்.) 1. வட்டமொரோசனை, வட்டமொர் யோசனை, வட்டமே யோசனை, வட்டமேழ் யோசனை, வட்டமேழி யோசனை; வளைவித்தாய், வளையிற்றாய்.

2. எட்டனையிடமுமோசர், எட்டனையிடவும் வெற், எட்டினையிடமுமோர்; இடனிலாவகைப், இடையிலாவகைப்.

3. புட்டகை, புட்டரு, புட்டரும், புட்டிரள்; புறத்துப் போர்த்தென, போர்த்தன, போங்தென.

4. விட்டது குரிசிலை, விட்டிலர் குரிசிலை; விடாத சேனையே, வெள்ளமே, விடாது சேனையே. (8)

தங்கியவர்களின் செயல்

541. குயின்றன குலமணி நதியின் கூலத்தில்
பயின்றுயர் வாலுகப் பரப்பிற் பைம்புலில்
வயின்றொறும் வைகினு ரொன்றும் வாய்மடுத்
தயின்றிலர் துயின்றில ரழுது மாழ்கினர்.

(சோலையைச் சூழ்ந்து நிறைந்தவர்கள்), குலம் மணி குயின்ற அன்ன - சிறந்த மணிகள் பதித்தாற்போன்ற, நதியின்கூலத்தில் - ஆற்றின் கரையிலும், பயின்று உயர் வாலுகம் பரப்பில் - நிறைந்து உயர்ந்த வெண்மணற் பரப்பான இடங்களிலும், பசுமை புல்லில் - பசும்புல் தரையிலும், வயின்தொறும் - இடங்கள்தோறும், வைகினர் - தங்கியவர்களாய், ஒன்றும் வாய் மடுத்து அயின்று இலர் - ஒன்றையும் வாயிலிட்டு உண்ணுமலும், துயின்று இலர் - தூங்காமலும், அழுது மாழ்கினர் - அழுது கலங்கினர்கள்.

எள்ளிடவும் இடமின்றி நிறைந்த எல்லோரும், ஆங்காங்குத் தமக்கு வாய்ந்த இடங்களில் தங்கி, ஊணும் உறக்கமும் இன்றி மாழ்கியிருந்தனர். துயரம் அவர்கள் மனத்துள் நிறைந்திருந்தமையின், பசியும் தோன்றிலது. மேலே எட்டுப் பாடல்களால் அவர்கள் துயின்றமை கூறுதலால், இங்கே துயின்றிலர் என்றது நெடுநேரம் விழித்திருந்தனர் எனக் கொள்க. நதி: தமசை என்ற பெயருடையது என்பது முதனூலால் அறியப்படும். குயிலுதல் - பதித்தல். கூலம் - கரை. வாலுகம் - வெண்மணல். அன : தொகுத்தல். வைகினர், அயின்றிலர், துயின்றிலர் : முற்றெச்சம்.

(பி - ம்.) 1. குயின்றியல், குயின்றில.
2. பயின்றன, பயின்றுகா; வாலுகம் பரப்பிப்; பைம்புலின், பைம்புனல், பைம்புலன்.
3. வயின்றொறும் வயின்றொறும் வைகினரொன்றும், வைகி வாய்மடுத்து, வைகினரரோ.
4. அயின்றில ரொன்றுமாங்கு; விம்மினர், விம்முவார். (9)

பலர் துயின்ற நிலை
(வேறு)

542. வாவிவிரி தாமரையின் மாமலரின் வாசக்
காவிவிரி நாண்மலர் முகிழ்த்தனைய கண்ணார்
ஆவிவிரி பானுரையி னாடையணை யாக
நாவிவிரி கூழையிள நவ்வியர் துயின்றார்.

வாவி விரி - குளங்களில் மலர்ந்துள்ள, தாமரையின் மாமலரின் - தாமரையின் சிறந்த மலரில், வாசம் விரி - மணம் வீசுகிற, காவி நாள் மலர் - கருங்குவளையின் அன்றலர்ந்த பூ, முகிழ்த்த அனைய - (அமைந்து) தோன்றுவதை யொத்த, கண்ணார் - கண்களை உடைய வர்களான, நாவி விரி கூழை - கத்தூரி மணம் பரந்த கூந்தலை உடைய, இள நவ்வியர் - இளமான் போன்ற பருவமங்கையர் பலர், ஆவி விரி - நறும்புகையூட்டிய, பால் நுரையின் ஆடை - பால் நுரை போன்ற (மெல்லிய) ஆடையே, அணை ஆக - படுக்கையாகக் கொண்டு, துயின்றார் - உறங்கினர்.

இதுமுதல் எட்டுக் கவிகளால், பலரும் பலவகையாக உறங்கினமையைக் கூறுகின்றார். முன்னமே துயரத்தால் வருந்திச் சோர்ந்தவர்கள், வழிநடந்த வருத்தத்தால் மேலும் அயர்ச்சி உற்றுத் தூங்கலானார்கள். அவருள்ளும் மகளிர் மெல்லியலாராதலின், அவர்கள் துயின்றமையைப் பெரும்பாலும் எடுத்துக் கூறுவார். இத்தகைய துன்பத்தை முன்பு ஒருபோதும் உணர்ந்திலாதவர்கள். தாமரைப்பூவில் குவளைப்பூ மலர்ந்து தோன்றுவது போன்ற என்றது இல்பொருளுவமை. "முண்டகத்தின்மீது முழுநீலம் பூத்ததனைக் கண்டதுண்டு" என்பது தனிப்பாடல். இஃது அவர்களுடைய கண்களின் இயற்கையைச் சிறப்பித்தவாறு. முகிழ்த்தல் - குவிதல் என்ற பொருளும் உடையதாகலின் மூடிய கண்களுடையர் என்றலுமாம். இளநவ்வியர் என்றதனால் பருவ மங்கையர் என்பது பெறப்படும். கண்ணாராகிய நவ்வியர் துயின்றார் என்று இயைக்க. நவ்வி - மான். மகளிர் ஆடைக்கும் புகையூட்டுதல் மரபு.

(பி. ம்.) 1. நாண்மலரின், இன்மலரின்; மா மயிலின்.
4. கூந்தலிள, கூழையினும். (10)

543. பெரும்பகல் வருந்தினர் பிறங்குமுலை தெங்கின்
குரும்பைகள் பொருஞ்செவிலி மங்கையர் குறங்கில்
அரும்பனைய கொங்கையயி லம்பனைய வுண்கண்
கரும்பனைய செஞ்சொனவில் கன்னியர் துயின்றார்.

அரும்பு அனைய கொங்கை - கோங்கரும்பை யொத்த தனங்களையும், அயில் அம்பு அனைய - கூரிய அம்பு போன்ற, உண்கண் - மையுண்ட கண்களையுமுடைய, கரும்பு அனைய செம் சொல் நவில் - கரும்புபோலும் இனிய சொற்களைப் பேசுகின்ற, கன்னியர் - இளம் பெண்கள் சிலர், பெரு பகல் வருந்தினர் - நீண்ட பகற்பொழுது முழுதும் (துயரத்தாலும் வழிநடையாலும்) வருந்தினவர்களாய், பிறங்கும் முலை - பெருத்த தனங்கள், தெங்கின் குரும்பைகள் பொரும் - தெங்கங் குரும்பைகளையொத்த, செவிலி மங்கையர் குறங்கில் - செவிலித்தாயர் துடையில், துயின்றார் - (தலை வைத்து) உறங்கினார்கள்.

செவிலித்தாய்மாரும் உடன் வரப்பெற்ற சிறப்புடைய நங்கைமார் சிலர், அச்செவிலித்தாய்மாரின் துடையிலே தலை வைத்துத் தரையிலே கிடந்து துயின்றனர். பிறங்குதல் - பெருத்தல்.

இப்பாடல் சில பிரதிகளில் இல்லை.

(பி - ம்.) 2 பெருஞ்செவிலி; மங்கையர் குறங்கின், மங்கையர்கள் கோங்கின்.
3. அரும்பனைய கொங்கை பயில், அரம்பையனை கொங்கைபயில், அரம்பையனை யங்கைபயில் ஒண்கண்.
4. செஞ்சொனல, செஞ்சொலினர். (11)

544. பூவக நிறைந்தபுளி னத்திடர்க டோறும்
மாவகிரி னுண்கணர் மடப்பிடியின் வைகச்
சேவக மணைந்தசிறு கட்கரிக ளென்னத்
தூவயி லிருந்தமற மன்னர்கடுயின்றார்.

பூ அகம் நிறைந்த - பூக்கள் தம்மிடத்து நிறையப்பெற்ற, புளினம் திடர்கள்தோறும் - ஆற்றிடைத் திட்டுக்களில், மா வகிரின் உண் கண்ணர் - மாவடுவின் பிளப்புப் போன்ற மையுண்ட கண்களையுடைய மகளிர், மடம் பிடியின் வைக - இளம் பெண் யானைகள் போலத் துயில, தூ அயில் இருந்த மறம் மன்னர்கள் - ஊன் பொருந்திய வேலை உடைய வீர அரசர்கள், சேவகம் அணைந்த - உறக்கம் கொண்ட, சிறு கண் கரிகள் என்ன - சிறிய கண்களை உடைய ஆண் யானைகளைப் போல, துயின்றார் - உறங்கினார்கள்.

மன்னர்களைக் கூறினமையின் மகளிர், அவரைச் சார்ந்த அரச மகளிர் எனலாம். புளினம் - ஆற்றிடைத் திட்டு; மணற் குன்றும் ஆம். புளினத் திடர்: இருபெயரொட்டு. மா - மாவடு; வகிர் - பிளப்பு.

சேவகம் - உறக்கம் (சீவக. 1897.) கணர் ! தொகுத்தல். சிறுகண், யானைக்கு இயற்கையடை. தூ - ஊன்.

இப்பாடலும் சில பிரதிகளில் இல்லை

(பி - ம்.) 1. பூவுக, பூவகை; புளினத் திரள்கடோறும்.
2. வகிரினுண் கணின், வகிரிளெண்கணின்; வைகும்.
3. சேவகமணந்த, சேவகமமைந்த.
4. தூவகலில் குந்தமற, தூவகலிருந்த மற, தூவகல்வில் குந்தமற, தூவகலிலங்கு மயில், தூவகமிருந்தவயில், தூவகமிருந்தயற, தூவயலிருந்த, தூவகவிலங்குமற, தூவகவிலங்கு நகர்; மைந்தர் கடுயின்றார், மன்னவர் துயின்றார். (12)

545. தகவுமிகு தவமுமிவை தழுவவுயர் கொழுநர்
முகமுமவ ரருளுநுகர் கிலர்துயரின் மூழ்கி
அகவுமிள மயில்களனை யிரலசியன வனையார்
மகவுமுலை வருடவிள மகளிர்க டுயின்றார்.

இள மகளிர்கள் - (புதல்வரைப் பெற்ற) இளம் பெண்கள் சிலர், தகவும் - நடுவு நிலையும், மிகு தவமும் - சிறந்த தவமாகிய முறை அமைந்த இல்வாழ்க்கையுமான, இவை தழுவ - இவற்றைக் கைக் கொண்டு நடத்தலால், உயர் - உயர்வுபெற்ற, கொழுநர் முகமும் - தம் கணவருடைய இன்ப நோக்கத்தையும், அவர் அருளும் - அவர்களுடைய அருளையும், நுகர்கிலர் - நுகராதவராய், துயரில் மூழ்கி - பெருந்துயரத்தில் ஆழ்ந்து, மகவு முலை வருட - இளங் குழந்தைகள் (பால் உண்ணும் பொருட்டுத்) தனங்களை நெருடிக்கொண்டிருக்க, உயிர் அலசியன அகவும் இள மயில்கள் அனையார் - உயிர் சோர்ந்தனவான ஆடும் இளம் மயில்கள் போன்றவர்களாய், துயின்றார் - (சோர்ந்து) துயில் கொண்டனர்.

இங்குக் கூறப்பெற்றவர்கள், கணவரோடு இனிதாக இல்லறம் நடத்திப் புதல்வரைப் பெற்ற கற்புடை மகளிர் ஆவர். தம் கணவன்மாருடைய முகங்கோணாது நடத்தலையே தமக்குக் கடமையாகக் கொண்ட அவர்களும், துயரத்தால் அதனை மறந்து, தம்மைப் பிரிதல் இல்லாத இளங் குழந்தைகளுடன் இங்கே வந்து, சோர்வினால் தம்மையும் அறியாது துயிலலுற்றனர். முறை தவறாத இல்வாழ்க்கையைத் தவம் என்றார். கள் : விகுதிமேல் விகுதி. மகளிர்க்குத் தகவு, வாழ்க்கைத் தகுதி. தழுவ - தழுவுதலால். முகம் - முகநோக்கு. நுகர்கிலர், அனையார் : முற்றெச்சம். அலசியன - வினையாலணையும் பெயர்.

இப்பாடல் ஒரு பிரதியில் இல்லை.

(பி - ம்.) 1. தனமுமிவை; தழுவவயர், தழுவவுயிர், தழுவுமுயிர்.
2. அகமுமவர்; நுகர்கிலர்கள் துயர் முடுக, நுகர் சிலர்கள் துயர்முடுக, துயர்முழுக, நுகர்கிலர் துயர் முழுக, துயரமுறுவார், துயரின் முழுக,

முழுகி, மூழ்கி, முடுக, நுகர்வலர்களயர் முழுக, நுகர்கிலர் துயர முறுவோர்.

3. இனமயில்கள்; அலசியனமனேயார். (13)

546. மாகமணி வேதிகையின் மாதவிசெய் பந்தல்
கேகய நெடுங்குல மெனச்சிலர் கிடந்தார்
பூகவன மூடுபடு கர்ப்புளின முன்றில்
தோகையிள வன்னநிரை யிற்சிலர் துயின்ருர்.

சிலர் - சில மகளிர், வேதிகையின் - மேடைகளின்மீது, மாகம் அணி மாதவி செய் பந்தல் - வானத்தை அளாவும் குருக்கத்திக் கொடி படர்ந்தமைந்த பந்தலின்கீழ், நெடு கேகயம் குலம் என- நீண்ட மயிற் கூட்டம்போல, கிடந்தார் - சோர்ந்து கிடந்தனர்; சிலர் - வேறு சில மகளிர், பூகம் வனமூடு - கமுக வனத்தின் நடுவேயுள்ள, படுகர் - நீர்நிலைகளை அடுத்த, புளினம் முன்றில் - மணல் மேடான இடங்களில், தோகை இள அன்னம் நிரையில் - தோகையுடைய இளமையான அன்ன வரிசைகள்போல, துயின்ருர்—.

மகளிர்க்கு மயிலும் அன்னமும் உவமை. வேதிகை - திண்ணை மேடை; இது வேள்வி மேடை. மாகமணி பந்தல் எனக் கூட்டுக. புளினம் - மணற்குன்றும் ஆம். முன்றில் - இடம்.

இந்தப் பாடலும் ஒரு பிரதியில் இல்லை.

(பி - ம்.) 1. மாதவி செய்பந்தர்க், மாமணி செய்பந்தல்.
3. புகுதற் புளின, படுகற்புளின, படுகாமர்புரை, படுகமார்புடை, படுகாய்புளின.
4. தோகையவரன்ன. (14)

547. சம்பக நறும்பொழில்க ளிற்றருண வஞ்சிக்
கொம்பழ கொசிந்தன வெனச்சிலர் குழைந்தார்
வம்பளவு கொங்கையொடு வாலுக வளாகத்
தம்பவள வல்லிக ளெனச்சில ரசைந்தார்.

சிலர் - சில மகளிர், சம்பகம் நறு பொழில்களில் - சண்பக மரங்களின் நல்ல சோலைகளிலே, தருணம் வஞ்சி கொம்பு - இள வஞ்சிக் கொம்புகள், அழகு ஒசிந்தன என - அழகாகத் துவண்டு கிடந்தாற் போல, குழைந்தார்-வாடிக்கிடந்தனர்; சிலர் - வேறு சிலர், வம்புஅளவு கொங்கையொடு - கச்சு அணிந்த தனங்களோடு,வாலுகம் வளாகத்து - மணற் பரப்பான இடங்களில், அம் பவள வல்லிகள் என - அழகிய பவளக் கொடிகள் போல, அசைந்தார் - அயர்ந்து கிடந்தனர்.

(பி - ம்.) 1. சண்பக நறும், சம்பகவலம்; பொழிலிபற்றருண, பொழிலயற்றருண, பொழிலினியற்றருண.
2. கொம்புகள்.

3. கொங்கையொடும்; வாலுகம் வளர்க்கும்;
4. அசந்தார், அயர்ந்தார், அடைந்தார். (15)

548. குங்கும மலைக்குளிர் பனிக்குழுமி யென்னத்
துங்கமுலை யிற்றுக ளுறச்சிலர் துயின்றார்
அங்கையணை யிற்பொலி வழுங்கமுக மெல்லாம்
பங்கய முகிழ்த்தன வெனச்சிலர் படிந்தார்.

சிலர் - சில பெண்கள், குங்குமம் மலை - குங்கும மலையின்மேல், குளிர் பனி குழுமி என்ன - குளிர்ந்த பனி படிந்தது போல, துங்கம் முலையில் - உயர்ந்த தனங்களில், துகள் உற - புழுதி படிய, துயின்றார்—. சிலர் - வேறு சில பெண்கள், முகம் எல்லாம் (தங்கள்) முகங்களெல்லாம், முகிழ்த்தன பங்கயம் என - வாடிக் குவிந்த தாமரை மலர்கள் போல, பொலிவு அழுங்க - பொலிவு கெட, அம் கை அணையின் - அழகிய கை தலையணையாக, படிந்தார் - தரையில் படுத்து உறங்கினர்.

குங்குமச் சேறு அப்பிப் பூசித்த தனங்களுக்குக் குங்கும மலையையும், தனங்களிற் படிந்த புழுதிக்கு அம்மலையிற் படிந்த பனியையும் உவமையாக்கினர். துயரமுற்ற மகளிர் முகங்களைப் போலத் தாமரை மலர்கள் குவிந்து அழகிழந்தன என்றார் முன்னே; 536 - பார்க்க.

குழுமி யென்ன - குழுமியதென்ன; தொகுத்தல்.

(பி - ம்.) 1. குங்கும முலைக்; பனிக்குமிழியென்னத், குமிழியன்ன, மனற் குமிழ் யென்னத், மணிக்குமிழியன்ன, குமிழ் யென்னத், பனிக்குமிழியே போல், பணிக்கமளி யென்னத்.
2. துகள்படச்.
3. அழுங்கி, அழுங்கும்.
4. முகிழ்ப்பள. (16)

549. தொடுத்தகலி டைச்சிலர் துவண்டனர் துயின்றார்
அடுத்தவடை யிற்சில ரழிந்தன ரயர்ந்தார்
உடுத்ததுகில் சுற்றொரு தலைச்சில ருறைந்தார்
படுத்தகுழை யிற்சிலர்கள் கண்படை பயின்றார்.

சிலர்—, தொடுத்த கல்இடை - ஒன்றோடொன்று இணைந்த கற்களின் மேலே, துவண்டனர் துயின்றார் - துவண்டுகிடந்து தூங்கினார்கள்; சிலர் - வேறு சிலர், அடுத்த அடையில் - (தரையில்) வீழ்ந்துள்ள இலைகளின் மேலே, அழிந்தனர் அயர்ந்தார் - மனமழிந்தவராய் அயர்ந்துறங்கினர்; சிலர்—, உடுத்த துகில் சுற்று - தாம் உடுத்த ஆடைச்சுற்றின், ஒருதலை - ஒரு தலைப்பிலே, உறைந்தார் - உறங்கினர்; சிலர்கள் —, படுத்த குழையில் - தாமே பரப்பிய தளிர்களின்மேல், கண்படை பயின்றார் - உறங்குதல் செய்தனர்.

கண்படை - கண்படுத்தல்; துயிலுதல், பயிலுதல் - செய்தல் 542-ஆம் பாடல்முதல் முந்திய செய்யுள் வரை (இடையே "மறமன்

னர்க டுயின்ருர்'' - 544 என்ற ஓரிடந்தவிர) மகளிர் துயின்ற மையைப் பலபடியாகக் கூறி, இப்பாடலுள் இன்னுரெனக் குறியாது பொதுப்படக் கூறினுர். அடுத்த பாடலில் 'ஏனையரு மின்னண முறங்கினர் உறங்க' எனப் புறனடையாகக் கூறுகின்ருர். எனவே, அனைவரும் அயர்ந்து தம் நினைவின்றி இருந்தனரென்பது பெறப்படும்.

சில பதிப்பில் இது மிகைப்பாடல் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

(பி - ம்.) 1. தொடுத்த புருவச்சிலை, தொடுத்த மலரிற்சிலர், அலரிற்சிலர்; துவண்டன, துவன்றனர்.
2. அடுத்தகலிடைச்சிலர்; அழித்தனர், அரிந்தனர், அசைந்தனர், படுத்தனர்.
4. படுத்த. தளிரிற்சிலர்; பசைந்தனர் அசந்தார், படுத்தார். (17)

இராமபிரான் சுமந்திரனிடம் கூறுதல்

550. ஏனையரு மின்னண முறங்கின ருறங்கா
மானவனு மந்திரிசு மந்திரனை வாவென்
றூனமில் பெருங்குண மொருங்குடைய வுன்னல்
மேனிகழ்வ துண்டவுரை கேளென விளம்பும்.

ஏனையரும் - மற்றவர்களும், இன்னணம் - இவ்வாருக, உறங்கினர் - தூங்கினுர்கள்; (அப்போது), உறங்கா மானவனும் - உறக்கங் கொள்ளாத இராமபிரானும், மந்திரி சுமந்திரனை-(அவ்வாறே இருந்த) மந்திரியாகிய சுமந்திரனை, வா என்று - (தன் அருகில்) வாவென்று அழைத்து, ஊனம் இல் - குறையில்லாத, பெருங்குணம் - சிறந்த குணங்களை, ஒருங்கு உடைய - ஒருங்கே பெற்றுள்ள, உன்னல்—, மேல் நிகழ்வது உண்டு - மேலே நடக்க வேண்டிய காரியம் உண்டு; அ உரைகேள் என - அதுபற்றிய என் வார்த்தையைக் கேட்பாயாக என்று, விளம்பும் - சொல்வானுனன்.

சொன்னது அடுத்த பாடலில் வரும். சுமந்திரனை அழைத்துக் கூறினமையின், அவனும் உறங்கவில்லையென்பது போதரும். அவ்வுரை என்றது சந்தம் நோக்கி அவுரையென நின்றது.

(பி - ம்.) 1. ஏனையர்கள்; இறங்கினருறங்கா, உறங்க, இறங்கினருறங்க' இறங்கினருறங்கும்.
3. ஒருங்குடைய வன்னுன், ஒருங்குடைய வின்னல், ஒருங்குடைய முன்னல், (18)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

551. பூண்டபே ரன்பி ஞரைப் போக்குவ தரிது போக்கா
தீண்டுநின் றேகல் பொல்லா தெந்தைநீ யிரத மின்னே
தூண்டினை மீள்வ தாக்கிற் சுவட்டையோர்ந் தென்னை யங்கே
மீண்டன னென்ன மீள்வ ரிதுநின்னை வேண்டிற் றென்ருன்.

(இராமன் சுமந்திரனை நோக்கி) பூண்ட பேர் அன்பினுரை - நம்மிடம் கொண்ட பேரன்புடைய இவர்களையெல்லாம், போக்குவது

அரிது - (திருப்பி நகருக்கு) அனுப்புவது எளிதன்று; போக்காது - இவர்களை அவ்வாறு அனுப்பாமல், ஈண்டு நின்று ஏகல் பொல்லாது - இங்கிருந்து போதலும் குற்றமாகும்; (ஆதலால்), எந்தை நீ - எம் தந்தைபோன்ற நீர், இரதம் - நம் தேரை, இன்னே தூண்டினை - இப்பொழுதே செலுத்தி, மீள்வது ஆக்கில் - நகருக்குத் திரும்புவதாகச் செய்தால், சுவட்டை ஓர்ந்து - அத்தேர்ச்சுவட்டைக் கண்டு, என்னை அங்கே மீண்டனன் என்ன - என்னை நகருக்குத் திரும்பிவிட்டதாக நினைத்து, மீள்வர் - அவர்கள் திரும்புவார்கள்; நின்னை வேண்டிற்று இது - நான் உம்மை வேண்டிக்கொண்டது இதுவாகும், என்றான்—.

இராமபிரான், தன்னைத் தொடர்ந்தவர்களைத் திரும்பச் செய்தற்குரிய உபாயத்தைச் சுமந்திரன்பால் கூறினான். தேரைச் செலுத்திச் செல்வதற்குரியவன் அவனே யாதலால், அவனிடம் கூறினான்.

இங்கே வான்மீகம் கூறுவது வேறு வகை; அது வருமாறு: "தமசா நதிக்கரையில், இலக்குவனும், சுமந்திரனுமாக அமைத்த தழைப்படுக்கையில் சிறிது சயனித்து எழுந்த இராமபிரான், ஆலோசித்து, தொடர்ந்து வந்தோர் அறியாதபடி அவர்கள் உறங்குகையிலே அங்கிருந்து செல்லக் கருதித் தேரைச் சித்தம் பண்ணுவித்து மூவரும் அதில் ஏறி நதியைக் கடந்து, ஒரு பெருவழியைப் பற்றிச் செல்கையில், தேரை நிறுத்தச் செய்து மூவரும் இறங்கிக்கொண்டு, திரும்பி நகருக்குச் செல்வதுபோலத் தேரைத் திருப்பி நெடுந்தூரம் ஓட்டிச்சென்று, மீண்டும் சுவடு கண்டறிய முடியாதவாறு செலுத்தித் தாம் இருக்குமிடம் வந்து சேரும்படி சுமந்திரனைப் பணிக்க, அவனும் அவ்வாறே செய்ய, மூவரும் தேரிலேறிப் பயணப்பட்டுத் தேவ சுருதி, கோமதி என்னும் இரு நதிகளைக் கடந்து மேலே சென்று கங்கைக் கரையை அடைந்தபின், குகனோடு நட்புக்கொண்டு, அவன் கொணர்ந்த ஓடத்தில் ஏறும்போது, சுமந்திரனிடம் தந்தை முதலியோர்க்குச் செய்தி சொல்லி, இரதத்துடன் அவனைத் திருப்பியனுப்பினான்" என்பதாம்.

(பி - ம்.) 1. *அன்பினோரைப்; போக்குதலரிது, போக்குவதரிதிற்.*
3. *மீள்வதாக்கிச், மீள்வதாகி, மீளநோக்கிச், மீளவென்னிற்; சுவடு தேர்ந்து, என்னையிங்கே, எங்கும்.*
4. *மீள்வரிதுவுன்னை, மீள்வரிதுவனை, மீள்வரிதுமினை, மீள்வரிதனை, மீள்வாரிது வின்னை, மீள்வாரிது வென்னை.* (19)

சுமந்திரன் கூற்று

552. செவ்விய குரிசில் கூறத் தேர்வலா னுணர்த்து வானவ்
வெவ்விய தாயிற் றீய விதியினின் மேலன் போலாம்
இவ்வயி னின்னை நீக்கி யின்னுயிர் நீத்தே னல்லேன்
அவ்வயி னனைய காண்டற் கமைதலா லளிய னென்றான்.

செவ்விய குருசில் கூற - செப்பமுடைய இராமபிரான் (இவ்வாறு) கூற, தேர்வல்லான் - தேர் செலுத்துவதில் வல்லவனான சுமந்திரன், உணர்த்துவான் - (தன் கருத்தைத்) தெரிவிப்பவனாகி, அளியன் - இரங்கத்தக்கவனாகிய நான், இ வயின் நின்னை நீக்கி - இவ்விடத்து உன்னைப் பிரித்து அனுப்பிவிட்டு, இன் உயிர் நீத்தேன் அல்லேன் - இனிய என் உயிரை விடாதவனாய், அ வயின் - அவ்விடத்தில் (அயோத்தியில்), அனைய காண்டற்கு - (நீ இல்லாமையால் நிகழும்) அத்துன்பக் காட்சிகளைக் காணுதற்கு, அமைதலால் - (நீ சொல்லும் உபாயம்) பொருந்துதலால், (நான் அவ்வாறு செய்து) அ வெவ்விய தாயின் - அந்தக் கொடிய கைகேயியினும், தீய விதியினின் - (உன்னை இவ்வாருக்கிய) பொல்லாத ஊழ்வினையினும் பார்க்க, மேலன் போல் ஆம் - (கொடுமையில்) மேம்பட்டவன் ஆவேன் போலும்! என்றான்—.

இதனால் இராமபிரான் கூறியபடி அவனைப் பிரிந்து செல்வது உடன்பாடன்றென்பதைச் சுமந்திரன் உணர்த்தினான். அவன் மேலும் துயரத்தோடு தன் கருத்தைப் பலபடியாக விரித்துக் கூறுதலை மேலே ஆறு பாடல்களிற் கூறுவார்.

(பி - ம்.) 1. குரிசில்; செப்புவானவ், கூறுவானவ்.
2. விதியினின் மேலென், விதியினிமேலோன், மேலென்பாலாம்.
3. இவ்வயினின்னை நீங்கி, இவ்வயினினையல் நோக்கி, இவ்வயினின்னை நோக்கி; தீர்ந்தின்றேகி; இனிதென்றேகி, ஈந்தின்றேகி; தீராதேகி; இவ்வயின் கான நீபோ பெய்துதற்கிசைந்துமின்ற.
4. அவ்வயின் முடிவு; அமைந்தவா வடியேன், அமைந்தன னடியன், ஆதலாலளியன், அமைந்தன னென்று சொல்வான். (20)

(கலிவிருத்தம்)

553. தேவியு மிளவலுந் தொடரச் செல்வனைப்
பூவியல் கானகம் புகவுய்த் தேனென்கோ
கோவினை யுடன்கொடு குறுகி னேனென்கோ
யாவது கூறுகே னிரும்பி னெஞ்சினேன்.

(சுமந்திரன் மேலும் கூறுவான்). இரும்பின் நெஞ்சினேன் - இரும்பு போலும் வலிய நெஞ்சுடைய நான், தேவியும் இளவலும் தொடர - பிராட்டியும் இளையபெருமாளும் பின்தொடர, செல்வனை - இராமனை, பூ இயல் கானகம் புக உய்த்தேன் - பூக்கள் நிறைந்த காட்டிற்குப் போகும்படி செலுத்தினேன், என்கோ - என்று சொல்வேனோ? கோவினை - அரசனை, உடன்கொடு குறுகினேன் - உடனழைத்துக்கொண்டு வந்தேன், என்கோ - என்று சொல்வேனோ? யாவது கூறுகேன் - யாது சொல்வேன்?

இதுமுதல் ஆறு பாடல்கள் ஒரு தொடர்.

'நான் தனியே திரும்பி நகருக்குச் சென்றால், என்னை வினவுவோர்க்கும், சக்கரவர்த்திக்கும் யாது விடை கூறுவேன்? உன்னை உடனழைத்துச் செல்லவேண்டும்; அஃதியலாவிடின் நான் உயிர்விட வேண்டும். அது செய்யாவிடின், என் நெஞ்சு இரும்புதான்' என்கின்றான். இராமபிரான் மீண்டு வந்தால், அரசனாவது உறுதியாகலின், 'கோவினை' என்றான். என்கோ: என்கு + ஓ; என்கு: தன்மை ஒருமை வினைமுற்று; ஓகாரம் வினா.

இரும்பு நெஞ்சு: 488.

(பி-ம்.) 2. பூவியற் கானகம், பூவுயர்கானகம்; புகவுய்த் தென்கெனோ, போக்கினேனென்கோ.
4. ஏவது; இரும்பு நெஞ்சினேன். (21)

554. தாருடை மலரினு மொதுங்கத் தக்கிலா
வாருடை முலையொடு மதுகை மைந்தரைப்
பாரிடைச் செலுத்தினேன் பழைய நண்பினேன்
தேரிடை வந்தனென் றீதி லேனென்கோ.

பழைய நண்பினேன் - பழமையான நட்புடைய நான், தார் உடை(ய) மலரினும் ஒதுங்க தக்கு இலா(த) - ஒழுங்காகப் பரப்புதலுடைய பூவிலும் நடக்கத் தகுதி பெற்றில்லாத, வார் உடை முலையொடு - கச்சை உடைய தனங்களையுடைய சீதையோடு, மதுகை மைந்தரை - வலிமை மிக்க வீரரான இராமலக்குமணரையும், பார் இடை செலுத்தினேன் - தரையிலே (நடக்கும்படி) செலுத்தி, (நான்) தீது இலேன் - தீங்கு சிறிதும் இல்லாதவனாய், தேர் இடை வந்தனென்- தேரிலே (நகருக்கு) வந்தேன், என்கோ - என்பேனோ?

'உங்களைத் தரையிலே நடந்து காடு செல்ல விட்டு, நான் தனியே தீதின்றித் தேரிலேறி நகர் செல்வதா? அவ்வாறாயின், என்னுடைய அன்பும் நண்பும் என்னாம்?' என்கின்றான்.

தார் - ஒழுங்கு. பூவின்மீதும் நடக்கப் பொறாத பிராட்டியின் மெல்லடிகள் என அவற்றின் மென்மையைக் குறித்தான். ஒதுங்குதல்- நடத்தல். "முன்னே முன்னே மொய்ம்மலர் தூவி முறைசாரப், பொன்னே சூழும் பூவி னொதுங்கிப் பொலிகின்றாள்" (பால. 586) என்றது இங்கே நினைக்கத்தகும்.

வாருடை முலை: அன்மொழித்தொகை. பழைய நண்பினேன், செலுத்தினேன், தீதிலேன் வந்தனென் என்கோ என இயையும். செலுத்தினேன், தீதிலேன் என்பன முற்றெச்சம்.

(பி-ம்.) 1. மலையினமொதுங்கத், மருங்கினு மொருங்கத்; தக்கலா, தாக்கிலா.
2. மைத்தனைப், மைந்தனப்.

3. பாரிடை செலுத்தினன்; நண்பினன்.
4. வந்தனன் றீதிலேன், வந்தனன் றீதிலன், வந்தனென் றீதிலேன்.(22)

555. வன்புலக் கன்மன மதியில் வஞ்சனேன்
என்புலப் புறவுடைந் திரங்கு மன்னன்பால்
உன்புலக் குரியசொ லுணர்த்தச் செல்கெனோ
தென்புலக் கோமகன் றூதிற் செல்கெனோ.

வன் புலம் கல்மனம் - வலிய இடத்திலே உள்ள கல்லைப்போன்ற மனத்தையுடைய, மதி இல் - நற்புத்தியில்லாத, வஞ்சனேன் - வஞ்சகனை நான், என்பு உலப்பு உற - உடம்பு அழியும்படி, உடைந்து - மனமுடைந்து, இரங்கும் - வருந்துகிற, மன்னன்பால் - சக்கரவர்த்தியிடம், உன் புலக்கு உரியசொல் - உனது நல்லறிவிற்கேற்ப நீ கூறிய சொற்களை, உணர்த்த - உணர்த்தும்பொருட்டு, செல்கெனோ-திரும்பிச் செல்வேனோ? தென்புலம் கோமகன் தூதின் செல்கெனோ - தென் றிசைத்தலைவனை யமனுடைய தூதனைப் போலச் செல்வேனோ?

'நகரமாந்தர், அரசர் முதலியோர் மிகப் பலர் இராமனைத் தொடர்ந்து சென்றமையால், அவர்கள் பொருட்டேனும் இராமன் திரும்பி வரலாமென்று சிறிது பசைகொண்டு உயிர்தரித்துள்ள சக்கரவர்த்தி, நீ மீளவில்லை என்பது கேட்டவுடனேயே உயிர்நீப்பது உறுதி ஆதலால், நானே சக்கரவர்த்திக்கு யமதூதன் போலாவேன். அதன்பொருட்டா நான் செல்வது?' என்கின்ருன். அடுத்த பாடல் காண்க. முன்னே இரும்பு நெஞ்சன் என்று தன்னைக் கூறியதுபோல இங்கும் தன்னைத் தாழ்த்திக் கூறிக்கொள்ளுகின்ருன். இராமபிரான் கூறியவை அவனது உயர்ந்த அறிவுக்கேற்றனவாயினும், தந்தைக்கும் மற்றெல்லோர்க்கும் மரணத் துன்பத்தை தரவல்லன என்றபடி.

என்பு - உடம்பு; ஆகுபெயர்; "அன்புடையார், என்பு முரியர் பிறர்க்கு"(குறள். 72). புலக்கு : அத்துச் சாரியையின்றிப் புணர்ந்தது. தூது: சொல்லால் அஃறிணை; அரசு என்பது போல.

(பா - ம்.) 1. வன்புலக் கன்மகன், வன்புலக் கன்மத்தின், வன்புலத் தென்மனம்; மதியில் நெஞ்சினேன், மதியனெஞ்சினேன்.
2. உலப்புறவிடைந்து, உலப்புறவுடைத்திலங்கு; மன்னன்போல்.
3. உன்புலப்புரிய; உணர்த்திச், உணரச்; செல்கென, சொல்கென, செல்லும்பான், சொல்லயான், சொல்லும்யான்.
4. தென்புலக் கிழவன் றன், செல்கென (23)

556. நாற்றிசை மாந்தரு நகர மாக்களும்
தேற்றினர் கொணர்வரென் சிறுவன் றன்னையென்
ருற்றின வரசனை யைய வெய்யவென்
கூற்றுறழ் சொல்லினுற் கொலைசெய் வேன்கொலோ.

ஐய - ஐயனே, நால் திசை மாந்தரும் - (தொடர்ந்து) நாலு பக்கங்களிலிருந்து வந்தோரும், நகரம் மாக்களும் - நகரத்து மக்களும், என் சிறுவன் தன்னை - என் மகன் இராமனை, தேற்றினர் கொணர்வர் என்று - (வனம் போகாதவாறு) தெளிவித்து மீட்டு வருவரென்று கருதி, ஆற்றின அரசனை - உயிர் தாங்கியுள்ள சக்கரவர்த்தியை, வெய்ய என் கூற்று உறழ் சொல்லினால் - கொடிய எனது யமன் போன்ற சொல்லால், கொலை செய்வேனோ - (நானே) கொலை செய்பவனுவேனோ?

முன் பாடலின் விளக்கம் போன்று அமைந்தது இது. தேற்றினர்: முற்றெச்சம். தன்: சாரியை. கொல்: அசை.

(பி - ம்.) 2. தேற்றினர்; கொணர்வருன், கொணர்வரேம்; உணர்வினுற் சிறுவன் மீள்வனென்று.
3. வெய்யவன், வெய்யவெம்.
4. கூற்றுமல், கூற்றன, கூற்றின. (24)

557. அங்கிமேல் வேள்விசெய் தரிதி னீபெற்ற
சிங்கவே றகன்றதென் றுணர்த்தச் செல்கெனோ
எங்கள்கோ மகற்கினி யென்னிற் கேகயன்
நங்கையே கடைமுறை நல்லள் போலுமால்.

எங்கள் கோமகற்கு - எங்கள் சக்கரவர்த்தியிடம், நீ அங்கிமேல் வேள்வி செய்து - நீர் தீயிலே அரிய வேள்விகளைச் செய்து, அரிதின் பெற்ற - அருமையாகப் பெற்றெடுத்த, சிங்கம் ஏறு - ஆண் சிங்கம், அகன்றது என்று - உம்மைப் பிரிந்து சென்றுவிட்டது என்று, உணர்த்த செல்கெனோ - உணர்த்தும்படி (அங்கே) செல்வேனோ? இனி - இப்போது, கடைமுறை - கடைசியாக, கேகயன் நங்கையே - கைகேயியே, என்னின் நல்லள் போலும் - என்னைக்காட்டிலும் நல்லவளாய்விடுவள் போலும்! ஆல்: அசை.

'கைகேயி உன்னை வனம் போகச் சொன்னதனுல், சக்கரவர்த்தி மரணத்துன்பத்தை அடைந்தாலும், உயிர் தரித்திருக்கின்றார்; நீ வனம் போய்விட்டாய் என்ற செய்தியை நான் போய்ச் சொன்னால் அவரைக் கொன்றவன் நானுவேன். எனவே, கைகேயியை நல்லவளாக்கி விடுவேன்' என்கின்றான். கைகேயி கொண்ட வரத்தினால் தசரதன் பெருந்துயர் உழந்தாலும் உயிரை விடாதிருந்தானுதலின் அவளை நல்லவளாக்குவேன் என்கின்றான். மேல்: ஏழனுருபு. சிங்கவேறு - ஆண் சிங்கம் போன்ற இராமன். வேள்வி-பரிவேள்வியும், புதல்வரைத் தரும் வேள்வியும்.

(பி - ம்.) 1. அரிதிற் பெற்றகின், பெற்றவுன், அரிதினிற் பெற்ற, அரிது நீபெற்ற, அருமிற் பெற்றநம்.
2. அகன்றதன்று; செல்வெனோ, செல்வனுல், உணர்த்தல் செல்கெனோ, உரைக்கச் செல்கெனோ.

3. கோமன்னவற்கு; கைகயன், கேகைபி, எண்ணிற்கேகயன்.
4. கடன்முறை. (25)

558. முடிவுற வின்னன மொழிந்த பின்னரும்
அடியுறத் தழுவின னழுங்கிப் பையரா
இடியுறத் துவளுவ தென்னு மின்னலன்
படியுறப் புரண்டனன் பலவும் பன்னினான்.

(சுமந்திரன்) இன்னன முடிவு உற - இத்தகைய சொற்களால் தன் கருத்தை முற்றும், மொழிந்த பின்னரும் - சொல்லிய பின்பும், அழுங்கி - மேலும் வருந்தி, பை அரா - படத்தையுடைய பாம்பு, இடி உற - இடி தாக்குதலால், துவளுவது என்னும் இன்னலன் - துடிப்பது போன்ற துன்பமுடையவனாய், அடி உற தழுவினன் - இராமபிரானின் திருவடிகளை உறுதியாகப் பற்றிக்கொண்டு, படி உற புரண்டனன் - தரையில் மிகவும் புரண்டு, பலவும் பன்னினான் - (இராமபிரான் இரங்கும் வண்ணம்) பலவற்றையும் சொன்னான்.

இராமபிரான் மீளுதல் கூடும் என்ற நோக்கத்துடன், தன் கருத்தைப் பலவாறாகத் தெரிவித்தும், அவன் இணங்கும் குறிப்பின்மை அறிந்து, மேலும் பெருந்துயரமுற்று அவன் அடிகளை இறுகப் பற்றித் தரையில் விழுந்து புரண்டு மன்றாடினான் சுமந்திரன் என்றவாறு. இராமபிரான் குறிப்புச் சுமந்திரனை இடியோசை கேட்ட நாகம்போலத் துடிக்கச் செய்தது. பெருந்துன்பமுறுதலுக்கு இடியோசை கேட்ட நாகத்தை உவமை கூறுவர். தழுவினன், இன்னலன், புரண்டனன்: வினையெச்ச முற்று.

(பி-ம்.) 1. முடியுற, இன்னனம்; மொழிந்து.
2. வணங்கி நன்று, வணங்கி நின்று; அழுங்குபேரரா, போரரா.
3. துவள்வதே, துவள்குவ, புரள்குவ; தளர்வதொத் தேங்கி; இன்னலான், இன்னலாற், இன்னவிற்.
4. படிவுற; பின்னும், இன்ன பன்னுவான். (26)

இராமபிரான் கூறுதல்

559. தடக்கையா லெடுத்தவற் றழுவிக் கண்ணினீர்
துடைத்துவே றிருத்திவைத் தினைய சொல்லினான்
அடக்குமைம் பொறியொடு கரணத் தப்புறம்
கடக்கும்வா லுணர்வினுக் கணுகுங் காட்சியான்.

அடக்கும் - அடக்குதற்குரிய, ஐந்து பொறியொடு - பஞ்சேந்திரியங்களோடு, கரணத்து அ புறம் - அந்தக்கரணங்களுக்கும் அப்பாற்பட்ட மூலப்பிரகிருதியையும், கடக்கும் - தாண்டிச் செல்வதான, வால் உணர்வினுக்கு - தூய மெய்ஞ்ஞானத்துக்கு, அணுகும் - கிட்டிவரத் தக்க, காட்சியான் - தோற்றமுடைய (பரம்பொருளின் அமிசமான) இராம

பிரான், அவன் - அச்சுமந்திரனை, தட கையால் எடுத்து-தன்னுடைய விசாலமான கைகளால் தூக்கி, தழுவி - தழுவிக்கொண்டு, கண்ணின் நீர் துடைத்து - அவன் கண்களிலிருந்து பெருகிய நீரைத் துடைத்து, வேறு இருத்தி வைத்து - தனியே இருக்கச் செய்து (வேறிடத்திற்கு அழைத்துச் சென்று), இனைய சொல்லினன் - பின்வரும் இவற்றைச் சொல்லலானான்.

இராமபிரான் சொல்லியன மேலே 11 கவிகளாற் கூறப்படும். சுமந்திரனைத் தன் கருத்துக்கு இணங்கச் செய்தற்கு, சீதா லட்சுமணர் முன்னிலையிலன்றி அவனைத் தனியே வைத்துக் கூறுதல் சால்புடைய தாகலின் வேறு இருத்தி வைத்துக் கூறலானான். வாலுணர்வு - மெய்ஞ்ஞானம்.

(பி - ம்.) 1. கண்ணீர், கண்கணீர், கண்ணுணீர்.
2. இருத்திமற்; இனிய.
3. கரணந் தப்புறும், கானத்தப்புறம்.
4. மாலுணர்வினுக்கு, மன்னுணர்வினுக்கு, இன்னுணர்வினுக்கு; அரிய; உணரும். (27)

560. பிறத்தலொன் றுற்றபின் பெறுவ யாவையும்
திறத்துளி யுணர்வதோர் செம்மை யுள்ளத்தாய்
புறத்துறு பெரும்பழி பொதுவின் றெய்தவும்
அறத்திற மறத்தியோ வவல முண்டெனா

பிறத்தல் ஒன்று உற்றபின் - பிறப்பு என்ற ஒன்றைப் பெற்றபின், பெறுவ யாவையும் - (பிறந்தோர்) பெறுவனவான இன்ப துன்பங்கள் எல்லாவற்றையும், திறத்து உள்ளி அறிவது ஓர் - நன்கு ஆராய்ந்தறியத்தக்கதொரு, செம்மை உள்ளத்தாய் - நடுநிலையமைந்த மன மனமுடையோய், (நான் தந்தை சொல் கடத்தலால்) புறத்து உறு - வெளியினின்றும் வருவதான, பெரு பழி - பெரிய பழியை, பொது இன்று - சிறப்பாக, எய்தவும் - நான் அடைவதாயிருக்கவும், அவலம் உண்டு எனா - (இப்போது நான் காடு செல்வதனால்) துன்பமுண்டா கிறதே யென்று, அறம் திறம் மறத்தியோ - தருமத்தின் கூறுபாட்டை நீ மறந்து விடுகின்றாயோ?

ஈற்றடிக்கு, 'அறத்திறம் மறத்தியோ? (அதனால் பின்பு) அவலம் (குற்றம்) உண்டாம்; என்று சொல்லி (மேலுங் கூறுவான்)' என உரைத்தலுமாம்.

'துன்பம் எத்தகையவருக்கும் வரும் என்பதனைச் சிறந்த அறிவாளி யான நீ அறியாயோ? இப்போது காடு செல்லும் துன்பம் வருகிறதே யென்று, தெய்வமாகக் கருதற்குரிய தந்தையின் சொல்லைத் தட்டி நடந்தால் நான் எய்தும் பழி சாதாரணமானதன்று என்பதும் உனக்குத்

தெரியாததோ? அங்ஙனமாகவும், நீ என்னைக் காடு செல்லாது தவிர்ப்பது முறையன்று' என்கின்றான்.

(பி - ம்.) 1. பிறந்தவென்று; பெறுவர் யாவையும், பெறுவதி யாவையும், பெறுவதியாவதும்.
2. திறத்துமி.
3. புறத்துறும்; பொதுவின்றெய்தலும், பொதுவென்றெய்தலும், எய்த வும், பொதுவின் எய்தலும், பொதுவன்றெய்தவும், பொது வின்றெய்தலும்.
4. மறுத்தியோ, அறத்தினை மறத்தியோ, அல்லல் முண்டெனு. (28)

561. முன்புநின் றிசைநிறீஇ முடிவு முற்றிய
பின்புநின் றுறுதியைப் பயக்கும் பேரறம்
இன்பம்வந் துறுமெனி லியைவ தாயிடைத்
துன்பம்வந் துறுமெனிற் றுறக்கற் பாலதோ.

முன்பு நின்று - (மக்கள் அடைய வேண்டியவற்றுள்) முதன்மை யதாய் நின்று, இசை நிறீஇ - (தன்னைச் செய்தார்க்குப்) புகழை நிலை நிறுத்தி, முடிவு முற்றிய பின்பும் - (அவர்கள் வாழ்நாள்) முடிவடைந்த பின்பும், நின்று - (விடாது) தொடர்ந்து நின்று, உறுதியை பயக்கும் - (மறுமையிலும்) நன்மையைத் தரவல்ல, பேர் அறம் - பெருமை பொருந்திய தருமம், இன்பம் வந்து உறும் எனில் - (அதனால்) இன்பம் வந்து சேருமானால், துறக்கற் பாலதோ - கைவிடத் தக்கதாகுமோ? (ஆகாது).

முன்பாட்டில், 'அவலமுண்டெனு அறத்திறம் மறத்தியோ' என்றவன், அறத்தினை எந்நிலையிலும் கைவிடுதல் கூடாது என்பதனை வற்புறுத்தியவாறு. முன் இரண்டடிகளால் அறத்தின் சிறப்புக் கூறப் பெற்றது. பின் இரண்டடிகளோடு, "நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால், அல்லற் படுவ தெவன்" (குறள். 379) என்பது ஒப்பு நோக்கற்பாலது. முடிவு முற்றுதல் - முடிவை அடைதல்; இறத்தல்.

(பி - ம்.) 1. இசைநெறி.
2. பின்பு நின்றிசைதலாய்ப்.
3. உறுமெனின்; இனியதாயிடைத், இயற்றியாயிடைத், இயற்றி யெல்லையில்.
4. துறக்கலாகுமோ, ஆகுமே, துறக்கப்பாலதோ, பாலதே, உறுமெனின் றுறக்கற் பாலதோ. (29)

562. நிறப்பெரும் படைக்கல நிறத்தி னெய்தவும்
மறப்பயன் விளைக்குறும் வன்மை யன்றரோ
இறப்பினுந் திருவெலா மிழப்ப வெய்தினும்
துறப்பில ரறமெனல் சூர ராவதே.

சூரர் ஆவது-(ஒருவர்) சூரர் என்று சொல்லத்தக்கவராவது, நிறம் பெரு படை கலம் நிறத்தின் எய்தவும் - ஒளியமைந்த வலிய (வேல் முதலிய) படைக்கலங்கள் மார்பிலே பாயவும், மறம் பயன் - வீரத்தின் பயனுன வெற்றியை, விளைக்குறும் - உண்டாக்குகின்ற, வன்மை அன்று - திண்மையினுல் அன்று; திரு எல்லாம் இழப்ப எய்தினும் - செல்வமெல்லாம் இழக்க நேர்ந்தாலும், இறப்பினும் - உயிர் இறப்பதே யாயினும், அறம் துறப்பு இலர் எனலே - அறத்தைக் கைவிட்டிலர் என்பதனுலேயேயாம். அரோ: அசை.

சூரராவது, வன்மையாலன்று; அறம் துறப்பிலர் எனலாலே என்க. ஏகாரம் பிரித்துக் கூட்டப்பட்டது. சூரம் = வீரம். எடுத்ததைப் பின்னிடாது முடிக்கும் ஆற்றல் வன்மையால், எனலால் என இரண்டிடத்தும் மூன்றனுருபு விரிக்க. நிறம்-முன்னது ஒளி; பின்னது மார்பு. ''களங் கழுமிய படையிரிய, உளங்கிழித்த வேல் பறித்தோச்சின்று''. (பு. வெ. 142) நிறுத்தி னெய்தவும் மறப்பயன் விளைத்தல்: ''மெய்வேல் பறியா நகும்'' (குறள். 774); இதனை நூழிலாட்டு என்பர்.

(பி - ம்.) 1. நிறைப்பெரும்; நிறத்தினேருற, நிறத்தினேவவ, நிறுத்திநேருற, நேருரு, நிறுத்தி யெய்தவும்.
2. அறப்பயன்; விளைக்குமதன்மை, விளைக்குமவண்மை, விளைக்குமவ் வன்மை, விளைக்குமத் தன்மை, விளைத்திடல் வன்மை, துறப்பன வளவை, துறப்பனவன்மை; என்றரோ, என்னரோ, என்பரோ, என்பரே.
3. இறப்பெரும், இறப்பெனும்; இழப்பவேந்தினும், இறப்பவெய்தினும்.
4. அறமென்றல், அறமிதம், அறமுதம், அறமெனும், துறப்பிலாரற மெனல்; சூரராவதோ, சூரராதலே. (30)

563. கான்புறஞ் சேறலி னருமை காண்டியால்
வான்பிறங் கியபுகழ் மன்னர் தொல்குலம்
யான்பிறந் தறத்தினின் றிழுக்கிற் றென்னவோ
ஊன்றிறந் துயிர்குடித் தொளிரும் வேலினுய்.

ஊன் திறந்து - (பகைவர்) உடலைப் பிளந்து, உயிர் குடித்து - அவருயிரைப் பருகி, ஒளிரும் - ஒளிவிடுகின்ற, வேலினுய் - வலிய வேற்படையுடையவனே, கான் புறம் சேறலின் - (நான்) காட்டிற்குச் செல்லுதலால், அருமை காண்டி - பெருந்துன்பத்தைக் காண்கின்ருய்; வான் பிறங்கிய புகழ் மன்னர் - சுவர்க்கத்திலும் விளங்கிய புகழைக் கொண்ட மன்னர் பலர் தோன்றிய, தொல் குலம் - பழமையான சூரிய குலம், யான் பிறந்து - நான் பிறத்தலால், அறத்தின் நின்று இழுக்கிற்று என்னவோ - தருமத்திலிருந்து தவறியது என்று உலகோர் பழி கூறவோ?

'நான் காடு செல்லுதலால் அனைவர்க்கும் துன்பமென்று கருதி அதனைத் தவிர்க்கச் சொல்லுவாயாகில், அதன் பயனுகிய தருமம்

த்வறிய குற்றம், எம் குலத்திற்கே இழுக்கைத் தருவதன்றோ? ஆகலின் அது தகாது' என்கின்றான் இராமபிரான். ஆல்: அசை. அருமை, இங்கே துன்பம்; கொடுமை; "அருநரகிற் சேர்க்கும்" (நள. 206) என்பதிற்போல. தசரதனும், கருத்தன் முதலியோரும் தேவர்பகை வென்று இந்திரனுக்கு அரசுநிலையிட்ட புகழுடையோராகலின் 'வான் பிறங்கிய புகழ் மன்னர் தொல்குலம்'எனப்பட்டது. சுமந்திரன் தேர்வல வனேயன்றிச் சேனாபதியுமாகலான், 'ஊன்றிறந்து...வேலினாய்' என அவனைச் சிறப்பித்தான். புறம்: ஏழனுருபு.

(பி - ம்.) 1. கான்புகச்; அருமை காண்டலால், காண்டிரால், கண்டிரால், இருமை காண்டலால்.
3. இழுக்கிற்றென்பவோ, இழுக்குற் றென்னவோ, இழுக் கின்றென்பதோ, இழுக்கிற்றென்பதோ, அழுக்கின்றென்னவோ.
4. ஊன்றுறந்து, ஊன்பிறந்து; உழலும் வேலினாய், ஊறுவேலினாய், ஊறும் வேலினாய், ஒளிரும் வேலினாய், ஆறும் வேலினாய். (31)

564. வினைக்கரு மெய்ம்மையின் வனத்து விட்டனன்
மனக்கரும் புதல்வனை யென்றன் மன்னவன்
தனக்கருந் தவமது தலைக்கொண் டேகலே
எனக்கருந் தவமிதற் கிரங்க லெந்தைநீ.

வினைக்கு அரு - செயலுக்கு (நடத்திக் காட்டுதற்கு) அரிய, மெய்ம்மையின் - வாய்மை காத்தற்பொருட்டு,மனக்கு அரு புதல்வனை - தன் மனத்துக்கினிய அருமையான புதல்வனை, வனத்து விட்டனன் - காட்டிலே செல்லவிட்டான், என்றல் - என்று (உலகோர்) கூறுவது, மன்னவன் தனக்கு - சக்கரவர்த்திக்கு (வாய்த்த), அரு தவம் - அரிய தவமாகும்; அது தலைகொண்டு - அக்கட்டளையைச் சிரமேற்கொண்டு, ஏகலே - (காட்டுக்குச்) செல்லுதலே, எனக்கு அரு தவம் - எனக்கு (வாய்த்த) அரிய தவமாகும்; எந்தை நீ - எம் தந்தை போன்ற நீ, இதற்கு இரங்கல் - இதன் பொருட்டு வருந்தாதே.

'வாய்மை காத்த உறுதியால் தந்தையும் குற்றம் நீங்கிப் புகழ் பெறுவார்; அவர் சொற்காத்தலால் நானும் குற்றம் நீங்கி வனத்திலே முனிவர் முதலிய சான்றோர் தொடர்புகொண்டு சிறப்பெய்துவேன்; இஃது எனக்கு வாய்த்த தவமாகும். எனவே, இதன் பொருட்டு மகிழ்தல் வேண்டுமேயன்றி வருந்துதல் தகாது' என்றான். சிலவற்றைச் சொல்லுதல் எளிது; செய்தல் அரிது. வாய்மை காத்தலின் அருமை நோக்கி, 'வினைக்கரு மெய்ம்மை' எனப்பட்டது. மனக்கு: அத்துச் சாரியை பெறாது நின்றது.

(பி - ம்.) 1. மெய்ம்மையன், மெய்மையின், மென்மையன், வெம்மையன்; வெம்மையின்; வனத்துள்; விட்டுளன், வீட்டுனன்.
2. மனைக்கரும் புதல்வனை, மனக்கரு மைந்தனை, மனக்கரு மரபினோ; என்ற, என்ன.

3. தவமிது, தவமது தனைக்கொண்டு; ஏகுதல், ஏகலால்.
4. தவமதற்கு, தவமிதால். (32)

சுமந்திரன் செய்தற்குரியவற்றை இராமபிரான் கூறுதல்

565. முந்தினை முனிவனைக் குறுகி முற்றுமென்
வந்தனை முதலிய மாற்றங் கூறிப்பின்
எந்தையை யவனொடு மெய்தி யீண்டென
சிந்தையை யுணர்த்துதி யென்று செப்புவான்.

முந்தினை முனிவனை குறுகி - நீ விரைந்து போய் வசிட்ட முனிவனை அணுகி, என் வந்தனை முதலிய மாற்றம் முற்றும் கூறி - என் வழிபாட்டுரை முதலிய வார்த்தைகளையெல்லாம் கூறி, பின் - அதன் மேல், அவனொடும் எந்தையை எய்தி - அம்முனிவனோடு என் தந்தையை அடைந்து, ஈண்டு என சிந்தையை உணர்த்துதி என்று - இங்கே என் கருத்தைத் தந்தைக்குத் தெரிவிப்பாயாக என்று சொல்லி, செப்புவான் - மேலும் சொல்வான்.

இதற்கு இரங்கல் என்று சுமந்திரனைத் தேற்றிய இராமபிரான், மேலே அவன் செய்தற்குரியவற்றைக் கட்டளையாகச் சொல்லலுற்றான். அவை இதுமுதல் ஆறு பாடல்களாற் கூறப்படும். மன்னனுக்கு யம தூதனாக நான் அமையகில்லேன் என்று வருந்திக் கூறிய சுமந்திரனுக்கு, தன் பிரிவுச் செய்தியை நேரேயின்றி முனிவன் மூலமாகத் தந்தைக்குத் தெரிவிக்கப் பணித்தான் இராமபிரான். முனிவன், செய்தியைச் செவ்வியறிந்து சொல்லித் தெருட்ட வல்லவன்; முறையும் அது. முந்துதல் - விரைதல். என : ஆறனுருபேற்றது.

இப்பாடல் ஒரு பிரதியில் இல்லை. இதன்பின் உள்ள ஐந்து பாடல்கள் பிரதிகளிற் பலவாறு முறை மாறியுள்ளன.

(பி - ம்.) 1. முந்திநீ, முந்திகம், முந்தின, முந்துற; முனிவனையிறைஞ்சி, தொழுது; முற்றவென், மற்றுமின்.
2. வந்தனை நுதலிய; கூறிநீ, கூறினை.
3. எந்தைபாலவனொடும், எந்தையைவரனொடும்; ஈண்டெனச், ஈண்டவென், ஆண்டென்றன்.
4. சிந்தனை; என்று செப்பினன், என்றும் செப்புவாய். (33)

566. முனிவனை யெம்பியை முறையி னின்றரும்
புனிதவே தியர்க்குமே லுறைபுத் தேளிர்க்கும்
இனியன விழைத்தியென் றியம்பி யெற்பிரி
தனிமையுந் தீர்த்தியென் றுரைத்தி தன்மையோய்.

தன்மையோய் - உயர்ந்த தன்மைகளையுடையவனே, எம்பியை - என் தம்பி பரதனை, முறையில் நின்று - அரச நீதி முறையில் வழுவாது நின்று, அரு புனிதம் வேதியர்க்கும் - அரிய தூய்மையையுடைய மறைய

வர்க்கும், மேல் உறை புத்தேளிர்க்கும் - விண்ணில் வாழும் தேவர்க்கும், இனியன இழைத்தி என்று இயம்பி - அவரவர்க்கு நல்லன செய்கவென்று சொல்லி, என் பிரி தனிமையும் தீர்த்தி என்று - (அவன்) என்னைப் பிரிதலால் எய்தும் தனிமைத் துயரத்தையும் தீர்க்க என்று, முனிவனை உரைத்தி - வசிட்ட முனிவனிடம் சொல்லுக.

'பரதன் என் பிரிவால் மிக வருந்தக்கூடுமாகலின், அவனைத் தேற்றி, அரச நெறியில் வழுவாது நின்று அந்தணர்க்கும் தேவர்க்கும் உரியவற்றை அவ்வப்போது செய்துவருமாறு அவனுக்கு மதி கூறும் வண்ணம் முனிவனை நான் வேண்டிக்கொண்டதாகச் சொல்லுக' என்று சுமந்திரனிடம் கூறினான். எம்பியை, நின்று, இழைத்தி என்று இயம்பி, தனிமையும் தீர்த்தியென்று முனிவனை உரைத்தி என இயைக்க.

முனிவனை - முனிவனிடம். வேதியர்க்கு இனியன, தானம்; அவர்களைக் கொண்டு வேள்வி இயற்றுவித்தலும், பூசனை வழுவாது செய்வித்தலும் தேவர்க்கு இனியன. இவற்றை முறைப்படி நடப்பித்தல் அரசர் கடனாகலின், முனிவனைக் கொண்டு இவற்றைப் பரதனுக்கு அறிவுறுத்தச் செய்க என்றான். அதற்குரிமை பூண்டவன் குலகுருவும் புரோகிதனுமான வசிட்ட முனிவன். மேல் : ஆகுபெயர். பிரி தனிமை - பிரிதலால் வரும் தனிமைத் துயர்.

(பி - ம்.) 1. முனிவகலெம்பியை; முறையினென்றரும்.
2. புனித வேதியர்கள், புனிதர் வேதியர்கள்.
3. இனிமையை, இனையன; இயற்றியென்றியம்பி, விளைத்தியென்றியம்பி, இழைத்து நின்றெந்தை, உணர்த்தமேலெந்தை.
4. தீர்த்தியென்றுணர்த்தி, தீர்திடத்தக்கது; தன்மையால், தன்மையாய், ஓதுவாய். (34)

567. வெவ்விய தன்னையால் விளைந்த தீண்டொரு
கவ்வையென் றிறையுந்தன் கருத்தி னேக்கலன்
எவ்வரு ளென்வயின் வைத்த தென்சொலால்
அவ்வரு ளவ்வயி னருளு கென்றியால்.

அன்னையால் - தாய் கைகேயியால், ஈண்டு - இப்போது, வெவ்வியது ஒரு கவ்வை விளைந்தது என்று - கொடியதொரு துன்பம் நேர்ந்ததே என்று, தன் கருத்தில் இறையும் நோக்கலன் - தன் மனத்திற் சிறிதும் கருதாமல், என் சொல்லால் - என் வேண்டுகோளால், என் வயின் வைத்தது எ அருள் - என்பால் (தான்) வைத்துள்ளது எத்தகைய அருளோ, அ அருள் - அத்தகைய அருளை, அ வயின் அருளுக - அவ்விடத்தும் (கைகேயியிடத்து) வைத்தருளுக, என்றி - என்று (முனிவனுக்குச்) சொல்வாயாக. ஆல் : அசை.

'கைகேயியால் இத்தீங்கு விளைந்ததேயென்று அவள்பால் முனிவன் உள்ளத்துச் சிறிது வெறுப்புத் தோன்றினும், அஃது

அவளுக்குத் திங்கு பயக்குமாதலின், அது கருதாது அவளை அருளல் வேண்டுமென நான் வேண்டிக்கொண்டதாக முனிவனுக்குச் சொல்வாயாக' என்கின்ருன். கைகேயிபால் தனக்குச் சிறிதும் வெறுப்பில்லை என்பதை வலியுறுத்துகின்ருன். 'அன்னை' என்ற சொற்கிடக்கையும் நோக்கத்தகும்.

கவ்வை - துன்பம்; காரியமுமாம். நோக்கலன் : முற்றெச்சம். என்றி : இகரவீற்று வியங்கோள்.

(பி - ம்.) 1. வெவ்விய தன்மையால், வெவ்விய வன்னையால்.
2. கவ்வையின்று; கருத்தினேக்கிலன், கருத்தினோக்கலாது, கருத்தநோக்கலன், கருத்துள்நோக்கலன், கருத்தைநோக்கலன், கருத்தைநோகலாது. என் கருத்தினேக்கலன், நோக்கலாது, ஓர்கலாது.
3. இவ்வருள்; வைத்த தின்சொலால், வைத்த வின்சொலால், வைத்த நிஞ்சொலால், வைத்த தென்கொலாம், இருந்ததோ விறைக்கு.
4. அவன்வயின், அவள்வயின், அதன்வயின்; அருளிதென்றியால், அருளியென்றியால், அருடியென்றியால். (35)

568. வேண்டினெ னிவ்வர மென்று மேலவன்
ஈண்டருளெம்பிபா னிறுவி யெற்பிரி
வீண்டிய துயர்தவிர்ந் திருக்க வென்றசொல்
ஆண்டகைக் குரைத்தவ னவல மாற்றிப்பின்.

இ வரம் வேண்டினென் என்று - (தம்பிபால் அருள் சுரத்தலாகிய) இந்த வரத்தையும் நான் வேண்டிக்கொண்டேன் என்று சொல்லி, மேலவன் ஈண்டு அருள் - மேலான அவனுடைய நிறைந்த அருளை, எம்பிபால் நிறுவி - என் தம்பி பரதன்பால் நிலைக்கச் செய்து, என் பிரிவு ஈண்டிய துயர் தவிர்ந்து இருக்க என்ற சொல் - என்னைப் பிரிதலால் உண்டான வருத்தத்தை நீக்கி (அமைதியுடன்) இருத்தல் வேண்டும் என்ற வார்த்தையை, ஆண் தகைக்கு உரைத்து - ஆண்மைத் தகுதி உடைய தந்தைக்கு (முனிவன் மூலமாகச்) சொல்லி, அவன் அவலம் மாற்றி - அவர் துன்பத்தைத் தணிவித்து, பின் - மேலே.

இஃது அடுத்த கவியுடன் தொடரும். கைகேயியை முனியாமையோடு, பரதனிடத்தும் மாருத அருள் பாலித்தல் வேண்டும் என முனிவனைத் தான் வேண்டிக்கொண்டமை கூறி, மேலே தந்தையை ஆற்றுவிக்குமாறு கூறுகின்ருன் இராமபிரான்.

எற்பிரிவு - என்னைப் பிரிதலால் என மூன்றனுருபு விரிக்க.

(பி - ம்.) 1. மேலவ, மேலவண், மேலரசு.
2. எம்பியால், எம்பிமார், எம்பிரான்; நிறுவியேகினே, ஏகினைப், ஏயினே, ஏகினி.
3. பூண்டமாதவனெடும். ஆண்டமாதவனெடும்; புக்கெனத, புக்கனே, புக்குநீ.
4. ஆண்டகை வேந்தனை, வேதனை, மாண்டகை வேந்தனை; அவல மாற்றியே. (36)

569. ஏழிரண் டாண்டுநீத் தீண்ட வந்துனைத்
தாழ்குவென் றிருவடி தளர லீண்டெனச்
சூழிவெங் களிற்றிறை தனக்குச் சோர்விலா
வாழிமா தவன்சொலால் மனந்தெ ருட்டுவாய்.

ஏழ் இரண்டு ஆண்டு நீத்து - பதினான்கு ஆண்டுகள்(காட்டிலே) கழித்தபின், ஈண்ட வந்து - விரைவாக வந்து, உன்னை திருவடி தாழ்குவென் - நும் திருவடி பணிவேன், தளரல் ஈண்டென - இங்கிருந்து தளர்ச்சியை அடையாதீர்கள் என்று, சூழி வெம் களிறு இறை தனக்கு - முகபடாம் அணிந்த கொடிய ஆண் யானைகளையுடைய சக்கர வர்த்திக்கு, சோர்வு இல்லா மாதவன் சொல்லால் - குற்றமில்லாத பெருந் தவமுடைய வசிட்ட முனிவன் வார்த்தையால், மனம் தெருட்டு வாய் - மனம் தெளியச் செய்வாயாக.

'முனிவன் தக்கவாறு சொல்லித் தந்தையை ஆற்றுவித்தல் கூடும்; அவ்வாறான பின் குறித்த காலமான பதினான்கு ஆண்டுகட்குமேல் சிறிதும் தாழ்த்தலின்றித் திரும்ப வந்து சேர்தலில் நான் தவற மாட்டேன்; ஆதலால் அதுவரை தளர்ச்சியின்றி மனம் தேறியிருக்க வேண்டும்' என்று தந்தை மனங்கொளத் தேற்றுதலையும் முனிவன் மூலமாகவே செய்விக்க என்றான்.

(பி - ம்.) 1. ஆண்டு நீத்திண்டு, ஆண்டனி லீண்டு; வந்தெனத்.
2. திருவடி தப்பிலேனென, திருவடித் தலத்துள்; ஈண்டெனச், இன்றென.
3. கடகளிற்றரசற், கடகரியரசற்; சொல்லிப்பின்.
4. மாதவனொடு. (37)

570. முறைமையா லெற்பயந் தெடுத்த மூவர்க்கும்
குறைவிலா வென்னெடு வணக்கங் கூறிப்பின்
இறைமகன் றுயர்துடைத் திருத்தி மாடென்றான்
மறைகளை மறைந்துபோய் வனத்துள் வைகுவான்.

மறைகளை மறைந்து போய் - வேதங்கள் (தொடராதவாறு) மறைந்து சென்று, வனத்துள் வைகுவான் - காட்டில் தங்கும் இராம பிரான், (சுமந்திரனிடம் முடிவாக) என் பயந்து எடுத்த மூவர்க்கும் - என்னைப் பெற்று வளர்த்த தாய்மார் மூவருக்கும், என் குறைவு இல்லா நெடு வணக்கம் முறைமையால் கூறி - என்னுடைய முறையில் தவறில்லாத நெடிய வணக்கத்தை முறையாகச் சொல்லி, பின் - அதன் மேல், இறை மகன் துயர் துடைத்து - சக்கரவர்த்தியின் வருத்தத்தை (அவ்வப்போது) மாற்றிக்கொண்டு, மாடு இருத்தி - அருகே இருப்பாயாக, என்றான் —.

கவி 565 முதல் இதுகாறும், இராமபிரான் சுமந்திரனுக்குக் கூற வேண்டியவற்றை முறையாகக் கூறிவந்து, இறுதியில், 'நீ

தந்தையோடு நகரிலேயே இருக்கவேண்டும்' என்று முடித்தான். ஈற்றடியால் இராமபிரானது அவதார உண்மை குறித்தார். நெடு வணக்கம் - சாஷ்டாங்க நமஸ்காரம். மூவர் - கோசலை முதலிய பட்டத்துத் தேவிமார். முறைமையால் - அவரவர்க்குரிய முறைப்படி.

(பி - ம்.) 1. முறைமையாலே பயந்து.
2. குறையிலா வென்னெடு, குறைவிலா நன்னெடு, குறைவிலா வென்பெரு, குறைவிலாவிந்நெறி, குறைவிலாவென்னெறி; வண ணங்கூறிப்.
3. இருத்தி யாண்டென்றுன்.
4. மறைதனை; மறந்துபோய், மறைந்துபொன், திருத்திப் போய்; வனத்து. (38)

சுமந்திரன் செயல்

571. ஆள்வினை யாணையிற் றிரம்ப லன்றெனுத்
தாள்முதல் வணங்கியத் தனித்திண் டேர்வலான்
ஊழ்வினை வசத்துயிர் நிலையென் றுன்னுவான்
வாழ்வினை நோக்கியை வணங்கி நோக்கினுன்.

அ தனி திண் தேர் வல்லான் - ஒப்பற்ற திண்ணிய தேர் செலுத்துதலில் வல்லவனுன அச் சுமந்திரன், ஆள் வினை - பணியாளுக்குரிய செயல், ஆணையில் திரம்பல் அன்று - (தலைவன்) கட்டளையினின்று மாறுபடுதல் அன்று, எனு - என்று சொல்லி, தாள் முதல் வணங்கி- (இராமபிரானுடைய) திருவடிகளிலே வணங்கி, உயிர் நிலை - உடம்பானது, ஊழ்வினை வசத்(த)து என்று - ஊழ்வினையின் வயப்பட்டதென்று, உன்னுவான் - (உண்மையை) நினைத்தவனுய், வாழ்வினை நோக்கியை வணங்கி - (யாவர்க்கும்) நல்வாழ்வையே கருதும் பிராட்டியை வணங்கி, நோக்கினுன் - (அவள் உரையைக் கேட்கும் நோக்கத்தோடு) பார்த்தான்.

செல்லும் சொல் வல்லானுகிய இராமபிரான் மீண்டும் ஏதும் சொல்வதற்கு இடமின்றித் தன் கட்டளையாகக் கூறியவற்றைக் கேட்ட சுமந்திரன், அதற்குத் தான் உடன்பட்டு விடைகொள்ளும் குறிப்போடு அப்பிரானை வணங்கி, பிராட்டியின் உரையைக் கேட்கும் குறிப்போடு அவளையும் வணங்கி நோக்கினுன். ஆள் - பணியாள். முதல்: ஏழனுருபு. உயிர்நிலை - உடம்பு; காரணக்குறி. நோக்கி - நோக்குதலை உடையவள். ஊழ்வினையால் வரும் இன்ப துன்பங்களை நுகர்தற்குரியது உடம்பேயாகலின், உயிர்நிலை ஊழ்வினை வசத்தது எனப்பட்டது.

(பி - ம்.) 1. ஆண்மையிற்றிரம்பல்; அன்றெனத்.
2. தாள்முறை வணங்கி; தண் டேர்.
3. ஊழ்வினை வருத்துயர் நிலை, வரத்துயருறும்; என்றேதுவான்.
4. வாள்விழிச் சனகியை, வாழ்வினை நோக்கியே, வாளினை நோக்கியை; வதன நோக்கினுன். (39)

பிராட்டி சொல்லுதல்

572. அன்னவள் கூறுவா ளரசர்க் கத்தையர்க்
கென் னுடை வணக்கமுன் னியம்பி யானுடைப்
பொன்னிறப் பூவையுங் கிளியும் போற்றுமின்
என்னமற் றெங்கையர்க் கியம்பு வாயென்ருள்.

அன்னவள் கூறுவாள் - பிராட்டி (சுமந்திரனுக்குக்) கூறுவாளாய், அரசர்க்கு - சக்கரவர்த்திக்கும், அத்தையர்க்கு - மாமியர்க்கும், என்னுடை(ய) வணக்கம் முன் இயம்பி - என்னுடைய வணக்கத்தை முதலில் சொல்லி, (பின்பு) எங்கையர்க்கு - என் தங்கைமாரிடத்தில், யான் உடை(ய) - நான் வளர்த்துவைத்திருந்த, பொன் நிறம் - அழகிய நிறமுடைய, பூவையும் - நாகணவாய்ப் புள்ளையும், கிளியும் - கிளியையும், போற்றுமின் என்ன இயம்புவாய் - (எப்போதும்) பாதுகாத்து வருகவென்று சொல்வீராக, என்ருள்—. மற்று : அசை.

மகளிர் பூவை, கிளி முதலிய பறவைகளை வளர்த்தலும், அவற்றினிடம் மிக்க அன்பு கொள்ளுதலும் இயல்பு. "என்னெ ரின்னுயிர் மென்கிளிக்கு" (சுந்தர. 684) என்ற பிராட்டியின் கூற்றும் நோக்கத் தகும். "கிள்ளையொடு பூவைகள் கிளர்த்தல் கிளவென்னும், பிள்ளையுரை யின்றிற முணர்த்துதி" (சுந்தர. 551) என்பதும் இங்கே நோக்கத்தகும். மாமியை 'அத்தை' என்றல் இக்காலத்தும் வழக்கில் உண்மை காணலாம். பிராட்டி மாமியர்க்கு வணக்கம் தெரிவித்தமை சுந்தரகாண்டத்துள்ளும் (639) காண்க. 'எங்கையர்' என்றது பரத இலக்குவ சத்துருக்கனர் மனைவிமாராகிய மூவரை.

(பி - ம்.) 1. அன்னமும்; அரசற்கு.
2. என்னரும், வணக்கமு மியம்பி, இயம்பு.
3. பொன்னுடைப்; போற்றுகென்று, போற்றுநிர், போற்றுமென்று.
4. உன்னுமென்றங்கையர்க்கு, என்னுமென்றங்கையர்க்கு, என்னுமென்னெங்கையர்க்கு, என்னுடையெங் கையர்க்கு; உணர்த்துவாய், உணர்த்துவீர். (40)

சுமந்திரன் துயரம்

573. தேர்வலா னவ்வுரை கேட்டுத் தீங்குறின்
யார்வலா ருயிர்துறப் பெளிதன் றேயெனுப்
போர்வலான் றடுக்கவும் பொருமி விம்மினுன்
சோர்விலா ளறிகிலாத் துயர்க்குச் சோர்கின்ருன்.

தேர்வலான் - தேர் செலுத்துதலில் வல்ல சுமந்திரன், அ உரை கேட்டு - (பிராட்டியின்) அந்த வார்த்தையைக் கேட்டு, சோர்வு இலாள் - (வனம் செல்வது குறித்துச் சிறிதும்) தளர்ச்சி இல்லாத அவள், அறிகிலா(த) துயர்க்கு - (பின் வரக்கடவ துன்பங்களை) அறியாத

தன்மைக்காக, சோர்கின்முன் - வருந்துவானுகி, தீங்கு உறின் - (விதி வசத்தால்) தீங்கு ஏதேனும் நேர்ந்தால், ஆர் வல்லார் - அதனைத் தாங்கவும் தடுக்கவும் வல்லார் யாவர்? உயிர் துறப்பு எளிது அன்றே - (இவற்றையெல்லாம் காணுது நாம்) உயிர் விடுவோமெனின் அஃது எளிதாயில்லையே! என - என்று கருதி, போர் வலான் தடுக்கவும் - வீரனுன இராமபிரான் (நீ வருந்தி அழுதல் கூடாதென்று) தடுக்கவும் (கேளாமல்), பொருமி விம்மினுன் - குமுறி அழுதான்.

பிராட்டி, தான் வனஞ் செல்லுதலால் தனக்கு வரக்கடவ துன்பங்களைச் சிறிதும் எண்ணுமல், அரண்மனையிலுள்ள பறவைகளைக் காக்கச் சொல்கின்முளேயென்று அவள் பேதைமை குறித்து இரங்கி, 'ஊழ் வினையால் தீங்கு ஏதேனும் வரின் அதனைத் தாங்கவோ, வராது தடுத்துக்கொள்ளவோ மெல்லியலான இவளால் இயலுமோ? நாம் ஒன்றையும் காணுது உயிர் துறப்போமெனின் அதுவும் ஆவதில்லையே!' என்று வருந்தி அழலானுன் சுமந்திரன். 'போர்வலான்' என இராம பிரானைக் குறித்தது, அவன்பொருட்டு எவரும் கவலைப்பட வேண்டுவதில்லை யென்றற்கு. எவரும் வாழ்நாள் முடிந்தாலன்றித் தாம் நினைத்தபோதே உயிர் விடுதல் இயலாதென்பது : 617-பார்க்க. சுமந்திரன் உயிர்விடத் துணிந்தமை: 552-பார்க்க. பொருமுதல் - உள்ளூறக் குமைதல்; விம்முதல் அழுதல். அறிகிலாத் துயர்க்கு - துயரை அறியாமைக்கு.

(பி - ம்.) 1. நிங்குறல், நிங் நற, நிங்குரு, திங்குறில்.
2. ஆர்வலார், யாவரால், யாவரும் யாவர்க்கும்; எளிதன்ருே வெனுப், எளிதென்ருேவெனுப், எளிதென்றேயெனுப், எளிதென்ருேவெனுப்; ஆர்வலாருயிர்துவைப் பரிதன்றேயெனுப்.
3. போர்வலான் அடுக்கவும்; பொரும விம்முவான், பொருமி விம்முவான்.
4. அறிவிலாத் துயர்க்குச், துயர்க்கும், அறிவிலாததற்குச், அறிவிலா ததற்கும். (41)

சுமந்திரன் இலக்குவனைக் கேட்டல்

574. ஆறினன் போற்சிறி தவல மவ்வழி
வேறிலா வன்பினுன் விடைதந் தீகெனு
ஏறுசே வகற்ருெழு தினைய மைந்தனைக்
கூறுவ தியாதென வினைய கூறுவான்.

வேறு இலா அன்பினுன் - (என்றும்) வேறுபடுத்தல் இல்லாத அன்பினையுடைய சுமந்திரன், அ வழி - (இராமபிரான் தேற்றிய) அப்போது, அவலம் சிறிது ஆறினன் போல் - துயரம் சிறிது தணிந்தவன் போன்று, ஏறு சேவகன் தொழுது - மேலும் மேலும் வளரும் வீரமுடைய இராமபிரானை வணங்கி, விடை தந்தீக என - விடை தருக

என்று சொல்லிவிட்டு, இளைய மைந்தனை - இலக்குவனை, கூறுவது யாது என - நீ சொல்வது யாதென்று கேட்க, (அவன்) இனைய கூறுவான் - (மேல்வரும்) இவற்றைச் சொல்கின்றான்.

சுமந்திரன், இராமபிரானுடைய வார்த்தைகளால் சிறிது தேறினவன் போலத் தோற்றினானேயன்றி, உண்மையில் துயரம் ஆறினானல்லன். இலக்குவன் சினந்து கூறுதல் மேலே மூன்று பாடல்களில் வரும். தந்தீக - தருக. தந்தீகென: தொகுத்தல். ஏறு சேவகன்: "மாறில் போரரக்கன் மதிள், நீறெழச் செற்றுகந்த, ஏறு சேவகன்" (திருவாய்மொழி, 6. 1: 10.)

(பி - ம்.) 1. ஆறினபோற் சிறிது, ஆறினன் போல நீத்து.
2. வேறிலா அன்பினுய், அன்பினுல், வனப்பினுய், வேறிலானன்பினுன்; தந்திகென, தந்தியென, தந்தேகென.
3. சேவகர்த் தொழுது; கூறினன். (42)

இலக்குவன் சினந்து கூறுதல்

575. உரைசெய்தெங் கோமகற் குறுதி யாக்கிய
தரைசெறி திருவினைத் தவிர்த்து மற்றொரு
விரைசெறி குழலிமாட் டளித்த மெய்யனை
அரசனென் றின்னமொன் றறையற் பாலதோ.

எம் கோமகற்கு - எம் அரசனை இராமபிரானுக்கு, உரை செய்து உறுதி ஆக்கிய - (முதலில்) வாக்களித்து உறுதிப்படுத்திய, தரை செறி திருவினை - நாட்டையும் மிக்க செல்வத்தையும், தவிர்த்து - (அவனுக்கின்றி) விலக்கி, மற்று ஒரு விரைசெறி குழலிமாட்டு அளித்த - வேறொரு மணம் மிக்க கூந்தலையுடைய பெண்ணிடம் கொடுத்துவிட்ட, மெய்யனை - வாய்மையாளனை, இன்னம் அரசன் என்று - இன்னமும் அரசனென்று கொண்டு, ஒன்று அறையல் பாலதோ - ஒரு செய்தி சொல்லத்தக்கதுண்டோ?

இதுமுதல் மூன்று பாடல்களில், இலக்குவன் இயல்பை அவன் சொற்களாற் புலப்படுத்துகின்றார். கோமகன் - அரசன். அரசன் எனற்குரியவன் இராமனேயன்றித் தசரதனல்லன் என்கின்றான். மெய்யன் : இகழ்ச்சிக் குறிப்பு. கைகேயியை 'எவளோ ஒருத்தி' என்றான். ஓகாரம் : எதிர்மறை.

(பி - ம்.) 1. உரை செய்தம்; உறுதி போக்கிய, உறுதியோதிய, உறுதியோங்கிய, உதவியாக்கிய, ஒக்கிய, ஓங்கிய, ஓதியநீபோக்கிய, உதவிப்போக்கிய.
2. தரைகெழு செல்வத்தைத், திருவினைத், தரைசெறி செல்வத்தைத்; தவிர.
3. விரைகெழு; அளித்த வேந்தனை.
4. இன்னுமொன்று; அறையப் பாலதோ, அறைதலாவதோ, உணர்த்தலாகுமோ, உலரக்கலாவதோ, உரைக்கற்பாலதோ, (43)

576. கானகம் பற்றிநற் புதல்வன் காயுணப்
போனகம் பற்றுமப் பொருவில் மன்னவற்
கூனகம் பற்றிய வுயிரொ டின்னம்போய்
வானகம் பற்றிலா வலிமை கூறென்ருன்.

நல் புதல்வன் - (எவர்க்கும்) நல்லவனுன இராமபிரான், கான் அகம் பற்றி - காட்டை இடமாகக் கொண்டு, காய் உண - காய் கனி கிழங்கு முதலியவற்றை உண்ண, போனகம் பற்றும் - (தான் அரண் மனையிலிருந்து) நல்லுணவை விரும்பிக் கொள்கின்ற, அ பொருவு இல் மன்னவற்கு - அந்த ஒப்பில்லாத அரசனுக்கு, ஊன் அகம் பற்றிய உயிரொடு - உடம்பைப் பற்றிக்கொண்ட உயிரோடு (இருந்து), இன்னம் போய் வான் அகம் பற்று இலா வலிமை - இன்னமும் போய்ச் சுவர்க் கம் அடையாதிருக்கும் அவ்வன்மையை, கூறு-எடுத்துக் கூறுவாயாக, என்ருன்—.

'இராமனைக் காட்டுக்கு அனுப்பிவிட்டு இன்னும் நீர் உயிரோடிருக் கின்றீரே' என்று நான் கூறியதாக அரசருக்குச் சொல்லுக என்கின்ருன். இதனுல் இலக்குவனது மனநிலை நன்கு புலனுகும். இவ்வாறு தந்தையை அவன் வெறுத்தமை முன்னும் (424) காணலாம். உப லட்சணத்தால் காயுடன் மற்றவற்றையும் கொள்க. பொருவில் என்றது இகழ்ச்சிக் குறிப்பு; பொரு வில் எனப்பிரித்துப் பொருள் கூறலுமாம்.

(பி - ம்.) 1. கானகம் பற்றிய, பற்றியிப்.
2. போனகம் பற்றுமக், பற்றுமிப்; பொய்யில்; மன்னனற்கிங்கு, மன்னர்க்கிங்கு, மன்னவர்க்கு, மன்னனுக்கு.
3. ஊனகம் பற்றிய உயிர்கொடு, உயிர்கொண்டு, உயிரொடு; இன்னும் போல்.
4. பற்றிலாவாறு. (44)

577. மின்னுடன் பிறந்தவாட் பரத வேந்தற்கென்
மன்னுடன் பிறந்திலென் மண்கொண் டாள்கின்ற
தன்னுடன் பிறந்திலென் றம்பி முன்னலென்
என்னுடன் பிறந்தயான் வலிய னென்றியால்.

(மேலும் இலக்குவன்) மின்னுடன் பிறந்த வாள் பரதன் வேந் தற்கு - மின்னேடு தோன்றிய வாட்படையையுடைய பரதனுன அரச னுக்கு, என் மன் உடன்பிறந்து இலென்-(நான்) என் அரசனுன இராம னுடனும் பிறக்கவில்லை; மண் கொண்டு - (இராமனுக்குரிய) பூமியைக் கைக் கொண்டு, ஆள்கின்ற - ஆள இருக்கின்ற, தன் உடன் பிறந்து இலென் - தன்னுடனும் (நான்) பிறக்கவில்லை; தம்பி முன்னலென் என் தம்பி சத்துருக்கனனையும் (தம்பியாக) நினைக்கவில்லை; என் உடன் பிறந்த யான் - (எவருடனுமின்றி) என்னுடனேயே (தனியாகப்)

பிறந்த நான், வலியன் என்றி - வலியவனாக இருக்கின்றேன் என்று சொல் (என்றான் என வருவித்து முடிக்க). ஆல்! அசை.

தம்பியாய்ப் பிறந்தும், இராமபிரானுக்குரிய அரசை அவனுக்கு நிலையிட இயலாததனால், நான் அவனுடன் பிறந்தவனும் அல்லேன்; தம்பியுடையான் படைக்கஞ்சான் என்றபடி அவனுக்கு நான் உதவினேனல்லேன். பரதன் முறை தவறி அரசு கொள்வதனால் அவனையும் உடன் பிறந்தவனாகக் கருதவில்லை; சத்துருக்கனன் பரதனைச் சார்ந்தொழுகுதலால் அவனையும் என் தம்பியாக நினைக்க வில்லை; எனவே, நான் தனியன். ஆயினும், இனி இராமனுக்குத் தீங்கு கருதி எவர் வரினும் ஒருகால் பரதனே வரினும் அழிக்கும் ஆற்றலையுடையேன்' என்கின்றான். இவ்வாற்றலைத் தோற்றுவிப்பது 'வலியன்' என்றது. இராமனையன்றி வேறெவரையும் நான் அரசனாகக் கருதவில்லையென்பான் 'என் மன்னுடன்' என்றான்.

பிராட்டியும் இலக்குவனும் சுமந்திரனிடத்துச் செய்தி சொல்லின ரென்று முதல் நூலில் இல்லை.

(பி - ம்.) 1. பரத வேந்தற்கு, பரதவேந்தர்க்கென், பரதவேந்தனென்.
2. பிறந்திலன், வருந்திவன், பிறந்திலேன்; ஆள்கின்றான்.
3. தன்னொடும் பிறந்திலேன்; முன்னலேன், முன்னிலேன், முன்னலன் முன்பலென், முன்றிலே.
4. என்னொடும்; பிறந்தியான், பிறந்த நான், பிறந்து நான்; வலியெ னென்றியால், வலியனே யென்றான், வலியனே னென்றான். (45)

இராமன் தம்பியைத் தணிவித்தலும் சுமந்திரன் விடைபெற்றுச் செல்லுதலும்

578. ஆரிய னிளவலை நோக்கி யையநீ
சீரிய வல்லன செப்ப லென்றபின்
பாரிடை வணங்கினன் பரியு நெஞ்சினன்
தேரிடை வித்தகன் சேறல் மேயினான்.

ஆரியன் - இராமபிரான், இளவலை நோக்கி - தம்பியைப் பார்த்து, ஐய - ஐயனே, நீ சீரிய அல்லன செப்பல் - நீ நேர்மையற்ற வார்த்தைகளைச் சொல்லாதே, என்றபின் - என்று சொல்லி அவனைத் தணிவித்த பின்பு, தேர் இடை வித்தகன் - தேர்த்தொழிலில் வல்லவ னான சுமந்திரன், பார் இடை வணங்கி - தரையில் விழுந்து வணங்கி விட்டு, பரியும் நெஞ்சினன் - (பிரிவு குறித்து) வருந்தும் மனத்தனாகி, சேறல் மேயினான் - செல்லலுற்றான்.

ஆரியன் - (எவற்றிலும்) மேலோன்; இராமபிரான். இலக்குவன் மேலும் ஏதேனும் சொல்லாதிருத்தற் பொருட்டு, 'நீ சீரிய அல்லன செப்பல்' என ஆணையாகப் பணித்தான்; அதனால் இலக்குவனும்

அடங்கினான். வித்தகன் தேரிடைச் சேறல் மேயினான் என்றியைத்து, சுமந்திரன் தேர் நிறுத்தியிருந்த இடத்துக்குச் செல்லலுற்றான் என உரைத்தலுமாம்.

(பி - ம்.) 1. ஐயவிச்.
2. பாரிறை ஊட்டின; பதைக்கும், பதைத்த.
4. தேருடை; மேவினான். (46)

சுமந்திரன் வெறுந் தேரோட்டிச் செல்லுதல்

579. கூட்டினன் றேர்ப்பொறி கூட்டிக் கொண்முறை
பூட்டினன் புரவியப் புரவி போநெறி
காட்டினன் காட்டித்தன் கல்வி மாட்சியால்
ஓட்டின னொருவரு முணர்வு றாமலே.

(பிரிந்து சென்ற சுமந்திரன்) தேர் பொறி கூட்டினன் - இரதமாகிய இயந்திரத்தைப் (பயணத்துக்கு ஏற்றவாறு) பண்ணினான்; கூட்டி - பண்ணி, புரவி - குதிரைகளை, கொள் முறை பூட்டினான் - அவை ஏற்றுக்கொள்ளும் முறையிலே (இரதத்தில்) பூட்டினான்; அ புரவி - அக் குதிரைகள், போம் நெறி - போவதற்குரிய வழியை, காட்டினன் - குறிப்பித்தான்; காட்டி —, தன் கல்வி மாட்சியால் - தனது தேர்த் தொழில் மேம்பாட்டினால், ஒருவரும் உணர்வு உறாமல் ஓட்டினன் - ஒருவரும் (தேர் செல்வதை) அறிந்துகொள்ளாதவாறு செலுத்தினான். ஏ : ஈற்றசை,

சித்தஞ் செய்தலைப் பண்ணுதல் என்பர்; அதனை இங்கே 'கூட்டுதல்' என்றார். பூட்டுதல் : "வண்டியில் மாட்டைப் பூட்டு" என்ற உலக வழக்குக் காண்க. கொள் முறை : வலமும் இடமுமாகிய பக்கங்களில் அவ்வவை நிற்றற்குரிய முறை. ஒருவரும் உணர்வுறாமல் ஓட்டுதல், தேரோசை கேட்டு எவரும் விழித்தெழாதவாறு ஓசையின்றிச் செலுத்துதல்; இதற்குத் தனித் திறமை வேண்டுமாதலின், 'தன் கல்வி மாட்சியால்' என்றார்.

இப்பாடல் ஒரு பிரதியில் இல்லை; சில பிரதிகளில் இதன்பின்,

ஒருதிறத் துயிரெலாம் புரந்து மற்றவண்
இருதிறத் துளவினை யியற்று மெம்பிரான்
தருதிறத் தேவலைத் தாங்கித் தாழ்விலாப்
பொருதிறச் சுமந்திரன் போய பின்னரே.

என்றொரு பாடல் உள்ளது.

(பி - ம்.) 1. கூட்டினான்; கூட்டிக் கோண்முறை; கோன்முறை, கூடிக்கோன் முறை.
2. பூட்டினான், பூட்டின, பூட்டிய; புரவியைப், புரவியலு, புரவியின், புரவியும்.

3. காட்டினான், காட்டின.
4. ஓட்டினான்; அறிவுருமலே. (47)

இராமன் முதலிய மூவரும் வழி நடத்தல்

580. தையறன் கற்புந்தன் றகவுந் தம்பியும்
மையறு கருணையு முணர்வும் வாய்மையும்
செய்யதன் வில்லுமே சேம மாகக்கொண்
டையனும் போயினா னல்லி னாப்பணே.

(சுமந்திரன் சென்றபின்), ஐயனும் - இராமபிரானும், தையல்தன் கற்பும் - பிராட்டியின் கற்பு மேம்பாடும், தம்பியும் - இலக்குவனும், தன் தகவும்-தனது உயர்ந்த நடுவுநிலையும், மை அறு கருணையும்-குற்ற மற்ற கருணையும், உணர்வும் - மேலான அறிவும், வாய்மையும் - சத்தியமும், தன் செய்ய வில்லுமே - தன் கையிலுள்ள செப்பமான வில்லும் ஆகியவைகளே, சேமம் ஆக கொண்டு - பாதுகாப்பாகக் கொண்டு, அல்லின் நாப்பண் - அவ்விரவின் நடு யாமத்தில், போயினான் - நடக்கலுற்றான். ஏ: அசை.

சுமந்திரன் போனபின், இராமபிரான் தாழ்த்தலின்றி மற்ற இருவரோடும் அப்போதே புறப்பட்டான் என்றவாறு. பிராட்டி மெல்லியலாளாகலின் அவள் கற்பின் வலிமையைக் குறித்தார். தம்பி வலியன், அவன் கையிலும் வில்லையன்றி வேறு படைக்கலமில்லை யென்பார் வாளா, 'தம்பியும்' என்றார். இராமபிரானுக்கு அவனருங்குணங்களே பெருந்துணை என்பார், அக்குணங்களைக் குறித்தார். தன் என்பதனை எல்லாவற்றோடும் ஒட்டுக. எவரும் அறியாது தானும் போதல் கருதினானாகலின் 'அல்லின் நாப்பணே' போயினான் என்றார்.

சில சுவடிகளில் 'சுமந்திரன் மீட்சிப்படலம்' என்பது இங்கே முடிவுற, அடுத்து, 'தசரதன் மோட்சப்படலம்' என்று தொடங்குகின்றது.

(பி-ம்.) 1. தம்பிதன்.
2. உணர்வும் ஆண்மையும். 3. செப்பகை.
4. போயினன், காப்பண்ணே. (48)

சந்திரோதயம்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

581. பொய்வினைக் குதவும் வாழ்க்கை யரக்கரைப் பொருந்தியன்னார்
செய்வினைக் குதவு நட்பாற் செல்பவர்த் தடுப்ப தொக்கும்
மைவிளக் கியதே யன்ன மயங்கிரு டுரக்க வானம்
கைவிளக் கெடுத்த தென்ன வுதித்தது கடவுட் டிங்கள்.

பொய்வினைக்கு உதவும் வாழ்க்கை - வஞ்சகச் செயல்களுக்கு உதவும் வாழ்வினையுடைய, அரக்கரை பொருந்தி - அரக்கரோடு

சேர்ந்து, அன்னூர் செய்வினைக்கு - அவர்கள் செய்யும் வஞ்சகச் செயல்களுக்கு, உதவும் நட்பால் - உதவி செய்யும் நட்புரிமையால், செல்பவர் தடுப்பது ஒக்கும் - (அரக்கரை அழித்தற்குச்) செல்லுவோரைத் தடுப்பதுபோல நின்ற, விளக்கியது மையே அன்ன - (கருமையன்றி வேறு காணுதவாறு) விளக்கப்பட்ட அஞ்சனம் போன்ற, மயங்கு இருள் - (நடப்போர்) மயங்குதற்குக் காரணமான இருளை, துரக்க - ஓட்டுமாறு, வானம் கைவிளக்கு எடுத்தது என்ன - தேவருலகம் கைவிளக்கை ஏற்றி வைத்ததென்னும்படி, கடவுள் திங்கள் உதித்தது - தெய்வத் தன்மையுள்ள சந்திரன் உதயமாயிற்று.

நட்பால் தடுப்ப தொக்கும் என்று கூட்டுக. இருள் நடப்போர்க்கு அச்சந்தரும் கருமையும் செறிவும் உடையதாகலின் அது தீயவராகிய அரக்கருக்குத் துணைசெய்வதென்றும், அரக்கருடைய பகைவர்களாகிய தேவர்கள், தமக்காகச் செல்லும் இராமன் முதலியோர்க்குத் துணை செய்யும் பொருட்டு இருளைப் போக்க விளக்கேற்றி வைத்தாற் போலத் திங்கள் உதித்தது என்றும் தற்குறிப்பேற்றமாகக் கூறுகின்றார். தடுப்பதொக்கும் இருள், மை விளக்கியதேயன்ன இருள், மயங்கிருள் எனத் தனித்தனி இயைக்க. வானம் - தேவருலகம். "ஏறனாற் கிருளை நீங்கக் கைவிளக் கேற்றி யாங்கு, வீறுயர் மதியந் தோன்ற" (சீவக. 1542) என்பது இங்கே ஒப்புநோக்கத் தக்கது.

(பி - ம்.) 1. உதவுவாட்கை.
2. செய்வினைக்குதவி; நட்பார் செலவுறற்றடுப்பது, காட்டிச் செல்பவர் தடுப்பது; ஏய்க்கும்.
3. விளக்கேந்தவென்ன; வயங்கிருள் துரப்ப.
4. கைவிளக்கெடுப்பது; வந்தது, பொலிந்தது. (49)

582. மருமத்துத் தன்னை யூன்று மறக்கொடும் பாவந் தீர்க்கும்
உருமொத்த சிலையி னேரை யொருப்படுத் துதவி நின்ற
கருமத்தின் விளைவை யெண்ணிக் களிப்பொடுங் காண வந்த
தருமத்தின் வதன மென்னப் பொலிந்தது தனிவெண் டிங்கள்.

தன்னை மருமத்து ஊன்றும் - (தருமமாகிய) தன்னை உயிர் நிலையிலே தாக்கி வருத்துகின்ற, மறம் கொடு பாவம் - மாறுபாட்டையுடைய கொடிய பாவத்தை, தீர்க்கும் - அழிக்கவல்ல, உரும் ஒத்த சிலையினாரை - இடிபோலும் (நாணொலியுடைய) வில்லேந்திய இராம இலக்குவரை, ஒருப்படுத்து - (வனம் செல்ல) உடன்படுவித்து, உதவி நின்ற - தனக்கு உதவி செய்து துணைநின்ற, கருமத்தின் விளைவை எண்ணி - (தனது) நல்வினையின் பயனை நினைந்து, களிப்பொடும் - மகிழ்ச்சியுடன், காணவந்த - (இராம இலக்குவரைக்) காணும்படி வந்த, தருமத்தின் வதனம் என்ன - தருமதேவதையின் முகம் போல, தனி வெண் திங்கள் - ஒப்பற்ற வெள்ளிய சந்திரன், பொலிந்தது - (அழகாக) விளங்கியது.

மறம் தீர்த்து அறம் காக்கத் தோன்றிய இராமபிரான், வனம் போந்தாலன்றி அக்குறிக்கோள் முற்றுரு தாகலின், அவனை வனத்திற் செல்லப் பண்ணித் தனக்கு உதவியது தன் நல்வினையே என்று கருதி மகிழ்ந்த தருமதேவதை, இராம இலக்குவரை நேரிற் காணவர அதன் முகம் போலச் சந்திரன் விளங்கியது என்றதனால் இதுவும் தற்குறிப் பேற்றவணியாம். மருமத்துத் தன்னை ஊன்றும் என்பதனைச் சிலையி னோருக்கு விசேடணமாக்கி, நெஞ்சிலே எப்போதும் தன்னை (தரு மத்தை) நிலைநிறுத்திக்கொள்ளும் சிலையினோர் என உரைத்தலுமாம்.

(பி - ம்.) 1. ஊன்றி; மாக்கொடும், மனக்கொடும்.
2. சிலையினரை; உருவினின்ற.
3. விளவை யுன்னிக், விளவே யெண்ணிக், வினையை யுன்னிக், வினையை யெண்ணிக்; களிப்பொடு; கானில் வந்த. (50)

மலர்கள் குவிதல்

583. காம்புயர் கானஞ் செல்லுங் கரியவன் வறுமை நோக்கித்
தேம்பின குவிந்த போலுஞ் செங்கழு நீருஞ் சேரைப்
பாம்பின தலைய வாகிப் பரிந்தன குவிந்து சோர்ந்த
ஆம்பலு மென்ற போதங் கம்புய மலர்வ துண்டோ.

காம்பு உயர் - மூங்கில்கள் ஓங்கியுள்ள, கானம் செல்லும் - காட்டிலே போகிற, கரியவன் வறுமை நோக்கி - கரிய திருமேனியனான இராமபிரானது வறுமை நிலையைக் கண்டு, செங்கழு நீரும் - செங்கழு நீர்ப் பூக்களும், தேம்பின குவிந்த போலும் - வருந்தினவாகிக் குவிந் திருந்தன போல இருந்தன; ஆம்பலும் - (இரவில் மலரும்) ஆம்பற் பூக்களும், சேரை பாம்பின தலைய ஆகி - சாரைப்பாம்பின் தலையை ஒத்த தோற்றமுடையனவாகி, பரிந்தன - (இராமபிரான் பொருட்டு) வருந்தி, சோர்ந்த - சாய்ந்து கிடந்தன; என்றபோது - என்று சொல்லும்போது, அங்கு அம்புயம் அலர்வது உண்டோ - அவ்விடத் துள்ள தாமரைகள் மலர்வது நிகழுமோ? (நிகழாது).

செங்கழு நீர் தாமரைபோன்று பகலில் மலர்ந்து இரவிற் குவிவது; அஃது இயல்பிலே குவிந்திருந்ததை, இராமபிரான் பொருட்டு வாடிக் குவிந்ததுபோலும் என்று கூறி, அஃது எங்ஙனமாயினும், இரவில் மலரும் இயல்புடைய அல்லியே குவிந்திருந்ததென்றால், தாமரை குவிந் திருந்ததென்பது கூறவேண்டுமோ என்று, அஃறிணைப் பொருள்களும் இராமபிரான் பொருட்டு வருந்தினமை குறிக்கின்றார். சேரை - சாரை; மலராத அல்லிக்குச் சாரைப்பாம்பின் தலை உவமை; "தாரை வன்றலைத் தண்ணிள வாம்பலைச், சேரை யென்று புலம்புவ தேரையே" (கிட்கிந்தா. 909). ஆம்பல் இரவில் மலர்வது: குறிஞ்சி. 223; சீவக. 2336.

(பி . ம்.) 2. குவிந்த சாய்ந்த, குவிந்து சாய்ந்து; செழுங்கழுநீரும்; சேரக், சேரப், சேணப், சாரைப், செய்ய.
3. குவிந்து சாய்ந்த, குவிந்து சேர்ந்த, குவிந்த சாய்ந்த, குவிந்த சோர்ந்த.
4. என்றபோது, நின்றபோது, என்றபோதினம்புயம், என்றபோது மம்புயம். (51)

வெண்ணிலவு வீசுதல்

584. அஞ்சனக் குன்ற மன்ன வழகனு மழகன் றன்னை
எஞ்சலில் பொன்போர்த் தன்ன விளவலு மிந்து வென்பான்
வெஞ்சிலைப் புருவத் தாடன் மெல்லடிக் கேற்ப வெண்ணூற்
பஞ்சிடைப் படுத்தா லென்ன வெண்ணிலாப் பரப்பப் போனார்.

இந்து என்பான் - இந்து என்று பெயர் சொல்லப்படும் சந்திரன், வெம் சிலை புருவத்தாள் தன் - விரும்பத்தக்க வில்லைப் போன்ற புருவங்களையுடைய பிராட்டியின், மெல் அடிக்கு ஏற்ப-மென்மையான பாதங்களுக்கு ஏற்றவாறு, வெள் நூல் பஞ்சு - வெள்ளிய நூலைத் தரும் பஞ்சை, இடை படுத்தால் என்ன - அக்காட்டிலெங்கும் பரப்பினாற் போல, வெள் நிலா பரப்ப - (தனது) வெள்ளிய நிலவொளியைப் பரப்ப, (அப்பிராட்டியோடு), அஞ்சனம் குன்றம் அன்ன அழகனும் - மைம் மலைபோன்ற பேரழகனான இராமபிரானும், அழகன் தன்னை எஞ்சல் இல் - அப்பிரானுக்கு (எவ்வகையிலும்) குறைவில்லாத, பொன் போர்த்த அன்ன இளவலும் - பொன்னால் மூடியது போன்ற நிற முடைய இளையவனும், போனார் - நடந்து போனார்கள்.

581, 582, 584 ஆகிய மூன்று பாடல்களில் நிலவைப்பற்றிய செய்திகளைக் கற்பனையாகக் கூறியுள்ளார். அவ்வகையில், இப்பாடலுள் பிராட்டியின் மெல்லிய திருவடிகளில் கல் முதலியன உறுத்தாதபடி எங்கும் பஞ்சைப் பரப்பி வைத்தாற் போன்றிருந்தது நிலவொளி என்று கூறி, அவள் பொருட்டுச் செய்த நலனை மற்ற இருவரும் நுகர்ந்தனர் என்பது பட 'அழகனும் இளவலும் போனார்' என்று முடித்தார். இலக்குவன், மேனி நிறம்மட்டும் வேறுபட, சாயலில் இராமபிரானை யொத்தும், வீரம் முதலியவற்றில் அவனுக்குக் குறைவின்றியும் இருந்தவன் என்பதைக் குறிக்கின்றார். எஞ்சலில் இளவல், பொன் போர்த்தன்ன இளவல் என இயைக்க. எஞ்சல் இல் - விட்டு நீங்குதலில்லாத என்றலுமாம். வெம்சிலை-கொடிய வில்லும் ஆம். அழகன்றன்னை-அழகனுக்கு; தன் 1 சாரியை. 'இராமன்' என்ற பெயர்ப் பொருளே அழகைக் குறிப்பது.

(பி - ம்.) 1. அழகன்றன்மேல்.
2. எஞ்சலில் அன்புபோர்த்த, அன்பு பெற்ற.
3. ஏற்ப விண்ணூல், ஒப்ப வெண்ணூற், இரங்கி வெண்ணூற்.
4. படுத்தன்ன, படுத்ததென்ன; போனான். (52)

சீதை தொடர்ந்து செல்லுதல்

585. சிறுகிடை வருந்தக் கொங்கை யேந்திய செல்வ மென்னும்
செறியிருங் கூந்த னங்கை சீறடி நீர்க்கொப் பூழின்
நறியன தொடர்ந்து சென்று நடந்தெனி னவையி னீங்கும்
உறுவலி யன்பி னூங்கொன் றுண்டென வுணர்வ துண்டோ.

சிறுகு இடை வருந்த - மிகச் சிறுத்த இடை வருந்தும்படி, கொங்கை ஏந்திய-(பருத்த) தனங்களைத் தாங்கிய, செறி இரு கூந்தல் - அடர்ந்த கரிய கூந்தலையுடைய, செல்வம் என்னும் நங்கை - திருமகளான பிராட்டியின், நீர் கொப்பூழின் நறியன சிறு அடி - நீர்க் கொப்புளங்களினும் மென்மையவான சிற்றடிகள், தொடர்ந்து சென்று - (தாழாது இராமபிரானைத்) தொடர்ந்து போய், நடந்தெனின் - நடந்தனவென்றால், நவையின் நீங்கும் - குற்றத்தின் நீங்கிய (குற்றமில்லாத), அன்பின் ஊங்கு - அன்பைக் காட்டிலும், உறு வலி ஒன்று உண்டு என - மிக்க வலிமை உடையது ஒன்றுள்ளது என்று, உணர்வது உண்டோ-நினைத்தற்கு இடமுண்டோ? (இல்லை என்றபடி.)

ஆண்களும் நடத்தற்கு அஞ்சத்தக்க கொடிய காட்டில் செல்வ மகளான பிராட்டி நாயகனைத் தொடர்ந்து வருத்தமின்றி நடந்து சென்றாளென்றால், அதற்குக் காரணம், அவளுடைய மறுவற்ற அன்பே என்கின்றார். நடைக்கு ஊறு செய்வனவாக இடையையும், தனங்களையும், அளகபாரத்தையும் குறித்தார். அவற்றையும் தாங்கிக் கொண்டு, காலில் உறுத்துவதையும் பொருட்படுத்தாது நடந்து சென்றாள். திருவடிகளின் மென்மைக்கு நீர்க்கொப்புளம் உவமை. ஏந்தியவளும், கூந்தலையுடையவளும், செல்வமெனப்படுவாளுமாகிய நங்கையென்க. நடந்தெனின் - நடந்த எனின்; தொகுத்தல்.

இப் பாடல் சில பிரதிகளில் இல்லை.

(பி - ம்.) 1. சிறுகிலை, சிறுவிலை, சிறுவலி; மருங்கிற், மருங்குல். மருங்கு, மருங்கும்; ஏந்தியோர், ஏற்றிய, இந்திர, இந்திரன், இந்திரை; செல்வகில.
2. செறியிரும், செறியிருட்.
3. தொடர்ந்து சென்ற, தொடர்ந்து சேர, சேர்ந்து; நடத்தலின், நடந்தன; நடந்தனள்; நவையுணீங்கும், நவையினீங்கி. நவையு நீங்கும், நவையுணீங்கி.
4. அன்பினூங்கின்; நுவல்வதுண்டோ. (53)

சுமந்திரன் செயல்

586. பருதிவா னவனுங் கீழ்பாற் பருவரை பற்றா முன்னம்
திருவினா யகனுந் தென்பால் யோசனை யிரண்டு சென்றான்
அருவிபாய் கண்ணும் புண்ணா யழிகின்ற மனமுந் தானும்
துரிதமான் றேரிற் போனான் செய்தது சொல்ல லுற்றாம்.

பருதி வானவன் - சூரியன், கீழ்பால் பருவரை பற்றுமுன்னம் - கிழக்கில் உள்ளதான பெரிய உதயகிரியைச் சேரா முன்னே (உதிப்பதற்குமுன்), திருவின் நாயகனும் - இலக்குமி கேள்வனான இராமபிரானும், தென்பால் - தெற்குத் திசையில், இரண்டு யோசனை சென்றான் - இரண்டு யோசனை தூரம் கடந்துவிட்டான்; அருவி பாய் கண்ணும் - அருவிபோல நீர் சொரிகின்ற கண்களும், புண்ணாய் அழிகின்ற மனமும் - புண்பட்டுச் சோர்கின்ற நெஞ்சமும், தானும் - தானுமாக, துரிதம் மான் தேரில் போனான் - விரைந்து செல்லும் குதிரைகள் பூட்டிய தேரில் சென்ற சுமந்திரன், செய்தது - மேலே செய்தவற்றை, சொல்லல் உற்றாம் - சொல்லலானோம்.

சூரியன் உதிக்குமுன்னே இராமபிரான் முதலியோர் இரண்டு யோசனை தூரம் இரவிலேயே வழிநடந்து சென்றுவிட்டனர்; இஃது இங்ஙனமாக, அயோத்தி நோக்கிச் சென்ற சுமந்திரன் செய்தியைச் சொல்லுவோம் என்று சொல்லத் தொடங்குகின்றார். வானவனும் : உம்மை இசைநிறை. நாயகனும் : உம்மை எதிரது தழுவிய எச்சம். கண்ணும் மனமும் தானும் போனான் என்றது திணை விரவிச் சிறப்பால் உயர்திணை முடிவு கொண்டது. துரிதம் : த்வரிதம் என்ற வடசொல் திரிபு.

(பி - ம்.) 1. பரிதி; பனிவரை.
2. ஓசனை.
3. அருவிபாய்க்; புண்ணால்; சுமந்தன்றானும்.
4. துரிதமாத்தேரிற், தூரகமான்றேரிற், துருவுமாந்தேரிற்; சென்றான்; செய்ததைச், சோபத்தைச். (54)

587. கடிகையோரிரண்டு மூன்றிற் கடிமதிலயோத்தி கண்டான்
அடியிணை தொழுதா னாதி முனிவனை யவனு முற்ற
படியெலாங் கேட்டா னெஞ்சிற் பருவர லுழந்தான் முன்னம்
முடிவெலா முணர்ந்தா னந்தோ முடிந்தனன் மன்னனென்றான்.

(தேரில் சென்ற சுமந்திரன்) கடிகை ஓர் இரண்டு மூன்றில் - ஆறு நாழிகை யளவில், கடிமதில் அயோத்தி கண்டான் - காவலான வலிய மதில்களையுடைய அயோத்தியை அடைந்தவனாகி, ஆதி முனிவனை - முதன்மையான வசிட்ட முனிவனுடைய, இணை அடி தொழுதான் - இரண்டு திருவடிகளையும் வணங்கினான்; அவனும் - முனிவனும், உற்றபடி எல்லாம் கேட்டான் - (இராமன் முதலியோர்க்கு) நேர்ந்த வற்றையெல்லாம் (சுமந்திரன் கூறக்) கேட்டு, நெஞ்சில் பருவரல் உழந்தான் - மனத்தில் உண்டான வேதனையால் வருந்தி, முடிவு எல்லாம் முன்னம் உணர்ந்தான் - மேலே முடியக் கூடியவற்றை யெல்லாம் முன்பே அறிந்து, அந்தோ - ஐயோ! மன்னன் முடிந்தனன்- சக்கரவர்த்தி இறந்தவனே! என்றான்—.

சுமந்திரன் அயோத்தியை அடைந்து, இராமபிரான் கூறியவாறு முதலில் வசிட்ட முனிவனைக் கண்டு, இரவு தங்கிய இடத்தில் நிகழ்ந்தவற்றையும், தன்னைத் தேரோடு திருப்பியனுப்பிவிட்டு இராமன் மற்ற இருவருடனும் நள்ளிரவிலேயே புறப்பட்டுக் கானம் சென்றமையையும் கூற, அவற்றைக் கேட்ட முனிவன் மிக வருந்தி, மேல் நிகழ்வனவற்றையும் தன் ஞான திருஷ்டியால் அறிந்து, இனி மன்னன் இறத்தல் தப்பாது என்று கொண்டு, 'முடிந்தனன் மன்னன்' என்றான். முடிவு எல்லாம்-மேலே இன்னது இன்னவாறு முடியும் என்று ஒவ்வொன்றையும்பற்றிய செய்திகள். முடிந்தனன் என்றது தெளிவு பற்றி வந்த காலவழுவமைதி. இரண்டு மூன்று என்பதனை உம்மைத் தொகையாகக் கொண்டு ஐந்து நாழிகை யென்னலுமாம். ஆதி முனிவன் - தொன்றுதொட்டுக் குலகுருவாய் எவற்றிலும் முதன்மை யுடைய முனிவன். கண்டான், கேட்டான், உழந்தான், உணர்ந்தான் என்பன வினையெச்ச முற்று.

(பி - ம்.) 1. ஒன்றிரண்டு, ஒரிரண்டில்; கடிமதிள்; புக்கான்.
2. தொழுதானுகி.
3. கேட்டு, கேட்டே; உழன்ருன், உற்ருன்; முன்னே, முன்னை, முன்னர்.
4. உணர்ந்தேன்; அரசனென்ருன், அரசனென்னே. (55)

முனிவன் செயல்

588. நின்றுயர் பழியை யஞ்சி நேர்ந்திலன் றடுக்க வள்ளல்
ஒன்றுநா னுரைத்த நோக்கான் றருமத்துக் குறுதி பார்ப்பான்
வென்றவ ருளரோ மேலை விதியினை யென்று விம்மிப்
பொன்றிணி மன்னன் கோயில் சுமந்திரனோடும் புக்கான்.

(முனிவன்), வள்ளல் - இராமன், தருமத்துக்கு உறுதி பார்ப்பான் - தருமத்துக்கு உறுதியை நாடுபவனாய், நின்று உயர் பழியை அஞ்சி - (தருமங் கெடுதலால்) அழியாது நிற்கும் பழிக்கு அஞ்சி, தடுக்க - (வனம் போகலாகாது என்று நான்) தடுக்கவும், நேர்ந்திலன் - அதற்கு உடன்பட்டான் இல்லை; நான் உரைத்தல் ஒன்றும் நோக்கான் - நான் சொல்லியது ஒன்றையும் மனத்துட் கொள்ளானானான்; மேலை விதியினை வென்றவர் உளரோ என்று - பழமையாக வரும் ஊழ் வினையை வென்றவர் எவரேனும் உளரோ என்று, விம்மி - பொருமிக் கொண்டு, சுமந்திரனோடும்—, மன்னன் - சக்கரவர்த்தியின், பொன் திணி கோயில் புக்கான் - பொன்னால் இயன்ற அரச மாளிகையை அடைந்தான்.

முனிவன், 'நான் எவ்வளவு சொல்லியும், தடுத்தும் கேளாமல் இராமன் வனம் போய்விட்டானே! விதியை யாரால் வெல்ல முடியும்' என்று வருந்திப் புலம்பிக்கொண்டு, சுமந்திரனோடு தசரதன் அரண்

மனைக்குச் சென்ருன். முனிவன் இவ்வாறு கூறியதற்கு ஆதார மானவற்றை முன்னே 455—62 கவிகளிற் காண்க. பழி - தசரத னுரை பொய்த்ததால் அவனுக்கும், அவன் ஏவியது செய்யாமையால் இராமனுக்கும் வரக்கடவன. வள்ளல், தசரதன் எனக் கொண்டு அதற்கு ஏற்ப உரை கூறுவாரும் உளர்.

(பி-ம்) 1. மடுக்க, தக்க.
2. உரைத்த, உரைக்க, உரைப்ப; தருமத்திற்கு, தருமத்தின் இறதி.
3 உளரே, யாரே, யாரோ; மேலவ்; என்ன விம்மாய், என்னு விம்மாப், என்ன விம்மிப்.
4. பொன்றணி; சுமந்திரனேடு; போனன். (56)

உழையர் மகிழ்வும் துயரும்

589. தேர்கொண்டு வள்ளல் வந்தா னென்றுதஞ் சிந்தையுந்த
ஊர்கொண்ட திங்க ளென்ன மன்னனை யுழையர் சுற்றிக்
கார்கொண்ட மேனி யானைக் கண்டிலர் கண்ணில் வற்ரு
நீர்கொண்டநெடுந்தேர்ப் பாகனிலை கண்டே நிலையிற் றீர்ந்தார்.

தேர் கொண்டு - தேர் வந்தது கொண்டு, உழையர் - அமைச்சர் முதலிய உழைச் சுற்றத்தார், வள்ளல் வந்தான் என்று - இராமபிரான் திரும்ப வந்துள்ளான் என்று கருதி, தம் சிந்தை உந்த - தம் மனம் தூண்டுதலால், திங்கள் ஊர் கொண்டது என்ன - சந்திரனைப் பரிவேடஞ் சூழ்ந்தாற்போல, மன்னனை சுற்றி - தசரதனைச் சூழ்ந்து, கார்கொண்ட மேனியானை கண்டிலர் - அங்கே கருமேகம் போலும் திருமேனியுடைய இராமனைக் காணுதவராய், கண்ணில் வற்ரு நீர் கொண்ட - கண்களில் வற்ருத அழுகைக் கண்ணீர் நிறைந்திருந்த, நெடு தேர் பாகன் நிலைகண்டு - பெரிய தேர்ச்சாரதியான சுமந்திரனது துன்ப நிலையைக் கண்டு, நிலையில் தீர்ந்தார்-தம் இன்ப நிலையினின்றும் நீங்கினர் (வருந்தினர்). ஏ : அசை.

ஊர் - பரிவேடம்; இஃது ஊர்கோள் எனவும் வழங்கும். கார் கொண்ட - கருமை கொண்ட எனலும் ஆம். உழையர் - அமாத்யர் என்னும் வடசொல்லின் பொருள் கொண்டது. மன்னன் சந்திரன், உழையர் பரிவேடம் எனக் கொள்க.

(பி-ம்.) 1. சிந்தை முந்த.
2. முனிவனை; உழையோர் சுற்றக்.
3. கண்ணீர் வற்ரு.
4. நீர் கொண்டு; தேரான்றன். (57)

தசரதன் செயல்

590. இரதம்வந் துற்ற தென்ருங் கியாவரு மியம்ப லோடும்
வரதன்வந் துற்ரு னென்ன மன்னனு மயக்கந் தீர்ந்தான்
புரைதபு கமல நாட்டம் பொருக்கென விழித்து நோக்கி
விரதமா தவனைக் கண்டான் வீரன்வந் தனனோ வென்ருன்.

இர்தம் வந்து உற்றது என்று - தேர் திரும்பி வந்துள்ளது என்று, ஆங்கு - அவ்விடத்து, யாவரும் இயம்பலோடும் - எல்லோரும் சொன்னவுடனே, வரதன் வந்து உற்றான் என்ன - இராமன் வந்து விட்டான் என்று, மன்னனும் - தசரதனும், மயக்கம் தீர்ந்தான் - மயக்கம் சிறிது தெளிந்து, புரை தபு - குற்றமற்ற, கமலம் நாட்டம் - தாமரை மலர் போன்ற கண்களை, பொருக்கென விழித்து நோக்கி - விரைந்து திறந்து பார்த்து, விரதம் மாதவனை கண்டான் - (எதிரில்) தவவிரதமுடைய பெரிய வசிட்ட முனிவனைக் கண்டு, வீரன் வந்தனனோ என்றான் - இராமன் வந்தானோ என்று (ஆவலுடன்) கேட்டான்.

வரதன், வீரன் என்பன குணவிசேடங்களால் இராமபிரானைக் குறிப்பன. தீர்ந்தான், கண்டான் என்பன முற்றெச்சம்.

(பி - ம்.) 1. என்றியாவரும்; விளம்பலோடும்.
2. வந்துற்றா னென்னா; வள்ளலும்; மயக்கம் தீராப்.
3. புரைதபு நோக்கம்.
4. வந்தானோ. (58)

மன்னன் சோர்தலும் வசிட்டன் செல்லலும்

591. இல்லையென் றுரைக்க லாற்றா தேங்கிமா முனிவ னின்றான்
வல்லவன் முகமே நம்பி வந்தில னென்ற மாற்றம்
சொல்லலு மரசன் சோர்ந்தான் றுயருறு முனிவ னுனிவ்
வல்லல்காண் கில்லே னென்னா வாங்குநின் றகலப் போனான்.

இல்லை என்று உரைக்கல் ஆற்றாது - (மன்னனுக்கு) இராமன் வரவில்லை என்று சொல்ல மாட்டாமல், மாமுனிவன் - பெருமை மிக்க வசிட்ட முனிவன், ஏங்கி நின்றான்—; வல்லவன் முகமே - (எத்தகைய துன்பத்தையும் தாங்க) வல்லவனான முனிவன் முகமே, நம்பி வந்திலன் என்ற மாற்றம் சொல்லலும் - இராமன் வரவில்லை என்ற வார்த்தையைக் (குறிப்பால்) கூறலும், அரசன் சோர்ந்தான் - மன்னன் (மீண்டும்) மூர்ச்சித்தான்; துயர் உறு முனிவன் - (மன்னன் நிலை கண்டு) துன்பம் மிக்க முனிவன், நான் இ அல்லல் காண்கில்லேன் என்னா - நான் இத்துன்பத்தைக் காணலாற்றேன் என்று, ஆங்கு நின்று - அவ்விடத்திலிருந்து, அகல போனான் - விலகிச் சென்றான்.

(பி - ம்.) 1. உரைக்க மாட்டான், உரைக்க லாற்றான், உணர்த்த லாற்றாது, உணர்த்தலாற்றான், உரைத்த லாற்றான், உரைக்கவாற்றாது; ஏங்கினன் முனிவன், ஏங்கினன் முன்னே, முன்னர், ஓங்கினர் முன்னர், மின்ற, நின்ற.
2. நல்லவன்; நம்பி நடந்தனன், நடந்திலன்; என்னு மாற்றம், என்ற மாற்றம்.
3. சொல்லவும், சொல்லவே, சொல்லுமாறு; துயர்பெறு, துயராறு, துயராலும்; முனிவனுனி, முனியு நாணி.
4. அல்லல் காண்கிலனே; என்ன; ஆண்டு நின்ற. (59)

தசரதன் மரணம்

592. நாயகன் பின்னு நற்றேர்ப் பாகனை நோக்கி நம்பி
சேயனோ வணியனோவென் றுரைத்தலுந் தேர்வ லானும்
வேயுயர் கானிற் றானுந் தம்பியும் மிதிலைப் பொன்னும்
போயினு னென்று னென்ற போழ்தத்தே ஆவி போனான்.

நாயகன் - தசரத மன்னன், பின்னும் - மீண்டும், நல் தேர் பாகனை நோக்கி - (சிறிது தெளிந்து) திறமையுள்ள சாரதியான சுமந்திரனைப் பார்த்து, நம்பி சேயனோ அணியனோ என்று உரைத்தலும் - இராமன் நெடுந் தூரத்தில் இருக்கிறானா அண்மையில் உள்ளானா என்று கேட்டலும், தேர்வல்லானும் - சுமந்திரனும், தானும் தம்பியும் மிதிலை பொன்னும் - தானும் இலக்குவனும் சீதையுமாக, வேய் உயர் கானில் போயினுன் என்றான் - மூங்கில்கள் உயர்ந்து வளர்ந்துள்ள காட்டிலே போய்விட்டான் என்று சொன்னான்; என்ற போழ்தத்தே - அவ்வாறு சொன்னவுடனே, ஆவி போனான் - (மன்னன்) உயிர் நீத்தான்.

இராமபிரான் திரும்பி வருவதாகவே எண்ணிய தசரதன் அவன் சேய்மையில் இருக்கிறானா, அணிமையில் உள்ளானா என்று கேட்டான். மிதிலைப் பொன் - மிதிலையில் தோன்றிய திருமகளாகிய சீதை. தானும் தம்பியும் மிதிலைப் பொன்னும் போயினான்: "தானுந் தேரும் பாகனும் வந்தென் நலனுண்டான்" என்றாற்போல ஒருமை முடிபு கொண்டது; வழுவமைதி.

கீழ்வரும் பாடல் ஒரு பிரதியிற் காணப்படுகின்றது:

துந்துமி முழங்கத் தேவர் தூய்மலர் பொழிந்து வாழ்த்தச்
சந்திர வதனத் தேயும் அரம்பையர் தழுவத் தங்கள்
முந்துதொல் குலத்து ளோரும் முக்கணான் கணமுஞ் சூழ
அந்தரத் தரசன் சென்றான் ஆனதேர்ப் பாகன் சொல்லால்

(பி - ம்.) 1. தன்றேர்ப் பாகனை; நயந்து.
3. வேயுறை கானம்,
4. போயினன்; பொழுதத்தே. (60)

தசரதன் பேறு

593. இந்திரன் முதல்வ ரான கடவுளர் யாரு மீண்டிச்
சந்திர னனைய தாங்கோர் மானத்திற் றலையிற் றாங்கி
வந்தன னெந்தை தந்தை யெனமனங் களித்து வாழ்த்தி
உந்தியா னுலகி னும்பர் மீள்கிலா வுலகத் துய்த்தார்.

(மன்னன் உயிர் போனவுடன்) இந்திரன் முதல்வர் ஆன - இந்திரன் முதலானவர்களான, கடவுளர் யாவரும் ஈண்டி - தேவர்கள்

எல்லாரும் கூடி, சந்திரன் அணையது ஓர் மானத்தில் - சந்திரனைப் போன்ற ஒரு விமானத்தில் (வைத்து), தலையில் தாங்கி - தங்கள் தலையில் சுமந்து, எந்தை தந்தை வந்தனன் என - எம் தந்தையான திருமாலுக்குத் தந்தை வருகின்றான் என்று சொல்லி, மனம் களித்து வாழ்த்தி - மனம் மகிழ்ந்து அவனை வாழ்த்தி, உந்தியான் உலகத்து உம்பர் - பிரமனது சத்தியலோகத்துக்கு மேலே உள்ள, மீள்கிலா உலகத்து - மீண்டு பிறத்தல் இல்லாத வீட்டுலகத்தில், உய்த்தனர் - கொண்டு சேர்த்தனர்.

தேவர்கள் எல்லாரும் கூடித் தசரதனது ஆவியைத் தேவ விமானத்தில் வைத்துத் தாங்கிச் சென்று வீட்டுலகத்தில் சேர்த்தனர். இராமபிரான் திருமாலாதலின் தசரதன் 'எந்தை தந்தை' எனப் பெற்றான். தண்மையும் ஒளியும் உடையதாய், விண்ணிற் செல்வ தாகலின் விமானத்திற்குச் சந்திரன் உவமை. மானம் - விமானம்; முதற்குறை. உந்தியான் - திருமாலின் திருவுந்தியில் தோன்றியவன்; பிரமன்.

(பி - ம்.) 1. முதல்வராய.
2. சந்திரனனைய வானோர், சந்திரனொளிசேர் தெய்வ மானத்தின், விமானத்தின், விமானத்தில்.
3. வந்தனர்; களித்துவள்ளல்.
4. உந்தியா னுலகினியத்தார்க் குற்றநிங்குரைத்தல் செய்வாம், உந்தி யானும்பரோடும்; மீள்கிளாதுலகத்துய்த்தான், மீள்விலாதுலகத் துய்த்தான், மீள்விலாவுலகத்துய்த்தான், அளவிலாவுலகத்துய்த் தார், பேர்கிலாவுலகத்துய்த்தார், போக்கிலாவுலகத்துய்த்தார், போக்கிலாதுலகத்துய்த்தார். (61)

கோசலையின் நிலை

594 உயிர்ப்பிலன் றுடிப்பு மில்ல னென்றுணர்ந் துருவந் தீண்டி
அயிர்த்தன ளேக்கி மன்னற் காருயி ரின்மை தேறி
மயிற்குல மனைய நங்கை கோசலை மறுகி வீழ்ந்தாள்
வெயிற்சுடுங் கோடை தன்னி லென்பிலா வுயிரின் வேவாள்.

குலம் மயில் அனைய - சிறந்த மயில் போலும் சாயலையுடைய, நங்கை கோசலை - பெண்கள் நாயகமான கோசலை, அயிர்த்தனள் - (மன்னன் உடல்நிலை கண்டு) ஐயமுற்றவளாய், உருவம் தீண்டி நோக்கி - உடலைத் தொட்டுப் பார்த்து, உயிர்ப்பு இலன் - மூச்சில்லான், துடிப்பும் இல்லன் - இதயமும் நாடிகளும் துடித்தலுமிலன், என்று உணர்ந்து—, மன்னற்கு ஆர் உயிர் இன்மை தேறி - நாயகனுக்கு அரிய உயிர் இல்லாமை தெளிந்து, மறுகி வீழ்ந்தாள் - மனம் மறுகி விழுந்து, வெயில் சுடும் கோடைதன்னில் - வெயில் கொளுத்தும் கடுங் கோடையில், என்பு இலா உயிரின் - (அவ்வெயிலில் அகப்பட்ட) எலும்பு இல்லாத புழுவைப்போல, வேவாள் - துடிக்கலானாள்.

கௌசல்யா தேவி, மன்னன் நிலை கண்டு ஐயங்கொண்டு, அவன் உடலை உரிய இடங்களில் கை வைத்து ஆராய்ந்து பார்த்து, உயிர் பிரிந்தமையை நிச்சயித்து, அளவிறந்த சோகத்தால் துடிதுடித்தாள் என்றவாறு. உயிர்போன உடம்பாதலின் 'உருவம்' என்றார். மறுகுதல் - பரிதவித்தல். குலமயில் என மாறுக. ஈற்றடி, ''என்பி லதனை வெயில் போலக் காயுமே'' என்ற குறளடியைத் தழுவி அமைந்திருத்தல் காண்க. அயிர்த்தனள், வீழ்ந்தாள் : முற்றெச்சம்.

இங்கே வான்மீகம் கூறுவது : 'இராமன் முதலிய மூவரும் வனம் புக்கமையைச் சுமந்திரனால் அறிந்து மன்னன் உயிர் பிரிந்ததனை அந்தப்புர மகளிரும் தேவியரும் அறிந்திலர்; இராமன் பிரிவால் சோக முற்ற அவர்கள் அயர்ந்து மெய்மறந்து துயின்றனர். மறுநாள் காலையில், மன்னனுக்குத் துயிலெடை பாடுவோர் வழக்கப்படி வந்து பாடி மன்னனைத் துயிலெழுப்பவும், அவன் உணராமையால் அயலில் இருந்தோர் கலக்கமுற, அதனை அறிந்த அந்தப்புர மகளிர் அரசன் பள்ளி அறையில் புகுந்து கூர்ந்து நோக்கி உண்மை உணர்ந்து கதறி அழுதனர்; அவ்வழுகை ஒலியால் கோசலையும் சுமித்திரையும் விழித்து எழுந்து பதைத்தனர்' என்பது.

(பி - ம்.) 1. உயிர்த்திலன்; துடிப்புமில்லை, உரையுமில்லை. உணர்வுமில்லை, உணர்வுமில்லன், உயிருமில்லை; எனவுணர்ந்து, எனவுரைத்து, என்றுரைத்து, என்று வந்து.
2. அயிர்த்தனர் நோக்கி மன்னற்கு, அயித்தனரயோத்தி மன்னற்கு, அயிர்த்தவளயோத்தி வேந்தற்கு.
3. நங்கை கௌசலை, மங்கை கவுசலை.
4. வெயிற்சுடு கோடைதன்னில், வெயிற்சுடு கோடை வெய்யில், கோடை மெய்யின், வெயிற்சுடும் வேடைக் காலத்து. (62)

595. இருந்தவந் தணனோ டெல்லா மீன்றவன் றன்னை யீனப்
பெருந்தவஞ் செய்த நங்கை கணவனைப் பிரிந்து தெய்வ
மருந்திழந் தவரின் விம்மி மணிபிரி யரவின் மாழ்கி
அருந்துணை யிழந்த வன்றிற் பெடையென வரற்ற லுற்றாள்.

இருந்த அந்தணனோடு - தனது திருவுந்தி மலரில் இருக்கும் பிரமனுடன், எல்லாம் - (அவன் படைப்பாகிய) எல்லாப் பொருள்களையும், ஈன்றவன் தன்னை - பெற்றவனை (பரம்பொருளாகிய) இராமபிரானை, ஈன - (தன் வயிற்றிலே தாங்கிப்) பெற்றெடுக்க, பெரு தவம் செய்த—, நங்கை-கோசலை, கணவனை பிரிந்து - நாயகனைப் பிரிதலால், தெய்வம் மருந்து இழந்தவரின் விம்மி - (கையில் கிடைத்த) தேவாமிருதத்தை இழந்தவர்களைப் போலப் பெருந்துயருற்று, மணி பிரி அரவின் மாழ்கி - தனது அரிய இரத்தினத்தை இழந்த நாகம் போல வாடி, அரு துணை இழந்த அன்றில் பெடை என-பிரிதல் அரிய துணையான ஆணை இழந்த பெண் அன்றில் போல, அரற்றல் உற்றாள் - கதறிப் புலம்பலானாள்.

கோசலையின் அருங்குணங்களுக்கும் அவள் மனநிலைக்கும் ஏற்ப, அவள் கணவனை இழந்தமைக்கு இரண்டு அரிய பொருள்களையும், அவள் துயரநிலைக்குப் பொருத்தமாகத் துணை இழந்த அன்றிலையும் உவமை கூறினர். அந்தணன் - பிரமன்; நங்கை: "மூவுலகு மீன்றுணை முன்னீன்றுனைப் பெற்றத்தால்" (1065). நாகம் தன் தலையில் உள்ள மணியை இரவில் ஓரிடத்தில் உமிழ்ந்து வைத்து, அதன் ஒளியின் உதவியால் தனக்கு இரைதேடும் என்றும், இக்காரணத்தால் அது மணியை இழப்பின் பெருந்துயருறும் என்றும் கூறுவர். "இழந்த மணி புற்றர வெதிர்ந்ததென லானுள்" (சுந்தா. 554); "அருமணி யிழந்தொர் நாக மலமரு கின்ற தொத்தாள்" (சீவக. 1508); "அருமணி யிழந்த நாகம் போன்றதும்" (சிலப். 13 : 58); "றன்மணி யிழந்த நாகம் போன்றவள், தன்மகள் வாராத் தனித்துய ருழப்ப" (மணி. 7 : 131 - 2).

(பி - ம்.) 1. இருந்தவன் றன்னேடு; தன்னையின்ற, உன்னையீன்ற.
2. கணவனிற் பிரிந்து; தேரா.
3. மருந்திகழ்ந்தவரின், அருந்துயருழந்து; அரவின் மாந்தி, அராவின் மாந்தி, மணியிழந்தரவின் மாந்தி.
4. துணை பிரிந்த, இருந்துணை பிறிந்து; அரற்றுகின்ருள், ஆர்த்தலுற்ருள், பெடையினளரற்றலுற்ருள். (63)

(கலிநிலைத்துறை)

596. தானே தானே தஞ்சமி லாதான் றகவில்லான்
போனுன் போனு னெங்களை நீத்திப் பொழுதென்னு
வானீர் சுண்டி மண்ணற வற்றி மறுகுற்ற
மீனே யென்ன மெய்தடு மாறி மெலிகின்ருள்.

(கோசலை), தஞ்சம் இலாதான் - (எவ்வகையிலும்) தாழ்வில்லாத சக்கரவர்த்தி, தகவு இல்லான் - (எங்களிடம்) அருள் இல்லாதவனுய், எங்களை நீத்து - எங்களை (இங்கே) விட்டு, இப்பொழுது —, தானே தானே போனுன் போனுன் என்னு - தான் தனியாகவே போய் விட்டானே, போய்விட்டானே என்று புலம்பி, வான் நீர் சுண்டி - மழைநீர் அற்று, மண் அற வற்றி - (தான் இருந்த நீர்நிலை) மண்ணும் பசையறும்படி வற்றிப் போதலால், மறுகு உற்ற - உயிர் வாழ்தற்கு மறுகுகின்ற, மீன் என்ன - மீனைப்போல, மெய் தடுமாறி - உடல் துடித்து, மெலிகின்ருள் - சோர்வடையலானுள்.

மீன் உயிர் வாழ்தற்கு, அது தங்கும் நீர்நிலையில் நீரும், அது கிளைத்துப் பெருகுதற்கு மழை நீரும் இன்றியமையாதன. இங்கே, மீன், கோசலை; அவள் உயிர் நிலைத்தற்குரிய நீர்நிலை, தசரதன்; மழைநீர், இராமபிரான் எனப் பொருத்திக் காண்க. தஞ்சம் - பற்றுக் கோடுமாம். 'தகைவில்லான்' என்ற பாடத்துக்குப் பகையைத்

தடுக்கும் வில்லாண்மையுடையவன் என்க. தலைவனை இழந்த நிலையில் கோசலையும் உயிர்விடத் துணிந்தாளாகலின், 'தகவில்லானாய் எங்களை நீத்துத் தலைவன் தனியே போனானே!' என்று புலம்புகிறாள். அடுக்கு அவல மிகுதிபற்றி வந்தது. தஞ்சம் - தாழ்வு (பிங்.) தகவு - அருள் (சூடா. நிக).

சில பிரதிகளில் இதுமுதல் நான்கு பாடல்கள் முறை மாறிக் காண்கின்றன.

(பி - ம்.) 1. தானேயன்றித்; தகைவில்லான்,
3. மண்ணறவற்ற, வற்று; வாரி, மண்ணுறவாரி.
4. மீனேபோல, போலும், மீனீர் போல; மீனிற் போல; விழுகின்றாள், வீழ்கின்றாள். (64)

597. ஒன்று நன்னாட் டுய்க்குவ ரிந்நாட் டுயிர்காப்பார்
அன்றே மக்கட் பெற்றுயிர் வாழ்வார்க் கவமுண்டோ
இன்றே வந்தீண் டஞ்சலெ னாதெம் மகனென்பான்
கொன்றா னன்றே தந்தையை யென்றாள் குலைகின்றாள்

மக்கள் - நன்மக்கள் என்போர், இ நாட்டு - இவ்வுலகத்தில் (உள்ள அளவும்), உயிர் காப்பார் - (பெற்றோரின்) உயிரைப் பாதுகாப்ப வரும், ஒன்று ஆம் நல் நாட்டு உய்க்குவர் - (பெற்றோர் உயிர் நீத்தபின்) மிகவும் உயர்ந்த நல்ல உலகத்திலே சேர்ப்பவரும், அன்றே - அல்லவா? பெற்று உயிர் வாழ்வார்க்கு - (அத்தகைய நன்மக்களைப்) பெற்று இவ்வுலகத்தில் வாழ்பவர்க்கு, அவம் உண்டோ - தீங்கு நேர்வது உண்டோ? (அங்ஙனமாகவும்), எம் மகன் என்பான் - எமக்கு நன்மகன் என்று சொல்லப்படும் இராமன், இன்றே ஈண்டுவந்து - இப்போதே இங்கு வந்து, அஞ்சல் என்னாது - (நான் பிரிந்துவிட்டேன் என்று) அஞ்சற்க என்று ஆறுதல் கூறாது, தந்தையை கொன்றான் அன்றே - (தன் பிரிவால்) தந்தையைக் கொன்றுவிட்டானன்றே! என்றாள் - என்று புலம்பியவளாய், குலைகின்றாள் - நடுங்குகின்றாள்.

'நற்புத்திரரைப் பெற்றோர் மறுமையில் புத் என்னும் நரக மெய்தாது நல்லுலகு எய்துவர். இம்மையில் அவருள்ள வரையில் அவருக்குத் தீங்கு ஏதுமின்றிக் காப்பதும் மக்கள் கடமை. நன்மகன் என்று அனைவரும் பாராட்டும் இராமன் தன் கடமையில் தவறித் தந்தையைத் தானே கொன்றுவிட்டானே' என்று குறைகின்றாள். அதனால், மகன் என்னாது 'மகன் என்பான்' என்கின்றாள். நாடு - உலகம். ஒன்று ஆம் நல் நாடு - தனக்கு இணை வேறு இல்லாத உயர்ந்த உலகம்; ஒன்று - ஒரு தலையாக என்றலுமாம்.

(பி - ம்.) 1. ஒன்றே, ஒன்றோ; நன்னாட்டுய்க்குவர், நன்னாடுய்க்குவர்; உயிர் காப்பர், காப்பான்.

2. அன்றேல், என்றே; மக்கட்பேருயிர்; அவமுண்டே, அறமுண்டே, வாழ்வாரேமுண்டோ, வாழ்வானறமுண்டே, அறமுண்டோ, வாழ் வான்றல முண்டே.
3. அஞ்சலெனுதென், அஞ்சலெனுதே, அஞ்சலென்னுனென், அஞ்ச லெனுனெம், எஞ்சலெனுதே.
4. கொன்றுனென்றே; அன்றே, அந்தோ; தாதையை. (65)

598. நோயும் மின்றி நோன்கதிர் வாள்வே லிவையின்றி
மாயுந் தன்மை மக்களி னுக மறமன்னன்
காயும் புள் ளிக் கர்க்கட மிப்பி கனிவாழை
வேயும் போன்று னென்று மயங்கா விழுகின்ருள்.

மறம் மன்னன் - வீர சக்கரவர்த்தி, மாயும் தன்மை - இறந்த தன்மை, நோயும் இன்றி - நோய் ஏதும் இல்லாமலும், நோன் கதிர் வாள் வேல் இவை இன்றி - வலிய ஒளியமைந்த வாள் வேல் முதலிய படைக்கலன்களால் இன்றியும், மக்களின் ஆக - தன் மக்களா லேயே நேர்ந்ததனுல், காயும் - வருத்தும் இயல்பு உடைய, புள்ளி - புள்ளிகள் அமைந்த, கர்க்கடம் - நண்டும், இப்பி - சிப்பியும், கனி வாழை - பழங்களைத் தரும் வாழையும், வேயும் போன்றுன் என்று - மூங்கிலும் போன்றவனுனுன் என்று சொல்லி, மயங்கா விழுகின்ருள் - மயங்கி வீழ்தல் உற்ருள். கோசலை என்னும் எழுவாய் வருவிக்க.

மூப்புற்றுப் பிணிவாய்ப்பட்டு இறத்தல் உலகத்து உயிர்களுக்கு இயல்பு. அரசர்க்கோவெனின், போரிலே புண்பட்டு மாய்ந்து சுவர்க்கம் புகுதலே சிறப்பு உடையது. இவ்விரு வகையால் இன்றி, தான் பெற்ற மக்களாலேயே மாய்தல் மானிடர்க்கு இயல்பு அன்று; எனவே, மன்னன் தான் கொண்ட கருவால் உயிரிழக்கும் அஃறிணை உயிர்களைப் போன்றுயினுன் என்று வருந்துகின்ருள். இவையாலும் என, ஆல் உருபும் உம்மையும் விரிக்க. ஆக - ஆதலால், கர்க்கடகம் எனற்பாலது ஈற்றயல் குறைந்து நின்றது. இப்பி - சிப்பி. நண்டும் சிப்பியும், தாம் கொண்ட சூல் முற்றிக் கருவுயிர்த்தபின் அவை மாண்டொழியும். வாழை குலை ஈன்றபின் வளர்ச்சியின்றி அழியும். மூங்கில் பூத்துக் காய்த்தபின் வாழைபோல் ஆகும். எனவே, இவை மக்களால் அழிந்த மன்னனுக்கு உவமையாயின. மக்கள் எனப் பன்மையாற் கூறியது, இராமபிரான் நாடிழக்கக் காரணமான பரதனையும் உளப்படுத்தியது என்பர். "நண்டுசிப்பி வேய்கதலி நாசமுறுங் காலத்துக், கொண்ட கருவழிக்குங் கொள்கைபோல்" (நல்வழி. 35); "மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்" (நான்மணி.) இப்பி என்ற இடத்து, 'நாகம்' என்ற பாடமும் உளது; அதுகொண்டு, பாம்பும் இவ்வகையைச் சேர்ந்தது என்பர்; "நண்டிப்பி வாழை புனமூங்கில், கத்தும் விரியன் கடுஞ்சிலந்தி-

இத்தனையும், வேலாலும் வாளாலு மின்றியே தாங்கொண்ட, சூலாலே தம்முயிர்க்குச் சோர்வு" (நீலகேசி யுரை மேற்கோள்) என்பதும் நோக்கத்தகும்.

இப்பாடல் சில பிரதிகளில் இல்லை.

(பி - ம்.) 1. நோயுமன்றி, அன்றே, அன்றேல்; இவையன்றி, அன்றே, அவையின்றி, அன்றே.
2. மாயுஞ்செல்வ, செய்கை, சேவக; மக்களினுலோ, மக்களினுசி, மக்களினுய, மக்களினுலம், மக்களினுலிம், மக்களினுலே.
3. காயுஞ்ஞெண்டில், ஞெண்டின், ஞெண்டும், ஏயுஞ்ஞெண்டிற், ஞெண்டின், ஞெண்டும், ஏயும்புள்ளிக்; கற்கட நாகம், கர்க்கட நாகம், கட்செவிநாகம், கட்செவியாகம், கற்றடமாகம், கற்புட மாகம், கற்றடிநாகம்; இப்பியுமாகும்,
4. மயங்கி; விய்கின்ருள். (66)

599. வடித்தாழ் கூந்தற் கேகயன் மாதே மதியாலே
பிடித்தாய் வையம் பெற்றனை பேரா வரமின்னே
முடித்தா யன்றே மந்திர மென்ருள் முகில்வாய்மின்
துடித்தா லென்ன மன்னவன் மார்பிற் றுவள்கின்ருள்.

(கோசலை கைகேயியை நோக்கி), வடிதாழ் கூந்தல் கேகயன் மாதே - நீண்டு தொங்கும் கூந்தலை உடைய கேகயன் மகளே, மதியாலே - உன் புத்தி வல்லமையால், பேரா வரம் பெற்றனை - மாறு சொல்லுதற்கு இயலாத வரத்தைப் பெற்று, வையம் பிடித்தாய் - நாட்டைக் கைப்பற்றிக் கொண்டாய்; மந்திரம் - (உன்) சூழ்ச்சியை, இன்னே முடித்தாய் அன்றே - இப்பொழுதே முடித்துவிட்டாயன்ரே, என்ருள் - என்று சொல்லியவாறு, முகில்வாய் மின் துடித்தால் என்ன - மேகத்தினிடம் மின்னல் புரளுதல் போல, மன்னவன் மார்பில் துவள்கின்ருள் - சக்கரவர்த்தியின் மார்பில் துவண்டு சாய்ந்து புரள்கின்ருள்.

முகில், மன்னன் மார்பு; மின், கோசலை. வடி-நீட்சி. 'வடிந்துதாழ்' எனற் பாலது 'வடித்தாழ்' என்று எதுகை நோக்கி விகாரப்பட்டது. பெற்றனை : முற்றெச்சம்.

(பி - ம்.) 1. கைகயன்.
2 பிடித்தாள்; வரமின்றே.
3. மன்னனையென்ருன்; முகில்வாண்மின், வான்மீன். (67)

600. அருந்தே ரானைச் சம்பர னைப்பண் டமர்வென்ருய்
இருந்தார் வானோர் நின்னரு ளாலே யினிதன்ஞேர்
விருந்தா கின்ரு யென்றனள் வேழத் தரசொன்றைப்
பிரிந்தே துன்பத் தாழ்பிடி யென்னப் பிணியுற்ருள்.

வேழத்து அரசு ஒன்றை பிரிந்து - (தன் துணையான) அரசுவா ஒன்றைப் பிரிந்து, துன்பத்து ஆழ் பிடி என்ன - துன்பத்துள் மூழ்கிய

தொரு பெண் யானைபோல, பிணி உற்ருள் - துன்பமுற்றுப் பரிதவிக்கும் கோசலை, (மன்னனைக் குறித்து), அரு தேரான் - உனது அரிய தேரின் உதவியால், பண்டு - முன்னே, அ சம்பரனை - (எவரும் வெல்லுதற் கரிய) அந்தச் சம்பராசுரனை, அமர் வென்ருய் - போரில் வென்று அழித்தாய்; (ஆதலால்), நின் அருளாலே—, வானோர் இனிது இருந்தார் - தேவர்கள் (இன்றும்) இனிதாக வாழ்கின்றனர்; அன்னோர் விருந்து ஆகின்ருய் - (நீ சுவர்க்கம் புகுந்து) அத் தேவர்களின் விருந்தாக அமைகின்ருய், என்றனள்—.

'தலைவ, நீ சம்பரனைத் தொலைத்துத் தேவர்களுக்கு அரசு நிலை இட்டமையின், அவர்கள் உன்னைப் பெருவிருப்புடன் எதிர்கொள்ள, நீ அவர்களுக்கு நல் விருந்தினனுவாய்' என்றதனுல், 'எங்களை இங்கே பரிதவிக்கவிட்டுச் சென்ருயே!' என்பது இசையெச்சம். பத்துத் திக்கிலும் செல்லும் தேருடையவன் என்ற பொருள்படும் 'தசரதன்' என்ற பெயருக்கு ஏதுவான தேர், அருந்தேர். ஆன்: மூன்றனுருபு. இங்ஙனமன்றி, அருந்தேரான் சம்பரன் என்றலுமாம். அ - உலகறி சுட்டு. வேழத்தரசு, தசரதன்; பிடி, கோசலை. கைகேயி வரம் பெற்றமை குறிக்கும்போது, சம்பரன் செய்தியும் கோசலையின் நினைவுக்கு வந்தது போலும்.

(பி - ம்.) 1. அருந்தேரானைச்.
2. இருந்தோர்வானோர், இருந்தார்விண்ணோர்; உன்னருளாலே; இனி திந்நாள். இனியன்னோர்.
3. விருந்தாகின்ருய், விருந்தார்கின்ருய்.
4. பெருந்தாளன்பிற் சூழ்பிடி, பெருந்தாமன்பின்ருழ்பிடி, பெருந்தாளன் பிற்ருழ்பிடி, பிரிந்தாரன்பிற் சூழ்பிடி, பொருந்தாரன்பின்ருழ்பிடி; பிரிவுற்ருள், பிறழ்கின்ருள், பிறழ்வுற்ருள், புரள்கின்ருள். (68)

601. வேள்விச் செல்வந் துய்த்திகொல் மெய்ம்மைத் துறைமேவும்
சூழ்விற் செல்வந் துய்த்திகொ ரேலா மனுநூலின்
வாழ்விற் செல்வந் துய்த்திகொல் மன்னென் றனள்வானோர்
கேள்விச் செல்வந் துய்க்க வயிற்ருேர் கிளைதந்தாள்.

வானோர் - தேவர்களும், கேள்வி செல்வம் துய்க்க - (இராம சரிதமாகிய) செவிச் செல்வத்தை நுகரும்வண்ணம், வயிற்று - தன் வயிற்றிலே, ஓர் கிளை தந்தாள் - ஒப்பற்ற புதல்வனைப் பெற்றெடுத்த கோசலை, (மன்னனைக் குறித்து) மன் - அரசே, வேள்வி செல்வம் துய்த்திகொல் - (நீ விண்ணுலகெய்தி) அரிய வேள்விகள் பல செய்ததனுலாகும் இன்பத்தை நுகர்வாயோ? மெய்ம்மை துறை மேவும்- வாய்மை நெறியில் வழுவாது நிலைத்த, சூழ்வின் செல்வம் துய்த்தி கொல் - (உன்) எண்ணத்தின் பயனுன இன்பத்தை நுகர்வாயோ? தோலா - கெடாத, மனு நூலின் வாழ்வின் செல்வம் - மனு நூல் முறை

தவருது வாழ்ந்த அரசியலின் பயனுன இன்பத்தை, துய்த்திகொல் - நுகர்வாயோ? என்றனள்—.

'அரசே, நீ விண்ணுலகில் இன்புறுதற்கு ஏதுக்கள் மிகப் பல; அவற்றுள் இம் மூன்றும் தலைசிறந்தன' என்ற கருத்துப்பட மூன்று அருஞ் செயல்களைக் குறிக்கின்ருள். செல்வம் என்றது இங்கே அது போன்ற சுவர்க்க இன்பத்தைக் குறித்தது. தசரதன் வேள்விகள் பல செய்தவனென்பது, "யாரும் செய்யாத யாக மிவன்செய்து மறந்த மாதோ" (பால. 171) என்புழிக் காண்க. வாய்மை காத்தல்: "வாய் மையும் மரபுங் காத்து மன்னுயிர் துறந்த வள்ளல், தூயவன்" (கிட்கிந்தா. 305); "தீங்கவி செவிக ளாரத் தேவரும் பருகச் செய்தான்" (பால. 33) என்றபடி இராமகாதை தேவரும் செவியாரக் கேட்டு மகிழ் தற்குரியதாதலின், 'வானோர் கேள்விச் செல்வந்துய்க்க வயிற்ருேர் கிளைதந்தாள்' எனச் சிறப்பித்தார். கொல் : வினுப் பொருள் தந்து நின்றது. மன் : அண்மை விளி; மிகுதியாக என்றலுமாம். இப்பொரு ளுக்கு 'மன்துய்த்திகொல்' என மூவிடத்தும் ஒட்டுக. கிளை - புதல்வன்; மரபு கிளைக்க ஏதுவானவன். இதுகாறும் எட்டுப் பாடல்களால் கோசலையின் துயரமும் புலம்பலும் கூறினுர்.

(பி - ம்.) 1. மெய்மைத்துணையின்மை.
2. சூழிச்செல்வம், சூழ்வின்செல்வம்; மனுநூலால்.
3. வாழிச்செல்வம், வாழ்வுச் செல்வம்; முன்னென்றனள், முன்னின் றனள், முன்னின்றருள்.
4. துய்த்த வயிற்ருேர்; கிரிதந்தாள். (69)

அறுபதினுயிர மனைவியர் புகுதல்
(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

602. ஆழி வேந்தன் பெருந்தேவி
யன்ன பன்னி யழுதரற்றத்
தோழி யன்ன சுமித்திரையுந்
துளங்கி யேங்கி யுயிர்சோர
ஊழி திரிவ தெனக்கோயி
லுலையும் வேலை மற்ருெழிந்த
மாழை யொண்கட் டேவியரு
மயிலின் குழாத்தின் வந்திரைத்தார்.

ஆழி வேந்தன் பெரு தேவி - சக்கரவர்த்தியின் முதல் தேவியான கோசலை, அன்ன பன்னி அழுது அரற்ற - முற்கூறிய அவற்றைச் சொல்லி அழுது புலம்ப, தோழி அன்ன சுமித்திரையும் - (அவளுக்கு) உயிர்த்தோழி போன்றவளான சுமித்திரையும், துளங்கி ஏங்கி உயிர் சோர - நடுங்கி ஏக்கமுற்று உயிர் பிரிவாள் போல் ஆக, கோயில் -

அரண்மனையிலுள்ளார் யாவரும், ஊழி திரிவது என - ஊழி புடைபெய ருங்காலம் போல, உலையும் வேலை - நிலை குலையும்போது, மற்று ஒழிந்த -வேறு எஞ்சிய, மாழை ஒண்கண் தேவியரும் - மாவடுவின் பிளவு போலும் ஒளி பொருந்திய கண்களையுடைய தேவிமார் அறுபதி னுயிரவரும், மயிலின் குழாத்தின் வந்து - மயிற் கூட்டங்கள் போல (அங்கு) வந்து, இரைத்தார் - அழுகையாரவாரம் செய்தனர்.

பட்டத்துத் தேவியர் மூவருள்ளும் முதன்மையாய், இராமபிரானைத் தந்தவளுமாதலால் கோசலை பெருந்தேவி எனப்பட்டாள். அவள் கருத்தோடு என்றும் மாறுபாடில்லாத உறுதுணையான சுமித் திரையைத் தோழியன்ன என்றார்.

(பி - ம்.) 1. அணைய பன்னி.
3. ஊழி தெரிவதெனக், ஊழி பேர்வதெனக், ஊழி பெயர்ந்ததெனக்.
4. மாழையுண்கண்; வந்திரைத்தார். (70)

அறுபதினுயிரவரின் மனநிலை

603. துஞ்சி னானைத் தம்முயிரின்
றுணையைக் கண்டார் துணுக்கத்தால்
நஞ்சு நுகர்ந்தா ரெனவுடல
நடுங்கு கின்றா ரென்றாலும்
அஞ்சி யழுங்கி விழுந்திலரா
லன்பிற் றறுகண் பிறிதுண்டோ
வஞ்ச மில்லா மனத்தானை
வானிற் றொடர்வான் மனம்வலித்தார்.

(திரண்டு வந்து இரைத்த தேவியர்) துஞ்சினானை - இறந்தவனான, தம் உயிரின் துணையை - தம் உயிர்த்துணை நாயகனை, கண்டார் - கண்டவர்களாய், துணுக்கத்தால் - (அப்போது உண்டான) பதைப் பால், நஞ்சு நுகர்ந்தார் என - விடம் உண்டவரைப் போல, உடலம் நடுங்குகின்றார் என்றாலும் - உடம்பு நடுக்கமுற்றாராலும், அஞ்சி அழுங்கி விழுந்திலர் - மேலும் அச்சங்கொண்டு கலங்கி விழுந்தார் இல்லை; வஞ்சம் இல்லா மனத்தானை - வஞ்சனை இல்லாத (தூய) மன முடைய மன்னனை, வானில் தொடர்வான் - விண்ணுலகிலும் தொடர்ந்து செல்ல, மனம் வயத்தார் - நெஞ்சுறுதி கொண்டனர்; அன்பின் - உண்மை அன்பினும் பார்க்க, தறுகண் பிறிது உண்டோ- அஞ்சாமையைத் தருவது வேறு உண்டோ? (இல்லை).

வந்த தேவியர், மன்னன் உடலைக் கண்ட மாத்திரத்தில் சிறிது பதைப்பும் அதனால் உடல் நடுக்கமும் கொண்டனராயினும், மறு கணத்தில் அவை மாற, மன்னனைத் தொடர்ந்து தாமும் செல்வதென

மனவுறுதி கொண்டு கலக்கமின்றி நின்றனர். மெய்யன்பே அவர்களை அவ்வாறு செய்வித்தது. அவ்வன்பின் வலிமையை 'அன்பின் தறுகண் பிறிதுண்டோ' என்றதனுற் குறித்தார். மனநெகிழ்ச்சி தரும் அன்பே சிலவிடத்து மனவுறுதியையும் தருகின்றது. தறுகண் - கொடுமை என்றலுமாம்.

(பி - ம்) 1. துனுக்கத்தார், துனுக்குற்றுர்.
2. கஞ்சம், கஞ்சும்; கவர்ந்தாலெனவுடலும், உடலம், கரந்தாலென வுடலம், நுகர்ந்தாலென வுடலம், நுகர்ந்தாரென்றுடலம், நின்றுரெனவுடலம்.
3. அழுங்க விழுந்திலரால், அழுங்கி விழுந்திலார், அழுங்கி மாழ்கிலரால், அழுது விழுந்திலார், அஞ்சி விழுந்திலரால்; பிறிதுண்டே.
4. தொடர்வார் மனம் வலித்தார், தொடர்வாமெனு மனத்தார். (71)

604 அளங்கொ ளளக்க ரிரும்பரப்பி
லண்ட ருலகி லப்புறத்தில்
விளங்கு மானக் கற்பினு
ரிவரின் யாவ ரெனநின்ருர்
களங்க நீத்த முகத்தினுர்
கான வெள்ளங் கால்கோப்பத்
துளங்க லில்லாத் தனிக்குன்றிற்
ருெக்க மயிலிற் சூழ்ந்திருந்தார்.

அளம் கொள் - உப்பளங்களைக் கொண்ட, அளக்கர் இரு பரப்பில் - கடல் சூழ்ந்த பெரும் பரப்பாகிய இவ்வுலகத்திலும், அண்டர் உலகில் - தேவருலகத்திலும், அப்புறத்தில் - அதற்கும் அப்பாலுள்ள ஏனை உலகங்களிலும், மானம் விளங்கு கற்பினுர் - பெருமை விளங்குதற்கு ஏதுவான சிறந்த கற்பையுடையார், இவரின் யாவர் என - இவரினும் மேலாக யாவருளர் என்னும்படி, நின்றுர் - நின்றவர்களான, களங்கம் நீத்த முகத்தினுர் - (துயரக் குறியாகிய) களங்கத்தை விட்ட (தெளிந்த) முகத்தை உடைய அத்தேவியர், கானம் வெள்ளம் கால் கோப்ப - காட்டு வெள்ளம் சுற்றிலும் வளைத்துக்கொள்ள (அதன் நடுவில்), துளங்கல் இல்லா - அசைதல் இல்லாத, தனி குன்றில் தொக்க - ஒரு தனி மலையிலே வந்து கூடிய, மயிலின் - மயில் கூட்டம் போல, சூழ்ந்திருந்தார் - (மன்னன் உடலைச்) சூழ நின்று இருந்தனர்.

அசைவற்றுக் கிடந்த மன்னன் உடல், மலை; மாதரார், மயில்: துயரமாகிய காட்டு வெள்ளம் சூழ்ந்ததனுல், அம்மயில்கள் தமக்குப் புகலிடமாக மலையை அடைந்தன. மன்னனைத் தொடரும் மனவுறுதியால் கலக்கம் நீங்கவே, முகம் தெளிந்து விளங்கப் பெற்றனர். நின்றுர், முகத்தினுர் : வினையாலணையும் பெயர்.

(பி - ம்.) 1. அகலவிடப் பரப்பில், அிலவிடப் பரப்பில்; உலகினப்புறத்தில், உலகிற்கப்புறத்தில்.
2. விளங்குமாதர் கற்பினல், வளங்கொள் கற்பின் மரபுடையோர், இளங்கண்மாதர்கற்பிஞர், இளங்கண்மைந்தர்க்கன்பிஞர், இளங்கொள் மானக்கற்பிஞர்; இவரில்யாவரென்கின்றார், இவரில்யாரேயென்கின்றார், இவர்போல் யாவரெனத்தக்கார், இவரின்யாரேயெனநின்றார், இவரினினியாரென்கின்றார். யாரென நின்றார், இல்லில்யாரென்கின்றார், வினவில்யாவரென்கின்றார், இவரின் யாரேயென்கின்ற, இவரின் வேறாரென்கின்றார், இவரின்மேல் யாரென்கின்றார்.
3. நீத்தமதி முகத்தார், நீத்தகற்பிஞர், மனத்திஞர்; காலவெள்ளம், காதல்வெள்ளம், கண்ணீர்வெள்ளம், கால் தோய்ப்பத்.
4. தனிக்குன்றால், தனிவரையில், தணிவரையில்; தோகைக்குமாத்தில்; சூழ்ந்திருப்பார், தொக்கிருந்தார். (72)

605. கைத்த சொல்லா லுயிரிழந்தும்
புதல்வற் பிரிந்தும் கடையோட
மெய்த்த வேந்தன் திருவுடம்பை
பிரியார் பற்றி விட்டிலரால்
பித்த மயக்காஞ் சுறவெறியும்
பிறவிப் பெரிய கடல்கடக்க
உய்த்து மீண்ட நாவாயிற்
றாமும் போவார் ஒக்கின்றார்.

கைத்த சொல்லால் - (கைகேயியின்) கசப்பான வார்த்தையால், புதல்வன் பிரிந்தும் - அரும்புதல்வனைப் பிரிந்தும், உயிர் இழந்தும் - உயிரையே இழந்தும், கடை ஓட மெய்த்த - இறுதிவரை சத்திய சந்தனயிருந்த, வேந்தன் - தசரதனுடைய, திரு உடம்பை பிரியார் - திவ்விய சரீரத்தை விட்டு நீங்காமல், பற்றி - அதனைப் பற்றிக்கொண்டு, விட்டிலர் - விடாதிருந்தார்; (அத்தேவியர்) பித்தம் மயக்கு ஆம் சுறவு எறியும் - (பொய்ப் பொருள்களில்) பித்துக் கொள்வதற்குக் காரணமான மாயையாகிற சுறாமீன்கள் தாக்குதற்கிடமான, பிறவி பெரிய கடல் - பிறப்பென்னும் பெரிய கடலை, கடக்க உய்த்து - கடந்து அப்பால் மீண்டும் பிறவாத இடத்தில் சேர்த்து, மீண்ட - திரும்பிவந்த, நாவாயில் - அரியதொரு கப்பலில், தாமும் போவார் ஒக்கின்றார் - தாமும் (அக்கடலைக் கடக்கும்படி) போக ஒருப்பட்டிருப்பார் போன்றனர். ஆல் : அசை.

பிறவிக் கடலைக் கடந்து முத்திக்கரை சேர்ந்து மீண்டு வந்து பிறவாத நெறி எய்த விரும்புவோர், இறைவனடியைப் புணையாகப் பற்றுவார். தசரதனுடைய ஒழுகலாற்றால் அவனுயிர் மீண்டும் பிறவாத பெருநெறி சேர்ந்ததாகும்; அவ்வுயிர் தங்கியிருந்த உடம்பு,

உயிரைக் குறித்த இடத்தில் உய்த்து மீண்ட நாவாயாகின்றது; அதனைப்பற்றி இம்மகளிர் பிறவிக் கடல் கடந்து பெருநெறி சேர விழை வார்போல் ஆயினர். மகளிர்க்குத் தம் கணவனே கண்கண்ட தெய்வ மாதலால் அவனடியைப் புணையாகப் பற்றலாயினர் என்றது, அவர்கள் உயிர் நீத்து மன்னனைத் தொடர உறுதி பூண்டமையைக் குறிக்கும். பிறவியைக் கடல் என்றதற்கேற்பச் சுறவையும் கூறினார். பிரிதற்கரிய புதல்வனைப் பிரிந்தும், பின்னர் உயிரையே இழக்கும் நிலை எய்தியும், இறுதிவரை வாய்மையில் ஊன்றி நின்றவன் எனத் தசரதனது உயர்வு குறித்தார். இதனோடு, மனு நெறி வழாமை, வேள்விகள் பல செய்தமை முதலிய அருஞ்செயல் களுக்கெல்லாம் இடமான அவன் உடம்பு திருவுடம்பு ஆயிற்று. மன்னன் தன் உயர்ந்த பண்புகளாலேயே பல தீங்குகளுக்கேதுவான கைகேயியின் கசப்பான சொல்லைப் பொறுத்தான். "வாய்கயப்புற மந்தரை வழங்கிய வெஞ்சொல்" (160) எனக் கூனியின் சொல்லைக் குறித்ததுபோல் இவள் உரையும் சொல்வார்க்கும் கேட்பார்க்கும் கசப்புத் தருவது. தேவியர் என்ற எழுவாய் வருவித்து, 'தேவியர் ஒக்கின்றார்' என முடிக்க.

(பி - ம்.) 1. உயிரிழந்து; பிரிந்து.
2. மெத்தவேந்தன், மொய்த்தவேந்தன்; திருமார்பைப்; பிரியார்பற்றி, பிரியாப்பற்றி, பிரியாதரற்றி, பிரியாதழுது; விட்டிலார், இருந்தன ரால்.
3. பித்தர்மயக்காம், பித்தமயக்கச், மயக்குச், மயக்கிற், மருங்கிற்; சுற வெறியில்; கடப்ப.
4. நீண்ட; நாவாயின்தாமே; போவானொக்கின்றார். (73)

வசிட்டன் வருந்துதல்

606. மாத ரார்க ளறுபதினா
யிரர்தம் முள்ளம் வலித்திருப்பக்
கோதில் குணத்துக் கோசலையு
மிளைய மாதுங் குழைந்தேங்கச்
சோதி மணித்தேர்ச் சுமந்திரன்சென்
றரசன் றன்மை சொலவந்த
வேத முனிவன் விதிசெய்த
வினையை நோக்கி விம்முவான்.

மாதரார்கள் அறுபதினாயிரர்-உரிமைத் தேவியரான அறுபதினாயிர வரும், தம் உள்ளம் வலித்து இருப்ப - (முற்கூறியவாறு) தம் மனத்துள் உறுதி பூண்டிருக்க, கோது இல் குணத்து - குற்றமில்லாத அருங்குணங் களையுடைய, கோசலையும் - கௌசல்யா தேவியும், இளைய மாதும் - இளையவளான சுமித்திரையும், குழைந்து ஏங்க - வாடி ஏங்க, (இந்நிலை

யில்), சோதி மணி தேர் சுமந்திரன் சென்று - ஒளிமிக்க மணிகளால் இயன்ற தேர் வல்லவனான சுமந்திரன் போய், அரசன் தன்மை சொல- சக்கரவர்த்தியின் நிலையை(உயிர் பிரிந்தமையை)ச் சொல்ல, (அது கேட்டு), வந்த -(மன்னன் உடல் கிடந்த இடத்திற்கு) வந்த, வேதம் முனிவன் - வேதம் வல்ல வசிட்ட முனிவன், விதி செய்த வினையை நோக்கி - விதியால் விளைந்த இக் கொடுமையைக் கருதி, விம்முவான் - பெருந்துயருற்றான்.

மூடிவெலாம் உணர்ந்து, கலங்காத உள்ளம் கொண்ட முனிவனையும் கலங்கச் செய்தது மன்னன் நிலை.

(பி - ம்.) 1. அறுபதினாயிரரும்; வலித்திருப்பக்.
2. குலத்துக் கோசலையும்; இளையமானும், மயிலும்.
3. சுமந்திரன்றன்.
4. வினைசெய்த வினையை; ஆதி மறைமா முனிவிதியை வெல்லலாகாதென வந்தான். (74)

607. வந்த முனிவன் வரங்கொடுத்து
மகனை நீத்த வன்கண்மை
எந்தை தீர்ந்தா னெனவுள்ளத்
தெண்ணி யெண்ணி யிரங்குவான்
உந்து கடலிற் பெருங்கலமொன்
றுடையா நிற்பத் தனிநாய்கன்
நைந்து நீங்கச் செயலோரா
மீகா மனைப்போ னலிவுற்றான்.

வந்த முனிவன் - (அங்கு) வந்து சேர்ந்த வசிட்ட முனிவன், எந்தை - எம்மரசன், வரம் கொடுத்து - கைகேயி கேட்ட வரத்தைக் கொடுத்து, மகனை நீத்த வன்கண்மை - தலைமகனைப் பிரிந்த கொடுமையினின்றும், தீர்ந்தான் என - விடுபட்டானென்று, உள்ளத்து எண்ணி எண்ணி - தன் மனத்துள் நினைத்து நினைத்து, இரங்குவான் - வருந்துகின்றவன், உந்து கடலில் - அலை மோதும் கடலில் (செல்லும்), பெரு கலம் ஒன்று - பெரிய கப்பல் ஒன்று, உடையா நிற்ப - (புயலால்) உடைந்துபட, தனி நாய்கன் - அதற்குரிய ஒப்பற்ற வணிகன், நைந்து நீங்க - மனம் நொந்து (அதனை விட்டு) நீங்க, செயல் ஓரா - மேலே செய்வதறியாது தவிக்கின்ற, மீகாமனை போல் - மாலுமியைப் போல, நலிவு உற்றான் - வாட்டமுற்றான்.

சக்கரவர்த்தி தன் உயிர் நீத்ததன்மூலம், இராமபிரானைக் காட்டுக்கு அனுப்பிய கொடுமையினின்றும் நீங்கினவனானான்; ஆனாலும் அவனை இழக்க நேர்ந்தது பெருந்துயரத்துக்குரியதே என்று முனிவன் வருந்தினான். முன்னே சக்கரவர்த்தி, இராமபிரான் வனம் செல்வது குறித்து வருந்தியபோது, "கேட்டே யிருந்தே னெனினுங் கிளர்

வானின்றே யடைய, மாட்டே ளுகி லன்றே வன்கண் என்கண் மைந்தா'' (359) என்றதும், கோவலனைக் கொல்வித்ததனுல் பாண்டியனது செங்கோல் வளைந்தமையை, அவன் உயிர் நீத்த செயல் நிமிர்த்துச் 'செங்கோலாக்கியது' என்ற சிலப்பதிகாரப் பகுதியும் இங்கு நினைக்கத்தகும். பின் இரண்டடிகளில் அமைந்த உருவகத்துக்கு, தசரதன் அரசியல் கடலாகவும், இராமபிரான் முடிசூட்டு அக் கடலிற் செல்லும் கலமாகவும், கைகேயி வரத்தால் விளைந்தது கலம் கவிழ்த்த புயலாகவும், தசரதன் கலத்துக்குரிய நாய்கனுகவும், வசிட்ட முனிவன் மீகாமனுகவும் கொள்க.

சில பழைய பதிப்புக்களில் இப்பாடல் இல்லை.

(பி - ம்.) 1. வந்தமுனியும், வந்தமுனியவ்; மகனையிழந்த.
2 நீர்த்தானென, நீத்தானென.
3. உடையாமிற்கத், உலையாமிற்கத், உலையாமிற்பத், உலைந்தபோகத்; தன்னுய்கன், தனிகாதன், தமியனுய், தனிகாவாய்.
4. உந்திநீங்கச், நந்திநீங்கச், நைந்துநீங்காச், அந்திநீங்காச்; மீகாமன் போல்; நவையுற்ருன், நைவுற்ருன், நையுற்ருன், உளமயர்ந்தான். (75)

வசிட்டன் தசரதன் உடலைத் தைலத்தில் இடுவித்தமை

608. செய்யக் கடவ செயற்குரிய
சிறுவ ரீண்டை யாரல்லர்
எய்தக் கடவ பொருளெய்தா
திகவா வென்ன வியல்பெண்ணி
மையற் கொடியாண் மகனீண்டு
வந்தால் முடித்து மற்றென்னத்
தையற் கடலிற் கிடந்தானைத்
தயிலக் கடலின் றலையுய்த்தான்.

செய்ய கடவ - செய்ய வேண்டிய இறுதிக் கடன்களை, செயற்கு உரிய சிறுவர் - செய்தற்குரிய புதல்வர், ஈண்டையார் அல்லர் - இங்கே இலர்; எய்த கடவ பொருள் - வரத்தக்கவை, எய்தாது இகவா - வாராதொழியா; என்ன - என்று, இயல்பு எண்ணி - உலக இயற்கையை நினைத்து; மையல் கொடியாள் மகன் - மண்ணாசை பிடித்த கொடிய கைகேயியின் புதல்வன் பரதன், ஈண்டு வந்தால் - இங்கே வந்தால், மற்று முடித்தும் என்ன - மேல் நிகழ வேண்டிய கடன்களைச் செய்து முடிப்போம் என்று சொல்லி, தையல் கடலில் கிடந்தானை - கடல் போலக் குழுமிய மகளிரிடையே கிடந்த மன்னனை, தயிலம் கடலின் தலை உய்த்தான் - கடாரத்தில் நிறைந்த எண்ணெயில் இடுவித்தான்.

முனிவன் என்ற எழுவாய் வருவிக்க.

'வரக்கடவனவற்றை வாராது தவிர்த்தல் எக்காலத்தும் எத்தகையவர்க்கும் இயல்வதன்று; அந் நியதியின்படி சக்கரவர்த்தி இந்நிலை

ஏய்தியுள்ளான்; ஆகலின், இனி, மேலே நிகழவேண்டியவற்றை நோக்குதலே முறையாகும். இறுதிக் கடன்களை இயற்றுதற்குரியார் எவரும் இங்கில்லை; பரதன் வந்தாலன்றி அது நிகழாதாகலின், அவன் வருமளவும் மன்னனுடலை எண்ணெயிலிட்டுக் கெடாது காத்தல் வேண்டும்' என்று சொல்லி, அவ்வாறே செய்வித்தான் முனிவன். மற்று - மேல் என்ற பொருளில் நின்றது. மிகுதிபற்றிக் கடல் என்றார். எய்தக்கடவ......இகவா : "உறற்பால, தீண்டா விடுத லரிது", "சிறுகா பெருகா......ஆமிடத்தே யாகும்" (நாலடி. 109, 110); "ஆம்பொருள்க ளாகுமது யார்க்குமழிக் கொண்ணு" (சீவக. 848).

(பி - ம்.) 1. செய்தற்குரிய, செய்யற்குரிய; செயக்கடவ; சிறுவரவரன்டைய ரல்லர்.
2. எய்தற்குரிய, எய்தப்புரியும்; பொருளெய்தார், பொருளேயா, செயல்கூடாது; இயல்பென்னு, இயல்பென்ன, இகலாரென்னே யியல்பென்னு, இகலாரென்ன வியலென்னு, இகவாரென்னே யியல் பென்னு, இகவாமென்ன வியல்பென்னு, இகவாதென்ன வியல் பென்னு, இவைவாரென்னுமியல் பென்ன, இடராலென்னே யியல் பென்ன, எனவே முனிவனுளத்தெண்ணி.
3. மையிற்கொடியாள்; மகன்மீண்டு.
4. தையற்கடனின் றெடுத்தவனைத்; தையற்கடலுட் கிடந்தவனைத்; கடலினிடை; உய்த்தார். (76)

பரதனுக்கு ஓலை போக்கல்

609. தேவி மாரை யிவற்குரிமை
செய்யு நாளிற் செந்தீயில்
ஆவி போக்கீ ரெனநீக்கி
யரிவை மார்க ளிருவரையும்
தாவில் கோயிற் றலையிருத்தித்
தண்டார்ப் பரதற் கொண்டணைகென்
றேவி னுன்மன் னவனாணை
யெழுது முடங்கல் கொடுத்தவரை.

தேவிமாரை - அறுபதினாயிரவர் தேவியாரை, இவற்கு உரிமை செய்யும் நாளில் - அரசனுக்கு உரிமைக் கடன்கள் செய்யும் நாளில், செம் தீயில் ஆவி போக்கீர் என - நீவிரும் தீயில் பாய்ந்து உயிர் போக்கிக் கொள்வீராக என்று சொல்லி, நீக்கி - அங்கு நின்றும்(அந்தப் புரத்துக்குப்) போகச் செய்து, அரிவைமார்கள் இருவரையும் - கோசலையும் சுமித்திரையுமாகிய இருவரையும், தா இல் கோயில் தலை இருத்தி - குற்றமற்ற (அவரவர்) அரண்மனைகளில் (சென்று) தங்கச் செய்து, தண் தார் பரதன் கொண்டு அணைக என்று - குளிர்ந்த மாலை அணிந்த பரதனை (விரைவில்) அழைத்து வருக என்று, மன்னவன் ஆணை எழுதும் முடங்கல் கொடுத்து - சக்கரவர்த்தியின் கட்டளை

யெழுதிய ஓலையைத் (தூதுவர் கையில்) கொடுத்து, அவரை ஏவினன்; அவர்களைக் (கேகய நாட்டுக்கு) அனுப்பினன்.

எழுவாய் வருவிக்க. அணைகென்று: தொகுத்தல்.

அறுபதினாயிரவர் அப்போதே தீப்பாய்ந்து உயிர்விடத் துணிந்தனராகலின், 'மன்னவன் ஈமச்சடங்கு நிகழும் நாளில் உங்கள் கருத்தை முற்றுவிக்கலாம்; இப்போது வேண்டா' என்று அவர்களுக்குக் கூறி அனுப்பிவிட்டு, பட்டத்துத் தேவியர் இருவரையும் ஆற்றியிருக்கச் செய்தபின், பரதனை அழைத்துவரத் தூதுவரைக் கேகய நாட்டுக்கு அனுப்பினன் முனிவன். ஓலை சக்கரவர்த்தியின் ஆணையாகவே எழுதப் பெற்றது.

தூதுபோதற்குச் சிறந்த ஐவரைத் தேர்ந்தெடுத்துக் கேகய மன்னனுக்கும் பரதனுக்குமாகப் பரிசுப் பொருள்கள் பலவற்றை அவர்களிடம் கொடுத்து, இராமன் வனம் சென்றதும், மன்னன் இறந்ததுமாகிய செய்திகளை அங்கே தெரிவியாமல், பரதனே விரைந்து செய்ய வேண்டியதொரு பணியின்பொருட்டு அவனைத் தான் உடனே அழைத்துவரச் சொன்னதாகக் கூறி அழைத்து வருக என்று சொல்லி, ஓலையும் கொடுத்தனுப்பியதாக வான்மீகம் கூறுகின்றது.

(பி - ம்.) 1. செந்தியின்.
2. ஆவிபோக்கிர்; நீத்திர்; அனைவரையும்.
3. பரதர்க் கொண்டணை கென்று.
4. ஆணையெழுதி முடங்கல், எழுது மடங்கல், என்று மடங்கல்; எடுத்தோரை, எடுத்தாரை, எழுத்தோலை, கொடுத்தோரை. (77)

610. போனா ரவருங் கேகயர்கோன்
பொன்மா நகரம் புகவெய்தின்
ஆனா வறிவி னருந்தவனு
மறமார் பள்ளி யதுசேர்ந்தான்
சேனா பதியிச் சுமந்திரனே
செயற்பாற் குரிய செய்கென்னா
மேனுஞ் சொன்ன மாந்தர்க்கு
விளைந்த பரிசு விளம்புவாம்.

அவரும் - அத்தூதுவரும், கேகயர் கோன் பொன் மா நகரம் புக - கேகய அரசனது அழகிய பெரிய நகரை அடையுமாறு, வெய்தின் போனார் - விரைவாகப் போனார்கள்; ஆனா அறிவின் அரு தவனும் - கெடாத மெய்யுணர்வினையும் அரிய தவத்தையும் உடைய வசிட்ட முனிவனும், சேனாபதி இ சுமந்திரனே - சேனைத் தலைவனான இந்தச் சுமந்திரனே, செயல் பாற்குரிய- (அரசன் இல்லாத காலத்தில்) செய்தற் குரிய அரசியல் பணிகளை, செய்க என்னா - செய்யக்கடவனென்று நியமித்துவிட்டு, அறம் ஆர் பள்ளி அது சேர்ந்தான் - தன் தவவொழுக்

கத்திற்குரிய ஆசிரமத்தை அடைந்தான்; மேல் நாம் சொன்ன மாந்தர்க்கு விளைந்த பரிசு - முன்னே (இராமனைத் தொடர்ந்து சென்று சோலையில் உறங்கினரென) நாம் சொன்ன மக்கள்பால் நிகழ்ந்த செய்திகளை, விளம்புவாம் - (இனிக்) கூறுவோம்.

அயோத்தியில் அரச மாளிகையுள் நிகழ்ந்தவற்றை இதுகாறும் கூறி, முன்னே இராமனைத் தொடர்ந்து சென்று சோலையில் தங்கி உறங்கியவர்களைப்பற்றி இனிக் கூறுவோம் என்று தொடங்குகின்றார் கவி. அடுத்த பாடலில், மறுநாள் கதிரவன் உதயத்தைக் கூறி, மேலே ஏழு பாடல்களில் உறங்கி விழித்த மக்களின் செய்தி கூறுகின்றார்.

வெய்து - விரைவு; ''வெருவந்து வெய்து கெடும்'' (குறள். 569). பள்ளி அது: அது, பகுதிப்பொருள் விகுதி. செய்கென்று : தொகுத்தல். நாம் : கவிகட்குரிய தனித் தன்மைப் பன்மை.

(பி - ம்.) 1. கைகயர்கோன்; மாணகரம் புகவெய்த, புகவெய்தி.
2. ஆனவறிவன்; இருந்தவனும்; பள்ளியறை சேர்ந்தான், அறை சார்ந்தான், அறைச்சார்ந்தான்.
3. சுமந்திரனைச்; செயற்பாற்கரிய, செயப்பாற்குரிய; நீயே யரசு செய்கென்ன, செய்கென்றான், செய்கின்றான்.
4. மேனான் சொன்ன; மாந்தருக்கு, மாந்தர்கட்கு, மைந்தர்க்கு, மான கர்க்கு; விளைந்ததினிகாம்; மேனாளண்ணனுடன் போன மாந்தர் செய்தி விளம்பிடுவாம். (78)

சூரியோதயம்

611. மீனார் வேலை முரசியம்ப
விண்ணோ ரேத்த மண்ணிறைஞ்சத்
தூநீ ரொளிவாள் புடையிலங்கச்
சுடர்த்தே ரேறித் தோன்றினான்
வானே புக்கா னரும்புதல்வன்
மக்க ளகன்றார் வருமளவும்
யானே காப்பெ னிவ்வுலகை
யென்பான் போல விரிகதிரோன்.

விரி கதிரோன் - பரந்த கிரணங்களையுடைய சூரியன், அரு புதல்வன் வான் புக்கான் - நம் அரும் புதல்வனான தசரதன் சுவர்க்கம் எய்தினான்; மக்கள் அகன்றார் - (ஆளுதற்குரிய) புதல்வரும் (நகரை விட்டு) நீங்கினர்; வரும் அளவும் - அவர்கள் திரும்பிவரும் வரையில் இ உலகை யானே காப்பென் என்பான் போல் - இவ்வுலகத்தை நானே ஆளுவேன் என்று கருதியவன்போல, மீன் ஆர் வேலை முரசு இயம்ப - மீன்கள் நிறைந்த கடலாகிய முரசு ஒலிக்கவும், விண்ணோர் ஏத்த - தேவர்கள் துதிக்கவும், மண் இறைஞ்ச - மண்ணுலகத்தவர் வணங்கவும், சுடர் தேர் ஏறி - ஒளிமிக்க தன் ஒற்றை யாழித் தேர்

மீதேறி, தூநீர் ஒளி வாள்-தூய தன்மையையுடைய கிரணங்களாகிற வாள், புடை இலங்க - பக்கத்தே விளங்க, தோன்றினன்-உதித்தான்.

தசரதன் சூரிய குலத்தவனாகலின், அரும்புதல்வன் என்றார். சூரியோதய காலத்தில் இயல்பாக நிகழுமவற்றை, அரசு கொள்ள வரும் ஓரரசனுக்குரிய விருதுகளாக்கினார்.

(பி - ம்.) 1. மீனீர், மாகீர்; வசனேரேத்த மண்ணிறைஞ்சித்.
2. தூய்நீர்; ஒளிவான் புடையிலங்கச், புடைவாளொளியிலங்கச், புடைவாள்வெயிலிலங்கச்; தோன்றினனால்.
3. மக்கள் பிரிந்தார்.
4. இவ்வுலகம்; எறிகதிரோன், எரிகதிரோன். (79)

612. வருந்தா வண்ணம் வருந்தினார்
மறந்தார் தம்மை வள்ளலுமாங்
கிருந்தா னென்றே யிருந்தார்க
ளெல்லா மெழுந்தா ரருளிருக்கும்
பெருந்தா மரைக்கட் கருமுகிலைப்
பெயர்ந்தார் காணார் பேதுற்றார்
பொருந்தா நயனம் பொருந்திநமைப்
பொன்றச் சூழ்ந்த வெனப்புரண்டார்.

வருந்தாவண்ணம் வருந்தினார் - (உள்ளத்தாலும் உடலாலும் முன் ஒருபோதும்) வருந்தாத வகையில் வருந்தினவர்களும், தம்மை மறந்தார்-(அயர்ச்சி மிகுதியால்) தம்மையும் மறந்து உறங்கியவர்களும், வள்ளலும் ஆங்கு இருந்தான் என்றே இருந்தார்கள் - இராமபிரானும் அங்கே தங்கியுள்ளான் என்றே கருதியிருந்தவர்களுமான, எல்லாம் - எல்லோரும், எழுந்தார் - கண் விழித்தவர்களாய், பெயர்ந்தார் - பெயர்ந்து (இராமபிரான் இருந்த இடம்) சென்று, அருள் இருக்கும் - கருணை குடிகொண்ட, பெரு தாமரை கண் - பெரிய தாமரை மலர் போன்ற கண்களையுடைய, கருமுகிலை - நீல மேக வண்ணனை இராமபிரானை, காணார் - காணாதவர்களாய், பேதுற்றார் - கலக்க முற்று, பொருந்தா நயனம் பொருந்தி - (நம்முடைய) இமை சேராத கண்கள் சேர்ந்து (நமக்கு உறக்கத்தை உண்டாக்கி), நம்மை பொன்ற சூழ்ந்த என - நம்மை இறக்கும்படி சதி செய்துவிட்டன என்று சொல்லி, புரண்டார் - (தரையில் விழுந்து) புரண்டார்கள்.

வருந்தினார், மறந்தார், இருந்தார்கள் : வினையாலணையும் பெயர். எழுந்தார், பெயர்ந்தார், காணார், பேதுற்றார் : முற்றெச்சம். இது முதல் ஏழு கவிகளால் மாந்தர் செய்தி கூறுகின்றார்.

(பி - ம்.) 1. விருந்தினரை; வள்ளலுமங்கு.
2. இருந்தாரென்றே, இருந்தாரெனவே, இருந்தார்களல்லாரிருந்தார்; அருளுயிர்க்கும், இருளிருக்கும், உள்ளிருக்கும்.

3. பெயர்ந்தார்காணுப், காணார்பெயர்ந்தார்; திருமகளும் பெயர்ந்தாள் காணார், திருமுகனும் பெயர்ந்தான்காணுன்; வெய்துற்ரர், வெய் துயிர்த்தார்.
4. சூழ்ந்ததெனப், செய்ததெனப்; புகன்ருர்.
1 - 3. வருந்தாவருத்தமுறுந்துயர மாந்த ரெமது வள்ளலுமீங் கிருந்தா னென்றே துயின்றுகதி ரெழுந்த போதி லெழுந்தவரும் பெருந் தாமரைக்கட் கருமுகிலைப் பேணக்காணூர் பெருந்துயரால். (80)

613. எட்டுத் திசையு மோடுவா
ரெழுவார் விழுவா ரிடர்க்கடலுள்
விட்டுப் பிரிந்தா னமையென்பார்
வெய்ய வினையின் பயனென்பார்
ஒட்டிப் படர்ந்த தண்டகமிவ்
வுலகத் துளதன் ரேவுணர்வைச்
சுட்டிச் சேரா தாற்றுதுமோ
தொடர்துந் தேரின் சுவடென்பார்.

எட்டுத் திசையும் ஓடுவார் எழுவார் - (இராமபிரானைத் தேடி) எட்டுத் திசைகளிலும் ஓடுபவர்களாய் எழுவாரும், விழுவார் - (சிலர் கால் தடுமாறி) விழுவாரும், நமை இடர் கடலுள் விட்டு பிரிந்தான் என்பார் - நம்மை இவ்வாறு துன்பக் கடலில் (மூழ்கும்படி) விட்டுச் சென்றுவிட்டான் என்பாரும், வெய்ய வினையின் பயன் என்பார்-(இது நம் தீவினையின் பயனாகும் என்பாரும், ஒட்டி படர்ந்த தண்டகம் - (இராமபிரான் இவ்வாறு நம்மைத் தவிக்கவிட்டுத்) துணிந்து சென்றுள்ள தண்டக வனம், இ உலகத்து உளதன்றே - இவ்வுலகத் தில் உள்ளதுதானே, உணர்வை சுட்டி - அறிவைப் பயன்படுத்தி, சேராது (அவன் இருக்குமிடம் சென்று) சேராமல், ஆற்றுதுமோ - (துயரைத்) தாங்கியிருக்க வல்லோமோ? (அல்லேம், ஆதலால்), தேரின் சுவடு தொடர்ந்தும் - (இராமன் ஏறிச்சென்ற) தேரின் சுவட்டைப் பின்பற்றுவோம், என்பார்-என்பவரும் ஆயினர்.

விழித்தெழுந்த மக்கள் இராமபிரான் இருந்த இடம் சென்று பார்த்து அங்கே அவனைக் காணுமையால் துயருற்றுப் பலவாறு சொல்லிக்கொண்டு, 'நம்மை இவ்வாறு பரிதவிக்கவிட்டு அவன் துணிந்து சென்றுள்ள தண்டகாரணியம் இவ்வுலகத்தில் உள்ளது தானே? அங்கே செல்லுதல் நம்மால் ஆகாததா? எப்படியும் அவனைப் பிரிந்திருத்தல் நம்மால் இயலாது. ஆகவே, தேர்சென்ற சுவட்டைப் பின்பற்றிச் சென்று அவன் இருக்கும் இடத்தை அடைந்தே தீர்வோம்' என்று எழுந்தனர்.

ஓடுவார் எழுவார் - ஓடுபவராய் எழுவார், ஒட்டுதல் - துணிதல், ஓகார வினு எதிர்மறைப் பொருளது.

(பி - ம்.) 2. விட்டுமீத்தான்; வெய்யன் ஐயன்ரு வினைவென்பார்.
3. ஓட்டிப்பரந்த; கானகம்.
4. சேர்தலாற்றுதுமோ, சோர்தல் பழுதன்றே. (81)

614. தேரின் சுவடு நோக்குவார்
திருமா நகரின் மிசைத்திரிய
ஊருந் திகிரிக் குறியொற்றி
யுவந்தா ரெல்லா முயிர்வந்தார்
ஆரு மஞ்ச லையன்போ
யயோத்தி வந்தா னெனவசனிக்
காருங் கடலு மொருவழிக்கொண்
டார்த்த வென்னக் கடிதார்த்தார்.

தேரின் சுவடு நோக்குவார் - தேர் சென்ற தடத்தை நாடிச் சென்றவர்கள், திருமா நகரின்மிசை - செல்வமிக்க பெரிய அயோத்தி நகரத்தை நோக்கி, திரிய ஊரும் குறி திகிரி ஒற்றி - திருப்பிச் செலுத்தப் பெற்ற தேர்ச் சக்கரங்களின் அடையாளத்தை உய்த்துணர்ந்து, உவந்தார் - மகிழ்ந்தவர்களாய், எல்லாம் - எல்லாரும், உயிர்வந்தார் - உயிர்(மீண்டும்) வரப்பெற்று, ஆரும் அஞ்சல்-எவரும் அஞ்சாதீர்கள், ஐயன் அயோத்தி வந்தான்-நம் தலைவன்(இராமன்)அயோத்தி போய்ச் சேர்ந்தான், என - என்று, அசனி காரும் - இடியை உடைய மேகமும், கடலும்—, ஒருவழி கொண்டு ஆர்த்த என்ன-ஓரிடத்திற் கூடி ஆரவாரித்தாற் போல, கடிது ஆர்த்தார் - மிகவும் ஆரவாரம் செய்தார்கள்.

தேர்த் தடத்தை ஆராய்ந்து சென்றவர்கள் அஃது அயோத்தி நோக்கிச் சென்றிருப்பதை உணர்ந்து, இராமபிரான் திரும்பி நகரம் போய்ச் சேர்ந்திருப்பான் என்று கருதி மகிழ்ச்சியால் ஆரவாரித்தார்கள். நகரின்மிசை - நகருக்கு : உருபுமயக்கம். உவந்தார், உயிர் வந்தார்: முற்றெச்சம். அஞ்சல்:எதிர்மறை வியங்கோள். மகிழ்ச்சியால் உண்டான ஆரவாரத்துக்கு அசனிக்காரும் கடலும் உவமை.

(பி - ம்.) 1. மிசைச்செல்ல, தரமறிய, திறமறிய.
2. குறிகண்டார்; உற்றுருவந்தார், தோற்றவுவந்தார்; உயிருவந்தார்.
3. என்றசனி.
4. ஒருவழிச்சென்று; ஆர்த்ததென்ன; கலித்தார்த்தார். (82)

615. மான வரவின் வாய்த்தீய
வளைவான் றெளைவா ளெயிற்றின்வழி
ஆன கடுவுக் கருமருந்தா
மருந்து மமுதம் பெற்றுய்ந்து
போன வுயிர்வந் துடல்புகுதப்
பொறுத்தா ரொத்தார் பொருவரிய
வேனின் மதனை மதனழித்தான்
மீண்டா னென்ன வாண்டையார்.

ஆண்டையார் - அவ்விடத்தே (அச்சோலையில்) இருந்த எல்லோரும், பொரு அரிய - (அழகில்) ஒப்பு வேறு இல்லாத, வேனில் மதனை- இளவேனிலுக்குரியவனான மன்மதனையும், மதன் அழித்தான் - (தன் அழகினால்) செருக்கழித்தவனான இராமபிரான், மீண்டான் என்ன - நகருக்குத் திரும்பிவிட்டானென்று கருதி, மானம் அரவின் வாய் - பெரிய பாம்பின் வாயில் உள்ள, தீய வளை வான் தொளை வாள் எயிற்றின் வழி - கொடிய வளைந்த பெரிய தொளை கொண்ட கூரிய பல்லின் வழியே, ஆன - தம் உடம்பினுட் சென்ற, கடுவுக்கு - விடத்தைப் போக்குதற்கு, அருமருந்து ஆம் - அரிய மருந்தாகிய, அருந்தும் அமுதம் பெற்று - விரும்பி உண்ணத்தக்க தேவாமிருதத்தைப் பெற்று, உய்ந்து - (விடத்தின் கொடுமையினின்றும்) தப்பி, போன உயிர் வந்து உடல் புகுத - போன உயிர் மீண்டு வந்து தம் உடம்பினுட் புக, பொறுத்தார் ஒத்தார் - அவ்வுயிரைத் தாங்கிப் புது மகிழ்ச்சி பெற்றவரை ஒத்திருந்தனர்.

இராமபிரான் பிரிவு, கொடிய பாம்பின் விடம்போல அம்மக்களைத் துன்புறுத்தலால், விடம் தலைக்கேறினவர்போல உயிர் பிரியும் நிலையுற்ற அவர்களுக்கு, இராமன் நகருக்கு மீண்டான் என்ற செய்தி, அந்த விடம் தீர்த்து நீடு உயிர் வாழச் செய்யவல்ல தேவாமிருதம்போல வந்து உதவி, அவர்களை உய்வித்து மகிழச் செய்தது. பாம்பின் மேலண்ணத்தில் அமைந்த பையில் உள்ள விடநீர், அஃதொருவரைத் தீண்டும்போது, அப் பையினின்றும் வெளிப்பட்டுத் தொளையுள்ள பற்களின்வழியே வந்து கடியுற்றவர் உடம்பினுள் இரத்தத்தோடு கலந்து பாயும் என்பர். மானம் - பெருமை. கடுவுக்கு மருந்து - கடுவைத் தீர்த்தற்குரிய மருந்து; பிணிக்கு மருந்து என்பது போல. மதன்- முதலது மன்மதன்; பின்னது செருக்கு. வேனில், மன்மதனுக்கு அடைமொழி. 'மதனையும்' எனற்பால உயர்வு சிறப்பும்மை தொக்கது.

(பி - ம்.) 1. வாய்திய, வாய்த்தியின்; வளைவான் துளைவாய், வளைவான் வணைவாள்; எயிற்றினவாம், எயிற்றின்வரவு.

2. அருமருந்தாவருந்தும், மருந்தாயருந்தும், அருநஞ்சமருந்துமமுது, அருநஞ்சாமமிர்தமருந்து, அருநஞ்சாமருந்து மமுதும்; பெற்றுயர்ந்து, மு. ஆனகருவினழிந்தோர்கட்கமுதமது பெற்றிருந்திடவே; ஆன கருவுக்கருநஞ்சாமமிர்த மருந்து பெறலஞ்சி.

3. போனபொழுதிற் புகுந்தவுயிர், புகுந்ததுயிர், புகுந்ததயர்; போர்த்தாரொத்தார்.

4. வேனல்மதனன்மிதழித்தான், மதனன் மதனழித்தான், மதனையெழிலழித்தான், மதனின் மதமிக்கான், மதனின் மதனழித்தான், மதனன் றனின்மிக்கான், மதனின்மிகமிக்கான்; மீண்டானென்னு; ஆண்டையோர்; ஆண்டகையார். (83)

யாவரும் அயோத்தி சேறல்

616. ஆறு செல்லச் செல்லத்தே
ராழி கண்டா ரயலப்பால்
வேறு சென்ற நெறிகாணார்
விம்மு கின்ற வுவகையராய்
மாறி யுலகம் வகுக்குநாள்
வரம்பு கடந்து மண்முழுதும்
ஏறி யொடுங்கு மெறிகடல்போ
லெயின்மா நகர மெய்தினர்.

ஆறு செல்ல செல்ல - வழி நடந்து போகப் போக, தேர் ஆழி கண்டார் - தேருருளையின் தடத்தைக் கண்ட அவர்கள், அப்பால் - மேலே, அயல் வேறு சென்ற நெறி காணார் - பக்கலில் மாறிச் சென்ற வழிச்சுவட்டைக் காணாதவராய், விம்முகின்ற உவகையராய் - நிறைந்த மகிழ்ச்சி உடையவரராய், உலகம் மாறி வகுக்கும் நாள் - உலகத்தை அழித்து மீண்டும் படைத்தற்குரிய ஊழிக்காலத்தில், வரம்பு கடந்து - தன் அளவு கடந்து பொங்கி, மண் முழுதும் ஏறி - உலகம் முழுதும் மேலிட்டு, ஒடுங்கும் - (மீண்டும் தன் நிலையில்) அடங்குகின்ற, எறிகடல் போல் - அலையெறியும் கடலைப்போல (ஆரவாரம் அடங்கி), எயில் மாநகரம் எய்தினர் - மதில் சூழ்ந்த பெரிய அயோத்தி நகரத்தை அடைந்தார்கள்.

சுமந்திரனுடைய திறமையால், தேர் தெற்கே போனது தெரியாமல் அயோத்தியை நோக்கியே சென்ற சுவடுமட்டும் தெரிய, அதனைத் தொடர்ந்து மக்கள் சென்றார்கள். அவர்கள் முதலில் மகிழ்ச்சி பொங்க ஆரவாரித்து எழுந்த நிலைக்கு ஊழிக்காலத்தில் வரம்பு கடந்து பொங்கி உலகை மூடும் கடலையும், ஆரவாரம் அடங்கின நிலைக்குப் பொங்கி ஏறிய கடல் மீண்டும் அடங்கும் நிலையையும் உவமித்தார்.

(பி - ம்.) 1. அயலிப்பால், கண்டாராயப்பால், கண்டாரயற்பால.
2. வேறுசெல்லும்; உவகையார், ஒருவகையால்.
3. வகுத்தநாள்; வரம்புகண்டு.
4. அலைகடல், மறிகடல்; எழின்மாநகரம், எழின்மாணகரம், மு. ஏறிப் பெருகு மெறிகடல்போல் இரைத்து நகர்வந்தெய்தினர். (84)

உண்மை உணர்ந்து யாவரும் பதைத்தல்

617. புக்கா ரரசன் பொன்னுலகிற்
போனா னென்னும் பொருள்கேட்டார்
உக்கார் நெஞ்ச முயிருகுத்தா
ருற்ற தெம்மா லுரைப்பரிதால்

தக்கான் போனான் வனமென்னுந்
 தகையு முணர்ந்தார் மிகையாவி
அக்கா லத்தே யகலுமோ
 வவதி யென்றொன் றுளதானால்.

(நகரை அணுகின மக்கள்) புக்கார் - நகருட் புகுந்தவர், அரசன் பொன் உலகில் போனான் என்னும் பொருள் கேட்டார் - சக்கரவர்த்தி பொன்னாடு அடைந்தான் என்ற செய்தி கேட்டனர்; தக்கான்-எல்லாத் தகுதியுமுடைய இராமன், வனம் போனான் என்னும் தகையும் உணர்ந்தார் - காட்டுக்குப் போய்விட்டான் என்ற செய்தியையும் அறிந்தனர்; (அவ்வளவில்) நெஞ்சம் உக்கார் - மனம் உடைந்தவராய், உயிர் உகுத்தார் - உயிர் போகும் நிலையுற்றனர்; உற்றது - அவர்கள் பட்ட தன்மையை, எம்மால் உரைப்பு அரிது - எம்மால் எடுத்துச் சொல்லுதல் இயலாது; மிகை ஆவி - மிகையாகத் தோன்றிய அவர்களுடைய உயிர், அவதி என்ற ஒன்று உளதானால் (ஒவ்வோர் உயிரும் முடிதற்குக்) கால எல்லை என்பதொன்று உள்ளதாகையினால், அ காலத்தே அகலுமோ - (அவர்கள் நினைத்த அப்போதே) அவ்வுயிர் பிரியுமோ?

மகிழ்ச்சியுடன் நகருட் புகுந்த மக்கள், முதலில் மன்னன் இறந்த செய்தியையும், அடுத்து இராமபிரான் வனம் போய்விட்ட செய்தியையும் கேட்டு அளவிறந்த துயரமுற்றுத் தம் உயிரையும் வெறுத்தனர்; ஆயினும் அவரவர் ஆயுள் எல்லை கடந்தாலன்றி நினைத்தபோதே உயிர் போதல் நியதி அன்றாதலால் உயிர் விடவும் மாட்டாமல் பரிதவித்தனர். முன்னே சுமந்திரனும் உயிர் விடத் துணிந்து, "உயிர் துறப் பெளிதன்றே" என்பதனை நினைந்து அமைதியுற்றமை (573) நோக்கத்தகும். அவதி - எல்லை.

(பி - ம்.) 1. பொன்னுலகம்.
2. நெஞ்சுமுயிருக்கார்.
3. என்னுந் தகைமை, என்னுந்தன்மை; மிகவாவி, தம்மாவி.
4. அழியுமோவறுதி; உளவானால். (85)

பதைத்த மாந்தரை வசிட்டன் தேற்றுதல்

618. மன்னற் கல்லர் வனம்புகுந்த
 மைந்தற் கல்லர் வாங்கரிய
இன்னற் சிறையி னிடைப்பட்டா
 ரிருந்தா ரிருந்த வருந்தவனும்
உன்னற் கரிய பழியஞ்சி
 யன்றே வொழிந்த தியானென்று
பன்னற் கரிய பலநெறியும்
 பகர்ந்து பதைப்பை நீக்கினான்.

(துயர மிகுதியால் உயிர் விடவும் துணிந்த நகர மக்கள்) மன்னற்கு அல்லர் - (இறந்த) அரசனுக்கும் (நகரத்தில் இருந்து தேறுதல் கூற) உதவினரல்லராயும், வனம் புகுந்த மைந்தற்கு அல்லர் - காட்டிற் சென்ற இராமனுக்கும் (அவனுடன் போய்) உதவினரல்லரா யும் (இரண்டும் கெட்டு), வாங்க அரிய இன்னல் சிறையின் இடை பட்டார் இருந்தார் - போக்குதற்கரிய (இவ்விருவகைத்) துன்பமாகிற சிறையில் அகப்பட்டிருந்தார்கள்; இருந்த - (அப்போது அவர்களிடை யில்) வந்திருந்த, அரு தவனும்-அரிய தவத்தையுடைய வசிட்ட முனிவ னும், (அவர்களை நோக்கி) உன்னற்கரிய பழி அஞ்சி அன்றே - (தற்கொலை செய்துகொள்வதனால் உளதாகும்) நினைத்தற்கும் அரிய பழிக்கு அஞ்சியன்றோ, யான் ஒழிந்தது என்று - நான் (உயிர் நீத்தலைக்) கைவிட்டது என்று சொல்லி, பன்னற்கு அரிய - (பிறரொருவர்) எடுத்துச் சொல்லுதற்கரிய, பல நெறியும் பகர்ந்து - பல நீதிகளையும் அவர்களுக்கு எடுத்துக் கூறி, பதைப்பை நீக்கினான் - அவர்களுடைய துடிப்பைப் போக்கினான் (அமைதியுறச் செய்தான் என்றபடி).

இராமபிரானைத் தொடர்ந்து சென்றவர்கள், முழுதும் அவனைப் பின்பற்றிச் சென்றிருந்தால், தாங்கள் நினைத்தது முடித்த நிறைவு அவர்களுக்கு இருந்திருக்கும்; அவ்வாறன்றி நகரத்திலேயே இருந் திருந்தால் மன்னனுக்குத் தேறுதல் கூற உதவியிருத்தல் கூடும். இராம பிரானுடன் சென்று, அவன் நகருக்கு மீண்டதாகக் கருதித் தாமும் மீண்டு வந்து ஏமாற்றமடைந்ததனால், மன்னற் கல்லர், மைந்தற்கு மல்லராகி உயிர் விடவும் துணிந்தனர். அந்நிலையில், ஆறிய சிந்தை அறிவனான வசிட்ட முனிவன், 'நானும் துக்கத்தால் உங்களைப் போலவே உயிர் விடக் கருதினேன், ஆயினும், தற்கொலை செய்துகொள்வதனால் பெரும்பாவமும் பழியும் வந்து சேரும் என்பதற்கு அஞ்சியே அதனைக் கைவிட்டேன்' என்று தொடங்கி, 'விதியின் படியே எதுவும் நடக்கும் ஆதலால், இதன் பொருட்டுக் கலங்கி உயிர்விடத் துணிதல் முறையன்று' என்பது போன்ற பல நீதிகளை அவர்களுக்கு எடுத்துக் கூறி, அவர்கள் பதைப்பைப் போக்கினான். அனைவரும் மனங்கொள்ளுமாறு எடுத்துரைக்கும் ஆற்றல் அம் முனிவனையன்றி மற்ற எவர்க்கும் இராதென்பார், 'பன்னற்கரிய பல நெறியும் பகர்ந்து' என்றார். நெறி - நீதி; நியாயம். பதைப்பு - துடிப்பு; பரபரப்பு; மீண்டும் அவர்கள் இராமபிரானைக் கருதி வனஞ் செல்லத் துடித்தமை எனக் கோடலுமாம். வாங்குதல் - நீக்குதல்; "நீர்வாங்கு மின் மனத்துயர்" (யுத்த. மீட்சி. 278) இடை : ஏழனுருபு. பட்டார் : வினையெச்ச முற்று.

(பி - ம்.) 1. மன்னற்கல்லார், மன்னர்க்கல்லர், மன்னர்க்கல்லால்; வனம்போன; மைந்தற்கல்லார், மைந்தர்க்கல்லர், மைந்தற்கல்லால்.
2. இன்னற்கடலின், இன்னலிடரின்; நின்ற அருந்தவனும்.
3. பழிக்கஞ்சி; ஒழிந்ததிவனென்று.
4. பன்னற்குரிய, மன்னற்குரிய; பதைப்பை விலக்கினான். (86)

619. வெள்ளத் திடைவாழ் வடவனலை
யஞ்சி வேலை கடவாத
பள்ளக் கடலின் முனிபணியாற்
பையு ணகரம் பதைப்படங்க
வள்ளற் ருதை பணியதனுல்
வானேர் வரத்தான் மயங்கிருளின்
நள்ளிற் போன வரிசிலைக்கை
நம்பி செய்கை நடத்துவாம்.

வெள்ளத்து இடை வாழ் வட அனலை அஞ்சி-(தனது) மிக்க நீருக்குள் தங்குகின்ற வடவைத் தீக்கு அஞ்சி, வேலை கடவாத - கரை கடந்து செல்லாத, பள்ளம் கடலின் - ஆழமான கடலைப் போல, முனி பணியால் - வசிட்ட முனிவனது கட்டளையால், பையுள் நகரம்-துன்பம் மிக்க நகரமாந்தரெல்லாம், பதைப்பு அடங்க - (தம்) துடிப்பு அடங்கியிருக்க, வள்ளல் தாதை பணியதனுல்-பெரு வள்ளலாகிய தந்தையின் கட்டளையாலும், வானேர் வரத்தால் - தேவர்கள் பெற்ற வரத்தாலும், மயங்கு இருளின் நள்ளில்-(கண்) மயங்குதற்கு இடமான நள்ளிருளிலே, போன - (காட்டிற்குப்) போன, வரி சிலை கை நம்பி செய்கை - கட்டமைந்த வில்லை ஏந்திய கையையுடைய இராமபிரான் செய்தவற்றை, நடத்துவாம் - (மேலே) சொல்லுவோம்.

ஆழ்கடலின் நடுவில் தங்கியுள்ள வடவைத் தீயின் வெப்பத்தால் கடல் கரை கடவாது நிற்கின்றது என்பர். துடித்து நின்ற நகரமாந்தர் குழு கடலெனவும், அவர்களிடையே இருந்த முனிவன் தீயெனவும், அவன் சொல் தீயின் வெப்பமெனவும், கொள்க. வானேர்க்கு அளித்த வரம் காரணமாகத் தந்தை பணியைத் தலைக்கீடாகக் கொண்டு இராமபிரான் வனம் போனமையை அழகாகக் குறிக்கின்ருர். அனலை அஞ்சி - அனலுக்கு அஞ்சி; உருபு மயக்கம். வேலை - கரை. பள்ளம் - ஆழம். நகரம்: ஆகுபெயர். எண்ணும்மைகள் விகாரத்தால் தொக்கன. பணியதனுல்: அது, பகுதிப் பொருள் விகுதி. நள் - நடு.

ஒரு பிரதியில் தசரதன் மோட்சப்படலம் இங்கே முடிகின்றது.

(பி - ம்.) 2. நகரம் வைகிடமேல், வைகமேல்.
3. பணியென்னும்; வயங்கிருளின், வைகிருளின்.
4. நடாத்துவாம். (87)

தைலமாட்டு படலம் முற்றும்.

6. கங்கைப் படலம்

கங்கைக் கரையில் நிகழ்ந்தவற்றைக் கூறும் பிரிவாகலின் இது கங்கைப்படலம் என்ற பெயர் பெற்றது.

சுமந்திரனை அயோத்திக்குத் தேருடன் திருப்பியனுப்பியபின், இராமபிரான் முதலிய மூவரும் வழி நடந்து சென்று கங்கையின் வடகரையை அடைந்து அங்குள்ள முனிவரோடு நட்புக்கொண்டு அவர்களால் உபசரிக்கப்பெற்றுத் தங்கியிருந்தனர். கங்கையைக் கடக்க உதவும் ஓடக்காரர் தலைவனும் வேட்டுவனுமான குகன் இராமபிரான் வந்துள்ளமையை அறிந்து அங்கு வந்து, அவனைக் கண்டு அவன்பால் நீங்காத பேரன்பு கொண்டு, அவனுக்குத் தொண்டு செய்திருத்தலை விரும்பி விண்ணப்பிக்க, இராமபிரான் அவனோடு மனம் கலந்த நட்புப் பூண்டு, மறுநாள் கங்கையைக் கடத்தற்கு நாவாய் கொணரும்படி பணிக்க, அவ்வாறே குகன் கொணர்ந்த ஓடத்தில் ஏறிக் கங்கையின் தென்கரையை அடைந்து, சித்திர கூடம் செல்லுதற்குரிய நெறியை அவன்பால் வினவி அறிந்துகொண்டு, பின் அங்கிருந்து அவர்கள் புறப்பட்டுச் சென்றனர் என்பது இப்படலத்தின் கதைச் சுருக்கமாகும்.

இராமன் முதலிய மூவரும் வழி நடத்தல்

(கலிவிருத்தம்)

620. வெய்யோனொளி தன்மேனியின் விரிசோதியின் மறையப்
பொய்யோவெனு மிடையாளொடு மிளையானொடும் போனான்
மையோமர கதமோமறி கடலோமழை முகிலோ
ஐயோவிவன் வடிவென்பதோ ரழியாவழ குடையான்.

இவன் வடிவு - இவனுடைய திருமேனிக்கு ஒப்பு, மையோ - அஞ்சனமோ, மரகதமோ - மரகதமணியோ, மறிகடலோ - (அலை) மடங்கும் நீலக்கடலோ, மழை முகிலோ - மழை பொழிதற்குரிய கருமேகமோ, ஐயோ - (இஃதென்ன) வியப்பு! என்பது - என்று பாராட்டிச் சொல்லத்தக்கதான, ஓர் அழியா அழகு உடையான் - ஒப்பற்ற மாருத அழகுடைய இராமபிரான், வெய்யோன் ஒளி - வெப்பமுள்ள கதிரவனொளி, தன் மேனியின் விரி சோதியின் மறைய - தன் திருமேனியினின்று பரவும் தண்ணிய ஒளியால் மறையும்வண்ணம், பொய்யோ எனும் இடையாளொடும் - (இடை உண்டென்பது) பொய்யோ என்று ஐயம் கொள்ளத்தக்க நுண்ணிய இடையை உடைய பிராட்டியோடும், இளையானொடும் - இளையவனான இலக்குவனுடனும், போனான் - நடந்து போனான்.

இராமபிரானைக் கண்டோர், இத் திருமேனியின் அழகுக்கு எதனை உவமை கூறுவது என்று, ஒப்பாகத் தகும் பொருள்களை ஒவ்வொன்ருக எண்ணிப் பார்க்கத்தக்க பேரழகுடையவன் அவன். அவதார மூர்த்தி யாதலின் மற்றவர்களுடைய உடல் போல வாட்டமுறுவதன்று; ஆகவே, அதில் உள்ள அழகு அழியா அழகாயிற்று. வடிவு வேறு, அழகு வேறு என்றின்றி, அழகே வடிவாக நின்றது என்றபடி. அவன் திருமேனியின் பசிய தண்ணொளி, கதிரவனின் வெய்ய ஒளியை மறைத்தது. வருந்தாது வெயிலைத் தாங்கவல்லது அவன்மேனி என்ற குறிப்பும் இதில் தோற்றும். பிராட்டியின் இடை நுண்மையை, "மருங் கிலா நங்கை", "இல்லையுண் டென்ன நின்ற விடை" (பால. 593, 1205) என முன்னும் கூறினமை காண்க. நள்ளிரவில் நடக்கத் தொடங்கிய பெருமான், கதிரவனுக்குமுன் தென்பால் இரண்டு யோசனை சென்ருன் (586); மேலே பகலில் நடத்தல் இப்போது தொடங்குகின்றது. "நெய் வாய வேல்நெடுங்கண் நேரிழையும் இளங்கோவும் பின்பு போக, எவ்வாறு நடந்தனையெம் இராமாவோ" (பெருமாள் திருமொழி. 10 :2) எனக் குலசேகரப் பெருமாள் இரங்குதல் இங்கே நோக்கத்தகும்.

(பி - ம்.) 1. மிளிர்சோதியின்.
2. இடையாள்வர; இளையானொடு; போவான்.
3. மழைமுகிலோ மறிகடலோ.
4. இவர்வடிவென்பதொர்; அறியாவழகு; உடையோன். (1)

621. அளியன்னதொ ரறறுன்னிய
குழலாள்கட லமுதின்
தளியன்னதொர் மொழியாணிறை
தவமன்னதொர் பொறையாள்
வெளியன்னதொ ரிடையாளொடும்
விடையன்னதொர் நடையான்
களியன்னமு மடவன்னமு
முடனுடுவ கண்டான்.

அளி அன்னது-(நிறத்தால்) வண்டு போன்றதாய், ஓர் அறல் துன்னிய-ஒப்பற்ற கருமணலின் தன்மை அமைந்த, குழலாள்-கூந்தலை உடையவளும், கடல் அமுதின் தளி அன்னது-திருப்பாற் கடலில் தோன்றிய அமுதத்தின் துளிகள் போன்ற, ஓர் மொழியாள்-ஒப்பற்ற சொல் உடையவளும், நிறை தவம்-நிறைந்த கற்பாகிய தவ ஒழுக்கமும், அன்னது ஓர் பொறையாள்-அத்தகைய (நிறைந்த) நிகரற்ற பொறுமை உடையவளும், வெளி அன்னது ஓர் இடையா ளொடும்-ஆகாயம் போன்ற (நுண்ணிய) இடை உடையவளுமான பிராட்டியுடன், விடை அன்னது ஓர் நடையான்-காளை போன்ற (கம்பீரமான) ஒப்பற்ற நடை உடைய இராமபிரான் (செல்லும்

Acc-No-44009.

வழியில்), களி அன்னமும் - களிப்புடைய ஆண் அன்னமும், மடம் அன்னமும் - மடப்பம் பொருந்திய பெண் அன்னமும், உடன் ஆடுவ கண்டான் - ஒருங்கே (கூடி) விளையாடுவனவற்றைக் கண்டான்.

இப்போது இவர்கள் சென்ற இடம் கோசல நாட்டின் தென் எல்லையில் உள்ள மருதநிலப் பகுதி என்பர். ஆதலின் அந்நிலத்துக் குரிய இனிய காட்சிகளை ஆங்காங்குக் கண்டு சென்றமை கூறு கின்றார். இங்ஙனம் வழிநடையின் வருத்தம் உணராது மகிழ்ச்சி யோடு சென்று கங்கைக்கரை அடைந்தனர் (628) என்பர்.

அறல் கருமைக்கும் நெறிப்புக்கும் உவமை. மகளிர்க்குக் கற்பே தவம் போன்றதாகலின், தவம் கற்பு என உரைக்கப்பெற்றது. தவமும் பொறையும் என எண்ணும்மை விரிக்க. "இற்பிறப் பென்ப தொன்றும் இரும்பொறை யென்ப தொன்றும், கற்பெனும் பெயர தொன்றுங் களிநடம் புரியக் கண்டேன்" (சுந்தர. 1273).

(பா-ம்.) 1. அறல்பன்னிய, பின்னிய, மன்னிய, மின்னிய; கடலமிர்தின், கடலமிழ்தின், கடலமுதம்.
2. தெளிவன்னதொர், தெளியன்னதொர்; மெய்யாள்; தயவன்ன தொர்; செயலாள்.
4. உடனேடுவ, நடமாடுவ, விளையாடுவ, விளையாடுதல். (2)

622. அஞ்சம்பையு மையன்றன தலகம்பையு மளவா
நஞ்சங்களை வெலவாகிய நயனங்களை யுடையாள்
துஞ்சுங்களி வரிவண்டுகள் குழலின்படி சுழலும்
கஞ்சங்களை மஞ்சன்கழ னகுகின்றது கண்டாள்.

அஞ்சு அம்பையும் - மன்மதனுடைய ஐந்தம்புகளையும், ஐயன் தனது - இராமபிரானது, அலகு அம்பையும் - கூரிய அம்புகளையும், அளவா - (அவற்றின் ஆற்றலை) அளந்து (அவற்றை விஞ்சி), நஞ்சங்களை வெல ஆகிய - நஞ்சையும் வெல்லுதற்கு அமைந்த, நயனங்களை உடையாள் - கண்களை உடைய பிராட்டி, களி துஞ்சும் வரி வண்டுகள் - களிப்புப் பொருந்திய கோடுகள் அமைந்த வண்டுகள், குழலின்படி சுழலும் - வேய்ங்குழல் போன்ற இசையோடு சுற்றுதற்கு இடமான, கஞ்சங்களை - (புதிய) தாமரை மலர்களை, மஞ்சன் கழல் - இராமபிரானுடைய திருவடித் தாமரைகள், நகுகின்றது கண்டாள் - (அழகால் வென்று) நகையாடுதலைக் கண்டாள்.

பொதுவாகப் பெண்களின் கண்களுக்கு உவமை கூறும் பொருள் களைப் பிராட்டியின் கண்கள் வென்றுவிட்டன என அவற்றின் சிறப்புக் கூறினார். ஐந்து, மைந்தன் என்பன போலியாய் ஓசை இன்பம் தந்தன. அளவா : செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். அளவா - அளவி; கலந்து என்றும் உரைப்பர். துஞ்சும் களி என்பதனைக் களி துஞ்சும் என மாற்றுக. துஞ்சுதல் - தங்குதல். 'சுழலக் கஞ்சங்களை' என்ற பாடத்துக்கு, 'சுழல் அ கஞ்சங்களை' என்க.

(பி - ம்.) 1. ஐயன்கையில், ஐயன்கயில்; அயிலம்பையும், அகலம்பையும்.
2. வெலலாகிய; நகுகின்றன.
3. கொஞ்சுங்களி; குழலின்மிஸே, குழலின்மிசை.
4. மஞ்சன்கழல் நகுகின்றன, மைந்தன்கழல் நகுகின்றது. (3)

623. மாகந்தமு மகரந்தமு மளகந்தர மதியின்
பாகந்தரு நுதலாளொடு பவளந்தரு மிதழான்
மேகந்தனி வருகின்றது மின்னோடென மிளிர்பூண்
நாகந்தனி வருகின்றது பிடியோடென நடவா.

அளகம் - கூந்தற் பாரம், மா கந்தமும் மகரந்தமும் தர - சிறந்த நறுமணமும் பூந்தாதும் பொருந்தியிருக்க, மதியின் பாகம் தரு நுதலாளொடு - அட்டமிச் சந்திரன் போன்ற நெற்றியை உடைய பிராட்டியோடு, பவளம் தரும் இதழான் - பவளத்தின் அழகிய நிறத்தைத் தோற்றுவிக்கும் உதடுகளையுடைய இராமபிரான், தனி மேகம் மின்னோடு வருகின்றது என - தனியான ஒரு மேகம் மின்னலுடனே கூடி (நடந்து) வருகின்றது போலவும், மிளிர் பூண் - ஒளி விளங்கும் கிம்புரி அணிந்த, தனி நாகம்-ஒப்பற்றதொரு களிற்றியானை, பிடியோடு வருகின்றது என - தன் பெண் யானையுடனே கூடி வருகின்றது போலவும், நடவா - வழி நடந்து.

இதுவும் அடுத்த கவியும் ஒரு தொடர். நடவா என்ற எச்சம் அடுத்த பாட்டில் கண்டான் என்பது கொண்டு முடியும். நாகம் - யானை. பூண் - யானைக்கொம்பிற்கு இடும் பூண்; கிம்புரி. மேகமும் நாகமும் இராமபிரானுக்கும், மின்னும் பிடியும் பிராட்டிக்கும் உவமை. மகளிர் கூந்தலில் பூந்தாது அப்புவர்; "அளிநீ டளகத்தி னட்டிய தாதும்" (திருச்சிற். 122).

(பி - ம்.) 1. அளகந்தரு, அளகந்தொடர். 2. பவழந்தரும்.
3. வருகின்றதொர்; வில்லோடென; எழிலார். (4)

624. தொளைகட்டிய கிளைமுட்டிய சுருதிச்சுவை யமுதிற்
கிளைகட்டிய கருவிக்கிள ரிசையிற்பசை நறவின்
விளைகட்டியின் மதுரித்தெழு கிளவிக்கிளி விழிபோல்
களைகட்டவர் தளைவிட்டெறி குவளைத்தொகை கண்டான்.

தொளை கட்டிய - தொளை அமைக்கப்பெற்ற, கிளை - வேய்ங்குழலில், முட்டிய - (காற்றுத்) தாக்குதலால் எழுகின்ற, சுருதி சுவை அமுதின் - சுருதியோடு ஒட்டிய இசையாகிய (செவியால் நுகரும்) சுவைமிக்க அமுதத்தினும், கிளை கட்டிய கருவி கிளர் இசையின் - நரம்புகள் கட்டப்பெற்ற யாழில் எழும் இன்னிசையினும், பசை நறவின் - சாரமுள்ள தேனினும், விளை கட்டியின் - (கருப்பஞ் சாற்றினின்று) உண்டாகும் கற்கண்டினும், மதுரித்து எழு கிளவி - இனிமை உடையதாய் வெளிப்படும் சொற்களை உடைய, கிளி - கிளிபோலும்

பிராட்டியின், விழிபோல் - கண்களைப் போல, களை கட்டவர் தளை விட்டு எறி குவளை தொகை - களை பறிப்போர் வயலினின்றும் எடுத்தெறிந்த குவளை மலர்க் கூட்டத்தை, கண்டான்—.

வழியின் மருங்குள்ள வயல்களில் களை பறிப்போர் குவளைக் கொடிகளைக் களையாகப் பறித்தெறிய, அவற்றிலுள்ள மலர்கள் கண் போலத் தோற்றின; அவற்றை இராமபிரான் கண்டான். மகளிர் கண்களுக்குக் கருங்குவளை மலரை உவமை கூறுவர்; இங்கே எதிர் நிலையுவமையாக்கிக் கூறினர். ''மள்ளர், கட்ட காவியங் கட்கிடை காட்டுவ கழனி'' (பால. 534). கிளி, ஆகு பெயராய்ப் பிராட்டியை உணர்த்திற்று. அவள் சொல்லினிமைக்கு நான்கு பொருள்களை உவமித்தார். கிளை - மூங்கில்; அதனுல் ஆகிய குழலை உணர்த்திற்று. கிளை - நரம்பு. தளை - வயல்.

(பி - ம்.) 2. களைகட்டிய கருவிக், கிளைகட்டிகலருவிக்.
3. இளவிக்கிளர், இளவிக்கெழு.
4. களைகட்டிவர், தளையிட்டெறி, களைவிட்டெறி. (5)

625. அருப்பேந்திய கலசத்துணை யமுதேந்திய மதமா
மருப்பேந்திய வெனலாமுலை மழையேந்திய குழலாள்
கருப்பேந்திர முதலாயின கண்டாளிடர் காணுள்
பொருப்பேந்திய தோளானெடு விளையாடினள் போனுள்.

அரும்பு ஏந்திய - (கோங்கு அல்லது தாமரையின்) அரும்பை ஒத்தன; துணை அமுது கலசம் ஏந்திய - இரட்டை அமுத கலசங்களை ஒத்தன; மதம் மா மருப்பு ஏந்திய - மதயானையின் கொம்புகள் போன்றன; எனல் ஆம் முலை - என்று (உவமை) கூற அமைந்த நகில் களையும், மழை ஏந்திய குழலாள் - கருமேகம் போன்ற கூந்தலையும் உடைய பிராட்டி, கரும்பு எந்திரம் முதலாயின கண்டாள் - (வழியிடையே) கரும்பாலை முதலிய விநோதப் பொருள்களைக் கண்டவளாய், இடர் காணுள் - துன்பம் உணராமல் (இனிதாக), பொருப்பு ஏந்திய தோளானெடு - மலைபோல் உயர்ந்த தோள்களை உடைய இராமபிரானேடு, விளையாடினள் போனுள் - விளையாடிக்கொண்டு (நடந்து) போனுள்.

சிறப்புப்பற்றிப் பிராட்டியின் தனங்களுக்கு மூன்று வகை உவமை கூறினர். ஏந்துதல் - ஒத்தல்; தன்மையைக் கொண்டிருத்தல். கண்டாள், காணுள், விளையாடினள் : முற்றெச்சம். அரும்பு, கரும்பு என்பன எதுகை நோக்கி வலித்தல் பெற்றன. 'யந்த்ரம்' என்ற வடசொல்லின் திரிபான 'எந்திரம்' என்பது சந்தம் நோக்கி நீண்டது.

இப்பாடல் ஒரு பிரதியில் இல்லை.

(பி - ம்.) 1. அமுதேந்தின. 2. மருப்பேந்தியது, மருப்பேந்தின.
4. தோளானெடும் போவாள். (6)

626. பன்னந்துகு தரளந்தொகு படர்பந்திகள் படுநீர்
அன்னந்துயில் வதிதண்டலை யயனந்துறை புளினம்
சின்னந்தரு மலர்தந்தன செறிநந்தன வனநன்
பொன்னுந்திய நதிகண்டுள மகிழ்தந்தனர் போனார்.

பல் நந்து உகு தரளம் தொகு - பல சங்குகள் ஈன்ற முத்துக்கள் திரண்ட, படர் பந்திகள் படும் - பரந்த வரிசைகளைக் கொண்ட, நீர் - நீர்த்துறைகளையும், (அயல்) அன்னம் துயில் வதி தண்டலை - (பக்கத்தில்) அன்னங்கள் துயில் கொள்வதற்கு இடமான சோலைகளையும், அயல் - (அவற்றின்) பக்கத்தில், நந்து உறை புளினம் - சங்குகள் தங்குதற்கு இடமான மணல் மேடுகளையும், (அயல்) - (மற்றொரு) பக்கத்தில், சின்னம் தரு மலர்தந்தன - (பலவகையான) குறிகளைக் கொண்ட பூக்களை உடைய, செறி நந்தன வனம் - அடர்ந்த நந்தனவனங்களையும், நன் பொன் உந்திய நதி - நல்ல பொன்னைக் கொழிக்கும் ஆறுகளையும், கண்டு - (மூவரும்) பார்த்து, உளம் மகிழ்ந் தந்தனர் போனார் - மன மகிழ்ந்தவராய்ச் சென்றனர்.

மருத நிலத்துக்குரிய பொருள்கள் பலவற்றை அவர்கள் கண்டு நடை வருத்தமின்றிச் சென்றனர்.

நீர் - நீர்த்துறை. சின்னம் - நிறம், வடிவ அமைப்பு முதலிய குறிகள்; விடுபூ என்றலுமாம். நதி - கங்காநதி என்றார் பழைய உரைகாரர் ஒருவர். மகிழ்தருதல் - மகிழ்தல்; தா: துணைவினைப் பகுதி. மகிழ்தந்தனர்: முற்றெச்சம்.

(பா - ம்.) 1. பன்னத்துகள்; பந்துகள் படர்நீர், பைந்துறை படர்நீர், பைந்துகள் படுநீர், பங்கயநன்னீர்.
2. அன்னந்துறை; துயில்வது தண்டலை.
3. சின்னந்தர; மலர்சிந்திய, மலர்சிந்தன; செறிசந்தன வனநன்.
4. பொன்னந்திய, பொன்னுந்தின; மகிழ்ந்தாடினர். (7)

627. கால்பாய்வன முதுமேதிகள் கதிர்மேய்வன கடைவாய்ப்
பால்பாய்வன புனல்பாய்வன மலர்வாயளி படரச்
சேல்பாய்வன கயல்பாய்வன செங்கான்மட வன்னம்
போல்பாய்புனல் மடவார்படி நெடுநாடவை போனார்.

கால் பாய்வன முது மேதிகள் - கால்களால் பாய்ந்தோடும் இயல்புள்ள பெரிய எருமைகள், கதிர் மேய்வன - நெற்கதிர்களை மேய்ந்தவை, கடைவாய் - தம் கடைவாயிலிருந்து, பால் பாய்வன - (நெற்கதிரின்) பால் பெருகுவனவாய், புனல் பாய்வன - நீரில் (போய்) விழுந்தனவாக, மலர் வாய் அளி படர - (அங்கே) நீர்ப்பூக்களில் தங்கிய வண்டுகள் (எழுந்து) செல்ல, சேல் பாய்வன - சேல்மீன்கள்

துள்ளிக் குதிப்பனவும், கயல் பாய்வன - கயல் மீன்கள் துள்ளிக் குதிப்பனவும் (ஆன), பாய் புனல் - பரந்த நீர்நிலைகளில், செம் கால் மட அன்னம்போல் மடவார் படி - சிவந்த கால்களையுடைய இளைய அன்னம் போன்ற இளம் பெண்கள் நீராடுகின்ற, நெடுநாடு அவை - பெரிய நாட்டுப் பகுதிகளை, போனர் - (மூவரும்) கடந்து போனார்கள்.

எருமைகளின் இயல்பையும், அவை நீரிற் போய் விழுவதனால் நீர் நிலைகளில் நிகழ்வனவற்றையும் அழகாகக் கூறி, அத்தகைய நீர் நிலைகளில் மடவார் நீராடும் காட்சியைக் கண்டு சென்றனர் என்கின்றார். மருதநிலப் பகுதிகள் பலவாதலின், நாடு அவை எனப் பன்மையாற் கூறினார்.

(பி - ம்.) 1. கால்பாய்புனல்; முலைமேதிகள்.
2. மறைபாய்வன, பறைபாய்வன; மலர்வாய்வளி.
4. நெடுநாடவர், திருநாடவை. (8)

மூவரும் கங்கைக் கரை சேர்தல்

(வேறு)

628. பருதி பற்றிய பல்கலன் முற்றினர்
மருத வைப்பின் வளங்கெழு நாடொரீஇச்
சுருதி கற்றுயர் தோமிலர் சுற்றுறும்
விரிதி ரைப்புனற் கங்கையை மேவினர்.

பருதி பற்றிய - மிக்க ஒளி வாய்ந்த, பல் கலன் முற்றினர் - பல வகை ஆபரணங்களும் நிறைந்த அம்மூவரும், மருதம் வைப்பின் - மருத நிலங்கள் அமைந்த, வளம் கெழு நாடு ஒரீஇ - வளம் மிக்க கோசல நாட்டைக் கடந்து, சுருதி கற்று உயர் - வேதங்களை ஓதியுணர்ந்து உயர்வு பெற்றுள்ள, தோம் இலர் சுற்று உறும் - குற்றமில்லாதவரான முனிவர்கள் சூழ்ந்துள்ள, விரி திரை புனல் - பரந்த அலைகள் பாயும் நீரினையுடைய, கங்கையை மேவினர் - கங்கையாற்றின் கரையை அடைந்தனர்.

பருதி - ஒளி. இராமபிரான் நோக்கம், விரைவில் கோசல நாட்டு எல்லையைக் கடந்து செல்ல வேண்டும் என்பதாகலின், நாடென்றது கோசல நாட்டை. கங்கைக்கரை தவ முனிவர் பலர் ஆசிரமங்கள் அமைத்துக்கொண்டு தங்குவதற்கு இடமாகலின், 'தோமிலர் சுற்றுறும் கங்கை'யென விசேடித்தார்.

(பி - ம்.) 1. பல்கலம், பல்கணை; முற்றிய.
3. சுருதிசுற்றிய, சுற்றுற, சுற்றுறு.
4. கங்கையை மேவினன், மேவினர், கங்கையின் மேவினர். (9)

முனிவர்கள் இராமனைக் காண வருதல்

629. கங்கை யென்னுங் கடவுட் டிருநதி
தங்கி வைகுந் தபோதனர் யாவரும்
எங்கள் செல்கதி வந்ததென் றேமுரு
அங்க ணாயகற் காணவந் தண்மினார்.

கங்கை என்னும் - கங்கையென்று சொல்லப்படுகிற, கடவுள் திருநதி தங்கி வைகும் - தெய்வத் தன்மை வாய்ந்த சிறந்த நதிக்கரையில் தங்கித் தவவாழ்க்கை கொண்டுள்ள, தபோதனர் யாவரும் - தவச் செல்வராகிய முனிவரெல்லோரும், (இராமபிரான் வந்திருத்தலை அறிந்து), எங்கள் செல்கதி வந்தது என்று - எங்களுக்கெல்லாம் புகலிடமான பொருள் நேரே வந்துள்ளது என்று, ஏம் உரு - மகிழ்ச்சியுற்று, அம் கண் நாயகன் காண - அழகிய (அருள் நிறைந்த) கண்களையுடைய தலைவனான இராமபிரானைக் காணும்பொருட்டு, வந்து அண்மினார் - (அவன் இருந்த இடம்) வந்து சேர்ந்தனர்.

முற்றுணர்வினரான முனிவர்கள் இராமபிரானுடைய அவதாரவுண்மை உணர்ந்தவராகலின், 'எங்கள் செல்கதி வந்தது' என்று ஏமுற்றனர். ஏமம், ஏம் எனக் குறைந்தது. தேவ கங்கையாகலின் 'கடவுட்டிருநதி' என்றார். நதி - நதிக்கரை. அங்கண் - அவ்விடத்தில் என்றலுமாம்.

(பி - ம்.) 1. பெருநதி.
4. நாயகர்க்காண; வந்தாரரோ. (10)

கண்ட முனிவர்களின் மகிழ்ச்சி

630. பெண்ணி னோக்குஞ் சுவையைப் பிறர்பிறர்க்
கெண்ணி னோக்கி யியம்பரு மின்பத்தைப்
பண்ணி னோக்கும் பராவமு தைப்பசுங்
கண்ணி னோக்கின ருள்ளங் களிக்கின்றார்.

(இராமபிரானை அணுகின தபோதனர்), பிறர் - (முனிவரல்லாத) மற்றையோர் (இல்லறத்தார்), பெண்ணின் நோக்கும் சுவையை - பெண்களிடத்து (அநுபவித்துக்) காண்கின்ற காமச் சுவை போன்றவனை, எண்ணின் நோக்கி - (ஞானியர்தம்) மனக் கண்ணாலே பார்த்து (நுகர்ந்து), பிறர்க்கு இயம்ப அரும் இன்பத்தை - (இத்தகையதென்று) பிறருக்கு எடுத்துச் சொல்லுதற்கரிய பேரின்பமானவனை, பண்ணின் நோக்கும் - இசைவடிவான வேதங்களால் உணரப்படுகிற, பராவு அமுதை - அனைவரும் போற்றுதற்குரிய அமுத சொருபியாகிய இராமபிரானை, பசு கண்ணின் நோக்கி - பசிய ஊனக் கண்களால் நேரே பார்த்து, உள்ளம் களிக்கின்றார் - மனங்களிப்பாராயினர்.

பரம்பொருளை எப்போதும் மனக் கண்ணால் நோக்கிப் பேரின்பம் நுகரும் தபோதனர், அப்பரம் பொருளின் அமிசமான இராமபிரானை (மானிட வடிவில்) புறக்கண்ணாலும் பார்த்துக் களிப்பெய்தினர் என்கின்றார். ஞானியர் மனக் கண்ணால் நோக்கி நுகரும் இன்பம், இத்தகையதென்று பிறர்க்கு எடுத்துச் சொல்லுதற்கரியது; இல்லறத் தார் பெண்ணிடத்து நுகரும் இன்பமும் அத்தகையதே யாகலின், அத்தன்மைபற்றி அதனைக் கூறினாரேயன்றி, இழிந்த காமச்சுவை போன்றவன் இறைவன் என்றன்று. பண், வேதத்துக்கு ஆகுபெயர். பசுங்கண் - (அருளால்) குளிர்ந்த கண் என்றலுமாம்.

(பி - ம்.) 1. சுவையிற்பிறர் தமக்கு, பிறர் தமக்கு, பிறர் பிறர்க்கு, பிறர்பெறற்கு, பெறற்கரும்.
2. எண்ணிநோக்கி; விளம்பரும்.
3. பண்ணிநோக்கும், பண்ணிநோக்கு.
4. கண்ணிநோக்கினர், கண்ணினேக்குநர். (11)

631. எதிர்கொண் டேத்தின ரின்னிசை பாடினர்
வெதிர்கொள் கோலின ராடினர் வீரனைக்
கதிர்கொ டாமரைக் கண்ணனைக் கண்ணினால்
மதுர வாரி யமுதென மாந்துவார்.

வெதிர் கொள் கோலினர் - மூங்கிலாலான முக்கோலினை யுடைய அம்முனிவர்கள், வீரனை - இரகு வீரனான இராமபிரானை, எதிர்கொண்டு ஏத்தினர் - எதிர்ப்பட்டு வாழ்த்தியவர்களாய், இன் இசை பாடினர் - (அவன் புகழை) இனிய இசையால் பாடினார்கள்; ஆடினர் - (மகிழ்ச்சி யால்) கூத்தாடினார்கள்; கதிர் கொள் தாமரை கண்ணனை - அருள் ஒளியைக்கொண்ட தாமரை மலர் போலும் கண்களையுடைய அவன் அழகை, கண்ணினால் - தம் கண்களால், மதுரம் வாரி அமுது என - இனிய பாற்கடல் அமுதைப் பருகுவார்போல, மாந்துவார் - பருகுவா ராயினர்.

(பி - ம்.) 1. எதிர்கொடேத்தினர், எதிர்கொடேகினர், எதிர்கொண்டேகினர்.
2. கோலினர் முந்தினர், கையினர்முந்தினர், கையினராடினர்.
4. அமுதென மாந்தினர். (12)

முனிவர் அம்மூவரையும் ஆசிரமத்துக்கு அழைத்தேகல்

632. மனையி னீங்கிய மக்களை வைகலும்
நினையு நெஞ்சினர் கண்டிலர் நேடுவார்
அனையர் வந்துற வண்டெதிர்ந் தார்கள்போல்
இனிய மாதவப் பள்ளிகொண் டெய்தினார்.

மனையின் நீங்கிய மக்களை - தம் வீட்டினின்றும் நீங்கிய தம் மக்களை, கண்டிலர் - (நேரே) காணப் பெறாதவர்களாய், நினையும்

நெஞ்சினர் - (எப்போதும் அவர்களைப்பற்றி) எண்ணும் மனமுடைய ராய், வைகலும் நேடுவார் - பல நாளும் (அவர்களைத்) தேடும் பெற்றோர்கள், அனையர் - அப்பிள்ளைகள், ஆண்டு வந்து உற -அங்கே (வீட்டில்) தாமே வந்து சேர, எதிர்ந்தார்கள் போல் - எதிர்ப்பட்டவர் களைப் போல (மகிழ்ச்சியோடு), இனிய மாதவம் பள்ளி - மனத்துக்கு இனிய பெருமையையுடைய (தம்) தவச்சாலைக்கு, கொண்டு எய்தினர்-(அவர்களை) அழைத்துச் சென்றார்கள்.

முனிவர் என்ற எழுவாய் வருவிக்க. நேடுதல் - தேடுதல் (சுந்தா. 425).

(பி - ம்.) 2. மினைவுநெஞ்சினர்; நீடிலர்நீடுவார்.
3. வந்ததுகண்டு; எதிர்ந்தார்களின், எதிர்ந்தார்கள்மேல்.
4. இனியமாதவர், இனையமாதவப்; கொண்டேகினர். (13)

முனிவரின் அன்பு

633 பொழியுங் கண்ணீர்ப் புதுப்புன லாட்டினர்
மொழியு மின்சொலின் மொய்ம்மலர் சூட்டினர்
அழிவி லன்பெனு மாரமிர் தூட்டினர்
வழியின் வந்த வருத்தத்தை வீட்டினர்.

(தவப் பள்ளியில் முனிவர்கள்), பொழியும் கண் நீர் புது புனல் - (தம் கண்கள்)சொரிந்த இன்பக் கண்ணீராகிய புதிய நீரால், ஆட்டினர்-(மூவரையும்) நீராட்டி, மொழியும் - (தாங்கள்) சொல்லிய, இன்சொல் மொய் மலர் சூட்டினர் - இனிய முகமனுரைகளான மிக்க பூக்களைச் சூட்டி, அழிவு இல் அன்பு எனும் - கெடுதலில்லாத (தம்) உள்ளன் பாகிற, அரு அமிர்து ஊட்டினர் - அரிய அமுதத்தை ஊட்டி, வழியின் வந்த வருத்தத்தை வீட்டினர்-(மூவரும்) வழி நடந்ததனால் உண்டான அயர்ச்சியைப் போக்கினர்.

விருந்தினர்களை நீராட்டுதலும், பின்பு மலர் சூட்டுதலும், பிறகு உண்பித்தலும் முறையே ஆற்றும் கடமைகள் ஆதலின் இங்கே உருவக வகையால் அவற்றைக் கூறினர். அவர்கள் முறைப்படி உணவு அளித்தமை அடுத்த பாடலுட் கூறப்படும். சொலின்: இன், சாரியை. கண்ணீரால் நீராட்டுதல்: "மாதர்க் கண்ணீர் மஞ்சன மாட்டி" (பெருங். 4. 14 : 154); "அஞ்சனந்தோய் கண்ணி லருவிநீ ராங்கவர்க்கு, மஞ்சனநீ ராக வழிந்தோட" (நள. 242). ஆட்டினர், சூட்டினர், ஊட்டினர் : முற்றெச்சம்.

(பி - ம்.) 2. சூடினன். 3. ஆரமிர்தண்டனன்.
4. வாட்டினர், வருத்தங்கள் மாற்றவே, வருத்தந் தணியவே. (14)

634. காயுங் கானிற் கிழங்குங் கனிகளும்
தூய தேடிக் கொணர்ந்தனர் தோன்றனீ
ஆய கங்கை யரும்புன லாடினே
தீயு மோம்பினே செய்யமு தென்றனர்.

கானில் - காட்டில் (உள்ள), காயும் - (உண்ணத்தக்க) காய்களை யும், கிழங்கும் - கிழங்குகளையும், கனிகளும் - பழங்களையும், தூய தேடி கொணர்ந்தனர் - நல்லனவாகத் தேடிக் கொண்டுவந்து, தோன்றல் - மேலோய், நீ—, ஆய - ஆடுதற்குரிய, கங்கை அரு புனல் ஆடினே-கங்கையின் அரிய புனலில் நீராடி, தீயும் ஓம்பினே-தீவளர்த்துச் செய்வனவும் செய்து, அமுது செய்- (இவற்றை) அமுது செய்தருளுக, என்றனர்—.

தபோதனர் ஒழுக்கம் சிறிதும் குன்றுதவராகலின், இராமபிரானை, முறைப்படி நீராடித் தீயோம்பி அமுது செய்க என்கின்றனர். இவ் விரண்டு பாட்டாலும், தபோதனர் உபசரித்த சிறப்புக் கூறப்பெற்றது. கொணர்ந்தனர், ஓம்பினே: முற்றெச்சம். தோன்றல்: அண்மை விளி; தோன்றலாகிய நீ எனவும் அமையும். தபோதனர் கூறியாங்கு இராமபிரான் நியமம் செய்தமை, 645-இல் காண்க.

(பி - ம்.) 2. தூயர் கொணர்ந்தனம்; தொன்னதி.
3. ஆடிமுத்.
4. தீயையோம்பினே, தீயையோம்புதி, தீயையோம்பிப்பின். (15)

இராமன் சீதையுடன் நீராடுதல்

635. மங்கை யர்க்கு விளக்கன்ன மாதையும்
செங்கை பற்றினன் றேவருங் கைதொழப்
பங்க யத்தயன் பண்டுதன் பாதத்தின்
அங்கை யிற்றந்த கங்கையி ளுடினுன்.

(இராமபிரான்) மங்கையர்க்கு விளக்கு அன்ன மாதையும் - பெண்களுக்கெல்லாம் விளக்குப்போன்ற பிராட்டியையும், செம் கை பற்றினன் - தன் செவ்விய கையாற் பற்றிக்கொண்டு, தேவரும் கை தொழ - தேவர்களும் கைகுவித்து வணங்க, பங்கயத்து அயன் - தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன், பண்டு - முன்னொரு நாள், (திரிவிக்கிரமாவதாரத்தில்), தன் பாதத்தின் - (திருமாலாகிய) தன் பாதத்தில், அம் கையில் தந்த - அழகிய கைகளால் திருமஞ்சன மாட்டிய, கங்கையின் - கங்கை நதியில், ஆடினுன் - மூழ்கினுன்.

மடவார் பொதுவாகத் தம் தம் மனைக்கு விளக்காவர்; பிராட்டி, மங்கையர்க்கெல்லாம் விளக்காக விளங்குபவள். புண்ணிய தீர்த்தங் களில் நீராடுவோர், சங்கற்பம் செய்துகொண்டு தம் மனைவியர் கைபற்றி ஒருங்கே நீராடுதல் மரபாதலால், இராமபிரான் பிராட்டி

யையும் உடன் கொண்டு கங்கையில் மூழ்கினான். பெருமான் திரிவிக்கிரமனாகி மூவுலகும் அளந்தபோது, விண்ணுலகிற் சென்ற திருவடியைப் பிரமன் தன் கைக் கமண்டல நீரால் திருமஞ்சனமாட்டுவிக்க, அந்நீரே கங்கையாறாகப் பெருகியது என்பது வரலாறு. அத்திருமாலே இராமபிரானாகலின், 'தன் பாதத்தின்......கங்கையின் ஆடினான்' என்றார். கங்கை தோன்றிய வரலாறு : பால. 529, பார்க்க.

(பி - ம்.) 1 மங்கைமார்க்கு; மானையும், விளக்கெனு மாதையும்.
2. பற்றியத்தேவரும்; துன்பறப், இன்புறப்.
3. பாதத்தில், பாதநீர்.
4. அங்கையிற்றரும், கங்கையிற்றந்த; கங்கையினாடினார். (16)

கங்கையின் கூற்று

636. கன்னி நீக்கருங் கங்கையுங் கைதொழாப்
பன்னி நீக்கரும் பாதகம் பாருளோர்
என்னி னீக்குவர் யானுமின் றெற்றந்த
உன்னி னீக்கினெ னுய்ந்தனெ னாலென்றாள்.

கன்னி நீக்கு அரும் கங்கையும் - கன்னித் தன்மை நீங்குதல் இல்லாத கங்கா தேவியும், கைதொழா - (இராமபிரானை) அஞ்சலி செய்து, பார் உளோர் - உலகத்தில் உள்ளவரெல்லாம், பன்னி நீக்க அரும் பாதகம் - சொல்லி முடியாத (அளவற்ற) பாவங்களை, என்னின் நீக்குவர் - என்னிடத்து (மூழ்குதலால்) நீக்கிக் கொள்வர்; யானும் - அத்தகைய நானும், இன்று - இன்றைக்கு, என் தந்த உன்னின் - என்னைத் தோற்றுவித்த உன்னால், நீக்கினென் - (என் பாவங்களை) நீக்கியவளாய், உய்ந்தனென் - கடைத்தேறினேன், என்றாள் —. ஆல் : அசை.

கங்கா தேவி, பெருமானை வணங்கி முகமன் கூறினள். அவன் திருவடியில் தோன்றினமையின் 'என் தந்த உன்னின் நீக்கினென்' என்றாள். கன்னி - அழியாமை; என்றும் நீர் வற்றாது உதவும் தன்மை. கங்கையும் : உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை; முன்னே தேவர் தொழுதமையை நினைந்தது.

(பி - ம்.) 2. பாதகர்.
3. என்னினீக்கினர், இன்னனீக்குவர்; யானுமின்றேற்றமாம், யானுமன்றேற்றமாம்; யானுமன்றெற்றந்த, யானுமின்றாடிய.
4. உய்ந்தனனும், உய்ந்தனன்யான், உயர்ந்தனனும். (17)

நீராடி எழுந்த இராமபிரானது தோற்றம்

637. வெங்க ணாகக் கரத்தினன் வெண்ணிறக்
கங்கை வார்சடைக் கற்றையன் கற்புடை
மங்கை காண நின் றாடுகின் றான்வகிர்த்
திங்கள் சூடிய செல்வனிற் றோன்றினான்.

வெம் கண் நாகம் கரத்தினன் - கொடுங் கண்களையுடைய யானைத் துதிக்கை போலும் கைகளையுடையவனும், வெள் நிறம் கங்கை வார் சடை கற்றையன் - (இப்போது நீராடியதனுல்) வெண்ணிற முடைய கங்கை நீர் ஒழுகும் சடைத் தொகுதியுடையவனும், கற்பு உடை(ய) மங்கை காண நின்று ஆடுகின்ருன் - கற்பு மேம்பாடுடைய சீதாபிராட்டி காண (நீரில்) நின்று முழுகியெழுபவனுமான இராம பிரான், வகிர் திங்கள் சூடிய செல்வனின் தோன்றினுன் - பிறைச் சந்திரனைச் சூடிய சிவபெருமானைப் போலக் காணப்பெற்ருன்.

இதுமுதல் இரண்டு பாடல்களால் கங்கையில் நீராடி எழுந்த இராமபிரானது தோற்றத்தை வருணிக்கின்ருர். இப்பாடல், இராம பிரானுக்கும் சிவபெருமானுக்கும் செம்மொழிச் சிலேடையாக அமைந் துள்ளது. இராமபிரானுக்குரிய வகையில் பொருள் மேலே கூறப் பெற்றது. சிவபெருமானுக்கு அமையுமாறு : வெம் கண் நாகம் கரத் தினன் - கொடுங் கண்களையுடைய பாம்பை (ஆபரணமாக) அணிந்த கைகளை உடையவன்; வெண்ணிறக் கங்கைவார் சடைக்கற்றையன் - கங்கை நீர் தங்கி ஒழுகவிடப் பெற்ற சடையை உடையவன், கல்புடை மங்கை காண நின்று ஆடுகின்ருன் - இமய மலையிலே தோற்றிய பார்வதிதேவி காண அம்பலத்தில் நின்று ஆடுகின்றவன்.

இராமபிரான், தான் கொண்ட தவக் கோலத்திற்கேற்பச் சடை புனைந்திருந்தமையின், கங்கையில் முழுகி எழுங்கால் அந்நீர் சடையி னின்று ஒழுகியது.

(பி - ம்.) 1. வெங்கைநாகக்.
2. கங்கையார்சடைக், கங்கை நீர்ச்சடைக். (18)

638. தள்ளு நீர்ப்பெருங் கங்கைத் தரங்கத்தான்
வள்ளி நுண்ணிடை மாமல ராளொடும்
வெள்ளி வெண்ணிறப் பாற்கடன் மேலைநாட்
பள்ளி நீங்கிய பான்மையிற் ருேன்றினுன்.

வள்ளி நுண் இடை - கொடி போலும் நுண்ணிய இடையை உடைய, மாமலராளொடும் - சிறந்த தாமரையில் வீற்றிருக்கும் இலக்குமியின் அமிசமான பிராட்டியுடனே, தள்ளும் நீர் பெரும் கங்கை தரங்கத்தான் - அலைமோதும் நீரையுடைய பெரிய கங்கையின் அலைகளி னிடையே முழுகியெழுந்த இராமபிரான், மேலை நாள் - முன்னுளில், வெள்ளி வெள் நிறம் பால் கடல் - வெள்ளி போன்ற தூய வெண்ணிற முடைய பாற்கடலிலே, பள்ளி நீங்கிய பான்மையின் - (பெரிய பிராட்டியோடு) பள்ளி கொள்ளுதலை விட்டெழுந்த தன்மைபோல, தோன்றினுன் - தோற்றம் அளித்தான்.

சீதாபிராட்டியுடன் கங்கை நீர்ப் பெருக்கின் அலைகளிடையே முழுகி எழுந்த இராமபிரான், 'அயோத்தியில் நாம் அவதரித்து நும் குறை முடிப்போம்' என்று தேவர்களுக்கு வரம் அளித்தற்பொருட்டுப் பாற்கடலிலே பிராட்டியோடு பள்ளி கொள்ளுதலை விட்டெழுந்து நின்ற தன் பண்டை நிலைபோலக் காணப்பெற்றான் என்கின்றார். வெண்ணிறத்தாலும், அலை மோதுதலாலும் கங்கைக்குப் பாற்கடல் உவமையாகின்றது. 'மலராளொடும்' என்பதனைப் 'பள்ளி நீங்கிய' என்பதன் முன்னும் ஒட்டுக. வள்ளி - வல்லி; கொடி. மேலே 643-ஆம் பாடலும், ''வெள்ளிவெண் கடலின் மேனாள் விண்ணவர் தொழுது வேண்டப், பள்ளிதீர்ந் திருந்தான்'' (யுத்த. 436) என்பதும், ''கருங் கடற் பள்ளியிற் கலவி நீங்கிப்போய்ப், பிரிந்தவர் கூடினால்'' (பால. 593) என்பதும் ஈண்டு நோக்கத்தக்கன.

(பி - ம்.) 1. தள்ளுநர்பொரும், தள்ளுநீர்ப்புனற்.
2. வள்ளல் நுண்ணிடை; மாமலராளொடு.
4. பள்ளிநீக்கிய, பள்ளிகொள்ளும். (19)

பிராட்டி நீராடிய இயல்பு

639. வஞ்சி நாண விடைக்கு மடநடைக்
கஞ்சி யன்ன மொதுங்க வடிக்குமென்
கஞ்ச நீரி லொளிப்பக் கயலுகப்
பஞ்சி மெல்லடிப் பாவையு மாடினாள்.

இடைக்கு வஞ்சி நாண - (தன்) இடையின் துவட்சிக்குக் கொடி (ஆற்றாது) நாணம் அடையவும், மடம் நடைக்கு அஞ்சி அன்னம் ஒதுங்க-(தன்) மெத்தென்ற நடை அழகுக்கு அஞ்சி அன்னம் ஒதுங்கிப் போகவும், அடிக்கு - (தன்) திருவடிகளின் அழகுக்கு (ஆற்றாது), மென் கஞ்சம் நீரில் ஒளிப்ப-மெல்லிய தாமரைப்பூக்கள் நீரினுள் ஒளிக்கவும், கயல் உக - கயல் மீன்கள் துள்ளவும், பஞ்சி மெல் அடி பாவையும் - செம்பஞ்சூட்டிய மெல்லிய திருவடிகளை உடைய பாவை போன்ற சீதாபிராட்டியும், ஆடினாள் - நீராடினாள்.

பிராட்டியின் நீராடற் சிறப்பை இதுமுதல் ஐந்து கவிகளால் கூறுகின்றார். இராமபிரான் நீராடினமை கூறியவர், பிராட்டியும் ஆடினாள் என்றதற்கு, பாவையும் என இறந்தது தழுவிய எச்சவும்மை தந்து கூறினார். பொதுவாக், மகளிரின் அங்கங்களுக்கு உவமையாகும் பொருள்களெல்லாம், பிராட்டியின் அங்கங்களுக்காற்றாது தோற்றன எனச் சிறப்பிக்கின்றார். கயல் உக - கயல் மீன்கள் (கண்ணுக்குத்) தோற்றுப்போக என உரைத்தலுமாம். பஞ்சி - செம்பஞ்சு. பாவை: உவமவாகுபெயர்.

(பி - ம்.) 1. வஞ்சி நாணிவணங்க, நாணிமடங்க, நாணிடமங்கை.
2. அடியிணைக்.
3. கயல்புகப். 4. பஞ்சின்மெல்லடிப். (20)

640. தேவ தேவன் செறிசடைக் கற்றையுட்
கோவை மாலை யெருக்கொடு கொன்றையின்
பூவு நாறலள் பூங்குழற் கற்றையின்
நாவி நாண்மலர் கங்கையு நாறினள்.

(சீதாபிராட்டி நீராடியதனால்) கங்கையும்—, தேவ தேவன் - தேவர்கள் தலைவனான சிவபெருமானது, செறி சடை கற்றையுள் - அடர்ந்த சடைத் தொகுதியில் (அணிந்த), கோவை மாலை - தொடுத்த மாலையில் உள்ள, எருக்கொடு - வெள்ளெருக்கம் பூவின் மணமும், கொன்றை இன் பூவும் - கொன்றையாகிய கண்ணுக்கினிய பூவின் மணமும், நாறலள் - மணக்கப் பெருதவளாய், பூ குழல் கற்றையின் - (பிராட்டியது) அழகிய அளகபாரத்தில் (உள்ள), நாவி - க்த்தூரியின் நறு மணமும், நாள் மலர் - புதிய பூக்களின் மணமும், நாறினள் - மணக்கப் பெற்ருள்.

கங்கை சிவபெருமானது சடை முடியுள் தங்குதலால், அங்குள்ள எருக்கமலர், கொன்றை மலர்களின் மணம் எப்போதும் இயையப் பெற்றவள்; இங்கே பிராட்டி நீராடுதலால், கங்கை பழைய மணம்மாறி, பிராட்டியின் கூந்தலால் உண்டான புதிய மணம் பெற்ருள். மலரும் நாவியும் ஆகுபெயராய், அவற்றின் மணத்தைக் குறித்தன. "புதுப்புனல் குடையு மாதர் பூவொடு நாவி பூத்த, கதுப்புறு வெறியே நாறுங் கருங் கடல்'' (பால. 43) என்பது காண்க.

(பி - ம்.) 1. தேவன்சென்னிச்; செறிசுடர்க்.
3. பூவுநாறிலள், பூவுநாறில; பூங்குழற் கூந்தலின்.
4. மலர்க்கங்கையின், மலர்நங்கையும். (21)

641. நுரைக்கொ ழுந்தெழுந் தோடி நுடங்கலால்
நரைத்த கூந்தலி னங்கைமந் தாகினி
உரைத்த சீதை தனிமையை யுன்னுவாள்
திரைக்கை நீட்டிச் செவிலியி னட்டினள்.

நுரை கொழுந்து எழுந்து ஓடி நுடங்கலால் - (நீர்ப்பரப்பில்) நுரையின் கொழுந்து எழுந்து பரவி அசைதலால், நரைத்த கூந்தலின் நங்கை மந்தாகினி - நரைத்த கூந்தலையுடைய முதுமகள் போலத் தோற்றும் கங்கைத் தாய், உரைத்த சீதை தனிமையை உன்னுவாள் - யாவரும் புகழ்தற்குரிய சீதாபிராட்டியின் (மகளிர் துணை இல்லாத) தனிமையை எண்ணியவளாய், திரை கை நீட்டி - தன் அலைகளாகிற கைகளை நீட்டி, செவிலியின் - செவிலித்தாயைப் போல, ஆட்டினள் - (பிராட்டியை) நீராட்டினள்.

சீராட்டிப் பாராட்டுதற்குரிய செவிலித்தாயர் முதலிய மகளிர் துணையின்றிப் பிராட்டி தனித்திருத்தலை மந்தாகினி நினைந்து இரங்கித்

தான் செவிலிபோல் இருந்து அவளை அருமையாக நீராட்டினுள் என்கின்ருர். நீராடும்போதும் வெண்ணுரை படிந்த தன்மையை நரைத்த கூந்தல் என உருவகித்தார்.

(பி - ம்.) 1. நரைத்தெழுந்தெழுக்தோங்கி; நுடங்கலான்.
2. கூந்தலணங்கை.
3. தனிமைகண்டுன்னுவாள். 4. திரைகைகீடிச். (22)

642. மங்கை வார்குழற் கற்றை மழைக்குலம்
தங்கு நீரிடைத் தாழ்ந்து குழைப்பன
கங்கை யாற்றுட ஞடுங் கரியவள்
பொங்கு நீர்ச்சுழி போவன போன்றவே.

மங்கை - சீதாபிராட்டியின், வார் குழல் கற்றை மழை குலம் - நீண்ட கூந்தலின் தொகுதியான மேகக் கூட்டம், தங்கும் நீர் இடை - (அவை) படிந்த கங்கை நீரில், தாழ்ந்து குழைப்பன - உள் அமிழ்ந்து குழைவன, கங்கை ஆற்றுடன் ஆடும் - கங்கையாற்ருேடு, (வந்து) கலக்கின்ற, கரியவள் - கருநிறமுடைய யமுனையின், பொங்கு நீர் சுழி - மிக்க நீர்ச் சுழல்கள், போவன போன்ற - (தோன்றி) ஓடுவன போன்றிருந்தன. ஏ : ஈற்றசை.

யமுனை, கங்கையோடு கலக்கும் உபநதி. அது கருநிறம் உடையது. அது வந்து கலக்குமிடத்து இருவேறு நிறங்களும் காணப்படும். ஆகலின், பிராட்டியின் கருங்கூந்தல் கங்கையின் வெண்ணீரில் தாழ்ந்து குழைவதை, யமுனையின் நீர்ச்சுழி போலும் என்ருர். யமுனையின் கருநிறம்பற்றிக் 'கரியவள்' என்ருர். ஆடுதல் - கலத்தல்.

(பி - ம்.) 1. கற்றைமயிற்குலம். 2. குழைப்பது, தழைப்பன.
3. கங்கையாற்ருெடு, கங்கையாளொடும்; ஆடுகரியவள், ஓடுங் கரியவள், கங்கையாற்ருெடுங் காளிந்திதன்னெடும்.
4. நீர்ச்சுழற், நீர்நிழல்; போவது போன்றதே. (23)

643. சுழிபட் டோடிய தூங்கொலி யாற்றுத்தன்
விழியிற் சேலுகள் வானிற வெள்ளத்து
முழுகித் தோன்றுகின் ருண்முதற் பாற்கடல்
அழுவத் தன்றெழு வாளென லாயினுள்.

சுழி பட்டு ஓடிய - சுழிகளையுடையதாய் ஓடின, தூங்கு ஒலி யாற்று - மிக்க ஓசையை உடைய கங்கையாற்றின், சேல் தன் விழியின் உகள் வால் நிறம் வெள்ளத்து - சேல்மீன்கள் தன் கண்ணைப்போலப் புரளும் வெண்ணிற நீர்ப்பெருக்கில், முழுகி தோன்றுகின்ருள் - முழுகி எழுந்து தோன்றும் பிராட்டி, அன்று - முன்னொரு காலத்தில், முதல் பால்கடல் அழுவத்து எழுவாள் எனல் ஆயினுள் - முதன்மையையுடைய

பாற்கடலின் பரப்பில் எழுந்து தோன்றிய திருமகளே இவள் என்னும்படி இருந்தாள்.

வெண்ணிறத்தாலும், அலைகளும் ஓசையும் உடைமையாலும் கங்கை நீர்ப்பரப்பைப் பாற்கடலோடு உவமித்தார். அதைக் கடைந்த போது அதன்கண் எழுந்து தோன்றிய திருமகளே இவள் என்னும்படி பிராட்டி விளங்கினாள். 638-ஆம் பாடல் விசேடக் குறிப்புப் பார்க்க. தன் விழிபோலும் சேல் என்றது எதிர்நிலையுவமை.

(பி - ம்.) 1. சுழிபட்டோங்கிய, சுழிப்பட்டோடிய.
2. விழியிற்சேலுக, வழியிற்சேலுக; வாலுகவெள்ளத்து.
3. முதிர்பாற்கடல், முதுபாற்கடல்.
4. அழுவத்தின்று; எனவாயினள். (24)

கங்கை புனிதமுற்றமை

644. செய்ய தாமரைத் தாள்பண்டு தீண்டலால்
வெய்ய பாதகந் தீர்த்து விளங்குவாள்
ஐயன் மேனியெல் லாமளைந் தாளினி
வைய மாநர கத்திடை வைகுமோ.

பண்டு—முன்னாளில், ஐயன் - எம்பெருமானுடைய, செய்ய தாமரை தாள் தீண்டலால் - செந்தாமரை போலும் திருவடித்தொடர்பு பெற்றமையாலே, வெய்ய பாதகம் தீர்த்து விளங்குவாள் - (உலகத்து உயிர்களின்) கொடிய பாவங்களையெல்லாம் போக்கிச் சிறப்புடன் விளங்கும் கங்கை, (இப்போது) ஐயன் மேனி எல்லாம் அளைந்தாள்- எம்பெருமானுடைய திருமேனி முழுதும் (தன்னில்) அளாவப் பெற்றாள்; (ஆதலால்), இனி—, வையம் - உலகத்துயிர்கள், மா நரகத்து இடை வைகுமோ - பெரிய நரகத்திலே போய்த் தங்குத லுண்டோ? இல்லையென்றபடி.

திருவடி சம்பந்தத்தாலே கொடும் பாவங்களையெல்லாம் தீர்க்கும் சிறப்புப் பெற்றிருந்தவள், இப்போது எம்பெருமானுடைய திருமேனி முழுதும் தன்னிடை மூழ்கும் பேறு பெற்றதனால், அவள் சிறப்பு இன்னும் மிகுவதாயிற்று. உலகில் உள்ளவர்கள் இதில் மூழ்கி நற்கதி அடைவது திண்ணமாதலின், 'வையம் மாநரகத்திடை வைகுமோ' என்றார்.

(பி - ம்.) 1. திண்டினாள்.
2. தீர்த்து விளங்கினாள், நீக்கி விளங்குவாள், விட்டுவிளங்கினாள், தீர்த்து விளங்குவாள்.
3. அலைந்தாலினி, அளைந்தாளெனில்.
4. நரகத்தினின், நரகத்தினில்; வழங்குமோ. (25)

இராமபிரான் நியமம் முற்றித் தபோதனர் தந்த விருந்துண்ணல்

645. துறைந றும்புன லாடிச் சுருதியோர்
உறையு ளெய்தி யுணர்வுடை யோருணர்
இறைவற் கைதொழு தேந்தெரி யோம்பிப்பின்
அறிஞர் காதற் கமைவிருந் தாயினன்.

(இராமபிரான்), துறை - கங்கைத் துறையில், நறு புனல் ஆடி - நல்ல நீரில் மூழ்கி, சுருதியோர் உறையுள் எய்தி - வேதம் வல்ல முனிவர் இருக்கையைச் சேர்ந்து, உணர்வு உடையோர் உணர் இறைவன் கைதொழுது - மெய் உணர்வுடைய ஞானிகளே உணரத் தக்க பரமனை வணங்கி, ஏந்து எரி ஓம்பி - சிறந்த தீவளர்த்து உரிய கடன்களைச் செய்து, பின் - அதன்மேல், அறிஞர் காதற்கு அமை விருந்து ஆயினன் - பேரறிவினரான அம்முனிவர்களின் மெய்யன்புக்கேற்ற விருந்தினனாக அமைந்தான். (விருந்துண்ணலானான்).

எழுவாய் அதிகாரத்தால் வருவித்து உரைக்கப் பெற்றது.

ஐயன், முனிவர்கள் முன்னே கூறியாங்கு (634) நீராடி, நியமம் முற்றி விருந்துண்ண அமைந்தான். முனிவரின் அன்பு மிகுதியைக் 'காதல்' என்றார். உணர்வுடையோர் உணர் இறைவன்: "கேள்வியாற் செவிகள் முற்றும், தோட்டவர் உணர்வின் உண்ணும் அமிழ்தத்தின் சுவையாய் நின்றான்" (ஆரணிய. 1194.)

(பி - ம்.) 1. துறையுறும்புனல், துறுகறும்புனல்.
2. உணர்வுடை யோர்தொழும்; உணர்வுடைத் தம்பியோடு.
3. ஏந்தெரியோம்பினன், எண்ணெரியோம்பினன்; ஓம்பிப்பின்.
4. அறிஞராய்தற்கமை; விருந்தாகினன். (26)

646. வருந்தித் தான்றர வந்த வமுதையும்
அருந்து நீரென் றமரரை யூட்டினன்
விருந்து மெல்லட குண்டு விளங்கினன்
திருந்தி னர்வயிற் செய்தன தேயுமோ.

தான் வருந்தி தர வந்த அமுதையும் - தான் மிகவும் முயன்று உண்டாக்கியதனால் தோன்றிய அமிழ்தத்தையும், நீர் அருந்தும் என்று - நீங்கள் உண்ணுங்கள் என்று சொல்லி, அமரரை ஊட்டினன் - தான் உண்ணாமல் தேவர்களை உண்பித்த பெருமானான இராமபிரான், விருந்து மெல் அடகு - (முனிவர்கள் தந்த) விருந்தாகிய மெல்லிய இலையுணவை, உண்டு - உகந்து உண்டு, விளங்கினன் - மகிழ்ச்சியுடன் விளங்கினன்; திருந்தினர் வயின் செய்தன - மனம் திருந்திய நல்லோர்க்கு (ஒருவர்) செய்தவை (சிறியவாயினும்), தேயுமோ - குறைபடுமோ? (குறைபடா)

தன் பெருமுயற்சியால் உண்டானதும், மிக்க பெருமையுடையதுமான அமிர்தத்தையும் ஒரு பொருளாகக் கருதாது தேவர்களுக்கு அளித்துவிட்ட பெருமான், இங்கே முனிவர்கள் அன்போடு அளித்த தாழ்ந்த இலையுணவைக் குறைவாகக் கருதாது, உயர்வாக உகந்து உண்டான். ஈற்றடியுள், 'செய்தவம் தேயுமே' என்ற பாடம் உளது; அதற்கு, 'திருந்தினவராகிய முனிவர்களிடத்துள்ள தவம் தாழ்வு படாது; அதன் பயனாகவே பெருமான் அவர்க்கமைந்த விருந்தாயினான்' என்ற பொருள் கொள்க.

அமுதந்தரப் பெருமான் வருந்தி முயன்றது: "திறல்கொளாமையாய் முதுகினில் மந்தரந் திரிய, விறல்கொளாயிரந் தடக்கைகள் பரப்பிமீ வலிப்ப" (பால: 494); "தாழி தரையாகத் தண்டயிர் நீராகத் தடவரையே மத்தாகத் தாமரைக்கை நோவ, ஆழி கடைந்தமுத மெங்களுக்கே யீந்தாய்" (ஆரணிய. 102); "மாயிருங் குன்ற மொன்று மத்தாக மாசுணமதனொடு மளவிப், பாயிரும் பௌவம் பகடுவிண்டலறப் படுதிரை விசும்பிடைப் படரச், சேயிரு விசும்பும் திங்களும் சுடரும் தேவருந் தாமுடன் றிசைப்ப, ஆயிரந் தோளால் அலைகடல் கடைந்தான்" (பெரிய திருமொழி 5 7: 4).

'பெருமான் இவ்வாறு முயன்று தேவர்க்கு அமுதளித்தபோது, அப் பாற்கடலில் தோன்றிய ஓஷதி என்னும் மூலிகையை அங்கு வந்த முனிவர் கொள்ள அளித்தான்; அதன் பயனாக, இப்போது முனிவர்களால் ஓஷதியை விருந்துணவாகப் பெற்றான்' என ஈற்றடிக்குப் பொருள் கொண்டார், சோடசாவதானம் சுப்பராய செட்டியார். இராமபிரான் முனிவர்பால் விருந்துண்டமை வான்மீகத்துள் இல்லை.

இவ்விடத்து ஒரு பிரதியில் கீழ்க்காணும் பாடல் ஒன்றும், அதன்பின் 'வழிநடைப் படலம் முற்றும்' என்பதும் காணப்படுகின்றன. பாடல் வருமாறு :

அன்ன காரணத் தையனு மாங்கவர்
உன்னு பூசனை யாவு முவந்தபின்
மின்னு செஞ்சடை மெய்த்தவர் வேண்டிடப்
பன்ன சாலையின் பாடிருந் தானரோ.

கங்கைப் படலம் முற்றும் எனவும் சில சுவடிகளில் உளது. அவற்றில் மேலே குகப் படலம் தொடங்குகின்றது.

(பி - ம்.) 1. அமுதெலாம். 2. அமரருக் கூட்டினன்.
3. விருந்து நல்லடகு, விருந்தின் மெல்லடகு, விருந்தின் மெல்லடை; உண்டு விரும்பினன்.
4. செய்தவம், செய்வினை தேயுமே. (27)

கங்கைப் படலம் முற்றும்.

7. குகப்படலம்

குகனைப்பற்றிக் கூறும் படலம் என இதன் பொருள் விரியும். இராமபிரான், பிராட்டியோடும், இலக்குவனோடும் கங்கையின் வட கரையில் முனிவர்கள் ஆசிரமத்தில் தங்கியிருந்தபோது, அதனைக் கேள்வியுற்ற குகன் அங்கு வந்து, இராமபிரானைக் கண்டு, அளவளாவி அப்பிரான்பால் மிக்க ஈடுபாடுடையவனாகி, அம்மூவரையும் ஓடத்தில் ஏற்றிக் கங்கையின் தென்கரை சேர்த்துத் தன்னை அடிமையாக ஏற்றுக்கொண்டு, எப்போதும் பிரியாது உடனிருந்து உதவத் திரு வுள்ளம் பற்றும்வண்ணம் இராமபிரானை வேண்டுதலும், அவனது அன்பின் ஆழத்தைக் கண்ட இராமபிரான், அவனைத் தோழனாக ஏற்றுக்கொண்டு, அவன் தன்னுடன் வருதல் கூடாதென்றும், அங்கேயே இருந்து தன் கிளைகளைக் காத்தல் அவன் கடமை யென்றும், திரும்பி வருங்கால் தப்பாது அவனைச் சந்திப்பதாகவும் கூறி, அவன்பால் விடைகொண்டு மேலே வனத்துட் சென்ற செய்தி இப்படலத்துட் கூறப்படும்.

குகன் இயல்பு

(கலிவிருத்தம்)

647. ஆய காலையி னாயிர மம்பிக்கு
நாய கன்போர்க் குகனெனு நாமத்தான்
தூய கங்கைத் துறைவிடுந் தொன்மையான்
காயும் வில்லினன் கற்றிர டோளினான்.

ஆய காலையின் - (இராமபிரான் விருந்துண்டு மகிழ்ந்திருந்த) அத்தருணத்தில், ஆயிரம் அம்பிக்கு நாயகன் - அளவிறந்த ஓடங் களுக்குத் தலைவனும், தூய கங்கை துறை - தூயதாகிய கங்கை ஆற்றின் துறையில், விடும் தொன்மையான் - (அவ்வோடங்களை) விடும் பழமையான உரிமையுடையவனும், காயும் வில்லினன் - (பகை வரையும் விலங்குகளையும்) அழிக்கும் வில்லைக் கொண்டவனும், கல் திரள் தோளினான் - மலைபோலத் திரண்ட தோள்களை உடையவனும், போர் - போரில் வல்லவனுமான, குகன் எனும் நாமத்தான் - குகன் என்னும் பெயருடைய வேடர் தலைவன்—.

இதுமுதல் ஒன்பது பாடல்கள் ஒரு தொடர்; குகனுடைய இயல்புகளையும் ஆற்றலையும் விரித்துரைத்து, அவன் இராமபிரானைக் காண வந்தான் என்ற செய்தி கூறுவன. 655-ஆம் பாடலில் 'வள்ளலைக் காணவந் தெய்தினான்' என்பதனோடு முடியும். இப்பாட

லுள் 'ஆயிரம்' என்றது அளவிறந்த என்ற பொருளில் வந்தது. "கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்" என்று மேலே வருவதும் காண்க. விடுதல் - செலுத்துதல்; "விடுநதி கடிதென்ருன்" (683).

(பி - ம்.) 2. பொற்குகனென்னும், குகனென்றுயர்.
3. விடுதொன்மையான், விடுதன்மையான், விடுக்தன்மையான்.
4. வில்லினன், நெஞ்சினன்; கற்றிரள் மேனியான், மேனியன், மெய்யினன். (1)

648. துடிய ஞயினன் றேற்செருப் பார்த்தபேர்
அடிய னற்செறிந் தன்ன நிறத்தினன்
நெடிய தானை நெருங்கலி னீர்முகில்
இடியி னேடெழுந் தாலன்ன வீட்டினன்.

துடியன் - துடி என்னும் பறையை உடையவன்; நாயினன் - பல நாய்களை உடையவன்; தோல் செருப்பு ஆர்த்த பெரு அடியினன் - தோலாலான செருப்பைத் தொடுத்த பெரிய கால்களை உடையவன்; அல் செறிந்த அன்ன நிறத்தினன் - இருள் திணிந்தது போன்ற கருநிறம் உடையவன்; நெடிய தானை நெருக்கலின் - பெரிய சேனை (எப்போதும்) சூழ்ந்திருத்தலால், நீர் முகில் - நீருண்ட மேகமானது, இடியினேடு எழுந்தால் அன்ன ஈட்டினன் - இடியோடு கூடித் திரண்டு வருவது போன்ற தன்மையை உடையவன்.

வேடர்கள், காட்டினூடே செல்லுதற்கேற்றவாறு காலில் எப்போதும் செருப்பு அணிந்திருப்பர். வேட்டை நாய்கள் பல அவர்களுடன் இருக்கும். வேட்டைக்குச் செல்வோர் அவர்களுக்குள்ளே சங்கேதமாகவும், விலங்குகளை இடம் பெயர்த்தற்பொருட்டும் துடியென்னும் பறையினை முழக்குவர். அவர்கள் கூட்டமாக ஆரவாரித்தெழுவது, மேகம் திரண்டு இடியோசையோடு வருதல் போன்றிருக்கும். இவற்றைத் தொகுத்துக் கூறினர்.

(பி - ம்.) 1. துடியினுயினன், துடிய நாவினன்; செருப்பார்த்த பேர், செருப்பார்த்ததோர்.
2. அடியனற்சிறந்தன்ன; நிறத்தினன். 1—2. தோற் செருப்பார்கழற், பொடியனற்செறி கண்ணினன் பூந்திரை.
3. நெருக்கலின், நெருக்கினன்; எழுந்தாலென, எழுந்தாலென்ன. (2)

649. கொம்பு துத்தரி கோடதிர் பேரிகை
பம்பை பம்பு படையினன் பல்லவத்
தம்ப னம்பிக்கு நாத னழிகவுள்
தும்பி யீட்டம் புரைகிளர் சுற்றத்தான்.

கொம்பு - ஊது கொம்பும், துத்தரி - சிறு சின்னமும், கோடு - சங்கும், அதிர் பேரிகை - முழங்கும் பேரிகையும், பம்பை - பம்பை

யென்னும் பறையும், பம்பு - செறிந்த, படையினன் - படைத் தொகுதியை உடையவன்; பல்லவத்து அம்பன் - இலைவடிவான அம்புகளை உடையவன்; அம்பிக்கு நாதன் - ஓடங்களுக்குத் தலைவன்; அழிகவுள் - மதம் வடியும் கன்னத்தையுடைய, தும்பி ஈட்டம் புரை - யானைக் கூட்டம் போன்ற, கிளர் சுற்றத்தான் - பொங்கி யெழும் சுற்றத்தாரை உடையவன்.

கொம்பு, துத்தரி, கோடு - ஊது கருவிகள்; பேரிகை, பம்பை - அடிக்கும் தோற்கருவிகள்; துத்தரி - சிறு சின்னம்; இரட்டையாகச் சேர்த்து ஊதப்படுவது என்பர் தக்கயாகப்பரணி உரைகாரர்; கொம்பு விசேட மென்பர் பிறர்; இது, துத்திரி எனவும் வழங்கும். கொம்பும், சங்கும் பல இடங்களில் இணைத்துச் சொல்லப்படும். (முருகு: 120, அடிக்குறிப்பு).

(பி - ம்.) 1. கொம்பு கைத்துடி; தித்துடி, துத்துமி, வெங்துடி; கோட்டுமுறை மையன்.
2. பம்பும் படையினன், பறையினன்; பல்கலம், பல்கலன், பல்சன.
3. அம்பினம் பிக்கு, அம்பு நம்பிக்கு, நம்ப நம்பிக்கு; நாயகனழிகவுட், நாயகனுய்கவுட், ஆழ்கவுட்.
4. புரை கிளை சுற்றினன், கிளைசுற்றத்தான், கிளைச்சுற்றத்தான், புரைதரு சுற்றத்தான், புரைகின்ற சுற்றத்தான். (3)

650. காழ மிட்ட குறங்கினன் கங்கையின்
ஆழ மிட்ட நெடுமையி னுனரைத்
தாழ விட்டசெந் தோலன் றயங்குறச்
சூழ விட்ட தொடுபுலி வாலினன்.

காழம் இட்ட குறங்கினன் - சல்லடம் அணிந்த துடைகளை உடையவன்; அரை தாழவிட்ட செம் தோலன் - அரையினின்றும் தொடங்க உடுத்த சிவந்த தோலுடை உடையவன்; தயங்கு உற - (அத் தோல் உடையின்மேல்) விளங்குதலுற, சூழவிட்ட - அரையைச் சுற்றிக் கட்டப்பட்ட, தொடு புலி வாலினன் - (ஒன்றோடொன்று) பிணைக்கப் பெற்ற புலி வாலை உடையவன்; கங்கையின் ஆழம் இட்ட நெடுமையினுன் - கங்கையின் ஆழத்தை அளவிட்டறிந்த பெருமை உடையவன். (ஆழத்தை அளந்தறியத் தக்க நெடிய உருவமுடையவன் என்றலுமாம்.)

காழம் - சல்லடம்; அரைக் காற்சட்டை; காழகம் என்றும் வழங்கும்; இது கரிய நிறமுடையது.

(பி - ம்) 1. வேழமிட்ட; வேலையின்.
2. ஆழவிட்ட; நெடுமையனுமரைத், நெடுமையினுன்றரைத். நெடுமையினுழ்ந்தெனத், நெடுமையினுளெலாம்.
3. தோலன்றயங்கரைச், தோலினன்றங்குறச், தோன்றறயங்குறச்.
4. தொடும்புலி வாலினன், தொடும்புலியாயினன். (4)

651. பற்றொ டுத்தன பல்கு கவடியன்
கற்றொ டுத்தன போலுங் கழலினன்
அற்றொ டுத்தன்ன குஞ்சியி னாய்கதிர்
நெற்றொ டுத்து நெரிந்த புருவத்தான்.

பல் தொடுத்த அன்ன - பற்களைத் தொடுத்தாற்போன்ற; பல்கு கவடியன் - நிறைந்த பலகறையணிகளைப் பூண்டவன்; கல் தொடுத் தனபோலும் கழலினன் - கற்களை இணைத்துக் கட்டினாற்போன்ற வீரக் கழல் அணிந்தவன்; அல் தொடுத்த அன்ன - இருட் பிழம்புகளை இணைத் தாற் போன்ற, குஞ்சியின் - தலைமயிரிலே, ஆய்கதிர் நெல் தொடுத்து - தேர்ந்தெடுத்த நெற்கதிர்களைச் செருகிக்கொண்டு, நெரிந்த புருவத் தான் - (சினம் தோன்ற) மேலேறிய புருவங்களை உடையவன்.

வேடர்கள் கவடிகளை (சோழி) மாலையாகக் கோத்து உடல் உறுப்புக்களில் அணிதலுண்டு; கவடிகள் பற்களைப் போன்றிருக்கும். அதனைக் கூறுவது முதலடி. பருமனாக இரும்பாற் செய்த வீரக்கழலைக் 'கற்றொடுத்தனபோலும் கழல்' என்றார். மயிர் முடியில் நெற்கதிரைச் செருகிக்கொள்ளுதலும் வேடர் செயல். குஞ்சியன் என்று பாடங் கொண்டு, தலைமயிரை உடையவன், நெற்கதிர் போன்ற புருவம் உடையவன் எனவும் உரைப்பர். தொடுத்தன்ன: தொகுத்தல். பல்குதல் - நிறைதல். வேடர்கள் கவடியணிதல்: ''கவடி மெய்க் கலன்கள் பூண்டு'' (பெரிய. கண்ணப்ப. 37); ''வெய்ய ஊனுணத் தந்தங்கள் மேனியும், கையுங் காலுமொய்த் தன்ன கவடியான்'' (திருக்குற்றாலத் தலபுராணம், வேடன் வலம் வந்த சருக்கம்.11).

(பா - ம்.) 1. பற்றொடுத்தன்ன, பற்றொடுத்தெனப்; பல்குற் கவடியன், பல்பூட் கவடியன், பற்றொடுத்த பலகூற் கவடியன், பலபூண் கவடியன்.
2. கற்றொடுத்தன்ன; கழலினன்.
3. அற்றொடுத்தன, அற்றொடுத்தமர்; குஞ்சியனாளியின், குஞ்சியனாளி யன், குஞ்சியனாய்கதிர், ஆழ்கதிர், ஆள்கதிர், குஞ்சியினாள்கதிர், குஞ்சியினாளியின்.
4. நெற்றொடுத்த, நெற்றெடுத்த, நெற்றெடுத்து; நெரிபுருவத்தினன், நெரித்த புருவத்தான், நிறைந்த புருவத்தான், நெளி புருவத்தினன். (5)

652. பெண்ணை வன்செறும் பிற்பிறங் கிச்செறி
வண்ண வன்மயிர் வார்ந்துயர் முன்கையான்
கண்ண கன்றட மார்பினுங் கல்லினன்
எண்ணெ யுண்ட விருள்புரை மேனியான்.

வன் பெண்ணை செறும்பில் பிறங்கி - வலிய பனஞ் சிறும்பு போல விளங்கி, செறி - அடர்ந்த, வல் மயிர் - கருநிறமுடைய வலிய மயிர்கள்,

வார்ந்து - உயர் - நீண்டு வளர்ந்துள்ள, முன் கையான் - முன் கைகளை உடையவன்; கண் அகல் - இடமகன்ற (பரந்த), மார்பு எனும் கல்லினன் - மார்பு என்கிற பாறையை உடையவன்; எண்ணெய் உண்ட இருள்புரை மேனியான் - எண்ணெய் ஊட்டப்பட்ட இருள் போன்ற (கருநிறம் வாய்ந்த) உடம்பை உடையவன்.

மார்பெனும் கல்! உருவகம்; கற்போன்ற மார்பு என்றபடி. குகனது உடம்பின் கருநிறத்தை, 'அற்செறிந்தன்ன நிறத்தினன்' (648) என முன்னே கூறியவர், அக்கருமை மினுமினுப்புடையது என்பார் 'எண்ணெயுண்ட இருள்புரை மேனி' என்றார். செறும்பு - சிரும்பு; சிலாம்பு எனவும் வழங்கும். பெண்ணை - பனை: வலிய உரோமத்துக்குப் பனஞ் செறும்பு: முருகு. 312 - 3; அகநா. 277; 7 - 8. இவை முறையே கரடி, பன்றி ஆகியவற்றின் வன்மயிரைக் குறிக்க வந்தன. "பனஞ் செறும் பன்ன பன்மயிர் முன்கை" (பெருங்: 2. 8. 107). கல் - மலையுமாம். "மலையார் மணி மார்பன்" (சீவக: 216).

(பி - ம்.) 2. வண்ண வார்மயிர்; வான்மயிர், வான்றுணை; முன் கையன்.
3. தடமார்பினன், திடமார்பெனும், கொடுமார்பெனும், கொடு மார்பகன்; கல்லினன், கல்வியன்; மு. கண்ணகன்றன்ன போலுங் கழலினன்.
4. எண்ணெய் வெல்லும்; இருள்புனை; மேனியன். (6)

653. கச்சொ டார்த்த கறைக்கதிர் வாளினன்
நச்ச ராவி னடுக்குறு நோக்கினன்
பிச்ச ராமன்ன பேச்சின னிந்திரன்
வச்சி ராயுதம் போலு மருங்கினன்.

கச்சொடு ஆர்த்த - அரைக்கச்சோடு பிணித்த, கறை - குருதிக் கறை படிந்த, கதிர் வாளினன் - ஒளி பொருந்திய வாளை உடையவன்; நஞ்சு அராவின் - நஞ்சுள்ள கொடும் பாம்பு போல, நடுக்கு உறும் நோக்கினன் - (கண்டோர்) நடுங்கத்தக்க பார்வையை உடையவன்; பிச்சர் அன்ன பேச்சினன் - பித்தர் போன்ற (இயைபற்ற) பேச்சுடைய வன்; இந்திரன் வச்சிராயுதம் போலும் மருங்கினன் - இந்திரனது வச்சிராயுதம் போன்ற (உறுதியை உடைய) இடையை உடையவன். ஆம் - உரையசை.

நச்சராவின் நடுக்குறு நோக்கு: "நச்செயிற் றரவி னோக்கின் மன்னரை நடுங்க நோக்கி" (சீவக. 2494).

வச்சிராயுதம் போலு மருங்கு: சிலப். 2: 48.

(பி - ம்.) 1. கச்சொடொத்த; கன்றகதிர் வாளினன்.
2. நச்சராவு நடுக்குறும்; நோக்கினன்.
3. பிச்சராமென்ன.
4. வச்சிராயுதமன்ன மனத்தினன்; வச்சிரம் புரைகின்ற வலியினன் (7)

654. ஊற்ற மேய்நற வூனொடு மீனுகர்
நாற்ற மேய நகையின் முகத்தினன்
சீற்ற மின்றியுந் தீயெழ நோக்குவான்
கூற்ற மஞ்சக் குமுறுங் குரலினன்.

ஊற்றம் ஏய் - ஊக்கந் தருகின்ற, நறவு - கள்ளையும், ஊனொடு மீன் - ஊனையும் மீனையும், நுகர் - உண்ணுதலால் (உண்டாகிற), நாற்றம் மேய - முடை நாற்றம் மிக்க, நகை இல் முகத்தினன் - விளக்கமில்லாத முகமுடையவன்; சீற்றம் இன்றியும் - கோபம் இல்லாமலேயும், தீ எழ நோக்குவான் - தீப்பொறி பறக்கப் பார்ப்பான்; கூற்றம் அஞ்ச - யமனும் அஞ்சும்படி, குமுறும் குரலினன் - அதிரும் குரலை உடையவன்.

கள்ளுண்போர், அஃது ஊக்கம் தருவ தென்பராகலின் 'ஊற்றம் ஏய் நறவு' என்றார். மேய - மேவிய; ஏய எனப் பிரித்துரைத்தலுமாம். நகை - சிரிப்பும் ஆம். கூற்றமும் என உயர்வு சிறப்பும்மை விரித்துரைக்கப்பெற்றது.

இப்பாடல் சில பிரதிகளில் இல்லை.

(பி - ம்.) 1. ஊற்றுமொய்நறவு, மொய்ந்நறவு, மென்னறவு, மென்னறை, ஊற்றுமென்றுற, ஊற்றுமென்ன, ஊற்றமேமிக, ஊற்றுமேமிக, ஊற்றுமேனறை, ஊற்று மொண்ணறவு.
2. நாற்றமெய்தி, நாற்றமெய்பன்; முகத்தினன்.
3. சீற்றமன்றியும்.
4. குமிறும். (8)

இராமன் இருந்த ஆச்சிரம வாயிலைக் குகன் அடைதல்

655. சுற்ற மப்புற நிற்கச் சுடுகணை
விற்று றந்தரை வீக்கிய வாளொழித்
தற்ற நீத்த மனத்தின னன்பினன்
நற்ற வப்பள்ளி வாயிலை நண்ணினன்.

(வள்ளலைக் காணப் பரிவாரங்களுடன் வந்த குகன்), சுற்றம் அப்புறம் நிற்க - பரிவாரத்தார் ஒருபுறமாக நிற்க, (தானும்) சுடுகணை - அழித்தற்குரிய அம்புகளையும், வில் - வில்லையும், துறந்து - நீக்கிவிட்டு, அரை வீக்கிய வாள் ஒழித்து - அரையிற் கச்சோடு கட்டிய வாளையும் அகற்றிவிட்டு (ஆயுதம் ஏதும் இன்றி), அற்றம் நீத்த மனத்தினன் - களங்கமற்ற மனமுடையனாகவும், அன்பினன் - (இராமபிரான்பால்) பேரன்புடையனாகவும், நல் தவம் பள்ளி வாயிலை நண்ணினன் - (இராமபிரான் தங்கியிருந்த) நல்ல தவச் சாலையின் வாயிலைக் குறுகினன்.

முனிவர்கள் தங்கும் தவச்சூழலில், கொலைக்குரிய கருவிகளின்றி அடக்கத்தோடும், மனத் தூய்மையோடும் செல்லவேண்டுமாகலின்,

குகன், ஆரவாரத்துக்கு இடமான பரிவாரங்களையும், சேய்மையில் நிறுத்தி, தன் ஆயுதங்களையும் அகற்றிவிட்டுக் கையுறைப் பொருளோடும், உள்ளன்போடும் இராமபிரான் இருந்த இடத்தை அணுகினன். கணைவில் - கணையும் வில்லும்; உம்மைத் தொகை; சுடுகணை - பழுக்கக் காய்ச்சிய அம்பு என்றலுமாம். தவப்பள்ளி - தவம் செய்தற்குரிய இடம்.

சில பிரதிகளில் இவ்விடத்துக்கீழ்க்காணும் பாடல் ஒன்று உளது:

நின்றானெஞ்சி னிரம்புறு மன்பால்
இன்றே நின்பணி செய்திட விறைவா
நன்றே வந்தன னுயடி யேன்யான்
என்றே கூவின னெயினரி னிறையோன்.

'கூவினன்' என இதனுள் வருவது, 'கூவ' என்று தொடங்கும் பாடலோடு தொடர்புக்கேற்றதாயினும், இப்பாடலின் நடையை நோக்கும்போது இதன் தன்மை புலப்படும்.

(பி - ம்.) 1. மிற்கச் சுடுங்கணை, மிற்கத் தொடுகணை, மீக்கிச் சுடுகணை.
2. விற்றுறந்தனன்; வாளொழிந்து, வாளொரீஇ.
4 வாயிலின், வாயலே. (9)

656. சிருங்கி பேர மெனத்திரைக் கங்கையின்
மருங்கு தோன்று நகருறை வாழ்க்கையன்
ஒருங்கு தேனொடு மீனுப காரத்தன்
இருந்த வள்ளலைக் காணவந் தெய்தினன்.

சிருங்கிபேரம் என - சிருங்கிபேரம் என்று (பெயருடையதாய்), திரை கங்கையின் மருங்கு தோன்றும் - அலைகளை உடைய கங்கையின் பக்கத்தில் விளங்கிய, நகர் உறை வாழ்க்கையன் - நகரத்தில் வாழும் வாழ்க்கையை உடையவன் (அவன்), இருந்த வள்ளலை காண - முனிவராச்சிரமத்தில் தங்கி இருந்த இராமபிரானைக் காணும் பொருட்டு, தேனொடு மீன் ஒருங்கு உபகாரத்தன் - தேனையும் மீனையும் ஒருங்கே கையுறையாகக் கொண்டவனாய், வந்து எய்தினன் - வந்து சேர்ந்தான்.

(647) அம்பிக்கு நாயகன், தொன்மையான், வில்லினன், தோளினன், (648) துடியன், நாயினன், அடியன், நிறத்தினன், ஈட்டினன், (649) படையினன், அம்பன், அம்பிக்கு நாதன், சுற்றத்தான், (650) குறங்கினன், நெடுமையினன், தோலன், புலிவாலினன், (651) கவடியன், கழலினன், புருவத்தான், (652) முன்கையான், கல்லினன், மேனியான், (653) வாளினன், நோக்கினன்; பேச்சினன், மருங்கினன், (654) முகத்தினன், நோக்கு

வான், குரலினன், (655) வாழ்க்கையன் (ஆன), (647) குகனெனும் நாமத்தான், (655) வள்ளலைக் காண உபகாரத்தனாய் வந்தெய்தினான் எனக் கூட்டி முடிக்க. அரசன், குரு, தெய்வம் ஆகியோரைக் காணச் செல்லும்போது வெறுங்கையுடன் செல்லலாகாதென்பது விதியாகலின், குகன், தன் கையிற் கிடைத்த தேனையும் மீனையும் காணிக்கைப் பொருளாகக் கொண்டு, சக்கரவர்த்தி குமாரனைக் காணவந்தான். உபகாரம் - காணிக்கைப் பொருள். குகனை, 'சிருங்கிபேரியர் கோன்' (1048) எனலால் அவன் அந்நகரத்தரசன் என்பது பெறப்படும்.

குகனைப்பற்றி இத்துணை விரிவான வருணனை வான்மீகத்துள் இல்லை. கங்கைக்கரையில் உள்ள சிருங்கிபேரபுரத்து அரசனும் வேடனுமான குகன் என்பவன், சக்கரவர்த்தி குமாரனான இராம பிரான் வந்திருத்தலைக் கேள்வியுற்றுத் தன் சுற்றத்தாருடன் அவனைக் காண வர, அஃதுணர்ந்த இராமபிரான் இலக்குவனோடு எதிர் சென்று அக்குகனைச் சந்தித்தனன் என்று அது கூறுகின்றது.

(பி - ம்) 1. சிருங்கபேரம், சிருங்கிபேரி, சிருங்கிவேரி, சிருங்கவேரி, சிருங்கு பேரம், சிருங்குவேரி, சிரிங்கவேரி, சிரிங்குவேரி, சிரிங்கிபேரி; எனத்திகழ், எனத்திரி, எனத்திருக்.
2. மருங்குதோன்றி; நகருடை வாழ்க்கையான்.
3. மீனுபகாரத்தான், மீனுபகாரத்தின்.
4. இருந்த நாயகற்காண. (10)

இலக்குவன் குகனை வினவுதல்

657. கூவ முன்ன மிளையோன் குறுகிநீ
யாவன் யாவென வன்பி னிறைஞ்சினான்
தேவ நுங்கழல் சேவிக்க வந்தனென்
நாவ வேட்டுவ னாயடி யேனென்றான்.

(வாயிலை நண்ணிய குகன்), கூவ - (தன் வருகையைத் தெரிவிக்கும் வகையில்) கூப்பிட, (குரல் கேட்டு) முன்னம் இளையோன் குறுகி - முதலில் இலக்குவன் குகனைக் கிட்டி, நீ யாவன் - நீ யார்? யா - வந்த காரியம் என்ன? என - என்று வினவ, அன்பின் இறைஞ்சினான் - (குகன்) அன்போடு வணங்கி, தேவ - ஐயனே; நாவம் வேட்டுவன் - ஓடங்களையுடைய வேடனாகிய நான், நாய் அடியேன் - (நுமக்கு) நாய் போல் அடிமையாக இருப்பவன், நும் கழல் சேவிக்க வந்தனென் - நும் திருவடிகளைச் சேவிக்க (இங்கே) வந்தேன்; என்றான் —.

தாழ்ந்தோர் மிக உயர்ந்தோரைக் காணவந்தவிடத்து, எட்டி நின்றுகொண்டு தம் வருகையைத் தெரிவிக்க, 'சாமீ தண்டம்! சாமீ அடியேன்!' எனக் கூவுதலை இக்காலத்தும் காணலாம். அம்முறையில் குகன் கூவ, அதுகேட்டு இலக்குவன் வெளியே வந்து அவனை விசாரிக்கலானான்; அவனும் தன்னைத் தாழ்வோடு தெரிவித்துக்

கொண்டான். யாவன், யா என்ற வினுவுக்கேற்றவாறு இன்னுன், இன்னதற்காக வந்தேன் என விடையிறுத்தான். நண்ணினுன்; கூவ என இயைக்க. இறைஞ்சினுன் : முற்றெச்சம்.

(பி - ம்.) 1. கூவாமுன்னம், முன்னர், கூவுமுன்ன மிளையோன், கூவமுன்னிளை யோனுங்; குறுகமீ, குறுகிவா.
2. ஆவான்யாரென, ஆவாயாரென, ஆவாய்யாரென, யாவன்யாரென, யாவனீயாரென; இறைஞ்சினன், அன்பிறைஞ்சினுன், அன்றிறைஞ் சினுன்.
3. தேவாநின்கழல், நின்கழற், நீள்கழல்.
4. நாவாய்வேட்டுவன், நாவாயேற்றிடும், நாவாவ்வேடுவன்; நானடி யேன். (11)

இலக்குவன் இராமனுக்குக் குகன் வரவுணர்த்தல்

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

658. நிற்றியீண் டென்று புக்கு நெடியவற் றொழுது தம்பி
கொற்றவ நின்னைக் காணக் குறுகின னிமிர்ந்த கூட்டச்
சுற்றமுந் தானு முள்ளந் தூயவன் றாயி னல்லன்
எற்றுநீர்க் கங்கை நாவாய்க் கிறைகுக னொருவனென்றான்.

தம்பி - (குகன் கூறியவை கேட்ட) இலக்குவன், ஈண்டு நிற்றி என்று - இங்கே (சற்று) நில் என்று (குகனைச்) சொல்லி, புக்கு - உள்ளே போய், நெடியவன் தொழுது - இராமபிரானை வணங்கி, கொற்றவ - அரசே, உள்ளம் தூயவன் - மனத் தூய்மையானவனும், தாயின் நல்லன் - தாய் போல் அன்புடைய நல்லவனும், எற்றும் நீர் கங்கை - கரையை மோதும் நீர்ப் பெருக்குடைய கங்கையில் (விடப்படுகிற), நாவாய்க்கு இறையவன் - ஓடங்களுக்குத் தலைவனும் (ஆகிய), குகன் ஒருவன் - குகன் என்னும் ஒருவன், நிமிர்ந்த கூட்டம் - பெருங்கூட்ட மான, சுற்றமும் தானும் - பரிவாரங்களும் தானுமாக, நின்னை காண குறுகினன் - தேவரீரைக் காண வந்துள்ளான், என்றான் - என்று தெரிவித்தான்.

குகனைச் சந்தித்து உரையாடும்போதே அவன் தன்மைகளை உய்த்துணர்ந்த இலக்குவன், அவனைக் குறித்து, 'உள்ளம் தூயவன்', 'தாயின் நல்லன்' என அறிவித்தான். தாயின் நல்லன் - தாயினும் நல்லவன் என்றலுமாம்.

(பி - ம்.) 1. நிற்றி யாண்டென்று சென்று; நம்பி.
2. கொற்றவனின்னைக், கொற்றவா நின்னைக்; நிமிர்ந்த கூட்டம், நிமிருங் கூட்டச், நிரந்த கூட்டச், நிறைந்த கூட்டச், கூற்றச்.
3. தாயினல்லான், நல்லோன்.
4. நாவாய்க் கிறையவன், நாவாயிறையவன். நாவாயேற்றுவான், நாவா நாயகன்; ஒருவன் வந்தான். (12)

குகன் வந்து இராமனைப் பணிதல்

659. அண்ணலும் விரும்பி யென்பா லழைத்திநீ யவனை யென்னப்
பண்ணவன் வருக வென்றான் பரிவினன் விரைவிற் புக்கான்
கண்ணனைக் கண்ணி னோக்கிக் கனிந்தன னிருண்ட குஞ்சி
மண்ணுறப் பணிந்து மேனி வளைத்துவாய் புதைத்து நின்றான்.

அண்ணலும் - இராமபிரானும், விரும்பி - (குகனைக் காண) விருப்பங்கொண்டு, நீ அவனை என்பால் அழைத்தி என்ன - நீ அவனை என்னிடம் அழைத்து வருக என்று பணிக்க, பண்ணவன் - நற்குணங்கள் அமைந்த இலக்குவன், வருக என்றான்-(குகனை அணுகி) உள்ளே வருக என்றான்; பரிவினன் - அன்பு மிக்கவனான குகன், விரைவில் புக்கான் - விரைவாக உள்ளே போய், கண்ணனை - (யாவர்க்கும்) கண் போன்ற இராமபிரானை, கண்ணின் நோக்கி - தன் இரு கண்களாரக் கண்டு, கனிந்தனன் - மனம் உருகினவனாய், இருண்ட குஞ்சி மண் உற பணிந்து - இருள் போலக் கறுத்த தன் தலைமயிர் தரையிலே பட வணங்கி எழுந்து, மேனி வளைத்து - உடம்பு (நிமிர்தலின்றிக்) குனிந்து, வாய் புதைத்து - (ஒரு கையால்) வாயைப் பொத்திக் கொண்டு, நின்றான் - (தன் பணிவு தோன்ற) நின்றான்.

அண்ணலும் என்ற உம்மை, முன்னே இலக்குவன் குகனை விரும்பினமை குறித்தது; இறந்தது தழுவிய எச்சமாகும். பண்ணவன் - பண்புகள் நிறைந்தவன். புக்கான் : முற்றெச்சம். கண்ணன் - கண்ணழகுடையவன் எனலுமாம். கண்ணின் நோக்கி - (அருள் நிறைந்த) கண்களால் அவன் தன்மையை உணர்ந்து என்றலுமாம். பெரியோர்பால் மரியாதை காட்டவேண்டிய முறையைக் குகன் செயலால் உணரலாம். இராமபிரான் கைகேயிமுன் நின்ற முறையைக் கூறுமிடம் (289) இங்கே நோக்கற் பாலது. கண்ணனை : "தன்னை யாவர்க்குங் கண்ண னென்றே, ஓதிய பெயர்க்குத் தானே உறுபொருளுணர்த்தி விட்டான்" (பால. 1145) என்பதும் அதன் விசேடக் குறிப்பும் பார்க்க.

(பி - ம்.) 1. எம்பாலழைத்தியால், அன்பாலழைத்திநீ; அவனையென்றான், என்பாலவனை நீயழைத்தியென்ப.
2. வருகவென்னப்; பரிவினின், பரிவினில்.
3. கண்ணவன் கண்ணின்; களித்தனனிருண்ட, களித்தனன் சுருண்ட.
4. மேனி வளைந்து, வணங்கி. (13)

குகனுடைய வணக்கமும் வேண்டுகோளும்

660. இருத்திநீ யென்ன லோடு மிருந்தில னெல்லை நீத்த
அருத்தியன் றேனு மீனு மமுதினுக் கமைந்த வாகத்
திருத்தினென் கொணர்ந்தே னென்கொறிருவுள மென்ன வீரன்
விருத்தமா தவரை நோக்கி முறுவலன் விளம்ப லுற்றான்.

(வணங்கி நின்ற குகனை இராமபிரான்), ஈண்டு இருத்தி என்ன லோடும் - இங்கே இரு என்று (ஓர் இடத்தைச் சுட்டிக்) கூறவும், இருந்திலன் - உட்காராதவனாய், எல்லை நீத்த அருத்தியன் - அளவு கடந்த அன்போடு, (இராமபிரானை நோக்கி), அமுதினுக்கு அமைந்த ஆக - தேவரீர் அமுது செய்தருளுதற்கேற்றவாறு, தேனும் மீனும் திருத்தினென் கொணர்ந்தேன் - தேனையும் மீனையும் தூயனவாக்கிக் கொண்டு வந்துள்ளேன்; திருவுளம் என்கொல் என்ன - தேவரீர் திருவுளம் யாதோ என்று கூற, வீரன் - இராமபிரான், விருத்தர் மாதவரை நோக்கி - முதியோரான பெருந்தவமுடைய முனிவர்களைப் பார்த்து, முறுவலன் - புன்னகை பூத்தவனாகி, விளம்பல் உற்றான் - சொல்லலானான்.

இராமபிரான் அன்போடு குகனை அமரும்படி கூறினாலும், தவசியர்க்கும் அரச குமாரனுக்கும் சமமாகத் தான் அமர்தல் தகுதியன்று என்று கருதிக் குகன் உட்காரவில்லை. தேனும் மீனும் தவவொழுக்கம் பூண்டுள்ள தான் உண்ணுதற் கேற்றனவல்ல என்பதை உணராமல், அன்பு மேலீட்டால் உண்ணும்படி வேண்டுகின்றானே என்று, பிரான் முனிவர் முகம் நோக்கி முறுவல் பூத்துக் குகனுக்குக் கூறலுற்றான்.

(பி - ம்.) 1. இருத்தி நீ யென்ன லோடும், என்றலோடும், இருத்தி யீண்டென்ற லோடும், இருத்தியாண் டென்றலோடும், இருத்தி யென்னறையன் சொல்ல; இருந்தனன்.
2. அருத்தியிற் றேனு மீனும், அருத்தியென்றேனு மீனும், அருத்தியன் றேனு மூனும்; அமுதினுக் கமைவதாகத், அமைந்தவாக்கித், அமுதுக் கென்றமைவதாகத்.
3. திருவுள்ள மென்ன வீரன், திருவுள்ள மென்னத் தீரன்.
4. நோக்கி முறுவலின், மேலவன், நோக்கு முறுவலின்; விளம்புகின்றான். (14)

இராமன் கூறுதல்

661. அரியதா முவப்ப வுள்ளத் தன்பினா லமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த வென்றா லமுதினுஞ் சீர்த்த வன்றே
பரிவினிற் றழீஇய வென்னிற் பவித்திர மெம்ம னோர்க்கும்
உரியன வினிதி னாமு முண்டனெ மன்றோ வென்றான்.

அரிய - அருமையானவையாய், தாம் உவப்ப - (பெறுவோர்) தாம் மன மகிழும்படி, உள்ளத்து அன்பினால் அமைந்த - மனத்தின் மெய்யன்பினால் உண்டான, காதல் தெரிதர - பெரு விருப்பம் வெளிப்பட, கொணர்ந்த என்றால் - (காணிக்கையாகக்) கொண்டு வந்தனவானால், அமுதினும் சீர்த்த அன்றே - (அவை) தேவாமிர்தத்தினும் சிறந்தன அன்றோ? பரிவினில் தழீஇய - (அவை) அன்போடு (நம்மால்) ஏற்றுக் கொள்ளப் பெற்றன; என்னின் - அவ்வாறாயின், பவித்திரம் - தூய்மை உடையனவே; எம் அன்னோர்க்கும் உரியன - எம்மைப் போன்ற

இம்முனிவர்க்கும் (உண்ணுதற்கு) உரியனவே; நாமும் இனிதின் உண்டனெம்-நாமும் (அவற்றை) இனிதாக உண்டவர்போல் ஆனோம், என்றான் - என்று கூறினான் இராமபிரான். அன்று, ஓ : அசை.

குகனது உள்ளன்பைக் குறிப்பால் உணர்ந்த இராமபிரான், அவன் கொணர்ந்த பொருள்கள் அப்போது தான் அங்கீகரித்தற்குரியன அல்லவாயினும், அவனது அறியாமை குறித்துச் சிறிது முறுவல் கொண்டு, அவன் மன நிறைவெய்துமாறு அவற்றைப் பாராட்டி அங்கீகரித்துக் கொண்டான்.

(பி - ம்) 1. அரியதாய்; உவப்பதுள்ளத்து; அன்பினான்; அமைத்த.
2. கொணர்ந்தது; சேர்த்ததன்றே, சேர்த்ததன்றோ, சேரிதன்றே, சிறந்தவன்றே,
3. பரிவினிற்றழிய, பரிவினிற்றந்த, பரிவினிற்றந்தது, பரிவினுற்றந்தது, பரிவினினீந்தது, பரிவினுற்றழீஇய.
4. உரியன வினித, உரிதென வினிதின, உரியன வென்று வாங்கி; உண்டனமெனவுவந்தான். (15)

662. சிங்கவே றனைய வீரன் பின்னருஞ் செப்பு வான்யாம்
இங்குறைந் தெறிநீர்க் கங்கை யேறுது நாளை யாணர்ப்
பொங்குநின் சுற்றத் தோடும் போயுவந் தினிது னூரில்
தங்கிநீ நாவா யோடுஞ் சாருதி விடிய லென்றான்.

சிங்கம் ஏறு அனைய வீரன் - ஆண் சிங்கம் போன்ற இராமபிரான், பின்னரும் செப்புவான் - மேலும் சொல்லுகின்றவன், யாம் இங்கு உறைந்து - நாங்கள் (இன்று) இங்கே தங்கி, எறி நீர் கங்கை - அலையெறியும் நீரையுடைய கங்கையை, நாளை ஏறுதும்-நாளைக் கடப்போம்; நீ—, யாணர் பொங்கும் நின் சுற்றத்தோடும் போய் - அழகு மிக்க உன் பரிவாரங்களுடன் (உன் ஊருக்குப்) போய், உவந்து இனிது உன் ஊரில் தங்கி - மகிழ்ச்சியோடு இனிதாக (இன்று) உன் ஊரில் தங்கி இருந்து, விடியல் - (நாளை) விடியலில், நாவாயோடும் சாருதி -(நாங்கள் ஏறிச் செல்லுதற்கேற்ற) ஓடத்துடன் இங்கே வருக, என்றான்—.

இராமபிரான் தன்னோடு மற்றிருவரையும் உளப்படுத்தி, 'நாங்கள் இன்று இங்கே தங்கி, நாளை விடியலில் கங்கையைக் கடந்து அப்பால் செல்ல நினைக்கின்றோமாதலால், நீ இப்போது உன் பரிவாரங்களுடன் உன் ஊருக்குப் போய் இன்பமாக இருந்து, நாளைக் காலையில் தக்க படகுடன் இங்கே வந்து சேர்க' என்று குகனைப் பணித்தான்.

செப்புவான் : வினையாலணையும் பெயர். யாணர் - அழகு; புது வருவாயும் ஆம்.

(பி - ம்.) 2. இங்கிருந்த; நாளை யாணர், நாளையின்னே, இதுவே நாளைப்.
3. றும் சுற்றத்தோடும்; போயுறைந்தினிதுன்னூரில், போவந்தினிதினூரில்.
4. தங்கிய நாவாயோடும், தங்கியே நாவாயோடு, தங்கிநாவாயினோடும்; விடியவென்றான். (16)

குகனது அன்பு மொழி

663. கார்குலா நிறத்தான் கூறக் காதலா னுணர்த்து வானிப்
பார்குலாஞ் செல்வ வுன்னை யிங்ஙனம் பார்த்த கண்ணை
ஈர்கிலாக் கள்வ னேனு னின்னலி னிருக்கை நோக்கித்
தீர்கிலே னான தைய செய்குவெ னடிமை யென்றான்.

கார் குலா(வு)ம் நிறத்தான் கூற - மேகம் போலும் (அழகிய) நிறமுடைய இராமபிரான் இவ்வாறு கூற, காதலான் - அன்பு மிக்க குகன், உணர்த்துவான் - (தன் கருத்தைத்) தெரிவிப்பவனாய், இ பார் குலா(வு)ம் செல்வ - இவ்வுலகம் முழுமைக்கும் உரிமை பூண்ட செல்வமுடையீர், உன்னை இங்ஙனம் பார்த்த கண்ணை - நும்மை இந்தக் கோலத்தில் பார்த்த என் கண்களை, ஈர்கிலா(த) - பெயர்த் தெறியாத, கள்வனேன் நான் - கள்வனான நான், இன்னலின் இருக்கை நோக்கி - பலதுன்பங்களுக்கு இடமான எனது இருப்பிடத்தை நோக்கி, தீர்கிலேன் - (நும்மைப் பிரிந்து) செல்ல மாட்டேன்; ஐய - என் ஐயனே, ஆனது அடிமை செய்குவென் - (என்னால்) ஆன அடிமைத் தொழிலை நுமக்குச் செய்துகொண்டு (இங்கேயே) இருப்பேன், என்றான்—.

தவக் கோலத்தில் இராமபிரானைக் கண்ட குகன் தன் மனத்தில் மூண்டெழுந்த துயரத்தால், 'ஐயனே, நும்மைப் பிரிந்து என்னுயிர் சேர்ந்தால் அஃது எனக்கு இன்பந்தருவதன்று; ஆதலால் நுமக்கு என்னால் இயன்ற குற்றேவல்களைச் செய்துகொண்டு இங்கேயே இருக்க விரும்புகின்றேன்' என்றான். 'நான் உண்மை அன்புடைய வனானால், நும்மை இங்ஙனம் கண்டவுடன் அவ்வாறு கண்ட என் கண்களை அகழ்ந்திருக்க வேண்டும்; அது செய்யாததனால் நான் பொய்யனே' என்று தன்னைக் குறைத்துக் கூறுகின்றான். இவற்றால், இராமபிரான் திறத்தில் குகனது ஈடுபாடு நன்கு புலனாகும். அன்பு மிகுதியால் ஆன விருப்பை(பக்தியை)க் 'காதல்' என்றார். அன்பு உள்ள வனைப் போல நடிப்பவனென்பதைக் குறிக்கக் கள்வனேன் என்றான்.

(பா - ம்.) 1. காதலன், காதலின், காதலால்.
2. செல்வநின்னை, செல்வனின்னை, செல்வவுன்னை, செல்வாவுன்னை; இங்கனம்.
3. ஈர்கலாக்; கள்வனேன் யான், கள்வனே யான், கள்வனேநான்; இன்னியல், நின்னயல், இங்கிலை.
4. தீர்கிலேன் ஆனதையா, ஈண்டிதைய; ஆண்டு மீண்டு, மீண்டுச், மீண்டும், ஈண்டதைய; தீர்கிலே னீதைய. (17)

இராமன் குகனை அன்று தம்மோடு இருக்கச் சொல்லல்

664. கோதைவிற் குரிசி லன்னான் கூறிய கொள்கை கேட்டான்
சீதையை நோக்கித் தம்பி திருமுக நோக்கித் தீராக்
காதல னாகு மென்று கருணையின் மலர்ந்த கண்ணன்
யாதினு மினிய நண்ப விருத்தியின் றெம்மோ டென்றான்.

கோதைவில் குரிசில் - மாலை சூட்டிய வில்லேந்திய இராமபிரான், அன்னுன் கூறிய கொள்கை கேட்டான் - அக்குகன் சொன்ன கோட்பாட்டைக் கேட்டு, சீதையை நோக்கி - பிராட்டியைப் பார்த்து, தம்பி திருமுகம் நோக்கி - தம்பியின் முகத்தையும் பார்த்து, தீரா காதலன் ஆகும் என்று - (இவன்) நீங்காத உள்ளன்பு உடையவனே ஆவான் என்று துணிந்து, கருணையின் - (அவன்பால் உண்டான) கருணையால், மலர்ந்த கண்ணன் - மலர்ச்சி பெற்ற கண்களை உடையவனாகி, (அவனை நோக்கி) யாதினும் இனிய நண்ப - எவற்றினும் இனிமையான நண்பனே, இன்று எம்மோடு இருத்தி - (நின் விருப்பத்தின்படி) இன்று எம்மோடு இருப்பாயாக. என்றான் —

இராமபிரான், குகனை அங்கீகரித்தலில் மற்ற இருவருடைய கருத்தையும் அறிதற் பொருட்டு அவர்களை நோக்கி, அவர்கள் முகக் குறிப்பால் அவர்கள் உடன்பாடு உணர்ந்து, அதன்மேல் அவன் விருப்பப்படி தங்கியிருக்க இசைந்தான். ஒருவனுக்கு யாதினும் இனியது அவன் உயிர்; அவ்வுயிர்போல் இனியன் குகன் என்பான், 'யாதினு மினிய நண்ப' என்றான். ''என்னுயி ரனையாய்நீ'' (691) எனப் பின்னர்க் கூறுதலும் காண்க. குரிசில் - ஆடவருட் சிறந்தோன். கேட்டான்: முற்றெச்சம். தீராக்காதலன் - நாம் கைவிடுதற்கரிய அன்பன் என்றலுமாம்.

(பி - ம்.) 1. கோதைவேற்குரிசில், கோதிலாதவனை நோக்கிக்.
2. நம்பி திருமுகம், நோக்கி நீங்காக்.
3. ஆகுமென்னுங்.
4. நண்பா, நம்ப, நம்பி; இருத்தியின்று, இருத்தியிங்கு, ஈங்கு. (18)

குகன் காவலுக்கு அமைதல்

665. அடிதொழு துவகை தூண்ட வழைத்தன னாழியன்ன
துடியுடைச் சேனை வெள்ளம் பள்ளியைச் சுற்றவேவி
வடிசிலை பிடித்து வாளும் வீக்கிவா யம்பு பற்றி
இடியுடை மேக மென்ன விணையடி யெய்தி நின்றான்.

(உடனிருக்க இசைவுபெற்ற குகன்) உவகை தூண்ட - மகிழ்ச்சி தன்னை உந்த, அடிதொழுது - (இராமபிரானுடைய) திருவடிகளை வணங்கி, ஆழி அன்ன - கடல் போன்ற, துடி உடை(ய) சேனை வெள்ளம் - துடி முழக்கமுடைய தன் சேனைப் பெருக்கை, அழைத்தனன் - அழைத்து, பள்ளியை சுற்ற ஏவி - தவப் பள்ளியைச் சூழ்ந்து காக்குமாறு ஏவி, வடி சிலை பிடித்து - (தானும்) எய்தற் கமைத்த வில்லைக் கையில் பிடித்து, வாளும் வீக்கி - (அரையில்) உடைவாளையும் பிணித்து, வாய் அம்பு பற்றி - கூரிய வாயையுடைய அம்பையும் (எய்தற்குச் சித்தமாகக்) கைக்கொண்டு, இடி உடை(ய) மேகம் என்ன - இடி முழக்கமுள்ள மேகம் போல (வந்து), இணை அடி எய்தி -

இராமபிரான் திருவடிகளை யணுகி, நின்றான் - (காவலுக்கு ஏற்றவாறு) நின்றான்.

குகன், அன்று அங்கே தங்கியிருக்க இசைவு பெற்றவுடன், மகிழ்ச்சியுற்று, முன்னே ஒருபுறமாக நிறுத்திய சேனையைக் கூவித் தவப் பள்ளியைச் சூழ்ந்து நின்று காக்கக் கட்டளையிட்டு, தானும் காவலுக்கு ஏற்றவாறு ஆயுதங்கள் தாங்கிச் சித்தமாக நின்றான்; இரவில் பாதுகாப்புக்காக இவற்றைச் செய்தான். இணையடி யெய்தி என்றது உபசார வழக்கு. அழைத்தனன்: முற்றெச்சம். துடி - (தலைவன் கட்டளையை எதிர்நோக்கிய) துடிப்பு என்றலுமாம்.

(பி - ம்.) 1. உவகை தூண்டி, தோன்ற; ஆழியென்னத், ஆளியென்னத், அமைத்தனனாழி யன்ன, ஆழியென்னத், ஆளியென்னத், அமைத்தனனுகியன்ன.
2. துடியிடைப் பள்ளியைச் சூழ, பள்ளியிற் சுற்ற.
3. அடுசிலை, வடுசிலை; மடித்து; வாயம்பும் பற்றி, வாயம்பு மாற்றி, விக்கினனம்பு பற்றி, பற்ற.
4. இடியுடையுருமே ரென்ன, இடியுடை முகிலிதென்ன, இடியுமிழுருமேறென்ன, இடியிடை மேகமென்ன; இணையடியிறைஞ்சி ஏத்தி, தொழுது, போற்றி, இவனடி தொழுது, இரைத்தவண் சாத்து. (19)

குகன் இராமன் வனம் போந்த வரலாறுணர்ந்து வருந்தல்

666. திருநகர் தீர்ந்த தன்மை மானவ தெரித்தி யென்னப்
பருவர றம்பி கூறப் பரிந்தவன் பையு ளெய்தி
இருகணீ ரருவி சோரக் குகனுமாண் டிருந்தானென்னே
பெருநிலக் கிழத்தி நோற்றும் பெற்றிலள் போலு மென்னா.

(குகன்) மானவ - மனுகுலத்து ஐயனே, திரு நகர் தீர்ந்த தன்மை தெரித்தி என்ன - செல்வ மிக்க அயோத்தி நகரைவிட்டு (இவ்வாறு) வந்த வகையைத் தெரிவிக்க என்று வேண்ட, தம்பி - இலக்குவன், பருவரல் கூற - துன்ப விளைவுபற்றிச் சொல்ல, (அது கேட்டு), பரிந்தவன் - இரங்கினவனான குகனும், பையுள் எய்தி - (மிக்க) துன்ப முற்று, என்னே - ஈதென்ன வியப்பு, பெருநிலம் கிழத்தி - பெரிய பூமிப் பிராட்டி, நோற்றும் - தவம் செய்தும், பெற்றிலள் போலும் - அதன் பயனை முழுதும் பெறவில்லை போலும்! என்னா - என்று சொல்லி, இருகண் நீர் அருவி சோர - இரண்டு கண்களிலும் நீர் அருவி போலச் சொரிய, ஆண்டு இருந்தான் - அங்கே நின்றிருந்தான்.

இராமபிரான் திருவவதாரம் செய்ய நோற்ற பூமிதேவி, அவன் ஆளும் பேற்றினைப் பெறவில்லையே என வருந்துகின்றான்.

(பி - ம்.) 1. தீர்ந்தவண்ணம்; மானவன் இளையவன், இளையவ, சேவக.
2. பருவரற்றம்பி; பரிந்தனன், பரிந்தன, பிரிந்தவன், கேட்டனன்; பையுளேந்தி.

3. குகனுமாடினிறி னென்றே, குகனுமாண்டிரங்கி கைந்தான், குகனுமாண்டிருந்தானென்னப்.
4. ேபாற்றுப்; போலுமென்றான். (20)

கதிரவன் மறைதல்

667. விரியிருட் பகையை யோட்டித் திசைகளை வென்று மேனின்
றொருதனித் திகிரி யுந்தி யுயர்புகழ் நிறுவி நாளும்
இருநிலத் தெவர்க்கு முள்ளத் திருந்தருள் புரிந்து வீந்த
செருவலி வீரனென்னச் செங்கதிர்ச் செல்வன் சென்றான்.

விரி - பரந்த, இருள் - இருள் போன்ற, பகையை ஓட்டி - பகைவரை யெல்லாம் தொலைத்து, திசைகளை வென்று - பத்துத் திக்குக்களிலும் தேர் செலுத்தி வெற்றிகொண்டு, மேல் நின்று - (எவர்க்கும்) மேலாக விளங்கி, ஒரு தனி திகிரி உந்தி - ஒப்பற்ற ஓராணைச் சக்கரத்தை எங்கும் செலுத்தி, உயர் புகழ் நிறுவி - உயர்ந்த புகழை நிலைநிறுத்தி, நாளும் - எந்நாளும், இரு நிலத்து எவர்க்கும் - இப்பெரிய உலகத்தில் உள்ள யாவருக்கும், உள்ளத்து இருந்து - அவரவர் உள்ளத்தில் இடம் பெற்றிருந்து, அருள் புரிந்து - (உயிர்களுக்கெல்லாம்) மிக்க அருளைச் செய்து, வீந்த - இறந்துபோன, செருவலி வீரன் என்ன - போரில் வல்ல வலிமை மிக்க வீரனான தசரதனைப் போல, செம் கதிர் செல்வன் - சிவந்த கிரணங்களையுடைய சூரியனும், சென்றான் - அத்தமித்தான்.

இப்பாடல், சூரியனுக்கும் தசரதனுக்கும் செம்மொழிச் சிலேடையாக அமைந்தது. தசரதனுக்குரியவாறு மேலே கூறப்பெற்றது. சூரியனுக்கு அமையுமாறு : பரந்த இருளாகிய பகையை அழித்து, எல்லாத் திக்குக்களையும் (தன் ஒளி பரப்பி) வெற்றிகொண்டு, ஆகாயத்தில் விளங்கித் தன்னுடைய ஒற்றை யாழித் தேரைச் செலுத்தி, மேலான புகழை நாட்டி, எக்காலத்தும் உலகத்து உயிர்களெல்லாம் தன்னை நினைத்துப் போற்றுமாறு அவரவர் மனத்தில் வீற்றிருந்து அருள் செய்து என்க. சூரிய உதய அத்தமனங்களைச் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு கூறும் முறையில், இங்கே, விண்ணுலகெய்திய தசரதனோடு ஒப்பிட்டுக் கூறுகின்றார். ஒரு தனித் திகிரி உந்துதல் - ஏக சக்ராதிபத்யம். "வெல்புகழ் மன்னவன் விளங்கிய வொழுக்கத்தான், நல்லாற்றி னுயிர்காத்து நடுக்கறத் தான்செய்த, தொல்வினைப் பயன்றுய்ப்பத் துறக்கம் வேட்டெழுந்தாற்போற், பல்கதிர் ஞாயிறு பகலாற்றி மலைசேர" - கலி. 118: 1 - 4 என்பது இங்கு ஒப்பு நோக்கத் தகும்.

(பி - ம்.) 1. விரியிடை பகையை.
3. இருநிலத்தவர்க்கும், இருநிலத்தோர்க்கும், விரிநிலத்தெவர்க்கும்; உள்ளம் இருந்தன னென்ன வித்த, வீய்ந்த, இருந்தன னென்பதி

யாரும், இருந்தன னென்ன வந்தச், திருத்தின் னென்ன விந்தச், இருந்தன னுகையாலிச்.

4. செருவலி வீரர் நோக்கும், வீரனேய்க்கும், செருவிலி வீரனென்னச், வீரனேய்க்கும், செருமலி வீரனென்னச், தெரிதரவீரனென்ன. (21)

இரவில் இலக்குவன் காவல் புரிதல்

668. மாலைவாய் நியமஞ் செய்ய மரபுளி யியற்றி வைகல்
வேலைவா யமுத ளுைம் வீரனும் விரித்த நாணற்
பாலவாம் பாரின்பாயல் வைகினர் பருவி லேந்திக்
காலைகாண் பளவுந் தம்பி யிமைப்பிலன் காத்து நின்றான்.

மாலைவாய் நியமம் - மாலைக் காலத்திற் செய்தற்குரிய கடன்களை, செய்ய மரபு உளி இயற்றி - செப்பமான முறைப்படி செய்து, வைகல் - பகல் கழிந்த (இராப்) பொழுதில், வேலைவாய் அமுது அன்னாளும்-பாற் கடலில் தோன்றிய அமுதம் போன்ற சீதா பிராட்டியும், வீரனும் - இராமபிரானும், விரித்த நாணல் பால ஆம் - நாணற்புல் பரப்பப் பெற்றதான, பார் இன் பாயல் - தரையாகிய இனிய படுக்கையில், வைகினர் - துயின்றனராக, தம்பி - இலக்குவன், பரு வில் ஏந்தி - பருத்த வில்லைக் கையில் தாங்கி, காலை காண்பு அளவும் - (மறுநாள்) காலைப் பொழுதைக் காணுமளவும் (விடியுமளவும்), இமைப்பு இலன் - கண் இமைத்தல் இல்லாதவனாய், காத்து நின்றான் - காவல் செய்து கொண்டு நின்றான்.

உளி : இடைச்சொல். வைகல் - கழிதல்; ஆகுபெயராய்ப் பகல் கழிந்த இராப்பொழுதை உணர்த்தியது. இராமன் இப்போது புல் பரப்பிய தரையையே இனிய படுக்கையாகக் கொண்டான்.

இதன்பின் உள்ள மூன்று பாடல்கள் இந்நூல் நிலையத்தின் முதலாய பதிப்பிலும், ஆழ்வார் திருநகர்ப் பதிப்பிலும், வை. மு. கோ. உரைப் பதிப்பிலும், பல ஏடுகளிலும் காணப்படுகின்றன; பிற பழைய பதிப்புக்களில் அவை இல்லாததோடு, ஈண்டைக்கு இன்றியமையா தனவும் அல்லவாகலின், மிகைப் பாடலாகக் காட்டப்படுகின்றன.

1. வெயில்விரி கனகக் குன்றத் தெழில்கெட விலகு சோதிக்
கயில்விரி வயிரப் பைம்பூண் கடுந்திறன் மடங்க லன்னான்
துயிலெனு மணங்கு வந்து தோன்றலு மவளை நாமே
எயிலுடை யயோத்தி மூதூ ரெய்துநா ளெய்து கென்றான்.

2. மறக்கண்வா ளிளைய வீர னுணையை மறுத்தல் செல்லா
உறக்கமா மாது மண்ண லுபயபங் கயங்கள் போற்றித்
துறக்கமா மென்ன லாய தூமதி லயோத்தி யெய்த
இறுக்குநா ளெந்தை பாத மெய்துவ னென்னப் போனாள்.

3. மற்றவ ளிறைஞ்சி யேக மாமலர்த் தவிசி னீங்காப்
பொற்றொடி யோடு மையன் றுயிறரு புன்மை நோக்கி
இற்றதோர் நெஞ்ச ளுகி யிருகணீ ரருவி சோர
உற்றவோ வியம தென்ன வொருசிலை யதனி னின்றான்.

(பி - ம்.) 1. மாலையாய்; செய்து; மரபுழி; இயற்றுவைகல், இயற்றிவங்க.
2. அமிர்தன்னானும்; விரித்த காளம், கான; இருந்த ஞான்று.
3. மாலைவாய்ப், மாலைவான், வாலவாம்; பள்ளிப்; புல்லிற்; பரலவாம் பான்மைப்; வைகினன்; வரிவிலேலேந்திக், லைவிலேலேந்திக்.
4. காலைவாயளவும்; இமைக்கிலன், இமைத்திலன். (22)

குகன் வருந்துதல்

669. தும்பியின் குழாத்திற் சுற்றுஞ் சுற்றத்தன் றொடுத்த வில்லன்
வெம்பிவெந் தழியா நின்ற நெஞ்சினன் விழித்த கண்ணன்
தம்பிநின் றானை நோக்கித் தலைமகன் றனிமை நோக்கி
அம்பியின் றலைவன் கண்ணீ ரருவிசோர் குன்றி னின்றான்.

தும்பியின் குழாத்தின் - யானைக் கூட்டம்போல, சுற்றும் சுற்றத்தன் - (தன்னை எப்போதும்) சூழ்ந்திருக்கும் பரிவாரங்களை உடையவனும், தொடுத்த வில்லன் - (எய்தற்குச் சித்தமாக) அம்பு தொடுத்த வில்லை உடையவனும், வெம்பி வெந்து அழியா நின்ற நெஞ்சினன் - வெப்பமேறிக் கொதித்து அழிகின்ற மனம் உடையவனும், விழித்த கண்ணன் - (இமையாது) விழித்த கண்களை உடையவனும், அம்பியின் தலைவன் - ஓடங்களுக்குத் தலைவனுமான குகன், தம்பி நின்றானை நோக்கி - (இமைத்தலின்றியும் சோர்வின்றியும்) நின்றவனான இலக்குவனைப் பார்த்தும், தலைமகன் - இராமபிரானது, தனிமை நோக்கி- (உடனிருத்தற்குரிய பரிவாரத்தார் ஒருவரும் இல்லாத) தனியான நிலையைக் கண்டும், கண்நீர் அருவி சோர் குன்றின் நின்றான் - கண்ணீ ராகிய அருவியைச் சொரியும் மலைபோல (அசைவற்று) நின்றான்.

தம்பி நின்றானை - நின்றான் தம்பியை என மாறிக் கூட்டுக. நிறம், தோற்றம், புடைபெயராமை ஆகியவற்றால் குகனுக்கு மலை உவமை. சுற்றும் - தவப்பள்ளியைச் சூழ்ந்து இருந்த எனவுமாம். குகனை, "தும்பி யீட்டம் புரைகிளர் சுற்றத்தான்" (649) என்றார் முன்னும். தலைமகன் - எவற்றிலும் தலைமை உடையவன்.

(பி - ம்.) 1. குழாத்துச் சுற்றும், குழாத்திற் சுற்றம்; சுற்றத்தான்; வில்லான்.
2. வெம்பிவெந்து; எரியாநின்ற.
3. தம்பிதன்றன்மை, தம்பிதன்றனிமை; தலைமகன்றகைமை, தலைமகன் றன்மை, தலைமகன்றன்னை, தலைமகன்றினிமைந் பார்த்த.
4. அம்பியினிறைவன், அம்பினன்றலைவன்; அருவிசோர். (23)

கதிரவன் தோற்றம்

670. துறக்கமே முதல வாய தூயன யாவை யேனும்
மறக்குமா நினைய லம்மா வரம்பில தோற்ற மாக்கள்
இறக்குமா றிதுவென் பான்போன் முன்னை நாளிறந்தான்பின்னுட்
பிறக்குமா றிதுவென் பான்போற் பிறந்தனன்பிறவாவெய்யோன்.

பிறவா வெய்யோன் - (உலகத்துயிர்கள் போலப்) பிறத்தல் இல்லாத சூரியன், வரம்பு இல தோற்றம் மாக்கள் - அளவற்ற பிறப்புக்களையுடைய உயிர்கள் எல்லாம், இறக்கும் ஆறு இது என்பான் போல் - இறக்கும் வகை இதுதான் என்று உலகத்தார்க்குக் காட்டுவான் போல, முன்னைநாள் இறந்தான் - முன் நாள் (மாலையில்) மறைந்தவன், பின்நாள் - வழிநாள் காலையில், பிறக்கும் ஆறு இது என்பான் போல் - (இறந்த உயிர்கள் மீண்டும்) பிறக்கும் வகை இது என்று (உலகுக்குக்) காட்டுவான் போல, பிறந்தனன் - உதித்தான்; (ஆதலால்) துறக்கம் முதல ஆய - சுவர்க்கம் முதலான, தூயன யாவையேனும் - நல்ல உலகங்கள் எவையாயினும், மறக்கும் ஆறு நினையல் - (அவற்றை அடைதலை) மறக்கும் வழியை நினைக்கக் கடவர். அம்மா : அசை; வியப்புணர்த்தியதுமாம்.

சூரியன் உலகத்து உயிர்கள் போலப் பிறத்தல் இல்லாதவன்; எனவே, இறத்தலும் இல்லாதவன். ஆயினும் அவன், 'உயிர்கள் எத்தகைய நல்லுலகெய்தினும், ஒரு குறித்த கால அளவுக்குப்பின் இறத்தலும் மீண்டும் பிறத்தலும் உண்டு' என்பதைத் தன் செயலால் உலகுக்கு உணர்த்துகின்றான். தன்னால் பகலும் இரவும் மாறி மாறி வருதல் போலவே உயிர்கட்குப் பிறப்பும் இறப்பும் வரும் என்பதைத் தன் உதய அத்தமனங்களால் காட்டுகின்றான்; எனவே, மீண்டு வந்து பிறத்தல் இல்லாத முத்தியையே எவரும் நாடவேண்டும். பிற நல்லுலகங்கள் எவையாயினும் அவற்றையடைய நாடுதல் தகாது என்பது புலனாகின்றது. நினையல் - நினைக்க; அல்லீற்று வியங்கோள்; "மக்கட்பதடியெனல்" என்றதனுட்போல உடன்பாடு குறித்தது. நினைக்குமாறு: இறுதி விகாரப்பட்டது. இறந்தான், பிறந்தனன் என்பன முறையே மறைதலையும் தோன்றுதலையும் குறித்தன. "தேய்த லுண்மையும் பெருக லுண்மையும், மாய்த லுண்மையும் பிறத்த லுண்மையும், அறியா தோரையும் அறியக் காட்டித், திங்கட் புத்தேள் திரிதரு முலகத்து" (புறநா. 27 : 11 - 14) என்பது இங்கே நோக்கத் தக்கது.

(பா. ம்.) 1. முதலவான, துறக்குமெய் முதலவாய; தூயவர்யாவர் தம்மை, யாருஞ் சிந்தை.
2. மறக்குமானிலையரம்மா, மறக்குமோ நினைமினம்மா, மறக்குமா நினைமினம்மா, நிலையாமம்ம, மறக்கவே நினைமினம்மா, நினையலம்மா; வரம்பில தோற்றமாக்கள், மக்கள், வரம்பிலர் சோக்குமாக்கள்

தோற்றுமாக்கள், வரம்பிலாத் தோற்றமாக்கள், வரம்பில தோன்றும் மாக்கள்.

3. முன்னர் நாள்; இறந்தான் மீளப்.

4. பிறக்கு நாள்; என்பார்போல்; பிறங்குவெய்யோன். (24)

671. சேஞ்செவே சேற்றிற் றேன்று ந் தாமரை தேரிற்றேன்றும்
வெஞ்சுடர்ச் செல்வன் மேனி நோக்கிய விரிந்த வேறேர்
அஞ்சன நாயி றன்ன வையனை நோக்கிச் செய்ய
வஞ்சிவாழ் வதன மென்னுந் தாமரை மலர்ந்த தன்றே.

சேற்றில் தோன்றும் தாமரை - சேற்றில் தோன்றும் செந்தாமரையின் மலர்கள், தேரில் தோன்றும் - ஆகாயத்தில் ஒற்றையாழித் தேரிலே வருகின்ற, வெம் சுடர் செல்வன் மேனி நோக்கிய - வெப்பமான கதிர்களையுடைய சூரியனது தோற்றத்தைக் கண்டனவாய், செம் செவ்வே விரிந்த - மிக அழகாக (செக்கச்செவேலென்று) மலர்ந்தன; வேறு ஓர் - (அச்செங்கதிர்ச் செல்வனினும்) வேறான ஒப்பற்ற, அஞ்சனம் ஞாயிறு அன்ன - கருஞாயிறு போன்ற, ஐயனை நோக்கி - இராமபிரானைக் கண்டு, செய்ய வஞ்சி - செவ்விய வஞ்சிக்கொடி போன்ற பிராட்டியின், வாழ் வதனம் என்னும் தாமரை மலர்ந்தது—. அன்று, ஏ : அசை.

தாமரை மலர்கள் தமக்கு நாயகனான கதிரவனைக் கண்டு மலர, பிராட்டியின் முகத் தாமரையும் தன் நாயகனைக் கண்டு மலர்ந்தது. கற்புடை மகளிர் காலையில் எழும்போது கடவுளான தம் கணவன்மாரைத் தொழுதெழல் முறையாகும். இராமபிரான், செஞ்ஞாயிற்றின் வேறாகத் தண்ணொளி பரப்பும் கருஞாயிறுபோல்வானாகலின், 'வேறோர் அஞ்சன ஞாயிறு' எனப்பட்டான். வஞ்சி : ஆகுபெயர். செஞ்செவே - செவ்வனே என்ற பொருளும் உடையது; ''செஞ்சவே கமலக் கையால் தீண்டலும்'' (பால. 973); ''செஞ்செவேநெடு மரகதப் பாறையிற் றெரிவ'' (759); ''செஞ் சவே முனிவரன் செப்ப'' (949) ''செஞ் சவே யாண்டாய் சிவபுரத் தரசே'' (திருவாசகம்: 28: 6). அஞ்சன நாயிறன்னவையன் ! ''கருநாயிறு போல்பவர்'' (பால. 1240): ''செந்தண் கமலக்கண் கைகால் சிவந்த வாயோர் கருநாயிறு, அந்தமில்லாக் கதிர்பரப்பி யமர்ந்த தொக்கு மம்மானே'' (திருவாய்மொழி. 8 . 5 : 7).

(பி - ம்.) 1. செஞ்செவ்வே, செஞ்சவே.

2. நோக்கின, நோக்கினன், நோக்கியே; பிரிந்த வேறோர், விரிய வேறோர், விரிந்தவென்றோர், விரிந்தவென்றே.

3. நாயிற்றன்ன, நாயறன்ன, ஞாயிறன்ன; நோக்கி வெய்ய.

4. வஞ்சியாள், வஞ்சிவாள், வஞ்சியா; என்னுமரவிந்தம். (25)

இராமன் படகுகொண்டுவரக் குகனை ஏவுதல்

672. நாண்முதற் கமைந்த யாவு நயந்தன னியற்றி நாமத்
தோண்முதற் கமைந்த வில்லான் மறையவர் தொடரப்போனன்
ஆண்முதற் கமைந்தகேண்மை யன்பனை நோக்கி யைய
கோண்முதற் கமைந்த நாவாய் கொணருதி விரைவி னென்ருன்.

தோள் முதற்கு அமைந்த - தோளிலே பொருந்திய, நாமம் வில்லான் - அச்சந்தரும் வில்லையுடைய இராமபிரான், நாள்முதற்கு அமைந்த யாவும் - நாளின் முற்பகுதியில் (காலையில்) செய்தற்குரிய கடமைகளையெல்லாம், நயந்தனன் இயற்றி - விரும்பிச் செய்து, மறையவர் தொடர - வேதம் வல்ல முனிவர் தொடர்ந்துவர, போனன் - அங்கிருந்து போதற்கு ஒருப்பட்டவனாகி, ஆள்முதற்கு அமைந்த கேண்மை அன்பனை நோக்கி - ஆளாக முதலிலேயே அமைந்த நட்புரிமையுடைய மெய்யன்பினனான குகனைப் பார்த்து, ஐய —, கோள் முதற்கு அமைந்த நாவாய் - (எம்மைக்) கொண்டு செல்ல முதன்மை யாக அமைந்ததோர் ஓடத்தை, விரைவின் கொணருதி என்ருன் - விரைவாகக் கொண்டுவருக என்று பணித்தான்.

குகன், இராமபிரானைக் கண்ட அளவிலேயே அவனுக்கு அடிமை செய்ய உறுதி பூண்ட உள்ளன்பு உடையவனாகலின், 'ஆள் முதற் கமைந்த கேண்மை அன்பன்' என்ருர். அயோத்தியிலிருந்து மீண்டும் எவரேனும் வருதல் கூடும் என்ற அச்சத்தால், இராமபிரான் விரைவில் கங்கையைக் கடந்து அப்பால் செல்லவேண்டுமென்ற கருத்துடன், 'நாவாய், விரைவின் கொணருதி' என்ருன்; நாவாயும், இடையே பழுதேதும் நேராதவாறு சிறந்ததாக இருத்தல் வேண்டும் என்பான் 'முதற்கமைந்த' என்ருன்.

நாள்முதற்கு - நாளின் முதலில்; உருபு மயக்கம்; ஆள் முதற்கு என்றதும் அது. தோள் முதற்கு: முதல், ஏழனுருபு.

(பி - ம்.) 1. அமைத்த; நயந்தனர்; இயற்றித்தாமத், இயற்றி ஏமத்.
2. தோண்முதற்றொடர்ந்த, முதற்கிடந்த; வில்லார், வில்லர்; போனர், போகி, போக்கி.
3. அமைந்தகேள்வியண்ணலை, ஐயனை; நோக்கி. (26)

குகனுடைய வேண்டுகோள்

(கலிவிருத்தம்)

673. ஏவிய மொழிகேளா விழிபுனல் பொழிகண்ணுன்
ஆவியு முலைகின்ரு னடியிணை பிரிகல்லான்
காவியின் மலர்காயா கடன்மழை யனையானைத்
தேவியொ டடிதாழாச் சிந்தனை யுரைசெய்வான்.

ஏவிய மொழி கேளா - (நாவாய் கொணருமாறு இராமபிரான்) பணித்த சொல்லைக் கேட்டு, அடி இணை பிரிகல்லான் - பெருமான் திருவடிகளைப் பிரியமாட்டாதவனான குகன், இழி புனல் பொழி கண்ணன் - கண்ணினின்றும் வழியும் நீர் சொரிந்தவனாய், ஆவியும் உலைகின்றான் - உயிரும் தடுமாறுகின்றவனாய், காவியின் மலர் காயா கடல் மழை அனையானை - கருங்குவளை மலர் காயாம்பூ கடல் மேகம் ஆகியவை போன்ற (இனிய) நிறம் அமைந்த திருமேனியையுடைய இராமபிரானை, தேவியொடு - சீதா பிராட்டியுடனே, அடி தாழா - திருவடிகளில் வணங்கி, சிந்தனை உரை செய்வான் - தன் கருத்தைச் சொல்வானானான்.

இராமபிரானைப் பிரிய மனமில்லாத குகன், அப்பிரான் கங்கையைக் கடந்தபின் அங்கே தங்காது சென்றுவிடக்கூடுமே என்று அஞ்சி, தன்னோடு தன் ஊரிலேயே தங்கி இருக்குமாறு பெரிதும் இறைஞ்சி வேண்டுகிறான். அதனை மேலே நான்கு பாடல்களிற் கூறுவார்.

கேளா: செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். பிரிகல்லான் - பிரி + கு + அல் + ஆன்; கு: சாரியை.

காவிரியின்......அனையானை: ஒப்பு: "பூவையும் காயாவும் நீலமும் பூக்கின்ற, காவிமலர்......எல்லாம் பிரானுருவே" (இயற்பா. பெரிய திருவந்தாதி: 73).

(பா - ம்.) 1. ஏவின; பொழிகண்ணன், சொரிகண்ணன்.
2. ஆவியும் அலைகின்றான், உகுகின்றான், கலிகின்றான், நைகின்றான்.
3. காவியினலர், காவியுமலர்க்; காசா, காசாக், காமர்க்.
4. அடிதாழச், இனிதாழாச்; உரைசெய்தான். (27)

674. பொய்ம்முறை யலராவெம் புகலிடம் வனமேயாம்
கொய்ம்முறை யுறுதாரோய் குறைவிலெம் வலியேமால்
செய்ம்முறை குற்றேவல் செய்குது மடியோமை
இம்முறை யுறவென்னு மினிதிரு நெடிதெம்மூர்.

கொய் முறை உறுதாரோய் - பூவைக் கொய்து முறையாகத் தொடுக்கப் பெற்ற மாலையை அணிந்த பெருமானே, பொய்ம்முறை அலரா(த) - பொய்யொழுக்க மில்லாத, எம் புகல் இடம் - எங்கள் இருப்பிடம், வனமே ஆம் - காடே ஆகும்; குறைவு இலெம் - (வாழ்க்கைக்கு உரிய பொருள்களில்) ஒரு குறைவும் இல்லாதேம் (நாங்கள்); வலியேம் - (தீங்குகளை எதிர்த்துத் தொலைக்கும்) வலிமை யுடையேம்; குறு ஏவல் - (நுமக்குச் செய்தற்குரிய) குற்றேவல்களை, செய்முறை செய்குதும் - செய்யவேண்டிய முறைப்படி செய்வோம்; (ஆதலால்), அடியோமை - நும் அடித் தொண்டர்களாகிய எங்களை, இ முறை உறவு என்னு - இவ்வடிமை முறையில்

(நுமக்கு) உறவு என்று கருதி, இனிது - இனிதாக, எம் ஊர் - எங்கள் ஊரிலேயே, நெடிது இரு - நெடுங்காலம் தங்கியிருப்பீராக.

இதுமுதல் நான்கு பாடல்கள் தொடர்ந்து முடியும்.

குகனுடைய தன்மைகளை இராமபிரான் உணர்ந்து அவனை நண்பனாக ஏற்றுக்கொண்டான். அப்பேறு பெற்ற குகன், 'என்னைச் சார்ந்தோரும் என்னைப் போலவே உண்மையுடையோர்; நும் திருவடித் தொண்டில் சிறிதும் குறையின்றிச் செய்வர்' என்று அவர் தன்மை கூறி, 'நீவிர் சென்று தங்கக் கருதுவது வனம்; எங்கள் இருப்பிடமும் வனமே யாதலால் இங்கே பதினான்காண் டென்பதின்றி எத்துணைக் கால மேனும் இனிதாகத் தங்கியிருக்கலாம்; அடிமை முறையால் எங்களை யும் உறவினராகக் கொண்டு, என் வேண்டுகோளை அங்கீகரிக்க வேணும்' என்கின்றான்.

(பி - ம்.) 1. பொய்முறை; இலராலெம், இலரேமெம், இலதாலெம், இலதாலென் இலதாலே, அலராலெம், இலிராலெம்; வனமேயால்.
2. கொய்முறை; உருதாரீர், அணிதாரீர், மலர்தாராய், மலர்தாரீர், அலர்தாராய், அலர்தாரீர், உறைதாரீர்; குறையிலம், குறைவில; வலியெம்மால்.
3. செய்முறை, செய்குவம்; அடியேமை; அடியேம்யாம்.
4. உறவென்ன, உறைவென்று; நெடிதம்மா, மு: உய்முறை பெறவும்மால் இனிதிருநெடிதும்மூர். (28)

675. தேனுள திணையுண்டாற் றேவரு நுகர்தற்காம்
ஊனுள துணைநாயே முயிருள விளையாடக்
கானுள புனலாடக் கங்கையு முளதன்றே
நானுள தனையுந்நீ யினிதிரு நாடெம்பால்.

தேன் உள - (எங்கள் வனத்தில்) தேன் வகைகள் மிக வுள; திணை உண்டு - திணையும் (நிறைய) உண்டு; தேவரும் நுகர்தற்கு ஆம் - அவை தேவர்களும் உண்ணுவதற்கு ஏற்ற பரிசுத்தமுடையனவாம்; விளையாட - உடனிருந்து குலாவ, ஊன் உள துணை - உடல் உள்ளளவும், நாயேம் உயிர்உள - நாய்போல் அடிமைப்பட்ட எங்கள் உயிர்கள் உள்ளன; கான் உள - (அழகிய) காடுகள் உள்ளன; புனல் ஆட கங்கையும் உளது அன்றே - நீராடுதற்குக் கங்கையும் உள்ளதன்றே? (ஆதலால்), நான் உள தனையும் - நான் உள்ளவரையில், நீ இனிது இரு - நீரும் (எம்மோடு) இனிதாகத் தங்கியிருப்பீராக; எம்பால் நாடு - எம்மிடம் நாட்டங் கொள்க. ஆல்: அசை.

'இனிதாக வாழ்தற்குரிய எல்லாப் பொருள்களும் எம்மிடம் உள்ளன; நாங்களும் உடன் இருந்து குலாவுவோம். ஆதலால் எம்மோடிருத்தலை மனங்கொள்க' என்று வேண்டுகின்றான். இவ்வாறே மேலும் கூறுதல் அடுத்த பாடலிலும் வரும். நான் உள தனையும் - நான் உயிரோடிருக்கும் வரையில்.

(பா-ம்.) 1. இனையுண்டாம்.
2. துணைவரயோம், நாயேன்; விளையாடும், வினையாடக்.
3. புனலாடும்.
4. நானுளதனையுநீ, தனைநீயும், யானுளதனையுந்நீர்; இனிதிரு நட வெம்பால், நட்பெம்பால், நலமெம்பால், நாளெல்லாம், நெடி தெம்பால், கடமெம்பால், இனிதுள நண்பாமால். (29)

676. தோலுள துகில்போலுஞ் சுகமுள தொடர்மஞ்சம்
போலுள பரண்வைகும் புரையுள கடிதோடும்
காலுள சிலைபூணுங் கையுள கலிவானின்
மேலுள பொருளேனும் விரைவொடு கொணர்வேமால்.

(எம்மிடம்) துகில்போலும் தோல் உள - மெல்லிய நல்லாடை போன்ற தோலாடைகள் உள்ளன; சுகம் உள - இன்பமுள்ள, தொடர் மஞ்சம்போல் பரண் உள - தூங்குமஞ்சம் போன்ற பரண்கள் உள்ளன; வைகும் புரை உள - தங்கும் இலைக்குடில்கள் உள்ளன; கடிது ஓடும் கால் உள - விரைவாக ஓடத்தக்க வலிய கால்கள் (எமக்கு) உள்ளன; சிலை பூணும் கை உள் - வில்லைப் பிடித்த கைகள் உள்ளன; (அதனால்) கலிவானின் மேல் உள பொருளேனும் - ஒலித்தற் பண்புடைய வானத்தில் உள்ள (அரிய) பொருள்களாயினும், விரைவொடு கொணர்வேம் - விரைவில் கொணர்ந்து தருவோம். ஆல் : அசை.

முன்செய்யுளிற் போலவே, தம்மிடம் உள்ள பொருள்களை யெல்லாம் கூறி, அவற்றின்மேலும், அங்கே கிடைத்தற்கரிய பொருள்கள் தேவையெனின், அவை எங்கிருப்பினும் விரைவில் கொணர்ந்து தரும் ஆற்றல் எம்மில் எல்லோருக்கும் உண்டு என்கின்றான். பரண் - தினை முதலியவற்றைக் காத்தற் பொருட்டு உயர்ந்த கால்களை நாட்டி, அவற்றின்மேல் குறுக்கு நெடுக்காகக் கோல்களைப் பிணைத்து இருப்பிடமாக்கி, மேலே புல்லால் வேயப் பெற்றவை. புரை - சிறு குடில். ஆகாயத்தின் பண்பு ஒலியாகலின், 'கலி வான்' என்றார்; கலித்தல் - ஒலித்தல்.

(பா-ம்.) 1. துயில்போதும், துயில்போலும்; சுதையுள, சுவையுள, துகளறு; சுடர்மஞ்சம்.
2. வைகப்; புனலுள.
3. கனிவானின்.
4. பொருளேலும், பொருள்யாவும், பொருடானும், பொருளானும். (30)

677. ஐயிரு பத்தோடைந் தாயிர ருளராணை
செய்குநர் சிலைவேடர் தேவரின் வலியாரால்
உய்குது மடியோமெங் குடிலிடை யொருநாணீ
வைகுதி யெனின்மேலோர் வாழ்விலை பிறிதென்றான்.

ஆணைசெய்குநர் - (என்) ஏவல் செய்வோரான, சில வேடர் - விற்பிடித்த வேடர்கள், தேவரின் வலியார் - தேவர்களினும் வலிமை மிக்கவராய், ஐ இருபத்தோடு ஐந்து ஆயிரர் உளர் - ஐந்நூறுயிரவர் உள்ளனர்; எம் குடில் இடை - எங்கள் குடிலில், நீ ஒருநாள் வைகுதி எனின் - தேவரீர் ஒருநாள் தங்கினாலும், அடியோம் உய்குதும் - அடியோங்கள் கடைத்தேறுவோம்; மேல் ஓர் வாழ்வு - அதனினும் மேலானதொரு பேறு, பிறிது இலை என்றான் - வேறில்லை (எமக்கு) என்றான். ஆல்: அசை.

'பொய்முறை' (677) என்று தொடங்கிய குகன்கூற்று 'பிறிதென்றான்' என்ற இதனோடு முடிவுறுகின்றது.

'இனிதிரு நெடிதெம்மூர்' என்றும், 'நானுளதனையும் இனிதிரு' என்றும் வேண்டிய குகன், இராமபிரான் விரைதற் குறிப்பை நோக்கி, 'ஒருநாளேனும் தங்கினால் அதுவே எங்களுக்குப் பெரும் பேறாம்' என்கின்றான். ஐ இருபது=நூறு; நூற்றோடு ஐந்து=நூற்றோடு உறழ்ந்த ஐந்து=ஐந்நூறு; ஐந்நூறுயிரம்; ஐந்திலட்சம். 'இத்துணைப் பெருந் தொகையினரும் வில்லில் வல்லவர்; என் ஆணைக்குட்பட்டவர் நும் ஏவல் செய்தற்குரியவர்' என்றான். தேவரின் வலியார் என்றது மிகுத்துக் கூறியது. நூற்றையாயிரவர் என்றும், இருபத்தையாயிரவர் என்றும் உரை கூறுவாருமுளர். "காலன்றான் ஐயைந்நூறுயிர முருவ மாயின மெய்யுறு தானையான்" (1005) என ஐந்திலக்கம் என்ற பொருள்பட ஆசிரியர் மேலே கூறுதலால், இங்கும் அவ்வாறு கொண்டு உரைக்கப் பெற்றது. விற்பிடித்த வேலையினான் (1022) என்பதும் நோக்கத்தகும்.

(பி - ம்.) 1. பத்தைந்தோடு; ஆயிர முளதானை.
2. செய்குனர் சிலைவேலர்; தெரிவரின்; வலியோரால், வலியேமால், வலியோமால்.
3. உய்குவம்; அடியேம்; ஒருநாணீர், நெடுநாணீர்.
4. வைகுதியெனின் மேலும், வைகுதிரெனின் மேலும், வைகுதிரிதன் மேலோர், இதின்மேலோர், வைகுதிரெனின்மேலோர்; வாழ்வில; மலைவிலை; பிறிதென்பான், பெரிதென்பான், பெரிதென்றான். (31)

இராமபிரான் கூறுதல்

678. அண்ணலு மதுகேளா வகநிறை யருண்மிக்கான்
வெண்ணிற நகைசெய்தான் வீரநின் னுழையாமப்
புண்ணிய நதியாடிப் புனிதரை வழிபாடுற்
றெண்ணிய சிலநாளிற் குறுகுது மினிதென்றான்.

அண்ணலும் - இராமபிரானும், அதுகேளா - குகன் கூறியவற்றைக் கேட்டு, அகம் நிறை அருள் மிக்கான் - திருவுள்ளத்தில் நிறைந்த பேரருளுடையவனாய், வெள்நிறம் நகை செய்தான் - வெள்ளிய முறுவல் பூத்து, (குகனை நோக்கி) வீர - வீரனே, யாம் - நாங்கள், அ புண்ணியம் நதி ஆடி - அந்தப் புண்ணிய நதிகளில் நீராடி, புனிதரை

வழிபாடு உற்று - தூயவரான முனிவர் பலரை வழிபடுதல் செய்து, எண்ணிய சில நாளில் - அறுதியிட்ட சில நாட்களில் (மீண்டு), இனிது நின்னுழை குறுகுதும் - இனிதாக உன்னிடம் வந்து சேர்வோம், என்முன்—.

குகனது அன்பு மேம்பாடு முற்றும் உணர்ந்த இராமபிரான், அவனிடம் மிக்க கருணையோடு, ''நீ எங்களை இப்போது இங்கே தங்கும்படி வற்புறுத்தல் தகாது; குறித்த கால அளவினிறுதியில், நாங்கள் மீண்டு வரும்போது, இங்கே வந்து தங்குவோம்'' என்று அவனுக்கு ஆறுதலாகக் கூறினான். 'ஆண்டவை பத்தும் நாலும் பகலலவோ'' என முன்னே கூறியதுபோல, இங்கும் 'எண்ணிய சில நாளில்' என எளிதாகக் கூறுகின்றான். மிக்கான்: முற்றெச்சம்.

இப்பாடல் ஒரு பிரதியில் இல்லை.

(பி - ம்.) 1. அகனிறை, அகனிடை, அவனிடை.
2. நகைசெய்தென்; நின்னுழையாமிப், வீரனின் னுழையாமிப், வீரமுழையாமப், வீரனுமுழையாமப், வீரமுமழியாமல்.
3. புனிதனை.
4. சிலநாளுட், சின்னாளில். (32)

குகன் கொண்டுவந்த படகில் மூவரும் ஏறுதல்

679. சிந்தனை யுணர்கிற்பான் சென்றனன் விரைவோடும்
தந்தன னெடுநாவாய் தாமரை நயனத்தான்
அந்தணர் தமையெல்லா மருளுதிர் விடையென்னா
இந்துவி னுதலாளோ டிளவலொ டினிதேறு.

சிந்தனை உணர்கிற்பான் - (இராமபிரானது) கருத்தை உணர்ந்த குகன், விரைவோடும் சென்றனன் - விரைவாகச் சென்று, நெடு நாவாய் தந்தனன் - பெரியதொரு படகைக் கொணர்ந்தான்; தாமரை நயனத்தான் - தாமரை இதழ்போலும் கண்களையுடைய இராமபிரான், அந்தணர் தமை எல்லாம் - (உடனிருந்த) அந்தணர்களையெல்லாம், விடை அருளுதிர் என்னா - எனக்கு விடை தந்தருளுங்கள் என்று சொல்லி (அஞ்சலி செய்து), இந்துவின் நுதலாளோடு - பிறைச் சந்திரன் போன்ற நெற்றியையுடைய சீதாபிராட்டியோடும், இளவலொடு - தம்பியோடும், இனிது ஏறு - மகிழ்ச்சியுடன் (ஓடத்தில்) ஏறி அமர்ந்து.

இதுவும் அடுத்த பாட்டும் குளகம். ஏறு, விடுநதி கடிதென்றான் என முடியும். அந்தணர் - அழகிய தண்ணளியுடையார்; முனிவர்கள். இந்து - எட்டாநாட்பிறை. இன்: உவமவுருபு.

(பி - ம்.) 1. சிந்தனையதுகொண்டே; விரைவோடு.
2. தந்தனநெடு.
4. இளவலும்; இனிதென்றான். (33)

படகின் செலவும் மறையோரின் நிலையும்

680. விடுநனி கடிதென்றான் மெய்யுயி ரனையானும்
முடுகின னெடுநாவாய் முரிதிரை நெடுநீர்வாய்க்
கடிதினின் மடவன்னக் கதியது செலநின்றார்
இடரறு மறையோரு மெரியுறு மெழுகானார்,

நனி கடிது விடு என்றான் - (ஓடத்தை) மிக விரைந்து செலுத்துக என்றானாக, மெய்உயிர் அனையானும்-(இராமபிரானுக்கு) உண்மையான உயிர்போன்ற (நட்புடைய) குகனும், முரி திரை நெடுநீர் வாய்-மடங்கி வரும் அலைகளையுடைய மிக்க நீர்ப்பெருக்கிலே, நெடுநாவாய் - பெரிய அவ்வோடத்தை, முடுகினன் - விரைந்து செலுத்தினன்; அது - அவ்வோடம், கடிதினில் - விரைவாக, மட அன்னம் கதி செல - இளவன்னநடைபோல(அழகாக)ச் செல்ல, நின்றார் - (கரையில்) நின்றவர்களான, இடர்அறு மறையோரும் - துன்பமற்ற முனிவர்களும், எரி உறும் மெழுகு ஆனார் - நெருப்பிற் சேர்ந்த மெழுகுபோல ஆனார்கள் (உருகினார்கள் என்றவாறு).

விடு - கடந்துவிடு என்றலுமாம். முடுக்கினன் எனற்பாலது ஓசை நோக்கி முடுகினன் என நின்றது. முரிதல் - மடங்குதல். ஓடம் விரைந்து சென்றாலும், அதன் செலவு அன்னநடை போல அழகாயிருந்தது. நின்றார்: வினையாலணையும் பெயர். நின்றார் வேடுவரெனினும் ஆம். இடர் அறு: (இன்ப துன்பங்களை ஒரு படித்தாகக் கருதுவோராகவின்) துன்பவுணர்ச்சி யற்ற. அத்தகையவரும் இராமபிரான் பிரிவால் வருந்தியுருகினர். உம்மை: உயர்வு சிறப்பு. "பருவரல் இன்பமென் றிரண்டும், ஒக்க நோக்கிய யோகரும் அருந்துயருழந்தார்" (509). நாவாயின் செலவிற்கு அன்னநடை: 1049, 1073.

(பா. ம்.) 1. விடுநதி; கடிதென்னா.
2. முடுகின நெடுநாவாய், முடுகிய நெடுநாவாய், முடுகினன் விட நாவாய்; முதிர்திரை, முதுதிரை; மொய்ம்பொடு.
3. கடிதினினிடையோடக், கடிதினின் மடனேகக், கடுகினன் மடவன்னக்; கதியிது; கருணையுள்ளவர் போனார்.
4. இடருற, இடருறு; எரியுறு மெழுகொத்தார், எரியிடை மெழுகானார். (34)

படகு செல்லுதல்

681. பாலுடை மொழியாளும் பகலவ னனையானும்
சேலுடை நெடுநன்னீர் சிந்தினர் விளையாடத்
தோலுடை நிமிர்கோலிற் றுழவிய நெடுநாவாய்
காலுடை நெடுஞெண்டிற் சென்றது கடிதம்மா.

பால் உடை மொழியாளும் - பாலும் தன் இனிமைக்குத் தோற்கத் தக்க இனிய சொற்களையுடைய பிராட்டியும், பகலவன் அனையானும் - சூரியனைப் போன்ற இராமபிரானும், சேல் உடை(ய) நெடு நல் நீர் - சேல் மீன்களையுடைய மிக்க நல்ல (கங்கை) நீரை, சிந்தினர் விளையாட - (அள்ளித்) தூவி விளையாட, தோல் உடை(ய) - (நுனியில்) தோல் இணைக்கப்பெற்ற, நிமிர் கோலின் துழவிய - நேரான தள்ளுகோலால் (நீரைத்) துழாவிச் செலுத்தப்பட்ட, நெடு நாவாய் - நெடிய படகு, கால் உடை(ய) நெடு ஞெண்டில் - பல கால்களையுடைய பெரிய நண்டு போல, கடிது சென்றது - விரையச்சென்றது. அம்மா : அசை.

இருபுறமும் நீரைத் துழாவித் தள்ளும் உந்து கோல்கள் நண்டின் கால்கள் போல் இருக்க, ஓடம் பெரியதொரு நண்டுபோல் இருந்தது என்ற கற்பனை அழகு நோக்கத்தக்கது. கோல், துடுப்பும் ஆம். தோல் உடைய - செலுத்தலுடைய என்று பொருள் கொள்வாரும் உளர்; தோலுட - ஓட்டுதல்; தெலுங்குச் சொல்.

படகிற் செல்லும்போது, இராமபிரான் வனவாசத்தை இனிது முடித்துக்கொண்டு சேமமாகத் திரும்பி வருகை குறித்துப் பிராட்டி கங்காதேவியைத் தொழுதனளென்று வான்மீகம் கூறுகின்றது.

(பி . ம்.) 1. பகலவன் மரபோனும்.
2. சேலுடை நெறிநன்னீர், சேலிடை நெடுநன்னீர், சேலுக நெடு நன்னீர்; விளையாடித்.
3. தோலிடை; துழவிடவெழு, துழவிடநெடு, துழவிடநடு, துழவின நெடு, துழவினனெடு; மு. கோலுடைமரமூன்றிக் கொண்டிட நெடுநாவாய்.
4. நெடுநண்டிற், தண்டிற், வலிதண்டிற்; சென்றன. (35)

மூவரும் கரையேறுதல்

682. சாந்தணி புளினத்தின் றடமுலை யுயர்கங்கை
காந்தின மணிமின்னக் கடிகமழ் கமலத்தின்
சேந்தொளி விரியுந்தெண் டிரையெனு நிமிர்கையால்
ஏந்தின ளொருதானே யேற்றின ளினிதப்பால்.

சாந்து அணி - சந்தனத்தை அணிந்த, புளினம் தடமுலை - மணற் குன்றுகளாகிற பெரிய தனங்களையுடைய, உயர் கங்கை - (பெருமையால்) உயர்ந்த கங்காதேவி, காந்தின மணிமின்ன - ஒளிவீசும் மாணிக்க மணிகள் மின்னுதலால், கடிகமழ் கமலத்தின் சேந்த ஒளி விரியும் நறுமணம் வீசும் தாமரை மலர் போலச் சிவந்து ஒளி பரவப்பெற்ற தெண்திரை எனும் நிமிர் கையால் - தெள்ளிய அலைகளென்னும் நீண்ட கைகளால், ஒரு தானே ஏந்தினள் - ஒப்பற்ற தானே (இராமபிரான் முதலியோர் சென்ற) ஓடத்தை ஏந்தி, அப்பால் - அக்கரையில், இனிது ஏற்றினள் - இனிதாகச் சேர்ப்பித்தாள்.

கங்கை, மிக்க ஆழமும் வேகமும் சுழிகளும் உடைமையால், தோணிகளைச் சேமமாகச் செலுத்தி மறுகரை சேர்த்தலின் அருமை குறித்துத் தானே இவர்கள் சென்ற தோணி, சேமமாக மறுகரை சேர்தற்குத் துணைபுரிந்தாள் என்கின்றார். சந்தனம், தனங்களுக்கு விசேடணம்; மணற்குன்றுகளுக்குக் கங்கை யீர்த்துவந்து ஒதுக்கிய சந்தன மரங்கள் அணி செய்தன என்க. அத்து, இன்; சாரியைகள். செவ்வொளி விரிந்த திரை என்றமையால், மணி மாணிக்கம் என்று கொள்க. கடிகமழ்தல், தாமரைக்கு விசேடணம்.

(பி - ம்.) 1. சாந்தணை, சாந்தளை; புளினத்திற்றடமலை, புளினத்தின் றடமலை; புரைகங்கை, புரைகொள்கை.
2. காந்தியின்; மணிமின்னும், மணிசோதிக்; கடிகமழகலல்குற், கடிகமழ்கரையல்குற், கடிகமழ் சுழியல்குல், கருணையின் வடி வோரைச்.
3. சேர்ந்தொளி, சேர்ந்தொளிர்; விரியுந்தண், விரியுந்திண், விரையுந் தண்; விரைகையால், கையாள், நுரைக்கையால்.
4. ஏந்தினனொருகாளே; ஏற்றினன், ஏறினன்; இனிதன்பால், இனி தின்பால், இனிதிப்பால், இனிதம்மா, அளிதன்பால், எளிதப்பால், எளிதன்பால். (36)

இராமன் கேட்கக் குகன் கூறுதல்

683\. அத்திசை யுற்றைய னன்பனை முகநோக்கிச்
சித்திர கூடத்திற் சென்னெறி புகலென்னப்
பத்தியி னுயிரீயும் பரிவின னடிதாழா
உத்தம வடிநாயே னோதுவ துளதென்றான்.

ஐயன் அ திசை உற்று - இராமபிரான் (கங்கையின்) தென் கரையைச் சேர்ந்து, அன்பனை முகம் நோக்கி - பேரன்பனான குகனைப் பார்த்து, சித்திர கூடத்தில் செல் நெறி புகல் என்ன - சித்திர கூடத்துக்குச் செல்லும் வழியைச் சொல்லுக என்று கேட்க, பத்தியின் - (இராமபிரான்பால் உள்ள) பத்தியினால், உயிர் ஈயும் பரிவினன் - (அவன் பொருட்டு) உயிரையும் கொடுக்கும் உள்ளன்புடைய குகன், அடி தாழா (பெருமானுடைய) திருவடிகளை வணங்கி, உத்தம - புருஷோத்தமா, அடிநாயேன் - உன் அடித் தொண்டனான நாயேன், ஓதுவது உளது என்றான் - விண்ணப்பித்தல் ஒன்றுண்டு என்றான்.

இராமபிரானைப் பிரிய மனமில்லாத குகன், இன்னமும் அப் பெருமானிடம் தன் ஆசையை விண்ணப்பிக்கக் கருதி, "அடிநாயேன் ஓதுவது உளது" என்றான்.

சித்திரகூட மலைக்குச் செல்லும் வழியைக் குகனிடம் கேட்டதாக வான்மீகத்துள் இல்லை. இராமபிரான் தங்குவதற்கு ஏற்றவிடம் அது என்று பரத்துவாச முனிவர் கூறியதாக அங்கே கூறப்பட்டுள்ளது.

(பி - ம்.) 1. உறவையன்; முகனேக்கிச்.
2. சித்திர கூடத்தின்; புகலென்னுப் பகரென்னப்.
3. பத்தியி லுயிருய்யும், பத்தியி லுயிரீரும்; அடிதாழ, அடிதாழ்ந்தே.
4. அடியேனுன், வடிவன்னுய்; கூறுவதுளதென்னு. (37)

குகன் விண்ணப்பம்

684. நெறியிடு நெறிவல்லே னேடினென் வழுவாமல்
நறியன கனிகாயு நறவிவை தரவல்லேன்
உறைவிட மமைவிப்பே னொருநொடி வரையும்மைப்
பிறியல னுடனேகப் பெறுகுவெ னெனினுயேன்.

நாயேன் உடன் ஏகப் பெறுகுவென் எனின் - அடியேன் உம்முடன் வரப் பேறு பெறுவேனுனல், (காட்டில்) நெறி - பெருவழிகளையும், இடு நெறி - சிறு (கிளை) வழிகளையும், வல்லேன் - (அறிந்து கூற) வல்லவனுவேன்; வழுவாமல் - பழுது படாமல், நறியன - நல்லனவான, கனி காயும் நறவு இவை - பழங்களும் காய்களும் தேனுமாகிய இவற்றை, நேடினென் தரவல்லேன் - (அவ்வப்போது) தேடிக் கொணர்ந்து தர வல்லவனுவேன்; உறைவு இடம் அமைவிப்பேன் - (அங்கங்கே) தங்குதற்குரிய குடில்களை (ஏற்றவாறு) அமைப்பேன்; ஒரு நொடிவரை - ஒரு நொடிப்பொழுதும், உமை பிறியலன் - உம்மைப் பிரிய மாட்டேன்.

இதுமுதல் நான்கு பாடல்களில் குகனது விண்ணப்பம் கூறப்படும். அவை நான்கும் ஒரு தொடர். தன் வேண்டுகோளின்படி தன்னூரில் தங்க இராமபிரான் மனங்கொள்ளாமை உணர்ந்தான், தன்னை உடனழைத்தேகுமாறு விண்ணப்பிக்கின்றுன். இடுநெறி = இடுகுநெறி - ஒடுக்கமான வழி. நெறி இடும் நெறி வல்லேன் - (வேண்டிய இடங்களில் புதிதாக) வழி அமைக்கும் வகையில் வல்லேன் என்றலுமாம். நேடினென் : முற்றெச்சம். நறியன : வினையாலணையும் பெயர். கனி, நறவு என்றவற்றின்பின் எண்ணும்மை விரிக்க. பிறியலன் : எதுகை பற்றிய விகாரம். பெறுகுவன் : கு, சாரியை. உடனேகப்பெறின் என்றது உடன்வர அருள் புரிதல் வேண்டும் என்னும் குறிப்பு.

(பி - ம்.) 1. நெறியிடுநெறி செல்வேன், நெறியறி குறிவல்லேன், நெறியிடை நெறிவல்லேன், நெறியெனில் நெறிவல்லேன், நெறிவெல்வேன்; நேடின, நேடிய, நெடியவன், நெடியன், நொடியினில், ஏவிய.
2. கறிகாயும், கறியாவும், காயுநல்; நறியன, நறுவிய, நன்றவை.
3. உறைவிடன், அமைவிப்பன், ஒரு நொடியளவும்மைப், நொடியவரை யளவும்மைப்; நொடிவரை வரையும்மைப், ஒருநொடிவரையளவு.
4. பிறிகிலென், பிரிகலென், பிறிவிலன்; பெறகுவெனினி நாயேன், இனியானே, பெறுகுவனினிநாயேன். (38)

685. தீயன வகையாவுந் திசைதிசை செலநூறித்
தூயன வுறைகானந் துருவினென் வரவல்லேன்
மேயின பொருளுடித் தருகுவென் வினைமுற்றும்
ஏயின செயவல்லே னிருளினு நெறிசெல்வேன்.

தீயன வகை யாவும் - தீய விலங்கு முதலியவற்றின் வருக்கங்களை யெல்லாம், திசை திசை செல்ல நூறி - பல திசைகளிலும் சென்று (தேடி) அழித்து, தூயன உறை கானம் - நல்லன வாழும் காடுகளை, துருவினென் வரவல்லேன் - ஆராய்ந்துவர ஆற்றலுடையேன்; மேயின பொருள் நாடி தருகுவென் - தேவரீர் விரும்பிய பொருள் (எது வாயினும்) தேடிக் கொணர்ந்து தருவேன்; ஏயின வினை முற்றும் செய வல்லேன் - தேவரீர் ஏவும் தொழில்களை முழுதும் செய்து முடிப்பேன்; இருளினும் நெறி செல்வேன் - (வேண்டும்போது) இருளிலும் வழி அறிந்து நடப்பேன்.

'தங்கும் இடங்களில் தீய விலங்கு முதலியவற்றால் தீங்கு நேராதவாறு அவற்றையெல்லாம் துருவித் தேடி அழித்துவிடுவேன்; இனிதாகத் தங்குதற்கேற்றவாறு நல்லுயிர்கள் வாழும் இடங்களை நாடியறிந்து வருவேன்' என்கின்றான். தீயன, தூயன, அவ்வவ்வகை உயிர்களைக் குறித்தன. வகை யாவும் என்பதனைத் தூயவற்றோடும் ஒட்டுக. தீயன - சிங்கம், புலி, கரடி, பாம்பு முதலியன. தூயன - பசு, மான், மயில் முதலியன. செல - சென்று; எச்சத் திரிபு. ஏயின வினைமுற்றும் என மாறுக.

(பி - ம்.) 1. தியென; அவையாவும், உளயாவும், வயமாவும், வனமாவும்.
3. மேயன, மேவின; வினைமற்றும்.
4. ஏயன; செலவல்லேன், நெறிசெல்வன், நெறிசெய்வேன், நெறி வல்லேன், எறிவல்லேன். (39)

686. கல்லுவென் மலையேனுங் கவலையின் முதல்யாவும்
செல்லுவெ னெறிதூரஞ் செறிபுன றரவல்லேன்
வில்லின முளனென்றும் வெருவலெ னிருபோதும்
மல்லினு முயர்தோளாய் மலரடி பிரியேனால்.

மல்லினும் உயர் தோளாய் - மற்போரிலும் வல்ல உயர்ந்த தோள்களையுடைய ஐயனே, மலையேனும் கல்லுவென் - (நீர் பெறுதற் பொருட்டு) மலைப்பாங்கான இடமாயினும் (அங்கே) தோண்டுவேன்; கவலை முதல் நெறி யாவும் செல்லுவேன் - கவர்த்த வழி முதலான மலைப் பாதைகள் எவற்றிலும் செல்லுவேன்; (அவ்வாறு சென்று), தூரம் செறி புனல் தரவல்லேன் - நெடுந்தூரத்தில் உள்ள நீரையும் கொணர்ந்து தரவல்லேன்; வில் இனம் உளென் - வில் பலவற்றை உடையேன் (விற்பிடித்த சுற்றத்தார் பலரை உடையேன்); ஒன்றும் வெருவலென் - ஒன்றுக்கும் அஞ்சமாட்டேன்; இருபோதும் - (பகல், இரவு என்ற) இரண்டு காலங்களிலும், மலர் அடி பிரியேன் - (தேவரீருடைய) தாமரை மலரைப்போன்ற திருவடிகளைப் பிரிந்திரேன். ஆல் : அசை.

நீர் இன்றியமையாததாகலின், 'அஃதரிதான இடங்களில் அதனைப் பெறும் பொருட்டு மலையைக் கல்லி ஊற்றுண்டாக்கியோ, இடைஞ்ச

லான வழிகளில் நெடுந்தூரம் சென்றே, நல்ல நீரைக் கொணர்ந்து தருவேன்; அம்முயற்சியில் வரும் துன்பங்களுக்குச் சிறிதும் சலியேன்' என்கின்றான். இராமபிரான் விற்போரில் வல்லவனென்பது பிரசித்தம்; அவன் தோள்கள், அவன் மற்போரிலும் வல்லவனென்பதைத் தெரிவிக்கின்றன என்பான், 'மல்லினும் உயர்தோளாய்' என்றான். உம்மை, இறந்தது தழுவியது. கவலையின்: இன், வேண்டா வழிச் சாரியை. கவலையின் முதல் - கவலைக்கிழங்கு என்பாரும் உளர்; அதனைக் கொணர்தலை ஓர் அருஞ் செயலாகக் குறித்தல் அத்துணைச் சிறப்புடையதன்று.

(பி - ம்.) 1. கல்லுவன்; மலைமேலும்; கயிலையின்.
2. செல்லுவன், செல்லுவம், செல்குவன்.
3. வில்லின முளதொன்றும், வில்லினு முளதொன்றும், வில்லினு முளனென்றும், வில்லினுமுளெனென்றும், வில்லினு முன்னென்றும், வில்லியல்படையாகி, படையாதி, வில்லிறு முளனென்றும், வெல்லினுமுளனென்றும், வெருவலெனொருபோதும், வெருவலுனிரு போதும், மிகவுளேனொருபோதும், மிகவுளேனொருபோதும்.
4. பிரியேனான், பிரியாதேன். (40)

687. திருவுள மெனின்மற்றென் சேனையு முடனேகொண்
டொருவலெ னொருபோது முறைகுவெ னுளரானார்
மருவல ரெனின்முன்னே மாள்குவெ னழிகல்லேன்
பொருவரு மணிமார்பா போதுவெ னுடனென்றான்.

பொருவு அரு மணி மார்பா - உவமை வேறு கூறுதற்கரிய அழகிய திருமார்புடைய ஐயனே, திருவுளம் எனின் - தேவரீர் திருவுளச் சம்மதமானால், என் சேனையும் உடனே கொண்டு - என் படைகளையும் என்னுடன் அழைத்துக்கொண்டு, ஒருபோதும் ஒருவலென் உறைகுவென் - ஒரு பொழுதும் நும்மைப் பிரியாது தங்கியிருப்பேன்; மருவலர் உளர் ஆனார் எனின் - பகைவர் எவரேனும் (எப்போதாவது) உண்டானால், அழிகல்லேன் - அவர்களுக்கு அஞ்சிப் பின்னிடாமல் (பொருது), முன்னே மாள்குவென் - (வெற்றி கிட்டாவிடில்) நுமக்கு முன்னே நான் மாள்வேன்; (இக்காரணங்கள்பற்றி), உடன் போதுவென் - உம்முடன் வருவேன் (வர அருள் புரிதல் வேண்டும்); என்றான் —. குகன் என்பது அதிகாரத்தால் கொள்க. மற்று: அசை.

குகன், எங்ஙனமேனும் இராமபிரானைப் பிரியாதிருத்தல் வேண்டுமென்று கருதி ஆராமையால் கூறியவை இதுகாறும் நான்கு பாடல்களில் கூறப்பெற்றன. புண்ணியப் புனலாடிப் புனிதரை வழிபட்டுத் தூய வாழ்வு கொள்ளக் கருதும் ஐயனுக்குப் படைகளின் ஆரவாரம் பொருந்துமோ என்ற ஐயத்தால், 'திருவுளமெனின் என் சேனையையும் உடனே கொண்டு வருவேன்' என்றான்.

(பி - ம்.) 2. ஒருவலெனிருபோதும், ஒருவலெனெப்போதும், ஒருவிலனிரு போதும்; உறைகுவர்; உளரானோர்.
3. மருவலருளரானல், மருவலரவரெல்லாம்; மான்குவென் மிகையல லேன், மிகையில்லேன், வசையில்லேன், வசையல்லேன், மாபிகு வென் வசையில்லேன், மடிவுறு மறம்வல்லேன், மான்குவெனெறி கல்லேன், மிகைவல்லேன். (41)

இராமபிரான் குகனைத் தோழனென்றல்

688. அன்னவ னுரைகேளா வமலனு முரைநேர்வான்
என்னுயி ரனையாய்நீ யிளவலுன் னிளையானிந்
நன்னுத லவணின்கே ணளிர்கட னிலமெல்லாம்
உன்னுடை யதுநானுன் றொழிலுரி மையினுள்ளேன்.

அன்னவன் உரை கேளா - அக்குகன் வார்த்தைகளைக் கேட்டு, அமலனும் - குற்றமற்ற இராமபிரானும், உரை நேர்வான்-(அவனுக்கு) மறுமொழி கூறுவானாகி, நீ என் உயிர் அனையாய் - நீ என்னுயிர் போல் வாய் (நான் வேறு நீ வேறு அல்லேம்); இளவல் உன் இளையான்-இந்தத் தம்பி உன் தம்பியாவான்; இ நல்நுதலவள் நின் கேள் - அழகிய நெற்றியை உடைய இந்தச் சீதை உனக்கு உறவினளாவாள்; நளிர் கடல் நிலம் எல்லாம் உன்னுடையது - குளிர்ந்த கடல் சூழ்ந்த இந்நாடாட்சி முழுதும் உன்னுடையதாகும்; நான் உன் தொழில் உரிமையின் உள்ளேன் - நானும் உன் தொழிலுக்குரிமையுடையவனா யிருக்கின்றேன்.

இதுமுதல் நான்கு கவிகள் ஒரு தொடர். குகன் தன்னுடன் வருதலைத் தவிர்த்து அங்கேயே இருத்தல் வேண்டுமென்பதனைத் தக்க காரணங்களுடன் இராமபிரான் கூறுவதை அவற்றிற் காணலாம். 'நமக்குள் வேற்றுமையின்றிக் கலந்து ஒன்றுபட்டு விட்டோமாதலால், என்னுடையனவும் உன்னுடையன, உன்னுடையவும் என்னுடையனவே; நமக்குள் யார் யாருக்குப் பணிசெய்வது என்பதில்லை; நீயும் எனக்குச் செய்யவேண்டியவன்; அங்ஙனமே நானும் உனக்குரியவன்; ஆதலால், மேல் நிகழ வேண்டியவற்றை நாம் கலந்து செய்வோம்' எனச் சாதுரியமாகக் குகன் மனங்கொளக் கூறுகின்றான் அண்ணல். 'நான் உன் தொழிலுரிமையினுள்ளேன்' என்றது, 'நீ செய்யும் பணிகளை நான் ஏற்றற்குரிமையுடையேன்; அங்ஙனமே நான் உனக்குத் தொழில் செய்தற்கும் நீ உரியாய்' என்ற இருபொருள் படுமாறு அமைந்துள்ளது. நம்மில் வேற்றுமையில்லை என்றதற்கேற்ப, உறவு முறைகளையும் குறித்தான். 'நின் கேள்' என்றது, உன் சகோதரன் மனைவி, கொழுந்தி என்பது குறித்தது. இதன் விளக்கம்போல் அமைந்துள்ளது, சுந்தர கண்டத்துள் பிராட்டி கூற்றாக வரும், "ஆழ நீர்க்கங்கை அம்பி கடாவிய, ஏழை வேடனுக் கெம்பியுன் றம்பிநீ, தோழன் மங்கை கொழுந்தி யெனச்சொன்ன, வாழி நண்பினை யுன்னி மயங்குவாள்" - (சுந்தர. 352).

என்பது: இந்நட்பினை வியந்து திருமங்கை மன்னன், "ஏழை யேதலன் கீழ்மக னென்னு, திரங்கி மற்றவற் கின்னருள் சுரந்து, மாழை மான்மட நோக்கியுன் தோழி உம்பி யெம்பியென் றொழிந்திலை யுகந்து, தோழ னீயெனக் கிங்கொழி யென்ற சொற்கள் வந்தடி யேன்மனத் திருந்திட, ஆழி வண்ணநின் னடியிணை யடைந்தேன்" (பெரிய திருமொழி. 5. 8: 1.) என்று மனமுருகிப் போற்றுகிறார்.

(பி - ம்.) 1. உரை செய்வான்.
2. என்னுயிரனையானீ, என்னுயிரனையாயிவ், இன்னுயிரனையாய்நீ, அனையாயிவ்; இளவலுமிளையானிந், இளவனின்னிளையானிந்த.
3. நன்னுதலிவள் நின்கேள், நன்னுதலிவளுன்கேள்; களிகடல் நிலமெல்லாம், உலகெல்லாம், களிர்கடலுலகெல்லாம்.
4. நானின்; தொழிலுரிமையில், தொழிலுரிமையும், நானுன்னுரிமை யுளனென்றான், உரிமையினுளனென்னு, உரிமையிலுளனென்றான், உரிமையுமுளனென்ன, தோழமையினினுள்ளேன். (42)

689. துன்புள தெனினன்றோ சுகமுள ததுவன்றிப்
பின்புள திடைமன்னும் பிரிவுள தெனவுன்னேல்
முன்புளெ மொருநால்வே முடிவுள தெனவுன்னு
அன்புள வினிநாமோ ரைவர்க ளுளராளேம்.

(இராமபிரான் பின்னும் கூறுவான்:) துன்பு உளது எனின் அன்றோ சுகம் உளது - துன்பம் உளதானாலன்றோ (அங்கே) சுகமும் உளதாகும்? அது அன்றி - அவ்வாறு எண்ணுதலன்றி, பின்பு உளது இடை - பின்னே உளதாகும் நம் இன்பக் கூட்டத்திற்கிடையில், பிரிவு மன்னும் உளது என உன்னேல் - பிரிவாகிய துன்பம் மிகவும் (நெடுங் காலம்) உள்ளதே என்றெண்ணாதே; முன்பு - உன்னைக் கண்டு கூடுமுன், ஒரு நால்வேம் உளெம் - (உடன்பிறந்தாராய்) நால்வர் உள்ளோம்; இனி - இப்போது, முடிவு உளது என உன்னு அன்பு உள நாம் - எல்லையுண்டென்று நினைத்தலாகாத (அளவுகடந்த)அன்புடைய நாம், ஓர் ஐவர்கள் உளர் ஆனேம் - ஐந்து பேர் அவ்வாறு (உடன் பிறந்தவராய்) உள்ளவராகிவிட்டோம்.

இராமபிரான், குகன்பால் கொண்ட சகோதரபாவத்தை மீண்டும் வலியுறுத்துகின்றான். 'வெயில் இருந்தால்தான் நிழலின் அருமை தெரியும்; அதுபோலத் துன்பமிருந்தால்தான் இன்பமும் சிறப்புறும். இது உலக நியதி. எனக்கு வனவாசம் துன்பமென்றோ, என் பிரிவு உனக்குத் துன்பமென்றோ எண்ணாதே; நம் அன்புப் பிணிப்பு எப்போதும் உளதாகும்' என்கின்றான்.

துன்புளதெனினன்றோ சுகமுளது: "துன்பமுற்றவர்க் கல்லால் இன்பமில்லை" (சீவக. 579.) ஐவர்கள் உளராளேம்: "குகனொடும் ஐவராளேம் முன்பு" (யுத்த. 449).

(பி - ம்.) 1. துன்புள; எனிலன்றே, எனிலொன்றே, ஒன்றே, உண்டே, என லொன்றே, அது வன்றே; சுகமுள, சுகமெனல், சுகமெனில்; அதுவன்றிப்.
2. பின்புளதினி, பின்புள்தினில், பின்புளதினும், இன்புளதெனின்; விரிவுளது எனவுன்னேன்.
3. முன்புளவொரு, முன்புளதொரு; நால்வோம், நால்வர்; எனவுன்னல்,
4. அன்புளதினி, அன்புளமினி; உளரானேம். (43)

690. படருற வுளனும்பி கானுறை பகலெல்லாம்
இடருறு தகையாயோ யானென வுரியாய்நீ
சுடருறை வடிவேலாய் சொன்முறை கடவேனுன்
வடதிசை வருமந்நா ணின்னுழை வருகின்றேன்.

சுடர் உறை வடிவேலாய் - ஒளிதங்கிய கூரிய வேலை உடைய வனே, படர் உற - (என்னோடு) வருவதற்கு, உம்பி உளன் - உன் தம்பியாகிய இலக்குவன் உள்ளான்; கான் உறை பகல் எல்லாம் - நான் காட்டில் வசிக்கும் காலமுழுதும், யான் என உரியாய் நீ - நான் இருந்து காப்பது போலக் காத்தற்கு உரியவன் நீ; (ஆதலால்), இடர் உறு தகையாயோ - (என்னுடன் வந்தோ, அன்றி என் பிரிவு குறித்தோ) துன்புறத் தக்காயோ? (அல்லை); சொல் முறை கடவேல் - நான் சொல்லும் முறையை மீறாதே; நான் வடதிசை வரும் அ நாள் - நான் (மீண்டு) வடக்கு நோக்கி (நாட்டுக்கு) வரும் அந்நாளில், நின் உழை வருகின்றேன் - உன்னிடம் (நிச்சயமாக) வருவேன்.

'எனக்குத் துணையும் பாதுகாப்புமாக உடன் வருதற்கென்றே இலக்குவன் இருக்கின்றான்; அவனொருவனே போதும். வேற்றுமை யில்லாத நம்மில் ஒருவர், இங்கிருந்து நாடு காத்தல் வேண்டும்; அதற் குரியவன் நீ; ஆதலால் என் சொல் கடவாது இங்கிரு; நானும் சொன்ன சொல் கடவாது மீண்டு வரும்போது இங்கு வந்து தங்குவேன்' என்றான் இராமபிரான். தான் வருதலின் உறுதி குறித்தும், வருங்காலம் அண்மையிலுள்ளது போலத் தோற்றுதற்குமாக 'வருகின்றேன்' என நிகழ்காலத்தாற் கூறுகின்றான். தகையாயோ என்றதில் ஓகார வினா எதிர்மறை குறித்தது. கடவேல் நான், கடவேன் நான் என இருவகை யாகப் பிரித்தற்கேற்றவாறு அமைந்துள்ளதும் காணத் தகும். இப் பாடற் கருத்தின் விளக்கம் போன்றமைந்துள்ளது அடுத்த பாடல்.

(பி - ம்.) 1. படருறவுளனும்பி, படருறவுன்னும்பி; யானுறை.
2. இடருறல், இடரறு, இடர்படு, இடையுற; பகையாபோய், பகையோய் போய், பகைபாய்போ, பகைபாய்நீ, பகைபோய் நீ, படையாய் நீ, தலையாய் நீ.
3. சுடருறு வடிவேலோய்; தொன்முறை; கடவேனல், கடவேனே, கடவேன்யான்.
4. வருநாளில். (44)

691. அங்குள கிளைகாவற் கமைதியி னுளனும்பி
இங்குள கிளைகாவற் காருள ரிசையாய்நீ
உன்கிளை யெனதன்றோ வுறுதுய ருறலாமோ
என்கிளை யிதுகாவென் னேவலி னினிதென்றான்.

அங்கு உள கிளை காவற்கு - அங்கே (அயோத்தியில்) உள்ள சுற்றத்தாரைக் காத்தற்கு, அமைதியின் - ஏற்ற தகுதியோடு, உம்பி உளன் - உன் தம்பி பரதன் இருக்கின்றான்; இங்கு உள கிளை காவற்கு - இங்குள்ள சுற்றத்தாரைக் காத்தற்கு, ஆர் உளர் - (நீ என்னுடன் வந்துவிட்டால்) இங்கே யார் இருக்கின்றார்கள்? நீ இசையாய் - நீ சொல்; உன்கிளை எனது அன்றோ - உன் சுற்றமெல்லாம் என் சுற்ற மன்றோ? உறு துயர் உறல் ஆமோ - (அச்சுற்றத்தார் காப்பவரின்றி) மிக்க துன்புறுதல் தகுமோ? (ஆதலால்) என் ஏவலின் - என் கட்டளை யால், என் கிளை இது - என் சுற்றமாகிய இதனை, இனிது கா - (இங்கிருந்து) இனிது காப்பாயாக; என்றான் - என்று கூறி முடித்தான் இராமபிரான்.

'நான் இருந்து காத்தற்குரிய அயோத்தியில் பரதன் இருந்து காப்பான்; அவன் எல்லாத் தகுதியும் உடையவன். இங்குள்ள உன் ஊரும் சுற்றமும் எனக்கும் உரியனவாகலின், என் கட்டளையின்படி நீ இங்கிருந்து காத்தல் வேண்டும்; இங்கே காப்பாரின்றி மக்கள் துன்புற லாகாது' என்று கூறி முடித்தான் இராமபிரான். இவை நான்கு பாடல் களால், இராபிரான், குகன் தன்னுடன் வருதலைத் தவிர்த்தற்குத் தக்க காரணம் காட்டி அவனைத் தெருட்டினமை கூறப்பெற்றது.

(பி - ம்.) 1. அமைதியினுளனம்பி, அமைதியனுளனும்பி, அமையியவுளனும்பி.
2. காவற்யொருளர், இங்குள காவற்கும் யாருளர்; உரை செப்பாய், உரைசெய்வாய், அரசையா.
3. உங்கிளை.
4. எங்கிளை யிதுகா, என்கிளையதுகா; ஏவலினின்றென்றான், ஏவலினில் லென்றான், ஆணையினின்றென்றான். (45)

குகன் விடைகொள்ள மூவரும் மேலே செல்லுதல்

692. பணிமொழி கடவாதான் பருவர லிகவாதான்
பிணியுடை யவனென்னும் பிரிவினள் விடைகொண்டான்
அணியிழை மயிலோடு மையனு மிளையோனும்
திணிமர நிறைகானிற் சேணுறு நெறிசென்றார்.

பிணி உடையவன் என்னும் பிரிவினன் - (இவன் ஏதோ) நோயுடையவன் என்று கண்டோர் கூறுமாறு பிரிவுத் துன்பமுற்றவ னான குகன், பருவரல் இகவாதான் - அத்துன்பத்தினின்றும் நீங்காத வனும், பணிமொழி கடவாதான் - இராமபிரானின் கட்டளை மொழிகளைக் கடக்கமாட்டாதவனும் (ஆகி), விடை கொண்டான் - (இராமபிரான்

பால்) விடை பெற்றுக்கொண்டான்; (இப்பால்) அணி இழை மயிலோடும் - அழகிய ஆபரணங்கள் பூண்ட மயில் போலும் சாயலையுடைய பிராட்டியோடு, ஐயனும் - இராமபிரானும், இளையோனும் - இளையவனான இலக்குவனும், திணி மரம் நிறை கானில் - செறிந்த மரங்கள் நிறைந்த காட்டில், சேண் உறு நெறி - நெடுந்தூரம் செல்லுதற்குரிய வழியில், சென்றார் - நடந்து போனார்கள்.

இராமபிரானுடைய கட்டுரை வன்மையால், குகன் ஏதுங் கூற வகையின்றித் துயரோடு பிரியாவிடை பெற்று நிற்க, மூவரும் மேலே வழி நடக்கலாயினர் என்றவாறு.

பிரிவினன்: வினையாலணையும் பெயர். கடவாதான், இகவாதான்: முற்றெச்சம்.

(பி - ம்.) 1. பணிமொழி இகவாதான், இகவார்தாள், இகழாதான், இழவாதான்.
2. பிணியுடையன்னெனனும், பிணியுடையவரென்னும், பிணியுண்டமனனென்னும், மனனென்னும் பேதினன், பேரினன்.
3. மயிலாளும், மகளோடும், அணியிழை யவளோடும்; இளையானும்.
4. திணிமரனணி, திணிமரனிறை; சேணுறநெறி. (46)

குகப் படலம் முற்றும்.

8. வனம் புகு படலம்

வனத்துட் புகுந்து சென்றமை கூறும் படலம் என இதன் பொருள் விரியும். இராமபிரான் முதலிய மூவரும், கங்கையின் தென்கரையில் குகனை விட்டுப் பிரிந்து மேலே செல்லத் தொடங்கி, காடும் மலையுமான சில பகுதிகளைக் கடந்து, பரத்துவாசாச்சிரமம் சேர்ந்து, அங்கே அம்முனிவரால் உபசரிக்கப்பெற்று, அவர்பால் விடைகொண்டு, மேலும் தெற்கு நோக்கிச் சித்திரகூட மலையை அடையக் கருதிச் செல்லும் வழியில், ஒரு பாலைவனத்தைக் கண்டு, அதனைக் கடப்பது குறித்துச் சிந்தித்தபோது, அந்நிலம் குளிர்ந்து மருதம் போலாக, அதனையும் எளிதில் கடந்து சித்திரகூட மலையைக் கண்டனர் என்ற செய்தி இப்படலத்துட் கூறப்படும்.

இனிய காலம்
(கலிவிருத்தம்)

693. பூரியர் புணர்மாதர் பொதுமன மெனமன்னும்
ஈரமு முளதில்லென் றறிவரு மிளவேனில்
ஆரியன் வரவோடு மமுதள வியசீதக்
காருறு குறிவானங் காட்டிய தவணெங்கும்.

பூரியர் புணர் - கீழ்மக்கள் சேர்கின்ற, பொது மாதர் மனம் என - பொதுமகளிர் மனம்போல, ஈரமும் உளது இல் என்று அறிவு - சிறிதளவு ஈரமும் உள்ளதோ இல்லையோ என்று அறிதல், மன்னும் அரும் இளவேனில் - மிகவும் அரிதாகிய அவ்விளவேனிற் பருவத்தில், ஆரியன் வரவோடும் - இராமபிரான் (வனத்துள்) வந்தவுடன், அவண் எங்கும் - அவ்விடமெங்கும், அமுது அளவிய சீதம் கார் உறு குறி - (உயிர்களுக்கு) அமுதமாகிய நீருண்ட குளிர்ந்த மேகங்கள் வரும்(கார் காலத்தின்) குறியை, வானம் காட்டியது - ஆகாயம் தோற்றுவித்தது.

சிறிதளவு ஈரப்பசையுமின்றித் தரையெங்கும் வறளுதற்குக் காரணமான இளவேனிற் பருவத்தில், இராமபிரான் புகுந்த வனப்பகுதி, கார்ப்பருவம் வந்ததுபோலக் குளிர்ந்து காட்டியது. பசையற்ற தன்மைக்குப் பொதுமகளிர் மனத்தை உவமித்தார்; ''பொன்விலைப், பாவையர் மனமும்போற் பசையு மற்றதே'' (பால. 354) என்றதும் காண்க. 'ஈரம்' என்றது, இரக்கம், ஈரப்பசை என்ற இரு பொருள்படச் சிலேடையாக அமைந்தது. பொது மாதர் மனம் எனவும், அறிவு மன்னும் அரும் இளவேனில் எனவும் இயைக்க. இராமன் வனம்புகுந்த காலம் இளவேனிற் பருவமென்பது இதனாற் பெறப்படும். நல்லோர்

புகுமிடம் குளிர்ச்சியும் வளமும் உடையதாகும் என்பதை, "அறன் கானை யுறைகாடுகார், மின்னேற்று மழையுண்டு விளைவுண்டெனத் தேடும் விரகோதினுன்" (வி. பா. நிரைமீட்சி. 5) என்பதனுலும், நளன் கான் புகுந்தபோது அங்குற்ற நிலையை நைடதம் கூறும் வகையாலும் (கான்புகு படலம். 1-3) அறியலாம்.

(பி - ம்.) 1. பொதுமன மெனமன்னும், பொதுமன கலமென்னும், புதுமண மெனமன்னும், புதுமணமிதுவென்னும், புதுமன மெனமன்னும், புது வன மெனமன்னும், புலமணமென்னும், புலமனமெனமன்னும்.
2. ஈரமு முளதிலதென்று, ஈரமுமுளதென்றல், ஈரமதலதென்று, ஈர மிதிலனென்றன்று; இளவேனல், முதுவேனில், முதிர்வேனில்.
4. குறிமானக், குறிமாணக்; காட்டிய வனமெங்கும், காட்டியவல னெங்கும், காட்டினவனமெங்கும். (1)

மூவரும் செல்லுதல்

694. வெயிலிள நிலவேபோல் விரிகதி ரிடைவீசப்
பயின்மர நிழலீனப் பனிபுரை துளிவானப்
புயறர விளமென்கால் பூவள வியதெய்த
மயிலின நடமாடும் வழியினி யனபோனுர்.

வெயில் - சூரியன், விரி கதிர் - (தன்) பரந்த கிரணங்களை, இள நிலவேபோல் இடை வீச - இள நிலாப்போல மரங்களினிடையே வீசவும், பயில் மரம் நிழல் ஈன - அடர்ந்த மரங்கள் நிழலைத் தரவும், வானம் புயல் - வானத்திலுள்ள மேகங்கள், பனிபுரை துளி தர - பனி போன்ற (குளிர்ந்த) நீர்த்துளிகளைச் சிந்தவும், இளம் மென்கால் - மெல்லிய தென்றற் காற்று, பூ அளவியது எய்த - பூக்களில் அளாவி (நறுமணத்துடன்) வரவும், மயில் இனம் நடம் ஆடும் — மயிற்கூட்டம் ஆடுதற்கு இடமான, இனியன வழிபோனுர் - இனியனவான (காட்டு) வழிகளிலே (நடந்து மூவரும்) போனுர்கள்.

இவர்கள் போகும்போது, வறண்ட வெப்பமான காடும் குளிர்ந்த தாக, இன்னுத காட்டு வழிகளும் இனியனவாயின என்கின்ருர். கார்ப்பருவத் தோற்றம் காண்டலின், மயிலினம் காட்சிக்கினிதாக ஆடு தலையும் கூறினுர். இப்பாடல், "குறித்தமுகில் பந்தரிட்டுக் குறுந்துளி தூற் றிட ஆயர், தறித்தமர மத்தனையும் தழைத்தலர்ந்து பழுத்துதவ" என்ற அழகர் கலம்பகச் செய்யுளடிகளை நினைப்பூட்டுகின்றது.

(பி - ம்.) 1. விரிவுள கதிர்வீசப்.
2. பயன்மரம்; பரிபுரை, பலபுரை, பால்புரை, பலதளிர்: துளிமேகம், துளிவானில், துயில்மேகப்.
3. துயிறர, துயிறரா; பூவளவிய கந்தம், கெந்தம், தெய்வ, தேமா, பூவளவியதந்தம், பூவளவியதாக.
4. வழியினி யனபோனுன், வழியினி லவர்போனுர், வழியினினயல் போனுர், வழியினி னயல்போனுர், வழியினி னியல்போனுர். (2

இராமன் சீதைக்கு வனத்திலுள்ள காட்சிகளைக் காட்டுதல்

695. மன்றலின் மலிகோதை மயிலியன் மடமானே
இன்றுயில் வதிகோபத் தினம்விரி வனமெங்கும்
கொன்றைகள் சொரிபோதின் குப்பைகள் குலமாலைப்
பொன்றிணி மணிமானப் பொலிவன பலகாணாய்.

மன்றல் இன் மலிகோதை - நறுமணம் இனிதாக மிக்க கூந்தலையும், மயில் இயல் - மயில்போன்ற சாயலையும் (உடைய), மடமானே - இளமான் போன்றவளே, இன் துயில்வதி - இனிய துயில் கொள்கிற, கோபத்து இனம் விரி - இந்திரகோபப் பூச்சிகள் பரந்த, வனம் எங்கும் - இக்காடெங்கும், கொன்றைகள் சொரி போதின் குப்பைகள் - கொன்றை மரங்கள் சொரிந்த பூக்குவியல்கள் (கலந்து தோன்றுதல்), பொன் குலம் மாலை — பொன்னாலியன்ற சிறந்த மாலையில், திணி - செறிக்கப் பெற்ற, மணி மான - மாணிக்க மணிகள் போல, பொலிவன பல - விளங்குகின்ற பலவற்றை, காணாய் - நீ பார்.

இதுமுதல் பதினாறு பாடல்கள் ஒரு தொடர்.

பொன்னிறமுடைய கொன்றை மலர்களின்மேல் செந்நிறமுடைய இந்திரகோபப் பூச்சிகள் துயிலும் காட்சி, மாணிக்கக் கற்கள் பதித்த பொன்னாரம் போலக் காணப்படுகின்றது. கோபம்-இந்திரகோபம்; தம்பலப்பூச்சி; கார்காலத்தில் பல இடங்களிலும் காணப்படுவது. "கொண்டலெழ மின்னுடங்கக் கொடுஞ்சாபம் வளைவுறச்செங் கோபந் தோன்ற...கார்கால மானதெனக் களிக்கு மாலோ" (வி. பா. வசந்த.5) கொன்றை மலர்களைப் பொன்னிறம் பெற்றது எனல் கவி மரபு. அத்து: சாரியை. ஒப்பு : "நன்னெடுங் காந்தட் போதி னறைவிரி கடுக்கை மென்பூத், துன்னிய கோபத் தோடுந் தோன்றிய தோற்றந் தும்பி, இன்னிசை முரல்வ நோக்கி யிருநிலம் மலர்க்கை யேந்திப், பொன் னெடுங் காசை யீட்டிக் கொடுப்பதே போன்ற தன்றே" (கிட்கிந்தா.461.)

(பி - ம்.) 1. மலிகோதாய், மயில்கோதை; மயிலின மடமானே, மயிலியலின மானே, மயிலிய லியன்மானே; மயிலியன் மடமாதே, மயிலியலின மாதே.
2. கோபத்தினம் விரவின வெங்கும், விரிவன வெங்கும், அவிர்வன மெங்கும், அவிர்வனவெங்கும்.
3. குப்பைகொள் குலமாலை, குப்பைகள் குவிமாலை, குவிமாமை, குப்பைகளணிமாலைப், குப்பைகளினமாலைப், குப்பைகளென மாலைப். (3)

696. பாணின மிஞிருகப் படுமழை பணையாக
நாணின தொகுபீலி கோலின நடமாடல்
பூணிய னினசாயற் பொலிவது பலகண்ணிற்
காணிய வெனலாகுங் களிமயி லிவைகாணாய்.

களி மயில் இவை-(கார்கண்டு) களிக்கும் இம்மயில்கள், இள மிஞிறு பாண் ஆக - இளவண்டு பாணருகவும், படுமழை பணே ஆக- முழங்கும் மேகம் மத்தளமாகவும் (கொண்டு), நாணின தொகு பீலி கோலின – சாய்ந்து குவிந்த (தம்) தோகைகளை விரித்துக்கொண்டு, நடம் ஆடல்-நர்த்தனம் பண்ணுதல், பூண் இயல் நின சாயல் பொலிவு அது-ஆபரணங்களணிந்த உன் சாயலின் விளக்கத்தை, பல கண்ணில் காணிய எனல் ஆகும் - (தோகையில் உள்ள இமையாத) பல கண்களாற் காணும் பொருட்டென்னலாம்; காணுய் – (அந்தக் காட்சியைக்) காண்பாயாக.

மயிலின் தோகையில் அமைந்த பீலியைக் கண் என்பர். அவை குவிதலும் விரிதலும் இல்லாதன. கார் வரவு கண்டு களித்துத் தோகை விரித்து ஆடுதல் மயில்களின் இயல்பு; அவ்வாறு இயல்பாக மயில்கள் ஆடியதைப் பிராட்டியின் அழகைத் தம் இமையாத பல கண்களாற் காணும் பொருட்டு அவை தோகை விரித்தாடின எனத் தற்குறிப்பேற்ற மாக்குகிருர். மயில்கள் ஆடுதலுக்கு அங்கமாக, வண்டுகளின் இசையும் மேக முழக்கமாகிய முழவும் அமைந்தன. மிஞிறு - வண்டின் ஒரு வகை; இது ஞிமிறு எனவும் வழங்கும். பிராட்டியின் அழகைக் காணப் பற்பல கண்கள் வேண்டுமெனல்:''கமையாள் மேனி கண்டவர் காட்சிக் கரைகாணுர், இமையா நாட்டம் பெற்றில மென்ருர் இருகண்ணுல், அமையா தென்ருர் அந்தர வானத் தவரெல்லாம்'' (பால. 581).

(பி - ம்.) 1. பாணின ஞிமிருகப், பாணிள ஞிமிருகப், பாணின மிஞிருகப், பாணிகன் ஞிமிருகப்; படுபணே, பணேகமை, பனிமுகில்; மழையாக, முழவாகூ
2. தொடுபீலி; கோலின நடமாடும், நடமாட, நடமாடப், காலின நடமாடப், கேகைய நடமாடப், தோகைகள் நடமாட, நடமாடல், தோலின நடமாடும்.
3. பூணிய நினசாயல், பூணின நினசாயல், சில சாயல்; பொலிவுறு பல கண்ணில், பொலிவுறு மதுகண்ணில், பொலிவுறு வதுகண்ணில்,
4. களிமயிலவை. (4)

697. நெய்ஞ்ஞிறை நெடுவேலி னிழலுறு திறமுற்றிக்
கைஞ்ஞிறை நிமிர்கண்ணுய் கருதின வினமென்றே
மெய்ஞ்ஞிறை விரிசாயல் கண்டுநின் விழிகண்டு
மஞ்ஞையு மடமானும் வருவன பலகாணுய்.

நெய்ஞிறை நெடுவேலின் - நெய் மிகப் பூசப்பெற்ற நீண்ட வேல் போல, நிழல் உறு திறம் முற்றி - ஒளியும் மிக்க திறமையும் நிரம்பி, கைஞிறை நிமிர் கண்ணுய் - உள்ளங்கை யளவினும் மிக்க (பெரிய) கண்களையுடையவளே, மஞ்ஞையும் மடமானும் - மயில்களும் இளமான் களும் (முறையே), நின் மெய்ஞிறை விரி சாயல் கண்டும் - உன் மேனி யில் நிறைந்துள்ள மிக்க எழிலைக் கண்டும், நின் விழி கண்டும் - உன்

(மருண்ட) கண்களைக் கண்டும், இனம் என்றே கருதின-தம் இனம் என்றே எண்ணினவாய், வருவன பல - (உன்னை நோக்கி) வருபவை பலவற்றை, காணாய் - நீ பார்ப்பாயாக.

பிராட்டியை மயில்கள் சாயலால் தம் இனம் என்றும், மான்கள் மருண்ட பார்வையால் தம் இனமென்றும் முறையே கருதின என நிரல் நிறையாகக் கொள்க. வேல் கண்களுக்கு ஒளியாலும் செயலாலும் உவமை. அவற்றின் பரப்பளவு, உள்ளங்கையிலும் அடங்காதது; இங்ஙனம் கூறுதல் கவிமரபு; சீவக. 342, 1290, 2006, 2535, 3139 பார்க்க. "குடங்கையி னகன்று.........வாட்கண்" (சூளா. சுயம். 72); "குடங்கையி னெடியவாட்டடங்கண்" (கூர்ம. கண். மணம். 250); "குடங்கையி னகன்றவிழி" (நைடத. நளன் றூது. 4) என்பனவும் காண்க. முதல் மூன்றடிகளின் முதற் சீர்களும் - நகர ஞகரப்போலி.

(பி - ம்.) 1. நெய்நிறை, நெய்ந்நிறை; நிறம் வேலினினிழலுறு, நெடுவேலின் நிழலுற, நிறமுறு, நிறனுறு, நிரைமுதர் திறன் முற்றிக், நிறமுற்றிக், நிறைமுற்றிக்.
2. கைஞ்ஞிறன், கைநிறம், கைநிறை, கைந்நிறை, கைமுறை, கைம்முறை; மிளிர் கண்ணுற்; கருதினமினமென்றே, இனமன்றே, கருதியுள்ளுற மன்பால், கருதினவின மென்றே.
3. மெய்நிறை, மெய்ந்நிறை, மெய்நிற.
4. மைஞ்ஞையும், மையற; மயில் மானும்; அவைகாணாய், இவை காணாய். (5)

698: பூவலர் குரவோடும் புடைதவழ் பிடவீனும்
மாவலர் சொரிசூழற் றுயிலெழு மயிலொன்றின்
தூவியின் மணநாறத் துணைபிரி பெடைதானச்
சேவலொ டுறவூடித் திரிவத னியல்காணாய்.

குரவு அலர் பூவோடும்-குரா மரத்தில் மலர்ந்த பூக்களோடு, புடை தவழ் பிடவு ஈனும் மா அலர் சொரி சூழல் - பக்கங்களில் (தழைத்துப்) பரந்த பிடவமரம் பூத்த மிக்க பூக்களும் சிந்திய இடத்தில், துயில் எழும் மயில் ஒன்றின் தூவியில் - உறங்கியெழுந்த ஆண் மயிலொன்றின் தோகையில், மணம் நாற - (அப்பூக்களின்) நறுமணம் வீச, துணைபிரி பெடை - தன் துணையாகிய அச்சேவலைப் பிரிந்த பெண்மயில், அ சேவலொடு - அந்த ஆண்மயிலோடு, உற ஊடி திரிவதன் இயல்-மிகவும் ஊடல்கொண்டு (அதனை அணுகாது) திரியும் தன்மையை, காணாய் - நீ பார்ப்பாயாக.

குரா, பிடா என்பன மரவிசேடங்கள்; இவை முறையே குரவு, குரவம் எனவும் பிடவு, பிடவம் எனவும் வழங்கும். இம்மரங்கள் கார்காலத்தில் பூக்கும் என்பர். துயிலெழும் மயில், பின் வந்த குறிப்புக்களால் ஆண் எனப்பட்டது. அது வேறொரு பெடையைக் கூடியதால் அதன் தோகையில் மணம் வீசுவதாகக் கருதிப் பெண்மயில்

வாடிற்று என, மக்கள் இயல்பை அதன்மேல் ஏற்றிக் கூறுகின்றார். குரவலர் பூ என மாறுக. மா அலர் - மிக்க பூக்கள்; பெரிய பூ எனினும் அமையும். தூவி - தோகை. தான்: அசை.

(பி - ம்.) 1. குரவோடு; புடையுறு பிடவினும், புடைமிழலிடவினும்.
3. தூவியின் மணனுறத், தூவியன் மணநாறத், மணனுறத், மண நாணத், தூவிய மணநாறத்; பெடைகாணச், காணுச்.
4. உறவாடித், உற்றோடித்; திரிவதனில, திரிவதினியல், திரிவனவியல், திரிவனபல. (6)

699. அருந்ததி யனையாளே யமுதினு மினியாளே
செருந்தியின் மலர்தாங்கும் செறியித ழினசோகம்
பொருந்திய களிவண்டிற் பொலிவன பொன்னூதும்
இருந்தையி னெழுதீயொத் தெழுவன விவைகாணாய்.

அருந்ததி அனையாளே - (கற்பில்) அருந்ததி போன்றவளே, அமுதினும் இனியாளே - அமிர்தத்தினும் இனிய இயல்புடையவளே, செருந்தியின் மலர் தாங்கும் - செருந்திப் பூவைத் தன்னிடத்தே கொண்ட, செறி இதழ் இன் அசோகம் - அடர்ந்த இதழ்களையுடைய இனிய அசோக மலர்கள், பொருந்திய களிவண்டின் பொலிவன - தம்மிடத்தே மொய்த்த மதுமயக்கமுள்ள வண்டுகளோடு விளங்குவன, பொன் ஊதும் - பொன்னை (உள்ளே வைத்து) ஊதுதற்குரிய, இருந்தையின் எழு - கரியினிடையே எழுகின்ற, தீ ஒத்து எழுவன - தீயைப் போலத் தோன்றுவன; இவை காணாய் - இவற்றைக் காண்பாயாக,

அசோகின் பூ, தீயைப்போன்ற செந்நிறமுடையது; செருந்திப்பூ, பொன் போன்ற மஞ்சள் நிறமுடையது. அசோக மலரில் படிந்த செருந்தி மலர் தீயில் வைத்த பொன் போன்றது; அதன்மேல் மொய்த்த வண்டுகள் கரிபோன்றன. பொற்கொல்லர், தீயில் பொன்னையிட்டு மேலே கரியால் மூடி ஊதும்போது, கரியிடையே தீ மேலெழுந்து தோன்றுவதுபோல, அசோக மலரின் செவ்வொளி வண்டுகளிடையே தோன்றியது என்க.

பிராட்டிக்கு அருந்ததி: "சீல மின்னதென் றருந்ததிக் கருளிய திருவே" (762). செருந்தி பொன்னிறமுடையதென்பது: "தலைநாட் செருந்தி தமனிய மருட்டவும்" (சிறுபாண். 147); "செருந்தி பொன் சொரிதருந் திருநெல் வேலியுறை செல்வர்" (தே. திருஞான.) அசோக மலர் செந்நிறம்: "செந்தீ, ஒண்பூம் பிண்டி" (மதுரைக். 700-701), (குறிஞ்சிப். 118-9); "அணிமல ரசோகம் பூத்தன... அழற்கணை தரித்த போன்றவே" (நைடத. அன்னத்தைக். 36. பி - ம்.)

(பி - ம்.) 2. மலர் தாங்கிச், தங்கும், தங்கிச்; செறியிதம் வனசோகம், செறியிதமன சோகம், செறிவிதம்வன சோகம். செறியிதமன கோங்கம், இதழின கோங்கம், இதமுறுகோங்கம், செறியிதம்புனை கோங்கம், வனைகோங்கம், செறியிழை வனகோங்கம்.

3. பொருந்தின; களிவண்டைப்; பொதிவன, போவின, பொழிவன.
4. இருந்தையிலெழு, இருந்தையிலெரி, இருந்திரினெழு; எழுவ தொரியல், எழுவனவியல், எழுவனபற, எழுவனவவை, எழுவ தனியல்நீ பாராய். (7)

700. சேந்தொளி விரிசெவ்வாய்ப் பைங்கிளி செறிகோலக்
காந்தளின் மலரேறிக் கோதுவ கவினாரும்
மாந்தளிர் நறுமேனி மங்கைநின் மணிமுன்கை
ஏந்தின வெனலாகு மியல்பின விவைகாணாய்.

மா தளிர் நறு மேனி மங்கை - மாந்தளிர் போலும் நல்ல மேனியை உடையவளே, சேந்து ஒளி விரி செவ்வாய் பைங்கிளி - சிவந்து ஒளி பரவும் செவ்விய வாயையுடைய பச்சைக் கிளிகள், செறி - இதழ்கள் அடர்ந்த, கோலம் - அழகிய, காந்தளின் மலர் ஏறி - செங்காந்தட் பூவில் தங்கி, கோதுவ - (அதன் இதழை அலகால்) கோதுகின்றவை, கவின் ஆரும் - அழகு மிக்க, நின் மணி முன்கை ஏந்தின எனல் ஆகும்-இயல்பான உனது அழகிய முன்கையில் நீ தாங்கியவை என்று கூறத்தகும் தன்மை வாய்ந்தன; இவை காணாய் - இவற்றைப் பார்ப்பாயாக.

செங்காந்தட் பூவை மங்கையர் கைக்கு உவமை கூறுவராகலின், காந்தட் பூவில் தங்கிய கிளியைப் பிராட்டி வளர்த்துத் தன் கையில் அமர்த்தி அழகு பார்க்கும் கிளி எனலாம் என்கின்றான் எம்பெருமான். மங்கை: அண்மை விளி.

பெரும்பான்மையான அச்சுப் பிரதிகளில் இப்பாடல் முன்னே, "பாணினமிஞிருக" என்பதனை அடுத்துள்ளது.

(பா-ம்.) 1. சேக்தொளிர், சேர்க்தொளி செங்கோலக்; விரிகோலக்.
2. மலரேறிப் பொலிவது.
3. மடமுன்கை, மலர்முன்கை; அவை காணாய். (8)

701. ஏந்திள முலையாளே யெழுதரு மெழிலாளே
காந்தளின் முகைகண்ணிற் கண்டொரு களிமஞ்ஞை
பாந்தளி தெனவுன்னிக் கவ்விய படிபாராத்
தேந்தள வுகள்செய்யுஞ் சிறுகுறு நகைகாணாய்.

ஏந்து இளம் முலையாளே - நிமிர்ந்த இளங்கொங்கைகளை உடையவளே, எழுத அரும் எழிலாளே - எழுதுதற்கரிய அழகுடையவளே, ஒரு களி மஞ்சை - களிப்புற்ற மயில் ஒன்று, காந்தளின் முகை கண்ணில் கண்டு - காந்தள் அரும்பைக் கண்ணாலே கண்டு, இது பாந்தள் என உன்னி - இது பாம்பு என்று நினைத்து, கவ்வியபடி பாரா - (அதைப் பிடிக்கக்) கௌவியதைக் கண்டு, தேம் தளவுகள் செய்யும்

சிறு குறுநகை காணுய்-இனிய முல்லை மலர்கள் செய்யும் சிறு புன்னகையைப் பார்ப்பாயாக.

காந்தள் அரும்பு பாம்பின் தலைபோலக் காணப்படும். மயில் பாம்பைக் கண்டால் கொல்லும் இயல்புடையதாகலின் தன் கண்ணில் பட்ட காந்தளரும்பைப் பாம்பென்று கருதி அதனைக் கொத்திய தெனவும், பக்கத்தில் இயல்பிலே மலர்ந்த முல்லை மலர்கள் அந்த மயிலின் செயலைக் கண்டு நகைத்தன எனவும் கற்பனை செய்து, அதனை இராமபிரான் கூற்ருகக் கூறுகின்ருர் ஆசிரியர்.

காந்தளரும்பு பாம்பு போல்வது: "காந்தளும் பாந்தளைப் பாரித் தலர்ந்தனவே" (திருக். 324); குறுந்: 185, 239; கலி: 45; 2-3; அகநா: 108: 12 - 15 : 138: 17 - 19; கார் நாற்பது,11; திணைமாலை. 107; திணைமொழி: 3,29, பார்க்க. பாம்பு மயிலுக்குப் பகை: "மஞ்ஞை...... பாம்பைப் பிடித்துப் படங்கிழித்தாங்கு" (திருக்: 21). முல்லை நகுதல்: "பூங்கொடி முல்லை, தொகுமுகை யிலங்கெயி ருக,நகுமே தோழி" (குறுந். 126: 3 - 57) "இருண்மகள் கொண்ட குறுநகை போல, முல்லை யின் மௌவலு முருகுயிர்த் தவிழ"(கல்லாடம்). எழுதரும்: தொகுத்தல் விகாரம். எழுதரும் - எழுகின்ற; புதிது புதிதாகத் தோற்றுகின்ற எனலுமாம்.

இப்பாடல் ஒரு பிரதியில் இல்லை; ஒரு பிரதியில் இதன் ஈற்றடி முதலடியாகவும், முதலடி ஈற்றடியாகவும் மாறியுள்ளன.

(பி - ம்.) 1. ஏந்தின; எழுதருமியலாளே, மயிலாளே.
2. கண்டதொர்.
3. கவ்விய படிபாராய்.
4. திந்தளவுகள்; சிறுநகை பல, பாராய். (9)

702. குன்றுறை வயமாவின் குருளையு மிருள்சிந்திப்
பின்றின தெனலாகும் பிடிதரு சிறுமாவும்
அன்றில பிரிவொல்லா வண்டர்த மனையாவின்
கன்றொடு முறவாடித் திரிவன பலகாணுய்.

குன்று உறை வய மாவின் குருளையும் - மலையில் வாழும் சிங்கத்தின் குட்டிகளும், இருள் சிந்தி பின்றினது எனல் ஆகும் - இருட் பிழம்பைத் துண்டித்துப் பிணைத்து உருவாக்கியது என்று சொல்லத்தக்க, பிடி தரு- பெண்யானை ஈன்ற, சிறு மாவும் - யானைக் கன்றுகளும், அன்று இல- பகைத்தல் இல்லாதனவாயும், பிரிவு ஒல்லா-(ஒன்றையொன்று) பிரியா தனவாயும், அண்டர் தம் மனை ஆவின் கன்றொடும் - இடையர் வீடு களில் உள்ள பசுவின் கன்றுகளுடன், உறவு ஆடி திரிவன பல- உறவாடி விளையாடித் திரியும் பலவற்றை, காணுய்—.

சிங்கமும் யானையும் மலைக் காடுகளில் வாழ்வன; இயல்பாகவே தம்முள் பகையுள்ளன. இவை கலந்து உறவாடுதலுடன், முல்லை

நிலத்தில் வாழும் இடையர் வீடுகளில் உள்ள பசுவின் கன்றுகளோடும் உறவாடுகின்றன என்றது வியப்புக்குரியது. முனிவர்கள் வாழும் சூழலாதலால் இது நிகழ்ந்ததெனலாம். வயமா - சிங்கம். குருளை - குட்டி. பின்றுதல் - பின்னுதல்; பிணைத்தல். சிறு மா - கன்று. அன்றுதல் - பகைத்தல்.

(பி - ம்.) 1. குன்றுறு.
2. பின்றின வெனலாகும்.
3. அன்றல, அன்றலர், அன்றிலில்; பிறிவெல்லா, பிறிவெல்லாம், பிறிகில்லா, பிறிவொல்லா.
4. கன்றெடும் இனிதாடும், உடனுகும், உடனுடும், கன்றெடு விளையாடுங் களியன, களியது. (10)

703. அகில்புனை குழன்மாதே யணியிழை யெனலாகும்
நகுமலர் நிறைமாலைக் கொம்புக ணதிதோறும்
துகில்புரை திரைநீரிற் றோய்வன துறையாடும்
முகிழிள முலையாரின் மூழ்குவ பலகாணாய்.

அகில் புனை குழல் மாதே - அகிற்புகையை ஊட்டிய கூந்தலை உடையவளே, அணி இழை எனல் ஆகும் நகும் மலர் நிறை - பூண்ட அணிகலன்கள் என்று சொல்லத்தக்க (பலவண்ணத்துடன்) விளங்கும் பூக்கள் நிறைந்த, மாலை கொம்புகள் - வரிசையான பூங்கொம்புகள், நதிதோறும் - நதியின் பலவிடங்களிலும், துகில் புரை திரை நீரில் தோய்வன - வெள்ளாடை போன்ற அலைகளையுடைய நீரில் படிவன, துறை ஆடும் - நீர்த் துறைகளில் நீராடுகிற, முகிழ் இள முலையாரின் - அரும்பிய இளங்கொங்கைகளையுடைய மங்கையரைப்போல, மூழ்குவ பல - (நீரில்) முழுகுவன பலவற்றை, காணாய்—.

பல நிறப் பூக்களையுடைய பூக்கொம்புகளுக்குப் பலநிறம் வாய்ந்த அணிகலன்களைப் பூண்ட மகளிர் உவமை. ஆற்றோரமாக மலர்ச் செடிகளின் கொம்புகள் சாய்ந்து நீரில் படிவது, மகளிர் நீராடுவது போலத் தோற்றுகின்றதென்றவாறு. மாலை - வரிசை.

(பி - ம்.) 1. அகில்புரை; குழன்மானே.
2. கொம்பர்கள்.
3. நுரைநீரில், நறுநீரில், தருநீரில், திரைதோறும், விரைதோறும், நுரைபோடும். (11)

704. முற்றுறு முகைகிண்டி முரல்கில சிறுதும்பி
விற்றரு நுதன்மாதே மென்மலர் விரிகோங்கின்
சுற்றுறு மலரேறித் துயில்வன சுடர்மின்னும்
பொற்றக டுறுநீலம் புரைவன பலகாணாய்.

வில் தரு நுதல் மாதே - வில்லைப்போன்ற நெற்றியை யுடையவளே, சிறு தும்பி பல - சிறிய வண்டுகள் பல, முற்று உறு முகை கிண்டி

முரல்கில - முற்றிய பேரரும்புகளைக் கிளறி ஒலியாதனவாய், மெல்மலர் விரி கோங்கின் - மெல்லிய பூக்கள் மலர்ந்துள்ள கோங்க மரத்தில், சுற்று உறும் மலர் ஏறி துயில்வன - சுற்றிலும் உள்ள மலர்ந்த பூக்களில் அமர்ந்து தேனை உண்டு உறங்குவன, சுடர் மின்னும் - ஒளிவீசுகின்ற, பொன் தகடு உறு நீலம் புரைவன - பொன்தகட்டிலே பொருந்திய (பதிக்கப்பெற்ற) நீலமணி யொத்துத் தோன்றுவனவற்றை, காணுய் - காண்பாயாக.

சிறுதும்பி பல, கிண்டி முரல்கில, ஏறித் துயில்வன, நீலம் புரைவன காணுய் எனக் கூட்டி முடிக்க.

வண்டுகள் ரீங்காரம் செய்துகொண்டு, மலரும் பருவத்திலுள்ள அரும்புகளைக் கால்களாற் கிளறி மலர்வித்துப் புதிய தேனைப் பருகுதல் இயல்பு. இவை சிறுவண்டுகளாதலின், அரும்புகளை மலர்த்தும் முயற்சியில் ஈடுபடாமல், மலர்ந்த பூக்களிற் கிடைத்த தேனைப் பருகி, அம்மலர்களிலேயே உறங்கிவிட்டன. கோங்க மலர் பொன்னிறமும் தட்டை வடிவும் உடையது; வண்டுகள் நீலமணி போன்றவை. ஆதலால், பொற்றகட்டிற் பதித்த நீலமணி போலத் தோற்றின; அவற்றைப் பிராட்டிக்குக் காட்டினுன் இராமபிரான். தரு : உவமவுருபு.

கோங்கம் பூவின் தன்மை: ''பூங்கட் பாவைக்குப் பொற்கல மிவை யெனத், தேங்கட் சாரற் சிறுசினை மலர்ந்த, கோங்கந் தட்டம் வாங்கினர் வைத்தும்'' (பெருங். 2.14: 22 - 4).

(பி - ம்.) 1. முகைகண்டே, முகைதீண்டி, முறைகிண்டி, பண்கொண்டு; முயல்கில சிலதும்பி, முரல்கில சிலதும்பி, முரலசிலதும்பி, முழுமுதல் செய்தும்பி; (மு). முற்றுறு மண்கொண்டிம் முழுமுதல் செயல்தும்பி.
2. விற்திரு நுதல்மாதே, மானே; அம்மலர், இனமலர்.
3. சுற்றற.
4. உறைநீலம்; பொழிவன. (12)

705. கூடிய நறைவாயிற் கொண்டன விழிகொள்ளா
மூடிய களிமன்னி முடுகிய நெறிகாணு
ஆடிய சிறைமாவண் டந்தரி னிசைமுன்னம்
பாடிய பெடைகண்ணு வருவன பலகாணுய்.

ஆடிய சிறை - அசைகின்ற சிறகுகளையுடைய, மா வண்டு பல - கரிய பல வண்டுகள், கூடிய நறை - அளவிறந்த தேனை, வாயில் கொண்டன - உட்கொண்டனவாய், (அதனுல்) களி மன்னி - களிப்பு (மயக்கம்) மிக்கு, விழிகொள்ளா மூடிய - கண்கள் திறக்க மாட்டாது மூடினவாகி, முடுகிய - விரைந்து செல்லுதற்கு, நெறி காணு - வழியறியாமல், அந்தரின் - குருடரைப்போல், முன்னம் - (தமக்கு) முன்னே, இசை பாடிய பெடை கண் ஆக - ரீங்காரம் செய்துகொண்டு பறக்கும் பெடைவண்டுகளே (தமக்குக்) கண்ணுக, வருவன காணுய் - வருவனவற்றைப் பார்.

ஆண் வண்டுகள் பல, தேனை மிகப் பருகியதனால் களிப்பு மிக்குக் கண்களைத் திறக்கமாட்டாமலும், பறந்து செல்ல வழியறியாமலும் இடர்ப்பட்டு, முன்னே ரீங்காரம் செய்துகொண்டு பறக்கும் பெண் வண்டுகளின் ஒலி வரும் திசையைக் குறிக்கொண்டு குருடர்போலச் செல்கின்றன என்றபடி. வாயிற்கொள்ளுதல் - வாயாற் பருகுதல், மன்னி - மிக்கு, மேலிட்டு. முடுகிய : செய்யியவென்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

மதுமயக்கத்தால் கண்கள் மூடிய நிலைகொள்ளல்: "ஒருத்தி, இறந்த களியான் இதழ்மறைந்த கண்ணள்" (கலி. 92: 48). மா என்பது பலபொருளொரு சொல்லாதலின், பெரிய வண்டு என்று உரைத்தலும் ஆம்.

(பி - ம்.) 1. விழிகொள்ள.
2. களிமன்னு முடுகின, முடுகிய, மன்ன முடுகின, மன்னி முடுகின, மன்னி முடுகிய, மன்னு முருகின.
3. இசை முன்னுப், முன்னுப்.
4. பெடைகண்ணுய், இசைகண்ணுய். (13)

706. கன்னிய ரணிகோலங் கற்றறி குதுமென்னப்
பொன்னணி நிறவேங்கை கோங்குகள் புதுமென்பூ
அன்னமெ னடையாய்நின் னளகநன் னுதலப்பும்
சின்னநன் மலர்மானச் சிந்துவ பலகாணுய்.

அன்னம் மெல் நடையாய் - அன்ன நடைபோலும் மெல்லிய நடை உடையவளே, வேங்கை கோங்குகள் - (இங்குள்ள) வேங்கை மரங்களும் கோங்க மரங்களும், கன்னியர் அணிகோலம் கற்று அறிகுதும் என்ன - பெண்களை அலங்கரிக்கும் வகையை நாம் கற்றறிந்து கொள்வோமென்று கருதி, பொன் அணி நிறம் - பொன் போன்ற அழகிய நிறத்தையுடைய, புது மென் பூ - புதிய மெல்லிய பூக்களை, நின் நல் நுதல் அளகம் அப்பும் - உனது அழகிய நெற்றியில் படியும் முன் மயிரில் அணிதற்குரிய, நல் சின்னம் மலர்மான - நல்ல விடுபூக்கள் போல, பல சிந்துவ காணுய் - பலவாக உதிர்ப்பவற்றைப் பார்.

செல்லும் வழியிலுள்ள வேங்கை, கோங்க மரங்களினின்றும் பொன்னிறப் பூக்கள் உதிர்தலை, அம்மரங்கள் கன்னியர்க்குக் கோலஞ் செய்தலைக் கற்றுணர்வனபோல, அவர்களணிதற்குரிய விடு பூக்களைச் சிந்துகின்றன எனக் கற்பித்து, அதனை இராமபிரான் கூற்றாகக் கூறுகின்றார். சின்னம் - விடுபூ; "சின்னத்தின் அளக பந்தி" (பால. 1011;) 978, 1210ஆம் பாடல்களும் பார்க்க.

(பி - ம்.) 1. அறிகுநரென்னப், அறிகுவரென்னப், அறிகுனரொப்பப், அறிகில ரென்னப்.

2. பொன்னணி நறவேங்கை, நிறவேங்கைக், மிறக்கொங்கைச், மிறை கொங்கைக், பொன்னிற நறவேங்கைக்; கொம்பர்கள், கொம்புகள்; கொங்குறை, கோங்குளர்.
3. அன்னமென்னடையாய்மின்; அளிவளரளகப்பூம், அணிவளரளகப் பூம், அளகப்பூச்.
4. சின்னமென் மலர். (14)

707. மணங்கிளர் மலர்வாச மாருதம் வரவீசக்
கணங்கிளர் தருசுண்ணங் கல்லிடை யனகானத்
தணங்கினு மினியாயுன் னணிவட முலைமுன்றிற்
சுணங்கின மவைமானத் துறுவன பலகாணாய்

கானத்து அணங்கினும் இனியாய் - வனதேவதையினும் மிக்க அழகுடையவளே, மாருதம் வர வீச - காற்று மிக வீசுதலால், மணம் கிளர் மலர் - மணம் மிக்க பூக்களிலுள்ள, கணம் கிளர் தரு வாசம் சுண்ணம் - திரண்டு மிக்க நறுமணப் பொடிகள் (மகரந்தங்கள் உதிர்ந்து), கல் இடையன - குண்டுக் கற்களில் படிந்தவை, உன் வடம் அணி முலை முன்றில் - உன்னுடைய முத்துமாலை அணிந்த தனங்களில் (படர்ந்துள்ள), சுணங்கு இனம் அவை மான - அழகுத் தேமற் கூட்டம் போல, துறுவன பல - செறிந்து தோன்றும் பலவற்றை, காணாய்—.

காற்றினால் பூக்களினின்றும் உதிர்ந்த மகரந்தப்பொடி, கீழே உள்ள உருண்டையான கற்களில் படிந்து தோன்றும் இயற்கைக் காட்சி தனங்களில் படர்ந்துள்ள பொன்னிற அழகுத் தேமல்போலக் காணப் படுகின்றது என்றது அழகிய உவமை. வர - மிகுதியாக. முலை முன்றில் - முலையினிடத்து. மலர்தரு என்றியைத்துப் பூக்கள் உதிர்த்த என்று [illegible]த்தலுமாம்.

ஒரு [illegible]ரதியில் இப்பாடல் இல்லை.

(ப[illegible] 1. மலர்வாரும்; வரவாசக், அபர்வாசக், அவிர்வாசக், அவைவாசக், அவைவீசக்; மாதருமவர்வாசக்.
2. தருசுண்ணக், சுடுசுண்ணம்; கல்லுடையன, கள்ளுடையன, கல்லிடையழ; தானத்து, கல்லிடையன கண்டால், கண்டார்.
3. இனியாய்மின்; முலைமுன்னச், முன்னர்ச், அணிமுலை வடமுன்றிற்.
4. சுணங்கினமிவைகாணத்; துறுவனவவை. (15)

708. அடியிணை யுறைகல்லா வென்றுகொ லதரெங்கும்
இடையிடை மலர்சிந்து மினமர மிவைகாணாய்
கொடியினொ டிளவாசக் கொம்புகள் குயிலேயுன்
துடிபுரை யிடைமானத் துவள்வன விவைகாணாய்.

குயிலே - குயில்போலுங் குரலுடையவளே, (உன்) அடி இணை - உன் இரு பாதங்களும், உறை கல்லா என்று - (கல் முதலியன) உறுத்துதலை (முன்பு) கற்றறியாதனவென்று கருதி, அதர் எங்கும் -

வழி நெடுகிலும், இடை இடை மலர் சிந்தும் - இடையிடையே (தம்) பூக்களை உதிர்க்கின்ற, இனம் மரம் இவைகாணாய் - கூட்டமான இந்த மரங்களைப் பார்; இள வாசம் கொடியினொடு - மெல்லிய நறுமணம் பொருந்திய பூங்கொடிகளும், கொம்புகள் இவை-பூங்கொம்புகளுமாகிய இவை, உன் துடிபுரை இடை மான - உடுக்கை போன்ற உனது மெல்லிய இடையை ஒப்ப, துவள்வன காணாய் - துவளுதலையும் பார். கொல் : அசை.

மரங்களினின்றும் இயல்பாக மலர்கள் உதிர்தலை, பிராட்டியின் பாதங்கள் பரலுறுத்தலைப் பொறா என்று கருதி, அம் மரங்கள் பூக்களைச் சொரிந்து வழியை மெத்தென்றுக்குவதாகக் கூறியது தற்குறிப்பேற்றம். 'உன்' என்பது முன்னும் கூட்டி உரைக்கப்பெற்றது.

(பி - ப்.) 1. பொறைகல்லா; கல்லாது, உறுகல்லா, உறைகல்லாது, பிரிகல்லா, புரைகல்லா, என்று கல்லதர்தோறும்.
2. இடைமிடை; இளமரமிவை, இனமிவைபல.
3. கொம்பர்கள்; குயிலாயுன், குயிலெனின், குயிலாயின்.
4. இடைகாணித், இடைகாணத்; அவைகாணாய், பலகாணாய். (16

709. வாள்புரை விழியாயுன் மலரடி யணிமானத்
தாள்புரை தளிர்வைகுந் தகைஞிமி றிவைகாணாய்
கோள்புரை யிருள்வாசக் குழல்புரை மழைகாணாய்
தோள்புரை யிளவேயின் தொகுதிக ளிவைகாணாய்.

வாள் புரை விழியாய் - வாள் போலுங் கண்களை உடையவளே, உன் மலர் அடி அணி மான - (அழகு) விரிந்த உன் பாதங்களையும் அவற்றில் அணிந்த அணிகலன்களையும் போல, தாள் புரை தளிர் வைகும் தகைஞிமிறு இவை - காம்பு பொருந்திய தளிர்களும் அவற்றில் தங்கும் அழகிய வண்டுகளுமாகிய இவற்றை, காணாய்—; கோள் புரை இருள் - (பொருள்களைக் காணவொட்டாது மறைக்கும்) குற்றம் பொருந்திய இருள் போன்ற (மிகக் கரிய), வாசம் குழல் புரை - நறுமணம் பொருந்திய (உன்) கூந்தலை யொத்த, மழைகாணாய் - மேகங் களைக் காண்பாயாக; தோள் புரை - உன் தோள்களை யொத்த, இளவேயின் தொகுதிகள் இவை காணாய் - இந்த இளைய மூங்கிற் கூட்டங்களைக் காண்க.

தளிர்கள் - பாதங்கள்; தளிர்களில் தங்கிய வண்டுகள், பாதத்தில் அணியும் மணி அணிகள். தாள் - காம்பு. தகை - அழகு (புறநா. 59 : 2). அடியும் அணியும் எனவும், தளிரும் ஞிமிறும் எனவும் உம்மைகள் விரிக்க. 'புரை' என்பது சொற்பின் வருநிலையணியாக ஐந்திடங்களில் வந்தது. அவற்றுள் 1, 4, 5 ஆகிய மூன்றும் உவமவுருபுகள். ஏனையிரண்டும் 'பொருந்திய' என்ற பொருளில் வந்தன.

(பி - ம்.) 1. உன் மலர்புரையடிமானத், மலரடியவைமானத், மலர்வடிவடிமானத், மலர்செறியடிமானத், மின்மலரடியணிமானத், பொன்மலர்களனை யாயுன்.
2. ஞிமிறவைகாணாய், ஞிமிறுகள்பாராய், மிஞிறிவைகாணாய்.
3. மலர்காணாய்.
4. இனவேயின்; தொகுதிளவை, தொகுதிரளவை. (17)

710. பூநனை சுனைதுன்றிப் புள்ளிடை யிடைபம்பி
நானிற நளிர்வல்லிக் கொடிநவை யிலபல்கி
மானின மயின்மாலைக் குயிலினம் வதிகானம்
தீநிகர் தொழிலாடைத் திரைபொரு வனகாணாய்.

பூ நனை சினை துன்றி - பூவும் அரும்பும் கிளைகளில் மிகுந்து, இடை இடை புள் பம்பி - இடையிடையே பறவைகள் நிரம்பி, நால் நிறம் நளிர் வல்லி கொடி - பல நிறங்களையுடைய குளிர்ந்த வல்லி என்னும் கொடிகள், நவை இல பல்கி - குற்றமில்லாதனவாய்ப் பெருகி, மான் இனம் - மான்கூட்டமும், மயில் - மயில்களும், மாலை குயில் இனம் - வரிசையான குயிற் கூட்டமும், வதி - தங்குகின்ற, கானம் - (இந்தக்) காட்டுப் பகுதிகள், தீ நிகர் தொழில் - தீப்போலும் (சிவந்த) சித்திர வேலைப்பாடமைந்த, ஆடை திரை பொருவன காணாய் - திரைச் சீலைகளை ஒத்திருப்பவற்றைக் காண்பாயாக.

செந்நிறப் பூக்களையும் தளிர்களையும் மிகக் கொண்டு, பறவைகளும் மான் முதலியனவும் தங்கப்பெற்று, அழகாகத் தோன்றும் காட்டுப் பகுதிகள், ஓவிய வித்தகர் அழகுறத் தீட்டிய சித்திரத் திரைச் சீலை போன்றன, அவற்றைப் பார் என்கின்றான். துன்றி, பம்பி, பல்கி: ஒருபொருட் பல சொற்கள். வதி கானம்: வினைத்தொகை. புள் - பறவை; வண்டும் ஆம். நானிறம்: பன்மை கருதியது. "வித்தகரியற்றிய விளங்கிய கைவினைச், சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே, ஒப்பத் தோன்றிய வுவவனம்" (மணி. 3 : 167 - 9) என்றது இங்கே ஒப்பு நோக்கத்தகும்.

மன்றலின் மலிகோதை என்று தொடங்கும் பாடல்முதல் இது காறும் பதினாறு பாடல்களால், வழிநடையில் கண்ட பல இனிய காட்சிகளை இராமபிரான் பிராட்டிக்குக் காட்டிக் கூறினமை பேசினார்.

(பி - ம்.) 1. சினைதுன்னிப், தள்ளிப், சிறைமுன்றிப்; இடையிடைபம்பி, இடையிடைகொம்பின், புள்ளடையிடைபம்பி, புள்ளிடையிறைபம்பி, புள்ளினமிடைகொம்பின், தள்ளிடையிடைபம்பித்.
2. நானிறநளிர்வள்ளி, நானினநளிர்வல்லிக், நானளிர்வனவல்லிக்; கொடியளவிலமல்கி, கொடியளபலதங்கி, நவையிலமல்கி, கொடிபயல்பலதங்கி, கொடிபலபலதங்கி, கொடி நகையிலமல்கி.
3. வருகானம், கானித்.
4. துகிலாடைத்; திரைபொருத, பொருவுவ, பொருமவை, புரைவன, புரள்வன, திரள்பொருமவை, பாராய். (18)

711. என்றனன் மடவாளோ டினிதினின் விளையாடிப்
பொன்றிணி திரடோளான் போயின னெறிபோதும்
சென்றது குடபாலத் திருமலை யிதுவன்றே
வென்றிரு வினைவென்றோர் மேவிட மெனநின்றார்.

என்றனன் - என்று இவ்வாறு பல கூறினவனாக, பொன் திணி திரள் தோளான் - அழகுமிக்க திரண்ட தோள்களையுடைய இராமபிரான், மடவாளோடு - இளையளான பிராட்டியுடன், இனிதினின் விளையாடி, இனிதாக விளையாடிக்கொண்டு, நெறி போயினன் - வழி நடந்தான்; போதும் குடபால் அ திருமலை சென்றது - சூரியனும் மேற்கிலுள்ள அந்த அழகிய அத்தமன கிரியை அடைந்தான்; (அவ்வமயம் அருகில் ஓர் முனிவராச்சிரமம் கண்டு) இது - இதோ தோன்றுவது, வென்று - (ஐம்புலன்களையும்) வென்று, இருவினை வென்றோர் - (கடத்தற்கரிய) இரு வினைகளையும் கடந்த முனிவர்கள், மேவு இடம் அன்றே என - தங்குமிடம் அன்றோ என்று சொல்லி, நின்றார் - அவ்விடத்தே நின்றார்கள்.

மூவரும் வழி நடந்து செல்லுங்கால், சூரியாத்தமன வேளையான போது, ஓரிடத்தில் ஓராச்சிரமத்தைக் கண்டு, இது முனிவர் வாழுமிடமாதல் வேண்டும் என்று சொல்லிக்கொண்டு அங்கே சற்று நின்றார்கள் என்றவாறு. அவ்வமயம், அவர்கள் வருகை உணர்ந்து, அவ்வாச்சிரமத்தில் வாழும் பரத்துவாச முனிவர் அவர்களை எதிர் கொள்ள வந்தார் என்பது அடுத்த பாடலுட் கூறப்படும். "இடர் காணாள், பொருப்பேந்திய தோளானொடு விளையாடினள் போனாள்" (627) என முன்னே கூறி, இங்கும், "திரடோளான் விளையாடி நெறி போயினன்" என்றதனால், அவர்கள் வழிநடை வருத்தமுணராது சென்றனர் என்பது பெறப்படும். போது: ஆகுபெயராய்ச் சூரியனைக் குறித்தது.

(பி - ம்.) 1. என்றுநன், என்றன், ஒன்றின, என்றுறு; இனிதினில்; விளையாடப்;
2. பொன்றிணிதணிதோளான், தருதோளான், திரைதோளான்; போயினநெறி.
3. சென்றன, சென்றனன், என்றனன், என்றனர்.
4. வினைவென்றார்; மேவிடமெனலோடும், மேவிடமெனலாடும், மேவிருமெனலோடும். (19)

பரத்துவாச் முனிவரின் வருகை

712. அருத்தியி னகம்விம்மு மன்பின னெடுநாளில்
திருத்திய வினைமுற்றிற் றின்றெனத் தெரிகின்றான்
பரத்துவ னெனுநாமப் பரமுனி பவநோயின்
மருத்துவ னனையானை வரவெதிர் கொளவந்தான்.

அருத்தியின் - (இராமபிரானைக் காணும்) ஆசையோடு, அகம் விம்மும் அன்பினன் - மனம் நிறைந்த அன்புடையவனும், நெடு நாளில் திருத்திய வினை - நெடுநாளாக (நாம்) நன்கு செய்த நல்வினை (தவம்), இன்று முற்றிற்று என தெரிகின்றான் - இன்று பயன் தருவதாயிற்றென்று உணர்பவனும் ஆன, பரத்துவன் எனும் நாமம் பர முனி - பரத்துவாசன் என்னும் பேருடைய மேலான முனிவன், பவம் நோயின் மருத்துவன் அனையானை - பிறவிப் பிணிக்கு மருத்துவன் போன்ற இராமபிரானை, வரவு எதிர் கொள வந்தான் - நல்வரவு கூறி எதிர் கொள்ளும்படி வந்தான்.

இராமபிரான் திருமாலாகலின் பிறவிப்பிணி மருத்துவன் என்றார்; "எருத்துக் கொடியுடை யானும் பிரமனு மிந்திரனு மற்றும், ஒருத்தரு மிப்பிறவி யென்னு நோய்க்கு மருந்தறி வாரு மில்லை, மருத்துவனாய் நின்ற மாமணி வண்ணா" (பெரியாழ்வார் திருமொழி, 5. 3 : 6).

பரத்துவாச முனிவன் இராமபிரானை எதிர் கொண்டதாக முதனூலில் இல்லை.

(பி - ம்.) 1. அருத்தியன், அருத்தினன்; அன்பினினெடு.
2. திருத்திய தவம், திருத்தியமுனை, திருத்தவவினை, திருத்தவர்வினை, திருத்தின வினை, திருத்தின தவம்; முற்றிற்றுஇன்றெனல், என்றனன், என்றுகல், என்றனர், இன்றென, முத்திற்றின்றெனல், முற்றித் திருந்தனல், முற்றித்திருந்தனன், முற்றித்தினகரன்; தெரிகின்றேன், தெளிகின்றான், எனகின்றான்.
3. பழமுனி.
4. மருத்துவனிவண்வந்தான் எனவெதிர். (20)

அம்முனிவரின் தோற்றமும் சிறப்பும்

713. குடையின னிமிர்கோலன் குண்டிகை யினன்மூரிச்
சடையின னுரிமானின் சருமனன் மரநாரின்
உடையினன் மயிர்நாலு முருவின னெறிபேணும்
நடையினன் மறைநாலு நடநவி றருநாவான்.

(அப்பரத்துவாச முனிவன்), குடையினன் - (கையில்) குடையுடையான்; நிமிர் கோலன் - நீண்ட முக்கோலுடையான்; குண்டிகையினன் - கமண்டலமுடையான்; மூரி சடையினன் - பெரிய சடையை உடையான்; மானின் உரி சருமன் - மானினது உரித்த தோல் உடையவன்; நல் மரம் நாரின் உடையினன் - நல்ல மரநாரால் இயன்ற (மரவுரி) ஆடையுடையயன்; மயிர் நாலும் உருவினன் - மயிர் நீண்டு தொங்குகின்ற வடிவுடையவன்; நெறி பேணும் நடையினன் - முத்தி நெறியை விரும்பும் தவவொழுக்கமுடையவன்; மறை நாலும் - நான்கு வேதங்களும், நடம் நவில் தரு நாவான் - நடனம் புரியும் நாவினை உடையவன்.

இதுவும் அடுத்த பாடலும் ஒரு தொடர்; பரத்துவாச முனிவர் பெருமைகளைக் கூறுவன. இப்பாடலுள் முதலில் அவர் தோற்றத்தைக் கூறி, மேலே வேத பாரங்கதர், முத்தி நெறியை நாடும் தவவொழுக்க முடையவர் என்ற சிறப்புக்களைக் கூறினார்; அடுத்த பாடலுள் ஏனைச் சிறப்புக்களைக் கூறுகின்றார். குடை முதலியன முனிவர்க்குரிய அங்கங்கள். மானின் உரி சருமம் - கிருஷ்ணாஜினம். மயிர் மழித்த லின்மையால் நீண்டு வளர்ந்து தொங்குதலை 'மயிர் நாலும் உருவினன்' என்றார். "பயிலு மாதவ, முசுக்குல மனையமெய்ம் முனிவர்" என்பது வில்லிபாரதம். (குருகுலச். 65).

(பி - ம்.) 1. உரிமானின் தோலினன்; மரநாணின், உழைமானின் சருமனன், சன்மனன், மரையினனரின், உழையிருசனன் மரையினனரின், உழைமானின்றோலினன் மரைநாரின், உழையசினத் தரைவனன்மர நாரின், கானின்சால்மரையினன் மரநாரின்.
3. உருவன னுயிர்பேணும்.
4. நடநவிறிருநாவான், நவின்றன தருநாவான். (21)

714. செந்தழல் புரிசெல்வன் றிசைமுக முனிசெவ்வே
தந்தன வுயிரெல்லாந் தன்னுயி ரெனநல்கும்
அந்தண னுலகேழு மமையெனி னமரேசன்
உந்தியி னுதவாமே யுதவிடு தொழில்வல்லான்.

(இன்னும் அம்முனிவன்), செம்மை தழல்புரி செல்வன் - செவ்விய தீயோம்புதலையே செல்வமாக உடையவன்; திசைமுகம் முனி - நான்கு திக்கும் நோக்கிய முகங்களையுடைய பிரமன், செவ்வே தந்தன உயிர் எல்லாம் - செவ்வையாகப் படைத்த சீவராசிகளையெல்லாம், தன் உயிர் என நல்கும் அந்தணன் - தன்னுயிர் போலக் கருதி அருள் செய்யும் அழகிய தண்ணளி உடையவன்; உலகு ஏழும் அமை எனின் - ஏழுலகங்களையும் படைத்திடுக என்றால், அமர ஈசன் உந்தியின் உதவாமே - தேவதேவனான திருமால் தன் திருவுந்தியிடத்து (முதலில்) தோற்றுவிக்காமல், உதவிடு தொழில் வல்லான் - (தானே) படைக்க வல்ல தொழிலாற்றல் உடையவன்.

முதல் இரண்டடிகளால், பரத்துவாச முனிவரது ஒழுக்கச் சிறப்பும் அருட் சிறப்பும் கூறி, பின் இரண்டடிகளால் அவர் பிரமனினும் ஆற்றல் மிக்கவர் என அவரது ஆற்றலைச் சிறப்பித்தார்; இதனால், வேண்டின் ஆக்கலும் அழித்தலும் வல்லவர் என்பதாயிற்று. திருமால் தன் சங்கற்பத்தால் தன் திருவுந்தியில் அண்டங்களைத் தோற்றுவித்தபின், பிரமதேவன் சராசரங்களைப் படைத்தமைப்பான் என்பராகலின், 'அமரேசன்......தொழில் வல்லான்' என்றார். உந்தியில் தோற்றுவிக்காத பிரமன் போல்வார் என்றலுமாம். "உயிரெல்லாம் தன்னுயிரென நல்கும் அந்தணன்" என்றது, "அந்தண ரென்போர்

அறவோர்மற் றெவ்வுயிர்க்கும், செந்தண்மை பூண்டொழுக லான்'' (குறள். 30) என்பதனைத் தழுவி அமைந்தது.

(பி - ம்.) 1. செந்தமல்பரி, செந்தழல்தரு, செந்தமலருள், செந்தமல்வரு; திசைமுகனருள்செவ்வே.
2. தந்தனனுயிர், நந்தவிலுயிர்.
3. உலகெல்லாம்; அமைதியின்.
4. உந்தியில்; வல்லோன். (22)

வணங்கிய இராமனை முனிவர் தழுவிக்கொண்டு விம்முதல்

715. அம்முனி வரலோடு மழகனு மலர்தூவி
மும்முறை தொழுதானம் முனிவனு மெதிர்புல்லி
இம்முறை யுருவோநான் காண்குவ தெனவுள்ளம்
விம்மின னிழிகண்ணீர் விழிவழி யுகநின்றான்.

அ முனி வரலோடும் - அத்தகைய சிறப்புடைய பரத்துவாச முனிவர் (எதிரே) வந்த அளவில், அழகனும் - இராமபிரானும், அலர் தூவி - (முனிவர் திருவடிகளை) மலர்களால் அருச்சித்து, மூன்று முறை தொழுதான்—; அ முனிவனும்—, எதிர் புல்லி - (தொழுதவனை) எதிரே எடுத்துத் தழுவி, இ முறை உருவோ நான் காண்குவது என - இக்கோலம் அமைந்த (நின்) வடிவையோ நான் காண்பது என்று, உள்ளம் விம்மினன் - மனத்துள் துயரம் மிக்கவராகி, விழி வழி இழி கண் நீர் உக - கண்களிலிருந்து பெருகிய கண்ணீர் சொரிய, நின்றான்—.

அம்முனி என்றது, முன்னிரண்டு பாடல்களிலும் கூறிய அத்தகு சிறப்புடைய முனிவர் என்றவாறு. இராமபிரானை 'அழகன்' என்றல் பிரசித்தம். உயர்ந்தோரையும், கடவுளரையும் மும்முறை வலம் வந்து தொழுதல் முறை. வணங்கினவரை எடுத்துத் தழுவுதல் உயர்ந்தோர்க்குரியது. அரசக் கோலத்தில் காணவேண்டிய இராமபிரானைத் தவக் கோலத்தில் கண்டமையின், 'இம்முறையுருவோ நான் காண்குவது' என வருந்தினர் முனிவர். ''பார்குலாம் செல்வ வுன்னை யிங்ஙனம் பார்த்த கண்ணை, ஈர்கிலாக் கள்வ னேனுன்'' (665) என்று குகன் கூறியது காண்க.

(பி - ம்.) 1. அனகனும்.
2. தொழுதானை; முதல்வனும்.
3. காணெய்துவது, நான்காண்குவன், நாம் காண்குவது.
4. அழிகண்ணீர், விழுகண்ணீர். (23)

வனம் வந்ததன் காரணத்தை முனிவர் கேட்டல்

716. அகலிட நெடிதாளு மமைதியை யதுதீரப்
புகலிட மெமதாகும் புரையிடை யிதுநாளில்
தகவில தவவேடந் தழுவினை வருவானேன்
இகலடு சிலைவீர விளையவ னொடுமென்றான்.

(முனிவன் இராமபிரானை நோக்கி) இகல் அடு சிலை வீர - பகையை அழிக்கவல்ல வில்வீரனே, அகல் இடம் நெடிது ஆளும் அமைதியை - இப்பூமி முழுதும் நெடுங்காலம் ஆளும் தகுதியையுடைய நீ, அது தீர - அவ்வாட்சி நீங்க, இது நாளில் - இவ்விளமைப் பருவத்திலேயே, தகவு இல தவவேடம் தழுவினை - (உனக்குத்) தகுதியில்லாத தவக் கோலத்தைக் கொண்டு, எமது புகல் இடம் ஆ்தும் புரை இடை - என் போன்றோர் இருத்தற்குரிய இடமான காட்டில், இளையவனொடும் வருவான் ஏன் - தம்பியோடும் வர நேர்ந்ததேன்? என்றான் - என்று வினவினான்.

'முதுமையில் அரசை மக்களிடத்து ஒப்புவித்துத் தாம் தவம் மேற் கொள்ளுதல் இட்சுவாகு குலத்தரசர் முறையாகும். அங்ஙனம் இருக்க, நீ இப்போதே இவ்வாறு தவக்கோலம் பூண்டு, தம்பியையும் உடன் கொண்டு கானகம் வரக் காரணம் என்ன? அஃது உனக்குத் தகாத தன்றோ?' என்று வினவினர் முனிவர். 'நீ அரசாளுதற்குரிய எல்லாத் தகுதியும் இளமையும் உடையாய் 'என்பார், 'அகலிடம் நெடிதாளும் அமைதியை' என்றார். 'உனக்கு இந்நிலை பகைவரால் நேர்ந்திராது' என்பார், 'இகலடு சிலை வீர' என்றார். தகவிலது எனற்பாலதன் இறுதி தொக்கது. புரை - இடம்; அமைதியை: வினையாலணையும் பெயர். தழுவினை : முற்றெச்சம்.

(பி - ம்.) 1. அமைதியதது, அமைதியினது.
2. எனதாகும், எமதாளும்; புரையிடைஇனநாளில், இனநாளின், இந்நாளில், எனநாளின், புரையிடமிந்நாளில்.
3. தகவிலை, தகைவில; வருவானென்.
4. இகலிடு சிலைவீரா. (24)

உற்றதை இராமன் சொல்லக் கேட்டுப் பரத்துவாசர் வருந்துதல்

717. உற்றுள பொருளெல்லா முணர்வுற வுரைசெய்தான்
நற்றவ முனியந்தோ விதிதரு நவையென்பான்
இற்றது செயலுண்டோ வினியென விடர்கொண்டான்
பெற்றில டவமந்தோ பெருநில மகளென்றான்.

(முனிவனுக்கு விடையாக இராமபிரான்), உற்று உள பொருள் எல்லாம் - நேர்ந்துள்ள காரியங்களையெல்லாம், உணர்வு உற உரை செய்தான் - விளங்கச் சொன்னானாக, நல் தவம் முனி - நல்ல தவத்தை உடைய அப் பரத்துவாச முனிவர், அந்தோ - ஐயோ, விதிதரு நவை என்பான் - விதியால் விளைந்த தீங்கு இது என்று கருதி, இற்று அது - அந்தத் தீங்கு இத்தகையது; இனிச் செயல் உண்டோ என - இனி (இதை மாற்றும்) வகை உண்டோ என்று, இடர் கொண்டான் - துன்ப முற்றவராகி, அந்தோ—, பெருநிலம் மகள் - பெருமையுடைய பூமிதேவி, தவம் பெற்றிலள் - (நீ ஆளுதற்குரிய) தவப்பேறு பெறாதவளானாள்; என்றான்—.

பொருள் - காரியம். விதி தரும் நவை : 456 பார்க்க. நிலமகள் தவம் பெற்றிலள் : 666-பார்க்க.

(பி - ம்.) 1. உற்றுறு, உற்றன.
2. முனிகேளா; நவையுன்பால், நவையெவ்னின்.
3. இற்றிது; செயலுண்டேயினி, செயலுண்டோவிசை, விதி, பிறிது.
4. தவமாதோ; மகளென்பான். (25)

718. துப்புறழ் துவர்வாயின் றூய்மொழி யிவளோடும்
அப்புறு கடன்ஞால மாளுதி கடிதென்னு
ஒப்பரு மகனுன்னை யுயர்வன முறவேகென்
றெப்பரி சுயிருய்ந்தா னென்றுணை யவனென்றான்.

என் துணையவன் - என் நண்பனான தசரதன், ஒப்பு அரு மகன் உன்னை - இணைவேறில்லாத புதல்வனான உன்னை, துப்பு உறழ் துவர் வாய் - பவளம் போன்ற சிவந்த வாயினையும், இன் தூய்மொழி - இனிய தூய சொற்களையுமுடைய, இவளோடும் - இச் சீதையுடனே (இருந்து), அப்பு உறு கடல் ஞாலம் - நீர் மிக்க கடல் சூழ்ந்த நிலவுலகத்தை, கடிது ஆளுதி என்னு - விரைந்து ஆளுதலை மேற்கொள்க என்று (முதலில்) கூறி, (பின்பு அந்த வாயாலே), உயர் வனம் உற ஏகு என்று - மரங்கள் ஓங்கிய காட்டை அடைய செல் என்று சொல்லி, எ பரிசு உயிர் உய்ந்தான் - எங்ஙனம் உயிர் வாழ்ந்திருக்கின்றான்? என்றான் —.

'தசரதன், அரசை உன்னிடம் ஒப்புவிப்பதாகக் கூறினவன், உடனே அதை மாற்றி நீ வனம் செல் என்று சொல்ல எவ்வாறு வாயெழுந்தது? அவ்வாறு சொல்லி, உன்னை வனத்துக்கு அனுப்பிய பின்னும் உயிரோடிருக்கின்றானா?' என்று வியக்கின்றார் பரத்துவாச முனிவர். எழுவாய் முன் பாட்டிலிருந்து வருவிக்க. சக்கரவர்த்தியை 'என் துணையவன்' என்றதனால், முனிவரோடு அவனுக்குத் தொடர் புண்மையும், இராமபிரான் முதலியவர்களைப்பற்றி முனிவர் அறிந் திருந்தாரென்பதும் பெறப்படும். அரசர்கள் முடிசூடும்போதும், பின்னர் அவர்களது நாளோலக்கத்திலும் பட்டத்தரசியர் உடனிருத்தல் மரபு; "சிவந்தவாய்ச் சீதையும் கரிய செம்மலும், நிவந்தவா சனத்தினி திருப்ப" (152) என்பதும், சோழவரசர் மெய்க்கீர்த்திகளுள், அவர்கள் பட்டத்தரசியருடன் சிங்காதனத்து வீற்றிருத்தல் கூறப்படுதலும் காண்க.

(பி - ம்) 1. துப்புறுதவர்வாயிற்றூமொழி, வாயின்றூமொழி, துப்புறுமிதழ் வாயின்றூய்மொழி; அவளோடும், யயிலோடும்.
2. ஆளுதி கடிதென்னுது, ஆளுதிர்கடிதென்னு.
3. ஒப்பருமரசுன்னை, மகனின்னை, மகனின்னை, ஒப்பறுமரசுன்னை; உயர்வனமுறைகென்றான், உறைகென்றே, உறையென்றான்.
4. உரைசெய்தானென், அரசுய்ந்தானென், அவனுய்ந்தானென். (26)

பரத்துவாசர் அவர்களைத் தம் ஆசிரமத்துக்கு அழைத்துச் செல்லுதல்

719. அல்லலு முளவின்ப மணுகலு முளவன்றே
நல்லவு முளசெய்யு நவைகளு முளவன்றே
இல்லையோர் பயனுனிங் கிடருறு மிதிலென்னுப்
புல்லின னுடனேகொண் டினிதுறை புரைபுக்கான்.

(எவர்க்கும் வாழ்க்கையில்) அல்லலும் உள - துன்பங்களும் உள்ளன; இன்பம் அணுகலும் உள - இன்பம் வருதலும் உள்ளன; அன்றே-இஃது இயல்பே அன்றோ?(இவற்றிற்குக் காரணமாக),செய்யும் நல்லவும் உள - (அவரவர்) செய்யும் நல்ல காரியங்களும் உள்ளன; நவைகளும் உள அன்றே - தீங்குகளும் (பாவ காரியங்களும்) உள்ளன அன்றோ? (ஆதலால்), நான் இங்கு இடர் உறும் இதில் ஓர் பயன் இல்லை - நான் இப்போது துன்பப்படுவதில் ஒரு பயனும் இல்லை, என்னு - என்று (தம் மனத்தைத் தேற்றிக்கொண்டு), புல்லினன் - (இராம பிரானைத்) தழுவியவராக, உடனே கொண்டு - (அவர்களைத்) தம்முடன் அழைத்துக்கொண்டு, இனிது உறை புரை புக்கான் - (தாம்) இனிதாக வாழும் ஆசிரமத்தை அடைந்தார்.

முனிவன் என்ற எழுவாய் வருவிக்க.

உலகத்தில் யாவரும் புண்ணியம், பாவம் என்ற இரண்டையும் செய்தலும், அவற்றின் பயனாக இன்பம், துன்பம் என்ற இரண்டும் மாறி மாறி வருதலும் இயல்பே யாதலால், இப்போது இராமனுக்கு நேர்ந்த இத்துன்பம்பற்றி நான் துன்பப்படுவதில் பயனில்லை என்று முனிவர் முடிவு செய்துகொண்டு, அவர்களைத் தம்முடன் ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்றார் என்றவாறு.

(பி - ம்.) 1. அல்லதும்; அணுகலுமுளவந்தோ.
2. நல்லன, நல்வினை; உளவந்தோ, உளதன்றே, உளவென்றல், உளவென்றன்.
3. பயனுனின்று, பயனுலிங்கு, பயனீயிங்கு; இதினென்னுப், அதிலென்னுப், அதுவென்னுப்.
4. உறையுழை, உறைவிடம். (27)

720. புக்குறை யிடநல்கிப் பூசனை முறைபேணித்
தக்கன கனிகாயுந் தந்துரை தருமன்பால்
தொக்கநன் முறைகூறித் தூயவ னுயிர்போலும்
மக்களி னருளுற்றான் மைந்தரு மகிழ்வுற்றார்.

தூயவன் - பரத்துவாச முனிவர், புக்கு - (இராமன் முதலியோருடன் ஆசிரமத்தினுள்ளே) புகுந்து, உறை இடம் நல்கி - அவர்கள் தங்குதற்குரிய இடத்தைக் கொடுத்து, பூசனை முறை பேணி - விருந்தினர்க்குரிய உபசாரங்களை முறையாகச் செய்து, தக்கன -

நல்லனவான, கனி (உம்) காயும் தந்து - பழங்களையும் காய் முதலிய வற்றையும் (விருந்துணவாகத்) தந்து, உரை தரும் அன்பால் - பாராட்டிச் சொல்லத்தக்க அன்போடு, தொக்க நல்முறை கூறி - மிகுதி யான நல்ல ஒழுக்க முறைகளை எடுத்துச் சொல்லி, உயிர்போலும் மக்களின் - தம் உயிர் போன்ற மக்களாக(அவர்களை)க் கருதி, அருள் உற்ருன் - அருள் புரிந்தார்; மைந்தரும் - இராம இலக்குவரும், மகிழ்வு உற்ருர் - மிக்க மகிழ்ச்சி அடைந்தனர்.

இராமபிரான் முதலிய மூவரும், பரத்துவாச முனிவரால் நன்கு உபசரிக்கப்பெற்று மகிழ்ச்சியுடன் அவரது ஆசிரமத்தில் தங்கியிருந் தனர் என்க. 'மக்களின் அருளுற்ருன்' என்பதனேடு 632-ஆம் பாடலை ஒப்பிடுக.

(பி - ம்.) 1. புக்குறைவிடம், உறைவிடன்
2. தந்துறைதரும், உறைதலும்.
3. தொக்கனமுறை.
4. மைந்தனு மகிழ்வுற்ருன். (28)

தம்முடன் வசிக்குமாறு முனிவர் இராமனை வேண்டுதல்

721. வைகின ரினிதன்ன ரவ்வழி மறையோனும்
உய்குவெ னிவனேடு முடனுறை தலினென்பான்
செய்தன னினிதெல்லாஞ் செல்வனை முகமுன்னக்
கொய்குல மலர்மார்ப கூறுவ துளதென்ருன்.

அன்னர் - (இராமபிரான் முதலிய) அம்மூவரும், அ வழி - அவ் வாசிரமத்தில், இனிது வைகினர் - இனிதாகத் தங்கினர்; மறையோனும் - வேதம் வல்ல முனிவரும், இவனேடும் உடன் உறைதலின் - இவ்விராம னேடு சேர்ந்து வசித்தலால், உய்குவென் என்பான் - நான் நற்கதி பெறுவேன் என்று கருதியவராய், எல்லாம் இனிது செய்தனன் - அவர் களுக்கு (வேண்டிய) எல்லாவற்றையும், நன்கு செய்தமைத்து, செல்வன் முகம் முன்ன - இராமபிரானிடம் அணுகி, கொய் குலம் மலர் மார்ப - கொய்யப்பெற்ற சிறந்த மலர்மாலை அணிந்தவனே, கூறுவது உளது என்ருன் - நான் சொல்வதொன்று உண்டு என்றுசொல்வாராகி...

இதுவும் மேலே இரண்டு பாடல்களும் தொடர்ந்து, "இருத்தி யீண்டென்ருன்" (728) என்பதனேடு முடியும். பரத்துவாச முனிவர், இராமபிரான் தம்முடன் இருந்தால், தமக்கும் அவர்களுக்கும் நன்மையாமென்று கருதி, அதனை இராமபிரானிடம் தெரிவித்தல் மேல் இரண்டு பாடல்களாற் கூறப்படும். செல்வனை; ஐ, அல்வழிச் சாரியை. முன்ன : செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம். முதலடியில், 'வைகினர் கதிர் நாறுமளவையின்' என்றுள்ள பாடம் சிறக்கும். மூவரும் முனிவர்பால் விடை கொண்டு ஆசிரமத்தினின்றும் புறப்

பட்டது காலைப்பொழுது என்பது மேலே 731-ஆம் பாடலால் தெரியவரும்.

(பி - ம்.) 1. வைகினனினிதன்ஞன்; அவ்வயின், இவ்வழி; மு. வைகினர் கதிர்நாறு மளவையின் மறையோரும், மறையோனும்.
2. உய்குவெனிவனெடியான், உய்குவம், உய்குவெம், உய்குவனி வனெடியான், உய்குவமிவனேடும், உய்குவனெடும், உய்குவனி வனெடியாம்; உடனுறைகுவனென்பான், உடனுறைபென வந்தச், உறைதலிலெனவந்தச், உறைதலினெனவன்பாற், உறை தலிதெனவான, யானுறைதலினென்பான்.
3. செய்தனமினிதென்னுச், செய்தவனினிதெல்லாம், செய்தவனி தெல்லாம், செய்குவனினிதெல்லாம், இனிதென்னுச், செய்குவ தேவர்க்கும், செய்குனனினிதெல்லாம்.
4. மலர்மார்பா, கொய்மலர் மார்பாகான், கொய்மலர் தருமார்பா, கொய்மலரணிமார்பா, கொய்முறை மலர்மார்ப; கூறுவகேட் கென்ருன். (29)

(கலிநிலைத்துறை)

722. நிறையு நீர்மலர் நெடுங்கனி கிழங்குகாய் கிடந்தோர்
குறையு மற்றன தூய்மையாற் குலவிய தெம்மோ
டுறையு மிவ்வழி யுயர்தவ மொருங்குடன் முயல்வார்க்
கிறையு மீதலா தினியதோ ரிடமரி தின்னும்.

எம்மோடு உறையும் இ வழி - எங்களோடு (நீங்கள்) தங்கியுள்ள இவ்விடம், ஓர் குறையும் அற்றன - ஒரு குற்றமும் இல்லாதனவாகிய, நிறையும் நீர் - நிறைந்த நீரும், மலர் - பூக்களும், நெடு கனி - மிக்க பழங்களும், கிழங்கு - கிழங்குகளும், காய் - காய்களும், கிடந்து - கிடைக்கப்பெற்று, தூய்மையால் குலவியது - தூய்மையோடு விளங்குவ தாகும்; உயர் தவம் ஒருங்கு முயல்வார்க்கு - உயர்ந்த தவத்தை ஒருங்கே செய்ய விரும்புமவர்க்கு, ஈது அலாது - இதனையன்றி, இனியது ஓர் இடம் இறையும் - நல்லதான (வேறு) ஓரிடம் சிறிதும், அரிது - இல்லை; இன்னும் - மேலும்.

இதுவும் அடுத்த பாடலும் குளகம்.

இராமபிரான், தவவொழுக்கத்தோடு காட்டில் தங்கக் கருதியது உணர்ந்த பரத்துவாச முனிவர், அதற்கேற்ற இடம், தாம் இருக்கும் அந்தச் சூழலே என்று காரணங் காட்டிக் கூறி, இராமபிரானை அங்கே இருத்த முயலுகின்ருர். நெடுமை - மிகுதி. ஒருங்குடன் : ஒரு சொல் விழுக்காடு. அரிது, இன்மை குறித்தது. இறை - சிறிது.

(பி - ம்.) 1. காய்கிடந்த, னேர்ந்த.
2. குறைபுக்தூயவை, தூயவை குறைவிலவெம்மோடு, குறைவில வெம்மோடு, குறைவிலதெம்மோடு, குறைவிலமெய்யோடு, குறை விலமெம்மோடு, குறைபிலவெம்மோடு.

3. உறையுமவ்வழி; ஒருங்கினினுயர்தவம், ஒருங்கினியுயர்தவம், உயர்தவ மொருங்கினி, ஒருங்கினின், முயங்கினும், முயங்கினா; முயல்வோர்க்கு, உயர்தவ முயலுவான் ஓமுக.
4. ஈதலால், ஈதலது, ஈதியாது; இடமரிதென்னும், இடமரிதென்றும், இறையுமீதலதிடமரிதென்னுய மின்னும். (30)

723. கங்கை யாளொடு கரியவ ணுமகள் கலந்த
சங்க மாதலிற் பிரியலென் ருமரைச் சரணச்
செங்க ணுயக வயனுக்கு மரும்பெறற் றீர்த்தம்
எங்கள் போலியர் தரத்ததன் றிருத்தி ரீண்டென்ருன்.

தாமரை சரணம் - செந்தாமரை போன்ற திருவடிகளையும், (தாமரை) செம் கண் - அத்தாமரையே போன்ற செவ்விய கண்களையும் உடைய, நாயக - தலைவா, (இவ்விடம்) கங்கையாளொடு - கங்கா நதியுடன், கரியவள் - யமுனையும், நாமகள் - சரசுவதியும், கலந்த சங்கம் ஆதலின் - கூடுகிற சங்கமத் துறையாதலால், அயனுக்கும் பெறல் அரும் தீர்த்தம் - பிரமனுக்கும் கிடைத்தற்கரிய தீர்த்த விசேடம் உடையது; (எனவே), எங்கள் போலியர் தரத்தது அன்று - எங்களைப் போன்றவர் எளிதில் அடையத் தக்கதன்று; (ஆதலால்) பிரியலென் - நான் (ஒருபோதும்) இங்குநின்றும் நீங்கேன்; ஈண்டு இருத்திர் - (நீங்களும்) இங்கேயே இருப்பீர்களாக; என்ருன்—.

'இன்னும்' என நின்ற முன் பாட்டின் இறுதியோடு, அரும்பெறல் தீர்த்தம், தரத்ததன்று, பிரியலென், இருத்திர் எனக் கூட்டி முடிபு கொள்க.

தவஞ் செய்வார்க்குத் தக்கவிடம் இதனினும் சிறந்தது வேறில்லை என்று கூறி, 'இன்னும்' என்று தொடர்ந்த முனிவர், அவ்விடம் தீர்த்தத்தாலும் தனிச் சிறப்புடையது என்பதனை எடுத்துக் கூறி, 'நான் ஒருபோதும் இங்கிருந்து பிரியமாட்டேன்; உங்களுக்கு வேண்டுவன வெல்லாம் செய்தமைப்பேன்; ஆதலால், நீங்கள் இங்கேயே தங்குங்கள்' என்கின்ருர். ஆறுகளைப் பெண்களாகக் கூறுதல் மரபாகலின், கங்கையாள், கரியவள், நாமகள் என்ருர். சங்கம் - சங்கமம்; கூடுமிடம். இந்த நதிகள் கூடுமிடம் 'திரிவேணி சங்கமம்' எனப்படும். இத்தலம் பிரயாகை. பிரமனுக்கும் அரியதான இவ்விடத்தில் தங்கும் பேறு எனக்கு வாய்த்ததனுல் நான் இங்கிருந்து பிரியேன் என்கின்ருர்.

(பி - ம்.) 1. கங்கையாளொடும்; காளிந்தியெனுநதி.
2. பிரியலம், பிரியலர், பெரிதிவண்; தாமரைச்செங்கண், தாமரை போன்ற, தாமரைவடித்த.
3. அங்கணுயக, அங்கநாயக, அங்கநாயகன், செங்கணுயகன்; அரும் பெறநீர்த்தம்.
4. தரத்ததின்; இருத்திமீண்டு, இருத்தியீங்கு. (31)

இராமபிரான் கூறுதல்

724. பூண்ட மாதவ னம்மொழி விரும்பினன் புகல
நீண்ட தன்றிது நிறைபுன ஞட்டுக்கு நெடுநாள்
மாண்ட சிந்தைய விவ்வழி வைகுவெ னென்ருல்
ஈண்ட யாவரு நெருங்குவ ரென்றன னிராமன்.

பூண்ட மா தவன் - பெருந்தவம் பூண்ட பரத்துவாசர், அ மொழி விரும்பினன் புகல - அந்த வார்த்தையை விரும்பிக் கூற, இராமன் - இராமபிரான், (முனிவரை நோக்கி) மாண்ட சிந்தைய - மாட்சிமைப் பட்ட மனமுடையீர், இது - இவ்விடம், நிறைபுனல் நாட்டுக்கு நீண்டது அன்று - நிறைந்த நீர்வளமுடைய கோசல நாட்டுக்கு நெடுந்தூரத்தில் உள்ளதன்று; நெடுநாள் - நெடுங்காலம், இ வழி வைகுவென் என்ருல் - இவ்விடத்தில் நான் தங்குவேஞனல், யாவரும் - நாட்டு மக்கள் அனைவரும், ஈண்ட நெருங்குவர் - விரைவில் (இங்கு வந்து) கூடுவார்கள், என்றனன்—.

அம்மொழி என்றது, 'இருத்திர் ஈண்டு' என்றதனை. இராமன் அங்கேயே தங்கவேண்டுமென்ற விருப்பத்தோடேயே முனிவர் சொன்னுலும், தன் கருத்துக்கு அது தக்கதன்று எனக் காரணங் காட்டிக் கூறுகின்ருன் இராமபிரான். "சீதை மணவாளன் றன்ஞேடுந் தீக்கானம், போது மதுவன்றேற் புகுதுமெரி", "பிறந்துலகம், முற்றுடைய கோவைப் பிரியாது மொய்த்தீண்டி, உற்றுறைதும் யாரும் உறையவே சின்னுளில், புற்றுடைய காடெல்லாம் நாடாகிப் போம்" (400, 404) என்று தன்னை விடாது தொடர்ந்த மக்களின் மனக் கருத்தை நன்கு உணர்ந்தவனுகலின், மீண்டும் அவர்கள் அவ்வாறு திரண்டு வரின், தன்னேடு அங்குள்ள முனிவர்க்கும் இடையூறு உண்டாமென்று குறிப்பிக்கின்ருன். இது, தன் கருத்துக்கு ஏற்றதாக வேருேர் இடத்தை முனிவர் கூறவேண்டுமென்பது குறித்தவாறு.

(பி - ம்.) 1. மா்தவனவ்வழி; விரும்பினன்புனித, விளம்பினன்புனிதன்.
2. நீண்டவன்றிது, நீண்டவன்னது, நீண்டவன்னிது; நாட்டிற்குள், நிகழ்த்தினனுட்டினுக்கு; நடுவாம், அணித்தாம், அணித்தாய், நேரே.
3. சிந்தையர், சிந்தையன்; வைகுவன், வைகுவத், வைகினன், ஆகுவன்.
4. ஈண்டியாவரும், ஈண்டையாவரும்; நெருக்குவர். (32)

பரத்துவாசர் கூறுதல்

725. ஆவ துள்ளதே யையகே ளீயிரண் டமைந்த
காவ தப்பொழிற் கப்புறங் கழிந்தபின் காண்டி
மேவு காதலின் வைகுதி விண்ணினு மினிதாத்
தேவர் கைதொழுஞ் சித்திர கூடமென் றுளதால்.

(இராமபிரான் கூறியது கேட்ட முனிவன், அவனை நோக்கி) ஐய - ஐயனே, ஆவது உள்ளதே-(நீ சொல்லியவாறு) நேர்வது உண்மையே; (அங்ஙனமாயின்) கேள் - (நான் சொல்வதைக்) கேட்பாயாக; ஐ இரண்டு காவதம் அமைந்த பொழிற்கு - பத்துக் காத அளவினதாய் அமைந்துள்ள இந்த வனத்துக்கு, அ புறம் கழிந்தபின் - அப்பால் சென்ற பிறகு, விண்ணினும் இனிது ஆக - சுவர்க்கத்தினும் இனியதாக, தேவர் கைதொழும் - தேவர்களும் வணங்குதற்குரிய பெருமையுடைய, சித்திரகூடம் என்று உளது காண்டி - சித்திரகூடம் என்று பேருடையதோர் இடத்தை(மலையை)க் காண்பாய்; மேவு காதலின் - உனக்கு அமைந்த விருப்பத்தின்படி, வைகுதி - (அங்கே) தங்குவாயாக.

'என்று காதலின் ஏயினன்' என மேல் வருவதனோடு தொடர்ந்து முடியும். ஆல் : அசை. பொழில் - வனம்.

இராமபிரானது கருத்தை உணர்ந்த பரத்துவாச முனிவர், சித்திரகூட மலையின் பெருமையைக் கூறி, அவர்கள் தங்குதற்கு ஏற்ற இடம் அதுவே, அங்கே இனிதாக எவ்வளவு காலமாயினும் தங்கலாம் என்றனர். பரத்துவாச முனிவரது ஆசிரமத்திலிருந்து பத்துக்காத தூரத்தில் உள்ளது சித்திரகூடமென்பது இதனுல் பெறப் படுகின்றது. பத்துக் குரோசம் என்று வான்மீகம் கூறும்.

பி-ம்.) 1. ஆயது; ஐயிரண்டமைந்த.
2. காவதன், காவதர்ப், காவிடைப், கூவுதண்; கூபதன், அப்புறம் போயபின், போனபின்; குறுகி, குறுகும்.
3. மேவுகாதலை, காதல; கானத்தில், கானத்தின், கானத்துள்; வைகுதிர், ஏகுதி, வெஃகுதி; பல்வளம்; விண்ணினுமினிதால்.
4. கைதொழு; கூடமென்றுளதே, ஒன்றுளதால். (33)

மூவரும் விடைபெற்று யமுனை தீரத்தை அடைதல்

726. என்று காதலி னேயின னடிதொழு தேகிக்
கொன்றை யங்குழற் கோவலர் முல்லையங் குறிஞ்சி
சென்று செங்கதிர்ச் செல்வனு நடுவுறச் சிறுமான்
கன்று நின்றுகள் கரையுடைக் காளிந்தி கண்டார்.

என்று—, காதலின் ஏயினன் - அன்போடு (முனிவர்) விடை கொடுத்தாராக, அடிதொழுது - (மூவரும் முனிவருடைய) பாதங்களில் வணங்கி, ஏகி - (அங்கு நின்றும்) புறப்பட்டு, கொன்றை அம் குழல் கோவலர் முல்லை - கொன்றைப்பழக் குழலினையுடைய இடையர் வாழும் முல்லைநிலப் பகுதியையும், அம் குறிஞ்சி - அழகிய குறிஞ்சி நிலப் பகுதியையும், சென்று - கடந்துபோய், செம் கதிர் செல்வனும் நடு உற - சூரியனும் உச்சியை அடைய, (அவ்வேளையில்) சிறுமான் கன்று நின்று உகள் கரை உடைய - சிறியமான் கன்றுகள் நின்று

துள்ளுதற்கிடமான கரைகளையுடைய; காளிந்தி கண்டார் - யமுனை யாற்றைக் கண்டனர்.

'என்று' என்றது முன் பாடலின் தொடர்ச்சி; வைகுதி என்று காதலின் ஏயினன் என இயையும். முனிவர்பால் விடைகொண்டு மூவரும் புறப்பட்டு வழிநடந்து, உச்சிப் போதில் யமுனையாற்றை அடைந்தனர் என்றதனால், இவர்கள் புறப்பட்டது காலைப் போதாதல் பெறப்படும்; அஃதாவது, பரத்துவாசரின் ஆசிரமத்தில் தங்கின இராப் பொழுது கழிந்த மறுநாட் காலை யென்க. கொன்றை நெற்றால் குழல் அமைத்து ஊதுதல் கோவலர்க்கு உரியது. கொன்றையங் குழல்: அம், சாரியை; "கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ" (சிலப். 17: 19). இராமபிரான் முதலியோர் வழிநடையில் மருதம், முல்லை, குறிஞ்சி என்ற மூன்று நிலங்களை இதுகாறும் கூறினர்.

(பி - ம்.) 1. என்ற; காதலினேவலும், காதலினேவினன், காதலனடிதொழு, காதலன்கூறிட, காதலனேயினன், மாதவனேகினன், மாதவனேகலும், மாமுனியியம்பினன், இயம்பலும், ஏவினன்; அடிதொழுதேத்திக், அடிதொழுதிறைஞ்சிக், இருமையினிறைஞ்சிக், இனியன வேத்திக், இராகவன் முதலோர்.
2. கொன்றைவெங்குழற், வேய்ங்குழற்; முல்லையுங்குறுகிச், முல்லையுங் குறிஞ்சி, முல்லையங்குடுமி.
3. செல்வனுமுடியுறச்.
4. கரையுடைக்கானதி, காளிந்தியெனுநதி; கண்டான். (34)

நீராடி உணவருந்தி யமுனையைக் கடத்தல்

727. ஆறு கண்டன ரகமகிழ்ந் திறைஞ்சின ரறிந்து
நீறு தோய்மணி மேனியர் நெடும்புனல் படிந்தார்
ஊறு மென்கனி கிழங்கினோ டுண்டுநீ ருண்டார்
ஏறி யேகுவ தெங்ஙன மென்றலு மிளையோன்.

ஆறு கண்டனர் - யமுனையாற்றைக் கண்டவர்களான, நீறு தோய் மணி மேனியர் - (வழிநடையால்) புழுதி படிந்த திருமேனியுடைய அம்மூவரும், அகம் மகிழ்ந்து - மனமகிழ்ந்து, அறிந்து - (அதன் பெருமையை) உணர்ந்து, இறைஞ்சினர் - (அதனை) வணங்கி, நெடு புனல் படிந்தார் - (அதன்) ஆழ்ந்த நீரில் முழுகி (நீராடி), ஊறும் மென்கனி - சுவையூறிய மென்மையான பழங்களை, கிழங்கினோடு உண்டு - (நல்ல) கிழங்குகளுடன் புசித்து, நீர் உண்டார் - (அந் நதியின்) நீரையும் அருந்தியபின், ஏறி ஏகுவது எங்ஙனம் என்றலும் - (இதனைக்) கடந்து செல்வது எவ்வாறு என்று ஆலோசிக்குமளவில், இளையோன் - இளைய பெருமாள்....

இதுவும் அடுத்த பாடலும் குளகம். இளையோன், அமைத்து, நீந்தி நீங்கினன் (733) என இயைந்து முடியும். வழிநடந்து வருந்திய

வர்க்கு, ஆற்றைக் கண்டது மகிழ்ச்சி அளித்தது. யமுனை தெய்விக மான பெருமை உடையதாகலின் அதனை வணங்கி, அதில் நீராடி, (நாட்கடன்களை முடித்துக்கொண்டு) கையில் கொணர்ந்த பழம் முதலியவற்றைப் புசித்து நீரும் அருந்திச் சிறிது இளைப்பாறியபின், நதியைக் கடந்து மேலே செல்வது எவ்வாறு என்று சிந்திக்கையில் இலக்குவன், இன்னது செய்தான் என்பதை மேல் வரும் பாடலுட் காண்க. கண்டனர், மேனியர்: வினையாலணையும் பெயர். ஏனை மூன்று முற்றுக்கள் எச்சப் பொருளில் வந்தன. நீராடிப் புசித்தனர் என்றதனால் நாட்கடன் கழித்தமையும் பெறப்படும்.

(பி - ம்.) 1. கண்டகமகிழ்ந்தினிது, கண்டனர்மகிழ்ந்தனர், கண்டனரவ்வயின்; இறைஞ்சினர்வணங்கி, அறிந்தனரிறைஞ்சி, அடைந்தனரறிந்து, அவ்வயினடைந்தார்.
2. நீருதோய்பனி, மாறிலாதொளிர்; மணிப்புனல்படிந்தே.
3. ஊறுதேன்கனி.
4. எங்கனமென்றலும், எங்கனமென்றனன், எங்ஙனமென்றிட; இளையான். (85)

728. வாங்கு வேய்ங்கழை துணித்தனன் மாணையின் கொடியால்
ஓங்கு தெப்பமொன் றமைத்தத னும்பரி னுலம்போல்
வீங்கு தோளண்ண றேவியோ டினிதுவீற் றிருப்ப
நீங்கி னனந்த நெடுநதி யிருகையா னீந்தி.

வாங்கு வேய் கழை துணித்தனன் - வளையும் தன்மையுடைய மூங்கிற் கழிகளை வெட்டி, மாணையின் கொடியால் - மாணை என்னும் ஒருவகைக் கொடியால் (பிணைத்து), ஓங்கு தெப்பம் ஒன்று அமைத்து - உயர்ந்த தெப்பம் ஒன்றைக் கட்டி, அதன் உம்பரின் - அதன்மேல், உலம்போல் வீங்கு தோள் அண்ணல் - திரண்ட கல்லைப் போலத் திண்ணிதான தோள்களையுடைய இராமபிரான், தேவியோடு இனிது வீற்றிருப்ப - சீதாபிராட்டியுடனே இனிதாக ஏறியிருக்க, அந்த நெடு நதி - அந்த ஆழமான யமுனையாற்றை, இரு கையால் நீந்தி நீங்கினன் - (தன்) இரு கைகளாலும் (தெப்பத்தைக் கடத்தியவாறே) நீந்திக் கடந்தான்.

'இளையோன்' என்ற எழுவாய் முன் பாட்டின் இறுதியில் உள்ளது.

யமுனையைக் கடப்பதெப்படி என்று ஆலோசிக்கையில், இலக்குவன், அங்கே கிடைத்த மூங்கிற் கழிகளை ஒத்த அளவினவாகத் துண்டித்து, மாணையென்னும், ஒருவகைக் கொடியைக் கயிருகக் கொண்டு நல்ல தெப்பம் ஒன்று கட்டி, அதில் இருவரையும் அமரச் செய்து, அதனை உந்தியவாறே தான் ஆற்றை நீந்திக் கடந்தான். இராம இலக்குவர் இருவருமாகத் தெப்பத்தை அமைத்து இலக்குவனும் அதில் இருக்க, இருவரும் அதனைச் செலுத்தி அக்கரை சேர்ந்தனர் என்று வான்மீகம் கூறும்.

வேய் - மூங்கில். கழை - கழி; கோல். மாணைக்கொடி: "துறுகல் அயலது மாணை மாக்கொடி" (குறுந். 36).

(பி - ம்.) 1. வெங்கழை, வேய்ங்கழி, மென்கழை; மாணையங் கொடியாள்.
2. ஏங்குதெப்பமொன்று, ஓங்குதெப்பமென்று; அமைத்ததின், அமைத்தனன், இழைத்ததன், இழைத்தனன்; உம்பரினிலம்போல், உம்பரினகம்போல், உம்பரினுலகம், உம்பர்தம்பதிபோல்.
3. வீற்றிருக்க.
4. நீந்தினனந்த; நெடுங்கரை, இருகதி; இருகையால்மிமிர. (36)

இலக்குவன் நீந்திச் சென்றது

729. ஆலை பாய்வய லயோத்திய ராண்டகைக் கிளையான்
மாலை மால்வரைத் தோளெனு மந்தரந் திரியக்
காலை வேலையை யுற்றது கழிந்தநீர் கடிதின்
மேலை வேலையிற் பாய்ந்தது மீண்டநீர் வெள்ளம்.

ஆலை பாய் வயல் - கரும்பாலையிலிருந்து சாறு நீர்போலப் பாயும் வயல்களையுடைய, அயோத்தியர் ஆண் தகைக்கு - அயோத்தியிலுள்ளார் தலைவனான இராமபிரானுக்கு, இளையான் - இளையவனான இலக்குவனுடைய, மாலை - மாலை யணிந்த, மால் வரை தோள் எனும் மந்தரம்-பெரிய மலை போன்ற தோள்களாகிற மந்தர மலை, திரிய - (நீந்தும்போது) சுழலுதலால், மீண்ட நீர்வெள்ளம் - (தொடர்ந்து வர முடியாமல் எதிர்த்துத்) திரும்பிய நீர்ப்பெருக்கு, மேலை வேலையில் பாய்ந்தது - மேல் கடலில் போய்ப் புகுந்தது; கழிந்த நீர் - எஞ்சிய நீர், கடிதின் காலை வேலையை உற்றது - விரைந்து கீழ்கடலை அடைந்தது.

இலக்குவன், தெப்பத்தோடு ஆற்றின் குறுக்கே நீந்திச் சென்றதனால், மேற்கே இருந்து வரும் நீரோட்டம் தடைப்பட்டுத் திரும்பி மேற்கு நோக்கி எதிர்த்துச் சென்று மேல் கடலை அடைந்தது; மிகுந்த நீர் கீழ்கடலை அடைந்தது என்றது உயர்வுநவிற்சி. நீர்மேல் வருதல் இல்லாமையால் தெப்பம் ஆற்றைக் கடத்தல் எளிதாயிற்றென்ற குறிப்பும் இதில் உள்ளது. காலை வேலை, காலையில் கதிரவன் உதயமாகும் கீழ்கடலைக் குறித்தது. ஆண்தகை - ஆண்களிற் சிறந்தோன் புருஷோத்தமன்.

(பி - ம்.) 1. ஆலைபேய்வயல்; அயோத்தியார்; இளையோன்.
3. வேலையைக்கடந்தது, கடைந்தது; களிந்திநீர்.
4. மேலவேலையில்; பரந்தது, உற்றது; மீண்டநீர்வேலை, நீண்டநீர் வெள்ளம். (37)

மூவரும் ஒரு சுரத்தை அடைதல்

730. அனைய ரப்புன லேறின ரகன்கரை யணைந்தார்
புனையும் வற்கலைக் கோலத்தர் நெடுநெறி போனார்
சினையு மூலமு முகடும்வெந் திருநிலந் தீய்ந்து
நினையு நெஞ்சமுஞ் சுடுவதோர் நெடுஞ்சுர நேர்ந்தார்.

புனையும் வற்கலை கோலத்தர் - உடுத்த மரவுரியால் உளதாகிய அழகினையுடைய அவர்கள், அனையர் - அத்தன்மையினராய், அ புனல் ஏறினர் - அந்த யமுனையாற்றைக் கடந்து, அகன் கரை அணைந் தார் - பரந்த (தென்) கரையைச் சேர்ந்து, நெடு நெறி போனார் - நெடு வழியை நடந்து போய், சினையும் மூலமும் முகடும் வெந்து - (மரங் களின்) கிளைகளும் வேரும் உச்சியும் வெந்து கருக, இருநிலம் தீய்ந்து- தரையும் (பசையின்றித்) தீய்ந்து போகப் பெற்று, நினையும் நெஞ்சமும் சுடுவது - நினைக்கும் மனத்தையும் தீய்க்கவல்லதான, ஓர் நெடு சுரம் - ஒரு பெரும் பாலை நிலத்தை, நேர்ந்தார் - அணுகினர்.

அனையர், வற்கலைக் கோலத்தராகவே நெடுநெறி போனார் என இயைத்துரைத்தலும் ஆம். இதில் அனையர் என்பது எழுவாய். ஏறினர், அணைந்தார், போனார் என்பன முற்றெச்சம். சுரத்தின் கொடுமை: பால. 344, 345 - ஆம் பாடல்களும் அவற்றின் விசேடக் குறிப்பும் பார்க்க.

(பி - ம்.) 1. *அனையவப்புனல்கடந்தனர்; அக்கரை அணைந்தார், உற்றார், புக்கார், அதன்கரை அணைந்தார், அகன்சுனையுற்றார்.*
2. *வற்கலைப்பொற்பினர், பொறியினர், கோலத்தார், பொற்பினர்.*
3. *மூலமுமகடும், மூலமும்வேரும், மூலமுமுருடும், மூலமுஞ்சிலையும்; நிலந்தீந்து.*
4. *நெஞ்சையும்; தீய்வதோர்; நெடுநெறி; சேர்ந்தார், சென்றார், நின்றார்.* (38)

இராமபிரான் நினைவால் பாலை மாறிய பரிசு

731. நீங்க லாற்றலள் சனகியென் றிராகவ னினைந்தான்
ஓங்கு வெய்யவ னுடுபதி யெனக்கதி ருகுத்தான்
தாங்கு வெங்கடத் துலவைகள் தழைகொண்டு தழைத்த
பாங்கு வெங்கனல் பங்கய வனங்களாய்ப் பரந்த.

(பாலையை அணுகியபோது), இராகவன் - இராமபிரான், சனகி நீங்கல் ஆற்றலள் என்று நினைந்தான் - சீதை இக் கொடுவனத் தைக் கடத்தலாற்றாள் என்று எண்ணினான்; (அவ்வளவில்) ஓங்கு வெய்யவன் - வெம்மை மேலிட்டுநின்ற கதிரவன், கதிர் - தன் சுடு கதிர்களை, உடுபதி என உகுத்தான் - சந்திரனைப் போலத் (தண்மை யாக) வீசினான்; தாங்கு - (அத்தன்மையை) ஏற்ற, வெம் கடத்து உலவைகள் - கொடிய சுரத்தின்கண் உள்ள பட்ட மரங்கள், தழை கொண்டு தழைத்த-தழைகளை ஏற்றுத் தளிர்த்தன; வெம் கனல் பாங்கு- கொடுந் தீப்போன்ற இடங்கள், பங்கயம் வனங்களாய் பரந்த- தாமரைத் தடாகங்கள் போல் (குளிர்ந்து) பரவின.

மூவரும் யமுனையைச் சார்ந்தது உச்சி வேளை என்பது முன்னே சொல்லப்பட்டது. அவர்கள் ஆற்றைக் கடந்து மறு கரை சேர்ந்து, வழி

நடந்து, சுடுவெயில் உள்ளபோதே சுரத்தைக் குறுகினராதல் வேண்டும்; அப்போது, மெல்லியலாகிய பிராட்டி அதனைக் கடப்ப தெங்ஙனம் என்று இராமபிரான் எண்ணவே, எங்கும் குளிர்ந்து இன்ப மயமாயிற்று என்கிறார் கவி. இப்படலத்தின் தொடக்கத்தில் இரண்டு பாடல்களுட் கூறியவற்றையும் நோக்குக. உடு - விண்மீன்; உடுபதி - விண்மீன்களுக்குத் தலைவன்; சந்திரன். வெம் கனல் பாங்கு என மாறுக. கனல் பாங்கு - தீப்போலச் சுடுமிடம். வனம் - நீர்; வனங்கள்! ஆகுபெயராய் நீர்நிலைகளைக் குறித்தது. பங்கய வனம் - தாமரைக்காடு என்றலுமாம்.

(பி - ம்.) 1. அன்னலுமினைத்தான், மினைத்தான், மினையா, அன்னவா மினையா, மினைந்தார், அன்னவன் மினைந்தான், அன்னவனுற்றான், அண்ணலுள் மினைந்தான், இனையனமினைந்தான்.
2. ஓங்க.
3 தாங்க; வேங்கடத்து, வெங்கனல்; வளைகொண்டு, தழைப்படி துளைத்த.
4. பாங்கர்; வெங்கனல்; பசுங்கய, வெங்கனற்பங்கய, வேங்கனல் பங்கய; வனங்களாப்பரந்த, வனங்களாற்பசைந்த. (39)

732. வறுத்து வித்திய வனையன வல்லயிற் பரல்கள்
பறித்து வித்திய மலரெனக் குளிர்ந்தன பசைந்த
இறுத்தெ ரிந்தன வல்லிக ளிளந்தளி ரீன்ற
கறுத்த வாளர வெயிற்றினூ டமுதுகக் களித்த.

வறுத்து வித்திய அனையன - வறுத்துப் பரப்பிவைத்தாற் போன்ற, வல் அயில் பரல்கள் - வலிய கூரிய பருக்கைக் கற்கள், பறித்து வித்திய மலர் என - பறித்துப் பரப்பின பூக்களைப் போல, குளிர்ந்தன பசைந்த - குளிர்ந்து பசைகொண்டன; இறுத்து எரிந்தன வல்லிகள் - ஈரம் உலர்ந்து இற்றுத் தீய்ந்து போன கொடிகள், இளம் தளிர் ஈன்ற - இளந்தளிர் விட்டன; கறுத்த வாள் அரவு - சினமுள்ள கொடிய பாம்பு களும், எயிற்றின் ஊடு அமுது உக - (தம் நச்சுப்) பற்களினின்றும் அமுதம் சிந்த, களித்த - (சினம் மாறி) மகிழ்ந்தன.

வித்துதல் - பரப்புதல்; சீவக. 1611.ந. அரவும் என இழிவு சிறப் பும்மை விரிக்க.

(பி - ம்.) 1. வித்தியவனையதோர், அனையவாம், அணையவாய், வித்தியதனைய தோர், விக்கியவனையன, வல்லயிற்பரற்கள், வில்லியிற்பரற்கள்.
2. பறித்தவிக்கிய, விசிய, விழ்த்திய, நீக்கிய, நீங்கிய; பசந்த, பசைந்தது.
3. இறுத்தரிக்தென, இறுத்தரித்தென, இறுத்தரிந்தன, இறுத்தரித்தன. இறுத்தரக்கென; வல்லிகளந்தளிர், வில்லிகளினந்தளிர்.
4. வாளரவெயிற்றினுள், வாளரவயிற்றிடு, வாளரா வெயிற்றினூடு; களித்தார், களிந்த. (40)

733. குழுமி மேகங்கள் குமுறின குளிர்துளி கொணர்ந்த
முழுவில் வேடரு முனிவரின் முனிகில ருயிரைத்
தழுவி நின்றன பசியில பகையில தணிந்த
உழுவை யின்முலை மானிளங் கன்றுக ளுண்ட.

மேகங்கள் குழுமி - மேகங்கள் திரண்டு, குமுறின - முழங்கின வாகி, குளிர்துளி கொணர்ந்த - குளிர்ந்த - மழைத்துளிகளைக் கொண்டு வந்தன; முழு வில் வேடரும் - நிறைந்த விற்களையுடைய வேடர்களும், முனிவரின் - (ஆறின) முனிவர்களைப் போல, முனிகிலர் - சினமுறுதவ ராயினர்; உயிரை தழுவி நின்றன பசி இல - உயிர்களை (விடாது) பொருந்துதலுடைய பசியும் இல்லாதாயிற்று; பகை இல தணிந்த - (இயல்பிலே பகையுடையனவும்) பகை இல்லாதனவாய் அடங்கி யிருந்தன; (அதனால்) மான் இளம் கன்றுகள்—, உழுவையின் முலை உண்டன - புலிகளிடத்து முலைப்பாலை உண்டன.

வேடரும்: உம்மை, இழிவு சிறப்பு. உழுவை - இங்கே பெண் புலி. பசியும் பிணியும் பகையும் நீங்கி வளஞ் சுரந்திருத்தல் நல்ல நாட்டின் இலக்கணம்; அஃதிங்கே உளதாயிற்றென்க.

(பி - ம்.) 1. குழுவி, குமுவின்; குமிறின; நறுந்துளி, கொணர்ந்து.
2. மழுவில்; முனைவரின், மு. வேடருமுனிகில.
3. தழுவிநின்றனர்; பசியிலதணிந்தன, பசியிலமிகையில, பசிசில மிகையில, பரிவுடன் பகையில, பகையில பசியில; தவரு.
4. கன்றுகளுட்ட. (41)

734. கல்ல ளைக்கிடந் தகடுவெந் தயர்கின்ற கதழ்பாம்
பல்ல லுற்றில வலைபுனற் கிடந்தன வனைய
வல்லை யுற்றவேய புற்றொடு மெரிவன மணிவாய்ப்
புல்லெ யிற்றிளங் கன்னியர் தோளெனப் பொலிந்த.

கல் அளை கிடந்து - கல்லிடுக்குகளிலே கிடந்து, அகடு வெந்து - (பசியால்) வயிறு வெந்து, அயர்கின்ற - சோர்கின்ற, கதழ் பாம்பு - சின முள்ள (கொடும்) பாம்புகளும், அல்லல் உற்றில - அத் துன்ப மொன்றும் இல்லாதனவாய், அலைபுனல் கிடந்தன அனைய - அலைகள் அலையும் நீரில் கிடந்தன போல ஆயின; வல்லை உற்ற வேய் - பெருங் காடாக மண்டியுள்ள மூங்கில்கள், புற்றொடும் எரிவன - (அவை முளைத்துள்ள) புற்றுக்களுடனே எரியுந் தன்மை யுள்ளவை, (அத் தன்மை நீங்கி) மணி வாய் - பவளம் போன்ற வாயையும், புல் எயிறு - சிறிய பற்களையுமுடைய, இளம் கன்னியர் தோள் என - இளம் பெண் களின் (பசிய) தோள்களைப் போல, பொலிந்த - (பசுமையோடு) விளங்கின,

அளை - இடுக்கு; பொந்து. கதழ் - விரைவு எனலுமாம். வல்லை உற்ற - வலிய தன்மையையுடைய எனவுமாம்.

(பி - ம்.) 1. கல்லிடைக்.
3. வேய்ம்புற்றொடும், வேய்முத்தொடும், வெம்புற்றொடும், பெப்புற்றொடும்; மணிவாழ்; மணிவான்.
4. மல்லெயிற்று; தோளென மலர்ந்த, தோளொடும் பொலிந்த, குயமெனப் பொலிந்த. (42)

735. படர்ந்தெ ழுந்தபுற் பசுநிறக் கம்பளம் பரப்பிக்
கிடந்த போன்றன கேகயந் தோகைகள் கிளர
மடந்தை மாரென நாடகம் வயின்றொறு நவின்ற
தொடர்ந்து பாணரிற் றூங்கிசை முரன்றன தும்பி.

படர்ந்து எழுந்த புல் - பரவித் தோன்றிய புற்கள், பசுமை நிறம் கம்பளம் பரப்பி கிடந்த போன்றன - பச்சைநிறம் வாய்ந்த கம்பளங்களை விரித்தாற் போன்றன; கேகயம் - மயில்கள், தோகைகள் கிளர - (அழகிய) தோகைகள் விளங்க, மடந்தைமார் என - நாடக மகளிர் போல, வயின்தொறும் நாடகம் நவின்ற - இடங்கள்தோறும் நடனம் ஆடின; தொடர்ந்து - அவற்றைத் தொடர்ந்து, தும்பி - வண்டுகள், பாணரின் - பாடுவார் போல, தூங்கு இசை முரன்றன - இனிய கீதத்தை ஒலித்தன.

தூங்கு இசை - சுருதியோடு ஒன்றிய (லயித்த) கீதம்.

(பி - ம்.) 1. புற்பாங்குறக்; கம்பலம் பரப்பிக், பரப்பக்.
2. கேகயத்தோகைகள், மஞ்ஞையந் தோகைகள்; கிளரா.
3. மடந்தைமாரொடு; வயின்றொறும் பயின்ற, நடித்த.
4. தொடர்ந்த; பாணிசை, துளங்கிசை; முரன்றது. (43)

736. கால மின்றியுங் கனிந்தன கனிநெடுங் கந்த
மூல மின்றியு முகிழ்த்தன நிலனுற முழுதும்
கோல மங்கைய ரொத்தன கொம்பர்க ளிம்பர்ச்
சீல மன்றியுஞ் செய்தவம் வேறுமொன் றுளதோ.

(அந்தப் பாலையில்) கனி - பழங்கள், காலம் இன்றியும் - (பழுத்தற்குரிய) காலமில்லாமலேயும், கனிந்தன - பழுத்தன; நெடு கந்தம் மூலம் இன்றியும் - மிக்க கிழங்குகளும் வேர்களும் இல்லாமலேயும், நிலன் முழுதும் உற முகிழ்த்தன - அந்நிலப் பரப்பு முழுவதிலும் (தாவரங்கள்) மிகத் தோன்றின; கொம்பர்கள் - பூங்கொம்புகள், கோலம் மங்கையர் ஒத்தன - அலங்கரித்த பெண்களைப் போலக் காணப்பட்டன; இம்பர் - இவ்வுலகத்தே, சீலம் அன்றியும் - (சிறந்த) ஒழுக்கத்தை யன்றியும், செய்தவம் வேறு ஒன்றும் உளதோ - செய்தற்குரிய தவம் வேறொன்றும் இருக்கின்றதோ! (இல்லை யென்றபடி).

பாலையின் தன்மை முழுதும் மாறி, அது வளமுள்ள முல்லை போலாயிற்றென்று சொல்லி வருகின்ற கவி, இங்கே அதற்குக் காரணம், தவத்தினும் மேம்பட்டதாகிய பிராட்டியின் சீலம் என்கின்றார்; இராமபிரானுடைய எண்ணமும் இதற்குத் துணையாயிற்றென்னலாம். எனவே, சீலம் இருவருடையதும் என்றலும் இழுக்காது; "சீல மின்ன தென் றருந்ததிக் கருளிய திருவே" (755) என்பதும் காண்க,

இராம இலக்குவர் முன்னமே விசுவாமித்திர முனிவர்பால் பலை, அதிபலை என்ற மந்திரங்களைப் பெற்றுள்ளமையாலும், நிகரற்ற ஆற்றலுடைமையாலும் அவர்கள் பாலையைக் கடத்தல் அரிதாகாது. இங்கே பிராட்டியைக் குறித்தே இராமபிரான் சிந்தித்தானாகலின், அவள் பொருட்டு இது நிகழ்ந்ததென்றல் சிறப்புடைத்தாம். பாலை மாறிய சிறப்புப் பொருளைச் சீலம் எதையும் செய்விக்கும் என்ற பொதுப் பொருளாற் பெறவைத்தமையின், இது வேற்றுப்பொருள் வைப்பணி. காலமின்றியுங் கனிதல்: "தீங்கனி, கால மின்றிக் கனிவது காண்டிரால்" (கிட்கிந்தா. 737); மலைபடு. 134; புறநா. 116: 13; பெருங். 2. 20: 61-3-ம் பார்க்க. வேறும் என்றதில் உம்மை பிரித்துக் கூட்டப்பெற்றது.

(பி - ம்.) 1. காலமன்றியும்; கழிநெடுங்.
2. மூலமன்றியும்; முளைத்தன, முழங்கின; மிலமுற, மிலத்துற, மலனுற, மிலத்துரு, மிலத்துற்ற, நெடுமிலம்.
3. இன்பச், கொம்புகளிம்பர், வளரிளங்கொம்பர்.
4. சீலமின்றியும்; வேறுமொன்றுண்டோ. (44)

737. எயினர் தங்கிட மிருடிக ளிருப்பிட மேய்ந்த
வயின்வ யின்றொறு மணிநிறக் கோபங்கண் மலர்ந்த
பயின்ம ரந்தொறும் பேடையைப் பரிந்தன பயிரும்
குயிலி ரங்கின குருந்தின மரும்பின முருந்தம்.

எயினர் தங்கு இடம் - வேடர்கள் தங்கும் இடங்கள், இருடிகள் இருப்பு இடம் ஏய்ந்த - முனிவர்கள் தங்கும் இடங்கள் போல் ஆயின; வயின் வயின் தொறும் - இடங்கள்தோறும், மணி நிறம் கோபங்கள் மலர்ந்த - மாணிக்க மணி போன்ற செந்நிறம் வாய்ந்த இந்திரகோபப் பூச்சிகள் பரவின; பயில் மரம் தொறும் - நெருங்கிய மரங்களில், பேடையை பரிந்தன பயிரும் குயில் இரங்கின - பெடைகளை அன்போடு அழைக்கும் (ஆண்) குயில்கள் கூவின; குருந்து இனம் - குருந்தமரக் கூட்டம், முருந்தம் அரும்பின - மயிலிறகின் அடிக் குருத்துப் போன்ற அரும்புகளை அரும்பின.

வேடர் பாலைநிலத்துக்கு உரியோர். கொலைத் தொழிலுடைய வன் கண்ணராகலின், அவர்கள் இருப்பிடங்களில் கொலைக் கருவிகளும் ஊன் முடை நாற்றமும் இருத்தல் இயல்பு; அத்தன்மை நீங்கிப் பூவும் கனியும் கிழங்கும் பூக்களின் நறுமணமும் அவ்விடங்களில் உள

வாயின. "முழுவில் வேடரும் முனிவரின் முனிகிலர்" (738) என வேடரைக் கூறியதற்கேற்ப, இங்கே அவர்கள் இருப்பிடத்தைக் குறித்தார். இந்திரகோபம் கார்காலத்தில் தோன்றுவது; 700 பார்க்க.

(பி - ம்.) 1. இருப்பிடமொத்த, இருப்பிடம் வேய்ந்த.
2. மணிமிறக் கொம்பர்கள், கொம்புகள்.
3. பிரிந்தனபேடையைப், பரிந்தனபேடையைப், பரந்தனபேடையைப், பேடையைத் தழுவின; பயிலும்.
4. குருந்தமின்று, குந்தமின்று, குருந்துமின்ற, முருகுமின்று, முருந்தினின்று; இயம்பின குருந்தம், அரும்பின மலர்ந்த, குளிர்ந்த. (45)

738. பந்த ஞாட்புறு பாசறை பொருள்வயிற் பருவம்
தந்த கேள்வரை யுயிருறத் தழுவினர் பிரிந்த
கந்த வோதியர் சிந்தையிற் கொதிப்பதக் கழலோர்
வந்த போதவர் மனமெனக் குளிர்ந்ததவ் வனமே.

பந்தம் - (தமக்குத்) தொடர்புடைய, ஞாட்பு உறு - போருக்குரிய, பாசறை (வயின்) - பாடிவீடு குறித்தும், பொருள் வயின் - பொருள் குறித்தும் (பிரிதலுற்று), பருவம் தந்த கேள்வரை - (தாம் மீண்டுவரும்) காலத்தைக் குறித்த கணவன்மாரை, தழுவினர் பிரிந்த - உயிருறத் தழுவி (விடை தந்து) பிரிதலுற்ற, கந்தம் ஓதியர் சிந்தையின் - மணங் கமழுங் கூந்தலை உடைய மங்கையரின் மனம்போல, கொதிப்பது - அ வனம் - கொதிக்குந் தன்மையுள்ள அப்பாலைவனம், அ கழலோர் வந்தபோது - வீரக்கழலை அணிந்த அந்த நாயகர் திரும்பிவரக் கண்ட போது, அவர் மனம் என - அம்மங்கையரின் மனம் (குளிர்தல்) போல, குளிர்ந்தது - குளிர்ச்சி உடையதாயிற்று. ஏ : ஈற்றசை.

பாலைவனம் தன் இயல்பு மாறிய பரிசைப் பலபடியாகக் கூறி வந்தவர், அதன் இருவகை நிலைக்கும் ஏற்ற உவமை தந்து முடித்தார். இசையெச்சமாக நின்ற சொற்கள் வருவித்து உரைக்கப்பட்டன. வயின் என்பது பாசறையோடும் கூட்டப்பெற்றது. உற்றுழிப் பிரிவைப் பாசறை எனக் குறித்தார். பருவம் தருதல் - தாம் மீண்டு வரும் காலத்தைக் குறித்தல்; அது கார்காலம். பாலைக்குரிய பெரும் பொழுது முதுவேனில்; இங்கே கார்போல் ஆயிற்று. பந்தம் - தொடர்பு. தழுவினர் : முற்றெச்சம். அக்கழலோர் என்றது பிரிந்த தலைவரைச் சுட்டியது. பால. 706 ஈண்டு ஒப்பு நோக்கத் தக்கது.

(பி - ம்.) 1. பந்தருட்புரை, பந்தருட்படர், பந்தரிற்புரை, பந்தஞாட்புறும், ஞாட்புரை, பந்தர்ஞாட்புறு, பந்தநாட்புறு, பரந்தஞாட்புறு; பாசறைப்; வயின்பருவம்.
2. உயிரெனத்; பரிந்த.
3. கொதித்ததக், கொதிப்பவக், மனமெனக் கொதிப்பதக்.
4. குளிர்ந்தது வனமே. (46)

மூவரும் சித்திரகூடத்தைக் காணுதல்

739. வெளிறு நீங்கிய பாலையின் மெல்லெனப் போனார்
ஒளிறு வான்மதிக் குழவிதன் சூல்வயிற் றுதைப்பப்
பிளிறு மேகத்தைப் பிடியெனப் பெரும்பனைத் தடக்கை
களிறு நீட்டுமச் சித்திர கூடத்தைக் கண்டார்.

வெளிறு நீங்கிய பாலையில் - பயனற்ற தன்மை நீங்கப்பெற்ற (வளமுண்டாகிய) அப்பாலை நிலத்தில், மெல் என போனார் - (மூவரும்) மெல்லென நடந்து சென்று, ஒளிறு - பிரகாசிக்கிற, வால் மதி குழவி - வெள்ளிய பிறைச் சந்திரன், தன் சூல் வயிறு உதைப்ப - தனது கருக் கொண்ட வயிற்றில் (புகுந்து) உதைத்தலால், பிளிறும் மேகத்தை - முழங்குகின்ற மேகத்தை, பிடி என - (தன்) பெண்யானை என்று கருதி, (மயங்கி), களிறு - ஆண்யானை, பெரும் பனை தட கை நீட்டும் - பெரிய பனைமரம் போன்ற நீண்ட (தன்) துதிக்கையை (அம்மேகத்தினிடம்) நீட்டுதற்கு இடமான, அ - அத்தகைய, சித்திரகூடத்தை கண்டார் - சித்திரகூட மலையைக் கண்டனர்.

மூவரும் பாலையைக் கடந்து சென்று, அதற்கு அப்பால் தோன்றிய சித்திரகூட மலையைக் கண்டனர் என்று கூறிய கவி, அம்மலை மேக மண்டலமள்வு உயர்ந்துள்ளதென உயர்வு நவிற்சியாகக் கூறு கின்றார். இயல்பாக இடிமுழக்கம் செய்யும் மேகத்தை, சூல் முதிர்தலால் வருந்திப் பிளிறும் பெண்யானை என்று மயங்கி, அவ்வருத்தம் தணிய அதனைத் தடவிக் கொடுக்கக் கருதி ஆண்யானை தன் துதிக்கையை நீட்டுவதாகவும், மேகத்தினிடையே பிறைச் சந்திரன் மறைதலைத் திங்கட்குழவி மேகத்தின் வயிற்றினுட் புகுந்து உதைப்பதாகவும், அவ்வுதையால் உளதாகும் நோவைப் பொறுமல் அது பிளிறுவதாகவும் செய்துள்ள கற்பனை நயம் காண்க. காலுதைத்தல் குழவிக்கியல்பு. வெளிறு - பயனின்மை; குற்றமும் ஆம். குற்றமாவது, வெப்பமிகுதி. மதிக்குழவி - பிறைச் சந்திரன்.

(பி - ம்.) 1. பாலையை.
2. குளிறு வான்மதிக், வான்மதி, வாழ்மதிக், குளிறும் வான்மதிக், ஒளிறுவாண் மதிக், வாழ்மதிக், வான்மதிக்; வயிற்றெளிப்பப், வயிற்றுதிப்பப், வயிறுதைப்பப், வயிறுதைப்ப, வயிறுதிப்பப்.
3. பனைத்தடக்கை.
4. நீட்டிய, நீட்டுறு, நீட்டுறும், நீடுறு; கண்டான். (47)

வனம்புகு படலம் முற்றும்.

9. சித்திரகூடப் படலம்

சித்திரகூட மலையைப்பற்றிக் கூறும் படலம் என இதன் பொருள் விரியும். இராமபிரான் முதலிய மூவரும் சித்திரகூட மலையைச் சேர்ந்து, அதன் வளங்களை எல்லாம் கண்டு களித்து, அங்கேயே ஆசிரமம் அமைத்துக்கொண்டு தங்கலுற்ற செய்தி இப்படலத்துள் கூறப்படும். இதனுள், மலைவளங்களை இராமபிரான் பிராட்டிக்குக் காட்டிக் கூறுவதாக அமைந்த பகுதியில் உள்ள வருணனைகளும் பிறவும் படித்து இன்புறற்குரியன.

இராமபிரான் சித்திரகூடக் காட்சிகளைப் பிராட்டிக்குக் காட்டுதல்

740. நினையுந் தேவர்க்கு நமக்குமொத் தொருநெறி நின்ற
அனக னங்கண ளுயிரம் பெயருடை யமலன்
சனகன் மாமட மயிற்கந்தச் சந்தனஞ் செறிந்த
கனக மால்வரை யியல்பெலாந் தெரிவுறக் காட்டும்.

நினையும் தேவர்க்கும் - நாம் உயர்வாக மதிக்கின்ற தேவர் களுக்கும், நமக்கும் - மானிடராகிய நமக்கும், ஒத்து - ஒரு படியாக, ஒரு நெறி நின்ற - ஒப்பற்ற நிலையில் உள்ள, அனகன் - பாவ ரகிதனும், அம் கண்ணன் - அழகிய கண்ணோட்டமுடையவனும், ஆயிரம் பெயர் உடை(ய) அமலன் - ஆயிரம் பேர்களை உடைய நின்மல மூர்த்தியுமான இராமபிரான், சனகன் மாமடம் மயிற்கு - சனகன் பெற்ற சிறந்த இளைய மயில் போலும் சாயலையுடைய சானகிப் பிராட்டிக்கு, சந்தனம் செறிந்த - சந்தன மரங்கள் அடர்ந்த, அந்த கனகம் மால் வரை - அந்தப் பொன்னையுடைய பெரிய சித்திரகூட மலையின், இயல்பு எல்லாம் - இயற்கை வளங்களையெல்லாம், தெரிவு உற - விளங்கும்படி, காட்டும் - காட்டலானான்.

"சித்திரகூடத்தைக் கண்டார்" எனத் தோற்றுவாய் செய்து கொண்ட சித்திரகூட மலையை மூவரும் சேர்ந்தனராக, அதன் சாரலில் உள்ள இயற்கை வளங்களையெல்லாம் இராமபிரான் சீதாபிராட்டிக்குக் காட்டலானான் எனத் தொடங்கி, மேலே 37 பாடல்களால் அதனை வருணிக்கின்றார். அகம் - பாவம்; அனகன் - பாவ ரகிதன். அமலன் - நின்மலன். நம்மைப் போலவே, நம்மினும் அறிவாற்றல் மிக்க தேவர்க்கும் அறிய அரியவன் என்பார், 'ஒத்து ஒரு நெறி நின்ற அனகன்' என்றார். நினையும் - (அரக்கரால் உளதாம் இன்னல் போக்கத் தன்னை) நினைந்து வேண்டின என்று உரைத்தலுமாம்.

நினையும் தேவர்க்கும் நினையாத நமக்கும் ஒத்து இன்னல் தீர்க்கும் ஒரு நெறி நின்றவன் என்றபடி; 787-பார்க்க. "நெறி நீர்மையர் நீள்வானவர் நினையுந்நினை வாகி" (தேவாரம், 1:17:6). ஆயிரம் பெயருடையமலன்: "பேருமோ ராயிரம் பிறபல வுடையவெம் பெருமான்" (திருவாய் மொழி, 26).

(பி-ம்.) 1. ஒருவழி, ஒத்தனி, அருநெறி, நமக்குமற் றொருநெறி.
2. அனக னன்கணன்; பேருடை.
3. கனகன் மாமகள், கனகமாமகள்; மயிற்கு; தனக்கு.
4. கனகமாமலை; அழகெலாம். (1)

மேகத்துக்கும் யானைக்கும் வேற்றுமை தெரியாமை

741. வாளும் வேலும்விட் டளாவின வனையகண் மயிலே
தாளி னேலமுந் தமாலமுஞ் சுடர்தருஞ் சாரல்
நீள மாலைய துயில்வன நீருண்ட கமஞ்சூற்
காள மேகமு நாகமுந் தெரிகில காணாய்.

வாளும் வேலும் - வாட்படையும் வேற்படையும், விட்டு - நன்றாக விட்டு, அளாவின அனைய கண் - கலந்தாற் போன்ற கண்களை உடைய, மயிலே - மயிலின் சாயல் பொருந்தியவளே, தாளின் ஏலமும் - தாளிலே காய்க்கும் ஏலச் செடிகளும், தமாலமும் - பச்சிலை மரங்களும், சுடர் தரும் - ஒளிவிட்டு விளங்குகின்ற, சாரல் - பக்க மலைகளில், நீளம் மாலைய துயில்வன - நீண்ட வரிசையாக உறங்குகின்றன வான, நீர் உண்ட - நீரை மொண்டு கொண்ட, கம சூல் - நிறைந்த கருப்பமுடைய, காளமேகமும் - கருமேகங்களும், நாகமும் - யானைகளும், தெரிகில - (ஒன்றுக்கொன்று வேற்றுமை) தெரிய அரியனவாக யிருப்பவற்றை, காணாய் - காண்பாயாக.

இதுமுதல் 37 கவிகள் இராமபிரான் பிராட்டிக்குக் காட்டிய பலவகைக் காட்சிகளை விவரிக்கும். முதற்கண் இக்கவி, அம்மலையில் தங்கும் மேகங்களுக்கும் யானைகளுக்கும் வேறுபாடறிய வொண்ணாத படி அவை நிறைந்துள்ளன என்கின்றது. வரிசையாகத் துயிலுதல் இரண்டிற்கும் பொது. மேகம் தங்குதலைத் துயிலுதல் என்றார்; "திருத் துயில் பெற்ற மார்பன்" (சீவக. 1504). துயில்வனவான மேகமும் நாகமும் என்க; நாகம் - யானை. மயில் : ஆகுபெயர். துயில்வன : வினையாலணையும் பெயர்.

(பி-ம்.) 1. வேலுமிட்டு, அரையினவனைய, அரையனவனைய, அரையகண்மாமட, அரையனவனகண்,
2. தாளினேலமுமாலமும்; தழைதரு, தொடர்தரு, தொடர்தரும், தொடர்தடம், சுடர்தரு, தழைதடம்.

3. நீளமாமலை, மாமலைத், நீளமாலையில், மாலையன், மேழல்மாலையன், நீளமாயயல, நீளமால்பணி; மணித், நீளுமாமலை, தளுமாலைய; நீண்டகுமகஞ்ஞல்.
4. தெரிவில, தெரியல; தெரிவுற்த் துயில்வன. (2)

வருடைகள் குதிக்கின்ற வருணனை

742. குருதி வாளெனச் செவ்வரி பரந்தகட் குயிலே
மருவி மால்வரை யும்பரிற் குதிக்கின்ற வருடை
சுருதி போற்றெளி மரகதக் கொழுஞ்சுடர் சுற்றப்
பருதி வானவன் பசும்பரி நிகர்ப்பன பாராய்.

குருதி வாள் என - இரத்தம் தோய்ந்த வாட்படைபோல, செவ் அரி பரந்த கண் - செவ்வரிகள் பரவிய கண்களை உடைய, குயிலே - (குரலால்) குயில் போன்றவளே, மால் வரை உம்பரில் மருவி - இப்பெரிய மலையின் உச்சியில் போய், குதிக்கின்ற வருடை - துள்ளும் வருடைகள், சுருதிபோல் தெளி - வேதம் போலத் தெளிவுற்ற, மரகதம் கொழு சுடர் சுற்ற - மரகதமணிகளின் வளவிய பச்சொளி சூழ்தலால், பருதி வானவன் - சூரியதேவனுடைய, பசு பரி நிகர்ப்பன - (தேரில் பூட்டிய) பச்சைக் குதிரைகளை ஒத்திருப்பவற்றை, பாராய் - பார்ப்பாயாக.

மரகதத்தின் பச்சையொளி வருடைகளின்மேற் படிய, அவை சூரியன் தேரில் பூட்டிய பச்சைக் குதிரைகள்போலக் காணப்படு கின்றன. வருடை - மலையில் வாழும் ஒரு விலங்கு; வரையாடும் ஆம் (பட்டினப். 139 - ந; சிலப். 25: 51. குறிப்.). மரகதமணியின் மாசில்லாத தெளிந்த ஒளிக்குச் சுருதியை உவமை கூறினர். "மால் வரைப், பாழி மாமுகட்டுச்சிப் பச்சைமா, ஏழும் ஏறப்போய்" (பால. 338) என்பதனுல், சூரியன் தேர்க்குதிரைகள் பச்சை நிறமுடையன வென்பது தெரியவரும்.

(பி - ம்.) 1. கருகிவாளெனச், சேயரிபரந்த; வார்ந்த.
2. மருவுமால்வரை, அருவிமால்வரை; உம்பரிற்பாய்கின்ற, இம்பரிற் குதிக்கின்ற.
3. சுருதிபெற்றெளிர், சுருதிபோற்றெடர், குருதிபோற்றெடர், சுருதி போற்சுடர், சுருதிபோலொளிர்; மரதகக் கொழுஞ்சுடர், மரகதச் செழுஞ்சுடர், மரகதக் கொடுஞ்சுடர்; சுற்றிப், துடரப்.
4. பசும்பரி புரைவன. (3)

அரவுரிகளின் காட்சி

743. வடங்கொள் பூண்முலை மடமயி லேமழை மதமா
அடங்கு பேழ்வயிற் றரவுரி யமைதொறுந் தொடக்கித்
தடங்க டோறுநின் ருடுவ தண்டலை யயோத்தி
நுடங்கு மாளிகைத் துகிற்கொடி நிகர்ப்பன நோக்காய்.

வடம் கொள் பூண்முலை - ஆரங்களாகக் கோக்கப்பட்ட அணி கலன்களைக் கொண்ட தனங்களையுடைய, மட மயிலே - இளமயில் போன்றவளே, மழை மதம் மா அடங்கு - மழைபோல மதம் பொழியும் யானை அடங்கிய, பேழ் வயிறு - பெரிய வயிற்றையுடைய, அரவு உரி - பாம்பின் உரிகள், அமைதொறும் தொடக்கி - மூங்கில்தோறும் சிக்குண்டு, தடங்கள் தோறும் - பற்பல இடங்களில், நின்று ஆடுவ - நிலைபெற்று அசைவன, தண்டலை அயோத்தி - சோலைகள் சூழ்ந்த (நம்) அயோத்தியில், மாளிகை நுடங்கு - மாளிகைகளிலே (பொருந்தி) அசைகின்ற, துகில் கொடி நிகர்ப்பன - சீலைக்கொடிகள் போல்வன வற்றை, நோக்காய் - பார்ப்பாயாக.

பாம்பின் உரி மெல்லிய துகில் போல்வது. அது பக்க மலை மேலுள்ள மூங்கிலில் சிக்கிக் காற்றில் அசைவது, மாளிகைகளின் மேலே நாட்டிய மூங்கிலிற் கட்டிய சீலைக்கொடி காற்றில் அசைவது போன்றுள்ளது. பக்க மலைகள், மாளிகைகள்; மூங்கில், கொடி கட்டும் கோல்; அரவுரி, துகிற்கொடி. மெல்லிய ஆடைக்கு அரவுரியை உவமை கூறுவர்; பெருங். 1. 42, 244; பாகவத. கோவியர் துகில். 9; இலிங்க. அம்பரீட. 56; திருவிளை. திருமண. 147. மலைப்பாம்புகள் யானையையும் விழுங்கத் தக்கன; "இடிகொள் வேழத்தை யெடுத்துட னெயிற்றெரு விழுங்கும், கடிய மாசுணம்" (780); பால. 350; யுத்த. 635; மலைபடு. 260-61; நற். 14, 261; அகநா. 68; பெரிய திருமொழி. 1-2 : 10; தக்க. 543-பார்க்க; "வேட்ட கரியை விழுங்கிப் பெரும்பசியால், மோட்டு வயிற்றரவு" (நள. 284).

இப்பாடல் ஒரு பிரதியில் இல்லை.

(பி - ம்.) 1. மடமயிலேமதக்கதமா, மதமழைக்கதமா, மழைமதக்கதமா, மாமயிலேமதக்கதமா.
2. பாழ்வயிற்று, வாள்வயிற்று, வாளெயிற்று; தொடங்கித்.
3. தடங்கரேறும்.
4. மிகர்வன. (4)

கவரிமான் வருணனை

744. உவரி வாயன்றிப் பாற்கட லுதவிய வமுதே
துவரி னீண்மணித் தடந்தொறு மிடந்தொறுந் துவன்றிக்
கவரி பானிற வால்புடை பெயர்வன கடிதின்
பவள மால்வரை யருவியைப் பொருவன பாராய்.

உவரி வாய் அன்றி - உப்புக் கடலிலே (தோன்றுதல்) இல்லாமல், பால் கடல் உதவிய அமுதே - திருப்பாற் கடல் தந்த அமுதம் போன்றவளே, துவரின் நீள் - செந்நிறம் மிக்க, மணி தடம் தொறும் - பதுமராகக் கற்கள் அமைந்த பக்க மலைகளில், இடம் தொறும் - பல இடங்களிலும், கவரி துவன்றி - கவரி மான்கள் நெருங்க, பால் நிறம்

வால் கடிதின் புடைபெயர்வன - (அந்த மான்களின்) பால் போலும் வெண்ணிறமுடைய வால்கள் விரைவாக அசைவன, பவளம் மால் வரை அருவியை பொருவன - பவள மலையில் உள்ள அருவியை ஒத்திருப்பவற்றை, பாராய் - பார்ப்பாயாக.

உவரி - உப்பு நீர்க் கடல். "கடலன்றி, அன்றம் மாடத்தும்ப ரளிக்கும் அமுதன்னுள்" (பால: 582) எனவும், "கன்னியமிழ் தத்தை எதிர் கண்டகடல் வண்ணன்" (பால. 1223) எனவும் பிராட்டியை முன்னர்க் கூறியுள்ளமையும் காணத்தகும். "நீல மார்கடல் விடந்தனை யுண்டு", "பொங்குமா கருங்கடல் நஞ்சுண்டான்" என வரும் தேவாரப் பாடற் பகுதிகளும் நோக்கத்தக்கனவாகும். பாற் கடலுதவிய அமுது: "அமுதில் வரும் பெண்ணமுது" (பெரிய திரு: 6 ; 1: 2). 'அமிர்து கடைந்தது லவண சமுத்திரத்தென வுணர்க' (தக்க: 284, 633 உரை) என்பதனால், இவ்வழக்காறொன்றும் உளதெனத் தெரிகிறது.

(பி - ம்.) 1. உவரிவாயின்றிப்; உதவியமயிலே.
2. துவரிதண்மணித், சுவரி தண்மணித், சுவரி னீண்மணித், கவரி னீண்மணித்; தடந்தொறும் தடந்தொறும், தடக்தொறு மடம் தொறும்.
3. கவரிப்பானிற, கவரிமானிற, கவரிவானிற, கவரிமாயிற; வால்புடைப்; கடிதில்.
4. பவளமாமலை, பவளமாமணி, பருவமால்வரை, பருவமாமணி, மாமலை; பொருவிய, பொருவின, பொருவுவ, போல்வன, ஒப்பன, நிகர்தன; நிகர்ப்பரு. (5)

யானைகளின் உதிரத்தில் முத்துக்கள் இமைத்தல்

745. சலந்த லைக்கொண்ட சீயத்தாற் றனிமதக் கதமா
உலந்து வீழ்தலிற் சிந்தின வுதிரத்தின் மடவார்
புலந்த காலையிற் றுக்கன குங்குமப் பொதியில்
கலந்த முத்தென வேழமுத் திமைப்பன காணாய்.

மதம் கதம் தனி மா - மதத்தினையும் சினத்தினையுமுடைய தனித்த யானை, சலம் தலைகொண்ட சீயத்தால் - சினம் மிக்க சிங்கத்தால் (தாக்கப்பட்டு), உலந்து வீழ்தலின் - செத்து விழுந்ததனால், சிந்தின உதிரத்தில் - (அதன் உடம்பினின்றும்) சிந்தின இரத்தத்தில், மடவார் புலந்த காலையில் - மகளிர் (தம் கணவரோடு) ஊடிய காலத்து, இற்று உக்கன - (வடம்) அறுந்து சிந்தினவாகி, குங்குமம் பொதியில் கலந்த முத்து என - (அவர்கள் வழித்தெறிந்த) குங்குமக் கலவைச் சாந்தோடு கலந்த முத்துக்கள் போல, வேழம் முத்து - அந்த யானைத் தந்தத்தி னின்றும் சிந்திய முத்துக்கள், இமைப்பன காணாய் - விளங்குவன வற்றைக் காண்பாயாக.

முத்துப் பிறக்கும் இடங்களுள். யானைத் தந்தமும் ஒன்றென்பர். யானையின் இரத்தம் குங்குமக் குழம்புபோல் இருக்க, அதில் அவ் யானையின் முத்துச் சிந்திக் கிடந்த தோற்றம், கணவரோடு ஊடிய மகளிர் தம் உடம்பினின்று வழித்தெறிந்த குங்குமக் கலவையோடு அவர்க்ள் அணிந்த முத்துவடம் அறுந்து சிந்தின முத்துக்களும் கலந்துகிடந்தது போன்றது. வேழம் - மூங்கில் என்பாரும் உளர்.

இப்பாடல் சில பிரதிகளில் இல்லை.

(பி - ம்.) 1. சலந்தலைக்கொளச்; கயமா.
2. உலந்துவிழலின், விஸ்மயில், உலர்ந்துவீழ்தலின்; எய்தின, உதிர்த்த, உதிர்த்தன, உயிர்ந்தன; உதிர்முத்தம்.
3. புலந்தகாலை அற்றுக்கன, அற்றுதிர்ந்தன, இற்றுதிர்ந்தன, புலர்ந்த காலையிலிற்றுக்க; பொதிவில்.
4. கலந்தமுத்தினவ்; வேழமுத்திமைப்பென, வேழமுற்றிழைப்பன. (6)

மலைச்சிகரம், அருவி இவைகளின் தோற்றம்

746. நீண்ட மால்வரை மதியுறு நெடுமுடி நிவந்த
தூண்டு மாமணிச் சுடர்சடைக் கற்றையிற் றோன்ற
மாண்ட வானிற வருவியம் மழவிடைப் பாகன்
காண்ட குஞ்சடைக் கங்கையை நிகர்ப்பன காணாய்.

நீண்ட மால் வரை - மிகப்பெரிய இம் மலையினது, மதி உறும் நெடுமுடி - சந்திரன் வந்து பொருந்தும் உயர்ந்த சிகரத்தில், நிவந்த- மிக்குத் தோன்றுகின்ற, மா மணி தூண்டு சுடர் - சிறந்த மாணிக்க மணிகள் வெளிவிடும் செவ்வொளித் தொகுதி, சடை கற்றையில் தோன்ற - சடைத் தொகுதி போலத் தோன்ற, மாண்ட வால்நிறம் அருவி - மாட்சிமைப்பட்ட வெண்ணிறமுடைய (அச்சிகரத்தினின்றும் விழுகிற) அருவிகள், அ மழவிடை பாகன் - இளைய ஆனேற்றை ஊரும் அச்சிவபிரானுடைய, காண்தகும் சடை - காணுதற்கினிய சடைத்தொகுதியினின்றும் விழுகின்ற, கங்கையை நிகர்ப்பன - கங்கை நீர்த்திரளை ஒத்திருப்பன, காணாய் - காண்பாயாக.

மலையின் உயர்ந்து நிற்கும் கொடுமுடி, சிவபிரான் முடி; அம் முடியிற் படியும் மாணிக்கத்தின் செவ்வொளி, சிவபிரானது சடைக் கற்றை; முடியிற் பொருந்திய மதி, சடையிற் சூடிய பிறை; முடியினின்று விழும் அருவி, சடையிலிருந்து விழும் கங்கை நீர்த்திரள் எனப் பொருத்திக் காண்க. நிவத்தல் - மிக்குத் தோன்றுதல்; பரவித் தோன்றுதல். அருவி கங்கையை நிகர்த்தல்: "மலைமகள் கொழுநன் சென்னி வந்துவீழ் கங்கை போன்ற, அழகில் பொன் னலம்பி யாரஞ் சார்ந்து வீழருவி மாலை" (பால. 934).

கீழ்க்காணும் இரண்டு பாடல்கள் பல ஏடுகளில் இல்லை; சில ஏடுகளிலும் அச்சுப் புத்தகங்களிலும், "அசும்பு பாய்வரை" (775)

என்பதன் பின்னே உள்ளன; இவை இடைச்செருகலாகத் தோன்று தலின் மிகைப்பாடலாகக் காட்டப்படுகின்றன:

1. விடங்கொ ணேக்கிநின் னிடையினை மின்னென வெருவிப்
படங்கொ ளுகங்கண் முழைபுகப் பதைப்பன பாராய்
மடங்க லாளிக ளெனக்கொடு மழையன முழங்கக்
கடங்கொள் கார்மதக் கைம்மலை யிரிவன காணாய்.

2. நெய்கொ ணீருண்டு நெருப்புண்டு நீண்டுமை நிறைந்த
வைகொள வேலெனக் காலனு மறுகுறுங் கண்ணாய்
மெய்க ணேகின்ற பிடிகளை விரும்பிய வேழம்
கைக ணேகில தாங்கின நிற்பன காணாய்.

இந்நூல் நிலயத்தின் முந்திய பதிப்பும், ஆழ்வார் திருநகரிப் பதிப்புமல்லாத ஏனைய அச்சுப் புத்தகங்களில் இவை முன்பின்னாக உள்ளன. இவற்றுட் பாடபேதங்களும் உள.

(பி - ம்.) 1. மதியற, மிவர்ந்த.
2. தூண்ட, சுடரதன், சுடர்க்கனற், சுடர்க்கன, சுடர்கனற், சுடர்கிளர், சுடர்இன்ற, சுடர்முளை, சுடரொடு; கற்றையிற்சொருக, கற்றையிற் சேரும், கற்றைபசோரும், கற்றையிற்சோரும், கற்றையிற்சொருகி, புனற்கற்றை சொரிய.
3. வானிறவருவிய, வானிறமருவிய, மானிறமருவிய, மழைவிடைப்.
4. காண்டகுஞ்சிரக், காண்டகுஞ்சரக், காண்டருஞ்சடைக்; கங்கையும். (7)

சுனையில் படிந்த யானைகளின் தோற்றம்

747. தொட்ட வார்சுனைச் சுடரொளி மணியொடுந் தூவி
விட்ட சென்றன விடாமத மழையெழில் வேழம்
வட்ட வேங்கையின் மலரொடுந் ததைந்தன வயங்கும்
பட்ட நெற்றியிற் சுற்றிய போல்வன பாராய்.

சுனை - மலைச் சுனையிலே, சுடர் ஒளி மணியொடும் - மிக்க ஒளி பொருந்திய இரத்தினங்களுடனே, தொட்ட வார் - (துதிக்கையில்) கொண்ட நீரை, தூவி விட்ட சென்றன - (தலையிலே) தூவி விட்டுக் கொண்டு சென்றனவான, விடா மத மழை - நீங்காத மதப் பெருக்கை யுடைய, எழில் வேழம் - அழகிய (சில) யானைகள், ததைந்தன - நெருங்கிப் படிந்தனவான, வட்டம்-வட்ட வடிவமுள்ள, வேங்கையின் மலரொடும் வயங்கும் - (பொன்னிறம் பொருந்திய) வேங்கைப் பூக்க ளோடும் (அழகாக) விளங்குகின்றன; (அவை) நெற்றியில் பட்டம் சுற்றிய போல்வன - நெற்றியில் பட்டம் கட்டினாற் போன்றுள்ளன; பாராய் - (அவற்றைப்) பார்ப்பாயாக.

மலைச் சுனையில் நீர் படிந்த சில யானைகள், அச்சுனையில் கிடந்த முத்து முதலிய பல நிற மணிகளும் உட்பட நீரைத் துதிக்கையில் மொண்டு தலையில் வீசிக்கொண்டு, அவை படிந்த நெற்றியுடன் கரை யேறி வருங்கால், பொன்னிறமும் வட்ட வடிவுமுள்ள வேங்கைப் பூக்கள் சிலவும் உதிர்ந்து அவற்றின் நெற்றியில் படிதலால், பொன்னு லும் பல நிற மணிகளாலுமியன்ற நெற்றிப்பட்டங் கட்டிவிட்டவை போலத் தோற்றமளித்தன. வேங்கைப் பூக்கள் நீரோடு கலந்து வந்தனவுமாம். தொடுதல் - கைக்கொள்ளுதல். வார் - நீர். நீரைத் துதிக்கையால் மொண்டு தன் தலையில் வீசிக்கொள்ளுதல் யானைக்கு இயல்பு. சென்றன வான வேழம், வயங்கும்; (அவை) நெற்றியில் பட்டம் சுற்றிய போல்வன என இயைத்து முடிபு கொள்க. இரண்டாம் அடியுள் விட்ட × விடா என முரண்டொடை அமைந்தது. வயங்கும்: செய்யுமென் முற்று நிகழ்காலம் உணர்த்தியது.

(பி - ம்.) 1. தொட்டமாசுணம், மாசுணச், வார்கனைச்.
2. சென்றன்ன; மழையென, விடாமழையனமத.
3. மலரொடுக் தகைக்தன, மலரொடு தகைக்தன, மலர்கொடு மறைத்தன.
4. பட்டஞ்சுற்றிடுகெற்றிய. சுற்றியகெற்றிய, சுற்றியகெற்றியைப், சுற்றியவணையவேயொப்பன, சுற்றியபடியெனப்பொலிவன. (8)

சோலையில் தோன்றும் சந்திரன் வருணனை

748. இழைந்த நூலிணை மணிக்குடஞ் சுமக்கின்ற தென்னக்
குழைந்த நுண்ணிடைக் குவியிள வனமுலைக் கொம்பே
தழைந்த சந்தனச் சோலைதன் செலவினைத் தடுப்ப
நுழைந்து போகின்ற மதியிரு லொப்பது நோக்காய்.

இழைந்த நூல் - நுண்ணிய நூலானது, இணை மணி குடம் சுமக் கின்றது என்ன - இரண்டு இரத்தின கலசங்களைத் தாங்குகின்றது என்னும்படி, குழைந்த நுண் இடை - துவண்ட நுட்பமான இடையை யும், குவி இள வனம் முலை - குவிந்த இளமையான அழகிய தனங் களையும் உடைய, கொம்பே - பூங்கொம்பு போன்றவளே, தழைந்த சந்தனம் சோலை - (இம்மலையின் மீது) தழைத்துள்ள சந்தனமரச் சோலை, தன் செலவினை தடுப்ப - தன்னுடைய (வான்வழிச்) செல்லும் போக்கைத் தடுத்தலால், நுழைந்து போகின்ற மதி - (அந்தச் சோலையினூடே) நுழைந்து செல்லும் சந்திரன், இருல் ஒப்பது நோக்காய் - (சந்தன மரத்தில் கட்டிய) தேனடை போல்வதனைக் காண்பாயாக.

இழைதல் - நுணுகுதல்; "இழைத்துணர்ந் தீண்டிய கேள்வியவர்" (குறள். 417) என்பதற்குப் பரிமேலழகர் கூறிய உரை காண்க. மதிக்குத்

தேனடை : "வானூர் மதியம் வரைசேரி னவ்வரைத், தேனினிறுலென வேணி யிழைத்திருக்கும்", "வரைமிசை மேற்றெடுத்த நெய்க்க ணிறுஅல், மழைநுழை திங்கள்போற் றேன்றும்" (கலி. 39, 42); 'பொதிக்க ணிறுஅற் பூம்புறம் புதைஇ, மதிக்கண் மறைந்த மாசுண மான" (பெருங். 1·50: 35 - 6). சந்தன மரத்தில் தேன்கூடு. "சாந்திற் றெடுத்த தீந்தேன் போல" (நற். 1).

இப்பாடல் ஒரு பிரதியில் இல்லை.

(பி - ம்.) 1. நாலிடை, நாழை, நாலினை; மணக்குடம்; சுமக்கின்றவென்ன.
2. நுண்ணிடைகுவி.
4. போகின்றதொக்கின்றமதியினை, போகின்றமதியிருலொப்பன. (9)

களிறுகள் சூற்கொண்ட பிடிகளுக்குத் தேன் கொடுத்தல்

749. உருகு காதலிற் றழைகொண்டு மழலைவண் டோச்சி
முருகு நாறுசெந் தேனினை முழைநின்று வாங்கிப்
பெருகு சூலிளம் பிடிக்கொரு பிறைமருப் பியானை
பருக வாயினிற் கையினின் றளிப்பது பாராய்.

பிறை மருப்பு யானை - பிறைபோலும் (வளைந்த வெள்ளிய) கொம்பினையுடைய ஆண்யானை யொன்று, உருகு காதலின் - கசிந்த அன்போடு, மழலை வண்டு - (தேனில் மொய்க்கும்) மெல்லிசை பாடும் வண்டுகளை, தழை கொண்டு ஓச்சி - தழையால் ஓட்டிவிட்டு, முழை நின்று - மலைப் பொந்திலிருந்து, முருகு நாறு செம் தேனினை வாங்கி - நறுமணம் வீசும் நல்ல தேனை எடுத்து, பெருகு சூல் இளம் பிடிக்கு - முதிர்ந்த கருப்பத்தையுடைய இளம் பெண் யானைக்கு, நின்று - அதன் முன் நின்றுகொண்டு, பருக - (அது தேனைப்) பருகும் படி, வாயினில் - அதன் வாயில், கையின் அளிப்பது - தன் துதிக்கை யால் கொடுப்பதை, பாராய்—பார்ப்பாயாக.

ஆண்யானைகள் தம் பிடிகளை அன்போடு உண்பித்தல் இலக்கியங் களுட் பயின்று வருவது; "உம்பர்வா னகத்து நின்ற வொளிதரு தருவி னேங்கும், கொம்புகள் பணைக்கை நீட்டிக் குழையொடு மொடித்துக் கோட்டுத், தும்பிக ளுயிரே யன்ன துணைமடப் பிடிக்கு நல்கும்" (பால. 921); "பெருகு மதவேழம் மாப்பிடிக்கு முன்னின், றிருக ணிளமூங்கில் வாங்கி - அருகிருந்த, தேன்கலந்து நீட்டுந் திருவேங்கடம்" (திவ். 2-ஆம் திருவந்தாதி, 75); "வரைசெய் மாக்களி றிளவெதிர் வளர்முளை யளைமிகு தேன்றேய்த்துப், பிரச வாரித னிளம்பிடிக் கருள்செயும்" (திவ். பெரியதிரு. 1. 2: 5); "சந்தனப்பூம் பைந்தழையைச் செந்தேனிற் றோய்த்தியானை, மந்த மடப்பிடியின் வாய்க்கொடுப்ப" (ஈங்கோய் மலை யெழுபது, 38), என்பவற்றை நோக்குக.

(பி - ம்.) 1. உருகும்.
2. முழைநின்றும்.
3. பெருகும்; பிறழ்மருப்பியானை, பிறையெயிற்றியானை.
4. பருகுவாயினில், கையினின்றளிப்பன, கையினகொடுப்பது, தன் கையினளிப்பது. (10)

பளிக்கறையில் உள்ள பரிமுக மாந்தர் வருணனை

750. அளிக்கு நாயகன் மாயைபுக் கடங்கின னெனினும்
களிப்பி லிந்தியத் தியோகியைக் கரக்கில னதுபோல்
ஒளித்து நின்றுள ராயினு முருத்தெரி கின்ற
பளிக்க றைச்சில பரிமுக மாக்களைப் பாராய்.

அளிக்கும் நாயகன் - காக்கும் தலைவனான திருமால், மாயை புக்கு அடங்கினன் எனினும் - தன் மாயையால் பிரபஞ்சத்துள் புகுந்து தன்னை அறியாவண்ணம் அடங்கி நின்றாலும், இந்தியத்து களிப்பு இல் யோகியை-புலன்களின் வழிச் சென்று மகிழ்தலில்லாத யோகிகளுக்கு, கரக்கிலன் - மறைந்திரான் (புலனாவான்); அதுபோல்—, பளிங்கு அறை ஒளித்து நின்றுளர் ஆயினும் - பளிங்குப் பாறையூடே மறைந்து நின்றார்களேனும், உரு தெரிகின்ற - தம் உருவம் வெளியே காணப்படுகின்ற, சில பரிமுகம் மாக்களை பாராய்- சில கின்னரர்களைக் காண்பாயாக.

கின்னரர், ஒருசார் தேவ சாதியினர்; இவர்கள் குதிரை முகமும் மானிட உடலும் உடையவராகலின், 'பரிமுக மாக்கள்' என்றார். "குதிரை முகத்தார்" (திருஞா. திருக்கேதாரம்); பால. 935, விசேடக் குறிப்புக் காண்க. யோகியை - யோகிக்கு; உருபு மயக்கம். யோகியைக் கரக்கிலன்: "அன்பருள்ளம், கரந்து நில்லாக் கள்வனே" (திருவா. திருச்சதகம்,6).

(பி - ம்.) 1. அடங்கினனேனும், அடங்கினனென்றும்.
2. களிக்கும்; இந்தியத்தியோகிக்குக், யோகியர்க், யோகியிற், இந்தியத் தோகியித், இந்தியத்தோகியைக், இந்தியத்து யோகியைக்; கரக்கிலாததுபோல், காட்டுவனதுபோல்.
3. நின்றனராயினும், நின்றுளவாயினும், நின்றனதாயினும்; உருத்தெரிகின்ற, முகந்தெரிகின்ற.
4. பரிமுகவிரைகளைப், பரிமுகமகளிரும், மாதரைப். (11)

கின்னர மிதுனங்களின் செயல்

751. ஆடு கின்றமா மயிலினு மழகிய குயிலே
கூடு கின்றிலர் கொடிச்சியர் தம்மனங் கொதிப்ப
ஊடு கின்றனர் கொழுநருக் குருகின ருவக்கப்
பாடு கின்றன கின்னர மிதுனங்கள் பாராய்.

ஆடுகின்ற - தோகை விரித்து ஆடுகிற, மா மயிலினும் அழகிய குயிலே - சிறந்த மயிலினும் மிக்க அழகுடைய பெண்ணே, கொடிச்சியர் - குறிஞ்சிநிலப் பெண்கள் சிலர், தம் மனம் கொதிப்ப - (கொழுநர் பால் தவறு கண்டு) தம்மனம் வெதும்புதலால், கூடுகின்றிலர் -(கூடலை விரும்பும் கொழுநரைக்) கூடாதவர்களாய், ஊடுகின்றனர் - ஊடல் கொண்டிருப்போர், (அவ்வூடலை விட்டு), கொழுநருக்கு - (கூடல் பெருது வருந்தும்) கொழுநர் பொருட்டு, உருகினர் - மனங் கசிந்தவராய், உவக்க - கூடி மகிழும்வண்ணம், பாடுகின்றன கின்னர மிதுனங்கள் - மிக (இனிமையாகப்) பாடும் கின்னர மிதுனங்களை, பாராய்—.

இனிய இசை கேட்டோர் மனத்தை உருக்கவும், காமத்தைத் தூண்டவும் வல்லதாகலின், ஊடிய மகளிர் கூடும் வண்ணம் கின்னர மிதுனங்கள் இசை பாடுகின்றன என்ருர். ''கேடிலா மகர யாழிற் கின்னர மிதுனம் பாடும், பாடலா லூடல் நீங்கும் பரிமுக மாதர்க் கண்டார்'' (பால. 935) என்பதும் அதன் விசேடவுரையும் பால. 868 - இல் கின்னர மிதுனம்பற்றிய குறிப்பும் பார்க்க. இசை காமத்தை விளைக்கும் என்பதை, ''கிளைநரம் பிசையும் கூத்துங் கேழ்த்தெழுந் தீன்ற காம, விளைபயன்'' (சீவக. 2598) என்பதனுல் உணரலாம்.

(பி-ம்.) 2. கூடுகின்றிலாக், கூடுகின்றிலார், கூடுகின்றவர்.
3. ஊடுகின்றன; கொழுநரையுருகினர்நோக்கிப், உருகியேநோக்கப், உருக்கினர்நோக்கிப்.
4. பாடுகின்றனர். (12)

கவலைக் குழிகளில் தேன் பாய்தல்

752. வில்லி வாங்கிய சிலையெனப் பொலிநுதல் விளக்கே
வல்லி தாங்கழை தாக்கலின் வழிந்திழி பிரசம்
கொல்லி வாங்கிய குன்றவர் கொடிநெடுங் கவலை
கல்லி வாங்கிய குழிகளை நிறைப்பன காணுய்.

வில்லி வாங்கிய சிலை என - பொலிவில் வல்லான் வளைத்த வில்லைப் போல (அழகாக) விளங்குகின்ற, நுதல் - நெற்றியையுடைய, விளக்கே - குலவிளக்கானவளே, வல்லிது ஆம் கழை தாக்கலின் - வலியதான மூங்கில் (தேனிருலைத்) தாக்குதலால், வழிந்து இழி பிரசம் - (இருலினின்றும்) வழிந்தோடுகிற தேனெழுக்குகள், கொல்லி வாங்கிய குன்றவர் - இரும்பாலாகிய தோண்டு கருவியைக் கொண்ட மலைவாணர், நெடு கொடி கவலை - நீண்ட கொடிகளையுடைய கவலைக் கிழங்கை, கல்லி வாங்கிய குழிகளை-தோண்டி எடுத்ததனுல் உண்டான பள்ளங்களை, நிறைப்பன காணுய் - நிறைப்பவற்றைக் காண்பாயாக.

இதனுல் அம்மலையின் வளமிகுதி கூறியவாறு. விளக்கு - பிறந்த குலத்தையும் புகுந்த குலத்தையும் தன் சீலத்தால் விளக்குபவள்.

கொல்லி - தோண்டு கருவி. கவலை - ஒருவகைக் கிழங்கு; உண்ணுதற் குரியது.

(பி - ம்.) 1. வில்லில்வாங்கிய; வில்லின்வாங்கிய, வில்லுவாங்கிய.
2. வல்லிதாங்கனம், வல்லிவாங்கமை, வல்லிவாங்கிமை, வல்லிவாங்குமை, வல்லிவாங்கழை, தாக்கலில், வல்லிவாங்கமைத்தாகலின்; வந்திமிபிரசம்.
3. குன்றுவர்; கொடுகெடுங்.
4. குழிகளாகிறைவன, சுழிகளாகிகர்ப்பன, பெருங்குழிகிறைப்பன. (13)

கடுவன் மந்திகளின் விளையாட்டு

753. ஒருவில் பெண்மையென் றுரைக்கின்ற வுடலினுக் குயிரே
மருவு காதலி னினிதுட னுடிய மந்தி
அருவி நீர்கொடு வீசத்தா னப்புறத் தேறிக்
கருவி மாமழை யுதிர்ப்பதோர் கடுவனைக் காணுய்.

ஒருவு இல் - நீங்குதல் இல்லாத, பெண்மை என்று உரைக்கின்ற உடலினுக்கு உயிரே - பெண்மையென்று சொல்லப்படுகிற உடம்புக்கு உயிர் போன்றவளே, மருவு காதலின் - பொருந்திய அன்பினுல், இனிது - இன்பமாக, உடன் ஆடிய - கடுவனுடன் விளையாடிய, மந்தி - பெண் குரங்கானது, அருவி நீர் கொடு - அருவி நீரைக் கையில் கொண்டு, வீச - (கடுவன்மேல்) வீச, தான் - அக்கடுவன், அப்புறத்து ஏறி - அப்பால் (உயரச்) சென்று, கருவி மாமழை - (அங்கே படிந்துள்ள) தொகுதியான மேகத்தை, உதிர்ப்பது - (மந்தியின்மேல்) பிழிந்து சிந்துவதான, ஓர் கடுவனை - ஓர் ஆண் குரங்கை, காணுய்—.

ஆணும் பெண்ணுமாகிய இரண்டு குரங்குகள் இணைந்து அருவி அருகே விளையாடிக்கொண்டிருக்கையில், பெண் குரங்கு அருவி நீரை அள்ளி ஆண் குரங்கின்மேல் வீச, அவ்வாண் குரங்கு தன் ஆண்மை தோன்ற மலையுச்சியில் ஏறி, அங்கே படிந்திருந்த நீருண்ட மேக படலத்தைக் கைக்கொண்டு, பெண் குரங்கின்மேல் வீசியது எனக் கற்பனை செய்கின்ருர். மந்தி - குரங்கில் பெண்; கடுவன் - ஆண். கருவி-தொகுதி; "கருவி மாமழை" (குறுந். 42: 2; சீவக. 2752). முதலடி பிராட்டியின் பெண்மையைச் சிறப்பித்தது. ஒருவு: முதனிலைத் தொழிற் பெயர்.

(பி - ம்.) 1. ஒருவில்பெண்மையை, உருவில்பெண்மையை, ஒருவுபெண்மையென்று.
2. உடனுட்டிய.
3. நீர்கொண்டு.
4. கருவின்; உகுப்பதோர். (14)

மாணிக்கப் பாறையின் வருணனை

754. வீறு பஞ்சின்றி யமுதநெய் மாட்டிய விளக்கே
சீறு வெங்கதிர் செறிந்தன பேர்கல தெரிய
மாறின் மண்டில நிரம்பிய மாணிக்க மணிக்கற்
பாறை வேறொரு பரிதியிற் பொலிவன பாராய்.

வீறு பஞ்சு இன்றி - (எரிதற்குச்) சிறந்த பஞ்சுத்திரி இல்லாமல், அமுதம் நெய் மாட்டிய விளக்கே - அமுதமாகிய நெய் ஊற்றி ஏற்றிய தூண்டா விளக்குப் போன்றவளே, சீறு - (இருளைச்) சீறுகிற, வெம் கதிர் செறிந்தன - விரும்பத் தக்க (இனிய) ஒளி மிக்கனவும், பேர்கல - இடம் பெயராதனவும், தெரிய - (நன்கு) விளங்க, மாறு இல் மண்டிலம் நிரம்பிய - கோட்டமில்லாத வட்டவடிவம் அமைந்தனவுமான, மணி மாணிக்கம் கல்பாறை - அழகிய மாணிக்கக் கற்பாறைகள், தனித் தனியே, வேறு ஒரு பரிதியின் - வேறான ஒரு சூரியனைப்போல, பொலிவன - விளங்குவனவற்றை, பாராய்—.

பஞ்சியின்றி மாட்டியதாதலின், தூண்ட வேண்டாத தூண்டா விளக்காயிற்று. பிராட்டியின் அமுத மயமான திருமேனியொளி, விளக்கொளி போல்வது; ஆயினும், நெய்யும் திரியும் இல்லாத மற்றொரு வகை விளக்கு. நல்ல வட்ட வடிவம் அமைந்த மாணிக்கப் பாறைகள், வடிவத்தாலும் ஒளியாலும் பரிதி மண்டிலம் போல்வன; ஆயினும் பரிதியைப் போல இடம் பெயர்தல் இல்லை. இவ்வாறு இரண்டு பொருள்களுக்கு ஒற்றுமை கூறி, அவற்றுள் வேற்றுமையும் காட்டுவது வேற்றுமையணி எனப்படும். மாட்டுதல் - ஏற்றுதல்; கொளுத்துதல்; "நெய்பெய்து மாட்டிய சுடர்" (குறுந். 398). வெம்மை - விருப்பம். மண்டிலம் - வட்டம்.

(பி - ம்.) 1. பஞ்சினில்; பஞ்சினல்; அமுதநெய்யாடிய, ஆட்டிய, அமுதினெய் யாட்டிய.
2. சேறுவெங்கதிர்; செறிந்தெனய், திரிந்தன; பேர்கல திரியா, திரிய, தெரிவ, திரிவ, தெரியா; போகல திரிய, தெரிவ, திரியும், பேர்கில தெரிவ, போலயதிரிய.
3. மாறின்மண்டலம், மாறிமண்டலம்; மண்டிலம்; நிரப்பிய.
4. பாறைமற்றொரு; பருதியிற் பொலிவது, பரிதியை நிகர்ப்பன, பருதியிற் பொலிவன, பருதியின்பொலிவது, பொலிவன, பருதியைப்பொருவுவ, பொருவன, பருதியைப்போல்வது, போல்வன. (15)

வேங்கைக் கொம்புகளின் வருணனை

755. சில மின்னதென் றருந்ததிக் கருளிய திருவே
நீல வண்டினம் படிந்தெழ வளைந்துட னிமிர்வ
கோல வேங்கையின் கொம்பர்கள் பொன்மலர் தூவிக்
காலி னிற்றெழு தெழுவன நிகர்ப்பன காணாய்.

அருந்ததிக்கு - அருந்ததி தேவிக்கும், சீலம் இன்னது என்று அருளிய - (மகளிர்க்கு உரிய) கற்பொழுக்கம் இத்தகையது என்று காட்டியருளின, திருவே - இலக்குமி போன்றவளே, கோலம் - அழகிய, வேங்கையின் கொம்பர்கள் - வேங்கை மரத்தின் சிறு கொம்புகள், நீலம் வண்டு இனம் படிந்து - நீல நிறமுள்ள வண்டின் கூட்டம் மொய்த்தலால், வளைந்து - (பாரம் தாங்காமல் கீழ்நோக்கி) வளைந்து, எழ - (அவ் வண்டுகள்) எழுந்திட, உடன் நிமிர்வ - உடனே நிமிர்ந் தெழுவன, காலினில் - (உன்) பாதங்களில், பொன் மலர் தூவி - பொற் பூவால் அருச்சித்து, தொழுது எழுவன நிகர்ப்பன - வணங்கி யெழுமவை போன்றன, காணாய்—.

வழியருகே உள்ள வேங்கைப் பூங்கொம்புகளில் வண்டுகள் நிறைய மொய்க்கும்போது அவற்றின் பாரம் தாங்காமல் கொம்புகள் வளைய, பூக்கள் பிராட்டியின் கால்களில் உதிர்ந்தன. இஃது அக் கொம்புகள் மலர் தூவி வணங்குவது போலவும், வண்டுகள் நீங்கப் பெற்றுக் கொம்புகள் நிமிர்வது வணங்கி எழுவது போலவும் தோற்ற மளித்தது. வேங்கைப் பூ பொன்னிறம் உடையதாகலின், 'பொன் மலர்' எனப் பெற்றது. பிராட்டியை முன்னம், "அருந்ததி அனையாளே" (699) என்றவன், இப்போது அருந்ததியை விஞ்சியவள் என்கின்றான். "சீல மின்றியுஞ் செய்தவம் வேறுமொன் றுளதோ" (736) என்ற விடத்துச் 'சீலம்' பிராட்டியுடையது எனக் கொள்ளுதல் பொருத்தம் உடையதாதல் இதனால் பெறப்படும்.

(பி - ம்.) 1. அருந்ததிக்குதவிய.
2. படிந்தென; வளைந்தன நிமிர்வ, நிமிர்ந்த, வளைந்துடனிமிர்ந்த, உதிர்த்த.
3. சோலைவேங்கையின் கொம்புகள் பொலமலர்,
4. காலின் விழ்ந்தன வெழுவன; நிகர்வன, போல்வன, நிகர்ப்பது. (16)

கொடிச்சியர் கவண் வீசும் காட்சி

756. விற்கொள் வாணுதல் விளங்கிழை யிளந்தளிர்க் கொழுந்தே
எற்கொள் மால்வரை யும்பர்நின் றிரும்புனங் காக்கும்
கொற்கொள் வேற்கணார் குரீஇயினத் தெறிகுரு விந்தக்
கற்கள் வானிடை மீனென விழுவன காணாய்.

வில் கொள் வாள் நுதல் - வில்லைப் போன்ற ஒளி அமைந்த நெற்றியையும், விளங்கு இழை - (அழகாக) விளங்கும் அணி கலன்களையுமுடைய, இளம் தளிர் கொழுந்தே - இளந்தளிரான மருக்கொழுந்து போன்றவளே, எல் கொள் - வெயிலொளியைக் கொண்ட, மால்வரை உம்பர் நின்று - பெரிய இம்மலையின் உச்சியில் (பரணில்) இருந்துகொண்டு, இரு புனம் காக்கும் - பெரிய தினைப்புனங் களைப் பாதுகாக்கின்ற, கொல் கொள் வேல் கண்ணார் - கொல்லுதல் பொருந்திய வேல் போலும் கண்களை உடைய குறமங்கையர், குரீஇ

இனத்து எறி - குருவிக் கூட்டங்களின்மேல் வீசுகின்ற, குருவிந்தம் கற்கள் - மாணிக்கக் கற்கள், வானிடை மீன் என - ஆகாயத்தினின்று (விழும்) நாண் மீன்களைப் போல, விழுவன காணாய் - விழுவன வற்றைக் காண்க.

குருவிந்தம் - மாணிக்கத்துள் ஒரு வகை (சிலப். 14 : 186.) என்றும் கூறுவர். பகற்பொழுதாகலின், அக்கற்கள் ஒளி மழுங்கிய விண் மீன்கள் போன்றன. நுதல் - புருவமுமாம். கொல் - கொற்றொழிலுமாம். குரீஇ - குருவி.

(பி - ம்.) 1. தளிர்க்கொம்பே.
2. உம்பரின்; இரும்புனல்.
3. குரீஇயினை; எறிதரக்குறித்த, குவித்த, எறிகுவன்குறித்த, எறிகுன ரந்தச், எறிகுனவந்த, வந்தக், எறிந்திடவெழுந்த.
4. கற்கொள்; மின்னென; விழ்வன, விழ்வது, விழைவன, மீள்வன, (17)

நீர் வற்றிய காட்டாறுகளின் தோற்றம்

757. நான நாண்மலர் நறையகி னாவிதே னாறும்
சோனை வார்குழற் சுமைபொரு திறுமிடைத் தோகாய்
வான யாறுமீன் மலர்ந்தன வெனப்புனல் வறந்த
கான யாறுகள் கணமணி யிமைப்பன காணாய்.

நானம் - புழுகு நெய்யும், நாள் மலர் - புதிய பூவும், நறை அகில் - நறுமணமுள்ள அகிற்புகையும், நாவி - கத்தூரியும், தேன் நாறும் - பூவிலுள்ள தேனும் (ஆகியவற்றின்), மணங் கமழ்கின்ற, சோனை வார் குழல் - விடா மழை பொழியும் கருமேகம் போன்ற நீண்ட கூந்தலின், சுமை பொருது - பாரம் தாங்காமல், இறும் இடை - தளர்கின்ற இடையை உடைய, தோகாய் - மயில் போன்றவளே, வானம் யாறு - ஆகாயமாகிற ஆற்றிலே, மீன் மலர்ந்தன என - விண்மீன்கள் விளங் குவனபோல, புனல் வறந்த கானம் யாறுகள் - நீர் வற்றிய காட்டாறு களில், கணம் மணி இமைப்பன - கூட்டமான (பலவகை) மணிகள் விளங்கித் தோன்றுவனவற்றை, காணாய்—.

நாள் மலர் - அன்றலர்ந்த பூ. நறை - நறுமணம்; நறையகில்: குறுந்: 334. தேன்-நறுமணமுமாம்; "அகிற்புகை அளைந்து தேனளாய்ப் பஞ்சுடை யமளி" (சூளா. குமார. 17) என்பதில் தேன் இப்பொருள தாதல் காண்க. சோனை - விடா மழை. வார் - மேகம். தோகை: ஆகு பெயராய் விளியேற்றது. வானயாறு: உருவகம்; தேவ கங்கை என்பாருமுளர். நீர் வற்றிய ஆற்றின் வெண் மணற் பரப்புக்கு ஆகாய வெளியும், மணற் பரப்பில் தோன்றும் மணிகளுக்கு விண்மீன்களும் உவமை.

ஆழ்வார் திருநகரிப் பதிப்பொழிந்த ஏனைய அச்சுப் புத்தகங்களில் இப்பாடலும் அடுத்ததும் முன்பின்னாக மாறியுள்ளன.

(பி - ம்.) 1. அகிலர்விதேனூறும், அகினூறுதேனூறும், அகினுவிதேலூறும்.
2. சோனவார்; சுமைபொருதிடுகிடைத், பொருதிடுகிடைத், பெருதிரு மிடைத், பெருத்துடியிடைத், பொருத்துடியிடைத், பொருதிரு கிடைத், பெருத்துடியிடைத், சுமந்திருமிருமிடைத், சுமந்திருமிரு கிடைத், சுமைபொருதிருமிடைக் கோதாய்.
3. வானயாற்றுமீன், வானையாற்றுமீன்; வானவாறுமீன்; மலர்ந்தன வெனப், அலர்ந்தனவெனப்; புனல் அலர்ந்த.
4. கானவாறுகள், கானியாறுகள்; கதிர்மணி, கனமணி. (18)

புகைப் படலத்தின் தோற்றம்

758. வரிகொ ணோன்சிலை வயவர்தங் கணிச்சியின் மறித்த
பரிய காரகில் சுடநிமிர் பசும்புகைப் படலம்
அரிய வேதிய ராகுதிப் புகையொடு மளவிக்
கரிய மால்வரைக் கொழுந்தெனப் படர்வன காணாய்.

வரி கொள் நோன் சிலை - கட்டுதல் கொண்ட வலிய வில்லை உடைய, வயவர் - வேடர்கள், தம் கணிச்சியின் மறித்த - தம் கோடரியால் வெட்டிய, பரிய கார் அகில் - பருத்த கரிய அகிற்கட்டைகளை, சுட - கொளுத்துதலால், நிமிர் பசும் புகை படலம் - ஓங்கி எழுந்த பசிய புகைத்தொகுதி, அரிய வேதியர் - பெருமை மிக்க மறையோர்கள், ஆகுதி புகையொடும் அளவி - (ஓம குண்டத்தில்) ஆகுதி செய்தலால் எழுகின்ற புகையோடு கலந்து, கரிய மால்வரை கொழுந்து என - கரிய பெரிய இம்மலையின் சிகரம்போல, படர்வன காணாய் - எழுவனவற்றைக் காண்பாயாக.

வயவர் - வீரர்; இங்கே வேடரைக் குறித்தது. கொழுந்து - சிகரம்.

(பி - ம்.) 1. வரிக்கொள், வரிகள்; ஒண்சிலை, நாண்சிலை, வெஞ்சிலை; மலையவர்; மறிந்த, மடிந்த, மடித்த, பிடித்த.
2. காரகிற்சுட, காரகிற்சுடர், காழகிற்சுட; பசுங்கதிர்ப், பைங்கதிர்ப், பசுஞ்சுடர்ப், பரஞ்சுடர்ப்.
3. ஆவுதிப்; புகையொடு மளாவிக், புகைபொடுமருவிக், ஆகுதிதீப் புகையளாவிக். (19)

விஞ்சைமாதரின் காற்சுவடுகள்

759. மஞ்ச ளாவிய மாணிக்கப் பாறையின் மறைவ
செஞ்செ வேநெடு மரகதப் பாறையிற் றெரிவ
விஞ்சை நாடியர் கொழுநரொ டூடிய விமலப்
பஞ்ச ளாவிய சீறடிச் சுவடுகள் பாராய்.

கொழுநரொடு ஊடிய - தம் கணவரோடு ஊடல் கொண்ட, விஞ்சை நாடியர் - வித்தியாதர மகளிரின், விமலம் - குற்றமற்ற, பஞ்சு

அளாவிய சிறு அடி சுவடுகள் - செம்பஞ்சு ஊட்டப்பெற்ற சிறிய பாதச் சுவடுகள், மஞ்சு அளாவிய - அழகு பொருந்திய, மாணிக்கம் பாறையில் - மாணிக்கப் பாறைகளில், மறைவ - புலப்படாதனவாய், நெடு மரகதம் பாறையில் - பெரிய மரகதப் பாறைகளில், செஞ்செவே தெரிவ பாராய் - நன்ருக(செந்நிறத்தனவாய்)த் தெரிவனவற்றைப் பார்ப்பாயாக.

வான்வழியே செல்லும் வித்தியாதரர்கள், தம் துணைவியரோடு, மிகச் சிறந்த இச்சித்திரகூட மலையின்கண் இரவில் தங்குதலால், அங்கே நடந்த வித்தியாதர மகளிரின் செம்பஞ்சூட்டிய பாதச்சுவடு செந்நிறமுள்ள மாணிக்கப் பாறைகளில் தெரியாமல், பச்சைநிறமுள்ள மரகதப் பாறைகளில் பளிச்சிட்டுத் தெரிகின்றன; அவற்றைப் பார் என்கின்ருன்.

மஞ்சு - அழகு; ''மஞ்சுடை மணிநகு மாலை மண்டபம்'' (ஞான. குமார. 17); மஞ்சளாவிய - மேகமண்டலத்தை யளாவிய எனவுமாம். செஞ்செவே: 671-விசேடவுரை பார்க்க. நாடியர் - நாட்டு மகளிர்; நாடு என்பதன் அடியாக வந்தது; ''மிதிலை நாடிக்கும்'' (785); பின் இரண்டடிகளுடன் ஒப்பிடுக: ''விஞ்சை வேந்தர், குஞ்சியந் தலத்து நீலக் குருமணித் தலத்தும் மாதர், பஞ்சியங் கமலம் பூத்த பசுஞ்சுவ டுடைத்து'' (பால. 927).

(பி - ம்.) 2. செஞ்சவே; தெரிய.
3. விஞ்சைநாட்டியர், நாட்டவர்; ஊடினர்விமலப், ஊடியவியல்பால்.

(20)

அருவியிற் கற்பக மலர்கள்

760. சுழித்த தண்புனற் சுழிபுரை யுந்தியந் தோகாய்
கொழித்த மாமணி யருவியோ டிழிவன கோலம்
அழித்து மேவிய வரம்பைய ரறல்புரை கூந்தல்
கழித்து நீக்கிய கற்பக நறுமலர் காணாய்.

தண் புனல் - குளிர்ந்த நீரில் (உண்டாகிற), சுழித்த - வட்டமான' சுழி புரை - சுழி போன்ற, உந்தி - கொப்பூழையுடைய, அம் தோகாய் - அழகிய மயில் போன்றவளே, மாமணி கொழித்த அருவியொடு - சிறந்த மணிகளைக் கொழித்துக்கொண்டு வரும் இம்மலையருவியில், மேவிய அரம்பையர் - (நீராட) விரும்பிய தேவமாதர், கோலம் அழித்து - தாம் புனைந்த கோலத்தை நீக்கி, அறல்புரை கூந்தல் கழித்து நீக்கிய - கருமணல் போன்ற (தம்) கூந்தலினின்றும் எடுத்தெறிந்த, நறு கற்பக மலர் - நறுமணம் மிக்க கற்பகப் பூக்கள், இழிவன காணாய் - (கலந்து) கீழிறங்குமவற்றைக் காண்பாயாக.

சித்திரகூடமலை யருவியின் சிறப்பு நோக்கி அதில் நீராட விரும்பி வந்த தேவமாதர், தம் அணிகலன்களைக் கழற்றி வைத்து, கூந்தலில்

சூடிய கற்பகமலர் மாலைகளை எடுத்தெறிந்துவிட்டு நீராட, அம்மலர் மாலைகள் மணி கொழித்துவரும் அருவியில் கலந்து கீழே வரும் காட்சியைக் காண் என்கின்றான். அருவியொடு - அருவியில்; உருபு மயக்கம். நீர்ச்சுழி கொப்பூழுக்கு உவமை.

(பி - ப்.) 1. சுழித்தசெம்பொனின்றெளைபுரை, தொளைபுரி, தண்புனற்சுழிபுரி, உந்தியின்றுணையே, உந்தியென்றுணையே.
2. அருவியூடிழிவன, அருவிகள்பொழிவன,
3. மேவியரகில்புரை, மேவியவாடையர்; அறல்புரையோதி, அகில்புரை கூந்தல், செறிமுகிற்கூந்தல், அறல்புரைகூந்தற்.
4. நீங்கிய; கற்பகமலரிவை. (21)

கடுவன் பறையடித்தல்; ஓர் கொடிச்சி பிறையைப் பற்றுதல்

761. அறைக ழற்சிலைக் குன்றவ ரகன்புனங் காவற்
பறையெ டுத்தொரு கடுவனின் றடிப்பது பாராய்
பிறையை யெட்டினள் பிடித்திதற் கிதுபிழை யென்னுக்
கறைது டைக்குறும் பேதையோர் கொடிச்சியைக் காணாய்.

அறை கழல் - ஒலிக்கின்ற வீரக்கழலையும், சிலை - வில்லையு முடைய, குன்றவர் - குறவர்கள், அகன் புனம் காவல் பறை - அகன்ற தினைப் புனத்தைக் காத்தற்கு வைத்துள்ள (தொண்டகம் என்னும்) பறையை, ஒரு கடுவன் எடுத்து நின்று அடிப்பது பாராய் - ஓர் ஆண் குரங்கு எடுத்துக்கொண்டு நின்று அடிப்பதைப் பார்ப்பாயாக; பிறையை எட்டினள் பிடித்து - (தன் கைக்கு அணிமையாக வந்த) பிறையை எட்டிப்பிடித்து, இதற்கு - இந்தப் பிறைக்கு, இது பிழை என்னு - இது குறையாகும் என்று சொல்லி, கறை துடைக்குறும் - (அதன்) களங்கத்தை அழிக்க முயலுகின்ற, பேதை - அறிவிலியான, ஓர் கொடிச்சியை காணாய் - ஒரு குறமகளைக் காண்பாயாக.

தான் கண்ணுற் கண்டதைச் செய்தல் குரங்கின் இயல்பாதலால்' குறவர்கள் பறையடித்தலைக் கண்டிருந்த குரங்கு, தானும் அதனை எடுத்து அடிக்கலாயிற்று; அதனைக் காட்டினான். பிறையைக் குறமகள் கையால் எட்டிப் பிடித்தாள் என்றது, மலையின் உயர்ச்சியைப் புலப் படுத்தும். "கொதிநுனை வேற்கண் மாதர் குறத்தியர் நுதலி னோடு, மதியினை வாங்கி யொப்பக் காண்குவர் குறவர்" (பால. 925) என வரைக்காட்சியுட் கூறியது இங்கு ஒப்பு நோக்கத் தகும். தொண்டகம் என்னும் பறை, தினைப்புனத்தை அழிக்க வரும் பறவைகளையும் விலங்கு களையும் அச்சுறுத்தி ஓட்டுதற்குப் பயன்படுவது.

(பி - ம்.) 1. சினக்குன்றவர், சிலைக்கின்றவர்.
2. கடுவனின்றடிப்பன, பறையெடுத்த கின்றடிப்பதோர் கடுவனைப், அடிப்பது காணுய்.

3. எட்டின, ஒட்டினள், வெட்டினள், பிடித்ததற்கிது, பிடித்ததிற்கிர, பிறையென்னக்.
4. திடைக்குற, துடக்குறு; கொடிச்சியோர்பேதையைக். (22)

சூரர மகளிரின் தளிர்ப்படுக்கை

762. அடுத்த பல்பக லன்பரிற் பிரிந்தவ ரென்ப
தெடுத்து நந்தமக் கியம்புவ வெனக்கரிந் திருண்ட
தொடுத்த மாதவிச் சூழலிற் சூரர மகளிர்
படுத்து வைகிய பல்லவ சயனங்கள் பாராய்.

தொடுத்த மாதவி சூழலில் - பின்னிப்படர்ந்த மாதவிக் கொடிகள் (பந்தலாக) அமைந்த இடத்தில், சூர் அர மகளிர் - தெய்வப் பெண்கள் (சிலர்), படுத்து வைகிய பல்லவ சயனங்கள் - படுத்திருந்த தளிர்ப் படுக்கைகள், அடுத்த பல்பகல் - தொடர்ந்த பல நாட்கள், அன்பரின் பிரிந்தவர் என்பது - தம் காதலரைப் பிரிந்திருந்தவர் (அப்பெண்கள்) என்பதனை, நம் தமக்கு எடுத்து இயம்புவ என - நமக்கு எடுத்துச் சொல்வனபோல, கரிந்து இருண்ட - கருகி இருள் நிறமாகி உள்ளன; பாராய் - அவற்றைப் பார்.

சில தெய்வ மகளிர், தம் காதலரைப் பிரிந்ததனாலுளதான காம வெப்பந் தணிய, இந்த மலையில் குளிர்ந்த மாதவிப் பந்தலின்கீழ் இனிய தளிர்களைப் பரப்பி, அத்தளிர்ப் படுக்கையில் கிடந்தனராக, அவர்களுடம்பின் வெப்பத்தால் அத்தளிர்கள் கருகி இருண்டுபோயின; அவற்றைப் பார் என்கின்றான். "ஆவியி னினிய கொண்கர்ப் பிரிந்தறி வழிந்த விஞ்சைப் பாவையர் வைகத் தீய்ந்த பல்லவ சயனங் கண்டார்" (பால. 938) என்றார் முன்னும்.

(பி - ம்.) 1. பற்பகல், பல்கலன்; அன்பரிற் பிரிந்தனர், அன்பரைப் பிரிந்தனர், அன்பரைப் பிரிந்தவர்.
2. இயம்புவதெனக், இயம்புவமெனக்.
3. சுரர்மணிமகளிர்.
4. படுத்துலர்ந்தன. (23)

அசுணங்கள் பாடல் கேட்டுத் துயிலுதல்

763. நினைந்த போதினு மமுதொக்கு நேரிழை நிறைதேன்
வனைந்த வேங்கையிற் கோங்கினில் வயின்றொறுந் தொடுத்துக்
குனிந்த வூசலிற் கொடிச்சிய ரெடுத்தவின் குறிஞ்சிக்
கனிந்த பாடல்கேட் டசுணமா வளர்வன காணாய்.

நினைந்த போதினும் - (மனத்தால்) நினைத்தபோதும், அமுது ஒக்கும் - அமுதம் போல இனிக்கின்ற, நேர் இழை - நுட்பமான அணி கலன்களையுடையவளே, நிறைதேன் வனைந்த - மிக்க தேன் தங்கிய, வேங்கையில் - வேங்கை மரத்திலும், கோங்கினில் - கோங்க மரத்தி

லும், வயின்தொறும் - பலவிடங்களிலும், தொடுத்து - பூட்டப்பெற்று, குனிந்த - தாழ்ந்து தொங்குகின்ற, ஊசலில் - ஊஞ்சல்களில் (அமர்ந்து), கொடிச்சியர் - குறமகளிர், எடுத்த - எடுத்துப் பாடிய, இன் குறிஞ்சி - இனிய குறிஞ்சிப் பண் அமைந்த, கனிந்த பாடல் கேட்டு - சுவை கனிந்த ஊசற் பாடலைக் கேட்டு, அசுணம் மா - அசுணமாக்கள், வளர்வன காணாய் - கண் துயிலுவன காண்பாயாக.

வாயாற் சுவைத்தால் இனிப்பது அமுதம்; அதனின் வேறாய் மனத்தால் நினைத்தாலே இனிப்பன பிராட்டியின் திருமேனியழகும் குணங்களுமாகலின், 'நினைந்த போதினும் மமுதொக்கும் நேரிழை' என்றான். நேரிழை : அன்மொழித் தொகை; விளியேற்றது. உம்மை, உயர்வு சிறப்பு. குறிஞ்சிப் பாடல், கனிந்த பாடல் என இயைக்க. குறிஞ்சி - பண்வகையுள் ஒன்று; குறிஞ்சி நிலத்துக்குரியது. அசுணமா- இசையறிவதொரு விலங்கு; பறவையெனவும் கூறுவர். இதனைப்பற்றிய விரிவான செய்திகளை, பால. 7 - விசேடக் குறிப்பில் காண்க.

(பி - ம்.) 1. நினைந்தபோதிலும், போழ்தினும்; நேரிமாய் நிறைதேன், நேரிமாய் நின்ற, தாரிழைதுன்ற.
2. கோங்கினின்; வயின்கொளத்தொடுத்த.
3. குனிந்தபூசலிற்; எடுத்தலின்குறிஞ்சி, விண்குறிஞ்சி, வண்குறிஞ்சிக், மென்குறிஞ்சிக், எடுத்தனர் குறிஞ்சிக், எடுத்துவின்குறிஞ்சிக்.
4. கனிந்த பாடலின், பாடலில்; வருவன காணாய், பாராய். (24)

அருவிநீர் நறுமணங் கமழ்தல்

764. இலவு மிந்திர கோபமும் புரையித ழினியாய்
அலவு நுண்டுளி யருவிநீ ரரம்பைய ராடக்
கலவை சாந்துசெங் குங்குமங் கற்பகங் கொடுத்த
பலவுந் தோய்தலிற் பரிமளங் கமழ்வன பாராய்.

இலவும் - இலவம் பூவையும், இந்திரகோபமும் - இந்திரகோபப் பூச்சியையும், புரை - (நிறத்தால்) ஒத்த, இதழ் - உதடுகளையுடைய, இனியாய் - (கண்ணுக்கும் மனத்துக்கும்) இனியவளே, அரம்பையர் ஆட - தேவமாதர் (வந்து) நீராடுதலால், (அவர்கள் உடம்பில் பூசிய) கலவை - சந்தனக் கலவைக் குழம்பும், சாந்து - மயிர்ச் சாந்தும், செங்குங்குமம் - செங்குங்குமமும், கற்பகம் கொடுத்த பலவும் - கற்பக விருட்சம் (அவர்களுக்குக்) கொடுத்த வேறு பல மலர் முதலிய நறுமணப் பொருள்களும், தோய்தலின் - நீரில் படிதலால், அலவும் நுண் துளி அருவி நீர் - சிதறும் நுண்ணிய திவலைகளையுடைய அருவியின் நீரில், பரிமளம் கமழ்வன பாராய் - பலவகை நறுமணம் கமழ்தலை நோக்குவாயாக.

நினைத்தாலும் அமுதம் போன்றவள் பிராட்டி யென்றதனால், மனத்துக்கும் இனியவளாகின்றாள். ஆட - ஆடுதலால்; செய

வெனெச்சம் காரணப் பொருளில் வந்தது. கலவை சாந்து : உம்மைத் தொகை; 'கலவைச் சாந்து' எனற்பாலது ஓசை பற்றி மிகாது வந்ததெனக் கொண்டு 'கலவைச் சந்தனம்' என உரைத்தலுமாம்.

(பி - ம்.) 2. அலவுதண்டுளி, உலவுதண்டுளி, அலைவநுண்டுளி, அலவனுண்டுளி: அருவிகளரம்பையர், அரம்பையரருவிநீர்; உவப்பக்.
3. கலவைச்சாந்து. (25)

சிகரங்களின் தோற்றம்

765. செம்பொ னாற்செய்து குலிகமிட் டெழுதிய செப்போர்
கொம்பு தாங்கிய தெனப்பொலி வனமுலைக் கொடியே
அம்பொன் மால்வரை யலர்கதி ருச்சிசென் றணையப்
பைம்பொன் மாமுடி மிலைச்சிய தொப்பது பாராய்.

செம் பொன்னால் செய்து - செவ்விய (மாற்றுயர்ந்த) பொன்னால் செய்து, குலிகம் இட்டு எழுதிய - சாதிலிங்கத்தால் வரிக்கோலம் எழுதப்பெற்ற, செப்பு - (அழகிய இரண்டு) செப்புக்களை, ஓர் கொம்பு தாங்கியது என - ஒரு பூங்கொம்பு சுமந்துள்ளது என்னும் படி, பொலி - விளங்குகின்ற, வனம் முலை - அழகிய தனங்களை யுடைய, கொடியே - வல்லிபோல்வாளே, அலர் கதிர் - (கதிரவ னுடைய) பரந்த கிரணங்கள், உச்சி சென்று அணைய - சிகரங்களில் சென்று படிதலால், அம் பொன் மால்வரை - அழகிய பொன்னிற முடைய இப்பெரிய மலை, பசுமை பொன் மா முடி மிலைச்சியது ஒப்பது பாராய் - பசும்பொன்னாலாகிய சிறந்த கிரீடங்களைச் சூட்டியது போன்றிருப்பதைப் பார்ப்பாயாக.

மலைச் சிகரங்களில் வெயிலொளி படுதலால், அவை மின்னும் பொன் மகுடங்களை மலைக்குச் சூட்டினது போல விளங்கு கின்றன என்கின்றான். மிலைச்சுதல் - சூட்டுதல். குலிகம் - இங்கு லிகம்; சாதிலிங்கம். இட்டு : மூன்றனுருபின் பொருளது. உச்சி - சிகரம்.

இப்பாடல் ஒரு பிரதியில் இல்லை.

(பி - ம்.) 1. குலிகமெட்டு, குலிகமிது; செம்போர்.
2. கொம்பர்தாங்கிய, கொம்புதாங்கினது; துணைமுலைக்.
3. அலைகதிர்; சென்றணுகப், சென்றடையப்.
4. மான்முடி; மிலைச்சியதொப்பது. (26)

மாணிக்கப் பாறைகளில் மூங்கில் முத்தின் காட்சி

766. மடந்தை மார்க்கொரு திலதமே மணிநிறத் திணிகல்
தொடர்ந்த பாறையின் வேயினஞ் சொரிகதிர் முத்தம்
இடந்தொ றுங்கிடந் திமைப்பன வெரிகதிர்ச் செக்கர்
படர்ந்த வானிடைத் தாரகை நிகர்ப்பன பாராய்.

மடந்தைமார்க்கு ஒரு திலதமே - பெண்களுக்கொரு திலகமாக விளங்குபவளே, மணி நிறம் - பதுமராக மணியின் நிறத்தைக் கொண்ட, திணி கல் — வலிய கல்லால் அமைந்த, தொடர்ந்த பாறையின் — நீண்ட பாறையில், வேய் இனம் சொரி - மூங்கில்கள் சிந்திய, கதிர்முத்தம் - ஒளி பொருந்திய முத்துக்கள், இடம்தொறும் கிடந்து இமைப்பன — பல இடங்களிலும் சிதறிக் கிடந்து ஒளிவிடுவன, எரி கதிர் — சுடும் கதிரவனுல், செக்கர் படர்ந்த வானிடை — செந்நிறம் பரவிய (அந்தி) வானத்தில் (பரவிய), தாரகை நிகர்ப்பன பாராய் — விண்மீன்களை யொத்திருப்பவற்றைப் பார்ப்பாயாக.

செந்நிறமுடையதாய்ப் பரந்து நீண்ட கற்பாறைக்குச் செவ் வானமும், அப்பாறையில் கிடந்து ஒளிவிடும் முத்துக்களுக்கு விண்மீன்களும் உவமை. "வேய்தந்த வெண்முத்தஞ் சிந்துபைங் கார்வரை மீன்பரப்பிச், சேய்தந்த வானக மானுஞ் சிலம்ப". (திருச்சிற். 130) என்பது ஈண்டு ஒப்பிடத்தகும்.

இப்பாடலும் ஒரு பிரதியில் இல்லை.

(பி - ம்.) 1. மடந்தைமார்களில்; திலகமே; மணிநிறத்திணிக்கல், மணிநிறத் தணிகல், மணிநிறத்தடுத்த, மணிநிறைத்தடுத்த.
2. பாறையில்; வேயினஞ்சொரிமணி, துளைக்கமைசொரிதரு,
3. இமைப்பனவெக்கிளஞ்செக்கர், வெஃகிளஞ்செக்கர், வெந்தினஞ் செக்கர், வெயிலிளஞ்செக்கர், இமைப்பனவேயிளஞ் செக்கர், இமைப்பன வெனக்கிளர் செக்கர், இனிதிளஞ்செக்கர், இமைப் பிலன் வெஃகிளஞ்செக்கர், இமைப்பினி லெக்கிளஞ்செக்கர்.
4. தாரகைபுரைவன, தாரகைக்கொப்பன, ஒப்பது. (27)

767. குழுவு நுண்டொளை வேயினுங் குறிநரம் பெறிவுற்
றெழுவு தண்டமிழ் யாழினு மினியசொற் கிளியே
முழுவ தும்மலர் விரிந்தநாண் முருக்கிடை மிடைந்த
பழுவம் வெங்கனல் கதுவிய தொப்பது பாராய்.

குழுவு நுண் தொளை வேயினும் — தொகுதியான நுண்ணிய தொளைகளையுடைய வேய்ங்குழலிசையினும், குறி நரம்பு எறிவுற்று எழுவு — சுரங்களைத் தனித்தனி குறிக்கும் நரம்புகளைத் தெறித்து இசை எழுப்பப்படுகிற, தண் தமிழ் யாழினும் - குளிர்ந்த இனிய யாழொலியினும், இனிய சொல் - இனிமை மிக்க சொற்களையுடைய, கிளியே - கிளி போன்றவளே, முழுவதும் - (மரம்) முழுவதிலும், நாள் மலர் விரிந்த முருக்கு — இலையின்றிப் புதிய பூக்கள் மலர்ந் துள்ள முண் முருக்க மரங்கள், இடை மிடைந்த பழுவம் - இடை யிடையே செறிந்துள்ள இந்தக் காடு, வெம் கனல் கதுவியது ஒப்பது பாராய் - கொடிய தீப்பற்றி எரிவது போன்றுள்ளதைக் காண்பாயாக.

முண்முருக்கின் பூ, தீப்போலச் செந்நிறமுடையது. அம்மரங்களில் இலையின்றி முழுதும் பூக்களே நிரம்பியிருத்தலும் உண்டு. அத்தகைய மரங்கள் அடர்ந்த காடு, தீப்பற்றி எரிவது போலத் தோற்றுகின்றது. வேய் - வேய்ங்குழல்; ஆகுபெயர். தமிழ் - இனிமை; "தமிழ்தழீஇய சாயலவர்" (சீவக. 2026); தமிழ்யாழ்—தமிழ் நாட்டுக்கே சிறப்பாக உரிய யாழெனினுமாம்.

இவ்விடத்து ஒரு பிரதியில் காணும் மிகைப்பாடல் வருமாறு:—

மைக்கொள் வேல்விழி யாயும்பர் மாதுதாள் வருடும்
மெய்க்கொள் கூன்மந்தி தனக்குவந் துதவிய விலையில்
செய்க்கொ ளாரத்தைச் சிதறுவ கூனிசிற் றவைமுன்
கைக்கொ ளாரத்தைச் சிதறுவ தொத்தன காணுய்.

(பி - ம்.) 1. குழுவினுண்டொளி, குழுவிழுண்டுளி; வேய்ங்குழல், வயங்குழல், வேயினம்; குறிகரம்பெறியுற்று, எழுவுற்று, குறுகரம்பெறிவுற்ற, குறிகரம்பறிவுற்று, எறிகரம்பெறிவுற்று, எழுகரம்பெறிவுற்ற எறியுற்று, ஏழ்கரம்பெறிவுற்று.
2. எழுவ, எழுது; தகையசொல்.
3. மலர்விரியநாண், விரியுநாண், மலர்விரிந்தனை, விரிந்திடும், இலை விரிந்தநாண்; முருக்கிடைவிரிந்த, இடைந்த.
4. பழுவவெங்கனல், பழுவம்வெங்கனற்; ஒப்பன, ஒப்பதும். (28)

யானைகளின் செயல்

768. வளைகள் காந்தளிற் பெய்தன வணையகை மயிலே
தொளைகொ டாழ்தடக் கைநெடுந் துருத்தியிற் றூக்கி
அளவின் மூப்பின ரருந்தவர்க் கருவிநீர் கொணர்ந்து
களப மால்கரி குண்டிகைச் சொரிவன காணுய்.

காந்தளில் வளைகள் பெய்தன அனைய கை - காந்தட்பூவில் வளைகளிட்டாற்போலும் கைகளையுடைய, மயிலே - மயில் போன்றவளே, களபம் மால் கரி - கன்றையுடைய பெரிய யானைகள், அளவு இல் மூப்பினர் அரு தவர்க்கு - மிக முதிர்ந்த பருவமுடைய அரிய தவசியர் பொருட்டு, அருவி நீர் — அருவி நீரை, தொளைகொள் — தொளையைக் கொண்ட, தாழ் தட கை — தொங்குகிற பெரிய தும்பிக்கையாகிற, நெடு துருத்தியில் - பெரிய தோற்பையில், தூக்கி கொணர்ந்து - தாங்கிக்கொண்டு வந்து, குண்டிகை சொரிவன காணுய் - (தவசியருடைய) கரகங்களில் ஊற்றுவதைக் காண்பாயாக.

அம்மலையில், யானைகளும் சாந்த குணமுடையனவாய்த் தவசியர்க்கு உதவுகின்றன என அம்மலையின் பெருமை குறித்தவாறு. "கான யானை தந்த விறகிற், கடுந்தெறற் செந்தீ வேட்டு" (புறநா. 251) என்பது இங்கே நினைப்பதற்குரியது. யானையின் துதிக்கைக்குத் துருத்தி உவமை: "வாளில்வெட்டி வாரணக்கை தோளிலிட்ட

மைந்தர்தாம், தோளிலிட்டு நீர்விடுந் துருத்தியான தொப்பரே" (கலிங்க. 422). மால்கரிக் களபம் என மாறி, பெருமை வாய்ந்த யானைக் கன்றுகள் என உரைத்தலுமாம்.

(பி - ம்.) 1. அனையகைம்மயிலே, பெய்தனவானகைம்மயிலே, பெய்வனவனைய கைம்மயிலே, பெய்தனவாணகைமயிலே.
2. துளிகள்; தாழ்தடக்கையெனும், தாட்டடக்கையெனும், கைந்நெடும்; தடங்களிற்,
3. மூப்பினர், மூப்பினர்க்கு; அருந்தவக்கருவி நீர்.
4. கவளமால்கரி, களவமால்கரி, களபமால்வரைக்; குண்டிகை சொரிவன. (29)

கடுவன்களின் செயல்

769. வடுவின் மாவகி ரிவையெனப் பொலிந்தகண் மயிலே
இடுகு கண்ணின ரிடருறு மூப்பின ரேக
நெடுகு கூனல்வா னீட்டின வுருகுறு நெஞ்சக்
கடுவன் மாதவர்க் கருநெறி காட்டுவ காணாய்.

இவை மா வடுவின் வகிர் என பொலிந்த - இவை மாவடுவின் பிளப்பு என்று சொல்லும்படி விளங்குகின்ற, கண்-கண்களையுடைய, மயிலே—, இடர் உறு மூப்பினர் - துன்பத்தை மிகுவிக்கும் முதுமையை யுடையவரும், இடுகு கண்ணினர் - (அம்மூப்பினால்) இடுங்கிய கண்களையுடையவருமான, மாதவர்க்கு - சிறந்த தவசிகட்கு, உருகு உறு நெஞ்சம் கடுவன் - (அவர்கள்பால் இரங்கி) நெகிழ்வுற்ற மன முடைய ஆண் குரங்குகள், நெடுகு கூனல் வால் நீட்டின - (தம் முடைய) நீண்டு வளைந்த வால்களை நீட்டினவாய், ஏக அருநெறி காட்டுவ காணாய் - (அவர்கள்) செல்லுதற்கு அரிய வழியைக் காட்டிச் செல்வன காண்பாயாக.

மூப்பின் மிகுதியால் கண்பார்வை குன்றி நடையும் தளர்வுற்ற தவசியர்க்கு உதவியாகக் குரங்குகள் தம் வாலை அவர்கள் பற்றி நடக்குமாறு நீட்டிக்கொண்டு வழிகாட்டி முன்னே செல்கின்றன என்றதனால், முந்திய பாடலில் குறித்த யானைகள் போலக் குரங்கு களும் தவசியர்க்கு உதவுகின்றன என்கின்றது இப்பாடல். பிளந்த மாவடு பெண்களின் கண்களுக்கு உவமை; "மாவடு வகிரன்ன கண்ணிபங்கா" (அடைக்கலப். 8), "மாவடு வகிரன்ன கண்ணி" (திருப்பொற் சுண்ணம். 2) என்பன திருவாசகம். உறு, பிறவினைப் பொருளது.

(பி - ம்.) 1. வடிவின; மாவகிரவையெனப், மாவகிரொப்பெனப், மாவகர் வாளெனப், மாவடுவகிரெனப், மானினமிவையெனப்.
2. மூப்பினரென்ன.
3. நீட்டிய, நீட்டியங்கு, கூனவானீட்டின, கூலவானீட்டின, கோலவா னீட்டின; உருகுறுநெஞ்சிற், உருகினநெஞ்சக், அருகுற நெஞ்சக், அவர் கையிற்கொடுத்துக். (30)

மந்திகளின் செயல்

770. அலம்பு வார்குழ லாய்மயிற் பெண்ணருங் கலமே
நலம்பெய் வேதியர் மார்பினுக் கியைவுற நாடிச்
சிலம்பி பஞ்சினிற் சிக்கறத் தெரிந்தநூ றேமாப்
பலம்பெய் மந்திக ளுடன்வந்து கொடுப்பன பாராய்.

அலம்பு வார் குழல் - அசைகின்ற நீண்ட கூந்தலையுடைய, ஆய் மயில் - அழகிய மயில் போன்ற, பெண் அரு கலமே - பெண் களுக்கு அரிய அணிகலமாக விளங்குபவளே, தேம் மா பலம் பெய் மந்திகள் - இனிய மாம்பழங்களை(முனிவர்க்கு)த் தரும் பெண் குரங்குகள், நலம் பெய் வேதியர் - (உலகினுக்கு) நன்மையைச் செய்யும் அம்முனிவர்கள், மார்பினுக்கு - மார்பில் அணிவதற்கு, இயைவு உற நாடி - பொருந்துவதாகக் கருதி, பஞ்சினின் - பஞ்சினால் இயன்ற நூல் போல, சிக்கு அற தெரிந்த சிலம்பி நூல் உடன் வந்து - சிக்குதலின்றி ஆராய்ந்த சிலந்தி நூலுடனே (முனிவர்பால்) வந்து, கொடுப்பன - (பழத்தோடு நூலையும்) கொடுப்பவற்றை, பாராய் - பார்ப்பாயாக.

மந்திகள், நல்ல மாங்கனிகளைக் கொணர்ந்து முனிவர்க்குத் தருவன; அவற்றோடு சிலந்தி நூலையும் முனிவர் அணியும் பூணூலுக்குப் பொருந்துமென்று கருதிக் கொணர்ந்து தருகின்றன. சிலம்பிகளே நூலைக் கொணர்ந்து மந்திகளுடன் கொடுத்தன வென்றலும் ஆம். இதனாலும் அந்தச் சூழலின் பெருமை விளங்கும்.

(பி - ம்.) 1. வார்குழலாய்வளைப், வார்குழலார்மயிற், வார்குழையாய்வளைப்; பெண்ணிருங்கலமே.
2. மார்பினுக்கியைபுற, இயைபுற, இயைவன, இசைவன, இசைவுற, ஆகுதிக்கியைவுற; காட்டிச்,
3. பஞ்சினிற்சிக்குறத், பஞ்சினிச்சிக்குறத், பஞ்சினூல்சிக்கறத், இக்குறத்; திரித்தநூல்; தேமாப், தேமாம்; தெரிந்தநூல்தேமாம், தெரிந்தனதேமாப், தெருட்டுநூல்தேமாம், திரிந்தனதேமாப், தேமாம்.
4. பலங்கள், பலன்கள்; மந்தியொடுடன். (31)

கடுவன்களும் பன்றிகளும்

771. தெரிவை மார்க்கொரு கட்டளை யெனச்செய்த திருவே
பெரிய மாக்கனி பலாக்கனி பிறங்கிய வாழை
அரிய மாக்கனி கடுவன்க ளன்புகொண் டளிப்பக்
கரிய மாகிழங் ககழ்ந்தன கொணர்வன காணாய்.

தெரிவைமார்க்கு ஒரு கட்டளை என செய்த - பெண்களுக்கு ஒரு மாதிரியாகப் படைக்கப்பெற்ற, திருவே - திருமகளே, கடுவன்கள் - ஆண் குரங்குகள், அன்புகொண்டு - (முனிவரிடத்து) அன்புடையன

வாய், பெரிய மா கனி - பெரிய மாம்பழங்களையும், பலா கனி - பலாப் பழங்களையும், பிறங்கிய (அழகாக) விளங்குகின்ற, வாழை அரிய மா கனி - வாழையின் சிறந்த அரிய கனிகளையும், அளிப்ப -(கொண்டு வந்து) கொடுக்க, கரிய மா - பன்றிகளும், கிழங்கு அகழ்ந்தன கொணர்வன காணாய் - கிழங்குகளைத் தோண்டிக் கொண்டு வருவன வற்றைக்காண்பாயாக.

விலங்குகளுள் அறிவிற் சிறந்த குரங்குகளின் செயலைக் கண்ட பன்றிகளும் முனிவர்க்கு உதவும் நல்ல நோக்கம் உடையனவாயின என அச்சூழலின் பெருமை குறித்தவாறும். கரிய மா - பன்றி; மாவும் எனற்பால உம்மை தொக்கது.

(பி - ம்.) 1. தெரிவையர்க்கொரு.
2. மாக்கனிபலாக்களின், மாக்களிற்பலாக்களிற், மாக்களிற்பிறங்கிய, மாக்கனிபிறங்கிய; பிறங்கினவாழை, வாழைபங்கனியோடு, வாழையிற்பலவின், பலாவின்.
3. கரியமாக்கனி, கடுவன்களரிதுகொண்டு, கடுவனுண்டினிதுகொண்டு, கடுவன்கள்கடிதுகொண்டு; அளித்த.
4. கரியமாக்கிழங்கு, அரியமாக்கிழங்கு, கரிகள்மாக்கிழங்கு; அகழ்ந்தன கொணர்ந்தன, அகழ்ந்தனகொடுப்பன, அகழ்ந்தவாகொடுப்பன, அகழ்ந்தவர்க்கொடுப்பன, அகழ்ந்தவர்க்கொணர்ந்தன, அகழ்ந்தவர்க்கருள்வன, அகழ்வனகொணர்வன, அமர்ந்தனகொணர்வன. (32)

கிளிகளின் பணி

772. ஐவ னக்குர லேனலின் கதிரிறுங் கவரை
மெய்வ ணக்குறு வேயின மீன்றமெல் லரிசி
பொய்வ ணக்கிய மாதவர் புரைதொறும் புகுந்துன்
கைவ ணத்தவாய்க் கிள்ளைதந் தளிப்பன காணாய்.

உன் கை வண்ணத்த வாய் கிள்ளை - உன் கையின் செந்நிறங் கொண்ட அலகினையுடைய கிளிகள், ஐவனம் குரல் - மலை நெல் கதிர் களையும், ஏனல் இன் கதிர் - தினையின் இனிய கதிர்களையும், இறுங்கு - சோளத்தையும், அவரை - அவரையையும், மெய் வணக்கு உறு - உடல் வளைதலுற்ற, வேய் இனம் ஈன்ற - மூங்கில்கள் தந்த, மெல் அரிசி - மெல்லிய அரிசியையும், தந்து - கொணர்ந்து, பொய்வணக்கிய - பொய்யை வென்ற, மாதவர் புரைதொறும் புகுந்து - பெரிய தவசியரின் ஆசிரமந்தோறும் நுழைந்து, அளிப்பன காணாய் - கொடுப்பவற்றைக் காண்.

முன்னே விலங்குகளின் நற்பணிகளைக் கூறிவந்தவர், இதில் கிளிகளின் பணியைக் கூறுகின்றார். முனிவரின் உணவுக்கு உதவும் பல பொருள்களைக் கிளிகள் தம் அலகால் கவர்ந்து கொணர்ந்து தருகின்றன என்கின்றார். பாரியின் பறம்பை மூவேந்தரும் முற்றிய

காலத்துக் கிளிகள் செய்த தொண்டு இங்கே நினைத்தற்குரியது. ஐவனம் - மலைநெல். குரல் - கதிர். ஏனல் - செந்தினை. இறுங்கு - சோள வகையுள் ஒன்று. மூங்கிலரிசியும் சிறந்த உணவுப் பொருளாகும். அவரை முதலியன பருப்பாதற்குரிய கூலங்கள். பொய்யை வணக்குதலாவது, பொய்ம்மை சிறிதும் இல்லாமை. புரை - குடில்; ஆசிரமம். கை : ஆகுபெயராய் கைந்நகத்தைக் குறித்தது.

(பி - ம்.) 1. ஏனலின் கதிரொடங்கவரை, தினைக்கதிர், இறுங்கவையவரை, இறுங்கிவையொடித்து.
2. வணக்குறுவேயினின்றீன்ற, வேணுகன்றீன்ற, வேணுகின்றீன்ற, வேயினிதின்ற, வேயினினின்ற, வணக்குறும்வேழகின்றீன்ற, வேழ நின்றளித்த, வணக்குறவேயினமீன்ற, வளைக்குறவேழமின்றீன்ற.
3. பொய்வணக்கில, வணக்கிலர், வணக்கமில், வனப்புறு; அறை தொறும்; புகுந்துண், புகுந்து, புகுந்தங்.
4. கைவணக்கவாய்க், வணக்குவாய்க், கைநகத்தவாய்க்கு கிள்ளைக ளளிப்பன, கிள்ளைகொண்டளிப்பது. (33)

மலைப் பாம்புகள்

773. இடிகொள் வேழத்தை யெடுத்துட னெயிற்றொடு விழுங்கும்
கடிய மாசுணங் கற்றறிந் தவரென வடங்கிச்
சடைகொள் சென்னியர் தாழ்விலர் தாமிதித் தேறப்
படிக ளாமெனத் தாழ்வரைக் கிடப்பன பாராய்.

இடிகொள் - முழங்குதலுடைய, வேழத்தை எடுத்து - யானையை எடுத்து, எயிற்றொடும் உடன் விழுங்கும் - கொம்புகளோடு ஒரு சேர விழுங்கவல்ல, கடிய மாசுணம் - கொடிய மலைப் பாம்புகள், கற்று அறிந்தவர் என - (அறிவு நூல்களைக்) கற்று உணர்ந்த பெரியோர் போல, அடங்கி - அடக்கமுடையனவாகி, சடைகொள் சென்னியர் - சடையைக் கொண்ட தலையினையுடையவரும், தாழ்வு இலர் - குறை யொன்றும் இல்லாதவருமான, தாம் - முனிவர்கள், மிதித்து ஏற - மிதித்து ஏறும் வண்ணம், படிகள் ஆம் என - இவை படிகள் ஆகு மென்னும்படி, தாழ்வரை - மலையடியில், கிடப்பன பாராய் - கிடப்பவற்றைப் பார்.

மலைப்பாம்புகளின் கொடுமையைக் கூறி, அவையும் அடங்கிக் கிடந்தன எனச் சூழலின் பெருமையைச் சுட்டுகின்றார். இடி - இடி முழக்கம் போன்ற பிளிற்றொலி; ''பெருங்கை யானை யிடிக்குர லியம்பி'' (பெருங். 1-54 : 40 - 41); ''அரிமான் இடித்தன்ன'' (கலி. 15) என்பதனுள் இடித்தல், முழங்குதல் என்ற பொருளில் வந்ததும் காண்க.

(பி - ம்.) 1. எடுத்துடலெயிற்றொடும், இடித்துடனெயிற்றொடும், எயிற்றொடு மெடுத்துடன், எயிற்றொடுமெடுத்தன; அழுங்கும்.

2. கடிகொள்; கற்றுணர்ந்தவரென; வணங்கிச்.
3. சென்னிய; தாழ்விலதாய், தாழ்விலர்தாம்மிதித்திவரப், பீடித்தேறப், இடத்தேறப், தாழ்விலாதவர்மிதித்தேறப், தாவிலர்தாமிதித்தேறப், தளர்விலராய்மிதித்தேறப், தளர்விலார்தாமிதித்திவரப், தாமிதித் தேறப், தளர்விளர்தாமிதித்தேறப், தாமிதித்திவரப்.
4. படிகளாமெனத், படிகடாவெனத்; வரைகிடப்பன, வரைகடப்பன, காணுய். (34)

மயில்களின் பணி

774\. பாந்த டேரிவை பழிபடப் பரந்தபே ரல்குல்
ஏந்து நூன்மணி மார்பின ராகுதிக் கியையக்
கூந்தன் மென்மயில் குறுகின நெடுஞ்சிறை கோலிக்
காந்து குண்டத்தி லடங்கெரி யெழுப்புவ காணுய்.

பாந்தள் தேர் இவை - பாம்பின் படமும் தேர்த்தட்டும் ஆகிய இவை, பழிபட - (உவமையாகாமையால்) பழிக்கப்படுமாறு, பரந்த பேர் அல்குல் - விரிந்த பெரிய அல்குலையுடையாளே, கூந்தல் மெல்மயில் - தோகையையுடைய மெல்லிய மயில்கள், குறுகின - (ஆசிரமத்தினுள்) வந்து, நூல் ஏந்தும் மணி மார்பினர் - முப்புரி நூல் அணிந்த அழகிய மார்பினையுடைய முனிவர்கள், ஆகுதிக்கு இயைய - (தீயினுள்) ஆகுதி கொடுத்தற்குப் பொருந்த, காந்து குண்டத்தில் - வெப்பமுடைய ஓம குண்டத்தில், அடங்கு எரி - அடங்கியுள்ள தீயை, நெடு சிறை கோலி - (தம்முடைய) பெரிய சிறகை விரித்து (வீசி), எழுப்புவ காணுய் - கனன்று எழச் செய்வனவற்றைக் காண்.

மயில்கள் தமக்குப் பொருந்திய பணியைச் செய்கின்றன. பாந்தள், தேர் என்பன ஆகுபெயராய், முறையே பாம்பின் படத்தையும் தேர்த் தட்டையும் குறித்தன.

இப்பாடல் ஒரு பிரதியில் இல்லை; பல அச்சுப் புத்தகங்களிலும், ஏடுகளிலும் இது முன்னே, "வடுவின் மாவகிர்" (769) என்பதனை அடுத்துள்ளது.

(பி - ம்.) 1. படர்ந்தபேரல்குல், பரந்தபொற்குயிலே.
2. நூலணி, நுண்மணி; மார்பினர்க்கு; ஆகுதிக்கியைந்த, ஆகுதிக் கிசையக், ஆவுதிக்கியையக், ஆவுதிக்கியைந்த.
3. மென்மயிற்குறுகின, மென்மயிலருஞ்சிறையானது கோலிக்.
4. குண்டத்திலங்கெரி, குண்டத்தடங்கெரி. (35)

விமானங்களின் வருணனை

775\. அசும்பு பாய்வரை யருந்தவ முடித்தவர் துணைக்கட்
டசும்பு வேய்ந்தவ ரொத்தவர் தமக்குவிண் டருவான்
விசும்பு தூர்ப்பன வாமென வெயிலென விளங்கும்
பசும்பொன் மானங்கள் வருவன போவன பாராய்.

அசும்பு பாய் வரை - நீர்க் கசிவு (பரந்து) பாயும் இம்மலையி னிடத்து, அரு தவம் முடித்தவர் - செய்தற்கரிய தவத்தைத் செய்து முடித்தவர்களும், துணை கண் - இரண்டு கண்களாக, தசும்பு வேய்ந்த வர் ஒத்தவர் தமக்கு - (இரண்டு) நீர்க்கலசங்கள் பொருந்தப்பெற்றவர் போன்றவர்களும் ஆன முனிவர்களுக்கு, விண் தருவான் - (அவர்கள் அடைதற்குரிய) மேலுலகைத் தரும் பொருட்டு, வெயில் என விளங்கும் - சூரியனைப் போல விளங்குகிற, பசும் பொன் மானங்கள் - பசிய பொன்னு லியன்ற (தேவ) விமானங்கள், விசும்பு தூர்ப்பன ஆம் என - ஆகாயத்தை நிறைத்து விடுவன போல, வருவன போவன பாராய் - (இங்கே) வருவனவும் போவனவுமாக உள்ளவற்றைப் பார்.

சித்திரகூட மலையின் பெருமையால், தேவர்களும் விமானத்தில் வந்து அங்கே தங்குதலும் போதலும் உண்டாதலின், விமானங்கள் அங்கே வந்து போதல் உளதாயிற்று; அதனை, அங்கு வாழும் முனிவர் பொருட்டெனக் கற்பிக்கின்றார். முனிவர்கள், இறைவனை எப்போதும் நினைதலால் பேரின்பம் மிகப் பெற்று, இன்பக் கண்ணீர் (ஆனந்த பாஷ்பம்) பொழிந்தவண்ணம் இருப்பாராதலின், அவர்களுடைய கண்களை நீர்க் குடங்களென்றார். 'துணைக் கண் தசும்பு வேய்ந்தவர் ஒத்தவர், என்பதற்கு, கண்களையுடைய இரண்டு குடங்களைப் பொருந்தினவர்களை ஒத்த முனி பத்தினிகளாகிய கற்புடை மங்கையர் எனவும் பொருள் கொள்ளலாம். மானங்கள்: முதற்குறை. இராமபிரான் பிராட்டிக்குக் காட்டிக் கூறியவற்றை இதனுடன் முடித்துக் கொள்கிறார்.

(பி - ம்.) 1. முடித்தவரணைந்த, அணைத்த, முடித்தவரனைத்தும், முடித்தவரனைய, முடித்தவரனையத், முடித்தவன்றுணைக்கண், முடித்தவாயணைக்கண், முடிந்தவரணைந்த, உடைந்தவரணைந்த.
2. வேய்ந்தனரொத்தவர், ஒத்தனர், வேய்ந்தனவொத்தவர், வேந்தன வொத்தன, தந்தவரொத்தனர், ஒத்தவர்; விண்டரற்கு.
3. தூர்த்தனவாமென; வெயிலுக, வெயிறாஃ; இயங்கும், வீங்கும், விசும்.
4. பசும்பொனன்னங்கள்; போவனவருவன. (36)

இராமபிரான் அம்மலைவாழ் வேதியருக்கு விருந்தினனாதல்

776. இனைய யாவையு மேந்திழைக் கியம்பினன் காட்டி
அனைய மால்வரை யருந்தவ ரெதிர்வர வணங்கி
வினையி னீங்கிய வேதியர் விருந்தின னானான்
மனையின் மெய்யெனு மாதவம் புரிந்தவன் மைந்தன்.

மனையில் - இல்லறத்தின்கண் (நின்றே), மெய் எனும் மா தவம் புரிந்தவன் மைந்தன் - வாய்மை காத்தலென்னும் பெருந் தவத்தைச் செய்தவனான தயரதன் புதல்வனாகிய இராமபிரான், இனைய யாவையும் - இத்தன்மையினவான எல்லாவற்றையும், ஏந்து இழைக்கு -

சிறந்த அணிகலன்கள் பூண்ட சீதாபிராட்டிக்கு, இயம்பினன் காட்டி - எடுத்துச் சொல்லிக் காட்டிக்கொண்டு, அனைய மால் வரை - அத் தகைய பெருமை வாய்ந்த அம்மலையின் கண் (உள்ள), அரு தவர் - அரிய தவசியர், எதிர் வர - (தன்னை) எதிர்கொள்ள வர, வணங்கி - (அவர்களைப்) பணிந்து, வினையின் நீங்கிய வேதியர் - இரு வினைத் தொடர்பினின்றும் நீங்கிய வேதம் வல்ல அத்தவசியர்க்கு, விருந்தினன் ஆனான் - விருந்தினனாக அமைந்தான்.

இனைய என்றது, கீழே 741-ஆம் கவிமுதற் கூறியவற்றைச் சுட்டியது. இயம்பினன்: முற்றெச்சம். ஈற்றடியுள், தயரதனது சத்திய சீலத்தைச் சிறப்பித்தார். சித்திரகூட மலையில் வான்மீக முனிவரும் இருந்து இராமபிரான் முதலிய மூவரையும் உபசரித்தாரென முதல் நூல் கூறும் (சருக்கம். 56).

(பி - ம்.) 1. அன்பினன் காட்டி. 2. அருந்தவரெதிரெழ, எதிர்கொள.
3. வினைபைநீங்கிய.
4. மெய்யெனுமாதவன், மெய்யினுமாதவம், புரிந்தவனமைந்தான்.
(37)

கதிரவன் மறைதல்

(கலிவிருத்தம்)

777. மாவிய லுதயமாந் துளவ வானவன்
மேவிய பகையிரு ளவுணர் வீந்துகக்
காவியல் குடவரைக் கால நேமிமேல்
ஏவிய திகிரியி னிரவி யேகினான்.

மா இயல் - மிக்க பெருமை வாய்ந்த, உதயம் ஆம் - உதயகிரியாகிற, துளவம் வானவன் - திருத்துழாய் சூடிய தேவனான திருமால், பகை மேவிய இருள் அவுணர் - (உலகுக்குப்) பகையாக அமைந்த இருட் கூட்டமாகிய அசுரர்கள், வீந்து உக - அழிந்தொழியும்படி, கா இயல் - (அவ்வசுரரைக்) காத்தல் பொருந்திய, குட வரை - மேற்கு மலை (அத்த கிரி)யாகிய, காலநேமி மேல் ஏவிய - காலநேமி என்னும் அசுரன் மேல் ஏவின, திகிரியின் - சக்கராயுதம்போல, இரவி - சூரியன், ஏகினான் - (அம்மலையை) அடைந்தான்.

திருமாலுக்கும் உதயகிரிக்கும் சிலேடையாக அமைந்தது இச் செய்யுள்; திருமால் காலநேமியைத் தன் சக்கரத்தால் அழித்தது போல, உதயகிரியானது அஸ்தமன கிரியாகிற காலநேமிமேல் சூரியனாகிற சக்கரத்தை ஏவியது என்ற வகையில் மேலே பொருள் கூறப் பெற்றது; இனித் திருமாலுக்குச் செல்லுங்கால், மா இயல் உதயம் ஆம் - விலங்கின் (நரசிங்கத்தின்) வடிவாகத் தோன்றிய, துளவம் வானவன் - திருமால், மேவிய......வீந்து உக - தேவர்க்குப் பகையாக அமைந்த இருள்நிற அசுரர் அழிந்தொழிய, கா இயல் காலநேமிமேல் -

(அசுரரைக்) காத்தலுடைய (தலைவனான) காலநேமியின்மேல் ஏவிய திகிரியின் - ஏவிய சக்கரப்படைபோல, இரவி குடவரை ஏகினன் என்க.

இதிற் குறித்த காலநேமியின் வரலாறு: நரசிங்காவதாரம் செய்த திருமாலால் அழிப்புண்ட இரணியனுக்குப் புதல்வனாய், நூறு தலைகளும் நூறு கைகளும் படைத்த காலநேமி என்பவன், தேவாசுர யுத்தத்தில், அசுரர் பக்கம் இருந்து தேவர்களையெல்லாம் வென்று, சத்தியலோகத் தில் போய், பிரமனைத் தேவர்கள் வணங்குவது போலத் தன்னை அசு ரர்கள் வணங்குமாறு சில காலம் வீற்றிருந்து, அதனால் மேலும் செருக்கு மிகுந்து, தன் தந்தையான இரணியனைக் கொன்ற திருமாலையும் வெல்லக் கருதிச் சென்று போர் தொடங்க, திருமால் தன் சக்கராயுதத் தால் அக்கால நேமியின் நூறு தலைகளையும் நூறு கைகளையும் அறுத்துத் தள்ளி அவனை அழித்தனன் என்பது; ஆரணிய. 1149-பார்க்க. உதய கிரிக்குப் பெருமை, மங்கலத் திசையாகிய கிழக்கில் இருத்தலும், பலரும் தொழும் கதிரவன் தன்பால் உதிக்கப் பெறுவதும்பற்றி வந்தது.

(பி - ம்.) 1. மாவியலுதயமாத், உதயத்துத்; துளபவானவன், வாவினன், மாதவன், துழதிவானவன், துளதிவானவன், துளதிமானவன், துளசி வானவன், துளரிவானவன், துணரிவானவன், மன்னுவானவன்.
2. பகையிருளவுணன், பகையிருள்புணர, கானிருளவுணர்; வீய்ந்துகக்; வீங்கிய.
3. காவுயர்.
4. மேவியதிகிரிபோல், ஏவிய்திகிரிபோல், ஏவியநேமிபோல்; இரவி யேறினன், எய்தினன். (98)

மாலைக்கால வருணனை

778. சக்கரந் தானவ னுடலிற் றாக்குற
எக்கிய குருதியிற் பரந்த தெங்கணும்
செக்கரத் தீயவன் வாயிற் றீர்ந்துவே
றுக்கவான் றனியெயி றொத்த திந்துவே.

சக்கரம் - சக்கரப்படை, தானவன் உடலில் தாக்குஉற - அவ்வசுரன் (காலநேமி) உடம்பில் தாக்குதலால், எக்கிய குருதியின் - (உடலி னின்றும்) எழுந்து பரந்த குருதிபோல, செக்கர் எங்கணும் பரந்தது - செந்நிறம் (வானில்) எங்கும் பரவியது; இந்து - சந்திரன், அ தீயவன் வாயில் தீர்ந்து - அக்கொடியவன் வாயினின்றும் நீங்கி, வேறு உக்க - வேறாக உதிர்ந்து கிடந்த, வான் தனி எயிறு ஒத்தது - பெரிய ஒற்றைக் கோரப் பல்லைப் போன்றிருந்தது. ஏ : ஈற்றசை.

சூரியாஸ்தமன காலத்தில் தோன்றிய செவ்வானையும், அதன்பின் தோன்றிய பிறையையும், முன் பாடலோடு தொடர்புபடுத்தி, முறையே காலநேமி உடம்பினின்றும் வழிந்து பரவிய குருதி எனவும், அவனது

வாயினின்றும் உதிர்ந்த ஒற்றைக் கோரப்பல் எனவும் உருவகித்துக் கூறுகின்றார். எக்குதல் - மேலெழுதல், மிகுதல்.

(பா - ம்.) 2. எக்குறு; சோரியிற்; பரந்தவெங்கணும்.
3. தியன; வாயிற்றீந்துவேறு, வாயிற்றீர்ந்தவேறு, வாயிற்றீர்ந்துபோய், வாயின் றீர்ந்துபோய்.
4. உக்கவான் றீயபல்; ஒத்தமினெலாம். (39)

779. ஆனன மகளிருக் களித்த தாமரைப்
பூநனி முகிழ்த்தன புலரி போனபின்
மீனென விளங்கிய வெள்ளி யாம்பல்வீ
வானெனு மணித்தட மலர்ந்த வெங்குமே.

புலரி போனபின் - சூரியன் மறைந்த பிறகு, தாமரை பூ - தாமரைப் பூக்கள், மகளிருக்கு ஆனனம் அளித்த - பெண்களுக்கு முகப் பொலிவைத் தந்தனவாய், நனி முகிழ்த்தன - மிகவும் குவிந்தன; மீன் என விளங்கிய - விண்மீன்கள்போல விளங்கிய, வெள்ளி ஆம்பல் வீ - வெள்ளல்லிப் பூக்கள், வான் எனும் மணி தடம் எங்கும் - ஆகாயம் போன்ற அழகிய தடாகங்களிலெல்லாம், மலர்ந்த - நன்கு விரிந் திருந்தன. ஏ: ஈற்றசை.

இரவில், தாமரைப் பூக்கள் குவிதலும், அல்லிப் பூக்கள் விரிதலு மாகிய இயற்கை நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறுகின்றார். மலர்ந்த தாமரையின் அழகு தமக்கு இலதே என்று மகளிரின் முகங்கள் பொலிவிழந்து நிற்க, இப்போது தாமரை குவிந்தவுடன் தம் பகை மடங்கியது கண்டு பொலிவு பெற்றவையாயின. ஆனனம் -முகத்துக்குப் பெருமையும் பொலிவும்; ஆகுபெயர். புலரி - சூரியன்; விடியலைச் செய்வது என்ற காரணப் பொருள் கொண்டது.

(பா - ம்.) 2. முகிழ்த்தென; அலரிபோனபின்.
3. மீனனி; விளங்கின; வெள்ளை ஆம்பல்கள்.
4. வானென; மணிதடம்; மலர்த்தடம், வானனிகைத்தென; மலர்ந்த தெங்குமே, மலர்ந்ததொக்குமே. (40)

780. மந்தியுங் கடுவனு மரங்க ணோக்கின
தந்தியும் பிடிகளுந் தடங்க ணோக்கின
நிந்தையில் சகுந்தங்க ணீட நோக்கின
அந்தியை நோக்கினு னறிவை நோக்கினான்.

மந்தியும் கடுவனும் - பெண் குரங்குகளும் ஆண் குரங்குகளும், மரங்கள் நோக்கின - (தாம் இரவில் தங்குதற்குரிய) மரங்களை நாடிச் சென்றன; தந்தியும் - ஆண் யானைகளும், பிடிகளும் - பெண் யானைகளும், தடங்கள் நோக்கின - (தாம் இரவைக் கழித்தற்கேற்ற) மலைப் பக்கங்களை நாடிச் சென்றன; நிந்தை இல் சகுந்தங்கள் - பழிப்

பில்லாத பறவை இனங்கள், நீடம் நோக்கின - (தம்) கூடுகளை நாடிச் சென்றன; அறிவை நோக்கினுன் - மெய்யுணர்வை (யாரிடம் உள தென்று) நாடுபவனுகிய இராமபிரான், அந்தியை நோக்கினுன் - அந்திக் காலக் கடன்களை நாடினுன்.

தந்தி - தந்தத்தையுடையது; ஆண் யானை. தடம் - மலையடிப்பக்கம். நீடம் - கூடு; நீளம் எனவும் வரும். நிந்தையில் என்ற அடை, ஆந்தை கோட்டான் முதலியவற்றை விலக்கியது. அந்தி: ஆகு பெயர். தூண்டில்காரனுக்குத் தக்கையிலே கண் இருப்பதுபோல, யாரிடம் மெய்யுணர்வு இருக்கிறது என்று நாடி அருள் புரிபவனுதலின், இராமனுகிய திருமாலை, 'அறிவை நோக்கினுன்' என்ருர்.

(பி - ம்.) 1. மரக்கனேக்கின.
2. தட்டநோக்கின.
3. சிந்தையில்; சகுந்தங்களீளம், சகுந்தமுநீளம், நீடம், நீடல், சகுந்தமுனீடல், சகுனமுநீடம், நீட்டு, சித்தமுநீடம், சுற்றமுநீடல், வியமமுநீடல், பந்தியுநீளம்.
4. அந்தியைநோக்கினன், நோக்கினர்; அறிவைநோக்கினர். (41)

மூவரும் தியானத்தில் அழுந்துதல்

781. மொய்கிளர் நறுமலர் முகிழ்த்த வாஞ்சில
மையறு நறுமலர் மலர்ந்த வாஞ்சில
ஐயனே டிளவற்கு மமுதன் னுளுக்கும்
கைகளுங் கண்களுங் கமலம் போன்றவே.

மொய் கிளர் - அடர்ந்து விளங்குகின்ற, நறு மலர் சில-மணமுடைய பூக்கள் சில, முகிழ்த்த - குவிந்தன; மை அறு நறு மலர் சில - குற்ற மற்ற நல்ல பூக்கள் (வேறு) சில, மலர்ந்த - விரிந்தன; ஐயனேடு - இராமபிரானுக்கும், இளவற்கும் - தம்பிக்கும், அமுது அன்னுளுக்கும் - அமுதம்போல் பவளான சீதாபிராட்டிக்கும், கைகளும் கண்களும்—, கமலம் போன்ற - (குவிந்த) தாமரை போல் ஆயின. ஏ: ஈற்றசை.

பூ வகைகளுள் சில பகலில் மலர்ந்து இரவில் குவிவன; சில இதற்கு மாருனவை; ஆகலின், சில முகிழ்த்த; சில மலர்ந்த என்ருர். 'ஆம்' இரண்டும் அசை. 'கைகளுங் கண்களும் கமலம் போன்ற' என்றது, இரவில் தாமரை குவிதல் போலக் குவிந்திருந்தன என்பதாம். இது, அவர்கள் கைகுவித்துக் கண்மூடிக் கடவுளரைத் தியானித் திருந்தமை குறித்தது.

(பி - ம்.) 1. மொய்புற, மொய்குழை, மொய்தழை; முகிழ்த்ததாம்.
2. மய்புற; மலர்ந்ததாம்.
3. ஐயனெடு, அப்பனேடிளவலுக்கும், அய்யனுமிளவலும்; அமிழ் தனுளுக்கும்; அமிழ்தனுட்கிருங், அணங்கனுளுக்கும்.
4. கைகளுமுகங்களுங்; போன்றதே, பூத்ததே, பூத்தவே. (42)

தம்பி அமைத்த தவச்சாலையை அடைதல்

782. மாலைவந் தகன்றபின் மருங்கி லாளொடும்
வேலைவந் துறைவிட மேய தாமெனக்
கோலைவந் துமிழ்சிலைத் தம்பி கோலிய
சாலைவந் தெய்தினன் றவத்தி னெய்தினன்

மாலை வந்து அகன்றபின் - மாலையாகிய முதல்யாமம் வந்து நீங்கிய பின் (இருள் சூழ்ந்தவுடன்), தவத்தின் எய்தினன் - (தேவரும் பிறரும் செய்த) தவத்தால் (இவ்வுலகில்) தோன்றிய இராமபிரான், மருங்கு இலாளொடும் - நுண்ணிய இடையையுடைய சீதாபிராட்டியோடு, வேலை வந்து - திருப்பாற் கடல் (அங்கு) வந்து, உறைவு இடம் மேயது என - (அவர்கள்) தங்குதற்கு உரிய இடமாக அமைந்தது என்னும்படி, கோலை - அம்புகளை, வந்து உமிழ் சிலை - காற்றைப் போலக் கடிது பொழியவல்ல வில்லை ஏந்திய, தம்பி - இளைய பெருமாள், கோலிய - (திருந்த) அமைத்த, சாலை வந்து எய்தினன் - பர்ணசாலையை வந்து அடைந்தான்.

அச்சாலையுட் குடிபுக்கான் என மேலே 787-ஆம்கவியுட் கூறுவர்.

இராமபிரானும் பிராட்டியும் இனிது தங்குதற்கு ஏற்றவாறு சிந்தித்துத் திருத்தமுற ஒரு பர்ணசாலையை இலக்குவன் அமைத்தானாக, அது இவர்கள் பொருட்டுப் பாற்கடலின் ஒரு பகுதி அங்கு வந்து அமைந்தாற்போன்று இருந்தது என்றவாறு. மருங்கு இலாள் என்றது இடையின் நுண்மை குறித்தது; "மருங்கிலா நங்கையும்" (பால. 593). கோல் - அம்பு. வந்து - காற்று; "வந்தெனக் கந்தன் நூறு கணைதொட" (கந்த: சூர. வதை. 188), தவத்தின் எய்தினன் - தவநெறியில் தலைப்பட்டவன் எனினுமாம்.

ஓர் ஏட்டுப் பிரதியிலும், வை. மு. கோ. அச்சுப் பதிப்பிலும் இப்பாடல்,

"மாலைவந் தகன்றபின் மருங்கி லாளொடும்
மேலவ னிருந்திட விரும்பி யேமனம்
கோலிநற் குணத்திளங் குருசி லாங்கொரு
சாலையை வகுத்தமை சாற்று வரமரோ"

என்றுளது. இளையவன் சாலை வகுத்த வகையைக் கூறத் தொடங்கி அதனை நான்கு பாடல்களாற் கூறி, அத்தகைய சாலையுள் அண்ணல் குடிபுக்கான் (787) என வரும் கதைத் தொடர்புக்கு இது பொருந்துவதாகவே காண்கின்றது. எனினும், பெரும்பான்மையாகவுள்ள பாடமே இங்குக் கொள்ளப்பெற்றது. இதன்படி இங்கே சாலை இருந்த இடத்தை அடைந்தான் எனக் கொள்ளல்வேண்டும்.

(பி - ம்.) 1. மருங்கிலாளொடு, மருங்குலாளொடும், மருங்கின்யாற்றெடும்.
2. மேயதாலெனக்.
4. சாலைவக்தெய்தினன்; தவத்தின்மேயினன், தவத்துமேயினன், தையல்கூடவே. (43)

இலக்குவன் சாலை அமைத்த வகை

783. நெடுங்கழைக் குறுந்துணி நிறுவி மேனிரைத்
தொடுங்கலி னெடுமுக டொழுக்கி யூழுற
இடுங்கலில் கைவிரித் தேற்றி யெங்கணும்
முடங்கலில் வரிச்சுமேல் விரிச்சு மூட்டியே.

நெடு கழை குறு துணி - நெடிய மூங்கில்களைத் தறித்த குறிய துண்டுகளை, நிறுவி - (தூண்களாக) நிறுத்தி, மேல் - அவற்றின்மேல், நிரைத்து - (நீண்ட மூங்கில்களை இறப்பாக) அமைத்து, ஊழ் உற - முறையாக, ஒடுங்கல் இல் - தாழ்வில்லாத, நெடு முகடு ஒழுக்கி - உயர்ந்த முகட்டு வளையைப் போக்கி, எங்கணும் - எல்லாப் பக்கமும், இடுங்கல் இல் - ஒடுங்குதலில்லாத (பருமனுன), கை விரித்து - (மூங்கில்) கை மரங்களை(அளவாக)ப் பரப்பி, ஏற்றி - (இறப்புக்கும் முகட்டுவளைக்கும் பொருந்த) உயர்த்திக் கட்டி, மேல் - அவற்றின் மேல், முடங்கல் இல் வரிச்சு விரிச்சு - வளைவில்லாத வரிச்சுக் கோல்களைப் பரப்பி, மூட்டி - (எல்லாவற்றையும்) இறுகக் கட்டி. ஏ: ஈற்றசை.

இது முதல் ஐந்து பாடல்கள் ஒரு தொடர். முதல் நான்கு பாடல்களும் தொடர்ந்து, ஐந்தாவதில் வரும், 'இன்னணம் இழைத்த சாலையில் குடிபுக்கான்' என்பதனோடு முடியும்.

(பி - ம்.) 1. நெடுங்கழைகுறுந்துணி, நெடுங்கழைகுறுந்தறி, நெடுங்கழைக் குறுந்தறி; நிறுத்திமேல்வளை.
2. முகடொழுக்கியூடுற, முகட்டொழுக்கியூடுற.
3. கைவிசித்தேற்றி, கைவிசித்தெற்றி, கைவிசைத்தேற்றி, கைவிதத் தேற்றி, கைவிரித்தேற்றி, கண்வளைபரப்பி.
4. முடங்கலின்; வரித்துமேல், வரிந்துமேல், வலித்துமேல், விரிச்சுமேல்; விரிச்சுமுடியே, விரித்துமுடியே, விரிந்துமுட்டியே, வரித்து முட்டியே, உரத்திமுட்டியே. (44)

784. தேக்கடைப் படலையிற் செறிவு செய்துபின்
பூக்கிளர் நாணலின் புல்லு வேய்ந்துகீழ்த்
தூக்கிய வேய்களிற் சுவருஞ் சுற்றுறப்
போக்கிமண் ணெறிந்தவை புனலிற் றீற்றியே.

தேக்கு அடை படலையின் - தேக்கிலைப் பரப்பினால், செறிவு செய்து - (மேற் கூரையை) நெருங்க அமைத்து, பின் - அதன்மேல், பூ கிளர் - பூவோடு விளங்குகின்ற, நாணலின் புல்லு வேய்ந்து -

நாணற் புல்லால் மூடி, கீழ் - கீழே, சுற்று உற - சுற்றிலும், தூக்கிய வேய்களின் - (ஊன்றி) நிறுத்திய மூங்கில்களால், சுவரும் போக்கி - சுவரையும் நீள அமைத்து, மண் எறிந்து - (அம்மூங்கில்களின்மேல் படியுமாறு) குழைத்த மண்ணையும் அறைந்து, அவை - அவ்வாறு அமைத்த சுவர்களை, புனலின் தீற்றி - நீர் கொண்டு மணியாசு செய்து. ஏ - ஈற்றசை.

மேற்கூரைக்குரிய ஓலை அங்கே கிடைத்தல் அரிதாகலின், அங்கே எளிதிற் கிடைப்பனவும் உறுதியுடையனவுமான உலர்ந்த தேக்கிலைகளால் கூரையை அமைத்து, அவற்றின்மேல் பாதுகாப்பாகவும் நீர் பொசியாமலும் இருக்க நாணற்புல்லைப் பரப்பி வேய்ந்தான். கூரையின்மேல், நாணல், விழல் முதலிய புற்களை வேய்தலை இன்றும் காணலாம். மூங்கிற்கோல்களை நெருங்க நிறுத்தி அவற்றின்மேல் மண் அறைந்து அமைக்கும் சுவர், தனி மண்சுவரினும் உறுதியுடையதாகும். தீற்றுதல் - பூசி மணியாசு செய்தல்.

(பி - ம்.) 1. தேக்கடைப்படலையின், படலையாற், தேக்குடைப்படலையிற், சேக்கையி னருந்துயிற்; செறிவுசெய்தபின், கூரைசெய்துபின்.
2. புல்லின்; வேய்ந்துகீழ்த், மேய்ந்துகீழ்த், மேய்ந்துகீள், மேய்ந்தழ், வேய்ந்துகான்.
3. வேய்களிற்சுவரின், வேய்களின்சுவரின்; வேயினிற்சுவரும்.
4. புனலிற்றீட்டியே. (45)

785. வேறிடம் வீரற்கு மிதிலை நாடிக்கும்
கூறிய நெறிமுறை குயிற்றிக் குங்குமச்
சேறுகொண் டழகுறத் திருத்தித் திண்சுவர்
ஆறிடு மணியொடு தரள மப்பியே.

(குடிலின் உள்ளே தங்குதற்கு) வீரற்கும் - இராமபிரானுக்கும், மிதிலை நாடிக்கும் - மிதிலை நாட்டவளான சானகிப்பிராட்டிக்கும், வேறு இடம் - வேறு வேறான இடங்களை, கூறிய நெறி - (மனைநூலில்) சொல்லிய விதியின்படி, முறை குயிற்றி - முறையாக அமைத்து, குங்குமம் சேறு கொண்டு - குங்குமம் கலந்த செஞ்சாந்தினால், அழகு உற திருத்தி - (தரையை) அழகாக (மெழுகிச்) செப்பம் செய்து, திண் சுவர் - வலிய சுவர்களில், (உட்புறத்தே) ஆறு இடும் மணியொடு - ஆறுகள் கொணர்ந்து ஒதுக்கிய இரத்தினங்களையும், தரளம் - முத்துக்களையும், அப்பி - (சித்திர வேலைப்பாடு அமையும்வண்ணம்) பதித்து. ஏ : ஈற்றசை.

தவ நெறியில் வாழ்பவராதலின் இராமனுக்கும் சீதைக்கும் தனி அறைகள் அமைத்தான். குங்குமச் சேறு கொண்டு திருத்தியது சுவர்களை என்பார் சிலர். சுவர்களை அழகுபடுத்தினமை வேறே கூறுதலாலும், தரையைப்பற்றிய செய்தி வேறில்லாமையாலும் அது தரைக்கு எனக் கொண்டு உரைக்கப்பெற்றது.

(பா-ம்.) 1. வேறிடமியற்றினன்.
2. கூறினமுறைநெறி, கூறியமுறைநெறி, கூறியமுறையது, கூறின நெறிமுறை.
4. மணியொடும், மணிகொடு, மணல்சொடு, மணலொடு, மணலொடும்; கனகம், களபம்; பம்பியே. (46)

786. மயிலுடைப் பீலியின் விதான மேல்வகுத்
தயிலுடைச் சுரிகையா லருகு தூக்கறுத்
தெயிலுடைக் கழைகளா லியற்றி யாங்குநற்
செயலுடைப் புதுமலர் பொற்பச் சிந்தியே.

மயில் உடை(ய) பீலியின் - மயில் தோகையால், விதானம் மேல் வகுத்து - மேற்கட்டியைச் சிறப்புற அமைத்து, அயில் உடை(ய) சுரிகையால் - கூர்மையையுடைய (தன்) உடை வாளால், அருகு - ஓரங்களில், தூக்கு அறுத்து - நீண்டு தொங்கும் இலை புல் முதலியவற்றை (ஒழுங்குபட) அறுத்து, எயில் உடை(ய) கழைகளால் இயற்றி - சுற்று மதில் போன்ற அரணை (அதற்குத் தகுதி) உடைய மூங்கில்களால் ஆக்கி, யாங்கும் - எவ்விடத்தும், நல் செயல் உடை(ய) புது மலர் - நல்ல அழகுடைய புதிய பூக்களை, பொற்ப சிந்தி - எழில்கொளத் தூவி. ஏ: அசை.

முந்திய மூன்று பாடல்களால் குடிலின் அமைப்பைக் கூறி, இதனுள் அதனை அழகு செய்தலும், புறக்காவலான வேலி இடுதலும் கூறினர். ஆக, இந்நான்கு பாடல்களாலும் குடிலின் அமைப்பும் சிறப்பும் கூறப்பெற்றன.

(பா-ம்.) 1. பீலியால்.
2. அருகுதூக்குறுத்து, அலகுதூக்கறுத்து,
3. எயிலிளங்கழைகளால், கழைகளின், எயிலுடைக்கழைகளின், எயிலிணைக்கழைகளால், எயிலினத்தழைகளால்; இயற்றியாறிடு, யாறிடும், யாற்றிடு; அங்குநற், யாண்டுறக்.
4. செயலுடைப் பொழின்மலர், புதுமணல், பருமணல், புயன்மணல், செயல்மணற்புதுமலர், செயலமர்ப்புதுமணல், புயலுடைப்புதுமலர், படுமணல், பொழில்மலர்ப், பொலமலர்ப், புயலமர்புதுமலர், புயல்மணல்புதுமலர், மணற்புதுமலர், மணப்புதுமலர்; போர்ப்பச் சிந்தியே, பூவுஞ்சிந்தியே. (47)

குடிலுட் குடிபுகுதல்

787. இன்னண மிளையவ னிழைத்த சாலையில்
பொன்னிறத் திருவொடுங் குடிபுக் கானரோ
நன்னெடுந் திசைமுக னகத்து நம்மனோர்
உன்னரு முயிருளு மொக்க வைகுவான்.

இன்னணம் - இவ்வாறாக, இளையவன் இழைத்த சாலையில் - இளைய பெருமான் செய்தமைத்த குடிலில், நல் நெடுதிசைமுகன்

அகத்தும் - நன்மையும் பெருமையும் உடைய பிரமனுள்ளும், நம் அன்னோர் - நம்மைப் போன்றவர்கள், உன்ன அரும் - நினைத்தற்கும் அரிய, உயிர் உள்ளும் - (நுண்ணிய) உயிர்களுள்ளும், ஒக்க வைகுவான் - ஒருபடித்தாகத் தங்கும் (இறைவனான) இராமபிரான், பொன் நிறம் - பொன்னிற மேனியுடைய, திருவொடும் - இலக்குமியான சீதாபிராட்டியுடன், குடிபுக்கான் - குடிபுகுந்தான். அரோ : அசை.

அணுவுக்கும் அணுவாய்ப் பெரிதுக்கும் பெரிதாய் எங்கும் இருப் பவன் இறைவன் என்னும் உண்மையைப் பொதிந்து வைத்து, இராமபிரானை விசேடித்துள்ள அருமை ஓர்தற்கு உரியது. அத்தகைய பெருமை உடையவன், இங்கே பலர் காண ஒரு குடிலுட் புக்கு வைகுவானானான் என்ற கருத்தும் உன்னத் தகும். வைகுவான் குடிபுக்கான் என இயைக்க. இன்னணம் என்றது, இதுகாறும் நான்கு கவிகளிற் கூறிய வகையில் என்றபடி. வைகுவான்: வினையாலணையும் பெயர்.

இலக்குவனைக் கொண்டு ஒரு மானை அடித்துவரச் செய்து, அதனால் வாஸ்து ஹோமம் செய்தபின் பர்ணசாலையில் பிரவேசித்ததாக வான்மீகம் கூறும். காட்டில் கழிக்கவேண்டிய காலம் முழுதும் சித்திர கூட மலையிலேயே தங்கலாமென்று பரத்துவாச முனிவன் கூறினமை இங்கு நினைக்கத் தகும்.

(பி - ம்.) 1. இன்னன;
2. பொன்னியல்; புக்கானவன்.
4. ஒத்துவைகுவான். (48)

பன்னசாலையின் இயல்பு

(வேறு)

788. மாய நீங்கிய சிந்தனை மாமறை
தூய பாற்கடல் வைகுந்தஞ் சொல்லலாம்
ஆய சாலை யரும்பெற லன்பினன்
நேய நெஞ்சின் விரும்பி நிரம்பினான்.

மாயம் நீங்கிய சிந்தனை - மாயை (அவிச்சை) நீங்கிய (ஞானியரின்) மனமும், மா மறை - பெருமை மிக்க வேதமும், தூய பால்கடல் - பரிசுத்தமான பாற்கடலும், வைகுந்தம் - வைகுந்தமும் (அது என்று), சொல்லல் ஆம் - சொல்லத் தக்கதான, ஆய சாலை - அந்தப் பன்ன சாலையில், பெறல் அரு அன்பினன் - (மற்றொருவர்) பெறுதற்கரிய தூய அன்பினை உடைய இராமபிரான், நேயம் நெஞ்சின் - நண்பு நிறைந்த மனத்தோடு, விரும்பி - விருப்பங்கொண்டு, நிரம்பினான் - மன நிறைவு உடையவனானான்.

பரமன் வீற்றிருக்கும் இடமெல்லாம் அப்பர்ணசாலைக்கு உவமை கூறலாம்படி அது சிறப்புற்றிருந்தது; அதனுட் புகுந்த பரமனும் பரம திருப்தியுடையவன் ஆனான். "வேலைவந் துறைவிட மேய தாமெனத், தம்பி கோலிய சாலை" (782) என்றார் முன்னும். கீழ் வருவன இங்கு ஒப்புநோக்கத் தக்கன : "முன்ன மேதுயின் றருளிய முதுபயோ ததியோ, பன்ன காதிபப் பாயலோ பச்சையா லிலையோ, சொன்ன நான் மறைச் சுருதியோ கருதிநீ யெய்தற், கென்ன மாதவம் செய்ததிச் சிறுகுடி லென்றான்" (வி. பா. கிருட்டினன் றூது. 80).

(பி - ம்.) 1. மாயை; சிந்தையின்; நான் மறை.
2. வைகுண்டம்.
3. அன்பினன், அன்பினர்.
4. நேயநெஞ்சில், மேயநெஞ்சில், நெஞ்சின்; விரும்பிகிரப்பினன், விரும்பகிரம்பினன், விரும்பிகிரப்பினர், விருப்பகிரம்பினன், விருப்ப மியம்பினன், விருப்பினிரம்பினன். (49)

இராமபிரான் சிந்தித்தல்

789. மேவு கான மிதிலையர் கோன்மகள்
பூவின் மெல்லிய பாதமும் போந்தன
தாவி லெம்பிகை சாலை சமைத்தன
யாவை யாதுமி லார்க்கியை யாதவே.

மேவு கானம் - (ஒரு காரணத்தால்) நாம் வந்துற்ற காட்டில், மிதிலையர் கோன் மகள் - மிதிலையிலுள்ளார்க்கு அரசனான சனகன் மகளுடைய, பூவின் மெல்லிய பாதமும் - தாமரைப் பூவினும் மென்மை உடைய பாதங்களும், போந்தன - நடந்து வந்தன; தா இல் எம்பி கை - குற்றம் இல்லாத எம் தம்பி இலக்குவனுடைய கைகள், சாலை சமைத்தன - (அரிய) குடிலை அமைத்தன; (ஆதலால்), யாதும் இலார்க்கு - ஏதும் அற்றவர்க்கு, இயையாத யாவை - எய்த இயலாதன யாவுள?—. ஏ : அசை.

இதுவும் அடுத்த இரண்டு செய்யுளும் ஒரு தொடர். இயையாத யாவை என்பது 'என்று சிந்தித்து' என மேல் வருவதனோடு தொடர்ந்து, சோர்கின்றான் (790), 'என்றான் (791) என முடியும். 'ஏதுமற்ற துறவிபோல நாம் வர நேர்ந்த காட்டுக்கு, நம்மை விடாது தொடர்ந்து இவ்விருவரும் வந்ததோடு, இலக்குவன் தன் நிலைக்கு மீறிய தொண்டுகளையும் செய்கின்றான்; இதனை என்னென்பது!' என வியக்கின்றான் இராமபிரான். வசதி உள்ளவர்கள் ஓர் உதவியும் பெறாத நிலையை அடைந்தால் வேண்டியவற்றைத் தம் முயற்சியாற் பெறுவார்கள் என்பது கருத்து.

கீழ்வரும் பாடல் ஒன்று சில சுவடிகளிலும், புறத் திரட்டிலும், காணப்படுகிறது. அது, இப்பாடலுட் கூறியதையே கூறுவதனாலும்,

முன்பின் தொடராத சந்த வேறுபாடு உடைமையாலும், இடைச் செருகலான 'மிகைப்பாடலென்று' கொள்ளப் பெற்றது.

எய்தவின்னல் வந்தபோழ்தி யாவையேனும் யாவரும்
செய்யவல்ல ரென்றுகொள்க கோணெறிக்க ணீங்கிட
மையகண்ணி செய்யபாதம் வல்லவாய வெம்பிதன்
கைகளின்று பன்னசாலை கட்டவல்ல வாயவே.

(பா-ம்.) 1. மேவுங்காதல் : மிதிலையர் கோமகள், கோமளம்.
4. இசையாதவே, இசையாததே.
(பா-ம்) 1. எய்ய : யாவரேனும் யாவையும்.
2. செய்யவல்லவல்லரென்று நீநெறிக்க ணெய்தலான், நீநெறிக் கணேகிட.
3. வல்லவாய மற்றவன்.
4. கட்டும் வண்ணமாயவே. (50)

இராமபிரான் இலக்குவனை வியத்தல்

790. என்று சிந்தித் திளையவற் பார்த்திரு
குன்று போலக் குவவிய தோளினாய்
என்று கற்றனை நீயிது போலெனாத்
துன்று தாமரைக் கண்பனி சோர்கின்றான்.

என்று சிந்தித்து - என்று இவ்வாறு இராமன் நினைத்து, இளையவன் பார்த்து - இளையபெருமானை நோக்கி, இரு குன்றுபோல குவவிய தோளினாய் - இரண்டு மலைகள் போலத் திரண்ட தோள்களையுடையவனே, நீ—, இதுபோல் என்று கற்றனை - இது போன்ற தொழிலை எப்போது கற்றுக்கொண்டாய், எனா - என்று சொல்லி, தாமரை கண் - தாமரை மலர்போன்ற தன் கண்களில், துன்று பனி சோர்கின்றான் - நிறைந்த நீரை வடிக்கின்றவனாய்.

சோர்கின்றான், என்றான் என அடுத்த பாடலோடு இயைந்து முடியும். 'முன்பு செய்தறியாத ஒரு தொழிலை நீ ஒருவனாகவே நின்று திறம்படச் செய்திருக்கின்றாயே! இஃது உனக்கு எவ்வாறு இயைந்தது?' என்று கூறி வியக்கின்றான் இராமபிரான்.

(பா-ம்.) 1. என்றுபின்னுமிளையவற் சொல்லுவான்.
2. குன்றுபோலும; குன்றம்போலக்; குலவிய, குலாவிய, தோளினன், தோளிய.
3. நீயிதுபோலென்றான், நீயிதுபேசெனத், நீயிதுபோயெனாத், நீயிவை தானெனாத், நீயிதுபோலென்னத், நீயிதுபோயென்றான், கற்றனை போவிதுநீயென்றான், கற்றனை போவிதுநீயென்றான், கற்றனை போவிவைதானெனாத். (51)

791. அடருஞ் செல்வ மளித்தவ னாணையிற்
படரு நல்லறம் பாலித் திரவியிற்
சுடரு மெய்ப்புகழ் சூடின னென்பதென்
இடரு னக்கிழைத் தேனிங்ங னென்றான்.

(இராமன்), அடரும் செல்வம் - (தன்னைச் சேர்தற்குரிய) பெருஞ் செல்வத்தை, அளித்தவன் - (பரதனுக்குக்) கொடுத்த தந்தையின், ஆணையின் படரும் - கட்டளையின் வழிச் செல்லுதலாகிய, நல் அறம் பாலித்து - நல்ல தருமத்தைக் காத்து, இரவியின் சுடரும் - சூரியனைப் போல விளங்குகிற, மெய் புகழ் சூடினன் - உண்மையான புகழைத் தரித்தான், என்பது - என்று (உலகோர்) என்னைப் புகழ்ந்து சொல்வது, என் - என்ன பொருளுடையது? இங்ஙன் - இவ்வகையால், நான் உனக்கு இடர் இழைத்தேன் - நான் உனக்கு (மிக்க) துன்பம் செய்தவனாகிறேன், என்றான் - என்று (இலக்குவனிடம்) கூறினான்.

'நான் தந்தை சொல் கடவாது காட்டுக்கு வந்ததனால் உலகம் என்னைப் புகழுமாயினும், அஃது உண்மையான புகழாகாது; தன்னால் பிறருக்குத் துன்பமின்றி ஒருவன் எய்தும் புகழே உண்மையான புகழாகும்; நானோ உனக்குப் பெருந்துன்பம் தருபவனாக அமைகின்றேன்' என வருந்திக் கூறினானென்க.

(பி - ம்.) 1. செல்வத்தெந்தைதன், செல்வத்தனெந்தைதன், செல்வத்தென்னையனது, செல்வத்தடுத்தையன், செல்வத்தடுத்தவன், அடறருஞ் செல்வனெந்தைதன்; ஆணையால்.
2. பாவித்து, பாரித்து.
3. சுடருமெய்ப்பொருள்; சூடினென்.
4. இடருனக்கிழைத்தேனெடுகாள், இழைத்தேனிங்குகான். (52)

இலக்குவன் வருந்திக் கூறல்

792. அந்த வாய்மொழி யைய னியம்பலும்
நொந்த சிந்தை யிளையவ னோக்கினால்
எந்தை காண்டி யிடரினுக் கங்குரம்
முந்தி வந்து முளைத்ததன் றேயென்றான்.

ஐயன் - இராமபிரான், அந்த வாய்மொழி இயம்பலும் - அந்த வார்த்தையைச் சொன்னவளவில், இளையவன் - (அது கேட்ட) இலக்குவன், நொந்த சிந்தையன் - மனம் நொந்தவனாய், நோக்கினால் - (உண்மையாகப்) பார்த்தால், இடரினுக்கு அங்குரம் - (என்பால்) துன்பம் விளைதற்குரிய முளை, முந்தி வந்து முளைத்தது அன்றே - முந்தியே வந்து தோன்றிய ஒரு நிகழ்ச்சியன்றோ? எந்தை - என் தந்தையே, காண்டி - (அதனை) நோக்குவாயாக, என்றான் —.

'உனக்குத் துன்பம் விளைக்கின்றேனே' என்று இராமபிரான் வருந்திக் கூறியது கேட்ட இலக்குவன், 'என் ஐயனே, இஃது எனக்குத் துன்பமன்று; தேவரீருக்குத் தொண்டு செய்தலே எனக்கு இன்பு

மாவது; என் மனத் துன்பத்துக்குக் காரணம், தேவரீர் பதவி துறந்து இங்கு வந்ததேயன்றிப் பிறிதன்று; இந்நிலையில் தேவரீரைப் பார்த்துக் கொண்டிருப்பதே என் துன்பத்தின் மேல் விளைவாகும்' என்றான். இதனை உட்கொண்டே, 'இடரினுக் கங்குரம் முந்தி வந்து முளைத்த தன்றோ என்றது. இத்தொடருக்கு, 'தேவரீர் மூத்தமகனாகத் தோன்றிய தன்றோ துன்பத்துக்குக் காரணம்?' எனப் பொருள் கூறுதலும் உண்டு.

(பி - ம்.) 2. நோக்கினான், நோக்கியான், இளவலு நோக்கினால்.
3. காண்டியிடருனக்கு, காட்டியிடரினுக்கு.
4. முந்தவந்து; முளைத்தனன்றோ. (53)

இராமன் எண்ணுதல்

793. ஆக செய்தக்க தில்லை யறத்தினின்
றேக லென்ப தரிதென்று மெண்ணினான்
ஓகை கொண்டவ னுள்ளிடர் நோக்கினான்
சோக பந்தந் துடைப்பரி தாலெனா.

ஆக - (இலக்குவன் மேற்கண்டவாறு) கூறினானாக, ஓகை கொண்டவன் - (தனக்குப் பணிவிடை செய்தலில்) மகிழ்ச்சிகொண்ட இலக்குவனது. உள் இடர் நோக்கினான் - தனக்காகக் கொண்ட மனத் துன்பத்தை உணர்ந்த இராமபிரான், எண்ணினான் - (அது குறித்துச்) சிந்தித்து, சோகம் பந்தம் - (இவன் கொண்டுள்ள) சோகப் பிணிப்பு, துடைப்பு அரிது - போக்குதல் அரிதாகும்; அறத்தின் நின்று ஏகல் என்பது - (நாம் கொண்ட விரதமாகிய) தருமத்தினின்றும் (இவன் பொருட்டு) விலகுவதென்பதும், என்றும் அரிது - என்றும் இயலாதது; செய் தக்கது இல்லை - (இப்போது வேறு) செய்யத் தக்கதொன்றும் இல்லை; எனா - என்று கருதி. ஆல்—அசை.

இதுமுதல் மூன்று பாட்டுக்கள் குளகம். இதில் எனா என நின்றது; மேற்பாட்டோடும் மூன்றாவதனோடும் தொடர்ந்து, அதில் வரும், 'தம்பியைத் தேற்றி நோற்றிருந்தனன்' என்பதனோடு முடியும். நோக்கினான் : வினையாலணையும் பெயர். எண்ணினான்: முற்றெச்சம்.

(பி - ம்.) 1. ஆகச்செய்தக்க.
2. ஏகலென்றும்; எண்ணிப்பின்.
3. கொண்டவனுன்னிடர், கொண்டவனின்னிடர், கண்டிலனுன்னிடர்; நோக்கினன், நோக்கியென், நோக்கிப்பின், நோக்கியே.
4. சோகபங்கம், சோகபந்தி; துடைப்பரிதாலென்றான், தொடர்வரிதாலென்றான். (54)

இராமன் கூறுதல்

794. பின்னுந் தம்பியை நோக்கிப் பெரியவன்
மன்னுஞ் செல்வத்திற் குண்டு வரம்பிதற்
கென்ன கேடுண்டிவ் வெல்லையி லின்பத்தை
உன்னு மேல்வரு மூதியத் தோடெனா.

பெரியவன் - இராமபிரான், பின்னும் - மீண்டும், தம்பியை நோக்கி- இலக்குவனைப் பார்த்து, மன்னும் செல்வத்திற்கு - (ஒருவரிடம் வந்து) பொருந்தும் செல்வத்துக்கு, வரம்பு உண்டு- ஒரு வரையறை (முடிவு) உண்டு; இதற்கு - (இப்போது நாம் மேற்கொண்டுள்ள) இத்தவநெறி வாழ்க்கைக்கு, என்ன கேடு உண்டு? - (கேடில்லை); எல்லை இல் இவ் இன்பத்தை - முடிவில்லாத இந்த இன்பத்தை, மேல் வரும் ஊதியத் தோடு - மறுமையில் வரத்தக்க பெரும் பயனோடு, உன்னு - எண்ணிப் பார், எனு - என்று, தம்பியைத் தேற்றி என மேல் வருவதனோடு தொடரும்.

தம்பியை ஒருவாறு தேற்றக் கருதிய இராமபிரான், அவனை நோக்கி, 'நீ பெரிதாகக் கருதும் அரசச் செல்வத்துக்குப் பகைவராலும் வேறு பல வகையாலும் அழிவுண்டு; அது மறுமையில் பயன் தருவதும் அன்று. அதனால் அது துன்பத்திற்கு இடமானது: இத்தவச் செல்வமோ என்றும் (நாமாகக் கைவிட்டாலன்றி) அழியாதது; மறுமையிலும் வீட்டின்பமாகிய பேருதியத்தை அளிக்கவல்லது; இதனைச் சிந்தித்துப் பார்' என்று எடுத்துக்காட்டிக் கூறினான்.

பெரியவன் - மூத்தவன்; எவற்றிலும் பெரியவன். இன்பம் தரும் தவவாழ்க்கையை இன்பம் என்றான்; இதனால், துன்பந்தரும் அரச வாழ்க்கையின் நீங்கி, இருமையிலும் இன்பந் தரும் இத்தவ வாழ்க்கை யெய்தியதுபற்றி நீ மகிழ்தலின்றி வருந்துதல் தகாது என்றவாறும்.

இதன் பின் ஒரு பாட்டுச் சில சுவடிகளில் காணப்படுகிறது:

தினைத்துணை வயிறிலாச் சிற்றெ றும்புகள்
வனத்திடைக் கரிகளை வருத்தி வாழ்வன
அனைத்துள வுயிர்களும் யாவு மங்ஙனே
மனத்திடர் நீங்கின ரில்லை மன்னனே.

(பி - ம.) 2. மன்னுசெல்வத்திற்கு, மன்னுஞ்செல்வத்துக்கு.
3. என்னை; இவ்வெல்லையின், இவ்வேலையின்.
4 உன்னின்மேல்வரும்,
(பி - ம்.) 1. தினைத்தின.
2. கரிகளும் வருந்த. (55)

795. தேற்றித் தம்பியைத் தேவருங் கைதொழ
நோற்றி ருந்தன னேன்சிலை யோனப்பால்
ஆற்றன் மாதவ னணையிற் போனவர்
கூற்றி னுற்றது கூறலுற் றுமரோ.

தம்பியை தேற்றி - இலக்குவனைத் தெளிவுறுத்தி, தோன் சிலையோன் - வலிய வில்லையுடைய இராமபிரான், தேவரும் கைதொழ-

தேவர்களும் தன்னை அஞ்சலி செய்து வணங்கும்வண்ணம், நோற்று இருந்தனன் - விரதம் மேற்கொண்டு (சித்திரகூடத்தில்) இருந்தான்; அப்பால் - மேலே, ஆற்றல் - பெரு வலிமையையுடைய, மாதவன் ஆணையால் - பெருந்தவசியான வசிட்டனது கட்டளையால், போனவர் கூற்றின் - கேகய நாட்டுக்குப் போன தூதுவர் பக்கல், உற்றது - நிகழ்ந்ததை, கூறல் உற்றாம் - சொல்லலுற்றோம். அரோ : அசை.

முன்பாட்டில் 'எனா' என நின்றது, 'தம்பியைத் தேற்றி' என்பதனோடு தொடர்ந்து, நோன்சிலையோன் இருந்தான் என்பதனோடு முடியும். இஃது இவ்வாறாக, மேலே, முன்னர் அயோத்தியில் நிகழ்ந்தவற்றைக் கூறுவோம் என்று முன் கதையைத் தொடர்கின்றார். இதனோடு இப்படலம் முடிவுறுகின்றது.

(பி - ம்.) 2. இப்பால்.
3. ஆற்றமாதவன், ஆற்றிமாதவன், ஆற்றின்மாதவன், ஆற்றுமாதவன்.
4. கூற்றினுற்றவர், கூற்றிலுற்றது. (56)

சித்திரகூடப் படலம் முற்றும்.

10. பள்ளிபடைப் படலம்

பள்ளியின்பாற் படுத்தலைக் கூறும் படலம் என இதன் பொருள் விரியும். தசரதன் உடலை ஈமப்பள்ளி (சிதை)யில் வைத்து எரியூட்டுதல் முதலிய ஈமக்கடன்கள் நிகழ்ந்தமை கூறுவது இப்படலம். பள்ளி - ஈமப்பள்ளி; படை - படுத்தல். 'பள்ளி படுத்தல்' என்ற வழக்குண்மை, "எந்தாய் வெறுநிலத்துச் சேர்தியோவென் றிணைந்திரங்கிப் பள்ளி படுத்தார்களே" (சீவக. 292) என்பதனுல் அறியலாம். இச்செய்தி 923-ஆம் கவியுட் கூறப்படும். பழைய அச்சுப் புத்தகங்களிலும் சில ஏட்டுப் பிரதிகளிலும் இப்படலப் பெயர் 'பள்ளியடைப்படலம்' என்றுள்ளது. 'பள்ளியிடைப் படலம்' எனவும் சில பிரதிகளில் காணப் படுகின்றது, ஒரு பிரதியில், முதலில் 106 பாடல்கள் 'பரதன் நகர்புகு படலம்' என்ற தலைப்பிலும், எஞ்சிய 26 பாடல்கள் 'தகனஞ்செய் படலம்' என்ற தலைப்பிலுமாக, இரண்டு பகுதிகளாய் உள்ளது. முதற்பகுதியின் இறுதியில் ஓர் அதிகப் பாடலும் இந்தப் பிரதியில் காணப்படுகின்றது.

தூதுவர் பரதனுக்குத் தம் வரவு உணர்த்தல்

(கலிவிருத்தம்)

796. பொருவி றூதுவர் போயினர் பொய்யிலார்
இரவு நன்பக லுங்கடி தேகினர்
பரதன் கோயிலுற் றார்படி காரிரெம்
வரவு சொல்லுமின் மன்னவற் கேயென்றார்.

போயினர் - (அயோத்தியினின்றும் வசிட்ட முனிவன் ஏவலால் கேகயநாடு குறித்துப்) போனவர்களான, பொரு இல் தூதுவர் -தமக்கு ஒப்பில்லாத (திறமைமிக்க) தூதர்கள், பொய் இலார் - (தம் பணியில்) பொய்ம்மை இல்லாதவராய், இரவும் நன்பகலும் - இரவும் பகலுமாக (விடாது), கடிது ஏகினர் - விரைவாகச் சென்று, பரதன் கோயில் உற்றார் - பரதன் தங்கியிருந்த மாளிகையை அடைந்து, படிகாரிர் - வாயில் காவலர்களே, மன்னவற்கு எம் வரவு சொல்லுமின் -பரதனாகிய அரசகுமரனுக்கு (அயோத்தியினின்றும் வந்துள்ள) எமது வருகையைத் தெரிவியுங்கள், என்றார்—.

தூதருக்குரிய உத்தம இலக்கணங்கள் அமையப் பெற்றவராகலின் 'பொருவில் தூதுவர்' என்றும், பரதனை விரைவில் அழைத்துவர

வேண்டியிருத்தலின், அப்பணியில் சிறிதும் தாழ்த்தலின்றி உண்மையோடு விரைந்து சென்றமை தோன்ற, 'பொய்யிலார், இரவும் நன்பகலும் கடிது ஏகினர்' என்றும் அவர் தன்மை கூறினர். "போனரவருங் கேகயர்கோன் பொன்மா நகரம் புகவெய்த" (610) என முன்னே கூறியதன் அநுவாதம் இது. போயினர்: வினையாலணையும் பெயர்; எழுவாய். ஏகினர், உற்றார் என்பன முற்றெச்சம். படிகாரர் - வாயில்காவலர்; விளியேற்றது. மன்னவற்கே: ஏ, அசை.

(பி - ம்.) 1. புரியும் மாதவர்; போயினர், போனவர், போயபின்பொய்யிலார், போனவர்பொய்யிலார் ஏயினபோயினர், ஏவினர் போயினர்.
3. கோயில்புக்கார் படிகாரரெம், கோயிலுற்றார் படிகாரெம, படர் தாரிரெம்.
4. வரவுசொல்லுதிர், வரவுஞ்சொல்லுமின்; மன்னவற்கென்கின்றார், மன்னவற்கென்றனர், மன்னவர்க்கேயென்றார், மன்னவர்க்கென்கின்றார். (1)

பரதன் தூதுவர்பால் தந்தையின் நலத்தைக் கேட்டல்

797. தூதர் வந்தன ருந்தைசொல் லோடெனக்
காதன் முந்திக் களிக்கின்ற சிந்தையான்
போது கென்னவுட் புக்கனர் கைதொழத்
தீதி லன்கொ றிருமுடி யானென்றான்.

உந்தை சொல்லோடு - உங்கள் தந்தை அனுப்பிய செய்தியோடு, தூதர் வந்தனர் என - தூதுவர் வந்துள்ளனர் என்று (வாயில் காவலர்) அறிவிக்க, காதல் முந்தி - ஆசைமிக்கு, களிக்கின்ற சிந்தையான் - மகிழும் மனமுடையவனான பரதன், போதுக என்ன - அவர்கள் வரட்டும் என்று கட்டளையிட, உள் புக்கனர் கைதொழ - (தூதர்) உள்ளே வந்து வணங்க, (அவர்களை நோக்கி), திருமுடியான் - சக்கரவர்த்தி, தீது இலன்கொல் என்றான் - தீதின்றி (நலமாக) இருக்கின்றானா என்று வினவினன்.

தந்தை முதலியோர் நலன் அறிதலில் பரதனுக்குள்ள ஆவலையும் விரைவையும் புலப்படுத்தச் சுருங்கக் கூறுகின்றார். சொல் - செய்தி; செய்தி கொண்ட ஓலையுமாம். போதுகென்ன: தொகுத்தல். புக்கனர்: முற்றெச்சம். கொல் : வினாப்பொருளது. 'தந்தை வலியனோ' எனற்பாலதைத் 'தீதிலன் கொல்' என்றான் என்றது குறிப்பு மொழி.

(பி - ம்.) 1. தூதுவந்தனர், தூதுவந்தன; நுந்தைசொல்லோடெனக், உந்தை சொல்லோடெனக்.
2. முந்தக்.
3. போதுகென்னெனப், போதுகென்கெனப், போதுகென்னவப், போதுகென்னவட், போதுகென்னவிற், போதுகேங்கெனப், போதுகென்றனன்; புக்கவர் கைதொழாத்.
4. திருமுடியோன், (2)

இராமலக்குவரின் நலத்தை வினுதல்

798. வலிய னென்றவர் கூற மகிழ்ந்தனன்
இலைகொள் வேலெம் பிரானிளங் கோவொடும்
உலைவில் செல்வத்த னேவென வுண்டெனத்
தலையி லேந்தினன் ருழ்தடக் கைகளே.

வலியன் என்று அவர் கூற - (தந்தை) வலிமையாக (திடமாக) இருக்கின்றான் என்று அத்தூதுவர் கூற, மகிழ்ந்தனன் - மகிழ்ந்தவனாய், இலைகொள் வேல் எம்பிரான் - இலைபோலும் வேலினையுடைய எம் தலைவன் (இராமபிரான்), இளம் கோவொடும் - இளைய பெருமானுடனே, உலைவு இல் செல்வத்தனே என - கெடுதலில்லாத நலமாகிய செல்வமுடையவனாயிருக்கின்றானே என்று வினவ, உண்டு என - அவ்வாறே உள்ளது என்று (தூதுவர்) கூற, (பரதன்) தாழ் தட கைகள் - நீண்ட பெரிய தன் கைகளை, தலையில் ஏந்தினன் - தலைமேற் குவிந்து அஞ்சலி செய்தான். ஏ: ஈற்றசை.

இங்கும், நலம் வினவுதலில் 'உலைவில் செல்வத்தனே' என்ற தொனி, தீங்கைக் குறிப்பாக உள்ளடக்கியது. தந்தையையும் தமையனையும் திசைநோக்கித் தொழுதான் பரதன். சுருங்கக் கூறல் இதிலும் அமைந்துள்ளது. வலியன் : 1124-பார்க்க, அயோத்தியில் நிகழ்ந்தவற்றை உள்ளவாறு இப்போது கூறுதல் உரியதன்றாகலின், தூதுவர் தாமாக ஏதும் கூறாமல், பரதன் வினவுக்கு, வலியன், உண்டு என்று மாத்திரம் விடை கூறியதாக அமைந்துள்ளதன் நயம் ஓர்க. "பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்குமெனின்" என்பது மறைமொழியன்றோ?

(பி - ம்.) 1. வலியனென்றிவர், வலிய னெஞ்சினர்.
2. இலைகொள்பூணிளங்கோனெம்பிரானொடும்.
3. தலையினேந்தினன், தலையினேத்தினன், தலையினேந்திய; தாழ்தடக்கையனே, கையரோ, தாட்டடங்கையரோ, தாள்தடக்கைகளே, தாமரைக் கைகளே, தாமரைக் கையினன். (3)

தூதுவர் திருமுகம் கொடுத்தல்

799. மற்றுஞ் சுற்றத்து ளார்க்கும் வரன்முறை
உற்ற தன்மை வினவி யுவந்தனன்
இற்ற தாகு மெழுதரு மேனியாய்
கொற்ற மன்னன் றிருமுகங் கொள்கென்றார்.

மற்றும் - வேறும், சுற்றத்து உள்ளார்க்கும் - சுற்றத்தினரான அனைவர்க்கும் உற்ற தன்மை - பொருந்தியவற்றை, வரல் முறை வினவி - முறையாகக் கேட்டறிந்து, உவந்தனன் - மகிழ்ந்தான்! (அதன்பின் தூதுவர்) எழுதரு மேனியாய் - ஓவியத்தும் எழுத அரிய திருமேனியையுடைய அண்ணலே, கொற்றம் மன்னன் திருமுகம் -

வெற்றியுடைய சக்கரவர்த்தியின் திருமுகம், இற்றது ஆகும் - இது வாகும், கொள்க என்ருர்—இதனைப் பெற்றுக்கொள்க என்று நீட்டினர்.

பரதன், முதலில் தலைமையுடைய மூவர் நலனையும், பின்பு மற்றெல்லாருடைய நலனையும்பற்றி முறையே வினவ, தூதுவரும் ஏற்றவாறு விடையளித்தபின், திருமுகத்தை நீட்டினர்.

இற்றது - இது என்னும் பொருளுடையது; 'இறந்து பட்டது' என்ற குறிப்புப் பொருளும் தொனித்தல் காண்க. எழுதரு, கொள்கென்ருர்: தொகுத்தல். பரதனும் இராமபிரானே போல்பவனுகலின், எழுதரு மேனியான் அவன்; "தீட்டருமேனி மைந்தன்" (1030) என்பர் பின்னும். ஓலையைத் திருமுகமென்றல் மங்கல மரபு.

(பி - ம்.) 1. சுற்றத்துள்ளார்க்கும், சுற்றத்துளார்க்கு,
2. வினவியுவந்தபின், வினவியுவந்தனன், யுகந்தனன், உவந்தவற்கு, உவந்துபின், வினவியுகந்தவற்கு, உகந்தனன், உவர்ந்தவர்க்கு, விராவியுவந்தபின், விராவி யுவந்தனன்.
3. எழிலுறுமேனியாய், எழிறருமேனியாய், எழுதிருமேனியாய்; என்றேயினியாரவர், என்றெண்ணியராயவர்.
4. கொற்றவன்றன்; கொள்ளென்ருர், கொள்கென்ருன். (4)

பரதன் திருமுகம் வாங்கித் தலையிற் சூடுதல்

800. என்று கூறலு மேத்தி யிறைஞ்சினன்
பொன்றி ணிந்த பொருவி றடக்கையான்
நின்று வாங்கி யுருகிய நெஞ்சினன்
துன்று நாண்மலர்ச் சென்னியிற் சூடினன்.

என்று கூறலும் - (கொள்க) என்று (தூதுவர்) கூறிய அளவில், பொன் திணிந்த - பொன்னுலியன்ற அணிகலன்கள் செறிந்த, பொரு இல் - ஒப்பில்லாத, தட கையான் - பெரிய கைகளையுடைய பரதன், ஏத்தி இறைஞ்சினன் - (அத்திருமுகத்தைத்) துதித்து வணங்கி, நின்று வாங்கி - எழுந்து நின்று வாங்கி, உருகிய நெஞ்சினன் - (அன்பால்) நெகிழ்ந்த மனத்தோடு, நாள் மலர் துன்று சென்னியில் சூடினன் - அன்றலர்ந்த பூக்கள் நிறைந்த தலைமேற்கொண்டான்.

தந்தையின் திருமுகமாதலின், மரியாதையோடு எழுந்து நின்று அதனை வாங்கித் தலைமேற்கொண்டான். பொன்: ஆகுபெயர். சூடுதல்-தலைமேற் கொள்ளுதல்.

(பி - ம்.) 1. ஏத்தியிறைஞ்சினன், இறைஞ்சியே, ஏந்தியிறைஞ்சினன், இறைஞ்சினன்.
2. பொன்றிகழ்ந்த, பொன்றணிந்த; பொருவிறடக்கையால், பொருவிற்றடக்கையால், பொருவிற்றடக்கையான்.
3. உருகியநெஞ்சினுல், நெஞ்சினன், உருகினநெஞ்சினன்.
4. துன்றுதார்மலர்ச், துன்னுநாண்மலர்ச், நன்றுநாண்மலர்ச், துன்றுதார்மலர், (5)

திருமுகத்தைப் படித்தறிந்து தூதுவர்க்குப் பரிசு வழங்குதல்

801. சூடிச் சாதனந் தோற்றுடைச் சுற்றுமண்
மூடுந் தோட்டின் முடங்க னிமிர்த்தனன்
ஈடு நோக்கிவந் தெய்திய தூதர்க்குக்
கோடி மேலு நிதியங் கொடுத்தனன்.

சூடி - தலைமேல் கொண்டபின், சுற்றும் - (வாய்ப்புறத்தைச்) சுற்றிலும், சாதனம் தோற்று உடை(ய) - இலச்சினை (முத்திரை) தோற்றுதலுடைய, மண்மூடும் - மண்ணால் மூடப் பெற்ற, தோட்டின் - ஓலையின், முடங்கல் நிமிர்த்தனன் - சுருளைப் பிரித்து, ஈடு நோக்கி - (அதன்) உள்ளீடாகிய செய்தியை உணர்ந்து, வந்து எய்திய தூதர்க்கு - (அவ்வோலையுடன்) வந்தடைந்த தூதுவர்க்கு, நிதியம் - பொற்குவையை, கோடி மேலும் கொடுத்தனன் - ஒரு கோடிக்கு மேலும் (பரிசாகக்) கொடுத்தான்.

ஓலை எழுதி அனுப்பும்போது, எழுதின ஓலையைச் சுருளாக இறுகச் சுற்றி, வாய்ப்புறத்தில் மண் அப்பி, அதன்மேல் முத்திரையைப் பதித்து (இந்நாளில் அரக்கு முத்திரையிடல் போல) அனுப்புவது வழக்கம். முடங்கல் என்பது, சுற்றுதலுடைமையால் வந்த காரணக்குறி. அவ்வாறு வந்த முடங்கலைப் பிரித்துப் படித்து நோக்கினன் என்க. ஈடு- உள்ளீடு; உள்ளே அடங்கிய செய்தி; அஃது, 'உன்னால் நிறைவேற வேண்டிய அவசர காரியம் இருப்பதனால் உடனே புறப்பட்டு வருக' என்பது. காரியம் எதுவாயினும், இராமபிரானையும் தந்தையையும் காணும் வாய்ப்பு நேர்ந்தமைபற்றிப் பரதன் மகிழ்வெய்தித் தூதுவர்க்கு மிக்க பொன்னைப் பரிசாக வழங்கினான். கோடி என்றது, மிகுதி குறித்தது; புத்தாடை எனலுமாம். உவகைச் செய்தி கொணர்ந்தோர்க்குப் பரிசு வழங்குதல் மரபு. இராமபிரான் திருமணச் செய்தி கொணர்ந்த மிதிலைத் தூதுவர்க்குத் தயரதன் வழங்கினமையும், முடிசூட்டுச் செய்தி சொன்ன மந்தரைக்குக் கைகேயி வழங்கினமை யும் காண்க. முத்திரையிடப்பட்ட ஓலையை, "மண்ணுடை. முடங்கல்" என்பர் (சிலப்: 13 : 76). சாதனம் - முத்திரை. தோடு - ஏடு.

(பி - ம்.) 1. சந்தன தோய்த்துடைச், தோய்த்துடை. தொற்றுடைச், சாதனச் சாற்றேடைச், சொற்றுடைச், சுற்றுடைச், சொற்றேடைச், சாதனஞ் சொற்றுடைச், தொற்றுடைச், தோலுடைச், சாதனத்தொற்றுடை, தோட்டுடைச்; மு. சூடிச் சாதனக்தோட்டுடைத்துச் சுருள்.
2. முடுதோட்டின், தோட்டு, முடல்தோட்டின், முடித்தோட்டின்; நிமிர்த்ததன்.
3. நீடுநோக்க, நீடிநோக்கி.
4. மேலுநிதியங்கொடுத்தரோ, மேல்நிதியங் கொடுத்தானரோ. (6)

தமையனைக் காணலாம் என்று பரதன் மகிழ்தல்

802. வாணி லாநகை தோன்ற மயிர்புறம்
பூண மீதுயர் காதலிற் பொங்கினன்
தாணி லாமலர் தூவினன் றம்முனைக்
காண லாமெனு மாசை கடாவவே.

தம்முனை - தமையனான இராமபிரானை, தாள் - (அவன்) திருவடிகளில், நிலா(வு)ம் மலர் தூவினன் காணலாம் எனும் - விளங்கும் மலர்களைத் தூவி (அருச்சித்து)க் காணலாம் என்ற, ஆசை கடாவ - ஆசை உந்துதலால், வாள் நிலா நகை தோன்ற - மிக்க ஒளி பொருந்திய பற்கள் (சிரிப்பினால்) வெளித்தோன்றவும், மயிர் புறம் பூண - மயிர் சிலிர்க்கவும், மீது உயர் காதலின் - மிக உயர்ந்த உள்ளன்பினால், பொங்கினன் - மகிழ்ச்சி மேலிட்டான்.

பரதன் என்ற எழுவாய் வருவிக்க.

பரதனுக்குத் தந்தையினும் பார்க்க இராமபிரான்பால் உள்ள ஈடுபாடு இதனால் புலனாகும். மகிழ்ச்சி மேலீட்டால் மயிர்க்கூச்செறிதல் இயல்பு. பெரியோரையும் கடவுளரையும் காணுங்கால் அவர்களை அருச்சித்தல் முறையாகும். மகிழ்ச்சி மிகுதியால் பற்கள் வெளித் தான்றச் சிரித்தான். தூவினன்: முற்றெச்சம்.

(பி - ம்.) 1. வானிலா; மயிர்ப்புறம்.
2. பூணவானுயர், பூணவக்துளம், பூனும் வானுயர், பூனுமீதயர்; பொங்கினான்.
3. தூவினன்றன்முனைக், சிந்தினன்றம்முனைக்.
4. காணலாவதோர்; கடாயவே. (7)

பரதன் அயோத்திக்குப் புறப்படுதல்

803. எழுக சேனையென் றேவின னெய்தினான்
தொழுது கேகயர் கோமகன் சொல்லொடும்
தழுவு தேரிடைத் தம்பியொ டேறினான்
பொழுது நாளுங் குறித்திலன் போயினான்.

(பரதன்) நாளும் பொழுதும் குறித்திலன் - (அயோத்திக்குப் புறப்பட) நல்ல நாளும் முகூர்த்தமும் பாராமல், சேனை எழுக என்று ஏவினன் - சேனைகள் புறப்படுக என்று கட்டளையிட்டு, கேகயர் கோமகன் எய்தினான் - கேகயராசனை அணுகி, தொழுது - வணங்கி, சொல்லொடும் - அவன் ஆசியும் அநுமதியுங்கொண்ட வார்த்தையோடு, தழுவு தம்பியொடு - (தன்னை எப்போதும்) பின்பற்றும் தம்பியாகிய சத்துருக்கனுடன், தேர் இடை ஏறினான் - (தனக்கென்று சித்தமாகி வந்த) தேரில் ஏறி, போயினான் - அயோத்தியை நோக்கிச் செல்லலானான்.

ஆசை கடாவுதலாலும், திருமுகத்தில் கண்ட கட்டளையாலும் மிக விரைந்து பரதன் புறப்பட்டமையை அவ்விரைவு தோன்றக் கூறுகின்றார். 'எழுக சேனை' என்றது அதனை நன்கு காட்டும். போயினான் என்பது ஒழிந்த முற்றுக்கள் எச்சப் பொருளன.

(பி - ம்.) 1. ஏவினனெய்தினன், எய்தினர், ஏயினனெய்தினான்.
2. தொழுத; கைகயர்கோன்மகன்.
3. தழுவித்; தழுவும், தம்பியோடு.
4. குறிக்கலன்; போகின்றான். (8)

சேனையும் பரிவாரங்களும்

804. யானை சுற்றின தேரிரைத் தீண்டின
மான வேந்தர் குழுமினர் வாளுடைத்
தானை சூழ்ந்தன சங்க முரன்றன
மீன வேலையின் விம்மின பேரியே.

(பரதன் புறப்பட்ட அளவில்) யானை சுற்றின - பல யானைகள் வந்து சூழ்ந்தன; தேர் இரைத்து ஈண்டின - தேர்கள் ஒலி செய்து கொண்டு (வந்து) நெருங்கின; மானம் வேந்தர் குழுமினர் - பெருமையையுடைய பல அரசர் (வந்து) கூடினர்; வாள் உடை தானை சூழ்ந்தன - வாட்படையை ஏந்திய காலாட் படைகள் சூழ்ந்தன; சங்கம் முரன்றன - சங்குகள் முழங்கின; பேரி - முரசங்கள், மீனம் வேலையின் விம்மின - மீன்களையுடைய கடலொலிபோல மிக்கு முழங்கின. ஏ: ஈற்றசை.

நால்வகைப் படைகளுள், யானை, தேர் காலாள் ஆகிய மூன்றைக் கூறினார். குதிரைகள் மிகுதியாக வந்தமை மேலே கூறுவார். சங்கும் பேரிகையும் முழங்குதல் எங்கும் கூறப்படும்; பால. 835 - குறிப்புப் பார்க்க. யானை, தேர், சங்கம், பேரி என்ற பால்பகா அஃறிணைப் பெயர்கள் பன்மை கொண்டன. மேல் வருவனவற்றிற்கும் இஃது ஒக்கும்.

(பி - ம்.) 1. ஆனை, சேனை; தேரினைத்தீண்டின.
2. வானவேந்தர்; குழுவினர், தழுவினர்.
3. சூழ்ந்தது, சூழ்வந்து; சங்குமுரன்றன. (9)

805. கொடிநெருங்கின தொங்கல் குழீஇயின
வடிநெடுங்கண் மடந்தைய ரூர்மடப்
பிடிதுவன்றின பூஞெளி பேர்ந்தன
இடிமுகிற்படு மின்னென வெங்குமே.

கொடி நெருங்கின - (அடையாளமான) கொடிகள் மிகுந்தன; தொங்கல் குழீஇயின - (விருதுகளாகிற) மயிற்பீலிக் குஞ்சங்கள் மிக்கன; வடி நெடுகண் மடந்தையர் ஊர் மட பிடி துவன்றின - கூரிய

நீண்ட கண்களையுடைய பெண்கள் ஏறிச் செல்லும் இளம் பெண்யானைகள் நெருங்கின; இடி முகில் படும் மின் என - இடியோடு கூடிய மேகத்தில் தோன்றும் மின்னல்போல், பூண் ஒளி எங்கும் போர்ந்தன - (பெண்கள் அணிந்த) அணிகலன்களின் ஒளிகள் எங்கும் விட்டு விட்டு வீசின. ஏ: ஈற்றசை.

தொங்கல் : பால : 863 - விசேடக் குறிப்புப் பார்க்க. வடி-கூர்மை; மாவடுவின் பிளப்புமாம். ஆண்கள் களிற்றின்மீதும் பெண்கள் பிடியின்மீதும் செல்லுதல் மரபு; பால. 822, 846; "பிடியின் மேல்வரு பிடிக்குல மனேகமெனவே, பெய்வளைக் கைமட மாதர்பிடி மீதுவரவே" (கலிங்கத்துப். 287). பிளிற்ருெலியுடைய பிடிகள் இடிக்கும் மேகங்கள் எனவும், அவற்றின்மீது ஊர்ந்து செல்லும் மகளிரின் அணிகலனொளி மேகத்தில் தோன்றும் மின்னொளி எனவும் கொள்க.

(பி - ம்.) 1. தொடி மிரைத்தன, மிரைந்தன, மிரந்தன, குழுமின, குமுவின, குழீயன, குழீஇயின; மிடைந்தன.
3. பூணொளிபோர்த்தன, பூணொளிபோர்ந்தன, பூணொடுபோர்த்தென.
4. இடிதுவன்றின, துவன்றிய, துடங்கின, துடங்கிய, நுடங்கின, மின்னினவெங்குமே, மின்னெனவெங்கணும். (10)

806. பண்டி யெங்கும் பரந்தன பல்லியம்
கொண்டி யம்பின கொண்டலிற் கோதையில்
வண்டி யம்பின வாளியின் வாவுறும்
செண்டி யங்கும் பரியுஞ் செறிந்தவே.

பண்டி எங்கும் பரந்தன - (பல பண்டங்களை ஏற்றிய) வண்டிகள் எங்கும் பரவின; பல் இயம் - பலவகை வாத்தியங்கள், கொண்டலின் கொண்டு இயம்பின - மேகங்களைப்போல முழக்கங்கொண்டு பேரொலி செய்தன; கோதையில் - (ஆடவரும் மகளிரும் அணிந்த) மாலைகளில், வண்டு இயம்பின - வண்டுகள் இனிய ஒலி எழுப்பின; வாளியின் வாஉறும் - அம்புபோலப் பாய்ந்து செல்வனவும், செண்டு இயங்கும் - வையாளிவீதியில் வருவனவுமான, பரியும் - குதிரைகளும், செறிந்தன- மிக நெருங்கின. ஏ : ஈற்றசை.

பண்டி, பல்லியங்கொண்டு எங்கும் பரந்தனஎன மாறிக் கூட்டிப் பொருள் கொள்ளலுமாம். செண்டு - செண்டுவெளி; வையாளி வீதி. குதிரைகள் இவ்வெளியில் வட்டமாகச் சுற்றிவருதலை வையாளி வருதல் என்பர்; "வெம்பரியூர் செண்டுவெளி பார்த்து" (ஆதிஉலா, 23); இனி, செண்டு - செண்டாடல் எனக்கொண்டு, செண்டாடலில் இயங்கும் பரி என்றுரைப்பினும் ஆம். "புரவியிற் பொருவில் செண்டாடி" (பால. 161); "நிலைச்செண்டும் பரிச்செண்டும் வீசி" (பெரிய. கழறிற். 125). குதிரையின் செலவுக்கு அம்பின் செலவு உவமை,

''பாய்மா வாளியின் வருவ'' (பால. 566); ''கணைவிடு விசைய...புரவி'' (பெருங். 1.48 : 8 - 14).

(பி - ம்.) 1. பண்டியங்கள், பரந்தனபண்டியம், மண்டியம்.
2 கொண்டியம்பிய; கோடையிற்கோதையில், கோதையர் கோதையில்.
3. வண்டியம்பிய, வண்டலம்பின; வாளியில், வாவியில், வாளியின்.
4. செண்டியங்கு, செண்டியம்பும், செண்டலங்கு; பரியுஞ் சிறந்தவே, பரிகள் சிறந்தவே. (11)

807. தொளைமு கத்திற் சுருதி விளம்பின
உளைமு கத்தின வும்பரி னேவிடின்
விளைமு கத்தனல் வேலையின் மீதுசெல்
வளைமு கத்தன வாசியும் வந்தவே.

தொளைமுகத்தின் - மூக்குத் தொளைகள் அமைந்த முகத்தால், சுருதி விளம்பின - வேதவொலி எழுப்புவனவும், உளைமுகத்தின - தலையாட்டம் அணிந்த முகத்தையுடையனவும், ஏவிடின் - செலுத்தினால், உம்பரின் - ஆகாயத்திலும், முகத்து அனல் விளை வேலையின் மீது - (குதிரை) முகத்தால் தீயைத் தோற்றுவிக்கும் கடலின் மேலும், செல் - செல்லத்தக்கனவும், வளை முகத்தன - வளைந்த முகத்தை உடையனவுமான, வாசியும் - (சிவந்த பல) குதிரைகளும், வந்த - வந்தன. ஏ : ஈற்றசை.

உயர்ந்த சாதிக் குதிரைகள் பல வந்தன என்கின்றது இது. அவற்றின் கனைப்பொலி, வேதகீதம்போல் இனிதாயிருந்தது. திருமால் குதிரை முகத்தோடிருந்து வேதகோஷம் செய்தமையை நினைந்து இங்ஙனம் கூறினர் போலும். உளை - தலையாட்டம்; குதிரையின் முகத்தை அழகு செய்யும்வண்ணம் தலையில் அணியப்படும் வெண்கவரி; பிடரி மயிருமாம். ''பரியுடை நன்மான் பொங்குளை யன்ன, அடைகரை வேழம் வெண்பூப் பகரும்'' (ஐங்குறு : 13); ''பல்லுளைப் புரவி'' (நெடுநல் : 93). ஆகாயத்திலோ, கடலிலோ எங்கே செலுத்தினும் செல்ல வல்லன என அவற்றின் ஆற்றலைச் சிறப்பிக்கிறார். கடல் விளைவிக்கும் அனல் - வடவைத் தீ; இது பெண் குதிரை முகத்தின் வடிவமுடையதாகலின், 'முகத்தனல் விளை வேலை' என்றார். 'முகத்தனல் விளை' என மாறிக் கூட்டப்பெற்றது.

(பி - ம்.) 1. முகத்ததுரிதம், நுகத்திற்றுருதம்; விளம்புவ, விளக்கின, விளம்பனத்து, மு. இளைமுகத்திற்கிளரிசை விம்மின; இளைநுகத்திற்கிளரிசை விம்மின, இளைமுகத்திற்றுருதம் விளக்கின.
2. இளைமுகத்தினன், முகத்தினிது, முகத்தினில், முகத்தினின்ற, இளமுகத்தின, உளைமுகத்தினும், உளைமுகந்தன; உம்பரின் ஏகிட, ஏகிடில், ஏகிடன், ஏவிட, ஏவிடல், ஏவிடின்.
3. விளைமுகத்தன, விளைமுகத்தினில், விளைமுகத்திதன்.
4. வளைமுகத்தல், முகத்தனல், முகத்தின, இளைய முகத்தினின்; வாசியுவந்தவே, வாசியும்வந்ததே. (12)

808. வில்லின் வேதியர் வாள்செறி வித்தகர்
மல்லின் மல்லர் சுரிகையின் வல்லவர்
கொல்லும் வேல்குந்தங் கற்றுயர் கொற்றவர்
தொல்லை வாரணப் பாகருந் துன்னினர்.

வில்லின் வேதியர் - தநுர்வேதம் வல்ல வீரர்களும், வாள் செறி வித்தகர்-வாட்போரில் தேர்ச்சி மிக்கவரும், மல்லின் மல்லர் - மற்போரில் வல்ல மல்லர்களும், சுரிகையின் வல்லவர் - உடைவாட் போரில் வல்ல வீரரும், கொல்லும் வேல் - (பகைவரைக்) கொல்லுதலுடைய வேல் தாக்குதலையும், குந்தம் - ஈட்டி எறிதலையும், கற்று உயர் - கற்று மேம்பட்ட, கொற்றவர் - வெற்றி வீரரும், தொல்லை - பழமையான (அநுபவம் மிக்க), வாரணம் பாகரும் - யானைப்பாகரும், துன்னினர் - வந்து நெருங்கினர்கள்.

வேதியர் - வேதத்தில் வல்லவர்; விற்பயிற்சியானது, வேதங்களுள் ஒன்றாய், 'தநுர்வேதம்' எனப்படுதலின், 'வில்லின் வேதியர்' என்றார். வாள், சுரிகை ; ஆகுபெயர்; அவற்றால் போர் செய்தலைக் குறித்தது; மல்லில் வல்லர் எனவும் பாடம் உளது. கொற்றம் - வெற்றி.

(பி - ம்.) 1. வாள்நிறை வித்தகர்.
2. மல்லின் வல்லர்; சுரிகையும்; வித்தகர்.
3. வல்குந்தம், கல்வின்வேல் குந்தம், கல்லும்வேல்குந்தம்.
4. வாரணப்பாகர்கள், வாரணம்பாகரும்; சுற்றினர், தோன்றினர். (13)

809. எறிப கட்டின மாடுக ளேற்றைமா
குறிகொள் கோழி சிவல்குறும் பூழ்நெடும்
பொறிம யிர்க்கவு தாரிகள் போற்றுறு
நெறியின் மாக்களு முந்தி நெருங்கினர்.

எறி - ஒன்றையொன்று மோதுகிற, பகடு இனம் - எருமைக்கடாக் களையும், ஆடுகள் - ஆட்டுக் கடாக்களையும், ஏற்றை மா - காளைகளையும், குறிகொள் கோழி - வெல்லுதலையே குறியாகக் கொள்ளும் கோழிச் சேவல்களையும், சிவல் - (காடை வகையைச் சேர்ந்த) சிவல் என்னும் பறவைகளையும், குறும்பூழ் - காடைகளையும், நெடும் பொறி மயிர் கவுதாரிகள் - நீண்ட புள்ளிகளையும் மயிரையுமுடைய கவுதாரி களையும், போற்று உறும் - (சண்டைக்கென) நன்கு வளர்க்கின்ற, நெறியின் மாக்களும் - வாழ்க்கை நெறியையுடைய மக்களும், முந்தி நெருங்கினர்.

சில விலங்குகளும் சில பறவைகளும் பழக்கப்பட்டுச் செய்யும் சண்டையை அரசரும் செல்வரும் பிறரும் பொழுது போக்காகக் கண்டு மகிழ்வதுண்டு. இதற்கெனவே அவற்றை நன்கு போற்றி வளர்த்துப் பழகும் தொழிலுடையார் சிலர். வழியிடையே தங்குங்கால் விநோதமாகப் பொழுது போதற்குப் பயன்படுமாறு இவர்களும்

அவ்விலங்கு முதலியவற்றுடன் வந்தனரென்க. பகட்டினம் - யானை எனவும், ஏற்றை - காளை, மா - பிற விலங்குகள் எனவும் பொருள் கொள்வாரும் உளர். மா குறிகொள் கோழி என இயைத்துப் பொருள் கோடலும் உண்டு. குறி - இரத்தக்குறி எனவும், குறிகொள் - ஏவுவோர் குறிப்பைக் கொள்கின்ற என உரைப்பாரும் உண்டு. குறிகொள் என்பதனைப் பிற பறவைகளோடும் ஒட்டுக. கோழியின் கால்களில் கத்தியைக் கட்டியும் சண்டைக்கு விடுவர். கோழிப் போர்: பால. 48. எருமைக் கடாப் போர்: பால: 49. ஆட்டுக்கிடாய்ச் சண்டை: பால: 62. யானைப் போர்: பால. 161.

(பி - ம்.) 1. ஏற்றினம், ஏற்றைமாக், ஏற்றமா, ஏற்றின்மாக், ஏற்றினர், ஏறுமா, ஏனமாக்.
2. சிவல்குறும்புள்ளொடும், சிவல்குறும்பூளெடும், குறும்பூளெடும், சிவற்குறும்பூழ்நெடும்.
3. பொறிமயில் கவுதாரிகள், பொறிமயிற்கவுதாரிகள்; போற்றிடு, போற்றுவ.
4. நெறியும்; மாக்களுமெங்கும், மாக்களுமேவி; மிரம்பினர். (14)

810. நிறைந்த மாந்தர் நெருங்கினர் நெஞ்சினில்
பறந்து போதுங்கொ லென்று பதைக்கின்றார்
பிறந்த தேவ ருணர்ந்து பெயர்ந்துபோய்
உறைந்த வானுறு வார்களை யொக்கின்றார்.

நெருங்கினர் - (பரதனை) அணுகிச் சென்றவர்களான, நிறைந்த மாந்தர் - (கல்வி கேள்விகள்) நிரம்பிய பலர், நெஞ்சினில் - தம் மனத்தில், பறந்து போதும் கொல் என்று - (அயோத்திக்குப்) பறந்து போய்விடுவோமா என்று நினைந்து, பதைக்கின்றார் - துடிதுடிக்கின்றவர்கள், பிறந்த தேவர் - (சாப வசத்தால்) பூமியில் வந்து பிறந்த தேவர்கள், உணர்ந்து - (தம் நிலையை) உணர்ந்து, பெயர்ந்து போய் - (பூமியினின்றும்) நீங்கிப் போய், உறைந்த - (தாம் முன்பு) வாழ்ந்த, வான் உறுவார்களை ஒக்கின்றார் - விண்ணுலகை அடையத் துடிக்கின்றவர்களை ஒத்தவராயினர்.

நிறைந்த மாந்தர் - அயோத்தியையும் இராமபிரானையும் காணும் ஆசையால் பரதனைத் தொடர்ந்து நிறைந்த பலர் என்றலும் பொருந்தும். அயோத்தி, இராமபிரான் இருத்தற்கிடமாய், விண்ணுலகினும் மேம்பட்டதாகலின், அதனையும் இராமபிரானையும் காணும் ஆசையால் துடிப்பவர் நிறைந்த மாந்தர். அவர்கள் வாழும் கேகய நாட்டை மண்ணுலகெனவும், அயோத்தியை விண்ணுலகெனவும் கொள்க.

(பி - ம்.) 1. மாதர்நெருங்கினர், நெருக்கினர்; நெஞ்சிறை.
2. போகுங்கொல்.
3. பிறந்து; பெயர்ந்துமுன், பெயர்த்தும் போய்.
4. உறைந்து; வானுறைவார்களை. (15)

811. ஊன ளைந்த வுடற்குயி ராமெனத்
தான ளைந்து தழுவின தண்ணுமை
தேன ளைந்து செவியுற வார்த்தென
வான ளைந்தது மாகதர் பாடலே.

மாகதர் பாடல் - மாகதரின் துதிப்பாடல், தேன் அளைந்து - (அவ்விசையோடு) தேனைக் கலந்து, செவி உற வார்த்து என - காதிலே பொருந்த ஊற்றியது போல, வான் அளைந்தது - விண்ணுலத்தவர் செவிகளிலும் போய் நிறைந்தது; தண்ணுமை - மத்தளவோசைகள், ஊன் அளைந்த உடற்கு உயிர் என - (பிற தாதுக்களோடு) தசை கலந்தியன்ற உடம்பில் (அமைந்த) உயிர்போல, அளைந்து தழுவின - (மாகதர் பாடலோடும் பிற இசைகளோடும்) கலந்து இயங்கின. ஏ: ஈற்றசை.

இசைக்கு உயிர் போன்றது தாளம் (லயம்) ஆகலின், தாள வாத்தியமாகிய தண்ணுமையின் ஓசை, இசையாகிய உடம்பில் உயிர் போலச் சிறந்து கலந்தியங்கியது என்கின்றார். உயிர், தான் இயங்கி, உடலையும் இயக்குவது; அது போன்றது தண்ணுமை. 'தண்ணுமை தழுவின' எனப் பன்மையாற் கூறினமையின், மாகதர் பாடலோடு, குழல், யாழ் முதலிய கருவிகளின் இசையும் பிறவும் அங்கே பல்வேறு இடங்களில் இயங்கினவாக, அவற்றில் எல்லாம் தண்ணுமை கலந்து தான் சிறந்து அவற்றையும் சிறப்பித்தமை பெறப்படும்.

உடற்கு - உடலில்; உருபு மயக்கம். ஆம், தான்: அசை. வார்த்தென: தொகுத்தல் விகாரம். மாகதர் - இருந்தேத்துவார். செவி உற ஆர்த்தென எனப் பிரித்துக் காதுகளில் நிறைந்தாற்போல என உரைத்தலுமாம்.

(பி. ம்.) 1. ஊனளந்த, ஊனடைந்த; உயிர்க்குயிர்.
2. தானளந்து, தான்விரிந்து; தழுவினன்; தண்ணுமைத்.
3. தேனளந்து, தேனளந்தன; செவியுறவார்த்தன, செவியுற வாரித்தேன்.
4. வானளந்தது, வானளைந்தன. (16)

812. ஊறு கொண்ட முரசிமி ழோதையை
வீறு கொண்டன வேதியர் வாழ்த்தொலி
ஏறு கொண்டெழு மல்ல ரிடிப்பொடு
மாறு கொண்டன வந்திய ரேத்தரோ.

ஊறு கொண்ட - (குறுந்தடியால்) அடித்தலைக் கொண்ட, முரசு - முரசங்களின், இமிழ் ஓசையை - பேரோசையை, வேதியர் - வேதம் வல்ல அந்தணர், வாழ்த்து ஒலி - (பரதனை) வாழ்த்தும் ஒலிகள், வீறு கொண்டன - விஞ்சின; வந்தியர் ஏத்து - வந்தியர் பாடும் துதிப்பாடல் ஒலிகள், ஏறு கொண்டு எழும் - பெருமிதங்கொண்டு எழுகிற, மல்லர்

இடிப்பொடு - மல்லர்களின் வீர முழக்கத்தோடு, மாறுகொண்டன - மாறுபட்டு (மிக்கு) ஒலித்தன. அரோ : அசை.

வேதியர் வாழ்த்தொலி முரசொலியையும் விஞ்சியது என்பதனுல், வேதியர் தொகைமிகுதியும் அவரன்பு மிகுதியும் புலப்படும். வந்தியர் - அரசன் புகழை நின்று பாடுவோர்; சூதர் எனவும் வழங்கப்பெறுவர். சூதரும் மாகதரும் இணைத்துக் கூறப்பெறுவர். இமிழோதை: ஒரு பொருட் பன்மொழி. வீறு கொள்ளுதல் - வெற்றிகொள்ளுதல்; விஞ்சுதல்.

(பி - ம்.) 1. முரசமிழோதையை, ஓதையான், ஓதையும், முரசிமிழோதையின், முரசம்விம்மோதையும், சகடுமிழோதையின்; ஊற்றுகொண்டகடுரசிமிழோதையின்.
2. வீறுகொண்டென, மாறுகொண்டன, வேறுகொண்டன; வேதியரேத்தொலி, ஒத்தொலி.
3. ஏறுகொண்டன, மாறுகொண்டெழு, ஆறுகொண்டெழு; மல்லரிடிப்பின, அடிப்பின, இடப்பின.
4. மாறுகொண்டது; வந்திகரொத்தரோ, வந்திகளேத்தரோ, வந்திகர் வாக்கொலி, வாழ்த்தரோ, வந்திகள் வாழ்த்தரோ, வந்திவழுத்தரோ, வந்திகரேத்தரோ. (17)

பரதன் கோசல நாட்டை அடைதல்

813. ஆறுங் கானு மகன்மலை யுங்கடந்
தேறி யேழ்பக னீந்திப்பி னெந்திரத்
தூறு பாகு மடையுடைத் தொண்முளை
நாறு பாய்வயற் கோசல நண்ணினன்.

(பரதன் சேனையுடன்), ஆறும் - பல ஆறுகளையும், கானும் - காட்டையும், அகன் மலை - பெரிய மலைகளையும், ஏழ் பகல் - ஏழு நாட்கள், நீந்தி கடந்து ஏறி - மிக்க சிரமத்துடன் கடந்து சென்று, பின், எந்திரத்து ஊறு பாகு - கரும்பாலைகளினின்றும் சுரந்து வரும் கருப்பஞ்சாறுனது, மடை உடைத்து-மடைகளை உடைத்துக்கொண்டு, ஒள் முளை நாறு வயல் பாய் - ஒள்ளிய முளைகள் தோன்றப்பெற்ற நாற்றங்காலில் பாய்தற்கிடமான, கோசலம் நண்ணினன் - கோசல நாட்டை அணுகினன்.

பரதன் கோசலத்தினை அணுகுமுன், வழியின் இடர்ப்பாடுகள் தோன்ற ஆறு முதலியவற்றை ஏழு நாட்கள் அரிதிற் கடந்து சென்றான் என்றார்.

நாறு - வயல் நாற்றங்கால். பாகு - கருப்பஞ்சாறு.

(பி - ம்.) 1. ஆறுங்குன்றும்.
2. ஏறியம்பகல்; நீந்தப்பின், நீத்தபின், நீங்கிப்பின் எந்திரத்து, நீங்யெபின்னெதிர்ந்து;

3. ஊருபாகின், ஆறுபாகு; மடையுடைந்து.
4. பாய்நெடுங்கோசலே, கோசலம்; நண்ணினுர்.

(18)

கோசலத்தின் அவலத் தோற்றம்

814. ஏர்து றந்த வயலிள மைந்தர்தோள்
தார்து றந்தன தண்டலை நெல்லினும்
நீர்து றந்தன தாமரை நீத்தெனப்
பார்து றந்தனள் பங்கயச் செல்வியே.

வயல் - (ஏரடிக்கவேண்டிய) வயல்கள், ஏர் துறந்தன - ஏரடிக்காமல் (தரிசாய்க்) கிடந்தன; இளமைந்தர் தோள் - இளங் குமரரின் தோள்கள், தார் துறந்தன - மாலைகளை நீக்கி இருந்தன; நெல்லின் தண்டலையும் - நெற்பயிரையுடைய குளிர்ந்த வயலிடங்களும், நீர் துறந்தன - நீரற்று உலர்ந்திருந்தன; பங்கயம் செல்வி - திருமகள், தாமரை நீத்தது என - (தான் இருந்த) தாமரை மலரை நீங்கிச் சென்றாற் போல, பார் துறந்தனள் - அந் நாட்டையும் துறந்து சென்றாள். ஏ : ஈற்றசை.

நெல்லினும் என்றதில் உம்மை பிரித்து முன்னே கூட்டப்பெற்றது.

இதுமுதல் ஒன்பது பாடல்களால், கோசல நாட்டின் பொலிவிழந்த தோற்றத்தை விரித்து, பரதன் நாட்டினுட் புகும்போதே, இத்தகைய காட்சிகளைக் கண்டு, ஏதோ தீங்கு நேர்ந்துளதென ஊகித்தற்கிடமாயிருந்தமை கூறுகின்றார். தொழில் செய்வார் அனைவரும் தம் தம் தொழிலில் நாட்டமின்றி அயர்ந்திருந்தனர். மகிழ்ச்சியின்மையின், மைந்தரும் தம்மை அழகு செய்துகொள்ளுதலில் விருப்பமின்றி வறிதே யிருந்தனர். திருமகள் வீற்றிருந்த தாமரை மலர் போல முன்பு மிக்க பொலிவு பெற்றிருந்த நாடு, இப்போது அவள் துறந்து கைவிட்ட மலர்போலப் பொலிவிழந்தது என்றதனால், சீதாபிராட்டியாகிய திருமகள் நாட்டைத் துறந்து சென்றமை குறிக்கப் படுதல் காண்க.

தண் தலை - குளிர்ந்த வயலிடம்; நெல்லின் தண்டலையென மாறுக; நெல் - நெற்பயிர்; ஆகு பெயர். தண்டலை நெல் - காடாக வளர்ந்த நெற்பயிர் என்பாரும் உளர்.

(பி - ம்.) 1. இளமைந்தர்.
3. நீர்த்தெனப், நீர்த்தன.
4. பார்துறந்தன.

(19)

815. பிதிர்ந்து சாறு பெருந்துறை மண்டிடச்
சிதர்ந்து சிந்தி யழிந்தன தேங்கனி
முதிர்ந்து கொய்குந ரின்மையின் மூக்கவிழ்ந்
துதிர்ந்து லர்ந்தன வொண்மல ரீட்டமே.

தேம் கனி - இனிய பழங்கள், கொய்குநர் இன்மையின் - பறிப்பார் இல்லாமையால், முதிர்ந்து - அளிந்து, சாறு பிழிந்து பெருதுறை மண்டிட - சாறு வெளிப்பட்டுந் பெரிய நீர்த்துறையிலே விரைந்து பாயுமாறு, சிதர்ந்து சிந்தி அழிந்தன - மிகப் பலவாக உதிர்ந்து சிதறிக் கெட்டன; ஒள் மலர் ஈட்டம் - ஒளி பொருந்திய பூக்களின் தொகுதியும், கொய்குநர் இன்மையின் - பறிப்பாரில்லாமையால், மூக்கு அவிழ்ந்து உதிர்ந்து - காம்பு கழன்று உதிர்ந்து, உலர்ந்தன - உலர்ந்து கிடந்தன. ஏ: ஈற்றசை.

மக்கள் துன்பத்துள் ஆழ்ந்து கிடந்தமையின், பூக்களும் பழங்களும் பறிப்பாரற்றுப் பதங்கெட்டு அழிந்தன. 'கொய்குநர் இன்மையின்' என்பது இடைநிலை விளக்காய் முன்னும் பின்னும் இயைந்தது. மூக்கு - காம்பு.

(பி - ம்.) 1. பிதிர்ந்தசாறு; மண்டின, மண்டிட.
2. சிதைந்து, அதிர்ந்து; சிந்தியளிந்தன, சிந்தினமுந்திய; தேன்கனி.
3. முதிர்ந்த; கொய்யுநர்; இன்மையும்; மூக்குமிழ்த்து, மூக்குமிழ்ந்து, மூக்குமித்து, மூக்குமுத்து, மூக்குளுத்து, மூக்கவிழ்த்து.
4. உதிர்ந்துலந்தன, உதிர்ந்து வார்ந்தன, உதிர்ந்து சிந்தின. (20)

816. ஏய்ந்த கால மிதுவிதற் காமென
ஆய்ந்து மள்ள ரரிகுந ரின்மையால்
பாய்ந்த சூதப் பசுநறுந் தேறலால்
சாய்ந்தொ சிந்து முளைத்தன சாலியே.

இதற்கு ஏய்ந்த காலம் இது ஆம் என - அறுவடை செய்தற்கு ஏற்ற காலம் இதுவாகும் என்று, ஆய்ந்து - ஆலோசித்து, அரிகுநர் மள்ளர் இன்மையால் - அறுக்கும் உழவர் இல்லாமையால், சாலி - (விளைந்த) நெற் பயிர்கள், சாய்ந்து ஒசிந்து - தலை சாய்ந்து ஒடிந்து, பாய்ந்த - (வயலில்) பாய்ந்திருந்த, சூதம் பசு நறு தேறலால் - மாங்கனி களின் பசிய நல்ல (தேன்போன்ற) சாற்றின் ஈரத்தினால், முளைத்தன - (நெல் மணிகள் உதிர்ந்து) முளை கண்டிருந்தன. ஏ: ஈற்றசை.

முன் கவியிற் கண்டவாறு நீருடன் கலந்த பழச்சாறு வாய்க்கால் வழியே ஓடி வயல்களில் பாய்ந்ததனால் தரை ஈரமாக, அரிவாரற்றுக் கிடந்த நெற்கதிர்கள் தலை சாய்ந்து, நெல்மணிகள் உதிர்ந்து முளைக்க லாயின. தேறல் - தேன்.

(பி - ம்.) 1. இதுவதற்காமென, இதற்கிதுவாமென.
2. ஆய்ந்தமள்ளர்; இன்மையிற்.
3. பாய்ந்தவாய; தேறலிற்; பாய்ந்த சூற்கொண்டப்பசுந்தேறலால். (21)

817. எட்கு லாமல ரேசிய நாசியர்
புட்கு லாவயற் பூசற் கடைசியர்
கட்கி லார்களை காதற் கொழுநரோ
டுட்க லாமுடை யாரி னுயங்கினர்.

புள் குலா வயல் - பறவைகள் குலாவும் வயல்களில், பூசல் - ஆரவாரம் செய்யும் இயல்பினையுடையவரும், குலா(வு)ம் எள் மலர் ஏசிய நாசியர் - (அழகாக) விளங்கும் எள்ளுப் பூவைத் தன்னழகால் பழித்த மூக்கினையுடையவருமான, கடைசியர் - உழத்திமார், களைகட்கிலார் - (வயல்களில்) களை பறியாதவர்களாய், காதல் கொழுநரோடு - (தம்முடைய) அன்பு மிக்க கணவன்மாருடன், உள் கலாம் உடையாரின் - ஊடல் கொண்டவர்களைப் போல, உயங்கினர் - வாடியிருந்தனர்.

இராமபிரானைப் பிரிந்து, அரசனையும் இழந்ததனாலான துயரம் மகளிரை மிக வருத்துதலால், அவர்கள் தம் தொழிலில் நாட்டமின்றி வாட்டமுற்றிருந்தமைக்குக் கணவரோடு ஊடல் கொண்ட நிலையை உவமித்தார்.

குலாவும் எள் மலர் என மாறுக; 'குலாவும்' என்ற செய்யுமென்னெச்சத்து ஈற்றயல் உயிர்மெய் கெட்டது. எள்ளின் பூவை மகளிரின் மூக்கிற்கு உவமை கூறுதல் கவிமரபு. நாசி - மூக்கு. குலா - கலந்து மகிழ்தல்.

(பா - ம்.) 1. எய்தியநாசியர்;
2. புட்குலாமலர்ப், புக்குலாவயற்.
4. உட்கலா முலையாரின், உட்கலாமிடையாரின், உட்குலாமுடையாரின்; ஒதுங்கினர், ஒதுங்கியே. (22)

818. அலர்ந்த பைங்கூ ழகன்குளக் கீழ்மடை
மலர்ந்த வாயிற் புனல்வழங் காமையால்
உலர்ந்த வன்க ணுலோபர் கடைத்தலைப்
புலர்ந்து நிற்கும் பரிசிலர் போலவே.

அகன் குளம் கீழ் - அகன்ற ஏரியை அடுத்து, அலர்ந்த பசு கூழ் - வளமாக வளர்ந்த பசிய நெற்பயிர்கள், மலர்ந்த மடைவாயில் - திறந்த மடையின் வழியே, புனல் வழங்காமையால் - நீர் பாய்ச்சப்படாமையால், வன்கண் - இரக்கமின்மையையுடைய, உலோபர் கடைத்தலை - உலோபிகளின் (வீட்டுத்) தலைவாயிலில், புலர்ந்து நிற்கும் - (பொருள் பெறாது) வாடி நிற்கிற, பரிசிலர் போல - இரவலரான பரிசிலரைப் போல், உலர்ந்த - வாடி உலர்ந்தன. ஏ; ஈற்றசை.

ஏரியை அடுத்துக் குறையாது நீர் பாய்தற்கேற்ற இடத்தில் செழித்து வளர்ந்த பயிர்களும், அவற்றைப் போற்றி மடைதிறந்து நீர் பாய்ச்சுவார் இன்மையின் நீர் பெறாது வாடி உலர்ந்தமைக்கு, உலோபி

களை அடைந்து இரப்போர், அவர்களிடமிருந்து ஏதும் பெருமல் தலை வாயிலில் வாடி நிற்கும் நிலையை உவமித்தார். உலோபிகள் பெருஞ் செல்வராயினும், தம்மை அடைந்தோர்க்கு மனமிரங்கிக் கொடுத்த லின்மையின், அவர்களை நாடி வந்தோர் ஏதும் பெருது வாடி நிற்பர். அதுபோல், நீர்மிக்க ஏரியை அடுத்திருந்தும், நீர் பாய்ச்சப் பெருமை யால் பயிர்கள் நீர் பெருது வாடி உலர்ந்தன.

அச்சுப் புத்தகங்கள் பலவற்றிலும், பல ஏடுகளிலும் இப்பாடல், 'நகையிழந்தன' (821) என்பதன்பின் காணப்படுகிறது; ஆயினும், மருதநிலச் செய்திகளைக் கூறும் தொடர்புடைய இவ்விடத்தில் இஃதிருத்தலே பொருத்தமுடையதாதல் காண்க.

(பி - ம்.) 1. அலந்த; ஓழகன், ஓழன.
3. உலந்த, உயர்ந்து; வன்கணுலோவர், நிற்பதுலோபர்; புறங்கடைப், பிறங்கடை.
4. புலந்துநிற்கும், உலர்ந்துமிற்ப; புலன்கொள்கேள்விப்; போன்றவே, போன்றதே. (23)

819. ஓது கின் றில கிள்ளையு மோதியர்
தூது சென் றில வந்தில தோழர்பால்
மோது கின் றில பேரி முழாவிழாப்
போது கின் றில பொன்னணி வீதியே.

கிள்ளையும் - கிளிகளும், ஓதுகின்றில - பேசுகின்றனவில்லை; ஓதியர் தூது - கூந்தலழகுடைய மகளிரின் தூதுகளும், தோழர்பால் சென்றில வந்தில - காதலரிடம் போதலும் வருதலும் இலவாயின; பேரி - பேரிகைகளும், முழா - குடமுழாக்களும், மோதுகின்றில - அடிக்கப்படவில்லை; பொன் அணி வீதி - பொன்னுல் அழகு செய்யப் பெற்ற வீதிகளில், விழா போதுகின்றில - விழா உலாக்கள் (ஊர்வலங்கள்) வரவில்லை. ஏ: ஈற்றசை.

கிளிகளை வளர்க்கும் மகளிர், அவற்றைப் போற்றுதலும் அவற்ருேடு பேசுதலும் இன்மையின், அவையும் பேச்சு இழந்தனவாயின. மங்கையர் மனமகிழ்ச்சி குன்றிச் சாம்பியிருந்தமையின், காதலர்க்குத் தூதனுப்புதலும் நிகழவில்லை. விழா - கடவுளர் விழாக்களும் மண விழாக்களும்; விழா, ஆகுபெயராய் வீதியுலாவைக் குறித்தது.

இதுமுதல் நான்கு பாடல்களால் புறநகரின் செய்திகளைக் கூறுகின்ருர்.

(பி - ம்.) 1. ஓதிய, ஓதிமம்.
2. சென்றில சொல்லல, சொல்லில; சோலையில்; சென்றிலர் வந்திலர், சென்றில சொல்லிய, சென்றவர் வந்திலர், சென்றவர் சொல்லில, சொல்லலர், சென்றன சொல்லல, சென்றுரை சொல்லல; கொண் கர்பால், தோன்னகர்.

3. மோதுகின்றல; பேரிமுழவெழா, முழவிமாப், முழவிழா:
4. போதுகின்றிலர்; பொன்னகர். (24)

820. பாட னீத்தன பண்டொடர் பாண்குழல்
ஆட னீத்த வரங்கொ டகன்புனல்
சூட னீத்தன சூடிகை சூளிகை
மாட நீத்தன மங்கல வள்ளையே.

பண் தொடர் - இசையின் தொடர்புடைய, பாண் குழல் - பாணரின் வேய்ங்குழல்கள், பாடல் நீத்தன - வாசிக்கும் பாடல்களை நீங்கின; அரங்கொடு - அரங்குகளும், அகன் புனல் - பரந்த நீர் நிலைகளும், ஆடல் நீத்தன - ஆடுதலை நீங்கின; சூடிகை - (மகளிர்) தலைகள், சூடல் நீத்தன - (மலர்களையும் அணிகலன்களையும்) சூடுதலைத் தவிர்ந்தன; சூளிகை மாடம் - நிலாமுற்றங்களையுடைய மாளிகைகள், மங்கலம் வள்ளை நீத்தன - மங்கலமான வள்ளைப் பாட்டுக்களைத் தவிர்ந்தன. ஏ: அசை.

'ஆடல்' என்பது கூத்தையும் நீராடுதலையும் குறித்தது. புனல் ஆகுபெயராய் நீர் நிலைகளைக் குறித்தது. சூளிகை - இடிதாங்கிச் சூலமும் ஆம். வள்ளை-மகளிர் நெற்குற்றும்போது தலைவனைப் புகழ்ந்து பாடுவது; உலக்கைப் பாட்டென்பர். செல்வர் மனைகளில் நாள்தோறும் மங்கலம் பாடுவோர் பாடுவதும் 'வள்ளை' எனப்படும்; இது 'நாண் மங்கலம்' எனவும் வழங்கும்; பால. 63. விசேடக் குறிப்புப் பார்க்க.

(பி - ம்.) 1. பண்டொகு, வண்டொடு; பண்குழல், பாண்குமாம், பாணர்கள்
2. ஆடனீர்த்த; அரங்கொடகன்சுனை, அரங்கொண்டகண்புனல்.
3. சூடிகைச் சூழிகை, சூலிகை.
4. மங்கலம் வள்ளையே. (25)

821. நகையி ழந்தன வாண்முக நாறகிற்
புகையி ழந்தன மாளிகை பொங்கழற்
சிகையி ழந்தன தீவிகை தேமலர்த்
தொகையி ழந்தன தோகைய ரோதியே.

வாள் முகம் - ஒளியமைந்த முகங்களெல்லாம், நகை இழந்தன - சிரிப்பை இழந்தன; மாளிகை - மாளிகைகள், நாறு அகில் புகை இழந்தன - நறுமணம் கமழும் அகில் புகையை இழந்தன; தீவிகை - (எங்குமுள்ள) விளக்குகள், பொங்கு அழல் சிகை இழந்தன - மேலோங்கி எரியும் தீச்சுடரை இழந்தன: தோகையர் ஓதி - மயில் போலும் சாயலையுடைய மகளிர் கூந்தல், தேம் மலர் தொகை இழந்தன - இனிய மலர்க் கூட்டங்களை இழந்தன. ஏ: ஈற்றசை.

நகரமாந்தர், முன்பு எப்போதும் மகிழ்ச்சி ததும்பும் முகமுடையராயிருப்பர்; இப்போது அது தவிர்ந்தது. மாடங்களில் மகளிர்

கூந்தலுக்கும் ஆடைக்கும் புகையூட்டும் பொருட்டு எப்போதும் அகில் புகைந்துகொண்டிருக்கும்; அது தவிர்ந்தது. மங்களமான விளக்கெரிதலும் இல்லை. மகளிர் பூச்சூடுதலும் இல்லையாயிற்று. தீவிகை - தீபிகா என்ற வடசொற்றிரிபு.

(பி - ம்.) 1. வாண்முகனுறவிற், வாண்முக நங்கையர், வாண்முகநாகரிற்.
3. நிபிகை. (26)

822. நாவி னீத்தரு நல்வளந் துன்னிய
பூவி னீத்தன நாடு பொலிவொரீஇத்
தேவி நீத்தருஞ் சேணெறி சென்றிட
ஆவி நீத்த வுடலென வாயதே.

நாவின் நீத்து அரு - நாவால் சொல்லி முடித்தற்கரிய, நல்வளம் துன்னிய - நல்ல வளம் செறிந்த, பூவின் ஈத்து அ(ன்)ன நாடு - நில மகளின் கொடை போன்ற அந்தக் கோசல நாடு, தேவி - சீதாபிராட்டி, நீத்து - (அங்கு நின்று) அகன்று, அரு சேண் நெறி சென்றிட - கடத் தற்கரிய நெடுந்தூரம் சென்றதனால், பொலிவு ஒரீஇ - பொலிவை இழந்து, ஆவி நீத்த உடல் என ஆயது - உயிர்பிரிந்த உடம்பு (பிணம்) போல ஆயிற்று. ஏ : ஈற்றசை.

இதுகாறும் ஒன்பது பாடல்களால் கோசலநாட்டின் பொலிவிழந்த நிலையை விரித்துக் கூறிவந்த ஆசிரியர், இறுதியாகச் சுருங்கச் சொல்லலாய், 'நாடு பிணம் போலப் பொலிவிழந்தது' என்று முடிக்கின்றார்.

நீத்து - நீந்துதல்; சொல்லி முடித்தல். பூ - பூமி; நிலமகள். ஈத்து - ஈதல்; கொடை. அன ; தொகுத்தல். சென்றிட - சென்ற தால்; செயவெனெச்சம் காரணப் பொருளில் வந்தது. இடு : துணை வினைப் பகுதி. தேவி - நகரின் காவல் தெய்வம் என்றலுமாம்.

(பி - ம்.) 1. நாவிநீத்தரு, நீத்தருள், நீத்தன, நவினீத்தன; நல்வளந் துன்னிசை, நல்வனந்துன்னிய, நல்லவந்துன்னிய.
2. பூவிநீத்தென, நீத்தன, நீத்தரு, பூவினீத்தென, பூவினீத்தனன், பூவினீத்தரு, பூவுநீத்தநன், பூவுநீத்தரு.
3. தேவிநீத்தகம், நீத்தகன், நீத்தகற், நீத்ததம், நீக்கத்தன், நீக்கத் தம், தேவினீக்கத்தைச்; தேவுநீக்கத்தைச், தேவுநீத்தரும், நீத்த கன், நீத்தகம்.
4. எனவாயதே, எனலாவதே. (27)

பரதன் வருந்துதல்

823. என்ற நாட்டினை நோக்கி யிடருழந்
தொன்று முற்ற துணர்ந்தில னுன்னுவான்
சென்று கேட்பதோர் தீங்குள தாமெனா
நின்று நின்று நெடிதுயிர்த் தானரோ.

உற்றது ஒன்றும் உணர்ந்திலன் - நிகழ்ந்தது ஒன்றையும் அறியாத வனான பரதன், என்ற - (இதுகாறும் விவரித்துச்) சொல்லிய, நாட்டினை நோக்கி - (பொலிவிழந்த) அந்த நாட்டைப் பார்த்து, இடர் உழந்து - பெருந்துன்பமுற்று, உன்னுவான் - (அந்நிலைபற்றி) நினைப்பவன், சென்று - நாம் (அரண்மனைக்குப்) போய், கேட்பது ஓர் தீங்கு உளது எனு - கேள்விப்படுதற்குரிய தீய செய்தி ஒன்று இருக்கின்றது என்று அநுமானித்து, நின்று நின்று - தயங்கித் தயங்கி, நின்று, நெடிது உயிர்த்தான் - பெருமூச்செறிந்தான். அரோ : அசை.

நாட்டின் அவல நிலையைக் கண்ட பரதன், 'இதற்குக் காரணமாக ஏதோ பெருந்தீங்கு விளைந்திருத்தல் வேண்டும்' என்று உய்த் துணர்ந்து, மிகவும் துன்பமுற்று வருந்தினான் என்றவாறு.

உணர்ந்திலன், உன்னுவான் : வினையாலணையும் பெயர்கள். உளதாம்: ஆம், அசை. நின்று நின்று என்ற அடுக்குத் தயக்க மிகுதியை உணர்த்திற்று.

(பி - ம்.) 1. என்று நாட்டினை; இடருமன்று.
2. ஒன்றுமுற்ற.
3. தீங்குளதாமென, தீங்குளவாமென. (28)

பரதன் அயோத்தியை நெருங்குதல்

824. மீண்டு மெய்தியம் மெய்யெனு நல்லணி
பூண்ட வேந்தன் றிருமகன் புந்திதான்
தூண்டு தேரினு முந்துறத் தூண்டுவான்
நீண்ட வாயி னெடுநகர் நோக்கினான்.

அ மெய் எனும் நல் அணி பூண்ட - அந்த வாய்மை என்னும் நல்ல அணிகலனைப் பூண்ட, வேந்தன் திருமகன் - சக்கரவர்த்தியின் சிறந்த புதல்வனான பரதன், மீண்டும் எய்தி - மீளவும் (சிறிது தெளிந்த நிலையை) அடைந்து, புந்தி - (தன்) மனமானது, தூண்டு தேரினும் முந்து உற - விரைந்து செலுத்தப்படும் தேரினும் முற்பட்டுச் செல்ல, தூண்டுவான் - (தேரை) மேலும் விரைந்து செலுத்தி, நெடு நகர் - பெரிய அயோத்தி நகரின், நீண்ட வாயில் நோக்கினான் - உயர்ந்த தலைவாயிலைக் கண்டான்.

நாட்டின் அவல நிலை கண்டு கலங்கித் தயங்கிய பரதன், மீண்டும் சிறிது தெளிவு பெற்று, தான் அநுமானித்த செய்தி இன்னதென்பதை அறியும் ஆவலால் மனம் முந்திச் செல்லத் தேரையும் முன்னிலும் விரைவாகச் செலுத்திச் சென்று, நகரின் பெருவாயிலை நண்ணினான்.

சக்கரவர்த்தி தன் வாய்மை காத்ததே இத்துன்பங்களுக்கெல்லாம் காரணம் என்பது தோன்ற, அவ்வகையில் அவனை விசேடித்தார். அ !

உலகறி சுட்டு. தான் : அசை. பரதன் இப்போது வந்து கண்டது, 'வைஜயந்தம்' என்னும் பெயரையுடைய மேற்கு வாயில் என்பது முதனூலால் அறியப்படும். நகரினுட் சென்று அவன் கண்டனவும் கூறியனவும் மேலே ஒன்பது பாடல்களால் கூறப்படும்.

(பி - ம்.) 1. மீண்டுமேகியம், மீண்டுமேகிய, மீண்டுமெய்திய, மீண்டுமெய்தவம், மெய்யனும்.
2. புந்தியால், புந்திதன், புத்திதான்.
3. தூண்டுதேரினை; தூங்குவான், தூங்குமா, தூங்குமால், தூண்டி வான், தூண்டுவோன்.
4. நீண்டவாயல், வாய; நீங்கினன். (29)

நகரில் கொடிகள் இல்லாமை

825. அண்ட முற்றுந் திரிந்தயர்ந் தாயமு
துண்டு போதியென் றொண்கதிர்ச் செல்வனை
விண்டொ டர்ந்து விலக்குவ போல்வன
கண்டி லன்கொடி யின்னெடுங் கானமே.

(பரதன்) ஒண் கதிர் செல்வனை - சூரியனை, அண்டம் முற்றும் திரிந்து அயர்ந்தாய் - நீ இவ்வண்டமெல்லாம் சுற்றிச் சோர்ந்திருக் கின்றாய்; (ஆதலால்), அமுது உண்டு போதி என்று - (இங்கே சற்றுத் தங்கி) உணவை உண்டு செல்வாயாக என்று சொல்லி, விண் தொடர்ந்து - (சூரியன் செல்லும்) வானவீதியை எட்டி, விலக்குவ போல்வன-(அவனைத்) தடுப்பவை போன்ற, கொடியின் நெடு கானம் - கொடிகளின் பெருங் கூட்டத்தை, கண்டிலன் - (வாயிலிலும் பிற விடத்தும்) காணவில்லை. ஏ : அசை.

மதிலிலும், உள்ளே மாளிகைகளிலும் கொடிகள் வானளாவப் பறக்கும் காட்சி முதலில் காணத் தக்கது; அதனைக் கண்டிலன். கொடிகள் சூரியனைத் தடுத்து நிறுத்தி உண்ணுமாறு அழைப்பன வென்றது தற்குறிப்பேற்றம். கொடிகளை இடத்திற்கேற்பக் கூறுதல் கவிகளின் சாதுரியம். ஒண் கதிர்ச் செல்வன் - ஒளிக்கதிர்களாகிய செல்வத்தை உடையவன்; சூரியன். கொடியின் கானம் என்றது மிகுதி பற்றி, 'தாமரைக்காடு' என்பது போல.

(பி - ம்.) 1. முற்றுந்திரிந்தமர்ந்தாய், முற்றத்திரிந்தயர்ந்தாய், திரிந்தலுத்தாய்.
2. ஓங்குமருக்கனை, ஓதுமருக்கனை.
3. விலக்குவபோயெனக். (30)

முரசொலி இன்மை

826. ஈட்டு நன்புகழ்க் கீட்டிய யாவையும்
வேட்ட வேட்டவர் கொண்மின் விரைந்தெனக்
கோட்டி மாக்களைக் கூவுவ போல்வன
கேட்டி லன்முர சின்கிள ரோதையே.

ஈட்டும் நன் புகழ்க்கு - தேடுதற்குரிய (கொடையால் வரும்) நல்ல புகழுக்காகவே, ஈட்டிய யாவையும் - (நான்) தேடிய பொருள்கள் எல்லாவற்றையும், வேட்டவர் - (கொள்ள) விரும்புவோர், வேட்ட - விரும்பியவற்றை, விரைந்து கொண்மின் என - (தயக்கமின்றி) விரைந்து வந்து கைக்கொள்ளுங்கள் என்று, கோட்டி மாக்களை - குழுவான இரப்போரை, கூவுவபோல்வன - அழைப்பனபோன்றன வான, முரசின் - கொடை முரசங்களின், கிளர் ஓதை - பொங்கும் ஒலியை, கேட்டிலன் - (பரதன்) கேட்கவில்லை. ஏ : ஈற்றசை.

இரப்போர் எப்போது வரினும் அவரவர் விரும்பியவற்றைத் தடையின்றிப் பெறலாமென்பதை அறிவித்தற்கு நாள்தோறும் கொடை முரசு முழங்கும்; அது செவிப்படவில்லை. எனவே, அது முழங்கவில்லை யென்பதும் பெறப்படும்.

இரப்பார்க்கொன் றீவார்மேல் நிற்கும் புகழே சிறந்ததாகலின் அப்புகழ்க்காகவே ஈட்டிய பொருள் எனப் பொருளைச் சிறப்பித்தார். ஈட்டிய - தேடியவை; வினையாலணையும் பெயர். கூவுதல் - கூப்பிடுதல்; அழைத்தல்.

(பி - ம்.) 1. ஈட்டி; நன்பொருள், தன்புகழ்க்கு, ஈட்டியுமியாவையும். ஈயுமின்யாவையும், ஈயுமென்றியாவையும், வியுமுன்யாவையும், யாவையுமீட்டியே, யாதனயாவையும்.
2. வேட்டுவேட்டவர், வேட்டவேட்டுவர்.
3. கோட்டமாக்களை; போன்றன. (31)

பரிசு பெற்றுச் செல்லும் பாணரைக் காணாமை

827. கள்ளை மாக்கவர் கண்ணியன் கண்டிலன்
பிள்ளை மாக்களி றும்பிடி யீட்டமும்
வள்ளை மாக்க ணிதியும் வயிரியர்
கொள்ளை மாக்களிற் கொண்டன ரேகவே.

கள்ளை - (பூவிலுள்ள) தேனை, மா கவர்-வண்டுகள் கவர்ந்துண்ணு தற்கிடமான, கண்ணியன் - தலைமாலை சூடிய பரதன், வள்ளை மாக்கள் - மங்கலம் பாடுவோரும், வயிரியர் - கூத்தரும், நிதியும் - பொன்னையும், பிள்ளை மாகளிறும்-இளைய பெரிய ஆண் யானைகளையும், பிடி ஈட்டமும் - பெண்யானைகளையும், கொள்ளை மாக்களின்- கொள்ளை யடிப்போரைப்போல, கொண்டனர் ஏக கண்டிலன் - கைக்கொண்டு செல்லக் கண்டானில்லை. ஏ : ஈற்றசை.

நாண் மங்கலம் பாடுவோரும் கூத்தரும் அரசனையும் பிற செல்வரையும் பாடி, யானைகளையும் பொன்னையும் அளவின்றிப் பெற்றுச் செல்லல் நாள்தோறும் அந்நகரில் நிகழ்வதாகும்; அது கொள்ளை கொண்டு போதல் போலத் தோற்றும். அதனை இன்று கண்டிலன்.

கொள்வோர் கொள்பவற்றின் மிகுதிபற்றிக் 'கொள்ளை' என்றார். தன் மாலையில் தேனைக் கொள்ளை கொடுப்பவன் இந்தக் கொள்ளையைக் கண்டிலன் என்றது சாதுரியம். வள்ளை மாக்கள் - மங்கலப் பாடகர்; நாண்மங்கலம் பாடுவோர்; 820 - விசேடக் குறிப்புப் பார்க்க. வயிரியர் பாணரில் ஒரு வகையினர்; கூத்தும் பாட்டும் உடையோர்.

(பி - ம்) 3. வள்ளன்மாக்கள், வள்ளமாக்கள்.
4. மாக்களி; கொண்டனர் போகவே. (32)

அந்தணர் தானம் பெற்றுச் செல்வதைக் காணாமை

828. காவன் மன்னவன் கான்முளை கண்டிலன்
ஆவு மாவு மழிகவுள் வேழமும்
மேவு காத னிதியின் வெறுக்கையும்
பூவின் வானவர் கொண்டனர் போகவே.

காவல் மன்னவன் கால்முளை - உலகு புரக்கும் தசரத மன்னனின் புதல்வனான பரதன், ஆவும் - பசுக்களையும், மாவும் - குதிரைகளையும், அழி கவுள் வேழமும் - மதம் பெருகும் கன்னங்களை உடைய யானை களையும், காதல் மேவு - (எவரும்) விரும்புதற்குரிய, நிதியின் வெறுக்கையும் - செல்வத்திரளையும், பூவின் வானவர் - பூசுரர்கள், கொண்டனர் போக கண்டிலன் - (தானமாகப்) பெற்றுச் செல்லப் பார்த்திலன். ஏ : ஈற்றசை.

அந்தணர் பலர் அரண்மனையிலிருந்து தானமாகப் பொருளையும், பசுக்களையும், யானை, குதிரை முதலியவற்றையும் பெற்றுச் செல்லு தலும் நாள்தோறும் நிகழ்வது; அதனையும் பரதன் காணவில்லை.

அந்தணர் பூதேவர், புவித்தேவர், பூசுரர் என வழங்கப் பெறுவராகலின், 'பூவின் வானவர்' என்றார். தானம் பெறுதற்குரியோர் இவர்கள். கொண்டனர்: முற்றெச்சம். அழிதல் - பெருகுதல்; சீவக. 1193. வெறுக்கை - மிகுதி.

(பி - ம்) 1. கார்முளை.
3. மேவுங்காதல், காவல்; நிதியும்; மேவும்வையம்முத்தும்.
4. பூவில்வானவர்; கொண்டவர். (33)

கூத்தரின் கூட்டம் வறிதே இருத்தல்

829. சூழ மைந்த சுரும்பு நரம்புந்தம்
ஏழ மைந்த விசையிசை யாமையால்
மாழை யொண்கண் மயிலெனுஞ் சாயலார்
கூழை போன்ற பொருநர் குழாங்களே.

சூழ் அமைந்த - வட்டமிடும் இயல்புள்ள, சுரும்பும் - வண்டுகளும், (சூழ் அமைந்த) நரம்பும் - முறுக்காணியில் சுற்றுதல் (பொருந்திய) யாழ்

நரம்புகளும், தம் - தம்முடைய, ஏழ் அமைந்த இசை - ஏழு சுரங்கள் பொருந்திய இசையினை, இசையாமையால் - பாடாமையால், மாழை ஒண் கண் - மாவடுவகிர் போலும் ஒளி அமைந்த கண்களையும், மயில் எனும் சாயலார் - மயில் போன்ற சாயலையுமுடைய மகளிரின், கூழை - கூந்தலும், பொருநர் குழாங்கள் - கூத்தர் கூட்டமும், போன்ற - தம்முள் ஒரு தன்மைய ஆயின. ஏ : ஈற்றசை.

வண்டுகள், நறுமணமுள்ள இடத்தை நாடிச் சென்று வட்டமிட்டு முரன்று மொய்க்கும் இயல்புடையன வாதலின், மகளிர் கூந்தலில் நறுமணங் கண்டு அங்கே மொய்க்கும்; இப்போது அவர்கள் கூந்தல், வாச நெய்யையும் மலர்களையும் மறந்திருந்தமையின், வண்டுகள் மொய்த்தற்கும் முரலுதற்கும் இடமிலதாயிற்று; யாழ் முதலிய இசைக் கருவிகளுடன் சென்று அங்கங்கே பாடுதலும் ஆடுதலும் செய்து பரிசுபெறும் பொருநர் குழாம் இப்போது அதற்கிடமின்றி வறிதேயிருந்தமையின், அங்கே யாழொலி எழாதாயிற்று; எனவே, மகளிர் கூந்தலும், பொருநர் குழாமும் இசையெழுச்சி யின்மையில் தம்முள் ஒத்தன என்க.

சூழ் : முதனிலைத் தொழிற் பெயர். சூழ்தலை வண்டுகளுக்கும் நரம்புகளுக்கும் இயைக்க. வண்டுகளுக்கு, வட்டமிடுதல்; மொய்த்தலுமாம்; நரம்புக்கு, முறுக்காணியிற் சுற்றப்படுதல். பொருநர் குழாத்தின் நரம்பும், கூழையும் ஒத்தன என்றுரைத்தலும் பொருந்தும். பொருநர் - ஒருவரைப் போலக் கோலங்கொண்டு பாடி ஆடும் கலைஞர்.

(பி - ம்.) 1. சூழமைந்தர், சூழிமைந்தர், சூழுமைந்தர்; சுரும்பினரம்புந்தம், சுரும்புநரம்புந்தன், நரம்புஞ்சுரும்புந்தம்.
2. ஏழைமைந்த.
3. மாழையுண்கண்; மயினெடும். (34)

தெருக்களின் நிலை

830. தேரு மாவுங் களிறுஞ் சிவிகையும்
ஊரும் பண்டியு மூருந ரின்மையால்
யாரு மின்றி யெழிலில வீதிகள்
வாரி யின்றிய வாலுக வாற்றினே.

ஊரும் - ஊர்ந்து செல்லுதற்குரிய, தேரும் - தேர்களும், மாவும் - குதிரைகளும், களிறும் - யானைகளும், சிவிகையும் - பல்லக்குகளும், பண்டியும் - வண்டிகளும், ஊருநர் இன்மையால் - ஏறிச் செல்வோர் இல்லாமையாலும், யாரும் இன்றி - நடந்து செல்வோரும் இல்லாமலும், வீதிகள் - வீதிகளெல்லாம், வாரி இன்றிய - நீர் இல்லாத, வாலுகம் ஆற்றின் - மணற்பரப்புடைய (அழகிழந்த) ஆற்றைப்போல, எழில் இல - அழகில்லாதன ஆயின. ஏ : ஈற்றசை.

வீதிகள் அழகில ஆயின என ஒரு சொல் வருவித்து முடிக்க. தேர் முதலிய ஊர்திகளும் நடந்து செல்வோரும் போக்குவரத்தின்றி, வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. "யாறு கிடந்தன்ன அகல் நெடுந் தெரு" (நெடுநல். 30) என வீதிகளுக்கு ஆற்றை உவமை கூறுவர். ஆறு நீர் நிரம்பி ஓடுதலின்றி வற்றி மணல் பரந்து கிடந்தால் அழகிழந்த தேயாகும். அவ்வாறே வீதிகளும் போக்குவரத்தின்றேல் அழகிழந்தன வாகும் என ஒப்புமை காண்க. நீர் வற்றி மணல் பரந்த ஆற்றை 'வாலுக ஆறு' என்றார். வாலுகம் - வெண்மணல்.

(பி - ம்.) 2. ஊரும் பண்டியர், ஊரினரின்மையால், ஊர்வரோதுங்கினர், ஊர்த் தங்கொதுங்குவார், ஊர்ந்தோரொதுங்கினர்.
3. யாருமின்றி, ஆருமின்றி; எழிலழி வீதிகள், வீதியுள், எழிலணி வீதிகள்.
4. வாரியின்றியல், வாரியன்றியல்; வாலுகயாற்றினே. (35)

பரதன் சத்துருக்கனிடம் கூறுதல்

831. அன்ன தன்மை யகநகர் நோக்கினன்
பின்னை யப்பெரி யோர்க்குப் பெருந்தகை
மன்னன் வைகும் வளநகர் போலுமீ
தென்ன தன்மை யிளையவ னேயென்றான்.

அன்ன தன்மை - அவ்வாறாகிய (பொலிவிழந்த) தன்மையினை யுடைய, அக நகர் நோக்கினன் - உள் நகரிடங்களை ஊன்றிப் பார்த்த, அ பெரியோர்க்கு பெரு தகை - (அறிவு ஒழுக்கம் நிரம்பிய) பெரியோர்க்கும் பெரியவனான அந்தப் பரதன், பின்னை - தன் பின்னவனை (நோக்கி), இளையவனே - தம்பீ, ஈது மன்னன் வைகும் வளம் நகர் போலும் - சக்கரவர்த்தி வாழும் (நமது) வளமிக்க நகரமோ இது? என்ன தன்மை - இதன் அவல நிலைதான் என்னே! என்றான் —.

நகரின் இரங்கத்தக்க நிலை கண்டு வருந்திய பரதன், தம்பிக்கும் அதனைச் சுட்டிக் கூறி, "அரசன் வாழுமிடமாகவே இது தோற்ற வில்லையே; இதற்குக் காரணமென்னவோ?" என்று மேலும் வருந்துவானானான். நாட்டின் அவலநிலை கண்டபோதே, 'சென்று கேட்பதோர் தீங்குளது' என்று அநுமானித்த பரதன், நகரினுள்ளும் அத்தகைய நிலைகண்டு, அரசன் உள்ளானோ இல்லையோ என்ற ஐயமும் அச்சமும் கொண்டு, தம்பிக்கும் அதனைக் கூறினன். மேலும் அவன் கூறியது அடுத்த பாட்டிற் கூறப்படும். 'பெரியோர்க்குப் பெருந்தகை' என்பதனை மன்னனுக்கு விசேடணமாக்கிக் கூறினும் அமையும். போலும் என்றது காகுவினால் வினாவாயிற்று.

(பி - ம்.) 1. அகநகர் நோக்கினான், அகநெக நோக்கினான், அகநகர் நோக்கித் தன், அகனகர் நோக்கினன்.

2. பின்னையப் பெரியோர்தம், பின்னையே பெரியோர்தம், பின்னினைப் பெரியோற்கப், பின்னிணைப் பெரியோற்குப், பின்னுமின்று மினைந்த பெருந்தகை.
3. மன்னரின்றிய மாநகர்; போலுமிது, போலுமின்று, போலுமன்று.

(36)

832. வேற்ற டங்கல ரூரென மெல்லிதாற்
சூற்ற டங்கருங் கார்புரை தோற்றத்தான்
சேற்ற டங்கட் டிருவொடு நீங்கிய
பாற்ற டங்கட லொத்தது பாரென்றான்.

வேறு அடங்கலர் ஊர் என - (நம்மோடு) மாறுபட்ட பகைவர் ஊர்போல, மெல்லிது - தாழ்வுற்றுளது; சூல் தடம் கரு கார் புரை தோற்றத்தான் - சூல்கொண்ட பெரிய கரிய மழை மேகம் போன்ற திருமேனியையுடைய திருமால், சேல் தடம் கண் திருவொடும் - சேல் மீனைப்போலும் பெரிய கண்களையுடைய திருமகளுடனே, நீங்கிய - விட்டுச் சென்ற, தடம் பால் கடம் ஒத்தது - பெரிய பாற்கடலைப் போன்றுளது; பார் - இதனைப் பார், என்றான் —.

நகரம் பாழ்பட்ட பகைவர் ஊரைப் போலவும், திருமாலும் திருமகளும் நீங்கப்பெற்றுப் பொலிவிழந்த பாற்கடல் போலவும் வறிதாகியுள்ளதனைப் பார் என்று தம்பிக்குக் கூறினான் பரதன்.

நகரின் பரப்புக் கருதிப் பாற்கடல் உவமிக்கப்பெற்றது. பின் மூன்று அடிகள் கூறுவது, இராமபிரானும் பிராட்டியும் நகரை விட்டகன்றமையைக் குறிப்பித்தல் காணத்தக்கது. மென்மை - தாழ்வு; "மென்சொ லேனும் இகழார்" (கந்த. அவை. 3.) ஆல்: அசை.

(பி - ம்.) 1. ஊரெனல் மெல்லிதால், ஊரென மெல்லிதாய்ச், ஊரெனில் மெல்லிதால்; அடங்கலர் விண்ணுற வென்றிடும், விண்ணுற வெற்றிடும், விண்ணுற வெண்ணிடும்.
2. சூற்றடங்கார், சூற்றடங்கல், கூற்றடங்கார், கூற்றடங்கல், கூற்ற டங்கப்; பொருநெடுங்கோளினும், கோளினுள், கொள்கையாய், புரைநெடுங்கோளினாய், தோளினன், தோற்றத்தான்; சூற்றடங்கருங் கார்புரை கோளினாய்.
3. சேற்றடங்கடிருவொடும்
4. ஒத்ததிப்.

(37)

சத்துருக்கன் கூற்று

833. குரும ணிப்பூ ணரசிளங் கோளரி
இருகை கூப்பி யிறைஞ்சின னெய்திய
தொருவ கைத்தன் றுறுதுய ரூழிவாழ்
திருந கர்த்திருத் தீர்ந்தன ளாமென்றான்.

குரு மணி பூண் - நல்ல நிறமுள்ள மணிகள் பதித்த அணி கலன்களை அணிந்த, அரசு இள கோள் அரி - அரசிளஞ் சிங்கமான சத்துருக்கன், இரு கை கூப்பி இறைஞ்சினன் - தன் இரு கைகளையும் குவித்துத் தமையனை வணங்கி, எய்தியது உறு துயர்-நேர்ந்துளதாகிய பெருந்துன்பம், ஒரு வகைத்து அன்று - ஒரு வகையான தன்று (பல விதத்திலும் ஆனது); ஊழி வாழ் திருநகர் திரு - மிக நெடுங்காலமாக நல் வாழ்வுடைய இந் நகரத்துத் திருமகள், தீர்ந்தனள் ஆம் - நீங்கி விட்டனளாவள்; என்ருன்—.

பரதன் கூறியதை உடன்பட்டுக் கூறிய சத்துருக்கன், நகர்ச் செல்வி நீங்கினவள் நீங்கினவளே, இனி இந்நகரம் முன்னை நிலை யெய்துதல் அரிது என்ற கருத்துப்படக் கூறுகின்ருன்.

குரு - நிறம். கோள் - வலிமை; உயிரைக் கொள்ளுதலுடைய எனினும் ஆம். இறைஞ்சினன்: முற்றெச்சம். ஊழி வாழ் திருநகர் - ஊழிக் காலத்தும் அழியாத வளநகர் என்றலுமாம்; ''ஊழியி னிறுதி யுறையுளோ'' (பால. 95). நகரின் செல்வப் பொலிவு திருமகளாக உருவகிக்கப்பெற்றது. நகர்த்திரு - நகரின் அதிதேவதை என்பாரும் உளர்.

(பி - ம்.) 2. எய்திய.
4. திருத்தீர்ந்தனள். (38)

பரதன் தசரதனது மாளிகையை அடைதல்

834. அனைய வேலையி லச்சுடைத் தேரரண்
மனையி னீணெடு மங்கல வாயிலை
நினையு மாத்திரத் தெய்தலு நேமியான்
தனைய னுந்தந்தை சார்விட மெய்தினுன்.

அனைய வேலையில் - அந்தச் சமயத்தில், அச்சு உடை(ய) தேர் - வலிய அச்சினையுடைய தேரானது, நினையும் மாத்திரத்து - நினைப் பளவில் (மனோ வேகமாக), அரண்மனையின் - அரச மாளிகையின், நீள் நெடு மங்கலம் வாயிலை எய்தலும் - நீண்டுயர்ந்த மங்களமான வாசலை அடைந்ததாக, நேமியான் தனையனும் - சக்கரவர்த்தியாகிய தசரதனின் புதல்வனுன பரதனும், (தேரைவிட்டு இறங்கி), தந்தை சார்வு இடம் எய்தினுன் - தந்தை (வழக்கமாகத்) தங்கும் இடத்தை அடைந்தான்.

அனைய வேலை - பரத சத்துருக்கனர் கவலையோடு இருந்த அச் சமயம். நினையும் மாத்திரத்து என்றது தேரின் விரைவு குறித்தது. தந்தையின் ஓலை பெற்றதனுலும், எவ்வகையிலும் முதலில் காண வேண்டியது தந்தையையே யாதலாலும், பரதன் தந்தையின் இருப் பிடத்துக்கு முதலில் சென்ருன்.

(பி - ம்.) 1. வேலையில் அக்கடைத், வேலை அகன்கடைத், வேலையிலரசுடைத், வேலையிலச்சுடர்த், வேலையிலச்சிடைத், வேலையிலக்கணத்; தோரணி, தோரண.
2. மனையின் மாதிர, மனையினீண்டுயர், மனையிஞெங்கிடும், மனையிஞேக்கிய, மனையினன்னெடு; மங்கலவீதிகள், வாயில்கள், வாயிலின், மனையின் மங்கல வீதிகள் யாவையும்.
3. மினையுமாத்திரத்தேகிய, மாத்திரத்தெய்தினன், மாத்திரத்தே சென்ற, மாத்திரமேகிய, மினவின் மாத்திரத்தெய்தலும், மினவின் மாத்திரத்தேசென்று.
4. தனையரும்; சார்விடன்; மேவினன், எய்தினர், எய்தலும். (39)

அரசனைக் காணாது பரதன் ஐயுறுதல்

835. விருப்பி னெய்தினன் வெந்திறல் வேந்தனை
இருப்பு நல்லிட மெங்கணுங் கண்டிலன்
அருப்ப மன்றிதென் றையுற வெய்தினன்
பொருப்பு நாண வுயர்ந்தபொற் றோளினன்.

விருப்பின் எய்தினன் - (தந்தையைக் காணவேண்டுமென்ற) ஆவலோடு வந்தவனான, பொருப்பும் நாண உயர்ந்த பொன் தோளினன் - மலையும் நாணும்படி திரண்டோங்கிய அழகிய புயங்களை உடைய பரதன், வெம் திறல் வேந்தனை - மிக்க வலிமையுடைய அத் தசரதனை, இருப்பு நல் இடம் எங்கணும் - அவன் இருத்தற்குரிய நல்ல இடங்கள் எல்லாவற்றிலும், கண்டிலன் - காணாதவனாய், இது அருப்பம் அன்று என - (இவ்வாறு காணப்படாத) இது அற்பமான நிகழ்ச்சி அன்று என்று, ஐயுறவு எய்தினன் - ஐயங் கொண்டான்.

தந்தையை எங்கே தேடியும் காணாமையால், 'இது சாமானிய மன்று; ஒரு வேளை தந்தை உயிர் நீத்திருத்தலுங் கூடும்' என்று சந்தேகப்பட்டான் பரதன். எய்தினவனான தோளினன் என இயைக்க. அருப்பம்: அல்பம் என்ற வடசொல்லின் திரிபு; "அருப்ப மென்று பகையையு மாரழல், நெருப்பை யும்மிகழ்ந் தாலது நீதியோ" (யுத்த. 1047).

(பி - ம்.) 1. எய்திய, எய்தினர், எய்தியவ்; வேந்தினை; வீரனை, ஏந்தலவ் வேந்தனை.
2. இருப்பினல்லிடம்; எங்ஙனம்; கண்டிலர்.
3. அருப்பமன்றிதன்று, என்றிதன்று, அருப்பமேயிதென்று; ஐயுறல்; எய்தினர்.
4. உயர்ந்தபுயத்தினன், எழுந்தபொற்றோளினன், வளர்ந்தபொற் றோளினன், பொற்றோளினர், புயத்தினன். (40)

பரதனைக் கைகேயி அழைப்பித்தல்

836. ஆய காலையி லையனை நாடித்தன்
தூய கையிற் றொழிலுறு வான்றனைக்
கூய வன்னை குறுகுதி ரென்றொரு
வேய்கோ டோளி தொழுது விளம்பினள்.

ஆய காலையில் - அவ்வாறு ஐயங்கொண்டபோது, ஐயனை நாடி - தந்தையை (எவ்வகையிலாவது) தேடிக் கண்டு, தன் தூய கையின் தொழல் உறுவான் தன்னை - தன்னுடைய தூய கைகளால் (திருவடி பற்றித்) தொழ முற்படுகின்ற பரதனை, ஒரு வேய்கொள் தோளி - மூங்கிலை யொத்த தோள்களையுடைய ஒருத்தி, தொழுது - (எதிர்வந்து) வணங்கி, அன்னை கூயள் - உம் தாய் உம்மை அழைத்தாள், குறுகுதிர் என்று - அங்கே வருவீராக என்று, விளம்பினுள் - சொன்னுள்.

தன் மனத்தில் எழுந்த ஐயுறவினுல், தந்தையை எப்படியும் தேடிக் காணவேண்டும் என்ற மனவேகத்துடன் செல்லும் பரதனிடம், கைகேயி அனுப்பிய சேடி ஒருத்தி வந்து, 'தாயார் உங்களை அங்கே அழைத்துவரச் சொன்னுர்; வருக' என்று கூறினுள். ஐயன் - இராமபிரான் என்று கொண்டு கூறுதலும் உண்டு. பரதன் கோசலையைக் காணச் சென்ருன் என்று பொருள் கொள்ளத்தக்கவாறு பாடபேதமும் உளது.

இப்பாடல் ஒரு பிரதியில் இல்லை. தந்தையைக் காணுத பரதன், கைகேயிபாலுள்ள பேரன்பினுல், தந்தை அவளிடம் இருத்தல் கூடும் என்று கருதி அவளது மாளிகையைத் தாஞகவே சென்று அடைந்தான் என்று வான்மீகம் கூறும்.

(பி - ம்.) 1. காலையினையனை, காலத்தனையனை, காலத்திலையனை, காலைத்தனையனை, காலைத்தனையனை, காதற்றனையனை; நாட்டந்த; மூ. ஆயகாலையிலையனைத் தந்தவத்
2. தூயகையால், தூயதையல், தூயவையன், தூயதாயர்த், தூயதாயைத், தாயையன்பின்; தொழிலுறுவான்றனைத், தொழிலுறுவானைக்.
3. கூயரன்னை, கூயினன்னைக்; குறுகுதிரீண்டென, ஆண்டென, குறுகுதியென்ருரு, குறுகுதிராண்டென்ருேர்; கூயளன்னையென்றே சென்றுகூறலும்.
4. வேய்கொடோளியர் வந்து விளம்பினுர், வேய்கொடோளியொருத்தி விளம்பினள்; ஏலவன்பினன்ருனுஞ்சென்றெய்தினுன். (41)

கைகேயி பரதனைத் தழுவி நலன் உசாவுதல்

837. வந்து தாயை யடியில் வணங்கலும்
சிந்தை யாரத் தழுவின டிதிலர்
எந்தை யென்னைய ரெங்கைய ரென்றனள்
அந்த மில்குணத் தானும தாமென்ருன்.

வந்து - (சேடியின் சொற்படி பரதன்) வந்து, தாயை - கைகேயியை, அடியில் வணங்கலும் - பாதங்களில் விழுந்து வணங்கியவுடன், (கைகேயி) சிந்தை ஆர - தன் மனம் நிறைவு கொள்ள, தழுவினள் - (பரதனை எடுத்துத்) தழுவியவள்ாய், எந்தை - என்

தந்தையும், என் ஐயர் - என் தமையன்மாரும், எங்கையர் - என் தங்கையரும், தீது இலர் - தீதின்றி (நலமாக) உள்ளனரோ, என்றனள் - என்று வினவினள்; அந்தம் இல் குணத்தானும் - அளவில்லா நற்குணங்களையுடைய பரதனும், அது ஆம் என்றான் - அஃது அவ்வாறே என்றான்.

வந்து வணங்கிய பரதனைக் கைகேயி எடுத்துத் தழுவித் தன் பிறந்தகத்தாரின் நலம் வினவ, அவனும் சுருங்க விடை கூறினன். தந்தையைக் காணாத மனத்துயர் பெரிதாயினும், தாய் கேட்டதற்குப் பொறுமையுடன் விடையளித்தான். 'தீதிலர்' என்றதனை ஓசை வேறுபாட்டால் வினவாகக் கொள்க; காகுசுவரம்; அது ஆம் என்றது, தீதிலரோ என்ற வினவிற்கு, 'அவ்வாறே தீதிலர்' என்று விடையிறுத்தபடி.

(பி - ம்.) 1. வந்த : தாயை அடியின், தாயரடியின்.
2. நிதிலன்.
3. என்னையரேனையர், அன்னையரெங்கையர், அன்னையரென்னையர், அன்னையரேனையர்; என்றலும். என்றுளார்,
4. அதாமென, இதாமென. (42)

மன்னனைப்பற்றிப் பரதன் கேட்டல்

(வேறு)

838. மூண்டெழு காதலான் முளரித் தாடொழ
வேண்டினெ னெய்தினெ னுள்ளம் விம்முமால்
ஆண்டகை நெடுமுடி யரசர் கோமகன்
யாண்டையான் பணித்திரென் றிருகை கூப்பினான்.

மூண்டு எழு காதலான் - (தந்தையைக் காணுதலில்) கிளர்ந்தெழும் ஆவலுடையவனான பரதன் (தாயை நோக்கி), ஆண்தகை - ஆண்மையில் சிறந்தவரும், நெடுமுடி - நீண்ட முடி அணிந்தவரும் ஆகிய, அரசர் கோமகன் - சக்கரவர்த்தியின், முளரி தாள் - தாமரை போன்ற திருவடிகளை, தொழ வேண்டினென் எய்தினென் - (கண்டு) தொழவேண்டி விரைந்து வந்துளேன்; உள்ளம் விம்மும் - (காணாமையால்) என் மனம் ஏங்குகின்றது; யாண்டையான் - (சக்கரவர்த்தி) எங்குளான்? பணித்திர் என்று - சொல்லுங்கள் என்று, இரு கை கூப்பினான் - தன் இரு கைகளையும் கூப்பி அஞ்சலி செய்து கேட்டுக் கொண்டான்.

தந்தையை, வழக்கமாக இருத்தற்குரிய இடங்களில் காண இயலாமையால், தாயிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்து, 'யாண்டையான்? பணித்திர்' என்று விரைவு தோன்றக் கூறினான். ஐயுறவு கொண்ட அவனது மனம், அதனைத் தெளிந்துகொள்ளவே விரைந்ததாகலின், கைகேயியின் வினாக்களுக்கு முழு மனத்துடன் அவன் விடையளிக்கவில்லை.

'காதலான்' என்றது, மூன்றனுருபேற்றதெனக் கொண்டு பொருள் கூறுதலும் ஆம்; அதற்கு, எழுவாய் வருவித்துரைக்க. வேண்டினென்: முற்றெச்சம். ஆல் : அசை. அரசர் கோமகன் - அரசர்க்கரசன்; சக்கரவர்த்தி.

(பி - ம்.) 1. காதலின்; தாடொமா.
2. வேண்டினனெய்தினன், வேண்டியதிரங்கினன், வேண்டியதிரங்கி யென்; விம்மலால், விம்முவான்.
3. கோன்மகன்.
4. யாண்டையன்; பணித்தியென்றங்கை. (43)

கைகேயி கூறுதல்

839. ஆனவ னுரைசெய வழிவில் சிந்தையாள்
தானவர் வலிதொலைத் தவனி தாங்கிய
தேனமர் தெரியலான் றேவர் கைதொழ
வானக மெய்தினன் வருந்த னீயென்றாள்.

ஆனவன் உரைசெய - அப்பரதன் (அவ்வாறு) கேட்க, அழிவு இல் சிந்தையாள் - கலங்குதல் இல்லாத மனத்தை உடைய கைகேயி (அவனை நோக்கி), தானவர் வலி தொலைத்து - அசுரரின் வலிமையை அழித்து, அவனி தாங்கிய - உலகைக் காத்த, தேன் அமர் தெரியலான் - தேன் பொருந்திய பூமாலையை அணிந்த சக்கரவர்த்தி, தேவர் கை தொழ - தேவரும் வணங்கும்வண்ணம், வான் அகம் எய்தினன் - சுவர்க்கத்தை அடைந்தான்; நீ வருந்தல் என்றாள் - நீ வருந்தாதே என்றாள்.

அரசர் கோமகன் யாண்டையன் என்று பரதன் கேட்ட அளவில் மனம் கலங்கி விடைகூற இயலாத நிலையெய்த வேண்டியவள், சிறிதும் கலங்காமல் செய்தி சொல்லி, நீயும் வருந்தாதே என்றமையின், 'அழிவில் சிந்தையாள்' என்றார். தனக்கு வரம் கொடுத்ததற்குக் காரணமான சம்பராசுரவதத்தை எண்ணினாள். 'வானவர்க்காகத் தானவர் வலிதொலைத்தவனாதலால், வானவர் போற்ற வானுலகிலும் பெருமையும் இன்பமும் எய்துவான்; அதுகுறித்து மகிழ்க' என்றது அவள் கூறியதன் கருத்து.

(பி - ம்.) 1. மானவன்; உரைசெய்ய; வழுவில்; சிந்தையள், சிந்தையான்.
2. வலிதப, வலிதவ, வலிகெட, வலிதொலை; நிமிர்ந்ததானையத், உயர்ந்ததானையத், ஈர்ந்ததானையத்.
3. தேனலர், தேமலர், தேனமிர்.
4. எய்தினன். (44)

பரதன் நிலை

840. எறிந்தன கடியசொற் செவியி னெய்தலும்
நெறிந்தலர் குஞ்சியா னெடிது வீழ்ந்தனன்
அறிந்தில னுயிர்த்தில னசனி யேற்றினால்
மறிந்துயர் மராமர மண்ணுற் றென்னவே.

எறிந்த அன்ன - (வேலால் மருமத்தில்) தாக்கியதுபோன்ற, கடிய சொல் - (கைகேயி கூறிய) கொடுஞ் சொல், செவியின் எய்தலும் - காதிற்பட்ட அளவில், நெறிந்து அலர் குஞ்சியான் - நெறிப்புடையதாய் விரிந்து கிடந்த தலைமயிரையுடைய பரதன், உயர் மராமரம் - ஓங்கி வளர்ந்த மராமரமொன்று, அசனி ஏற்றினால்-பேரிடியால், மறிந்து மண் உற்றது என்ன - வேரற்றுத் தரையில் சாய்ந்தது போல, நெடிது வீழ்ந்தனன் - நெடிதாகத் தரையில் விழுந்து, அறிந்திலன் - தன்னுணர் வற்றவனாய், உயிர்த்திலன் - மூச்சற்றான்.

தந்தையைக் காணாது ஏங்கித் தவித்த பரதனுக்குக் கைகேயியின் சொல் பேரிடிபோல் ஆயிற்று. நீண்டுயர்ந்து, தலைவிரி கோலமாய் நின்ற பரதன் தாய் சொற் கேட்டு, அந்நிலையிலே தரையிற் சாய்ந்தான் என்பார், தலைவிரிந்த நெடிய மராமரம் இடியால் தரையில் சாய்ந்ததனை உவமித்துக் கூறினார். பரதனது தலைவிரி கோலத்தை, நெறிந்தலர் என்பதனாற் குறிப்பித்தார். 'எறிந்தன' என்றதற்கேற்பக் கருவி வருவித்துரைக்கப்பட்டது. எய்தல் - அம்பெய்தல் என்ற குறிப்பும் பெறப்படும். வீழ்ந்தனன், அறிந்திலன் : முற்றெச்சம். உற்றென்ன; தொகுத்தல் விகாரம். மராமரம் - வெண்கடம்பு என்பர்.

(பி - ம்.) 1. செவியுன்.
2. நெறிந்தன, நெறிந்தபேர், நெறிந்துயர்; குஞ்சியன், குஞ்சியார்; வீழ்ந்தனர்.
3. அறிந்திலருயிர்த்திலர்.
4. மாமரம், மதவரை. (45)

பரதன் கைகேயியைக் கடிந்துரைத்தல்

841. வாயொளி மழுங்கத்தன் மலர்ந்த தாமரை
ஆயலர் நயனங்க ளருவி சோர்தரத்
தீயெரி செவியில்வைத் தனைய தீயசொல்
நீயல துரைசெய நினைப்ப ரோவென்றான்.

(மூர்ச்சையுற்ற பரதன் சிறிது தெளிந்து) வாய் ஒளி மழுங்க - (உடம்பில்) பொருந்திய நல்ல ஒளி மழுங்கவும், மலர்ந்த - நன்கு விரிந்த, தாமரை ஆய் அலர் - தாமரையின் அழகிய மலர்போன்ற, தன் நயனங்கள் - தன் கண்களில், அருவி சோர்தர - நீர் அருவி போலப் பெருகவும் (கைகேயியை நோக்கி), தீ எரி - (எவற்றையும்) எரிக்கும் நெருப்பை, செவியில் வைத்த(து) அனைய - காதில் வைத்தாற் போன்ற, தீய சொல் - (நீ கூசாது கூறிய) கொடுஞ்சொல்லை, நீ அலது - உன்னை யன்றி, உரை செய நினைப்பரோ - (பிறர் எவரும்) சொல்ல நினைத்தலும் செய்வரோ? (செய்யார்) என்றான்—.

துயரம் தாங்காத பரதன், தாயைக் கடிபவனாய், 'பிறர் சொல்ல நினைக்கவும் கூசும் கொடுஞ் சொல்லை நீ வாய் கூசாது சொன்னாய்;

உன்னைப்போற் கொடியவர் இல்லை' என்றான். அவனுடம்பும் முகமும் இயல்பான பொலிவை இழந்தன.

வாயொளி : வினைத்தொகை. வாய் - முகம் எனவும், வாய் எனவும் உரைத்தலுமாம். தாமரை போல மலர்ந்த கண்கள் என்றலுமாம். தீய சொல்: 'மன்னன் வானுலக மெய்தினான்; நீ வருந்தாதே' என்றது. வைத்தனைய : தொகுத்தல் விகாரம்.

(பி - ம்.) 1. மழுங்கத்தான், மழுங்கித்தன், மழுங்கித்தான்.
2. ஆய்மலர்.
3. தீயெரிசெவியின், தீயிருசெவியில்; தீச்சொலை, தீச்சொல்லைத்.
4. மீயலாது; வினைப்பரோவென, வினைப்பரோவென. (46)

பரதன் புலம்புதல்

842. எழுந்தன னேங்கின னிரங்கிப் பின்னரும்
விழுந்தனன் விம்மினன் வெய்து யிர்த்தனன்
அழிந்தன னரற்றின னரற்றி யின்னன
மொழிந்தனன் பின்னரு முருகற் செவ்வியான்.

முருகன் செவ்வியான் - முருகனைப் போல் அழகுடைய பரதன், எழுந்தனன் - (கிடந்தவன்) எழுந்து நின்று, ஏங்கினன் இரங்கி - (தந்தையை நினைந்து) ஏங்கி அழுது, பின்னரும் விழுந்தனன் - மீண்டும் (நிலை கொள்ளாது) விழுந்தான்; விம்மினன் - பொருமினான்; வெய்து உயிர்த்தனன் - பெருமூச்செறிந்தான்; அழிந்தனன் அரற்றினன் - மனங் கலங்கி வாய்விட்டு அழுதான்; அரற்றி—, பின்னரும் இன்னன மொழிந்தனன் - மேலும் இவற்றைச் சொல்லலானான்.

பரதன் புலம்பிக் கூறியவை மேலே ஒன்பது கவிகளிற் கூறப்படும். வினைமுற்றுக்களை அடுக்கிச் சொன்னது அவனுடைய சோகத்தால் விரைவாக எழுந்த மெய்ப்பாடுகளைக் குறித்தது.

எழுந்தனன், ஏங்கினன், அழிந்தனன் என்பன முற்றெச்சங்கள். செவ்வி - அழகு.

(பி - ம்.) 1. இரங்கினன் ஏங்கிப்.
3. அழுங்கினன்; அரற்றியின்னனம், அயர்ந்து வீழ்ந்தனன்.
4. முருகச், முருகிற், முகிலிற். (47)

843. அறந்தனை வேரறுத் தருளைக் கொன்றனை
சிறந்தநின் றண்ணளித் திருவைத் தேசழித்
திறந்தனை யாமெனி னிறைவ நீதியை
மறந்தனை யுனக்கதின் மாசு மேலுண்டோ.

இறைவ - அரசே, அறம் தனை வேர் அறுத்து - தருமத்தை வேர் பறித்து, அருளை கொன்றனை - அருளையும் அழித்து, சிறந்த நின் தண் அளி திருவை - சிறந்த உன்னுடைய தண்ணளி செய்தலாகிய செல்வத்தை, தேசு அழித்து - ஒளி கெடச் செய்து, இறந்தனை எனின் - நீ இறந்தாயென்றால், நீதியை மறந்தனை (ஆம்) - அரச நீதியை மறந்து விட்டாயென்றாகும்; உனக்கு இதின்மேல் மாசு உண்டோ - உனக்கு இதன்மேலும் களங்கமுண்டோ?

ஆராமையால் கூறிய இது, பழிப்பது போலத் தோற்றினும், தசரதன் ஆட்சியில் அறமும் அருளும் அரச நீதியும் நிறைந்து சிறந்திருந்தன என்றலின், பழித்தலன்று; புகழ்தலே ஆகும்.

கொன்றனை: முற்றெச்சம். இறந்தனை ஆம் என்றதில் 'ஆம்' என்பது, பிரித்து மறந்தனை என்பதனோடு கூட்டப்பெற்றது.

(பா-ம்.) 1. கொன்றயப், கொன்றயர், கொன்றுயிர், கொன்றயான்.
3. இறந்தனையாலெனில்; இறைவர் நீதியை, இறைவனீதியை.
4. இதன்மாசு, இனிமாசு; வேறுண்டோ, வேண்டுமோ. (48)

844. சினக்குறும் பெறிந்தெழு காமத் தீயவித்
தினக்குறும் பியாவையு மெற்றி யாவர்க்கும்
மனக்குறு நெறிசெலும் வள்ளி யோய்மறந்
துனக்குறு நெறிசெல லொழுக்கின் பாலதோ.

சினம் குறும்பு எறிந்து - சினமாகிய பகையை அழித்து, காமம் தீ அவித்து - காமமாகிய தீயை அடக்கி, இனம் குறும்பு யாவையும் எற்றி - (உட்பகை ஆறனுள் மேல் இரண்டுக்கும்) இனமான ஏனைய எல்லாவற்றையும் தாக்கி ஒழித்து, யாவர்க்கும் மனக்கு உறு நெறி செல்லும் - எவர்க்கும் மனத்துக்குப் பொருந்திய செவ்விய நெறியில் செல்லுதலுற்ற, வள்ளியோய் - வள்ளன்மையுடையவனே, மறந்து - (இத்தன்மையைக்) கைவிட்டு, உனக்கு உறுநெறி செல்லல் - உனக்கு (மறுமையில்) இன்பமுளதாகும் நெறியிலே செல்லுதல், ஒழுக்கின் பாலதோ - சீறிய ஒழுக்கத்தின்பாற்படுவதாகுமோ? (ஆகாது).

தசரதன் இருந்தவரையில், தன்னலமின்றி மன்னுயிர்க்கு நலமே நாடிச் செய்தவன் இப்போது சென்றது தன்னலங் கருதியதாகலின், 'ஒழுக்கின்பாலதோ' என்றான். இதுவும் முன்னையது போன்றது. காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் என ஓரினமான உட்பகை ஆறனுள், காமம் குரோதம் என்ற இரண்டையும் எடுத்துக் கூறி, "இனக் குறும்பு யாவையும்" என்றதனால், இவ்விரண்டும் ஒழிந்த ஏனைய நான்கும், இவற்றைச் சார்ந்து வரும் தீமைகள் பிறவும் கொள்ளத்தகும். தீய பிறத்தல் சினத்தால் வருவதாகலின் முற்கூறினார். புறப் பகையை அழித்தற்குரிய 'எறிந்து', 'எற்றி' என்ற வினைகளால் இவற்றையும் கூறினார்.

(பி - ம்.) 1. எறிந்தெழும் காமத் தீயெழுத்து.
2. யாவையுமாற்றி, யாவையுமேற்றி; இனக்குறும்புலோபையுமாற்றி, உலோபையுமெற்றி, உலோபையுமொற்றி, இனக்குறைபாவர்க்கு மெற்றி, உரிமையுமெற்றி, யாவையுமகற்றி.
3. மனக்குறி; நெறிசெல்லும் நெறிசொலும்; வள்ளியோய்மறைந்து.
4. உனக்குறநெறிசெல, கதிசெல, கதிசெலல், கெதிசெல, தனக்குற நெறிசெலல்; தவத்தின்பாலதோ. (49)

845. முதலவன் முதலிய முந்தை யோர்பழங்
கதையையும் புதுக்கிய தலைவ கண்ணுடை
நுதலவன் சிலைவிலி னேன்மை நூறிய
புதல்வனை யெங்ஙனம் பிரிந்து போயினுய்.

முதலவன் முதலிய - நம் குல முதல்வனுன மனுமுதலான, முந்தையோர் - முன்னேர்களின், பழங்கதையையும் - (வீரமும் நீதியும் பற்றிய) பழைய வரலாறுகளையும், புதுக்கிய - உன் செயலால் புதுப்பித்த, தலைவ - தலைமையுடையவனே, கண் உடை(ய) நுதலவன்- நெற்றிக் கண்ணையுடைய சிவபிரானது, சிலை வில்லின் நோன்மை - மலைபோன்ற வில்லின் வலிமையை, நூறிய - (எளிதில்) அழித்த, புதல்வனை - அரும்புதல்வனுகிய இராமனை, எங்ஙனம் பிரிந்து போயினுய் - எவ்வாறு பிரிந்து போனுய் ?

இதுகாறும் தந்தையின் தண்ணளியையும் நீதியையும் குறித்துக் கூறிய பரதன், இதில் நீதியோடு வீரத்தையும் குறிக்கின்ருன். குல முதல்வனுன மனு நீதியாலும், அவன் பின்வந்த இட்சுவாகு முதலியோர் வீரத்தாலும் மேம்பட்டவர்களாய்த் தம் வரலாற்றைப் பின்னேர் கதையாகச் சொல்லிப் பாராட்ட விளங்கியவர்கள்; தசரதன், அவற்றை நேரே அனைவரும் காணும்படி விளங்கினுன்; அவனது ஆட்சியால் நீதியும், சம்பரனை வென்றதால் அரிய வீரமும் புலப்பட்டன; எனவே, 'முந்தையோர் பழங்கதையையும் புதுக்கிய தலைவன்' எனப் பெற்ருன். தலைவன் என்று பாடம் கொண்டு இராமன் எனக்கொண்டு கூறுதலுமாம். அடுத்து இராமபிரானையே உயிராகக் கொண்டவனுதலின் (பால. 302, பார்க்க), 'அவ்விராமனை எங்ஙனம் பிரிந்து போயினுய்' என்கின்ருன். முதல்வன் மனு என்றமை: "ஆதித்தன் குல முதல்வன் மனுவினையா ரறியாதார்" (பால. 712). சிலைவில் - மலை போன்ற வில்; மேரு மலையின் அமிசமான வில்லெனவுமாம் (பால. 774); சிலை யென்னும் மரத்தாற் செய்த வில் என்பர் நச்சினுர்க்கினியர் (கலி. 15 : 1, உரை); முழங்கும் வில் என்ருரும் உளர்; சிலைவில் (குறுந். 385; ஐங்குறு. 363; அகநா. 69:15; பெருங். 3.20:8). இராமபிரான் வில்லின் வலிமை கெடுத்தது. சனகன் வைத்த வில், பரசுராமன் கை வில் என்ற இரண்டுக்கும் பொருந்தும்.

(பி - ம்.) 1. முதல்வனை முதலிய.
2. தலைவன்.
3. சிலைவலின் வலிமை, சிலைவலிநோன்மை, மலைவலிநோன்மை, ஒண்சிலை நோன்மை; வலிமை.
4. எங்கனம்; போயினன். (50)

846. செவ்வழி யுருட்டிய திகிரி மன்னவ
எவ்வழி மருங்கினு மிரவ லாளர்தாம்
இவ்வழி யுலகினி லினிய நண்பினேர்
அவ்வழி யுலகினு முளர்கொ லோவையா.

செம்மை வழி உருட்டிய - நேர்மையான நெறியிலே செலுத்திய, திகிரி - ஆணைச் சக்கரத்தையுடைய, மன்னவ - அரசே, ஐயா - என் ஐயனே, இ வழி உலகினில் - இவ்வுலகத்தில், இனிய நண்பினேர் - (உனக்கு) இனிய நட்பாளராவோர், எ வழி மருங்கினும் இரவல் ஆளர் தாம் - எங்கும் உள்ள இரவலரே ஆவர்; அ வழி மருங்கினும் - அவ்வுலகத்திலும், உளரோ - (அவ்விரவலர்) இருக்கின்றனரோ? (இல்லையே).

தசரதன், இரப்போர் கடலை ஈந்தே கடந்தான் (பால. 173) ஆகலின், 'உனக் கினிய நண்பினர் இரவலாளர்தாம்' என்றான்; "இரவலர் தமரினு மினிய ராவரே" (நைடத. நளன்தூது. 22). இராமனைப் பிரிந்து எங்ஙனம் சென்றாய் என்றவன், 'அதுபோல, இரவலருக்கு ஈதற் பொருட்டேனும் இங்கிருத்தலாகாதோ? விண்ணுலகில் ஏற்பார் எவரும் இலரே!' என்கின்றான். "ஈவாருங் கொள்வாரு மில்லாத வானத்து, வாழ்வாரே வன்க ணவர்" (குறள். 1058, பரிமேல். மேற்.) புறநா. 38 12 – 5, அடிக் குறிப்பும் பார்க்க. கொல் : அசை. ஓகாரம் எதிர்மறை உணர்த்திற்று.

(பி - ம்.) 1. மன்னவன்.
2. எவ்வழிமரபினும், மரபினர், மன்னரும், ஆயினும்; இரவலாளர்கள், இரவலாளராம், இரவலாளரும், இரவலார்களில், இரவலார்மற்று.
3. உலகினின், உலகினும்; இனியநண்பினர், நண்பரும், இயைந்த நண் பினேர், இன்மை நண்பினேர், நண்ணினர், நண்ணினேர்.
4. உலகினுமுளர்கொலாம், ஆர்கொலாம், உலகினிலார்கொலாம், ஆர்கொலோ, உலகினின்ஞர்கொலாம், உலகினுளர்கொலோ, உலகிலுளர்கொலாம். (51)

847. பற்பக னிழற்றுநின் கவிகைப் பாய்நிழல்
நிற்பன பல்லுயி ருணங்க நீநெடுங்
கற்பக நறுநிழல் காத லித்தியோ
மற்பக மலர்ந்ததோண் மன்னர் மன்னனே.

மல் பக - பிறருடைய மற்போர்த் திறமை கெடும்படி, மலர்ந்த தோள் - விரிந்த தோள்களையுடைய, மன்னர் மன்னனே - அரசர்க்கு

அரசே, பல் பகல் - மிக நெடுங்காலமாக, நிழற்றும் - (உயிர்களுக்கு) நிழலைத் தந்த, நின் கவிகை - உனது வெண்கொற்றக் குடையின், பாய்நிழல் - பரந்த நிழலில், நிற்பன பல் உயிர் - இன்பமாகத் தங்கியிருந்த பல உயிர்களும், உணங்க - (நிழற்றுவாரின்றி) வாட, நீ—, நெடு கற்பகம் நறுநிழல் - பெரிய கற்பக மரத்தின் நறுமணம் பரவும் இனிய நிழலை, காதலித்தியோ - விரும்புகின்றாயோ?

காப்பாரின்றி உயிர்கள் வருந்த, உனக்கு இன்பந் தேடிக்கொண்ட இது முறையாகாது என்ற இதுவும் பழிப்பதுபோலத் தோற்றினும், அவனது ஆட்சிச் சிறப்பைக் குறித்தலின் புகழ்ச்சியேயாம். பல்பகல் என்றது, அறுபதினாயிரம் ஆண்டாகிய கால நீட்டிப்பைக் குறித்தது. பாய்தல் - பரவுதல்.

(பி - ம்.) 1. கவிகைபாய்நிழல், பார்நிழல், பாணிழல், கவிகைப்பார்நிழல், கவிகைப்பாணிழல்.
2. பலவுயிர், பல்லுரு; உணங்க நீணெடும், உணங்கி நீணெடும்.
3. நறுநிழற்காதலித்தியோ.
4. மற்பக மலைந்த. (52)

848. இம்பர்நின் றேகினை யிருக்குஞ் சார்பிழந்
தும்பர்வந் துன்கழ லொதுங்கி னார்களோ
சம்பர னனையவர் தானைத் தானவர்
அம்பரத் தின்னமு முளர்கொ லோவையா.

ஐயா - ஐயனே, இம்பர் நின்று ஏகினை - நீ இவ்வுலகினின்றும் (விண்ணுலகு) சென்றாய்; (அதற்குக் காரணமாக) உம்பர் - தேவர்கள், இருக்கும் சார்பு இழந்து - தாம் இருக்கும் இடத்தை இழந்து (தங்க இடம் இன்றி), வந்து - இங்கு வந்து, உன் கழல் ஒதுங்கினார்களோ - உன் பாதங்களில் சரண் புகுந்தார்களோ? சம்பரன் அனையவர் - சம்பராசுரனைப் போன்றவர்களான, தானை தானவர் - பெரும் படையையுடைய அசுரர், அம்பரத்து - விண்ணுலகில், இன்னமும் உளர் கொலோ - இன்னமும் இருக்கின்றார்களோ?

'ஐயனே, முன்னம் நீ, தேவர்களுக்குச் சம்பராசுரனால் நேர்ந்த துன்பத்தைந் போக்கி அவர்களைக் காத்தாய்; அது போன்றது ஏதேனும் இப்போதும் அவர்களுக்கு நிகழ்ந்ததாக, அவர்கள் உன்னைச் சரணடைந்தார்களோ? அதனாலேதான் அவர்களைக் காத்தற்காக அங்கே சென்றாயோ?' என்கின்றான். 'உன் நலம் நாடிச் சென்றாய்', 'உயிர்களை வருந்தவிட்டுச் சென்றாய்' என்று முன்னே கூறியவன், அவை தந்தையின் பெருமைக்குத் தகாவென்று கருதி, 'முன்போல இப்போதும் தேவர்க்குதவியாகச் சென்றாயோ?' என்றான்.

(பி - ம்.) 1. சார்விழந்து.
2. ஒதுங்கினர் கொலாம், ஒதுங்கினர்கொலோ, எய்தினர்கொலாம், எய்தினர்களோ.
3. சம்பரனனையவத், அனையவான்; தானத்தானவர், தருக்குந்தானையர்.
4. உயிர்கொலாமையா. (53)

849. இயங்கெழு தானைய ரிறுத்த மாத்திறை
உயங்கலின் மறையவர்க் குதவி யும்பரின்
அயங்கெழு வேள்வியோ டரசர்க் கோதிய
வயங்கெரி வளர்க்கலை வைக வல்லையோ.

இயம் கெழு தானையர் - (பலவகை) வாத்தியங்களின் ஒலிமிக்க படைகளையுடைய (பல) அரசர்கள், இறுத்த - (உனக்குச்) செலுத்திய, மா திறை - மிக்க திறைப்பொருள்களையெல்லாம், உயங்கல் இன் மறையவர்க்கு உதவி - (விரதங்களால் உடம்பு) வருந்துதலையுடைய இனிய வேதியர்க்கு(த் தானமாக)க் கொடுத்து, அயம் கெழு வேள்வியோடு - அசுவமேதத்தோடு, அரசர்க்கு ஓதிய - அரசருக்குச் சொல்லப் பட்ட, வயங்கு எரி வளர்க்கலை - விளங்கும் தீ வளர்த்துச் செய்வன வற்றையும் (இங்கிருந்து) செய்யாமல், உம்பரின் வைகவல்லையோ - விண்ணுலகில் (வறிதே) தங்கியிருக்க வல்லாயோ?

தசரதன் செய்யாது விட்ட யாகங்கள் இல்லை; எவற்றினும் மேலான அசுவமேதமும் செய்து அந்தணர்க்கெல்லாம் அளவின்றித் தானம் செய்தான். விண்ணுலகில் இவற்றிற்கெல்லாம் இடமில்லையாதலால், 'இவற்றை விட்டு அங்கே தங்கியிருத்தல் உன்னாலாகுமோ? இங்கேயே தங்கியிருக்கலாமே' என்கின்றான். இதுவும் தசரதனுடைய வேள்விச் சிறப்பும், தானச் சிறப்பும் கூறியதாகும்.

அயம் - குதிரை. அயம் கெழு வேள்வி - பரிவேள்வி; அசுவமேதம். உயங்கல் இல் என்று பிரித்துப் பொருள் கோடலும் ஆம். வளர்க்கலை: முற்றெச்சம். தசரதன் யாகங்கள் பல செய்தமை: பால. 171. திறைப் பொருளைப் பலர்க்கும் உதவல்: "வேந்து தந்த பணிதிறையாற், சேர்ந்தவர் கடும்பார்த்தும்", "பகைப்புல மன்னர் பணிதிறை தந்துநின், நகைப்புல வாணர் நல்குர வகற்றி" (புறநா. 22: 26 – 7; 387 : 12 - 13).

(பி - ம்.) 1. இயங்கெழும்; தானையரிறுத்த மாத்திரை, தானைபவ்விறுத்த மாத்திறை, தானையாயிறுத்த மாத்திறை, தானையர்க்கிறைவ மீணிதி, தாயரினிறுத்த மாத்திறை.
2. உயங்கெழு.
3. வேள்வியோ டமரர்க்காக்கிய, அமரர்க்கேவிய, அமரர்க்கேயவி, அரசற்காக்கிய, அரசற்கெய்திய, அரசற்கேவிய, அரசற்கோதிய, அரசர்க்காக்கிய, அரசர்க்கேவிய.
4. வளர்த்தனை, வளர்த்தலை, வளர்த்திலை, வளர்க்கிலை; வைகல்; மறத்தல், மறக்க. (54)

850. ஏழுயர் மதகளிற் றிறைவ வேகினை
வாழிய கரியவன் வறியன் கையெனப்
பாழியம் புயத்துநின் பணியி னீங்கிலா
ஆழியை யினியவற் களிக்க வெண்ணியோ.

ஏழு உயர் - ஏழு முழம் உயர்ந்த, மதம் களிறு - மதம் பெருகும் அரசுவாவினையுடைய, இறைவ - சக்கரவர்த்தியே, கரியவன் - கரிய திருமேனியையுடைய இராமபிரான், வாழிய - அரசவாழ் வெய்துதற்கு, கைவறியன் என - (தான் தாங்கவேண்டிய) சக்கரமின்றி வெறுங் கையனு யிருக்கின்றுனே யென்று கருதி, பாழி அம் புயத்து - வலிய அழகிய தோள்களையுடைய, நின் பணியின் நீங்கு இல்லா - உன் பணியில் நீங்காதிருக்கின்ற, ஆழியை - ஆணைச் சக்கரத்தை, இனிய வற்கு - (அனைவர்க்கும்) இனியவனுன அவ்விராமபிரானுக்கு, அளிக்க எண்ணியோ - கொடுக்க நினைத்தோ, ஏகினை - இங்கு நின்றும் போயினை?

'ஆணைச்சக்கரந் தாங்கி அரசேற்பதற்குரிய இராமபிரான், நீ உள்ளவரை அது செய்யானென்று கருதி, ஆணைச் சக்கரத்தை அவன் பால் அளிக்கக் கருதியே நீ இங்குநின்றும் போய்விட்டாய் போலும்' என்று படைத்துக் கூறுகின்றுன். இராமன் திருமால்; சக்கரம் அவனுக்கு உரியது; அதனை அவனிடம் சேர்ப்பித்தல் வேண்டும் என்ற கருத்தும் தொனித்தல் காண்க. 'திருமால் சக்கரமின்றி வறிய கைகளை உடையவராயிருக்கின்றுர்; இனி அவர்க்கு இதனை அளிப் போம் என்று எண்ணியோ ஏகினை' (கம்ப. பழைய வசனம்) என்பதும் நோக்கத்தகும்.

ஏழு முழம் உயர்ந்திருப்பது உத்தம யானையின் இலக்கணம். இனி, ஏழு - ஏழு உறுப்புக்கள் எனலுமாம். அவை யாவன: கால்கள், வால், துதிக்கை, கோசம். இவை நிலந்தோய அமைதல் சிறப்பு.

(பி - ம்.) 1. மதக்களிற்று, மழகளிற்று.
2. வாழியர், வாழியற், வாழியான், வாழியாய்; வலியன்கையெனப்.
3. புயத்தினின்; பணியினீங்கலா, பணியை நீங்கலா, பணியு நீங்கலா, பாணி நீங்கலா.
4. இனிதவற்கு, அனையவற்கு; எண்ணியே. (55)

851. பற்றிய தவத்தினிற் பயந்த மைந்தற்கு
முற்றுல களித்தது முறையி னெய்திய
கொற்றவன் முடிமணக் கோலங் காணவும்
பெற்றிலை போலுநின் பெரிய கண்களால்.

பற்றிய தவத்தினில் பயந்த மைந்தற்கு - நீ மேற்கொண்ட தவத்தாற்பெற்ற (மூத்த) புதல்வனுக்கு, முற்று உலகு அளித்து - (நீ ஆண்ட) உலகமுழுதும் கொடுத்து, அது - அவ்வுலகத்தை, முறையின்

எய்திய - முறைப்படி அடைந்த, கொற்றவன் - அரசனான இராமபிரானுடைய, முடி மணம் கோலம் - முடிசூடிய மங்கலக் கோலத்தை, நின் பெரிய கண்களால் - விசாலமான உன் கண்களால், காணவும் பெற்றிலை - காணப் பெற்றாயும் இல்லை.

'பிரிதற்கரிய இராமபிரானைப் பிரிந்த நீ, அவன் அரசு பெறுமாறு விட்டுச் சென்றாயெனின் அவனுக்கு அரசளித்து முடிசூட்டி, அந்தக் கோலத்தைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்த பின்னரேனும் போயிருக்கலாகாதோ? அதுவுமின்றிச் சென்றாயே!' என்கின்றான். தவம் - விரதங்களும், அசுவமேதமும், புத்திரகாமேட்டியுமாகியவை. பரதன் தான் அரசு பெறுதலைக் கனவிலுங் கருதாதவனாதலால், 'மூத்தவற்குரித்தரசு' என்ற முறைப்படி பெறுதற்குரிய இராமபிரானைக் 'கொற்றவன்' என்றான். முடிபுனைதலும் ஒரு மணமேயாகும். "அவனி மாதெனும், ஒருமகள் மணமுங்கண் டுவப்ப வெண்ணினேன்" (29) என்ற தசரதன் கூற்றால், அவன் அதனைக் காணவே விரும்பி இருந்தான் என்பதும் பெறப்படும். போலும்: ஒப்பில் போலி.

(பி - ம்.) 1. பற்றிலை, பற்றறு, பற்றறு; பலமென், பவமென்.
2. அளித்தும், அளித்தன, அளித்துள; முறையுள்; ஏகிய, ஓங்கிய.
3. கொற்றவ மணிமுடிக், கொற்றவன் மணிமுடிக், கொற்றநன் மணிமுடிக், முடிமணக், கொற்றவின் முடிமணக்.
4. பெற்றிலையைய; உன் பெரிய. (56)

பரதன் ஒருவாறு தேறிக் கைகேயியை வினவுதல்

852. ஆற்றல னின்னன பன்னி யாவலித்
தூற்றுறு கண்ணின னுருகு வான்றனைத்
தேற்றின ளன்னைதான் சிறிது தேறிய
கூற்றுறழ் வரிசிலைக் குரிசில் கூறுவான்.

ஆற்றலன் - (துயரம்) தாங்க மாட்டாமல், இன்னன பன்னி - இவை போன்றவற்றைச் சொல்லி, ஆவலித்து - அழுது, ஊற்று உறு கண்ணினன் - நீர் ஊறிப் பெருகும் கண்களை உடையவனாய், உருகுவான் தன்னை - மனமுருகும் மகனை, அன்னை தேற்றினள் - தாயாகிய கைகேயி (ஒருவாறு) தேற்றினாள்; (அதனால்), சிறிது தேறிய - ஒரு சிறிது தேறுதலுற்ற, கூற்று உறழ் வரிசிலை குரிசில் - யமனைப் போன்ற கட்டமைந்த வில்லையுடைய பரதன், கூறுவான் - (அவளை நோக்கிக்) கூறலானான்.

அவன் கூறியது அடுத்த பாடலுள் வரும்.

ஆற்றலன், கண்ணினன்: முற்றெச்சம். ஆவலித்தல் - அழுதல். உருகுவான்: வினையாலணையும் பெயர். தன்: சாரியை. தான்: அசை. 'தேறிய குரிசில்' என்றியைக்க.

(பி - ம்.) 1. ஆற்றிலன், ஆற்றவின்; இன்னணம்.
2. ஊற்றிய கண்ணினும், கண்ணினீர்.
3. தேற்றினளொருவகை, தேற்றினரொருவழி, தேற்றினளொருவகை; தேறியக்.
4. கூற்றுறு, குருசில். (57)

பரதன் கூறுதல்

853. எந்தையும் யாயுமெம் பிரானு மெம்முனும்
அந்தமில் பெருங்குணத் திராம னாதலால்
வந்தனை யவன்கழல் வைத்த போதலால்
சிந்தைவெங் கொடுந்துயர் தீர்க லாதென்றான்.

(சிறிது தேறிய பரதன்) எந்தையும் - எம் தந்தையும், யாயும் - எம் தாயும், எம்பிரானும் - எம் கடவுளும், எம் முனும் - எம் தமையனும் (ஆகிய எல்லாம்), அந்தம் இல் பெரும் குணத்து - எல்லை இல்லாத பெருங் குணங்களையுடைய, இராமன் ஆதலால் - இராமபிரானே யாதலால், அவன் கழல் - அவனுடைய திருவடிகளில், வந்தனை வைத்தபோது அல்லால் - என் வந்தனையைச் சமர்ப்பித்தாலன்றி, சிந்தை - என் மனத்துள்ள, வெம் கொடும் துயர் தீர்கலாது - மிகக் கொடிய துயரம் தீராது, என்றான் - என்று (தாயை நோக்கிக்) கூறினான்.

இதுவரை தந்தையையே நினைந்து அழுதரற்றிய பரதன், இனி அதனாற் பயனில்லை என்று தேறி, இராமபிரானை நினைந்தவனாய், 'அவனைக் கண்டேனும் துயர் தணிவோம்' என்று கருதித் தாயிடம் கூறினான். இராமபிரான்பால் பரதனுக்குள்ள அன்பு யாவரும் அறிந்ததே; அவன் கேகயநாட்டினின்றும் புறப்படும்போதே, 'தம் முனைக் காணலாமெனும் ஆசை கடாவப் புறப்பட்டான்' (802); சத்துருக்கனும் எப்போதும் பரதன் வழி நிற்பவன்; அவனையும் உளப் படுத்தியே பரதன், 'எம் தந்தை' முதலியனவாகப் பன்மையாற் கூறினான். இராமபிரான் குணச் சிறப்பு: "எண்ணருங் குணத் தினவன்" (பால. 98); "குணங்களா லுயர்ந்த வள்ளல்" (பால. 555); "நினைவருங் குணங்கொ டன்றே யிராமன்மே னிமிர்ந்த காதல்" (1033); "ஏத்தரும் பெருங்குணத் திராமன்" (1199); "இகழ்வரும் பெருங்குணத் திராமன்" (சுந்தர. 155.); "நவையறு குணங்க ளென்னும், பூணெலாம் பொறுத்த மேனிப் புண்ணிய மூர்த்தி" (யுத்த. 1588). வெங்கடும் : ஒருபொருட் பன்மொழி.

(பி - ம்.) 1. எந்தையுமாயும், எந்தையுமியாயும், எந்தையும்யாவும், எந்தையு மியாவும், எந்தையும் யாவையுமுலகும்.
4. கடுந்துயர், கடுங்கனல்; தீர்க்கலாது, தீர்விலாது. (58)

இராமன் வனம் சென்றமையைக் கைகேயி கூறுதல்

854. அவ்வுரை கேட்டலு மசனி யேறன
வெவ்வுரை வல்லவண் மீட்டுங் கூறுவாள்
தெவ்வடு சிலையினுய் தேவி தம்பியென்
றிவ்விரு வோரொடுங் கானத் தானென்ருள்.

அ உரை கேட்டதும் - (பரதன் கூறிய) அந்த வார்த்தையைக் கேட்டவுடன், அசனி ஏறு அன்ன வெவ் உரை வல்லவள் - இடியேறு போன்ற கொடுஞ் சொல்லைச் சொல்ல வல்லவளாகிய கைகேயி, மீட்டும் கூறுவாள் - மீண்டும் (முன்போலச்) சொல்லுகின்றவள், தெவ் அடு சிலையினேய் - பகைவரை அழிக்கவல்ல வில்லேந்தியவனே, (அவ்விராமன்) தேவி தம்பி என்ற இவ் இருவோரோடும் - தேவியும் தம்பியுமாகிய இவ்விருவருடனும், கானத்தான் - காட்டில் உள்ளான்; என்ருள்—.

கைகேயி, முன்னே தசரதனைப்பற்றிச் சொன்னபோதும், கேட்போர்க்குப் பேரிடி போன்ற சொல்லைச் சிறிதும் கலக்கமின்றிச் சொன்னுள்; இப்போது இராமபிரானைப்பற்றியும் அவ்வாறே சொல்லுகின்ருள் ; ஆதலின், 'அசனியேறன்ன வெவ்வுரை வல்லவள் மீட்டுங் கூறுவாள்' என்ருர். இராமன் இருக்குமிடத்தைக் குறிக்கும்போது, அவன் பெயரைக் கூருமலே, 'தேவி, தம்பி என்ற இருவரோடும் சென்று கானத்தில் இனிதாக இருக்கின்ருன்; அங்கும் அவன் தனியே துன்புருன்' என்கின்ருள். 'நீ அரசை ஏற்று ஆளுதற்கு உரியவன்' என்ற குறிப்புத் தோன்றப் பரதனை, 'தெவ்வடு சிலையினுய்' என்ருள்.

(பி - ம்.) 1. அசனியேறெனு, ஏறென்ன, ஏறன்ன, ஏற்றன்ன.
2. மீண்டும்.
3. தெவ்வரு; தம்பியோடு.
4. இவ்விவரொடு நெடும், இவ்வவரொடு நெடும், இவ்வவரோடும் வெம், இவ்விவரோடும்வெம், இவ்விவரோடும்போய், அவ்வவ ரொடுநெடும், அவ்விவரொடுநெடும்; கானத்தெய்தினுன், கானத் தேகினுன். (59)

பரதன் நொந்து கூறுதல்

855. வனத்தின னென்றவ ளிசைத்த மாற்றத்தை
நினைத்தன னிருந்தன னெருப்புண் டானென
வினைத்திற மியாதினி விளைப்ப தின்னமும்
எனைத்துள கேட்பன துன்பம் யானென்ருன்.

வனத்தினன் என்று அவள் இசைத்த மாற்றத்தை - (இராமன்) காட்டிலுள்ளான் என்று அக்கைகேயி சொன்ன வார்த்தையை, நினைத்தனன் - (பரதன் பலகால்) நினைத்தவனுய், நெருப்பு உண்டான் என இருந்தனன் - நெருப்பை உண்டவன் போன்ற நிலையெய்தி(ச்

சிறிது போது) இருந்து, (பின்னர்) வினை திறம் - (என்) தீவினையின் கூறுபாடு, இனி விளைப்பது யாது - இன்னும் விளைக்கத்தக்க கொடுமை யாதுளதோ, இன்னமும் யான் கேட்பன துன்பம் - மேலும் நான் கேட்கவிருக்கும் துன்பச் செய்திகள், எனைத்து உள - எத்துணை உள்ளனவோ! என்றான்—.

இராமன் காட்டில் உள்ளான் என்ற வார்த்தையைக் கேட்ட பரதன் அடைந்த துன்பத்தை முதலில் கூறி, இன்னும் இதுபோலக் கேட்கத்தக்கன எத்தனை உளவோ என அவன் நடுங்கினான் என்றார். பரதன் தேரில் வரும்போதே நாட்டின் நிலைகண்டு அஞ்சி, "சென்று கேட்பதோர் தீங்குளது" (823) என அநுமானித்தான்; "ஒருவகைத் தன் றுறுதுயர்" (833) என்றான் சத்துருக்கன்; இவற்றிற்கேற்பப் பேரிடி போன்ற இரண்டு செய்திகள் செவிப்பட்டன; அதனால், 'இன்னமும் கேட்பன எனைத்துளவோ' என நடுங்குகின்றான். நினைத்தனன், இருந்தனன் என்பவற்றை முற்றெச்சமாக்கி முடிக்க.

(பி. ம்.) 1. உரைத்த மாற்றத்தை.
3. யாதினிவிளைவது, வினையது, யானினிவிளைப்பது, இனையன விளைப்பது.
4. துன்பம் யானெனென்பான், யாதென்றான், யாமென்றான், இன்னம் யானென்றான், நும்மையானென்றான், யானென்பான். (60)

இராமபிரான் வனம் சென்றதன் காரணம் வினவுதல்

856. ஏங்கின விம்மலோ டிருந்த வேந்தலப்
பூங்கழற் காலவன் வனத்துப் போயது
தீங்கிழைத் ததனினோ தெய்வஞ் சீறியோ
ஓங்கிய விதியினோ யாதி னோவெனா.

ஏங்கினன் - மிக்க ஏக்கங்கொண்டு, விம்மலோடு இருந்த ஏந்தல் - பொருமலோடு இருந்த அப்பரதன், அ கழல் பூ காலவன் - அந்த வீரக்கழலணிந்த பூப்போலும் திருவடிகளையுடைய இராமபிரான், வனத்து போயது - காட்டிற்குச் சென்றது, தீங்கு இழைத்ததனினோ - (ஏதேனும்) பெருங் குற்றம் புரிந்ததனாலோ? (அல்லது) தெய்வம் சீறியோ - தெய்வக் குற்றத்தாலோ? (அல்லது) ஓங்கிய விதியினோ - எவற்றினும் மேம்பட்ட ஊழ்வினையாலோ? யாதினோ - எதனாலோ? எனா - என்று வினவி.

இது குளகம்; அடுத்த பாட்டில் அருளுவீரென்றான் என்பதனோடு முடியும்.

இராமபிரான் வனம் போவதற்குத் தக்க காரணம் ஏதேனும் இருத்தல் வேண்டும்; 'குருக்களை யிகழ்தல் முதலிய பெருங் குற்றம் புரிந்தோர் காட்டிற்குத் துரத்தப்படுவர்; அல்லது, தெய்வக் குற்றத்தால்

மதிமயங்கி மருள்கொண்டு திரிவர்; அல்லது, விதி வசத்தால் செருக்கு மேலிட்டுச் சூது போர், மோது போர் முதலியவற்றில் தலைப் பட்டு அதன் பயனாக நாடுகடத்தல் நேரலாம்; இவற்றுள் ஏதேனும் நிகழ்ந்ததா அன்றி, வேறு காரணமுண்டா?' என்று ஐயுற்று வினவினான். அந்தமில் பெருங்குணத்திராமனுக்கு, இவற்றுள் ஒன்றும் எய்துதற்கு இடமில்லையே என்பது பரதன் கொண்ட ஐயுறவு; அதனாலேயே, 'யாதினோ' என்றான்.

(பி - ம்.) 1. ஏங்கின, ஏக்தலம்; வேர்தபல், வேர்தரப்.
2. பூங்கமழ் காவலன்; வனத்துட்போயது, வனத்துப்போனது, கானம் போனது.
3 இழைத்ததனிலோ, தெய்வஞ்சிறிலோ, சிறவோ, தேவர்மாயமோ.
4. யாதினோவென்றான். (61)

வனம் போனது எப்பொழுது என்றல்

857 தீயன விராமனே செய்யு மேலவை
தாய்செய லல்லவோ தலத்து ளோர்க்கெலாம்
போயது தாதைவிண் புக்க பின்னரோ
ஆயதன் முன்னரோ வருளு வீரென்றான்.

தீயன - தீய செயல்களை, இராமனே செய்யுமேல் - இராமபிரானே செய்வானாகில், அவை - அத்தீய செயல்கள், தலத்து உள்ளோர்க்கு எல்லாம் - நாட்டில் உள்ளவர்களுக்கெல்லாம், தாய் செயல் அல்லவோ - தாய் (தன் மகவுக்குச் செய்யும்) செயல் போன்றவை அல்லவோ? (அது கிடக்க); போயது - அவன் வனம் போனது, தாதை விண் புக்க பின்னரோ - தந்தை விண்ணுலகம் அடைந்த பின்போ? (அல்லது) ஆய அதன் முன்னரோ - நேர்ந்த அதற்கு முன்போ? அருளுவீர் - இதனைச் சொல்வீராக, என்றான் - என்று கேட்டான்.

'இராமபிரான், பிறர்க்குக் கேடு விளைவிக்கும் தீங்கு எதையும் செய்யான்; அவன் தீங்கு செய்வதாயின், தாய் தன் குழந்தையை நல்வழிப்படுத்துதற்குச் செய்யும் கண்டனையும் தண்டனையும் போன்ற அன்புச் செயலாகவே இருக்கும்; எனவே, அவன் வனம் போனதற்கு அது காரணமாயிராது' என்பது பரதனின் துணிபு. ஏனை இரண்டும் இராமபிரான் வசத்தனவல்ல; எவ்வாறாயினும், போனது எப்போது என்பதை அறியலுறின், காரணமும் தானே தெரியவரும் என்று கருதி அதனை வினவினான். "என்னடியா ரதுசெய்யார் செய்தாரேல் நன்றுசெய்தார்" (பெரியாழ்வார் திருமொழி, 4. 9 : 2) என்பது இங்கே ஒப்புநோக்கத்தகும்.

(பி - ம்.) 1. இராமனும்; செய்புமேலது.
2. அல்லவே; தலத்துளோர்க்கெல்லாம், தவத்துளோர்க்கெலாம்.
4. அருளுவாய். (62)

கைகேயியின் விடை

858. குருக்களை யிகழ்தலி னன்று குன்றிய
செருக்கினு லன்ருெரு தெய்வத் தாலுமன்
றருக்கனே யனையநம் மரசர் கோமகன்
இருக்கவே வனத்தவ னேகினு னென்ருள்.

(இராமன் வனம் போனது) குருக்களை இகழ்தலின் அன்று - ஆசிரியர்களை அவமதித்ததனுல் அன்று; குன்றிய செருக்கினுல் அன்று - இழிந்ததான செருக்கினுலும் அன்று; ஒரு தெய்வத்தாலும் அன்று - ஒரு தெய்வம் சினந்ததனுலும் அன்று; அருக்கனே அனைய - (வாய்மையில்) சூரியனே போன்ற, நம் அரசர் கோமகன் - நம் சக்கரவர்த்தி, இருக்கவே - (உயிருடன்) இருந்தபோதே, அவன் வனத்து ஏகினுன் - அவன் காட்டிற் போனுன்; என்ருள் —.

'இராமன் வனம் போனதற்கு, நீ கருதியவற்றுள் ஒன்றும் காரண மன்று; தந்தை உயிருடன் இருக்கும்போதே அவன் போனுன்' எனச் சுருக்கமாக விடையளித்தாள் கைகேயி. அருக்கன் வாய்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாவான்; "ஞாயிறன்ன வாய்மையும்" (ஆத்திரையன் பேராசிரியன் பாயிரம்) என்பது காண்க. இவ்வாறு கூறியதனுல், தந்தையின் வாய்மை காத்தல் வேண்டி இராமன் வனம் புக நேர்ந்ததென்ற குறிப்பும் பெறப்படும்.

(பி - ம்) 1. இகழ்தலில், இகழ்ந்தபின், பிழைத்தலின், பிழைத்தலும்; கூறிய.
2. அன்றுமோர்தெய்வத்தானுமன்று.
3. அனையவவ்வரசர், அனையதம்மரசர், மரீஇயநம்மரசர்.
4. வனத்தவனெய்தினுன், வனத்தினினேகினுன், அவன்வனத்தேகினுன். (63)

பரதன் மீண்டும் வினவுதல்

859. குற்றமொன் றில்லையேற் கொதித்து வேறுளோர்
செற்றது மில்லையேற் றெய்வத் தாலன்றேல்
பெற்றவ னிருக்கவே பிள்ளை கான்புக
உற்றதென் றெரிதர வுரைசெய் வீரென்ருன்.

குற்றம் ஒன்று இல்லையேல் - (இராமபிரான் செய்த) குற்றம் ஒன்றும் இல்லாவிடின், வேறு உள்ளோர் - வேறுபட்ட பகைவர், கொதித்து - கோபங்கொண்டு, செற்றதும் இல்லையேல் - போரிட்டு ஓட்டியதும் இல்லாவிடின், தெய்வத்தால் அன்றேல் - தெய்வம் சீறியதாலுமன்ருயின், பெற்றவன் இருக்கவே - பெற்ற தந்தை உயிருடன் இருக்கும்போதே, பிள்ளை கான் புக உற்றது என் - (அருமைப்) புதல்வன் காடுபோக நேர்ந்த காரணம் என்ன? தெரிதர உரை செய்வீர் - (அதனை எனக்குத்) தெளிவாகச் சொல்வீராக, என்ருன் —.

'நான் கூறியவற்றுள் ஒன்றும் காரணமில்லையென்றால், தந்தை இருக்கும்போதே இராமபிரான் காடு செல்ல நேர்ந்ததற்குத் தகுந்த காரணம் வேறு எது? அதனைத் தெளிவாகச் சொல்லுங்கள்' என்றான். கைகேயி, விளக்கமின்றியே விடை கூறி வந்ததனால், மனம் துடித்த பரதன் பொறுமை இழந்து கேட்கிறான். முன் பாட்டில் 'செருக்கினாலன்று' என்றதும், இதில் 'வேறுளோர் செற்றது மில்லையேல்' என்றதும், 'ஓங்கிய விதியினானே' (856) என்றதற்கு விளக்கமாக இருத்தல் காண்க.

(பி-ம்.) 1. இல்லையே; வேறுள்ளோர்.
2. செற்றமும், செற்றமொன்று; இல்லையத்; தெய்வத்தானன்றேல்.
3. பெற்றவள், பெற்றவர்; பிரிந்து கான்புக
4. உற்றதென் மன்னவன், பின்னவன், உலந்ததென், உலந்ததேன், உலைந்ததென்; உரைசெயீர். (64)

கைகேயி நிகழ்ந்ததைக் கூறுதல்

860. வாக்கினால் வரந்தரக் கொண்டு மைந்தனைப்
போக்கினேன் வனத்திடைப் போக்கிப் பாருனக்
காக்கினே னன்னது பொறுக்க லாமையால்
நீக்கினான் றன்னுயிர் நேமி வேந்தென்றாள்.

வாக்கினால் - மன்னன் தன் வாக்கால், வரம் தர - (நான் கேட்ட இரண்டு) வரங்களை எனக்குத் தர, கொண்டு - அவற்றைப் பெற்றுக் கொண்டு, (ஒரு வரத்தால்) மைந்தனை - இராமனை, வனத்து இடை போக்கினேன் - காட்டிற்குப் போகச் செய்தேன்; போக்கி - அவ்வாறு போகச் செய்து, பார் உனக்கு ஆக்கினேன் - (மற்றொரு வரத்தால்) நாட்டை உனக்குரியது ஆக்கினேன்; அன்னது பொறுக்க அல்லாமையால் - (அவன் பிரிந்து போனதைப்) பொறுக்க மாட்டாமையால், நேமி வேந்து - சக்கரவர்த்தி, தன் உயிர் நீக்கினான் - தன் உயிரை விட்டான்; என்றாள் - என்று கூறினாள் (கைகேயி).

எழுவாய் வருவித்து உரைக்கப்பெற்றது. இராமபிரான் வனம் போனதற்கும் தசரதன் உயிர் நீத்ததற்கும் உரிய காரணங்களை உள்ளபடி கூறினாள் கைகேயி.

வாக்கினால் - முன் தசரதன் தந்த வாக்குறுதியினால் என்பதும் ஆம். மைந்தன் - தந்தையின் பேரன்புக்குரிய மகன். அவன் எங்கிருப்பினும் இனிது வாழ்தற்குரிய வலிமை படைத்தவன் என்பாள், 'மைந்தன்' என்றாள்; மைந்து - வலிமை. பார் என்றது நாட்டை.

(பி-ம்.) 2. வனத்தினில் பாருனது.
3. அவனது; பொறுக்கிலாமையால், பொறுத்திலாமையால்.
4. நீக்கினன்; மன்னுயிர்; நேமிவேந்தனே. (65)

பரதனது கோப நிலை

861. சூடின மலர்க்கரஞ் சொல்லின் முன்செவி
கூடின புருவங்கள குனித்துக் கூத்துநின்
றாடின வுயிர்ப்பினே டழற்கொ ழுந்துகள்
ஓடின வுமிழ்ந்தன வுதிரங் கண்களே.

(பரதனுக்கு), சூடின மலர் கரம் - (இராமபிரானை நினைந்து தலைமேல்) குவித்திருந்த மலர்போன்ற கைகள், சொல்லின் முன் - (கைகேயியின்) சொல் செவிப்படுமுன், செவி கூடின - காதுகளைச் சேர்ந்தன (காதைப் பொத்திக்கொண்டான்); புருவங்கள் குனித்து நின்று கூத்து ஆடின - புருவங்கள் வளைந்தேறி நின்று கூத்தாடுதல் போலத் துடித்தன; உயிர்ப்பினோடு - மூச்சுக் காற்றோடு, அழல் கொழுந்துகள் ஓடின - நெருப்புச் சுவாலைகள் வெளிப்பட்டன; கண்கள் உதிரம் உமிழ்ந்தன - கண்கள் இரத்தஞ் சிந்தின.

ஏ : ஈற்றசை.

கேட்கத் தகாத சொற்கள் செவிப்பட்டால் காதைப் பொத்திக் கொள்வர் பெரியோர்; அவ்வாறே பரதனும் கைகேயியின் வார்த்தை செவிப்பட்டவளவில் காதைப் பொத்திக்கொண்டான்; அதனை, 'கரங்கள் செவி கூடின' என்றார். சொல்லின் முன் என்றது விரைவு குறித்தது. புருவந்துடித்தல் முதலியன சினத்தின் மெய்ப்பாடுகள். மேல் இரண்டு பாடல்களுள் வருவனவும் அவை.

(பி - ம்.) 1. சூடினன் மலர்க்கரம், கரதலம், சூடின கரதலம், சூடிய மலர்க்கரம், சூடிய கரதலம்; சொல்லுமுன்.
2. கோடின; குதித்துக்.
3. ஆடினன்; உயிர்ப்பிடை, உயிர்ப்புடை, உயிர்ப்புடன், உயிர்ப்பவட; அழற்கடம்முடன், அழற்கட்டமுடன், அழறகொழுந்துடன், அனற் கொழுந்துகள்.
4. உதிர்ந்தன, உதித்தன. (66)

862. துடித்தன கபோலங்கள் சுற்றுந் தீச்சுடர்
பொடித்தன மயிர்த்தொளை புகையும் போர்த்தது
மடித்தது வாய்நெடுந் தடக்கை மண்பக
அடித்தன வொன்றொடொன் றசனி யஞ்சவே.

கபோலங்கள் துடித்தன - கன்னங்கள் துடித்தன; மயிர் தொளை - மயிர்க்கால்களினின்றும், சுற்றும் தீ சுடர் பொடித்தன - சுற்றிலும் தீக்கொழுந்துகள் தோன்றின; புகையும் போர்த்தது - (அத்தீயால்) புகையும் சூழ்ந்தது; வாய் மடித்தது—; நெடு தட கை - நீண்ட பெரிய கைகள், மண் பக - (அதிர்ச்சியால்) தரை பிளக்கவும், அசனி ஏறு அஞ்ச - இடியேறும் (அவ்வொலி கேட்டு) அஞ்சவும், ஒன்றொடு

ஒன்று அடித்தன - ஒன்ேறாடொன்று ஓங்கி அறைந்தன. ஏகாரம் ஈற்றசை.

பரதன் கடுஞ் சினங்கொண்ட நிலையைக் கூறுகின்றார். அடுத்த பாடலும் இத்தகையதே.

(பி - ம்.) 1. துடித்தன இதழ்விழி; தொடருந்நீச்சுடர், நீச்சுடப்.
2. புகையும் போர்த்தன.
3. நெடுமழைக்கைம் மண்பக, மண்புக.
4. அடித்தனன்; ஒன்றோடொன்று; அசனியெஞ்சவே, என்னவே. (67)

863. பாதங்கள் பெயர்தொறும் பாரு மேருவும்
போதங்கொ ணெடுந்தனிப் பொருவில் கூம்பொடு
மாதங்கம் வருகல மறுகிக் கால்பொர
ஓதங்கொள் கடலினின் றுலைவ போன்றவே.

பாதங்கள் பெயர்தொறும் - பரதன் அடி பெயர்த்து வைக்குந் தோறும், பாரும் - பூமியும், மேருவும் - மேருமலையும், (முறையே), போதம்கொள் - மரக்கலம் வருகிறதென்ற அறிவைக் கொள்வதற்குக் காரணமான, நெடு தனி பொரு இல் கூம்பொடும் - உயர்ந்து ஒன்றான ஒப்பற்ற பாய்மரத்தோடு, மாதங்கம் வரு கலம் - யானையை ஏற்றிவரும் மரக்கலம் ஒன்று, கால் மறுகி பொர - பெருங் காற்றுச் சுழன்று மோதுதலால், ஓதம் கொள் கடலில் நின்று - பேரலைகளைக் கொண்ட கடல் நடுவே நின்று, உலைவ(து) போன்ற - நிலை குலைந்து ஆடுவது போன்று இருந்தன.

ஏ : ஈற்றசை.

இப்பாடலும் முந்தியது போலப் பரதன் கொண்ட சினத்தை மிகுத்துக் காட்டுவது. பூமியைக் கப்பலாகவும், அதன் நடுவே உயர்ந்தோங்கி நிற்கும் மேருவைக் கப்பலின் பாய்மரமாகவும், பரதனை அக்கப்பலில் ஏற்றப்பட்ட யானையாகவும் உருவகித்தார். கப்பலை அலைக்கும் பெருங்காற்று, பரதன் அடிபெயர்த்து வைப்பதனால் உளதாகும் அதிர்ச்சியின் வேகம் எனக் கொள்க. பரதன், கடுஞ் சினத்தால் நிலைகொள்ளாது திரிதலுற்றான் என்பதும் இதனால் பெறப்படும். கப்பலுக்கு இன்றியமையாத உறுப்புக் கூம்பாதலின், அதனை 'நெடுந்தனிப் பொருவில் கூம்பு' என விசேடித்துக் கூறினார். உலைவது என்பதன் இறுதி தொக்கது. "பாரிடை யழுந்து கின்ற படர்நெடும் பனிமாக் குன்றம், கூருகிர்க் குவவுத் தோளான் கூம்பெனக் குமிழி பொங்க, ஆர்கலி யழுவத் தாழுங் கலமென லாயிற் றன்றே" (சுந்தா. 9) என்பது இங்கே ஒப்பு நோக்கத் தகும். பாரும் மேருவும் உலைவ போன்றவே என்று கூட்டுக.

(பி - ம்.) 2. போதங்கணெடுக், போதங்களொடு, போதங்களொடும், பூதங்களொடும், பூதங்கொள்கடலெனப், போதக நெடுந்திசைப்; பொறுத்தபாரொடு.
3. மாதங்கம் வருங்கலம், வருகில, வருதலம், மாதங்கவருகலம், மாதங்கவருங்கலம்; மறுகிக்காலவோர்.
4. ஓதங்கள்; போன்றதே. (68)

864. அஞ்சினர் வானவ ரவுண ரச்சத்தால்
துஞ்சின ரெனைப்பலர் சொரிம தத்தொளை
எஞ்சின திசைக்கரி யிரவி மீண்டனன்
வெஞ்சினக் கூற்றுந்தன் விழிபு தைத்ததே.

(பரதன் நிலை கண்டு) வானவர் - தேவர்களும், அவுணர் - அசுரர்களும், அஞ்சினர் - அச்சங் கொண்டனர்; அச்சத்தால் துஞ்சினர் எனை பலர் - அச்சத்தால் இறந்தோர் எத்துணையோ பலர்; திசை கரி - திக்கு யானைகளின், மதம் சொரி தொளை எஞ்சின - மதம் பெருகி யூற்றும் தொளைகள் பெருக்கிழந்தன; இரவி மீண்டனன் - சூரியனும் (தன்) திசை மாறினன்; வெம் சினம் கூற்றும் - கடுங் கோபமுடைய எமனும், தன் விழி புதைத்தது - தன் கண்களைப் பொத்திக்கொண்டான்.

ஏ: அசை.

இப்பாடலும் முந்திய இரண்டைப் போன்றது. மேற்கு நோக்கிச் செல்லவேண்டிய சூரியனும் அஞ்சித் திரும்பிக் கிழக்கு நோக்கலானான் என்பது கருத்து. 'இரவியும்' எனற்பால உயர்வு சிறப்பும்மை தொக்கது. வெஞ்சினமும் அஞ்சாமையுமுடைய கூற்றும் அஞ்சிற்று எனலால், இதிலும் உம்மை உயர்வு சிறப்பு. கூற்று, சொல்லால் அஃறிணையாகலின் அத்திணை முடிபேற்றது.

(பி - ம்.) 1. அஞ்சின, அஞ்சலின்.
2. துஞ்சினரேனையர், துஞ்சினரெனைப்பல, துஞ்சினரெனப்பலர், துஞ்சினரென்பதென்; துளைக்கை யானையும், தொலைத்து சாய்த்தனர்.
3. எஞ்சிய; திசைக்களிறு, திசைக்கிரி, திசைகளில், திசைகளின்; மீண்டன.
4. கூற்றம்; புதைப்பவே, புதைத்தவே. (69)

பரதன் சிந்தனையும் சொல்லும்

865. கொடியவெங் கோபத்தாற் கொதித்த கோளரி
கடியவ டாயெனக் கருது கின்றிலன்
நெடியவன் முனியுமென் றஞ்சி நின்றனன்
இடியுரு மனையவெம் மொழிவி ளம்புவான்.

கொடிய வெம் கோபத்தால் - மிகக் கொடிய கோபத்தினால், கொதித்த - மனங் கொதிப்புண்ட, கோள் அரி - ஆண் சிங்கம் போன்ற பரதன், கடியவள் - கொடியவளாகிய அக் கைகேயியை, தாய் என

கருதுகின்றிலன் - தாய் என்று மதிக்காதவனுய் (அவளைக் கொல்லக் கருதியவன்), நெடியவன் முனியும் என்று அஞ்சி - (கொன்ருல்) இராமபிரான் கோபிப்பான் என்று பயந்து, நின்றனன் - (கொல்லாது) நின்று, இடி உரும் அனைய - பேரிடி போன்ற, வெம்மொழி - கொடுஞ் சொற்களை, விளம்புவான் - சொல்லலானுன்.

பரதன் கைகேயியைக் கடிந்துரைத்தவை, மேலே பதினேழு பாடல்களால் கூறுகின்ருர். இராமபிரானுக்கு அஞ்சியே பரதன் அவளைக் கொல்லாது விட்டான் என்பது, மேலே 867, 992 - ஆம் பாடல்களில் வரும் அவன் கூற்ருல் விளங்கும். கோள் அரி - கொல்லு தலையுடைய சிங்கம். பரதனை இவ்வாறு குறித்ததும் அவன் அவளைக் கொல்ல நினைத்தான் என்பதனை உணர்த்தும். இடியுரும் ! ஒரு பொருட் பன்மொழி.

(பி - ம்.) 2. கடிவதுதகாதெனக்; கருதுகின்றிலென், கருதுகின்றிலேன்.
4. இடியுருவனையவெம், இடியுருமனையன; இயம்பினுன், இயம்புவான். (70)

பரதன் தாயைக் கடிதலும் தன்னை நோதலும்

866. மாண்டன னெந்தையென் றம்முன் மாதவம்
பூண்டன னின்கொடும் புணர்ப்பி ைலென்ருல்
கீண்டிலென் வாயிது கேட்டு நின்றயான்
ஆண்டன னேயன்ருே வரசை யாசையால்.

(பரதன் கைகேயியை நோக்கி), நின் கொடும் புணர்ப்பினுல் - உனது கொடிய சூழ்ச்சியால், எந்தை மாண்டனன் - என் தந்தை இறந்தான்; என் தம்முன் மா தவம் பூண்டனன் - என் தமையன் பெருந்தவத்தை மேற்கொண்டான், என்ருல்—, இது கேட்டும் - இக் கொடுஞ் செய்தியைக் கேட்டும், வாய் கீண்டிலென் நின்ற யான் - சொன்ன (உனது) வாயைக் கிழியாது நின்ற நான், அரசை ஆசை யால் ஆண்டனனே அன்ருே - (நீ பெற்றுத் தந்த) அரசை ஆசையோடு ஆண்டவனே ஆவேனன்ருே?

இதுமுதல் பதினேழு கவிகள் ஒரு தொடர். பரதன் கைகேயியைக் கடிந்து கூறுவன. 'நினைக்கவும் தகாத கொடுஞ் செயல்களைக் கூசாது செய்து, அவற்றைச் சிறிதும் கலக்கமின்றிச் சொல்லவும் முற்பட்ட உன் வாயை நான் அப்போதே கிழித்திருக்கவேண்டும்; அது செய்யாது நிற்பதனுல், நானும் அரசுக்கு ஆசைப்பட்டு அதனைப் பெற்று ஆண்டவனுகவே கருதப் பெறுவேன்; இஃதென்ன கொடுமை!' என்கின்ருன். கருத்தொப்புமை : 1036–பார்க்க. மறுக்காதது உடன் பாட்டைக் குறிக்கும். கீண்டிலென் ! முற்றெச்சம்.

(பி - ம்.) 1. மாண்டதும்; எந்தையென்றெம்முன், எந்தையேயெம்முன்.
2. பூண்டனன் உன்னொடும், உன்கொடும், என்கொடும், இன்னன, இன்னது, பூண்டது மின்னது, மின்கொடும், புணர்ப்பினென்னவும்.
3. வாயது.
4. ஆண்டனனுமன்றோ, ஆண்டனனுமென்னே; அரசினுசையால். (71)

867. நீயினு மிருந்தனை யானு நின்றனென்
ஏயெனு மாத்திரத் தெற்று கிற்றிலென்
ஆயவன் முனியுமென் றஞ்சி னேனலால்
தாயெனும் பெயரெனைத் தடுக்கற் பாலதோ.

நீ இன்னம் இருந்தனை - நீ இன்னும் மாளாதிருக்கின்றாய்; யானும் - நானும், ஏ எனும் மாத்திரத்து கணப்போதில், எற்றுகிற்றிலென் நின்றனென் - (உன்னைத்) தாக்கிக் கொல்லாமல் நின்றேன்; (அதற்குக் காரணம்) ஆய் அவன் - தாயைப் போன்ற அவ்விராமபிரான், முனியும் என்று அஞ்சினேன் - (என்னை) வெகுள்வானென்று அஞ்சினேன்; அல்லால் - அதனையன்றி, தாய் எனும் பெயர் - பெயரளவில் நீ தாய் என்பது, என்னை தடுக்கல் பாலதோ - (உன்னைக் கொல்லுதலினின்றும்) என்னைத் தடுத்ததற்குரியதோ? (அன்று).

'முன்னே உணராது தவறு செய்யினும், வினைவறிந்தபின் நீ அதற்கு நாணி நீயே மாண்டிருத்தல் வேண்டும்; அஃதின்றி இன்னும் நிற்கின்றாய்; நீ தாய் என்ற பெயர் மாத்திரமேயன்றித் தாய்மைப் பண்பு சிறிதும் இல்லாதவள்; ஆதலால் உன்னை அப்போதே கொன்றிருப்பேன்; உண்மையில் தாயைப் போன்ற இராமபிரான் என்னைக் கோபித்தல் கூடும் என்றஞ்சியே அது செய்யாது விட்டேன்' என்றான். ஆய் - தாய். இராமபிரானே தாயும் தந்தையும் எல்லாமும் என்ற பரதன் உட்கோள் இங்கே கருதத் தகும்; 853-பார்க்க. 'ஏ' எனும் மாத்திரத்து என்றது, விரைவு குறித்தது.

(பி - ம்.) 1. நானும்.
2. ஏயதுமாத்திரத்து; எற்றுகின்றிலன், எற்றுகின்றிலென், எற்றகிற்றிலென், எற்றகிற்றிலேன், எற்றுகிற்றிலன், ஏற்றுகிற்றிலென்.
3. ஆயகன், அயனும், நாயகன், நாயகம்.
4. தாயெனும் பொருளெனைத், பொருளினைத்; தடுக்கலாற்றமோ, தடுக்கவல்லதோ, தடுக்கத்தக்கதோ, தடுக்கவல்லவோ. (72)

868. சுழியுடைத் தாயுடைக் கொடிய சூழ்ச்சியால்
வழியுடைத் தாய்வரு மரபை மாய்த்தொரு
பழியுடைத் தாக்கினன் பரதன் பண்டெனும்
மொழியுடைத் தாக்கலின் முறைமை வேறுண்டோ.

பண்டு - முன்னே, பரதன் - பரதன் என்பவன், சுழி உடை(ய) - வஞ்சனையுள்ள, தாய் உடை(ய) - தாயினது, கொடிய சூழ்ச்சியால்—,

வழி உடைத்து ஆய் வரும் - (சூரிய குலத்தில்) வழிவழியே நடந்து வருகிற, மரபை மாய்த்து - முறையைக் கெடுத்து, ஒரு பழி உடைத்து ஆக்கினன் - (அக்குலம்) ஒரு பழியை உடையதாகச் செய்தான், எனும் மொழி - என்று உலகம் சொல்லும் பழிச் சொல்லே, உடைத்து ஆக்கலின் - நிலைத்திருக்கச் செய்தலினும், முறைமை - சிறந்த முறை, வேறு உண்டோ - வேறென்றுள்ளதோ?

'சூரிய குலத்தில் பிறந்த பரதன், கொடியவளான தன் தாயின் தகாத சூழ்ச்சியால் தனக்குக் கிடைத்த அரசை ஏற்று, வழி வழியாக வந்த அக்குல முறைக்கே ஒரு மாசு உண்டாக்கினான் என்று பிற்காலத்தார் சொல்லும் பழிச் சொல் நிலைப்பதைத் தவிர, இதில் நன்மை யாதுளது? ஆதலால், நான் அரசேற்றல் முறையன்று' என்கின்றான். 'முறைமை வேறுண்டோ' என்றது இகழ்ச்சிக்குறிப்பு. வழியுடைத்தாய் வரும் மரபு, மூத்தவற்குரியது அரசு என்பது; அது கெடும்படி அரசை ஏற்றால், பழியைத்தவிர வேறில்லையென்பது பரதன் உட்கோள். பழிச்சொல் பிற்காலத்தார் கூற்றாகலின் 'பண்டு' என்றான்.

'பி - ம்.) 1. தாய்சொலும், தாய்தரு; கொடிய சூழ்ச்சியாய், கோடிசூழ்ச்சியால்.
2. வருவரம்பை, வரும் வரம்பை; மாய்த்ததோர், மற்றொரு.
4. மொழியுடைத்தாகலின், உடைத்தாதலின், முறைமை வேண்டுமோ.
(73)

869. மாளவு முளனொரு மன்னன் வன்சொலால்
மீளவு முளனொரு வீரன் மேயபார்
ஆளவு முளனொரு பரத னாயினால்
கோளில தறநெறி குறையுண் டாகுமோ.

வன் சொல்லால் - உன் கொடிய சொல்லால், மாளவும் ஒரு மன்னன் உளன் - இறப்பதற்கும் ஓரரசன் (தசரதன்) உளனாக, மீளவும் ஒரு வீரன் உளன் - (வனம் போய்) மீள்வதற்கும் ஒரு வீரன் (இராமபிரான்) உளனாக, மேய பார் - (நீ) விரும்பிய நாட்டை, ஆளவும் ஒரு பரதன் உளன் ஆயினால் - ஆள்வதற்கும் பரதனொருவன் உளனானால், அறம் நெறி கோள் இலது - அறநெறி குற்றமற்றதே; குறை உண்டு ஆகுமோ - குறையுடையதாகுமோ? (ஆகாது).

பரதன் இதனை இகழ்ச்சியாகக் கூறுகின்றான். குற்றமில்லாத அறநெறியே இது என்றதும் இகழ்ச்சியே. 'நீ வரம் கேட்ட முறை தவறானது; தந்தை வேறு வகையின்றி வரத்தைக் கொடுத்துவிட்டு, வாய்மையைக் காத்துத் தன் உயிரையும் நீத்தான். தமையனார் தந்தைசொல் காக்கும் கடமையை அறமாக மேற்கொண்டான். அவ்விருவர் செயலும் அறமாயினும், உன் விருப்பத்தின்படி நான் அரசேற்றல் அறமாகாது' என்ற கருத்துப்படக் கூறினான். மேய பார் - (இராமபிரான் ஆளுதற்குப்) பொருந்திய நாடு என்பதும் ஆம்.

(பி - ம்.) 1. மாளவுமுன்னெரு; மன்னவன் சொலால், மன்னவன் கொலோ, மன்னனின் சொலால், மன்னன் கானம்போய், மன்னவன் செல்கான்.
2. மீளவு முன்னெரு; மேவுபார், வெய்யபார்.
3. பரதனுமினல்.
4. கோளலதறகெறி, கோளலவறகெறி, கோளிலவுறகெறி; குறைவுண்டாகுமோ, குறியுண்டாகுமோ, குறைதற்பாலதோ. (74)

870. கவ்வர வதுவென விருத்திர் கற்பெனும்
அவ்வரம் பழித்துமை யகத்து ளேவைத்த
வெவ்வரம் பொருதவே லரசை வேரறுத்
திவ்வரங் கொண்டநீ ரினியென் கோடிரோ.

கற்பு எனும் அ வரம்பு அழித்து - (மகளிர்க்குச் சிறந்த) கற்பு என்ற அந்த வரம்பைக் கெடுத்து, உம்மை அகத்து உள்ளே வைத்த - உம்மை (எப்போதும்) தன் மனத்தினுள்ளே வைத்திருந்த, வெவ் அரம் பொருத வேல் அரசை - கொடிய அரத்தால் அராவப்பட்ட வேலையுடைய மன்னனை, வேர் அறுத்து - அடியோடு அழித்து, கவ்வு அரவு அது என இருத்திர் - கடிக்கும் பாம்புபோல இருக்கின்றீர்; இ வரம் கொண்ட நீர் - (பல கேட்டுக்குக் காரணமான) இந்த வரத்தை (வலிதின்) வாங்கிக்கொண்ட நீர், இனி என் கோடிரோ - இன்னும் என்ன கொள்ளப் பார்க்கின்றீரோ?

'கணவன் வழி நிற்றலாகிய கற்பு வரம்பை மீறிக் கணவனை உன் வழிப்படுத்தி, வரத்தை வலிதிற் பெற்றுக்கொண்டு, உன்பால் அளவிறந்த அன்பு கொண்ட கணவனையே தொலைத்துவிட்டாய்; அதனால் நீ, தன்னை அன்போடு வளர்த்தவனையே கடித்துக் கொல்லும் பாம்புபோல் ஆனாய்; இன்னும் நீ என்ன என்ன தீமைகளுக்கு அடி இடுகின்றாயோ?' எனக் கடிந்தான்.

பன்மைப் பாலாற் கூறியது செறல்பற்றி. மேல் வருவனவும் இவ்வாறே கொள்க. அரவு அது - அரவாகியது; அது: பகுதிப் பொருள் விகுதி. கவ்வுதல் - கடித்தல். "நாகமெனுங் கொடியாள்தன்" (296) என்ற பாடலும் இங்கு நினைக்கத்தகும்.

முந்திய அச்சுப் புத்தகங்கள் பலவற்றில் இப்பாடல் இல்லை.

(பி - ம்.) 1. கவ்வர விதுவென, கவ்வர மிதுவென, கல்வரம் பிதுவென; இருத்திர் காட்டிய, இருந்திர் கற்பெனும், இருந்து கற்பெனும், கைவரம் பிதுவென விருத்தர் காட்டிய.
2. அவ்வரம்பறுத்துமை, அவ்வரமழித்துமை,
3. பொருதலால்.
4. கொண்டனிர், கொள்திரோ, கொள்விரால், (75

(கலிநிலைத்துறை)

871. நோயீ ரல்லீர் நுங்கண வன்றன் னுயிருண்டீர்
பேயீ ரேநீ ரின்ன மிருக்கப் பெறுவீரோ
மாயீர் மாயா வன்பழி தந்தீர் முலைதந்தீர்
தாயீ ரேநீ ரின்ன மெனக்கென் றருவீரோ.

முலை தந்தீர் தாயீரே - (குழவிப் பருவத்தில் எனக்கு) முலை கொடுத்த தாய் என்கிறவளே, நீர் எனக்கு மாயா வன் பழி தந்தீர் - நீயே எனக்கு என்றும் அழியாத கொடும்பழியைத் தேடிக் கொடுத்தாய்; இன்னம் என் தருவீரோ - இன்னமும் என்ன கொடுக்க இருக்கின்றாயோ? நோயீர் அல்லீர் - நோயாக இல்லாமலே, நும் கணவன் தன் உயிர் உண்டீர் - உன் கணவன் உயிரைக் குடித்தாய்; (ஆதலால்) நீர் பேயீரே - நீ ஒரு பேயே; மாயீர் இன்னம் இருக்க பெறுவீரோ - (பேயாகிய நீ) மாயாமல் இன்னமும் இருக்கப் பெறுவாயோ? (இருப்பது தகுதியோ).

'சேயின் நலனை என்றும் நாடிச் செய்பவளே தாய்; கணவன் வழி நிற்பவளே பெண்; நீ இவ்விரண்டுமின்றிச் சேயாகிய எனக்குப் பெரும் பழியைத் தேடித் தந்து, கணவனது உயிரையும் குடித்து விட்டாய்; நோய் உடலைப் பற்றிச் சில காலம் இருந்து, உயிர் போய் உடல் அழியும்போது தானும் கெட்டுவிடும்; நீ இன்னம் இருக்கின்றா யாதலால் நோயல்லை; நீ ஒரு பேயே; நீ இனி இவ்வுலகில் இருத்தற் குரியை அல்லை' என்கின்றான். பேய், கணவனுயிரைக் குடித்த லுண்டென்பது பழையனூர் நீலியின் கதையால் அறியப்படும். இழிப்பும் செறலும்பற்றிப் பன்மை வந்தது.

(பா - ம்.) 1. நொயீரல்லிர்; நுன்கணவன்றன்; உயிருண்ட, உயிர்கொண்டீர்.
2. பேயீரல்லீர்; பெறுவீரே, பெறுதிரே.
3. மாயா மாயா; வசைதந்தீர்.
4. தாயீரோ; இன்னும்; தருவீரே. (76)

872. ஒன்றும் பொய்யா மன்னனை வாயா லுயிரோடும்
தின்றுந் தீரா வன்பழி கொண்டுந் திருவெய்தி
என்றுந் நீரே வாழ வுகந்தி ரவனேசக்
கன்றுந் தாயும் போல்வன கண்டுங் கழியீரே.

ஒன்றும் பொய்யா மன்னனை - ஒரு சிறிதும் பொய்படாத நம் அரசனை, வாயால் உயிரோடும் தின்றும் - (வரம் என்ற பேர் கொண்ட) உன் வாய்ச்சொல்லால் உயிரோடு தொலைத்தும், (அதனோடு இராம பிரானையும் போக்கியதனால்) தீரா வன்பழி கொண்டும் - (என்றும்) அழியாத வலிய பழியை ஏற்றும், திரு எய்தி - இராச்சியத்தைப் பெற்று, என்றும் நீரே வாழ உகந்தீர் - எக்காலமும் நீயே நல்வாழ்வு

பெற விரும்பினுய்; அவன் ஏக - அவ்விராமபிரான் (நாட்டை விட்டுச்) செல்லுதலால், கன்றும் தாயும் போல்வன கண்டும் - (நாட்டில் உள்ள உயிர்கள் எல்லாம்) கன்றும் அதனைப் பிரிந்த தாய்ப்பசுவும்போல் ஆன நிலையைக் கண்டும், கழியீர் - (உன் கொள்கையை) விட்டாயல்லை; ஏ - இஃதிருந்தவாறென்னே!

'என்றுந் தீராத பழிக்கிடமான கொடுஞ் செயல்களைக் கூசாது செய்து, நீ இன்ப வாழ்வு எய்த விரும்பினுய்; உன் செயலால் இராம பிரானைப் பிரிந்த குடிகளெல்லாம், தாயைப் பிரிந்த கன்றுகள் போலத் தவித்தலைக் கண்டும் உன் மனம் மாறவில்லை; உன்னிடம் அன்பு கொள்வார் எவரும் இல்லை; அங்ஙனமாக, உனக்கு இன்ப வாழ்வு எங்ஙனம் உளதாகும்?' என்கின்ருன். வாய்மையால் சிறிதும் வழுவாமையே மன்னன் உயிர் விடக் காரணமாயிற்றென்பான், 'ஒன்றும் பொய்யா மன்னனை வாயா லுயிரோடுந் தின்றும்' என்ருன். வாயால் - அவன் வாய்மையாலேயே என வுரைத்தலுமாம்; "அந்தோ இனிவாய்மைக் காருளரோ" (1128) என வரும் இராமபிரான் கூற்றும் காண்க. முன்னே 'பேய்' என்றதற்கேற்ப, இங்கே 'வாயால் தின்று' என்றது ஒரு நயம். முறை தவறிய அரச வாழ்வை நீ விரும்பினுயே யன்றி நான் அதனை விரும்பவில்லை என்பது போந்த கருத்து. இறுதி ஏகாரம், இரக்கம். அவன் : இராமபிரானைச் சுட்டியது.

(பி - ம்.) 1. உயிரோடு, உரையோடும்.
2. வன்பழி கொண்டீர்.
3. வாழவுவந்தீர், வாழ்வு முவந்தீர், ஆளவுவந்தீர்; இவனேகக், மிக நன்றே.
4. போவன கண்டும், போல்வன கண்டீர், போல்வது கண்டீர்; கழியீரோ, கழிவீரோ, கழியாதீர். (77)

873. இறந்தான் றந்தை யீந்த வரத்துக் கிழிவெண்ணுன்
அறந்தா னீதென் றன்னவன் மைந்த னரசெல்லாம்
துறந்தான் ருயின் சூழ்ச்சியின் ஞால மவனுேடே
பிறந்தா ணுண்டா னென்னுமி தென்ருற் பெறலாமே.

தந்தை - தசரதன், ஈந்த வரத்துக்கு இழிவு எண்ணுன் - தான் கொடுத்த வரத்துக்குத் தாழ்வு வருதலை விரும்பாதவனுய், இறந்தான் - உயிர் விட்டான்; அன்னவன் மைந்தன் - அத்தகைய அவனுடைய (அரசுக்குரிய மூத்த) மகன், ஈது அறம் தான் என்று - (தந்தை சொல்லைக் காக்க நாம் அரசைத் துறந்து செல்லும்) இது தருமமே என்று கருதி, அரசு எல்லாம் துறந்தான் - அரசாட்சியை முற்றும் விட்டுச் சென்ருன்; அவனுேடே பிறந்தான் - அவனுடன் பிறந்த பரதன், தாயின் சூழ்ச்சியின் - தாயின் துராலோசனைக்கு இணங்கி, ஞாலம் ஆண்டான் - நாட்டைப் பெற்று ஆண்டான், என்னும் இது

பெறல் - என்று உலகத்தார் இழித்துச் சொல்லும் இப்பழியைப் பெறுதல், என்னால் ஆமே - என்னாலாகுமோ? (ஆகாது).

'உன்செயலால், உன்னோடு எனக்கும் மீளாப் பழி வந்தெய்துதலை நீ உணர்ந்தாயல்லை; நீ எங்ஙனமாயினும், அப்பழி யெய்துதலை நான் விரும்பேன்' என்கின்றான். 'தாயின் தவறான சூழ்ச்சிக்குத் தநயனும் உடந்தையானான்' என்று உலகோர் தன்னைப் பழிப்பர் என்பதே பரதன் உட்கோள். சத்தியமும் தருமமும் தவறாத தந்தையையும் தமையனையும் படைத்த தான், தமையன் செய்கைக்கு மாறாக அரசேற்றல் ஒல்லாது என்றான். ஏகாரவினா, எதிர்மறை உணர்த்தியது.

(பி - ம்.) 1. தந்தையீந்த, ஏய்ந்த, எந்தையீந்த, ஏய்ந்த தந்தையெந்தை; இழி வென்னா, இழிவெண்ணா, அழிவென்னா, அழிவென்னான், அழி வென்னா, அழிவெண்ணான்.
2. ஈதேயென்றவன், ஈதெனமன்னவன்.
3. தாயர்சூழ்ச்சியின், தாயார் சூழ்ச்சியின், சூழ்ச்சியில், சூழ்ச்சியிஞ், தாயுன்சூழ்ச்சியின்; அவனோடும, அவரோடே.
4. இதென்னாற்பெறலாமோ, பெறலாமால், இதென்னிற் பெறலாமே, இதென்றாற் பெறலாமால், இதற்றாற் பெறலாமால். (78)

874. மாளு மென்றே தந்தையை யுன்னான் வசைகொண்டாள்
கோளு மென்னா லேயெனல் கொண்டா னதுவன்றேல்
மீளு மன்றே யென்னையு மெய்யே யுலகெல்லாம்
ஆளு மென்றே போயின னன்றே வரசாள்வான்.

அரசு ஆள்வான் - அரசாளுதற்குரிய இராமபிரான், வசை கொண்டாள் கோளும் - பழியேற்றவளாகிய இவள் வரம் கொண்டதும், என்னாலே எனல் கொண்டான் - என்னாலேயே நேர்ந்ததென்ற கருத்துக் கொண்டவனாய், தந்தையை - தந்தையைப்பற்றி, மாளும் என்றே உன்னான் - (தன் பிரிவால்) அவன் இறத்தல்கூடுமே யென்றும் எண்ணாமல், என்னையும் - என்னைப்பற்றியும், மெய்யே உலகு எல்லாம் ஆளும் என்றே - (தாயைத் தூண்டினவன்) திண்ணமாக நாடு முழுதும் ஆள்வானென்று கருதியே, போயினன் - வனம் போனானாதல் வேண்டும்; அது அன்றேல் - அங்ஙனமல்லாவிடின், மீளும் அன்றே - (நாடு முழுதும் வருந்துதல் கண்டேனும்) திரும்பியிருக்கக் கூடு மன்றோ ?

'நீ வரங்கொள்ளுமாறு உன்னைத் தூண்டி, அரசாளுதற்கும் நான் இசைந்திருப்பேன் என்று என்னைப்பற்றித் தவறாக எண்ணியே இராம பிரான் வனம் போயிருத்தல் வேண்டும். அவன் இவ்வாறு நினைத்தற் கும் நீ காரணமானாய்' என்கின்றான். கோள்: முதனிலை நீண்ட தொழிற் பெயர்; வரங்கொள்ளுதலைக் குறித்தது. உலகு எல்லாம் என்றது, ஒரு பாதியும் பகிர்தலின்றி நாடு முழுதும் என்றபடி; "ஆழிசூ முலக

மெல்லாம் பரதனே யாள" (கைகேசி. 94) என்றது காண்க. அன்று, ஓர்: அசை.

(பி-ம்.) 1. மாளுமென்றே, மாளும்மென்றும்; தந்தையை உன்ன, என்னல், தந்தையுமன்ன, அன்னன், உன்னன், என்னல், எந்தையுமுன்னே; வசைகொண்டான், பாரான், கொண்டால், வதை கொண்டாள்.
2. கொண்டானிதுவன்றேல், அதுவன்றே.
3. இன்றே, என்றே, மீளும்மின்றே, மீளுமென்றே; என்னையுமெய்மெய் பின்னையுமெய்யே; அரசெல்லாம், மண்ணெல்லாம்.
4. அன்றே வுலகாள்வான். (79)

875. ஓதா நின்ற தொல்குல மன்ன னுணர்வப்பால்
ஏதே னுந்தா னுகவெ னக்கே பழிசெய்வான்
தீதா நின்ற சிந்தனை செய்தா னவனென்னப்
போதா தோவென் றுயிவள் கொண்ட பொருளம்மா.

ஓதா நின்ற-(அனைவரும்) புகழ்ந்து சொல்லுகிற, தொல் குலம் மன்னன் - பழம்பெருமையையுடைய குலத்தில் உதித்த சக்கரவர்த்தியின், உணர்வு-நினைவானது, அப்பால்-(வரம் கொடுத்த)பிறகு, ஏதேனும் ஆக-எதுவாயினும் ஆகுக; என் தாய் இவள் கொண்ட பொருள் - என் தாயாகிய இப்பழிகாரி வரம் கேட்டதன் பொருள், எனக்கே பழி செய்வான் - எனக்கே குற்றஞ் செய்பவனுய், தீது ஆக நின்ற சிந்தனை செய்தான் அவன் - தீங்காகவுள்ள எண்ணத்தைக் கொண்டான் அப்பரதன், என்ன போதாதோ - என்று (மன்னன்) கருதப் போதியதாகாதோ? அம்மா - என்னே இவள் பேதைமை!

இதுகாறும் தாயை முன்னிலைப்படுத்திக் கூறியவன், வெறுப்பு மேலிட்டு இதில் படர்க்கையாற் கூறுகின்றுன். 'இவளால் நெருக்குண்ட மன்னன், வேறு வகையின்றி வரங்கொடுத்துவிட்டான்; கொடுத்தபின் அவனெண்ணம் எதுவாயினும் இருக்கட்டும்; வரங் கேட்டவுடன், நானும் அதற்கு உடந்தையாயிருந்திருப்பேன் என்று அவன் கருத இடமுண்டாகிறதன்றே? இவள் பேதைமையும் கொடூரமும் இருந்தவாறு என்னே!' என வருந்துகின்றுன். தன்னைப்பற்றி இராமபிரான் தவருக எண்ணியிருத்தல் கூடுமென்றது போலத் தந்தையும் அவ்வாறு கருத இடமுண்டாயிற்றே என்கின்றுன்.

அப்பால் - வரம் தந்தபின். மன்னன்-இராமபிரான் என்று கொண்டு பொருள் கூறுவாறுமுளர். அதற்கு, இரண்டாமடியில் 'பணிசெய்வான்' என்ற பாடங் கொள்வர். தீதா: இறுதி தொக்கது. அம்மா: இரக்கங் குறித்தது.

(பி-ம்.) 1. நின்குல நல்லோன், நின்குண நன்னூல்; உணர்விப்பால், உரையிப்பால்.

2. யாதானுந்தானக, ஏதானுந்தானக, ஏதாமென்னுத்தந்தை, தாதை; பணி செய்வான், பணி செய்தான், அணிசெய்வான்.
3. நீதாய்நின்ற; அவனென்னுப்.
4. தாயவள் கொண்ட புகழம்மா. (80)

876. உய்யா நின்றே னின்னமு மென்முன் னுடன்வந்தோன்
கையார் கல்லைப் புல்லட குண்ணக் கலமேற்றி
வெய்யோ னனின் சாலியின் வெண்சோ றமுதென்ன
நெய்யோ டுண்ணு நின்றது நின்றார் நினையாரோ.

வெய்யோன் நான் - கொடியவனாகிய நான், இன்னமும் உய்யா நின்றேன் - இன்னமும் உயிரோடிருந்து, உடன் வந்தோன் என்முன் - உடன் பிறந்தவனான என் முன்னவன், கை ஆர் கல்லை - கையில் பொருந்திய தொன்னையில், புல் அடகு உண்ண - புல்லிய கீரையை (வைத்து) உணவருந்த, (நான்), இன் சாலியின் வெண் சோறு - இனிய சம்பா அரிசியாலான வெள்ளிய சோற்றை, கலம் ஏற்றி - பொற் கலத்தில் இட்டு, அமுது என்ன - தேவாமிருதம்போல, நெய்யோடு உண்ணுநின்றது - நல்ல நெய்யோடு உண்பதை, நின்றார் - பார்த்து நிற்கும் உலகத்தவர், நினையாரோ - (இழிவாக) நினையாரோ? (நினைப்பர்).

'இராமபிரான் காடு சென்றதைக் கேட்டபோதே நான் உயிர் நீத்திருத்தல் வேண்டும்; அவ்வாறன்றி இன்னும் நான் உயிரோடிருப்பதே மிகை; அதன்மேலும், அவன், இன்னாத காட்டில் தகாத உணவை உண்டுகொண்டிருக்க, நான் இங்கே அரண்மனையில் இனிதாகத் தங்கி, இனிய சம்பா அரிசிச் சோறும் புத்துருக்கு நெய்யுமாக ஆடம்பர உணவு கொள்வதைப் பார்ப்பவர் என்ன நினைப்பர்? இது தகுமோ?' என வருந்துகின்றான்.

கலம் - இடத்துக்கேற்பப் பொற்கலம் எனப்பட்டது.

(பி - ம்.) 1. உய்யாநின்றான்; இன்னமுமெம்முன், இன்னமுமென்றன்; உடன் வந்தான்.
2. கய்யார்கல்லைப், கையார் கானில்; கலமேற, கலமேறி, கலமேற்று, கலமேந்தி, உண்ணத் தலமேறும்.
3. வெய்யாகானின், வெய்தா கானிச், ஐயோ கானின், அய்பா கானின், அய்யோ கானிச்; வெண்சோறமுதான்பால், வெண்சோறமுதுண்ட, வெண்சோறஃதென்ன, வண்சோறமுதன்ன, வண் சோற்றமுதென்ன, வன்சோற்றமுதென்ன.
4. உண்ணமின்றது. (81)

877. வில்லார் தோளான் மேவினன் வெங்கா னகமென்ன
நல்லா னன்றே துஞ்சின னஞ்சே யனையாளைக்
கொல்லேன் மாயேன் வன்பழி யாலே குறைவற்றேன்
அல்லே னேநா னன்புடை யார்போ லழுகின்றேன்,

வில் ஆர் தோளான் - வில்லேந்திய தோளையுடைய இராமபிரான், வெம் கானகம் மேவினன் என்ன - கொடுங் காட்டை அடைந்தானென்று, நல்லான் - நல்லவனாகிய மன்னன், அன்றே துஞ்சினன் - (இராமன் காடு சென்ற) அன்றே இறந்துபட்டான்; நான்—, நஞ்சே அனையாளை கொல்லேன் - விடமே போன்ற இக்கொடியவளைக் கொல்லாமலும், மாயேன் - நானே இறவாமலும், வன் பழியாலே குறைவு அற்றேன் அல்லேனோ - கொடும்பழியில் குறைவில்லாதவனுனேன் அன்றோ? (அங்ஙனமிருந்து) அன்பு உடையார்போல் - (இராமபிரான்பால்) மெய்யன்புடைய மற்றவர்போல், அழுகின்றேன் - (இப்போது) அழுது கொண்டிருக்கின்றேன்! (என் நிலை இருந்தவாறு என்னே).

'இராமபிரான் காடடைந்ததைக் கேட்டவுடனே உயிர் துறந்த தந்தை உண்மையான அன்புடையவன்; நானோ, அது கேட்டவுடன் இறவாமலும், அக்கொடுமைக்குக் காரணமானவளைக் கொல்லாமலும் வீணே இருந்து அழுகின்றேன்; இதனால் எனக்குப் பழி மிக்கதேயன்றி நான் உண்மை அன்புடையவன் எனல் பொருந்துமோ? இது நாடகமே!' எனக் குறைகின்றான்.

பழிபாலே குறைவற்றேன் என்றது, பழி நிறையப்பெற்றேன் என்றவாறு.

(பி - ம்.) 1. மேயினன்; என்னு.
2. நல்லாளைந்து, நல்லானையன்.
3. குறையற்றேன், குறையுற்றேன், குறைகின்றேன், குறையாறேன், குறைவுற்றேன்.
4. அல்லேனோயான், அல்லேனயான், அல்லேனய்கான், அல்லேனனே. (82)

878. பாரோர் கொள்ளார் யானுயிர் பேணிப் பழிபூணேன்
தீரா தொன்றோ துன்புமிவ் வூரிற் றிருநில்லாள்
ஆரோ டெண்ணிற் றாருரை தந்தா ரறமெல்லாம்
வேரோ டுங்கே டாக முடித்தென் விளைவித்தாய்.

பாரோர் கொள்ளார் - (நான் அரசேற்றலை) உலகோர் ஒப்ப மாட்டார்; யான் - நான், உயிர் பேணி - (அரசுக்காக) என் உயிரைக் காத்துக்கொண்டு, பழி பூணேன் - பழியை மேற்கொள்ள மாட்டேன்; இ ஊரில் - இந்த ஊரில், துன்பும் தீராது - (இராமபிரான் இல்லாத வரையில்) துன்பமும் தீராது; ஒன்றோ - அதுமட்டுமோ? திரு நில்லாள் - இலக்குமி இங்கே தங்கமாட்டாள்; (இவ்வளவு தீமைக்கும் இடமாக), எண்ணிற்று ஆரோடு - நீ ஆலோசித்தது யாருடன்? ஆர் உரைதந்தார் - யார் உனக்கு இதைச் சொன்னவர்கள்? அறம் எல்லாம் வேரோடும் கேடு ஆக முடித்து - தருமம் முழுதும் அடியோடு கெடும்படி செயலைச்

செய்து, என் விளைவித்தாய் - எத்தகைய பொல்லாங்குகளை விளையச் செய்தாய்?

'உன் செயலால் உனக்கோ, எனக்கோ, நாட்டுக்கோ நல்ல தொன்றும் இல்லை; தருமம் கெட்டதும், நமக்குப் பழியும், நாட்டுக்குத் துன்பமும் உண்டானதுமே மிச்சம்; இராமபிரான் சென்றபோதே ஊரும் பாழாயிற்று; இத்தகைய செயலை நீயாகச் செய்திருக்கமாட்டாய் என்று தோற்றுகின்றது. உனக்கு இந்தச் சூழ்ச்சியைச் சொன்னவர் யார்? எங்ஙனமாயினும், நான் உயிரோடிருந்து, அரசோடு பழியையும் ஏற்று வாழேன்' என்கின்றான். கைகேயியின் செயல்குறித்து முன்பு தசரத னும், "பொய்ந்நிலை யோர்கள் புணர்த்தவஞ்ச முண்டோ, உன்னிலை சொல்" (203) என வினவியது காணத் தகும்.

(பி - ம்.) 1. பாரோகொள்ளா, பாரொடுகொள்ளா; பழிபூண்டால், பழி பூண்டெடன்.
2. தீராதன்றே; துன்பமிவ், மின்பழி, தீராதொன்றுனின்பழி, தீரா தொன்றுனும்பழி, தீராதொன்றுற்றுன்பமிவ், தீராதொன்னூர்துன் பமிவ்; திருமின்றாள்.
3. எண்ணிற்றுருரைகொண்டாய், தந்தாய், எண்ணியாருரைதந்தார்.
4. முடித்தே விளைவித்தாய், முடித்தாய் விளைவித்தாய், முடித்தென் வினையேனே. (83)

879, கொன்றே னானென் றாதையை மற்றுன் கொலைவாயால்
ஒன்றோ கானத் தண்ணலை யுய்த்தே யுலகாள்வான்
நின்றே னென்றா னின்பிழை யுண்டோ பழியுண்டோ
என்றே னுந்தா னென்பழி மாயு மிடமுண்டோ.

உன் கொலை வாயால் - கொலையை விளைவித்த உன் (கொடிய) வாயினால் (வாயைக் கருவியாகக் கொண்டு), நான்—, என் தாதையை கொன்றேன்—; ஒன்றோ - அதுமட்டுமோ? அண்ணலை கானத்து உய்த்து - இராமபிரானையும் காட்டிற் போக்கி, உலகு ஆள்வான் நின்றேன் - உலகாள இருக்கின்றேன், என்றால் - என்று பலரும் நினைத்தால், நின் பிழை உண்டோ - உன்மேல் குற்றம் உண்டோ? பழி உண்டோ - (உனக்குப்) பழியும் உண்டோ? (இல்லை); என் பழி - நான் எய்தும் பழி, என்றேனும் மாயும் இடம்தான் உண்டோ - என்றாவது மறைய இடமேனும் உண்டோ? (அதுவும் இல்லை).

'நான் நேரே இன்றி, உன் மூலமாக இத்தீமைகளைச் செய் வித்தேனென்று பலரும் கருதும்போது, எய்தவன் இருக்க அம்பை நோவதிற் பயனில்லை என்பது போல் ஆகி, நீ குற்றமும் பழியும் அற்ற வளாகிவிடுவாய்; நான் எய்திய பழி என்றும் மறையாது; உன்னை நல்லவளாக்கிவிட்டவனாவேன் நான்' என்று தன்னையே நொந்து கொள்கின்றான் பரதன்.

என் பழி மாயும் இடந்தான் உண்டோ என மாறிப் பொருளுரைக் கப்பெற்றது. மற்று : அசை.

(பி - ம்.) 1. தந்தையை; மற்றுன் கொலைவாளால், மற்றென் கொலைவாளா.
2. ஒன்றே; உய்த்தேன்.
3. என்றுனின்னிலை.
4. என்புகழ், உன்புகழ்; மாயுமிடையுண்டோ. (84)

880. கண்ணுலேயென் செய்வினை யின்னுஞ் சிலகாண்பார்
மண்ணோர் பாரா தெள்ளுவர் வாளா பழிபூண்டாய்
உண்ணு நஞ்சங் கொல்கில தென்னு முரையுண்டென்
றெண்ணு நின்றே னன்றியி ரேனென் னுயிரோடே.

(உயிர் விடக் கருதிய நான்) உண்ணு நஞ்சம் கொல்கிலது என்னும் உரை - உண்ணுத விடம் கொல்லாது என்னும் சொல், உண்டு என்று எண்ணுநின்றேன் - (உலகத்தில்) உண்டேயென்று (இப்போது) நினைக்கின்றேன்; அன்றி - அவ்வாறு இல்லையேல், என் உயிரோடே இரேன் - என் உயிரோடு இருக்கமாட்டேன்; மண்ணோர்- உலகத்தவர், என் செய்வினை சில - (உயிரோடிருந்து) நான் செய்யப் போகும் சில காரியங்களை, இன்னும் கண்ணுலே காண்பார் - மேலே தங்கள் கண்ணுலே பார்ப்பார்கள் (அப்போது என்னை இகழார்); பாராது (உன்னிடம் அத்தகையது ஒன்றையும்) காணுமல், எள்ளுவர்- உன்னைப் பழிப்பார்கள்; வாளா பழி பூண்டாய் - நீ வீணே (பயனின்றிப்) பழியைக் கொண்டவளாவாய்.

'பழிக்கு அஞ்சி உயிர் விடுதலினும், உயிரோடிருந்து நான் குற்ற மற்றவனென்பதை உலகறியச் செய்தலே மேல் என்று இப்போது எண்ணுகின்றேன்; அவ்வாறு செய்து நான் பழியின் நீங்கினவனுவேன். நீ அஃதின்றி இகழப்பட்டு வீண்பழிக்கு ஆளாவாய்' என்கின்றுன். 'உண்ணு நஞ்சம் கொல்கிலது' என்றது, நஞ்சு அதனை உண்ட வரையே கொல்லும்; அதுபோல, நஞ்சனைய உன் செயலில் நான் தொடர்பு கொண்டால்தான் அஃது என்னைப் பழிக்கும் பாவத்துக்கும் ஆளாக்கும் என்பதனைக் குறித்தது. நான் அரசேற்றல் இல்லை என்பது உறுதியாதலால், உன் முயற்சி பயனற்றதாகி, நீ வீணே பழிக்காளாவாய் என்கின்றுன். பழி நீங்கத் தான் செய்யப்போவதையும், அவள் செய்தற் குரியதையும் மேலே இரண்டு கவிகளாற் கூறுகின்றுன்.

எண்ணு நின்றேன் - எண்ணுகின்றேன். உண்ணுநஞ்சங் கொல் கிலது: "உண்ணுதே யுயிருண்ணு தொருநஞ்சு" (யுத்த. 3859).

(பி - ம்.) 1. இன்னம், பின்னும்; சிலகாண்பாய், காண்பான், சிலர்காண்பார், காண்பர், காண.
2. மன்னுர்பாராது, மண்ணோர்பாரார், காணுது, மண்ணோர் விண்ணோர், வானோர், விண்ணோர் மண்ணோர்; எள்ளலர், எண்ணலர், கொள்ளலர்; பழிபூண்டேன், வாளாப் பழி பூண்டாய், வாளாப்பழி

பூட்டார், பழிபூண்டார், வாளாவழி யுண்டாய், மாயாப்பழி பூண்டாய், பூண்டேன், மாளாப்பழி பூண்டாய், வினை பழிபூண்டாய்.
3. கொள்கிலது, கொலலலது, கோறலது; என்னுமுறை, என்றுமுரை.
4. எண்ணுகின்றே; அன்றியிரேனிவ், அன்றியிருந்தேன், என்று மிருந்தேன்; உயிரென்றால். (85)

881. ஏன்றுன் பாவிக் கும்பி வயிற்றி னிடைவைகித்
தோன்றுந் தீராப் பாதக மற்றென் றுயர்தீரச்
சான்றுந் தானே நல்லற மாகத் தகைஞாலம்
மூன்றுங் காண மாதவ நானே முயல்கின்றேன்.

உன் - உன்னுடைய, பாவி கும்பி வயிற்றினிடை - பாவிகள் இருத்தற்குரிய நரகம் போன்ற வயிற்றில், ஏன்று - (இருக்க) நேர்ந்து, வைகி தோன்றும் - தங்கிப் பிறந்ததனாலான, தீரா பாதகம் அற்று-தீராத பாவம் தீர்ந்து, என் துயர் தீர-(அவ்வாறு பிறந்ததனால் உண்டான)என் வருத்தமும் தீரும்படி, நல் அறம் தானே சான்று ஆக - நல்ல தருமமே சாட்சியாக, தகை ஞாலம் மூன்றும் காண - பெருமை பொருந்திய மூவுலகத்தவரும் நேரே காண, நானே மாதவம் முயல்கின்றேன் - நானே பெருந்தவம் செய்யப்போகின்றேன்.

'பிறர் நினைக்கவும் அஞ்சத்தக்க கொடுமைகளைக் கூசாமல் செய்த நீ பெரும் பாவி; உன் வயிற்றிற் பிறந்ததனால், உன் பாவம் என்னையும் தொடரும்: அதனாலே நான் செய்யாத பிழை செய்தது போலப் பிறர்க்குத் தோற்றவும் அது குறித்து நான் வருந்தவும் இடமாயிற்று. இவையெல்லாம் தீர, இராமபிரானுக்கு நீ கொடுத்த தவ வாழ்க்கையை நானே மேற்கொள்வேன்; இதனை நான் தருமமே சான்றாகக் கூறுகின்றேன்; ஒருவருக்காக அன்று' என்கின்றான்.

கும்பி - நரகம்; அது பாவிகள் இருத்தற்குரிய இடமாதலின் பாவிக் கும்பி என்றான். இடை: ஏழனுருபு. நானே: ஏகாரம், பிரிநிலை: தவத்திற் குரியவன் இராமபிரானல்லன் எனப் பிரித்துக் காட்டியவாறு.

(பா - ம்.) 1. ஏன்றும்; இடைபெய்தித், இடையேகித்.
2. தோன்றும்திய, பாரப், பாராப், பாரா; பாதகமற்றேன், பாதக்முற்றேன், பாதகமேனும்.
4. மாதவம்யானே, மாதவமின்றே. (86)

882. சிறந்தார் சொல்லு நல்லுரை சொன்னேன் செயலெல்லாம்
மறந்தாய் செய்தா யாகுதி மாயா வுயிர்தன்னைத்
துறந்தா யாயிற் றூயையு மாதி யுலகத்தே
பிறந்தா யாதி யீதல தில்லைப் பிறிதென்றான்.

மாயா உயிர் தன்னை - (இதுவரை) மாய்த்துக் கொள்ளாத உன் உயிரை, துறந்தாய் ஆயின் - (இப்போதேனும் நீ) விடுவாயானால்,

செயல் எல்லாம் - (இதுகாறும் செய்த) கொடுஞ் செயல்களை எல்லாம்; மறந்தாய் செய்தாய் ஆகுதி - (புத்தி பூர்வமாக அன்றி) மறந்து செய்தவளாவாய்; தூயையும் ஆதி - (பழியின் நீங்கித்) தூய்மை பெற்றவளும் ஆவாய்; உலகத்தே பிறந்தாய் ஆதி - உலகத்தில் பிறந்ததன் பயனைப் பெற்றவளும் ஆவாய்; (நீ பழி பாவங்களின் நீங்கிப் புகழ் பெறுதற்குரிய வழி) ஈது அலது - இது வல்லாது, பிறிது இல்லை - வேறு இல்லை; (இது நானுகச் சொல்வதன்று); சிறந்தார் - அறிவொழுக்கங்களிற் சிறந்த பெரியோர்கள், சொல்லும் - சொல்லத் தக்க, நல் உரை - நல்ல அறிவுரையாகும்; சொன்னேன் - அதனைச் சொன்னேன்; என்ருன் - என்று கூறிமுடித்தான் (பரதன்).

தனக்கு நன்மை தருவது தவமே என முன்னர்க் கூறியவன் 'உனக்கு நன்மை தருவது நீ உயிர் துறத்தலே; சிறந்தோர் சொல்லத் தக்கது அதுதான்; நீ உயிர் துறந்தால், ''கைகேயி தன்னுணர்வின்றித் தவறு செய்துவிட்டாள்; உணர்ந்ததும் உயிர் நீத்தாளாதலால் அவள் குற்றமில்லாதவளே'' என்ற புகழெய்துதற்கும், பழிபாவங்கள் தீர்தற்கும் வழியுண்டாகும்' என்று கைகேயிக்குக் கூறுகின்ருன்.

'தாயே' என்று விளிக்கவும் மனமின்றிப் பொதுப்படக் கூறினுன். "தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார், தோன்றலிற் ருேன்ருமை நன்று'' என்றபடி, பிறந்தோர் எய்தும் சிறந்த பயன் புகழேயாதலால், அது பெறுவாய் என்பான், 'உலகத்தே பிறந்தாயாதி' என்ருன்.

(பி - ம்.) 1. நல்லுரை சொல்லும்.
2. செய்தாயாகியுன், ஆகிலுன், ஆகின, ஆதியுன்.
3. துறந்தாயாகில்; தூயையுமாயிவ், தூயையுமாவை, தூயையுமாவை, தூயையுமாகி, தூய்மையுமாயிவ். (87)
4. பிறந்தாயாகி, பிறந்தாயாவை.

பரதன் கோசலையின் இருப்பிடம் செல்லுதல்

(கலிவிருத்தம்)

883. இன்னண மினையன வியம்பி யானினிப்
பன்னருங் கொடுமனப் பாவி பாலிரேன்
துன்னருந் துயர்கெடத் தூய கோசலை
பொன்னடி தொழுவெனென் றெழுந்து போயினுன்.

இன்னணம் - இவ்வாருக, இனையன இயம்பி - இத் தன்மையான பலவற்றைச் சொல்லி, யான் இனி பன்ன அரு கொடு மனம் பாவிபால் இரேன் - நான் இனிமேல் சொல்லுதற்கரிய கொடிய மனமுடைய பாவியான இவளபால் தங்கேன், துன் அரும் துயர் கெட - நேர்ந்துள்ள அரிய துயரம் தீரும்படி, தூய - மனத் தூய்மையையுடைய, கோசலை பொன் அடி தொழுவன் என்று - கௌசல்யா தேவியின்

பொலிவு பெற்ற பாதங்களை வணங்குவேன் என்று சொல்லி, எழுந்து போயினான் - (அவ்விடத்தினின்றும்) எழுந்து போனான்.

பரதன் எவ்வளவு சொல்லியும் கைகேயியின் மனம் மாறாதது கண்டு, 'இனி இங்கிருப்பதில் பயனில்லை; எத்தகைய துயரத்தையும் போக்கி இதமளிக்க வல்ல மாண்புடையவள் கௌசல்யா தேவியாத லால், அவளைச் சென்று காண்பேன்' என்று அவள்பால் செல்ல எழுந்தான். கைகேயியின் கொடுமை சொல்லுதற்கரியது என்றதனால், இனி இங்கே தாழ்த்தால் அவளால் இன்னும் என்ன நேருமோ என்ற அச்சமும் கொண்டான்.

சுமந்திரன் முதலியோர் அருகில் இருப்பதையும் பாராது, பரதன் கைகேயியை வைதுகொண்டிருக்க, அவன் பேச்சொலியால் அவன் வந்திருப்பதை அறிந்த கோசலை, அவனைக் கண்டு பேசக் கருதிச் சுமித் திரையுடன் கைகேயியின் அரண்மனைக்குப் புறப்பட, அத்தருணத்தில் பரதன் சென்று அவளைக் கண்டதாக வான்மீகம் கூறும் (சருக்கம். 75).

(பி - ம்.) 1. இன்னணமிவையவன், இன்னணம் பலபல. இன்னனவினையன, இன்னனபலபல; இயம்பியானுமிப், விளம்பியானுமிப்.
2- பன்னெடுங் கொடுமையிப்; பாவிபாடு, பாவிமாடு.
3. துயருடைத்.
4. அழுதுபோயினான். (88)

பரதன் கோசலையின் அடியில் வீழ்ந்து புலம்புதல்

884. ஆண்டகை கோசலை யருகி னெய்தினான்
கீண்டுமண் கிழிதர விழுந்து கேழ்கிளர்
காண்டகு தடக்கையிற் கமலச் சீறடி
பூண்டனன் கிடந்திடை புலம்பி னனரோ.

ஆண் தகை கோசலை அருகின் எய்தினான் - ஆண் தன்மையிற் சிறந்த பரதன் கோசலையை அணுகி, மண் கீண்டு கிழிதர விழுந்து - தரை பிளந்து கிழியும்படி (கீழே) விழுந்து, கேழ்கிளர் - (நீல) நிறம் விளங்குகின்ற, காண்தகு - காணுதற்கு இனிய, தட கையின் - (தன்) பெரிய கைகளால், கமலம் சிறு அடி பூண்டனன் - (கோசலையின்) தாமரை மலர் போன்ற சிறிய பாதங்களைப் பற்றியவனாகி, இடை கிடந்து - (சிறிது போது) தரையிலே கிடந்து, புலம்பினான் - பின்பு புலம்பலானான்.

அரோ : அசை.

கோசலையைக் கண்ட பரதன், அடியற்ற மரம் போல அவள் திருவடிகளில் விழுந்து, அவற்றைப் பற்றிக்கொண்டு புலம்பலானான். துயர மிகுதியால் யாதும் பேச மாட்டாதவனாய்ச் சில நேரம் கிடந்து பின்பு புலம்பலானான் என்பது பட 'இடை கிடந்து' என்றார்.

எய்தினான், பூண்டனன்: முற்றெச்சம்.

(பி - ம்.) 1. அருகரெய்தினன், அருகினெய்தினன்.
2. மீண்டுமண்கிழிதர, கிழிபட, கீழ்தர; வீழ்ந்து, விழுந்த.
3. தடக்கையாற்.
4. கிடந்தனன், கிடந்திடைப், தீயிடை. (89)

885. எந்தையெவ் வுலகுளா னெம்முன் யாண்டையான்
வந்தது தமியனேன் மறுக்கங் காணவோ
சிந்தையி லுறுதுயர் தீர்த்தி ராலெனும்
அந்தரத் தமரரு மழுது சோரவே.

(பரதன் கோசலையை நோக்கி) அந்தரத்து அமரரும் - விண்ணுலகிலுள்ள தேவர்களும், அழுது சோர - (அவன் நிலை கண்டு) அழுது வருந்தும்படி, எந்தை எ உலகு உள்ளான் - எம் தந்தை எவ்வுலகத்தில் உள்ளான்? எம்முன் யாண்டையான்-எம் தமையனை இராமபிரான் எங்குள்ளான்? தமியனேன் வந்தது - ஆதரவற்ற நான் (இங்கு) வந்தது, மறுக்கம் காணவோ - இந்தக் கலக்க நிலையைக் காண்பதற்கோ? சிந்தையில் உறுதுயர் தீர்த்திர் - என் மனத்திலுள்ள பெருந்துயரத்தைத் தீர்ப்பீராக, எனும் - என்பான்.

ஆல், ஏ : அசை.

தனக்கு ஆறுதல் கூறித் தேற்ற வல்லவள் கோசலையே என்று கருதி அவள்பால் வந்தா னுதலால், 'சிந்தையி லுறுதுயர் தீர்த்திர்' என்று அவளை வேண்டுகிறான். தந்தை இவ்வுலகில் இல்லையென்பதும் தமையன் நாட்டில் இல்லை என்பதும் முன்னமே அறிந்தவனானாலும், ஆராமை மேலீட்டால், 'எவ்வுலகுளான், யாண்டையான்' என்று வினவுகின்றான்; இஃது உலக இயற்கை. அவ்வினாவிலேயே அவனறிந் துள்ளதன் குறிப்புப் பெறப்படும். இவ்வாறு அவன் புலம்பிக் கூறிய வற்றை இதுமுதல் ஐந்து கவிகளால் கூறுகின்றார்.

மறுக்கம் - கலக்கம்; நாடு முழுதும் இராமபிரான் பிரிவால் கலங்கும் நிலையைச் சுட்டியது.

(பி - ம்.) 1. உலகுளன், உலகினன்.
2. தமியெனிம்.
3. சிந்தையின்; தீர்திராலெனும், தீதிலாரெனும், தீர்த்திராலென்றான், தீர்கலேனென்றான். (90)

886. அடித்தலங் கண்டிலென் யானென் னையனைப்
படித்தலங் காவலன் பெயரற் பாலனோ
பிடித்திலிர் போலுநீர் பிழைத்தி ராலெனும்
பொடித்தலந் தோளுறப் புரண்டு சோர்கின்றான்.

தோள் பொடி தலம் உற - தோள்கள் புழுதி படிந்த தரையில் படுமாறு, புரண்டு சோர்கின்றான் - புரண்டு வருந்துகின்ற பரதன்

யான் - நான், என் ஐயனை - என் தந்தையின், அடிதலம் கண்டு இலென் - திருவடிகளைக் கண்டு தொழப் பெற்றிலேன்; (அது நிற்க), படி தலம் காவலன் - நாடு காத்தற்குரிய இராமபிரான், பெயரல் பாலனோ (நாட்டை விட்டுச்) செல்லத்தக்கவனோ? நீர் பிடித்திலிர் போலும் - (அவன் அவ்வாறு போகாதபடி) நீர் தடுக்கவில்லை போலும்; பிழைத்திர் - (இவ்வகையில் நீர்) தவறிவிட்டீர்; எனும் - என்பான்.

ஆல் : அசை.

'இராமபிரான் காடு புகாத வண்ணம் நீர் தடுத்திருத்தல் வேண்டும்; அவன் பிரிவாலேயே தந்தை உயிரிழக்கவும், நாடு கலங்கவும் நேர்ந்தது; நானும் அவர்களைக் காணப்பெற்றிலேனே' என்கின்றான்.

பிடித்தல் - தடுத்து நிறுத்துதல். முதலில் தந்தையையும், அடுத்ததாக இராமபிரானையும் கண்டு தொழ வேண்டுமென்பதே பரதனது பேராவல்: 838, 853 - பார்க்க. படித்தலம் : இருபெயரொட்டு.

(பி - ம்.) 2. படித்தலங் காத்திலன், பிடித்திலன் காவலன்; பெயரப்பாலனோ, பரியற்பாலனோ, பிரியற்பாலனோ, பிரியப்பாலனோ.
3. பிடித்திலீர்; பிழைத்திராலெனப், பிழைத்திராவெனும்.
4. புரண்டுசோருமால். (91)

887. கொடியவர் யாவருங் குலங்கள் வேரற
நொடிகிலர் யானது நுவல்வ தெங்ஙனம்
கடியவள் வயிற்றினிற் பிறந்த கள்வனேன்
முடிகுவெ னருந்துயர் முடிய வென்னுமால்.

கொடியவர் யாவரும் - (இத் தீமைகளுக்குக் காரணமான) கொடியவர்களெல்லாம், குலங்கள் வேர் அற நொடிகிலர் - தம் குலம் வேரோடழியுமாறு இறந்தொழிந்திலர்; கடியவள் வயிற்றினில் பிறந்த - கொடியவளான கைகேயியின் வயிற்றில் பிறந்த, கள்வனேன் யான் - வஞ்சகனான நான், அது நுவல்வது எங்ஙனம் - அதைச் சொல்வது எவ்வாறு? அரு துயர் முடிய - எனது கடுந்துயரம் தீர, முடிகுவென் - நான் இறந்தொழிவேன்; என்னும் - என்பான்.

ஆல் : அசை.

'இக் கொடுமைகள் செய்தவர் குலத்தோடு அழிய வேண்டும்; ஆனால் அவர்கள் அழியவில்லை; நான் அதைச் சொல்வதால் பயனில்லை; ஆதலால், பழிக்கு ஆளாகாமல் நான் இறந்தொழிவேன்' என்கின்றான். கூனியின் போதனையினால் கைகேயி மனந் திரிந்து கொடுமைக்கு உடன்பட்டாளென்பதனைப் பரதன் ஒருவாறு அறிந்திருத்தல் கூடுமாதலின், கொடியவர் எனப் பன்மையிற் சுட்டியது அவ்விருவரையுங் குறித்ததெனலாம். 'கைகேயியை நான் கொல்வதற்குமில்லை; அவளாக

ஒழியவுமில்லை; ஆதலால், நான் உயிர் நீத்து எனக்கு வரக் கடவ பழி பாவங்களைத் தீர்த்துக்கொள்வேன்' என்கின்றான்.

நொடிதல் - அழிதல். அழித்தற் கடவுள் 'நொடித்தான்' எனப் படுவர்; சுந்தரர் தேவாரம், திரு நொடித்தான மலைப் பதிகம் பார்க்க.

(பி - ம்.) 1. யாரையும், அயாவரக், வேரறும்.
2. நொடிகுவென்யானது, யானிது, நொடிகிலராகில்யான், கோடிகுவர் யானது, கொடிகிலம்யானது, கொடிவரின்யானது, கொடியினில் யானது.
3. வயிற்றிலே; கள்வனேல்.
4. முடிகிலன், முடிகுவன்; முடிக்க, முடிப்ப. (92)

888. இரதமொன் றூர்ந்துபா ரிருளை நீக்குமவ்
வரதனி லொளிபெற மலர்ந்த தொல்குலம்
பரதனென் றொருபழி படைத்த தென்னுமால்
மரகத மலையென வளர்ந்த தோளினான்.

மரகதம் மலை என - மரகதக் கல்மலை போல, வளர்ந்த - (பூரித்துத் திண்ணிதாக) வளர்ந்துள்ள, தோளினான் - தோள்களையுடைய பரதன், இரதம் ஒன்று ஊர்ந்து - ஓராழித் தேர் ஒன்றைச் செலுத்தி, பார் இருளை நீக்கும் அ வரதனில் - உலக இருளைப் போக்கும் அச் சூரிய னிடமிருந்து, ஒளி பெற மலர்ந்த - புகழ்மிக விரிந்த, தொல்குலம் - பழமையான நம் குலம், பரதன் என்ற ஒரு பழி படைத்தது - பரதன் என்ற ஒரு பழிகாரனை (இடையே) பெற்றுவிட்டது; என்னும் - என்பான்.

ஆல் ! அசை.

நிறத்தாலும் திண்மையாலும் பரதன் தோள்களுக்கு மரகத மலை உவமை. உலகம் தன்மீது ஐயங்கொண்டு தன்னைப் பழிக்கும் என்பதே பரதன் கருத்தாகலின், 'இதுகாறும் பழிக்கு இடமாக ஒருவரேனும் தோன்றாத இக்குலத்தில் பழிகாரனாக நானொருவன் தோன்றினேனே' என்கின்றான். காரணமான தன்னைக் காரியமாக்கிக் குலம் பழி படைத் தது எனக் கூறுகின்றான். வரதன் - உலகுக்கு ஒளி கொடுப்பவன். அ: உலகறி சுட்டு. சூரியன் ஓர் இரதத்தை ஒரே திசையிற் செலுத்தி உலகிருளைப் போக்குபவன்; தசரதன் எல்லாத் திக்குக்களிலும் தேரைச் செலுத்திப் பகையிருளைப் போக்கியவன். அவன் சூரியனிலும் சிறந்தவன் என்ற குறிப்பும் காணத்தகும்.

(பி - ம்.) 1. ஊர்ந்த; பேரிருளை; நீக்குகம், நீக்கிய, நீக்குறும்.
2. வரதனின்; வளர்ந்த. வளர்க்கும்.
3. பரதனின்று, பரதனில்; என்னுமா. (93)

889. வாடொடு தானையான் வானின் வைகிடக்
காடொரு தலைமக னெய்தக் கண்ணிலா
நாடொரு துயரிடை நைவ தேயெனும்
தாடொடு தடக்கையத் தரும மேயனான்.

தாள் தொடு தட கை - முழந்தாளைத் தொடுமாறு நீண்ட கைகளை யுடைய, அ தருமமே அன்னான் - தருமமே உருக்கொண்டது போன்ற அப்பரதன், வாள் தொடு தானையான் - வாட்படையேந்திய சேனைப் பெருக்கையுடைய மன்னன், வானின் வைகிட - வானுலகு சென்று தங்க, ஒரு தலைமகன் - (அவனுடைய) ஒப்பற்ற மூத்த புதல்வன், காடு எய்த - காட்டை அடைய, கண் இலா நாடு - கண்ணை இழந்த கோசல நாடு, ஒரு துயரிடை நைவதே - பெருந்துயருக்கு உட்பட்டுத் துன்புறுவதோ? (இது தகுமோ!), எனும் - என்பான்.

'நாட்டை முன்பு காத்தவனும், இனிக் காத்தற்குரியவனும் நாட்டில் இல்லாது சென்றுவிட்டமையின், நாடு கண்ணிழந்ததாகிக் கலங்குகின்றது; இந்நிலை எய்துதல் தகுமோ?' என்கின்றான். மன்னவன் நாட்டிற்குக் கண்! "கண்ணெனப் படுவ மூன்று காவலர் கல்வி காமர், விண்ணிணைச் சுழல வோடும் வெய்யவன் என்னும் பேரார், எண்ணினுள் தலைக்கண் வைத்த கண்ணஃதில்லை யாயின், மண்ணினுக் கிருளை நீக்கும் வகைபிறி தில்லை மன்னா" (சூளா : மந்திர. 30); "மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம், கண்ணு மாவியு மாம்பெருங் காவலான்" (பெரிய. நகரச்).

(பி - ம்.) 1. வாட்டொடு, வாடொகு, வாட்டொழில்; வானில்வைகுறக், வைகிடக்.
2. காட்டொரு, காடொடு, காட்டொடு; காண்கிலா, காண்கிலான்.
3. நாட்டொரு, நாடொடு, நாட்டொடு; நைவதோவெனும், நடப்பதே யெனும், நடப்பதோவெனும், நலிவதோவெனும், நவில்வதோ வெனும், நையவோவெனும்.
4. தாடொடும்; தாட்டொடு, தாட்டொழு; தருமமேயன்னான், தரும மெய்தினான், தருமமேயினான்; மு. தாட்டொழு மன்பினிற் றகையன் போலவே. (94)

பரதனது தூய்மையைக் கோசலை உணர்தல்

890. புலம்புறு குரிசிறன் புலர்வு நோக்கினள்
குலம்பொறை கற்பிவை சுமந்த கோசலை
நிலம்பொறை யாற்றல னெஞ்சு தூய்தெனச்
சலம்பிறி துறமனந் தளர்ந்து கூறுவாள்.

குலம் பொறை கற்பு இவை சுமந்த கோசலை - உயர்குடிப் பிறப்பும் பொறுமையும் கற்பும் என்ற இவ்வுயர் பண்புகள் கொண்ட கோசலை, புலம்பு உறு - புலம்புதல் மிக்க, குரிசில்தன் - பரதனது, புலர்வு நோக்

கினுன் - வாட்டத்தைக் கண்டு, நெஞ்சு தூய்து - இவன் மனம் தூய்மை யுடையது, நிலம் பொறை ஆற்றலன் - இராச்சிய பாரத்தை ஏலான், என - என்று உட்கொண்டு, சலம் பிறிது உற - (முன்பிருந்த) கோபம் மாயப்பெற்று, தளர்ந்து - மனம் நெகிழ்ந்து, கூறுவாள் - (பரதனுக்குக்) கூறலானுள்.

கோசலை, உயர் குடிப்பிறப்பும், அதற்கு ஏற்ற பொறுமை, கற்பு முதலிய சீரிய குணங்களும் படைத்தவளாதலால், பரதனுடைய மன நிலையை உய்த்துணர்ந்து, தாயின் சூழ்ச்சியில் அவனும் தொடர் புடையன் என்ற கருத்தால் முன்பு இருந்த சினம் மாறி, மனம் நெகிழ்ந்து அவனை நோக்கிக் கூறலுற்ருள்.

புலர்வு - வாட்டம்; அகமும் முகமும் வாடுதல். முக வாட்டத்தாலும் சொற்களாலும் அவனது அகந்தூய்மையை உணர்ந்தாள். நோக்கினுள்: முற்றெச்சம். மாருதி சீதா பிராட்டியைக் குறித்துக் கூறும், "இற்பிறப் பென்ப தொன்றும் இரும்பொறை யென்ப தொன்றும், கற்பெனும் பெயர தொன்றும் களிநடம் புரியக் கண்டேன்" (சுந்தர. 1273) என்பது இங்கே ஒப்புநோக்கத் தகும்.

(பி - ம்.) 1. புலத்தை, புலப்பு, புலம்பல், புலம்பு, புலம்ப.
2. கற்பவை சமைத்த, கற்பவையமைத்த, சமைந்த கற்பமைந்த.
3. நெஞ்சம், நெஞ்சும்; தூய்தெனச்.
4. பிறிதுணமனம், பிறிந்துறமனம், பிறிதுளதெனத்; கூறுவான். (95)

கோசலை வினவுதல்

891. மையறு மனத்தொரு மாசு ளானலன்
செய்யனே யென்பது தேருஞ் சிந்தையாள்
கைகயர் கோமக ளிழைத்த கைதவம்
ஐய நீ யறிந்திலை போலு மாலென்ருள்.

(பரதன்) மை அறு மனத்து - (இயல்பாகவே) களங்கமற்ற தன் மனத்தில், ஒரு மாசு உளான் அல்லன் - ஒரு (செயற்கைக்) குற்றமும் உடையவனல்லன், செய்யன் - நேர்மை உடையவனே, என்பது - என்பதை, தேரும் சிந்தையாள் - (தெளிவாக) அறியும் கருத்துடைய வளாய், (கோசலை அவனை நோக்கி), ஐய - ஐயனே, கைகயர் கோ மகள் - கேகய அரசன் புதல்வியான உன் தாய், இழைத்த - செய்த, கைதவம் - வஞ்சனையை, நீ அறிந்திலை போலும் - நீ (முன்னே) அறிந்த தில்லை போலும், என்ருள் - என்று வினுவினுள்.

ஆல் : அசை.

கோசலை, பரதனைப்பற்றித் தான் கொண்ட கருத்தை மேலும் உறுதி யாக்கிக்கொள்ளக் கருதி, அவனை அவ்வாறு வினுவினுள்.

(பி-ம்.) 1. மையுறு, மையுரு.
2. தேறும், தெரியும், தெருளும்.
3. கோன்மகள்; விளைத்த.
4. அய்யனீ; ஐயனீ; அறிகிலே. (96)

பரதன் சூளுரை

892. தாளுறு குரிசிலத் தாய்சொற் கேட்டலும்
கோளுறு மடங்கலிற் குழுறி விம்முவான்
நாளுறு நல்லற நடுங்க நாவினாற்
சூளுறு கட்டுரை சொல்லல் மேயினான்.

தாள் உறு குரிசில்-(கோசலையின்) திருவடிகளைப் பற்றிக் கிடந்த பரதன், அ தாய் சொல் கேட்டலும்-அந்தத் தாயின் சொல்லைக் கேட்ட வளவில், கோள் உறு மடங்கலின்-(பொறியால்) கொள்ளுதலுற்ற (பொறியில் அகப்பட்ட) சிங்கம் போல, குழுறி-மனம் குமைந்து, விம்முவான்-பொருமுகின்றவனாகி, நாள் உறு நல் அறம் நடுங்க-எந்நாளும் நிலைத்த தருமதேவதை நடுங்கும்படி, நாவினால்-தன் (குற்றமற்ற) நாக்கினாலே, சூள் உறு கட்டுரை-சபதமான உறுதி மொழிகளை, சொல்லல் மேயினான்-சொல்லலுற்றான்.

கைகேயியின் சூழ்ச்சியை நீ முன்பு அறியாயோ என்று கோசலை வினவியது, அவள் தன்னை ஐயுற்றாள் என்பது குறித்தலின், பரதன் துணுக்கமுற்றுத் தன் உண்மை நிலையை அவளுக்குத் தெரிவிக்கும் வகையில் பல சூளுரைகளைச் சொல்லலானான். அவன் அவ்வாறு சொல்லியவற்றை அடுத்த பாடல் முதல் இருபது பாடல்களால் கூறுகின்றார்.

கோசலையின் சொல்லால் குமுறலுற்ற பரதனுக்குப் பொறியில் அகப்பட்ட சிங்கத்தை உவமை கூறினார். கோள்-கொள்ளுதல்; அகப் படுத்தல். பொறி என்பது வருவித்துரைக்கப்பெற்றது. 'கமலச் சீரடி பூண்டனன் கிடந்திடை புலம்பினான்' (884) என முன்னர்க் கூறினமையின் இங்கே 'தாளுறு குரிசில்' என்றார்.

(பி-ம்.) 2. குமுறிவிம்முவான்.
3. நயக்கு நாவினால்.
4. சூளுறும், சூளுரை; சொல்லமேயினான். (97)

893. அறங்கெட முயன்றவ னருளி னெஞ்சினன்
பிறன்கடை நின்றவன் பிறரைச் சீறினோன்
மறங்கொடு மன்னுயிர் கொன்று வாழ்ந்தவன்
துறந்தமா தவர்க்கருந் துயரஞ் சூழ்ந்துளோன்.

அறம் கெட முயன்றவன்-தருமம் கெடுமாறு (தீய வழியில்) முயன்றவனும், அருள் இல் நெஞ்சினன்-இரக்கமற்ற மனமுடைய

வனும், பிறன் கடை நின்றவன் - அயலான் மனைவியை விரும்பி அவன் வாயிலில் காத்து நிற்பவனும், பிறரை சீறினேன் - பிறரைக் (காரண மின்றிக்) கோபிப்பவனும், மறம் கொடு - கொடுமையால், மன் உயிர் கொன்று வாழ்ந்தவன் - நிலைபேறுடைய உயிர்களைக் கொன்றும் தின்றும் வாழ்பவனும், துறந்த மா தவர்க்கு - (பற்றுக்களை யெல்லாம்) துறந்த பெருந்தவசிகட்கு, அரு துயரம் சூழ்ந்து உள்ளோன் - கடுந் துன்பங்களைச் சூழ்ந்து செய்தவனும்.

'கைகேயியின் சூழ்ச்சியை நான் முன்பு அறிந்திருப்பின், இன்ன இன்ன பாவங்கள் செய்தோர் எய்தும் நரகமெல்லாம் எனக்கே ஆகுக' என்று பலவாருகப் பரதன் சூளுரைத்தமை இதுமுதல் இருபது கவிகளாற் கூறப்படும். இவற்றுள் முதல் நான்கு கவிகள் ஒரு தொடர்; 896-ஆம் கவியில், 'கடிது செல்க யான்' என்பதனேடு முடியும். பரதன் சூளுரை கூறுமுகத்தால் பற்பல அரிய நீதிகளை நமக்குத் தருகின்ருர் கவிஞர். இச்செய்யுளில், அறன் அழியாமை, அருளுடைமை, பிறர் மனை நயவாமை, வெகுளாமை, கொல்லாமை, புலாலுண்ணுமை, பெரியாரைப் பிழையாமை என்ற அறங்களில் வழுவினேர் நரகம் புகுவர் என்பது சொல்லப்பட்டது. பிறன் கடை நிற்றல் ! "அறன்கடை நின்ருரு ளெல்லாம் பிறன்கடை, நின்ருரிற் பேதையா ரில்" (குறள். 142).

(பி - ம்.) 1. அறன்கெட; அருளிலாநெஞ்சன்.
2. பிறங்கடை; மின்றனன்; சிறியோன், பிறர்கட் சீறினேன், பிதாவைச் சீறினேன், பிகரர்ச் சீறினேன், பிறப்பைச் சீறினேன்.
3. மறன்கெட; கொன்று வாழ்பவள், கொண்டு வாழ்ந்தவன், புடைத்த வாழ்ந்தவன்.
4. சூழ்ந்துளான். (98)

894. குரவரை மகளிரை வாளிற் கொன்றுளோன்
புரவல னுறுபொருள் புனைவில் வாரினேன்
விரவலர் வெரிநிடை விழிக்க மீண்டுளோன்
இரவல ரருநிதி யெறிந்து வவ்வினேன்.

குரவரை - ஐம்பெருங்குரவரையும், மகளிரை - பெண்டிரையும், வாளில் கொன்று உளோன் - வாளால் கொன்றவனும், புரவலன் உறு பொருள் - அரசன் அடைதற்குரிய பொருள்களை, புனைவில் வாரினேன் - வஞ்சனையாற் கவர்ந்தவனும், விரவலர் வெரிந் இடை விழிக்க - பகைவர் தன்னைப் புறங்காணுமாறு, மீண்டு உள்ளோள் - (போரில் தன் உயிர் காத்து) மீண்டவனும், இரவலர் அரு நிதி - யாசகருடைய அரிய பொருளை, எறிந்து வவ்வினேன் - (அவர்களைத்) தாக்கி அபகரித்த வனும்.

இதில் ஐந்து பாவிகள் குறிக்கப்பெறுகின்றனர். ஐம்பெருங்குரவ ராவார் ! அரசன், உவாத்தியான், தாய், தந்தை, தமையன் என்போர்.

"அரச னுவாத்தியான் தாய்தந்தை தம்முன், நிகரில் குரவ ரிவரிவரைத், தேவரைப் போலத் தொழுதெழுக" (ஆசாரக் கோவை. 16). புரவலன் உறுபொருள், புதையலும் உரியோரின்றிக் கைவிடப்பட்டனவும் போன்ற பொருள்கள்; இவை அரசனைச் சேர்தற்குரியன. அல்லது அரசனுடைமையான பொருள் எனலுமாம். புரவலன் - தன்னைக் காத்தவன் என்று பொருள் கொண்டு, தன்னை ஆதரித்தவனது பெரும் பொருளைக் கரவிற் கவர்தல் என்றலும், புரவு அலன் - பொருளைக் காக்கமாட்டாதவன் என்ற பொருள் கொண்டு, அத்தகைய வனுக்குத் தான் பொருளைப் பாதுகாத்துத் தருவதாகப் பொய் கூறிக் கவர்தல் என்றலும் பொருந்தும். புனைவு - கற்பனை; கவர்தற்குரிய வழிகளைக் காணுதல். வெரிந் இடை விழித்தல் - முதுகைக் காணுதல். அரசனுக்காக அமரிடைச் சென்றவன், முதுகு காட்டாது நின்று பொருதலும், உயிரிழக்க நேரினும் இழத்தலுமே அவனது ஆண் மைக்கும் கடமைக்கும் உரிய செயலாகும். அங்ஙனமன்றிப் புறங் காட்டினால், பழிக்கும் பாவத்துக்கும் ஆளாவான். இரவலர் பொருள், பலவிடத்தும் சென்று பல துன்பங்களுக்குள்ளாகிச் சிறிது சிறிதாகச் சேர்க்கப்படுவதாகலின், 'இரவலர் அருநிதி' என்றார். அதனைக் கவர்தல் எத்தகைய பாவமென்பது சொல்லவேண்டா.

(பா - ம்.) 1. குரவலர் மகளிரை, குரவலர் குமலியை, குமவியை; கொன்றவோர்.
2. புரவலரொருபொருள், புரவலனொருபொருள்; புனைவில்வௌவி னோன், புவியில் வௌவினோன், புவியினவௌவினோன், வௌவி னோர்; மு. புரவலன் றன்னொடு மமரிற் புக்குடன்.
3. வெரிடை விழிக்கண், வெந்நிடை விழிக்க; மீண்டுளான், மீண்டுளோர்.
4. இரவலரிருமிதி, இரவலனிருமிதி; எறிந்து வௌவினோர், எறிந்த வெண்ணிலான், எண்ணிலோன். (99).

895. தழைத்ததண் டுளவினோன் றலைவ னல்லனென்
றழைத்தவ னருநெறி யந்த ணாளரில்
பிழைத்தவன் பிழைப்பிலா மறையைப் பேணலா
திழைத்தவன் பொய்யெனு மிழுதை நெஞ்சினோன்.

தழைத்த தண் துளவினோன் - செழித்த குளிர்ச்சியையுடைய துளவ மாலை அணிந்த திருமால், தலைவன் அல்லன் என்று அழைத்தவன் - பரம்பொருளல்லன் என்று சொன்னவனும், அரு நெறி அந்தணாளரில் - அரிய ஒழுக்கம் அமைந்த அந்தணரிடத்து, பிழைத்தவன் - பிழை பட்டவனும், பிழைப்பு இலா மறையை - குற்றமற்ற வேத நெறியை, பேணலாது - போற்றாமல், இழைத்தவன் - (வேத நெறிக்கு மாறான செயல்களைச்) செய்தவனும், பொய் எனும் இழுதை நெஞ்சினோன் - பொய் என்னும் பேய்பிடித்த மனமுடையவனும்.

அழைத்தல் - சொல்லுதல். அந்தணாளரில் பிழைத்தல் - அவரை அவமதித்தல், தீங்கு செய்தல் முதலியன. வேத நெறியை இகழ்ந்து அதற்கு மாறாக நடத்தலும் பாவமாம். பொய், ஐம்பெரும் பாவங்களுள் ஒன்று; அஃதொருவனைப் பேய்போலப் பற்றிக்கொள்ளுதலால் 'இழுதை' என்றார். இதிற் கூறப்பட்டவர்களும் பெரும் பாவிகளே.

(பி - ம்.) 1. துளவினன். துமாயினேன்.
2. அழைத்தவனறநெறி, அழைத்தவரறநெறி, அழைத்தவரருநெறி.
3. பிழைத்தவர் பிழைப்பிலா, பிழைத்தவனன்பிலா; மறையைப் பின்னு மின்று, பின்னினின்று, பின்னவற்கு, பின்னவர்க்கு.
4. இழைத்தவருளரெனும், இழைத்தவரிலனெனும், இழைத்தவருளிலா, இழைத்தவனருளிலா; நெஞ்சினோர், நெஞ்சினர், நெஞ்சினன். (100)

896. தாய்பசி யுழந்துயிர் தளரத் தான்றனிப்
பாய்பெரும் பாழ்வயி றளிக்கும் பாவியும்
நாயகன் படநடந் தவனு நண்ணுமத்
தீயெரி நரகத்துக் கடிது செல்கயான்.

தாய் பசி உழந்து உயிர் தளர - தன்னைப் பெற்ற தாய் பசியால் வருந்தி உயிர் சோர, (அவளை ஓம்பாது) தான் - தான் மட்டும், தனி - தனியாக, பாய் பெரும் பாழ் வயிறு - பரந்த பெரிய (தன்) பாழும் வயிற்றை, அளிக்கும் - சோறிட்டுக் காக்கின்ற, பாவியும்—, நாயகன் பட நடந்தவனும் - (போரிலே) தன் தலைவன் அழியுமாறு (அவனை விட்டு) ஓடியவனும், நண்ணும் - அடையத் தக்க, அ தீ எரி நரகத்து - அந்தத் தீப்பற்றியெரியும் கொடிய நரகத்தில், யான் கடிது செல்க - நான் விரைந்து செல்வேனாக.

இதில் இருபெரும் பாவிகளைக் குறித்தான். 'போரில்' என்றது வருவித்துரைக்கப்பட்டது. தன்னைக் காக்கும் தலைவன்பொருட்டுத் தன்னுயிரையும் கொடுத்தலே ஆண்மையும் அறமும் ஆகும். முந்திய மூன்று பாடல்களிற் கூறப்பெற்றவர்களோடு, இதிற் கூறிய இருவரையுங் கூட்டி, இவர்களெல்லோரும் அடையத்தக்க நரகம் என்க. அத்தகைய கொடு நரகில் யான் கடிது செல்வேனாக என்றான். 'கடிது' என்றதனால், இப்போதே உயிர் நீத்து அங்கே சேர்வேன் என்ற குறிப்பும் கொள்ளத் தகும்.

தீ யெரி நரகம் - நரக வகையுள் ஒன்றென்பர். "தாயர்பசி கண்டு நனி தன்பசி தணிக்கும், நாயனைய புல்லருறு நரகிலுறு வேனான்" (வி. பா. 10–ஆம் போர். 182) என்பதை ஒப்புநோக்க.

(பி - ம்.) 1. பசியுழன்று; பசியுளர்ந்து; தான்றன, தன்றனி, தான்றனத, தானனம், தன்னெரு, தள்ளத்தான்றன.
2. பாய்வரும், ஆய்பெரும்; வயிற்றளிக்கும்.

3. நாயகன்படகடந்துவரும், நாயகன்களப்படத் தவறு; களப்படத் தவ்வ நண்ணுமித்.
4. கடிது செல்க நான், சேர்கயான், சேர்கயானுமே. (101)

897. தாளினி லடைந்தவர் தம்மைத் தற்கொரு
கோளுற வஞ்சியே கொடுத்த பேதையும்
நாளினு மறமறந் தவனு நண்ணுமம்
மீளறு நரகத்துக் கடிது வீழ்கயான்.

தாளினில் அடைந்தவர் தம்மை-தன் பாதங்களில் சரணம் அடைந்தவர்களை, தற்கு ஒரு கோள் உறவு அஞ்சி-(அவர்களைக் காத்தலால்) தனக்கொரு தீங்கு வருதலுக்கு அஞ்சி, கொடுத்த-(பகைவர்பால்)காட்டிக் கொடுத்த, பேதையும் - அறிவிலியும், நாளினும் அறம் மறந்தவனும் - நாள்தோறும் (தன் கடமையான) தருமங்களைச் செய்ய மறந்தவனும்; நண்ணும் - அடையத்தக்க, அ மீள் அறு நரகத்து - அந்த மீளுதலற்ற நரகத்தில், யான் கடிது வீழ்க - நான் விரையில் வீழ்வேனாக.

கொடியோராலும் பகைவராலும் நலிவுற்றுத் தம்மைச் சரணம் அடைந்தவரைத் தம் உயிர் கொடுத்தேனும் காத்தல் கடமையாகும்; அங்ஙனமின்றி, அவரைக் காத்தலால் தமக்குத் தீங்கு நேருமென்று அஞ்சிக் காவாது விடுதல் பெரும்பாவமாகும். "பூரிய ரேயுந் தம்மைப் புகல்புகுந் தோர்க்குப் பொன்ற, ஆருயிர் கொடுத்துக் காத்தா ரெண்ணிலா வரசர்" (யுத்த. 422); "தஞ்சென அடைந்தவர் தமக்கிடர் நினைக்கும், நஞ்சனைய பாதகர் நடக்குநெறி சேர்வேன்" (வி. பா. 13-ஆம் போர். 183) என்பன காண்க. மீள் : முதனிலைத் தொழிற் பெயர்.

(பி - ம்.) 1. தாளினின், தாணிழல், அடைந்தனர், தாளடைந்துறைபவர், தாளுறவடைந்தவர்; தம்மைத் தானொரு, தமக்குத் தாங்களும்.
2. கோளுறவஞ்சினன், அஞ்சினர், கோளுறவருதலில், கோளுற லஞ்சியே, கோணுறவஞ்சியே; பேதையர், பேதையை.
3. நாளினுமறங்கரந்தவனும், கவர்ந்தவனும், நாளினுறை நுகர்ந்தவனும், நுகர்வனும், நன்றிலாதவனும், அறங்கடிந்தவனும்; நண்ணுறும், நண்ணுற, நண்ணுறும், நண்ணிய, நந்தலில், நன்றிலா.
4. மீளருநரகிடைக், நரகத்துக், மீள்விலாநரகத்துக், மீளிலாநரகத்துக்; கடிதின், விரகின், விரைவின்; வீழ்கநான், செல்கயான், விழ்கயானுமே. (102)

898. பொய்க்கரி கூறினேன் போருக் கஞ்சினேன்
கைக்கொளு மடைக்கலங் கரந்து வவ்வினேன்
எய்த்திடத் திடர்செய்தோ னென்றின் னோர்புகும்
மெய்க்கொடு நரகிடை விரைவில் வீழ்கயான்,

பொய் கரி கூறினேன் - பொய்ச் சான்று சொன்னவனும், போருக்கு அஞ்சினேன் - போருக்கு அஞ்சி ஓடினவனும், கை கொள்ளும் அடைக்கலம் - தன் கையில் கொண்ட அடைக்கலப் பொருளை, கரந்து வவ்வினேன் - (கொடுத்தோரை) மறைத்துக் கவர்ந்துகொண்டவனும், எய்த்த இடத்து - ஒருவர் இளைத்த இடத்தில், இடர் செய்தோன் - (அவ்விளைத்தவர்க்கு) மேலும் துன்பம் செய்தவனும், என்ற இன்னோர் புகும் - என்று சொல்லப்பட்ட இவர்கள் செல்லத்தக்க, மெய் கொடு நரகு இடை - மெய்ம்மையான கொடிய நரகத்தில், யான் விரைவில் வீழ்க - நான் விரைவில் வீழ்வேனாக.

பொய்ச்சாட்சி சொல்லுதல் கொடியது; அடைக்கலம் வௌவுதலும், எய்த்தவிடத்து இடர்செய்தலும் அதனினுங் கொடியன. "அறிகரி பொய்த்தல் ஆன்றோர்க் கில்லை" (குறுந். 184). நரகம் உண்டு என்பதை மறுப்பாரும் உளராகலின், 'நரகம் உள்ளதே' என்பான், 'மெய்க்கொடு நரகம்' என்றான். எய்த்திடத்து, என்றின்னோர்: தொகுத்தல் விகாரம்.

இப்பாடல் ஒரு பிரதியில் இல்லை.

பி - ம்.) 1. கூறினேர், கூறினன், கூறினர்; போரிலஞ்சினன், அஞ்சினர், அஞ்சினேன், போரினஞ்சினேன், அஞ்சினேர்.
2. கைக்கொளும் படைக்கலம், கைப்படுத்தடைக்கலம்; காத்து; வவ்வினேர், வவ்வினான், வவ்வினன்.
3. எய்த்திடத்திடர் செய்தோர், செய்வான், செய்தான், செய்வோன், எய்த்திடத்துயர் செய்தோர், எய்த்தவர்க்கிடர் செய்வோன்; என்றினேர்.
4. பொய்க்கொடு; நரகிடை விரைவின், நரகிடைக்கடிது, நரகத்துக் கடிது, கடுநரகிடையின்; போகயான், நரகத்துவிழ்கயானுமே. (103)

899. அந்தண ருறையுளை யனலி யூட்டினேன்
மைந்தரைக் கொன்றுளோன் வழக்கிற் பொய்த்துளோன்
நிந்தனை தேவரை நிகழ்த்தி னேன்புகும்
வெந்துயர் நரகத்து வீழ்க யானுமே.

அந்தணர் உறையுளை - அந்தணர் வாழும் வீட்டை, அனலி ஊட்டினேன் - தீக் கொளுவினவனும், மைந்தரை கொன்று உளோன் - தன் புதல்வரையே கொன்றவனும், வழக்கில் பொய்த்து உளோன் - பொய் வழக்குத் தொடுத்தவனும், தேவரை நிந்தனை நிகழ்த்தினேன் - தேவர்களைப் பழித்தவனும் (ஆகிய இவர்கள்), புகும் - செல்லத்தக்க, வெம் துயர் நரகத்து - கொடுந் துயரத்துக்கிடமான நரகத்தில், யானும் வீழ்க - நானும் விழுவேனாக.

ஏ : ஈற்றசை.

பொய்க்கரி கூறுதல் முன்னே சொல்லப்பட்டமையின், வழக்கில் பொய்த்தல், பொய்வழக்கு எனப்பட்டது. நிந்தனை நிகழ்த்துதல் - நிந்தனை செய்தல்;

(பி - ம்.) 1. அனலினூட்டினேன், ஊட்டினோர், அனலினூட்டினேன், அனலிமூட்டினோர்.
2. மைந்தரை நோக்கிலார், நோக்கிலான், மைந்தனை நோக்கிலோன், மைந்தனைக் கொன்றுளோர், கொன்றுளோன், மைந்தனை நோக்கலான், வந்தனை நூக்கினேன், நோக்கிலோன், நோக்கிலார், வந்தனை கொன்றுளோன்; பொய்த்துளோர், பொய்த்துளார், வழக்கம் பெரய்த்துளான்.
3. தேவரில், தேவரின், வேருள்; இகழ்த்தினோர்புகும், பெரும்.
4. நரகத்தில், நரகத்தின், நரகிடைக்கடிது வீழ்கயான். (104)

900. கன்றுயி ரோய்ந்துகக் கறந்து பாலுண்டோன்
மன்றிடைப் பிறர்பொருள் மறைத்து வவ்வினேன்
நன்றியை மறந்திடு நயமி னாவினேன்
என்றிவ ருறுகதி யென்ன தாகவே.

கன்று ஓய்ந்து உயிர் உக - கன்று (பாலின்றி) இளைத்து உயிர் விடுமாறு, பால் கறந்து உண்டோன் - (பசுவின்) பாலைக் கறந்து பருகினவனும், மன்றிடை - நீதிமன்றத்தில், பிறர் பொருள் - அயலார் பொருளை, மறைத்து - (பொய்ச் சான்று முதலியவற்றால் உண்மையை) மறைத்து, வவ்வினேன் - தனதாக்கிக் கொண்டவனும், நன்றியை மறந்திடும் - (ஒருவர் செய்த) நன்றியை மறந்துவிடுகிற, நயம் இல் நாவினேன் - நன்மையில்லாத நாக்கையுடையவனும், என்ற இவர் உறு கதி - என்று சொல்லப்பட்ட இவர்கள் அடையும் கதி (நரகம்), என்னது ஆக - எனக்குரியதாகுக.

ஏ : ஈற்றசை.

கன்று சாவப் பால்கறத்தல்: "யாருளரோ, தங்கன்று சாக்கறப்பார்" (பழ. 359). இடத்திற்கேற்பப் பசுவென்பது வருவிக்கப்பட்டது. நன்றி மறந்தவன் பேச்சே நன்றி செய்தோரை வருந்தச் செய்யுமாதலால், 'நயமில் நாவினேன்' என்றான். என்றிவர் : தொகுத்தல் விகாரம்.

இப்பாடல் சில பிரதிகளில் இல்லை.

(பி - ம்.) 1. இறந்துகக், உலந்திடக், உலந்துறக், உலைந்துகக்; பாலுண்டோர்.
2. வவ்வினர்.
3. மறைத்தறம், மாய்த்தறம், மறந்துளோன், மாய்த்தவன்; நயமினாவினன், நாவினோர், நாவினர், மறந்து நன்னெறியை நீங்கினேன், மறந்தறமறந்த நாவினேன், நாவினன், மறந்தறமாய்த்த நாவினேன்.
4. உறுநரகு, உறுதுயர்; என்னதாகுக. (105)

901. ஆறுதன் னுடன்வரு மஞ்சொன் மாதரை
ஊறுகொண் டலைக்கத்தன் னுயிர்கொண் டோடினேன்
சோறுதன் னயலுளோர் பசிக்கத் துய்த்துளோன்
ஏறுமக் கதியிடை யானு மேறவே.

ஆறு - வழிநடையில், தன்னுடன் வரும் - தன்னோடு வருகிற, அம் சொல் மாதரை - அழகிய சொற்களையுடைய பெண்டிரை, ஊறு கொண்டு அலைக்க - (தீயோர்) பற்றிக்கொண்டு வருத்த, (அவர்களை விடுவிக்க முயலாமல்), தன் உயிர் கொண்டு ஓடினேன் - தன்னுயிரைக் காத்துக்கொள்ளத் தப்பியோடினவனும், தன் அயல் உளோர் பசிக்க - தனனருகில் இருப்போர் பசித்திருக்க, சோறு துய்த்து உளோன் - (தான் மட்டும் வயிற்றை நிரப்பச்) சோற்றைத் தின்றவனும், ஏறும் - செல்லத் தக்க, அ கதி இடை - அந்த நரகத்தில், யானும் ஏற - நானும் சேர்வேனாக.

ஏ : ஈற்றசை.

ஒருவன் வழி நடந்து செல்லும்போது மகளிர் உடன் இருந்தால், அவர்கள் தனக்குத் தொடர்புடையவராயினும் இல்லாதவராயினும் அவர்களைக் காத்தல் ஆண்மகன் கடமையாகும். அணிகலன்களை வெளவும் ஆசையாலும் தீய இச்சையாலும் கள்வர் முதலியோர் மாதரையே முதலிற் பற்றித் தீங்கிழைப்பர். அதனைக் காணும் ஆண் மகன், தன் உயிர் போவதாயினும் பொருட்படுத்தாமல், அவர்களைக் காக்க முயலுதல் வேண்டும்; அது செய்யாதவன் பாவியே. "ஆறுடன் செல்பவ ரரிவை மார்தமை, வேறுளோர் வலிசெயின் விலக்கி வெஞ்சமத், தூறுறத் தம்முயி ருகுப்ப ரென்னையே, தேறினள் புன்கணோய் தீர்க்க கிற்றிலேன்" (கிட்கிந்தா. 214). சோறுதன்... துய்த்துளோன்: 906; "பசைகொண் டவனிற்கப் பாத்துண்ணு னாயின், நசைகொன்ருன் செல்லுலக மில்" (பழ. 225).

(பி - ம்.) 2. கூறுகொண்டு, கூறைகொண்டு; அலைக்கத்தான், அலைப்பதன், அலைத்தவர்; உயிர்கொண்டேகினேன், உயிர்கொண்டோடினோர், உயிர்கொண்டோடினோர், உயிரைக் கொன்றுளோன்.
3. அயலுளார், அயலவர், அயல்சிலர், அயல்பலர், தன்பாலுளோர், தன்னயல்சிலா; பதைக்கத் துய்த்துளோர், துய்த்துள்ளோர், தூய்த் துளான், துய்த்தவன், துயத்தவர்.
4. ஏறுசெல்கதியின், ஏறியகதியிடை, ஏறியதீக்கதி, ஏறியநரகிடை, ஏறிய கொடுநரகு, வீறுறுசெல்கதி; என்னதாகவே, எனக்கும் வீழ்கவே, விழுவே. (106)

902\. எஃகெறி செருமுகத் தேற்ற தெவ்வருக்
கொஃகின னுயிரலைத் துண்ணு மாசையான்
அஃகலி லறநெறி யகற்றி யொண்பொருள்
வெஃகிய மன்னன்வீழ் நரகின் வீழ்கயான்.

எஃகு எறி செரு முகத்து - படைகள் தாக்குறும் போர் முனையிலே, ஏற்ற தெவ்வருக்கு ஒஃகினன் - எதிர்த்த பகைவருக்கு(அஞ்சிப்) பணிந்தவனும், உயிர் அலைத்து உண்ணும் ஆசையான் - உயிர்களைக் கொன்று தின்னும் ஆசையுடையவனும், அஃகல் இல் - சுருங்குதல்

இல்லாத, அறம் நெறி அகற்றி - தருமமார்க்கத்தைக் கைவிட்டு, (அதரும வழியிலே), ஒண் பொருள் வெஃகிய மன்னன் - மிக்க பொருளைக் கொள்ள விரும்பிய அரசனும் (ஆகிய இவர்கள்), வீழ் நரகின்-விழும் நரகத்தில், யான் வீழ்க - நானும் வீழ்வேனாக.

எஃகு - படைக்கலங்களின் பொதுப் பெயர். ஒஃகுதல் - ஒல்குதல் பொருள் வெஃகல் : "இறலீனும் எண்ணாது வெஃகின்" (குறள். 180).

(பி - ம்.) 2. ஒஃகினன் உயிர்வளர்த்து, உயிர்செகுத்து, உயிர்கொள, ஒஃகினோருயிர் வளர்த்து, ஒல்கினன்றுயிர் வளர்த்து, ஒல்கினன் உயிர்வளர்த்து, உயிரலைத்து, ஒல்கினன்றுயிர்சுமந்து; ஆசையார், ஆசையால், ஆசையோன், ஓசையான், ஓகையால்.
3. அஃகலினறநெறி, அஃகலின் மறைநெறி, ஆக்கியோன் பொருள், ஆக்கினோன்பொருள், ஆக்கியான்பொருள்.
4. வெஃகியமன்னவன், வெஃகினனவன் விழும்; நரகில் விழ்க்யான், நரகின் விழயான். (107)

903. அழிவரு மரசிய லெய்தி யாகுமென்
றிழிவரு சிறுதொழி லியற்றி யாண்டுதன்
வழிவரு தருமத்தை மறந்து மற்றொரு
பழிவரு நெறிபடர் பதக னாகயான்.

அழிவு அரும் அரசியல் எய்தி - கெடுதலில்லாத அரசாட்சியைப் பெற்று, ஆகும் என்று - (நாம் எது செய்யினும்) தகும் என்று கருதி, இழி வரு சிறு தொழில் இயற்றி ஆண்டு - தாழ்வான சிறு தொழில்களைச் செய்து அரசாண்டு, தன் - தனக்குரிய, வழி வரு தருமத்தை மறந்து - வழி வழியே வந்த அரச தருமத்தை மறந்து, பழி வரு மற்று ஒரு நெறி படர் - பழி வளர்தற்கேற்ற வேறொரு (தகாத) வழியிலே செல்லுகிற பதகன், யான் ஆக - பாவி நானாகுக.

அழி வரும் அரசியல் — முன்னோரால் வழி வழியே முறையாக ஆளப் பெற்றுக் கெடுதலின்றி வந்த அரசியல். எய்தி - தான் வருந்தித் தேடாது, 'தந்தைக்குப்பின் தனயன்' என்ற முறையில் எளிதாகப் பெற்று. மற்றொரு பழி வரு நெறி - கோல் கோடிக் குடிகளிடத்து முறையாக அன்றி அவர்கள் வருந்தப் பொருள் கொள்ளல் முதலியன செய்யும் வழி. "மூத்தோர் மூத்தோர்க் கூற்ற முய்த்தெனப், பால்தர வந்த பழவிறற் றாயம், எய்தின மாயின் எய்தினஞ் சிறப்பெனக், குடிபுர விரக்குங் கூரி லாண்மைச், சிறியோன்" (புறநா. 75 ; 1 - 5) என்பது ஒப்புநோக்கத்தகும். இழி வரு என்றதில் இழி, முதனிலைத் தொழிற் பெயர்.

(பி - ம்.) 1. அளிவரும்; எய்தியாக்குமென்று, ஆக்குமின்று, பார்க்குமின்று, அகற்றியாகுமென்று, எய்தியவர்க்கும், ஏய்தியார்க்குமின்று.

2. இழிவருசிலதொழில், இனிவருசிறுதொழில், தெளிவருஞ்சிறு தொழில்; இயற்றியாண்டதின், ஆண்டதன், யாண்டுந்தன், மாண்டதன், இயற்றித்நிலா.
3. வழிவருந் தருமத்தை, வழிவருகருமத்தை; அறத்து, மறைத்து.
4. பழிபடர் நெறிபடர், பழிபடர் நெறிவரு. (108)

904. கன்னியை யழிசெயக் கருதி னேன்குரு
பன்னியை நோக்கினேன் பருகி னேனறை
பொன்னிகழ் களவினிற் பொருந்தி னேனெனும்
இன்னவ ருறுகதி யென்ன தாகவே.

கன்னியை - கன்னிப் பெண்ணை, அழி(வு) செய கருதினேன்-கற்பழிக்கக் கருதினவனும், குரு பன்னியை நோக்கினேன் - குரு பத்தினியைத் (தீய கருத்துடன்) பார்த்தவனும், நறை பருகினேன்-கட் குடித்தவனும், பொன் - பொன்னை, இகழ் களவினில் பொருந்தினேன் - இகழ்தற்குரிய களவினால் கைக் கொண்டவனும், எனும் இன்னவர் உறு கதி - என்று சொல்லப்பட்ட இவர்கள் அடையும் தீய கதி (நரகம்), என்னது ஆக - என்னுடையதாகட்டும்.

ஏ : ஈற்றசை.

கன்னி - மணமாகாத பெண். பன்னி : பத்நி என்னும் வடசொல் திரிந்தது. கெடுக்கக் கருதலும், கெட்ட கருத்தோடு நோக்குதலுமே பாவமெனின், கெடுத்தல் பற்றிச் சொல்லவேண்டா. களவினில் பொன் பொருந்தினேன் - களவினால் பொருள் தேடினவன் என்றலுமாம். "கட்டழற் காமத் தீயிற் கன்னியைக் கலக்கி னானும்...குட்டநோய் நரகந் தம்முட் குளிப்பவர்" (சீவக. 253).

சில பிரதிகளில் இதுவும் அடுத்த பாடலும் முன்பின்னாக உள்ளன.

(பி - ம்.) 1. கன்னியைக் கட்டழித்து, கடிதழித்து, கடியழித்து, கற்பழித்து; எய்தினன்குருப், எய்தினேன்குரு, ஏகினன்குரு.
3. பொன்னிகழ்களவினுட், களவிடைப், பொன்னினற்களவினிற், பொன்னினற்களவினற், களவினுட், களவிடைப், பொன்னிருங் களவினன்; பொருந்தினேனென, பொருந்தினனெனும், பொய்யன் குதினன். (109)

905. தஞ்சென வொதுங்கினோர் தனது பாருளோர்
எஞ்சினர் மறுக்கினே டிரியல் போயுற
வஞ்சிசென் றிறுத்தவன் வாகை மீக்கொள
அஞ்சிய மன்னவ னவனு மாகயான்.

தஞ்சு என ஒதுங்கினோர் - (பிற நாட்டவராய்த்) தஞ்சம் என்று தன் நாட்டில் வந்து தங்கியவர்களும், தனது பார் உளோர் - தன் நாட்டில் நிலையாக உள்ள குடிகளும், எஞ்சினர் - (இவரல்லாத)

பிறரும், மறுக்கினேடு இரியல் போய் உற-பெருங் கலக்கத்தோடு அஞ்சியோடுமாறு, வஞ்சி சென்று இறுத்தவன் -(நாடு கொளக் கருதி) வஞ்சிமாலே சூடி வந்து தங்கிய பகைவன், வாகை மீகொள-வெற்றி வாகை சூடும்படி, அஞ்சிய மன்னவன் அவனும்-அஞ்சி எதிர்த்துப் பொராதிருந்த அரசனுகிய அக்கீழ் மகனும், யான் ஆக-நான் ஆகக் கடவேன்.

வஞ்சி-புறத்திணையுள் ஒன்று; போர்மேற் செல்லுதல் பொருளாக உடையது; இதற்கு அடையாளம் வஞ்சிமாலே சூடுதல். எதிர்த்துவந்த பகைவனைத் தானும் எதிர் சென்று பொருது நாட்டையும் குடிகளையும் காத்தல் அரசன் கடமையாகும். அது செய்யாது அஞ்சி அடை மதிற்பட்டிருந்தோ, அஞ்சி ஓடியோ தன் கடமையைச் செய்யாது விட்ட அரசன் பாவியாவான். ஒரு நாட்டில், அந்நாட்டின் நிலேயான குடிகளும், பிறநாட்டவராய்ப் பல காரணங்களால் அங்கு வந்து தங்கு வோரும், வாணிபம் முதலியவற்றுக்காக வருவோருமென முத்திறத் தவர் இருப்பர்; போர் நிகழுங்கால், எல்லோரும் அஞ்சியோடத்தக்க வர்களே. ஒதுங்கினேரும், பாருளோரும், எஞ்சினரும் என உம்மை விரிக்க. தஞ்சம், மறுக்கம் என்பன அம் குறைந்து நின்றன. இரியல் போதல்-அஞ்சியோடுதல்.

(பி-ம்.) 1. ஒதுங்கினர்; பாருளோன், பாங்குளோர், போருளோர், தமது பேரருள்.
2. எஞ்சவின் மறுக்கினேடு, மறுக்கமொடு, எஞ்சின, எஞ்சினன், எஞ்சின மனத்தினேடு, மனத்தினேர், வனத்தினேடு, எஞ்சிடவனத் தினேடு, எஞ்சியமறுக்கமோடு, எஞ்சியவினத்தொடும்; இரியல் போயிற; போயிட, போயுற, இடியில் போயுற.
4. அஞ்சின, எஞ்சிய; மன்னவன் விருந்து மாகயான், மன்னவனுக யானுமே. (110)

906. மறுவிெல் குலங்களை மாசிட் டேற்றினேன்
சிறுவிலே யெளியவ ருணவு சிந்தினேன்
நறியவென் றயலவர் நாவி னீர்வர
உறுபத நுங்கிய வொருவ ஞகயான்.

மறு இல் தொல் குலங்களை-களங்கமில்லாத பழைய குடிப்பிறப் பாளரை, மாசு இட்டு ஏற்றினேன்-களங்கம் கற்பித்து மிகுத்துக் கூறியவனும், சிறுவிலே-சிறுவிலேக் காலத்தில், எளியவர் உணவு-எளியவர்க்குக் கிடைக்கும் சிறிதளவு உணவையும், சிந்தினேன்-சிதறுவித்தவனும், உறு பதம்-சிறந்த உணவை, நறிய என்று-(இவை) நறுமணமும் சுவையும் உடையனவென்று, அயல் அவர் நாவில் நீர் வர-அருகில் இருப்போர் நாக்கில் நீருற, நுங்கிய ஒருவன்-தானே (விரைந்து) விழுங்கிய ஒருவனும் (போல), யான் ஆக-நானும் ஆகக் கடவேன்.

நற்குடிப்பிறந்தோரிடத்து இல்லாத களங்கத்தைக் கற்பித்துக் கூறி இகழ்தல் பாவமாகும். உணவைத் தான் உண்ணும்போது சிந்துதலே தவறு; எளியவர்க்கு அரிதாகக் கிடைத்த சிறிதளவு உணவையும் சிந்துவித்தல் பெரும் பாவம். "மருந்தே யாயினும் விருந்தோடுண்" என்பதனைக் கைவிட்டு, அயலிருப்போர் நேரே பார்த்து நாவில் நீர் ஊற, அவர் எதிரிலேயே தான் உண்ணுதல் கொடும் பாவம். அத்தகைய செயலின் இழிவுபற்றி 'நுங்கிய' என்றான். "சுவைக்கினி தாகிய குய்யுடை யடிசில், பிறர்க்கீ வின்றித் தம்வயி றருத்தி, உரைசா லோங்குபுக ழொரீஇய, முரைசுகெழு செல்வர்" (புறநா. 127: 7-10) என்பது இங்கே ஒப்பிடத் தகும். 901-குறிப்பும் பார்க்க. சிறுவிலை-சிறுவிலைக் காலம்; பஞ்சகாலம்.

இப்பாடல் சில பிரதிகளில் இல்லை; சிலவற்றில் இதுவும் அடுத்ததும் முன்பின்னாக உள்ளன.

(பி-ம்.) 1. மறுவில் குலங்களை, குணங்களை, மறுவிலாக் குலங்களை, மறுவினற் குணங்களை; மாறிட்டேற்றினன்.
3. நறியன வயலவர், நறியவொன்றயலவர், வறியவன் துயல்வர, வறியவன் தையல்வாய்; நாவுநீர்வர, நாவினீரவாய், நாவினீரவர்.
4. உறுபத நீங்கிய, உறுபதனுங்கிய, நுங்கின, உறுபயநுங்கின, உறுதுயர்நுங்கிய, உறுபகற்றூங்கினன்; ஒருவனாகநான். (111)

907. ஊணல வுணர்வழி நாயி னுண்டவன்
ஆணலன் பெண்ணல னார்கொ லாமென
நாணல னரகமுண் டென்னு நல்லுரை
பேணலன் பிறர்பழி பிதற்றி யாகயான்.

ஊன் அல-நல்லுணவல்லாதவற்றை (உண்ணத் தகாதவற்றை); உணர்வு அழி நாயின் உண்டவன்-அறிவு கெட்ட நாய்போலத் தின்பவனும், ஆண் அலன்-(இவன்) ஆணும் அல்லன், பெண் அலன்-பெண்ணும் அல்லன், ஆர் கொல் என-யாரோ என்று பிறர் இகழவும், நாணலன்-அதற்கு நாணாதவனும், நரகம் உண்டு என்னும் நல் உரை பேண் அவன்-நரகம் என்பதொன்று உண்டு என்னும் வேதப் பிரமாணத்தைப் புறக்கணிப்பவனும், பிறர் பழி பிதற்றி-பிறருடைய குற்றங்களைத் தூற்றித் திரிபவனும் (போல), யான் ஆக-நான் ஆகக் கடவேன்.

ஆர்கொலாம் என்றதில் 'ஆம்' அசை.

முதலடி, பேருண்டியானைக் குறித்ததெனலாம். அவன் உணவின் தகுதியும், அது பெறும் இடத்தின் தகுதியும் பாராமல், எதையும் எவ்விடத்தும் பெற்றுத் தின்று வயிற்றை நிரப்புதலால் பழி பாவங்களுக்குள்ளாவான், 'ஆணலன்......நாணலன்' என்றது பெண் வழிச் செல்பவனையோ, ஆண், பெண் என்ற பாகுபாடு

பாராமல் வாய்க்கு வந்ததைப் பேசும் அறிவிலியையோ குறித்த தெனலாம். பெண்வழிச் செல்வோன், செய்யத் தகாதவற்றையும் துணிந்து செய்து குற்றப்படுவானுதலால் இவ்விருவகையினரும் பழி பாவங்கள் எய்துதற்குரியவர்க ளாவர். பிறருடைய சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்தலே முறையாகலின், பிறர்பழி பிதற்றல் குற்றமுடையதே, அது நன்றன்று என்பான் 'பிதற்றல்' என்ருன். பிதற்றி - பிதற்றுபவன்.

(பா. ம்.) 1. ஊணலது; உண்வழி, உள்வழி, உளவுழி, உணல்வழி, ஒருவழி, வளவழி; உண்டியன், உண்டிவன்.
2. ஆணல்; ஆர்கொலாமிவன்.
3. நாணலனுக முண்டு.
4. பிறன்பழி, பெரும்பழி, பெருகதி, பேணலனெனப்பிறர்; பிதற்றி வாழ்கயான், பெற்று வாழ்கயான். (112)

908. வில்லினும் வாளினும் விரிந்த வாண்டொழில்
புல்லிடை யுகுத்தனன் பொய்ம்மை யாக்கையைச்
சில்பக லோம்புவான் செறுநர் சீறிய
இல்லிடை யிடுபத மேற்க வென்கையால்.

வில்லினும் வாளினும் விரிந்த - வில்தொழிலாலும் வாள் தொழிலாலும் மிகுந்த, ஆண்தொழில் - ஆண்மைச் செயலாகிய அமுதத்தை, புல் இடை உகுத்தனன் - பயனற்றதாக்கி, பொய்ம்மை யாக்கையை - நிலையில்லாத இவ்வுடம்பை, சில் பகல் ஓம்புவான் - சில காலம் பாதுகாக்க விரும்பி, செறுநர் சீறிய இல் இடை - பகைவர் கோபித்தலால் அடையத்தக்க (சிறையாகிய) இடத்தில், இடு பதம் - (அவர்கள் விரும்பியபோது) இடும் சோற்றை, என் கையால் ஏற்க - என் கையால் (நாணின்றி) ஏற்று உண்டு வாழ்வேனுக.

இதிற் சொல்லியது, அரசர்க்குத் தகாத இழி செயல். புல் இடை - தூய்மையற்ற இடம். புல்லிடையுகுத்தல் - வீணுக்குதல். தன்பால் ஆண்மையாகிய அமுதம் இருக்கவும், அதனை வீணுக்கிவிட்டுப் பகைவர் கையில் சிக்கிச் சிறைப்பட்டு, உயிரினும் சிறந்த மானத்தை நீத்து, சிறைக் காவலர் தாம் விரும்பியபோது தரும் தகுதியற்ற உணவை, இரப்பவன் போலக் கையேற்று உண்டு, நிலையற்ற உடம்பைக் காத்தலின் இழிவு, சொல்லொணுதது; அந்நிலையுற்ற பாவி நானுகுக என்கின்ருன். "தொடர்படு ஞமலியின் இடர்ப்படுத் திரீஇய, கேளல் கேளிர் வேளாண் சிறுபதம், மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத், தாமிரந் துண்ணு மளவை, ஈன்ம ரோவிவ் வுலகத் தானே" (புறநா. 74) என்ற சேரமான் கணைக்காலிரும்பொறையின் பாடல் இங்கு ஒப்புநோக்கத் தகும். அமுதைப் புல்லிடையுகுத்தல் : 159- ஆம் பாடல் காண்க. உகுத்தனன் : முற்றெச்சம்,

(பி ம்.) 1. விரிந்த வொண்டொழில்.
2. உகுத்தனென், உகுத்தவன், உகுத்தெனப்; பொய்மையாக்கைபச், போகயாக்கையைச்.
3. ஓம்பினன்; செறுநர்சீரிய, செறுநர்ச் சேர்ந்தவர்.
4. வெல்லிடை; இடுபதன், இடுமதின், இடுமதும், இடுபயன்; என்கையான்; இல்லிடை, வணங்கினே னென்று மாகயான். (113)

909. ஏற்றவர்க் கொருபொரு ளுள்ள தின்றென
மாற்றல னுதவலன் வரம்பில் பல்பகல்
ஆற்றின னுழற்றுமோ ராத னெய்துமக்
கூற்றுறு நரகினோர் கூறு கொள்கயான்.

உள்ளது ஒரு பொருள் - தன்பால் உள்ளதொரு பொருளை, ஏற்றவர்க்கு - (வந்து) இரந்தவர்க்கு, உதவலன் - (உடனே) கொடாமலும், இன்று என மாற்றலன் - இல்லையென்று மறுக்காமலும், வரம்பு இல் பல் பகல் - அளவற்ற பல நாட்கள், ஆற்றினன் - காலங் கடத்தி, உழற்றும் - (இரந்தவரை ஆசை காட்டி) அலைக்கழிக்கின்ற, ஓர் ஆதன் - ஓர் அறிவிலி (வீணன்), எய்தும் - அடைதற்குரிய, அ - அந்த, கூற்று உறு நரகின் ஓர் கூறு - கூற்றுவனது ஆட்சிக்குட்பட்ட நரகத்தின் ஒரு பகுதியை, யான் கொள்க - நான் அடைவேனாக.

தன்பால் உள்ளதொன்றை இரப்பவர்க்கு இல்லையென்னாது கொடுத்தல் புகழும் புண்ணியமும் தருவது; கொடுக்க மனமில்லையேல் இல்லையென்று தெளிவாகக் கூறி, இரப்பவன் நசை கொள்ளாதபடி செய்துவிடலாம். அங்ஙனமன்றி, 'நாளை,' பின்னை' என்று அவனுக்கு ஆசைகாட்டிக் காலங் கடத்திக் கடைசியில் 'இல்லை' என்றல் பெரும் பாவமாகும். அவ்வாறு செய்யும் வீணன் அடையத்தக்க நரகம் எனக்கும் உரியதாகுக என்கின்றான். நரக ஆட்சி யமனுக்குரியதாகலின் 'கூற்றுறு நரகு' எனப்பட்டது. "இசைவ கொடுப்பதூஉ மில்லென்பதூஉம், வசையன்று வையத்தியற்கை" (பழ. நன்றியில் செல்வம்.), "வாதவர்கோன் பின்னையென்றான் வத்தவர்கோன் நாளையென்றான், யாதவர்கோன் யாதொன்று மில்லையென்றான்-ஆதலால், வாதவர்கோன் பின்னையினும் வத்தவர்கோன் நாளையினும், யாதவர்கோன் இல்லை யினிது"(தமிழ் நாவலர் சரிதை)என்பன காண்க. உதவலன், மாற்றலன் என எதிர்நிரல்நிறையாகக் கொள்க. முற்றுக்கள் மூன்றும் எச்சப் பொருளன.

(பி ம்.) 1. உள்ளின்றென்று, உள்ளதென்றுபின், உள்ளதேன்றுபின், உள்ள தில்லென, உற்றதென்றுபின், ஈவனென்றுபின்.
2. மாற்றலின், மாற்றினன், மாற்றவன், வறுமையன்; பற்பகல்.
3. ஆற்றினனியற்றுமோர், ஆற்றினனுழற்றுமோர், ஆற்றலனுழற்று மோர், ஆற்றவிலடைந்துளோர், ஆற்றலினடைத்துமோர், ஆற்றில னுழற்றமோர்; ஆதனெய்திய, எய்துமோா.

கூற்றுறுகரகிலோர், கூற்றுளகரத்துக், கூற்றுளகரகிலோர், கூற்றுள நரகிலோர், கூற்றுறழ்கரகிலோர்,கூற்றுமைகரகிலோர்; கூறும். (114)

910. பிணிக்குறு முடையுடல் பேணிப் பேணலார்த்
துணிக்குறு வயிரவா டடக்கை தூக்கிப்போய்
மணிக்குறு நகையிள மங்கை மார்கண்முன்
தணிக்குறு பகைஞரைத் தாழ்க வென்றலே.

பிணிக்கு உறு - பல பிணிகளுக்கு இடமாகப் பொருந்திய, முடை உடல் - முடைநாற்றமுள்ள இவ்வுடம்பை, பேணி - பாதுகாத்து, பேணலார் துணிக்க உறு - பகைவரை வெட்டுதற்குரிய, வயிரம் வாள் - வலிய வாளை, தட கை தூக்கி போய் - பெரியகையில் சுமந்துகொண்டு போய், மணி குறுநகை - முத்துப்போன்ற சிறிய பல்வரிசையுடைய, இளம் மங்கைமார் கண்முன் - இளம் பெண்களின் கண்ணெதிரே, தணிக்க உறு பகைஞரை - வென்று அடக்குதற்குரிய (சிறு) பகைவரை, என் தலைதாழ்க - என் தலை வணங்கட்டும்.

'சிறந்த வாள் கையதாகவும், அதனைச் சுமந்துகொண்டு போருக்குப் போய்த் தன்னினும் தாழ்ந்து தான் வென்று அடக்கத்தக்க சிறு பகைவனையும் வெல்லமாட்டாது அவனடி பணிதலின் இழிவு எத்தகையது! அதிலும் மகளிர் கண்டு நகைக்க அந்நிலை யெய்துதல் இழிவினும் இழிவாகும்; அந்நிலையை நான் எய்துக' என்கின்றான். உடம்பின் இழிதன்மையும், மானமிழந்து அதனைப் பேணுதலின் இழிதகவும் புலப்படுத்தப்பெற்றன. இத்தகையவன் வாள் கைப்பற்றுதலின் இழிவு தோன்ற, 'தடக்கை தூக்கிப் போய்' என்றான்.

(பி - ம்.) 1. பிணிக்குறு முடியுடல்; பேணலார், பேணலர், பேணலாற், பேணலான், பேணலர்த், பேணலத்.
2. துணிக்குறும்; வாட்டடக்கை.
3. நகையுள.
4. தணிக்குறும்; பகைவரைத்; தாழ. (115)

911. கரும்பலர் செந்நெலங் கழனிக் கானநா
டரும்பகை கவர்ந்துண வாவி பேணிநின்
றிரும்பலர் நெடுந்தளை யீர்த்த காலொடும்
விரும்பலர் முகத்தெதிர் விழித்து நிற்கயான்.

கரும்பு - கரும்பும், அலர் செந்நெல் - பரந்த செந்நெற் பயிரும் (நிறைந்த), அம் கழனி கானம் நாடு - அழகிய வயற்காடுகள் சூழ்ந்த நாட்டை, அரு பகை கவர்ந்து உண - வெல்லுதற்கரிய பகைவர் கைப்பற்றி அநுபவிக்க, ஆவி பேணி நின்று - உயிரைக் காத்துக்கொண்டு வறிதே நின்று, இரும்பு அலர் நெடுதளை ஈர்த்த காலொடும் - (பகைவர் பூட்டிய) இரும்பாலாகிய பெரிய விலங்கை இழுத்துச் செல்லும்

காலோடு, விரும்பலர் முகத்து எதிர் - பகைவர் முகத்துக்கெதிரே, யான் விழித்து நிற்க - நான் (செயலற்று) விழித்து நிற்பவனுதக.

முன்னே 908-ஆம் பாடலிலும் இதிலும் ஆண்மையின்றிக் கோழையாகிப் பகைவர் கைப்பட்டு மானமிழந்து நிற்கும் நிலையை யான் அடைக என்கின்ருன். அரசனுக்கு இது பேரிழிவாதலுடன், இத்தகையவன் தன் நாட்டைக் காக்க வலியின்றிக் குடிகள் அல்லலுறக் காரணமாவதால் பழியேற்றுப் பாவியாகி நரகமெய்துவாளுகலின் இங்ஙனம் கூறினுன். முதலடி நாட்டின் வளங்குறித்தது. கானம் என்றது மிகுதிபற்றி; 'வயற்காடு' என்ற வழக்குண்மையும் காண்க. "கரும்பல்லது காடறியாப், பெருந்தண்பணை" (புறநா. 16: 15-6); "கரும்பலாற் காடொன் றில்லாக் கழனி" (சீவக. 2902).

'கைகயர் கோமகள் இழைத்த கைதவம் நீ அறிந்திலை போலும்', (891) என்று கோசலை கூறக் கேட்டுத் துணுக்குற்ற பரதன், 'அவள் வஞ்சனையை நானறிந்து அதற்கு உடந்தையாயிருந்திருப்பின், நான் இவ்வாருகுக' எனப் பற்பல சூளுரைத்தமை இதுகாறும் கூறப் பெற்றது.

(பி-ம்.) 1. சென்னலம், செங்கலம்; கானகாட்டு.
2. அரும்பகை புகுந்திட; பேணினேன், பேணினுன், பெற்றவர்.
3. இரும்பிணி; கெடுக்தலையிர்த்த, தலையிட்ட, தலைசிறந்த, தலையீர்த்த, தொடர்த்த; காலொடு.
4. முகத்திடை; நிற்கவே. (116)

912\. எனைப்பல சூளுரைத் தென்னை யீன் றவள்
வினைத்திறத் தரசினை விரும்பி னன்னை கேள்
அனைத்துள நரகெனக் காக வென்றவள்
பனிக்கம லப்பதம் பணிந்தி றைஞ்சினுன்.

(பரதன்) எனை பல சூள் உரைத்து - (இதுகாறுங் கூறியவாறு) எத்தனையோ பல சூளுரைகளைச் சொல்லி, என்னை ஈன்றவள் வினை திறத்து அரசினை - என்னைப் பெற்ற கைகேயி தன் சூழ்ச்சி வலியாற் பெற்ற அரசை, விரும்பின் - நான் விரும்பினவனுனல், அன்னை கேள் - தாயே இது கேட்பாயாக; உள அனைத்து நரகு எனக்கு ஆக - (இன்னும்) உள்ள அத்தனை நரகங்களும் எனக்கு உரியனவாகுக, என்று - என்று சொல்லி முடித்து, அவள் பனி கமலம் பதம் - கோசலையின் குளிர்ந்த தாமரை மலர் போன்ற திருவடிகளில், பணிந்து இறைஞ்சினுன் - தாழ்ந்து வணங்கினுன்.

தன் குற்றமின்மையைக் கோசலைக்குத் துணிவுறுத்த மிகப் பல சூளுரைத்த பரதன், இறுதியில் இவ்வாறு முடித்து, அவள் பாதங்களில் பணிந்தான். கைகேயியின் சூழ்ச்சியைத் தான் முன்பு அறியாததோடு, அச்சூழ்ச்சியாற் பெற்ற அரசைத் தான் ஏலான் என்பதையும் தெளியக்

கூறினன். கோசலை வாயால் ஆறுதல் மொழி கேட்க விரும்பி, அவள் பாதங்களைப் பற்றிக் கிடந்தவன், அவள் கூறியது கேட்டுத் துணுக்குற்று எழுந்து நின்று, ஆவேசமுற்றவன் போலச் சூளுரைகளைச் சொல்லியபின் தணிந்து, மீண்டும் அவள் பாதம் பணிந்தான்.

இப்பாடல் பல பிரதிகளில் இல்லை; இந்நூல் நிலையத்து முந்திய பதிப்பில் இது மிகைப் பாடலாகக் காட்டப்பெற்றுளது. ஆயினும், பொருட் பொருத்தமும், தொடர்பும் சிறந்திருத்தலின், இதனை மூலத்தோடு சேர்த்துப் பதிப்பிக்கலாயிற்று. இவ்விடத்து, பல அச்சுப் பிரதிகளில்,

"தீயன கொடியவள் செய்த செய்கையை
நாயினே னுணரினன் னெறியி னீங்கலாத்
தூயவர்க் கிடரிழைத் துழலுந் தோமுடை
ஆயவர் வீழ்கதி யதனின் வீழ்கயான்"

என்ற பாடல் காணப்படுகிறது. இவ்விரண்டனுள் முந்தியது சிறப்புடையதாதல் காணத் தகும். அஃதுள்ள பிரதியில், அதன் இறுதியில் 'பரதன் நகர்புகுபடலம் முற்றும்' என்ற தொடரும், மேலே 'தகனஞ் செய் படலம்' என்ற தலைப்பும் உள. (117)

கோசலை பரதனைத் தழுவுதல்

(வேறு)

913. தூய வாசகஞ் சொன்ன தோன்றலைத்
தீய கானகந் திருவி னீங்கிமுன்
போயி னான்வரக் கண்ட பொம்மலாள்
ஆய காதலா லழுது புல்லினாள்.

(பரதன் கூறியவை கேட்ட கோசலை). முன் - முன்னே, திருவின் நீங்கி - அரசச் செல்வத்தின் நீங்கி, தீய கானகம் போயினான் - கொடிய காட்டிடத்தே போன இராமன், வர - மீண்டு வர, கண்ட பொம்மலாள் - (அவனைக்) கண்டது போன்ற மகிழ்ச்சியுடையவளாய், ஆய காதலால் - அவ்வாருகிய அன்போடு, அழுது - கண்ணீர் பெருக்கி, தூய வாசகம் சொன்ன தோன்றலை - தன் மனத்தூய்மையைப் புலப்படுத்தும் வார்த்தைகளைச் சொன்ன பரதனை, புல்லினாள் - (இறுகத்) தழுவினாள்.

பரதன் வார்த்தைகளால் அவனது மனத்தூய்மை யுணர்ந்த கோசலை, இராமனே திரும்பிவரக் கண்டதுபோன்ற மகிழ்ச்சிகொண்டு அன்பினால் கண்ணீர் பெருக்கி, பரதனை எடுத்துத் தழுவிக்கொண்டாள். இதனாலும், மேலே வரும் அவள் சொல் செயல்களாலும், அவளுடைய உயர்வு புலனாகும்.

திருவின் நீங்கி - திருவொடும் (சீதாபிராட்டியோடும்) நீங்கி என உரைத்தலுமாம்.

(பி - ம்.) 1. தூயவாசகஞ் சொன்னவத், தூயவின்ன சொல்சொன்ன.
2. கானகத்.
3. போயினர், போயவன்; பொம்மலள்.
4. ஆயகாதலாள், ஆயவன்பினுல்; புல்கினுள். (118)

914. செம்மை யாமனத் தண்ணல் செய்கையும்
அம்மை தீமையு மறித றேற்றினுள்
கொம்மை வெம்முலை குமுறு பாலுக
விம்மி விம்மிநின் றிவைவி ளம்பினுள்.

செம்மை ஆம் மனத்து - நேர்மையமைந்த மனமுடைய, அண்ணல் செய்கையையும் - பரதனது நற்செயலையும், அம்மை தீமையும் - அவன் தாயின் தீய செயலையும், அறிதல் தேற்றினுள் - தெளிய அறிந்தவளாகி, கொம்மை வெம் முலை - பருத்த வெப்பமுடைய தனங்களில், குமுறு பால் உக-பொங்கிப் பெருகிய பால் வடிய, விம்மி விம்மி நின்று-மிக்க பொருமலுற்று நின்று, இவை விளம்பினுள் - இவற்றைச் சொல்லலானுள்.

அவள் சொல்லியவை அடுத்த பாடலுள் வரும்.

கோசலை, இராமன் வரக் கண்டது போன்ற உணர்ச்சியெய்தினமையாலும், பரதனையும் தான் பெற்ற புதல்வனுகக் கருதும் தாய அன்பினுலும் அவள் தனங்களில் பால் பெருகலாயிற்று. இலக்குவன் இராமனுடன் போக விடை தந்தபோது சுமித்திரை, "பான்முலை சோர நின்ருள்" (444) என்றது காண்க. அம்மை - தாய். தேற்றினுள்: முற்றெச்சம்; தன்வினைப் பொருளில் வந்தது.

(பி - ம்) 1. செம்மைநன்மனத்து, செம்மைமாண்மனத்து.
2. அம்மைசெய்கையும்; அறிதல்தேற்றினள், தேறினுள், அறிந்து தேறினுள், அறியல் தேற்றினுள்.
3. முலைக்குமிறு.
4. விம்மல்விம்ம நின்று; அழுதுவிங்கினுள், இவை விளம்புவாள். (119)

கோசலை பரதனைப் பாராட்டி வாழ்த்துதல்

915. முன்னை நின்குல முதலு ளோர்கடாம்
நின்னை யாவரே நிகர்க்கு நீர்மையார்
மன்னர் மன்னவா வென்று வாழ்த்தினுள்
உன்ன வுன்னநைந் துருகி யேங்குவாள்.

உன்ன உன்ன-(பரதன் இயல்பை) நினைக்க நினைக்க, நைந்து உருகி ஏங்குவாள் - மனங் கசிந்துருகி ஏங்குகின்ற கோசலை, (பரதனை

நோக்கி) மன்னர் மன்னவா - அரசர்க்கரசே, முன்னை நின் குலம் - பழமையான உன் குலத்திலே, முதல் உள்ளோர்கள்தாம் - முதன்மை பெற்றிருந்தவர்களுள், நின்னை நிகர்க்கும் நீர்மையார் யாவர் - உன்னை யொக்கும் (சிறந்த) தன்மை உடையவர் எவர் இருந்தனர்? (எவரும் இல்லை); என்று - என்று அவனைப் பாராட்டி, வாழ்த்தினள்.

ஏ! அசை நிலை.

பரதன் சக்கரவர்த்தி ஆதற்குரிய மாண்புகள் நிறைந்தவன் என்பாள், 'மன்னர் மன்னவா!' என விளித்தாள். "மும்மையின், நிறைகு ணத்தவன் நின்னினும் நல்லன்ஓர், குறைவிலன்" (300) என அவள் முன்னர்க் கூறினமையும் நோக்குக. பரதன் பெருமையை, "மன்புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழை யெல்லாம், உன்புக ழாக்கிக் கொண்டாய்", "ஆயிர மிராமர் நின்கே ழாவரோ" (1032, 1033) எனக் குகப் பெருமான் கூற்றாக அமைத்துள்ளமையும், "வேறவனி பண்டாண்ட வேந்தரை யிழித்து மேலேறினான்" (1060) என்றமையும் காண்க.

கீழ்க்காணும் இரண்டு பாடல்கள் இதன்பின் சில சுவடிகளிலும் அச்சுப் பிரதிகளிலும் காணப்படுகின்றன. அவை ஈண்டைக்கு இன்றி யமையாதனவல்லவாதலாலும் 'எந்தை யாண்டையான்' எனப் பரதன் வசிட்ட முனிவனை வினவுதலும் பிறவும் முன்பின்னிகழ்ச்சிக்கு முரண் படுவன ஆதலாலும் அவற்றை மிகைப் பாடலெனக் கொண்டு தனியே காட்டலாயிற்று.

(1) உன்ன வுன்னநைந் துருகு மன்புகூர்
அன்னை தாளில்வீழ்ந் திளைய வள்ளலும்
சொன்ன நீர்மையாற் றெழுது மாழ்கினான்
இன்ன வேலைவாய் முனிவ னெய்தினான்.

(2) வந்த மாதவன் றாளில் வள்ளல்வீழ்ந்
தெந்தை யாண்டையா னியம்பு வீரெனா
நொந்து மாழ்கினா னுவல்வ தோர்கிலா
தந்த மாதவ னழுது புல்லினான்.

(பா - ம்.) 1. நுங்குல முதலுளோர்கடாம், முதலினோர்கடாம், நங்குல முதலு ளோர்கடாம்.
3. மன்னர் மன்னவ, மன்னர் மன்னுவாய், மன்ன மன்னுவாய்.
4. உன்னவுன்னமின்று, நெஞ்சு, நெக்கு, உன்னவுன்னி நெஞ்சு, உன்னிமின்றுநைந்து, உன்னியுன்னிநைந்து, உன்னி நெஞ்சு நைந்து, உன்னி நைந்து லகந்து, உன்னியுன்னிமின்று; உருகி விம்முவாள், ஓங்குவாள், நைகுவாள், வைகுவாள். (120)

916. மறுவில் மைந்தனேவள்ள லுந்தையார்
இறுதி யெய்திநாளேழி றந்தன
சிறுவர் செய்கடன் செய்து தீர்த்தியென்
றுறுதி மேயினு ளுரைவி ளம்பினுள்.

உறுதி மேயினுள் - (பின்பு மனம்) தேறுதலுற்ற கோசலை, (பரதனை நோக்கி) மறு இல் மைந்தனே - களங்கமில்லாத குழந்தாய், வள்ளல் உந்தையார் - வள்ளலாகிய உன் தந்தையார், இறுதி எய்தி - முடிவடைந்து, நாள் ஏழு இறந்தன - ஏழு நாட்கள் கடந்துவிட்டன; சிறுவர் செய் கடன் - புதல்வர் செய்தற்குரிய இறுதிக்கடனை, செய்து தீர்த்தி என்று - நீ செய்து முடிப்பாயாக என்று, உரை விளம்பினுள் - சொன்னுள்.

'மறுவில் மைந்தனே' எனப் பரதனைக் கோசலை விளித்ததில், இருவருடைய மனத்தூய்மையும் புலப்படும். தசரதன் இறந்து நாள் ஏழு இறந்தன என்றது சிந்தித்தற்குரியது; 'நாள் ஏழிரண்டின'என்றும் பாடம் உளது. வான்மீகத்தின்படி, தயரதன் இறந்த மறுநாள் வசிட்ட முனிவன் கேகய நாட்டிற்குத் தூதனுப்பினனுக, அவர்கள் மறுநாள் விடியுமுன் கேகயநாடு சேர, செய்தியறிந்த பரதன் உடனே புறப்பட்டு ஏழுநாள் பயணங்கொண்டு எட்டாம் நாள் அயோத்தியடைந்தான் என்று ஏற்படுகிறது. அங்ஙனமாயின் பரதன் வந்து சேர்ந்தது, தசரத னிறந்த பத்தாவது நாளாகும். கம்ப நாடரும், "ஆறுங் கானு மகன்மலை யுங்கடந், தேறி யேழ்பக னீந்திப்பின்...கோசல நண்ணினுன்" (813) என்ருர். இவற்ருல், பரதன் அயோத்தி அடைந்தது, தயரதன் இறந்த பத்தாநாட்கு முந்தியில்லை என்பது பெறப்படும். எனவே, 'நாள் ஏழு', 'ஏழிரண்டு' என்ற இரண்டும் பொருந்துவனவாகக் காணவில்லை.

(பி - ம்.) 1. மைந்தனின்; உந்தையான்.
2. எய்திநாள் ஏழிரண்டின, ஏழிரண்டன, ஏழ்கழிந்தன, எய்தியீரே ழிறந்தநாள், எய்தியீரேழிறந்தன, எய்தியேழ் நாளிறந்தன, எய்து நாளேழிறந்தன, எய்துநாளேழிறந்தநீ, மேலுநாளேழிறந்தன, மேவுநாளேழிறந்த நீ, மேவுநாளேழிகழ்ந்த நீ, எய்துநாளே ழிறந்தென.
3. சிறுவ; செய்துதீர்தி, செய்துபோதி, செய்திதீர்தி, செய்திபோதி.
4. உறுவன்மேயினுள், மேயினுன், உறுதன்மேயினுன், உறுவலன்பினுள், அன்பினுல்; உரையினேயினுள், உரையின்மேயினுன், மேயினுள், மேவினுள், உரையினேயினுன், ஏவினுள். (121)

பரதன் வசிட்டனுடன் சென்று தசரதனது உடலைக் காணுதல்

917. அன்னை யேவினு ளடியி றைஞ்சினுன்
பொன்னின் வார்சடைப் புனித னேடும்போய்த்
தன்னை நல்கியத் தரும நல்கினுன்
பன்னு தொல்லறப் படிவ நோக்கினுன்.

(பரதன்), ஏவினுள் அன்னை அடி இறைஞ்சினுன் - (செய் கடன் செய்யுமாறு) ஏவின தாயின் பாதங்களை வணங்கி, பொன்னின் வார் சடை புனிதனேடும் போய் - பொன்னிறமான நீண்ட சடையை யுடைய தூய வசிட்ட முனிவனுடன் சென்று, தன்னை நல்கி அ தருமம் நல்கினுன் - தன்னுயிரைக் கொடுத்து அத்தருமத்தைக் காத்த தசரத னுடைய, பன்னு - புகழ்தற்குரிய, தொல் அறம் படிவம் - பழமையான தருமத்தின் வடிவான உடம்பை, நோக்கினுன் - பார்த்தான்.

எழுவாய் வருவித்துரைக்கப்பெற்றது. ஏவினவளாகிய அன்னை என்க. இறைஞ்சினுன் : முற்றெச்சம். கடன்கள் செய்வித்தற்குரியவன் வசிட்டனுதலால், 'புனிதன்' என்றது வசிட்டனை. தசரதன் அறங் காத்தற் பொருட்டு உயிர் கொடுத்ததனுல், 'தன்னை நல்கியத் தருமம் நல்கினுன்' என்ருர். நல்கினுன் : வினைப்பெயர். அ : உலகறி சுட்டு. நல்கல் இரண்டனுள், முதலது கொடுத்தல், இரண்டாவது காத்தல். பன்னுதல் - சொல்லுதல்; இங்கே புகழ்ந்து பேசுதல். அறப்படிவம் : "நல்லற மூர்த்தி யன்னுன்" (பால. 169).

(பி - ம்.) 2. புனிதனேடு.
3. நல்கிய; தருமநல்கினுள், தருமத்தாதைதன்.
4. பன்னுநல்லறப், பன்னுந்தொல்லறப், பன்னுந்தன்னறப். (122)

பரதன் அழுதல்

918. மண்ணின் மேல்வி ழுந் தலறி மாழ்குவான்
அண்ண லாழியா னவனி காவலான்
எண்ணெ யுண்டபொன் னெழில்கொண் மேனியைக்
கண்ணி னீரினுற் கழுவி யாட்டினுன்.

(தந்தையின் உடம்பைக் கண்டவுடன்), மண்ணின்மேல் விழுந்து- தரையில் விழுந்து, அலறி மாழ்குவான் - கதறிக் கலங்குகிற பரதன், அண்ணல் ஆழியான் - பெருமை மிக்க ஏக சக்கராதிபதியாய், அவனி காவலான் - உலக முழுதுங் காத்த தசரதனது, எண்ணெய் உண்ட எழில்கொள் - எண்ணெயாட்டப் பெற்ற அழகைக் கொண்ட, பொன் மேனியை - பொன் போன்ற உடம்பை, கண்ணின் நீரினுல் கழுவி - தன் கண்களினின்றும் பெருகிய நீரால் கழுவி, ஆட்டினுன் - (அதனில்) மூழ்குவித்தான்.

பரதன் தந்தையின் உடம்பைக் கண்டவுடன், உள்ளடங்கியிருந்த துயரம் மீண்டும் மேலிட்டெழ, வாய்விட்டலறியழுது கண்ணீர் பெருக்கினுன். இரண்டாமடி தசரதன் நாடுகாத்தற் சிறப்புக் குறித்தது. ஆழியானுகிய அவனி காவலான் என்க; ஆனை மூன்றனுருபாகக் கொண்டு கூறினும் அமையும். தசரதன் மேனி பொன் மேனி; அஃதெண்ணெய்க் கடாரத்துட் கிடந்து எண்ணெயுண்டதனுல் ஒரு

தனி அழகு பெற்றது; அதனை எண்ணெய் போக நீராட்டுதலும் உரியதே.

(பி - ம்.) 1. அலறிமாழ்கினன், அழுதுமாழ்குவான்.
2. காவலன்.
4. கண்ணணீரினற், கண்ணனீரினற். (123)

தசரதனது உடலை விமானத்தில் வைத்தல்

919. பற்றி யவ்வயிற் பரிவின் வாங்கினர்
சுற்று நான்மறைத் துறைசெல் கேள்வியார்
கொற்ற மண்கணை குமுற மன்னனை
மற்றோர் பொன்னின் மா மான மேற்றினர்.

நால் மறை துறை செல் கேள்வியார் - நான்கு வேதங்களின் துறைகளில் மிக்க பயிற்சியுடைய அந்தணர், மன்னனை - மன்னனது உடம்பை, சுற்றும் பற்ற - சுற்றிலும் இருந்து தாங்கி, பரிவின் - இரக்கத்தோடு, அ வயின் வாங்கினர் - அவ்விடத்தினின்றும் (எண்ணெய்க் கடாரத்தினின்றும்) எடுத்து, கொற்றம் மண்கணை குமுற - அரச மரியாதைக்குரிய வாச்சியங்கள் முழங்க, ஓர் பொன்னின் மா மானம் ஏற்றினர் - பொன்னாலியன்ற சிறந்ததொரு விமானத்தில் வைத்தனர்.

மற்று : அசை.

சக்கரவர்த்தி யாதல்பற்றிச் சடங்குக்கு உரியவற்றை அந்தணரே செய்தனர். மண்கணை ஒரு வகைக் குடமுழவு. வாங்கினர்:முற்றெச்சம். மானம் : முதல் குறைந்தது.

(பி - ம்.) 1. அவ்வழி, அம்பியிற், வல்லையிற்; பரிவின்வாங்கினன், பரிவில் வாங்கினர், பரிவிற்றுங்கினர்.
2. சுற்றநான்மறைத்; துறைசெய், துறைசொல்.
3. கொற்றமங்கலம்.
4. பொன்னின்மாவிமானம், பொன்னுயர்மானம், பொன்னுலாமானம், பொன்னெனுமானம். (124)

மந்திரி பிரதானிகள் நண்பர்கள் வருந்துதல்

920. உந்து பொற்றடந் தேர்வ லானொடு
மந்தி ரப்பெருந் தலைவர் மற்றுளோர்
தந்தி ரத்தனித் தலைவர் நண்பினோர்
வந்து சுற்றுமுற் றழுது மாழ்கினர்.

பொன் தடம் தேர் உந்து வலானொடு - பொன்னாலியன்ற பெரிய தேரைச் செலுத்துதல் வல்ல சுமந்திரனோடு, மந்திரம் பெரும் தலைவர் - மந்திரச் சுற்றமாகிய பெருந்தலைவர்களும், தனி தந்திரம் தலைவர் -

ஒப்பற்ற சேனுபதிகளும், மற்று உளோர் - மற்றுமுள்ள அரசியலாயத்தாரும், நண்பினேர் - நட்பினரும், வந்து சுற்றும் உற்று - (அங்கு) வந்து சூழ்ந்து, அழுது மாழ்கினர் - அழுது வருந்தினர்.

சுமந்திரன், சாரதியோடு மந்திரச் சுற்றத் தலைவனும் மன்னனுக்கு மிகவும் உற்றவனும் ஆதலால், அவனை முதலில் வைத்துக் கூறினர். மற்றுளோர்-எண்பேராயத்தார். அவராவார்; "கரணத் தியலவர், கரும வாதிகள், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், நளிபடைத் தலைவர், யானைவீரர், இவுளி மறவரென்று, இணைய ரெண்பே ராய மென்ப" என்றதனுல் அறிக.

இப்பாடல், பல சுவடிகளிலும், சில அச்சுப் புத்தகங்களிலும் இல்லை. சிலவற்றில் இதுவும் அடுத்ததும் முன்பின்னுக உள்ளன. இதனை மிகைப் பாடலாகக் கொண்டு காட்டினர் சிலர்.

(பி - ம்.) 2. மந்திரிப்பெரும்.
3. நண்பினர்.
4. வந்துசுற்றுமுற்று, வந்தசுற்றமுற்று, வந்தசுற்றைமுற்று. (125)

உடல்தாங்கிய விமானத்தை யானைமேற் கொண்டு செல்லுதல்

921. கரைசெய் வேலைபோ னகரி கையெடுத்
துரைசெய் பூசலிட் டுயிர்து ளங்கவே
அரச வேலைசூழ்ந் தழுது கைதொழப்
புரசை யானையிற் கொண்டு போயினர்.

நகரி - நகர மக்களெல்லாம், கை எடுத்து - கைகளை உயரத் தூக்கி, கரை செய் வேலை போல் - ஒலிக்கும் கடலைப் போல, உரை செய் பூசல் இட்டு - (மன்னனைப் பற்றிச்) சொல்லும் ஆரவாரங்கொண்டு, உயிர் துளங்க - உயிர் நடுக்குறவும், அரசர் வேலை - அரசர் கூட்டமாகிய கடல், சூழ்ந்து அழுது கைதொழ - (நாற்புறமும்) சூழ்ந்து அழுது கொண்டு அஞ்சலி செய்யவும், புரசை யானையில் - கழுத்திடு கயிற்றை யுடைய யானையின்மேல் (விமானத்தை) வைத்து, கொண்டு போயினர்—.

எழுவாய் ஏற்றவாறு வருவிக்க.

அரசர் கூட்டத்தின் மிகுதிபற்றி 'வேலை' என்ருர். அரசர்களும் அணுக்கராகிய பலரும் யானையை அணுகிச் சூழ்தலைக் கடலாகவும், நகர மக்கள் புறத்தே சூழ்தலைக் கடலின் கரையாகவும் கொண்டு, வேலை செய்கரைபோல் நகரி (சூழ்ந்து) உயிர் துளங்க என உரைத்தலுமாம்.

(பி - ம்.) 1. வேலையோன்.
2. பூசலிட்டுரை, பூசல்போயுயிர்; துளக்குற, துளங்குவார்.
3. அரசைவேலை, அரசர்வேலை; சூழ்ந்தவனி, சொந்தழுதூ கைதொழாப். (126)

வாத்தியங்களின் முழக்கம்

922. சங்கு பேரியுந் தழுவு சின்னமும்
எங்கு மெங்குநின் றிரங்கி யேங்குவ
மங்கு ரேய்நகர் மகளி ராமெனப்
பொங்கு கண்புடைத் தழுவ போன்றவே.

சங்கு - சங்குகளும், பேரியும் - முரசங்களும், தழுவு சின்னமும் - (அவற்றைத் தழுவி ஒலிக்கும்) சின்னங்களும், எங்கும் எங்கும் நின்று - (நகரின்) பல விடங்களிலும் நின்று, இரங்கி ஏங்கும் - இரக்கக் குறிப் போடு ஒலிப்பவை, மங்குல் தோய் நகர் - மேகங்கள் படிதற்கிடமான அந்நகரத்திலுள்ள, மகளிர் என - பெண்களைப் போல (ஆகி), பொங்கு கண்புடைத்து - (நீர்) பொங்கும் கண்களில் மோதிக்கொண்டு, அழுவ போன்ற - அழுவன போன்று தோன்றின. ஏ : ஈற்றசை.

பெருந்துக்கத்தால் அழும்போது கண் புடைத்துக்கொள்ளல் இயல்பு: 1152 - பார்க்க. கண் - விழி, அடிக்குமிடம். சங்கும், பேரியும் இணைத்துக் கூறப்படுவன. 'சங்கும்' என உம்மை விரிக்க. சின்னம் - சிறு காளம்; இரட்டையாக ஊதப்படுவது. 'மாடங்கள் அழுவ போன்ற' என்றார் முன்னே; 493 - பார்க்க.

(பி - ம்.) 1. சங்கபேரியும், சங்கம்பேரியும், தங்குபேரியும்; தாளசின்னமும்.
2. இரங்கியேங்குறும்.
3. மகளிராலெனப், மு. மங்கு ரேய்மதிற் குடுமிமாநகர்.
4. பொங்குகைபெடுத்து; அழுவபோன்றதே. மு. மங்கை கண்புகைத் தழுதல் மானுமே. (127)

சரயு நதிக்கரையை அடைதல்

923. மாவும் யானையும் வயங்கு தேர்களும்
கோவு நான்மறைக் குழுவு முன்செலத்
தேவி மாரொடுங் கொண்டு தெண்டிரை
தாவு வார்புனற் சரயு வெய்தினர்.

மாவும் - குதிரைப் படைகளும், யானையும் - யானைப் படைகளும், வயங்கு தேர்களும் - விளங்கும் தேர்ப்படைகளும், கோவும் - அரசர் கூட்டமும், நால் மறை குழுவும் - நான்கு வேதங்களையும் உணர்ந்த மறை யவர் கூட்டமும், முன் செல - (விமானந்தாங்கிய யானைக்கு) முன்னே செல்ல, தேவிமாரொடும் - (பின் தொடர்ந்து வந்த) அறுபதினாயிரம் தேவிகளுடனே, கொண்டு - யானையை நடத்திக்கொண்டு, தெள் திரை தாவு - தெள்ளிய அலைகள் தாவி வருகிற, வார்புனல் - மிக்க நீரை யுடைய, சரயு எய்தினர் - சரயு நதிக் கரையை அடைந்தனர்.

மன்னனுடம்பு சென்ற ஊர்வலத்தின் முறையைக் கூறினார். மனைவிமார் அறுபதினாயிரவர் முன்னரே உயிர் விடத் துணிந்தவரை,

வசிட்ட முனிவன் தடுத்து, "இவற்குரிமை செய்யுநாளிற் செந்தீயில் ஆவி போக்கீர்" (609) என்றமையின், அவர்கள் இப்போது அவ்வாறு செய்யக் கருதிப் பின் தொடர்ந்து வந்தனர். 'கோ' என்றது பரதனைக் குறித்ததெனக் கொள்ளுதலும் ஒன்று.

(பி - ம்.) 1. வயங்குதானையும், வயங்குந்தேர்களும், வழங்குதேர்களும்.
2. நான்மறைக் குருவும்.
4. தாவும்வார்புனற், தாவுவண்புனற்; எய்தினன். (128)

மன்னனுக்குத் தீயிட மறையோர் பரதனை அழைத்தல்

924. எய்தி நூலுளோர் மொழிந்த யாவையும்
செய்து தீத்தலந் திருத்திச் செல்வனை
வெய்தி னேற்றினர் வீர நுந்தைபால்
பொய்யின் மாக்கடன் கழித்தி போந்தென்றார்.

எய்தி - (நதிக்கரையில் சடங்கு செய்தற்கமைந்த இடத்தை) அடைந்து, நூல் உளோர் - அறநூல்களில் தேர்ச்சியுள்ள மறையவர்கள், மொழிந்த யாவையும் செய்து - (தீயிடுமுன் செய்தற்குரியன வாக நூல்கள்) சொல்லிய சடங்குகளையெல்லாம் செய்து, தீ தலம் திருத்தி - தீயிடுதற்குரிய ஈமப் பள்ளியைத் திருந்த அமைத்து, செல்வனை - சக்கரவர்த்தியின் உடம்பை, வெய்தின் ஏற்றினர் - துக்கத்துடன் (ஈமப் பள்ளியில்) வைத்து, (பின்பு பரதனை நோக்கி), வீர - வீரனே, போந்து - (நீ) வந்து, நுந்தைபால் பொய் இல் மா கடன் - உன் தந்தைக்குச் செய்யவேண்டிய வழுவில்லாத சிறந்த ஈமக் கடனை, கழித்தி என்றார் - செய்வாயாக என்றனர்.

தரும சாத்திரங்கள் வல்ல புரோகிதர்கள், தகனத்தின் முன் செய்தற்குரியவற்றைச் சாத்திர விதிப்படி செய்து, தீயிடுதற்குப் பரதனை அழைத்தனர்.

நூலுளோர் என்றார் என முடிக்க. தீத்தலம் - ஈமப்பள்ளி. நுந்தை பால் : வேற்றுமை மயக்கம். மகன் செய்ய வேண்டிய அச்சடங்கின் சிறப்புப்பற்றிப் 'பொய்யில் மாக்கடன்' என்றார்.

(பி - ம்.) 1. எய்துநூலுளோர்.
2. நீக்கலஞ்செலுத்திச், செலுத்தும், நீக்கடன் செலுத்திச், திருத்திச், நிக்கடஞ்செலுத்தச்; நீர்த்திலகந்திருத்திச், நீத்திலன் திருத்திச்; மு. செய்து செல்வனைத் தீக்கொளீமமேல்.
3. ஏற்றிப்பின், ஏவினர்; வீரனுந்தைபால், வீரவுந்தைபால், வீர நுந்தைக்குச்.
4. கழித்திபோந்தென்றான், போதென்றார், கழித்துப் போதென்றார், கழித்திபோயென்றார். மு. செய்யு மாக்கடன், செய்கென் றேதினர். (129)

வசிட்ட முனிவன் சொல்லுதல்

925. என்னும் வேலையி லெழுந்த வீரனை
அன்னை தீமையா லரச னின்னையும்
துன்னு துன்பத்தாற் றுறந்து போயினான்
'முன்ன ரேயென முனிவன் கூறினான்'.

என்னும் வேலையில் - (மறையோர் பரதனைத் தீயிடச்) சொன்ன போது, எழுந்த வீரனை - (அதன் பொருட்டு) எழுந்த பரதனை (நோக்கி), முனிவன் - வசிட்ட முனிவன், முன்னரே - முன்னே, அன்னை தீமையால் - உன் தாய் செய்த கொடுமையால் (வந்த), துன்னு துன்பத்தால் - மிக்க துன்பத்தினால், அரசன் - சக்கரவர்த்தி, நின்னையும் துறந்து - உன்னையும் (உரிமைக்காகாய் என) நீக்கி, போயினான் என கூறினான் - உயிர் நீத்தான் என்று சொன்னான்.

தீக்கடன் செய்ய எழுந்த பரதனை, 'நீ அதற்குரியையல்லை' என்று வசிட்ட முனிவன் காரணங் காட்டிக் கூறித் தடுத்தான். "சொன்னே னின்றே யிவளென் றார மல்ல டுறந்தேன்; மன்னே யாவான் வருமப் பரதன் றனையும் மகனென், றுன்னேன் முனிவா வவனென் னுரிமைக் காகான்" (345) என முனிவனைச் சான்றாக வைத்து முன்னமே தசரதன் கூறியிருத்தலால், இப்போது அவன் பரதனைத் தடுக்க நேர்ந்தது. நின்னையும் என்ற உம்மை, தாயைத் துறந்ததோடு உன்னையும் என இறந்தது தழுவியது. குற்றமற்ற உன்னையும் அப்போதுண்டான துன்பமிகுதியால் துறந்தான் என உயர்வு சிறப்பாக்கினும் அமையும்.

(பி - ம்.) 1. என்னும் வேலையின், ஏல்வையின்; எல்லையில் எழுந்த, எய்து, என்னு மாத்திரையெழுந்த.
2. அன்னை நீர்மையாலரசனுன்னையும்.
4. முன்னரேயெனா. (130)

926. துறந்து போயினா னுந்தை தோன்றனீ
பிறந்து பேரறம் பிழைத்த தென்றபோ
திறந்து போயினா னிருந்த தாண்டது
மறந்து வேறொரு மனத்த னாய்க்கொலாம்.

(முனிவன், மேலும்) தோன்றல் - தோன்றலே, (பரதா), நுந்தை - உன் தந்தை, நீ பிறந்து - நீ பிறத்தலால், பேர் அறம் பிழைத்தது என்றபோது - (வழிவழி வந்த) பெரிய தருமம் தவறிற்று என்ற எண்ணம் உண்டானபோது, (அவ்வருத்த மிகுதியினால்), மறந்து - (உன் இயல்பை) மறந்து, வேறு ஒரு மனத்தனாய்க்கொல் - வேறுபட்ட ஒரு மனமுடையவனுகிப் போலும், துறந்து போயினான் - (உன்னைத் துறந்து சென்றான்; இறந்து போயினான் - (பின்னர்) இறந்தும் போய்

விட்டான்; ஆண்டு இருந்தது அது - அப்போதிருந்த நிலைமை அதுவாகும் (என்றான் என முடிபு வருவிக்க).

'உன் தாயோடு உன்னையும் மன்னன் துறந்தான்' என்று கூறிய முனிவன், அதனால் பரதன் மனம் பெரிதும் நோதல் கூடுமேயென்று கருதி, 'தந்தை உன்னைத் துறந்தது உன்மீது வெறுப்பினாலன்று; அப்போதுண்டான வருத்தமிகுதியால், உன் இயல்பை மறந்து மனந் தடுமாறியே அங்ஙனஞ் செய்திருத்தல் கூடும்' எனப் பரதனுக்கு ஆறுதலாகக் கூறினான். பேரறம்! 'மூத்தவற்குரித்து அரசு' என்றது; அவ்வறம், 'பரதனொருவன் பிறந்ததால்தானே பிழைத்தது என்ற எண்ணம் மன்னனுக்குண்டாகி, நீ குற்றமற்றவன் என்பதை மறந்து உன்னைத் துறந்திருத்தல் கூடும்; இறவாதிருந்திருப்பின், இப்போது உன் தன்மையைக் கண்டறியலாம்; அதற்கும் இடமின்றி இறந்துவிட்டான்' என்றான் முனிவன்.

தோன்றல் : அண்மை விளி.

(பி - ம்.) 1. போயினனெனவே, போயினனெனவே, போயினனுந்தை.
2. பிழைத்ததென்றல்போல், பிழைத்ததென்றுபேர்ந்து.
3. இருந்ததாண்டனும், இருந்தகாடனும், என்னகட்பினும், மு. இறந்துபோனபின் கடனுமிம்மையின்.
4. மைந்தனுங்கோலாம், மைந்தனுப்கோலாம். மைந்தனுக்கோலாம், மைந்தனுக்கொலாம், மன்னனுப்கோலாம், மன்னனுப்க்கோலாம், மன்னனேகொலாம். மு. மறந்துமற்றொரு மன்னனாகவே. (131)

முனிவனுரை கேட்ட பரதன் நிலை

927. என்று கொண்டுமா தவனி யம்புறு
நின்று நின்றுதா னெடிது யிர்த்தனன்
நன்று நன்றெனு நகைமு கிழ்த்தனன்
குன்று குன்றுறக் குலவு தோளினான்.

என்று கொண்டு - என்றிவ்வாறாக, மா தவன் - பெருந்தவமுடைய வசிட்ட முனிவன், இயம்பு உறு - சொல்லி, நின்று நின்று - தயங்கித் தயங்கி, தான் நெடிது உயிர்த்தனன் - தானும் பெருமூச்செறிந்தானாக, குன்று குன்று உற குலவு தோளினான் - மலையும் (தன் பெருமையும் திண்மையும்) குறைவுபடுமாறு விளங்கும் தோள்களையுடைய பரதன், நன்று நன்று எனா - நல்லது நல்லது என்று, நகை முகிழ்த்தனன் - (இகழ்ச்சி) நகை அரும்பியவனாகி.

இஃது அடுத்த பாடலோடு தொடர்ந்து முடியும்.

வசிட்ட முனிவன் நிகழ்ந்தது கூறி, வருத்தத்தால் தானும் பெருமூச்செறிய, பரதன் தன் இழிதகை நிலை கருதி முதலில் நகைத்துப் பின்பு பெருந் துயரால் அழிந்து நொந்து பல கூறலானான்; அவை மேலே நான்கு பாடல்களாற் கூறப்படும்.

இயம்புறு : செய்யாவென்னும் வாய்பாட்டு வினையெச்சம், உறு: துணைவினைப் பகுதி. உயிர்த்தனன் 'ஆக' என்றது வருவிக்க. 'நன்று நன்று' என்ற அடுக்கு இகழ்ச்சிபற்றியது. முகிழ்த்தனன் : முற்றெச்சம். 'குன்றும்' எனற்பால உயர்வு சிறப்பும்மை தொக்கது.

இப்பாடல் பல பிரதிகளில் இல்லை; ஐயரவர்கள் கைப்புத்தகத்தில் இஃதிவ்விடத்துக் குறிக்கப்பெற்றுள்ளது.

(பி-ம்.) 1. இயம்பலும், இயம்புற.
2. தாகெடிது; உயிர்த்தலும், உயிர்த்திரு.
3. நன்றெனை.
4. குன்றிறக், குன்றுறும்; குலாவு, குவவு, குலவுத். (132)

928. இடிக்கு வாளரா விடைவ தாமெனப்
படிக்கண் வீழ்ந்தனன் பதைக்கு நெஞ்சினன்
தடுக்க லாகலாத் துயரந் தன்னுளே
துடிக்க விம்மிநின் றழுது சொல்லினான்.

(பரதன்), இடிக்கு வாளரா இடைவது ஆம் என - இடிக்கு அஞ்சிக் கொடிய பாம்பு நிலைகெடுவதுபோல, படி கண் வீழ்ந்தனன் - தரையில் விழுந்து, பதைக்கும் நெஞ்சினன் - துடிக்கும் மனமுடைய வனாய், தடுக்கல் ஆக அல்லா துயரம் - (வெளிப்படுத்தாமல்) தடுக்க இயலாத பெருந்துயரம், தன் உள்ளே துடிக்க - தன் மனத்துள்ளே பதைக்க, விம்மி நின்று - (அது) மேலிடப்பெற்று நின்று, அழுது - வாய் விட்டழுது, சொல்லினான் - சொல்லலுற்றான்.

பெருந்துயரம் உண்டானபோது அதனை உள்ளடக்கி வைத்தல் இயலாது; பிறரிடம் வெளிப்படுத்திச் சொன்னாலன்றி அது தணியாதாகலின், பரதன் தன் மனத்தில் உண்டான தடுக்கமுடியாத துயரத்தை வெளிப்படுத்தி அழுது சொல்லுகின்றான். பாம்பு இடிக்குப் பெரிதும் அஞ்சும். "பாம்புபட விடிக்கும் கடுவிசை யுருமு" (குறுந். 158); "இடியே றுண்ட நாகம்" (பெருங். 2. 10 : 112).

(பி-ம்.) 1. இடிக்கண், இடிக்கும்; இடைவதாமெனாப், இடைந்ததாமெனாப், இடைந்ததாமெனப், இடைந்தவாமெனப்.
2. படிக்கண் வீழ்ந்தகம், வீழ்ந்தறப், படிக்குள் வீழ்ந்தகம்; நெஞ்சினான்.
4. விம்மினன்றழுது, விம்மினான்றழுது, விம்மினனழுது, விம்மு வானழுத; சொல்லுவான். (133)

பரதன் கூறுதல்

929. உரைசெய் மன்னர்மற் றென்னின் யாவரே
இரவி தன்குலத் தெந்தை முந்தையோர்
பிரத பூசனைக் குரிய பேறிலேன்
அரசு செய்யவோ வாவ தாயினேன்.

பிரதபூசனைக்கு உரிய பேறு இலேன் - பிரேத பூசை செய்தற்குரிய பேறில்லாத நான், அரசு செய்யவோ ஆவது ஆயினேன் - அரசாள மட்டுமோ உரியவனானேன் (இது நன்று!); இரவிதன் குலத்து - இச்சூரிய குலத்தில், எந்தை - என் தந்தையும், முந்தையோர் - முன்னோர்களுமான, உரை செய் மன்னர் - புகழ்பெற்ற அரசர்கள், என்னின் மற்று யாவர் - என்னைப்போல வேறு யாவருளர்? (ஒருவரும் இல்லை).

பிரேத பூசை (இறுதிக்கடன்) செய்தவர் அவ்விறந்தவருடைய சொத்துக்கு உரியவராதல் முறை; 'அப்பேறும் இல்லாத நான் அரசாளத் தகுதியுடையவனாதல் எங்ஙனம்?' என்கின்றான். 'உரை செய் மன்னர் என்னில் யாருளர்' என்றது தன்னைப்பற்றிய இகழ்ச்சிக் குறிப்பு. உரை - புகழ். பிரதம் : பிரேதம் என்ற வடசொற் சிதைவு; பிரேதம் - பிணம்.

(பி - ம்.) 1. மன்னன்மற்று; உன்னிலென்னில்யார், உன்னில் யாவரே, என்னில் யாருளர், என்னின்யாவரே.
2. இரவி நன்குலத்து.
3. பிரேதபூசனைக்கு, பிரசபூசனைக்கு; உரியபெற்றிலேன், உரிமை பெற்றிலேன்.
4. அரைசு செய்யவோ, அரைசு செய்வதோ; ஆவதாயினன், - அமைவ தாயினேன், ஐயதோன்றினேன்; மு. அரைசர் செய்தவா அழகிதேயென. (134)

930. பூவி னான்முகன் புதல்வ னாதியாம்
தாவின் மன்னர்தந் தரும நீதியால்
தேவ ராயினார் சிறுவ னாகியே
ஆவ நான்பிறந் தவத்த னானவா.

பூவில் நான்முகன் புதல்வன் ஆதி ஆம் - தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன் புதல்வனான காசிபன் முதலாக வந்த, தா இல் மன்னர் - குற்றமற்ற (இக்குலத்து) மன்னர்கள், தம் தருமம் நீதியால் - தம்முடைய தருமந் தவறாத நீதி நெறியாலே, தேவர் ஆயினார் - தேவரானார்கள்; ஆவ - ஐயோ, நான் பிறந்து - நான் ஒருவன் (இக்குலத்திலே) பிறந்து, சிறுவன் ஆகி - அற்பனாகி, அவத்தன் ஆனவா(று) - வீணன் (நரகத்துக்குரியவன்) ஆனவகைதான் என்னே!

பிரமன் புதல்வன் காசிபப் பிரசாபதி; அவன் மகன் விவசுவான் என்ற சூரியன்; அவன் மகன் வைவச்சுத மனு என்று இவ்வாறு பிரமனை முதலாகக்கொண்டது சூரிய குலமாகலின், 'நான்முகன் புதல்வனாதியாம் மன்னர்' என்றான். 'இக்குலத்தில் இதுகாறும் என்னைப்போலப் பழியேற்றார் எவருமிலர்; முன்னோரனைவரும், தம் நெறியால், உள்ளபோதே தேவராக மதிக்கப்பெற்று, இறந்தும்

தேவராஞர்; அத்தகைய குலத்திற் பிறந்த நான் பழியேற்ற இழி தகவுதான் என்னே!' என இரங்குகின்ருன்.

ஆவ : இரக்கக் குறிப்புணர்த்தும் இடைச்சொல். அவத்தன் - வீணன். ஆனவா : இறுதி தொக்கது.

(பி - ம்.) 1. புதல்வனுதியாய்த், புதல்வனுதியாத், புதல்வராதியாம், புதல்வராதியாய்த், புதல்வராதியர், முதல்வனுதியாய்த்.
2. தருமநீதியார்.
3. தேவராகினர், தேவராதியர், தேவராதியார்; சிறுவனுகவே, சிறுவனுகியும், சிறுவராலெனு.
4. ஆவாநான்பிறந்து, ஆவனேன்பிறந்து ஆவயான்பிறந்து, ஆவியான் பிறந்து, யாவர் நான்பிறந்து, இயாவரென்னைநேர்; அவத்த னுயினேன், அவத்தமானவா, அவத்தமானதே, அவத்தமாயவா. (135)

931. துன்னு தாள்வளஞ் சுமந்த தாழையின்
பன்னு வான்குலைப் பதடி யாயினேன்
என்னை யென்னையே யீன்று காத்தவென்
அன்னை யாரெனக் கழகு செய்தவா.

வளம் துன்னு தாள் சுமந்த தாழையில் - வளம் மிக்க அடிமரம் தாங்கும் தென்னையில், பன்னு வான் குலை - சிறப்பித்துச் சொல்லப்படும் பெரிய குலையில் உள்ள, பதடி ஆயினேன் - உள்ளீடற்ற காய்போல (நான்) ஆனேன்! என்னை ஈன்று காத்த என் அன்னையார் - என்னைப் பெற்று வளர்த்தஎன் தாயார், எனக்கு செய்த ஆறு - எனக்குச் (சிறப்பு உண்டாகச்) செய்த வகை, என்னை அழகு - என்ன அழகாயிருக்கின்றது!

'என்னை அரசனுக்கிச் சிறப்பிக்கக் கருதி என் தாய் செய்த செயல் எவ்வளவு அழகானது!' எனப் புகழ்வதுபோலப் பழிக்கின்ருன். சூரிய குலம், வளமான தென்னை; அக்குலத்து அரசர்கள், அத் தென்னையின் பெரிய குலையில் உள்ள சிறந்த தேங்காய்கள்; பரதன், அவற்றிடையே வந்த பதடி என உவமை கொள்க. பதடி - உள்ளீடற்றது; 'மக்கட் பதடி' என்ருற்போல. தேங்காய்க்குலையில் நல்ல காய்களுக்கிடையே பதடியும் இருக்கும்; அதனைத் 'தேரை யுண்ட காய்' என்பர். அவ்வாறு இருப்பது குலையின் குற்றமன்று; தேரை நோய் பற்றலாலேயே அஃதவ்வாருகின்றது; அதுபோல, தன் தாயின் செயலே தனக்குத் தேரை நோயாயிற்று என்பதுபடக் கூறினுன். செய்தவாறு என்றதன் இறுதி தொக்கது.

(பி - ம்.) 1. தாள்வலம், நல்வளம், வான்வளம்; தாழையின்.
2. வான்குலப் பதடி.
3. என்னையேயின்று, என்னையேயீறு, அன்னையேயீன்று; காத்தலென், காத்தவெம்.
4. அன்னையாரெமக்கு, அன்னையாமெனக்கு. (136)

முனிவன் சத்துருக்கனுல் கடன்செய்வித்தல்

932. என்று கூறிநொந் திடரின் மூழ்குமத்
துன்று தாரவற் கிளைய தோன்றலால்
அன்று நேர்கட னமைவ தாக்கினுன்
நின்று நான்மறை நெறிசெய் நீர்மையான்.

என்று கூறி - என்று இவ்வாறு பலபடியாகச் சொல்லி, நொந்து - மனம் நொந்து, இடரில் மூழ்கும் - துன்பத்துள் அழுந்துகின்ற, அ துன்று தாரவற்கு - (பூக்கள்) நெருங்கிய மாலையணிந்த பரதனுக்கு, இளைய தோன்றலால் - இளையவனுன சத்துருக்கனைக்கொண்டு, அன்று நேர் கடன் - அப்போது செய்தற்குரிய கடன்களை, நால்மறை நெறி நின்று செய் நீர்மையான் - நான்கு வேதங்களும் கூறும் நெறியிலே நின்று (எதனையும்) செய்யும் தன்மையையுடைய வசிட்ட முனிவன், அமைவது ஆக்கினுன் - பொருந்துவதாகச் செய்வித்தான்.

பரதன் கடன்கள் செய்தற்காகாமையின், வசிட்ட முனிவன், சத்துருக்கனைக் கொண்டு அவற்றை முறையாகச் செய்வித்தான். 'என்று' என்றது, முந்திய பாடல்களுட் கூறியவற்றின் அநுவாதம். அமைவது ஆக்குதல் - பொருத்தமுறச் செய்வித்தல்.

இறுதிக் கடனைப் பரதனே செய்ததாக வான்மீகம் கூறுகின்றது.

ஒரு பிரதியில், இதன்பின் கீழ்க்காணும் பாடல் ஒன்று உள்ளது.

அன்ன தாகவங் காறு பத்தெனச்
சொன்ன வாயிரந் தோகை மார்களும்
துன்னி வந்தனர் சோர்வி லாதவர்
மின்னு வாளெரி மீது வீழவே.

(பா.பே.) 1. கூறிநின்று, கூறிநொய்து; மூழ்குறத், மூழ்கிநல்.
3. நோக்கடன்.
4. நின்றநான்மறை; நெறிசெய்நேமியான், நெறிசெல்நீர்மையான், நீதியான், நேமியான், மேனியான், நெறிசொல் நீர்மையான், நெறியின் நீர்மையால், முறைசொல் நீர்மையான். (137)

அறுபதினுயிரம் தேவியரும் தீப்புகல்

933. இழையு மாரமு மிடையு மின்னிடக்
குழையு மாமலர்க் கொம்ப ஞர்கடாம்
தழையின் முண்டகந் தழுவு கானிடை
நுழையு மஞ்ஞைபோ லெரியின் மூழ்கினுர்.

இழையும் - அணிகலன்களும், ஆரமும் - முத்துவடங்களும், இடையும்—, மின் இட - மின்னொளி வீச, குழையும் மாமலர் கொம்பு அன்னுர்கள் தாம் - துவளும் பெரிய பூங்கொம்பு போன்றவர்களான

தேவிமார் அறுபதினுயிரவரும், தழை இல் - இலைகளில்லாத, முண்டகம் தழுவு கான் இடை - செந்தாமரை மலர்கள் செறிந்த காட்டிலே, நுழையும் - புகுகின்ற, மஞ்ஞைஒபோல் - மயில்களைப் போல, எரியில் மூழ்கினுர் - ஈமத்தீயில் முழுகினர்.

தசரதன் தேவிமார் அறுபதினுயிரவரும், அவன் இறந்தவுடனே தாமும் உயிர்விடத் துணிந்தபோது, வசிட்ட முனிவன் ஆணையால் அது செய்யாது நின்று, இப்போது இவ்வீமத் தீயில் மூழ்குதற் பொருட்டே வந்தவர்களாதலின், சிறிதும் வருத்தமின்றி மகிழ்ச்சியோடு தீப்புகுந் தனர்; அதற்குக் குளிர்ந்த தாமரைக் காட்டிலே புகும் மயில்களை உவமையாக்கினுர். இலைகளின் இடையீடில்லாத தாமரை மலர்க் கூட்டம் தீப்பரப்புப் போல்வது. "புண்டரிகம் தீயெரிவ போல்விரியப் பூம்புகைபோல், வண்டிரியும்" (நள. 141). கான் என்றது மிகுதிபற்றி. மகளிரின் இடையை 'மின்னற்கொடி' என்பராகலின், இடையும் மின்னிட என்ருர். கணவரை இழந்த பத்தினிப் பெண்டிர் தீப்புகுதல்: "பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பற, வள்ளித மூவிழ்ந்த தாமரை, நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே" (புறநா. 246); "காதல ரிறப்பின்......நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர் ... பத்தினிப் பெண்டிர்", "காதலன் வீயக் கடுந்துய ரெய்தி......நளியிரும் பொய்கை யாடுநர் போல, முளியெரி புகூஉம் முதுக்குடிப் பிறந்த, பத்தினிப் பெண்டிர்" (மணி. 2 : 42 - 48; 18 : 11 - 15) என்பவற்றைக் காண்க.

(பி - ம்.) 1. மின்னிடைக், மன்னிடக்.
2. குழையுகாண்மலர்க், குழையினுண்மலர்க்; கொம்பனுர்களும், கொம்பனுரெரி.
3. தழையின் முள்ளியம், முள்ளிலம், முள்ளிலவு மூளெரித், முன்னெரி முள்ளிய, தழையுமுண்டகம், காணுமலர், முள்ளிலவு, முள்ளிலம் முள்ளியம், முள்ளிலம்; தழையும் வேய்வனம், தடவுகானிடை, உலவுகானிடை, தங்கிவீழ்மயிற்.
4. முழையும், முழையின், மு. கிளைகள் போலெரிகெழும மூழ்கினுர்.

(138)

934\. அங்கி நீரினுங் குளிர வம்புயத்
திங்கள் வாண்முகந் திருவி லங்குறக்
சங்கை தீர்ந்துதங் கணவர் பின்செலும்
நங்கை மார்புகு முலக நண்ணினுர்.

(ஈமத் தீயிற் புகுந்த அத்தேவிமார்), அங்கி - அத்தீயானது, நீரினும் குளிர - தண்ணீரினும் குளிர்ச்சியுடையதாக, அம்புயம் திங்கள் வாள் முகம் - தாமரைக் காட்டினிடையே (தோன்றும்) சந்திரன் போன்ற ஒளியமைந்த (தம்) முகங்கள், திரு விளங்குற - (மேலும்) அழகோடு விளங்க, தம் கணவர் பின் - (இறந்த) தம் கணவர் பின்னே,

சங்கை தீர்ந்து செல்லும் - ஐயத்தை விட்டுச் செல்லுகிற, நங்கை மார்புகும் - பத்தினிப் பெண்டிர் அடைதற்குரிய, உலகம் - புண்ணிய உலகத்தை, நண்ணினுர் - அடைந்தார்கள்.

சககமனம் செய்யும் பத்தினிப் பெண்டிர், அவ்வாறு செய்தலில் தமக்கு நற்கதி உளதாகுமோ ஆகாதோ என்ற ஐயம் இன்றித் துணிந்து செய்தல் வேண்டும். அத்தகைய பெண்டிரே நல்லுலகமெய்துவர்; இத்தேவிமாரும், அத்தகையராய் அந்நல்லுலகடைந்தனர். அதனிலுள்ள மகிழ்ச்சியால் அவர்கள் முகங்கள் மேலும் அழகோடு விளங்கின. தீயைத் தாமரைக்காடு என்றமையின், அதனிடையே சந்திரன்போல் விளங்கும் முகமென்றுர். கற்பின் மேன்மையால், தீயும் அவர்களைச் சுடாதென்பார், 'அங்கி நீரினுங் குளிர' என்றுர்.

(பி - ம்.) 1. அம்புத, அம்புபாய், அம்புலாம், ஆம்பல்வாய்த்.
2. வாண்முகத், வாழ்முகம், பாய்முகம்; விளக்குறச், விளங்கிடச்.
3. தீர்தவம், தீர்தவன், தீர்தரத், தீர்வுறத், தீர்ந்தவத்; கணவர் சார்வுறும், கணவனேகலும், கணவர்கற்புடை, கணவர்ச்சார்வுறும், தழுவுகற்பினர், தழுவுகற்பினின், கற்புடை, தழுவுங்கற்புடை, தழுவு கற்பிணை, தழுவுகற்பினன்.
4. மங்கைமார்களும்; உலகமன்னினுர், உலகு நண்ணினுர், அரசை நண்ணினுர். (139)

பரதன் மனையை அடைதல்

935. அனைய செய்கையா லரசர் கோமகற்
கினைய நற்கட னியன்ற தென்றபின்
மனையி னெய்தினுன் மரபின் வாழ்வினை
வினையி னெய்துமோர் பிணியின் வெஃகலான்.

அனைய செய்கையால் - (சத்துருக்கனைக் கொண்டு) செய்வித்த அவ்வகையினுல், அரசர் கோமகற்கு - சக்கரவர்த்திக்குரிய, இனைய நல் கடன் இயன்றது - இந்த இறுதிச் சடங்கு நடந்தேறியது; என்றபின் - அவ்வாருன பிறகு, மரபின் வாழ்வினை - தன் மரபுக்குரிய அரசவாழ்க்கையை, வினையின் எய்தும் ஓர் பிணியின் - தீவினையால் வந்த ஒரு நோய்போலக் (கருதி), வெஃக அலான் - விரும்பாதவனுகிய பரதன், மனையின் எய்தினுன் - அரண்மனையை அடைந்தான்.

முதல்நாட் சடங்கு சத்துருக்கனுல் நடந்தேறியபின், அனைவரும் அரண்மனையைச் சேர்ந்தனர். ஏனைநாட் சடங்குகளும் முடிந்தபின், அரசேற்க வேண்டிய நிலைவரினும், அதனை விரும்பாதவன் பரதன் என்பார், 'மரபின் வாழ்வினைப் பிணியின் வெஃகலான்' என்றுர். வெஃகலான் : தொகுத்தல் விகாரம்.

(பி - ம்.) 1. அனையர்செய்கையாலரசு, செய்கையாவரசர், செய்கையாலான, செய்கையானரசர், தன்மையாலரசர், மாதவனரசர்.

2. இனைய தன்மையால், தன்மையான், செய்கையால்; இவைவ, இசைவ; செய்துபின், செய்தபின்.
3. மனையிலெய்தினன், மனையினெய்தினர்; மரபின் வந்தநீ, வரம்பின் வாழ்வினை.
4. வினையன்; பிணியின் வேலையான்; விம்முவான், வெகுவான். (140)

இறுதிக் கடன்கள் இயன்று முடித்தமை

936. ஐந்து மைந்துநா ளூழி யாமென
மைந்தன் வெந்துயர்க் கடலின் வைகினன்
தந்தை தன்வயிற் றருமம் யாவையும்
முந்து நூலுளோர் முறையின் முற்றினர்.

மைந்தன் - பரதன், ஐந்தும் ஐந்தும் நாள் - பத்து நாட்கள், ஊழி ஆம் என - ஓர் ஊழிக்காலம் போல (நீடிக்க), வெம் துயர் கடலின் வைகினன் - கொடிய துன்பக்கடலில் மூழ்கி இருந்தான்; தந்தை தன் வயின் - தந்தை திறத்துச் செய்தற்குரிய, தருமம் யாவையும் - சடங்குகளை எல்லாம், முந்து நூல் உளோர் - பழமையான தரும சாத்திரங்களில் வல்ல மறையோர், முறையின் முற்றினர் - முறையாகச் செய்வித்து முடித்தனர்.

முதல்நாள் ஈமச் சடங்கு கழிந்தபின், ஏனை நாட்களிலும் செய்ய வேண்டுவனவற்றை, மறையோர் முறையாகச் செய்வித்துச் சடங்குகளை முற்றுவித்தனர். பரதன் இராமபிரானைக் காணாத ஏக்கத்தால் துடிப்பவனாகலின், அந்த நாட்களையெல்லாம் மிக்க துயரோடு அரிதாகக் கழித்தான் என்பார், 'ஊழியாமென வெந்துயர்க் கடலின் வைகினன்' என்றார்.

(பி - ம்.) 1. உந்தமன்னைமார் ஒழிய மன்னவன்.
2. கடலின் வைகுவான், மூழ்கினன்.
3. தந்தைதன்மையிற்.
4. முற்றினன். (141)

முனிவருடன் பரதனை அடைந்து வசிட்டன் கூறத் தொடங்கல்

937. முற்று முற்றுவித் துதவி மும்மை நூற்
சுற்றம் யாவையுந் தொடரத் தோன்றினன்
வெற்றி மாதவன் வினைமு டித்தவக்
கொற்ற வேனெடுங் குமரற் கூறுவான்.

வெற்றி மா தவன் - தவத்தின் வெற்றியினையுடைய வசிட்ட முனிவன், முற்றும் முற்றுவித்து - (சடங்குகளை) முழுதும் முடிப்பித்து, உதவி - (பலவகையான தானங்களையும் உரியார்க்குக்) கொடுத்து (எல்லாம் முடிந்தபின்), மும்மை நூல் சுற்றம் யாவையும் தொடர -

மூன்று வேதங்களிலும் வல்ல மறையவர் கூட்டம் முழுதும் தொடர்ந்துவர, வினை முடித்த - தீவினைகளை வென்றொழித்த, அ அந்த, கொற்றம் வேல் - வெற்றி தரும் வேலேந்திய, நெடு குமரன் - பெரியோனாகிய பரதனுக்கு, கூறுவான் - (மேல் நிகழவேண்டுவன பற்றிக்) கூறும் பொருட்டு, தோன்றினான் - (அவன்பால்) வந்தான்.

சடங்குகளெல்லாம் முடிந்தபின், வசிட்ட முனிவன், மேல் நிகழ்தற்குரியவற்றைப் பரதனுக்குச் சொல்லும் பொருட்டு, மறையவர் திரள் புடைசூழப் பரதனிடம் வந்தான். சடங்கு பதின்மூன்று நாள் நடந்ததாக முதனூல் கூறுதலின், 'முற்றும்' என்றது, முன் கவியிற் கூறிய பத்து நாட்களுக்கு மேலும் நடக்கவேண்டிய எல்லாவற்றையும் குறித்ததெனலாம்.

உதவி - தனக்கு (வசிட்டனுக்கு) உதவியாயிருந்த என்றும், மும்மை நூல் - முப்புரி நூல் என்றும் உரைப்பினுமாம். வேதம் நான்கினுள், முதல் மூன்றுமே பழமையும் முதன்மையும் வாய்ந்தவை யாதலான், மும்மை நூல், மூன்று வேதம் எனலாயிற்று. அதனால் வேதத்துக்குத் திரயீ என்று ஒரு பெயர் உண்டு. வெற்றி மா தவன் - தவவலியால் விசுவாமித்திரனை வென்று, தவத்தின் பெருமையை நிலைநாட்டியவன். 'வினை'முடித்த' என்பதனை அவனுக்கு விசேடண மாக்கியுரைத்தலும் அமையும்.

சில பிரதிகளில் இப்பாடல் இல்லை.

(பி - ம்.) 1. உதவி முந்நூற், முன்னைநூற், உதவு மும்மைநூற், அரிய மும்மைநூற்.
2. சுற்றம் யாவரும், சுற்றும் யாவரும்; தோன்றின, தோன்றநுன், தோமிலா.
3. வினைமுடித்தவன், முடித்தவர், முடித்தவண், முடித்தபிற், முடிந்த பிற்.
4. கொற்றவநெடும்நீ குமரர் கூடினன், கூறினன், கூறினர், கூறுவார், குமரன் கூறினன்.

(142)

மந்திரச் சுற்றமும் அறிஞரும் பரதனைக் காண வருதல்

938. மன்ன ரின்றியே வையம் வைகருன்
தொன்மை யன்றெனத் துணியு நெஞ்சினர்
அன்ன மாநிலத் தறிஞர் தம்மொடும்
முன்னை மந்திரக் கிழவர் முன்னினர்.

முன்னை மந்திரம் கிழவர் - பழைய மந்திரிமார்கள், வையம் - நாடானது, மன்னர் இன்றி வைகல் - அரசரின்றி இருத்தல், தொன்மை அன்று என - மரபன்று என்று, துணியும் நெஞ்சினர் - தெளிந்த மனம் உடையவராய், அன்ன மாநிலத்து அறிஞர் தம்மொடும் - அந்தப்

பெரிய நாட்டில் உள்ள நல்லறிஞர் பலரோடு, முன்னிஞர் - (பரதனைக் காண) முற்பட்டனர்.

நாடு அரசனின்றி யிருத்தல் பல தீங்குகளுக்கிடமாகு மாகலின், பரதனை அரசனுக்கவேண்டும் என்ற கருத்துடன் பழைய (தசரதனுடைய) மந்திரிமாரும், பேரறிஞர் பலரும், பரதன்பால் வந்தனர்.

அராஜகமான ஜநபதத்தில் (அரசன் இல்லாத நாட்டில்) விளையும் தீங்குகளைக் குறித்து வான்மீகி முனிவர் ஒரு சருக்க முழுதும் கூறியுள்ளார்.

ஏ, தான் : அசைகள்.

இப்பாடலும் சில பிரதிகளில் இல்லை. இதன்பின் இரண்டு பாடல்கள் உண்டென்று ஐயவரவர்கள் குறிப்பொன்று கூறுகின்றது. அவை கிடைக்கவில்லை. ஒரு பிரதியில் இங்கே 'தகனஞ் செய் படலம் முற்றும்' என்பது காணப்படுகின்றது.

(பி - ம்.) 1. மன்னனின்றியே, மன்னரன்றியே; வையம்வைகுருத், வைகவையகம், வைகவையமுன், வைகல்வைகருன், வைகும்வைகருன், வைகும்வையகம், வைகும் வையமுன்.
2. தொன்மையின்றெனத்; நெஞ்சினன்.
4. முன்னர் மந்திரக், முன்னு மந்திரக், முன்ன மந்திரிக்; முந்திஞர். (143)

பள்ளிபடைப் படலம் முற்றும்.

11. ஆறுசெல் படலம்

வழிச் செல்லுதலைக் கூறும் படலம் என இதன் பொருள் விரியும். பரதன், இராமபிரானை அழைத்து வந்து முடிசூட்டுவித்தற் பொருட்டுச் சேனையுடன் அயோத்தியினின்றும் புறப்பட்டுக் கானம் நோக்கிச் சென்ற செய்தியை விரித்துக் கூறுவது இது. இப்படலப் பெயர் சுவடிகளில், 'ஆற்றுப் படலம்', 'பரதன் எழுச்சிப் படலம்', 'கங்கை யாற்றுப் படலம்' எனப் பலவாறு காணப்படுகின்றது. ஒரு சுவடியில் இதுமுதல் இக்காண்ட முடிவுவரை உள்ள பகுதி 'ஆறு சென்று அடிதொழுத படலம்' என்ற பெயரோடு காணப்படுகின்றது. இப்படலத்துப் பாடல்கள், 59.

மந்திரிமார் முதலியோர் வசிட்ட முனிவனோடு பரதன் இருந்த அவையைச் சேர்தல்

(கலிவிருத்தம்)

939. வரன்முறை தெரிந்துணர் மறையின் மாதவத்
தருநெறி முனிவனு மாண்டை யானென
விரைவின்வந் தீண்டினர் விரகி னெய்தினர்
பரதனை வணங்கினர் பரியு நெஞ்சினர்.

பரியும் நெஞ்சினர் - (நாட்டுக்கு அரசன் இல்லாமை குறித்து) வருந்தும் மனமுடையவர்களாகிய பலர், வரன்முறை தெளிந்து உணர் - அரசர்க்குரிய மரபுகளை ஆராய்ந்து உணர்ந்த, மறையின் - வேத அறிவையும், மா தவத்து அருநெறி - சிறந்த தவமாகிய அரிய ஒழுக்கலாற்றையும் உடைய, முனிவனும் - வசிட்ட முனிவனும், ஆண்டையான் என - (பரதனுடன்) அவ்விடத்தில் உள்ளான் என்று அறிந்து; விரைவின் வந்து ஈண்டினர் - விரைவாக (அவர்கள் இருந்த இடத்திற்கு) வந்து கூடி, விரகின் எய்தினர் - (பரதனை அரசனுக்கும்) உபாயம் நாடி அடைந்து, பரதனை வணங்கினர் —.

பரியும் நெஞ்சினர் இன்னார் என்பதை அடுத்த கவியிற் கூறுகிறார்.

முந்திய படலத்தின் இறுதிக் கவியில் கூறியபடி, பரதனைக் காண முற்பட்டவர்கள் ஒருங்கு கூடிப் பரதன் வசிட்ட முனிவனோடு இருந்த இடத்தை விரைந்து அடைந்து பரதனைப் பணிந்தனர். வசிட்ட முனிவனும் உடன் இருத்தலால் தங்கள் கருத்து முற்றுறும் என்ற எண்ணத்தோடு அவர்கள் வந்தனர்.

(பி - ம்.) 1. தெரிந்துயர், தெரிந்துளர், தெரிந்துளார், தெரிந்தனர்; மரபின்.
2. அருநெறி முனிவரும், அருநெறி வசிட்டனும்; ஆண்டையார்களும், ஆண்டையாரென, ஆண்டையோனென, யாண்டையானென, யாண்டையாரென, யாண்டையார்களும்.
3. விதியினெய்தினர், விரதமாதவப்; மெலியு நெஞ்சுடை.
4. பரிவி னெஞ்சினர். (1)

940. மந்திரக் கிழவரு நகர மாந்தரும்
தந்திரத் தலைவருந் தரணி பாலரும்
அந்தர முனிவரோ டறிஞர் யாவரும்
சுந்தரக் குரிசிலை மரபிற் சுற்றினர்.

மந்திரம் கிழவரும் - மந்திரிமாரும், நகரம் மாந்தரும் - நகரத்துப் பெருமக்களும், தந்திரம் தலைவரும் - சேனாதிபதிகளும், தரணி பாலரும் - அரசர்களும், அந்தரம் முனிவரோடு - ஆகாய சாரிகளான முனிவர்களோடு, அறிஞர் - நல்லறிஞர்களுமாகிய, யாவரும் - எல்லோரும், மரபின் - முறைப்படி, சுந்தரம் குரிசிலை - அழகனான அப்பரதனை, சுற்றினார் - சூழ அமர்ந்தனர்.

மந்திரக் கிழவர் முதலியோர் முறைப்படி அவரவர்க்கு உரிய இடங்களில் அமர்ந்தனர்.

(பி - ம்.) 1. நகரின், நகருள், கிழவரும் தமரும்.
2. தந்திரக் கிழவரும்; தரணி வாணரும்.
3. அந்தணர்.
4. முறையிற். (2)

சுமந்திரன் வசிட்டனை நோக்குதல்

941. சுற்றின ரிருந்துழிச் சுமந்தி ரப்பெயர்ப்
பொற்றடந் தேர்வலான் புலமை யுள்ளத்தான்
கொற்றவக் குரிசிலைக் குறித்த கொள்கையான்
முற்றுணர் முனிவரன் முகத்தை நோக்கினான்.

சுற்றினர் இருந்த உழி - மேற்கூறியவாறு எல்லோரும் பரதனைச் சூழ்ந்து அமர்ந்திருந்தபோது, புலமை உள்ளத்தான் - நுண்ணறிவமைந்த மனமுடையவனான, சுமந்திரன் பெயர் - சுமந்திரன் என்ற பெயருடைய, பொன் தட தேர் வல்லான் - பொன்னாலியன்ற பெரிய தேரைச் செலுத்தலில் வல்ல அவன், கொற்றம் அ குரிசிலை குறித்த கொள்கையான் - அரசுக்குரிய அப்பரதனைப்பற்றிய உட்கருத்தோடு, முற்று உணர் முனிவரன் முகத்தை நோக்கினான் - எல்லாம் உணர்ந்த முனிசிரேட்டனான வசிட்டன் முகத்தை(ஏறிட்டு)ப் பார்த்தான்.

அனைவரும் அமர்ந்து அமைதியுற்றபின், அங்கிருந்த எல்லோர் கருத்தும் பரதனை அரசனுக்க வேண்டுமென்பதே யாகவின் அதனைப்

பரதனுக்கு ஏற்றவாறு உணர்த்த வல்ல திறனும் தகுதியுமுடையவன் வசிட்ட முனிவனே எனத் துணிந்து, அதனை அவன் செய்தல் வேண்டுமென்ற குறிப்போடு, சுமந்திரன் முனிவன் முகத்தை நோக்கினான்.

முனிவன், தவவலியால் எல்லாம் உணர்தலோடு, குறிப்பிற் குறிப்புணரும் ஆற்றலும் மிக்கவ னாதலால் 'முற்றுணர் முனிவரன்' எனப்பெற்றான். மந்திரிக்குரிய சூழ்ச்சித்திறனும் பிறவும் பெற்றுக் குலகுருவாயும் இருத்தலால், ஏனையோரினும் அவனே முதலிற் சொல்லுதற்குரியவனாகின்றான். சாரதியாதலோடு மந்திரியாகவும் அமைந்தவன் சுமந்திரன் என அவனது தகுதியும் உணர்த்தப்பெற்றது. குரிசிலைக் குறித்த கொள்கையாவது, அவன் அரசேற்றல் வேண்டு மென்பது. கொற்றம் - அரச உரிமை; (பெருங். 2.5:73; மணி: 23: 11.

(பா - ம்.) 1. சுற்றினன்.
2. தேரினான்.
3. கொற்றவற் குருபொருள், கொற்றமாக் குரிசிலைக், குற்றமில் பரதனைக் குறித்துக்.
4. முனிவனை முகத்து. (9)

வசிட்டமுனிவன் பரதனுக்குக் கூறத் தொடங்குதல்

942. நோக்கினாற் சுமந்திர னுவல லுற்றதை
வாக்கினா லன்றியே யுணர்ந்த மாதவன்
காக்குதி யுலகுநின் கடனி தாமெனக்
கோக்கும ரனுக்கது தெரியக் கூறுவான்.

சுமந்திரன்—, வாக்கினால் அன்றியே - (தன்) வாய்ச்சொல்லால் அன்றியே, நோக்கினால் நுவலல் உற்றதை - பார்வையினாற் சொல்லியதை, உணர்ந்த மாதவன் - உணர்ந்துகொண்ட வசிட்ட முனிவன், அது - அதனைக் குறித்து, கோ குமரனுக்கு - சக்கரவர்த்தி குமாரனான பரதனுக்கு, உலகு காக்குதி - நாட்டை நீ காப்பாயாக, இது நின் கடன் ஆம் என - இது உன் கடமையாகும் என்று, தெரிய - விளக்கமாக, கூறுவான் - சொல்லலானான்.

சுமந்திரன் குறிப்பால் உணர்த்திய அவையினரின் கருத்தைப் பரதனுக்குத் தெரியச் சொல்லுதல் தன் கடனென்று உணர்ந்த முனிவன் அவனை நோக்கிக் கூறலானான்.

'நாடு அரசின்றி யிருத்தல் தகாது; அரசாட்சி உன்னைத் தேடி வந்துளது; ஆதலால் அரசையேற்று நாட்டைப் பாதுகாத்தல் உன் கடமையாகும்' எனப் பரதனுக்கு முனிவன் கூறியவை மேல் ஏழு கவிகளிற் கூறப்படும். பெருமைக்காக அன்றிக் கடமையை நோக்கிப் பரதன் அரசேற்றல் வேண்டுமென்பது முனிவன் குறிப்பு.

(பா-ம்.) 1. நோக்கிய, நோக்கின.
3. உலகவின், உலகையின், உலகைசீ; கடவதாமெனக்.
4. குமரனுக்கிது; கூறினன். (4)

வசிட்டன் கூற்று

943. வேதிய ரருந்தவர் விருத்தர் வேந்தர்கள்
ஆதியர் நின்வயி னடைந்த காரியம்
நீதியுந் தருமமு நிறுத்த நீயிது
கோதறு குணத்தினாய் மனத்துட் கோடியால்.

கோது அறு குணத்தினாய் - குற்றமற்ற குணங்களையுடைய பரத, வேதியர் - மறையவரும், அரு தவர் - அரிய தவசிகளும், விருத்தர் - மூதறிஞரும், வேந்தர்கள் ஆதியர் - அரசர்களும் முதலாகவுள்ள அனைவரும், நின் வயின் அடைந்த காரியம் - உன்பால் இப்போது வந்திருக்கும் காரியம், நீதியும் தருமமும் நிறுத்த - (நாட்டில்) அரச நீதியையும் தருமத்தையும் நிலைபெறச் செய்யவே யாகும்; நீ இது மனத்துள் கோடி - நீ இதனை (முதலில்) மனத்துட் கொள்வாயாக.

"இப்போது இங்குக் கூடியுள்ளார் அனைவரும் உன்னை நாடிவந்த காரியம், நாட்டிற்கு அரசு நிலையிட்டு அறத்தைக் காத்தற்பொருட்டே யாகும்; இதனை நீ முதலில் மனத்துக்கொண்டாயானால் மேலே நான் சொல்லப் போவனவற்றின் தகுதியை நீ உணர்வாய்" என வசிட்ட முனிவன் முதலில் அடிப்படை அமைத்துக்கொள்கின்றான். நீ அரசேற்று நாடுகாத்தல் வேண்டுமென்பது இதன் குறிப்பு.

பரதன் நற்குணங்கள் நிறைந்தவனாதலால், கோதறு குணத்தினாய் என விளித்தான்.

(பா-ம்.) 2. ஆதியாய்; அடைந்த காரணம்.
3. விரவ, விருத்தி, விருத்தும்; நீயது. மு. நீதியினீயுலகளித்தனேயமால்.
4. மனத்தினாய், மனத்தினால்; குறித்துக் கோடியால், மதித்துக் கோடியால், மனத்துக் கொண்டியால். (5)

944. தருமமென் றொருபொரு டந்து நாட்டுதல்
அருமையென் பதுதெரிந் தறிதி யையநீ
இருமையுந் தருவதற் கியைவ தீண்டிது
தெருண்மனத் தார்செயுஞ் செயலி தாகுமால்.

ஐய-ஐயனே, தருமம் என்ற ஒரு பொருள்-தருமம் என்ற ஒப்பற்ற பொருளை, தந்து -(நாட்டுக்குத்) தந்து, (நாட்டினர் கொள்ளச் செய்து), நாட்டுதல்- (அதனை) நிலைநிறுத்துதல், அருமை என்பது - அருமையான (இன்றியமையாத) செயலென்பதை, நீ தெரிந்து அறிதி-நீ நன்கு

உணர்வாய்; ஈண்டு இது - இப்போது உன்முன் நிற்கும் இது, இருமையும் தருவதற்கு இயைவது - இம்மை மறுமை இரண்டின் நற்பயனையும் தருதற்குப் பொருந்தியதாகும்; தெருள் மனத்தார் செயும் செயல் இது ஆகும்- தெளிந்த மனமுடையார் செய்தற்குரிய காரியமும் இதுவேயாகும்.

ஆல்: அசை.

முன் கவியில், 'இவர்களெல்லோரும் உன்னை நாடி வந்தது, நாட்டில் நீதியையும் தருமத்தையும் நிலைபெறுத்தும் பொருட்டே' என்று கூறிய முனிவன், 'அது நிகழ்தல் அரசனாலேயாகும்; அவ்வரசு பெறுதற்கரியது; தன்னைப் பெற்றோர்க்கு இம்மையில் புகழை யும் இன்பத்தையும் தருவதோடு, மறுமையில் நல்லுலகப் பேற்றையும் அளிக்கும்' என அரசாட்சியின் சிறப்பைக் கூறி, 'நீ அதனை ஏற்றல் வேண்டும்' என்பதைக் குறிப்பித்து, 'தருமத்தை நிலைநாட்டுதலும் ஒரு தருமமாதலால் தெருண்ட மனமுடையோர் செய்தற்குரிய செயலும் இதுவே' என்றான்.

(பி - ம்.) 1. ஒரு பொருள் எடுத்துக்காட்டுதல்; தக்க நாடுதல், தரித்து காட்டுதல்.
2. பெரிதறிதி.
3. தருமதற்கு; இசைய விண்டது, இசைவ நீண்டிது, இசைந்த நீண்டிது.
4. தெருண்மருக்தன்னது, தெருண்மனத்தார்க்கலால், மனத்தார்க்கது, மனத்தெனக்கொரு, மனந்தனக்கொரு, திருமனந்தனிலவை, மனந் தனிவிவை. (6)

945. வள்ளுறு வயிரவா ளரசில் வையகம்
நள்ளுறு கதிரிலாப் பகலு நாளொடும்
தெள்ளுறு மதியிலா விரவுந் தேர்தரின்
உள்ளுறை யுயிரிலா வுடலு மொக்குமால்.

தேர்தரின் - ஆராய்ந்து பார்த்தால், வள் உறு வயிரம் வாள்-உறை யிற் பொருந்தும் உறுதியான வாளை உடைய, அரசு இல் வையகம்-அரச னது காப்பில்லாத நாடு, நள் உறு - (யாவரும்) விரும்புகின்ற, கதிர் இலா பகலும் - சூரியனில்லாத பகற்போதும், நாளொடும் - நட்சத்திரங்க ளுடனே, தெள் உறு மதி இலா-தெளிவுடைய சந்திரன் இல்லாத, இரவும்-இராப்போதும், உள் உறை உயிர் இலா உடலும் - உள்ளே தங்கும் உயிர் இல்லாத உடம்பும் (பிணமும்), ஒக்கும் - போன்றதாகும். ஆல் : அசை.

அரசனில்லாத நாடு பயனற்றதென்பதனை உபமானங்களால் வலியுறுத்துகின்றான் முனிவன். வள்-கூர்மையும் ஆம். வையகம் - நாடு;

நன் உறு - (பல கிரகங்களுக்கும்) நடுவில் அமைந்த எனலுமாம். நாள் - நாண்மீன். மதிக்குத் தெளிவு ஒளியும் குளிர்ச்சியும் பற்றியது.

(பி - ம்.) 1. வள்ளுறை.
2. நாடொறும், நாளினும்.
3. தேர்ந்திடில், தேர்ந்திடின், தேர்வரின்.
4. உள்ளுறுமுயிரிலா; உடலுமொக்குமே, உடம்புமொக்குமே. (7)

946. தேவர்த முலகினுந் தீமை செய்துழல்
மாவலி யவுணர்கள் வைகு நாட்டினும்
ஏவெவை யுலகமென் றிசைக்கு மன்னவை
காவல்செய் தலைவரை யின்மை கண்டிலம்.

தேவர் தம் உலகினும் - (நன்மை செய்யும்) தேவர்களுலகத்திலும், தீமை செய்து உழல் - (பிறர்க்குத்) தீமையே செய்து திரியும், அவுணர்கள் வைகும் நாட்டினும் - அசுரர்கள் தங்கும் நாட்டிலும், ஏ எவை உலகம் என்று இசைக்கும் - (இன்னும்) எவ்வெவை உலகம் என்று சொல்லப்படுமோ, அன்னவை - அவைகளிலெல்லாமும், காவல் செய் தலைவர் இன்மை - (அவ்வவற்றைக்) காக்கும் தலைவர் இல்லாமையை, கண்டிலம் - கண்டதில்லை.

முன் கவியில், அரசனில்லாத நாடு பயனற்றதெனக் கூறியவன் உலகம் நாடு என்று சொல்லப்படுவன எவையோ, அவையெல்லாம் ஆளுந் தலைவரொருவரைப் பெற்றே யிருத்தல் மரபு என்பதனை நாம் காண்கின்றோம் என அதனைத் தெளிவிக்கின்றான் முனிவன்.

எவ்வெவை என்பது எதுகை நயங் கருதி விகாரப்பட்டது. தலைவரை: ஐ, சாரியை.

(பி - ம்.) 3. ஏவவை, ஏவையும், யாவதும், ஏவகையுலகினும்; இசைக்கிலன்னது, அன்னவை, இசைக்குமன்னது, இசைக்கு நல்லது, இசைக்கினல்லது, இசைக்கினல்லவை, இசைப்பினன்னவை, இருக்கிலல்லது, இருக்குமங்கணும், இருக்குமன்னது, இருப்பினன்னவை.
4. கண்டிலேம்; காட்டியால், காட்டுமோ, காண்டியால், காண்டிலம். (8)

947. முறைதெரிந் தொருவகை முடிய நோக்குறின்
மறையவன் வகுத்தன மண்ணில் வானிடை
நிறைபெருந் தன்மையி னிற்ப செல்வன
இறைவனை யில்லன யாவுங் காண்கிலம்.

முறை தெரிந்து - முறைமை அறிந்து, ஒருவகை - ஒருவகையாக, முடிய நோக்கு உறின் - (உலகங்கள்) முழுதும் ஆராய்ந்து பார்ப்போமாயின், மறையவன் வகுத்தன - பிரமன் படைத்தனவாய், மண்ணில் - இவ்வுலகத்திலும், வானிடை - வானுலகத்திலும், நிறை பெரு தன்

மையின் - நிறைந்த பேரளவினவான, நிற்ப - நிலையியற் பொருள் களுள்ளும், செல்வன - இயங்கியற் பொருள்களுள்ளும், இறைவனை இல்லன - அரசனைப் பெற்றில்லாதன, யாவும் காண்கிலம் - எவற்றையும் காண்கின்றோமில்லை.

உயர்திணையுயிர்களாகிய மக்கள், தேவர் முதலியோரை யன்றி, அஃறிணை உயிர்களான சராசரங்களெல்லாமும் அரசின்றி இல்லையென, அரசின் இன்றியமையாத தன்மையை இதனாலும் விளக்குகின்றான் முனிவன்.

மரங்களின் அரசன், அரசமரம்; விலங்குகளின் அரசன், சிங்கம்; பறவைகளின் அரசன், கருடன் என்ற வழக்கும் காணத் தகும்.

(பி - ம்.) 1. முறை செறிந்து, அறிந்து; ஒருவழி.
2. வகுத்தகம்.
3 தனிமையின் கிற்ப.
4. இறைகளையில்லன, இறைவரையில்லன; காண்கில, காண்கிலேம், காண்கிலோம், சாண்டிலேம். (9)

948. பூத்தநாண் மலரயன் முதல புண்ணியர்
ஏத்துவான் புகழின ரின்று காறுமுன்
காத்தனர் பின்னொரு களைக ணின்மையால்
நீத்தநீ ருடைகல நீர தாகுமால்.

பூத்த நாள் மலர் - (திருமாலின் உந்தியில்) மலர்ந்த செவ்வி கெடாத தாமரை மலரில் வீற்றிருக்கின்ற, அயன் முதல புண்ணியர் - பிரமன் முதலான புண்ணியர்களும், ஏத்து - போற்றுதற்குரிய, வான் புகழினர் - சிறந்த புகழைப் பெற்ற இக்குல மன்னர்கள், முன் - உனக்கு முன்னே, இன்று காறும் - இந்நாள்வரை, காத்தனர் - (இந்நாட்டை முறையாகக்) காத்தார்கள்; பின் - இதன்பின், (நீ அரசேலாவிடின்), ஒரு களைகண் இன்மையால் - ஒரு பற்றுக் கோடில்லாமையால் (இந்த நாடு), நீத்தம் நீர் - கடலின் நடுவே, உடை - உடைந்த, (மீகாம னில்லாத) கலம் நீரது ஆகும் - மரக்கலத்தின் தன்மை உடைய தாகும்.

ஆல் : அசை.

'புகழ்மிக்க உன்குல முன்னோர்கள், இதுகாறும் இடையீடின்றி ஒருவர்பின் ஒருவராய் இந்நாட்டை முறைப்படி பாதுகாத்து வந்துள்ளனர்; இனி நீ அரசேலாவிடின், நடுக்கடலில் அகப்பட்டு மீகாமனின்றி உடைந்த மரக்கலம் போல நாடு நிலைகெடும்; இதனை நீ நினைத்தல் வேண்டும்' என்கின்றான்.

நாண்மலர் - எப்போதும் செவ்வி கெடாது அன்று பூத்தது போன்றிருப்பது. நீத்தம், கடலைக் குறித்தது.

(பி - ம்.) 1. ஆதிப்புண்ணியர்.
2. ஏத்துவார்; புகழினை, அன்றளவு, இன்றுகாறுங்கூக்.
3. பின்னொரு கவலையானிலம்.
4. நீத்தனருடைகலம், நீர்த்தனருடைகலம், நீர்த்தருமுடைகலம், நீத்தருமுடைகலம், நீத்தமதுடைகலம்; ஆகுமே, ஆகுமோ. (10)

949. உந்தையு மிறந்தன னும்மு னீத்தனன்
வந்தது மன்னைதன் வரத்தின் மைந்தநீ
அந்தமில் பேரர சளித்தி யன்னது
சிந்தனை யெமக்கெனத் தெரிந்து கூறினான்.

மைந்த - பரத, உந்தையும் இறந்தனன் - உன் தந்தையாகிய சக்கரவர்த்தியும் (வாய்மை காத்து) இறந்து பட்டான், உம் முன் நீத்தனன் - உன் தமையனான இராமனும் (தந்தை சொல் காக்க) நாட்டை விட்டுப் போனான்; (எனவே நாடு காத்தற்குரியார் இலதாயிற்று); அந்தம் இல் பேரரசு - எல்லை இல்லாத பெருமையை உடைய இவ்வரசாட்சி, வந்ததும் (உனக்கு) வந்ததும், அன்னைதன் வரத்தின் - உன் தாய் வரத்தினால் பெற்றதாகும், (ஆதலால்) நீ அளித்தி - நீ (ஏற்றுக்) காப்பாயாக; எமக்கு சிந்தனை அன்னது - எம் கருத்து அதுவேயாகும், என - என்று, தெரிந்து கூறினான் - நன்கு ஆலோசித்துக் கூறி முடித்தான் வசிட்ட முனிவன்.

இதுகாறும் குறிப்பாகக் கூறிவந்த முனிவன், முடிவில் 'இவ்வரசினை ஏற்று ஆள்வது உன் கடமை; அதுவே எம்மெல்லோருடைய கருத்துமாகும்' என வெளிப்படக் கூறி முடித்தான். 'இவ்வரசு உன் தாய் வரத்தால் பெற்று உனக்களித்த தாகலின், முன்னவன் இருக்க நீ அரசேற்றாய் என்ற குற்றம் உன்னைச் சாராது; நீ குற்ற மற்றவன், இப்போது நீ அரசேற்றல் உனக்குரிய தருமமே யாகும்' என்று புலப்படுத்தினான்.

(பி - ம்.) 1. உந்தையோ; இறந்தனன னும்முனீந்தனன்.
2. வாக்கின்.
3. அளித்தலன்னது.
4. எமதெனத்; தெரித்துக் கூறினான்; முனிவன் செப்பவே. (11)

முனிவன் மொழிகளைக் கேட்ட பரதனது நிலை

950. தஞ்சமிவ் வுலகநீ தாங்கு வாயெனச்
செஞ்செவே முனிவரன் செப்பக் கேட்டலும்
நஞ்சினை நுகரென நடுங்கு வாரினும்
அஞ்சின னயர்ந்தன னருவிக் கண்ணினான்.

இ உலகம் தஞ்சம் - இந்நாடு (உன்) பாதுகாப்புக்கு உரியது, நீ தாங்குவாய் என - நீ பாதுகாப்பாயாக என்று, முனிவரன் -

வசிட்ட முனிவன், செஞ்செவே செப்ப கேட்டலும் - செவ்வையாக (வெளிப்படையாக) சொல்லக் கேட்ட அளவில் (பரதன்), நஞ்சினை நுகர் என - நீ நஞ்சை உண்க என்று (ஒருவர்) சொல்ல, (அது கேட்டு) நடுங்குவாரினும் - நடுக்கம் அடைபவரினும் பார்க்க, அஞ்சினன் - அஞ்சினவனாய், அருவி கண்ணினன் - நீர் அருவி போலச் சொரியும் கண்களோடு, அயர்ந்தனன் - சோர்வுற்றான்.

குறிப்பாகப் பலவற்றைக் கூறி வந்த வசிட்ட முனிவன், இறுதியில், 'இந்நாட்டு அரசை ஏற்றுத் தாங்குதல் உன் கடமை; நீ அதனைச் செய்க' என வெளிப்படக் கூறக் கேட்ட பரதன், தன் கருத்துக்கு மாறான அதனை ஏற்க மிக அஞ்சி வருந்தினான். அஃது அவனுக்கு நஞ்சுண்ணுமாறு வற்புறுத்துவது போன்று இருந்தது என அவன் தன்மையை விளக்கினார். பிறர்க்கு அமுதாகத் தோற்றுவது அவனுக்கு நஞ்சாயிற்று.

(பி - ம்.) 1. உலகுநீ, உலகைநீ.
2. கேட்டதும்.
3. அயர்த்தனன். (12)

951. நடுங்கின னாத்தடு மாறி நாட்டமும்
இடுங்கினன் மகளிரி னிரங்கு நெஞ்சினன்
ஒடுங்கிய வுயிரின னுணர்வு கைதரத்
தொடங்கின னரசவைக் குள்ளஞ் சொல்லுவான்.

மகளிரின் - பெண்களைப்போல, இரங்கும் நெஞ்சினன் - மிகவும் வருந்தும் மனமுடைய பரதன், நடுங்கினன் - நடுக்கமுற்றவனாய், நா தடுமாறி - (பேச இயலாதபடி) நாக்குத் தடுமாறி, நாட்டமும் இடுங்கினன் - கண்களும் இடுங்கப்பெற்று, ஒடுங்கிய உயிரினன் - (சிறிது போது) உயிர் ஒடுங்கினவன் (மூர்ச்சை யுற்றவன்) ஆனான்; (பின்பு) உணர்வு கைதர - தன்னுணர்வு தோன்ற, அரசு அவைக்கு—, உள்ளம் - தன் மனக்கருத்தை, சொல்லுவான் தொடங்கினன் - சொல்லத் தொடங்கினான்.

துயர மிகுதியால் பரதன் சோர்ந்து மூர்ச்சையுற்று, பின்பு தெளிந்து தன் கருத்தைச் சபையோருக்குச் சொல்லலானான். மகளிர் துயரம் சிறிதும் தாங்காத நெகிழ்ந்த மனம் உடையவராகலின், 'மகளிரின் இரங்கும் நெஞ்சினன்' என்றார். துயரமிகுதியால் தோன்றும் அழுகையினால் கண்கள் இடுங்குதல் இயல்பு. ஒடுங்கிய உயிரினன் - உயிர் ஒடுங்கினவன். கைதரல் - உதவி செய்தல், தோன்றுதல். உள்ளம் - உள்ளக் கருத்து.

நாட்டம் இடுங்கினன் : சினை, முதல் வினை கொண்டது.

(பி - ம்.) 2. செஞ்சினன்.
3. ஒடுங்கின; உணர்வும்; கைத்தெழப்.
4. மு. பிடுங்கிய மொழியினன் அவைக்குப் பேசுவான். (13)

பரதன் அவையோர்க்குத் தன் முடிவுரைத்தல்

952. மூன்றுல கினுக்கொரு முதல்வ னாய்முதல்
தோன்றின னிற்கயான் மகுடஞ் சூடுதல்
சான்றவ ருரைசெயத் தரும மாயதேல்
ஈன்றவள் செய்கையி லிழுக்குண் டாகுமோ.

மூன்று உலகினுக்கு - மூவுலகங்களுக்கும், ஒரு முதல்வன் ஆய் - ஒப்பற்ற தலைவனாகி, முதல் தோன்றினன் - முதலில் (மூத்தவனாகப்) பிறந்த இராமன், நிற்க - இருக்கவும், யான் மகுடம் சூடுதல்—, சான்றவர் உரை செய - பெரியோர்கள் சொல்லுதலால், தருமம் ஆயதேல் - தருமமாய்விடின், ஈன்றவள் செய்கையில் - (என்னைப்) பெற்ற கைகேயியின் செயலில், இழுக்கு உண்டு ஆகுமோ - குற்றம் உளதாகுமோ?

பரதன் இவ்வாறு கூறியது, 'நீங்கள் சொல்வது தருமமாகாது; குற்றமே' என்ற குறிப்பை அடக்கியது. 'மூத்தவன் இருக்க நான் முடி சூடுதல் எவ்வகையினும் தகாதது; அன்னை செய்ததும் பெருங் குற்றம்' என்பதே பரதன் கருத்து. 'இராமன் இவ்வுலக மட்டுமின்றி மூவுலகங்களையும் தாங்கும் தகுதியும் ஆற்றலும் உடையவன்; மூத்தவனாகப் பிறந்ததே முடிசூடுதற்கு உரியதாயிற்று; நான் எவ்வகையிலும் அதற்குப் பொருந்தியவனல்லன்' என்கின்றான்.

மூன்றுலகினுக்கு: முற்றும்மை தொக்கது.

(பி - ம்.) 1. மூன்றுலகினுக்குமோர்.
2. தோன்றினனிருக்க, தோன்றினனிற்ப; சூடெனச்.
3. உரை செய்த; தருமமாதலால், தருமமாயதே, தருமமாகியது.
4. செய்கையின், செய்கையும். (14)

953. அடைவருங் கொடுமையென் னன்னை செய்கையை
நடைவருந் தன்மைநீர் நன்றி தென்றிரேல்
இடைவரு காலமீண் டிரண்டு நீத்தது
கடைவருந் தீநெறிக் கலியி னாட்சியோ.

அடைவு அரும் கொடுமை - (எவரும்) அடைதலில்லாத கொடுமையையுடைய, என் அன்னை செய்கையை - என் தாயின் கொடுஞ்செயலை, நடை வரும் தன்மை நீர் - நன்னடையிற் செல்லும் தன்மையுடைய நீவிர், நன்று இது என்றிரேல் - இது நல்லதே என்று சொல்வீராயின், இது-இக்காலம், ஈண்டு இடைவரு காலம் இரண்டும் நீத்து - இப்போது இடையில் உள்ள (திரேதாயுகம், துவாபரயுகம் என்ற)

இரண்டும் தள்ளி, கடை வரும் - கடைசியில் உள்ள, தீ நெறி - தீயொழுக்கங்களுக்குக் காரணமான, கலியின் ஆட்சியோ - கலிபுருடனின் ஆட்சிக்கு உரிய கலிகாலமோ?

அவையோர் கருத்தாக வசிட்டமுனிவன் கூறியது தருமமன்று என்பதனையே மீண்டும் பிறவகையாற் கூறுகின்றான் பரதன். இராமாயணம் நிகழ்ந்தது திரேதாயுகம்; அதுவும், அடுத்ததாகிய துவாபரயுகமும் நன்னெறியுடையோர் அதருமத்திற் செல்லுதற்குரிய காலமல்ல. கடைசியில் உள்ள கலிகாலமே தருமந் தடுமாறி அதருமம் ஓங்குதற்கு உரியது; ஆதலால், 'இது கலியின் ஆட்சியோ?' என இகழ்ச்சியாகக் கூறினான்.

கலிகாலத்தின் தன்மையைப் பல நூல்களும் கூறும். "ஒலிகடலுலகந் தன்னி லூர்தரு குரங்கின் மாடே, கலியது காலம் வந்து கலந்ததோ" (கிட்கிந்தா. 309) என வாலி கூற்றாக வந்துள்ளதும் காண்க. எவரிடத்துங் காண முடியாத பெருங் கொடுமையுடையவள் என்கின்றான் தாயை. நடை - நல்லொழுக்கம்.

(பி-ம்.) 1. கொடுமையொன்றன்னே, அடைவரு தீமையென்னனன்னே; செய்கையின், செய்வகை.
2. கடைவருந் தன்மையீர், கடைதரு தன்மையீர், கன்மையீர்; நன்றி தென்றநீர், நன்றி தென்றனிர், னன்றிதென்றவின், னன்றதென்ற நீர், னன்றன்றென்றிலீர்.
3. நீத்தது.
4. கடைவருகாலத்தின், காலமாம், கடைவருங்காலத்தின், காலத்துக்; கலியனாட்சியே, கலியின் காட்சியே, காட்சியோ, மாட்சியோ, கலியினாட்சியோ. (15)

954. வேத்தவை யிருந்தநீர் விமல னுந்தியில்
பூத்தவன் முதலினர் புவியிற் றோன்றினார்
மூத்தவ னிருக்கவே முறைமை யானிலங்
காத்தவ ருளரெனிற் காட்டிக் காண்டிரால்.

வேத்து அவை இருந்த நீர் - அரசவையில் இருந்து பழகிய நீங்கள், விமலன் உந்தியில் பூத்தவன் முதலினர் - திருமாலின் உந்தியில் உதித்த பிரமனை முதலாகக் கொண்டவராய், புவியில் தோன்றினார் - இவ்வுலகில் தோன்றிய அரசர்களுள், மூத்தவன் இருக்கவே - (அரசுக்குரிய) மூத்த புதல்வன் இருக்கச் செய்தே, முறைமையால் - முறையாக, நிலம் காத்தவர் - நாட்டை ஆண்டவர்கள், உளர் எனில் - (எவரேனும்) இருப்பாராயினால், காட்டிக்காண்டிர் - (அத்தகையவரை) காட்டுங்கள்.

ஆல் : அசை.

'நீங்கள் சக்கரவர்த்தியின் அரசவையில் இருந்து பழகியவர்கள் என்பான், 'வேத்தவை இருந்த நீர்' என்றான். 'விமலன் உந்தியில்...

தோன்றினுர்' என்றது மனுகுல மன்னரைச் சுட்டியது. காட்டிக் காண்டிர்: ஒரு சொல் நீர்மையது; காட்டுங்கள் என்றபடி. தொடர் மொழியாகவே கொண்டு, காட்டி-(எனக்கு) எடுத்துக்காட்டி, (அதன்பின்), காண்டிர்-(என்னை அரசனுக்கும் உங்கள் முயற்சியைச்) செய்யுங்கள் என உரைத்தலுமாம்.

பரதன் வசிட்டனை நேரே நிந்தித்ததாக வான்மீகம் கூறும்.

(பி-ம்.) 2. பூத்தவன் முதலிய, முதலவர், முதலினேர்; புவியுட்டோன்றினுர், தோன்றினேர்.
3. மூத்தவர் இருக்கவும்.
4. காட்டிக் காட்டிரால், காட்டுவிரென்ருன், கண்ணிற் காண்டிரால். (16)

955. நன்னெறி யென்னினு நானிந் நானில
மன்னுயிர்ப் பொறைசுமந் திருந்து வாழ்கிலேன்
அன்னவன் றனைக்கொணர்ந் தலங்கன் மாமுடி
தொன்னெறி முறைமையிற் சூட்டல் காண்டிரால்.

நல் நெறி என்னினும் - மூத்தவன் இருக்க இளையவன் அரசாள் வது) நல்ல நெறியே என்று எவர் கூறினும், நான்—, இ நால் நிலம் - இவ்வுலகிலுள்ள, மன் உயிர் பொறை சுமந்து இருந்து - நிலைபெற்ற உயிர்களைக் காத்தலாகிய பாரத்தைச் சுமந்துகொண்டு (அரசனுக இருந்து), வாழ்கிலேன் - வாழமாட்டேன்; அன்னவன் தனை - அதற் குரிய அவ்விராமபிரானை, கொணர்ந்து - (மீள) அழைத்து வந்து, தொல் நெறி முறைமையின் - தொன்றுதொட்டு வந்த முறைப்படி, அலங்கல் மாமுடி சூட்டல் - மாலையையுடைய முடியை (அவனுக்கு நான்) சூட்டுதலை, காண்டிர் - காண்பீர்கள்.

ஆல்: அசை.

நான் அரசேற்று வாழேன் என்று தன் மனவுறுதியை இதனுல் தெளிவுறுத்தினுன். மேலும் தன் முடிவான கொள்கையை அடுத்த கவியாற் கூறுகின்ருன். நன்னெறி என்னினும் என்றது, அஃதன்று என்ற எதிர்மறை குறித்தது. நால் நிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு பாகுபாடுடைய பூமி.

(பி-ம்.) 1. நானிலத்து.
2. இன்னுயிர்ப்பொறை சுமந்திருக்க.
4. தொன்னெடு, சொன்னதன், சொன்னெறி; சூட்டக்காண்டிரால். (17)

956. அன்றெனி னவனொடு மரிய கானிடை
நின்றினி தருந்தவ நெறியி னுற்றுவென்
ஒன்றில தெனினென துயிரை நீக்குவென்
என்றன னென்றலு மிருந்த பேரவை.

அன்று எனின் - (இராமபிரானுக்கு முடிசூட்டல்) ஆகாததாயின், அவனொடும் - அவனுடனே, அரிய கான் இடை நின்று - (தங்குதற்கு) அரிய அக்காட்டிலேயே (நானும்) தங்கி, இனிது - இனிதாக, நெறியின் - முறைப்படி, அரு தவம் ஆற்றுவென் - அரிய தவத்தைச் செய்வேன்; ஒன்றிலது எனில் - (அதுவும்) கைகூடாதாயின், எனது உயிரை நீக்குவென் - (உடனே) என் உயிரைவிடுவேன் (இதுவே என் உறுதி), என்றனன் —; என்றலும் - (அவன்) அவ்வாறு கூறியவுடன், இருந்த பேர் அவை - அங்கே கூடியிருந்த பெரிய சபையோர்.

இது மேலே தொடர்ந்து, 958-ஆம் பாடலின் இறுதியில் வரும் 'வாழ்த்தினர்' என்பதனோடு முடியும். 'இராமபிரான் வந்து முடிசூட மறுத்தால், நானும் காட்டிலேயே தங்கித் தவம் மேற்கொள்வேன்; அவன் அதனையும் மறுத்து என்னை அரசேற்குமாறு வற்புறுத்தினால் அதன்பின் உயிரோடிரேன்' எனத் தன் மனவுறுதியை முடிவாகக் கூறி முடித்தான் பரதன்.

அவை என்றது ஆகுபெயராய் அவையிலுள்ளாரை உணர்த்திற்று.

(பி - ம்.) 2. நின்றுகான், நின்றனன்; இருந்தவநெறியின், இருந்தவநெடிது; இயற்றுவன்.
3. ஒன்றினியுரைக்கிலென், உரைப்பிலென், ஒன்றினிதுரைப்பினென், ஒன்றினியுரைப்பதென், ஒன்றுநீகுரைப்பினென்.
4. என்னலும், என்றபோது. (18)

அவையினர் பரதனை வியத்தல்

957. ஆன்றபே ரரசனு மிருப்ப வையனும்
ஏன்றனன் மணிமுடி யேய்ந்த வேந்தனீ
வான்றொடர் திருவினை மறுத்தி மன்னிளந்
தோன்றல்கள் யாருளர் நின்னிற் றோன்றினர்.

ஆன்ற பேர் அரசனும் இருப்ப - குணங்களால் நிறைந்த சக்கரவர்த்தியும் இருக்கும்போதே, ஐயனும் - இராமபிரானும்கூட, மணி முடி ஏந்த ஏன்றனன் - மணிகள் பதித்த கிரீடம் தாங்க இயைந்தனன்; ஏந்தல்-மிக்க பெருமை உடையவனே, நீ—, வான் தொடர் திருவினை மறுத்தி - வானளவு உயர்ந்த அரசச் செல்வத்தை மறுக்கின்றாய்; மன் இளந் தோன்றல்கள் - அரச குமாரர்களுள், நின்னின் தோன்றினர் யார் உளர் - உன்னைப் போல் பிறந்தார் (இதுகாறும்) யார் இருக்கின்றனர்? (ஒருவரும் இல்லை).

சபையோர் பரதனைப் புகழ்ந்து உபசாரமாகக் கூறியது இது. 'தந்தை இங்கிருந்தபோதே இராமன் முடிசூட இயைந்தான்; நீயோ தாய்தந்தை இருவருமாக உனக்குத் தந்த அரசை இராமன் இங்கில்லாத போதும் மறுக்கின்றாய். உன்னைப்போலச் சிறந்த குணம் படைத்தோர் அரசகுலத்தில் இதுகாறும் தோன்றினரில்லை' என்கின்றனர். தந்தை

தான் இருக்கும்போதே மூத்த மகனுக்கு முடிசூட்டி, தான் தவமேற் கொள்ளல் மரபாதலின், தந்தை இருக்கும்போதே இராமன் முடிசூட இயைந்தமையைக் குறைபோல எடுத்துக் கூறியது பரதனை உயர்த்த வேண்டியேயாகும்.

(பி - ம்.) 1. அரசனுமிருக்க.
2. ஏன்றன னிருநிலம்; ஏந்தல் வேந்தரீ, ஏந்தலேந்த ரீ, ஏந்த வேந்தரீ, இகந்த வேந்தரீ, உகந்த வேந்தரீ, என்பதோக்கு ரீ, எய்த வேந்தரீ. (19)

958. ஆழியை யுருட்டியு மறங்கள் போற்றியும்
வேள்வியை யியற்றியும் வளர்க்க வேண்டுமோ
ஏழினொ டேழெனு முலக மெஞ்சினும்
வாழிய நின்புக ழென்று வாழ்த்தினர்.

ஆழியை உருட்டியும் - (நீ அரசேற்று) ஆணைச் சக்கரத்தைச் செலுத்தியும், அறங்கள் போற்றியும் - தருமங்களைப் பாதுகாத்தும், வேள்வியை இயற்றியும்-யாகங்களைச்செய்தும், வளர்க்க வேண்டுமோ- (உன் புகழை) வளர்க்க வேண்டுமோ ? (வேண்டுவதில்லை); ஏழினொடு ஏழ் எனும் உலகம் எஞ்சினும் - கீழேழும் மேலேழும் என்று சொல்லப் படும் பதினான்கு உலகங்களும் அழிந்தாலும், நின் புகழ் - (இப்போது நீ பெற்றுள்ள) உன் உயர்ந்த புகழ், வாழிய என்று - என்றும் அழியாது வாழ்வதாக என்று, வாழ்த்தினர்—.

'நீ அரசையேற்று, உன்தந்தையைப்போலச் சிறப்பாக எல்லாம் செய்து பெறும் புகழினும், அரசை மறுத்து நீ பெற்ற புகழ் பெரிது; அஃது என்றும் வாழ்க' எனப் பரதனைச் சிறப்பித்தனர் அவையோர்.

956-இல் உள்ள 'இருந்த பேரவை' என்பது எழுவாய்; அது 'வாழ்த்தினர்' என்றதனோடு முடிந்தது. எஞ்சினும் என்ற உம்மை எதிர் மறையாக எஞ்சாமை குறித்தது. உலகங்களெல்லாம் உள்ள அளவும் அவற்றிலெல்லாம் உன்புகழ் சிறந்து விளங்குக என்பது கருத்து.

(பி - ம்.) 1. உருட்டியு மவனி தாங்கியும்.
2. விளங்க வேண்டுமோ.
4. வாழியாய்; என்றும் வாழ்த்தினர். (20)

பரதன் சத்துருக்கனுக்கு இட்ட கட்டளை

959. குரிசிலுந் தம்பியைக் கூவிக் கொண்டலின்
முரசறைந் திந்நகர் முறைமை வேந்தனைத்
தருதுமீண் டென்பது சாற்றித் தானையை
விரைவினி லெழுகென விளம்பு வாயென்றான்.

குரிசிலும் - பரதனும், (உடனே), தம்பியை கூவி - சத்துருக்கனை அழைத்து, இ நகர் - இந்த நகரத்திலே, முறைமை வேந்தனை - முறைப்படி அரசனுதற்குரிய இராமபிரானை, ஈண்டு தருதும் என்பது - இங்கே அழைத்து வருவோம் என்பதை, கொண்டலின் முரசு அறைந்து சாற்றி - மேகமுழக்கம்போல முரசடித்துச் சொல்லி, தானையை - சேனைகளையும், விரைவினில் எழுக என விளம்புவாய் - விரைவில் (காடு நோக்கிச் செல்ல) எழுமாறு கூறுவாயாக, என்றுன் - என்று கூறினுன்.

பரதன் தன் கருத்தின்படி இராமபிரானை அழைத்து வருதலில் காலந்தாழ்ப்பின், வேறு புதிய இடையூறேதேனும் உளதாகுமோ வென்ற அச்சத்தால், சிறிதும் தாழ்த்தலின்றி அதற்குரியவற்றைச் செய்விக்கின்றுன். இராமபிரான் இங்கு இல்லாமையால், பரதனே அரசனுகப்போகிருன் என்று எதிர்பார்த்திருக்கும் மக்களுக்கு, இராமபிரானை அழைத்து வருதல் என்ற செய்தியில் ஐயுறவு தோன்றுதபடி சத்துருக்கனே அதனை நகருக்குச் சொல்லவேண்டுமென்றுன்; தான் அரசேற்கப் போவதில்லை என்பது தெளிவுபட, 'முறைமை வேந்தனைத் தருதும் என்பது சாற்றுக' என்றுன்.

தசரதனுக்குரிய இறுதிக் கடன்கள் முடிந்த மறுநாள், முடிசூட்டுதற்குரியோர் பரதனிடம் வந்து அவனை முடிசூட்டுக்கொள்ளும்படி கூற, அவன் அதனை மறுத்துத் தான் வனம் சென்று இராமனை அழைத்து வருதற்குரிய ஏற்பாடுகளைச் செய்விக்குமாறு கூற, அதன்படி, செல்லுதற்குரிய வழியெல்லாம் அவ்வத் தொழில் வல்லாரைக் கொண்டு செப்பனிட்டு அலங்கரித்து அமைக்கப்பெற்றன என்பதை விரிவாக வான்மீகம் கூறும். சுமந்திரனுல் சேனையைச் சித்தஞ் செய்வித்ததாகவும் அது கூறுகின்றது.

(பி - ம்.) 1. தம்பியை நோக்கி. (21)

நகரத்தாரின் மகிழ்ச்சி

960. நல்லவ னுரைசெய நம்பி கூறலும்
அல்லலி னழுந்திய வளவின் மாநகர்
ஒல்லென விரைத்ததா லுயிரில் யாக்கையச்
சொல்லெனு மமுதினுற் றுளிர்த்த தென்னவே.

நல்லவன் உரைசெய - நல்லவனுன பரதன் (சத்துருக்கனிடம்) சொல்ல, நம்பி - சத்துருக்கன், கூறலும் - (அதனை நகரத்தாருக்குத் தெரியச்) சொன்ன அளவில், அல்லலின் அழுந்திய - (இராமபிரானைப் பிரிந்ததாகிய) துன்பத்தில் மூழ்கியிருந்த, அளவு இல் மா நகர் - எல்லையற்ற அப்பெரிய நகர முழுதும், உயிர் இல் யாக்கை-உயிர் நீங்கிய உடம்புகள், அ சொல் எனும் அமுதினுல் - (சத்துருக்கன் கூறிய)

அந்தச் சொற்களாகிய அமுதத்துளிகளால், துளிர்த்தது என்ன- துளிர்த்து (உயிர் பெற்று) எழுந்தாற்போல, ஒல் என இரைத்தது- ஆரவாரம் எழுந்தது.

பரதன் இராமபிரானை அழைத்துவரச் செல்லும் செய்தியை நகரத்தாருக்கும் சேனைகட்கும் முரசறைந்து தெரிவித்தல் பின்னே கூறப்படுதலின், இப்போது சத்துருக்கன் கூறியது முரசறையும் வள்ளுவருக்கோ அல்லது நகரத்தாருள் முதன்மையுடையார்க்கோ என்னலாம்; அது விரைவில் எங்கும் பரவுதல் இயல்பே.

நல்லவன்-குணங்களாலும் செயலாலும் நல்லவன்; திரிகரணங்களாலும் நல்லவன். நகர், ஆகு பெயராய் நகரமக்களைக் குறித்தது. கோசல நாடு முழுதும் 'ஆவி நீத்த வுடலென வாயது' (822) என முன்னர்க் கூறினமையின், நகரமும் அவ்வாறுகியிருந்து இப்போது இந்நற் செய்தியாகிய அமுதத் துளிகளால் மீண்டும் உயிர்பெற்றுத் தளிர்த்தது என்பதுபடக் கூறுகின்றார். ஆரவாரம் எழுந்தது மகிழ்ச்சியால். ஒல் : ஒலிக்குறிப்பு. ஆல், ஏ : அசைகள்.

(பி - ம்.) 2. அல்லலில் அமுங்கிய, அமுங்கின; அன்பின் மாநகர்; அளவின் மாக்களும், மாக்களுக்கு.
3. ஒல்லென ஒலித்ததால், ஒலித்ததவ்.
4. துளித்தது, தளிர்த்தது. (22)

961. அவித்தவைம் புலத்தவ ராதி யாவுள
புவித்தலை யுயிரெலா மிராமன் பொன்முடி
கவிக்குமென் றுரைக்கவே களித்த லாலது
செவிப்புல நுகர்வதோர் தெய்வத் தேன்கொலாம்.

இராமன் பொன்முடி கவிக்கும் - இராமபிரான் (மீண்டு வந்து) பொன்னுலாகிய மகுடம் சூடுவான், என்று உரைக்கவே - என்று சொன்னவளவிலே, அவித்த ஐம்புலத்தவர் ஆதியாக - ஐம்புலன்களையும் அடக்கிய ஞானியர் முதலாக, புவித்தலை உள உயிர் எலாம்- பூமியிலுள்ள எல்லா உயிர்களும், களித்தலால்—, அது - அச்சொல், செவி புலம் நுகர்வது ஓர்-செவிப்புலனுல் நுகர்தற்குரியதொரு, தெய்வம் தேன்கொல் - தெய்வத்தன்மையுள்ள தேன்போலும்!

ஆம்: அசை.

இராமபிரான் மீண்டுவந்து முடிசூடுவான் என்பதைக் கேட்டவுடனே உயர்ந்தோரும் தாழ்ந்தோருமாகிய எல்லோரும் களிப்பெய்தினர் என்றுல், அதனை என்னவென்பது என்று வியக்கின்றார் கம்பர். நாவினுல் சுவைத்துப் பருகிக் களிக்கும் தேனினும் வேருகக் காதினுற் சுவைத்துப் பருகத்தக்கதொரு புதிய தெய்விகமான தேன்போலும் அது என்கின்றார். தேனின் செயல் களிப்பிப்பது. களிப்பு- மகிழ்ச்சி மிகுதி. இன்ப துன்பங்களை ஒப்ப மதிக்கும் ஞானியரே களித்தனர்

என்னின், ஏனையோர் களித்தமை சொல்லவேண்டா; இராமன் வனம் புகும் செய்தி கேட்டபோது, "பருவரல் இன்பமென் றிரண்டும், ஒக்க நோக்கிய யோகரும் அருந்துய ருழந்தார்" (509) என்றார். இப்போது அவர்கள் மீண்டும் களிப்பெய்துகின்றார். அவித்த ஐம்புலத்தவர் - ஐம்புலம் அவித்தவர்; வடமொழி முடிபு.

(பி - ம்.) 1. ஆதியாயுள.
3. உணர்த்தவே, உலகெலாம்; களித்ததாலது.
4. செவிப்புலன், செவித்தலன்; கவர்வதோர். (23)

962. படுமுர சறைந்தனர் பரதன் றம்முனைக்
கொடிநகர்த் தருமவற் கொணரச் சேனையும்
முடுகுக வென்றசொன் மூரி மாநகர்
உடுபதி வேலையி னுதயம் போன்றதே.

பரதன் தம்முனை கொடி நகர் தரும் - பரதன் தன் தமையனான இராமபிரானைக் கொடிகளாடும் அயோத்தி நகருக்கு அழைத்து வருவான்; அவன் கொணர - அவ்வாறு இராமபிரானை அழைத்து வருதற்கு, சேனையும் முடுகுக-சேனையும் விரைந்தெழுக, என்ற சொல்- என்ற செய்தியை, படுமுரசு அறைந்தனர் - ஒலிக்கும் முரசறைந்து (வள்ளுவர்) நகருக்குத் தெரிவித்தனர்; (அதுகேட்டவளவில்) மூரி மா நகர் – பெருமைமிக்க அயோத்தி நகரம், வேலையின் உடுபதி உதயம் போன்றது - கடலில் சந்திரன் உதயமானாற் போன்றாகியது.

ஏ: ஈற்றசை.

சேனை எழுதற்பொருட்டும், நகரமக்கள் அனைவரும் அறிதற் பொருட்டும் முறைப்படி முரசறைந்தனர்; அது கேட்டு நகரத்தார் கிளர்ந்தெழுந்தனர். சந்திரோதயத்தால் கடல் பொங்கிக் கொந்தளிக் கும்; அதுபோல நகரமும் கிளர்ந்தது என உவமை காண்க. தரும்: செய்யுமென் முற்று. சொல்: சொற்களாகிய செய்தி. அறைந்தனர் என்றதற்குரிய எழுவாய் வருவித்து உரைக்கப்பெற்றது.

(பி - ம்.) 1. அறைதலும்.
2. சேனையை.
3. முடுகுகவென்றலும், முடுகவென்றமைந்த சொல், முடுகவென் றறைந்தசொல்; மாநகர்க்கு, மாணகர், மாணகர்க்கு.
4. போன்றவே, போர்த்ததே. (24)

சேனையின் எழுச்சி

963. எழுந்தது பெரும்படை யேழு வேலையின்
மொழிந்தபே ரூழியின் முழங்கி முந்தெழ
அழிந்தது கேகயன் மடந்தை யாசைபோய்க்
கழிந்தது துயர்நெடுங் காத றூண்டவே.

பெருபடை - பெரிய படைத் தொகுதியானது, (முரசறைந்த கட்டளையால்) மொழிந்த பேர் ஊழியின் - (நூல்கள்) சொல்லிய பேரூழிக் காலத்தில், ஏழு வேலையின் - ஏழுகடல்களும் பொங்கி எழுதல் போல, முழங்கி எழுந்தது - ஆரவாரித்து எழுந்தது; முந்து எழ - அவ்வாறு படை முந்திக்கொண்டு எழாநிற்க, கேகயன் மடந்தை ஆசை—, அழிந்தது—; நெடும் காதல் தூண்ட - இராமபிரானிடம் உள்ள காதல் தம்மை எழும்படி தூண்ட, துயர் - மக்கள் கொண்டிருந்த துயரம், போய் கழிந்தது-அவர்களிடமிருந்து சென்று நீங்கியது. ஏ: ஈற்றசை.

முரசறைந்தது கேட்டுச் சேனை எழ, அது கண்டு பரதன் நாடாள வேண்டும் என்ற கைகேயியின் ஆசை அழிந்தது; இராமன் வந்து முடிசூடுவான் என்ற எண்ணத்தால் மக்களின் துயரம் நீங்கியது என்க.

(பி - ம்.) 2. முழங்கின சங்கினம், முழங்கி மும்த்தெழ, முற்றெழ, ஆர்த்தெழ, சூழ்ந்தெழ.
4. துயர்பெருங், துயரமும். (25)

964\. பண்ணின புரவிதேர் பகடு பண்டியும்
மண்ணினை மறைத்தன மலிந்த மாக்கொடி
விண்ணினை மறைத்தன விரிந்த மாத்துகள்
கண்ணினை மறைத்தது கமலத் தோனையே.

பண்ணின - அலங்கரிக்கப்பெற்ற, புரவி - குதிரைகளும், தேர் - தேர்களும், பகடு - யானைகளும், பண்டியும் - வண்டிகளும், மண்ணினை மறைத்தன - தரையிடம் முழுவதும் மறைத்துவிட்டன; மலிந்த மா கொடி - நிறைந்த பெரிய துகிற் கொடிகள், விண்ணினை மறைத்தன - ஆகாய முழுதும் மறைத்துவிட்டன; விரிந்த மா துகள் - (படைகளால் எழுந்து) பரந்த பெரும் புழுதி, கமலத்தோனை கண்ணினை மறைத்தது - பிரமதேவனுடைய கண்களை மறைத்து விட்டது.

படைகளின் மிகுதி புலப்படுமாறு உயர்வு நவிற்சியாகக் கூறுகின்றார். புழுதி, படைகள் புடைபெயர்தலால் எழுவது. மாத்துகள் - குதிரைகளால் உண்டான புழுதியெனலுமாம்.

(பி - ம்.) 1. பண்ணியல்; புரவித்தேர்ப்; பகடும் பண்டியும், புரவி பண்டியும், பகடு பாண்டிலும்.
2. விண்ணினை; வளர்ந்த, விரிந்த, வகிர்ந்த.
3. மண்ணினை; மறைத்தது; விரிந்ததுளி போய்க், விரிந்த மாக்கள் சூழ், மடுத்த மாத்துகள், மலிந்த மாத்துகள், மிகுந்த மாத்துகள், மேவு மாத்துகள், வளர்ந்த மாத்துகள்.
4. கண்ணிணை. (26)

965 ஈசனிவ் வுலகினை யழிக்கு நாளெழும்
ஓசையி னிமிர்ந்துள தொல்லென் பேரொலி
காசையிற் கரியவற் காண மூண்டெழும்
ஆசையி னிமிர்ந்ததவ் வனிக ராசியே.

ஈசன் - உருத்திர மூர்த்தி, இ உலகினை அழிக்கும் நாள் - இவ்வுல கங்களை அழிக்கும் மகாசங்கார காலத்தில், எழும் ஓசையின் - எழு கின்ற பேரொலியிலும், ஒல் என் பேர் ஒலி - (படையெழுச்சியில் உண்டான) ஒல்லென்ற பேரோசை, நிமிர்ந்துளது - மிகுவதாயிற்று; காசையின் கரியவன் காண - காயாம்பூப் போலுங் கருநிறமுடைய இராமபிரானைக் காணுதற்கு, மூண்டு எழும் - (ஒவ்வொருவரிடமும்) மேலிட்டெழுகின்ற, ஆசையின் - பேராவலினும், அனிகம் ராசி நிமிர்ந்தது - அச்சேனையின் திரள் மிக்கிருந்தது.

ஏ! ஈற்றசை.

படைகள் தொகுமிடத்து ஆரவாரம் மிகுதல் இயல்பு; அவ்வார வாரத்துக்கு, மகாசங்கார காலத்தில் அண்டகடாகங்கள் வெடித்தலால் உண்டாகும் பயங்கரமான பேரோசையை உவமித்தார். சேனையிலுள் ளார்க்கும் மாநில மக்களுக்கும் ஒருங்கே இராமபிரானைக் காணும் ஆவல் மேலிடுதலால், அம்மிகுதியைச் சேனையின் மிகுதிக்கு ஒப்பிட் டார். "அம்மன்னர் சேனைதம தாசைபோ லாயினவால்" (பால.763) என முன்னும் ஆசையை உவமை கூறியது காண்க. மரத்தைக் குறிக்கும் 'காயா' என்பது 'காசா' எனவும், 'காசை' எனவும் வழங்குதலுண்டு; இங்கே 'காசை' என்றது ஆகுபெயராய் அதன் பூவை உணர்த்தியது. "காசை மலர்போலு மிடற்றர்" (தே), "காசைக் கருங்குழலார்" (பதினோரந். ஆளு. திரு. 130), "மென்காசை மாமல ரன்னமெய் யாற்கும் விரிஞ்சனுக்கும்" (தென்காசிச் சாசனப் பாடல்) என்பவற் றுட் காசையென்ற வழக்குக் காண்க.

(பி - ம்.) 1. உலகளித்தழிக்கும், உலகிழைத்தழிக்கும், ஒழிக்கும், உலகெலா மொழிக்கும்; நாள்மழை.
2. நிமிர்ந்துளவொல்லென்.
4. நிமிர்ந்தவிவ், நிமிர்ந்தன. (27)

களிறுகள் பிடிகளுடன் செல்லுதல்

966. படியொடு திருநகர் துறந்து பன்மரம்
செடியொடு தொடர்வன நோக்கிச் சீதையாம்
கொடியொடு நடந்தவக் கொண்ட லாமெனப்
பிடியொடு நடந்தன பெருங்கை வேழமே.

படியொடு - (கோசல) நாட்டுடனே, திருநகர் - செல்வமிக்க அயோத்தி நகரையும், துறந்து - கைவிட்டு, செடியொடு-செடிகளுடன்,

பல மரம் தொடர் - பல மரங்கள் நெருங்கியுள்ள, வனம் நோக்கி - காட்டை நோக்கி, சீதை ஆம் கொடியொடும் நடந்த - சீதையாகிற கொடியுடன் நடந்து சென்ற, அ கொண்டல் என - அம்மேக வண்ணனை இராமனைப்போல, பெரு கை வேழம்-பெரிய துதிக்கையையுடைய ஆண் யானைகள், பிடியொடும் நடந்தன - பெண்யானைகளுடன் சென்றன.

இராமபிரான் களிறும், பிராட்டி பிடியுமாகக் கொள்க. "நாகந் தனி வருகின்றது பிடியோடென நடவா'' (623) என முன்னர்க் கூறியுள்ளது இங்கே நினைக்கத் தகும். வனத்திலும் ஆண்களைப்போல மரங்களும், பெண்களைப்போலச் செடிகளும் கலந்துள்ளன என்ற குறிப்பும் அங்கே கொடியொன்றும் போய்ச்சேர்தலால் மரம், செடி, கொடி என இயைக்குமாறு அமைந்துள்ள அழகும் நோக்குக. படி - பூமி; நாட்டைக் குறித்தது.

கொண்டல்: ஆகுபெயர்.

(பி - ம்.) 1. பன்மலர், துறந்த பன்மரம்.
2. செடியொடு கொடுவனம்.
3. கடந்தவக், தொடர்ந்தவக்,
4. நடந்தவப், நடந்ததப், கடந்தன. (28)

பெண்கள் பிடிகளின்மேல் செல்லுதல்

967. சேற்றிள மரைமலர் சிதைந்த வாமெனக்
காற்றளம் பொலிதரு கன்னி மாரொடும்
ஏற்றிளம் பிடிக்குல மிகலி யின்னடை
தோற்றிள மகளிரைச் சுமப்ப போன்றவே.

சேறு இளம் மரை மலர் - சேற்றில் தோன்றும் தாமரையின் இளம் பூக்கள், சிதைந்த ஆம் என - (பாதங்களுக்குத் தோற்றுக்) கெட்டன என்னும்படி, கால் தளம் பொலிதரு - பாதங்கள் (அழகோடு) விளங்குகின்ற, கன்னிமாரொடும் - இள மகளிரோடு, இளம் பிடி குலம் - இளம் பெண் யானைகள், இகலி - (நடைக்கு) மாறுபட்டு, ஏற்று - (அவர்களோடு) போரேற்று, இன் நடை தோற்று - (அவர்களின்) அழகிய நடைக்குத் தோற்று, இளம் மகளிரை - அவ்விளம் பெண்களை, சுமப்ப போன்ற - சுமந்து செல்வன போன்றன.

ஏ: ஈற்றசை.

பெண்கள் பெண் யானைகளின் மேலேறிச் செல்லுதலை, அந்த யானைகள் அப்பெண்களோடு நடையழகு குறித்து மாறுகொண்டு தோற்று, அத்தோல்விக்கு அறிகுறியாக அவர்களைச் சுமந்து செல்வது போன்று இருந்தது என ஏதுத் தற்குறிப்பேற்றமாகக் கூறுகின்றார். தோற்றவர் வென்றவரைச் சுமப்பது ஒரு வழக்கு; திருவால. திருவிளை.

57: 12, 32 பார்க்க. பெண்களின் அடிக்கும் நடைக்கும் உவமையாகக் கூறப்படுவன முறையே அவ்விரண்டுக்கும் தோற்றன என்கின்றார். மரை: மூதற்குறை.

(பி-ம்.) 1. சிறந்தவாமெனக், சிறந்ததாமெனக், சிவந்ததாமெனக்.
2. காற்றலம்.
3. இகலிமின்னிடை, இகலிமென்னடை.
4. தோற்றன மகளிரைச்; போன்றன. (29)

கொடிகளின் வருணனை

968. வேதனை வெயிற்கதிர் தணிக்க மென்மழைச்
சீதநீர் கொடுநெடுங் கொடியுஞ் சென்றன
கோதைவெஞ் சிலையவன் கோலங் காண்கிலா
மாதரி னுடங்குவ வரம்பில் கோடியே.

வேதனை - துன்பம் தருகிற, வெயில் கதிர் தணிக்க - சூரிய கிரணங்களின் வெப்பத்தைத் தணிக்குமாறு, மழை மென் சீதம் நீர்கொடு - மேகங்களின் மென்மையான குளிர்ந்த நீரைக் கொண்டு, வரம்பு இல் கோடி - அளவற்ற கோடிக்கணக்கான, நெடு கொடியும் - நீண்டுயர்ந்த துகிற் கொடிகளும், கோதை வெம் சிலையவன்-மாலை சூட்டிய கொடிய வில்லேந்திய இராமபிரானது, கோலம் - அழகிய திரு மேனியை, காண்கிலா - காணவியலாது சோர்கின்ற, மாதரின் - பெண்களைப்போல, நுடங்குவ சென்றன - துவள்வனவாய்ச் சென்றன.

ஏ: ஈற்றசை.

உயரத் தூக்கிப் பிடிக்கப்பெற்ற அளவிறந்த துகிற் கொடிகள், மேகங்களைத் தொட்டு அவற்றின் குளிர்ந்த நீரை இழுத்துக்கொண்டு, கீழே செல்வோருக்கு வெயிலின் வெப்பந் தணியுமாறு அந்நீரைச் சிதறிக்கொண்டு துவண்டசைந்து சென்றன. 'சிலையவன் கோலங் காண்கிலா மாதரின் நுடங்குவ' என உவமை கூறியதனால், அம்மாதர் வருந்தித் துவண்டு கண்ணீர் சிந்திச் செல்வதுபோலக் கொடிகளும் துவண்டு நீர் சிந்தின என்றவாறு. கொடியும் என்றதில், உம்மை இறந்தது தழுவியது. கோடி – பேரெண்.

(பி-ம்.) 1. தணிப்ப; மேலதாய்ச்.
2. சீதநீரொடு, சீதளங்கொடு; கொண்டல் சென்றெனக். (30)

பல மன்னர்கள் வெண்குடை நிழற்ற யானைகளின்மேல் செல்லுதல்

969. வெண்மதி மீச்செல மேக மூர்ந்தென
அண்ணல்வெங் கதிரவ னளவில் மூர்த்தியால்
மண்ணிடை யிழிந்தொரு வழிக்கொண் டாலென
எண்ணரு மன்னவர் களிற்றி னேகினர்.

அண்ணல் - பெருமையிற் சிறந்த, வெம் கதிரவன் - வெம்மையான கிரணங்களையுடைய சூரியன், அளவு இல் மூர்த்தி ஆய் - எண்ணிறந்த வடிவங்கொண்டவனாய், மண் இடை இழிந்து - பூமியில் இறங்கி, மேகம் ஊர்ந்தென - மேகங்களை ஊர்ந்து, வெண்மதி மீ செல - வெள்ளிய சந்திரன் (பல குடைகளின் வடிவங்கொண்டு) தனக்கு மேலே செல்ல, ஒரு வழி கொண்டால் என - ஒரு வழியாகப் பயணஞ் செய்தாற்போல, எண்ண அரு மன்னவர் - எண்ணுதற்கரிய (பெருந் தொகையினரான) அரசர்கள், களிற்றின் ஏகினர் - ஆண்யானைகளின் மேல் (வெண்குடை நிழற்றப்) போனார்கள்.

அரசர் பலர், மேலே வெண்குடை நிழற்றக் களிறூர்ந்து சென்ற காட்சியை, இல்பொருளுவமை கூறிச் சிறப்பிக்கின்றார். அரசர் ஒவ்வொருவரும் சூரியனைப் போன்ற சிறப்புடையவர் என்பார், சூரியன் பல வடிவு கொண்டு வந்தாற்போல என்றார். அரசர்கள், சூரியன்; யானைகள், மேகம்; குடைகள், பல வடிவுகொண்ட சந்திரன். சூரியன் பல அரசர்களாகி வந்ததனால், சந்திரனும் பல குடைகளாகி வந்து அவர்களுக்கு நிழல் செய்தான் என்றவாறு.

ஊர்ந்தென : செய்தென என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

(பி - ம்.) 1. மேகமூர்க்தன, மேகமூர்ந்திடு, வேதமூர்ந்தென.
3. வழிக்கொண்டானென, வழிச்செல்வானென. (31)

நாற்படைகளின் செலவு

970. தேர்மிசைச் சென்றதோர் பரவை செம்முகக்
கார்மிசைச் சென்றதோ ருவரி கார்க்கடல்
ஏர்முகப் பரிமிசை யேகிற் றெங்கணும்
பார்மிசைச் சென்றது பதாதி வேலையே.

ஓர் பரவை - ஒரு கடல், தேர்மிசை சென்றது - தேரின் மேலேறிச் சென்றது; ஓர் உவரி - மற்றொரு கடல், செம்முகம் கார்மிசை சென்றது - செம்புகர் அமைந்த முகங்களையுடைய மேகம் போன்ற யானைகளின் மேலேறிச் சென்றது; கார் கடல் - (மற்றொரு) கருங்கடல், ஏர்முகம் - அழகான முகங்களையுடைய, பரிமிசை ஏகிற்று - குதிரைகளின் மேலேறிப் போயிற்று; பதாதி வேலை - காலாட்கடலொன்று, பார்மிசை - தரையின்மேல், எங்கணும் சென்றது - எங்கும் (பரந்து) சென்றது.

ஏ: ஈற்றசை.

தேர், யானை, குதிரை, காலாள் என்ற நால்வகைப் படைகளையும் தனித்தனி ஒவ்வொரு கடலாக உருவகித்து, அவை சென்ற வகையைச் சிறப்பிக்கின்றார். பரவை, உவரி, கடல், வேலை என்பன ஒரு பொருட் பல சொல்: கார்; கடலுக்கு இயற்கை விசேடணம்.

(பி - ம்.) 1. ஓர்சிந்து.
2. கார்மிசைக் கழிந்ததோர், கலியொர் உவரியேழ் கடல், உவரிக் கார்கடல்.
3. ஏர்மிசையிவுளிமேல்; ஏகிற்றென்பரால்;
4. சென்றதோர்; வெள்ளமே; மு. பார்மிசைப் படர்ந்தது பதாதிப் பௌவமே. (32)

வாத்தியங்களின் வருணனை

971. தாரையுஞ் சங்கமுந் தாளங் கொம்பொடு
வார்விசி பம்பையுந் துடியு மற்றவும்
பேரியு மியம்பல சென்ற பேதைமைப்
பூரியர் குழாத்திடை யறிஞர் போலவே.

தாரையும் - தாரைகளும், சங்கமும் - சங்குகளும், தாளம் - கஞ்ச தாளங்களும், கொம்பொடு - ஊது கொம்புகளும், வார் விசி - வாரினால் இறுக்கப்பட்ட, பம்பையும் - பம்பைகளும், துடியும் - துடிகளும், மற்றவும் - (இவைபோன்ற) பிற தோற்கருவிகளும், பேரியும் - பேரிகைகளும், பேதைமை பூரியர் குழாத்திடை - அறிவில்லாத கீழ்மக்கள் கூட்டத்தின் நடுவே, அறிஞர் போல - சிறந்த அறிவுடையோர் (பேசாது செல்லுதல்) போல, இயம்பல சென்ற - ஒலி செய்யாது சென்றன.

ஏ: ஈற்றசை.

தாரை, சங்கு, கொம்பு - ஊது கருவிகள்; இரண்டாம் அடியுட் கூறப்பெற்றவை தோற் கருவிகளாகலின் 'வார்விசி' என்றதனைத் தனித்தனி கூட்டுக. துடி - உடுக்கை. வாச்சியங்கள் ஒலித்தல் மகிழ்ச்சிக்கு அறிகுறி; இப்போது அஃதின்மையின் அவை வாளா சென்றன. இராமபிரானைத் திருப்பி அழைத்து வரும்போது அரசனுக்குரிய எல்லாச் சிறப்புக்களுடனும் வருதற்பொருட்டுப் படை முதலிய எல்லாம் இப்போது சென்றனவெனக் கொள்க. பூரியரிடையே அறிஞர் பேசுதல் பெருமை தராது; அதுபோலத் துயரச் சூழ்நிலையில் மங்கல வாச்சியங்கள் ஒலித்தல் பொருந்தாது. பூரியரிடை அறிஞர்; "செல்விடத் தல்லதொன் றுரைத்தல் செய்கலா, நல்லறி வாளரின்" (கிட்கிந்தா : 546); "புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையுள், நன்கு செலச்சொல்லு வார்", "அங்கணத்து ளுக்க வமிழ்தற்றாற் றங்கணத்தர், அல்லார்முற் கோட்டி கொளல்" (குறள் : 719, 720). கருவிகள் ஒலியாமையைப் பின்னும் வேறொரு வகையாற் கூறுவர்; 987-பார்க்க.

(பி - ம்.) 1. தாளத்திட்டமும், தாளவிட்டமும், காளங்கொம்புகள், கொம்புந் தாளமும்.
2. வார்மிசைப், வார்விசைப், வாரிசைப், வாருற.
4. வறிஞர்போலவே, அறிஞர்போன்றவே, (33)

மாதர் வழியே செல்லுதல்

972. தாவரு நாண்முத லணிய லாற்றகை
மேவரு கலன்களை வெறுத்த மேனியர்
தேவரு மருள்கொளத் தெரியுங் காட்சியர்
பூவுதிர் கொம்பென மகளிர் போயினர்.

தேவரும் மருள்கொள - தேவர்களும் (தம்மைக் கண்டு இவர்கள் தெய்வ மாதரோ என) மயங்குமாறு, தெரியும் - விளங்குகின்ற, காட்சியர் - இயற்கையழகுடையவரான, மகளிர் - பெண்கள், தா அரு நாண் - குற்றமற்ற மங்கல நாணாகிய, முதல் அணி அல்லால் - முதன்மையான அணியையன்றி, தகை மேவரு கலன்களை - செயற்கையழகு தரும் (பிற) அணிகலன்களை, வெறுத்த மேனியர் - (பூணாது) வெறுத்தொதுக்கிய உடம்போடு, பூ உதிர் கொம்பு என - பூக்கள் உதிரப்பெற்ற பூங்கொம்புகளைப்போல, போயினர் - போனார்கள்.

மங்கல மகளிர், பிற அணிகலன்களை அணியக் காரணமாக, இன்றியமையாததாக இருப்பது மங்கல நாணே யாகலின், 'நாண் முதலணி' என்றார். அதனை அவர்கள் அகற்றல் ஒல்லாது; எனவே, அஃதொன்று தவிரப் பிற அணிகளுள் எதனையும் அவர்கள் பூணாராயினர். காரணம் வெளிப்படை. மங்கல நாணின் பெருமை: பால. 1200; சுந்தா. 1523 - பார்க்க. பூவுதிர்கொம்பென : "பூவு திர்த்ததோர் கொம்பெனப் புவிமிசைப் புரண்டாள்" (184). காட்சி - இயற்கையழகு; தகை - செயற்கையழகு,

(பி - ம்.) 1. நாண்முதறணியலால், நாண்முதற்றணியலால், நாண்முமுதணியலால், நாண்மலர்க்கைகளால்; மு. தரவருதாளமுக் தணியலாற்றசெம், தாவருமணியினுற்றகைத்த பொன்னினன்.
2. கலங்களை.
3. மருள்செய்த்தெரிந்த. (34)

குடைகளின் நிலை

973. அதிர்கடல் வையக மனைத்துங் காத்தவன்
விதிவருந் தனிக்குடை மீதி லாப்படை
பொதிவரு கவிகைமீன் பூத்த வாயினும்
கதிர்மதி நீங்கிய கங்குல் போன்றதே.

அதிர் கடல் - ஒலிக்கும் கடல் சூழ்ந்த, வையகம் அனைத்தும் காத்தவன் - உலக முழுதுங் காத்த சக்கரவர்த்தியின், விதி வரும் தனி குடை - முறைப்படி வருதற்குரிய ஒப்பற்ற பெருங்குடை, மீது இலா படை - (எல்லாவற்றிற்கும்) மேலாகக் கவிக்கப் பெறாத அப் படைத் தொகுதியானது, பொதி வரு கவிகை மீன் பூத்த ஆயினும் - நெருங்கி வருகின்ற (வேறு பல) குடைகளாகிற விண்மீன்கள்

(அங்கே) தோன்றியிருப்பினும், கதிர்மதி நீங்கிய கங்குல் போன்றது - ஒளிமிக்க சந்திரனில்லாத இரவுபோலப் பொலிவற்றிருந்தது.

'பொதிவரு கவிகை மீன்' என்றது அப்படைத்திரளோடு வரும் பல சிற்றரசர்களின் குடைகளை; அவை அளவிற் சிறியனவாதலால் அவற்றை விண்மீன்களென்றும், அவற்றினும் பெரிதாய்ச் சிறந்து விளங்கும் சக்கரவர்த்தியின் கொற்றக் குடையை மதியென்றும் உருவகித்து அக்குடை உயர்த்தப்பெறுமலே சென்றமையின், 'மதிநீங்கிய' என்றார். அஃதெல்லாவற்றிகும் மேலாக விரித்துயர்த்தப் பெறுதல் முறையாகலின், 'விதிவரும் தனிக்குடை மீதிலா' என அதனைச் சிறப்பித்தார். விண்மீன்கள் எத்தனை பூத்துத் தோன்றினும் மதியின்றேல் இரவு சிறவாதது போல, அரசர் பலருடைய குடைகள் மிகப் பலவாயிருப்பினும் சக்கரவர்த்தியின் பெருங்குடையின்மையாற் படை பொலிவிழந்திருந்தது என்பது கருத்து.

(பி - ம்.) 2. விதிவருமதிக், விதிதருந்தனிக்.
3. பொதிதரு, பொதிபல, பொதிவரும், பொதிமலர்; கவிகைமீப், கவிகைகள், கவிகையிற்; பூத்ததாகிலும்.
4. போன்றவே. (35)

சேனையின் மிகுதி

974. செல்லிய செலவினுற் சிறிய திக்கெனச்
சொல்லிய சேனையைச் சுமந்த தேயெனின்
ஒல்லியல் வேலைநீ ருடுத்த பாரையோர்
மெல்லிய லென்றவர் மெய்ய ரேகொலாம்.

செல்லிய செலவினுல் - (பரவிச்) சென்ற (தன்) போக்கினுல், திக்கு சிறிய என சொல்லிய - திகந்தங்களும் சிறியன (தமக்குப் போதா) என்று வெளிப்படுத்திய, சேனை - அப் பெரும்படையை, சுமந்ததே எனின் - (பூமி) தாங்கிற்றேயானுல், ஒல் இயல் வேலை நீர் உடுத்த - ஒலி பொருந்திய கடல் நீரை (ஆடையாக) உடுத்த, பாரை - இப் பூமியை, ஓர் மெல்லியல் என்றவர் - ஒரு பெண் (நிலமகள்) என்று சொல்வோர், மெய்யரே கொல் - உண்மை உரைப்பவர் ஆவரோ? (ஆகார்).

ஆம்: அசை. திகந்தங்களெல்லாம் தமக்கு இடம் போதா என்னும்படி உள்ள இப் பெரும் படையைத் தாங்கும் ஆற்றலுடைய பூமியை 'நிலமகள்' எனப் பெண்ணுகக் கூறுவது பொருந்தாது என்னும் முகத்தால் படையின் மிகுதியைச் சிறப்பிக்கின்ருர்.

செல்லிய - சென்ற. சொல்லிய என்றது, கிளவாததனைக் கிளந்ததுபோலச் சொல்லிய வழுவமைதி. மெல்லியல் - அபலை யென்னும் வடசொற் பொருள் கொண்டது. பால. 888; கலிங். 348 - இப் பாடலோடு ஒப்பு நோக்கத் தகும்.

(பி - ம்.) 1. சொல்லிய, சிறிய திங்கெனச்.
2. சுமந்ததேயினி, சுமந்ததேயெனின்.
3. ஓல்லொலி.
4. மெய்யரோ, மெலியரே. (36)

பெண்களின் நகிலின் வருணனை

975. தங்குதண் சாந்தில கலவை சாத்தில
குங்குமங் கோட்டில கோவை முத்தில
பொங்கிளங் கொங்கைகள் புதுமை வேறில
தெங்கிள நீரெனத் தெரிந்த காட்சியே.

பொங்கு இளம் கொங்கைகள் - பூரித்த இளமையான நகில்கள், தங்கு தண் சாந்து இல - (தம்மீது அப்புதலால்) தங்குதற்குரிய குளிர்ந்த சந்தனக் குழம்பில்லாதனவாயும், கலவை சாத்தில - (பிற நறுமணக்) கலவையும் அப்பப் பெருதனவாயும், குங்குமம் கோட்டு இல - குங்குமக் குழம்பால் (தொய்யில்) எழுதப் பெருதனவாயும், கோவை முத்து இல - முத்து வடங்கள் பூணுதனவாயும், வேறு புதுமை இல - வேறு வகையான புதுமை (செயற்கையழகு) ஒன்றும் இல்லாதனவாயும், தெங்கு இளநீர் என - தென்னையின் செவ்விளநீர் போல, காட்சி தெரிந்த - இயற்கையழகுடன் விளங்கின.

மகளிர், மங்கலநாணெழிந்த பிற அணிகலன் ஏதுமின்றிச் சென்றனர் (972) என்றவர், இங்கே அம்மகளிரின் நகில்களைத் தனியே விதந்தது, அவை எவ்வகைச் செயற்கையழகுமின்றி இயற்கையாக 'இளநீர்' என்பதற்குப் பொருந்த இருந்தன என்கின்றார்.

குங்குமம் கோட்டுதல் - குங்குமக்குழம்பால் தொய்யில் எழுதல். கோவை முத்து - கோக்கப்பட்ட முத்து; முத்து வடம். மகளிர் கொங்கைக்கு இளநீரை உவமை கூறுதல் மரபு; "செம்மாந்த தெங்கின் இளநீரையோர் செம்மல் நோக்கி, அம்மா இவை மங்கையர் கொங்கைக ளாகு மென்ன" (பால. 982).

(பி - ம்.) 1. தங்குபூண்; சேர்ந்தில, சந்தகில்சீ கலவை சார்த்தில; சேர்கில, சாந்தில; மு. தங்குசெஞ் சாந்தகிற் கலவை சார்கில.
2. கொட்டில, கோட்டிய.
4. தெரிந்த காட்சிய, தெளிந்த காட்சியே. (37)

இளைஞர்களின் தோள் வருணனை

976. இன்றுணை யவர்முலை யெழுது சாந்தினும்
மன்றலந் தாரினு மறைந்தி லாமையால்
துன்றிளங் கொடிமுதற் றூறு நீங்கிய
குன்றெனப் பொலிந்தன குவவுத் தோள்களே.

குவவு தோள்கள் - (மைந்தரின்) திரண்ட தோள்கள், இன் துணையவர் முலை எழுது சாந்தினும் - (தம்) இனிய வாழ்க்கைத் துணை யான மனைவியரின் தனங்களில் (தொய்யில்) எழுதிய குங்குமச் சாந்து படிதலாலும், மன்றல் அம் தாரினும் (தாம் அணியும்) மணம் பொருந் திய அழகிய மாலையாலும், மறைந்து இலாமையால் - (இயற்கைத் தோற்றம்) மறைக்கப்பட்டில்லாமையால், துன்று இளம் கொடிமுதல் - அடர்ந்த இளங்கொடிகள் முதலான, தூறு நீங்கிய - புதர்கள் நீங்கப் பெற்ற, குன்று என - மலைகள்போல, பொலிந்தன - (இயற்கையாக) விளங்கின.

ஏ! ஈற்றசை.

முன் கவியில் மகளிரின் தனங்களைக் கூறியதுபோல, இங்கே ஆட வர்களின் தோள்களைக் கூறுகின்றார். ஆடவர்களும், வருத்தத்தால் தம் மனைவிமாரைக் கூடுதல் இன்மையின் தாம் மகிழ்ச்சிக்குரிய மாலை பூணாமலும், மனைவியரின் சாந்து தோயப்பெறாமலும், தம் தோள்கள் இயற்கைப் பொலிவோடுஃவிளங்குமாறு இருந்தனர் என்கின்றார்.

முந்திய பாடல் இல்லாத பிரதியில் இந்தப் பாடலும் இல்லை.

(பி - ம்.) 1. இன்றுணைவியர்; சாந்தினம்.
2. தாரினம்.
3. கொடிமுகிற்றாக, முதற்றாசு; நீங்கின, நீக்கிய. (38)

பெண்களுடைய கண்களின் வருணனை

977. நறையறு கோதையர் நாட்செய் கோலத்தின்
துறையற வஞ்சனந் துறந்த நாட்டங்கள்
குறையற நிகர்த்தன கொற்ற முற்றுவான்
கறையறக் கழுவிய கால வேலையே.

நறை அறு கோதையர் - நறுமணமற்ற கூந்தலையுடைய மகளிர், நாள் செய் கோலத்தின் துறை அற - நாள்தோறும் (தாம்) செய்து கொள்ளும் அலங்கார வகைகளைக் கைவிட்டதனால், அஞ்சனம் துறந்த நாட்டங்கள்-மையைப் பெறாது நீத்த(அவர்களுடைய) கண்கள், கொற்றம் முற்றுவான் - வெற்றியை முடித்த ஒருவன், கறை அற கழுவிய - குருதிக்கறை போகுமாறு கழுவிய, காலன் வேலை - யமன் போன்ற (கொலைத் தொழிலையுடைய) வேலை, குறை அற நிகர்த்தன - முழுதும் ஒத்திருந்தன.

ஏ ! அசை.

மகிழ்ச்சி யின்மையால் மகளிர் தம் நாளொப்பனையை முழுதும் கைவிட்டிருந்தமை கூறுகின்றார். கூந்தலுக்கு மணம் அகிற்புகை, மயிர்ச்சாந்து, மலர் முதலியவற்றால் உளதாவது. கண்களுக்கு மை தீட்டுதலும் மகிழ்ச்சிக் காலத்து நாள்தோறும் உளதாவது. இப்போது

அவற்றுள் ஒன்றும் இல்லை. வடிவத்தாலும் தொழிலாலும் வேல் மகளிர் கண்களுக்கு உவமை. மை திட்டிய கண், கறை படிந்த வேல்; அஃதில்லாத கண், கறை கழுவிய வேல்.

கொற்றம் முற்றுவான் - வெற்றி கொண்டவன்; முற்றுவான்: வினையாலணையும் பெயர். "செங்கயல் நெடுங்கண் அஞ்சன மறப்ப," "மையிருங் கூந்தல் நெய்யணி மறப்ப" (சிலப். 4 : 53, 56) என்பவற்றை இங்கே ஒப்புநோக்குக. இவைபோலக் கண்ணகியைப் பற்றிக் கூறியன பிறவும் (சிலப். 4 : 47-57) இங்கே மகளிரைப்பற்றி வந்தனவும் இனி வருவனவுமாகியவற்றோடு ஒப்பிடத் தகும்.

(பி - ம்.) 1. நடைசெய்.
2. துறைவரும், துறைதெரி, துறையறி; துறந்த வாட்கண்கள்.
3. குறைவற.
4. கழுவின; காலவேலின. (39)

மாதர்கள் மேகலையும் சிலம்பும் அணியாமை

978. விரிமணி மேகலை விரவி யார்த்தில
தெரிவைய ரல்குற்று ரொலியி றேரெனப்
பரிபுர மார்த்தில பவளச் சீறடி
அரியின மார்த்திலாக் கமல மென்னவே.

தெரிவையர் அல்குல் - மகளிரின் அல்குல் தடங்கள், தார் ஒலி இல் தேர் என - மாலையான மணிகளின் ஓசை இல்லாத தேரைப்போல, விரி மணி மேகலை விரவி ஆர்த்தில - விரிந்த மணிகளின் கோவையாலான மேகலையணி பூண்டு ஒலிக்கப்பெற்றில்வாயின; பவளம் சிறு அடி - (தெரிவையரின்) பவளம் போன்ற செந்நிறம் பொருந்திய சிறிய பாதங்கள், அரி இனம் ஆர்த்து இலா கமலம் என்ன - வண்டின் கூட்டம் ஒலித்தலில்லாத தாமரை மலர்களைப்போல, பரிபுரம் ஆர்த்தில - சிலம்புகள் (பூண்டு) ஒலிக்கப் பெறுவாயின.

மகளிர் இடையணியும் காலணியும் அணியவில்லை என்பதனை ஒவ்வோர் உவமையோடு கூறி விளக்குகின்றார். தேர்த்தட்டு அல்குலுக்கு உவமை கூறப்படுவதாகலின் தேரையும், தாமரை மலர் அடிகளுக்கு உவமை கூறப்படுவதாகலின் அதனையும் ஒவ்வொரு விசேடணத்தோடு குறித்தார். மணிகளால் இயன்ற எட்டுக் கோவை யுடையது மேகலையாகலின், 'விரி மணிமேகலை' என்றார்.

விரவுதல் - பூணுதல். தார் - மணிமாலை. கமலம், ஆகுபெயராய் அதன் மலரை உணர்த்திற்று. தெரிவையர் என்றது பருவங் குறியாது 'மகளிர்' என்பதுகுறித்து நின்றது. "அஞ்செஞ் சீறடி அணிசிலம் பொழிய, மென்றுகி லல்குல் மேகலை நீங்க" (சிலப். 4 : 47 - 8).

975, 976-ஆம் பாடல்கள் இல்லாத பிரதியில் இந்தப் பாடலும் இல்லை.

(பி - ம்.) 1. விரியணிர் விரவியார்க்கில, விரைவினார்க்கில; மு. விரிமணிப்பகுதி மேகலைகளார்த்தில.
2. அல்குலான்; ஒலியிற்றேரெனப்.
3. பரிபுரம் ஆர்க்கில.
4. அரியினம் ஆர்க்கிலாக், ஆர்த்திடாக்; கமலமன்னவே. (40)

அவர்கள் மணிவடம் பூணாமை

979. மல்கிய கேகயன் மடந்தை வாசகம்
நல்கிய தரிவையர் நடுவிற் கேகொலாம்
புல்கிய மணிவடம் பூண்கி லாமையால்
ஒல்கிய வொருவகைப் பொறையு யிர்த்தவே.

மல்கிய - (வளம்) நிறைந்த, கேகயன் மடந்தை வாசகம்-கேகய வரசன் மகளான கைகேயியின் வார்த்தை, நல்கியது - உதவிசெய்தது, அரிவையர் நடுவிற்கேகொல் - பெண்களின் இடைக்கு மட்டுமே போலும்; (எவ்வாறெனில்), புல்கிய மணிவடம் பூண்கிலாமையால் - நெருங்கிய மணிமாலைகளை (அவர்கள்) அணியாமையால், ஒல்கிய - (முன்னே சுமையால்) ஒசிந்த இடைகள், ஒருவகை பொறை உயிர்த்த - (இப்போது) ஒருவகைச் சுமை குறையப் பெற்றனவாயின.

ஏ: ஈற்றசை. கைகேயியின் வார்த்தை ஒருவகை நன்மை செய்தது என்று புகழ்வார் போலப் பழிக்கின்றார். அவள் வார்த்தையாவது, 'இராமன் காடு போகவேண்டும்' என்றது. அதனால் அவளுக்கும், வேறு யார்க்கும் நன்மையில்லை; இங்கும், மகளிர் மணி பூணாது வருந்தச் செய்ததேயன்றிப் பிறிதில்லை. ஆனால் அவர்கள் மணி பூணாமையால் இடைகள் பொறை தவிர்ந்தன; அவற்றிற்கு நன்மை யாயிற்று என்றபடி. மல்குதல் - நிறைதல். நல்குதல் - உதவுதல். நடுவிற்கே: ஏகாரம், பிரிநிலை. ஆம்: அசை. ஒல்கிய: வினையாலணையும் பெயர். அரிவையர்: பருவங்குறித்ததன்று.

(பி - ம்.) 1. கைகயன் மடந்தை.
2. நல்கிய தெரிவையர்.
3. புணர்கிலாமையால்.
4. ஒல்கியதொருவகை; பொறையுயிர்க்கவே. (41)

சேனையின் வருணனை

980. கோமகன் பிரிதலிற் கோல நீத்தனள்
தாமரைச் செல்வியுந் தவத்தை மேவினள்
காமனு மருந்துயர்க் கடலின் மூழ்கினன்
ஆமெனக் கழிந்ததவ் வளவில் சேனையே.

கோமகன் பிரிதலின் - சக்கரவர்த்தி குமாரனான இராமபிரான் பிரிந்திருந்ததால், கோலம் நீத்தனள் - அழகு செய்தலை விடுத்த

வளாகிய, தாமரை செல்வியும் தவத்தை மேவினுள் ஆம் - திருமகளும் (தவக்கோலத்தோடு) தவம் மேற்கொண்டாளாம், காமனும் அருதுயர் கடலில் மூழ்கினுன் ஆம் - மன்மதனும் மீளுதற்கரிய துன்பக்கடலுள் மூழ்கிவிட்டானும், என - என்று எண்ணும்படி, அ அளவு இல் சேனே - அந்த அளவில்லாத பெரிய படை, கழிந்தது - (செல்வப் பொலிவும் காதற் கிளர்ச்சியுமின்றிச்) சென்றது.

கோமகன் இருப்பின், மகிழ்ச்சி நிலவ, மகளிரும் மைந்தரும் எல்லா நலன்களும் பொருந்த, அவர்களிடையே செல்வச் சிறப்பும் காதற் கிளர்ச்சியும் புலப்படும். இப்போது அவை யாவும் இலவாயின என்பது கருத்து.

(பி - ம்.) 1. கோமகற் பிரிதலின், மீத்துள.
2. தாமரைத் தேவியும்.
3. கடலுள்.
4. ஆமென விகழ்ந்ததவ் (42)

981. மண்ணையும் வானையும் வயங்கு திக்கையும்
உண்ணிய நிமிர்கட லொக்கு மென்பதென்
கண்ணினு மனத்தினுங் கமலத் தண்ணறன்
எண்ணினு நெடிதவ ணெழுந்த சேனையே.

அவண் எழுந்த சேனே - அங்கே எழுந்த சேனையானது, மண்ணையும் - பூவுலகத்தையும், வானையும் - விண்ணுலகத்தையும், வயங்கு திக்கையும் - விளங்கும் (எட்டுத்) திசைகளையும், உண்ணிய - அழித்தற்பொருட்டு, நிமிர் - (பிரளய காலத்தில்) பொங்கி எழுகிற, கடல் ஒக்கும் என்பது - கடலைப்போற் பெரிது என்று சொல்வது, என் - என்ன பயன்? கமலத்து அண்ணல் தன் கண்ணினும் - தாமரையில் வீற்றிருக்கும் பிரமதேவனுடைய கண் பார்வையினும், மனத்தினும்—, எண்ணினும் - (அம் மனத்துள் நிகழும்) கருத்துக்களினும், நெடிது - பெரிது (என்பதே அமைவுடையது).

ஏ : ஈற்றசை.

அளவின்மைக்குப் பொதுவாகக் கடலையும், ஊழிக்காலத்துப் பொங்கிப் பரவும் கடலையும் உவமை கூறுவர்; இச் சேனையின் பரப்புக்கு அவையும் உவமை கூறப் போதா; பிரமதேவனுடைய கண் பார்வை, மனம், எண்ணம் ஆகியவற்றினும் பெரிது என உறழ் பொருளாகக் கூறுதலே அமைவுடையதாகும் என்றது உயர்வு நவிற்சி. பிரமதேவன், வானினும் மேலேயுள்ள தன் உலகத்திலிருந்து, தன் படைப்புக்குரியனவாக எல்லா உலகத்திலும் உள்ள பொருள்களைப் பார்த்தலால் அவன் பார்வையின் விரிவு பெரிது; மனமும் கருத்தும் அவன் பார்வைக்கும் செயலுக்கும் கருவியாதலின், அவை ஒன்றினென்று விரிவுடையன. கண் - கண்பார்வை.

(பி - ம்.) 1. வாங்கு நிக்கையும்.
2. உண்ணியநீர்க்கடல்; மு. உண்ணியமிமிர்கென வோங்குமென் பதென்க. (43)

982. அலைநெடும் புனலறக் குடித்த லாற்புவி
நிலைபெற நிலைநெறி நிறுத்த லானெடு
மலையினை மண்ணுற வழுத்த லாற்றமிழ்த்
தலைவனை நிகர்த்ததத் தயங்கு தானையே.

அ தயங்கு தானை - விளங்குகின்ற அச்சேனை, அலை நெடு புனல் அற குடித்தலால் - அலைகளையுடைய மிக்க நீர் முழுதும் குடித்துவிடுதலாலும், புவி நிலைநெறி நிலைபெற நிறுத்தலால் - பூமி நிலையான ஒரு முறையிலே நிலைபெறும்படி நிறுத்துதலாலும், நெடு மலையினை மண் உற அழுத்தலால் - பெரிய மலைகளைத் தரைமட்டமாகும்படி அழுத்திவிடுதலாலும், தமிழ் தலைவனை நிகர்த்தது - தமிழுக்கு முதல்வனான அகத்திய முனிவனை ஒத்ததாயிற்று.

ஏ : ஈற்றசை.

அப்பெரும் படைக்கும் அகத்திய முனிவனுக்கும் சிலேடை வகையால் ஒப்புமை கூறுவது இக்கவி. படை தான் செல்லும் வழியிலுள்ள ஆறு, குளம் முதலியவற்றில் நீரறக் குடித்துவிடுகின்றது; பூமி சூரிய குலத்தரசரிடமிருந்து கை மாருதபடி ஒரு நிலையாக அவர்களிடமே இருக்கக் காரணமாகிறது; செல்லும் வழியிலுள்ள மலைகளை ஏறி மிதித்தலால் தரையில் அழுத்திவிடுகின்றது. அகத்திய முனிவனுக்குக் கூறும்போது, அலைநெடும் புனல் - கடல்; கடல் நீர் முழுதும் அவன் குடித்தான்; சிவபெருமான் திருமணக் காலத்தில், தேவரும் பிறருமாக அளவிறந்தோர் கயிலையில் கூடியதனுல், பூமி வடதிசையில் தாழ்ந்து, தென்றிசையில் உயர்ந்ததாக, அப்போது சிவபெருமான் கட்டளைப்படி அவன் தென்றிசை வந்து பொதிய மலையில் தங்கவே, பூமி சமமாகி ஒரு நிலைப்பட்டது; அவன் வரும் வழியில் விந்திய மலை வழிக்கிடையூருக ஓங்கி நின்றதனை அழுத்தித் தரைமட்டமாக்கினுன்; இவ்வாறு செயலால் ஒப்புமை காண்க. அகத்திய முனிவன், "தழற்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ் தந்தவன்" ஆகலின், 'தமிழ்த்தலைவன்' என்ருர்.

(பி - ம்.) 1. அலைகடல் நெடும்புனல்; குடித்தலால் அகம், அறம்.
2. நிலைபெற நிலைபெற, நிலைபெற நிலநெறி.
4. தலைவனை நிகர்த்தது, ஒத்ததத் தயங்குசேனையே. (44)

அயோத்தியின் நிலை

983. அறிஞருஞ் சிறியரு மாதி யந்தமாச்
செறிபெருந் தானையுந் திருவு நீங்கலால்
குறியவன் புனலெலாம் வயிற்றிற் கொண்டநாள்
மறிகட லொத்ததவ் வயோத்தி மாநகர்.

அறிஞரும் சிறியரும் ஆதி அந்தம் ஆக - அறிவுடைய பெரியோர் முதல் சிறியோர் ஈறாக, செறி - கலந்து நெருங்கியுள்ள, பெரும் தானையும் - அந்தப் பெரிய சேனையும், திருவும் - செல்வப்பொலிவும், நீங்கலால் - நீங்கியதனுல், அ அயோத்தி மா நகர் - பெருமை மிக்க அவ்வயோத்திமா நகரம், குறியவன் - குறுமுனிவன், புனல் எலாம் வயிற்றில் கொண்ட நாள் - நீர் முழுதும் குடித்துத் தன் வயிற்றில் அடக்கிக்கொண்ட நாளில், மறி கடல் ஒத்தது - தன் நிலை கெட்ட (வறிதாகிய) கடலைப்போல் ஆயிற்று.

சேனையோடு பரத சத்துருக்னரும் கோப்பெருந்தேவியர் முதலானோரும் நகரமக்களும் நகரைவிட்டு நீங்கிச் சென்றமையின், அது பொலிவிழந்து வெறிச்சோடிக் கிடந்த தன்மையைக் குறு முனிவனுல் நீரற வற்றிப்போன கடலை உவமையாக்கிக் கூறுகின்றார். நீர் சிறிதும் இல்லாதபோது, அது கடல் எனத் தகுதியற்றதாவது போல, அயோத்தி நகரமும் மாநகர் எனத் தகுதியற்றதாயிற்று.

மறிதல் - நிலைகெடுதல்; கடலுக்கு இயற்கையடை எனினுமாம்.

(பி - ம்.) 1. அறிவரும் சிறுவரும்; அந்தமாம், அந்தமா.
4. அவ்வயங்குமாநகர். (45)

சேனை செல்லும் வழி

984. பெருந்திரை நதிகளும் வயலும் பெட்புறு
மரங்களு மலைகளு மண்ணுங் கண்ணுறத்
திருந்தலி னயோத்தியாந்தெய்வ மாநகர்
அருந்தெரு வொத்ததப் படைசெ லாறரோ.

பெரும் திரை நதிகளும் - மிக்க அலைகளையுடைய ஆறுகளும், வயலும் - வயல்களும், பெட்பு உறு மரங்களும் - விரும்பத்தக்க மரங்களும், மலைகளும்—, மண்ணும் - வெற்றிடங்களும், கண் உற - (யாவரும் விரும்பிக்) காணுமாறு, திருந்தலின் - (வழியமைப்போரால்) திருந்தி இருந்தமையின், அ படை செல் ஆறு - அச்சேனை சென்ற வழி, அயோத்தி ஆம் - அயோத்தியாகிற, தெய்வம் மாநகர் - தெய்விகம் பொருந்திய நகரத்தின், அரும் தெரு ஒத்தது - அருமையான தெருக்களைப் போன்றிருந்தது.

அரோ: அசை.

காட்டுப் பிரதேசங்களில் பல இடையூறு உடையனவாயிருந்த வழிகளெல்லாம் படைகள் செல்லுதற்கேற்றவாறு செப்பனிட்டுத் திருத்தி அமைக்கப்பெற்று, நகரத் தெருக்களைப் போலத் தடையின்றி நடக்கத் தக்கனவாயின என்றபடி.

அவ்வத் தொழில் வல்லார் பலரைக் கொண்டு முன்னே வழிகள் திருத்தி அலங்கரிக்கப்பட்டமையை வான்மீகம் விரிவாய்க் கூறுகின்றது. காண்போருக்கு வெறுப்புத் தரும் இடையூறுள்ள இடங்களெல்லாம், இப்போது விரும்பிக் காணுமாறு திருத்தம்பெற்றன என்பார், 'கண்ணுறத் திருந்தலின்' என்றார். நகரம் பாழாயிற்று; காடு, நாடும் நகரமும் போலாயிற்று. ''பிறந்துலகம், முற்றுடைய கோவைப் பிரியாது மொய்த்தீண்டி, உற்றுறைதும் யாரும் உறையவே சின்னாளிற், புற்றுடைய காடெல்லாம் நாடாகிப் போம்'' (404) என்ற நகர மக்கள் கூற்று இங்கே நினைக்கத் தகும்.

(பி - ம்.) 1. பெட்புற.
2. மரங்களுஞ் செடிகளும் மண்ணும் மண்ணுறத்.
3. செல்வமாநகர், தேவமாநகர். (46)

சேனையின் நிலை

985. தார்கடாங் கோதைதாந் தாமந்தாந்தகை
ஏர்கடாங் கலவைதாங் கமழ்ந்தின் றென்பரால்
கார்கடா மெனமிகக் கடுத்த கைம்மலை
வார்கடா மல்லதம் மன்னன் சேனையே.

அ மன்னன் சேனை - அந்தச் சக்கரவர்த்தியின் சேனைத் திரளில், கார்கள் தாம் என - (இவை) மேகங்களே யென்னுமாறு, மிக கடுத்த - மிகவும் ஒப்புமை அமைந்த, கை மலைவார் கடாம் அல்லது - யானைகள் ஒழுக்கும் மதநீர் (கமழ்தலை) அல்லாமல், தார்கள் தாம் - ஆண்கள் அணியும் மாலைகளோ, தாமம் தாம் - அழகுக்கணியும் பெரிய மாலைகளோ, தகை ஏர் கடாம் - பெருமையும் அழகும் தருகின்ற, கலவை தாம் - நறுமணக் கலவைப் பூக்களோ, கமழ்ந்தது இன்று என்பர் - மணம் வீசுதல் இல்லை என்பர்.

ஆல், ஏ: அசை. யானையின் மதநீர் மணமுடையது; அந்த மணம் தவிர, வேறு எவ்வகை மணமும் அங்கே வீசவில்லை என்றபடி. நறுமணங் கமழ்தற்குரிய பொருள்களைக் கூறி, அவற்றின் இன்மை குறித்தலால், அவற்றை எவரும் அணியவில்லை என்பது பெறப்படும். 'கடாவும்' என்ற செய்யுமென் எச்ச ஈற்று அயல் உயிர்மெய் சென்றது. கமழ்ந்த தின்று எனற்பாலது தொகுத்தல் விகாரம் பெற்றது. கடுத்தல்-ஒத்தல். கைம்மலை - கையையுடைய மலைபோன்ற யானை. தாம் என்றது ஓசையின்பங் கருதி மீண்டும் மீண்டும் வந்தது. ஏர்கள்தாம் எனக் கொண்டு, ஏர்கள் - அழகு தரும் பொருள்கள் என ஆகு பெயராக்கி உரைத்தலுமாம்.

(பி - ம்.) 1. தார்கள்தாம்; சாந்தத்தாம்புகை, சார்ந்திலாவகை.
2. கலவைதான்; கமழ்ந்ததின்றென, மிகழ்ந்ததன்றென்பார்; மகிழ்ந்தின்றென்பரால், அமைந்ததின்றெனக்.

3. கார்கடாமெனமுகம்; அனையகைமலே.
4. வார்கடாமணந்தரும், வார்கடாமல்லவம், வார்கடாமன்னவர், வார்கடாமில்லதம். (47)

986. ஆளுலாங் கடலினு மகன்ற வக்கடல்
தோளுலாங் குண்டல முதல தொல்லணி
கேளுலா மின்னொளி கிளர்ந்த தில்லையால்
வாளுலா நுதலியர் மருங்கு லல்லதே.

கடலினும் அகன்ற - (நீர் உலாவும்) கடலினும் பெரிதான, ஆள் உலாவும் அ கடல் - ஆட்கள் மிகப் பொருந்திய அந்தச் சேனைக் கடலில், வாள் உலாவும் நுதலியர் - ஒளி பொருந்திய நெற்றியையுடைய மகளிரின், மருங்குல் அல்லது - இடையை அல்லாது, தோள் உலாவும் குண்டலம் முதல - தோள்களில் வந்து பொருந்தும் குண்டலம் முதலான, தொல் அணி - பழமையான அணிகலன் ஒன்றும், கேள் உலாவும் மின் ஒளி கிளர்ந்தது இல்லை - (நல்ல) நிறம் அமைந்த மின்னல் போன்ற ஒளிதந்து விளங்கியதில்லை.

ஆல், ஏ! அசை.

அங்கே, ஆடவர் மகளிர் ஆகிய இருதிறத்தாருள் எவரும் எவ்வணியும் அணிந்தாரில்லை என்பது கருத்து; அணிகள் இன்மை யால் அவற்றின் ஒளியும் இல்லை. தொல் அணி என்றது வழக்கமாக அணியும்வற்றை. மகளிரின் இடையை மின்னற்கொடி என்ப ராகலின், அவை ஒளிவீசின என்றார். உலாவும் என்ற செய்யுமென் எச் சத்து ஈற்றயல் உயிர் மெய்கெட்டது. கேழ் - நிறம்; எதுகை நோக்கிக் கேள் என விகாரப்பட்டது.

(பி - ம்.) 2. சொல்லணி.
3. கேளுலாமினொளி, கேளிலாமின்னொளி, கேழிலாமின்னொளி.
4. வாளுலாம் விழியினர், கன்னியர்; மருங்குல்போலவே. (48)

987. மத்தள முதலிய வயங்கு பல்லியம்
ஒத்தன சேறலி னுரையி லாமையின்
சித்திரச் சுவர்நெடுஞ் சேனை தீட்டிய
பத்தியை நிகர்த்ததப் படையி னீட்டமே.

அ படையின் ஈட்டம் - அப் படைத் தொகுதியானது, உரை இலாமையின் - (மக்கள்) பேச்சு இல்லாமையாலும், மத்தளம் முதலிய வயங்கு பல் இயம் - மத்தளம் முதலியனவாக விளங்கும் பல வாத்தியங்களும், ஒத்தன சேறலின் - (மக்களை) ஒத்தனவாய் (ஒலியின்றிச்) செல்லுதலாலும், சுவர் தீட்டிய - சுவரில் எழுதிய, நெடு சேனை - பெருஞ்சேனையின், சித்திரம் பத்தியை நிகர்த்தது - சித்திர வரிசையை ஒத்திருந்தது.

ஏ: ஈற்றசை.

படையில் எவ்வகை ஒலியும் இல்லாமையால், சுவரில் எழுதிய சித்திரம் போன்றிருந்தது அப்படைத் தொகுதி என்கின்றார். தாரை முதலியன ஒலியாது சென்றனவென (971) முன்னும் கூறினர்; அங்கே கூறாத மத்தளம் முதலிய பிற வாத்தியங்களும் ஒலித்தில; மக்களும் பேசவில்லை; ஆதலால் சித்திரம் போன்றிருந்தது சேனை என்றார்.

(பி - ம்.) 2. உரையிலாமையால்,
3. சித்திரச் சுவரொடும்; நீட்டி ,
4. பத்தியைமிகர்த்தவப். (49)

988. ஏடறு கோதையர் விழியி னெய்தகோல்
ஊடுற வுரந்தொளைத் துயிரு ணுவகை
ஆடவர்க் கரும்பெருங் கவச மாயது
காடுறை வாழ்க்கையைக் கண்ண னண்ணலே.

கண்ணன் - யாவர்க்கும் கண்போல்வானான இராமபிரான், காடு உறை வாழ்க்கையை நண்ணல் - காட்டில் தங்கும் வாழ்க்கையை மேற்கொண்டது, ஏடு அறு கோதையர் - பூச்சூடுதலற்ற கூந்தலை யுடைய மகளிர், எய்த விழியின் கோல் - (ஆடவர்மீது) எய்த கண் களாகிற அம்புகள், உரம் ஊடு உற தொளைத்து - (ஆடவர்களின்) மார்பினூடே பாய்ந்து தொளைத்து, உயிர் உண்ணுவகை - உயிரை யுண்ணுதபடி, ஆடவர்க்கு—, அருபெரும் கவசம் ஆயது - அரிய வலிய கவசம்போல் ஆயிற்று.

ஏ : அசை.

துன்பவுணர்ச்சியால், அங்கே ஆடவரும் மகளிரும் காதற்குறிப்புச் சிறிதுமின்றிச் சென்றனரென்றபடி. முன்பெல்லாம் ஆடவர் மார்பிற் பாய்ந்து காதற்குறிப்பைத் தூண்டி வருத்தவல்ல மகளிர் கண்கள், இப்போது அத்தகைய சிறப்பு நோக்கை இழந்தன; ஆடவர்கண்க ளும் அவ்வாறே மகளிரைச் சிறப்பு நோக்கொடு நோக்கிற்றில; எனவே ஆடவர் உயிர் பிழைத்தனர். கண் - கண்பார்வை; மகளிரின் இயற்கைபற்றி அதனை அம்பாக்கிக் கூறினர். அவ்வம்பு பாய்ந்து வருத்துதற்கிடமின்றித் துன்பவுணர்ச்சி கவசம்போல் ஆகியது.

இராமபிரானைக் 'கண்ணன்' எனல்: 659, 1119, 1123; பால. 1145, பார்க்க. ஏடு, ஆகுபெயராய்ப் பூவையுணர்த்தியது.

(பி - ம்.) 1. ஏடுறு, ஏடுறை,
2. அரும்பெறற்கவசம்,
3. வாழ்க்கையக்; நண்ணவே, (50)

989. கனங்குழைக் கேகயன் மகளிற் கண்ணிய
சினங்கிடந் தெரிதலிற் றீய்ந்த வேகொலாம்
அனங்கனைங் கொடுங்கணை கடந்த வாடவர்
மனங்கிடந் துண்கில மகளிர் கொங்கையே.

கனம் குழை-கனத்த குண்டலங்களை அணிந்த, கேகயன்மகளில்-கேகயவரசன் மகளான கைகேயியிடத்தில், கண்ணிய - (ஆடவர்க்கு) உண்டான, சினம் - கடுங்கோபமாகிய தீ, கிடந்து எரிதலின் -(அவர்கள் மனத்தில்) தங்கிக் கொழுந்துவிட்டெரிதலால், அனங்கன் ஐங் கொடும் கணை - மன்மதனுடைய ஐந்தாகிய கொடிய மலரம்புகள், தீய்ந்தவே கொல் - (அத்தீயினால்) கருகிப்போயின போலும்; (எனவே) கடந்த ஆடவர் மனம்-(அவ்வாறு காமன் அம்புகளை) வென்றுவிட்ட ஆடவர்களின் மனம், மகளிர் கொங்கை கிடந்து - மகளிரின் தனங்களிலே (சென்று) தங்கி, உண்கில - (அவற்றின் அழகு முதலியவற்றை) நுகர்ந்தில வாயின.

ஏ: ஈற்றசை

ஆடவர்க்குக் கைகேயிபால் உண்டான கடுஞ்சினமாகிய தீ, அவர்கள் மனத்தில் நின்று எரிதலால், அது காமன் அம்புகளையும் தீய்த்துத் தம்மீது பாய வலியற்றனவாக்கிவிடவே, அவர்கள் மனத்திற் காம விகாரங்களுக்கு இடமே இல்லை என, ஏதுத் தற்குறிப்பேற்றமாகக் கூறுகின்றார்

கனங்குழை : கைகேயிக்கு அடை. மகளிற் கண்ணிய - மகளால் உண்டான என ஏதுப்பொருளாக்கி உரைப்பினும் ஆம். எரிதல் கூறுதலால், சினத்தீ எனலாயிற்று.

(பி - ம்.) 1. கைகயன்மடந்தை.
2. சினங்கடந்து; அரிதலிற்றீர்க்த, தீந்த.
3. கடுங்கணைக்கு, அனங்கனைந்தடுகணைக்கு; கிடந்தவாடவர், இடைத்தவாடவர், அடருமாடவர், அடர்ந்தவாடவர், இடைந்தவாடவர், மிடைந்தவாடவர். (51)

பரத சத்துருக்னர் புறப்படுதல்

990. இன்னண நெடும்படை யேக வேந்தலும்
தன்னுடைத் திருவரை சீரை சாத்தினன்
பின்னிளை யவனொடும் பிறந்த துன்பொடும்
நன்னெடுந் தேர்மிசை நடத்தன் மேயினன்.

நெடும் படை - அப்பெரும்படை, இன்னணம் ஏக - இவ்வாறு செல்லாநிற்க, ஏந்தலும் - பரதனும், தன் உடை(ய) திரு அரை - தன்னுடைய அழகிய அரையில், சீரை சாத்தினன் - மரவுரி தரித்தவனாய், பின் இளையவனொடும் - (எப்போதும் தன்னைப்) பின்பற்றும்

தம்பியாகிய சத்துருக்கனோடும், பிறந்த துன்பொடும் - (தன் மனத்தில்) தோன்றும் துன்பத்தோடும், நல் நெடு தேர்மிசை - நல்ல பெரிய தேரில் (ஏறி), நடத்தல் மேயினான் - செல்லலானான்.

படைகளை முன்னே செல்லவிட்ட பரதன், தானும் தன் தம்பியுமாக இராமபிரானைப்போலவே தவக்கோலத்திற்குரிய மாவுரி தரித்துத் தேரேறிப் புறப்பட்டான். சத்துருக்கன் பரதனை நிழல் போலத் தொடர்பவனாதலால், அவனும் சீரை சாத்தினானென்பது கூறவேண்டாதாயிற்று.

பிறந்த துன்பு - இராமபிரானைப்பற்றி நினைக்குந்தோறும் எழுந்து தோன்றும் துன்பம். சாத்தினான்: முற்றெச்சம், மேயினான் என்றது கொண்டு முடிந்தது. திருவரைச் சீரை சாத்தினான்: "திருவரைத் துகிலொரீஇச் சீரை சாத்தியே" (445) என்றார் முன்னும். ஏந்தல் - ஆடவரிற் சிறந்தோன்.

(பி - ம்.) 1. இன்னன; ஏகவேந்தனும்.
2. தன்னுடை நெடுவரைச், தன்னுடையரையினில்; சீரஞ்சாத்தினன்.

(52)

தாயர் முதலியோர் உடன்வரச் செல்லுதல்

991. தாயரு மருந்தவத் தவருந் தந்தையின்
ஆயமந் திரியரு மளவில் சுற்றமும்
தூயவந் தணர்களுந் தொடர்ந்து சூழ்வரப்
போயினன் றிருநகர்ப் புரிசை வாயிலே.

தாயரும் - தாய்மார் மூவரும், அரும் தவத்தவரும் - அரிய தவசியரும், தந்தையின் ஆய-தந்தைபோல(த் தன்பால்) அன்புடைய, மந்திரியரும் - மந்திரிமாரும், அளவு இல் சுற்றமும் - அளவில்லாத சுற்றத்தவரும், தூய அந்தணர்களும்—, தொடர்ந்து சூழ்வர - (தன்னைப்) பின் தொடர்ந்து சுற்றிலும் வர (போய்), திருநகர் - செல்வமிக்க நகரத்தின், புரிசை வாயில் போயினன் - மதில்வாயிலை அடைந்தான்.

ஏ: ஈற்றசை.

தாயர் - பட்டத்துத் தேவியர் மூவர். தந்தையின் ஆயம் எனப் பிரித்துத் தந்தையின் மந்தணத்துக்குரியவரான என்றலுமாம். சுற்றம் - ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்பவற்றுள் மந்திரிமாரொழிந்த ஏனையோர் எனலுமாம். வாயில் போயினான் - வாயிலைக் கடந்து போனான் என்றுமாம்.

(பி - ம்.) 1. நெடுந்தவத்தவரும்; தாதையின்; தன்னிலே.
2. மந்திரிகளும்; அளவிச்.
3. சூழ்தரப்.
4. புரிசை நீங்கியே, புறத்துவாயிலே.

(53)

கூனியைக் கண்டு கொல்லச்சென்ற சத்துருக்கனைப் பரதன் விலக்கல்

992. மந்தரைக் கூற்றமும் வழிச்செல் வாரொடும்
உந்தியே போதல்கண் டிளவ லோடிப்போய்
அந்தரத் தேற்றுவா னழன்று பற்றலும்
சுந்தரத் தோளவன் விலக்கிச் சொல்லுவான்.

மந்தரை கூற்றமும் - மந்தரையாகிய யமனும், வழி செல்வாரொடும் - வழிநடந்து செல்லும் அக்கூட்டத்தாரோடு, உந்தியே போதல் - உந்திக்கொண்டே நடந்து போதலை, இளவல் கண்டு - சத்துருக்கன் கண்டு, அழன்று - சினங்கொண்டு, ஓடி போய் - (அவளருகில்) ஓடிப்போய், அந்தரத்து ஏற்றுவான் - (அவளை) வானில் ஏற்றக் கருதி, பற்றலும் - பிடித்த அளவில், சுந்தரம் தோள் அவன் - அழகிய தோள்களையுடைய பரதன், விலக்கி - (சத்துருக்கனை) விலக்கி, சொல்லுவான் - (அவனுக்குச்) சொல்லுகின்றான்.

மந்தரை - கூனி. இராமபிரான் வனம் போகவும், சக்கரவர்த்தி உயிர்போகவும் காரணமாயிருந்தமையின் அவளைக் கூற்றம் என்றார். அத்தகையவள் நாணாது பலரிடையே நடந்து சென்ற இழிவு தோன்ற, கூற்றமும் என இழிவு சிறப்பும்மை தந்து கூறினார். கூனியாகலின் அவள் நடையை உந்தும் நடை என்றார். அந்தரத்து ஏற்றுதல் - கொல்லுதல்; அவளைப் பந்துபோலத் தூக்கி ஆகாயத்தில் எறிதல் என்ற குறிப்பும் தோன்றவைத்தார்; எற்றுவான் என்ற பாடமும் உளது.

(பி - ம்.) செல்வாருடன்.
2. உந்தினள், முந்தினள், உய்ந்தனள்; இளவலோடியே, இளவலோடியார்த்து, இளவல் பொங்கியார்த்து; மு. உந்தினனவள்கண்டிமிக்தங் கோடியே.
3. அந்தரத்தெற்றுவான்; அழன்று பார்த்தலும்.
4. சொல்லினன். (54)

993. முன்னையர் முறைகெட முடித்த பாவியைச்
சின்னபின் னஞ்செய்தென் சினத்தைத் தீர்வெனேல்
என்னையின் றென்னையன் றுறக்கு மென்றலால்
அன்னையென் றுணர்ந்திலெ னைய னேயென்றான்.

முன்னையர் முறைகெட முடித்த - (நம் மரபில்) முன்னோரின் (வழி வழி வந்த) முறை கெடுமாறு (சூழ்ந்து) முடித்த, பாவியை - (பெரும்) பாவியான கைகேயியை, சின்ன பின்னம் செய்து - சித்திரவதை செய்து, என் சினத்தை தீர்வெனேல் - என் கோபத்தை ஆற்றிக் கொண்டிருப்பேனேல், என் ஐயன் இன்று என்னை துறக்கும் - என் தலைவனான இராமபிரான் இப்போது என்னைத் துறந்துவிடுவான், என்று அல்லால் - என்று அஞ்சியே அல்லாமல், அன்னை என்று உணர்ந்திலென் - தாய் என்று கருதி (அவளைக் கொல்லாது) விட்டே

னில்லை; ஐயனே - என் ஐயா, (இதனை ஓர்ந்து பார்), என்றான் - என்று கூறினான்.

முன்னையர் முறை - மூத்தவற்குரியது அரசு என்ற முறை. கடுங் கோபத்தால் கைகேயியைப் 'பாவி' என்றான். அவளை ஒரே வீச்சில் கொல்லாமல், சித்திரவதை செய்யவேண்டுமென்ற அத்துணை மனக் கொதிப்பு அவனுக்கு. அவளை அவன் தாய் எனக் கருதிலன் என்பதும் இராமபிரானுக்கஞ்சியே அவளைக் கொல்லாது விட்டான் என்பதும், "ஆயவன் முனியுமென் றஞ்சி னேனலால், தாயெனும் பெயரெனைத் தடுக்கற் பாலதோ'' (867) என முன்னமே அவன் கூறியதனாலும் அறியலாம். சத்துருக்கன் சினந் தணிதற் பொருட்டு, 'ஐயனே!' என நயந்து கூறினான்.

(பா - ம்.) 2. சினத்தைத்தீர்வனான்.
3. என்னையின்றென்னையும், என்னையென்றென்னையன், என்னையன் றென்னையன்; துறக்குமென்னலால், துறக்குமாதலால், வெறுக்கு மென்றலால்.
4. உணர்ந்திலன்; ஐயகானென்றான், யானென்றான். (55)

பரதன் சத்துருக்கனைத் தெருட்டி அழைத்துச் செல்லல்

994. ஆதலான் முனியுமின் றைய னந்தமில்
வேதனைக் கூனியை வெகுண்டு மென்னினும்
கோதிலா அருமறை குலவு நூல்வலாய்
போதுநா மென்றுகொண் டரிதிற் போயினான்.

ஆதலால் - அவ்வாறாகலின், கோது இலா அரு மறை - குற்றமற்ற அரிய வேதமும், குலவும் நூல் - விளங்கும் நீதி நூல்களும், வல்லாய்- வல்லவனே, இன்று - இப்போது, அந்தம் இல் வேதனை கூனியை வெகுண்டும் என்னினும் - எல்லையற்ற துன்பத்துக்குக் காரணமான இக்கூனியை நாம் கோபித்தாலும், ஐயன் முனியும் - இராமபிரான் நம்மை வெறுப்பான்; நாம் போதும் என்று - நாம் போவோம் என்று சொல்லி, அரிதின் கொண்டுபோயினான் - அரிதாக அழைத்துச் சென்றான். (பரதன் என்ற எழுவாய் வருவிக்க).

'கைகேயியை நான் கொன்றிருப்பேன்; அது செய்யின் இராம பிரான் வெறுப்பான்; ஆதலால் அதனைக் கைவிட்டேன்; இப்போது இவளைக் கோபித்தால்கூட ஐயன் நம்மை வெறுப்பான் எனின் கொல்லுதல் தகுமோ? நீ நீதியெல்லாம் உணர்ந்தவனாதலால் இதனை ஓர்ந்து இச்செயலைக் கைவிடு' என்று சத்துருக்கனுக்கு அறிவுரை கூறி அவனை அழைத்துச் சென்றான். இதனால் பரதனுக்கு இராமபிரான் பக்கலில் உள்ள பக்தியின் அளவு புலப்படும். இப்போது சத்துருக்கனை விலக்காவிடின், அவன் கூனியைக் கொன்ற குற்றம் தன்னையும் சாருமாதலால், வெகுண்டும் என்னினும் என உளப்பாட்டுப் பன்மையாற் கூறினான்.

தன்னை அலங்கரித்துக்கொண்டு கூட்டத்தோடு வந்த கூனியைச் சத்துருக்கன் கண்டு அவளைச் சிட்சிக்கும்போது கைகேயி அவளுக்குப் பரிந்து வரவே அவளையும் அவன் கடிந்தானாக, அவள் அஞ்சிப் பரதனிடம் சரண் புகுந்தாளென்றும், பரதன் அவனை விலக்கினானென்றும் வான்மீகம் கூறும்.

இப்பாடல் பல பிரதிகளில் இல்லை.

(பி - ம்.) 1. முனியுமென்ற.
2. வெகுள்வதென்னினிக்; மு. வேதனைக் கூனிதன்மேல் வெகுண்டிடில்.
4. போயினர். (56)

இராமன் தங்கிய சோலையில் பரதன் தங்குதல்

995. மொய்பெருஞ் சேனையு முடிவின் மன்னரும்
கைகலந் தயலொரு கடலிற் சுற்றிட
ஐயனுந் தேவியு மிளைய வாளியும்
வைகின சோலையிற் றானும் வைகினான்.

மொய் பெரும் சேனையும் - நெருங்கிய பெரும்படைத்திரளும், முடிவு இல் மன்னரும் - அளவற்ற அரசர்களும், கைகலந்து - ஒன்று கூடி, அயல் - தன் பக்கலில், ஒரு கடலின் சுற்றிட - ஒரு கடலைப் போலச் சூழ்ந்திருக்க, (பரதன்), ஐயனும் - இராமபிரானும், தேவியும் - பிராட்டியும், இளைய ஆளியும் - இளைய சிங்கமான இலக்குவனும், வைகின - சோலையில் - (முன்னே) தங்கின சோலையில், தானும் வைகினான் - தானும் (அன்று) தங்கினான்.

இராமபிரான் காட்டுக்குப் புறப்பட்டபோது, தன்னைத் தொடர்ந்த நகரமக்களும் பிறருமான அனைவருடனும் அவன் நகர்ப்புறத்துச் சோலையொன்றில் தங்கினமையைச் சுமந்திரனால் அறிந்து, அவ்விடத்திலேயே பரதனும் அன்று தங்கினான்.

ஆளி: உவமையாகுபெயர்.

(பி - ம்.) 1. சேனையுமுரிஞாலமும், முரித்தேர்களும், முரிமாக்களும்.
2. கைகயள்தனயனைக், கைபரந்தயலொரு; கடலிற்சுற்றற.
3. இளையயானையும், அண்ணலும்.
4. வைகிய. (57)

பரதன் அங்கே பொழுது நீத்த வகை

996. அல்லினை நெடுங்கணீ ரருவி யாடினன்
கல்லினை கிழங்கொடு கனியு முண்டிலன்
வில்லணைந் துயர்ந்ததோள் வீரன் வைகிய
புல்லணை மருங்கிற்றான் பொடியின் வைகினான்.

(பரதன்), அல் - அன்றுஇரவில், கண் அணை நெடு அருவிநீர் ஆடினன் - (தன்) கண்களில் தோன்றிப் பெருகிய பேரருவி போன்ற நீரில் மூழ்கியவனாய், கல் அணை கிழங்கொடு - மலையில் உண்டாகும் கிழங்குகளோடு, கனியும் - பழங்களையுங்கூட, உண்டிலன் - உண்ணாமல், வில் அணைந்து உயர்ந்த தோள்-வில்லைத் தழுவி அழகும் திண்மையும் மிக்க தோள்களையுடைய, வீரன் வைகிய - இராமபிரான் படுத்திருந்த, புல் அணை மருங்கில் - புல் பரப்பிய படுக்கையின் பக்கத்தில், தான்—, பொடியின் வைகினான் - புழுதியில் படுத்திருந்தான்.

இராமபிரான் முன்பு தங்கிய சோலையிலே தானும் தங்கிய பரதன், அண்ணல் சயனித்த இடத்தைக் கேட்டறிந்து, அதனை மிதிக்கவும் அஞ்சி, அதன் பக்கத்தில் புழுதிபடிந்த வெறுந்தரையில் அன்றிரவைக் கழிக்கலானான். அறுசுவை உண்டியை நீத்த அவன் கிழங்கும் கனியுங்கூட உண்ணாமல் பட்டினியோடு, கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தான் என அவனது துன்ப நிலையைச் சிறப்பித்தார்; அதற்கேற்பக் கண்ணீர்ப் பெருக்கை அருவியாக உருவகித்து அவ்வருவியில் நீராடினான் எனவும், நீராடினவன் யாதும் உண்டிலன் எனவுங் கூறினார்.

ஆடினன், உண்டிலன்: முற்றெச்சங்கள்.

(பா. ம்.) 1. அல்லணைநெடுநதி.
2. உண்ணலன், உண்டனன்.
3. வில்லணைத்துயர்ந்ததோள், வில்லணைமருங்கிற்றன், மருங்கினன், மருங்கிள.
4. புல்லணை மருங்கினிற் றானும் புல்லினான். (58)

பரதன் ஊர்தியின்றி நடந்து சென்றமை

997. ஆண்டுநின் றாண்டகை யடியி னேகினான்
ஈண்டிய நெறியெனத் தானு மேகினான்
தூண்டிய தேர்களுந் துரக வெள்ளமும்
காண்டகு கரிகளுந் தொடரக் காலினே.

ஆண்டுநின்று - அவ்விடத்தினின்றும், ஆண்தகை-ஆண்மையிற் சிறந்த இராமபிரான், ஈண்டிய நெறி- (மேலே) நெருங்கிய (காட்டு) வழியில், அடியின் ஏகினான் என - காலால் நடந்துசென்றானென்று அறிந்து, தானும் - பரதனும், தூண்டிய தேர்களும் - தூண்டிச் செலுத்தும் தேர்களும், துரகம் வெள்ளமும் - அளவிறந்த குதிரைகளும், காண்தகு கரிகளும் - காணுதற்கினிய யானைகளும், தொடர - பின் தொடர்ந்துவர; காலினே ஏகினான் - காலாலே நடந்து சென்றான்.

இராமபிரான் அச்சோலையிலிருந்து புறப்பட்டுக் காட்டு வழியிற் சென்றபோது, ஊர்திகள் எவையும் இல்லாமையால் காலால் நடந்து

சென்றான். ஆதலின் பரதனும் அவ்வாறே நடந்தான். இதனாலும் அவன் இராமபிரான்பால் வைத்துள்ள பெருமதிப்புப் புலனாகும். குதிரைகளின் மிகுதிபற்றி 'வெள்ளம்' என்றார். படைகளுட் சிறந்தது யானைப் படையாகலின் 'காண்டகு கரிகள்' என விசேடித்தார்.

இதன்பின் ஒரு பிரதியில் 'பரதன் எழுச்சிப் படலம் முற்றும்' என்று காணப்படுகிறது.

(பி - ம்.) 1. எய்தினன், நோக்கினன்; அடிகொடே நடந்து.
3. தூண்டிடு; துரகராசியும், துரங்கராசியும். (59)

ஆறுசெல் படலம் முற்றும்.

12. கங்கைகாண் படலம்

கங்கையைப் பரதனும் பிறரும் காணும் படலம் என இதன் பொருள் விரியும்.

பரதன் இராமபிரானைக் காணும் பொருட்டுச் சேனையும் பரிவாரமும் சூழ அயோத்தியினின்றும் புறப்பட்டுச் சென்று கங்கையின் வடகரையை அடைந்து, அங்கிருந்து குகனது உதவியால் கங்கையைக் கடந்து தென்கரை சேர்ந்து, அங்கிருந்து போய்ப் பரத்துவாசனது ஆச்சிரமம் அடைந்தது வரை உள்ள செய்திகள் இப்படலத்துட் கூறப்படும். குகன் முதலில் பரதனை ஐயுற்றதும், பின்பு அவனது உண்மை நிலை அறிந்து வருந்தி அவனோடு மனங்கலந்த நட்புக்கொண்டு அவனுடைய பரிவாரங்களுடன் கங்கையைக் கடக்க உதவியதும் கூறும் பகுதி மிகச் சிறந்ததாகும்.

பெரும்பான்மையான அச்சுப் புத்தகங்களில் 'குகப் படலம்' என்பது இப்படலத்தின் தலைப்பாக உள்ளது.

பரதன் சேனையுடன் கங்கையை அடைதல்

(கலிவிருத்தம்)

998. பூவிரி பொலன்கழற் பொருவி ருனையான்
காவிரி நாடன்ன கழனி நாடொரீஇத்
தாவர சங்கம மென்னுந் தன்மைய
யாவையு மிரங்கிடக் கங்கை யெய்தினன்.

பூ விரி - பொலிவுமிக்க, பொலன் கழல் - பொன்னாலாகிய வீரக் கழலை அணிந்தவனும், பொரு இல் தானையான் - ஒப்பில்லாத பெரும் படையை உடையவனுமான பரதன், காவிரி நாடு அன்ன - காவிரி பாயும் வளமிக்க புனல் நாட்டைப்போன்ற, கழனி நாடு ஒரீஇ - வயல்கள் நிறைந்த கோசலநாட்டெல்லையைக் கடந்து, தாவரம்-நிலைத் திணையும், சங்கமம் - இயங்கு திணையும், என்னும் - என்று சொல்லப் படுகிற, யாவையும் - எல்லாப் பொருள்களும், இரங்கிட - (தன் நிலையைக் கண்டு) இரங்குமாறு (சென்று), கங்கை எய்தினன்-கங்கைக் கரையை அடைந்தான்.

பரதனுடைய துயரநிலை கண்டோர் எவரும் இரங்குமாறு இருந்த தென்பார், உலகில் உள்ள சர அசரப் பொருள்களாகிய எல்லாம் இரங்க என்றார். தாவரம் - ஸ்தாவரம்; நிலைத்திணை. சங்கமம்-ஜங்கமம்; இயங்குதிணை. குகன் பரதனைக் காணுமிடத்து, "கற்கனியக் கனிகின்ற

துயரானைக் கண்ணுற்ருன்'' (1026) என்கின்ருர். ஊர்தியின்றி நடந்தே சென்றதனுல், அவனை யாவரும் எளிதிற் காணவும் இரங்கவும் ஏது வாயிற்று. கோசல நாட்டுக்குக் காவிரி நாட்டை உவமை கூறுதலின், கம்பரது பிறந்தநாட்டுப் பற்றுப் புலனுகும்.

பூவிரி - பூ வேலைப்பாடு மிக்க என்றுமாம்; ''பூவரு பொலன்கழற் பொருவின் மன்னவன்'' (5).

(பி - ம்.) 1. பூவரு; பொலங்கழல்; புனைவிற்ருனையான், பொலியுந்தானையான், பொருவில்தாளினுன், பொலியுந்தாளினுன்.
2. கழனிநாடுபோய்த்.
3. தன்மையாம்.
4. யாவருமிரங்கிடக். (1)

சேனையிலுள்ள யானையின் மிகுதி

999. எண்ணருஞ் சுரும்புதம் மினத்துக் கல்லது
கண்ணகன் பெரும்புனற் கங்கை யெங்கணும்
அண்ணல்வெங் கரிமதத் தருவி பாய்தலால்
உண்ணவுங் குடையவு முரித்தன் ருயதே.

கண் அகல் - இடம் அகன்ற, பெரும் புனல் - மிக்க நீரையுடைய, கங்கை எங்கணும்-கங்கையாற்றின் எல்லாத் துறைகளிலும், அண்ணல்- பெருமை வாய்ந்த, வெம் கரி - வெவ்விய யானைகளின், மதம் அருவி பாய்தலால் - மதநீர் அருவிபோலப் பாய்ந்து (நீரோடு) கலத்தலால் (அவ்வாருகிய நீர்), எண்ண அரு சுரும்பு இனத்துக்கு அல்லது- அளவற்ற வண்டின் கூட்டத்துக்கல்லாது, உண்ணவும் குடையவும் - (மக்கள்) பருகவும் முழுகவும், உரித்து அன்று ஆயது - தகுதியற்ற தாயிற்று.

ஏ : ஈற்றசை.

இதனுல், பரதனேடு வந்த யானைகளின் மிகுதி கூறியவாருயிற்று. வண்டுகள் யானை மதத்தை விரும்பியுண்ணுமாதலால், அது கலந்த நீரையும் அவ்வாறு உண்ணும். மதநாற்றத்தாலும், தூய்மையற்றதனுலும் அந்நீர் மக்கள் பருகவும் முழுகவும் தகுதியில்லாததாயிற்று.

குடைதல் - முழுகுதல். தம் : சாரியை.

(பி - ம்.) 1. சுரும்புதன்; மு. அண்ணரிதாஞ்சுரும் பினத்திற்கல்லது.
3. அண்ணல்தன்கரி, அண்ணலங்கரி.
4. ஆயவே. (2)

குதிரைகளின் மிகுதி

1000. அடிமிசைத் தூளிபுக் கடையத் தேவர்தம்
முடிமிசைப் பரந்ததோர் முறைமை தேர்ந்திலேம்
நெடிதுயிர்த் துண்டவு நீந்தி நின்றவும்
பொடிமிசைப் புரண்டவும் புரவி யீட்டமே.

நெடிது உயிர்த்து - பெருமூச்செறிந்துகொண்டு, உண்டவும் - (நதியின் நீரை) உண்டனவும், நீந்தி நின்றவும் - (நதியில்) நீந்திக் கொண்டிருந்தனவும், பொடிமிசை புரண்டவும்-(தரையில்) புழுதியிலே புரண்டனவும் (ஆகிய), புரவி ஈட்டம் - (சேனையில் உள்ள) குதிரைகளின் கூட்டம், அடிமிசை தூளி அடைய புக்கு - (அவற்றின்) கால்களால் எழுந்த புழுதி முழுவதும் போய், தேவர்தம் முடிமிசை பரந்தது ஓர் முறைமை - தேவர்களுடைய முடிகளிலே பரவிப் படிந்ததொரு செய்தியை, தேர்ந்து இலேம் - (நேரே) அறிந்தோம் இல்லை.

ஏ : அசை.

குதிரைகள் வழிவந்த களைப்புத் தீர நீரைப் பருகிக்கொண்டும், நீந்திக்கொண்டும், தரையில் புரண்டுகொண்டும் பலவாறாக இருந்தன; ஆயினும், முன்பு அவை நடந்துவரும்போது எழுந்த தூளி வானை அளாவப் பரவி, அங்கே தேவர்களின் முடிகளில் படிந்திருக்கலாமென்று ஊகிக்கும்படி இருந்தது. அதனை நேரே கண்டறிய வியலாதன்றோ என்றது, குதிரைகளின் மிகுதியைக் குறித்தபடி. தேர்தல் - அறிதல்.

(பி - ம்.) 1. அடியுறத்தூளி மற்றடைந்த, அடிமிசைத்தூளிபுக் கடைந்த; வானவர்.
2. முடியுறப் பரந்ததோர், புகுந்ததோர், புனைந்ததோர், படர்வதோர், பாய்ந்ததோர்; தேர்ந்திலம் தோய்ந்தில, தோய்ந்திலா; நேர்தர, நோக்கித்தான்.
3. நீந்தி நின்றவை.
4. பொடியிடைப் புரண்டதப். (3)

கங்கையின் நிலை

1001. பாலையேய் நிறத்தொடு பண்டு தான்படர்
ஓலையேய் நெடுங்கட லோடிற் றில்லையால்
மாலையேய் நெடுமுடி மன்னன் சேனையாம்
வேலையே மடுத்ததக் கங்கை வெள்ளமே.

மாலை ஏய் நெடு முடி மன்னன் - மாலை பொருந்திய பெருமைமிக்க முடியணிந்த தசரத சக்கரவர்த்தியின், சேனை ஆம் வேலையே-பெரும் படையாகிய கடலே, அ கங்கை வெள்ளம் மடுத்தது - அந்தக் கங்கை நீர் முழுதும் குடித்துவிட்டது; (அதனால் அந்த நீர்) பாலை ஏய் நிறத்தொடு - பாலைப்போன்ற வெண்ணிறத்தோடு, பண்டு தான் படர் - முன்னே தான் ஓடிச் சேர்வதான, ஓலை ஏய் நெடு கடல் - ஒலியை உடைய பெருங்கடலில், ஓடிற்று இல்லை - (அன்று) ஓடிச் சேரவில்லை.

ஆல், ஏ: அசை.

இயல்பாக ஓடிக் கடலில் கலக்கும் கங்கையின் நீரை அன்று சக்கரவர்த்தியின் சேனைத்திரளாகிய மற்றொரு கடல் குடித்துவிட்ட

தனால், நீர் கடலை எட்டாததாயிற்று. நீர் ஓடிக் கடலோடு கலத்தற்கு மாறாகக் கடல் வந்து நீரைக் குடித்ததென்றது நயம். இதில் சேனை என்றது காலாட்படையைக் குறிக்குமென்பாரும் உளர். கங்கைநீர் வெண்ணிறமுடையதாதலின் 'பாலையேய் நிறத்தொடு' என்றார். நில வொளி பாய்தலால் வேறு பல ஆறுகளும் கங்கை போல் ஆயின (பால. 1041) என்றார் முன்னே. ஓல் - ஒலி.

(பி - ம்.) 2. பாலையேய்; நிறத்தொடு; ஓடிற்றில்லையாம், மீடிற்றில்லையால், மீட்டிற் றில்லையாம்; மு. ஒலவா ரியினிடை யோடுகிற்றில;
3. மாலைசேர்; வரதன் சேனையாம், பரதன்சேனையாம்.
4. மடுத்தது. (4)

சேனையின் அளவு

1002. கான்றலை நண்ணிய காளை பின்படர்
தோன்றலை யவ்வழி தொடர்ந்து சென்றன
ஆன்றவ ருணர்த்திய வக்கு ரோணிகள்
மூன்றுபத் திரட்டியா யிரத்தின் முற்றுமே.

கான்தலை நண்ணிய - காட்டை அடைந்த, காளைபின் - இராம பிரானுக்குப் பின்னே, படர் - (அக்காடு நோக்கிப்) போதலுற்ற, தோன்றலை - பரதனை, அ வழி - அப்போது, தொடர்ந்து சென்றன - பின் பற்றிச் சென்ற படைகள், ஆன்றவர் உணர்த்திய - பெரியோர்கள் (மகாசக்கரவர்த்திக்கு உரியனவென்று) சொல்லிய, மூன்று பத்து இரட்டி ஆயிரம் அக்குரோணிகள் முற்றும் - அறுபதினாயிரம் அக் குரோணியளவாக நிறையும்.

ஏ : அசை.

மகாசக்கரவர்த்திகளுக்கு மந்திரிமாரின் எண் முதலிய பலவும் அறுபதினாயிரமெனக் கூறல் மரபாகலின், 'ஆன்றவர் உணர்த்திய' என்றார். மூன்று பத்து - முப்பது; அதன் இரட்டி-அறுபது; அதனோடு தொடர்ந்த ஆயிர - அறுபதினாயிரம். அக்குரோணி: அக்ஷௌஹிணீ என்ற வடசொல்லின் சிதைவு. பத்தின் இரட்டி - இருபது; மூன்று இருபது - அறுபது எனவுமாம். அக்குரோணி ஒன்றுக்கு அளவு: தேர் : 21870; யானை: 21870; குதிரை: 65610; (யானையைப்போல மூன்று மடங்கு); காலாள்: 109350: ஆக மொத்தம் : 218700. இதனால், தயரத சக்கரவர்த்திக்கு உரியனவாயிருந்த படைகள் முழுதும் பரதனைத் தொடர்ந்து சென்றன என்பதாயிற்று. காளை : உவமையாகு பெயராய் இராமபிரானைக் குறித்தது. தோன்றல் - ஆண்களிற் சிறந் தோன்; பரதன்.

(பி - ம்.) 1. கான்றனில், கான்றனை; பின்றொடர்.
2, சென்றவை, சென்றன.
4. மூன்று பத்தாயிரத்திரட்டி, மூன்றுபத்திரட்டியாயிரத்து. (5)

படையைக் கண்ணுற்ற குகன் செயல்

1003. அப்படை கங்கையை அடைந்த வாயிடைத்
துப்புடைக் கடலினீர் சுமந்த மேகத்தை
ஒப்புடை யண்ணலோ டுடற்ற வேகொலாம்
இப்படை யெடுத்ததென் றெடுத்த சீற்றத்தான்.

அ படை - (பரதன்பின் வந்த) அந்தப் பெரும்படையானது, கங்கையை அடைந்த ஆயிடை - கங்கையின் வடகரையை அடைந்த அப்போதே, (அதனைப் பார்த்து) துப்புஉடை (ய)-பவளத்தையுடைய, கடலின் நீர் சுமந்த - கடல் நீரை (உண்டு) தாங்கிய, மேகத்தை ஒப்பு உடை(ய)-கருமேகத்தை யொத்த, அண்ணலோடு-இராமபிரானுடன், உடற்றவே - போர் செய்வதற்கே, இ படை எடுத்தது கொல் என்று - இப்படை ஏன்று வந்துள்ளது போலும் என்று கருதி, எடுத்த சீற்றத் தான் - மேலிட்ட சினமுடையவனாய்.

இதுமுதல் ஆறு கவிகள் ஒரு தொடர்; பரதனது படையைக் கண்டு சினமூண்ட குகனுடைய எண்ணங்களையும் செயல்களையும் கூறுவன. இராமபிரான்பாலுள்ள பேரன்பால் குகன், பரதனுடைய படையைக் கண்டவுடன், 'இராமபிரானைப் பொருது அழிப்பதற்கே இப்படை வந்துளது போலும்' என்று மாறுகக் கருதிப் பெருஞ்சினங் கொண்டு, அதனைத் தடுத்து அழித்துவிட எண்ணி அதற்குரியன செய்யலானான்; அவை மேலே ஐந்து கவிகளாற் கூறப்படும்.

ஆம்: அசை. துப்புடைய என்றது கடலுக்கு அடை. துப்பு - நுகர் பொருள்களுமாம்.

(பி - ம்.) 3. அண்ணலொடுருத்தவே, அண்ணலோடமருக்கே,
4. இப்படையெனமனத். (6)

1004. குகனெனப் பெயரிய கூற்றி னாற்றலான்
தொகைமுரட் சேனையைத் துகளி னோக்குவான்
நகைமிகக் கண்கடீ நாற நாசியிற்
புகையுறக் குனிப்புறும் புருவப் போர்விலான்.

குகன் என பெயரிய - குகன் என்ற பெயரையுடைய, கூற்றின் ஆற்றலான் - எமனைப்போன்ற வலிமையுடையவன், தொகை முரண் சேனையை - தொகைப் பெருக்கும் வலியும் உடைய அப்படையை, துகளின் நோக்குவான் - தூசிபோல (அற்பமாக) மதித்து, நகைமிக - (சினத்தால் ஆன) சிரிப்புத் தோன்ற, கண்கள் தீ நாற-கண்களில் தீப் பொறி தோன்ற, நாசியில் புகை உற - மூக்கில் (அச்சினத்தீயின்) புகை உண்டாக, குனிப்பு உறும் - வளைதலுற்ற, புருவம் - புருவங்களாகிற, போர் வில்லான் - (ஒன்றையொன்று) நெருங்கிய இரு விற்களை உடையவனானான்.

இதனால், குகனிடத்துச் சினத்தால் தோன்றிய மெய்ப்பாடுகள் கூறப்பெற்றன. சினத்தைத் தீயாக உருவகித்து, புகையோடு கூடிய அத்தீ, கண்களாலும் மூக்காலும் வெளிப்பட்டது என்றார். புருவங்களை வில்லாகக் கூறி, அவை வளைந்து மேலேறி ஒன்றையொன்று நெருங்கிக் காணப்பட்டன என்றார்.

(பி-ம்.) 1. குகனெனும் பெயரினன், குகனெனப்பெயரியல், பெயருடைக், பெரியதோர்; கொற்றவேலினன்.
2. தொலையுடைச்; நோக்கிவால், நோக்கினன்.
3. தீயான்ற.
4. புகையுகக், புகைபுகக், புகைமிகக், புகைபெறக்; புருவக்கோணினன், கோளினன், கோளனன். (7)

1005. மையுற வுயிரெலா மிறுதி வாங்குவான்
கையுறு கவரயில் பிடித்த காலன்றான்
ஐயைந்நூ றுயிர முருவ மாயின
மெய்யுறு தானையான் வில்லின் கல்வியான்.

(அக்குகன்) மை உறவு உயிர் எலாம் - குற்றமுடைய உயிர்களையெல்லாம், இறுதி - (அவற்றின் ஆயுள்) முடிவில், வாங்குவான் - கவர்தற் பொருட்டு, கை உறு - கையில் பொருந்திய, கவர் அயில் - முத்தலைச் சூலத்தை, பிடித்த - தாங்கிய, காலன்தான் - எமனே, ஐ - அழகிய, ஐ நூறுயிரம் உருவம் ஆயின-ஐந்து நூறுயிரம் (ஐந்திலக்கம்) உருவம் கொண்டாற்போன்ற, மெய் உறு உடலமைப்புடைய, தானையான் - காலாட்படைகளை உடையவன்; வில்லின் கல்வியான் - விற்றொழிற் பயிற்சி மிக்கவன்.

குகன், தன் குறிப்பின்படி நடக்க வல்ல வில்வீரரான ஐந்திலக்கம் பேர்களைக் கொண்ட காலாட்படையை உடையவன்; தானும் விற்றொழிலில் வல்லவன் என்கின்றது இக்கவி. அப்படைவீரர்களில் ஒவ்வொருவனும் யமனே உருவெடுத்து வந்தாற்போன்ற தோற்றமும் ஆற்றலும் உடையவன். "ஐயிரு பத்தோடைந் தாயிர ருளரானை, செய்குநர் சிலைவேடர் தேவரின் வலியாரால்" (677) என இப்படைவீரர் தன்மையைக் குகன் கூறினமை நோக்குக. மையுறவு - குற்றம் பொருந்துதல். உயிர்களுக்கு விதித்த இறுதிக்காலத்தைப் பார்த்திருந்து, அக்காலத்திலேயே அவற்றைக் கவர்பவனாதலால், 'இறுதி வாங்குவான்' என்றார். "சாற்றுநா ளற்ற தெண்ணித் தருமம் பார்த்தேற்றும் விண்" (பால: 398): "காலனுங் காலம் பார்க்கும்" (புறநா: 41: 1) என்பன காண்க.

(பி-ம்.) 1. எய்புறும்; இறதிபாக்குவான், இறுத்துவாங்குவான்.
2. கையுறை; கவரயிற் காலனென்னும்பேர், கவரயிற்கால காலனென்ற.

3. ஐயிரண்டாயிரம், ஐயிருநூறுபத்து, ஐயிருபத்து நூறு,ஐயுறுமாறுதான், ஐயுறு மாற்றத்தான், ஐயுறு முருவினன், உருவமாயினன், உருவ மாறினன்; ஆயிரம் பெயர், அமரின்மோதுறும்.
4. மெய்யொரு தானையான். (8)

1006. கட்டிய சுரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன் விழிக்குந் தீயினன்
கொட்டிய துடியினன் குறிக்கும் கொம்பினன்
கிட்டிய தமரெனக் கிளருந் தோளினன்.

(அத்தகைய குகன்) அமர் கிட்டியது என - போர்கிடைத்தது என்று, கிளரும் தோளினன் - பூரித்த தோள்களை உடையவனாய், கட்டிய சுரிகையன் - உடைவாளை (இடையில்) கட்டி, கடித்த வாயினன் - வாயைக் கடித்து, வெட்டிய மொழியினன் - வெட்டுதல் போன்ற வீரமொழிகளைக் கூறி, விழிக்கும் தீயினன் - தீயெழ விழித்து, கொட்டிய துடியினன் - துடிப்பறையைக் கொட்டி, குறிக்கும் கொம்பினன் - ஊதுகொம்பை ஊதி.

இது, அடுத்த பாடலில் வரும் 'கூவினன்' என்பது கொண்டு முடியும். குகன், தான் போருக்கு ஆயத்தமாகித் தன் படையைக் கூட்ட முற்பட்டமை கூறுகின்றது இது. வாய் கடித்தல் - பல்லால் உதட்டைக் கடித்தல்; பற்களை நெறு நெறெனக் கடித்தலுமாம். வெட்டிய மொழி : சொல்லின் கடுமை குறித்தது. வாய் கடித்தலும் தீயெழ விழித்தலும் சினக் குறிப்பு. துடி கொட்டலும், கொம்பூது தலும் படையினரை அழைத்தற்கு. போரில் விருப்பமும், அது கிட்டிய போது தோள் பூரித்தலும் வீரர் இயல்பு; "போரென்ன வீங்கும் பொருப்பன்ன பொலங்கொ டிண்டோள், மாரன் னனையான்" (பால. 984) என்பதும் அதன் விசேடக் குறிப்பும் பார்க்க; "செருவேட்டுச் சிலைக்குஞ் செங்க ணாடவர்" (அகநா. 157:4); "போரெனிற் புகலும் புனைகழன் மறவர்" (புறநா : 31); "செருவென்ற மாற்றங் கேட்டுச் சிந்தையி னுவகை பொங்க,...வாகுவூ தரமும் பூரித்து" (வி. பா. நிவாத. 17); "பொருமாறிற் கிளர் தடந்தோள்" (திருவிளை. கடவுள். 12).

(பா - ம்.) 1. கறித்த.
2. வெட்டிய சொல்லினன்; விழிக்கட்டீயினன், விழிக்குந்தீயவன், விரிக்குந்தீயினன்
4. கிளர்ந்த. (9)

1007. எலியெலா மிப்படை யரவம் யானென
ஒலியுலாஞ் சேனையை யுவந்து கூவினன்
வலியுலா முலகினில் வாழும் வள்ளுகிர்ப்
புலியெலா மொருவழிப் புகுந்த போலவே.

இ படை எல்லாம் எலி - இப்படை முழுதும் எலிகள், யான் அரவம் - நான் (அவ்வெலிகளையுண்ணும்) பாம்பு, என உவந்து - என்று மகிழ்ச்சி கொண்டு, ஒலி உலாம் சேனையை - ஆரவாரம் பொருந்திய (தன்) படையை, கூவினான் - அழைத்தானாக, உலகினில் வாழும் - உலகத்தில் வாழ்கின்ற, வலி உலாம் - வலிமை மிக்க, வள் உகிர் புலி எல்லாம் - கூரிய நகங்களையுடைய புலிகளெல்லாம், ஒரு வழி புகுந்தபோல - ஓரிடத்தில் (வந்து) கூடினபோல.

ஏ: அசை.

இதுவும் அடுத்த பாட்டும் குளகம்.

குகன், தன் வலிமையும் வீரமும் தோன்ற, 'இவையெல்லாம் எலி; நான் நாகம்' என்றான். "எலிப்பகை, நாக முயிர்ப்பக் கெடும்" (குறள் 763); "தொகை முரண்சேனையைத் துகளின் நோக்குவான்" (1004) என முன்னும் அப்படையை இழிவாக எண்ணினான். புலியெலாம் ஒருவழிப் புகுந்தபோல, ஒருங்கடை நெடும்படை (1008) என இயையும். வீரர்களுக்குப் புலி தொழிலால் உவமை. உலாம்: செய்யுமென் எச்ச ஈற்றயல் உயிர்மெய் கெட்டது.

(பி - ம்.) 2. உழையிற், உளைவிற், ஒல்லை கூயினான்.
4. புகுந்தவென்னவே, புகுந்ததென்னவே, புகுந்தபோன்றவே. (10)

1008. மருங்கடை தென்கரை வந்து தோன்றினான்
ஒருங்கடை நெடும்படை யொல்லெனா ர்ப்பினோ
டருங்கடை யுகந்தனி லசனி மாமழை
கருங்கடல் கிளர்ந்தெனக் கலந்து சூழவே.

ஒருங்கு அடை நெடும் படை - ஒருங்கு திரண்ட பெரும்படை யானது, அரு கடையுகம் தனில் - (உயிர்கள் பிழைத்தற்கு) அரிய யுக முடிவுக் காலத்தில், அசனி மா மழை - இடியோடு கூடிய கரிய மேகங் களும், கரும் கடல் - பெரிய கடல்களும், கிளர்ந்த என - பொங்கி எழுந்தாற்போல, ஒல் என் ஆர்ப்பினோடு - பேரிரைச்சலோடு, கலந்து சூழ - (தன்னைச்) சார்ந்து சூழ்ந்துகொள்ள (அப்படையோடு), மருங்கு அடை - அருகில் உள்ள, தென்கரை வந்து தோன்றினான் - (கங்கை யின்) தென்கரையில் வந்து நின்றான்.

ஏ: ஈற்றசை.

(1007) சேனையைக் கூவினானாக, புலியெலாம் ஒருவழிப் புகுந்த போல, (1004) ஒருங்கு அடை நெடும்படை, கலந்து சூழ, வந்து தோன்றினான் என முடிக்க.

படையில் ஒலி, வீரர்களின் வீர வார்த்தைகளால் எழுவது; அவ்வொலிக்கு யுகாந்த காலத்து மேக முழக்கத்தையும், கொந்தளிக் கும் கடலின் ஆரவாரத்தையும் உவமை கூறினார்.

ஒல் : ஒலிக்குறிப்பு. பரதன் படைகளோடு தங்கியவிடம் கங்கையின் வடகரை; அதற்கு நேரெதிரே தென்கரையில் குகன் தன் படைகளோடு வந்து நின்றான்.

(பி - ம்.) 1. மருங்குடைத், தோன்றினர்.
2. ஒருங்குடன், ஒருங்குடை, ஒல்லெனார்ப்பினன்.
3. புகத்தனின், புகத்தினில், உலகத்தில்; அசனியார்மழை.
4. பரந்தெனக்; சுற்றவே. (11)

1009. தோன்றிய புளிஞரை நோக்கிச் சூழ்ச்சியின்
ஊன்றிய சேனையை யும்ப ரேற்றுதற்
கேன்றனெ னென்னுயிர்த் துணைவற் கீகுவான்
ஆன்றபே ரரசுநீ ரமைதி ராமென்றான்.

(குகன்), தோன்றிய புளிஞரை நோக்கி - (தன்னைச் சூழ) நின்ற வேடர்களாகிய படைவீரரைப் பார்த்து, என் உயிர் துணைவற்கு - என்னுயிர்த் தோழனான இராமபிரானுக்கு, ஆன்ற பேர் அரசு - (உரிமையாக) அமைந்த பெரிய இராச்சியத்தை, ஈகுவான் - (நிலையாக்கித்) தரும்பொருட்டு, சூழ்ச்சியின் ஊன்றிய சேனையை - (அரசைக் கெடுக்கும்) சூழ்ச்சியோடு வந்து (எதிரில்) ஊன்றியுள்ள சேனையை, உம்பர் ஏற்றுதற்கு ஏன்றனென் - விண்ணுலகில் ஏற்றுதற்கு அமைந்து நின்றேன்; நீர் அமைதிர் என்றான் - நீங்களும் (அதற்கு) ஆயத்தமாகுங்கள் என்றான்.

'இராமபிரான் பதினான்காண்டுகள் கழித்துத் திரும்பிவந்து அரசைக்கொள்ள இடமின்றி, இப்போதே அவனைத் தொலைக்கும் சூழ்ச்சியோடு இப்படை வந்துளதாகலின், அது மேலே செல்லாதவாறு இங்கே அதனை அழித்துவிட நான் உறுதி பூண்டுள்ளேன்; அதற்கு நீங்களும் துணையாயிருந்து செய்து முடித்தல் வேண்டும்' என்று, படைகளை அழைத்ததன் காரணத்தைக் கூறினான் குகன்.

அமைதிராம்: ஆம், அசை.

(பி - ம்.) 1. புளினரை; சுட்டினன், சுட்டினான், சுற்றினான், சூட்டினான்.
3. இன்னுயிர்த்; ஈகுவன்.
4. ஆன்றபெருரிமைகீர், ஆன்றவோராசுகீர்; அமைதிர்போர்க்கென்றான், போர்க்கென. (12)

1010. துடியெறி நெறிகளுந் துறையும் சுற்றுற
ஒடியெறி யம்பிகள் யாவு மோட்டலிர்
கடியெறி கங்கையிக் கரைவந் தோர்களைப்
பிடியெறி படவெனப் பெயர்த்துங் கூறுவான்.

துடி எறி - போர்ப்பறையை முழக்கு; நெறிகளும் - வழிகளிலும், துறையும் - நீர்த்துறைகளிலும், சுற்றுற - எப்புறமும், ஒடி எறி - (வழியின்றி) மரம் முதலியவற்றை வெட்டிச் சாய்த்துவிடு; அம்பிகள் யாவும்

ஓட்டலிர் – ஓடங்கள் எவற்றையும் ஆற்றில் செலுத்தாதீர்கள்; கடிஎறி-(பலவிடங்களிலும்) காவலை மிகுத்திடு; கங்கை இகரை வந்தோர்களை - கங்கையின் இக்கரை வந்து சேர்பவரை, பிடி—; பட எறி-(அங்கேயே அழியும்படி) வெட்டு; எனு - என்று முழக்கி, பெயர்த்தும் கூறுவான் - மேலும் கூறுவான். அவை மேலே பத்துப் பாடல்களுள் வரும்.

வடகரையில் தங்கும் படையிலுள்ளார் ஒருவரும் தென்கரை சேரவும் மேலே செல்லவும் வழியின்றிச் செய்யுங்கள் என்பான், படையினருக்கு அதனை வகைப்படுத்திக் கூறுகின்றான் குகன். தனித்தனி உள்ளவர்களையும், கூட்டத்தினையும் பார்த்து மாறிமாறிக் கூறுதலின், ஒருமையேவலும், பன்மையேவலும் மயங்கி வந்தன. துடி - உடுக்கை; இங்கே போர்ப்பறைப் பொதுவைக் கருதியது. ஓடியெறிதல் - மரம் முதலியவற்றை வெட்டி வீழ்த்தி, வழியைத் தடை செய்தல். வலை வீசுதல் எனவும், கவணெறிதல் எனவும் சிலர் கூறுவர். கடி எறி - காவலான கரையை அழிக்கின்ற; மணம் வீசுகின்ற எனப் பொருள் கொண்டு, அதனைக் கங்கைக்கு அடையாக்கிக் கூறுதலுமாம். ஆற்றைக் கடக்க ஓடம் ஒன்றும் விடுதல் கூடாது என்று கூறி, எவரேனும் நீந்தியோ, வேறு வகையாலோ இக்கரை வந்தால் அவர்களைப் பிடித்து, அங்கேயே தாக்கிக் கொன்றுவிடு என்றும் கூறினான். “ஆறு கடந்திவர் போவாரோ” (1012) என்பதும் காண்க. எறிதல் : கொட்டுதல், வெட்டுதல் என்ற பொருள்களில் வந்தது.

(பி - ம்.) 1. துடியறை; சுற்றிட.
2. ஓட்டன்மின், ஓடமோட்டலிர்.
3. கங்கையின் கரை, கங்கையிற்கரை.
4. பெயர்ந்து கூறினன். (13)

குகன் கூற்று
(கலிநிலைத்துறை)

1011. அஞ்சன வண்ணனென் னாருயிர் நாயக னாளாமே
வஞ்சனை யாலர செய்திய மன்னரும் வந்தாரே
செஞ்சர மென்பன தீயுமிழ் கின்றன செல்லாவோ
உஞ்சிவர் போய்விடி னுய்க்குக னென்றெனை யோதாரோ.

அஞ்சனம் வண்ணன் – மை போலும் நிறமுடையவனும், என் ஆர் உயிர் நாயகன் - எனது அரிய உயிருக்குத் தலைவனுமான இராமபிரான், ஆளாமே - ஆள வொட்டாதபடி, வஞ்சனையால் அரசு எய்திய மன்னரும்-வஞ்சனையினால் அரசைக் கைப்பற்றிய அரசரும்; வந்தாரே- இங்கே வந்துவிட்டாரே; செம் சரம் என்பன-(என்னுடைய) செம்மையான அம்புகள், தீ உமிழ்கின்றன செல்லாவோ - தீயைக் கக்குவனவாய் (அவர்கள் மேல்) பாயாவோ? இவர் உஞ்சு போய்விடின் - இவர்கள் (என்னைத்) தப்பிப் போய்விட்டால், எனை நாய் குகன் என்று ஓதாரோ – என்னை நாயைப் போன்ற குகன் என்று (உலகத்தார்) இழித்துக் கூறமாட்டார்களோ?

பரதன், தன் தாயைத் தூண்டி, வரம் என்ற பெயரால் அரசை வாங்குவித்திருப்பான் என்பது குகன் கருத்தாகலின், 'வஞ்சனையால் அரசெய்திய மன்னர்' என்ருன். மன்னர், வந்தார் என்று பன்மையிற் கூறியது இகழ்ச்சிக் குறிப்பு. அத்தகையவனை, நாமே அவனிருக்கும் இடம் சென்று அழித்தலினும், நமக்கு எளிதாக அவனே இங்கு வந்து விட்டான் என்பான் வந்தாரே என்ருன். ஒருவனை இழித்துக் கூறு மிடத்து, 'நாய்' எனல் இயல்பாதலின், அவ்வாறு உலகத்தார் என்னை இகழ்ந்து கூறுவர் என்ருன். நாய் நன்றி யுடையதாயினும், யார் யார் உணவு தருகிருர்களோ, அவர்களுக்கெல்லாம் வாலாட்டிப் பணிவது; அதுபோல இராமனைப் பணிந்த குகன் பரதன் கூறிய ஆசை வார்த்தை களால் அவனுக்கும் பணிந்தான் என்று உலகம் கூறுமே என்ருன். படையெடுத்து வந்துள்ள பரதனையும் அவன் படைகளையும் நான் அழித்தே தீர்வேன் என்று குகன் வீரம் பேசியவை இது முதல் பத்துப் பாடல்களில் வரும். உஞ்சு : உய்ந்து என்பதன் போலி, அம்பு தீயு மிழுமென்றது அதன் கடுமை குறித்தது; இலக்கணை; "ஆயுத வாயுமிழ் பொங்கழலால்" (தக்க. 602).

(பி - ம்.) 1. ஆளாதே.
2. வந்தாரிச்.
4. உஞ்சவர், இஞ்சிவர்; போயிடின்; நாய்குகன் என்றெமை, நாயென வென்றனை, நாயெனவென்னையும். (14)

1012. ஆழ நெடுந்திரை யாறு கடந்திவர் போவாரோ
வேழ நெடும்படை கண்டு விலங்கிடும் வில்லாளோ
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு சொல்லன்ரே
ஏழைமை வேட னிறந்தில னென்றெனை,யேசாரோ.

ஆழம் - மிக்க ஆழமும், நெடு திரை - பெரிய அலைகளும் கொண்ட, ஆறு கடந்து - இந்தக் கங்கையாற்றைக் கடந்து, இவர் போவாரோ - (என்னையும் மீறி) இவன் போய்விடுவானே? நெடுவேழம் படை கண்டு - (இவனுடைய) பெரிய யானைப் படையைக் கண்டு, விலங்கிடும் வில் ஆளோ - (அஞ்சி) விலகிவிடத்தக்க வில்லாளனே நான் ? தோழமை என்று - நீ எனக்குத் தோழன் என்று, அவர் சொல்லிய சொல் - அவ்விராமபிரான் சொல்லிய வார்த்தை, ஒரு சொல் அன்ரே - ஒப்பற்ற (மாருத) வார்த்தையன்ரே? (நான் இவர்களைப் போகவிடின்) ஏழைமை வேடன் - அறிவிலியாகிய இவ்வேடப் பயல், இறந்திலன் என்று - (இன்னும்) இறவாமல் இருக்கிருனேயென்று, எனை ஏசாரோ - (உலகத்தார்) என்னை இகழாரோ ?

"என்னை ஒரு பொருளாக மதித்து, 'நீ என்னுயிர்த் தோழன்' என்று இராமபிரான் சொன்ன அந்த ஒரு வார்த்தையின்பொருட்டு'

உயிரைக் கொடுத்தேனும் இவர்களைத் தடுத்து அழிப்பது என் கடமை; அதை நான் செய்யாவிடில், உலகத்தாரின் இகழ்ச்சிக்கு ஆளாவேன்'' என்கின்றான், இவர்களைத் தடுத்து அழிக்கும் முயற்சியில் தோல்வியுற்று மானமிழக்க நேர்ந்தால், அப்போதே உயிர்விடக் கடவேன் என்பது அவனுட்கோள். அவனோடு இராமபிரான் தோழமை பாராட்டிய வகை 688-பார்க்க. இராமபிரான் சொன்ன சொல் மாறுதவனாதலின் அவன் கூறியதை ஒரு சொல் என்றான்.

(பி - ம்.) 1. ஆழநெடும்புனல்; கங்கை கடந்திவர்; போவாராம், போவாரேல்.
2. கண்டு நடுங்கிடும், நடுங்குறும்.
3. முன்னொரு சொல்லிய சொல்லுண்டே. (15)

1013. முன்னவ னென்று நினைந்திலன் மொய்புலி யன்னானோர்
பின்னவ னின்றன னென்றில னன்னவை பேசானேல்
என்னிவ னென்னை யிகழ்ந்ததிவ் வெல்லை கடந்தன்றோ
மன்னவர் நெஞ்சினின் வேடர் விடுஞ்சரம் வாயாவோ.

இவன் - இந்தப் பரதன், முன்னவன் என்று நினைந்திலன் - (இராமன் தனக்கு) முன் பிறந்த தமையன் என்று நினைந்தானில்லை; மொய்புலி அன்னான் ஓர் பின்னவன் - வலிய புலிபோல்வானொரு தம்பி (இலக்குவன்), நின்றனன் என்றிலன் - அவனைக் காத்து நின்றானென்பதையும் எண்ணினானில்லை; அன்னவை பேசானேல் - அவற்றையெண்ணாவிடினும், என்னை இகழ்ந்தது என் - என்னை அலட்சியம் செய்தது என்ன காரணம்? இவ்வெல்லை கடந்து அன்றோ - (அது செய்யத்தக்கது, என் ஆட்சிக்குட்பட்ட) இந்த இடத்தைக் கடந்த பிறகன்றோ? வேடர் விடும் சரம் - வேடர்கள் விடும் அம்பு, மன்னவர் நெஞ்சினில் வாயாவோ - அரசர் மார்பில் (போய்ப்) பாயாவோ?

'பரதன் தனக்கு அரசு நிலைபெறும் ஆசையால், தமையனென்றும் கருதாது இராமபிரானை அழிக்கத் துணிந்தாலும், இலக்குவன் இருக்கும்போது அவ்வெண்ணம் நிறைவேறுமா என்பதை எண்ணினானோ? அது கிடக்க, நானொருவன் இங்கிருப்பதை இவன் மறந்துவிட்டானா? அன்றி என்னைப் பொருட்படுத்தவில்லையா? அரசர் உயர்ந்தோர், வேடர் தாழ்ந்தோர் என்பதனால், வேடர் விடும் அம்பு அரசர்மேல் தைக்காதோ? நான் அதைப் பார்க்கிறேன்; இவனை அழித்தே தீர்வேன்' என்கின்றான் குகன். வாய்த்தல் - குறியை அடித்தல்; இங்கே தைத்தலைக் குறித்தது. பேசானேல் என்பதன் ஈற்றில் உம்மை விரிக்க.

(பி - ம்.) 1. முன்னவனென்ன.
2. என்றிலனன்னது, பின்னவனென்று நினைந்திலனன்னது; பேசானே, பேசாரோ, பேணானேல்.

3. என்னவன்; இகழ்ந்தநிவ்வேலே, இகழ்ந்து மிவ்வெல்லே, இகழ்தநிவ் வெல்லே.
4. வேடர்கெடுஞ்சரம், வேடன் விடுஞ்சரம்; வாயாதோ. (16)

1014. பாவமு நின்ற பெரும்பழி யும்பகை நண்போடும்
ஏவமு மென்பவை மண்ணுல காள்பவ ரெண்ணுரோ
ஆவது போகவென் னுருயிர்த் தோழமை தந்தான்மேற்
போவது சேனையு மாருயி ருங்கொடு போயன்றோ.

மண் உலகு ஆள்பவர் - பூமியை ஆளக் கருதும் அரசர்கள், பாவமும்-(தம் செயலால்) உளதாகும் பாவமும், நின்ற பெரும் பழியும் (அப் பாவச் செயலால் தோன்றி) நிலைக்கும் பெரும் பழியும், பகை நண்போடும்-இவர் பகை இவர் நட்பு என்பதும், ஏவமும் - (இவை பாராது செய்தலால் வரும்) குற்றமும், என்பவை - என்ற இவற்றையெல்லாம், எண்ணுரோ - எண்ணமாட்டார்களோ? ஆ - இஃதென்ன வியப்பு! அது போக - அது கிடக்கட்டும்! என் ஆர் உயிர் தோழமை - என் அரிய உயிர்போலும் நட்புரிமையை, தந்தான் மேல் - எனக்கு அளித்த என் தலைவன்மேல், போவது - (இவன் படையெடுத்துச்) செல்வது, சேனையும் - தன் சேனையையும், அரு உயிரும் - அரிய உயிரையும், கொடுபோய் அன்றோ - அழியவிடாது காத்துக்கொண்டு போன பிறகன்றோ?

'மண்ணுசை பிடித்த மன்னர், அவ்வாசையால், எத்தகைய தீங்கையும் எண்ணுது செய்வர் போலும்; பிறர் அவ்வாறு செய்யினும் இராமபிரான் பின்பிறந்தவர் செய்யத் தகாததை இவன் செய்யத் துணிந்துவிட்டான். அத்துணிவு நிறைவெய்துவது, இவன் தன் படையோடு என்னைத் தப்பிப் போனுலன்றோ ஆகும்? நான் அவ்வாறு போகவிடேன்' என்கின்றுன். தன்னை இராமபிரான் தோழமை பாராட்டியது, அவன் நெஞ்சில் ஆழப் பதிந்துள்ளது. ஏவம் - குற்றம்; ''ஏவம் பாராய்'' (223).

(பி - ம்.) 2. என்பவை மீளுலகு, என்பதை மண்ணுலகு.
3. என்னுள் வினைத், ஆவதுவோவெனதாள்வினை.
4. போயன்றே. (17)

1015. அருந்தவ மென்றுணை யாள விவன்புவி யாள்வானே
மருந்தெனி னன்றுயிர் வண்புகழ் கொண்டுபின் மாயேனே
பொருந்திய கேண்மை யுகந்தவர் தம்மொடு போகாதே
இருந்தது நன்று கழிக்குவெ னென்கட னின்றோடே.

என் துணை - என்னுயிர்த் துணைவனுன இராமபிரான், அரு தவம் ஆள - செய்தற்கரிய தவத்தை மேற்கொள்ள, இவன் - இப் பரதன், புவி ஆள்வானே - (அரசனுகிப்) பூமியை ஆள்வானே? உயிர் மருந்து எனின் - உயிரானது அமுதம் போன்றது (விடத்தகாதது) என்ருல்,

அன்று - (எனக்கு அவ்வாறு) அன்று; (ஆதலால்) வண்புகழ் கொண்டு - (என் கடமையைச் செய்தலால்) சிறந்த கீர்த்தியைப் பெற்று, பின் மாயேனோ - பின்பு இறக்கமாட்டேனோ? (அவ்வாறே செய்வேன்); பொருந்திய கேண்மை உகந்தவரொடு - (மனத்தொடு) பொருந்திய நட்பை (என்மாட்டு) விரும்பிய என் தலைவரோடு, போகாதே இருந்ததும் நன்று - (நான்) போகாமல் இருந்ததும் நல்லதாயிற்று; என் கடன் - என் கடமையை, இன்றேயுடே கழிக்குவென் - இன்றே செய்து முடிப்பேன்.

'அரசாளப் பிறந்த என் தலைவன் இராமபிரான் அதற்கு மாறான தவம் மேற்கொள்ள, அரசுரிமை இல்லாத இவன் தவறான முறையில் அரசைக் கைக்கொண்டு ஆள்வதோ? அதற்கு நான் இடங் கொடேன்; இவனைத் தடுத்து அழித்தலாகிய என் கடமையை இப்போது செய்து, அதனாலாகும் புகழைப் பெறுவேன்; உயிர்விட நேரின் அதற்கும் பின்னிடேன்' என்கின்றான். முன்னே இராம பிராேனாடு தானும் வனத்திற் செல்ல முற்பட்டு, அது அப்பிரானால் தடையுண்டது குறித்து வருந்தியவன், இப்போது அதுவும் நல்ல தாயிற்றென்று மகிழ்கின்றான். தம்: சாரியை. கழிக்குவென் என்றதில் கு சாரியை. "மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை, பீடழிய வந்த விடத்து." (குறள், 968) என்பது இரண்டாம் அடியோடு ஒப்பிடத்தகும்.

(பிஃம்.) 1. மு. அருந்திற லென்றனை யாள விவன்புவி யாளாதே.
2. மருந்தெனலன்று, மருந்தெனன்றுயர்; வன்பழி கொண்டுபின்; மு. வருந்திற னன்றிவன் வாழுயிர் கொன்றினி மாயேனோ, வாழேனோ.
3. கேண்மையுவந்தவர், புணர்ந்தவர். (18)

1016. தும்பியு மாவு மிடைந்த பெரும்படை சூழ்வாரும்
வம்பிய ரூரிவர் வாள்வலி கங்கை கடந்தன்றோ
வெம்பிய வேட ருளீர்துறை யோடம் விலக்கீரோ
நம்பிமுன் னேயினி நம்முயிர் மாய்வது நன்றன்றோ.

தும்பியும் மாவும் மிடைந்த - யானைகளும் குதிரைகளும் நெருங்கிய, பெரும் படை சூழ்வு ஆரும் - பெரிய சேனை பொருந்திய, வம்பு இயல் தார் இவர் வாள் வலி - மணம் பொருந்திய மாலையணிந்த இப் பரதனது வாட்போர் வலிமை (பயன்படுவது), கங்கை கடந்து அன்றோ - இவன் கங்கையைக் கடந்து போனபின் அன்றோ? வெம்பிய வேடர் உளீர் - சினம் மிக்க வேடராக உள்ளவர்களே, துறை ஓடம் விலக்கீரோ - துறையிலுள்ள ஓடங்களை அகற்றீரோ? இனி - இப்போது, நம்பி முன்னே - இராமபிரானுக்கு முந்தியே, நம் உயிர் மாய்வது நன்று அன்றோ - நம் உயிர் அழிவது நல்லதன்றோ?

பரதனைப் படையோடு ஆறு கடந்து போகவிடலாகாதென் பதையே திரும்ப வலியுறுத்துகின்றான் குகன். முன்னே அம்பிகள் யாவும் ஓட்டலிர் என்றவன் அவ்வாறு ஓட்டாவிடினும், துறையில் ஓடம் ஏதும் இருப்பின் அவர்களே அதனைச் செலுத்திக்கொண்டு வருதல் கூடுமாகலின், அதற்கும் இடமின்றி அவற்றை அகற்ற விரைகின்றான். பரதனைத் தடுக்கும் முயற்சியில் வென்றாலும், தோற்று உயிரிழந்தா லும் புகழேயென்ற கருத்தைத் தன் படையினரும் கொள்ளும்படி, 'நம்முயிர் மாய்வது நன்றன்றோ' என்கின்றான்.

வாள்வலியைக் கூறினும், உபலட்சணத்தால் பிற படைவலியும் கொள்ளத் தகும். நம்பி முன்னே – நம்பிக்கு முன்னே.

(பி - ம்.) 1. நெடும்படை; சூழ்போதும்.
3. விலக்கிடுமின், விலக்கிடுவீர்;
4. மாள்வது, போவது; நன்றென்றான். (19)

1017. போன படைத்தலை வீரர் தமக்கிரை போதாவிச்
சேனை கிடக்கிடு தேவர் வரிற்சிலை மாமேகம்
சோனை படக்குடர் சூறை படச்சுடர் வாளோடும்
தானை படத்தனி யானை படத்திரள் சாயேனோ.

போன - (போர்த்துறையில்) முடிவுபோன, படைதலை வீரர்தமக்கு - நம் படையிலுள்ள சிறந்த வீரர்களுக்கு, இரை போதா - இரையா தற்குப் பற்றாத, இ சேனை கிடக்கிடு – இந்தச் சேனை கிடக்கட்டும்; தேவர் வரின்- (பரதனுக்காகத்) தேவர்களே ஒன்று திரண்டு வந்தாலும், சிலை மா மேகம் - என் கை வில்லாகிய பெரிய மேகத்தி னின்றும், சோனை பட - அம்பு மழை பொழிதலால், குடர் சூறைபட - (அப்படையிலுள்ளோர்) குடல்களெல்லாம் சிதறவும், தானை - காலாட்படை முழுதும், சுடர் வாளோடும் பட – (கையில் பிடித்த) ஒளி பொருந்திய வாட்களோடும் அழிந்தொழியவும், தனி யானை பட - சிறந்த யானைப் படையும் அழியவும், திரள் - (தேவர்களும் உட்பட) அத்திரள் முழுவதும், சாயேனோ - (நான் ஒருவனாகவே) அழித்துவிட மாட்டேனோ?

'நம்முயிர் மாய்வது நன்றன்றோ' என்றவன் தன் படைவீரரை ஊக்குவானாகி, 'நம் ஆற்றலுக்கு இப்படை சிறிது போதும் எதிர் நிற்க மாட்டாது; இதற்கு மேலும் தேவர்களே திரண்டு பரதன்பொருட்டுப் போரென்று வரினும், நானொருவனாகவே அவ்வனைவரையும் அழிக்க வல்லேன்; நீவிர் சிறிதும் அஞ்சன்மின்' என்கின்றான். போன படைத் தலைவர் என்பதற்குக் காட்டுக்குச் சென்ற படைவீரராகிய இராம இலக்குவர் எனலுமாம். இரை போதா இச்சேனையென்றது, படை வீரரை ஊக்குதற் பொருட்டு. கிடக்கிடு : வேடர் சொல் வழக்கு. வரின் என்பதன்பின் உம்மை விரிக்க. சிலை மேகம் : உருவகம்.

மேகம் என்பதற்கேற்பச் சோனை கூறினான். அம்பென்பது வருவித்து உரைக்கப்பெற்றது. சோனை - விடாமழை. குடர் 1 இறுதிப் போலி.

(பி - ம்.) 1. படைத்தொழில்.
2. வரிற்சில, வரிச்சிலையாமேகம், மாமேகம்.
4. யானைபடக்கடை, படத்தனி. (20)

1018. நின்ற கொடைக்கையெ னன்ப னுடுக்க நெடுஞ்சீரை
அன்று கொடுத்தவண் மைந்தர் பலத்தையெ னம்பாலே
கொன்று குவித்த நிணங்கொள் பிணக்குவை கொண்டோடித்
துன்று திரைக்கடல் கங்கை மடுத்திடை தூராதோ.

நின்ற கொடை கை—நிலைபெற்ற கொடை அமைந்த கையை யுடைய, என் அன்பன் உடுக்க - என் அன்புக்குரிய இராமபிரான் உடுக்குமாறு, நெடு சீரை அன்று கொடுத்தவள் மைந்தர் - பெரிய மர வுரியை முன்னே கொடுத்தவளான கைகேயியின் மகன் பரதனுடைய, பலத்தை - பெருஞ்சேனையை, என் அம்பாலே கொன்று குவித்த—, நிணம் கொள் பிணம்குவை-கொழுப்பைக் கொண்ட பிணக்குவியலை, கங்கை கொண்டு ஓடி - (இந்தக்) கங்கையாறு அடித்துக்கொண்டு போய், துன்று திரை - செறிந்த அலைகளையுடைய, கடலிடை மடுத்து - கடலிற் புகுத்தி, தூராதோ - (அக் கடலைத்) தூர்த்துவிடாதோ?

'திரள் சாயேனோ' எனத் தனதாற்றலைக் கூறிய குகன், அவ்வாறு என்னால் கொன்று குவிக்கப்படும் பிணக் குவியலைக் கங்கையீர்த்துச் சென்று கடலிடைப் புகுத்திக் கடலைத் தூர்த்துவிடும் என மற்றொரு வகையால், தான் சாய்த்தல் உறுதி என்பதனை மீண்டும் குறிக்கின்றான்.

இங்கே கைகேயியைச் சுட்டியுள்ள வகையும், அவள் மைந்தர் 'எனப் பரதனைப் பன்மையாற் சுட்டியதும் இகழச்சிக் குறிப்பு. பலம் - சேனை. மூலபலம் என்ற வழக்கும், "தன் பெரும் பலத்தைச் சார்ந்தான்" (யுத்த. 128) என்பதும் காண்க.

(பி - ம்.) 1. கொடைக்கையனன்பன், படைக்கையென்னன்பன்; நெடுஞ்சரம்.
4. துன்றுதிரக்கடல். (21)

1019. ஆடு கொடிப்படை சாடி யறத்தவ ரேயாள
வேடு கொடுத்தது பாரெனு மிப்புகழ் மேவீரோ
நாடு கொடுத்தவென் னாயக னுக்கிவர் நாமாளும்
காடு கொடுக்கில ராகி யெடுத்தது காணீரோ.

நாடு - (தான் ஆளுதற்குரிய) நாட்டை, கொடுத்த - (இவனுக்குக்) கொடுத்துவிட்ட, என் நாயகனுக்கு - என்னுயிர்த் தலைவனாகிய

இராமபிரானுக்கு, இவர் - இந்தப் பரதன், நாம் ஆளும் காடு (உம்) கொடுக்கிலர் ஆகி - வேடர் ஆளுதற்குரிய காட்டையும் (இருக்கக்) கொடுக்க மனமில்லாதவனாய், எடுத்தது காணீர் - படையெடுத்து வந்ததைப் பாரீர்; ஓ - என்ன கொடுமை! (ஆதலால்), ஆடு கொடி படை சாடி - அசைகின்ற கொடிகளையுடைய இப்படையை அழித்து (அதன் மூலம்), பார் - நாட்டை, அறத்தவரே ஆள - அறத்தின் வடிவான இராமபிரானே ஆளும்படி, வேடு கொடுத்தது எனும் - வேட்டுவச் சாதி மீட்டுக் கொடுத்தது என்று (உலகோர்) சொல்லும், இ புகழ் - இவ்வுயர்ந்த புகழை, மேவீரோ - (நீங்கள்) அடையமாட்டீர்களோ? (அடையுங்கள் என்றபடி).

பின் இரண்டடிகளில் பரதனுடைய கொடுமையைச் சுட்டி, 'இக் கொடியவனைப் படையோடு நாம் அழித்தலால், இராமபிரானுக்குரிய அரசை அவனுக்கு நிலையிட்ட பெருமையும், அதனாலாகும் புகழும் நம்மைச் சாரும்' என்று தன் படைவீரரை ஊக்குகின்றான்.

அறத்தவரே: ஏகாரம், பிரிநிலை; ஆளுதற்குரியவன் பரதனல்லன், இராமபிரானே என்பது குறித்தது. வேடர் குலத்துக்கே அது பெருமையென்பான், 'வேடு கொடுத்தது எனும் இப் புகழ்' என்றான். நாமாளும் காடு என்றது, நம்முடைய ஆட்சிக்கு உட்பட்ட காட்டில் இவன் வந்து புகுந்து செயல் செய்தற்கு நியாயம் இல்லை என்ற குறிப்பை உடையது.

(பி - ம்.) 1. *அறத்தவரே வாழ.*
2. *கொடுத்ததிப்பார்; மெய்ப்புகழ்.*
3. *கொடுத்தகம்; இவர்தாமாளக், நாமாளக், இனி நாமாளும்.*
4. *கொடுக்கிலனாகி, கொடுத்திலனாகி, கொடுத்திலராகி; எடுப்பது, அடுத்தது' மு; காடு கொடுத்தவராமிவரைக் கொலை காணிரோ.* (22)

1020. மாமுனி வர்க்குற வாகிவ னத்திடை யேவாழும்
கோமுனி யத்தகு மென்று மனத்திறை கொள்ளாமே
ஏமுனை யுற்றிடி லேழு கடற்படை யென்றாலும்
ஆமுனை யிற்சிறு கூழென விப்பொழு தாகாதோ.

மா முனிவர்க்கு உறவு ஆகி - பெருமைமிக்க முனிவர்களுக்கு நட்புடையவனாகி, வனத்து இடை வாழும் கோ-காட்டில் வாழும் என் தலைவன் (இராமபிரான்), முனிய தகும் என்று-(இச்செயலை) வெறுக்கக் கூடுமென்று, மனத்து இறை கொள்ளாமே - என் மனத்தில் சிறிதும் (ஐயம்) கொள்ளாமல், ஏ முனை உற்றிடில் - நான் அம்பு செலுத்த முனைந்தால், ஏழு கடல் படை என்றாலும் - (இப்படையேயன்றி இன்னும்) ஏழுகடல்கள் போன்ற பெரும்படையானாலும், இ பொழுது - இப்போதே (மிக விரைவில் என்றபடி), ஆ முனையில் - பசு மேய

முனைந்தால், சிறுகூழ் என- (அதன் கண்ணிற்பட்ட) சிறிதளவேயுள்ள இளம் பயிர் (அழிவது)போல, ஆகாதோ - (அப்படை முழுதும்) ஆகிவிடாதோ? (அழிந்து போகாதோ என்றபடி).

இதுகாறும் கடுஞ்சினத்தால் வீரமொழி புகன்ற குகன் மனத்துள், 'தம்பியை அழித்தலால் இராமபிரானுக்கு நம்மீது வெறுப்பு உண்டாகுமோ' என்ற அச்சம் சிறிது தோன்றினமையை முதலிரண்டடிகள் புலப்படுத்தின. அவ்வச்சம் காரணமாகச் சிறிதும் தயங்காமல் நான் முனைந்தால் எத்துணைப் பெரும்படையையும் அழித்தல் அரிதன்று என்கின்றான். பரதன் தன் மனத்தில் சிறிதும் எண்ணாமல் அம்பை விடும் போர்முனையில் வந்தடைந்தால் என்பதும் ஒன்று. சிறிதளவேயுள்ள இளம்பயிர் பசியுடைய பசுவின் கண்ணிற் பட்டால், அதன் வாயாலும் கால்களாலும் அப்பயிர் மிக விரைவில் அழிதல் உறுதி. ஆ முனையின் - ஆவின் முன்னம் என்னலும் ஆம்.

(பி - ம்.) 1. உறவாக.
2. கொள்ளாதே, கொள்ளானேல், கொள்ளேமேல், கொள்ளேனேல்.
3. முனையுற்றிட, முனையுற்றிடின், முனையுற்றிவண்.
4. ஆமுனியிற்சிறு; கூழெனவிப்பகல், கூழெனவப்பொழுது, தாளெனவப்பொழுது. (23)

சுமந்திரன் பரதனுக்குக் குகனைப்பற்றி அறிவித்தல்

1021. என்பன சொல்லி யிரும்பன மேனிய ரேனோர்முன்
வன்பணை வில்லினன் மல்லுயர் தோளினன் வாள்வீரற்
கன்பனு நின்றன னின்றது கண்டரி யேறன்ன
முன்பனில் வந்து மொழிந்தனன் மூரிய தேர்வல்லான்

வல் பணை வில்லினன் - வலிய பெரிய வில்லையுடையவனும், மல் உயர் தோளினன் - மற்போரில் வல்ல உயர்ந்த தோள்களையுடையவனும், வாள் வீரற்கு அன்பன் - வாளேந்திய வீரனான இராமபிரான்பால் மெய்யன்புடையவனுமான குகன், இரும்பு அன்ன மேனியர் ஏனோர்முன் - இரும்புபோலும் உடம்புடைய ஏனைய வேட்டுவ வீரர்களெதிரில், என்பன சொல்லி - முன் கவிகளில் கூறியவற்றைச் சொல்லிக்கொண்டு, நின்றனன்—; நின்றது - (அவ்வாறு அவன்) நின்றதை, மூரிய தேர்வல்லான் கண்டு - வலிய தேரைச் செலுத்தலில் வல்ல சுமந்திரன் பார்த்து, அரி ஏறு அன்ன முன்பனில் வந்து - ஆண் சிங்கம் போலும் வலிமையையுடைய பரதனிடம் வந்து, மொழிந்தனன் - சொல்லலுற்றான்.

சுமந்திரன் குகனை முன்னமே அறிந்தவனாகலின், அவனைப்பற்றிப் பரதனிடம் கூறுகின்றான். அவன் கூறியவை மேலே இரண்டு கவிகளிற் கூறப்படும். நிறத்தாலும் வன்மையாலும் இரும்பு வேடருடம்

புக்கு உவமை. சுமந்திரனைத் தேர்வல்லான் என்று பலவிடத்தும் கூறுவர்.

(பி - ம்.) 2. வில்லின் மருங்குயர்; வாழ்வீரற்கு.
3. அரியேறன்னான், அரியேருகும், அரியேறனான்.
4. முன்பினில்; வந்துரை முந்தினன்; முதுணர்தேர்வல்லான். (24)

(தரவு கொச்சகக் கலிப்பா)

1022. கங்கையிரு கரையுடையான் கணக்கிறந்த நாவாயான்
உங்கள்குலத் தனிநாதற் குயிர்த்துணைவனுயர்தோளான்
வெங்கரியி னேறனையான் விற்பிடித்த வேலையினான்
கொங்கலரு நறுந்தண்டார்க் குகனென்னுங் குறியுடையான்.

கங்கை இரு கரை உடையான் - கங்கையின் இரு கரைகளிலு முள்ள நிலப் பகுதியைத் (தன் ஆட்சியில்) உடையவன்; கணக்கு இறந்த நாவாயான் - அளவற்ற ஓடங்களை உடையவன்; உங்கள் குலம் தனி நாதற்கு - உங்கள் குலத்தில் ஒப்பற்ற தலைவனான இராமனுக்கு, உயிர் துணைவன் - உயிர்த் தோழன்; உயர் தோளான் - உயர்ந்த தோள்களை உடையவன்; வெம் கரியின் ஏறு அனையான் - சினமுள்ள ஆண் யானையைப் போன்றவன்; வில் பிடித்த வேலையினான்-வில்லேந்திய (படையாகிய) கடலை உடையவன் (ஆகிய சிவன்), கொங்கு அலரும் - தேன் பரவிய, நறு தண் தார் - நறுமணம் பொருந்திய குளிர்ந்த மாலையை அணிந்த, குகன் என்னும் குறி உடையான் - குகன் என்னும் பெயரை உடையவன்.

குகனால் தமக்கு உண்டாகும் உபகாரத்தை நினைப்பூட்டுவானாகி, அவன் கங்கைக் கரைக்குத் தலைவன் என்றும், படை முழுதும் கடத்துவதற்கு ஏற்றபடி பல நாவாய்களை உடையவனென்றும் முதலில் கூறினான். பிறகு, அவனுக்கும் நமக்கும் ஒருவகையில் தொடர்புளது என்பதை உணர்த்த, 'உங்கள் குலத் தனி நாதற் குயிர்த் துணைவன்' என்றான்.

(பி - ம்.) 2. உயிர்த்தோழன்.
3. வேலையான், வேளனையான்.
4. கொங்கலரும் தண்டாரான், பெயருடையான். (25)

1023. கற்காணுந் திண்மையான் கரைகாணக் காதலான்
அற்காணி கண்டனைய வழகமைந்த மேனியான்
மற்காணுந் திருநெடுந்தோண் மழைகாணு மணிநிறத்தாய்
நிற்காணு முள்ளத்தா னெறியெதிர்நின் றனனென்றான்.

மல் காணும் திரு நெடு தோள் - மற்போரிற் பயின்ற அழகிய உயர்ந்த தோள்களையும், மழை காணும் மணி நிறத்தாய் - மேகம் போன்ற அழகிய நீலநிறத்தையும் உடைய பரதனே, கல் காணும் திண்

மையான் - மலையைக் கண்டாற் போன்ற திண்மையை உடையவன்; கரை காணு காதலான் - எல்லை காணமுடியாத அன்புடையவன்; அற்கு ஆணி கண்டனைய - இருளுக்கு உரையாணி கண்டாற் போன்ற, அழகு அமைந்த மேனியான் - அழகு பொருந்திய நிறத்தை உடையவனுகிய அவன், நின் காணும் உள்ளத்தான் - உன்னைக் காணும் உள்ளமுடையவனாய், நெறி எதிர் நின்றனன் - நாம் செல்ல இருக்கும் வழியின் எதிரில் நின்ருன், என்ருன் - என்று சுமந்திரன் கூறினன்.

இருளுக்கெல்லாம் மேலான அடர்ந்த இருள் போன்ற நிறத்தான் என்பதை, 'அற்கு ஆணி கண்டனைய மேனியான்' என்ருர். 'அற்காணிற் கண்டனைய' என்ற பாடத்துக்கு, 'கண்டால் இருளைக் கண்டாற் போன்ற' என்று பொருள் கொள்க.

(பி - ம்.) 1. திண்புயத்தான்; காதலுளான்.
2. அற்காணிற் கண்டனைய, அற்காணு நிறத்தொளிரும்; மேனியினன்.
3. திரடிண்டோள்; திருநிறத்தாய், மைக்காணும் வன்மையோய். (26)

பரதன் எழுதல்

1024. தன்முன்னே யவன்றன்மை தந்தைதுணை முந்துரைத்த
சொன்முன்னே யுவக்கின்ற துரிசிலாத் திருமனத்தான்
மன்முன்னே தழீஇக்கொண்ட மனக்கினிய துணைவனேல்
என்முன்னே யவற்காண்பென் யானேசென்றெனவெழுந்தான்.

தன்முன்னே அவன் தன்மை - தன்னெதிரே (மறுகரையில்) இருந்த குகனது இயல்பை, தந்தை துணை - தன் தந்தையின் (மந்திரத்) துணைவனுன சுமந்திரன், முந்து உரைத்த - முற்படச் சொல்லிய, சொல் முன்னே - சொல் செவிப்படு முன்னே, உவக்கின்ற - மகிழ்ச்சியுற்ற, துரிசு இலாத திருமனத்தான் - குற்றமில்லாத நன்மனமுடைய பரதன் (குகனைக் குறித்து), மன் - அரசனுன இராமபிரான், முன்னே தழீஇ கொண்ட - முன்னமே ஏற்றுக்கொண்ட, மனக்கு இனிய துணைவனேல் - மனத்துக்கினிய தோழனுனல், (அவன்) என் முன்னே - என் தமையனே யாவான்; யானே சென்று - நானே (முந்திப்) போய், அவன் காண்பென் என - அவனைக் காண்பேனென்று சொல்லிக் கொண்டு, எழுந்தான் - புறப்பட்டான்.

சுமந்திரன் குகனைப்பற்றிக் கூறியவற்றுள், 'உங்கள் குலத் தனி நாதற்குயிர்த்துணைவன்; கரைகாணுக் காதலான்' என்பவை தன் மனத்தைக் குகன்பால் ஈர்த்தமையின், அவனைக் காணப் பரதன் விரைந்தான்; அவனைத் தன் முன்னவனுகவும் கருதினுன். முன் - முன்னவன்; தமையன். கம்பர் வாக்கின்படி, இராமபிரான் குகனைச் சந்தித்து நட்புக்கொள்ளு முன்னமே சுமந்திரன் பிரிந்து அயோத்தி சென்றுவிட்டானுயினும், இராமபிரான்பால் பேரன்புடைய அவன்,

அவ்வப்போது இராமபிரானைப்பற்றிய செய்திகளை அறிந்திருத்தல் கூடும். குகனை இராமபிரான் சந்தித்தபோது சுமந்திரன் உடனிருந்த தாக வான்மீகம் கூறுகின்றது. 'சொன்முன்னே உவக்கின்ற' என்றது விரைவு குறித்தது. மனக்கு - மனத்துக்கு; அத்துச்சாரியை கெட்டது.

(பி - ம்.) 1. தன் முன்னம்.
2. திருமுகத்தான்.
3. மனத்தினிய; துணைவனே.
4. காண்பன், காண்பேன். (27)

பரதனது தோற்றம் கண்ட குகன் நிலையும் செயலும்

1025. என்றெழுந்து தம்பியொடு மெழுகின்ற காதலொடும்
குன்றெழுந்து சென்றதெனக் குளிர்கங்கைக் கரைகுறுகி
நின்றவனை நோக்கினன் திருமேனி நிலையுணர்ந்தான்
துன்றுகரு நறுங்குஞ்சி யெயினர்கோன் றுண்ணென்றான்.

என்று எழுந்து - (யானே சென்றவற் காண்பேன்) என்று புறப்பட்டு, தம்பியொடும் - (தன் நிழல்போன்ற) சத்துருக்கனேடும், எழுகின்ற காதலொடும் - மேன்மேலெழும் அன்போடும், குன்று எழுந்து சென்றது என - மலை ஒன்று எழுந்து நடந்து சென்றதுபோலச் சென்று, குளிர் கங்கை கரை குறுகி நின்றவனை - குளிர்கின்ற கங்கையின் கரையோரமாக அணுகி நின்ற பரதனை, துன்று - அடர்ந்த, கரு நறு குஞ்சி - கரிய நல்ல தலைமயிரையுடைய, எயினர் கோன் - வேடர்தலைவனன குகன், நோக்கினன் - பார்த்து, திருமேனி நிலை உணர்ந்தான் - (அவனுடைய) திருமேனியின் (பொலிவிழந்து வாடிய) தன்மையைக் கண்டு, துண் என்றான் - துணுக்குற்றான்.

பரதன் குகனது பார்வையிற் படுமாறு வந்து நிற்க, குகன் அவனைக் கண்டவுடன், அவனது உடம்பின் சோர்வும் வருத்தம் தேங்கிய முகமும் குகனைத் திடுக்கிடச் செய்தன. குகன் எண்ணிய படி பரதன் இராமபிரானேடு போர் குறித்து வந்திருப்பின், அவன் சோர்ந்திரானுதலால், குகன் தான் எண்ணியது தவறென்று உணர்ந்தான்.

நோக்கினன், உணர்ந்தான் என்பன முற்றெச்சம். நோக்கினன், உணர்ந்தான், துண்ணென்றான் எனக் கூட்டி முடிக்க. 'என்றெழுந்து' என்றது, முன் பாட்டின் இறுதியை அநுவதித்தது.

இறந்த தத்தைக்குத் தர்ப்பணம் செய்யும் பொருட்டுப் பரதன் கங்கைக் கரையில் படையோடு தங்கியிருக்க, குகன் பரதனை ஐயுற்றுத் தன் படைகளைத் திரட்டி அவர்களை எச்சரிக்கையாயிருக்கும் படி செய்துவிட்டு, பரதனது உள்ளக் கருத்தை உணரும்பொருட்டுப் பல காணிக்கைப் பொருள்களோடு தான்மட்டும் வடகரைக்கு

வந்தானாக, அப்போது சுமந்திரன் குகனைப் பரதனுக்கு அறிமுகம் செய்வித்ததாக வான்மீகம் கூறும்.

(பி - ம்.) 1. என்றெழுந்த.
2. செல்வதெனக்; கரைக்கு முகி. (28)

1026. வற்கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்
விற்கையினின் றிடைவீழ விம்முற்று நின்றொழிந்தான்.

வற்கலை உடையானை - மர உரி உடுத்தவனும், மாசு அடைந்த மெய்யானை - அழுக்கடைந்த உடம்பை உடையவனும், நல் கலை இல் மதி என்ன - நல்ல ஒளி இல்லாத (ஒளி மழுங்கிய) சந்திரனைப்போல, நகை இழந்த முகத்தானை - பொலிவிழந்த முகமுடையவனும், கல் கனிய - கல்லும் இளகும்படி, கனிகின்ற துயரானை - முதிரும் துயரமுடையவனுமான பரதனை, கண்ணுற்றான் - நன்கு நோக்கிய குகன், வில் - தான் பிடித்திருந்த வில்லானது, கையினின்று இடை வீழ - பிடி (நழுவிக்) கையிலிருந்து தரையில் விழ, விம்முற்று நின்று ஒழிந்தான் - விம்மிதத்தால் செயலற்று நின்றுவிட்டான்.

பரதனைக் கண்டவுடனே துணுக்குற்ற குகன், அவனைக் கூர்ந்து நோக்கியபோது, தாவர சங்கமம் எல்லாம் கண்டு இரங்குமாறு இருந்த அவனது திருமேனி நிலை விம்மிதத்தில் ஆழ்த்தியது. பரதன் நன்னீராடலும் நல்லுணவும் உறக்கமும் துறந்து, இராமபிரானைப்பற்றிய சிந்தனையே மிக்கவனாயிருந்தமையின், அவனுடம்பு மாசடைந்து அவனைக் கண்டார் யாவரும் இரங்கத் தக்கதாகவே இருந்தது. அவன் மரவுரி தரித்தமை, "தன்னுடைத் திருவரைச் சீரை சாத்தினான்" (990) என முன்னர்க் கூறப்பெற்றது.

இராமபிரான் சடை தரித்து மரவுரியுடுத்துத் தவக்கோலத்தோடு சென்றமையைக் குகனால் அறிந்து, அதன்பின் தானும் அக் கோலமே கொள்ள நிச்சயித்தான் பரதன் என்று வான்மீகம் கூறும்.

வற்கலையின்: இன், அல்வழிச் சாரியை. கல்லும் கனிய என உம்மை விரிக்க. கனிதல் இரண்டினுள், முன்னது இளகுதல்; பின்னது முதிர்ச்சி.

பி - ம்.) 1. மாசடைந்தவுடலானை.
3. கரைகின்ற.
4. நின்றழிந்தான். (29)

1027. நம்பியுமென் னாயகனை யொக்கின்றா னயனின்றான்
தம்பியையு மொக்கின்றான் றவவேடந் தலைநின்றான்
துன்பமொரு முடிவில்லை திசைநோக்கித் தொழுகின்றான்
எம்பெருமான் பின்பிறந்தா ரிழைப்பரோ பிழைப்பென்றான்.

நம்பியும் - பரத நம்பியும், என் நாயகனை ஒக்கின்றான் - என் தலைவனான இராமபிரானைப் போலவே இருக்கின்றான்; அயல் நின்றானும் - பக்கத்தில் நிற்கும் சத்துருக்கனும், தம்பியை ஒக்கின்றான் - (இராமபிரானுடன் சென்ற) தம்பியான இலக்குவனை ஒத்திருக்கின்றான்; (மேலும் பரத நம்பி) தவம் வேடம் தலை நின்றான் - தவ வேடமும் தாங்கியுள்ளான்; துன்பம் ஒரு முடிவு இல்லை - (அவனுக்குள்ள) துன்பம் எல்லையற்றதாயுளது; திசை நோக்கி தொழுகின்றான் - (இராமபிரான் சென்ற) திக்கை நோக்கி வணங்குகின்றான்; எம்பெருமான் பின் பிறந்தார் - எம் தலைவனுக்குத் தம்பியாகப் பிறந்தவர்கள், பிழைப்பு இழைப்பரோ - தவறு செய்வார்களோ? (நான் எண்ணியதே தவறு); என்றான் - என்று தன் மனத்துட் கொண்டான்.

பரதன் நிறத்தாலும் வடிவாலும் இராமபிரானைப் போன்றவன். பரதனைக் குறித்து, "எள்ளரிய குணத்தாலும் எழிலாலும் இவ்விருந்த, வள்ளலையே அனையானை" (பால: 732) என விசுவாமித்திர முனிவன் கூறியதும் இங்கே நினைக்கத் தகும். சத்துருக்கன் இலக்குவனைப் போன்றவன். அவ்வடிவொப்புமையை முதலிற் கூறிப் பின்பு பரதனிடம் கண்ட சிறப்பியல்புகளைக் கூறி, இராமபிரானுடன் பிறந்தவர்கள் தவறு செய்யார் என்பதையும் நினைக்கின்றான். பெரியோரையும் கடவுளரையும் திசைநோக்கித் தொழுதல் மரபு; "தென்றிசைச் செங்கை கூப்பி" (1035); "மன் பெரிய மாமனடி மகிழ்ந்துதிசை வணங்கி" (சீவக: 849) என்பன காண்க. சுந்தர. 1266-ம் பார்க்க.

நம்பி - ஆடவரிற் சிறந்தவன்; 'கல்யாண குணபூரணன்' என்பர் பெரியவாச்சான்பிள்ளை (பெரிய திருமொழி. 7. 1: 1.) தம்பியையும்: உம்மை, பிரித்துக் கூட்டப்பெற்றது.

(பி - ம்.) 1. நம்பியிவன்.
2. தவவேடம் தலைநின்றார், தலைக்கொண்டாள், கொண்டிருந்தான்.
3. தொழுகின்றார்.
4. இழைப்பரே; பிழையென்றான். (30)

1028. உண்டிடுக்க ணொன்றுடையா னுலையாத வன்புடையான்
கொண்டதவ வேடமே கொண்டிருந்தான் குறிப்பெல்லாம்
கண்டுணர்ந்து பெயர்கின்றேன் காமின்க ளெறியென்னாத்
தண்டுறையோர் நாவாயி லொருதனியே தான்வந்தான்.

(குகன் மேலும் பரதனைக் குறித்து) உண்டு இடுக்கண் ஒன்று உடையான் - உண்டாகிய பெருந் துன்பம் ஒன்று உடையவன், உலையாத அன்புடையான் - இராமபிரான்பால் கெடாத அன்புடையான் - கொண்டதவ வேடமே - இராமபிரான் மேற்கொண்டுள்ள தவக் கோலத்தையே, கொண்டு இருந்தான் - (இவனும்) கொண்டிருக்

கிறன்; குறிப்பு எல்லாம் - அவன் மனக் கருத்தை எல்லாம், கண்டு - (நேரில் சென்று) கண்டு, உணர்ந்து - (அவன் வாயிலாக) அறிந்து, பெயர்கின்றேன் - திரும்பி வருகின்றேன்; நெறி காமின்கள் - (அது காறும்) வழியைக் காப்பீராக; என்னு - என்று (தன் படையினருக்குச் சொல்லி), தண் துறை - குளிர்ந்த நீர்த்துறையில் (இருந்த), ஓர் நாவாயில் - ஒரு படகில், தான் ஒரு தனியே வந்தான் - தான்மட்டும் தனியாக (வடகரை நோக்கி) வந்தான்.

'பரதன் தோற்றத்தால் நாம் எண்ணியவாறு குற்றமுடையவனுகக் காணப்படவில்லை; இராமபிரான்பால் உள்ள அன்பினுல் அவனைக் காணவே வருகின்றுனென்று தோற்றுகின்றது; ஆயினும், நேரே போய்க் கண்டு அவனது கருத்தை அறிந்து வருவேன்; அதுவரை வழியை நன்கு காத்திருங்கள்' என்று படையினர்க்குக் கூறிவிட்டுப் பரதனைக் காணத் தான்மட்டும் தனியே வடகரை நோக்கி வந்தான்.

(பி - ம்.) 1. உண்டிடுக்கமொன்றுடையான்; உலையாவன்புடையான்றன்.
2. கொண்டிருந்த; இவனேயும்.
3. பேர்கின்றேன், மீள்கின்றேன், வருகின்றேன்.
4. தண்டுவலி நாவாயில், தண்டுடையோர் நாவாயில்; ஒருதமியே. (31)

குகன் பரதனைக் கண்டு வணங்குதல்

1029. வந்தெதிரே தொழுதானை வணங்கினுன் மலரிருந்த
அந்தணனும் தனைவணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான்
தந்தையினுங் களிகூரத் தழுவினுன் றகவுடையோர்
சிந்தையிலுஞ் சென்னியிலும் வீற்றிருக்குஞ்சீர்த்தியான்.

எதிரே வந்து தொழுதானை - தன்னெதிரில் வந்து அஞ்சலி செய்த குகனை, மலர் இருந்த அந்தணனும் தாமரை மலரில் தங்கும் பிரமனும், தனை வணங்கும் அவனும் - தன்னை வணங்கத் தக்க (பெருமையை உடைய பரதனும்), வணங்கினுன் - தலையைத் தாழ்த்தி வணங்கினுன்; அவன் - குகன், அடிவீழ்ந்தான் - (தன்னை வணங்கிய) பரதனுடைய பாதங்களில் விழுந்து பணிந்தான்; தகவு உடையோர் - பெருந் தகுதி உடைய பெரியோரின், சிந்தையிலும் சென்னியிலும் - மனத்திலும் சிரத்திலும், வீற்றிருக்கும் *சீர்த்தியான்* - இருந்து விளங்கத்தக்க புகழையுடைய பரதன், தந்தையினும் களிகூர - தந்தையைக் காட்டிலும் மகிழ்ச்சி மிக, தழுவினுன் - (தன் அடியில் விழுந்து வணங்கியகுகனை எடுத்துத்) தழுவிக் கொண்டான்.

குகன் வடகரைக்கு வந்து சேர்ந்து தன்னை எதிர்நோக்கியிருந்த பரதனுக்கு அஞ்சலி செய்ய, பரதனும் அக்குகனை வணங்கினுனுக, குகன் பரதனுடைய பாதங்களில் விழுந்து பணியவே, பரதன் குகனை எடுத்து மார்புறத் தழுவிக்கொண்டான்.

தொழுதல், வணங்குதல், அடிவீழ்தல் என்பன வெவ்வேறு வகைச் செயல்கள். ஒருவர் தம் அடியில் வீழ்ந்தால் வீழப்பெற்றவர் வீழ்ந்தாரைத் தழுவுவதாக அமைப்பது கம்பர்வழக்கம், எனவே, இங்கே அடிவீழ்ந்தவன் குகனென்றும், தழுவினவன் பரதனென்றும் கொள்க. "மீட்டும்மண் அதனில் வீழ்ந்தான்" என்று பின் வருவதும் காண்க.

(பி - ம்.) 1. தொழுதவனை; மு: வந்தெதிரே விழுந்தவனும் வணங்கினன் வணங்காமுன்.
2. அந்தணனும் தலைவணங்கும்; அவனுமவனியில்; அந்த நெடுந்திரள் புயத்தான்; தழுவினன்றழுவியபின்.
3. இந்த விடர்வடி வுடனீயெங்கெழுந்தாய் இமையோர்தம்.
4. கீர்த்தியாய். (32)

குகனது வினாவும் பரதனது விடையும்

(வேறு)

1030. தழுவின புளிஞர் வேந்தன் றாமரைச் செங்க ணானை
எழுவினு முயர்ந்த தோளா யெய்திய தென்னை யென்ன
முழுதுலகளித்த தந்தை முந்தையோர் முறையினின்றும்
வழுவினனதனை நீக்க மன்னனைக் கொணர்வா னென்றான்.

தழுவின - (பரதனால்) தழுவப்பெற்ற, புளிஞர் வேந்தன் - வேட அரசனான குகன், தாமரை செம் கண்ணானை - தாமரை போலும் செவ்விய கண்களையுடைய பரதனை (நோக்கி), எழுவினும் உயர்ந்த தோளாய் - கணைய மரத்தினும் சிறந்த தோள்களை உடையவனே, எய்தியது என்னை என்ன - (நீ இவ்வாறு) வந்த காரியம் யாது என்று வினவ, (பரதன்), முழுது உலகும் அளித்த தந்தை - உலகம் முழுதும் காத்த தந்தையாகிய சக்கரவர்த்தி, முந்தையோர் முறையின் நின்றும் வழுவினன் - (இம் மரபில்) முன்னோரின் முறையிலிருந்து தவறி விட்டான்; அதனை நீக்க - அம் முறை தவறுதலைப் போக்குமாறு, மன்னனை கொணர்வான் - (முறைப்படி) மன்னனான இராமபிரானை அழைத்து வரும்பொருட்டு (வந்தேன்), என்றான் - என்று விடை தந்தான்.

'நீ வந்த காரியம் என்ன?' என்று வினவிய குகனுக்கு, 'அயோத்திக்கு உரிய அரசனை அழைத்துவருதற்கு' என்று சுருக்க மாக விடை அளித்தான் பரதன். இம் மரபில் வழிவழியே வந்த முறை, 'மூத்தவற்கு உரியது அரசு' என்பது; தந்தை அம்முறை தவறி, அரசை எனக்கு அளித்ததை மாற்றி முறைப்படி உள்ள அரசனை அழைத்து வருதற்பொருட்டு வந்தேன் என்றான். இராம பிரானை 'மன்னன்' என்றே குறித்தான். பரதன் இராமபிரானையே

ஒத்தவனாதலால், 'தாமரைச் செங்கணானை' என்றார். திண்மையாலும் வடிவினாலும் கணையமரம் பரதன் தோள்களுக்கு உவமை; "தூண்டர நிவந்த தோளான்" (1038) என்பர் பின்னும். அளித்த-முதலில் இராமபிரானுக்குச் கொடுத்த என்று உரைத்தலுமாம்.

பரதன் கூறியது கேட்ட குகன், 'இராமபிரானுக்குத் தீமை விளைக்க நீ போகவில்லையோ? அங்ஙனமாயின், இப்பெருஞ் சேனை எதற்கு? உன்மேல் எனக்கு ஐயமுண்டாகின்றது' என்று வெளிப்படக் கூறியதாக வான்மீகம் கூறும்.

(பி-ம்.) 1. தழுவிய.
3. முறைமையீண்டு, முறையினீடு.
4. நீக்கி; கொணர்வான் வந்தேன். (33)

பரதன் கூறியதைக் கேட்ட குகனது மகிழ்ச்சி

1031. கேட்டனன் கிராதர்வேந்தன்கிளர்ந்தெழு முயிர்ப்பனாகி
மீட்டுமண்ணதனில்வீழ்ந்தான் விம்மினனுவகைவீங்கத்
தீட்டரு மேனி மைந்தன் சேவடிக் கமலப் பூவிற்
பூட்டிய கையன் பொய்யி லுள்ளத்தன் புகல லுற்றான்.

கேட்டனன் கிராதர் வேந்தன்-(பரதன் சொல்லியதைக்) கேட்டவனான வேடர் தலைவன் (குகன்), உவகை வீங்க-மகிழ்ச்சி மேலிடலால், கிளர்ந்து எழும் உயிர்ப்பன் ஆகி-பொங்கி எழும் பெருமூச்சு உடையவனாய், விம்மினன்-பூரித்து, மீட்டும்-மீளவும், மண் அதனில் வீழ்ந்தான்-(பரதன் எதிரில்) தரையில் விழுந்து, தீட்ட அரு மேனி மைந்தன்-எழுத அரிய திருமேனியுடைய பரதனது, செம்மை அடிகமலம் பூவில்-சிவந்த திருவடிகளான தாமரைப்பூவில் (பாத தாமரைகளை), பூட்டிய கையன்-கோத்த கைகளோடும், பொய் இல் உள்ளத்தன்-பொய்ம்மை இல்லாத மனத்தோடும், புகலல் உற்றான்-(சில) சொல்லலானான்.

குகன் சொல்லியவை, மேல் இரண்டு கவிகளுள் வரும். குகன், பரதனைப்பற்றித் தான் தவறாக எண்ணியதற்கு அவன்பால் மன்னிப்புக் கேட்பான்போல் மீண்டும் அவனைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, மகிழ்ச்சி மேலிட்டவனாகி, அவனைப் புகழ்ந்து சில சொல்லலானான்.

முகஸ்துதியாக அன்றி, உண்மையாகவே புகழ்ந்தான் என்பார், 'பொய்யில் உள்ளத்தன்' என்றார். "எழுதரிய திருமேனிக் கருங்கடல்" (பால. 731) என முன்னே இராமபிரானைக் குறித்ததுபோல, இங்கே பரதனைத் 'தீட்டருமேனி மைந்தன்' என்றார். கேட்டனன், வீழ்ந்தான், விம்மினன், கையன், உள்ளத்தன் என்பன முற்றெச்சம். மீட்டும் என்றது இறந்தது தழுவியது.

(பி - ம்.) 1. உயிரனுகி, உயிர்ப்பிளேடு; அன்புகூர.
2. பொன்னடியின்; உவகை பொங்கத், உருகிபார்க்கும்.
3. கமலப்பூமேற். (34)

குகன் கூறுதல்

1032. தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்துத் தேக்கிப்
போயினை யென்ற போது புகழினேய் தன்மை கண்டால்
ஆயிர மிராமர் நின்கே ழாவரோ தெரியி னம்மா.

புகழினேய் - சிறந்த புகழைக் கொண்டவனே, தாய் உரை கொண்டு - தாயின் சொல்லை ஏற்றுக்கொண்டு, தாதை உதவிய தரணி தன்னை - தந்தை (உனக்குக்) கொடுத்த இராச்சியத்தை, தீவினை என்ன நீத்து - ஏற்றுக்கொள்ளுதல் தீவினை என்று எண்ணிக் கைவிட்டு, சிந்தனை - (இராமபிரானைக் குறித்த) மனக்கவலையை, முகத்து தேக்கி - முகத்தில் நிறைவித்து, போயினை என்றபோது - (இராமபிரானை அழைக்க) நீயும் காடு போனாய் என்பதை எண்ணும்போது, தன்மை கண்டால் - (உனது) இவ் வியல்பைப் பார்த்தால், தெரியின் - (அதனை) ஆராய்ந்து உணர்ந்தால், ஆயிரம் இராமர் - ஆயிரம் இராமர் (சேர்ந்தாலும்), நின் கேழ் ஆவரோ - உனக்கு ஒப்பாவாரோ! (ஆகார்), அம்மா: வியப்புக் குறிப்பு.

'பரதா, இராச்சியத்தைப் பெற நீயாக விரும்பவில்லை; தாய் தந்தையர் இருவரும் மனமொப்பிக் கொடுத்தது மறுக்கத் தக்கதன்று; அதனையும் மறுத்துக் கவலையை மேற்கொண்டு இராமபிரானை அழைக்கப்போகும் உனது இச்செயல், பிறரால் நினைத்தற்கும் அரியதாகும். நான் இராமபிரானையே பெரிதும் மதித்தேன்; நீ உன் உயர் குணத்தால் அவனையும் விஞ்சிவிட்டாய்' என்று மனமாரப் புகழ்ந்தான் குகன்.

உன் மனக்கவலையை முகம் காட்டுகின்றதென்பான், 'சிந்தனை முகத்தில் தேக்கி' என்றான். தேக்குதல் - நிறைவித்தல், கேழ் - ஒப்பு. தெரியின்: பிறவினைப் பொருள் குறித்தது; 'தெரிப்பின்' என்ற பாடமும் உளது.

(பி - ம்.) 2. தியவாமென்ன, தியனவென்ன; நீக்கும்; முகத்திற்நீரப், முகத்துக் கோப்பப்.
3. தன்னைக் கண்டால்,
4. நின்போலாவரோ, நின்னேராவரோ; உரைப்பின். (35)

1033. என்புகழ் கின்ற தேழை யெயினனே னிரவி யென்பான்
தன்புகழ்க் கற்றை மற்றை யொளிகளைத் தவிர்க்கு மாபோல்
மன்புகழ் பெருமை நுங்கள் மரபினோர் புகழை யெல்லாம்
உன்புக ழாக்கிக் கொண்டா யுயர்குணத் துரவுத் தோளாய்.

உயர் குணத்து - உயர்ந்த குணங்களையும், உரவு தோளாய் - வலிமிக்க தோள்களையும் உடையவனே, ஏழை எயினனேன் - அறிவற்ற வேடனாகிய நான், என் புகழ்கின்றது - (உன்னை) என்ன வென்று புகழ்வது? இரவி என்பான் தன் - சூரியன் என்று சிறப் பித்துச் சொல்லப்படுகிறவனுடைய, புகழ் கற்றை - புகழ்தற்கு உரிய கதிர்த்தொகுதி, மற்றை ஒளிகளை - பிற எல்லாச் சோதிகளையும், தவிர்க்குமாறுபோல் - தன்னுள் அடக்கி மேம்படுவது போல, மன் புகழ் பெருமை - பிற குலத்து மன்னர்கள் யாவரும் புகழ்கின்ற பெருமையை உடைய, நுங்கள் மரபினோர் புகழை எல்லாம் - உங்கள் குலத்து முன்னோரான அரசர் பலருடைய புகழை எல்லாம், உன் புகழ் ஆக்கி கொண்டாய் - உன்னுடைய புகழாகச் செய்து கொண்டாய்.

'குணங்களால் மேம்பட்டவனே, நான் அறிவில் தாழ்ந்த வேடனாதலால், உன் பெருமையைப் பலவாறு எடுத்துச் சொல்லும் ஆற்றல் எனக்கில்லை; சுருங்கச் சொல்லுமிடத்து, ஒவ்வொரு வகையில் சிறந்து புகழோடு விளங்கிய சூரியகுலத்து அரசர் எல்லாருடைய புகழும் உன் புகழுக்குள் அடங்குமாறு, நீ எல்லா வகையிலும் மேம்பட்டு விளங்குகின்றாய்' என்றான் குகன்.

'கதிரவன் ஒளியின்முன் வேறு எந்த ஒளியும் மழுங்கிவிடுதல் போல, உன் புகழுக்குமுன் பிறர் புகழெல்லாம் மழுங்கிவிடும்' என உவமையைப் பொருத்திக் காண்க. 'உன் குல முதல்வனான சூரியனைப் போல நீ விளங்குகின்றாய்' என்பது கருத்து.

"முன்னை நின்குல முதலு ளோர்கடாம், நின்னை யாவரே நிகர்க்கும் நீர்மையார்" (915) என்ற கோசலையின் கூற்றும் இங்கே நினைவுகூரத் தகும். இராமபிரான் புகழை எடுத்துக்கூறும், "ஆர்கலி யகழ்ந்தோர்" (277) என்று தொடங்கும் பாடலும் இங்கே ஒப்புநோக்கத் தகும். தவிர்க்குமா ! இறுதி விகாரத்தால் தொக்கது.

(பா - ம்.) 1. எயினரேம்.
2. தன்கதிர்க் கற்றை, தன்சுடர்க்கற்றை.
3. புகழ்களெல்லாம், பெருமையெல்லாம். (36)

1034. எனவிவை யன்ன மாற்ற மியைவன பலவுங் கூறிப்
புனைகழற் புலவுவேற்கைப் புளிஞர்கோன் பொருவில் காதல்
அனையவற் கமைவிற் செய்தா னவற் கன்பி லாதார்
நினைவருங் குணங்கொ டன்றோ விராமன்மே னிமிர்ந்த காதல்.

என இவை அன்ன - என்று இவை போன்ற, இயைவன மாற்றம் பலவும் கூறி - பொருத்தமான உபசார மொழிகள் பலவற்றையும் சொல்லி, புனை கழல் - அணிந்த வீரக் கழலையும், புலவு வேல் கை - புலால் நாறும் வேல் தாங்கிய கையையுமுடைய, புளிஞர்கோன் -

வேடர் தலைவனான குகன், அமைவின்-மனம் பொருந்தி, அனையவற்கு-அப் பரதனிடம், பொரு இல் காதல் செய்தான் - ஒப்பற்ற அன்பு செலுத்துவானானான்: அவற்கு அன்பு இலாதார் ஆர் - அவன்பால் அன்பிலாதார் எவர்? நினைவு அரும் குணம் கொடு அன்றோ - எண்ணுதற்கரிய நற்குணங்களால் அன்றோ, இராமன்மேல் காதல் நிமிர்ந்த(து)-இராமன்பால் (எவர்க்கும்) அன்பு மிக்கது.

இராமபிரானிடம் அன்பு செய்தற்கு அவனிடம் உள்ள குணச் சிறப்பே காரணம். ஆகவே, பரதனிடமும் உள்ள குணங்களைக் கண்டு குகன் அவன்பால் ஈடுபட்டான்.

(பி - ம்.) 1. எனவிவையினிய மாற்றம், இவையனைய மாற்றம்; மு. ஏனவிவை பலவும் பன்னி யிணையடி தொழுது பின்னும்.
2. புனைபுகழ்ப் புளினர்; பொதுவில் காதல்,
4. குணங்கடம்மால், மு. நினைவருமிராமன் மேனி காணவே நிமிர்ந்த காதல். (87)

பரதன் குகனை வினவுதல்

1035. அவ்வழி யவனை நோக்கி யருடரு வாரி யன்ன
செவ்வழி யுள்ளத் தண்ணல் தென்றிசைச் செங்கை கூப்பி
எவ்வழி யுறைந்தா னம்மு னென்றலு மெயினர் வேந்தன்
இவ்வழி வீர யானே காட்டுவெ னெழுக வென்றான்.

அ வழி - அப்போது, அருள் தரு வாரி அன்ன - கருணையைத் தரும் கடல் போன்ற, செ வழி உள்ளத்து அண்ணல் - நேர்மையான வழியிற் செல்லும் மனமுடைய பரதன், அவனை நோக்கி - அவனைப் பார்த்து, தென்திசை செம் கை கூப்பி - தென்திசை நோக்கித் தன் செவ்விய கைகளைக் கூப்பிக்கொண்டு, நம்முன் - நம் அண்ணனான இராமபிரான், எ வழி உறைந்தான் - எவ்விடத்தில் தங்கியிருந்தான், என்றலும் - என்று வினவியவளவில், எயினர் வேந்தன் - வேடர்க்கு அரசனான குகன் (பரதனை நோக்கி), வீர - வீரனே, இ வழி - இவ்விடமே; யானே காட்டுவென் - நானே (அவ்விடத்தைக்) காட்டுவேன், எழுக என்றான் - வருக என்றான்.

வாரி அன்ன உள்ளம், செவ்வழி உள்ளம் என இயைக்க. பரதன் குகனைத் தன் அண்ணனைப் போலவே பாவித்தானாதலால், 'நம்முன்' என இராமபிரானைச் சுட்டினான். தென்றிசைச் செங்கை கூப்பி! "திசை நோக்கித் தொழுகின்றான்" (1018).

(பி - ம்.) 3. உறைந்ததெம்முன்.
4. வருதியானே, விரைவின்யானே; காட்டுவலெழுக, காட்டுவனின்றின். (88)

பரதன் செயல்

1036. காரெனக் கடிது சென்றான் கல்லிடைப் படுத்த புல்லின்
வார்சிலைத் தடக்கை வள்ளல் வைகிய பள்ளி கண்டான்
பார்மிசைப் பதைத்து வீழ்ந்தான் பருவரற் பரவை புக்கான்
வார்மணிப் புனலான் மண்ணை மண்ணுநீ ராட்டுங் கண்ணான்.

(பரதன் குகனைத் தொடர்ந்து), கார் என கடிது சென்றான் - மேகம் போல விரைந்து சென்று, வார் சிலை தட கை வள்ளல் வைகிய - நீண்ட வில்லைப் பிடித்த பெரிய கையையுடைய இராமபிரான் படுத்திருந்த, கல் இடை படுத்த புல்லின் பள்ளி - கல்லின் இடையே பரப்பிய புல்லாகிய படுக்கையை, கண்டான் - பார்த்து, பதைத்து பார்மிசை வீழ்ந்தான் - துடித்துத் தரையில் விழுந்து, பருவரல் பரவை புக்கான் - துன்பக் கடலுள் மூழ்கி, வார்மணி புனலால் - ஒழுகும் முத்துப் போன்ற கண்ணீரால், மண்ணை - தன் மேனியில் படிந்த மண்ணை, மண்ணும் நீர் ஆட்டும் கண்ணான் - நீராட்டுவிக்கும் கண்களை உடையவனானான்.

கீழே விழுந்தமையால் புழுதி போர்த்த திருமேனியை அவன் கண்ணினின்று பெருகிய நீர் கழுவியது. இதிலுள்ள முற்றுக்கள் எச்சப்பொருளிற் பயின்றன. மண்ணு நீராட்டல் - மாசு போக நீராடச் செய்தல். நிறத்தாலும், தண்ணளியாலும், விரைவாலும், நீர் பொழிதலாலும், கார் பரதனுக்கு உவமை. கார் விரைந்து செல்லுதல்! "நின்னே யுள்ளி வந்தனென், நன்னுத லரிவை காரினும் விரைந்தே" (ஐங்குறு: 491). வள்ளல் - இராமபிரான்.

(பி - ம்.) 1. கடிது சென்று; கல்லிடை யடுத்த புல்லின்.
2. அண்ணல் வைகியே.
4. மண்ணி நீராட்டும். (39)

1037. இயன்றதென் பொருட்டி னாலிவ் விடருனக் கென்ற போதும்
அயின்றனை கிழங்குங் காயு மமுதென வரிய புல்லில்
துயின்றனை யெனவு மாவி துறந்திலென் சுடருங் காசு
குயின்றுயர் மகுடஞ் சூடுஞ் செல்வமுங் கொள்வென் யானே.

உனக்கு—, இ இடர் - இத்தகைய துன்பம், என்பொருட்டினால் இயன்றது என்றபோதும் - என் நிமித்தமாக நிகழ்ந்தது என்று அறிந்த போதும், கிழங்கும் காயும் - (நீ உண்ணத் தகாத) கிழங்குகளையும் காய்களையும், அமுது என அயின்றனை - அமுதம்போல உண்டாய், அரிய புல்லில் துயின்றனை - (நீ தீண்டுதற்கும்) அரிய புல்லில் (பஞ்சணைபோலக் கருதித்) துயின்றாய், எனவும் - என்றறிந்த போதும், ஆவி துறந்திலென் - நான் உயிர் நீத்தேனல்லேன்; (அதற்கு மாறாக), சுடரும் காசு குயின்று - ஒளிவீசும் மணிகள் பதித்து, உயர் - சிறந்துள்ள, மகுடம் சூடும் செல்வமும் - முடிசூடி ஆளும் அரசச்

செல்வத்தையும், யான் கொள்வென் - நான் கைக்கொள்பவனாவேன்.

ஏ: ஈற்றசை. என்றான் என வருவித்து முடிக்க.

நானொருவன் பிறந்ததனால் உனக்கு இத்தகைய துன்பங்கள் நேர்ந்தன என்பான், 'என் பொருட்டினால் இயன்ற திவ்விடர்' என்றான். 'அமுதென' என்று உணவுக்குக் கூறியதற்கு இயைய, 'அணைபோல' என்பது படுக்கைக்கு வருவித்து உரைக்கப்பெற்றது.

(பி - ம்.) 1. என்பொருட்டினாலே; என்ற போழ்தும்.
2. அமிர்தென; வலிய; அருந்திப்.
3. செம்பொன்.
4. குயின்றானன்; சூட்டும். (40)

பரதன் வினவுதல்

1038. தூண்டர நிவந்ததோளான் பின்னருஞ் சொல்லுவானந்
நீண்டவன் றுயின்ற சூழ லிதுவெனி னிமிர்ந்த நேயம்
பூண்டவன் றொடர்ந்து பின்னே போந்தவன் பொழுது நீத்த
தியாண்டென வினிது கேட்டா னெயினர்கோ னிதனைச்
சொன்னான்.

தூண்தர நிவந்த தோளான் - தூணைப்போல உயர்ந்த தோள்களை உடைய பரதன், பின்னரும் சொல்லுவான் - மேலும் சொல்வானாய், (குகனை நோக்கி) அ நீண்டவன் துயின்ற சூழல் - நெடியவனான அவ்விராமபிரான் துயின்ற இடம், இது எனின் - இதுவானால், நிமிர்ந்த நேயம் பூண்டவன் - (அவன்பால்) ஓங்கிய அன்புடையவனாய், தொடர்ந்து பின்னே போந்தவன் - (அவனை) நிழல்போலத் தொடர்ந்து பின்னே வந்த இலக்குவன், பொழுது நீத்தது - பொழுதைக் கழித்தது, யாண்டு என - எவ்விடம் என்று, இனிது கேட்டான் - இனிதாகக் கேட்டான்; எயினர்கோன் - வேடர் தலைவனான குகன், இதனை சொன்னான் - (அதற்கு விடையாகப் பின்வரும்) இதனைச் சொல்லலானான்.

இராமபிரான் பிராட்டியோடு துயின்றதால், இலக்குவன் அருகில் இருக்க நியாயமில்லை; ஆயினும், அவன் அவர்கள் காவலில் கண்ணும் கருத்தும் உடையவனாதலின், உறங்கியிருக்கவும் மாட்டான் என்று கருதி, 'பின்னே போந்தவன் பொழுது நீத்தது யாண்டு' என்றான். 'இனிது கேட்டான்' என்றது, மனநெகிழ்ச்சியோடு மெல்லக் கேட்டான் என்றபடி. தர: உவமவுருபு. "எழுவினும் உயர்ந்த தோளாய்" (1030) என்றதும் காண்க. நீண்டவன் - குணங்களாலும் பெருமையாலும் உயர்ந்தவன்; நெடுமால் என்பதனைக் குறித்ததெனலுமாம்.

(பி - ம்.) 1. தூண்டர மிமிர்ந்த: பின்னையும்.
2. இதுவெனினிவர்ந்த.
3. போது நீத்தது.
4. சொல்வான். (41)

குகன் கூறிய விடை

1039. அல்லையாண் டமைந்த மேனி யழகனு மவளுந் துஞ்ச
வில்லையூன் றியகை யோடும் வெய்துயிர்ப் போடும் வீரன்
கல்லையாண் டுயர்ந்த தோளாய் கண்கணீர் சோரக் கங்குல்
எல்லைகாண் பளவு நின்று னிமைப்பில னயன மென்றான்.

கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய் - மலையையும் கீழ்ப்படுத்தி மேம்பட்ட தோள்களை உடையவனே, அல்லை ஆண்டு - இருளைக் கீழ்ப்படுத்தி, அமைந்த - (கருமை) வாய்ந்த, மேனி - திருமேனியை உடைய, அழகனும் - பேரழகிழனனான இராமபிரானும், அவளும் - பிராட்டியும், துஞ்ச - உறங்க, வீரன் - (இளைய) வீரனான இலக்குவன், நயனம் இமைப்பு இலன் - கண்களை இமைத்தலும் இலனாகி, (விழித்த கண் விழித்தபடியே) வில்லை ஊன்றிய கையோடும் - வில்லை ஊன்றிப் பிடித்த கையுடனும், வெய்து உயிர்ப்போடும் - (துயரத்தால்) வெப்பமான பெருமூச்சுடனும், கங்குல் எல்லை காண்பு அளவும் - இரவின் முடிவைக் காணுமளவும் (விடியும் வரையில்), கண்கள் நீர் சோர நின்றான் - (விழித்த) கண்களினின்றும் நீர் பெருகி வழிய நின்றுகொண்டிருந்தான், என்றான்—.

இராமபிரான்பால் தோன்றி எழுந்த பேரன்பினால், குகன் இலக்குவனை ஐயுற்று, அவன் செயல்களை இரவு முழுதும் விழிப்போடு இருந்து கவனித்தவனாதலால், இலக்குவனைப்பற்றி அவன் இவ்வாறு தெளிவாகக் கூறினான் என்பர். 'இலக்குவனால் இராமனுக்கு ஏதேனும் துன்பம் விளையுமோ என்று கருதி, அவன் செல்லுமிடமெல்லாம் நான் அடியொற்றிச் சென்று காவல் புரிந்து வந்தேன்' என்று குகன் பரதனிடம் தெரிவித்ததாக வான்மீகம் கூறும்.

வீரன்; இடம் நோக்கி இலக்குவன் என்று கொள்க. இராமபிரான் திருமேனிக்கு இருள்: பரி. 2: 52; 13: 42; 15: 27, 50. அழகன்: கிட்கிந்தா. 7: 37, சுந்தர. 2: 102, யுத்த. 15: 354. வில்லை ஊன்றி நிற்றல்: "தேற லாந்துணை யுஞ்சிலை யூன்றியே, ஆறி நின்றன னாற்றலிற் றேற்றலான்" (யுத்த. 18: 126.) இலக்குவன் காவல்: 668-பார்க்க.

(பா-ம்.) 1. அமைந்து வந்த.
2. வெய்துயிர்ப்போடும் விம்மா.
4. இமைத்திலனயனம். (42)

பரதன் இலக்குவனைப் பாராட்டி வருந்துதல்

1040. என்பத்தைக் கேட்ட மைந்த னிராமனுக் கிளையா ரென்று
முன்பொத்த தோற்றத் தேமில் யானென்று முடிவிலாத
துன்பத்துக் கேது வானே னவனது துடைக்க நின்றான்
அன்பத்துக் கெல்லை யுண்டோ வழகிதென் னடிமை
யென்றான்.

என்பதை - (என்று குகன்) கூறியதை, கேட்ட மைந்தன் - கேட்ட பரதன், முன்பு - முன்னே, இராமனுக்கு இளையார் என்று - இராமபிரானுக்குத் தம்பிகள் என்று, ஒத்த தோற்றத்தேயில் - ஒத்த பிறப்புடைய எங்களுள், யான் - நான், என்றும் முடிவு இல்லாத துன்பத்துக்கு ஏது ஆனேன் - (இராமபிரானுக்கு) என்றும் தீராத துன்பத்துக்குக் காரணமானேன்; அவன் - அவ்விலக்குவன், அது துடைக்க நின்ருன் - அத்துன்பத்தைப் போக்க உறுதி பூண்டுள்ளான்; அன்புக்கு - அவனுடைய அன்பாகிய அருங்குணத்துக்கு, எல்லை உண்டோ - ஓர் அளவுண்டோ? என் அடிமை அழகிது - (இராமபிரான் பால்) எனது அடிமைத்திறம் மிக அழகாக இருக்கின்றது, என்ருன்—.

'நானும் இராமபிரானுக்கு ஆட்செய்பவன் என்று சொல்லிக் கொள்கின்றேன்; அது செயலில் நிகழவில்லை; மாருக, அவன் பெருந் துன்பமுறக் காரணமாயுள்ளேன்; இலக்குவனே, தான் அடியவன் என்பதைச் செயலால் உணர்த்துகின்ருன்; என்னல் என்ன பயன்!' என்று தன்னை நொந்துகொண்டான் பரதன்.

'என்பதை' எனற்பாலது எதுகை நோக்கி 'என்பத்தை' என விரித்தல் விகாரம் பெற்றது. அன்பத்துக்கு! அத்து, சாரியை. அழகிது என்றது இகழ்ச்சிக்குறிப்பு.

(பி - ம்.) 1. என்பன கேட்ட, என்பதைக் கேட்டு.
2. முன்பெற்ற; மேவினன் முடிவிலாத, மேவிலன் முடிவிலாத.
3. துடைத்து நின்ருன்.
4. அன்பதற்கு. (43)

பரதன் செயலும் சொல்லும்

1041. அவ்விடை யண்ண ருனு மன்றரும் பொடியின் வைகித்
தெவ்விடை தரநின் ருர்க்குஞ் செறிகழற் புளிஞர்கோமான்
இவ்விடைக் கங்கை யாற்றி னேற்றினை யாயி னெம்மை
வெவ்விடர்க் கடனின் றேற்றி வேந்தன்பால் விடுத்த தென்ருன்.

அண்ணல் தானும் - பெருமையிற் சிறந்த பரதனும், அன்று - அன்றைப்பொழுது, அ இடை - அவ்விடத்தே, அரு பொடியின் வைகி - (படுத்தற்கு) அரிய புழுதியில் (புல்லுமின்றித்) தங்கி இருந்து, (பின்பு குகனை நோக்கி), தெவ் இடைதர - பகைவர் (அஞ்சி) வருந்தும் படி, நின்று ஆர்க்கும் - நிலைபெற்று ஒலிக்கின்ற, செறி கழல் - செறிந்த (கட்டிய) வீரக் கழலையுடைய, புளிஞர் கோமான் - வேடர்க்கரசே, இ இடை - இப்போது, எம்மை - எங்களை, கங்கை ஆற்றின் ஏற்றினை ஆயின் - கங்கை ஆற்றைக் கடந்து (தென்கரை) சேரச் செய்வாயானல், வெவ் இடர் கடல் நின்று ஏற்றி - கொடிய துன்பக்கடலினின்றும் கரையேற்றி, வேந்தன்பால் விடுத்தது என்ருன் - எங்களரசனை இராமபிரானை அடைவித்தது போலாகும் என்ருன்.

பரதன், இராமபிரான் துயின்ற இடத்தில் அன்றிரவு வெறும் தரையில் நித்திரையின்றி இருந்து, மறுநாட் காலையில், கங்கை ஆற்றைக் கடத்தற்கு உரியன செய்யுமாறு குகனை வேண்டினன்.

ஆறு கடக்கச் செய்தால், கடலையே கடப்பித்து, இராமபிரான் பால் எங்களைச் சேர்த்ததுபோல் ஆகும் என்று, தனது பேராவலையும், குகனது உதவியின் இன்றியமையாமையும் குறிப்பித்தான். அண்ணல்தானும்: தான், அசை. கோமான்: விளி. இராமபிரானை 'அரசன்' என்றே கூறுகின்றான். விடுத்தது என்றதன்பின், ஆகும் என வருவித்து முடிக்க.

(பி - ம்.) 1. அவ்வழி.
2. கோவே.
3. கங்கையாற்றை.
4. வெவ்வினைக்கடனின்றேற்றி; வேந்தர்பால், வீரன்பால், இராமன் பால்; விடுத்தியென்றான், விடுத்திடென்றான். (44)

குகன் கட்டளையால் நாவாய்கள் வருதல்

1042. நன்றெனப் புளிஞர் வேந்த னண்ணினன் றமரை நாவாய்
சென்றினித் தருதி ரென்ன வந்தன சிவன்சேர் வெள்ளிக்
குன்றெனக் குனிக்கு மம்பொற் குவடெனக் குபேரன் மானம்
ஒன்றென நாணிப் பல்வே றுருவுகொண் டனைய வான.

புளிஞர் வேந்தன் - வேடர்க்கு அரசனான குகன், நன்று என - நல்லது என்று, தமரை நண்ணினன் - தன் இனத்தாரைச் சேர்ந்து, இனி சென்று நாவாய் தருதிர் என - இனி (நீங்கள்) போய்ப் படகு களைக் கொணருதிர் என்று கட்டளையிட, சிவன் சேர் வெள்ளி குன்று என - சிவபெருமான் எழுந்தருளிய வெள்ளி மலையும், குபேரன் மானம் - குபேரனது புட்பக விமானமும், ஒன்று எனல் நாணி - (தாம்) ஒவ்வொன்றாயிருத்தற்கு நாணி, பல வேறு உருவு கொண்ட அனைய ஆன - பல வேறு வடிவங்கள் கொண்டு வந்தன போன்றனவான (நாவாய்கள்), வந்தன - வந்து சேர்ந்தன.

குகன் கட்டளையால் வந்த ஓடங்களைச் சிறப்பித்துக் கூறுகின்றார். இடப்பரப்பாலும், பெருமையாலும், தோற்றத்தாலும் அவற்றிற்குக் கயிலை, மேரு, புட்பகம் ஆகியவற்றை உவமை கூறி, அவை ஒவ்வொன்றாயிருத்தற்கு நாணிப் பலபல ஓடமாக வடிவங் கொண்டு இங்கு வந்துள்ளன என்னும்படி இருந்தன அவை என்கின்றார்.

நன்று: உடன்பாட்டுக் குறிப்பு. நண்ணினன்: முற்றெச்சம். குன்றென, குவடென என்றவற்றுள் என என்பது எண்ணிடைச் சொல். இதனை மானத்தோடும் கூட்டுக. மானம்: முதற்குறை. நாவாய் என்பதனை, அனையவான என்றதன் பின்னும் கூட்டி, அனையவான

வந்தன என முடிக்க. குகன் முன்பு வேடரை, ஓடம் எதுவும் ஓட்டாமல் நெறியைக் காத்திருக்குமாறு பணித்து, பரதனது உட்கோளை அறியவந்தவன், அதனை அறிந்து தெளிந்தானாகலின், இப்போது, 'இனிச் சென்று நாவாய் தருதிர்' என்றான்.

(பி - ம்.) 2. சென்றுநீர்தருதிர், கொணர்திர்.
3. குலவும்; அம்பொற்குழுவெனக், குன்றெனக், பூவெனக், அம்பி குழுமின, பைம்பொற்குவடெனக், மேகக்குழுவெனக், மேருக் குழுவெனக்; குபேரமானம்.
4. ஒன்றெனாணிப், ஒன்றென்றேனாணிப்; கொண்டனையவொத்த, கொண்டிணையவான. (45)

நாவாய்களின் வருணனை

1043. நங்கையர் நடையி னன்ன நாணுறு செலவி னாவாய்
கங்கையு மிடமில் லாமை மிடைந்தன கலந்த வெங்கும்
அங்கொடிங் கிழித்தி யேற்று மமைதியா லமரர் வையத்
திங்கொடங் கிழித்தி யேற்று மிருவினை யென்ன லான.

நங்கையர் நடையின் - மங்கையரின் நடைபோலும் நடையினையும், அன்னம் நாண் உறு செலவின் - அன்னப்பறவையும் நாணமுறத்தக்க செலவினையும் (உடையனவாகி), கங்கையும் இடம் இலாமை - கங்கையின் பரப்பும் இடம் போதாதவாறு, எங்கும் - எல்லா இடங்களிலும், மிடைந்தன கலந்த நாவாய் - நெருங்கிக் கலந்த ஓடங்கள், அங்கொடு இங்கு - அக்கரையிலும் இக்கரையிலுமாக, இழித்தி ஏற்றும் அமைதியின் - (மக்களை) இறக்கி ஏற்றும் தன்மையால், அமரர் வையத்து இங்கு - தேவருலகினின்றும் இவ்வுலகத்துக்கும், இங்கொடு அங்கு - இவ்வுலகினின்று தேவருலகுக்கும், இழித்தி ஏற்றும் - (உயிர்களை) இறக்கி ஏற்றுகின்ற, இரு வினை என்னல் ஆன - (புண்ணியம் பாவம் என்னும்) இருவினைகள் என்னும்படி இருந்தன.

படகுகளின் தோற்றத்துக்கு மூன்று உவமைகள் கூறியவர், அவை நீரில் அசைந்து செல்லும் செலவுக்கு மகளிர் நடையையும் அன்ன நடையையும் உவமை கூறி, அத்தகைய படகுகள் அளவின்றி வந்து நெருங்கின என்றும், அவை ஒரு வகையில் புண்ணிய பாவங்களை ஒத்தன வென்றும் கூறுகின்றார். ஏற்றுதல் புண்ணியத்தின் செயலும் இறக்குதல் பாவத்தின் செயலுமாக முறையே கொள்க. அங்கு, இங்கு என்பன அக்கரை, இக்கரை என்பவற்றைக் குறித்தன. வையத்திங்கு என்றதில் 'இங்கு' என்பது இடைநிலை விளக்காய், முன்னும் பின்னும் இயைத்துப் பொருள்கொள நின்றது. அன்னமும் என உயர்வு சிறப்பும்மை விரிக்க; ;கங்கையும் : உம்மை உயர்வு சிறப்பு. மிடைந்தன : முற்றெச்சம்.

(பி - ம்.) 1. கடையதென்ன; செவ்விகாவாய்.
2. வந்தவெங்கும்.
3. இழிச்சி; அமைதியாலமரர்வைகும், அமைதியிலும்பரிம்பர்.
4. இங்கொட்டங்கிழிச்சி; என்னலாய. (46)

குகன் தெரிவிக்கப் பரதன் கூறுதல்

1044. வந்தன வரம்பி னாவாய் வரிசிலைக் குரிசின் மைந்த
சிந்தனை யாவ தென்று சிருங்கிபே ரியர்கோன் செப்பச்
சுந்தர வரிவி லானுஞ் சுமந்திரன் றன்னை நோக்கி
எந்தையித் தானை தன்னை யேற்றுதி விரைவினென்றான்.

வரி சிலை குரிசில் மைந்த - கட்டமைந்த வில்லில் வல்ல சக்கர வர்த்தியின் குமாரனே, வரம்பு இல் நாவாய் வந்தன - அளவற்ற படகுகள் (சித்தமாக) வந்தன; சிந்தனை யாவது என்று - (உன்) நினைவு யாது என்று, சிருங்கிபேரியர் கோன் செப்ப - சிருங்கிபேரபுரத் துள்ளார்க்குத் தலைவனான குகன் கேட்க, சுந்தரம் வரி வில்லானும் - அழகிய கட்டமைந்த வில்லையுடைய பரதனும், சுமந்திரன் தன்னை நோக்கி - சுமந்திரனைப் பார்த்து, எந்தை - எம் தந்தையே, இ தானை தன்னை - இந்தச் சேனைகளை, விரைவின் ஏற்றுதி - விரைவாக(ப் படகு களில்) ஏற்றி மறுகரை சேர்ப்பாயாக, என்றான் - என்று கூறினான்.

குரிசில் என்றது தயரதனை; குரிசில் மைந்த - சக்கரவர்த்தி குமார; அண்மை விளி. சிந்தனை யாவது என்றது, மேலே செய்யவேண்டி யதைத் தெரிவிக்க என்றவாறு. யாவது: யாது என்பதன் விரித்தல்; சிருங்கிபேரம் - ஊரின் பெயர்; சிருங்கிபேரியர் - அவ்வூரிலுள்ளார். "சிருங்கி பேர மெனத்திரைக் கங்கையின், மருங்கு தோன்றும் நகருறை வாழ்க்கையன்" (655). சுமந்திரனைத் தந்தை எனல்: 564. பார்க்க. தன் இரண்டும் சாரியை.

(பி - ம்.) 2. சிருங்கிவேரியர்.
4. எந்தையே தானை தன்னை, எந்தையித்தானையெல்லாம். (47)

சேனைகள் படகில் ஏறி மறுகரை செல்லுதல்

1045. குரிசில தேவ லாலக் குரகதத் தேர்வ லானும்
வரிசையின் வழாமை நோக்கி மரபுளி வகையி னேற்றக்
கரிபரி யிரதங் காலாள் கணக்கறு கரையில் வேலை
எரிமணி திரையின் வீசுங் கங்கையா றேறிற் றன்றே.

குரிசிலது ஏவலால் - ஆடவரிற் சிறந்த பரதனது கட்டளையால், அ குரகதம் தேர் வல்லானும் - குதிரைகள் பூட்டிய தேரைச் செலுத்துதலில் வல்ல அச் சுமந்திரனும், வரிசையின் வழாமை நோக்கி - (ஏற்றுதற்கு உரிய) வரிசையில் தவறாது பார்த்து, மரபுளி - முறைப்படி, வகையின் ஏற்ற - (அவை நன்கு அடங்கும்) வகையில் ஏற்ற, கரி-யானைகளும்,

பரி - குதிரைகளும், இரதம் - தேர்களும், காலாள் - காலாட்களும், கணக்கு அறு - தனித் தனியே எண்ணிப் பண்ணும் கணக்கு அற்றதும், கரை இல் வேலை - (தொகுதியாகப் பார்க்கும்போது பரப்புக்கு) எல்லை இல்லாததுமான அச்சேனைக் கடல், எரி மணி - ஒளிவிடும் மணிகளை, திரையின் வீசும் - அலைகளால் அள்ளி வீசுகின்ற, கங்கை ஆறு ஏறிற்று - கங்கை ஆற்றைக் கடந்தது. அன்று, ஏ : அசை.

இதனுள், படைகள் கங்கையைக் கடந்தமையைத் தொகுத்துக் கூறி, மேல் வரும் கவிகளில் அவற்றைத் தனித்தனியாக வகைப்படுத்தி விரித்துக் கூறுகின்றார். அத்தொகுதியைக் கடலாக உருவகித்து, கடல் ஆற்றைக் கடந்தது என்ற நயம் காணத்தகும்.

(பி - ம்.) 2. வழாமல்.
3. கணக்கில; கரையில் சேனை.
4. எரிமணித்திரைகள், எரிமணிக்கரையின். (48)

யானைகள் நீந்திச் செல்லுதல்

1046. இடிபடு முழக்கம் பொங்க வினமழை மகர நீரை
முடிவுற முகப்ப வூழி யிறுதியின் மொய்ப்ப போலக்
கொடியொடு வங்கம் வேலைக் கூம்பொடு படர்வ போல
நெடியகை யெடுத்து நீட்டி நீந்தின நெடுங்கை வேழம்.

நெடு கை வேழம் - நீண்ட வரிசையாக அமைந்த யானைகள், ஊழி இறுதியில் - யுகமுடிவில், இனம் மழை - (பெருங்) கூட்டமான மேகங்கள், மகரம் நீரை முடிவு உற முகப்ப - கடல் நீரை முற்றும் பருகுமாறு, இடிபடும் முழக்கம் பொங்க - இடியால் உண்டாகும் முழக்கம் மிக, மொய்ப்ப போல - (கடலில்) நெருங்குவனபோல (நெருங்கி), கொடியொடு கூம்போடு வங்கம் - கொடியோடும் பாய்மரத்தோடும் கூடிய கப்பல்கள், வேலை படர்வபோல - கடலில் செல்வனபோல, நெடிய கை - (தம்முடைய) நீண்ட துதிக்கைகளை, எடுத்து நீட்டி - உயர்த்தி நிறுத்திக்கொண்டு, நீந்தின - (ஆற்றில்) நீந்திச்சென்றன.

நெடுங்கை வேழம் நீந்தின என்க. கை - ஒழுங்கு, வரிசை; "கையமை விளக்கம்" (முல்லைப் : 49). யானைகள் பிளிற்றொலியோடு நெருங்கினமைக்கு, யுகமுடிவில் மேகத்திரள் இடியோசையோடு கடல் நீரைப் பருக நெருங்குதலையும், யானைகள் நீரில் நீந்திச் சென்றமைக்குக் கப்பல்கள் கடலிற் செல்லுதலையும் முறையே உவமையாகக் கொள்க. யானைகள் உருவத்தால் கப்பல் போன்றன. மகர நீர் - சுறாமீன்களை யுடைய நீர்; கடல். "அருங்கடை யுகந்தனில் அசனி மாமழை... கிளர்ந்தென" (1008) என்பது முதலிரண்டடிகளுடன் ஒப்பு நோக்கத் தகும்.

(பி - ம்.) 1. பொங்கவிண்மழை, ஏங்கவினமழை, ஏங்கவிண்மழை.
3. கொடியொடும் வங்கம், கூம்பொடும்.
4. நெடுங்கையானை, நெடியானை. (49)

1047. சங்கமு மகர மீனுந் தரளமு மணியுந் தள்ளி
வங்கநீர்க் கடலும் வந்து தன்வழிப் படர மானப்
பொங்குவெங் களிறு நூக்கக் கரையொரீஇப் போயிற் றம்மா
கங்கையு மிராமற் காணுங் காதலுற் றென்ன மாதோ.

மானம்-பெருமையையுடைய, பொங்கு வெம்களிறு-பெருந்திரளான கொடிய யானைகள், நூக்க - (நீந்துங்கால்) உந்தித் தள்ளுதலால், கங்கையும் - கங்கை நீரும், சங்கமும் - சங்குகளையும், மகரம் மீனும் - சுறுமீன்களையும், தரளமும் - முத்துக்களையும், மணியும் - (பிற) இரத்தினங்களையும், தள்ளி - தள்ளிக்கொண்டு, வங்கம் நீர் கடலும் - கப்பல்கள் செல்லும் நீர்ப்பரப்பையுடைய கடலும், தன் வழி வந்து படர - (நீர் குறைந்த) தன்னிடத்தில் வந்து பரவுமாறு, கரை ஒரீஇ - கரையைக் கடந்து, இராமன் காணும் காதல் உற்றது என்ன - இராமபிரானைக் காணும் ஆசை மிக்கெழுந்தது போல, போயிற்று - (தென்றிசை நோக்கி) ஓடிற்று.

அம்மா : வியப்பு. மாது, ஓ: அசை.

யானைகளின் மிகுதியால் கங்கை நீர் மேலெழுந்து கரைகடந்து தென்பால் ஓடியதனை, கங்கை இராமபிரானைக் காணும் ஆசையால் போவது போன்றிருந்தது எனத் தற்குறிப்பேற்றமாகக் கூறுகின்றார். கங்கைநீர் அவ்வாறு போதலால் அந்நீர் குறைந்த இடத்தில் கடல்நீர் வந்து பரவ ஏதுவாயிற்று. வங்கம், கடலுக்கு அடை. மகர மீன்: இரு பெயரொட்டு. பொங்குதல் - மிகுதல். ஒரீஇ - ஒருவி. கங்கையும்: உம்மை, உயர்வு சிறப்பு. உற்றென்ன: தொகுத்தல் விகாரம்.

கங்கையும், படர, போயிற்று என இயைக்க.

(பி - ம்.) 2. தன்வழிப்படர்வ, தனிவழிப் படர்வ.
4. காணுங்காதலதென்ன, காதலிற்றென்ன. (50)

1048. பாங்கினுத் தரிய மானப் படர்திரை தவழப் பாரின்
வீங்குநீ ரழுவந் தன்னுள் வீழ்மதக் கலுழி வெள்ளத்
தோங்கல்க டலைக டோன்ற வொளித்தவ னுயர்ந்த கும்பம்
பூங்குழற் கங்கை நங்கை முலையெனப் பொலிந்த மாதோ.

பாரின் வீங்கும் நீர் - கரை கடந்து மிக்கு ஓடும் கங்கை நீரின், அழுவம் தன்னுள் - ஆழமான பகுதியுள், வீழ் - விரும்பி நீந்திய, மதம் கலுழி வெள்ளத்து ஓங்கல்கள் - மதமாகிய கலங்கல் நீர்ப் பெருக்கை யுடைய யானைகளின், தலைகள் தோன்ற - தலைகள் (மட்டும்) மேலே

தெரிய, ஒளித்து - (உடல் முழுதும் நீரில்) மறைதலால், அவண் உயர்ந்த கும்பம் - அங்கே உயர்ந்து தோன்றிய (யானை) மத்தகங்கள், பாங்கின் உத்தரியம் மான - நல்ல மேலாடைபோல, படர்திரை தவழ - பரவிய அலைகள் (தம்மேல்) தவழ, பூ குழல் கங்கை நங்கை - பூச்சூடிய கூந்தலை உடைய கங்கையாகிய மங்கையின், முலை என பொலிந்த - தனங்களைப் போல விளங்கின.

மாது, ஓ : அசை.

ஆழமான நீர்ப்பகுதியுள் நீந்தின யானைகளின் தலைகள்மட்டும் மேலே தெரிய, அவை, கங்காதேவியின் தனங்கள் போலக் காணப் பட்டன; நீரலைகள் அவற்றின்மேல் பரவிப் படிவது, உத்தரியமிட்டது போன்றிருந்தது. பாங்கின் - பாங்கான; நல்ல. பார் - வரம்பு; கரை. அழுவம் - ஆழம். வீழ்தல் - விரும்புதல். ஒளித்து - ஒளித்தலால்; ஒளிக்க என்ற செயவென் எச்சத் திரிபு.

இப்பாடல் ஒரு பிரதியில் இல்லை. சில அச்சுப் புத்தகங்களிலும் ஓலைச் சுவடிகளிலும் இது, 'ஊடுற நெருக்கி' (1051) என்றதன்பின் காணப்படுகின்றது.

(பி - ம்.) 2. விமுமதக்; கலுழிவேழத்து.
3. ஓங்கியதலைகடோன்ற; ஒளிபெறவுயர்ந்த கொன்றைப்.
4. கங்கைமங்கை; பொலிந்ததம்மா, பொலிந்ததன்றே. (51)

தேர்கள் படகில் ஏற்றப்படுதல்

1049. கொடிஞ்சொடு தட்டு மச்சு மாழியும் கோத்த மொட்டும்
நெடுஞ்சுவர்க் கொடியும் யாவு நெறிவரு முறையி னீக்கி
விடுஞ்சுவற் புரவி யோடும் வேறுவே றேற்றிச் சென்ற
மடிஞ்சபி னுயிர்கள் கூட்டும் வினையென வயிரத்தேர்கள்.

கொடிஞ்சொடு - கொடிஞ்சி என்னும் உறுப்போடு, தட்டும்—, அச்சும்—, ஆழியும் - சக்கரமும், கோத்த மொட்டும் - கோக்கப்பட்டு உச்சியில் அமைந்த மொட்டுப் போன்ற உறுப்பும், நெடு சுவர் கொடியும் - உயர்ந்த இரு பக்கங்களிலும் நாட்டிய கொடிகளும், யாவும் - பிற உறுப்புக்கள் யாவும், நெறிவரும் முறையின் - (முன்பு) அமைந்த முறையினின்றும், நீக்கி - (தனித்தனியே) பிரிக்கப்பெற, (அவற்றை) விடும் - பூட்டு விடப் பெற்ற, சுவல் புரவியோடும் - (அழகான) பிடரி மயிரையுடைய குதிரைகளுடனே, வேறு வேறு ஏற்றி - வேறு வேருக ஏற்றிக்கொண்டு, உயிர்கள் மடிஞ்ச பின் - உயிர்கள் மாய்ந்த பிறகு, கூட்டும் - (அவ்வுயிர்களை மற்ருேர் உடம்பில்) சேர்க்கின்ற, வினை என - இருவினைகளைப்போல, சென்ற - (நாவாய்கள்) சென்றன.

நாவாய் என்ற எழுவாய் வருவித்துரைக்கப் பெற்றது.

தேர்களை அப்படியே படகுகளில் ஏற்றுதல் ஆகாமையின், அவற்றின் உறுப்புக்களைத் தனித்தனியே பிரித்துத் தொகுத்து, அத்தொகுதிகளையும், குதிரைகளையும் வேறுவேருக ஏற்றினர். உறுப்புக்கள், பிரிக்கப்படாத நிலையில் தேர்கள் உயிரொடு கூடிய உடம்பு எனவும், பிரித்தபின் உயிரற்ற உடம்புகள் எனவும், மீண்டும் கோக்கப்படின் உயிர் பெற்ற புதிய உடம்பு எனவும் கொண்டு, ஓர் உடம்பின் நீங்கிய உயிரை வேருேர் உடம்பிற் புகுத்தும் இரு வினைகள் போல, நாவாய்கள் அமைந்தன என உவமையையும் பொருளையும் பொருத்திக் காண்க. மொட்டு - தேரின் கூம்பு; இது தேரின் உச்சியில் தாமரை மொட்டின் வடிவாகப் பண்ணி அமைக்கப் படுவது. கொடிஞ்சு - தேர்த்தட்டின் முன்னே, தட்டில் அமர்வோர் பிடித்துக்கொள்வதற்கு ஏற்றவாறு தாமரை மொட்டின் வடிவமாகப் பண்ணி நடுவது; இப்பெயர் கொடிஞ்சி, கொடுஞ்சி, கொடுஞ்சு எனவும் வழங்கும். தட்டு - அமரும் இடம். சுவர் - தட்டைச் சுற்றிலும் குத்துக்கால்களாக நடப்பெற்று, மேற் கூரையைத் தாங்கச் சுவர் போல அமைவது. அச்சும் ஆழியும் வெளிப்படை. "கொடிஞ்சி நெடுந்தேர்" (மதுரைக். 752); "நெரிந்தன தடஞ்சுவர்" (சுந்தர: 838); மடிஞ்ச - மடிந்த; போலி.

(பி - ம்.) 2. நெடுஞ்சுவர், நெடுஞ்சுடர்க்; முறைமைநீக்கி, முறைமைநீக்கி.
4. மடிந்தபினுயிர்கள், மடிந்தமன்னுயிர்கள்; வினையன; மானத்தேர்கள். (52)

குதிரைகள் படகிற் சென்றமை

1050. நாலிரண் டாய கோடி நவையில நாவாய் மீதாச்
சேறிரண் டனைய வாய கதியொடு நிமிரச் சென்ற
பாறிரண் டனைய மெய்ய பயந்திரண் டனைய நெஞ்ச
காறிரண் டனைய கால கடுநடைக் கவினப் பாய்மா.

பால் திரண்டால் அனைய மெய்ய - பால் திரண்டு வடிவு கொண்டாற் போன்ற உடம்பினை உடையனவும், பயம் திரண்டால் அனைய நெஞ்சு - அச்சம் திரண்டாற்போன்ற மனம் உடையனவும், கால் திரண்டால் அனைய கால - காற்றுத் திரண்டாற்போன்ற கால்களை உடையனவும், கடு நடை - மிக விரைந்த செலவினையும், கவினம் - கடிவாளத்தையும் உடைய, பாய்மா - குதிரைகள், மீது ஆக - தம்மீது பொருந்த (ஏற்றப்பட), நால் இரண்டு ஆய கோடி நவை இல நாவாய் - எட்டுக் கோடியளவான குற்றமற்ற படகுகள், சேல் திரண்டால் அனைய ஆய கதியொடு - சேல் மீன்கள் திரண்டு சென்ருற் போன்ற செலவோடு, நிமிர சென்ற - நீளச் சென்றன.

வெண் குதிரைகளாதலால் 'பால் திரண்டனைய மேனி' என்ருர். குதிரைகள் இயல்பிலே மருட்சி உடையன; இங்கே படகில் ஏற்றப்

படுதலால் மேலும் மருட்சி மிகுவனவாயின; எனவே, 'பயம் திரண்டனைய நெஞ்ச' என்றார். நடையின் வேகம்பற்றி, 'கால் திரண்டனைய கால' என்றார். நாலிரண்டாய கோடி என்றது மிகுதி குறித்து நின்றது; இதனால் குதிரைகளின் மிகுதியும் புலப்படும்; இவ்வெண்ணைக் குதிரைகளுக்காக்கினும் அமையும். மீதாக என்றதன் இறுதி தொக்கது. திரண்டால் அனைய என்பது திரண்டனைய என்றானதும் தொகுத்தல்.

(பி - ம்.) 1. நவையினுவாய்கண்மிதாச், நாவாய்கடண்ணீர்ச், நாவாய்கணன்னீர் நாவாய்தண்ணீர்ச், நன்னீர்ச்.
2. அனையவான; நதியிற், நீர்மேற்.
4. காலக்கடிநடைக். (53)

பெண்கள் படகிற் செல்லுதல்

1051. ஊடுற நெருக்கி யோடத் தொருவர்முன் னொருவர் கிட்டிச்
சூடகத் தளிர்க்கை மாதர் தழுவினர் துவன்றித் தோன்ற
பாடியல் களிமால் யானைப் பந்தியங் கடையிற் குத்தும்
கோடுகள் மிடைந்த வென்ன மிடைந்தன குவவுக் கொங்கை.

சூடகம் தளிர் கை மாதர் - வளையல்களை அணிந்த தளிர்போலும் கைகளையுடைய மகளிர், ஓடத்து ஊடு - ஓடங்களில், ஒருவர் முன் ஒருவர் கிட்டி - ஒருவர்முன் ஒருவராகச் சேர்ந்து, உற நெருக்கி - மிகவும் நெருக்கி, தழுவினர் - (ஒருவரையொருவர்) தழுவிக்கொண்டு, துவன்றி தோன்ற - நிறைந்து நிற்க, பாடு இயல் - பெருமை பொருந்திய, களி - மதக்களிப்புடைய, மால் யானை பந்தி - பெரிய யானை வரிசைகளின், அம் கடையில் குத்தும் கோடுகள் - அழகிய நுனியால் குத்தத்தக்க கொம்புகள், மிடைந்த என்ன - நெருங்கினாற்போல, குவவுகொங்கை - (மாதர்களின்) திரண்ட தனங்கள், மிடைந்தன - நெருங்கின.

மாதர் கொங்கைக்கு யானைக் கொம்பை உவமை கூறுவதுண்டு; எனவே, திரண்டு நின்ற மகளிரின் நிமிர்ந்த தனங்கள் நெருங்கித் தோன்றிய காட்சி, ஒன்றையொன்று குத்துமாறு யானைக் கொம்புகள் முன்னிட்டு நின்றன போன்றது என்கின்றார். தழுவினர் : முற்றெச்சம்.

(பி - ம்.) 1. நெருங்கி; முன்பொருவர்; கிட்டச்.
2. மாதர் குழுமினர்; தோன்றி.
3. ஆடியல், ஆடிளம்; களிநல்யானை, களிமாயானைப்; கடையிற்குத்தக், பந்தியங்கெதிர்ந்துகுத்தக், அத்தியங்கடையிற்குத்தக்.
4. மிடைந்ததென்ன மிடைந்ததக்; குலாவு கொங்கை. (54)

1052. பொலங்குழை மகளிர் நாவாய் போக்கினென் றென்று தாக்க
மலங்கின ரிரண்டு பாலு மறுகினர் வெருவி நோக்க
அலங்குநீர் வெள்ளந் தள்ளி யழிதர வங்கு மிங்கும்
கலங்கின வெருவிப் பாயுங் கயற்குல நிகர்த்த கண்கள்,

நாவாய் - படகுகள், போக்கின் - தம் செலவின்கண், ஒன்று ஒன்று தாக்க - ஒன்றோடொன்று மோதுதலால், பொலம் குழை மகளிர் - (அவற்றிலுள்ள) பொன்னாலியன்ற குண்டலங்களை அணிந்த பெண்கள், வெருவி - அச்சங்கொண்டு, மலங்கினர் மறுகினர் - மனங் கலங்கி மறுக்கமுற்று, இரண்டு பாலும் நோக்க - இரண்டு பக்கமும் (மாறி மாறி மருண்டு) பார்க்க, கண்கள் - (அவர்களுடைய) கண்கள், அலங்கு நீர் வெள்ளம் தள்ளி அழிதர - அசையும் வெள்ளத்தால் தள்ளுண்டு வலிகெடுதலால், வெருவி கலங்கின - அஞ்சி நிலைகுலைந் தனவாகி, அங்கும் இங்கும் பாயும் - அங்கும் இங்குமாகத் துள்ளிப் பாய்கிற, கயல் குலம் நிகர்த்த - கயல்மீன் கூட்டத்தைப் போன்றன.

படகுகள் ஒன்றோடொன்று தாக்கும்போது உண்டாகும் அதிர்ச்சியால், அவற்றில் உள்ள மகளிர் அஞ்சிக் கலங்கி மருண்டு அங்கும் இங்கும் பார்க்க, அந்நிலையில் அவர் கண்கள், வெள்ளத்தால் அலைப்புண்ட கயல்மீன்கள் அங்குமிங்கும் துள்ளிப் பாய்வது போன்று இருந்தன. கண்கள் நிகர்த்த என்க. அழிதர : தர, துணைவினைப் பகுதி. அழிதல் - வலிகெடுதல். மலங்கினர், மறுகினர், கலங்கின: முற்றெச்சம்.

(பா. வே.) 1. நாவாய்ப்போக்கின்.
2. வெருவிநோக்கி.
3. அலங்கனீர், இலங்குநீர்; வெள்ளந்தன்னில்; அழுந்தலால், எழுதலால்; இழிதர, வழிதர.
4. கலங்கலின்; நிகர்ப்ப. (55)

1053. இயல்வுறு செலவி னாவா யிருகையு மெயினர் தூண்டத்
துயல்வரு துடுப்பு வீசுந் துவலைகண் மகளிர் மென்றூ
சுயல்வுறு பரவை யல்கு லொளிபெறத் தளிப்பவுள்ளத்
தயர்வுறு மதுகை மைந்தர்க் கயாவுயிர்ப் பளித்த தன்றே.

இயல்வு உறு செலவில் நாவாய் - பொருந்திய விரைவான போக்கினையுடைய ஓடங்களை, இரு கையும் எயினர் தூண்ட - இரண்டு பக்கங்களிலும் (இருந்து ஓட்டும்) வேடர்கள் (துடுப்புக்களால்) செலுத்தலால், துயல்வரு துடுப்பு வீசும் துவலைகள் - (முன்னும் பின்னு மாக) அசையும் துடுப்புக்கள் (அள்ளி) வீசும் நீர்த்துளிகள், மகளிர் - பெண்களின், மென் தூசு உயல்வு உறு - மெல்லிய ஆடை அசையப் பெற்ற, பரவை அல்குல் ஒளி பெற தளிப்ப - பரந்த அல்குல் பார்வையிற் படும் வண்ணம் சிந்தி ஆடையை நனைக்க, (அது) உள்ளத்து அயர்வு உறு - மனத்தளர்ச்சி மிக்க, மதுகை மைந்தர்க்கு - வலிமையையுடைய வீர இளைஞருக்கு, அயா உயிர்ப்பு அளித்தது - நெடு மூச்சை உண்டாக்கிற்று.

அன்று, ஏ: அசை. மெல்லிய ஆடை நனைந்து உடம்போடு ஒட்டுதலால், மகளிரின் மறைந்த அங்கம் புலப்பட, அது கண்ட ஆடவர் சிலர், தாம் மகளிரோடு இன்புற மாட்டாத அவலம் வந்ததை

எண்ணி நெடுமூச்செறிந்தனர். இயல்பு - பொருந்துதல். உறு செலவு - மிக்க செலவு; விரைந்த போக்கு. கை - பக்கம். துவலை - திவலை. தளித்தல் - சிந்துதல்.

(பி - ம்.) 1. இயலுறு; செல்விரைவாய்; இருகையின்.
2. துயல்வன; திவலைகண் மகளிர்.
3. உயலுறு. உயர்வுறு, இயல்புறு, இயல்பெறு; ஒளிப்பறத்தளிர்ப்ப. ஒளிபுறத்தளிப்ப, ஒளிபெறத் துளிப்ப; அளித்ததம்மா, ஒழிந்த தன்றே. ஒழிந்ததம்மா, ஒழிந்தவன்றே; அவாவுறப் பொலிந்த தன்றே.
4. மதுகை மைந்தர், மங்கை; மைந்தர்க்கு அயர்வுயிர்ப்பு. (56)

நாவாய்களின் வருணனை

1054. இக்கரை யிரைத்த சேனை யெறிகடன் முகந்த வேகி
அக்கரை யடைய வீசி வறியன வணுகு நாவாய்
புக்கலை யாழி நன்னீர் பொறுத்தன பொழிந்து போக்கி
அக்கண முவரி மீளு மகன்மழை நிகர்த்த வம்மா.

இ கரை - (கங்கையின்) வடகரையில், இரைத்த - ஆரவாரித்த, சேனை எறி கடல் - சேனைத் திரளாகிற அலைமோதும் கடலை, முகந்த ஏகி - வாரிக்கொண்டு போய், அ கரை - தென்கரையில், அடைய வீசி- முழுதும் இறக்கிவிட்டு, வறியன அணுகும் - பாரம் அற்றனவாக (மீண்டு வடகரையைச்) சேர்கிற, நாவாய் - ஓடங்கள், அலை ஆழி புக்கு - அலைகிற கடலில் புகுந்து, பொறுத்தன நல் நீர் - (தாம் பருகித்) தாங்கிய நல்ல நீரை, பொழிந்து போக்கி-(உரிய இடங்களில்) மழையாகப் பொழிந்து தள்ளி (நீரற்றனவாகி), அ கணம் - அப்போதே, உவரி மீளும் - (மீண்டும் நீர் கொள்ளுதற்குக்) கடலினிடம் வருகின்ற, அகல் மழை நிகர்த்த - பெரிய மேகங்களை ஒத்திருந்தன.

அம்மா : அசை; வியப்பெனினுமாம்.

மேகங்களின் செயலைப் படகுகளின் செயலுக்கு ஒப்புக் கூறிய மைக்கு இயையப் படைத்திரளைக் கடலாக உருவகித்தார். கடல்நீர் உப்பாயினும், மேகங்கள் பொழிவது நல்ல நீரேயாகலின், நன்னீர் பொறுத்தன என்றார்.

(பி - ம்.) 1. இறுத்த சேனை; முகந்துவெஃகி, முகந்தவெஃகு முழுதமேற, இனிதினேற்றி.
2. நணுகு நாவாய்.
3. போக்கிப்போக்கி, போக்கிமீள, பொங்கப்போக்கி, பொங்கிக்கக்கி, பொங்கியேங்கி, பொங்கிப்பொங்கி, பொழிந்து பொங்கி.
4. அக்கணத்தவரி, கக்கினவுவரி; கனமழை, கணமழை; மிகர்த்த மாதோ. (57)

படகுகள் கப்பல் போன்றமை

1055. அகிலிடு தூப மன்ன வாய்மயிற் பீலி யார்த்த
முகிழுடை முரண்மாத் தண்டு கூம்பென முகிலின் வண்ணத்
துகிலோடு தொடுத்த செம்பொற் றட்டிடைத் தொடுத்த முத்தின்
நகுகொடி நெடிய பாயா நவ்வெனச் சென்ற நாவாய்.

அகில் இடு தூபம் அன்ன-அகிற்கட்டையிட்டு எழுப்பும் புகை போன்ற, ஆய் மயில் பீலி ஆர்த்த - அழகிய மயிற்பீலி கட்டப்பெற்ற, முகிழ் உடை - (உச்சியில்) குமிழையுடைய, முரண் மா தண்டு-வலிய பெரிய தண்டு, கூம்பு என - பாய்மரமாகவும், முகிலின் வண்ணம் துகிலொடு தொடுத்த – வெண்முகில் போன்ற நிறமுடைய சீலை கட்டப்பட்டனவும், செம்பொன் தட்டிடை தொடுத்த - நல்ல பொன் தகட்டில் நடப்பட்டனவும் (ஆகி), முத்தின் நகு கொடி - (அலங்கரித்த) முத்துக்களோடு விளங்கும் கொடிகள், பாய் ஆக - பாயாகவும் கொண்டு, நாவாய் - (சில) படகுகள், நவ் என சென்ற - கப்பலைப் போலச் சென்றன.

சேனையின் விருதுப் பொருளான, மயிற்பீலிக் குடை, கொடி முதலியன ஏற்றிச்சென்ற படகுகள், நடுவில் நிறுத்திய மயிற்பீலிக் குடை பாய்மரம் போலாக, அதனோடு இணைந்த துகிற்கொடி பாய்ச் சீலைபோலாக, அவை பாய்க்கப்பல் போலச் சென்றன என்கின்றார்.

நவ் - நாவம்; கப்பல்; இது நவ்வி எனவும் வழங்கும்: யுத்த. 2282, பார்க்க. நாவாய் - படகு: இச்செய்யுளுக்கு வேறு வகையாகவும் பொருள் கூறுவர். 'குடைகளும், ஆலவட்டமும், மயிற்பிஞ்சங்களும், கொடிகள் முதலானவையும் ஓடத்தில் ஏற்றிக்கொண்டு போகிற படியினாலே, பாய்கள் கட்டினாற்போல அதிகச் சுருக்காய் நடந்தது' என்ற பழைய வசனம் இங்கு நோக்கத்தகும். 'அகிலிடு......... தண்டு' என்றது மயிற்பீலிக் குடையைக் குறிக்கும். வசனத்தில் மயிற்பிஞ்சம் என்பதும் அது.

(பி - ம்.) 1. தூபமென்ன; பீலியாத்த.
2. முகிலிடு, முகிலிடை, முகிழிடு.
3. செம்பொற்றகட்டிடைத், செம்பொன்றகட்டிடைத்; தொகுத்த முத்தம்.
4. பாயின்நவ்வெனச், நண்டெனச், இனமெனச், உடுவெனச், கலமெனச், மரமெனச்; பாயானவ்வெனச். (58)

படகுகள் ஆகாய விமானம் போன்றமை

1056. ஆனனங் கமல மன்ன மின்னன வமுதச் செவ்வாய்த்
தேனவர் குழலா ரேறு மம்பிகள் சிதறு முத்தம்
மீனென விரிந்த கங்கை விண்ணெனப் பண்ணை முற்றி
வானவர் மகளி ரூரு மானமே நிகர்த்த மாதோ.

கமலம் அன்ன ஆனனம் - தாமரை மலரைப் போன்ற முகமும், அமுதம் செவ்வாய் - அமுதம் ஊறும் சிவந்த வாயும் உடைய, மின் அன்ன - மின்னற்கொடி போன்ற, தேன் அலர் குழலார் ஏறும் அம்பிகள் - (சூடிய பூக்களின்) தேன் பரவும் கூந்தலுடைய மகளிர் ஏறிச்சென்ற ஓடங்கள், கங்கை விண் என - கங்கையின் நீர்ப்பரப்பு ஆகாயம் போலவும், சிதறும் முத்தம் மீன் என - (அலைகளால்) சிதறும் முத்துக்கள் விண்மீன்கள் போலவும் (தோன்ற), வானவர் மகளிர் - தேவமங்கையர், பண்ணை முற்றி - நீர் விளையாட்டை முடித்துக் கொண்டு, ஊரும் - ஏறிச் செல்கிற, மானமே நிகர்த்த - விமானங்களையே போன்றன.

மாது, ஓ: அசை.

ஓடங்களில் சென்ற மகளிர், வடிவத்தால் தேவமங்கையர்களைப் போல விளங்க, அவர்களைத் தாங்கிய ஓடங்கள் தேவ விமானங்களைப் போல விளங்கின எனக் கற்பனை செய்து, அதற்கேற்பக் கங்கைநீர்ப் பரப்பு ஆகாயம் போன்றது எனவும் கூறுகின்றார். பண்ணை - விளையாட்டு; இங்கே நீர்விளையாட்டைக் குறித்தது: பால. 1005, பார்க்க. அம்பிகள் நிகர்த்த எனக் கூட்டுக.

பி. ம்.) 1. ஆனபொற் கமலத்தன்ன, மின்னென, இனமென, கமலத்தன்ன மினமென, கமலமன்ன மென்மலர், கமலத்தன்னத்தினமென.
2. தேனனே, தேனகு; சிந்துமுத்தம், சிறந்த முத்தம்.
4. வானரமகளிருரும்; விமானமே; நிகர்வமாதோ, போன்றதன்றே.
(59)

1057. துளிபடத் துழாவு திண்கோற் றுடுப்பிரு காலிற் றோன்ற
நளிர்புனற் கங்கை யாற்றி னண்டெனச் செல்லு நாவாய்
களியுடை மஞ்ஞை யன்ன கனங்குழைக் கயற்கண் மாதர்
ஒளிரடிக் கமலந் தீண்ட வுயிர்படைத் தனவே யொத்த.

துளி பட துழாவு - நீர்த்துளிகள் சிதறும்படி துழாவுகின்ற, திண் கோல் துடுப்பு - வலிய கோலாகிய துடுப்புக்கள், இரு காலில் தோன்ற - இரண்டு பக்கங்களிலும் (கால்களைப் போலத்) தோன்ற, நளிர் புனல் கங்கையாற்றில் - குளிர்ந்த நீரையுடைய கங்கையாற்றிலே, நண்டு என செல்லும் - நண்டுகளைப் போலச் செல்லுகிற, நாவாய் - ஓடங்கள், கனம் குழை - கனமான குண்டலங்களையும், கயல் கண் - கயல்மீனைப் போன்ற கண்களையும் உடைய, களி உடை(ய) மஞ்ஞை அன்ன - களிப்புள்ள மயில்களைப் போன்ற, மாதர் - பெண்களின், ஒளிர் அடி கமலம் தீண்ட - செவ்வொளி தரும் அடித்தாமரைகள் படுதலால், உயிர் படைத்தனவே - ஒத்த உயிரைப் பெற்றனவே போல இருந்தன.

"காலுடை நெடுஞெண்டிற் சென்றது" (681) என முன்னே ஓடத்துக்கு நண்டை உவமை கூறியவர், இங்கும் அதனைக் கூறி,

தேவமங்கையரையொத்த மகளிரின் பாதங்கள் படுதலால், ஓடமே உயிர்பெற்றுச் செல்வது போன்றிருந்தது எனத் தற்குறிப்பேற்றமாக்குகின்றார். இருகால் - இரண்டு பக்கம்; துடுப்புக்கள் இரண்டின்மேற் பலவாகலானும், நண்டுக்கும் கால்கள் அங்ஙனமாகலானும், இரண்டு கால்கள் எனல் பொருந்தாது.

(பி - ம்.) 1. துழவு; காலிற்றேன்றும்.
2. களிபுனற், நண்டெனச் சென்ற.
4. ஒளியடிக்; தீண்டி. (60)

முனிவர் வான்வழியே செல்லுதல்

1058. மையறு விசும்பின் மண்ணின் மற்றுமோ ருலகின் முற்றும்
மெய்வினை தவமே யன்றி வேறுமொன் றுளதோ கீழோர்
செய்வினை நாவா யேறித் தீண்டலர் மனத்திற் செல்லும்
மொய்விசும் போட மாகத் தேவரின் முனிவர் போனர்.

முனிவர் - (வசிட்டன் முதலிய) இருடிகள், கீழோர் வினை செய் நாவாய் - கீழோர், தொழில் செய்தற்குரிய ஓடங்களில், தீண்டி ஏறலர் - தொட்டு ஏறாதவர்களாய், மனத்தில் செல்லும் - நினைத்த வளவில் (மனோவேகமாகச்) செல்லத்தக்க, மொய் விசும்பு ஓடம் ஆக - வலிய வான்வழிச் செலவே ஓடமாகக் கொண்டு, தேவரின் போனர் - தேவர்களைப் போல (மறு கரைக்கு)ச் சென்றார்கள்; (எனவே), மை அறு விசும்பில் - குற்றமற்ற விண்ணுலகிலும், மண்ணில் - மண்ணுலகிலும், மற்றும் ஓர் உலகில் - வேறும் ஓர் (எந்த) உலகத்திலும், முற்றும் மெய்வினை - முழுதும் உண்மையான (பொய்யின்றிப் பலித்தற்குரிய) செயல், தவமே அன்றி - தவமே அல்லாமல், வேறு ஒன்றும் உளதோ - (அதற்கு ஈடாக) வேறு ஏதேனும் உண்டோ? (இல்லை).

வேண்டிய வேண்டியாங்கு எய்துவித்தலில் தவறாதது தவமாகலின், அதனை 'மெய்வினை' என்று சுட்டி அத்தவத்தைச் செய்து சித்தி பெற்ற முனிவர் நினைத்த மாத்திரத்தில் எழுந்து வான்வழியே செல்லும் ஆற்றல் படைத்தனர் என, அதன் பயன் கூறினார். ஓடங்களைச் செய்தலும் கீழோர் தொழிலாகலின், அதனைத் தீண்ட மனம்பற்றாது வான்வழிச் சென்றனர் என்றது, முனிவரின் ஆசார மிகுதி கூறியவாறு. வேறும் ஒன்று என்றவிடத்து, உம்மை பிரித்துக் கூட்டப்பெற்றது. ஏறித் தீண்டலர் என்றவிடத்து, தீண்டி ஏறலர் என மாறி விகுதி பிரித்துக் கூட்டப் பெற்றது. உளதோ என்றதில் ஓ, எதிர்மறை.

(பி - ம்.) 1. மையுற; மாறுமோருலகின்.
2. மேலுமொன்று.
3. தீண்டிவர், ஏறித்தீண்டிலாவகையிற், தீண்டிடாவகையிற்.
4. மொய்விசும்புடேமாகத். (61)

பரிவாரங்கள் கங்கையைக் கடத்தல்
(கலிவிருத்தம்)

1059. அறுபதி னாயிர மக்கு ரோணியென்
றிறுதிசெய் சேனையு மெல்லை தீர்நகர்
மறுவறு மைந்தரு மகளிர் வெள்ளமும்
செறிதிரைக் கங்கைபின் கிடக்கச் சென்றவே.

அறுபதினாயிரம் அக்குரோணி என்று—, இறுதி செய் - வரையறை செய்யப்பெற்ற, சேனையும் - படைத்திரளும், எல்லை தீர் நகர் - இறுதி யற்ற அயோத்தி நகரில் வாழும், மறு அறு மைந்தரும் - குற்றமற்ற ஆடவரும், மகளிர் வெள்ளமும் - பெண்களின் கூட்டமும், செறி திரை கங்கை பின் கிடக்க - செறிந்த அலைகளை உடைய கங்கை ஆறு பின்னே தங்குமாறு, சென்ற - (அதனைக் கடந்து) சென்றன.

ஏ! ஈற்றசை.

இதுகாறும், பலரும் பலவும் ஆறுகடந்த செய்தியை வகைப் படுத்தி விரித்துக் கூறியவர், இறுதியில் அதனைத் தொகுத்துக் கூறி முடித்தார். சேனை அறுபது ஆயிரம் அக்குரோணி அளவு கொண்டது என்பது முன்னே (1002) கூறப்பெற்றது. அயோத்தி என்றும் அழியாத பெருமை உடையதாகலின், 'எல்லை தீர்நகர்' என்றார். மாந்தர் - ஆடவர். இச்செய்யுளுள் உயர்திணையும் அஃறிணையும் விரவி அஃறிணை முடிபேற்றன. மறுவறு என்றதனை மகளிர்க்கும் கூட்டுக.

(பா - ம்.) 1. அறுபதினாயிரமாமக்கோணியின்.
2. இறுதிசெல்.
3. மாந்தரும், மாக்களும். (62)

பரதன் படகு ஏறுதல்

1060. சுழித்துநீர் வருதுறை யாற்றைச் சூழ்படை
கழித்துநீங் கியதெனக் கள்ள வாசையை
அழித்துவே றவனிபண் டாண்ட வேந்தரை
இழித்துமே லேறினான் றானு மேறினான்.

சூழ் படை - (தன்னைச்) சூழ்ந்து வந்த சேனை முழுதும், நீர் சுழித்து வருதுறை - நீர் சுழித்துக்கொண்டு வரும் துறைகளையுடைய, ஆற்றை கழித்து நீங்கியது என - கங்கை ஆற்றைக் கடந்து சென்றதாக, கள்ளம் ஆசையை அறுத்து - வஞ்சனையை உடைய ஆசையை (முற்றும்) ஒழித்து, பண்டு அவனி ஆண்ட வேறு வேந்தரை இழித்து - முன்னே உலகை ஆண்ட (தன் குலத்துப்) பிற அரசரை எல்லாம் (தன் உயர் குணங்களால்) கீழ்ப்படுத்தி, மேல் ஏறினான் - புகழில் மேம்பட்டவனான பரதன், தானும் ஏறினான் - தானும் (ஓடத்தில்) ஏறினான்.

இறுதியில் பரதன் ஆற்றைக் கடத்தற்குப் படகேறினமை கூறும் இதில், 'தானும் ஏறினுன்' என்ற உம்மையால், முன்னே கூறப்படாத தாய்மார் முதலியோரும், சுமந்திரனும், சத்துருக்கனும் ஏறினமை பெறப்படும். இதனேடு, குகனும் உடன் இருந்தமை அடுத்த கவியால் அறியலாகும். நீங்கியது என - கடந்துசென்றது என்று படகு செலுத்துவோர் தெரிவிக்க என்றலுமாம்.

பல அச்சுப் புத்தகங்களில் இதன்பின் கீழ்க்காணும் பாடலொன்று உளது. அஃது இவ்விடத்திற்கு இயைபுடையதாகத் தோற்றினும், பல சுவடிகளிலும், ஐயரவர்களின் கையெழுத்துப் பிரதியிலும் அஃது இல்லாமையாலும், அதன் பின்பகுதி பலவாறு வலிந்து பொருள்கொள நிற்பதாலும், அப்பாடலின்றியே தொடர்பு உய்த்துணரப்படுதலானும் அது மிகைப்பாடலெனக்கொண்டு இங்கே காட்டப்பெறுகிறது:

"தன்னன தம்பியுந் தாயர் மூவரும்
சொன்னதேர் வலவனுந் தூய தோழனும்
துன்னின ரேறலுந் துழாந்து டுப்பெனும்
நன்னயக் காலிஞ னடத்தன் மேயினுன்."

இவ்விடத்து ஒரு பிரதியில் மற்ருெரு பாட்டும், அதன்பின் 'கங்கை நீங்கு படலம் முற்றும்' என்ற தொடரும் காணப்படுகின்றன; அப் பாடல்,

"ஏறின ரிளவலோ டிரங்கு நெஞ்சுகொண்
டூறிய தாயரு முரிய சுற்றமும்
வேறுள பெருநதி நீங்கிப் பெட்பொடும்
கூறுதென் கரையிடைக் குழீஇய போதிலே"

என்பது. இதன்படி, அனைவரும் தென்கரை சேர்ந்தபின், குகன் தாய்மாரைப்பற்றிப் பரதனைக் கேட்டறிந்தானென்பதாகும்; இது படகிலேயே நிகழ்ந்ததாக மேலே பெறப்படுதலின், முன்னது பொருந்தாமை உணரலாகும்.

(பி - ம்.) 1. வருந்திரை, வரும்படை.
2. நீங்கியவெனக். 3. வென்றவனி.
4. அழித்துமேலேறினுன். (69)

கோசலையைப் பரதன் குகனுக்கு அறிமுகப்படுத்துதல்
(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

1061. சுற்றத்தார் தேவரொடுந் தொழநின்ற கோசலையைத்
தொழுது நோக்கிக்
கொற்றத்தார்க் குருசிலிவ ராரென்று குகன்வினவக்
கோக்கள் வைகும்

முற்றத்தான் முதற்றேவி மூன்றுலகு மீன்றானை
முன்னீன் றானைப்
பெற்றத்தாற் பெறுஞ்செல்வம் யான்பிறத்தலாற்றுறந்த
பெரியா ளென்றான்.

சுற்றத்தார் - சுற்றத்தினரும், தேவரொடும் - தேவர்களும், தொழ நின்ற - (தன்னை) வணங்கும்படி விளங்கிய, கோசலையை - கௌசல்யா தேவியை, குகன் நோக்கி - குகன் பார்த்து, (அவளைக் குறித்துப் பரதனிடம்), கொற்றம் தார் குருசில் - வெற்றிமாலையை யுடைய வீரனே, இவர் ஆர் என்று வினவ - இவர் யார் என்று கேட்க, (பரதன் கூறுவான் :) கோக்கள் வைகும் முற்றத்தான் - சிற்றரசர் பலரும் (செவ்வி பெறாது தங்கிக்) காத்திருத்தற்கிடமான முன்றிலை யுடைய சக்கரவர்த்தியின், முதல் தேவி - மூத்த பட்டத்துத் தேவி; மூன்று உலகும் ஈன்றானை - மூவுலகங்களையும் படைக்கும் பிரமனை, முன் ஈன்றானை - முதலில் (தன்னிடமாகப்) படைத்த திருமாலான இராமபிரானை, பெற்றத்தால் - (தன் புதல்வனாகப்) பெற்றதனால், பெறும் செல்வம் - அடைதற்கு உரிய பாக்கியத்தை, யான் பிறத்தலால் துறந்த - நான் ஒருவன் பிறந்ததனால் இழந்த, பெரியாள் என்றான் - பெரியவள் என்றான்.

தாய்மார் மூவருள், பலர் தொழநின்ற கோசலையின் சிறப்பு அந்த நிலையில் புலப்படுதலால், அவளைக் குறித்துக் குகன் முதலில் வினவலானான். வினவும்போதே 'இவர்' என மரியாதையோடு சுட்டுகின்றான். கோசலை, சக்கரவர்த்தியின் முதல் பட்டத்துத் தேவியாகலின் சுற்றத்தார் அனைவரும் வணங்குதற்கு உரியள்; தேவர் காரியம் முடிக்கப் பிறந்த இராமபிரானைப் பெற்றதனால் தேவரும் வணங்குதற்கு உரியவளானாள். திருமாலின் திருவுந்தியிலே முதலில் தோன்றினவன் பிரமனாகலின், 'மூவுலகு மீன்றானை முன்னீன்றான்' எனச் சிறப்பிக்கப்பெற்றான் இராமபிரான். பரதன், "யானென்றும் முடிவில்லாத துன்பத்துக் கேதுவானேன்" (1040) எனத் தன்னை முன்பு நொந்துகொண்டதுபோல, இங்கும், 'யான்பிறத்தலால் செல்வம் துறந்த பெரியாள்' என்றான். பெற்றதால் என்பது எதுகையின்பம் நோக்கிப் பெற்றத்தால் என விரிந்தது.

(பி - ம்.) 1. தொழுகின்ற.
2. வெற்றித்தார்க் குரிசில், வேந்தர்வைகும்.
3. மூவுலகும்; முன். (64)

வணங்கிய குகனைக் கோசலைக்கு அறிமுகப்படுத்துதல்

1062. என்றலுமே யடியின்மிசை நெடிதுவிழுந் தழுவானை
யிவனா ரென்று

கன்றுபிரி காராவின் றுயருடைய கொடிவினவக்
கழற்கால் மைந்தன்
இன்றுணைவ னிராகவனுக் கிலக்குவற்கு மிளையவற்கு
மெனக்கு மூத்தான்
குன்றனைய திருநெடுந்தோட் குகனென்பா னிந்நின்ற
குரிசி லென்றான்.

என்றலும் - (கோசலையைப்பற்றிக் குகனுக்குப் பரதன்) கூறிய அளவில், அடியின்மிசை - அவள் பாதங்களில், நெடிது விழுந்து - நெடிதாக (சாஷ்டாங்கமாக) விழுந்து, அழுவானை - அழுகின்ற குகனைக் குறித்து, கன்று பிரி கார் ஆவின் துயர் உடைய கொடி - இளங்கன்றைப் பிரிந்த புனிற்றுக் காராம் பசுவின் துயர் போன்ற துயரையுடைய கொடிபோல்வாளான கோசலை, இவன் ஆர் என்று வினவ - (இவ்வாறு அழும்) இவன் யார் என்று (பரதனைக்) கேட்க, கழல் கால் மைந்தன் - வீரக்கழலை அணிந்த கால்களையுடைய பரதன், இ நின்ற குரிசில் - இந்நிலையிலுள்ள இவ்வீரன், இராகவனுக்கு இன் துணைவன் - இராகவனுக்கு இனிய உயிர்த்தோழன்; இலக்குவற்கும் - இலக்குமணனுக்கும், இளையவனுக்கும் - அவன் தம்பியான சத்துருக்கனுக்கும், எனக்கும் —, மூத்தான் - அண்ணனாவான்; குன்று அனைய திரு நெடு தோள் - மலைபோலும் அழகிய உயர்ந்த புயங்களையுடைய, குகன் என்பான் - குகன் என்று பெயர் சொல்லப்படுவான், என்றான் —.

பரதன் கூறியதைக் கேட்டும், கோசலையை நேரே கண்டும் துயர மிகுதியால் மெய்யன்பனான குகனுக்கு அழுகை பிறந்தது. கோசலையின் துயரநிலை அவளைக் காண்போர் எவர்க்கும் புலனாகும். "கன்று பிரிந்துழிக் கறவை யொப்பக் கரைந்து கலங்கினாள்" (309) என்பதும் அதன் விசேடக் குறிப்பும் காண்க. பரதன், "மன்முன்னே தழீஇக்கொண்ட மனக்கினிய துணைவனேல், என்முன்னே" (1024) என முன்னர்க் கூறியதற்கியைய இங்கும் குகனை 'மூத்தான்' என்றான்.

(பி - ம்.) 1. அடியிறைஞ்சி; நெடிதுவிழ்ந்து, வீழ்ந்து; யாரென்னக்.
2. துயருழந்த; கழற்கால்வேந்தன்.
3. இன்றுணையோன்; இராகவற்கவ்விலக்குவற்கும்.
4. குலநெடுந்தோட்; இவனின்ற. (65)

கோசலை மகிழ்ந்து வாழ்த்துதல்

1063. நைவீர லீர்மைந்தீ ரினித்துயரா லுடிறந்து
காடு நோக்கி
மெய்வீரர் பெயர்ந்ததுவு நலமாயிற் றுமன்றே
விலங்கற் றிண்டோட்

கைவீரக் களிறனைய காளையிவன் றன்னோடு
கலந்து நீங்கள்
ஐவீரு மொருவீரா யகலிடத்தை நெடுங்கால
மளித்தி ரென்றாள்.

(குகனை அறிந்த கோசலாதேவி), மைந்தீர் - குமாரர்களே, இனி துயரால் நைவீர் அல்லீர் - இனி (நீங்கள்) துன்பத்தால் வருந்துதற்குரியீ ரல்லீர்; மெய் வீரர் - உண்மையான வீரர்களாகிய இராம இலக்குவர், நாடு இறந்து - நாட்டை விட்டு, காடு நோக்கி பெயர்ந்ததுவும் - காட்டை நோக்கி வந்ததும், நலம் ஆயிற்று - நல்லதாயிற்று; ஆம் - இஃது உண்மையே; விலங்கல் திண்தோள் - மலைபோலும் வலிய புயங் களையும், கைவீரம் - (வில்தொழிலில் தேர்ந்த) கையின் வீரத்தையும் உடைய, களிறு அனைய - (அஞ்சாமையால்) ஆண் யானை போன்ற, காளை இவன் தன்னோடு கலந்து - காளைப் பருவத்தினனான இவனோடு சேர்ந்து, நீங்கள் ஐவீரும் ஒருவீர் ஆய் - நீங்கள் ஐந்து பேரும் (ஒருவரையொருவர்) பிரியாதவராகி (ஒன்றுபட்டு), அகல் இடத்தை - பரந்த இராச்சியத்தை, நெடு காலம் அளித்திர் - மிக நீண்ட காலம் காப்பீராக, என்றாள் - என்று வாழ்த்தினாள். அன்று, ஏ : அசை.

உயர்ந்த பண்புகளையுடைய கோசலை, குகன் செய்தியை அறிந்து, அவனையும் தன் புதல்வன் போலக் கருதி, 'இராம இலக்குவர் காடு போந்தனால் மற்றொரு சகோதரன் கிடைத்தான்; இனி நீங்கள் ஐவரும் ஒன்றுபட்டு அரசாள்வீராக' என உண்மையுள்ளத்தோடு வாழ்த்தினாள். இராமபிரான் குகன்பால் கொண்ட அன்புரி மையும், குகனுடைய பண்புகளும் பரதனைக் கவர்ந்தது போலவே கோசலையையும் கவர்ந்தன. இராமன் நாடு கடந்து வந்ததும் ஒரு வகையில் நல்லதாயிற்று என்கின்றாள். குகனைப் பிரியுங்கால் அவனுக்கு இராமபிரான் கூறியனவும் (688–91), "குகனொடும் ஐவ ரானேம்...புதல்வராற் பொலிந்தா னுந்தை" (யுத்த. 449) என வீடணனுக்குக் கூறியதும் இங்கு நோக்கத்தகும்.

(பி - ம்.) 1. இனித்துயராய், வினைத்துயரால்; காடிறந்து; கானநோக்கி, காடே நோக்கி.
2. போந்ததுவும்; ஆயிற்றுமென்றே.
3. இவன்றன்னோடும்; கலந்துநீர்கள், நீவிர்; நீங்காது.
4. ஒருவீர்போல்; அகலிடத்தே; உலகனைத்தும்; அளித்திர். (66)

சுமித்திரையை அறிமுகப்படுத்துதல்

1064. அறந்தானே யென்கின்ற வயனின்ற டனைநோக்கி
யைய வன்பின்
நிறைந்தானை யுரையென்ன நெறிதிறம்பாத் தன்மெய்யை
நிற்ப தாக்கி

இறந்தான்ற னிளந்தேவி யாவர்க்குந் தொழுகுலமா
மிராமன் பின்பு
பிறந்தானு முளனென்னப் பிரியாதான் றனைப்பயந்த
பெரியா ளென்றான்.

அறம் தானே என்கின்ற - தருமத்தின் வடிவம் தானே என்பாள் போன்ற, அயல் நின்றாள் தன்னை நோக்கி - (கோசலையின்) பக்கத்தில் நின்ற சுமித்திரையை (குகன்) பார்த்து, (பரதனிடம்) ஐய - ஐயனே, அன்பின் நிறைந்தாளை உரை என்ன - அன்பினால் நிறைந்த இவ்வம்மையை (யாரென்று) சொல்லுக என்று கேட்க, (பரதன்), நெறி திறம்பா - முறை வழுவாத, தன் மெய்யை - தனது வாய்மையை, நிற்பது ஆக்கி - என்றும் நிலைப்பதாகச் செய்து, இறந்தான் தன் - இறந்த சக்கரவர்த்தியின், இளம் தேவி - இளைய பட்டத்துத்தேவி; யாவர்க்கும் தொழுகுலம் ஆம் - எல்லார்க்கும் தெய்வமான, இராமன் - இராமனுக்கு, பின்பு பிறந்தானும் உளன் என்ன - பின்னே பிறந்த ஒருவனும் இருக்கின்றான் என்று உலகோர் கூறும்வண்ணம், பிரியாதான் தனை பயந்த - (எக்காலத்தும் இராமனைப்) பிரியாதவனான இலக்குவனைப் பெற்ற, பெரியாள் - பெருமை உடையவள், என்றான் - என்று சொன்னான்.

சுமித்திரையின் அறப் பண்பை 443–4ஆம் கவிகளிற் காண்க. அவள் இராமன்பாலுள்ள அன்பால் அவனை நினைந்து நினைந்து கண்ணீர் பெருக்கியவண்ணம் இருந்தமையின், 'அன்பின் நிறைந்தாள்' எனப்பட்டாள். தயரதன் வாய்மை காத்தற் சிறப்பு : 1093, 1126, 1129-பார்க்க.

(பி - ம்.) 1. என்கின்றாள், எனநின்றான்; நின்றாட்கு; ஒக்கின்றாள்; அருகு நின்றாள்; தனைநோக்கியருகலனுங் கற்புநானும், தனைநோக்கியையனையு நோக்கியன்பின்.
2. பிறந்தானை; தன்மேன்மை.
3. தொழுகுலமவ்விராமன். (67

கைகேயியை யாரென்று குகன் கேட்கப் பரதன் கூறுதல்

1065. சுடுமயா னத்திடைதன் றுணையேகத் தோன்றறுயர்க்
கடலி னேகக்
கடுமையார் கானகத்துக் கருணையார் கவியேகக்
கழற்கான் மாயன்
நெடுமையா லன்றளந்த வுலகெல்லாந் தன்மனத்தே
நினைந்து செய்யும்
கொடுமையா லளந்தாளை யாரிவரென் றுரையென்னக்
குரிசில் கூறும்.

தன் துணை - தன் நாயகன், சுடும் மயானத்திடை ஏக - (பிணங்களைச்) சுடுதற்கு உரிய மயானத்திற்குச் செல்லவும், தோன்றல் - தன் வயிற்றில் தோன்றிய பரதன், துயர் கடலின் ஏக - துன்பக் கடலுள் மூழ்கவும், கருணை ஆர்கலி - கருணைக் கடலான இராமபிரான், கடுமை ஆர் கானகத்து ஏக - கடுமைமிக்க காட்டிற் செல்லவும், கழல் கால் மாயன் - வீரக்கழல் அணிந்த திருவடிகளையுடைய திருமால், நெடுமையால் - திரிவிக்கிரம உருவத்தால், அன்று அளந்த உலகு எல்லாம் - முன்னே ஒருநாள் அளந்த உலகங்களை எல்லாம், தன் மனத்தே—, நினைந்து - சூழ்ந்து, செய்யும் கொடுமையால் - செய்த கொடுஞ் செயலால், அளந்தாளை - அளந்து கொண்டவளான கைகேயியைச் (சுட்டி), இவர் யார் என்று உரை என்ன - இவர் யார் என்று சொல்லுகவென்று (குகன்) கேட்க, குருசில் கூறும் - பரதன் கூறுவான்.

இதனுட் கைகேயியைப் பற்றியன கவிகூற்று; அவள் கொடுமையின் உச்ச நிலையைக் குறிக்கின்றார். அளக்கும் பொருள் அளவுகருவியாகிய மரக்கால் முதலியவற்றுள் புக்கு வருதல்போல, உலகுயிர்கள் இவள் செய்த கொடுமையிற் புக்கு வந்தனவாதலால், கொடுமையால் அளந்தாள் என்றார். அவன் நெடிய வடிவு கொண்டு அடிபெயர்த்து வைத்து அளந்தான்; இவள் இருந்த இடத்திலிருந்தே மனத்தால் அளந்து கொடுமையை விளைத்தாள் என இவற்றுள் வேற்றுமை காண்க.

துணை - துணைவன். ஆர்கலி - கடல். கடல் காட்டிற்குள் புகுந்தது என்ற நயம் காண்க. இராமபிரான் கருணைக் கடல்: "பற்றி, நீந்தலரிய நெடுங்கருணைக் கெல்லா நிலயமே" (ஆரணிய. 100), "கருணையங்கடல் கிடந்தது கருங்கடல் நோக்கி" (யுத்த : 535).

(பி - ம்.) 1. துணைபோகத்; கடலின்மூழ்கக், விழக்.
2. கானத்தில், கானத்துக்; கருணையார்கலியெய்தக்.
3. நெடுமையாய்மின்றளந்த, அன்றளந்த; உலகெலாம், தன்மனத்தால்; வசமாய், வயமாய்; நினைத்துச்செய்த.
4. யாரிவளென்று; உரைசெயெனக், உரைசெய்யக். (68)

1066. படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்குஞ்
செவிலியைத்தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலங் கிடந்தேற்கு முயிர்ப்பாரங்
குறைந்து தேய
உடரெலா முயிரிழந்த வெனத்தோன்று முலகத்தே
யொருத்தி யன்றே
இடரிலா முகத்தாளை யுணர்ந்திலையோ விந்நின்று
ளென்னை யீன்றாள்.

படர் எல்லாம் படைத்தாளை - துன்பங்களையெல்லாம் தோற்றுவித்தவளும், பழிவளர்க்கும் செவிலியை - பழியை வளர்க்கும் செவிலித் தாயும், பாழ்த்த பாவி குடரிலே - பாழ்பட்ட பாவம் நிறைந்ததாகிய இவள் வயிற்றில், நெடு காலம் கிடந்தேற்கும் - நெடுங்காலம் தங்கிய எனக்கும், உயிர் பாரம் குறைந்து தேய - உயிராகிய சுமை (நாளுக்கு நாள்) குறைந்து மெலிய, உடல் எல்லாம் உயிர் இழந்த என தோன்றும் உலகத்தே - உடம்புகளெல்லாம் உயிரற்றன என்னுமாறு காணப்படும் இவ்வுலகத்தில், இடர் இல்லா முகத்தாளை - துன்பமே இல்லாத முகமுடையவளுமானவள், ஒருத்தி அன்றே - இவளொருத்தியே அன்றோ? உணர்ந்திலையோ - (இவளைப் பார்க்கும்போதே நீ) அறியவில்லையோ? இ நின்றாள் - இவ்வாறு நிற்பவள் - என்னை ஈன்றாள் - என்னைப் பெற்றவள் (என்றான்).

'உலகத்தில் வேறெங்கும் காணமுடியாத கொடுமை மிக்க பாவி இவள்; இவள் பெற்று வளர்த்தது துன்பங்களையும் பழிகளையுமே. இவள் வயிற்றில் கிடந்த தொடர்பால், இவளைப் போலக் கன்னெஞ்சமுடையவனாகத்தக்க நானும் அவ்வாறாகவில்லை; உலகத்து உயிர்களெல்லாம் தவிக்கின்றன. இந்நிலையில் இவளொருத்தி மட்டும் துயர் இல்லாதவளென்பது இவள் முகத்தாலேயே தெரியும்; எனவே, இவள் யாரென்று நீ உணர்ந்திருக்கலாம்' என்கின்றான். பழி - உலக நிந்தை; "வழியுடைத் தாய்வரு மரபை மாய்த்தொரு, பழியுடைத் தாக்கினமை" (869). 'உயிரே சுமை' என்று தன் நிலையைப் புலப்படுத்துகின்றான். குடர், உடர் என்பன போலி. குடல், இங்கே வயிற்றைக் குறிக்கும்.

(பி - ம்.) 1. பழிவிளைக்கும்.
2. குடலிலே.
3. உடலெல்லாம்; உயிரிலாவென, உயிரிழந்ததெனமிற்கும், உயிரிழந்தவெனக்குன்றும், உயிர்பிரிந்தவெனத்தோன்றும், உயிர்வீய்ந்தாலெனத்தோன்றும்; ஒருத்தியன்றே.
4. அறிந்திலையேல்; எனநின்றாளென்னையீன்றாள். (69)

குகன் கைகேயியை வணங்குதலும் படகு செல்லுதலும்

(கலிவிருத்தம்)

1067. என்னக் கேட்டவ் விரக்கமி லாளையும்
தன்னற் கையின் வணங்கினன் றாயென
அன்னப் பேடை சிறையில தாய்க்கரை
துன்னிற் றென்னவும் வந்தது தோணியே.

என்ன கேட்டு - என்னை ஈன்றாள் இவள் என்று பரதன் சொல்லக் கேட்டு, (குகன்) அவ் இரக்கம் இல்லாளையும் - இரக்கமில்லாத அக் கைகேயியையும், தாய் என - தன் தாயைப் போல, தன் நல் கையின் வணங்கினன் - தன் நல்ல கைகளால் கும்பிட்டான்; (அப்போது)

தோணியும் - (அவர்கள் ஏறியிருந்த) தோணியும், அன்னம் பேடை- பெண் அன்னம் ஒன்று, சிறை இலது ஆய் - சிறகில்லாததாய், கரை துன்னிற்று என - (ஆற்றில் நீந்திக்) கரையை அடைந்ததுபோல, வந்தது - (தென் கரை) வந்து சேர்ந்தது. ஏ: ஈற்றசை.

என்ன என்றது, முன்பாட்டின் தொடர்பு. குகன் இராமபிரானுல் உடன்பிறப்புரிமை பெற்றவனுகலின், கைகேயியைத் தாய் என்று கருதி வணங்கினுன். இராமபிரானுக்குத் தொண்டு செய்யும் அவன் கை 'நல்கை' எனப்பட்டது. தோணியின் செலவுக்கு அன்னப் பறவையின் செலவை ஒப்புக் கூறுதலுண்டு; 680, 1043 பார்க்க. தோணிக்கு இறகில்லையாகலின், 'அன்னப் பேடை சிறை யிலதாய்' என்ருர். 'என்னவும்' என்றதில் உம்மை பிரித்துத் தோணி யோடு கூட்டப்பட்டது.

(பி - ம்.) 3. அன்னப்பேடு; சிறையிலகன்கரை; மு. அன்னற்போதத் தவன்வர வங்குனம்.
4. சென்றதுதோணியே; மு. துன்னிற்றப்புறம் தோமறுமாக்களே. (70)

கரை அடைந்தபின் தாயர் சிவிகையில் செல்லப் பரதனும் குகனும் நடந்து செல்லுதல்

1068. இழிந்த தாயர் சிவிகையி னேகத்தான்
பொழிந்த கண்ணீர்ப் புதுப்புனற் போயினுன்
ஒழிந் தி லன்குக னும்முட னேகினுன்
கழிந்த னன்பல காவதங் காலினே.

இழிந்த தாயர் - (தோணியினின்றும்) இறங்கிய தாய்மார், சிவிகையின் ஏக - பல்லக்கில் செல்ல, தான் - பரதன், பொழிந்த கண் நீர் புது புனல் - பெருக்கிய கண்ணீரான புதிய வெள்ளத்தில், போயினுன் - நடந்து, பல காவதம் - பல காத தூரத்தை, காலினே கழிந்தனன் - கால் நடையாகவே கடந்தான்; குகனும்—, ஒழிந்திலன் - (பரதனைப்) பிரியாதவனுய், உடன் ஏகினுன் - கூடவே சென்ருன்.

பரதன் கண்ணீர் விட்டு அழுதுகொண்டு, வாகனம் ஏதும் இன்றிக் கால் நடையாகவே சென்ருன். இயல்பான நீரின்மை யின் கண்ணீரைப் 'புதுப் புனல்' என்ருர். "பொழிந்த வுண்கணீர்ப் புதுப்புனல்" (513), "பொழியுங் கண்ணீர்ப் புதுப்புனல்" (633) என முன்னும் வந்தது. ஒரு வெள்ளத்தை, வேறு வகையின்றித் தோணி யேறிக் கடந்தான். சத்துருக்கனும் உடன் நடந்து சென்றமை சொல்லாமலே பெறப்படும். போயினுன், ஒழிந்திலன்: முற்றெச்சம்.

(பி - ம்.) 1. இழிந்துதாயர்; சிவிகையினேறத்தான்.
2. கண்ணின். (71)

பரத்துவாசர் பரதனை எதிர்கொள்ளுதல்

1069. பரத்தி னிற்கும் பரத்துவ னென்னும்பேர்
வரத்தின் மிக்குயர் மாதவன் வைகிடம்
அருத்தி கூர வணுகின னாண்டவன்
விருத்தி வேதிய ரோடெதிர் மேவினான்.

(நடந்து சென்ற பரதன்), பரத்தின் நிற்கும் - பரம்பொருளிடத்தே மனம் ஊன்றி நிற்கின்ற, பரத்துவன் என்னும் பேர் - பரத்துவாசன் என்னும் பேருடைய, வரத்தின் மிக்கு உயர் – வரத்தால் மிக உயர்ந்த, மாதவன் வைகு இடம் – பெரிய முனிவன் வசிக்கும் ஆசிரமத்தை, அருத்தி கூர அணுகினன் - ஆசை மிக நெருங்கினான்; ஆண்டு - அப்போது, அவன் - அப் பரத்துவாச முனிவன், விருத்தி வேதிய ரோடு - தமக்குரிய அறுதொழிலில் தவறாத வேதியர் பலருடன், எதிர் மேவினான் - (பரதனை) எதிர்கொண்டான்.

பரத்துவாச முனிவன் பெருமையையும், அவன் சித்திரகூடம் செல்லும் வழியிடை இருத்தலையும் பரதன் கேள்வியுற்றவனாதலால், அம் முனிவனைக் காண ஆவலுடன் சென்றான். முனிவனும் பரதன் வரவை அறிந்து எதிர்கொண்டான். 'பரத்தின் நீங்கும்' என்ற பாடத்துக்கு, இருவினைகளாலாகும் சுமையினின்றும் நீங்கிய என்க; பரத்துவன் - பரத்துவாசன் என்பதன் சிதைவு. விருத்தி - தொழில், அந்தணர்க்குரிய அறு தொழிலைக் கருதியது.

(பி-ம்.) 1. பரத்தினீங்கும்; பரத்துவனென்னுமவ், பரத்துவசன்னெனும்.
2. மேதகு.
3. கூரவணங்கினன்.
4. விருத்த; எதிர்மேயினான், உடன்மேவினான். (72)

கங்கைகாண் படலம் முற்றும்.

13. திருவடி சூட்டு படலம்

திருவடி நிலைகளைச் சூட்டிக்கொண்டதைக் கூறும் படலம் என இதன் பொருள் விரியும். பரதன் இராமபிரானைச் சந்தித்து, மீண்டும் அயோத்திக்கு வந்து அரசை ஏற்று ஆளும்படி எவ்வளவு இரந்து வேண்டியும், வசிட்ட முனிவனும் எவ்வளவோ முயன்றும் இராம பிரான் இணங்காமையின், பரதன், இராமபிரானுடைய திருவடி நிலைகளைத் தருமாறு வேண்டிப் பெற்று, அவற்றை முடிபோலச் சிரசில் சூட்டிக்கொண்டு மிக்க வருத்தத்துடன் திரும்பிச் சென்று, அயோத்தி நகரின் அருகில் உள்ள நந்திக் கிராமம் என்னும் ஊரில் தங்கி, திருவடி நிலைகளை அரியணை ஏற்றிப் பூசித்து அரசாகப் பாவித்துத் தான் அவற்றின் ஏவலனாக இருந்து அரசாண்டு வந்தான் என்பது இப் படலத்தின் கதைச் சுருக்கமாகும்.

சில பழைய அச்சுப் புத்தகங்களிலும், சில சுவடிகளிலும் இப் படலத்தின் பெயர், 'கிளைகண்டு நீங்கு படலம்' என்று காண்கின்றது. ஒரு சுவடியில் இப் படலத்தின் முதல் இருபது பாடல்களும் அவற்றையடுத்து 'இன்னவாய' என்று தொடங்கும் ஓர் அதிகப் பாடலும் கொண்ட பகுதி, 'பரத்துவன் இருக்கை மேவு படலம்' எனவும், எஞ்சிய பகுதி, 'பரதன் காட்சி பெற்று மீள் படலம்' எனவும் இரண்டு பகுதிகளாக உள்ளது.

பரதனுக்குப் பரத்துவாசன் ஆசி கூறுதல்

(கலிவிருத்தம்)

1070. வந்த மாதவத் தோனையம் மைந்தனும்
தந்தை யாமெனத் தாழ்ந்து வணங்கினன்
இந்து மோலியன் னானு மிரங்கினன்
அந்த மின்னலத் தாசிகள் கூறினன்.

அ மைந்தனும் - அப்பரதனும், வந்த மாதவத்தோனை - தன் எதிர் வந்த பெருந்தவமுடைய அம்முனிவனை, தந்தை ஆம் என - தந்தையைப் போன்றவன் எனக்கருதி, தாழ்ந்து வணங்கினன் - அவனடிகளில் விழுந்து வணங்கினன்; இந்து மோலி அன்னானும் - சந்திரனைச் சடைமுடியில் அணிந்த சிவபெருமானை யொத்த அம்முனிவனும், இரங்கினன் - (பரதன்பால்) பரிவு கொண்டவனாய், அந்தம் இல் நலத்து ஆசிமொழி கூறினன் - அழியாத நன்மைகளைத் தரவல்ல ஆசிகளைக் கூறினன்.

முனிவனது பெருமையைக் கருதி, அவனைச் சிவபெருமானேடு ஒப்பிட்டார். இரங்கினன் : முற்றெச்சம். அந்தம் - முடிவு; அழிவு. நலத்து - நலம் தருதற்குரிய.

(பி॰ ம்.) 1. வந்து; அவ்வள்ளலும்.
3. எதிர்கொளா.
4. அந்தமில் குணத்து. (1)

பரத்துவாசன் வினு

1071. எடுத்த மாமுடி சூடிநின் பாலியைந்
தடுத்த பேரர சாண்டிலை யையநீ
முடித்த வார்சடை யோடு முனிவர்தூ
சுடுத்து நண்ணுதற் குற்றுள தியாவதே.

(பரத்துவாசன் பரதனை நோக்கி), ஐய - ஐயனே, நீ—, எடுத்த மா முடி சூடி - உயர்ந்த பெரிய மகுடத்தைச் சூட்டிக்கொண்டு, நின்பால் இயைந்து அடுத்த பேர் அரசு - உன்பால் (தானுக) வந்தடைந்த பெரிய இராச்சியத்தை, ஆண்டிலை - ஆளாமல், முடித்த வார் சடை யோடு - சடைமுடி கட்டி, முனிவர் தூசு உடுத்து - முனிவர்க்கு உரிய மரவுரி உடுத்து, நண்ணுதற்கு - (இங்கே) வருதற்கு, உற்று உளது யாவது - நேர்ந்துளது என்ன ? (என்று வினவினன்).

ஏ : ஈற்றசை. முடித்த வார் சடையோடு - கட்டப்பட்ட நீண்ட சடையுடன்; சடைமுடி கட்டி என்றவாறு.

(பி - ம்.) 1. தாதையன்பாலியைந்து.
2. பேரரசாள்கிலை, பாரரசாண்டிலை.
3. வார்சடைக்கற்றையை; முசுதூசு.
4. உற்றுளதியாதென்றான். (2)

பரதனுடைய மறுமொழி

1072. சினக்க டுந்திறற் சீற்றவெந் தீயினுல்
மனக்க டுப்பினன் மாதவத் தோங்கலை
எனக்க டுப்பது செய்திலெ னென்றசொல்
உனக்க டுப்பதன் றுஉர வோயென்றான்.

(முனிவன் கூறியது கேட்ட பரதன்) கடு திறல் சினம் சீற்றம் வெம் தீயினுல் - (அப்போது உண்டான) மிக்க வலியுடைய பெருஞ்சின மாகிய தீயினுல், மனம் கடுப்பினன் - மனங் கொதித்தவனுகி, மாதவத்து ஓங்கலை - பெரிய தவத்தின் மலை போன்ற அம்முனிவனை (நோக்கி), உரவோய் - அறிவாற் பெரியோய், எனக்கு அடுப்பது செய்திலென் - எனக்குப் பொருந்தியதை (நான்) செய்யவில்லை, என்ற சொல் - என்று (நீ) சொன்ன வார்த்தை, உனக்கு அடுப்பது அன்று - உனக்குப் பொருந்தியதாகாது, என்றான் - என்று விடையிறுத்தான்.

'நீ முடிசூடி அரசாள்வதே முறை' என்ற கருத்துப்பட முனிவன் கூறிய சொல்லால் சினம் மூண்ட பரதன், 'நீர் சொன்ன வார்த்தை உம்முடைய தகுதிக்குத் தக்கதன்று' என முனிவனை வெகுண்டான். பரதன் அரசு கொள்ளுதலில் சிறிதும் பற்று இல்லாதவனாய், அது கொள்ளுதல் தனக்கு முறையன்று என்ற உறுதியுடையவனாதலால், பரத்துவாச முனிவனது சொல்லால் சினமுற்றான். முன்பு வசிட்ட முனிவனும் அரசவையினரும் தன்னை அரசாள வேண்டும் என்று வற்புறுத்தியபோது, பரதன், "இது கடைவருந் தீநெறிக் கலியின் ஆட்சியோ" (953) என்றதும் இங்கு நினைக்கத் தகும்.

சினம், சீற்றம்: ஒரு பொருட் பன்மொழி; முதலில் மனத்துள் எழுவது சினம் என்றும், அது வெளிப்படுவது சீற்றமென்றும் கொள்ளலாம்; "சினத்தாற்றிச் சீறிற் சிறுகுந் திரு" (குறள். 568) என்பது காண்க. ஓங்கல் - மலை; ஆகு பெயர்; முனிவனுக்காயிற்று. உரம் - அறிவு; தவவலிமை எனலுமாம்.

(பி - ம்.) 1. சினக்கொடுந்திறல்; கடுப்பின்வெம்; மு. சினக்குறும்பெறி செய்தவன் செப்புமுன்.
2. மாதவத்தையகேள்.
3. வினக்கு அடுத்தவியம்பிலே. (3)

1073. மறையின் கேள்வற்கு மன்னிளந் தோன்றல்பின்
முறையி னீங்கி முதுநிலங் கொள்கிலேன்
இறைவன் கொள்கில னாமெனி லாண்டெலாம்
உறைவென் கானத் தொருங்குட னேயென்றான்.

மறையின் கேள்வற்கு - வேதநாயகனான இராமபிரானுக்கு, மன் இளம் தோன்றல் - பொருந்திய தம்பியான பரதன், பின் - பின்னும் (முனிவனை நோக்கி), முறையின் நீங்கி - (மூத்தவனுக்குரியது அரசு என்ற) முறையினின்றும் விலகி, முதுநிலம் கொள்கிலேன் - பழமையாக வந்த நாட்டை(நான் அரசாள ஏற்று)க் கொள்ளமாட்டேன்; இறைவன் கொள்கிலன் ஆம் எனில் - (முறைப்படி) அரசனான இராமபிரான் ஏலானாகில், ஆண்டு எல்லாம் - (அவன் காட்டில் இருத்தற்குரிய பதினான்கு) ஆண்டுகள் முழுவதும், கானத்து - காட்டில், ஒருங்கு - ஒன்றாக, உடனே - அவனுடனே, உறைவென் — (நானும்) தங்குவேன் என்றான் —.

பரதன், தன் கருத்தைத் தெளிவாக உரைக்கிறான். 'இறைவன் கொள்கிலனாமெனில்' என்றதனால், கொள்ளுமாறு அவனை வேண்டவே செல்கின்றானென்பதும் கூறியவாயிற்று. இராமபிரானை அவன் எப்போதும் 'அரசன்' என்றே குறிப்பன்; 1030, 1041-பார்க்க. மறையின் கேள்வன் — வேதநாயகன்; திருமால்; இங்கே இராமபிரான்;

பால. 486-பார்க்க. 'வேதத்துரிமை பூண்டவன்' என்று பொருள் கொண்டு, பரத்துவாச முனிவனைக் குறித்ததென்பாரும் உளர்.

(பி - ம்.) 1. மு. மறைவலாளனை நோக்கி மனுநெறி, மறைசொன்மாதவ மன்னர்கடம்வழி. (4)

அங்கே இருந்த முனிவர்களின் மகிழ்ச்சி

1074. உரைத்த வாசகங் கேட்டலு முள்ளெழுந்
திரைத்த காத லிருந்தவத் தோர்க்கெலாம்
உரைத்த மேனியொ டுள்ளங் குளிர்ந்தவால்
அரைத்த சாந்துகொண் டப்பிய தென்னவே.

உரைத்த வாசகம் கேட்டலும் - (பரதன்) சொல்லிய வார்த்தையைக் கேட்டவளவில், உள் எழுந்து இரைத்த காதல் - (இராமபிரான் பக்கல்) மனத்தில் தோன்றிப் பெருகிய அன்பையுடைய, இரு தவத்தோர்க்கு எல்லாம் - பெரும் தவத்தினரான (அங்கிருந்த) முனிவர்களுக்கெல்லாம், உரைத்த மேனியொடு - பூரித்தலாகிய மெய்ப்பாட்டினுல் உவகையை வெளிப்படுத்திய உடம்போடு, உள்ளம் - மனமும், அரைத்த சாந்து கொண்டு அப்பியது என்ன - அரைத்த சந்தனத்தைப் பூசினுற்போல், குளிர்ந்த - (ஒருங்கே) குளிர்ந்தன.

ஆல், ஏ: அசைகள்.

பரத்துவாசனும் உட்பட, அங்கிருந்த முனிவரெல்லாரும் பரதன் கூறியது கேட்டுப் பெருமகிழ்ச்சியுற்றனர். சந்தனம் புறத்தைக் குளிர்விக்கும்; பரதன் சொல் அகமும் புறமும் குளிர்வித்தது. உரைத்தல் - சொல்லுதல்; இங்கே மெய்ப்பாட்டினுல் வெளியிடலைக் குறித்தது.

இதன்பின், கீழ்க்காணும் பாடல் ஒன்று ஒரு பிரதியில் உள்ளது :—

"அன்ன காத லருந்தவ ராண்டகை
நின்னை யொப்பவர் யாருளர் நீயலால்
என்ன வாழ்த்திடு மேல்வை யிரவியும்
பொன்னின் மேருவிற் போய்மறைந் திட்டதே."

(பி - ம்.) 3. கரைத்த, உரைத்த; களித்தனர்.
4. சாந்துகொடு.

பரதனுடன் வந்தோர்க்குப் பரத்துவாசன் விருந்தளித்தல்

1075. ஆய காலையி லையனைக் கொண்டுதன்
தூய சாலை குறுகினன் ருேமிலான்
மேய சேனைக் கமைப்பென் விருந்தெனுத்
தீயி னுவுதி செங்கையி னேக்கினுன்.

ஆய காலையில் - அந்தச் சமயத்தில், தோம் இலான் - குற்ற மற்றவனாகிய பரத்துவாச முனிவன், ஐயனை கொண்டு - பரதனை அழைத்துக்கொண்டு, தன் தூய சாலை குறுகினன் - தனது தூய தவச் சாலையை அடைந்து, மேய சேனைக்கு - (பரதனுடன்) வந்த சேனை களுக்கெல்லாம், விருந்து அமைப்பென் எனா - விருந்து செய்விப்பே னென்று உட்கொண்டு, செம் கையின் - (தனது) செவ்விய கையால், தீயின் ஆவுதி ஒக்கினான் - ஓமத் தீயில் (அதற்குரிய) ஆகுதியைக் கொடுத்தான் (ஆகுதி செய்தானென்றபடி).

'ஆய காலை' என்றது, முன் பாட்டில் கூறியவாறு முனிவர் அனை வரும் உள்ளும் புறமும் குளிர்ந்து மகிழ்ந்தபோது என்பது குறித்தது. வசிட்ட முனிவன் கௌசிகனுக்குச் செய்தது போலப் பரத்துவாசனும் தவ ஆற்றலால் எண்ணிய எண்ணியாங்குச் செய்து முடிக்க வல்லவன் என்பது மேல்வரும் பாடல்களால் அறியப்படும். ஒக்குதல் - கொடுத் தல்; செய்தமைத்தல்; "நிணப் பலிப் யோக்குவன்" (திருக். 235) என்ற விடத்துக் காண்க. ஆவுதி : ஆஹுதி என்ற வடசொல் திரிபு.

பரத்துவாசன் அக்கினியில் ஓமஞ் செய்து தேவர்களை அழைத்து மந்திரத்தை உச்சரிக்க, விசுவகருமா ஐந்து யோசனை தூரம் பரப் புள்ள புல் தரையையும், அவரவர் தங்குவதற்கேற்ற மாடமாளிகை களையும் அமைக்க, பின்பு யமன், குபேரன், வருணன், சந்திரன் முதலிய தேவர்களைக் குறித்து ஆகுதி கொடுத்து, பலவகை உணவுப் பொருள்களையும், பற்பல உபசாரங்களைச் செய்தற்குரிய தேவ மாதரையும் அங்கே வருவித்தானென்று முதனூல் கூறுகின்றது. பரதன் தாய்மாரைப் பரத்துவாசனுக்கு அறிமுகப்படுத்தியதாகவும் அது கூறுகின்றது.

(பி - ம்.) 1. ஆயகாதலோடு, ஆயகாதலொடன்பனைக்; தம்.
2. உறைவிடந்துன்னினான்.
3. அளிப்பன்.
4. ஆகுதி; செங்கையிலாக்கினான்; ஓம்பினான், ஓச்சினான். (6)

வந்தவர்கள் உபசரிக்கப் பெறுதல்

1076. துறந்த செல்வ னினையத் துறக்கந்தான்
பறந்து வந்து படிந்தது பல்சனம்
பிறந்து வேறொ ருலகுபெற் றாரென
மறந்து வைகினர் முன்னர்த்தம் வாழ்வெலாம்.

துறந்த செல்வன் - (பற்றைத்) துறந்த (தவச்) செல்வனாகிய பரத்துவாசன், நினைய - நினைத்தவளவில், துறக்கம் பறந்து வந்து படிந்தது - சுவர்க்கபோகம் விரைந்து (அங்கே) வந்து அமைந்தது; பல் சனம் - (சேனையைச் சார்ந்த) பல மக்களும், பிறந்து - மாறிப்பிறந்து, வேறு ஒரு உலகு பெற்றார் என - வேறு ஓர் (புதிய) உலகத்தை

அடைந்தவரைப் போல, முன்னர் தம் வாழ்வு எல்லாம் மறந்து - முந்திய தம்முடைய (இன்னல் நிறைந்த) வாழ்க்கை முறைகளையெல் லாம் மறந்து, வைகினர் - (இன்பத்தில் திளைத்துத்) தங்குவாராயினர்.

தான் விரும்பின் இத்தகைய சுவர்க்க போகம் எய்துதல் எளிதாயினும், அதனை வேண்டாதவன் என்பார், 'துறந்த செல்வன்' என்றார். இங்கே முன்னைய வாழ்வை மறந்து வைகினோர், மீண்டும் முன்னை நிலையெய்தினமை, மேலே 1088-ஆம் பாடலில் காண்க. துறக்கந்தான் பறந்துவந்து படிந்ததது: யுத்த. 4086-பார்க்க. இதுவும், இராமபிரான் வெற்றிகொண்டு சேனையோடு அயோத்திக்கு மீளுங்கால் இப்பரத்துவாச முனிவனால் உபசரிக்கப்பெற்றமை கூறுமிடத்து வருவது.

(பி - ம்.) 2. வந்துபரந்தது; பாரெலாம்.
3. வந்தொருலகு.
4. முன்னைத்தம்; மாண்பெலாம். (7)

1077. நந்த லில்லற நந்தின ராமென
அந்த ரத்தி னரம்பைய ரன்பினர்
வந்து வந்தெதி ரேற்றனர் மைந்தரை
இந்து விற்சுடர் கோயில்கொண் டேகினார்.

அந்தரத்தின் அரம்பையர் - தேவருலகத்திலுள்ள தேவ மாதர் பலர், நந்தல் இல் அறம் நந்தினர் ஆம் என - (இங்கே விருந்தெதிர் கோடலாகிய) கேடில்லாத அறத்தை மிகப் பெற்றவர்போல, மைந்தரை - (மறுவாழ்வு பெற்றவர்போல மகிழ்ந்திருந்த) ஆடவர்களை, எதிர்வந்து வந்து - (தனித்தனியே) ஒவ்வொருவர் முன்னும் சென்று, அன்பினர் ஏற்றனர் - அன்பையுடையராய் எதிரேற்று, இந்துவின் சுடர் கோயில் - சந்திரனைப்போல் ஒளிவிடும் மாளிகைக்கு, கொண்டு ஏகினார் - அழைத்துச் சென்றனர்.

இங்குள்ளாரை உபசரிக்கத் தேவமாதர் பலர் விருப்புடன் வந்து ஒவ்வொருவரையும் தனித்தனியே எதிர்கொண்டு, அவர்களுக்கென விசுவகருமாவினால் அமைக்கப்பெற்ற மாளிகைக்கு அழைத்துச் சென்றனர். வாழ்நாள் முழுதும் அறம் செய்து மறுமையிற் பெறத் தக்க சுவர்க்க போகத்தை இங்குள்ளார் இம்மையிலேயே பெற்றனர். அறம் நந்தினராமென என்றதனை மைந்தருக்கு விசேடணமாக்கி, அறப் பயன் தழைக்கப் பெற்றவர்போல இருந்த மைந்தரை என உரைத் தலுமாம். வந்து வந்து என்ற அடுக்கு, பன்மை கருதியது. வந்து உவந்து எனப் பிரித்துரைத்தலுமாம்.

(பி - ம்.) 1. நந்திலராமென.
2. அந்தரத்தரரம்பையரின் சொலார்.
3. வந்துவந்தெதிரேத்தினர், வந்தெதிர்ந்தன ரேத்தினர்.
4. கொண்டேய்தினார். (8)

1078. நான நன்குரைத் தார்நளிர் வானிடை
ஆன கங்கை யரும்புன லாட்டினுர்
தான மாமணிக் கற்பகந் தாங்கிய
ஊன மின்மல ராடை யுடுத்தினுர்.

(அரம்பையர், மைந்தரை) நானம் நன்கு உரைத்தார் - வாசனைப் பொடியை நன்கு தேய்த்து, நளிர் - குளிர்ந்த, வானிடை ஆன கங்கை அரு புனல் - ஆகாய கங்கையின் அரிய நீரால், ஆட்டினுர் - குளிப்பாட்டி, தானம் ஆம் - கொடைக் குணம் அமைந்த, மணி - அழகிய, கற்பகம் தாங்கிய - கற்பக மரங்கள் ஏந்தியளித்த, ஊனம் இல் மலர் ஆடை உடுத்தினுர் - குற்றமில்லாத பூப்போலும் மெல்லிய ஆடைகளை உடுத்தினர்.

இதுவும் அடுத்த கவியும் தேவ மங்கையர் உபசரித்த வகையினைக் கூறும். உணர்ந்தார், ஆட்டினுர் என்பவற்றையும் முற்ருகவே கொண்டு உரைப்பினும் ஆம். நானம் - வாச நெய்யுமாம்; தானம் - நறுமணச் சுண்ணம் (சீவக. 92); வாச எண்ணெய் (சீவக. 2024).

(பி - ம்.) 1. கானமங்குரைத்தார்.
2. கங்கையகன்புனல், கரும்புனல்.
3. கானமாமணிக். (9)

1079. கொம்பி னின்று நுடங்குறு கொள்கையார்
செம்பொ னின்கல ராசி திருத்தினுர்
அம்ப ரத்தி னரம்பைய ரன்பினர்
உம்பர் கோனுக ரின்னமு தூட்டினுர்.

(மேலும் அந்த), கொம்பின் நின்று நுடங்கு உறு கொள்கையார் - பூங்கொம்புபோல நின்று ஒசியும் தன்மையுள்ள, அம்பரத்தின் அரம்பையர் - விண்ணுலகத்து அரம்பை மகளிர், செம்பொன் - நல்ல பொன்னுலான, இன் கலம் ராசி - கண்ணுக்கினிய உண்கல வகைகளை, திருத்தினுர் - திருந்த அமைத்து, அன்பினர் - அன்போடு, உம்பர் கோன் நுகர் இன் அமுது - தேவராசனுன இந்திரன் உண்ணுதற்குரிய இனிய அமிழ்தம் போன்ற உணவுகளை, ஊட்டினுர் - (மைந்தரை) உண்பித்தனர்.

இவ்விரண்டு பாட்டாலும், தேவமகளிர் உபசரித்து நீராட்டி உண்பித்தமை கூறப்பெற்றது. கொள்கையாராகிய அரம்பையர் என இயைக்க. திருத்தினுர், அன்பினர்: முற்றெச்சம். கலராசி திருத்தினுர் - அணிகலன்களை அணிவித்தனர் என்றலுமாம்.

(பி - ம்.) 1. கொங்கையார்; நுடங்கிடைக் கோதையர்.
3. அன்பொடும்.
4. உம்பர்கோனகர். (10)

1080. அஞ்ச டுத்த வமளி யலத்தகப்
பஞ்ச டுத்த பரிபுரப் பல்லவ
நஞ்ச டுத்த நயனியர் நவ்வியின்
துஞ்ச வத்தனை மைந்தருந் துஞ்சினர்.

அஞ்சு அடுத்த அமளி - (மிருதுவான) ஐந்து பொருள்கள் உள்ளிட்ட மெத்தைகள் அமைந்த படுக்கையில், அலத்தகம் பஞ்சு அடுத்த - செம்பஞ்சூட்டப்பெற்ற, பரிபுரம் - சிலம்பணிந்த, பல்லவம்- தளிர்போன்ற பாதங்களையும், நஞ்சு அடுத்த நயனியர் - விடமொத்த நோக்கையும் உடைய தேவ மாதர், நவ்வியின் - பெண்மான்கள் போல, துஞ்ச - (உடன்) சயனிக்க, அத்தனை மைந்தரும் துஞ்சினர் - (முன்பு அவர்களால் உபசரிக்கப் பெற்ற) அத்தனை ஆடவரும் சயனித்தனர்.

'நந்தலில்' (1077) முதல் இதுகாறும் நான்கு பாடல்களால், தேவமாதர் வந்து மைந்தரை யேற்று, நீராட்டி, அமுதூட்டி அவ்விரவு அவர்களோடு உடன் சயனித்தமை கூறப்பெற்றது. இதனால், ஐம்புல நுகர்ச்சிக்குரிய எல்லா இன்பமும் அம்மாதர் தந்தனரென்றவாறு. இப் பாடலிற் சுட்டிய மகளிர், மைந்தருள் அவரவர்க்குரிய மனைவிமா ரெனலுமாம்,

அஞ்சடுத்த அமளி - பஞ்சசயனம் எனப்படும்; "மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறி" (திருப்பாவை, 10); இவ்வமளிக்குரிய ஐந்து பொருள்களை, "சிறுபூளை செம்பஞ்சு வெண்பஞ்சு சேணம், உறுதூவி சேக்கையோ ரைந்து: (கலி. 10. 12,ந; சீவக. 838,ந. மேற்.) என்பதனால் அறிக. பல்லவம், ஆகுபெயராய்ப் பாதத்தைக் குறித்தது. நயனியர் - கண்களையுடைய மாதர்.

(பி - ம்.) 1. அமளியரத்தகப்,
2. பஞ்சடுத்த பசுந்தளிர்ப் பாயலின்.
3. விழியினர்.
4. துஞ்ச அத்துணை; மற்புய. (11)

081. ஏந்து செல்வத் திமையவ ராமெனக்
கூந்தற் றெய்வ மகளிர்கொண் டாடினர்
வேந்த ராதி சிவிகையின் வீங்குதோள்
மாந்தர் காறும் வரிசை வழாமலே.

கூந்தல் தெய்வ மகளிர் - கூந்தலழகிற் சிறந்த தேவ மாதர், வேந்தர் ஆதி - அரசர்கள் முதல், சிவிகையின் வீங்கு தோள் மாந்தர் காறும் - பல்லக்குச் சுமத்தலால் வீங்கிக் காய்ப்பேறிய ஆட்கள்வரை (யாவரையும்), வரிசை வழாமல் - முறைமை தவறாமல், ஏந்து செல்வத்து இமையவர் ஆம் என - மிக்க செல்வத்தையுடைய தேவரைப் போலவே, கொண்டாடினர் - உபசரித்தார்கள். ஏ: ஈற்றசை.

தேவமாதர், பல்லக்குச் சுமப்போர் முதலிய வேலையாட்களையும் உபசரித்தனர் என்று, சேனையைச் சார்ந்தார் அனைவரும் எந்தத் தாழ்வுமின்றிச் சிறப்புப் பெற்றமை கூறினர். "அரசரே யாதி யாக அடியவ ரந்த மாகக், கரைசெல லரிய போகந் துய்க்குமா கண்டு" என மீட்சிப் படலத்துள் (யுத்த. 4087) வருவதும், பால. 1237 - ஆம் பாடலும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கும். இவற்றுள் முன்னது, இராமபிரான் வெற்றியோடு அயோத்திக்கு மீளுங்கால் இப்பரத்து வாசனுச்சிரமத்தில் தங்கி அவனால் உபசரிக்கப் பெற்றமை கூறுமிடத்து வருவதும் நினைக்கத்தகும்.

(பி - ம்.) 2. மகளிர் கொண்டிண்டினர்; மு. போந்தவானத் தரம்பையர் போற்றினர்.
3. வேந்தர் வேதியர் மெல்லியர் வேறுள்ள.
4. மாந்தர்யார்க்கும்; வழாமலே. (12)

1082. மாதர் யாவரும் வானவர் தேவியர்
கோதில் செல்வத்து வைகினர் கொவ்வைவாய்த்
தீதி றெய்வ மடந்தையர் சேடியர்
தாதி மாரெனத் தம்பணி கேட்பவே.

கொவ்வை வாய் - கொவ்வைக் கனி போன்ற சிவந்த வாயை யுடைய, தீது இல் தெய்வ மடந்தையர் - குற்றமற்ற தேவமகளிர், சேடியர் தாதிமார் என - தோழிமாரும் பணிப் பெண்களும்போல, தம் பணி கேட்ப - தம் ஏவலைக் கேட்டுச் செய்ய, மாதர் யாவரும் - (சேனையில் இருந்த) மகளிரெல்லாரும், வானவர் தேவியர் கோது இல் செல்வத்து வைகினர் - தேவர்களின் தேவிமாரான (உயர்ந்த) தேவமகளிர்க் குரிய குற்றமற்ற இன்ப வாழ்க்கையில் தங்குவாராயினர். ஏ: ஈற்றசை.

ஆடவரெல்லாம் தேவ போகம் துய்த்தமை கூறியவர், மகளிரும் தமக்கு ஏற்ற வகையில் இன்பம் துய்த்தனரென இப்பாடலாற் கூறுகின்றார். சேடியர் - தோழிமார். தாதிமார் - குற்றேவேல் மகளிர். செல்வம் - இன்ப வாழ்க்கை.

(பி - ம்.) 3. தேவர்மடந்தையர், செல்வமடந்தையர். (13)

1083. நந்த நந்த வனங்களி னுண்மலர்க்
கந்த முந்திய கற்பகக் காவினின்
றந்தர் வந்தென வந்திதன் கைதர
மந்த மந்த நடந்தது வாடையே.

நாள் மலர் கந்தம் முந்திய - அன்றலர்ந்தது போன்ற (வாடாத) மலர்களின் நறுமணம் மிக்க, கற்பகம் காவில் நின்று - (விண்ணுல கத்துக்) கற்பகச் சோலையினின்று, நந்து அம் நந்தவனங்களின் - (அங்கு வந்து புதிதாகத்) தழைத்த அழகிய பூந்தோட்டங்களினிடையே,

மந்தம் வாடை - மந்த மாருதமெனப்படும் தென்றல், அந்தர் வந்தால் என - குருடர் (பிறருதவி கொண்டு) மெல்ல நடந்து வருதல் போல, அந்தி தன் கைதர - அந்திப் பொழுது தனக்குக் கைகொடுத்து உதவ, மந்த மந்த நடந்தது - மெல்ல மெல்ல வீசுவதாயிற்று. ஏ: ஈற்றசை.

ஆடவரும் மகளிருமாகிய எல்லாரும் இன்பம் நுகர்தற்கேற்ற வாறு, மந்தமாருதமும் வந்து உதவியது என்கின்றார். மெல்லென வீசும் அதற்குப் பிறருதவி கொண்டு மெல்ல நடக்கும் குருடர் செயலை ஒப்புக் கூறினார்; அதற்கிசைய, மாருதம் அந்தியின் உதவிகொண்டு நடந்தது என்றார். அந்தி-இரவின். முதல் யாமம். சுவர்க்கமே வந்தது போன்று அமைந்த இடத்தில், புதிய நந்தவனமும் அமைந்ததென்றும், அதனிடையே மந்தமாருதம் வீசுவதாயிற்று எனவும் கொள்க. வாடை, திசை கருதாது காற்றென்பதைக் குறித்தது.

(பி - ம்.) 4. மந்தமாக; மணந்தது. (14)

யானைகளும் குதிரைகளும் உணவு கொள்ளுதல்

1084\. மான்ற ளிக்குல மாமதம் வந்துணத்
தேன்ற ளிர்த்த கவளமுஞ் செங்கதிர்
கான்ற நெற்றழை கற்றையுங் கற்பகம்
ஈன்ற ளிக்க நுகர்ந்தன யானையே.

தேன் தளிர்த்த கவளமும் - தேன் மிகுதியாகக் கலந்த உணவுத் திரளையும், செம் கதிர் கான்ற - செவ்விய கதிர்விட்ட, நெல் தழை - நெல் மிகுந்த, கற்றையும் - அரித்தொகுதியையும், கற்பகம் ஈன்று அளிக்க - கற்பக விருட்சம் படைத்துத் தர, யானை - (சேனையிலுள்ள) யானைகள், அளி குலம் மான்று வந்து - வண்டுக் கூட்டம் மயங்கி வந்து, மாமதம் உண்ண - (தம்மிடமிருந்து பெருகும்) மிக்க மதநீரை உண்ணுமாறு, நுகர்ந்தன - (தாம்) உண்டன.

ஏ: ஈற்றசை.

வந்த மக்களெல்லாரும் இன்னமுதுண்டு துயில் கொண்டு இன்பத்துள் வைக, சேனை யானைகளும் தமக்குரிய உணவைக் கற்பக தருக்களால் பெற்று உண்டு மதம் பெருக்கின. இதுகாறும் வாடியிருந்த யானைகளும், நல்லுணவு உண்டு பூரித்து மதம் பெருக்கலாயின. கவளம் - யானைக்குரிய உணவுத் திரளை. தழை கற்றை: வினைத் தொகை. மதநீரை வண்டுகள் உண்ணல்: கலி. 21 : 2; புறநா. 22:6, 93; 12.

(பி - ம்.) 1. வார்மதம்.
2. தேன்றளித்த.
3. நெற்றழைக் கற்றையும்.
4. ஈன்றளித்த. (15)

1085. நரக தர்க்கற நல்கு நலத்தினீர்
கரக தக்கரி கானிமிர்ந்து ண்டன
மரக தத்தின் கொழுந்தென வார்ந்தபுல்
குரக தத்தின் குழாங்களுங் கொண்டவே.

கரம் கதம் கரி – துதிக்கையையும் சினத்தையும் உடைய யானைகள் (உணவருந்திய பின்), நரகதர்க்கு (உம்) அறம் நல்கும் நலத்தின் - நரகத்தை அடையக்கூடியவர்களுக்கும் புண்ணியம் தரும் சிறப்புடைய, நீர் - தேவ கங்கை நீரை, கால் நிமிர்ந்து உண்டன- கால்களை நிமிர வைத்தவாறே உண்டன; குரகதத்தின் குழாங்களும் - குதிரைக் கூட்டங்களும், மரகதத்தின் கொழுந்து என-மரகதமணியின் ஒளிக்கதிர்போல, (மிக்க பசுமையோடு) வார்ந்த புல் - நீண்டு வளர்ந்த பசும் புல்லை, கொண்ட - (தமக்கு) உணவாகக் கொண்டன.

ஏ : ஈற்றசை.

யானைகள் உணவு கொண்ட பின் கங்கை நீரை இனிது பருக, குதிரைகளும் அப்போது புதிதாக வளர்ந்த பசும் புல்லைத் தமக்கு உணவாகக் கொண்டன.

புல்லின் செழுமையைக் குறிக்க, 'மரகதத்தின் கொழுந்தென வார்ந்த புல்' என்றார். வார் - நீட்சி. ஆர்ந்த எனப் பிரித்து, நிறைந்த என்றலுமாம். யானைகள் நீரைத் துதிக்கையால் எட்டி உண்ணுதற்கு முன்னங்கால்களை வளைக்கும் வருத்தமின்றி நிமிர்ந்து நின்றவாறே உண்டன என்பார் கால் நிமிர்ந்து, உண்டன என்றார். இதனால் நீரின் மிகுதி குறித்தவாறு. கங்கை என்பது வருவித்து உரைக்கப்பெற்றது. கங்கை நீர், தன்னில் மூழ்குவாருடைய பாவங்களைப் போக்கிப் புண்ணியப் பயன் தரவல்லதாகலின், 'நரக தர்க்கும்......நலத்தின் நீர்' என விசேடித்துக் கூறினார்; உயர்வு சிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. பசும் புல்லுக்கு மரகதம் உவமையாதல்: "மணிவார்ந் தன்ன மாக்கொடி யறுகு" (குறுந். 256); அகநா. 136 : 11-13; நைடத. நகரம் 6.

(பா - ம்.) 1. நலத்துநீர்.
2. கரகதக்கிரி. (16)

பரதன் செயல்

1086. இன்ன ரின்னணம் யாவரு மிந்திரன்
துன்னு போகங்க டுய்த்தனர் தோன்றருன்
அன்ன காயுங் கிழங்குமுண் டவ்விராப்
பொன்னின் மேனி பொடியுறப் போக்கினன்.

இன்னர் யாவரும் - இத்தன்மையரான (ஆடவரும் மகளிருமாகிய) எல்லாரும், இன்னணம் - இவ்வாறு, இந்திரன் துன்னு போகங்கள்

துய்த்தனர் - இந்திரன் எய்துதற்குரிய (சிறந்த) போகங்களை நுகர்ந் தனராக, தோன்றல் - பரதன், அன்ன காயும் கிழங்கும் உண்டு - (முன்பு இராமபிரான் உண்ட) அத்தன்மையவான காய்களையும் கிழங்குகளையும் உண்டு, அ இரா - அவ்விரவு முழுதும், பொன்னின் மேனி பொடி உற - பொன் போன்ற (தன்) திருமேனி புழுதியுற்ற தரையிற் கிடக்க, போக்கினுன் - (இரவைக்) கழித்தான்.

பரத்துவாச முனிவன் எவ்வளவு வற்புறுத்தி உபசரிக்கவும், பரதன் உயர்ந்த உணவுகளை விலக்கித் தவசியர்க்குரிய காய் கிழங்குகளையே உண்டு, தன் விரதத்தைக் காத்தான் என்றவாறு. அச்சிறப்புத் தோன்ற அவனைத் தோன்றல் என்று குறித்தார். தான்: அசை. பரதனும் விருந்துண்டு மகிழ்ந்தானென்று வான்மீகம் கூறுவதைக் கம்பர் பரதனுடைய பெருமையை மேலும் உயர்த்தும் வகையால் மாற்றிக்கொண்டார்.

(பி - ம்.) 1. இவ்வணம்; யாவையும்.
3. கிழங்குமுண்டப் பகல். (17)

கதிரவன் தோன்றுதல்

1087. நீல வல்லிரு ணீங்கலு நீங்குறும்
மூல மில்கன விற்றிரு முற்றுற
ஏலு நல்வினை துய்ப்பவர்க் கீறுசெல்
கால மென்னக் கதிரவன் றோன்றினுன்.

நீலம் வல் இருள் நீங்கலும் - கரிய வலிய இருள் (இராப் பொழுது) கழிந்தவுடன், நீங்கு உறும் - தோன்றி மறைகின்ற, மூலம் இல் கனவின் - (நிலைக்கும்) ஆதாரம் இல்லாத கனவைப்போல, திரு முற்று உற - (அங்கே அனைவரும் நுகர்ந்த) தேவ போகம் முடிவடைய, ஏலும் நல்வினை - (தமக்குப்) பொருந்திய புண்ணியத் தால், துய்ப்பவர்க்கு - (அதன் பயனுன இன்பத்தை) அநுபவிக்கிறவர் களுக்கு, ஈறு செல் காலம் என்ன - (அவ்வின்பம்) முடிவெய்துங் காலம் போல (காலத்தைக் குறிப்பவன்போல), கதிரவன் தோன்றினுன் - சூரியன் உதித்தான்.

இரவு முழுதும் கிடைத்தற்கரிய இன்பம் நுகர்ந்த அவ்வனை வர்க்கும், அந்நுகர்ச்சிக் காலம் முடிந்ததெனக் காட்டுவான்போலச் சூரியன் உதித்தான் என்கின்றுர். சிறிது பொழுதே நிலைத்த அவ்வின் பத்துக்குக் கனவை உவமித்தார். பெரும் புண்ணியம் செய்து உயர் நிலையுற்றுர்க்கும், அந்நிலைக்குக் கால வரம்பு உண்டென்ற நியதியை, 'ஏலுநல்வினை......காலம்' என்பதனுற் குறிப்பித்தார். இங்கே துன்னு போகங்கள் துய்த்தவர் யாவரும், மீண்டும் தம் பழைய நிலை எய்தினர் என்பது அடுத்த கவியிற் சொல்லப்படும். நீலம் - கருமை. நீல அல்லிருள் எனப் பிரித்து உரைத்தலுமாம்.

(பி. ம்.) 1. நல்லிருள், நள்ளிருள்; மீங்கிய.
2. மூலகாரண மாமுனி; முந்துற, நல்குற.
3. ஏலுநற்பயன்; ஈறுசெய். (18)

பரிவாரங்கள் பழைய நிலை எய்துதல்

1088. ஆறி நின்றற மாற்றலர் வாழ்வெனப்
பாறி வீந்தது செல்வம் பரிந்திலர்
தேறி முந்தைத்தஞ் சிந்தைய ராயினர்
மாறி வந்து பிறந்தன மாட்சியார்.

செல்வம் - (அங்கிருந்தோர் பெற்ற) இன்ப வாழ்வு, ஆறி நின்று – (புலனுசைகள்) அடங்கி நின்று, அறம் ஆற்றலர் வாழ்வு என - புண்ணியம் செய்யாதவர்களின் இன்ப வாழ்வு (கெடுதல்) போல, பாறி வீந்தது - கெட்டு அழிந்தது; (அவர் அனைவரும்) மாறி வந்து பிறந்த அன்ன மாட்சியார் – (விண்ணுலக) இன்ப நிலை மாறி (மீண்டும் மண்ணுலகில்) வந்து பிறந்தது போன்ற தன்மையுடையவர்களாய், பரிந்திலர் - (அந்நிலை குறித்து) வருந்தாதவர்களாய், தேறி, - (மனம்) தெளிந்து, தம் முந்தை சிந்தையர் ஆயினர் - தம்முடைய பழைய மனப் பாங்கு உடையவர்களானார்கள்.

மாயமாக வந்தவையெல்லாம் சூரியன் உதித்ததும் வந்தவழியே மறைந்து போக, இடையே இன்பம் நுகர்ந்த எல்லாரும், அது பெற்றிழந்த நினைவும் உணர்ச்சியும் இன்றித் தம்முடைய இயல்பான பழைய நிலையை மீண்டும் பெற்றிருந்தனர். முன்னர்த் தம் வாழ்வெலாம் மறந்து வைகினவர்கள் (1076), மீண்டும் அம்முன்னை நிலை யெய்தினர். புண்ணியம் செய்தோர் துறக்கம் புகுவதுண்மை யாயினும், அதனைச் செய்யுங்கால் புலனடக்கத்தோடு செய்தல் வேண்டுமென்ற முறையையுங் குறித்தார். பிறந்தன: தொகுத்தல்.

இதன்பின் ஒரு சுவடியில் அடியிற் காணும் ஒரு பாட்டும் அதன் முடிவில், ‘பரத்துவனிருக்கைமேவு படலம் முற்றும்’ என்ற தொடரும் உள்ளன. மேலே, ‘பரதன் காட்சி பெற்று மீள் படலம்’ என்ற தலைப்போடு தொடங்குகின்றது. பாட்டு வருமாறு:

“இன்ன வாய எறிகடற் சேனையும்
மன்னர் யாவரும் மன்னிளந் தோன்றலும்
அன்ன மாமுனி யோடெழுந் தாண்டகை
துன்னு நீள்வரைக் கேகிய சொல்லுவாம்.”

(பி. ம்.) 2. வியந்தது, விழ்ந்தது; பரிந்திலர்.
4. பிறந்தனன். (19)

பரதன் சேனை பாலைவனத்தை அடைதல்

(வேறு)

1089. காலையென் றெழுந்தது கண்டு வானவர்
வேலையென் றனிகமென் றேங்கி விம்முறச்
சோலையுங் கிரிகளுஞ் சுண்ண மாயெழப்
பாலைசென் றடைந்தது பரதன் சேனையே.

காலை - காலையில், என்று எழுந்தது கண்டு - சூரியன் உதித்ததைக் கண்டு, பரதன் சேனை - பரதனுடன் வந்த சேனை எல்லாம், வானவர் - தேவர்கள், வேலை என்று - கடல் என்றும், அனிகம் என்று - சேனை என்றும் (தெளியாமல்), ஏங்கி விம்முற - (அச்சத்தால்) வருந்தித் தவிக்க, சோலையும் - (தாம் செல்லும் வழியில் உள்ள) சோலைகளும், கிரிகளும் - மலைகளும், சுண்ணம் ஆய் எழ - புழுதி மயமாகும்படி, சென்று - நடந்துபோய், பாலை அடைந்தது - (சித்திரகூடத்துக்கு முன்னே உள்ள) பாலை நிலத்தை அடைந்தது.

மீண்டும் முன்நிலை எய்தியிருந்த சேனை, சூரியோதயமானது கண்டு மேலே செலவைத் தொடங்க, அது கண்ட தேவர்கள் அது பிரளய காலக் கடலோ என்று கலங்கியும், புழுதி எழுதலால் சேனையோ என்று கருதியும் தெளிவுறுமல் தவிக்க, சேனை சென்று எதிர்ப்பட்ட பாலைநிலத்தை அடைந்தது என்றவாறு.

சோலையும் கிரிகளும் சுண்ணமாயெழ - சேனைகள் மிதித்தலால், சோலைகளும் மலைகளும் பொடிப்பொடியாகிப் புழுதியாய் மேலெழ என்று உரைத்தலுமாம். இராமபிரான் சித்திரகூடஞ் சேருமுன், இடை வழியில் இப்பாலையைக் கடந்தமை முன்னே (729 - 38) கூறியது காண்க.

(பி - ம.) 2. வேலையன் றனிகமே யென்று.
3. கரிகளும்; சுண்ணமார்ப்புற. (20)

பாலை நல்லியல்பு அடைந்தமை

1090. எழுந்தது துகளதி னெரியும் வெய்யவன்
அழுந்தின னவிப்பரும் வெம்மை யாறினன்
பொழிந்தன கரிமதம் பொடிவெங் கானகம்
இழிந்தன வழிநடந் தேறொ ணுமையே.

எழுந்தது துகள் அதின் - (சேனை செல்லுதலால்) எழுந்ததாகிய அப்புழுதியில், எரியும் வெய்யவன் அழுந்தினன் - கொதிக்கும் சூரியன் முழுகினவனுகி, அவிப்ப அரும் வெம்மை ஆறினன் - தணித்தற்கரிய (தனது) வெப்பம் தணிந்தான்; பொடி வெம் கானகம் - (கொதிக்கும்) புழுதியையுடைய கொடிய அப்பாலையில், வழி நடந்து ஏற ஒண்ணுமை - வழி நடந்து கடக்க இயலாதவாறு, கரி பொழிந்தன

மதம் - யானைகள் சொரிந்த மதநீர்ப்பெருக்கு, இழிந்தன - (ஆறுகளாய்) ஓடின.

சேனையால் எழுந்த பெரும் புழுதியால் சூரியன் மறைப்புண்டு வெயிலின் கொடுமை தணிய, பாலையில் தரையின் வெப்பம் தணியுமாறு யானைகளின் மதநீர்ப்பெருக்கு ஆறாகி ஓடின என்றபடி.

(பி - ம்.) 1. எழுந்தவத்.
2. மாற்றினன்.
4. இழிந்தனவடி, அமுந்தினவடி. (21)

1091. வடியுடை யயிற்படை மன்னர் வெண்குடை
செடியுடை நெடுநிழல் செய்த தீப்பொதி
படியுடைப் பரலுறு பாலை மேலுயர்
கொடியுடைப் பந்தரிற் குளிர்ந்த தெங்குமே.

வடி உடை(ய) அயில் படை மன்னர் - கூர்மையை உடைய வேற்படை தாங்கிய அரசர்களின், செடி உடை(ய) வெண்குடை - நெருக்கமான வெள்ளைக் குடைகள், நெடு நிழல் செய்த - மிக்க நிழலைச் செய்தன; தீ பொதி படி உடை(ய) - அனலைக் கொண்ட வடிவத்தை உடைய, பரல் உறு - பருக்கைக் கற்கள் மிக்க, பாலை எங்கும் - அப்பாலைவனம் எங்கும், மேல் உயர் கொடி உடை(ய) பந்தரின் - மேலே உயர்த்திய சீலைக் கொடிகளாலான பந்தலால், குளிர்ந்தது - குளிர்ச்சி பெற்றது.

ஏ : ஈற்றசை.

படையோடு வந்த அரசர்களின் வெண்குடைகளாலும், படையில் உள்ள துவசங்களின் மிகுதியாலும் அப்பாலைவனம் எங்கும் பந்த லிட்டதுபோல நிழல்படுதலால், கொடிய வெப்பமுடைய அந்நிலமும் குளிர்ந்தது.

செடி - நெருக்கம்; "செடிகொள் வான்பொழில் சூழ் (திருவா. 29 : 5); செடியுடை நிழல் - மரங்களின் நிழல் போன்ற நிழல் எனலுமாம். படி - வடிவம்; தரையுமாம்; படிதலுமாம். கொடியுடைப் பந்தர் - கொடிகள் படர்ந்த பந்தல் எனினும் அமையும். மேலுயர் கொடியுடைப் பந்தரில் - மேலே உயர்த்திய கொடிகளாகிய பந்தலினால் என்பது பழைய வசனம். பந்தர்: இறுதிப்போலி.

(பி - ம்.) 2. செடியிடை, செடிமிடை; செய்த தீப்பொறி.
3. படிமிடைப், படையுடைப். (22)

1092. பெருகிய செல்வநீ பிடியென் றுள்வயின்
திருகிய சீற்றத்தாற் செம்மை யானிறம்
கருகிய வண்ணலைக் கண்டு காதலின்
உருகிய தளிர்த்தன வுலவை யீட்டமே.

பெருகிய செல்வம் நீ பிடி - மிகப் பெரிய அரசச் செல்வத்தை நீ ஏற்றுக்கொள், என்ருள் வயின் - என்று கூறிய கைகேயி இடத்தில், திருகிய சீற்றத்தால் - மாறுபட்ட வெகுளியாலான, செம்மையால் - செந்நிறத்தோடு, நிறம் கருகிய - (வடிவம் இயல்பாகக்) கருநிறம் அமைந்த, அண்ணலை கண்டு - பரதனைப் பார்த்து, உலவை ஈட்டம் - (அங்கிருந்த) பட்ட மரங்கள், காதலின் - (அவன்பால் உண்டான) அன்பினல், உருகிய தளிர்த்தன - நெகிழ்ந்தனவாகித் தளிர்த்தன.

ஏ : ஈற்றசை.

''தாவர சங்கமம் என்னுந் தன்மைய, யாவையு மிரங்கிட'' (998) எனவும், ''கற்கனியக் கனிகின்ற துயரானை'' (1026) எனவும் பரதனது துயரநிலை முன்னே கூறப்பட்டதனல், அவனைக் கண்டு பாலையிலுள்ள பட்ட மரங்களும் தளிர்த்தன என்ருர்.

உலவை - உலர்ந்த மரம். உலவையீட்டம் தளிர்த்தல்: 730, பார்க்க. செம்மையால்: ஆலுருபு ஒடு உருபின் பொருளில் வந்தது.

(பி - ம்.) 1. செல்வனீ.
4. உருகின. (23)

சேனை சித்திரகூடம் அடைதல்

1093. வன்றெறு பாலையின் மருத மாமெனச்
சென்றது சித்திர கூடஞ் சேர்ந்ததால்
ஒன்றுரைத் துயிரினு மொழுக்க நன்றெனப்
பொன்றிய புரவலன் பொருவில் சேனையே.

உயிரினும் ஒழுக்கம் நன்று என - உயிரினும் ஒழுக்கமே சிறந்தது என்று கொண்டு, ஒன்று உரைத்து - ஒன்ருகிய வாய்மையையே சொல்லி, பொன்றிய - (வாய்மையில் வழுவாது) உயிர் நீத்த, புரவலன் - சக்கரவர்த்தியின், பொரு இல் சேனை - தனக்கொப்பில்லாத சேனை, வல் தெறு பாலையில் - வலிய சுடுந்தன்மையுடைய அப்பாலை நிலத்தில், மருதம் என சென்றது - மருத நிலம்போல (வருத்தமின்றி) நடந்து சென்று, சித்திரகூடம் சேர்ந்தது - சித்திரகூடத்தை அடைந்தது.

ஏ : ஈற்றசை.

பரதன் தன்னை ஒருபோதும் அரசனுகக் கருதவில்லையாதலால், 'பொன்றிய புரவலன் சேனை' என்ருர். சேனை சென்றது சேர்ந்தது என இயையும். சென்றது : முற்றெச்சம். இராமபிரானுக்கும் பிராட்டிக்குமாக இப்பாலை குளிர்ந்த வகையை முன்பு விரித்துக் கூறியதும் (730 - 37), அதனிடையே, ''சீலமே தவம்போல எண்ணிய தெய்துவிக்கும்'' (735) என்றதும் இங்கு நோக்கத்தகும். தெறுதல் - சுடுதல்; எரித்தல். ஆம், ஆல்: அசை.

(பி - ம்.) 1. வன்றறு; பாலைபை.
2. சேர்ந்தது. (24)

சேனையின் வரவை இலக்குவன் அறிதல்

1094. தூளியின் படலையுந் துரக தத்தொடு
மூளிருஞ் சினக்கரி முழங்கு மோதையும்
ஆளியின் குழுவினோ ரார வாரமும்
கோளிரும் படையிதென் றுணரக் கூறவே.

(சேனை சித்திரகூடத்தை அணுகியபோது), தூளியின் படலையும் - (சேனையில் எழுந்த) புழுதித் திரளும், துரகதத்தொடு - குதிரைகளும், மூள் இரு சினம் கரி - மூண்டெழும் பெருஞ் சினமுடைய யானைகளும், முழங்கும் - ஒலித்தலால் ஆன, ஓதையும் - பேரொலியும், ஆளியின் குழுவினோர் ஆரவாரமும் - சிங்கத்தைப் போன்ற படைவீரர்களின் பேரிரைச்சலும், கோள் இரும் படை இது என்று - வலிய பெரிய படையின் வருகை இது என்று, உணர கூறவே - தெரியுமாறு அறிவிக்கவே.

இஃது, 'எழுந்தன னிளையவன்' என வருங் கவியோடு தொடரும். கோள் - வலிமை; (பகைவருயிரைக்) கொள்ளுதலுடைய எனவுமாம்.

(பி - ம்.) 1. துரகத்தேரொடு, துரகத்தேரொடு, துரகத்தேர்களும்.
2. மூளிரு மதகரி.
3. ஆளிரும், ஆள்களின்குழுவினர், ஆக்குமோசையும்,
4. உரைத்த கொள்கையான். (25)

இலக்குவன் செயல்

1095. எழுந்தன னிளையவ் னேறி னானிலம்
கொழுந்துயர்ந் தனையதோர் நெடிய குன்றின்மேல்
செழுந்திரைப் பரவையைச் சிறுமை செய்தவக்
கழுந்துடை வரிசிலைக் கடலை நோக்கினான்.

(படையின் வருகையை அறிந்த) இளையவன் - இலக்குவன், எழுந்தனன் - எழுந்து, நிலம் கொழுந்து உயர்ந்தது அனையது - நிலம் கொழுந்துவிட்டு உயர்ந்தாற்போன்றதான, ஓர் நெடிய குன்றின்மேல் ஏறினான் - உயர்ந்த தொரு சிகரத்தின்மேல் ஏறி, செழு திரை பரவையை - மிக்க அலைகளையுடைய கடலையும், சிறுமை செய்த - (தன் பரப்பால்) சிறியதாக்கிய, அ - அந்த, கழுந்து உடை(ய) வரி சிலை - தேய்ந்து வழுவழுப்பான கைப்பிடியை உடைய கட்டமைந்த வில்லை ஏந்திய, கடலை - கடல் போன்ற சேனையின் பரப்பை, நோக்கினான் - பார்த்தான்.

உயர்ந்த மலைச்சிகரத்தை நிலத்தின் கொழுந்தென்றார். கழுந்து - வில்லில் அடிக்கடி கை பிடித்தலால் தேய்ந்து வழுவழுப்பான பகுதி; வழுவழுப்பான நுனிப்பகுதி எனவும் உரைப்பர். கடல் - படைப்

பரப்புக்கு ஆகுபெயர். சிலைக்கடல் என்றது, படை வீரரின் விற்றொழில் திறனைச் சிறப்பித்தவாறு. எழுந்தனன், ஏறினன்: முற்றெச்சம். உயர்ந்தனையது: தொகுத்தல் விகாரம்.

இவ்விடத்தில் வான்மீகம், விலங்குகளும் பறவைகளும் அஞ்சி யோடுதலையும், தூளியையும், பேரிரைச்சலையும் இராமபிரான் கண்டும் கேட்டும் பெருஞ்சேனை ஒன்று வருவதை ஊகித்து, மரமேறி விஷயத்தை அறியுமாறு இலக்குவனைப் பணித்ததாகக் கூறும்.

(பி - ம்.) 2. குடுமிக் குன்றிலே, குன்றமேல், கொடிய குன்றின்மேல்.
3. பரவையும்; சிறுமையாக்கிய. (26)

1096. பரதனிப் படைகொடு பார்கொண் டாண்மறம்
கருதியுட் கிடந்ததோர் கறுவு காந்தலால்
விரதமுற் றிருந்தவன் மேல்வந் தானிது
சரதமற் றிலதெனத் தழங்கு சீற்றத்தான்.

(சேனையைப் பார்த்த இலக்குவன்), பரதன் - பரதனானவன், உள் கிடந்தது ஓர் கறுவு காந்தலால் - தன் மனத்துள் தங்கிய தணியாத கோபம் வெதுப்புதலால், பார் கொண்டு ஆள் மறம் கருதி - நாட்டைத் தானே கைக் கொண்டு ஆளும் கொடுமையைக் கருதி, விரதம் உற்று இருந்தவன் மேல் - (தந்தை சொல் காக்கத்) தவவிரதம் கொண்டுள்ள இராமபிரான்மேல், இ படை கொடு வந்தான் - இப்படை எடுத்து வந்திருக்கிறான்; இது சரதம் - இது நிச்சயம்; மற்று இலது என - வேறில்லை என்று எண்ணி, தழங்கு சீற்றத்தான் - மிகுகின்ற சினமுடையவனாய்.

இது, குதித்தனன் என மேல் வருவதனோடு தொடரும்.

நாடு பெற்ற பரதன், உரிய பதினான்கு ஆண்டுகள் கழிந்த பின்னும் இராமபிரான் வந்து ஆட்சியைக் கொள்ளாதவாறு அவனை அழித்துத் தானே என்றும் ஆளவேண்டும் என்ற கொடிய எண்ணத் துடன் இராமபிரான்மேல் படையெடுத்து வருகின்றான் என்று இலக்குவன் தவறாகக் கருதிக் கடுஞ் சினங்கொண்டான் என்றவாறு.

தழங்குதல் - முழங்குதல்; இங்கே மிகுதி குறித்து நின்றது. பார் கொண்டாள் மறம் - நாட்டை (வரத்தால்) பெற்றுக்கொண்ட வளுடைய கொடுமை என்று கொண்டு, அக்கொடுமையைத் தானும் கருதி என உரைத்தலுமாம்.

(பி - ம்.) 1. இப்படையுடன்.
2. காயும்; காந்தலான்.
4. மாற்றின்றெனத் தழங்கும், தயங்கும், தணப்பில். (27)

1097. குதித்தனன் பாரிடைக் குவடு நீறெழ
மிதித்தன னிராமனை விரைவி னெய்தினன்
மதித்திலன் பரதனின் மேல்வந் தான்மதிற்
பதிப்பெருஞ் சேனையின் பரப்பி னோடெனா.

(சினமிக்க இலக்குவன்), குவடு நீறு எழ மிதித்தனன் - (தான் ஏறிப் பார்த்த) மலைச் சிகரம் தூளாகும்படி (காலால்) மிதித்துக்கொண்டு, பார் இடை குதித்தனன் - (கீழே) தரையில் குதித்து, விரைவின் இராமனை எய்தினன் - விரைவாக இராமபிரானைக் கிட்டி, பரதன்—, மதித்திலன் - (உன்னை) மதியாதவனாய், மதில் பதி பெரு சேனையின் பரப்பினோடு - (வலிய) மதில் சூழ்ந்த அயோத்தியில் உள்ள பெரிய சேனைப் பரப்புடன், நின்மேல் வந்தான் எனா - உன்மேல் (போர் கருதி) வந்து உள்ளான் என்று சொல்லி.

இதுவும் மேல் கவியோடு தொடரும். குதித்தனன், மிதித்தனன், எய்தினன் என்பன முற்றெச்சங்கள்.

(பி-ம்.) 4. சேனையைப்; பரப்பினனென்றான். மு. எதிர்த்திடுஞ் சேனையோடிவ னென்றேதியே. (28)

இலக்குவன் போர்க்கோலம்

1098. கட்டினன் சுரிகையுங் கழலும் பல்கணைப்
புட்டிலும் பொறுத்தனன் கவசம் பூட்டமைத்
திட்டன னெடுத்தனன் வரிவி லேந்தலைத்
தொட்டடி வணங்கிநின் றினைய சொல்லினான்.

(பின்பு இலக்குவன் விரைந்து), சுரிகையும் - (இடுப்பில்) உடைவாளையும், கழலும் - (காலில்) வீரக் கழலையும், கட்டினன் - கட்டிக் கொண்டான்; பல் கணை புட்டிலும் பொறுத்தனன் - மிக்க அம்புகள் நிறைந்த அம்பறாத் தூணியையும் (முதுகில்) தாங்கினான்; கவசம் — போர்க் கவசத்தையும், பூட்டு அமைத்து இட்டனன் - பூட்டை மாட்டி (உடம்பில்) இட்டுக்கொண்டான்; வரி வில் எடுத்தனன் - கட்டமைந்த வில்லையும் (கையில்) எடுத்துக்கொண்டான்; ஏந்தலை - இராமபிரானை அடி தொட்டு வணங்கி நின்று - திருவடியைத் தொட்டு வணங்கி (எழுந்து) நின்று, இனைய சொல்லினான் - (பின்வரும்) இவற்றைச் சொல்லலானான்.

அவன் சொல்லியன மேலே பன்னிரண்டு கவிகளால் கூறப்படும்.

பரதன் படையெடுத்து வருகின்றானென்று இராமபிரானிடம் கூறிய இலக்குவன், உடனே போர்க்கோலம் பூண்டு, வீரவார்த்தைகள் கூறலானான். இப் பாடலுள், இறுதிய தொழிந்த ஏனைய முற்றுக்களை எச்சமாக்கிக் கூறினும் அமையும்.

(பி-ம்.) 1. கட்டிய.
4. வணங்கினன்; சொல்லுவான். (29)

இலக்குவன் கூற்று

1099. இருமையு மிழந்தவப் பரத னேந்துதோட்
பருமையு மன்னவன் படைத்த சேனையின்
பெருமையு நின்னெரு பின்பு வந்தவென்
ஒருமையுங் கண்டினி துவத்தி யுள்ள நீ.

(போர்க்கோலம் பூண்ட இலக்குவன் இராமபிரானை நோக்கி), இருமையும் இழந்த அ பரதன் - (இம்மை மறுமை ஆகிய) இரண்டிலும் பெறுதற்குரிய நற்பயன்களை இழந்த அந்தப் பரத னுடைய, ஏந்து தோள் பருமையும் - உயர்ந்த தோள்களின் கதிப்பையும், அன்னவன் படைத்த சேனையின் பெருமை யும் - அவன் பெற்றுள்ள சேனையின் பெருமையையும், ஒரு நின் பின்பு வந்த — ஒப்பற்ற உன் பின்னே (தொடர்ந்து) வந்துள்ள, என் ஒருமையும் - எனது (துணை வேண்டாத) தனித் தன்மையையும், நீ இனிது கண்டு உள்ளம் உவத்தி - நீ நன்கு பார்த்து மனம் மகிழ் வாயாக.

பரதனை இருமையும் இழந்தவன் என்றது, இம்மையில் தான் ஆசை கொண்ட நாடாட்சியையும் இழந்து, உனக்குத் தீங்கு நினைத்துச் செய்யும் தீமையால் மறுமைப் பயனையும் இழப்பான் என்றவாறு. பின்பு வந்த - பின்னே பிறந்த என்றலுமாம்.

(பி - ம்.) 1. இழந்தகோன், இகழ்ந்தவப் பரதனெந்தைகேள்.
2. அருமையும்.
3. வின்னெடு.
4. கண்டினி; உகத்தி. (30)

1100. படரெலாம் படப்படும் பரும யானையின்
திடரெலா முருட்டின தேரு மீர்த்தன
குடரெலாந் திரைத்தன குருதி யாறுகள்
கடரெலா மடுப்பன பலவுங் காண்டியால்.

படர் எலாம் பட - (பாகரும், குத்துக்கோற்காரரும், பரிக்கோற் காரருமான) வீரர்களெல்லாம் அழிய, படும் - அழிகின்ற, பருமம் யானையின் திடர் எலாம் - பருத்த யானைகள் குவிந்த மேடுகளை யெல்லாம், உருட்டின - உருட்டிக்கொண்டும், தேரும் ஈர்த்தன - தேர்களை இழுத்துக்கொண்டும், குடர் எலாம் திரைத்தன - குடல்களையெல்லாம் அலைத்துக்கொண்டும் (ஓடி), கடர் எலாம் மடுப்பன - கடல் முழுதும் மடுத்துத் தூர்ப்பனவான, குருதி ஆறுகள் பலவும் காண்டி - இரத்த வெள்ளமாகிய ஆறுகள் பலவற்றையும் நீ காண்பாய்.

இலக்குவன், தான் ஒருவனாகவே பரதனுடன் வந்துள்ள சேனை முழுவதையும் அழித்து இராமபிரானுக்குத் தீங்கு நேராதவாறு காப்பதாகக் கூறும் வீரவுரைகளில் சில இதனுட் கூறப்படுகின்றன. படர் - வீரர்; துன்பம் எனவும், பரதனுடைய படர்ந்த எண்ணங்கள் எனவும் உரைத்தலும் ஆம். பருமம் - யானைக்கு மேலிடும் தவிசுமாம்: 2; சீவக. 410, 2211. குடர், கடர்; இறுதிப்போலி.

(பி - ம்.) 1. அடிபடப், இடிபடப், துனிபடப்.
2. உருட்டிகல்.
3. கிரைத்தன, கிரைத்தெழு.
4. இரைப்பன, கிறைப்பன, மடுத்தன. (31)

1101. கருவியுங் கைகளுங் கவச மார்பமும்
உருவின வுயிரினோ டுதிரந் தோய்வில
தெரிவன சுடர்க்கணை திசைக்கண் யானைகள்
வெருவரச் செல்வன காண்டி வீரநீ.

வீர - வீரனே, தெரிவன சுடர் கணை - (நான்) தேர்ந்து செலுத்தும் ஒளியுடைய அம்புகள், கருவியும் - (பகைவரின்) கைத்தளமென்னும் கேடயங்களையும், கைகளும் - (அவற்றைப் பிடிக்கும்) கைகளையும், கவசம் மார்பமும் - கவசமணிந்த மார்புகளையும், உருவின - ஊடுருவினவாய், உயிரினோடு - அவர்கள் உயிரோடு, உதிரம் தோய்வு இல - (விரைவினால்) இரத்தக்கறை படியாதனவாகி, திசை கண் யானைகள் வெருவர - (எட்டுத்) திக்குகளிலுமுள்ள யானைகளும் அஞ்சும் வண்ணம், செல்வன - (விரைந்து) பாய்கின்றவற்றை, நீ காண்டி - நீ காண்பாயாக.

கருவி - ஆயுதங்களுமாம். கைத்தளம்: சீவக. 1561, 1606: தஞ்சை, 118.

(பி - ம்.) 1. கருவியுங் கசைகளும், கருவியங் கைகளும்; கவச மாரமும்.
2. உருவினவுயிரொடும்; உதிரந்தோய்வன, உதிரத்தோடும்போய்த்.
3. திரிவன; சுடுங்கணைத்; திசைக்கையானைகள்; திரள்கடேவரும்.
4. வெருவரச் செய்வன, வெருவுறப் பறப்பன; வீரகாண்டிநீ. (32)

1102. கோடகத் தேர்படு குதிரை தாவிய
ஆடகத் தட்டிடை யலகை யற்றுகு
கேட்கத் தடக்கைகள் கவ்விக் கீதத்தின்
நாடக நடிப்பன காண்டி நாதநீ.

தாவிய குதிரை படு - தாவிச் செல்லுவனவாகிய குதிரைகள் அழியப்பெற்ற, கோடகம் தேர் - புதிய தேர்களின், ஆடகம் தட்டை - பொன்னாலான தட்டுக்களின்மேல், அலகை - பேய்கள், அற்று உகு கேடகம் தட கைகள் கவ்வி - அறுந்து விழுந்த கேடகம் பற்றிய (வீரர்களின்) பெரிய கைகளைக் கவ்விக்கொண்டு, கீதத்தின் - பாட

லோடு, நாடகம் நடிப்பன - கூத்தாடுவனவற்றை, நாத - தலைவனே, நீ காண்டி - நீ காண்பாயாக.

இப்பாடல், பேய்க் குரவை என்னும் புறத்துறை கொண்டது. கோடகம் - புதுமை; தேர்முடி எனவும் கூறுவர். கோடு அகம் தேர் எனப் பிரித்து, யானைக் கொம்பாலாகிய வேலைப்பாட்டைத் தன்னகத்தே கொண்ட தேர் என்பாருமுளர்.

(பி - ம்.) 1. தேர்ப்படும், தேர்பரி; குருதிதாவிய.
2. ஆடகத்தகட்டிடை; அலகையுற்றுகு.
3. கேடில்பேய்; கவ்விச் சிந்தின,
4. நாடகத் தொழில்பல, (33)

1103. பண்முதிர் களிற்றெடு பரந்த சேனையின்
எண்முத லறுத்துநா னிமைப்பி னீக்கலால்
விண்முது குளுக்கவும் வேலை யாடையின்
மண்முது காற்றவுங் காண்டி மன்னநீ.

மன்ன - அரசே, நான்—, பண் முதிர் களிற்றெடு - பண்ணுதல் மிக்க யானைகளுடனே, பரந்த சேனையின் - மிகப் பரந்துள்ள இப்படையின், எண் - தொகுதியை, இமைப்பின் - இமைப் பொழுதில், முதல் அறுத்து - வேரோடு அழித்து, நீக்கலால் - ஒழித்தலால், விண்-வீர சுவர்க்கம், முதுகு உளுக்கவும் - (சுமை தாங்காமல்) முதுகை நெளிக்கவும், வேலை ஆடையின் மண் - கடலை ஆடையாகக்கொண்ட மண்ணுலகம், முதுகு ஆற்றவும் - (பாரம் நீங்குதலால்) முதுகை இளைப்பாற்றிக்கொள்ளவும், நீ காண்டி - நீ காண்பாயாக.

பண் - பண்ணுதல்; அலங்கரித்தல். எண் - பல அக்குரோணிகள் எண்ணிக்கை கொண்ட தொகுதி. உளுக்குதல் "நிலமுதுகுளுக்கிக் கிழற" (பால. 751); "உயிர்சுமந் துளுக்கிய தும்பர்" (ஆரணிய. 448); "நிலமுது குளுக்குநீ" (பாகவத:544). முதுகாற்றல்! "வங்கநெடு முதுகாற்றும்" (பால; 54); "நெடுநில மகண் முதுகாற்ற' (பால. 745).

(பி - ம்.) 1. பண்முதுகளிற்றெடு; பரதன் சேனையின்.
2. இறத்துநான்.
3. வேலையாடையாள்.
4. மண்முது குளுக்கவும்; காண்டிவள்ளனி. (34)

1104. நிவந்தவான் குருதியி னீத்த நீந்திமெய்
சிவந்தசா தகரொடு சிறுகட் கூளியும்
கவந்தமு முலகுநின் கைய தாயதென்
றுவந்தன குனிப்பன காண்டி யும்பர்போய்.

நிவந்த வான் குருதியின் நீத்தம் நீந்தி - பொங்கி எழுந்த பெரிய இரத்த வெள்ளத்தில் நீந்துதலால், மெய் சிவந்த - உடல் சிவப்பான, சாதகரொடு - பூதங்களும், சிறு கண் கூளியும் - சிறிய கண்களையுடைய பேய்களும், கவந்தமும் - தலையற்ற உடல்களும், உலகு நின் கையது ஆயது என்று - நாடு உன் வயப்பட்டதாகியது என்று, உம்பர்போல் - தேவர்கள் (மகிழ்வது) போல, உவந்தன - (தாமும்) மகிழ்ந்தனவாகி, குனிப்பன காண்டி - கூத்தாடுவனவற்றைக் காண்பாயாக.

இராச்சியம் உன் வயத்ததானால் தேவர்கள் மகிழ்வார்கள்; அவர்களைப் போலவே பூதங்களும் பேய்களும் மகிழ்ந்து களத்திலேயே கூத்தாடுவதை நீ காணலாம் என்கின்றான். உலகு - இராச்சியம். கூளி - சிறுபேயுமாம். உவந்தன: முற்றெச்சம். சாதகம் - பூதம் (பால. 518).

(பி - ம்.) 1. நீந்தி நீந்திமெய், நீந்தி நீந்திமேல், நீந்தி மெய்யெலாம்.
2. சாரதரொடு.
3. உலகமுன், கவந்த முவுலகுநின்.
4. களிப்பன; உள்ளம் போல். (35)

1105. சூழிவெங் கடகரி துரக ராசிகள்
பாழிவன் புயத்திகல் வயவர் பட்டற
ஆழிவெங் குருதியா றளைந்து வேலைகள்
ஏழுமொன் றாகிநின் றிரைப்பக் காண்டியால்.

சூழி வெம் கடம் கரி - முகபடாமணிந்த கொடிய மத யானைகளும், துரகம் ராசிகள் - குதிரைக் கூட்டங்களும், பாழி - பெருமை தங்கிய, வல் புயத்து - வலிய தோள்களையுடைய, இகல் வயவர் - போர் வீரர்களும், பட்டு அற - அழிந்தொழிதலால் (உண்டாகிற), ஆழிவெம் குருதி யாறு அளைந்து - ஆழமான வெப்பமுடைய இரத்த ஆறுகள் (ஓடிக்) கலக்கப் பெற்று, வேலைகள் ஏழும் ஒன்று ஆகி நின்று - ஏழு வகைக் கடல்களும் ஒன்றாகிச் சேர்ந்து நின்று, இரைப்ப - பேரொலி செய்ய, காண்டி - நீ காண்பாய். ஆல் : அசை.

உப்பு, பால், கருப்பஞ்சாறு முதலியனவாக வேறுபட்ட ஏழு கடல்களும், இரத்தம் கலத்தலால் சிவப்பாகி ஒன்று கூடிப் பேரிரைச்சலிடும் என உயர்வு நவிற்சியாக்குகின்றான்.

(பி - ம்.) 1. துரங்க ராசிகள்.
2. பட்டிட, பட்டுகும். (36)

1106. தழைத்தவான் சிறையன தசையுங் கவ்வின
அழைத்தவான் பறவைக ளலங்கு பொன்வடிம்
பிழைத்தவான் பகழிபுக் கீரு மார்பிடைப்
புழைத்தவான் பெருவழி போவ காண்டியால்.

அலங்கு - விளங்குகின்ற, பொன் வடிம்பு இழைத்த - கரும் பொன்னால் விளிம்பு அமைக்கப் பெற்ற, வான் பகழி — (நான் விடும்) பெரிய அம்புகள், புக்கு ஈரும் மார்பு இடை - பாய்ந்து கிழிக்கும் (வீரர் களுடைய) மார்பிலே, புழைத்த - (அவ்வம்புகள்) துளைத்து உண்டாக்கிய, வான் பெரு வழி - மிகப் பெரிய வழியிலே, தழைத்த வான் சிறையன - அடர்ந்த பெரிய சிறகுகளையுடையனவான, வான் பறவைகள் - பெரிய (கழுகு முதலிய) பறவைகள், அழைத்த - தம் இனத்தையும் கூவி அழைத்தனவாய், தசையும் கவ்வின - (வீரர் உடம் பின்) தசையையும் கொத்திக் கௌவிக்கொண்டு, போவ - போவன வற்றை, காண்டி - காண்பாய். ஆல் : அசை.

தன் அம்புகள் சென்று பாயும் வீரர்களின் மார்பில் அவை பெருந் தொளைசெய்துவிட, போர்க்களத்தில் பழகு தலையுடைய கழுகு, பருந்து, காக்கை முதலியன அவர்களுடம்பில் சதையைக் கொத்திக்கொண்டு மார்பிற் பட்ட தொளை வழியே புகுந்து வெளியே சென்று பறத்தலை நீ காண்பாய் என்கின்றான். வீரர் மார்பில் சதையைப் பற்றிக்கொண்டு, அங்கு உண்டான தொளைவழியே ஊடுருவி அப்பாற் செல்வன சிறகம்புகள் என, முழுதும் அம்புகளின் தொழிலாக்கியும், இருவர் மார்பிடை என்ற பாடங்கொண்டு, பரத சத்துருக்கனராகிய இருவர் மார்பிலும் எனவும் பிறவாறும் இப்பாடலுக்குப் பொருள் உரைப்பர். "பொன்வடிம் பிழைத்தவான் பகழி", "பொன்னின்ற வடிம்பின் வாளி" (ஆரணிய. 422), "பொன்றெரி வடிம்புடையப் பொருவில் வாளி" (ஷ 491). பொன்; கரும் பொன் - இரும்பு. அம்புகளுக்குச் சிறகு செறித்தலும் உண்டு. வான் பெரு : ஒருபொருட் பன்மொழி.

முந்திய அச்சுப் புத்தகங்களிலும் சில சுவடிகளிலும் இப்பாடலும் அடுத்ததும் முன் பின்னாக உள்ளன.

(பி-ம்.) 2. வயங்கு.
3. இருவர் மார்பிடைப், இரவிமார்பிடைப், ஈர்ந்து மார்பிடைப், பகழிகளீரு மார்பிடைப். (37)

1107. ஆளற வலங்குதே ரழிய வாடவர்
வாளற வரிசிலை துணிய மாக்கரி
தாளறத் தலையறப் புரவி தாரொடும்
தோளற வடிக்கணை தொடுப்பக் காண்டியால்.

ஆள் அற - காலாட் படை வீரர் அறுபடவும், அலங்கு தேர் அழிய - அசைந்து செல்லுகிற தேர்கள் அழியவும், ஆடவர் - (தேரில் உள்ள) வீரர்களின், வாள் அற - வாட்கள் துணிபடவும், வரி சிலை துணிய - கட்டமைந்த விற்களும் துணிபடவும், மா கரி - பெரிய யானை களும், தாரொடும் புரவி - கிண்கிணி மாலையணிந்த குதிரைகளும், தாள் அற - கால்கள் அறுபடவும், தலை அற - தலைகள் அறுபடவும்,

தோள் அற - (யானை, குதிரைகளின்மேல் ஏறிய வீரர்களின்) தோள்கள் அறுபடவும், வடி கணை தொடுப்ப காண்டி - (நான்) கூரிய அம்புகளைச் செலுத்தக் காண்பாய்.

ஆல் : அசை.

ஆடவர் என்பதனைத் தோளற என்பதன் முன்னும் கூட்டிப் பொருளுரைக்கப் பெற்றது.

(பி - ம்.) 1. வயங்குதேர், வழங்குதேர்.
3. புரவிதாளொடும்.
4. தொடுப்பன், தரப்பக். (38)

1108. ஒருமகள் காதலி னுலகை நோய்செய்த
பெருமக னேவலிற் பரதன் றான்பெறும்
இருநில மாள்கைவிட் டின்றென் னேவலால்
அருநர காள்வது காண்டி யாழியாய்.

ஆழியாய் - சக்கரமேந்தியவனே, ஒரு மகள் காதலின் - ஒரு பெண்ணின்மேல் கொண்ட காதலால், உலகை நோய் செய்த - உலக முழுவதையும் துன்புறச் செய்த, பெருமகன் ஏவலின் - சக்கரவர்த்தியின் ஆணையால், பரதன் —, தான் பெறும் இரு நிலம் ஆள்கை விட்டு - தான் பெற்ற பெரிய இராச்சியத்தை ஆளுதலை விட்டு, இன்று - இப்போது, என் ஏவலால் - என் பணியால், அரு நரகு ஆள்வது காண்டி - மீளுதற்கரிய நரகத்தை ஆள இருப்பதை நீ காண்பாய்.

ஆழியாய் என்றது, திருமாலின் அமிசமானவனே யென்றபடி; ஆணைச் சக்கரம் ஏந்துதற்குரியவனே எனவுமாம். தந்தை செய்தது தவறே என்ற கருத்துடையவனாதலால், 'ஒரு மகள் காதலின் உலகை நோய் செய்த பெருமகன்' என்றான். பெருமகன் - அரசன்; 1114; சீவக : 183.

(பி - ம்.) 2. பெருமகள்.
3. ஆள்தல் விட்டு, வாழ்தல் விட்டு.
4. ஆளுதல்; ஐயகாண்டியால். (39)

1109. வையகந் துறந்துவந் தடவி வைகுதல்
எய்திய துனக்கென நின்னை யீன்றவள்
நைதல்கண் டுவந்தவ ளவையி னேங்கிய
கைகயன் மகள்விழுந் தரற்றக் காண்டியால்.

உனக்கு—, வையகம் துறந்து வந்து - இராச்சியத்தைக் கைவிட்டு வந்து, அடவி வைகுதல் எய்தியது என - காட்டில் வாழ நேர்ந்ததே யென்று, நின்னை ஈன்றவள் நைதல் கண்டு - உன்னைப் பெற்றவள் மனம் நோதலைக் கண்டு, உவந்தவள் - மகிழ்ந்தவளும், நவையின்

ஓங்கிய - குற்றத்தில் மேம்பட்டவளுமான, கைகயன் மகள் - கைகேயி, விழுந்து அரற்ற காண்டி - (பரதனது அழிவு கண்டு தரையில்) விழுந்து அழுது புலம்பக் காண்பாய்.

ஆல் : அசை.

(பி - ம்.) 1. துறந்து போய்.
2. உன்னையீன்றவள்.
3. நகையினீங்கிய, நன்மை நீங்கிய.
4. விழுந்தலறக், கிடந்தரற்றக். (40)

1110. அரஞ்சுட வழனிமி ரலங்கல் வேலினாய்
விரைஞ்சொரு நொடியிலிவ் வனிக வேலையை
உரஞ்சுடு வடிக்கணை யொன்றில் வென்றுமுப்
புரஞ்சுடு மொருவனிற் பொலிவென் யானென்றான்.

அரம் சுட - அரம் (அராவி) வருத்துதலால், அழல் நிமிர் - ஒளி மிகுகின்ற, அலங்கல் வேலினாய் - வெற்றிமாலை சூடிய வேலை உடையவனே, விரைஞ்சு ஒரு நொடியில் - மிக விரைந்து ஒரு நொடிப் பொழுதில், இவ் அனிகம் வேலையை - இந்தச் சேனைக் கடலை, உரம் சுடு - (முழுதும்) வலியழிக்கத் தக்க, வடி கணை ஒன்றில் - கூரிய ஓரம்பினாலேயே, வென்று - வென்றழித்து, முப்புரம் சுடும் ஒருவனின் - திரிபுரங்களை அழித்த ஒப்பற்ற சிவபெருமானைப்போல, பொலிவென் யான் - விளங்குவேன் நான், என்றான் - என்று கூறி முடித்தான்.

தனதாற்றலைப் பல படியாகக் கூறி வந்த இலக்குவன் இறுதியில், சிவபெருமான் மிக எளிதாகத் திரிபுரமெரித்தது போல நான் ஒருவனே இப்படை முழுதும் அழித்து விடுவேன் என்று கூறி முடித்தான். சுடுதல் - வருத்துதல்; ''சுடச்சுட நோற்கிற் பவர்க்கு'' (குறள் : 267). அழல் - ஒளி; 'மணிவிளக் கழலும் பாயலுள்' (பால. 1303). விரைஞ்சு - விரைந்து; போலி.

(பி - ம்.) 2. விரைந்து.
3. உரஞ்சுட; வெல்லுமுப், வென்றி சேர்.
4. காண்டியால். (41)

இராமன் பரதனுடைய இயல்பை விளக்குதல்

1111. இலக்குவ வுலகமோ ரேழொ டேழு நீ
கலக்குவெ னென்பது கருதி னாலது
விலக்குவ தரிதது விளம்ப வேண்டுமோ
புலக்குரித் தொருபொருள் புகலக் கேட்டியால்.

இலக்குவ - இலக்குவனே, உலகம் ஓர் ஏழொடு ஏழும் - பதினான்கு உலகங்களையும், கலக்குவென் என்பது - நான் அழிப்பேன்

என்பதை, நீ கருதினுல் - நீ எண்ணிச் செய்யத் தொடங்கினுல், அது விலக்குவது அரிது - அதைத் தடுப்பது (எவர்க்கும்) அரிதாகும்; அது விளம்ப வேண்டுமோ - அதைச் சொல்லவும் வேண்டுமோ? (ஆயினும்) புலக்கு உரித்து ஒரு பொருள் - அறிவுறுத்தற்குரிய ஒரு செய்தியை, புகல - (நான்) சொல்ல, கேட்டி - கேட்பாயாக.

ஆல் : அசை.

'இலக்குவா, உனது ஆற்றல் அளவிடற்கரியது; நீ கருதியது முடித்தே தீர்வாய்; ஆயினும், நான் தெரிவிக்க வேண்டியது ஒன்றுண்டு; அதனைக் கேட்பாயாக' என்று இராமபிரான் அறிவுரை கூறலுற்ருன். ஏழொடு ஏழு - கீழ் ஏழும் மேல் ஏழும் ஆகிய பதினுன்கு. புலக்கு : அத்துச்சாரியை தொக்கது. இராமபிரான் அறிவுறுத்தியவை இது முதல் ஆறு கவிகளில் கூறப்படும்.

(பி - ம்.) 1. ஏழோடேழுசீ, உலகமீரேழும்.
2. கலக்குவையென்பது.
3. அரிது நீ; விளம்பல். (42)

1112. நங்குலத் துதித்தவர் நவையி னீங்கினுர்
எங்குலப் புறுவர்க ளெண்ணின் யாவரே
தங்குலத் தொருவருந் தரும நீங்கினுர்
பொங்குலத் திரளொடும் பொருத தோளினுய்.

பொங்கு உலம் திரளொடும் பொருத தோளினுய் - பெரிய கற்றூண்களை யொத்த தோள்களையுடையவனே, நம் குலத்து உதித்தவர் - நம் குலத்தில் தோன்றியவராய், நவையின் நீங்கினுர் - குற்றங்களின் நீங்கிய அரசர்கள், எங்கு உலப்புறுவர்கள் - எவ்வாறு எண்ணி முடிவுறுவர்? எண்ணின் - ஆலோசிக்குமிடத்து, தம் குலத்து ஒருவு அரும் தருமம் நீங்கினுர் யாவர் - தம் குலத்தில் கை விடுதற்கரிய தருமத்தினின்றும் தவறினவர் (அவருள்) யாவர் உளர்? (ஒருவருமில்லை).

'நம் குலத்து முன்னேர்களுள், குல தருமத்தைக் கைவிட்டவர் எவருமில்லை' என்று தொடங்குகின்றது இராமபிரானது அறிவுரை. இப்பாடலின் அமைப்பு: 17-ஆம் பாடலை நோக்குக. நம் குலத்தில் தோன்றிய பரதனும் தவறு செய்யான் என்பது கருத்து.

(பி - ம்.) 1. நங்குலத்துற்றவர்; நவைகணீங்கினுர்.
2. எங்குலப்புறுவரென்று.
3. நீங்கலார். (43)

1113. எனைத்துள மறையவை யியம்பற் பாலன
பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே
அனைத்திற மல்லன வல்ல வன்னது
நினைத்திலை யென்வயி னேய நெஞ்சினுல்.

மற்ற எனைத்து உள—வேதங்கள் எவ்வளவு உள்ளனவோ, அவை - அவையெல்லாம், இயம்பல் பாலன - சொல்லத்தக்கவை, பணைதிரள் கரம் கரி பரதன் செய்கையே - பணைபோலும் திரண்ட துதிக்கையை யுடைய யானைச் சேனையையுடைய பரதனது ஒழுக்கமே; அனை திறம் அல்லன - அத்தன்மைய அல்லாதன, அல்ல - வேதங்களுட் சொல்லப் படுவன அல்ல (பரதனுடைய ஒழுக்கங்களுமல்ல); என்வயின் நேயம் நெஞ்சினுல் - என்பால் அன்புமிக்க (உன்) மனத்தினுல், அன்னது நினைத்திலை - அவ்வுண்மையை நீ நினைத்தாயில்லை.

'இலக்குவ, என்பால் வைத்த அன்பு மிகுதியால் நீ பரதனது இயல்பை உணராமல் பேசுகின்ருய்; அவன் செயல்கள் எல்லாம் வேத நெறியிற் சிறிதும் பிறழ்வன அல்ல; இதனை நீ பின்பு உணர் வாய்' என்கின்ருன் இராமபிரான்.

அனை திறம் - (அவன் சேனையோடு வந்துள்ள) அத்தன்மை; அல்லன அல்ல - (நீ எண்ணுவதுபோல்) தகாத செயல்கள் கருதிய தன்று என உரைத்தலுமாம்.

(பி - ம்.) 2. கரகரிப், கடகரிப், கைக்கரிப்.
3. அனைத்தற மல்லன, வினைத்திற மல்லன; அல்லனன்னது, ஐயவன்னது.
4. நினைக்கிலையென்; நேயநெஞ்சினுய். (44)

1114. பெருமக னேவலிற் பிறந்த காதலின்
வருமென நினைகையு மண்ணை.யென்வயின்
தருமென நினைகையுந் தவிர்த்துத் தானையால்
பொருமென நினைகையும் புலமைப் பாலதோ.

பெருமகன் ஏவலின் - சக்கரவர்த்தியின் ஏவலாலும், பிறந்த காதலின் – என்பால் அவனுக்கு உண்டான அன்பினுலும், வரும் என நினைகையும் - (அவன்) வருகின்ருன் என்று நினைப்பதும், மண்ணை என்வயின் தரும் என நினைகையும் - இராச்சியத்தை என்னிடம் ஒப்பிப்பான் என்று நினைப்பதும், தவிர்த்து - கைவிட்டு, தானையால் - (தான் கொண்டு வந்துள்ள) சேனையால், பொரும் என நினைகையும் - (என்னேடு) போர் செய்வானென்று நினைப்பதும், புலமை பாலதோ - அறிவுடைமையாகுமோ? (ஆகாது).

'பரதன் உன்னைப் போலவே என்பால் அன்பு மிக்கவன்; அவன் அரசை ஏற்க விரும்பியிரான்; ஆதலால், என்னை அழைத்து வருமாறு தந்தை அவனை ஏவ அதனுலும், தனது இயல்பான அன்பு மிகுதியாலும், இராச்சியத்தை என்பால் தந்து என்னை அழைத்துப் போகவே அவன் வருகின்ருன் என்பதைத் தவிர, வேறுவிதமாக எண்ணுவது அறிவுடைமையன்று' என இடித்துரைக்கின்ருன் இராமபிரான். தந்தை இறந்தமையை இராமபிரான் அறியாததனுல்,

அவன் பரதனை ஏவியிருத்தல் கூடுமென்று நினைத்தான். பிறந்த - உடன் பிறந்த எனவுமாம். பெருமகன் : 1108 பார்க்க.

(பி - ம்.) 1. பெருமகனென்வயின்; பிரிந்ததுன்பினுல்,
3. தவிரத்தானையால், தருமத்தானையால், அன்றித்தானையால்,
4. புகலற்பாலதோ. (45)

1115. பொன்னொடும் பொருகழற் பரதன் போந்துதான்
நன்னெடும் பெரும்படை நல்க லன்றியே
என்னொடும் பொருமென வியம்பற் பாலதோ
மின்னொடும் பொருவுற விளங்கும் வேலினாய்.

மின்னொடும் பொருவு உற விளங்கும் வேலினுய் - மின்னலோடொப்ப விளங்கும் வேலையுடையவனே, பொரு கழல் பரதன் - போருக்குரிய வீரக் கழலை அணிந்த பரதன், போந்து - (இங்கே) வந்து, பொன்னொடும் - அரசச் செல்வத்துடனே, நல் நெடு பெரு படை - நல்ல மிகப் பெரிய சேனையை, நல்கல் அன்றி - (எனக்குக்) கொடுப்பதையன்றி, என்னொடும் பொரும் என - என்னோடு போர் செய்வானென்று, இயம்பல் பாலதோ - சொல்லத் தகுமோ? (தகாது).

'பரதன் என்னோடு போர் செய்வானென்று நினைத்தலும் அறிவுடைமையன்று' என முன் பாட்டிற் கூறியதையொட்டி, அவன் படையோடு வந்தது அப்படையினை என்பாற் சேர்ப்பித்தற்கேயன்றிப் பிறிதன்று என்கின்றான் இராமபிரான்.

பொன்னொடும் பொருகழல் என இயைத்து, பொன்னால் இயன்ற வீரக் கழல் என்று உரைத்தலுமாம். இப்பொருளுக்கு, ஒடு, ஆலுருபின் பொருளில் வந்ததெனக் கொள்க. தான், ஏ : அசை.

(பி - ம்.) 1. போந்தனன்,
2. பெரும்புவி, பெருநிலம்; படைகளை, வயப்படை; மு. அந்நெடுந்திருவெலா மருள்வதன்றியே.
4. பொருவிறல்; இலங்கு, வாளினாய். (46)

1116. சேணுயர் தருமத்தின் றேவைச் செம்மையின்
ஆணியை யன்னது நினைக்க லாகுமோ
பூணியல் மொய்ம்பினாய் போந்த தீண்டெனைக்
காணிய நீயது பின்னுங் காண்டியால்.

பூண் இயல் மொய்ம்பினாய் - அணிகலன்கள் பூண்ட தோள்களை உடையவனே, சேண் உயர் தருமத்தின் தேவை - மிக உயர்ந்த தரும தேவதையே போன்றவனும், செம்மையின் ஆணியை - நன்மைக் குணத்திற்கு உரையாணி போன்றவனுமான பரதனை, அன்னது நினைக்கல் ஆகுமோ - (நீ கூறியவாறு) அத்தன்மையாக நினைத்தல் தகுமா? (தகாது); போந்தது - (அவன்) வந்தது, ஈண்டு எனை காணிய - இங்கே என்னைக் காண்பதன்பொருட்டேயாகும்; அது - அவ்வாறு

வதை, நீ பின்னும் காண்டி - நீ பின்னும் (நேரே) காண்பாய். ஆல்: அசை.

இராமபிரான், 'பரதன் என்னைக் காண்பதற்கே வருகின்றான்; நான் இப்போது சொல்வது உண்மையாதலை நீ நேரே அவன் இங்கு வந்தவுடன் உணர்வாய்' என்று கூறி முடிக்கின்றான். வேதவிதிகளே பரதன் செயல்கள் (1113) என முன்னே கூறியதற்கியைய, இங்கே அவனை, 'தருமத்தின் தேவு' 'செம்மையின் ஆணி' என உயர்த்துக் கூறினான். இலக்குவன் எண்ணுவது தவறு என்பதனை மீண்டும் மீண்டும் வற்புறுத்துகின்றான். மொய்ம்பு - தோள்.

(பி - ம்.) 1. கோவைச்.
3. பூணுயர்.
4. அன்னது; பின்னைக். (47)

பரதன் சத்துருக்கனுடன் முற்பட்டு வருதல்

1117. என்றன னிளவலுக் கிசைத்தங் கேந்தலும்
நின்றனன் பரதனு நிமிர்ந்த சேனையைப்
பின்றரு கென்றுதன் பிரிவில் காதலின்
தன்றுணைத் தம்பியுந் தானு முந்தினான்.

ஏந்தலும் - பெருமையிற் சிறந்த இராமபிரானும், என்றனன் இளவலுக்கு இசைத்து - என்றிவ்வாறாகத் தம்பிக்குக் கூறி, நின்றனன் - (பரதன் வருகையை எதிர்நோக்கி) நின்றான்; பரதனும்—, நிமிர்ந்த சேனையை - மிகப் பரந்த தன் சேனையை, பின் தருக என்று - பிற்பட நடத்தி வருக என்று (தலைவர்களுக்குக்) கட்டளையிட்டு, தன் பிரிவு இல் காதலின் - (இராமபிரான்பால் என்றும்) நீங்குதல் இல்லாத் தனது அன்போடும், தன் துணை தம்பியும் தானும் - தன்னையே போன்ற துணைவனான தம்பி சத்துருக்கனும் தானுமாக, முந்தினான் - முற்பட்டு (இராமபிரான்பால்) வந்தான்.

'என்றனன்' என்றது முன்னே 1112-16 ஆகிய ஐந்து பாடல்களிற் கூறியவற்றைக் குறித்து நின்றது. என்றனன்: முற்றெச்சம். இளவல் - இலக்குவன்.

பரதனது வன்மையை நம்மால் வெல்ல முடியாதென்றும், அத்தகையவனை நாம் வென்றழித்தாலும் அரசின் ஆசையால் ஆகியது நம் செயல் என்ற பழிக்கிடமாகுமென்றும், அவன் வருகை தனது அன்பின் காரணமாகவேயிருக்கும், ஒருவேளை தந்தை ஏவியும் இருக்கலாம் என்றும் இராமபிரான் இலக்குவனுக்குச் சொன்னதாக வான்மீகம் கூறும்.

(பி - ம்.) 1. இளவலை நோக்கி.
2. நிவந்த தானையைப்.
4. தன்றனித். (48)

பரதனது நிலையை இராமன் காணுதல்

1118. தொழுதுயர் கையினன் றுவண்ட மேனியன்
அழுதழி கண்ணின னவல·மீதென
எழுதிய படிவமொத் தெய்து வான்றனை
முழுதுணர் சிந்தையான் முடிய நோக்கினன்.

தொழுது உயர் கையினன் - வணங்கித் தலைமேல் குவித்த கைகளையுடையவனும், துவண்ட மேனியன் - வாடித் துவளும் திருமேனியுடையவனும், அழுது அழி கண்ணினன் - (இடைவிடாது) அழுது நீர் சோரும் கண்களையுடையவனும் (ஆகி), அவலம் ஈது என - துயரத்தின் வடிவம் இதுதான் என்று, எழுதிய படிவம் ஒத்து - (சித்திரத்தில்) எழுதிக்காட்டிய உருவம் போன்று, எய்துவானை - வருகின்ற பரதனை, முழுது உணர் சிந்தையான் - எல்லாம் உணர்ந்த திருவுள்ளமுடைய இராமபிரான், முடிய நோக்கினன் - (தலைமுதல் கால்வரை) முழுதும் (கூர்ந்து) பார்த்தான்.

பரதனது தோற்றமே, இலக்குவன் எண்ணியது தவறு என்பதனைக் காட்டும் என்பார், அதனை நன்கு எடுத்துக் கூறினர். தன்; சாரியை ; ''பிரிவெ னுந்துய ருருவுகொண் டாலன்ன பிணியாள்'' (சுந்தர. 336) என்பது ஈண்டு ஒப்பு நோக்கத் தகும்.

(பி - ம்.) 2. அழுதிழி.
3. வடிவமொத்து
4. முழுதுயர், முழுதும், (49)

பரதனது தன்மையை இராமன் இலக்குவனுக்குக் காட்டுதல்

1119. கார்ப்பொரு மேனியக் கண்ணன் காட்டினன்
ஆர்ப்புறு வரிசிலை யிளைய வையநீ
தேர்ப்பெருந் தானையப் பரதன் சீறிய
போர்ப்பெருங் கோலத்தைப் பொருந்த நோக்கெனு.

கார் பொரு மேனி - கருமேகம் போன்ற திருமேனியுடைய, அ கண்ணன் - அவ்விராமபிரான் (இலக்குவனை நோக்கி), ஆர்ப்பு உறு வரி சிலை - நாணொலிமிக்க கட்டமைந்த வில்லினையுடைய, இளைய ஐய - இளையவனே, தேர் பெரும் தானை - மிக்க தேர்களைக் கொண்ட பெரும் படையையுடைய, அ பரதன் - அந்தப் பரதனது, சீறிய - நம்மேல் சினங்கொண்ட, பெரும் போர்க் கோலத்தை—, நீ பொருந்த நோக்கு எனு - நீ நன்றாகப் பார் என்று சொல்லி, காட்டினன் - (பரதனைச் சுட்டிக்) காட்டினன்.

பரதன் வருகையில் களங்கம் கருதாத இராம்பிரான், 'பரதன் போர்க் கோலங்கொண்டு வருகின்றான என்பதை நீயே நன்கு பார்'. என்று தம்பிக்குக் கூறிக் காட்டினன்.

இராமபிரானைக் கண்ணன் எனல் : 659-ஆம் பாடலின் விசேடக் குறிப்புப் பார்க்க.

(பி-ம்.) 1. கார்ப்பெருஞ் மேனியன்றீ கண்ணிற் காட்டினன்,
2. ஐயனே,
3. ஏர்ப்பெரும்,
4. நோக்கென்றான். (50)

இலக்குவன் தன் செயலுக்கு வருந்தி நிற்றல்

1120. எல்லொடுங் கியமுகத் திளவ னின்றனன்
மல்லொடுங் கியபுயத் தவனை வைதெழும்
சொல்லொடுஞ் சினத்தொடு முணர்வு சோர்தர
வில்லொடுங் கண்ணநீர் நிலத்து வீழவே.

இளவல் - (பரதனைப் பார்த்த) இலக்குவன், மல் ஒடுங்கிய புயத்தவனை - வலிமை குன்றிய தோள்களையுடைய அப்பரதனை, வைது - ஏசி, எழும் சொல்லொடும் - (தன்பால்) எழுந்த சொற்களும், சினத்தொடும் - கோபமும், உணர்வும் - அறிவும், சோர்தர - தளர்ந்தொழியவும், வில்லொடும் - (கையில் பிடித்த) வில்லோடு, கண்ண நீர் — கண்களிலிருந்து பெருகிய நீர், நிலத்து வீழ - தரையில் விழவும், எல் ஒடுங்கிய முகத்து - ஒளி மழுங்கிய முகத்தோடு, நின்றனன் - (பிரமித்து) நின்றான். ஏ : ஈற்றசை.

அருகில் வந்த பரதனது தோற்றத்தை நன்கு கண்ட இலக்குவன், தன் குற்றத்தை உணர்ந்து நாணி, வருத்த மிகுதியோடு செயலற்று நின்றுவிட்டான். 'போர்ப்பெருங் கோலத்தைப் பொருந்த நோக்கு' என்ற தமையன் சொல், தம்பியின் மனத்துள் முள்ளைப் போலத் தைத்தது; வில் கைப்பிடியினின்றும் நழுவியதையும் உணராமல் கண்ணீர் பெருக்கி நின்றான் என்பதனோடு, "விற்கையினின் றிடைவீழ விம்முற்று நின்றொழிந்தான்" (1026) என்ற குகன் செயல் ஒப்பிடத்தகும்.

(பி-ம்.) 3. சோர்ந்து சோர்தர.
4. கண்ணினீர். (51)

பரதன் செயல்

1121. கோதறத் தவஞ்செய்து குறிப்பி னெய்திய
நாதனைப் பிரிந்துதன் னலத்தி னீங்கிய
மேதினித் திருமகள் மெலிகின் றாள்விடு
தூதெனப் பரதனுந் தொழுது துன்னினன்.

கோது அற தவம் செய்து - குற்றமறத் தவத்தைச் செய்து, குறிப்பின் எய்திய - தன் கருத்தின்படி அடையப்பெற்ற, நாதனை -

பிரிந்து - தலைவனான இராமபிரானைப் பிரிந்ததனால், தன் நலத்தின் நீங்கிய - தான் எய்துதற்குரிய நலங்களின் நீங்கியவளான, மேதினி திருமகள் - இராச்சிய லட்சுமி, மெலிகின்றாள் - மிக வருந்துவாளாய், விடு தூது என - (இராமபிரான்பால்) அனுப்பிய தூதுபோல, பரதனும்—, தொழுது - (தன்னை எதிர்நோக்கும் இராமபிரானைத்) தொழுதவாறே, துன்னினான் - அணுகினான்.

பரதன் வந்தது இராமபிரானை அழைத்துப் போதற்கே யாகலின், அவனை இராச்சிய லட்சுமி அனுப்பிய தூதுபோல எனத் தற்குறிப் பேற்றமாக்கிக் கூறுகின்றார்.

(பி - ம்.) 2. பிரிந்தனள் நலத்து நீங்கினள்; மு, நாதனை யல்லுறன் பகலு நீங்கினள்.
3. வேதனைத் திருமகள்; புவிமகள், பூமகள்.
4. தொழுது தோன்றினான். (52)

1122. அறந்தனை நினைந்திலை யருளு நீத்தனை
துறந்தனை முறைமையு மென்னுஞ் சொல்லினான்
மறந்தனன் மலரடி வந்து வீழ்ந்தனன்
இறந்ததன் றாதையை யெதிர்கண் டென்னவே.

(அணுகி வந்த பரதன்), அறம் தனை நினைந்திலை - (உனக்குரிய கடமையான) தருமத்தை நீ நினைந்தாயில்லை; அருளும் நீத்தனை - (உனது இயல்பான) அருட்குணத்தையும் கைவிட்டாய்; முறைமையும் துறந்தனை - நம் குல முறையையும் விட்டாய்; என்னும் சொல்லினான் - என்ற வார்த்தைகளுடனே, இறந்த தன் தாதையை எதிர்கண்டால் என்ன - இறந்துபோன தன் தந்தையான சக்கரவர்த்தியை (மீண்டும் உயிரோடு) எதிரில் கண்டாற்போல, மறந்தனன் - தன்னை மறந்தவனாய், வந்து மலர் அடி வீழ்ந்தனன் - வந்து (இராமபிரானுடைய) தாமரை மலரை போன்ற திருவடிகளிலே விழுந்தான்.

ஏ : ஈற்றசை.

'அரசர்க்குரிய அறம் நாடாளுகை; அதனை விட்டதனால், உயிர்களெல்லாம் அல்லலுறுதல் கண்டும் இரங்கவில்லை; மூத்தவற்குரியது அரசு என்ற நம் குல முறையையும் விட்டுவிட்டாய்' என்று குறைப் படுகின்றான் பரதன். "அறந்தனை வேரறுத் தருளைக் கொன்றனை" (843) என்று அவன் தந்தையைக் குறித்துக் கூறியது இங்கே ஒப்பு நோக்கத் தகும்.

(பி - ம்.) 2. இறந்தனை.
4. நற்றாதையை; எதிர்கண்டானென. (53)

இராமனுடைய செயல்

1123. உண்டுகொ லுயிரென வொடுங்கி னுருக்
கண்டன னின்றனன் கண்ணன் கண்ணெனும்
புண்டரீ கம்பொழி புனல வன்சடா
மண்டல நிறைந்துபோய் வழிந்து சோரவே.

கண்ணன் - இராமபிரான், உயிர் உண்டு கொல் என - உயிர் உண்டோ இல்லையோ என்னுமாறு, ஒடுங்கினான் உரு கண்டனன் - வாடி மெலிந்த பரதனது உருவத்தைக் கண்டு, கண் எனும் புண்டரீகம் பொழி புனல் - (தன்) கண்களாகிற தாமரை மலர்கள் பொழிந்த நீர்ப்பெருக்கு; அவன் சடா மண்டலம் நிறைந்துபோய் - அப்பரதனுடைய சடை முழுதும் நிரம்பி, வழிந்து சோர- வழிந்து (தரையில்) பெருகுமாறு, நின்றனன் - (கண்ணீர் பெருக்கி) நின்றான்.

ஏ: ஈற்றசை.

கண்டாரெவரும் மனமுருகிக் கரையுமாறு உருவழிந்திருந்த பரதனது தோற்றம், இராமபிரானையும் அவ்வாருக்கியது. கண்ணன் : 1119 குறிப்புப் பார்க்க.

(பி - ம்.) 1. உயிரெனவுருகக் கண்டவன்;
3. புனலின்வன்சடா.
4. பாயவே. (54)

1124. அயாவுயிர்த் தழுகணீ ரருவி மார்பிடை
உயாவுறத் திருமன முருகப் புல்லினான்
நியாயமத் தனைக்குமோர் நிலைய மாயினான்
தயாமுத லறத்தினைத் தழீஇய தென்னவே.

நியாயம் அத்தனைக்கும் ஓர் நிலையம் ஆயினான் - நீதிகள் எல்லா வற்றிற்கும் ஓர் இருப்பிடமான இராமபிரான், அயா உயிர்த்து - பெருமூச்செறிந்து, அழு கண் நீர் அருவி - அழுகின்ற கண்களி னின்றும் பெருகும் நீரருவியானது, மார்பு இடை உயா உற - (தனது) மார்பிலே பெருகியோடவும், திருமனம் உருக - தனது அழகிய மனம் நெகிழ்ந்து உருகவும், தயா முதல் - கருணை வடிவாகிய முதற்பொருள் (முதற் கடவுள்), அறத்தினை தழீஇயது என்ன - அறக் கடவுளைத் தழுவிக் கொண்டாற்போல, புல்லினான் - (பரதனை எடுத்துத்) தழுவிக் கொண்டான்.

ஏ : ஈற்றசை.

இராமபிரானை நீதிகளுக்கு எல்லாம் நிலைக்களமானவன் என விசேடித்து, அதனோடு கருணையே வடிவு கொண்டவன் என்றும், பரதன் அறத்தின் வடிவானவன் என்றும் கூறி, கருணை அறத்தைத் தழுவியதுபோல என உவமித்தார். தருமத்திற்கு மூலம் தயை

யாகலின், தயா முதல் - தயையாகிய மூலம் என்றலுமாம். "தயா மூலதன்மம்" என்பது அப்பர் திருவாக்கு. அயா உயிர்த்து - சோகம் சிறிது தணிந்து எனவுமாம். உயா அற என்ற பாடத்துக்கு, பரதனது வருத்தந் தீர என்று பொருள் கொண்டு, அருவி பாயும் மார்பிடைப் புல்லினுன் என இயைத்து உரைத்தலுமாம்.

(பி - ம்.) 1. அழிகணீர்.
2. திருவுளம்,
4. தழுவியென்னவே. (55)

தசரதனைப்பற்றி இராமன் வினவுதல்

1125. புல்லின னின்றவன் புனைந்த வேடத்தைப்
பல்விதம் நோக்கினுன் பலவு முன்னினுன்
அல்லலி னழுங்கினை யைய வாளுடை
மல்லுயர் தோளவன் வலிய னேயென்ருன்.

புல்லினன் நின்று - (இராமபிரான் பரதனைத்) தழுவி நின்று, அவன் புனைந்த வேடத்தை - அப்பரதன் கொண்டிருந்த தவக்கோலத்தை, பல்விதம் நோக்கினுன் - பலபடியாகப் பார்த்து, பலவும் உன்னினுன் - பல வகையாக எண்ணி, ஐய - ஐயனே, அல்லலின் அழுங்கினை - (நீ மிகவும்) துன்பத்தால் வருந்துகின்ருய் (அதற்குக் காரணம் என்னவோ?); ஆள் உடை(ய) - (உலகத்தை) ஆளுதலுடைய, மல் உயர் தோளவன் - வலிமையால் உயர்ந்த தோள்களை உடைய சக்கரவர்த்தி, வலியனே - திடமாக உள்ளானே? என்ருன் - என்று வினவினுன்.

ஆட்சியை மேற்கொள்ள வேண்டியவன் தவக்கோலங் கொண்டிருத்தற்கும், அவனுடைய சோகம் அளவு கடந்திருத்தற்கும் காரணம் புலப்படாமையின், இராமபிரான் பலவாறு எண்ணி, இறுதியில் தந்தையின் நலத்தை விசாரித்தான்.

வலியன்: 798 - பார்க்க. ஆளுடை - நம்மை ஆளுதலுடைய எனலுமாம். நோக்கினுன், உன்னினுன் : முற்றெச்சம்.

(பி - ம்.) 2. பன்முறை உன்னுவான்.
3. அழுந்தினை, ஒடுங்கினை.
4. மல்லலம். (56)

தந்தை இறந்தமையைப் பரதன் கூறுதல்

1126. அரியவ னுரைசெயப் பரத னையநின்
பிரிவெனும் பிணியிரு லென்னைப் பெற்றவக்
கரியவள் வரமெனுங் கால னுற்றனக்
குரியமெய் நிறுவிப்போ யும்ப ரானென்ருன்

அரியவன் உரைசெய - (எல்லா வகையாலும்) அருமையையுடைய வனான இராமபிரான் (அவ்வாறு) கேட்க, பரதன்—, ஐய - ஐயனே, நின் பிரிவு எனும் பிணியினால் - உன் பிரிவாகிய நோயினாலும், என்னை பெற்ற அ கரியவள் - என்னைப் பெற்ற உள்ளம் கரியவளான கைகேயியின், வரம் எனும் காலனால் - வரம் என்ற யமனாலும், தனக்கு உரிய மெய் நிறுவி போய் - தனக்கு இயல்பாகவுள்ள வாய்மையை நிலை நிறுத்திவிட்டுச் சென்று, உம்பரான் - மேலுலகு அடைந்த வனானான், என்றான் - என்று விடை கூறினான்.

கரியவள் என்பது மூதேவிக்கு உரிய பெயர்; இங்கே களங்கமும் கொடுமையுங்கொண்ட மனமுடையவள் எனக் கைகேயியைக் குறித்தது. தந்தை இறந்ததற்குக் காரணமாக நோய், எமன் என இரண்டும் கூறினான். உம்பர் - மேல் உலகம்; சுவர்க்கம். தயரதன் மெய் நிறுவினமை : 1064, 1093, 1129; ஆரணிய. 195; கிட்கிந்தா. 305, பார்க்க.

(பி - ம்.) 2. பிரிவெனுந்துயரினால்.
3. உரையெனும்.
4. உம்பரெய்தினன். (57)

இராமன் துயருறுதல்

1127. விண்ணிடை யடைந்தன னென்ற வெய்யசொல்
புண்ணிடை யயிலெனச் செவிபு காமுனம்
கண்ணொடு மனஞ்சுழல் கறங்கு போலவல்
மண்ணிடை விழுந்தனன் வானி னும்பரான்.

விண் இடை அடைந்தனன் என்ற - (தந்தை) சுவர்க்கம் அடைந்தான் என்று பரதன் சொல்லிய, வெய்ய சொல் - கொடிய வார்த்தை, புண்இடை அயில் என - புண்ணில் (பாய்ந்த) வேல்போல, செவிபுகா முன்னம் - செவிவழியே நுழைந்தவுடனே, வானின் உம்பரான் - சுவர்க்கத்தினும் மேலான பரமபதத்துக்கு உரியவனான இராம்பிரான், கண்ணொடு மனம் - கண்ணும் மனமும், சுழல் கறங்கு போல - சுழலும் காற்றாடிபோல (ஆக), வல் மண் இடை விழுந்தனன் - வலிய தரையில் (சோகம் மிக்கு) விழுந்தான்.

இராமபிரான், வானின் உம்பரானாயினும், தான் கொண்ட மானிட வேடத்திற்கியையத் தந்தையின் பிரிவுக்காற்றாது சோகமுற்றான்.

புகாமுனம் : விரைவு குறித்தது. போல - போலாக. வானின் உம்பரான் மண்ணிடை விழுந்தனன் என்றது ஒரு நயம். இராமபிரான் மனம் பரதனது நிலைகண்டு, காரணம் அறியாது வருந்திப் புண்பட் டிருந்ததாகலின், அப்புண்ணிடை வேல்போலப் புகுந்தது பரதன் சொல்; புண்ணிடை வேல் : 205 விசேடக் குறிப்புப் பார்க்க.

(பி - ம்.) 2. புண்ணிடைக் கோலெனச், புண்ணுழையயிலெனச். (58)

1128. இருநிலஞ் சேர்ந்தன னிறையு யிர்த்திலன்
உருமெறி யரவென வுணர்வு நீங்கினுன்
அருமையி னுயிர்வர வயாவு யிர்த்தகம்
பொருமினன் பன்முறை புலம்பி னுனரோ.

இரு நிலம் சேர்ந்தனன் - தரையில் விழுந்த இராமபிரான், இறை உயிர்த்து இலன் - சிறிதும் மூச்சு இல்லாதவனுகி, உரும் எறி அரவு என - இடி தாக்கிய நாகம்போல, உணர்வும் நீங்கினுன் - நினைவும் இழந்தவனுனுன்; (பின்பு), அருமையின் - அருமையாக,(சைத்தியோபசாரங்களால்), உயிர் வர - மூச்சு (உணர்வுடன்) வர, அயா உயிர்த்து - பெருமூச்செறிந்து, அகம் பொருமினன் - (துக்கத்தால்) மனம் பொருமலுற்று, பல் முறை புலம்பினுன் - பலவாறு புலம்பலானுன்.

அரோ : அசை.

இறை என்றதன் ஈற்றில் இழிவு சிறப்பும்மை தொக்கது. இறை - தலைவன் என்று கொண்டு எழுவாயாக்கினும் அமையும். சேர்ந்தனன் - வினையாலணையும் பெயர், உயிர்த்திலன் : முற்றெச்சம். பாம்பு இடியோசைக்கு அஞ்சி நடுங்குதல் : 558 குறிப்புப் பார்க்க.

(பி - ம்.) 1. சேர்ந்தவன்.
2. உணர்வினீங்கினுன்.
4. பலமுறை. (59)

இராமபிரான் புலம்பல்
(தரவு கொச்சகக் கலிப்பா)

1129. நந்தா விளக்கனைய நாயகனே நானிலத்தோர்
தந்தாய் தனியறத்தின் ருயே தயாநிலையே
எந்தா யிகல்வேந்த ரேறே யிறந்தனையோ
அந்தோ வினிவாய்மைக் காருளரே மெய்யுற்ருர்.

நந்தா விளக்கு அனைய நாயகனே - அணையாத விளக்குப் போன்ற தலைவனே, நால் நிலத்தோர் தந்தாய் - உலகிலுள்ளார்க்கெல்லாம் தந்தை போன்றவனே, அறத்தின் தாயே - தருமத்தின் தாய் போன்றவனே, தயா நிலையே - தயைக்கு நிலைக்களமானவனே, எந்தாய் - எம் தந்தையே, இகல் வேந்தர் ஏறே - பகையரசராகிய யானைகளுக்குச் சிங்கம் போன்றவனே, இறந்தனையோ - நீ இறந்து விட்டாயோ! அந்தோ - ஐயோ, இனி—, வாய்மைக்கு மெய் உற்ருர் ஆர் உளர் - உண்மைக்கு உண்மையான உறவினர் (உன்னைப்போல வேறு) யாவர் இருக்கின்றனர்!

இதுமுதல் ஏழு கவிகளால் இராமபிரான் தந்தையைக் குறித்துப் பலவாறு புலம்பினமை கூறப்படும். தசரதன் குடிகளுக்கு எல்லாம் தந்தை போன்றவன் : "உலகுளோர் தந்தையே யன்னயவத்

தகவினன்" (பால.: 1121). தந்தாய்! விளி. ஏறு - ஆண்சிங்கம்; ஏகதேச உருவகம்; இதற்கு இயையப் பகை அரசராகிய யானைகள் என்பது வருவித்து உரைக்கப்பெற்றது. வாய்மைக்கு மெய்யுற்ருர் ஆருளர் என்றது, தசரதனது வாய்மைகாத்தற் சிறப்பைக் குறித்தது; 1126, விசேடக் குறிப்புப் பார்க்க; "என்னே மன்னு யாருளர் வாய்மைக் கினி' (215) என்றதும் காண்க.

(பி - ம்.) 1. நாயகமே.
3. இறந்தனையே.
4. ஆருளரோ; மற்றென்ருன். (60)

1130. சொற்பெற்ற நோன்பின் றுறையோ னருள்வேண்டி
நற்பெற்ற வேள்வி நவைநீங்க நீயியற்றி
எற்பெற்ற நீபெற்ற தின்னுயிர்போய் நீங்கவோ
கொற்பெற்ற வெற்றிக் கொலைபெற்ற கூர்வேலோய்.

கொல் பெற்ற - கொல்லுத் தொழிலால் பெற்ற, வெற்றி - வெற்றிக்கு உரிய, கொலை பெற்ற - கொலைத்தொழிலை யுடைய, கூர்வேலோய் - கூரிய வேலை உடையவனே, நீ—, சொல் பெற்ற - புகழைப்பெற்ற, நோன்பின் துறையோன் - தவத்துறையில் மிக்க கலைக்கோட்டு முனிவனது, அருள் வேண்டி - அருளை இரந்து பெற்று, நவை நீங்க - குற்றங்கள் நீங்குமாறு, நல் பெற்ற வேள்வி இயற்றி - நன்மையுடைய (பரிவேள்வியும், மகவருள் வேள்வியுமான) வேள்விகளைச் செய்து, என் பெற்ற நீ - என்னைப் (புதல்வனுகப்) பெற்ற நீ, பெற்றது - (அதனுற்) பெற்ற பயன், இன் உயிர் போய் நீங்கவோ - இனிய உயிர் போகப் பெற்று (இவ்வுலகைவிட்டே) நீங்குவதுதானே?

'நீ எவ்வளவோ சிரமப்பட்டு என்னை மகனுகப் பெற்றது, என்னுலே நீ உயிர் இழத்தற்காகத்தானே? இதற்கு நான் காரணன் ஆனேனே!' என்கின்ருன். சொல் - புகழ்; 'கொற்பெற்ற' என்பதனை, கொன் பெற்ற எனப் பிரித்து, பகைவர்க்கு அச்சந் தருதலைப் பெற்ற என உரைத்தலுமாம்.

(பி - ம்.) 2. நீங்கத்தானியற்றி, நீங்கி நீயியற்றி, நீர்தவமியற்றி.
3. எற்பெற்று; உன்னுயிர்போய். (61)

1131. மன்னுயிர்க்கு நல்குரிமை மண்பார நான்சுமக்கப்
பொன்னுயிர்க்குந் தாரோய் பொறையுயிர்த்த வாறிதுவோ
உன்னுயிர்க்குக் கூற்ரு யுலகாளப் பிறந்தேனே
மின்னுயிர்க்குந் தீவாய் வெயிலுயிர்க்கும் வெள்வேலோய்.

மின் உயிர்க்கும் - மின்னலும் (ஒப்பாகாமையால்) பெருமூச் செறிதற்குக் காரணமான, வெயில் உயிர்க்கும் - ஒளி விடுகிற, தீவாய் - கொடிய முனையை உடைய, வெள்வேலோய் - வெள்ளிய வேற்படை

உடையவனே, பொன் உயிர்க்கும் தாரோய் - பொன்னாலான மாலை அணிந்தவனே, மன் உயிர்க்கு நல்கு உரிமை - நிலைபெற்ற உயிர்களுக் கெல்லாம் அருள் செய்யும் உரிமை பூண்ட, மண்பாரம் - இராச்சிய பாரத்தை, நான் சுமக்க—, பொறை உயிர்த்த ஆறு இதுவோ - அந்தப் பாரம் நீங்கப்பெற்ற வகை இதுதானோ? உன் உயிர்க்கு கூற்று ஆய் - உனது உயிருக்கு யமனாகி, உலகு ஆள பிறந்தேனோ - உலகத்தை ஆள்வதற்கு நான் பிறந்தேனோ?

'இராச்சிய பாரத்தை நான் ஏற்றலும் நீ அதைத் தவிர்தலும் முறையேயானாலும், நீ இருக்க அது நிகழ்தலின்றி, உனது உயிருக்கு யமனாகியா நான் அதனைப் பெறவேண்டும்? அதற்காகவோ நான் பிறந்தேன்? இஃதிருந்தவாறு என்னே!' என இரங்குகின்றான். அரசாட்சியின் அருமை கருதி, 'மண்பாரம் நான் சுமக்க' என்றான்; 62-பார்க்க. பொன் உயிர்க்கும் - பொன் போன்ற; மின் என்றதன் பின் உயர்வு சிறப்பும்மை விரிக்க.

(பி - ம்.) 1. நல்லுரிமை.
2. பொன்னுரைக்கும்.
3. அரசாளவுற்றேனோ, உலகாளவுற்றேனோ.
4. வெவ்வேலாய். (62)

1132. எம்பரத்த தாக்கி யரசுரிமை யிந்தியங்கள்
தம்பரத்த வாக்கித் தவமிழைத்த வாறிதுவோ
சம்பரப்பேர்த் தானவனைத் தள்ளிச் சதமகற்கன்
றம்பரத்தி னீங்கா வரசளித்த வாழியாய்.

அன்று - முன்னொரு நாள், சம்பரன் பேர் தானவனை தள்ளி - சம்பரன் என்ற பேருடைய அசுரனை அழித்து, சதமகற்கு - இந்திர னுக்கு, அம்பரத்தின் நீங்கா அரசு அளித்த - சுவர்க்கத்தினின்றும் நீங்காத ஆட்சியை அளித்த, ஆழியாய் - ஆணைச்சக்கரமுடைய வனே, அரசு உரிமை - அரசாளும் உரிமையை, எம் பரத்தது ஆக்கி - எங்கள் வசமாகச் செய்து, இந்தியங்கள் - ஐம்பொறிகளையும், தம் பரத்த ஆக்கி - தம் வசமாகும்படி செய்து, தவம் இழைத்த ஆறு இதுவோ - (நீ) தவம் செய்த விதம் இதுதானோ?

தசரதன் முன்னே இராமபிரானை அரசு ஏற்குமாறு கூறிய விடத்தில், முன்னோர் செய்த முறைப்படி அரசை அவன்பால் ஒப்பு வித்துத் தான் தவஞ் செய்யும் கருத்தினன் (64) என்றமையின், தவம் இழைத்தவாறிதுவோ என்கின்றான் இராமபிரான். பரதனையும் உளப்படுத்தி 'எம்' என்றான். இந்திரியங்கள் தம் பரத்த ஆக்கல் - இந்திரியங்கள் தம் மட்டோடு நிற்பதன்றித் தன்னை வசப்படுத்த இய லாமற்செய்தல்; அடக்குதல். இந்தியம்: இந்திரியம் என்பதன் சிதைவு. சதமகன் - நூறு யாகங்கள் செய்தவன்; இந்திரன். தசரதன் சம்பரனை அழித்து இந்திரனுக்கு அரசளித்தமை: பால. 323-பார்க்க.

(பா-ம்.) 2. தம்பரத்தில் விழாத்தீ வீழ்த்தித்தீ வியத்.
4. அரசேந்த. (63)

1133. வேண்டுந் திறத்தாரும் வேண்டா வரசாட்சி
பூண்டிவ் வுலகுக் கிடர்கொடுத்த புல்லனேன்
மாண்டு முடிவதல்லால் மாயா வுடம்பிதுகொண்
டாண்டு வருவதினி யார்முகத்தே நோக்கவோ.

வேண்டும் திறத்தாரும் - (பலவற்றையும்) விரும்பும் தன்மை உடையவர்களும், வேண்டா - (ஏற்க) விரும்பாத, அரசு ஆட்சி பூண்டு - அரசாட்சியை (உன் சொல்லால்) மேற்கொண்டு, (அதன் விளைவாக) இவ் உலகுக்கு இடர் கொடுத்த - இவ்வுலகத்தாருக்குத் துன்பத்தை விளைத்த, புல்லனேன் - அற்பனான நான், மாண்டு முடிவது அல்லால் - (இங்கே) இறந்தொழிவதன்றி, மாயா உடம்பு இது கொண்டு - இறவாத இவ்வுடம்போடு, ஆண்டு வருவது - அங்கே (அயோத்திக்கு) நான் வருவது, இனி யார் முகத்தே நோக்கவே - வேறு யார் முகத்தில் விழிப்பதற்கோ?

'அரசாளுதல் எளிதன்றாகலின் அதனைப் பலரும் விரும்ப மாட்டார்கள்; உன் சொல்லை மறுது நான் அதனை ஏற்றது, அரசின்றி நாடு துயருறுதற்குக் காரணமாயிற்று' என்கின்றான். 'யார் முகத்தில் விழிப்பது' என்றது உலக வழக்கு.

(பா-ம்.) 2. இடரிழைத்த.
4. யார்முகத்தை நோக்கவே. (64)

1134. தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டுக்
கானடைந்தே னென்னத் தரியாது காவலநீ
வானடைந்தா யின்ன மிருந்தேனான் வாழ்வுகந்தே
ஊனடைந்த தெவ்வ ருயிரடைந்த வொள்வேலோய்.

ஊன் அடைந்த தெவ்வர் - உடல் தடித்த பகைவருடைய, உயிர் அடைந்த - உயிரைக் கவர்ந்த, ஒள் வேலோய் - ஒளி மிக்க வேற்படையை உடையவனே, காவல - உலகு காத்தல் வல்லவனே, தேன் அடைந்த சோலை - தேன் நிறைந்த சோலைகளையுடைய, திரு நாடு கைவிட்டு - செல்வச் சிறப்பையுடைய நாட்டைக் கைவிட்டு, கான் அடைந்தேன் என்ன - (நான்) காட்டை அடைந்தேன் என்று, தரியாது - அதைப் பொறுக்காமல், நீ வான் அடைந்தாய் - நீ (இவ்வுலகை விட்டே சென்று) சுவர்க்கம் அடைந்துவிட்டாய்; நான் - நானோவென்னில், (நீ வேற்று உலகு சென்றதை அறிந்த பின்னும்), வாழ்வு உகந்து - இவ்வுலக வாழ்க்கையை விரும்பி, இன்னம் இருந்தேன் - இன்னமும் உயிரோடு இருந்தேன் (என் நிலை இருந்தவாறு என்னே!)

'நான் நாடு துறந்து வந்ததைத் தரியாது நீ உயிரையே விட்டாய்; நாயேன், நீ உயிர் துறந்ததை அறிந்தும் உடனே உயிர் துறவாமல் இன்னும் இருக்கின்றேன்! இஃதென்ன கொடுமை! எனது அன்புடைமையை என்ன என்பது!' என இரங்குகின்றான்.

(பி - ம்.) 2. தரியாது கைவிட்டு.
3. இன்னுமிருந்தேனன், இன்னமுயிர் சுமந்து.
4. வெல்வேலோய், வெள்வேலோய். (65)

1135. வண்மையு மானமும் வானவர்க்கும் பேர்க்ககிலாத்
திண்மையுஞ் செங்கோ னெறியுந் திறம்பாத
உண்மையு மெல்லா முடனேகொண் டேகினையே
தண்மை தகைமதிக்கு மீந்த தனிக்குடையோய்.

தகை மதிக்கும் - பெருமையை உடைய நிறை மதிக்கும், தண்மை ஈந்த - குளிர்ச்சியை அளித்த, தனி குடையோய் - ஒப்பற்ற வெண் குடையை உடையவனே, வண்மையும் - (உனது) வள்ளன்மை யையும், மானமும் - மானத்தையும், வானவர்க்கும் பேர்க்ககில்லா(த) - தேவர்களுக்கும் நீக்க முடியாத, திண்மையும் - வலிமையையும், செங்கோல் நெறியும் - நீதி தவறாத ஆட்சி முறையையும், திறம்பாத உண்மையும் - மாறுபடாத வாய்மையையும், எல்லாம் - மற்றும் எல்லா நலன்களையும், உடனே கொண்டு - உன்னுடனே எடுத்துக்கொண்டு, ஏகினையே - (இவ்வுலகை விட்டுச்) சென்றுவிட்டாயே!

இவ்வளவு நற்குண நற்செயல்கள் அமைந்தவர்களை இனிக் காண முடியாது என்றவாறு. மானம் - நிலையில் தாழாமையும், ஊழ் வினையால் தாழ்வு வரின் உயிர் வாழாமையுமாம். தகை - அழகு; விளக்கம் எனலுமாம். இவன் குடை மதியின் தண்மையை விடச் சிறந்தது என்றபடி; தண்மை - குடிமக்களுக்கு உள்ளக் குளிர்ச்சியைத் தரும் தகைமை. தசரதனது குடையின் சிறப்பு: பால. 177-பார்க்க.

(பி - ம்.) 2. செங்கோனிறையும்.
3. ஒண்மையும்; ஏகினையோ.
4. தகைமதிக்கும்; தகவுடையோய். (66)

இராமனைப் பலரும் தேற்றுதல்

1136. என்றெடுத்துப் பற்பலவும் பன்னி யிடருழக்கும்
குன்றெடுத்த போலுங் குவவுத்தோட் கோளரியை
வன்றடக்கைத் தம்பியரும் வந்தடைந்த மன்னவரும்
சென்றெடுத்துத் தாங்கினார் மாவசிட்டன் றேற்றினான்.

என்று - என்று இவ்வாறாக, பல பலவும் எடுத்து பன்னி - பலவற் றையும் எடுத்துப் பலகாற் சொல்லிப் புலம்பி, இடர் உழக்கும் - துயருற்று வருந்திய, குன்று எடுத்த போலும் குவவு தோள் கோள்

அரியை - மலை உருவெடுத்தாற் போன்ற திரண்ட தோள்களை உடைய ஆண் சிங்கம் போன்ற இராமபிரானை, வல் தட கை தம்பியரும் - வலிய பெரிய கைகளையுடைய தம்பிமார் மூவரும், வந்து அடைந்த மன்னவரும் - (அப்போது அங்கே) வந்து சேர்ந்த அரசர்களும், சென்று எடுத்து தாங்கினர் - ஓடிப்போய்த் தூக்கித் தாங்கிக் கொண்டனர்; மா வசிட்டன் - (அப்போது வந்து சேர்ந்த) பெருமை மிக்க வசிட்ட முனிவன், தேற்றினன் - (நீதிகளைக் கூறித்) தேற்றலானான்.

பரதனோடு வந்த அரசர் பலரும், வசிட்ட முனிவனும், இராமபிரான் புலம்பிக்கொண்டிருந்தபோது அங்கே வந்து சேர்ந்தனர் என்பது இதனால் பெறப்படும். 'என்று' என்றது, முன்னே 1129–35இல் சொல்லியவற்றை.

(பி - ம்.) 2. எடுத்தவொக்கும்; குருமணித்தோட், குவிமணித்தோட்.
3. மற்றுள்ள மன்னவரும். (67)

பலரும் அங்கே வருதல்

1137. பன்னரிய நோன்பிற் பரத்துவனே யாதியாம்
பின்னு சடையோரும் பேருலக மோரேழின்
மன்னவரு மந்திரிய ரெல்லாரும் வந்தடைந்தார்
தன்னுரிமைச் சேனைத் தலைவோருந் தாமடைந்தார்.

பன்ன அரிய நோன்பின் - (அளவிட்டுச்) சொல்லுதற்கு உரிய தவ விரதங்களையுடைய, பரத்துவன் ஆதி ஆம் - பரத்துவாசன் முதலான, பின்னு சடையோரும் - திரித்த சடை முடியையுடைய முனிவர் பலரும், ஓர் ஏழு பேர் உலக மன்னவரும் - ஏழு தீவுகளாக உள்ள பெரிய உலகத்தில் உள்ள பற்பல அரசர்களும், மந்திரியர் எல்லாரும் - எல்லா மந்திரிமார்களும், வந்து அடைந்தார் - (அங்கே) வந்து சேர்ந்தனர்; தன் உரிமை - தன்பால் அன்பு உரிமை பூண்ட, சேனை தலைவோர் தாமும் - சேனாதிபதிகளும், அடைந்தார் - வந்து சேர்ந்தனர்.

வசிட்ட முனிவனும், அரசர் சிலரும் வந்தமை முந்திய பாடலிற் கூறினார்; இங்கே, முனிவர்கள், எஞ்சிய அரசர்கள், மந்திரிமார், சேனைத் தலைவர் ஆகியோர் வந்தமை கூறி, 'மற்றும் வரற்பாலர் எல்லாரும் வந்தனர்' என அடுத்த பாடலிற் கூறுகின்றார்.

பன்னரிய : அகரம் தொகுத்தல்; பன் அரிய எனப் பிரித்து, பன் என்பதனை முதனிலைத் தொழிற் பெயராக்கி உரைப்பினுமாம். தன் என்றது இராமபிரானை, பரத்துவாச முனிவன் வந்தமை வான்மீகத்துள் இல்லை.

(பி - ம்.) 1. பிறப்பறுத்துப் பார்த்துபர்ந்த.
4. வந்தடைந்தார். (68)

வசிட்டன் பேசத் தொடங்குதல்

1138. மற்றும் வரற்பால ரெல்லாரும் வந்தடைந்து
சுற்று மிருந்த வமைதியினிற் றுன்புழக்கும்
கொற்றக் குரிசின் முகநோக்கிக் கோமலரோன்
பெற்ற பெருமைத் தவமுனிவன் பேசுவான்.

மற்றும் - இன்னும், வரல் பாலர் எல்லாரும் வந்து அடைந்து - வரத்தக்கவர்கள் எல்லாரும் வந்து சேர்ந்து, சுற்றும் இருந்த அமைதி யினில் - இராமபிரானைச் சுற்றிலும் சூழ்ந்திருந்த சமயத்தில், துன்பு உழக்கும் - (தந்தை இறந்த) துன்பத்தால் வருந்துகிற, கொற்றம் குரிசில் முகம் நோக்கி - வெற்றியுடைய தலைவனை இராமபிரானைப் பார்த்து, கோ மலரோன் பெற்ற - பிரமன் பெற்றெடுத்த, பெரு தவம் முனிவன் - பெருமை பொருந்திய தவத்திற் சிறந்த வசிட்ட முனிவன், பேசுவான் - சொல்லலானான்.

வசிட்ட முனிவன் கூறியவை மேலே பத்துக் கவிகளால் பேசப் படும். முகம் நோக்கிப் பேசுதல் மரபு; பால. 324 பார்க்க. வசிட்டன் பிரமன் புதல்வனென்பது: 34, 1195; பால. 185. மலர்களுட் சிறந்தது தாமரை மலராகலின், கோமலர் எனப் பெற்றது; கோமலரோன் - தலைமையுடைய தாமரைப் பூவில் தங்குபவன்; பிரமன்.

(பி - ம்.) 1. வந்தடைந்தார்.
2. சுற்றுமிருக்கும்; மு. சுற்றிருக்கு மமைதியினிற்றுன்புழக்கு மன்ன வனும், சுற்றுமிருந்தாவலித்துச் சோரவே துன்புழக்கும்.
4. திருமுனிவன். (69)

வசிட்டன் கூற்று

(கலிவிருத்தம்)

1139. துறத்தலு நல்லறத் துறையு மல்லது
புறத்தொரு துணையிலை பொருந்து மன்னுயிர்க்
கிறத்தலும் பிறத்தலு மியற்கை யென்பதை
மறத்தியோ மறைகளின் வரம்பு கண்டநீ.

பொருந்தும் மன் உயிர்க்கு - (இவ்வுலகில்) தோன்றும் நிலை பேறுடைய உயிர்களுக்கெல்லாம், இறத்தலும் பிறத்தலும் இயற்கை - இறப்பதும் பிறப்பதும் இயல்பேயாகும்; (அவ்வாறாகிய உயிர்களுக்கு), துறத்தலும் - (உலகத்து ஆசைகளை) விடுதலும், நல் அறம் துறையும் - நல்ல தரும வழியிலே நிற்றலும், அல்லது - அல்லாமல், புறத்து ஒரு துணை இல்லை - வேறு ஒரு பற்றுக்கோடும் இல்லை, என்பதை - என்ற உண்மையை, மறைகளின் வரம்பு கண்ட நீ மறத்தியோ - வேதங்களின் எல்லையைக் கண்டறிந்த நீ மறந்துவிட்டாயோ?

'இராமா, நீ தந்தைக்காக வருந்துதலை விட்டுத் தந்தைக்குச் செய்யவேண்டிய நீர்க் கடனை முதலிற் செய்க' என்று வசிட்ட முனிவன் பல நியாயங்களோடு எடுத்துரைத்தமை இதுமுதல் பத்துக் கவிகளால் கூறப்படும். 'மறைகளின் வரம்பு கண்ட நீ' என்றது, வேதங்களைக் கசடற ஓதி உணர்ந்த நீ என்பதனோடு, இராமபிரானது அவதாரத்தையும் குறித்தவாறும். "சாதலும் பிறத்த ருனுந் தம்வினைப் பயத்தி னாகும்,ஆதலு மழிவு மெல்லா மவைபொருட் கியல்பு கண்டாய்" (சீவக. 269) என்பது ஈண்டு ஒப்புநோக்கத் தகும். முன்னே 21, 108-ஆம் பாடல்களும் நோக்குக.

(பி - ம்.) 1. நல்லறத்தொழிலும்.
2. நிலையிலைப். (70)

1140. உண்மையில் பிறவிக ளுலப்பில் கோடிகள்
தண்மையில் வெம்மையிற் றழுவி னவ்வெனும்
வண்மையை நோக்கிய வலிய கூற்றின்பால்
கண்மையு முண்டெனக் கருதற் பாலதோ.

உலப்பு இல் கோடிகள் - அளவு இல்லாத கோடிக்கணக்கான, உண்மை இல் பிறவிகள் - பொய்ம்மையான (நிலைத்தலில்லாத) பிறப்புக்களைப் பெற்ற உயிர்கள், தண்மையில் வெம்மையில் தழுவின - (அவையவை செய்த நல்வினை தீவினைகட்கு இயைய) இன்பத்திலும் துன்பத்திலும் பொருந்தி நிற்கின்றன, எனும் வண்மையை - என்று நூல்களில் மிகுதியாகக் கூறப்படும் உண்மையை, நோக்கிய - (எப்போதும்) பார்த்து நிற்கின்ற, வலிய கூற்றின் பால் -(காலம் நோக்கி உடலினின்றும் உயிரைப் பிரித்தலில்) வல்லமை உடைய கூற்றுவனிடம், கண்மை உண்டு என கருதல் பாலதோ - கண்ணோட்டம் உண்டு எனக் கருதுவதும் தக்கதாமோ? (ஆகாது).

'வினைப் பயனுக்கு ஏற்றவாறு உலகில் பிறந்து இன்ப துன்பங்களை நுகரும் உயிர்கள், அந்நுகர்ச்சிக்கு உரிய காலம் முடிந்தவுடன் அவற்றை உடலினின்றும் பிரித்தற்குச் சிறிதும் அயராது விழிப்புடன் பார்த்து நிற்கும் யமன், அவ்வாறு பிரித்தலில் நல்லுயிர் தீயுயிர் என்ற பாகுபாடு கொண்டு, நல்லுயிர் மாட்டுக் கண்ணோட்டத்தால் கால நீட்டித்தலைச் செய்யானாதலால், எவ்வுயிரும் உரிய காலத்தில் முடிவெய்துதலே முறை' என்பது கூறியவாறு. தழுவினவ்வெனும்: விரித்தல் விகாரம். கண்மை - கண்ணோட்டம்; "கால னென்னுங் கண்ணிலி" (புறநா. 240 : 5).

(பி - ம்.) 2. தழுவினரெனும்.
4. உளதெனக்; கருதலாகுமோ. (71)

1141. பெறுவதன் முன்னுயிர் பிரிதல் காண்டியால்
மறுவறு கற்பினில் வையம் யாவையும்
அறுபதி னுயிர மாண்டு மாண்டவன்
இறுவது கண்டவற் கிரங்கல் வேண்டுமோ.

பெறுவதன் முன் - (தாய்) பெறுவதற்கு முன்னம், உயிர் பிரிதல் - (சில சீவர்களின்) உயிர் நீங்குதலை, காண்டி - (பூமியில்) காண்கின்ருய்; (அவ்விதம் இருக்க), மறு அறு - குற்றம் நீங்கிய, கற்பினில் - கல்வியினுல், வையம் யாவையும் - உலகம் முழுவதையும், அறுபதினுயிரம் ஆண்டும் - அறுபதாயிரம் வருஷங்கள், ஆண்டவன் - அரசு செலுத்திய சக்கரவர்த்தி, இறுவது - இறத்தலை, கண்டு - அறிந்து, அவற்கு - அவனுக்காக, இரங்கல் வேண்டுமோ - மனம் வருந்துதல் தகுதியோ? (அன்று என்றவாறு).

பிறந்ததும் பிறவாததுமாக இருக்கும்போதே உயிர் பிரிந்து போதலைக் கண்களாற் கண்டுவரும் நாம் அறுபதினுயிரம் ஆண்டுகள் சிறப்புற அரசாண்ட பிறகு இறந்த சக்கரவர்த்தியின் பொருட்டு இரங்குவது தகுதியன்று என்றவாறு. 'மறுவறு கற்பினில் வையம் யாவையும்' என்ற அடிக்குக் குற்றமற்ற பதிவிரதா தருமத்தையுடைய பூமி முழுவதையும் என்றும் கூறலாம். வையத்துக்குக் கற்பு, பல அரசர்களுக்குப் பொதுவாகாமல் தசரதன் ஒருவனுக்கே உரியதாதல், முன்னர் மந்திரப் படலத்தும் "கன்னியர்க் கமைவருங் கற்பின் மாநிலம்" (1 : 15) என்று வந்துள்ளமை காண்க. காண்டியால் : ஆல், அசை.

(பி - ம்.) 1. கண்டியால்.
2. மறுவரு; கற்பினின், சிறப்பினில், பிறப்பினில்.
3. அறுபதினுயிரமாண்டும்; ஆண்டரசு.
4. கண்டதற்கு, கண்டிதற்கு, கண்டிவற்கு; இரங்க வேண்டுமோ, இரங்கலாகுமோ, இரங்கவொண்ணுமோ. (72)

1142. சீலமுந் தருமமுஞ் சிதைவில் செய்கையாய்
சூலமுந் திகிரியுஞ் சொல்லுந் தாங்கிய
மூலம்வந் துதவிய மூவர்க் காயினும்
காலமென் ஞெருவலை கடக்க லாகுமோ.

சீலமும் - நல்லொழுக்கமும், தருமமும்—, சிதைவு இல் - கெடுதல் இல்லாத, செய்கையாய் - செயல்களை உடையவனே, மூலம் வந்து - மூலமாகிய பரம்பொருளினின்றும் தோன்றி, உதவிய - (தம் முத்தொழில் களால் உலகுக்கு) உதவுகின்ற, சூலமும் திகிரியும் சொல்லும் தாங்கிய - முத்தலைச் சூலத்தையும் சக்கரத்தையும் கலைமகளையும் கொண்ட, மூவர்க்கு ஆயினும் - (முறையே உருத்திரனும் திருமாலும் பிரமனும் ஆன) மூவர்க்குமே யானுலும், காலம் என்ற ஒரு வலை-

காலம் என்று சொல்லப்பட்ட (அவர்களையும் பிணிக்கவல்ல) ஒரு வலையை (அகப்படாது), கடக்கல் ஆகுமோ - தப்புதல் கூடுமோ?

காலத்தை வெல்லுதல் திரிமூர்த்திகளுக்கும் ஆகாது என்கின்றான். மூவர்க்கும் எனறபால உம்மை தொக்கது. சொல் - கலைமகள். "காலம் உலகம்" (தொல். கிளவி : 57) என்ற சூத்திரத்தில் வரும் சொல் என்பதற்கு, 'நாமகளாகிய தெய்வம்' என்று சேனாவரையர் கூறிய உரையைக் காண்க. "உருளு நேமியும் ஒண்கவ ரெஃகமும், மருளில் வாணியும் வல்லவர் மூவர்க்கும்" (108); "முப்பரம் பொருளுக்கும் முதலை மூலத்தை" (பால. 1304). என்றாரு: அகரம் தொகுத்தல்.

(பி - ம்.) 2. தாங்கினர்.
3. முதல்வர்க்காயினும்.
4. காலமென்றொரு பொருள்] கடக்கவொண்ணுமோ. (73)

1143. கண்முதற் காட்சிய கரையி லாதன
உண்முதற் பொருட்கெலா மூற்ற மாவன
மண்முதற் பூதமு மாயு மென்றபோ
தெண்முத லுயிர்க்கெலா மியம்ப வேண்டுமோ.

கண் முதல் காட்சிய - கண் முதலிய ஐம்பொறிகளுக்கும் புலனாவனவும், கரை இலாதன - அளவில்லாதனவும் ஆன, உள் முதல் பொருட்கு எல்லாம் - (அண்டங்களின்) உள்ளிடத்தேயுள்ள எல்லாப் பொருள்களுக்கும், ஊற்றம் ஆவன - (அவை தோன்றுதற்கு) ஆதாரமாகின்ற, மண் முதல் பூதமும் - மண் முதலிய ஐம்பூதங்களுமே, மாயும் என்றபோது - அழியும் என்று இருக்கும்போது, எண் முதல் உயிர்க்கு எல்லாம் - வரையறுக்கப்பட்ட வாழ்நாளைக் கொண்ட சீவராசிகளுக்கு எல்லாம், இயம்பவேண்டுமோ - (அழிவுபற்றிச்) சொல்லவேண்டுமோ?

'உலகமே பஞ்ச பூதங்களின் சேர்க்கையாலாவது; அத்தகைய பூதங்களுக்கே அழிவு உண்டு என்னும்போது, அவற்றால் தோன்றி, ஆயுளும் வரையறுக்கப்பட்ட சீவராசிகள் அழிவது வியப்போ? எனவே, அந்தச் சீவராசிகளுள் ஒருவனான உன் தந்தையின் அழிவு குறித்துப் பேரறிவாளனான நீ வருந்துதல் தகாது' என்பது கூறியவாறு. உள் முதல் : முதல், ஏழனுருபு. ஊற்றம் - ஊறுமிடம்; ஆதாரம். எண் முதல் உயிர் - (வாழ்நாளின் வரையறுத்த) எண்ணைத் தம் மிடத்தே கொண்ட உயிர்கள்.

(பி - ம்.) 1. காட்சியாற்; கரையினீளத்த.
2. ஊற்றமாயின.
3. பூதங்கண்மாயும்.
4. உயிர்க்கினி; என் முதலவற்கு நீ, எண் முதலிவற்கு நீ; இரங்க, இயம்பல். (74)

1144. புண்ணிய நறுநெயிற் பொருவில் காலமாம்
திண்ணிய திரியினில் விதியென் றீயினில்
எண்ணிய விளக்கவை யிரண்டு மெஞ்சினால்
அண்ணலே வீவதற் கையம் யாவதோ.

அண்ணலே - பெருமையிற் சிறந்தவனே, புண்ணியம் - புண்ணியமாகிற, நறு நெய்யில் - நல்ல நெய்யாலும், பொருவு இல் - ஒப்பில்லாத, காலம் ஆம் - காலமாகிற, திண்ணிய திரியினில் - வலிய திரியாலும், விதி என் தீயினில் - ஊழ் எனப்படும் தீயாலும், எண்ணிய - (ஒளியுடையதாகத்) தோற்றுகிற, விளக்கு - (உயிர்வாழ்வாகிய) விளக்கு, அவை இரண்டும் எஞ்சினால் - (நெய்யும் திரியுமாகிற) அவை இரண்டும் அற்றால், வீவதற்கு - அணைந்து போவதற்கு, ஐயம் யாவதோ - ஐயம் யாதோ? (ஐயமில்லை).

உயிர் வாழ்க்கை என்பது, சில காலம் ஒளிவிடும் ஒரு விளக்கு; அவ்விளக்கு எரிவதற்கு வேண்டிய நெய்யும், திரியும், தீயுமாக வினை, காலம், ஊழ் என்பன முறையே அமைகின்றன; நெய்யும் திரியும் அற்றால் விளக்கு அணைவது திண்ணமாவது போல, வினைப் பயனும், காலமும், ஊழும் முடிந்தால் வாழ்க்கையாகிய விளக்கும் அணைவது திண்ணம் என, உருவகத்தாலும் உவமையாலும் விளக்கி, இந்த நியதியின்படியே சக்கரவர்த்தியின் வாழ்நாளும் முடிந்ததாகலின் இதற்கு நீ வருந்துதல் தகாது என்பதனைக் குறிப்பித்தவாறு. புண்ணியம் என்றாரேனும், உபலட்சணத்தால் பாவமும் கொள்ளத்தகும். இங்கே தசரதன் புண்ணியப் பயனான இன்ப வாழ்வே வாழ்ந்தமையின் அதனைக் குறித்தார். எண்ணிய - எண்பித்த; தோற்றிய. உயிர் வாழ்க்கையை விளக்கென்றதற்கேற்ப, அவ்விளக்கு எரிதற்கேற்ற கலம் உடம்பு என்க. நெய்யும் திரியும் உவமை: சீவக. 2316. ஓகாரம், எதிர்மறை உணர்த்தியது.

(பி-ம்.) 1. நெய்யினிற்: பொருவு காலமாம்.
2. விதியின், விதிதன், விதித்த தெளியும், சிந்தையில்.
3. விளக்கிவை.
4. அவிவதற்கு, விழ்வதற்கு; ஐயம் யாவதே, யாவையோ, இல்லையே ஆவதோ, அழிவுண்டாகுமோ. (75)

1145. இவ்வுல கத்தினு மிடரு ளேகிடந்
தவ்வுல கத்தரு நரகி லாழ்ந்துதம்
வெவ்வினை துய்ப்பன விரிந்த யோனிகள்
எவ்வுல கிற்செலு மென்ன லாகுமோ.

இ உலகத்தினும் - இம்மையிலும், இடர் உள்ளே கிடந்து - துன்பத்துள்ளே மூழ்கிக் கிடந்தும், அ உலகத்து - மறுமையில், அரு நரகில் ஆழ்ந்து - தாங்குதற்கரிய நரகத் துன்பத்தில் மூழ்கியும், தம்

வெம் வினை துய்ப்பன - தம்முடைய கொடுவினைப் பயனை நுகர்வனவான, விரிந்த யோனிகள் - மிகப் பலவான பிறப்புக்களையுடைய உயிர்கள், எவ் உலகில் செல்லும் என்னல் ஆகுமோ - எவ்வுலகத்திற் செல்லு மென்று சொல்லுதல் கூடுமோ?

தீவினை செய்து, அதன் பயனாக இம்மை மறுமை இரண்டிலும் துன்பத்தையே நுகரும் உயிர்கள் அளவிறந்தன என்ற இது, வருஞ் செய்யுளில் சொல்லப்புகும் செய்திக்குத் தோற்றுவாயாக அமைந்தது. யோனிகள் - யோனி பேதங்களில் தோன்றிய உயிர்கள்; அவை அளவிலவாகலின் 'விரிந்த' என விசேடிக்கப்பட்டன.

(பி.ம்.) 1. இடரிலே, இடரினே.
2. அவ்வுலகத்தினும்.
3. வெவ்வினையறுப்பன.
4. எவ்வளவிற்செலும்; என்னல் ஆகுமே. (76)

1146. உண்டுகொ லிதுவல துதவிநீ செய்வ
தெண்டகு குணத்தினாய் தாதை யென்றலால்
புண்டரி கத்தனி முதற்கும் போக்கரும்
விண்டுவி னுலகிடை விளங்கி னானரோ.

எண் தகு குணத்தினாய் - மதிக்கத்தக்க சிறந்த குணங்களை உடையவனே, தாதை என்றலால் - (தசரதன்) உன் தந்தை என்ற காரணத்தால், புண்டரிகம் தனி முதற்கும் - திருவுந்தித் தாமரையில் தோன்றும் ஒப்பற்ற முதல்வனான பிரமனுக்கும், போக்கு அரும் - செல்லுதலரிய, விண்டுவின் உலகிடை விளங்கினான் - திருமாலின் உலகமான பரமபதத்திலே (சேர்ந்து) விளங்குபவனானான்; இது அலது - (மிகச் சிறந்த) இதனையன்றி, நீ செய்வது உதவி உண்டு கொல் - நீ (தந்தைக்குச்) செய்யத்தக்க (வேறு சிறந்த) உதவியும் உண்டோ?

அரோ : அசை.

'உன் தந்தை முன் செய்த நல்வினையால் இம்மையில் இன்ப வாழ்வே பெற்று, உன்னையும் மகனாகப் பெற்றான்; அதன் பயனாக, மீட்சி இல்லாததும் எவற்றிலும் மேலானதுமான பரமபதத்தை அடைந்து சிறந்து விளங்குகின்றான். இதனால், தந்தையை நற்கதி அடையச் செய்தலாகிய நன்மகனது கடமையை நீ நன்கு செய்தவனாகின்றாய்; இதனினும் மேலாக நீ செய்யத்தக்கது யாதுளது?' என்றது, தந்தையைக் குறித்து வருந்துதல் ஒழிக என்றபடி. முன் பாடலுக்கும் இதற்கும் உள்ள பொருளியைபு நோக்கற்பாலது.

எண் தகு குணம் - எண்ணி இன்புறுதற்குரிய கல்யாண குணங்கள்; எட்டாகிய சிறந்த குணங்கள் என்றலுமாம். தசரதன் செய்த நல்வினைப் பயனினும் மேலாக, இராமன் தந்தை என்றது

அவன் பரமபதம் அடையச் செய்தது என்ற சிறப்பு இதனுல் பெறப் பட்டது.

(பி-ம்.) 1. ஈதலது.
2. எண்டகும், எண்டரு, எண்டபு; குணத்தினன்; என்றுதான்; ஏவலால்.
3. புண்டரிகத்தனிமுதற்குப், புண்டரிகத்தினன் முகற்கும்; போக்கவும்.
4. மேவினனரோ. (77)

நீர்க்கடனைச் செய்யுமாறு வசிட்டன் கூறுதல்

1147. ஐயநீ யாதொன்று மவலிப் பாயலை
உய்திற மவற்கினி யிதனி னூங்குண்டோ
செய்வன வரன்முறை திருத்திச் சேந்தநின்
கையினு லொழுக்குதி கடனெ லாமென்ருன்.

ஐய - ஐயனே, நீ யாது ஒன்றும் அவலிப்பாய் அல்லை - நீ சிறிதும் கவலைப்பட வேண்டா; செய்வன - (தந்தைக்குச்) செய்தற்குரியனவான கடன்களை, வரல் முறை திருத்தி - (நூல்களில் சொல்லிய) ஒழுங்கு முறைப்படி செய்து, சேந்த நின் கையினுல் - சிவந்த உன் கையால், கடன் எல்லாம் ஒழுக்குதி - நீர்க்கடனை எல்லாம் செலுத்துவாயாக; அவற்கு - அத்தந்தைக்கு, உய் திறம் - ஈடேறும் வகை, இதனின் ஊங்கு உண்டோ - இதன்மேலாக (வேறு) உண்டோ? (இல்லை), என்ருன் - என்று கூறி முடித்தான் (வசிட்டன்).

'இராமா, நீ கவலைப்படுவதை விட்டுத் தந்தைக்குரிய கடன்களை எல்லாம் செய்து முடிப்பதே இப்போது உன் முதற் கடமையாகும்' என்று கூறிமுடித்தான் வசிட்டன்.

செய்வன வரன்முறை திருத்திச் சேந்த நின் கை - (அவ்வப்போது) செய்தற்குரியவற்றை முறையாகச் செய்து பழகி அதனுல் சிவந்த உன் கை என்றலுமாம்.

ஒரு பிரதியில் இப்பாடல் இல்லை.

(பி-ம்.) 1. ஐயனீ.
2. இதனின் வேறுண்டோ, இதனின் மேலுண்டோ.
3. சேர்ந்தநின், சேர்த்துமின், செய்கநின்.
4. கைகளால்; உகுக்குதி, ஓம்புதி, ஓங்குதி. (78)

1148. விண்ணினீர் மொக்குளின் விளியும் யாக்கையை
எண்ணினீ யழுங்குத லிழுதைப் பாலதால்
கண்ணினீ ருகுத்தலிற் கண்ட தில்லைபோய்
மண்ணுநீ ருகுத்திநின் மலர்க்கை யாலென்ருன்.

விண்ணின் நீர் மொக்குளின் - வானினின்று பெய்யும் மழை நீரில் தோன்றும் குமிழிபோல, விளியும் - (விரைவில்) அழிகிற, யாக்கையை

எண்ணின் - உடம்பின் தன்மையை ஆராயுமிடத்து, நீ அழுங்குதல் இழுதை பாலது - நீ வருந்துவது அறியாமையின்பாற் பட்டதாகும்; கண்ணின் நீர் உகுத்தலில் - (நீ அழுது) கண்ணீர் சிந்துவதால், கண்டது இல்லை - கண்ட பயன் ஒன்றும் இல்லை; (ஆதலால்), போய் - நீ எழுந்து சென்று, நின் மலர் கையால் - உன்னுடைய தாமரை மலர் போன்ற கைகளால், மண்ணும் நீர் உகுத்தி - தருப்பண நீரைச் செலுத்துவாயாக, என்ருன் - என்று (மீண்டும்) கூறினன்.

ஆல் : அசை.

இராமபிரான் கலக்கம் நீங்கி, மேலே செய்யவேண்டியவற்றை விரைந்து செய்தற்பொருட்டு மீண்டும் வற்புறுத்திக் கூறினன் முனிவன். 'நின் தந்தையின் நல்லுயிர் மிகவும் மேலான நிலையை அடைந்துவிட்டது. அதைக் குறித்து நீ வருந்தவேண்டியதில்லை' என்று முன்பு கூறியவன், 'உடம்பின் தன்மையும் நீ அறியாததன்று; எனவே, அதற்காக வருந்துதலும் அழகன்று' என்பான், 'யாக்கையை எண்ணின்...இழுதைப் பாலது' என்ருன்.

மண்ணும் நீர் - தூய்மைப்படுத்தும் நீர்; தருப்பண நீர். யாக்கைக்கு நீர் மொக்குள் உவமை: "மீதெழு மொக்கு ளன்ன யாக்கையை" (யுத்த. 3059); "மழை மொக்கு ளன்ன யாக்கையை" (யுத்த : 3059); "மழை மொக்குளில்...தோன்றிக் கெடுமிதோர்யாக்கை" (நாலடி. 27); "மாரி மொக்குளின் மாய்ந்து" (சீவக. 409); அழுதலால் பயனின்மை: "இருந்தழு தியாவ ருய்ந்தார்" (சீவக. 509); "ஆண்டாண்டு தோறு மழுது புரண்டாலும், மாண்டார் வருவரோ" (நல்வழி. 10).

(பி-ம்.) 1. விரியும் ஆக்கையை, வாழ்க்கையை.
2. எண்ணிக் அழுங்குதல்; இகழ்கைப்பாலதால்.
3. இல்லையால்.
4. உருத்திகீ, உகுத்தியுன், உகுக்கவின்; உகுத்திதாமரைக்கையால். (79)

இராமன் கடன்களைச் செய்ய ஆற்றை அடைதல்

1149. என்றபி னேந்தலை யேந்தி வேந்தரும்
பொன்றிணிந் தனசடைப் புனித னேடும்போய்ச்
சென்றனர் செறிதிரைப் புனலிற் செய்கென
நின்றன னிராமனு நெறியை நோக்கினன்.

என்ற பின் - என்று வசிட்ட முனிவன் கூறியபின், வேந்தரும் - (சூழ்ந்து நின்ற) அரசர்களும், ஏந்தலை ஏந்தி - இராமபிரானைத் தாங்கிப் பற்றிக்கொள்ள, பொன் திணிந்த அன்ன சடை புனிதனேடும் - பொன்னைத் திணித்து வைத்தாற்போன்ற சடையை உடைய தூயவனுன முனிவனுடன், போய் - (அனைவரும் அங்கிருந்து) போய்,

செறி திரை புனலில் சென்றனர் - செறிந்த அலைகளையுடைய நீர்த் துறையை அடைந்தனர்; (அதன் மேல்) செய்க என - (கடன்களைச்) செய்யத் தொடங்குக என்று (எல்லோரும்) கூற, நின்றனன் இராமனும் - (அவர்கள் வசப்பட்டு) நின்ற இராமபிரானும், நெறியை நோக்கினன் - (செய்தற்குரிய) முறையைக் கருதி முற்பட்டான்.

நீராடிக் கடன்கள் கழித்தற்குரிய நீர்த்துறைக்கு இராமபிரானை எல்லாரும் கூடித் தாங்கி அழைத்துச் சென்று கடமையைத் தொடங்குமாறு கூற, இராமபிரானும் தெளிவடைந்து, அதனைச் செய்ய முற்பட்டான். இது நிகழ்ந்தவிடம் கங்கைத்துறை என்பர்.

ஏந்தல்: ஆண்பாற் சிறப்புப் பெயர். ஏந்தி : எச்சத்திரிபு. நின்றனன் : முற்றெச்சம்.

(பி - ம்.) 1. ஏந்தலையெய்தி வேந்தரும், ஏந்தலு மெழுந்து நான்மறைப், நாண்மலர்ப்.
2. பொன்றணிந்தன; புனிதரோடும்.
3. சென்றனன்; சென்றுரை; திரைசெறி; புனலிற் செல்கென, புனலுட் செய்கென. 80)

கடன்களைச் செய்தல்

1150. புக்கனன் புனலிடை முழுகிப் போந்தனன்
தக்கநன் மறையவன் சடங்கு காட்டத்தான்
முக்கைநீர் விதியது முறையி னீந்தனன்
ஒக்கநின் றுயிர்தொறு முணர்வு நல்குவான்.

உயிர்தொறும் - ஒவ்வோருயிரிடத்தும், ஒக்க நின்று - ஒரு தன்மை யாக அமைந்து, உணர்வு நல்குவான் - (அவற்றிற்கு) அறிவைத் தந்து நடத்தும் (திருமாலின் அமிசமான) இராமபிரான், புனலிடை புக்கனன் - நீரில் இறங்கி, முழுகி போந்தனன் - (முறைப்படி) நீராடி வந்து, தக்க நல் மறையவன் - தகுதி வாய்ந்த நல்ல வேதங்களில் வல்ல வசிட்ட முனிவன், சடங்கு காட்ட - கிரியைகளைச் செய்விக்க (அதன்படி), தான் —, மு கை நீர் - (ஒவ்வொரு முறையும் மும்மூன்ருகச் செய்யப்படும்) தருப்பண நீரை, விதி அது முறையின் - நூல்களில் விதித்த அம்முறைப்படி, ஈந்தனன் - (மந்திரத்தோடு) கொடுத்தான்.

இறுதி அடியால் இராமபிரானது அவதாரப் பெருமை கூறப் பெற்றது. அத்தகையவன், தான் கொண்ட மானிடக் கோலத்துக்கு இயையத் தந்தைக்குச் செய்யவேண்டிய கிரியைகளை முனிவன் மொழிப்படி செய்தான். புக்கனன், போந்தனன் : முற்றெச்சம்.

(பி - ம்.) 1. புனலினில்; மூழ்கிப், நோக்கிப்.
2. நான்மறையவன்.
3. முக்கையினீர்விதி, முக்கைநன்னீர்விதி, முக்கைநீர் மறைவிதி.
4. உணர்வை, உணவு, உணவை; நல்கினன், நண்ணிவான், நண்ணினன். (81)

இராமபிரான் பிராட்டி இருந்த சாலைக்குச் செல்லுதல்

1151. ஆனவன் செய்கடன் பிறவு மாற்றிப்பின்
மானமந் திரத்தவர் மன்னர் மாதவர்
ஏனையர் பிறர்களுஞ் சுற்ற வேகினன்
சானகி யிருந்தவச் சாலை யெய்தினன்.

ஆனவன் - நீர்க்கடன் இறுத்தவனான அவ்விராமபிரான், செய் கடன் பிறவும் ஆற்றி - செய்தற்குரிய கிரியைகள் பிறவற்றையும் செய்து, பின் - அதன்பின், மானம் மந்திரத்தவர் - பெருமையுடைய மந்திரச் சுற்றத்தவரும், மன்னர் - அரசர்களும், மா தவர் - சிறந்த முனிவர்களும், ஏனையர் பிறர்களும் - மற்றவர் எல்லாரும், சுற்ற ஏகினன் - தன்னைச் சூழ்ந்துவரச் சென்று, சானகி இருந்த - சானகிப் பிராட்டி தங்கியிருந்த, அ சாலை எய்தினன் - அந்தப் பன்ன சாலையை அடைந்தான்.

நீர்க் கரையில் செய்தற்குரிய சடங்குகளை எல்லாம் செய்து முடித்தபின் இராமபிரான், பரதனுடன் வந்திருந்த பரிவாரம் முழுதும் தன்னைச் சூழ்ந்துவரச் சென்று தனது பன்னசாலை சேர்ந்தான்.

மான மந்திரத்தவர்: "மான நோக்கிற் கவரிமா வனைய நீரார்" (7). கடனாற்றச் சென்ற இராமபிரானுடன் பிராட்டியும் சென்றதாக வான்மீகம் கூறும்.

(பி - ம்.) 1. செய்கடன் யாவுமாற்றினன், பிறவு மாற்றினன், பிறரு மாற்றினன், பிறவு மாற்றிய, முறையினாற்றிப்பின், ஆனவன் பிறவுளயாவு மாற்றிப்பின்.
2. மானமந்திரத்தலை மன்னர், மந்திரித் தலைவர்; மன்னவர்.
4. இருந்த நற்சாலை. (82)

பரதன் வருந்துதல்

1152. எய்திய வேலையிற் றமிய ளெய்திய
தையலை நோக்கியச் சாலை நோக்கினன்
கைகளிற் கண்மலர் புடைத்துக் கான்மிசை
ஐயனப் பரதன்வீழ்ந் தரற்றி னனரோ.

எய்திய வேலையில் - (பன்னசாலையை எல்லாரும்) அடைந்த போது, ஐயன் அ பரதன் - (குணங்களில்) சிறந்தவனான அப்பரதன், தமியள் எய்திய தையலை நோக்கி - (பாங்கியர் முதலிய ஒருவரும் துணையின்றித்) தனியே வந்த சீதாபிராட்டியைப் பார்த்தும், அ சாலை நோக்கினன் - (எளியதான) அப்பன்னசாலையைப் பார்த்தும், கண் மலர் கைகளில் புடைத்து - தாமரை மலர் போன்ற (தன்) கண்களைக் கைகளால் பொத்திக்கொண்டு, கால்மிசை வீழ்ந்து - (பிராட்டியின்) கால்களில் விழுந்து, அரற்றினன் - புலம்பலானான். அரோ : அசை.

பல பெருஞ் சிறப்புக்களுடன் அரண்மனையில் வாழவேண்டிய வர்கள் இங்கே எளிய குடிலில் தங்க நேர்ந்ததையும், பல பரிவாரங் களுடன் இருத்தற்குரிய பிராட்டி தனியளாய் வந்திருத்தலையும் கண்ட பரதனுக்கு, சிறிது அடங்கியிருந்த துயரம் மீண்டும் தலைதூக்கி எழவே, துயராற்ருமல் பிராட்டியின் பாதங்களில் விழுந்து புலம்ப லானுன். இக்காட்சியைக் காண நேர்ந்த கண்கனா மோதிக் கொண்டான்.

(பி - ம்.) 1. எய்திய வெல்லையில், எய்தியவேல்லையில்; தமியனேந்திய.
2. தையலை நோக்கினன். (83)

1153. வெந்துயர் தொடர்ந்தெழ விம்மி விம்மிநீர்
உந்திய நிரந்தர மூற்று மாற்றில
சிந்திய குருதியச் செம்மல் சேந்தகண்
இந்தியங் களிலெறி கடலுண் டென்னவே.

வெம் துயர் தொடர்ந்து எழ - கொடிய துயரம் தொடர்ந்து மேலிடுதலால், அ செம்மல் - அந்தப் பரதனுடைய, சேந்த கண் - சிவந்த கண்கள், விம்மி விம்மி - அழுதழுது, இந்தியங்களில் - (கண் களாகிற) பொறிகளிலும், எறி கடல் உண்டு என்ன - அலைமோதும் கடல் உள்ளது போலும் என்னும்படி, நீர் ஊற்று மாற்றில - நீர் சுரத்தலை மாற்ருதனவாகி, நிரந்தரம் உந்திய - இடைவிடாமல் (நீரை) வெளிப்படுத்தின; குருதி சிந்திய - (நீரோடு கலந்து) இரத்தத்தையும் சிந்தின.

ஏ ! ஈற்றசை.

கடல் என்பது தரையில் இருத்தலோடு, புதிதாக இவன் கண் களிலும் அது வந்துள்ளது என்னும்படி இருந்தது, அவன் கண்ணீர் பெருக்கிய வகை என உயர்வுநவிற்சி யாக்குகிருர். இதனுல் பரதனது துயர மிகுதி புலப்படுத்தியவாரும்.

எழ - எழுதலால்; செயவென் எச்சம் காரணப் பொருளில் வந்தது. மாற்றில - முற்றெச்சம். செம்மல் : ஆண்பாற் சிறப்புப் பெயர்.

(பி - ம்.) 1. தொடர்தர; விம்மல் விம்மநீர்.
2. உந்தின; ஊற்று மாற்றல, நிரந்தரமுற்று மாறிலா; நிரந்தரமுற்று மாற்றில, நிரந்தனவூற்றுவற்றில.
3. சிந்தின; குரிசிலச், குருதியைச்.
4. இந்தியங்களினெறி; கடலுமென்னவே. (84)

சீதைக்கு அறிவித்தல்

1154. அந்நெடுந் துயருறு மரிய வீரனைத்
தன்னெடுத் தடக்கையா லிராமன் ருங்கினுன்
நன்னெடுங் கூந்தலை நோக்கி நாயகன்
என்னெடும் பிரிவினுற் றுஞ்சி ஞனென்ருன்.

அ நெடு துயர் உறும் - அத்தகைய பெருந்துயருற்ற, அரிய வீரனை - (பகைவரால் வெல்லுதற்கு) அரிய வீரனான பரதனை, இராமன் - இராமபிரான், தன் நெடு தட கையால் தாங்கினன்- தன்னுடைய நீண்ட பெரிய கைகளால் (எடுத்துத்) தாங்கிக் கொண்டு, நல் நெடு கூந்தலை நோக்கி - நல்ல நீண்ட கூந்தலை யுடைய பிராட்டியைப் பார்த்து, நாயகன் - (நம்) தலைவனான சக்கர வர்த்தி, என் நெடும் பிரிவினால் - எனது நீண்ட பிரிவுத் துயர் காரணமாக, துஞ்சினன் - இறந்துவிட்டான், என்றான் - என்று கூறினான்.

நன்னெடுங் கூந்தல்! பன்மொழித் தொடரால் வந்த அன்மொழித் தொகை. நெடுந்தடக்கை - தாள்தோய் தடக்கை. பிரிவுக் காலம் பதினான்கு ஆண்டுகளாகலின், 'நெடும் பிரிவு' என்றான்.

(பா - ம்.) 2. தடக்கையின், கரத்தினால்.
4. பிரிவினிலிறந்திட்டான். (85)

சீதையின் துயரம்

1155. துண்ணெனு நெஞ்சின ளுளங்கி னாடுணைக்
கண்ணெனு நெடுங்கடல் கலுழி கான்றிட
மண்ணெனுஞ் செவிலிமேல் வைத்த கையினள்
பண்ணெனுங் கிளவியாற் பன்னி யேங்கினாள்.

(சக்கரவர்த்தி இறந்தமை கேட்ட பிராட்டி), துண் எனும் நெஞ்சினள் - திடுக்கிட்ட மனமுடையவளாய், துளங்கினாள் - நடுங்கி, துணை கண் எனும் நெடு கடல் - இரண்டு கண்களாகிற பெரிய கடல்கள், கலுழி கான்றிட - நீர்ப் பெருக்கைச் சொரிய, மண் எனும் - பூமியாகிற, செவிலிமேல் வைத்த கையினள் - செவிலித்தாயின் மேல் ஊன்றிய கைகளை உடையவளாய், பண் எனும் கிளவியால் - இன்னிசை போன்ற (தன்) சொற்களால், பன்னி - பலவும் சொல்லி, ஏங்கினாள் - அழலானாள்.

பெருந்துக்கம் உண்டானபோது, கைகளைத் தரையில் ஊன்றிக் கொண்டு அழுதல் மகளிர் இயல்பு. பிராட்டி அயோனிஜையாய்ப் பூமியில் தோன்றியவளாகலின், 'மண்ணெனுஞ் செவிலி' என்றார். இங்கும் கண்ணைக் கடல் என்றார்.

(பா - ம்.) 1. துளங்கி மைத்துணைக், ஏங்கினாடுணைக், நோக்கினாடுணைக்.
2. கண்ணெனுங்கடனெடுங், கண்ணெனு நெடுங்கயல்.
4. கிளவியிற். (86)

1156. கன்னகு திரள்புயக் கணவன் பின்செல
நன்னக ரொத்தது நடந்த கானமும்
மன்னவன் றுஞ்சின னென்ற மாற்றத்தால்
அன்னமுந் துயர்க்கட லடிவைத் தாளரோ.

கல் நகு - (தம் சிறப்பால்) மலையையும் இகழ்கிற, திரள் புயம் - திரண்ட தோள்களையுடைய, கணவன் பின் செல - கணவனான இராமபிரானைத் தொடர்ந்து செல்லுதலால் (பிராட்டிக்கு), நடந்த கானமும் - (அவள்) நடந்து சென்ற (கொடிய) காடும், நல் நகர் ஒத்தது - நல்ல அயோத்தி நகரம்போலவே இருந்தது; மன்னவன் துஞ்சினன் என்ற மாற்றத்தால் - சக்கரவர்த்தி இறந்தான் என்ற வார்த்தையால், அன்னமும் - (அதுகாறும் துன்பத்தை உணராத) அன்னம் போன்றவளான பிராட்டியும், துயர் கடல் அடிவைத்தாள் - துன்பக்கடலுள் (மூழ்குதற்கு) அடி பெயர்த்து வைத்தவளானாள்.

அரோ : அசை.

"நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு" என்று கேட்டுக் கணவனைப் பிரியாமை பெற்ற பிராட்டி, அதுகாறும் துன்ப உணர்ச்சியே கொண்டிலள்; இப்போது சக்கரவர்த்தி இறந்த செய்தியைக் கேட்டது தான் முதன்முதலாக அவளையும் துயரத்திற்கு உள்ளாக்கியது. இது, மேலே அவள் அடைய இருக்கும் அளவிலாத் துயரின் தொடக்கமாக அமைந்தது என்பார், 'துயர்க்கடல் அடி வைத்தாள்' என்றார். பிராட்டியை அன்னம் எனப் பலவிடத்தும் கூறுவார் கம்பர். அடிவைத்தல்: "கவ்வையின் பெருங்கடல் முனியுங் கால்வைத்தான்", (454); "ஆரு வெள்ளத் துன்புற வன்றே யடியிட்டாள்" (வி. பா. நான்காம் போர் : 41).

(பி - ம்.) 4. துயர்க்கடற்கு. (87)

முனிவர்தம் பத்தினிகளின் செயல்

1157. ஆயவ டன்னைநேர்ந் தங்கை யேந்தினர்
தாயரின் முனிவர்தந் தருமப் பன்னியர்
தூயநீ ராட்டினர் துயர நீக்கினர்
நாயகற் சேர்த்தினர் நவையி னீங்கினர்.

ஆயவள் தன்னை - அவ்வாறு துயருற்றவளான சீதா பிராட்டியை, நவையின் நீங்கினர் - குற்றமற்றவர்களான, முனிவர்தம் தருமம் பன்னியர் - முனிவர்களின் தரும பத்தினிமார், தாயரின் - பெற்ற தாயரைப் போல, நேர்ந்து - அணுகி வந்து, அம் கை ஏந்தினர் - தம் அழகிய கைகளில் தாங்கிப் பிடித்துக்கொண்டு (கங்கைக்கு நடத்திச் சென்று), தூய நீர் ஆட்டினர் - தூய நீரில் முழுகுவித்து, துயரம்

நீக்கினர் - (அவள்) துயரத்தை ஆற்றி, நாயகன் சேர்த்தினர் - (மீண்டு) தலைவனிடத்துச் சேர்த்தனர்.

வாலாமை நீக்கற் பொருட்டுப் பிராட்டியும் நீராடவேண்டியவ ளாதலால், முனிபத்தினிமார் அவளை நீராட்டித் தேற்றி மீண்டும் பன்னசாலைக்குக் கொண்டு சேர்த்தனர்.

(பி - ம்.) 2. முனிவரர், முனிவர்தம்; பன்னிமார்.
3. துயரந்தீர்த்தனர், துயரினீக்கினர்.
4. சார்த்தினர்; கவையுணீங்கினர்; நீக்கினர். (88)

சுமந்திரன் வருதல்

1158. தேன்றருந் தெரியலச் செம்மலுல்வரை
ஈன்றவர் மூவரோ டிருமை நோக்குறும்
சான்றவர் குழாத்தொடுந் தரும நோக்கிய
தோன்றல்பாற் சுமந்திரன் றொழுது தோன்றினான்.

தேன் தரும் தெரியல் - தேன் துளிக்கும் பூமாலையை அணிந்த, அ செம்மல் நால்வரை - பெருமை மிக்க அக்குமரர் நால்வரையும், ஈன்றவர் மூவரோடு - பெற்ற தாய்மாரான (கோசலை முதலிய) மூவரோடும், இருமை நோக்கு உறும் - பிறப்பு வீடு என்னும் இரண்டின் தன்மைகளையும் ஆராயும் தன்மையை உடைய, சான்றவர் குழாத்தொடும்-பெரியோர் கூட்டத்துடனும், சுமந்திரன் —, தருமம் நோக்கிய தோன்றல்பால் - (எப்போதும்) தருமத்தையே கருதும் இராமபிரான் பால், தொழுது - அவனை வணங்கிக்கொண்டே, தோன்றினான் - வந்தான்.

செம்மல் - பெருமைக் குணம். இருமை - பிறப்பு, வீடு என்னும் இரண்டின் தன்மை; "இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்" (குறள். 23); இம்மை மறுமைப் பயன்கள் எனலுமாம்.

இப்பாடல் 'சொல்லுவான்' என்று முடியும் பிரதியில், பின்வரும் அதிகப் பாடல் ஒன்று காணப்படுகிறது :

"ஐய நின்னுடை யன்னை மூவரும்
வைய மன்னரு மற்று மாக்களும்
துய்ய நாடொரீஇத் தோன்றி னாரவர்க்
குய்ய நல்லரு ளுதவு வாயென்றான்."

(பி - ம்.) 1. தருதெரியலச்; செம்மை நால்வரை, செல்வர் நால்வரை.
2. ஈன்றவம் மூவரோடு, ஈன்றவர்தம்மொடும்; இனிமை நோக்குறும்;
3. தரும நோக்குறு.
4. தொழுது சொல்லுவான். (89)

இராமபிரான் தாய்மாரை வணங்கி வருந்துதல்

(வேறு)

1159. எந்தை யாண்டையா னியம்பு வீரெனு
வந்த தாயர்தம் வயங்கு சேவடிச்
சிந்தி நின்றனன் சேந்த கண்ணினீர்
முந்தை நான்முகத் தவற்கு முந்தையான்.

முந்தை - (படைப்புக்கு எல்லாம்) முற்பட்ட, நான்முகத்தவற்கும் - நான்கு முகங்களை உடைய பிரமனுக்கும், முந்தையான் - முற்பட்டவனான (திருமாலான) இராமபிரான் (தாய்மாரைக் கண்டவுடன்), எந்தை யாண்டையான் - என் தந்தை எங்குள்ளான்? இயம்புவீர் - சொல்லுங்கள், எனு - என்று கதறிக்கொண்டு, வந்த தாயர்தம் - (தன் அருகே) வந்த தாய்மார்களின், வயங்கு சேவடி - விளங்குகின்ற சிவந்த பாதங்களில், சேந்த கண்ணின் நீர் சிந்தி நின்றனன் - சிவந்த (தன்) கண்களினின்றும் பெருகிய நீரைச் சொரிந்து நின்றான்.

ஈற்றடியால், இராமபிரானது அவதாரப் பெருமை கூறினர். 'சேவடிகளில் கண்ணீர் சிந்தி நின்றனன்' என்றது, அவர்களடிகளில் வீழ்ந்தவாறே கதறினானென்றவாறு.

(பி - ம்.) 1. இயம்புநீரெனு, இயம்புநீரென.
3. சிந்தினான்மிகச், சிந்தினான்றன, சிந்த நின்றனன்; கண்ணநீர்.
4. முந்தைமாவத்தவற்கும். (90)

1160. தாய ருந்தலைப் பெய்து தாந்தழீஇ
ஓய்வி றுன்பினு லுரற லோங்கினார்
ஆய சேனையு மணங்க னார்களும்
தீயில் வீழ்ந்துதீ மெழுகிற் றேம்பினார்.

தாயரும் - தாய்மார்களும், தலை பெய்து - ஒருங்கு கூடி, தாம் தழீஇ - அவரவர் தனித்தனியே இராமனைத் தழுவிக்கொண்டு, ஓய்வு இல் துன்பினால் - தணிதலில்லாத துன்பத்தால், உரறல் ஓங்கினார் - கதறுதல் மிக்கனர்; ஆய சேனையும் - அங்கு வந்த சேனையிலுள்ள ஆடவரும், அணங்கு அன்னார்களும் - திருமகளைப் போன்ற மகளிரும், தீயில் வீழ்ந்து தீ மெழுகில் - நெருப்பில் விழுந்து கருகி உருகும் மெழுகு போல, தேம்பினார் - மனம் உருகி வருந்தினர்.

இராமபிரானது நிலையைக் கண்ட மாத்திரத்தில் அனைவர் உள்ளத்தும் அடங்கி இருந்த வருத்தம் கிளர்ந்தெழுதலால் எல்லோரும் துன்பம் மேலிட்டு அழுதனர்.

உரறல் - முழங்குதல்; கதறுதல். அணங்கனார் என எடுத்துக் கூறினமையின், சேனை என்பது, சேனையிலுள்ள ஆடவரைக் குறித்தது. தீ மெழுகில்! வினைத்தொகை.

(பா. ம்.) 1. தாழ்ந்தெழீஇ, தாமும் வீழ்ந்து, தாரின் வீழ்ந்து, பாரின் வீழ்ந்து;
2. ஒப்வில் துன்பினர், ஒப்வில் அன்பினால், ஏயவன்பினர், ஏயுமன்பினர்;
உரறியேங்கினர், உரற்றியேங்கினர், உரற்றியோங்கினர், உதறி யேங்கினர், உலறியேங்கினர், அலறியேங்கினர், அரற்றியேங்கினர்.
4. தீயின் வீழ்ந்து; வீழ்ந்துகுமெழுகில், வீழ்ந்த செம்மெழுகில், வீழ்ந்தன மெழுகில், வீழ்ந்திடுமெழுகில். (91)

தாய்மார் சீதையைத் தழுவிக்கொண்டு வருந்துதல்

1161. பின்னர் வீரரைப் பெற்ற பெற்றியப்
பொன்ன னார்களுஞ் சனகன் பூவையைத்
துன்னி மார்புறத் தொடர்ந்து புல்லினர்
இன்னல் வேலைபுக் கிழிந்த ழுங்கினர்.

பின்னர் - பின்பு, வீரரை பெற்ற பெற்றி அ பொன் அன்னார்களும் - இராமபிரான் முதலிய நால்வரையும் பெற்ற பெருமையை உடைய திருமகள் போல்வாரான அத் தாய்மார்கள், சனகன் பூவையை துன்னி - சனகன் மகளான சீதாபிராட்டியை அடைந்து, தொடர்ந்து மார்பு உற புல்லினர் - ஒவ்வொருவராய் (வரிசையாக) மார்போடு பொருந்த (அவளை) அணைத்துக்கொண்டு, இன்னல் வேலை புக்கு - துன்பக்கடலுள் இறங்கி, இழிந்து - ஆழ்ந்து, அழுங்கினர் - துயருற்றனர்.

வீரர் என்றது இராமபிரான் முதலிய நால்வரையும். புல்லினர்: முற்றெச்சம்.

(பா. ம்.) 1. பின்னவ், பின்னும், பின்னை; பெற்றியார்.
3. தொடர்ந்து சுற்றினர், தழுவிச் சுற்றினர்.
4. இழிந்தழுந்துவார், இழிந்தழுங்குவார், இழிந்திரங்குவார், இழிந் திரங்கினர், இடைந்தழுங்குவார், இடைந்தழுந்துவார். (92)

சேனைவீரர் முதலியவர்கள் இராமனை அடைதல்

1162. சேனை வீரருந் திருநன் மாநகர்
மான மாந்தரு மற்று ளோர்களும்
ஏனை வேந்தரும் பிறரும் யாவரும்
கோனை யெய்தினர் குறையுஞ் சிந்தையார்.

(பின்னர்), சேனை வீரரும் - சேனையில் உள்ள நால்வகைப் படை கட்கும் உரிய வீரர்களும், திரு நல் மாநகர் - செல்வமிக்க நல்ல பெரிய அயோத்தி நகரிலுள்ள, மானம் மாந்தரும் - பெரிய மனிதர்களும், மற்று உள்ளோர்களும் - (நகரிலிருந்து வந்த) மற்றும் உள்ளவர்களும், ஏனை - இவர்கள் அல்லாத, வேந்தரும் - அரசர்களும், யாவரும் - (எஞ்சிய) எல்லோருமாக, குறையும் சிந்தையார் - வருந்தும் மன முடையவர்களாய், கோனை எய்தினர் - இராமபிரானை அணுகினர்.

பலரையும் எடுத்துச் சொல்லியதன் மேலும் யாவரும் என்றது, மகளிரையும் உளப்படுத்தற்கு என்னலாம். இவர்க ளெல்லாம் இராமபிரான்பால் உள்ள அன்பு மிகுதியால், சேனையைத் தொடர்ந்து வந்தவர்கள்.

(பி-ம்.) 1. திருவின்மாநகர், திருவன்னூர்களும்.
2. மானமைந்தரும், மானமாதரும்.
4. குழையும். (93)

சூரியன் மறைவு

1163. படஞ்செய் நாகணைப் பள்ளி நீங்கினன்
இடஞ்செய் தொல்குலத் திறைவ னாதலால்
தடஞ்செய் தேரினன் றானு நீரினல்
கடஞ்செய் வானெனக் கடலில் மூழ்கினான்.

தடம் செய் தேரினன் - பெரிதான ஒற்றையாழித் தேரையுடைய சூரியன், படம் செய் - படம் விரிக்கின்ற, நாகம் அணை பள்ளி நீங்கினன் - பாம்பணையில் பள்ளி கொள்ளுதலை விட்டு வந்த (திருமாலான) இராமபிரான், இடம் செய் - (தான் பிறத்தற்கு) இடமாகக் கொண்ட, தொல் குலத்து இறைவன் ஆதலால் - பழமை யான குலத்து முதல்வனாதலால், தானும் நீரினல் கடம் செய்வான் என - தானும் நீரினல் (தசரதனுக்குச் செய்தற்குரிய) கடனை ஆற்று வான்போல, கடலில் மூழ்கினான் - மேல் கடலில் மூழ்கி மறைந்தான்.

அன்றைப் பொழுது சாய்ந்ததை, சூரியனும் தசரதனுக்கு நீர்க் கடன் செலுத்துவான் போலக் கடலில் மூழ்கினான் என்று, இடத்தொடு பொருந்தத் தற்குறிப்பேற்றமாகக் கூறுகின்றார். நாகணை - பாம்புப் படுக்கை; தொகுத்தல். நாகணைப் பள்ளி நீங்கினன்: "அராவணை துறந்துபோந் தயோத்தி நண்ணிய, இராகவன்" (பால. 1283).

இதன்பின் ஒரு பிரதியில், கீழ்வரும் பாடல் காணப் படுகிறது:

"கங்குல் வந்திடக் கண்டி யாவரும்
அங்க ணேதுயி லமைய வாரிருட்
பொங்கு வெம்பகை போக மற்றைநாட்
செங்க திர்குண திசையிற் றோன்றினான்."

(பி-ம்.) 2. தங்குலத்து, தன்குலத்து. (94)

மறுநாள் இராமன் கூறத் தொடங்குதல்

1164. அன்று தீர்ந்தபின் னரச வேலையும்
துன்று செஞ்சடைத் தவருஞ் சுற்றமும்
தன்று ணைத்திருத் தம்பி மாரொடும்
சென்று சூழவாண் டிருந்த செம்மலுன்.

அன்று தீர்ந்தபின் - அற்றைநாள் கழிந்தபின் (மறுநாட் காலையில்), அரசர் வேலையும் - கடல் போன்ற அரசர் கூட்டமும், துன்று செம் சடை தவரும் - அடர்ந்த செம்மையான சடையை உடைய தவசியர் பலரும், சுற்றமும் - (பலவகையான) சுற்றத்தாரும், தன் துணை திரு தம்பிமாரொடும் - தனக்குத் துணையான சிறந்த தம்பிமார் மூவரோடும், சென்று சூழ - வந்து (தன்னைச்) சூழ்ந்திருக்க, ஆண்டு இருந்த - அவர்களிடையே இருந்த, செம்மல் - இராமபிரான்.

தான்: அசை.

செம்மல், பரிந்து கூறினுன் என அடுத்த கவியில் வருவதனோடு முடியும். பரதன் வந்து சேர்ந்த நாள் முழுதும் துக்ககரமாகக் கழிய, மறுநாட் காலை அனைவரும் கூடியிருந்த பேரவையில், இராமபிரான் பரதன் வந்த காரியத்தைக் கேட்கலானுன். அரசர்களின் மிகுதிபற்றி 'அரச வேலை' என்றுர்.

தன்றுணை - தன்னை யொத்த என்றலுமாம்.

(பி - ம்.) 1. தீர்ந்த பின்னரசர்.
2. தவருஞ் சுற்றுறத்.
3. தன்திருத்துணைத்; தம்பிமார்களும். (95)

இராமபிரான் பரதனை வினவுதல்

1165. வரதன் றுஞ்சினுன் வைய மாணையால்
சரத நின்னதே மகுடந் தாங்கலாய்
விரத வேடநீ யென்கொன் மேவினுய்
பரத கூறெனுப் பரிந்து கூறினுன்.

(இராமபிரான் பரதனை நோக்கி), பரத - பரதா, வரதன் துஞ்சினுன் - வள்ளலான சக்கரவர்த்தி இறந்துவிட்டான்; ஆணையால் - அவன் கட்டளைப்படி, வையம் - நாடு (காத்தல்), சரதம் நின்னதே - உண்மையாக உன்னுடையதே; (அங்ஙனமாகவும்) நீ—, மகுடம் தாங்கலாய் - முடி சூடாமல், விரதம் வேடம் மேவினுய் - தவவேடம் கொண்டுள்ளாய்; என்கொல் - (காரணம்) என்ன? கூறு எனு - சொல் என்று, பரிந்து கூறினுன் - (அவன்பால்) அன்பு கொண்டு சொன்னுன்.

முன் பாட்டின் இறுதியில் வந்த 'செம்மல்' என்றது எழுவாய். செம்மல், பரிந்து கூறினன் என முடிக்க.

(பி - ம்.) 3. என்கொல் வேண்டுவான், வேண்டுவாய், வேண்டினுய்.
4. பணிந்து கூறுவான். (96)

பரதன் கூற்று

1166. என்ற லும்பதைத் தெழுந்து கைதொழா
நின்று தோன்றலை நெடிது நோக்கிநீ
அன்றி யாவரே யறத்து ளோரதில்
பின்று வாய்கொலா மென்னப் பேசுவான்.

என்றலும் - என்று இராமபிரான் கேட்டவுடன், பதைத்து எழுந்து - (பரதன்) மனம் துடித்து எழுந்து, தோன்றலை கை தொழா நின்று - இராமபிரானைக் கைகூப்பி வணங்கி நின்று, நெடிது நோக்கி - (அவன் முகத்தை) நெடும்பொழுது பார்த்து, நீ அன்றி அறத்து உள்ளோர் யாவர் - உன்னைத் தவிர (எப்போதும்) தரும நெறியில் ஊன்றி உள்ளவர் யாவருளர்? அதில் பின்றுவாய்கொல் - (நீயே) அதில் பின்வாங்குவாயோ? என்ன - என்று சொல்லி, பேசுவான் - மேலும் சொல்லலானான்.

ஏ, ஆம் : அசை.

இராமபிராமன் அரசேற்று ஆளாதது தவறு என்று கருதி, அதனை நீக்க அவனை மீண்டும் நகருக்கு அழைத்துச் செல்ல வந்த பரதனை, எடுத்த எடுப்பிலேயே இராமபிரான் கேட்ட கேள்வி நடுங்கச் செய்ததனுல், அவன் நடுங்கி ஒன்றும் தோன்ருமல் நெடுநேரம் இராமபிரானது முகத்தை உற்று நோக்கி நின்று, பின்னர்ச் சற்றுத் தெளிந்து பேசலானுன். அவன் அவ்வாறு பேசினமை மேலே ஆறு கவிகளில் வரும்.

(பி - ம்.) 2. நின்ற தோன்றலை.
3. அறத்துளோரதம், அதைப்;
4. பின்றுவாய்கொலோ, பின்றுவார்கொலாம்; என்னப்பேசினன், என்று பேசுவான். (97)

1167. மனக்கொன் றுதன வரத்தி னின்னையும்
நினக்கொன் றுநிலை நிறுத்தி நேமியான்
தனக்கொன் றுடருந் தனைய னுதலால்
எனக்கொன் றுதவ மடுப்ப தெண்ணினுல்.

மனக்கு ஒன்றுதன வரத்தின் - (பெரியோர்) மனத்துக்குப் பொருந்தாத வரங்களால், நின்னையும் நினக்கு ஒன்று(த) நிலை நிறுத்தி - உன்னையும் உனக்குப் பொருந்தாத தவநிலையில் நிறுத்தி, நேமியான் -

தன்னை கொன்றுள் - சக்கரவர்த்தியையும் உயிரிழக்கச் செய்தவளான கைகேயி, தரும் - பெற்ற, தனயன் ஆதலால் - புதல்வன் (நான்) ஆதலால், எண்ணினுல் - ஆலோசிக்கும் இடத்து, எனக்கு அடுப்பது தவம் ஒன்று - எனக்குப் பொருந்துவது தவம் என்ற ஒன்றுகுமா?

'நல்ல புண்ணியசாலிகளுக்குப் பொருந்துவது தவம்; நான் கொடிய பாவியின் வயிற்றிற் பிறந்ததனுல் பாவியானவன்; எனக்குத் தவம் மேற்கொள்ளல் பொருந்தாது' எனத் தன்னைக் குறைத்துக் கூறுகின்றுன் பரதன். 'நான் கெட்ட கேட்டுக்கு, எனக்குத் தவம் ஒன்று!' என்ற நாட்டு வழக்கின் தொனியை இறுதியடியிற் காணலாம். எனக் கொன்று என்பதனை ஒன்றுது என்பதன் இறுதி தொக்கதென்றேனும், தவவொழுக்கங்கள் எனக்கு ஒன்று எனப் பன்மைப் பொருளதென் றேனும் கொண்டு உரைத்தலுமாம். அன்றி, 'தவம்' என்பதை வருவித்துக்கொண்டு, தவம் எனக்கு ஒன்றுது; அதனை நான் அடுப்பது எண்ணினுல், அவம் என்று உரைத்தலும் ஒன்று. மனக்கு என்பதில் அத்துச் சாரியை தொக்கது.

(பி. ம்.) 1. மனக்கொன்றுதவள், மனைக்கொன்றுதவள்; வனத்தினின்னையும், வினைத்து வின்னையும், வினைந்து மண்ணையும். விளைத்து வின்னையும், இழைத்துவல்லையில், இழைத்து வாய்மையால்.
2. வினைக்கொன்றுதன, மினக்கொன்றுவகை, மினைக்கொன்றுமிலம், கொன்று மிலே; மிறுவி, மிறுத்தும்.
3. தனக்கொன்றுடரும், தனைக்கொன்றுளரும்; புதல்வனுதலால்.
4. எனக்கன்றே, எனக்கன்ரே; அடுப்பதெண்ணினுய், பெறுவ தெண்ணினுல். (98)

1168. நோவ தாகவிவ் வுலகை நோய்செய்த
பாவ காரியிற் பிறந்த பாவியேன்
சாவ தோர்கிலேன் றவஞ்செய் வேனலேன்
யாவ தாகவிப் பழிநின் றேறுவேன்.

இ உலகை - இந்த உலக முழுவதையும், நோவது ஆக - வருந்துவ தாகும்படி, நோய் செய்த - பெருந்துன்பத்தை உண்டாக்கிய, பாவகாரியில் பிறந்த - பெரும் பாவியிடத்துப் பிறந்த, பாவியேன் - பாவி யாகிய நான், தவம் செய்வேன் அல்லேன் - தவஞ் செய்தற்குரியவ னல்லேன்; சாவது ஓர்கிலேன் - இறக்கவும் துணிந்தேனில்லை; இ பழி நின்று யாவது ஆக ஏறுவேன் - (எனக்கு உண்டாகியுள்ள) இப்பழியி னின்றும் எவ்வாறு மீள்வேன்?

'தவம் எனக்குப் பொருந்தாதது; உயிர் விடுவதே பொருந்துவ தாகும்; அதனை நான் செய்யாதிருக்கின்றேன்; இப்பழியினின்றும் விடுபடுவது எவ்வாறு என்பது எனக்குப் புலனுகவில்லை' என்கின்றுன். பழி என்றது, தன் தாயின் செயலுக்குத் தானும் உடந்தையானவன் என உலகோர் எண்ணத்தகும் என்பதனை;

அப்பழி எவ்வகையிலும் தன்னை விடாதென்கின்றான். பாவகாரி - பாவம் செய்தவள்; பாவகாரியில் - பாவம் செய்தோர் வரிசையில் என்பாரும் உளர். பாவகாரி : சுந்தர. 1099; திருநாவுக். திருப்பூவனூர்த் திருக் குறுந்தொகை : 9; பெரியாழ்வார் திருமொழி. "நாவகாரியம்"; தக்க. 249, உரை.

(பி - ம்.) 1. கோவதாக்கி; உலகம்.
2. பாவியான்.
3. சாவநோர்கிலேன்; செய்தேனலேன்.
4. பழிகின்றேறுகேன்; பழிநன்றேறுவேன். (99)

1169. நிறையி னீங்கிய மகளிர் நீர்மையும்
பொறையி னீங்கிய தவமும் பொங்கருள்
துறையி னீங்கிய வறமுந் தொல்லையோர்
முறையி னீங்கிய வரசு முந்துமோ.

நிறையின் நீங்கிய - கற்பொழுக்கத்தினின்றும் நீங்கிய, மகளிர் நீர்மையும் - பெண்களின் குணமும், பொறையின் நீங்கிய தவமும் - பொறுமையினின்றும் விலகிய தவவொழுக்கமும், பொங்கு அருள் துறையின் நீங்கிய அறமும் - (மேன்மேலும்) எழுகின்ற அருள் நெறியின் நீங்கிய தருமமும், தொல்லையோர் முறையின் நீங்கிய அரசும் - பழமையாக வந்த மரபினர் முறையினின்றும் மாறுபட்ட அரசாட்சியும், முந்துமோ - முன்னேறுமோ? (முன்னேறா).

'நீ முடி சூடாமல் தவவேடங் கொண்டு இங்கே ஏன் வந்தாய்?' என்ற இராமபிரான் வினாவுக்கு விடையாக, தான் அரசு மேற் கொள்வது மரபின் முறைக்குப் பொருந்தாதது என்கின்றான்; அதற்கு எடுத்துக்காட்டாக மூன்று செய்திகள் கூறினான். தவத்துக்குப் பொறுமை இன்றியமையாதது; "உற்றநோய் நோன்றல்...அற்றே தவத்திற் குரு" (குறள். 261); அறத்திற்கு அருள் அவசியம்: "தங்குபே ரருளுந் தருமமுந் துணையா" (பால. 99).

(பி - ம்.) 4. அரசின் முந்துமோ, அரசுமுந்துமே. (100)

1170. பிறந்து நீயுடைப் பிரிவி ரெல்பதம்
துறந்து மாதவந் தொடங்கு வாயென்றால்
மறந்து நீதியிற் றிறம்பி வாளிற்கொன்
றறந்தின் றானென யானஃ தாள்வெனோ.

பிறந்து - மூத்த மகனாகப் பிறந்து, நீ உடை(ய) - நீ (உனக்கே உரிமையாக) உடைய, பிரிவு இல் - உன்னை விட்டுப் பிரிக்கமுடியாத, தொல் பதம் துறந்து - பழமையாக வந்த அரச பதவியைக் கைவிட்டு, மா தவம் தொடங்குவாய் என்றால் - (நீ) பெரிய தவத்தைச் செய்யத் தொடங்குவாயானால், மறந்தும் - நினைவு தப்பியும், நீதியில் திறம்பி -

நியாயத்தில் தவறி, அறம் - தருமத்தை, வாளில் கொன்று தின்றான் என - வாளால் வெட்டித் தின்றுவிட்டான் என்று (உலகோர்) கூறும்படி, யான் அஃது ஆள்வெனோ - நான் அந்த அரசை ஆள்வேனோ?

'இராமபிரான் அரசாட்சியைக் கைவிட்டதும் தவறு; நான் அதை ஏற்பதும் தவறு' என்பதே பரதன் துணிபாகவின், 'பிறந்து...துறந்து' என்கின்றான். அவன் இராமபிரானை அணுகி வந்தபோதே, "துறந்தனை முறைமையும்" (1122) என்றதும் நோக்கற்பாலது. அரசாட்சி இராம பிரானது பிறப்புரிமை; "பெற்றுடைய மண்ணவளுக் கீந்து" (404); "முழுவ தேபிறந் துலகுடைய மொய்ம்பினேன்" (484).

(பி - ம்.) 1. பிறந்து நின்னுடைப்பு தொல்லறம்.
2. இறந்து; தொடங்குவாயெனின்.
3. நீதியைத்; திறம்புவாளிற்கொன்று, திறம்பவாளிற்கொன்று.
4. தின்றலென, தின்றளென; அரசதாள்வெனோ, அரசையாள் வெனோ, யானஃதாள்வனோ, யானஃதாள்வனே, யானதாள்வதோ, யானரசாள்வெனோ. (101)

1171. தொகையி லன்பினு லிறைவன் றுஞ்சநீ
புகையும் வெஞ்சுரம் புகுதப் புந்தியால்
வகையில் வஞ்சனு யரசு வவ்வயான்
பகைவ னேகொலா மிறவு பார்க்கின்றேன்.

நீ புகையும் வெம் சுரம் புகுத - நீ தீப் புகையும் கொடிய காட்டிற்கு வர, இறைவன் - சக்கரவர்த்தி, தொகை இல் அன்பினுல் துஞ்ச - உன் பால் வைத்த அளவற்ற அன்பால் இறக்கவும், யான் - நான், புந்தியால் - மனத்தில், வகை இல் வஞ்சன் ஆய் - வகுத்தலரிய வஞ்சனை உடையவனாய், அரசு வவ்வ - அரசைக் கைக்கொள்ள, இறவு பார்க்கின்றேன் பகைவனே கொல் - சோர்விடம் பார்க்கும் பகைவ னேயோ?

'நீ முறையின்றி அரசைக் கைவிட்டுக் காட்டுக்கு வரவும், அதனால் உன் பிரிவாற்றாமல் தந்தை இறக்கவும், அந்தத் தருணம் பார்த்து நான் அரசைக் கைக்கொண்டு ஆள்வதென்றால், சோர்விடம் பார்த்து நாட்டைக் கொள்ளும் பகைவனுக்கும் எனக்கும் வேறுபாடில்லை யன்றோ?' என்கின்றான். இறவு - அற்றம்; நீக்கம் என்றலுமாம்; "இளையவ னேகலு மிறவு பார்க்கின்ற, வளையெயிற் றிராவணன்". (ஆரணிய. 826).

(பி - ம்.) 1. அன்பினன்.
4. இறவு பார்த்துயான், பார்த்தியான், இறவும் பார்க்கின்றேன், பிறவும் பார்க்கின்றேன், அதுவும் பார்க்கின்றேன். (102)

1172. உந்தை தீமையு முலகு ருதநோய்
தந்த தீவினைத் தாய்செய் தீமையும்
எந்தை நீங்கமீண் டரசு செய்கெனச்
சிந்தை யாவதுந் தெரியக் கூறினான்.

உந்தை தீமையும் - உன் தந்தை செய்த தீங்கும், உலகு - உலகுக்கு, உருத நோய் தந்த - (இதுவரை) நேர்ந்திராத அரிய துன்பத்தைக் கொடுத்த, தீவினை தாய் - கொடுவினையையுடைய (என்) தாய் கைகேயி, செய் தீமையும் - செய்த தீங்கும், நீங்க - நீங்குமாறு, எந்தை மீண்டு அரசு செய்க - எம் தந்தையாகிய நீ (நாட்டுக்கு) மீண்டு வந்து அரசாட்சி செய்வாயாக, என - என்று, சிந்தை யாவதும் தெரிய - தன் மனக்கருத்து முழுதும் (அங்குள்ளார் அனைவருக்கும்) தெரியுமாறு, கூறினான் - எடுத்துச் சொன்னான் (பரதன்).

'தந்தை உன்னைக் காட்டுக்கு அனுப்பி, அதனால் தானும் இறந்து உலகமும் துன்புறச் செய்தமையால், அவன் தீமை செய்தவனாகின்றான்; அதற்குக் காரணமானவள் என் தாயாதலால் அவளைப் பற்றிச் சொல்லவேண்டியதில்லை; எனவே, நீ நாட்டுக்குத் திரும்பி வந்து அரசை மேற்கொண்டு ஆளுதலே முறையாகும்' என்று தன் கருத்தைத் தெளிவாகக் கூறி முடித்தான் பரதன். 'பரதன் எனக்கு மகனல்லன்' என்று கூறி அவனைத் துறந்துவிட்டமையாலும், தகாத முறையில் அரசைக் கைக்கொள்ள வகைசெய்து அதனால் பழிக்கு ஆளாக்கினமையாலும், வெறுப்பால் 'உந்தை' என்றான். இனி எனக்குத் தந்தை நீயே என்பான் 'எந்தை' என இராமபிரானைக் கூறினான்.

(பி - ம்.) 1. திமை மூவுலகு.
2. தரைசெய்திமையும்.
3. திரமீண்டு, திரவிண்டு, எந்தை நீங்கநோன்பிபற்றுவன்னெனச்.
4. சிந்தை செய்வதும்; தெரியச் செப்பினான். (108)

இராமன் கூறுதல்

1173. சொற்ற வாசகத் துணிவு ணர்ந்தபின்
இற்ற தோவிவன் மனமென் றெண்ணுவான்
வெற்றி வீரயான் விளம்பக் கேளென
முற்ற நோக்கினான் மொழிதன் மேயினான்.

முற்ற நோக்கினான் - எல்லாவற்றையும் உணர்ந்த இராமபிரான், சொற்ற வாசகம் துணிவு உணர்ந்தபின் - பரதன் சொன்ன வார்த்தைகளின் உறுதியை உணர்ந்த பிறகு, இவன் மனம் இற்றதோ என்று எண்ணுவான் - இவன் சிந்தனை இத்தகையதோ என்று நினைத்தவனாகி, (பரதனை நோக்கி), வெற்றி வீர - வெற்றியை உடைய வீரனே, யான்

விளம்ப கேள் எனு - நான் சொல்ல அதைக் கேட்பாயாகவென்று, மொழிதல் மேயினுன் - சொல்லத் தொடங்கினுன்.

இற்றதோ - இவ்வளவுதானு என்பது பழைய வசனம்.

இராமபிரான் பரதனுக்கு நீதி கூறியவை அடுத்த பாடல் முதல் ஏழு பாடல்களிற் கூறப்படும்.

(பி-ம்.) 1. வாசகத்துணிபு.
2. மனமென்றுன்னுவான், அறிவென்றெண்ணுவான்.
3. வீரநான்.
4. முற்றுநோக்கினுன்; மொழிதன்மேற்கொண்டான். (104)

1174. முறையும் வாய்மையு முயலு நீதியும்
அறையு மேன்மையோ டறமு மாதியாம்
துறையுள் யாவையுஞ் சுருதி நூல்விடா
இறைவ ரேவலா லியைவ காண்டியால்.

முறையும் - நன்னெறிகளும், வாய்மையும் - சத்தியமும், முயலும் நீதியும் - (யாவரும் அடைதற்கு) முயலும் நியாயங்களும், அறையும் மேன்மையோடு - (சிறப்பித்துச்) சொல்லப்படும் மேன்மையும், அறமும் ஆதி ஆம் - தருமமும் முதலான, துறையுள் யாவையும் - நல்ல வழிகளாகவுள்ள எல்லாம், சுருதி நூல் விடா - வேத சாத்திரங்கள் கூறும் முறைகளைக் கைவிடாத, இறைவர் ஏவலால் - அரசர்களுடைய கட்டளையாலே, இயைவ - (உலகத்தில்) பொருந்துவனவாகும்; காண்டி - (இதனை நீ) அறிவாய். ஆல் : அசை.

பழைய வசனத்தில், 'இறைவர் - மகரிஷிகளான பிராமணர்' என்று காணப்படுகிறது. எல்லா நலனும் இறைவர் ஏவலால் இயைவன என்று இராமபிரான் கூறத்தொடங்கியது, அத்தகைய இறைவனுன நம் சக்கரவர்த்தியின் ஏவலை நான் மேற்கொண்டேன் என்பதை உணர்த்தற் பொருட்டாகும். இதுமுதல் ஏழு பாடல்களால் இராமபிரான் பரதனுக்கு உணர்த்தியன கூறப்படும்.

(பி-ம்.) 1. முறையின்வாய்மையும்; முயலுந் தூய்மையும்.
2. அறையுமெய்மையோடு; நீதியாம், ஞானமும், வேள்வியும் அறமுநீதியும், அறையுநீதியும்.
3. துறையும்யாவையும்; நூல்விடாது.
4. இறைவனேவலால்;- இயைவகாணையா, தாணையா, இயைவதாமையா, இயைவதாணையால். (105)

பெற்றோரின் மேன்மையை விளக்குதல்

1175. பரவு கேள்வியும் பழுதின் ஞானமும்
விரவு சீலமும் வினையின் மேன்மையும்
உரவி லோய்தொழற் குரிய தேவரும்
குரவ ரேயெனப் பெரிது கோடியால்.

உரம் வில்லோய் - வலிய வில்லை உடையவனே, பரவு கேள்வியும் - புகழப்படுகிற நூற் கேள்வியறிவும், பழுது இல் ஞானமும் - குற்றம் இல்லாத ஞானமும், விரவு சீலமும் - (யாவர்க்கும்) பொருந்திய நல்லொழுக்கமும், வினையின் மேன்மையும் - செயல்களின் உயர்வும் (செயல் தூய்மையும்), தொழற்கு உரிய தேவரும் - வணங்குதற்குரிய கடவுளரும், குரவரே என - பெரியோர்களே என்று, பெரிது கோடி - மிகவும் (மனத்துட்) கொள்வாயாக. ஆல் : அசை.

கேள்வி முதலிய எல்லாம் குரவரே என்றது, அவை எல்லாம் குரவரால் உண்டாவன என்றபடி; அதனால் அவர்கள் தேவரைப் போலத் தொழுதற்கு உரியவர் என்பான், 'தேவரும் குரவரே' என்றான்; "அரச னுவாத்தியான் தாய்தந்தை தம்முன், நிகரில் குரவ ரிவரிவரைத், தேவரைப் போலத் தொழுதெழுக" (ஆசாரக்கோவை). இவ்வைம் பெருங் குரவருள், 'அரசன், தந்தை' என்ற இருவரு மாகின்றான் தசதரன்.

ஒரு பிரதியில் இப்பாடல் இல்லை.

(பி - ம்.) 1. உலகின் ஞானமும், பகருஞானமும்.
2. வினையுமேன்மையும், வினையுமெய்மையும், வினையுமேன்மையும், வினைவு மேன்மையும். (106)

1176. அந்த நற்பெருங் குரவ ராரெனச்
சிந்தை தேர்வுறத் தெரிய நோக்கினால்
தந்தை தாயரென் றிவர்க ளாமலால்
எந்தை கூறவே றெவரு மில்லையால்.

அந்த நல் பெரும் குரவர் ஆர் என - அந்த நல்ல பெருமையை யுடைய பெரியோர் யாவரென்று, சிந்தை தேர்வு உற - மனம் தெளிவுற, தெரிய நோக்கினால் - நன்கு எண்ணிப் பார்த்தால், எந்தை - என் அப்பனே, தந்தை தாயர் என்ற இவர்கள் தாம் அல்லால் - தந்தையும் தாயுமாகிய இவர்களையன்றி, கூற - (சிறப்பாக எடுத்துச்) சொல்வதற்கு, வேறு எவரும் இல்லை —. ஆல் : அசை.

'எல்லாம் குரவரே' என முன் கூறிய இராமபிரான், அக் குரவருள் முதற்கண் வைத்து எண்ணத்தக்கவர் தந்தை தாயரே என்கின்றான். அந்த என்றது, முன்பாடலிற் கூறியதனைச் சுட்டியது. என்றிவர்கள் : தொகுத்தல் விகாரம். பரதனை எந்தை என்றது அன்பினால்; எந்தை : அண்மை விளி.

(பி - ம்.) 1. அந்தமில்பெருங். குரவராரெனிற்; குரவர் யாரெனிற்.
2. தேர்வுறத்; நோக்கினர், எண்ணினால்.
3. அவர்கடாமலால்.
4. கூறவேறையம், கூறவேதெய்வம், கூறவேறியைவது, கூறில் வேறெவரும்; இல்லையே. (107)

1177. தாய்வ ரங்கொளத் தந்தை யேவலால்
மேய நங்குலத் தரும மேவினேன்
நீவ ரங்கொளத் தீர்த னீர்மையோ
ஆய்வ ரும்புலத் தறிவு மேவினய்.

ஆய்வு அரும் புலத்து அறிவு மேவினய் - ஆராய்தற்கரிய நூல்களில் அறிவு மிக்கவனே, தாய் வரம் கொள்ள தாய் வரமாகப் பெற்றுக்கொள்ள, தந்தை ஏவலால் - (அதன்படி) தந்தை கட்டளை இட்டதனுல், மேய - (நமக்குப்) பொருந்திய, நம் குலம் தருமம் மேவினேன் - நம் குல தருமத்தை விரும்பி மேற்கொண்டேன்; நீ வரம் கொள - நீ (என்பால்) வரம்போல வேண்டுதலால், தீர்தல் நீர்மையோ - (நான் மேற்கொண்டதனை) விடுதல் முறையாகுமோ? (ஆகாது).

பரதன் வேத சாத்திரங்களின் நீதிகளெல்லாம் அறிந்தவன் என்பான், 'ஆய்வரும் புலத்தறிவு மேவினய்' என்று விளித்து, 'அத்தகைய நீ, நான் மேற்கொண்ட தருமத்தைக் கைவிடுமாறு கூறுவது தகாது' என்கின்ருன். புலம் - அறிவு நூல்கள்; "புலந் தொகுத் தோனே" (தொல். பாயிரம்). "மறையவை யியம்பற் பாலன், பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே" என (1113) முன்னர் இலக்குவனுக்குக் கூறியதும் இங்கு நோக்கத்தகும்.

(பி - ம்.) 1. தாதையேவலால்,
2. மேவருங்குலத், மேவவெங்குலத்; தருமமெய்தினேன்.
3. தவிர்தல், தாழ்தல், தேர்தல்; நீர்மையே, நீதியோ, நேர்மையோ.
4. மேயினுய். (108)

புதல்வர் பெற்ரோர்க்குச் செய்யும் உதவியைக் கூறல்

1178. தனைய ராயினுர் தந்தை தாயரை
வினையி னல்லதோ ரிசையை வேய்தலோ
நினைத லோவிடா நெடிய வன்பழி
புனைத லோவையா புதல்வ ராதருன்.

ஐயா - ஐயனே, தனையர் ஆயினுர் - (பெற்ரோர்க்குப்) புதல்வராகத் தோன்றியவர்கள், புதல்வர் ஆதல் - புதல்வர் என்ற பெயருக்கு உரியவராதல், வினையின் - (தம்) செயல்களால், தந்தை தாயரை - தந்தையையும் தாயையும், நல்லது ஓர் இசையை வேய்தலோ - சிறந்ததொரு புகழைத் தரிக்கச் செய்தலோ, (அன்றி) நினைதல் ஓவிடா - நினைத்தல் ஒயாத (என்றும் மறையாத), நெடிய வன் பழி புனைதலோ - நெடிய வலிய பழியைச் சூடச் செய்தலோ? (நீயே நினைத்துப் பார்).

தான் : அசை.

தான் தந்தை சொல்லைத் தட்டியிருந்தால், தந்தைக்குளதாகும் பழி இன்னதென்பதை அடுத்துக் கூறுகின்ருன்.

(பி - ம்.) 1. தாதை; தாயர்தம்.
2. வினையநல்லதோல், வினையினல்லதோல்; இசைமைமேவலோ, இசையவெய்தலோ, இசையை யெய்தலோ, மேவவைத்தலோ, விசையவெய்தவே, விரும்பிமேவலோ, விளம்பிமேவலோ.
3. வினையவோவிடா, வினையலாவிடா, வினைதலோவிட, வினையலோ விடா.
4. புனைவதோவையந் புதல்வராதலே, புதல்வராயினர். (109)

தசரதன் நரகமுறத் தான் ஆளுதல் தகாது என்றல்

1179. இம்மை பொய்யுரைத் திவறி யெந்தையார்
அம்மை வெம்மைசேர் நரக மாளயான்
கொம்மை நன்னிதிக் குவையில் வைகிவாழ்
செம்மை சேர்நிலத் தரசு செய்வதோ.

இவறி - (நான்) இராச்சிய ஆசை கொள்வதனால், எந்தையார் - என் தந்தையார், இம்மை பொய் உரைத்து - இம்மையில் (கைகேயிக் குக் கொடுத்த வரத்தை நிறைவேற்றாது) பொய் சொன்னவராகி, அம்மை - மறுமையில், வெம்மை சேர் நரகம் ஆள - கொடுமையை யுடைய நரகத்தை அடைய, யான்—, கொம்மை - திரண்ட, நல்நிதி குவையில் வைகி வாழ் - நல்ல செல்வக் குவியலில் தங்கி வாழ்வதற் குரிய, செம்மை சேர் — இன்பம் அமைந்த, நிலத்து அரசு செய்வதோ - நாடாட்சியைச் செய்வதோ? (அது முறையாகுமோ?)

புதல்வர் கடமை முந்திய பாடலிற் கூறப்பெற்றது. 'நான் தந்தை சொல்லை மீறியிருந்தால், அவர் பொய்த்த பாவத்துக்குள்ளாகி, அதனால் இம்மையில் பழியையும், மறுமையில் நரகத்தையும் அடையக் காரணனாவேன். அது தகுமா? அது புதல்வன் கடமையாகுமா?' என்கின்றான். கைகேயி வரம் பெற்றவுடன், 'பரதன் நாடாள, நீ பதினான்காண்டுகள் காடாளவேண்டுமென்பது மன்னவன் கட்டளை' என்று அவள் இராமபிரானுக்குக் கூறியபோது, "மன்னவன் பணி யன்றாகில் நும்பணி மறுப்பனோ ..கானம் இன்றே போகின்றேன், விடையும் கொண்டேன்" (295)என்று அவளுக்கு இசைவு கூறினவன், அதன்படி நடவாவிடின் இராமனும் பொய்யுரைத்தவனாதலால், 'பொய்யுரைத்து' என்பதனை, அவனுக்கு ஏற்றி உரைத்தலுமாம். இவறல் - உலோபித்தல். இவறி - இவற.

(பி - ம்.) 1. இம்மைமெய்யுரை தவறி.
2. வெய்யசேர்; ஆளநான், ஆள்கநான், ஆள்வதோ.
3. கொம்மை வெம்மூலக் குவையின்,நன்னிதிக்குவை யின்; வைகவாழ்.
4. செம்மைநேர்நிலத்து, செம்ஜமசேர் நலத்து, செம்மை சேர்நிலா; செய்வெனோ, செய்வனோ. (110)

'அரசு நின்னதே நீயே ஆள்க' என்றல்

1180. வரனி லுந்தைசொன் மரபி னுலுடைத்
தரணி நின்னதென் றியைந்த தன்மையால்
உரனி னீபிறந் துரிமை யாதலால்
அரசு நின்னதே யாள்க வென்னவே.

வரன் நில் - (கைகேயிக்குக் கொடுத்த) வரத்தில் ஊன்றி நின்ற, உந்தை சொல் மரபினுல் - உன் தந்தை சொல்லிய முறைப்படி, உடை(ய) தரணி - அவனுடையதான இராச்சியம், நின்னது என்று - உன்னுடையதேயென்று, இயைந்த தன்மையால் - பொருந்திய தன்மையினுலும், நீ உரனில் பிறந்து - நீ (அரசாளுதற்கேற்ற) வலிமை யோடு பிறந்து, உரிமை ஆதலால் - உரிமை பெற்றுள்ளதனுலும், அரசு நின்னதே - இராச்சியம் உன்னுடையதேயாகும்; ஆள்க - (அதனை நீ மறுக்காது) ஆள்வாயாக, என்னவே - என்று இராமபிரான் கூறி முடிக்கவே.

இது மேல் இரண்டு கவிகளோடு தொடர்ந்து முடியும். 1174 முதல் இதுகாறும் ஏழு கவிகளால் இராமபிரான், தான் கொண்ட விரதம் தவறுதல் கூடாதென்பதையும், அரசாளுதற்கு உரியவன் பரதனே யென்பதையும் காரணங் காட்டிக் கூறினமை பெறப்பட்டது. 'நீ பிறந்துரிமையாதலால்' என்றது, கைகேயியைத் தயரதன் மணந்தபோது, அவளுக்குப் பிறக்கும் மகனுக்கு அரசு தருவதாக அவன் கேகயராசனுக்கு வாக்களித்தானென்று வான்மீகம் 107-ஆம் சர்க்கத்தில் காணப்படும் செய்தியை உட்கொண்டு கூறியதென்பாரும் உளர்.

இப் பாடல் மூன்று பிரதிகளில் கீழ்வருமாறு காண்கின்றது:

"வானி னுந்தைசொன் மரபி னுலுடைத்
தான நின்னதென் றியைந்த தன்மையால்
ஊனி னிற்பிறந் துரிமை யாகையின்
யான தாள்கிலே னெனவ வன்சொல்வான்."

(பி - ம்.) 1. வரனினுந்தை, வரனுளுந்தை, வரத்தினுலுடைத்.
2. தரணி தன்னதென்று; இசைந்த தன்மையான்.
3. உரனினிற்பிறந்து, உரனினிற்பின் வந்து, உரனினேன் பிறந்து, உரிமையாகலால், ஆகையால், உண்மையின்.
4. ஆள்தியைய நீ. (111)

பரதன் வேண்டுதல்

1181. முன்னர் வந்துதித் துலக மூன்றிலும்
நின்னை யொப்பிலா நீபி றந்தபார்
என்ன தாகின்யா னின்று தந்தனென்
மன்ன போந்துநீ மகுடஞ் சூடென்ன:

முன்னர் வந்து உதித்து - (எனக்கு) முன்னே (மூத்தவனாக) வந்து பிறந்து, உலகம் மூன்றிலும் - மூவுலகங்களிலும், நின்னை ஒப்பு இலா நீ - உன்னையொப்பார் ஒருவரும் இல்லாது விளங்கும் நீ, பிறந்த பார் - பிறந்ததனால் பெற்ற இராச்சியம், என்னது ஆகின் - (நீ சொல்லு கிறபடி) என்னுடையதானால், இன்று தந்தனென் - இப்போது (நான் அதனை உனக்குக்) கொடுத்துவிட்டேன்; மன்ன - அரசே, நீ போந்து மகுடம் சூடு - நீ (நாட்டுக்கு) வந்து முடி சூடிக்கொள்வாயாக, எனா - என்று சொல்லி.

இது அடுத்த பாட்டின் இறுதியில் வரும் வேண்டினான் என்பதனோடு முடியும். இராமபிரான் எவ்வளவு மறுத்தாலும், உண்மையில் அரசாளும் உரிமை அவனுடையதே என்பது பரத னுடைய தீர்ந்த துணிபாகலின், 'மன்ன, நீ போந்து மகுடம் சூடு' என்கின்றான்.

(பி - ம்). 1. மூன்றினும், மூன்றினில்,
2. நீபிடித்த.
3. என்னதாக்கினுலின்று. ஆக்கினுனின்று, என்னதாககானின்று, ஆகவியானின்று, ஆகில்கானின்று, என்னதாகலின்றயானிற்கு, என்னதாகியானுனக்கின்று; ஈந்தனன்.
4. போந்தினி, போதிநீ, போகுதி; சூடென்றான். (112)

1182. மலங்கி வையகம் வருந்தி வைகநீ
உலங்கொ டோளுனக் குறுவ செய்தியோ
கலங்கு ருவணங் காத்தி போந்தெனப்
பொலங்கு லாவுதாள் பூண்டு வேண்டினான்.

வையகம் - உலகம் முழுதும், மலங்கி வருந்தி வைக - மனங் கலங்கி வருத்தமுற்றிருக்க, நீ—, உலம் கொள் தோள் உனக்கு உறுவ - திரண்ட கல்லின் தன்மையைக் கொண்ட தோள்களையுடைய உனக்குப் பொருத்தமானவற்றை, செய்தியோ - செய்துகொண்டிருப் பாயோ? (அவ்வாறிருத்தல் கூடாது); கலங்கு உரு வண்ணம் - (உலகம்) கலக்கம் அடையாதவாறு, போந்து — (நாட்டுக்குத் திரும்பி) வந்து, காத்தி - பாதுகாப்பாயாக, எனா - என்று, பொலம் குலாவு தாள் பூண்டு - (இராமபிரானுடைய) அழகு விளங்கும் திருவடிகளைப் பற்றிக்கொண்டு, வேண்டினான் —.

'உன் சொற்படி நாடு என்னுடையதானாலும், நான் அதனை உனக்குத் தருகின்றேன்; நீதான் வந்து முடிசூடவேண்டும்' என்றவன், மீண்டும் அதனை வற்புறுத்தி, 'நாடு அரசனின்றித் தவித்தலால், நீ வந்து முடிசூடி நாட்டைக் காப்பது நின் கடமையே' என்கின்றான். 'உனக்குறுவ செய்தியே' என்றது, உனக்குப் பொருத்தமாகத் தோன்றுமவற்றை உலகம் அவ்வாறு கொள்

ளாது என்ற குறிப்பையுடையது. பொலம் குலாவு - பொன் போல விளங்குகின்ற எனலுமாம். கலங்கு! முதனிலைத் தொழிற் பெயர். "நீயொழி காலை நின்னு டெல்லாம், தாயொழி குழவி போலக் கூஉம்" (மணி - 25 : 110 -11) என்பதை இங்கே ஒப்பு நோக்குக.

(பி - ம்,) 1. வருந்த வைகனீ, வைகினீ, ஐயநீ.
2. உலங்கு தோளுனக்கு, இலங்குதோளுனக்கு; ரு. நலங்கொணற்ற வஞ் செயநயப்பதோ.
3. கலங்குருவகை; பேர்ந்தெனப், போதெனப்.
4. பொலன்குலாவுதாள். (113)

இராமபிரான் மறுத்துரைத்தல்

1183. பசைந்த சிந்தைநீ பரிவில் வையமென்
வசஞ்செய் தாலது முறைமை யோவசைக்
கசைந்த வெந்தையா ரருள வன்றுநான்
இசைந்த வாண்டெலா மின்றொ டேறுமோ.

(இராமன் பரதனை நோக்கி), பசைந்த சிந்தை நீ - (என்பால்) அன்புகொண்ட மனமுடைய நீ, பரிவில் - அந்த அன்பு காரணமாக, வையம் என் வசம் செய்தால் - நாட்டை என் வசமாக்கினுல், அது முறைமையோ - அது நியாயமாகுமோ? வசைக்கு அசைந்த - பழிக்கு அஞ்சிய, எந்தையார் அருள - என் தந்தையார் கட்டளையிட, அன்று நான் இசைந்த ஆண்டு எல்லாம் - அன்று நான் (வனத்தில் இருப்ப தாக) ஒப்புக்கொண்ட ஆண்டுகளெல்லாம், இன்றொடு ஏறுமோ - இன்றோடு முடிந்துவிடுமோ?

'உன் விருப்பத்தின்படி, இன்று நான் நாட்டுக்குத் திரும்பினுல், நான் அன்று ஒப்புக்கொண்ட வனவாச காலமான பதினுன்காண்டு களும் இன்றோடு முடிந்துவிடுமோ?' என்றதனுல், அக்கால முடிவுவரை நான் மீளேன் என்பதாயிற்று.

(பி - ம்.) 1. பசந்த; பரிவின் வம்மென;
2. முறைமையே.
3. அசந்த; அருளவென்று, அருளவந்து, அருளாண்டு. அருளவேண்டி.
4. இசைந்த நாளெலாம்; இன்றொடானதோ, இன்றொடொன்றுமோ, இன்று தேயுமோ. (114)

1184. வாய்மை யென்னுமீ தன்றி வையகம்
தூய்மை வேறுமுண் டென்று சொல்லுமோ
தீமை தானதிற் றீர்த லன்றியே
ஆய்மெய் யாகவே றறைய லாவதே.

வாய்மை என்னும் ஈது அன்றி - சத்தியமென்று சொல்லப்படும் இதனையன்றி, தூய்மை வேறும் உண்டு என்று - தூய்மை

புடையது வேறுென்றும் உண்டு என்று, வையகம் சொல்லுமோ - உயர்ந்தோர் சொல்லுவார்களோ? அதில் தீர்தல் தீமைதான் - அவ்வாய்மையினின்றுந் தவறுதல் தீமையே யாகும்; அன்றி - அவ்வாறன்றி, வேறு அறையல் ஆவதே - வேறு வகையாகச் சொல்லலாகுமோ? (ஆகாது;) மெய்யாக ஆய் - (இதனை) உண்மையாக ஆராய்ந்து பார்.

'வாய்மை காத்தலினும் சிறந்தது வேறில்லையென்பது உனக்குத் தெரியாததன்று; அதனை நீ நன்கு சிந்தித்துப் பார்' என்கின்றுன். "யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும், வாய்மையி னல்ல பிற" (300), "அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும்" (298) என்ற குறட்பாக்களின் கருத்து இப் பாடலில் அமைந்துள்ளமை காண்க.

(பி-ம்.) 1. தூய்மையென்னு மொன்றுண்மை, அன்றி வேறுென்று, வேறு மோருண்மை.
3. தீர்தலின்றியே, தீர்வதன்றியே, தெரியலன்றியே, தீதிலின்றியே.
4. ஆய்மெய்யாகவென்று, மெய்யாகவொன்று, மெய்யாதலென்று; அறையலாவதோ, எண்ணலாவதே, எண்ணம் யாவதோ, மு. ஆமெய்யாகவே றெண்ணலாகுமோ. (115)

'என் ஆணையால் நீ ஆள்க' என்று இராமன் கூறுதல்

1185. எந்தை யேவவாண் டேழொ டேழெனு
வந்த காலநான் வனத்துள் வைகநீ
தந்த பாரகந் தன்னை மெய்ம்மையால்
அந்த நாளெலா மாளென் னுணையால்.

எந்தை ஏவ - என் தந்தை கட்டளையிட, ஏழொடு ஏழ் எனு வந்த ஆண்டு காலம் - ஏழோடு ஏழு (பதினுன்கு) என்று வந்த வருடங்கள் முழுதும், நான் வனத்துள் வைக - நான் காட்டில் வாழ, நீ—, அந்த நாள் எலாம் - அந்தக் காலம் முழுதும், தந்த பார் அகம் தன்னை - (தந்தை உனக்குக்) கொடுத்த நாட்டை, என் ஆணையால் - என் கட்டளையின்படி, மெய்மையால் ஆள் - உண்மையாக ஆளக் கடவாய்.

'தந்தையார், பதினுன்காண்டுகள் காட்டில் வாழும்படி எனக்குக் கட்டளை தந்து, அந்தக் காலம்வரை நாட்டை ஆளும்படி அதனை உனக்குத் தந்தார்; எனக்குத் தந்த கட்டளையை நான் நிறைவேற்றுவதுபோல, உனக்குத் தந்த நாடாட்சியை நீ மேற்கொள்ளுதலே முறையாகும்; அதனை நீயாக வேண்டாவிடினும், இப்போது என் கட்டளையால் அதனை மேற்கொள்' என்றுன் இராமபிரான். தந்தை என்பது வருவித்து உரைக்கப்பெற்றது. நீ தந்த பாரகம் எனக் கூட்டி, நீ எனக்குக் கொடுத்த நாடு என்று உரைத்தலுமாம்.

(பி - ம்) 1. ஏவபாண்டு, ஏயவாண்டு; ஏமொடேமென்று.
2. வந்தகாலநாள்; வனத்து; வைகநான்.
3. தாங்கமெய்ம்மையால், மேன்மையால், தாங்கல் மெய்ம்மையால்; தாங்குமெய்ம்மையால்.
4. தாங்கென்னுணையால். (116)

(அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்)

1186. மன்னவ னிருக்க வேயு மணியணி மகுடஞ் சூடு
கென்னயா னியைந்த தன்னு னேயது மறுக்க வஞ்சி
அன்னது நினைந்து நீயென் னுணையை மறுக்க லாமோ
சொன்னது செய்தி யைய துயருழந் தயர லென்றான்.

ஐய - என் ஐயனே, மன்னவன் இருக்கவேயும் - சக்கரவர்த்தி (உயிரோடு) இருக்கும்போதே, மணி அணி மகுடம் சூடுக என்ன - மணிகளால் அழகு செய்யப்பெற்ற முடியை நீ தரிக்க என்று (என்னைச்) சொல்ல, யான் இயைந்தது - நான் அதற்கு உடன்பட்டது, அன்னான் ஏயது மறுக்க அஞ்சி - அவர் ஏவியதை மறுத்தற்கு அஞ்சியே யாகும்; (அங்ஙனமாக), நீ என் ஆணையை மறுக்கல் ஆமோ - நீ என் கட்டளையை மறுப்பது தகுதியாகுமோ? (ஆகாது); அன்னது நினைந்து - அதனை நன்கு சிந்தித்து, சொன்னது செய்தி - நான் சொன்னதைச் செய்; துயர் உழந்து அயரேல் - துயரால் வருந்திச் சோராதே! என்றான் - என்று கூறி முடித்தான் (இராமபிரான்).

'தந்தை முதலில் என்னை முடி சூடுக என்றபோது, அவ்வாணையை மறுத்தற்கஞ்சி நான் அதற்கிசைந்தேனேயன்றி, அரசாளும் ஆசையா லன்று. அதுபோல, நீ தந்தையாகக் கருதும் என் கட்டளையை நீ மீறுதலும் தகாது; ஆதலால், உடனே திரும்பிச் சென்று நாடு காத்தலை மேற்கொள்' என்று உறுதியாகக் கூறினன் இராமபிரான். பரதன் இராமபிரானைத் தந்தையாகக் கருதினமை: 853, 1172-பார்க்க. தந்தை முடி சூடுக என்றதற்கு, இராமபிரான் இசைந்தமை: 70, பார்க்க.

(பி - ம்.) 1. இருக்கவே நீ, இருக்கும்போது; மகுட நீ சூ(டு).
2. யானிசைந்தது, நானியைந்து, அன்னானேவிய; மு. என்னயானிசைந் தேன் பின்னுமது மறுத்தவன் சொல்லேவேல்,
3. அன்னது நினைந்தே, நினைத்தி, தெரிந்தாய்.
4. செய்தியையா, புரிதியைய; துயருமன்று அயரேல். (117)

வசிட்டன் கூறத் தொடங்கல்

1187. ஒள்ளியோ னினைய வெல்லா முரைத்தலு முரைக்கலுற்ற
பள்ளநீர் வெள்ள மன்ன பரதனை விலக்கிப் பண்டு
தெள்ளிய குலத்தோர் செய்கை சிக்கறச் சிந்தைநோக்கி
வள்ளியோய் கேட்டி யென்னு வசிட்டமா முனிவன் கூறும்.

ஒள்ளியோன் - ஒளியையுடைய இராமபிரான், இனைய எல்லாம் உரைத்தலும் - இத்தகைய நியாயங்களையெல்லாம் எடுத்துச் சொன்ன அளவில், உரைக்கல் உற்ற - (அவனுக்கு மறுமொழி) கூறத் தொடங்கின, பள்ளம் நீர் வெள்ளம் அன்ன - பள்ளத்திற் பாயும் நீர்ப் பெருக்கைப் போன்ற (விரைதலையுடைய), பரதனை—, வசிட்ட மாமுனிவன் விலக்கி - பெருமை மிக்க வசிட்ட முனிவன் தடுத்து, (இராமபிரானை நோக்கி), வள்ளியோய் - வண்மைக் குணம் உடைய வனே, பண்டு - முன்பு இருந்த, தெள்ளிய குலத்தோர் செய்கை - (எவற்றிலும்) தெளிவுடைய (உன்) குல முன்னோரின் செயல்களை, சிக்கு அற - சிக்கலின்றி, சிந்தை நோக்கி - உன் மனத்துட்கொண்டு, கேட்டி என்னு - (நான் சொல்வதைக்) கேட்பாயாக என்று, கூறும் - சொல்லலானான்.

தன் கருத்து நிறைவேருதது கண்ட பரதன், இராமபிரானுக்கு மேலும் ஏதோ கூற விரைந்தமையை வசிட்ட முனிவன் பார்த்து, அவனை விலக்கி, தன் சொல்லுக்கு இராமன் ஒருகால் இணங்குதல் கூடுமென்ற நோக்கத்தோடு அவனுக்குச் சொல்லலானான். முனிவன் கூறுவன மேல் ஆறு பாடல்களில் வரும். தன் கருத்துக்கு இராமபிரானை இணங்கச் செய்தலில் பரதனுக்கு இருந்த பேராவல் கருதி, 'பள்ள நீர் வெள்ளமன்ன பரதன்' என்றார். இராமபிரானுக்கு வடிவு, அறிவு, குணம், புகழ் ஆகிய எல்லாவற்றாலும் ஒளி இயைவது. வள்ளியோய், சிந்தை நோக்கிக் கேட்டி என இயைக்க; முனிவன் சிந்தையில் நோக்கி எனலுமாம்.

(பா - ம்.) 1. உரைக்கலும், உரைக்கலுற்றே, இசைக்கலுற்ற, இசையலுற்ற.
2. வேலையன்ன.
3. தெள்ளியகுலத்துச், தெள்ளியகலத்தோர்; சிக்கெனச்சிந்தை; சிக்குறத்தெருட்டிச் சிந்தை.
4. கேட்டி என்று சொன்னன், சொல்வான். (118)

பூமியின் தோற்றம்

(கலிவிருத்தம்)

1188. கிளரகன் புனலினின் றரியொர் கேழலாய்
இளையெனுந் திருவினை யேந்தி னனரோ
உளைவரும் பெருமையோ ரெயிற்றி னுட்புரை
வளரிளம் பிறையிடை மறுவிற் றோன்றவே.

அரி - திருமால், ஓர் கேழல் ஆய் - ஒப்பற்ற ஆதிவராக மூர்த்தி யாகி, உளைவு அரும் பெருமை - (தாங்குதலில்) வருத்தமில்லாத பெருமையுடைய, ஓர் எயிற்றின் உள்புரை - (தனது) ஒரு கோரப் பல்லின் (வளைவான) உள்ளிடத்தில், வளர் இளம்பிறை இடை மறுவில் தோன்ற - வளரும் பிறைச் சந்திரனிடத்துள்ள (சிறு) களங்கம்போலக்

காணும்படி, இளை எனும் திருவினை - இளை என்னும் பெயருடைய பூமி தேவியை, கிளர் அகன் புனலில் நின்று - பொங்குகிற பரந்த கடலினின்றும், ஏந்தினான் - (எடுத்துத்) தாங்கி நின்றான்.

அரோ: அசை.

இப்பொழுது நடக்கிற சுவேதவராக கல்பத்துக்கு முந்தியதான பாத்ம கல்பத்தின் முடிவில், எங்கும் பரந்த பிரளய வெள்ளத்தினின்று பூமிதேவியைத் திருமால் வராக மூர்த்தியாகித் தனதொரு கோட்டால் எடுத்து எளிதில் தாங்கி வெளிக் கொணர்ந்தானென்ற புராணவரலாறு இதிற் குறிக்கப்பெற்றது. வான்மீகம், 110-ஆம் சருக்கத்தும் காண்க. "நிறக்குஞ் செழுஞ்சுடர்க் கோடுமிப் பாரு நிசாமுகத்துச், சிறக்கும் பிறையுங் களங்கமும் போலும்" (திருவரங்கத்துமாலை, 128). உளைவு - வருத்தம்; சிரமம்.

ஒரு பிரதியில் இச் செய்யுள்,

"கிளரகன் புனலினவ் வரியெயோர் கேழலாய்
இளையெனுந் திருவினை டிசைந்தங் கீறிலா
வளரிளம் பிறையென வயங்கெ யிற்றினால்
உளபெரும் புவனங்க ளுதவி யும்பரான்"

என்று காணப்படுகின்றது.

(பி - ம்.) 1. புனலினின்று; புனலிலினீண்டு; கேழலால்.
2. ஏந்தியெய்தினான்.
3. உளையரும், உளருறும்; உட்பெறாறை, உட்புரை.
4. வளரிளம் பிடியிடை. (119)

திருமால் பிரளயத்தில் யோக நித்திரை கொண்டது

1189. ஆதிய வமைதியி னிறுதி யைப்பெரும்
பூதமும் வெளியொழித் தெவையும் புக்கபின்
நாதனவ் வகன்புன னல்கி நண்ணரும்
சோதியாந் தன்மையிற் றுயிறன் மேயினான்.

ஆதிய அமைதியின் இறுதி - முன்பு நடந்ததான அந்தக் கல்பத்தின் முடிவில், ஐம் பெரும் பூதமும் - பஞ்சமகா பூதங்களும், வெளி ஒழித்து - வெளிப்படுதலின்றி, எவையும் - எல்லாத் தத்துவங்களும், புக்கபின் - (இறைவனை தன் வடிவினுள்ளே) புகுந்து அடங்கியபின், (இலயமான பிறகு), நாதன் - இறைவனான திருமால், அவ் அகன் புனல் நல்கி - அந்தப் பரந்த நீரைப் படைத்து, நண்ண அரும் சோதி ஆம் தன்மையின் - (பிறர்க்குப்) பொருந்துதற்கரிய ஒளிவடிவான தன்மையோடு, துயிறல் மேயினான் - (அந்நீரில்) அறிதுயில் கொள்ளுதலைப் பொருந்தினான்.

ஐம்பெரும் பூதமாகிற தத்துவங்கள் முதலில் தோன்றும்போது, ஆகாயத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்கினியும், அக்கினியிலிருந்து அப்புவும், அப்புவிலிருந்து பிருதிவியும் முறையே தோன்றுமெனவும், ஒடுங்கும்போது அவை முறையே பிருதிவியிலிருந்து ஒன்றினுளொன்று ஒடுங்க, இறுதியில் எல்லாம் பரம புருஷனுன நாராயணனுள் அடங்குமெனவும், அப்போது நாராயணன் தன்னுள் அடங்கிய எல்லாவற்ருேடும் சிறு குழவியாய்த் தான் படைத்துக் கொண்ட பிரளய வெள்ளத்தில் ஓர் ஆலிலையின்மேல் அறிதுயிலமர்வான் எனவும் கூறுவர்.

(பி - ம்.) 1. ஆதிபவமைதியின், ஆதியினமைதியின்.
2. வெளியொழிந்து, வெளியொளித்து, அவையொழிக்து.
3. காதனிவ்; கண்ணி.
4. சோதியான்றன்மையின், சோதியாந்தவையின். (120)

நான்முகனைப் படைத்தது

1190. ஏற்றவித் தன்மையி னமரர்க் கின்னமு
தூற்றுமக் கடவுட னுந்தி யுந்திய
நூற்றிதழ்க் கமலத்தி னெய்தின் யாவையும்
தோற்றுவித் துதவிட முதல்வன் ருேன்றினுன்.

ஏற்றஇ தன்மையின் - (அறிதுயிலை) ஏற்றுக்கொண்ட இத்தன்மையினையுடைய, அமரர்க்கு இன் அமுது ஊற்றும் அ கடவுள் தன் - தேவர்களுக்கு இனிய அமிழ்தத்தை (மோகினியாகி) வார்த்த அந்த நாராயணனுடைய, உந்தி உந்திய - கொப்பூழானது தோற்றுவித்த, நூறு இதழ் கமலத்தின் - நூறு இதழ்களையுடைய தாமரை மலரில், யாவையும் - (அண்ட சராசரங்கள்) எல்லாவற்றையும், நொய்தின் தோற்றுவித்து உதவிட - எளிதில் படைத்து உதவும் பொருட்டு, முதல்வன் தோன்றினுன் - (படைப்புக்கு) முதல்வனுன பிரமன் தோன்றினுன்.

நாராயணனது சங்கற்பத்தால் இவையெல்லாம் நிகழ்கின்றன என்றவாறு. நூற்றிதழ்க் கமலம்: ''நூற்றிதழ்த் தாமரைப்பூ''. (ஐங். 20); ''சேற்றுவளர் தாமரை பயந்த வொண்கேழ், நூற்றித ழலரி னிரைகண் டன்ன'' (புறநா. 27 : 1 - 2); ''தன்னிகர் பரிதி யாலுஞ் சதவித ழாலுஞ் செம்பொற், கன்னிகை யாலுஞ் சோதி கலந்தசெங் கமலம் போன்ருள்'' (வி. பா. சம்பவச். 81).

(பி - ம்.) 1. தன்மையால், தன்மையான், தன்மையன்.
2. ஊற்றுடைக்; கடல்வணன், கழலவன்.
4. தோற்றுவித்துதவிய; முனிவன். (121)

இராமனுடைய முன்னோர் எவரும் குலமுறை தவிரவில்லை எனல்

1191. அன்றவ னுலகினை யளிக்க வாகிய
துன்றனிக் குலமுத லுள்ள வேந்தர்கள்
இன்றள வினுமுறை யிகந்து ளாரிலை
ஒன்றுள துரையின முணரக் கேட்டியால்.

அன்று - அக்காலத்தில், அவன் - அப்பிரமன், உலகினை அளிக்க- உலகத்தைப் படைக்கத் தொடங்க, ஆகியது - (அப்போதே) உண்டானது, உன் தனி குலம் - உன்னுடையதான ஒப்பற்ற (சூரிய) குலமாகும்; முதல் உள்ள வேந்தர்கள் - (இக்குலத்தில்) அது முதலாகத் தோன்றியுள்ள அரசர்களுள், முறை இகந்து உள்ளார் - (மூத்தவனே முடிசூடுதல் என்ற) முறையைக் கடந்தவர்கள், இன்று அளவினும் இலை - இற்றைநாள்வரையில் (ஒருவரும்) இல்லை; இன்னம் உரை ஒன்று உளது - இன்னமும் (நான்) சொல்ல வேண்டியதொன்று உண்டு; உணர கேட்டி - மனத்திற் பொருந்தக் கேட்பாயாக. ஆல் : அசை.

சூரியகுலத்தின் தோற்றத்தை, "ஆதிமாலமல னுபிகமலத் தய னுதித் தயன்மரீசியெனு மண்ணலை யளித்த பரிசுங், காதல் கூர்தரு மரீசிமக னுகிவளருங்காசி பன்கதி ரருக்கனை யளித்த பரிசும்" (தா. 186) எனக் கலிங்கத்துப்பரணி கூறுதலும் காண்க.

(பி - ம்.) 1. ஆக்கிய, ஆக்கியது.
2. உன்றனிக் குலத்தினில்,
3. இன்றளவினமுறை; இகழ்ந்துள்ளோர்.
4. ஒன்றுளதின்னமும், ஒன்றுளதினமுறை; உணர்த்தக், உரைக்கக், உரைப்பக். (122)

ஆசாரியனே குரவரில் சிறந்தோன் என்றல்

1192. இதவிய லியற்றிய குரவர் யாரினும்
மதவியல் களிற்றினுய் மறுவில் விஞ்சைகள்
பதவிய விருமையும் பயக்கப் பண்பினுல்
உதவிய வொருவனே யுயரு மென்பரால்.

மத இயல் களிற்றினுய் - வலிமைமிக்க ஆண் யானை போன்ற இராமா, இதம் இயல் இயற்றிய - நன்மையான செயல்களைச் செய்கிற, குரவர் யாரினும் - பெரியோரனைவருள்ளும், பதவிய இருமையும் பயக்க - பதவிகளான (இம்மை மறுமை யென்ற) இரண்டின் நற்பயன்களையும் தருமாறு, மறு இல் - குற்றமில்லாத, விஞ்சைகள் உதவிய ஒருவனே - வித்தைகளை அளித்த (ஆசாரியனுகிற) ஒருவனே, உயரும் என்பர் - (மற்றவரினும்) உயர்ந்தவன் என்பர் பெரியோர். ஆல் : அசை.

குரவர் - ஐம்பெருங்குரவர்; 1175 - பார்க்க. குரவருட் சிறந்தோர் தந்தையும் தாயும் என முன்பு இராமபிரான் கூறியதனை (1176) மறுத்து, ஆசாரியனே சிறந்தவன் என்று வலியுறுத்துகின்றான் வசிட்டன். மத - வலிமை; உரிச்சொல்.

(பி . ம்.) 1. இதவியவியற்றிய குரவராயினும்.
2. மதவிய; சிந்தைகள்.
3. பதவியல்; பண்டுதான், பண்டுகான், பண்டைநான். (123)

நாட்டை ஆள்க என்றல்

1193. என்றலால் யானுனை யெடுத்து விஞ்சைகள்
ஒன்றலா தனபல வுதவிற் றுண்மையால்
அன்றெனா தின்றென தாணை யையநீ
நன்றுபோந் தளியுனக் குரிய நாடென்றான்.

என்றலால் -(குரவர் யாரினும் குருவே சிறந்தவன்) என்பதனாலும், யான் உனை எடுத்து - நான் உன்னை (இளமை முதலே) எடுத்து வளர்த்து,ஒன்று அல்லாதன பல விஞ்சைகள் - மிகப் பல வித்தைகளை, உதவிற்று உண்மையால் - அளித்திருப்பதனாலும், ஐய - ஐயனே, நீ—, இன்று எனது ஆணை - இப்போது என்னுடைய கட்டளையை, அன்று எனாது - மறுக்காமல், போந்து - (நாட்டுக்கு) வந்து, உனக்கு உரிய நாடு - உனக்கு உரிமையான இராச்சியத்தை, நன்று அளி - நன்கு காப்பாயாக, என்றான் —.

என்றலால் என்றது முந்திய பாட்டை அநுவதித்தது.

(பி . ம்.) 1. எடுத்தவிஞ்சைகள்.
2. உண்மையாம்,
3. அன்றெனாதின்றெனாது.
4. நன்று போந்தருளுனக்கு, போந்தளித்திமிற்கு, நன்றிபோந்தளியுனக்கு, மின்று போந்தளியுனக்கு, இன்று போந்தருளுனக்கு.(124)

இராமன் வசிட்டனுக்கு மறுமொழி கூறுதல்

1194. கூறிய முனிவனைக் குவிந்த தாமரை
சீறிய கைகளாற் றொழுது செங்கணான்
ஆறிய சிந்தனை யறிஞ வொன்றுரை
கூறுவ துளதெனக் கூறன் மேயினான்.

கூறிய முனிவனை - (முன் கண்டவாறு) எடுத்துச் சொன்ன வசிட்ட முனிவனை, செங்கணான் - இராமபிரான், குவிந்த தாமரை சீறிய கைகளால் - குவிந்த தாமரை மலரை(த் தன் அழகால்) வென்ற கைகளால், தொழுது - அஞ்சலி செய்து, ஆறிய சிந்தனை அறிஞ - அடங்கிய மனமுடைய அறிவாற் பெரியோய், ஒன்று உரை - (என் மனத்துக்குப்) பொருந்திய வார்த்தையை, கூறுவது உளது - நான்

சொல்ல வேண்டுவதுள்ளது, என - என்று, கூறல் மேயினன்-சொல்லத் தொடங்கினன்.

இராமபிரான் இயல்பாகவே செந்தாமரையிதழ் போலும் கண் களுடையவனாதலால் 'செங்கணன்' எனப்படுவான். இங்கே அது வசிட்ட முனிவன் சொல்லாற் சிறிது சினங் கொண்டமையையுங் குறிப்பதான நயம்பட அமைந்தது. அஞ்சலியாகக் குவித்த கைகளாக லின், 'குவிந்த தாமரை சிறிய கைகள்' என்றார். சீறுதல் - நீ எனக் கொப்பாகாய் என்று கடிதல். குருவையும் மீறியே இங்கே தன் கொள்கையை நிலை நிறுத்துகின்றான் இராமபிரான்.

இவ்விடத்தில், ஜாபாலி என்ற முனிவன் நாத்திக வாதம் பேசி இராமபிரானை நாடாளும்படி கூற, அவன்பால் மிக்க சினங்கொண்ட அண்ணலை வசிட்ட முனிவன் சாந்தப்படுத்தி, ஆசாரிய வசனத்தின் பெருமையை எடுத்துக்கூறித் தன் உரையின்படி வந்து அரசாளச் சொன்னதாகவும், அப்போது, உலகத்தின் உற்பத்தி, சூரிய வமிச வரலாறு முதலியவற்றைக் கூறியதாகவும் வான்மீகம் (சருக்கம், 110) கூறுகின்றது.

(பி - ம்.) 1. கூறின.
2. சீறின.
3. ஆறின என்னுரை, வேற்றுரை, அறிவவேறுரை, அறியவேறுள, அறிகவொன்றுரை.
4. கூறுவதிதுவெனக், கூறுவதெனகனி. (125)

1195. சான்றவ ராகதன் குரவ ராகதாய்
போன்றவ ராகபொற் புதல்வ ராகதான்
தேன்றரு மலருளான் சிறுவ செய்வெனென்
றேன்றபி னவ்வுரை மறுக்கு மீட்டதோ.

தேன் தரு - தேனைச் சிந்துகிற, மலர் உளான் சிறுவ - செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமன் புதல்வனே, சான்றவர் ஆக - சால்புடைய பெரியோராகட்டும், தன் குரவர் ஆக - தன் ஆசிரியராகட்டும், தாய் போன்றவர் ஆக - (முன்னறி தெய்வமான) தாய் போன்ற சிறப்புடையவராகட்டும், பொன் புதல்வர் ஆக - பொன்போன்ற புதல்வராகட்டும், தான் செய்வென் என்று ஏன்றபின் - தான் (ஒன்றைச்) செய்வேன் என்று ஒருவன் மேற்கொண்டபின், அ உரை - (மேற்கொண்டதான) அச்சொல், மறுக்கும் ஈட்டதோ - மறுக்கும் தகுதி உடையதாகுமோ? (ஆகாது).

நேர்மையானதொன்றை நான் செய்வேன் என்று ஒருவன் பிரதிக்கினை பண்ணிய பின், அதனை மீறுதல் அவனுக்கும் தகாது; எத்துணைப் பெரியவர் ஆயினும், உரிமை உடையவர் ஆயினும் அவனை மீறச் சொல்லுதலும் தகாது என்றபடி. 'சிறுவ' என்றது,

வசிட்டனும் இந்த விஷயத்தில் சிறிது சிறுமையுற்ருன் என்ற குறிப்பு என்பாரும் உளர். குரவருட் சிறந்தோன் ஆசிரியனே என்ற வசிட்ட முனிவர் வார்த்தைக்கியைய, குரவர் என்றது இங்கே ஆசிரியரைக் குறித்ததெனவும், 'தாய் போன்றவர்' என்றது மற்ற நால்வரையும் குறித்ததெனவும் கொள்க. பொற் புதல்வர்! "பொன்போற் புதல்வர்ப் பெருஅ தீரும்" (புறநா. 9 : 4).

(பி - ம்.) 1. தன்குரவர் தந்தை, நன்குரவராக.
2. மெய்ப்புதல்வராக, மெய்ப்புலவராக், பொய்ப்புலையராக, ஓர் புலவராகத்.
3. மலருளோன்; செய்வனென்று, செய்குவன்.
4. ஈட்டதே, ஈடதோ. (126)

1196. தாய்பணித் துவந்தன தந்தை செய்கென
ஏயவெப் பொருள்களு மிறைஞ்சி மேற்கொளாத்
தீயவப் புலையனிற் செய்கை தேர்கிலா
நாயெனத் திரிவது நல்ல தல்லதோ.

தாய் உவந்து பணித்தன - தாய் விரும்பிக் கட்டளை இட்டனவும், தந்தை செய்க என ஏய - தந்தை செய் என்று ஏவினவும் (ஆன), எ பொருள்களும் - எந்தச் செயல்களையும், இறைஞ்சி மேல் கொள்ளா(த) - பணிந்து ஏற்றுக் கொள்ளாத, அ தீய புலையனின் - அத்தகைய கொடிய புலையனாக (ஒருவன்) இருத்தலினும், செய்கை தேர்கிலா - செய்யத்தக்கதை அறியமாட்டாத, நாய் என திரிவது - நாயாகப் பிறந்து அலைவது, நல்லது அல்லதோ - நல்லதன்ருே?

'பெற்ருேர் ஏவியது எதுவாயினும், நல்லதன்ருயினும், அதனைப் பணிந்து சிரமேற் கொண்டு செய்வதே ஆறறிவு படைத்த மானிடன் கடமையாகும்; அது செய்யாதவன் நல்லறிவற்ற புலையனேயாவன்; 'பகுத்துணர்விருந்தும் கடமையைச் செய்யாத அக்கீழ்மகனைவிட, பகுத்துணர்வில்லாத நாய்ப் பிறப்பே மேலானது' என்று, தான் கடமையில் ஊன்றி நிற்றலைக் குறிக்கின்ருன். 'பணித்து வந்தன' என்றதை, 'உவந்து பணித்தன' என்று மாறியும், விகுதி பிரித்துக் கூட்டியும் உரைகூறலாயிற்று. செய்கென: தொகுத்தல் விகாரம். பொருள் - செயல்.

(பி - ம்.) 1. பணித்துவந்தது, உரைத்ததும்; செய்கெனு, சொன்னதும்.
2. ஏயவப்பொருள்களும், மேய நற்பொருள்களும்.
3. புலையரிற், செய்கைதேர்கிலார், தேர்கலா, செவ்விபொய்ச்சிறு செவ்வியோய்.
4. நல்லதாகுமே, நல்லதாகுமோ, தவத்தினன்றரோ. (127)

1197. முன்னுறப் பணித்தவர் மொழியை யானென
சென்னியிற் கொண்டது செய்வெ னென்றதன்
பின்னுறப் பணித்தனை பெருமை யோயெனக்
கென்னினிச் செய்வகை யுரைசெ யீங்கென்ருன்.

முன்னுற பணித்தவர் மொழியை - முன்னதாக (எனக்குக்) கட்டளை இட்ட பெற்றோருடைய வார்த்தைகளை, யான் என சென்னியில் கொண்டு - நான் என்னுடைய சிரசின்மேல் ஏற்றுக் கொண்டு, அது செய்வென் என்றதன் பின்னுற - அதைச் செய்வேன் என்று ஒப்புக்கொண்டதன் பின்னாக, பணித்தனை - (நீ வேறு வகை யாகக்) கட்டளையிட்டாய்; பெருமையோய் - பெருமை உடையவனே, எனக்கு- (இந்நிலையில் உள்ள) எனக்கு, இனி செய்வகை என் - இனிச் செய்யத்தக்கது யாது? ஈங்கு உரை செய் - இப்போது (நீயே அதனைச்) சொல்வாயாக, என்றான்—.

'இப்போது செய்யத் தக்கதை நீயே சொல்' என்று கேட்கு முகத்தால், 'முதலில் மேற்கொண்டதைக் கைவிடுதல் தக்கதன்று' என்ற தன் கொள்கையை உறுதியாக்குகின்றான் இராமபிரான். பின், உறப் பணித்தனை என்றியைத்து, பின்னே, (அரசாளுகையில்) பொருந்தப் பணிக்கின்றாய் என உரைத்தலுமாம்.

(பி - ம்.) 1. பிணித்தவர்; மொழிய யானது,
2. கொண்டனன்; செய்வன், செய்வல்; என்றபின்.
3. பின்னுமப் பணிதனைப்; பெருமையோவெனக்.
4. செய்வதை, செய்வதினின்று, செய்வதென்று, செய்வதொன்று. (128)

பரதன் தானும் காட்டிலேயே இருப்பதாகக் கூறல்

1198. முனிவனு முரைப்பதோர் முறைமை கண்டிலெம்
இனியென விருந்தன னிளைய மைந்தனும்
அனையதே லாள்பவ ராள்க நாடுநான்
பனிபடர் காடுடன் படர்தன் மெய்யென்றான்.

முனிவனும் - (இராமபிரான் உரை கேட்ட) வசிட்ட முனிவனும், இனி - இனிமேலே, உரைப்பது ஓர் முறைமை கண்டிலெம் என - சொல்லத்தக்கதொரு நீதியைக் காணோம் என்று, இருந்தனன் - வாளா இருந்தானாக, இளைய மைந்தனும் - இளையவனான பரதனும், அனைய தேல் - அப்படியானால், நாடு - நாட்டை, ஆள்பவர் ஆள்க - ஆள்பவர் ஆளட்டும், நான்—, பனி படர் காடு - நடுக்கம் மிக்க காட்டில், உடன் படர்தல் மெய் - இராமனுடன் செல்லுதல் உண்மை, என்றான் - என்று (உறுதியாகச்) சொன்னான்.

இராமபிரானைத் தன் கொள்கையினின்றும் நழுவச் செய்தல் வசிட்டனாலும் ஆகாமையின் பரதன், 'நாடு எங்ஙனமாயினுமாகுக; நான் இராமனுடன் காட்டிற்கே செல்வேன்' என்று தன் துணிபைக் கூறினான். பனி - அச்சமும் ஆம்.

(பி - ம்.) 1. முனியவன்; கண்டிலம், கண்டிலன்.
2. இனிதென.
3. அனையதேமாண்டிரண்டு; ஆள்கநாடுதான்; நாடேனை.
4. பனிபடு; காட்டுடன், காடுநான். (129)

தேவர்கள் வந்து கூறுதல்

1199. அவ்வழி யிமையவ ரறிந்து கூடினர்
இவ்வழி யிராமனை யிவன்கொண் டேகுமேற்
செவ்வழித் தன்றுநஞ் செயலென் றெண்ணினர்
கவ்வையர் விசும்பிடைக் கழறி னாரரோ.

அவ்வழி - அப்போது, இமையவர் - தேவர்கள், அறிந்து - (இங்கே நடந்தவற்றை எல்லாம்) அறிந்து, இ வழி - இப்போது, இராமனை இவன் கொண்டு ஏகுமேல் - இராமனை இப்பரதன் (நாடாள) அழைத்துச் செல்வானாகில், நம் செயல் - நம்முடைய காரியம், செம்மை வழித்து அன்று என்று எண்ணினர் - நேராக நடைபெறுவ தன்று என்றெண்ணி, கவ்வையர் - கவலையுற்றவர்களாய், விசும்பிடை கூடினர் - ஆகாயத்திலே (தம்முட்) கூடி, கழறினர் - கட்டுரை சொல்லலானார்கள். அரோ : அசை.

தேவர்கள் கூறியது அடுத்த பாடலில் வரும். 'நம் செயல்' என்றது, இராவணன் அழிவால் தாம் அடைய இருக்கும் நன்மையை. இராமபிரான் அதற்கெனவே அவதரித்தவனாதலால், அவனை நாட்டுக்குத் திரும்பவிடுதல் தம் காரியத்துக்கு இடையூறுகுமே என்று கவலையுற்றுக் கூறலானார். முன்பு தேவர்கள் சூழ்ச்சியினால் கைகேயி கூனியின் வசப்பட்டு மனம் திரிந்தமை 174–5–ஆம் பாடல்களிற் காண்க.

கூடினர், எண்ணினர், கவ்வையர் : முற்றெச்சங்கள்.

(பி ம்.) 1. அறியக்கூறினர்,
2. இவன்கொண்டேகினால்.
4. கழறன்மேயினர். (180)

1200. ஏத்தரும் பெருங்குணத் திராம னிவ்வழிப்
போத்தருந் தாதைசொற் புரக்கும் பூட்சியான்
ஆத்தவாண் டேழினோ டேழு மந்நிலம்
காத்தலுன் கடனிவை கடமை யென்றனர்.

(ஆகாயத்தில் கூடின தேவர்கள்), ஏத்த அரும் பெரும் குணத்து இராமன் - புகழ்தற்கரிய பெருங் குணங்களை உடைய இராமன், தாதை சொல் புரக்கும் பூட்சியான் - தந்தையின் சொல்லைக் காக்கும் உறுதியுடையவனாய், இ வழி போதரும் - இப்போது செல்லும் வழியிலே போதல் செய்வான்; ஆத்த ஆண்டு ஏழினோடு ஏழும் - (அவன் காடாளவும், நீ நாடாளவும்) நியமித்த பதினான்கு ஆண்டுகளும், அ நிலம் காத்தல் - அந்த நாட்டைக் காத்தல், உன் கடன் - உன் பொறுப் பாகும்; இவை கடமை - இவை (முறையே உங்களிருவர்க்கும்) கடமை யாகும், என்றனர் - என்று கூறினார்கள்.

'இராமன் தான் செய்த பிரதிக்கினையைக் கைவிடுதலும், நீ உனக்குரிய நாடாட்சியை மறுத்தலும் தருமமன்று; ஆதலால், நீவிர் இருவீரும் உங்களுக்குரிய கடமைகளைத் தவருது செய்தலே முறை' என்றனர் தேவர். போதரும் எனற்பாலது, போத்தரும் என எதுகை நோக்கி விகாரப்பட்டது. ஆத்த - யாத்த; கட்டிய; நியமித்த.

இவ்விடத்து வான்மீகம் கூறுவது: இராமன் எவ்வகையிலும் இணங்காதது கண்ட பரதன், 'இராமன் நாடாள இணங்கும் வரையில் நான் இப்பன்னசாலையின் முன் தருப்பையைப் பரப்பி அதன்மேற் கிடந்து உண்ணுவிரதம் இருப்பேன்' என்று சொல்லி, தருப்பையைப் பரப்புமாறு சுமந்திரனுக்குச் சொல்ல, அவன் சோர்ந்து நின்றது கண்டு, தானே தருப்பையைக் கொணர்ந்து பரப்பி அதன்மீது படுத்தான். அப்போது இராமன் அவனைத் தடுத்து, 'இவ்வாறு நோன்பு கிடத்தல் அந்தணருக்கன்றி ஏனையோர்க்கு உரியதன்று; நீ இது செய்தல் கூடாது' என, பரதன் அங்கிருந்தோரை இராமனிடம் தனக்காகப் பரிந்து பேசும்படி வேண்ட, அவர்கள் இராமனது விரதத்தை ஒருவராலும் தடுக்க முடியாதென்றனராக, 'அவர்கள் நியாயத்தையே கூறுகின்றனர்; நீ அரசாள இணங்கவே வேண்டும்' என இராமன் மீண்டும் பரதனுக்குக் கூறவும், அவன் இணங்காமல், 'வனவாசம் செய்தற்குரியவன் நானே' என்ருன். இவற்றை எல்லாம் அங்கே கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து கூடி நின்ற சித்தர், தேவரிஷிகள் முதலாயினோர் கண்டு மயிர் சிலிர்த்து, இராவண வதத்தையும் மனத்துட்கொண்டு, அவர்கள் முன் தோன்றிப் பரதனை நோக்கி, 'நீ இராமன் மொழிப்படி செய்து தந்தையைச் சத்தியம் தவருதவனுக்குக' என்று சொல்லிச் சென்றனர்.

(பி - ம்.) 1. அவ்வழி.
2. போய்த்தரும், பூத்தரும்; பூட்சியின்.
3. ஆத்தயாண்டு, ஆர்த்தவாண்டு.
4. காத்தனின்; கடனிது; கடமைத்தென்றனர். (131)

இராமன் பரதனை அரசாளும்படி கூறுதல்

1201. வானவ ருரைத்தலு மறுக்கற் பாலதன்
றியானுனை யிரந்தனெ னினியெ னுணையால்
ஆனதோ ரமைதியி னளித்தி பாரெனத்
தானவன் றுணைமலர்த் தடக்கை பற்றினன்.

வானவர் உரைத்தலும் - தேவர்கள் (இவ்வாறு) கூறியவுடன், (இராமபிரான் பரதனை நோக்கி), மறுக்கல் பாலது அன்று - (தேவர் கட்டளை) மறுக்கத் தக்கதன்று; யான் உனை இரந்தனென் - நானும் உன்னை வேண்டுகின்றேன்; இனி - இப்போதாயினும், என் ஆணையால் - என் கட்டளைப்படி, ஆனது ஓர் அமைதியின் - நியமித்ததான கால

வரையறையளவும், பார் அளித்தி - நாட்டைக் காப்பாயாக, எனு - என்று சொல்லி, தான் - இராமபிரான், அவன் - அப்பரதனுடைய, துணை மலர் தட கை பற்றினுன் - தாமரை மலரைப் போன்ற இரண்டு பெரிய கைகளையும் பிடித்துக்கொண்டான்.

தேவர்கள் கூறியவுடன், இராமபிரான் பரதனுடைய கைகளைப் பிடித்துக்கொண்டு, 'தேவவாக்கியம் நம் இருவராலும் தள்ளத்தக்க தன்று; ஆதலால் நானும் உன்னை வேண்டுகிறேன்; இனியேனும், என் கட்டளைப்படி நீ திரும்பிச் சென்று நாட்டை முறைப்படி காப்பாயாக' என்று குறையிரந்து கூறினுன். பெரியோனுதலால் இராமபிரான் பரதன் கையைப்பற்றி வேண்டினுன்.

இப்பாடல் ஒரு சுவடியில் இல்லை.

(பி - ம்.) 1. உரைத்தது.
2. யானினை; இரந்தனனீயென், இனிதென்.
3. அளித்தியாலெனத்.
4. தானவன் நறுமலர்த். (132)

பரதன் செய்த பிரதிஞ்ஞை

1202. ஆமெனி லேழிரண் டாண்டி லையநீ
நாமநீர் நெடுநகர் நண்ணி நானிலம்
கோமுறை புரிகிலை யென்னிற் கூரெரிச்
சாமிது சரதநின் ஞணை சாற்றினேன்.

ஆம் எனில் - அங்ஙனமாயின், ஐய - ஐயனே, நீ—, ஏழ் இரண்டு ஆண்டில் - பதினுன்கு ஆண்டு எல்லை (சிறிதும்) கடவாமல், நாமம் நீர் நெடு நகர் நண்ணி - (பகைவர்க்கு) அச்சந் தரும் அகழிநீர் சூழ்ந்த பெரிய அயோத்தி நகரை அடைந்து, நால் நிலம் - பூமியை, கோமுறை புரிகிலை என்னின் - அரசாட்சி செய்யத் தவறினையெனின், கூர் எரி சாம் இது சரதம் - (நான்) மிக்க தீயில் விழுந்து சாகும் இது நிச்சயம்; நின் ஆணை சாற்றினேன் - உன்மேல் ஆணையிட்டுச் சொன்னேன்.

இது, 'என்பது சொல்லிய பரதன்' என வரும் அடுத்த பாடலின் முதலோடு தொடரும். பதினுன்கு ஆண்டு முடிவுக்கு மேல், ஒரு நாள் கூடத் தாழ்த்தலாகாது என்பது பரதன் கருத்து.

முந்திய பாடல் இல்லாத ஒரு சுவடியில், இப்பாடலும் இல்லை.

(பி - ம்.) 1. ஆமெனின்.
2. நாமநீரயோத்தியை.
3. கோன்முறை; புரிகலை.
4. சாமது. (133)

இராமன் பரதனுடைய பிரதிஞ்ஞைக்கு உடன்படல்

1203. என்பது சொல்லிய பரதன் யாதுமோர்
துன்பில னவனது துணிவை நோக்கினுன்
அன்பினி னுருகின னன்ன தாகென்ருன்
தன்புகழ் தன்னினும் பெரிய தன்மையான்.

என்பது சொல்லிய பரதன் - என்ற இதனைச் சொன்ன பரதன், யாதும் ஓர் துன்பு இலன் அவனது துணிவை - துன்பம் சிறிதும் இல்லாதவனுன அவ்விராமபிரான் கூறும் முடிவை, நோக்கினுன் - எதிர்பார்த்து நின்ருன்; தன் புகழ் தன்னினும் - தனது கீர்த்தியினும், பெரிய தன்மையான் - மிகச் சிறந்த குணங்களையுடைய இராமபிரான், அன்பினின் - (பரதன்பால் உண்டான) பேரன்பினுல், உருகினன் - மன முருகி, அன்னது ஆக என்ருன் - அப்படியே ஆகட்டும் என்ருன்.

'என்பது' என்றது, முன்பாட்டிற் கூறிய செய்தியை. இராம பிரான், தன் விரதத்துக்கும் தந்தை சொல்லுக்கும் பங்கம் நேராதவாறு பரதனை இணங்குவித்தலில் துன்புற்றவன் இப்போது பரதன் ஒருவாறு இணங்கியதனுல், அத்துன்பமிலனுனுன். 'துணிவை' என்றது, தன் வார்த்தைக்கு இராமபிரான் கூறும் முடிவான விடையை என்றபடி. 'அன்னது ஆக' என்றது, 'உன் விருப்பத்தின்படி நான் அக்கால எல்லைக்குமேல் சிறிதும் தாழாது வந்து சேருவேன்' என்பது குறித்தது. ஈற்றடி, இராமபிரானுடைய விசேட குணங்கள், எவ்வளவு புகழ்ந்தாலும் அதனுள் அடங்கா என்ற கருத்துடையது.

(பி - ம்.) 1. என்பன சொல்லிய.
2. துன்பிலனன்னது, துன்பிலனன்னவன், துன்பிலாமென்னவன்.
3. அன்பினனுருகினன், அன்பினினுருகினுன்; அன்னதாமென்ருன், அழுதுசோர்கின்ருன், சோர்ந்தனன்.
4. தன்புகழதனினும். (134)

இராமனுடைய பாதுகைகளைப் பரதன் பெற்றுக்கொள்ளுதல்

1204. விம்மினன் பரதனும் வேறு செய்வதொன்
றின்மையி னரிதென வெண்ணி யேங்குவான்
செம்மனின் றிருவடித் தலந்தந் தீகென
எம்மையுந் தருவன விரண்டு நல்கினுன்.

('அன்னதாக' என்று இராமபிரான் கூறியது கேட்ட) பரதனும்—, செய்வது வேறு ஒன்று இன்மையின் - (அப்போது) செய்யத்தக்கது வேருென்றும் இல்லாமையால், அரிது என எண்ணி - (இராமபிரானைப் பிரிந்து போய் அரசாளுதல்) கடினமென்று கருதி, விம்மினன் ஏங்குவான் - அழுது ஏங்குகின்றவனுய் (இராமபிரானை நோக்கி),

செம்மல் - பெரியோய், நின் திருவடி தலம் தந்தீக என - உன் திருவடி நிலைகளைத் தந்தருள்க என்று வேண்ட, (இராமபிரான்), எம்மையும் தருவன இரண்டும் - இம்மை மறுமையென்னும் இரண்டின் நற்பயன்களையும் தரவல்ல திருவடி நிலைகள் இரண்டையும், நல்கினான் - (பரதனுக்குக்) கொடுத்தான்.

பரதன் இராமபிரானுடைய திருவடி நிலைகளை வேண்டிப் பெற்றுக் கொண்டதன் நோக்கம் பின்பு புலப்படும். 'சுவாமீ, பொன்னால் அலங்கரிக்கப்பெற்ற பாதுகைகளில் ஏறியருள்வீராக. இவை எல்லா உலகங்களின் யோக க்ஷேமங்களையும் நடத்தவல்லவை' என்று சொல்லிப் பாதுகைகளை முன் வைக்க, இராமபிரான் பாதுகைகளில் ஏறி இறங்கி அவற்றைப் பரதனுக்கு அளித்தானென்று வான்மீகத்திற் கூறப்படுகின்றது. விம்மினன், ஏங்குவான்: முற்றெச்சம். செம்மல்! அண்மை விளி. தந்தீக - தருக.

(பி - ம்.) 2. இன்மையதரிதென, இம்மையினரிதென, இம்முறையிலதென; ஏங்கினான்.
3. செம்மைமின், செம்மறன். (135)

பாதுகைகளுடன் பரதன் நாடு திரும்புதல்

1205. அடித்தல மிரண்டையு மழுத கண்ணினன்
முடித்தல மிவையென முறையிற் சூடினான்
படித்தலத் திறைஞ்சினன் பரதன் போயினான்
பொடித்தல மிலங்குறு பொலங்கொண் மேனியான்.

அழுத கண்ணினன் - அழுத கண்களையுடையவனும், பொடி தலம் இலங்கு உறு பொலம் கொள் மேனியான் - புழுதி தன்னிடம் (படிந்து) விளங்கும் அழகைக் கொண்ட திருமேனியுடையவனுமான, பரதன்—, அடிதலம் இரண்டையும் - திருவடிநிலை இரண்டையும் (பெற்று), இவை முடிதலம் என - இவையே (எனக்குக்) கிரீடம் என்று சொல்லி, முறையின் - முறைப்படி, சூடினான் - (தலையில்) சூடிக் கொண்டு, படிதலத்து இறைஞ்சினன் போயினன் - தரையில் விழுந்து (இராமபிரானை) வணங்கி எழுந்து செல்லலானான்.

கண்ணினன், மேனியான் (ஆன) பரதன், சூடினான், இறைஞ்சினன், போயினான் எனக் கூட்டி முடிக்க. பரதனைக் குகன் கண்ட போதே, 'மாசடைந்த மெய்யா'னாகக் கண்டான். அதற்கு முன்னும் பின்னும் பரதன் நீராடுதலும் நல்லுணவு கொள்ளுதலுமின்றியே இருந்தானாகலின், 'பொடித்தல மிலங்குறு பொலங்கொள் மேனியான்' என்றார்.

(பி - ம்.) 2. முத்தலமீமிசை; முறையிற்சூடியிப்,
3. படித்தலத்திறைஞ்சிய,
4. இலங்குறப். (136)

முனிவர் முதலியோர் புறப்படுதல்

1206. ஈன்றவர் முதலிய வெண்ணில் சுற்றமும்
சான்றவர் குழுவொடு தவத்து ளோர்களும்
வான்தரு சேனையு மற்றுஞ் சுற்றுற
மூன்று நூல் கிடந்ததோண் முனியும் போயினான்.

ஈன்றவர் முதலிய - பெற்ற தாய்மார் முதலான, எண் இல் சுற்றமும் – அளவற்ற சுற்றத்தாரும், சான்றவர் குழுவொடு - பெரியோர் கூட்டமும், தவத்து உள்ளோர்களும் - தவநெறியிலுள்ள முனிவர்களும், வான்தரு சேனையும் - பெருமையுடைய சேனைகளும், மற்றும் - மற்றும் உள்ள அரசர் முதலியோரும், சுற்று உற - சூழ்ந்துவர, மூன்று நூல் கிடந்த தோள் முனியும் - முப்புரி நூல் தங்கிய தோளையுடைய வசிட்ட முனிவனும், போயினான் - (புறப்பட்டுச்) சென்றான்.

பரதன் புறப்பட்டமையை முன்கவியிற் கூறி, உடன் வந்தவருள் முதன்மையுடையவர்கள் புறப்பட்டமையை இக் கவியாற் கூறினார்.

(பி ம்.) 2. தவஞ்செய்மாக்களும்.
3. வான்றனிச், மான்றரு.
4. கிடந்ததொல், கடந்ததோள்; முனியுமெய்தினான். (137)

1207. பண்டைநூ றெரிபரத் துவனும் போயினான்
மண்டுநீர் நெடுநகர் மாந்தர் போயினார்
விண்டுறை தேவரும் விரைவிற் போயினார்
கொண்டற ணாணையாற் குகனும் போயினான்.

பண்டை நூல் தெரி - பழமையான வேதம் முதலிய நூல்களெல்லாம் அறிந்த, பரத்துவனும் போயினான் - பரத்துவாச முனிவனும் (புறப்பட்டுப்) போனான்; மண்டுநீர் - மிக்க (அகழி) நீர் சூழ்ந்த, நெடு நகர் மாந்தர் - பெரிய அயோத்தி நகரிலிருந்து வந்த மக்களெல்லாரும், போயினார் - போனார்கள்; விண்டு உறை தேவரும் - ஆகாயத்தில் கூடியிருந்த தேவர்களும், விரைவில் போயினார் - விரைவாக (தம்தம் இடம் நோக்கி)ப் போனார்கள்; கொண்டல் தன் ஆணையால் - காளமேகம் போன்ற இராமபிரானது கட்டளையால், குகனும் போயினான் - குகனும் திரும்பிப் போனான்.

குகனை இறுதியில் வைத்து, அவனும் இராமபிரான் கட்டளையாற் போனான் என்றதனால், அவன் விட்டுப் பிரிய மனமின்றித் தயங்கி நின்று இராமபிரான் வற்புறுத்தியதனால் திரும்பிச் சென்றான் என்பது பெறப்படும்.

விண்டு - ஆகாயம்; "விண்டு வரய்நிமிர் கிரவுஞ்சகிரி" (கந்த. தாரகன் வதைப். 2).

சில பிரதிகளில், இப் பாடலின் 3, 4-ஆம் அடிகள் முன்பின்னாக மாறிக் காண்கின்றன.

(பி - ம்.) 1. பரத்துவசன், மு. பண்டுடை நூல்தெரிபரத்துவாசனும்.
2. மண்டுநீர் நகருறை; மைந்தர்.
3. எண்டிசையரசரும், எண்டிசை வாழ்நரும், எண்டிசை வேந்தரும்; விலகிப், இரங்கிப், நெருங்கிப்.
4. கொண்டலதாணையிற். (138)

பரதன் செயல்

1208. பாதுகந் தலைக்கொடு பரதன் பைம்புனல்
மோதுகங் கையின்கரை கடந்து முந்தினான்
போதுகுங் கடிபொழி லயோத்தி புக்கிலன்
ஓதுகங் குலினெடி துறக்க நீங்கினான்.

பரதன்—, பாதுகம் தலைகொடு - (இராமபிரானுடைய) பாதுகைகளைத் தலைமேல் தாங்கிக்கொண்டு, பைம் புனல் மோது - பசுமையான (குளிர்ந்த) நீர் வந்து மோதுகிற, கங்கையின் கரை கடந்து - கங்கையாற்றின் கரையைக் கடந்து, முந்தினான் - முற்பட்டு, போது உகும் - மலர்கள் சிந்துகிற, கடி பொழில் - மணம் மிக்க சோலைகள் சூழ்ந்த, அயோத்தி புக்கிலன் - அயோத்தி நகருட் புகாதவனாய், ஓது கங்குலின் நெடிது உறக்கம் நீங்கினான் - சொல்லப்பட்ட இராப் பொழுதிலும் மிகவும் தூக்கமில்லாதவனானான்.

பரதன் நகருட் புகுந்து, அரண்மனை சேர்ந்து, அரியணையில் வீற்றிருந்து அரசாள மனங்கொண்டிலனாகலின், அதற்கு வேறு வகையைச் சிந்தித்திருந்தான் என்றவாறு. அவன் மேலே செய்தது அடுத்த பாடலில் கூறப்படும்.

(பி - ம்.) 1. தலைக்கொண்டு, தனைக்கொடு.
2. கரைகடந்து.
4. ஓதுறுமுணவினோடுறக்க நீக்கினான். (139)

1209. நந்தியம் பதியிடை நாதன் பாதுகம்
செந்தனிக் கோன்முறை செலுத்தச் சிந்தையான்
இந்தியங் களையவித் திருந்தன் மேயினான்
அந்தியும் பகலுநீ ரருத கண்ணினான்.

நந்தி அம்பதியிடை - நந்திக்கிராமம் என்னும் இடத்தில், நாதன் பாதுகம் - தலைவனான இராமபிரானுடைய பாதுகைகள், தனி செம் கோல் முறை செலுத்த - ஒப்பற்ற செங்கோலை முறையாகச் செலுத்த, (தான்) சிந்தையான் - (இராமபிரானைப்பற்றிய) எண்ணம் மேலிட்டவனாய், இந்தியங்களை அவித்து - ஐம்பொறிகளையும் அடக்கி, அந்தியும் பகலும் - இரவும் பகலுமாக, நீர் அருத கண்ணினான் - நீர்

சிந்துதலை விடாத கண்களோடு, இருத்தல் மேயினன் - (அங்கே) தங்கியிருத்தலைப் பொருந்தினன்.

அயோத்தி நகரினுட் செல்ல மனங் கொள்ளாத பரதன் அதன் அருகில் உள்ள நந்திக் கிராமம் என்னும் ஊரைச் சேர்ந்து அங்கே தக்கதோர் இடத்தில் பாதுகைகளை அரசாக இருத்தி, தான் பிரதிநிதிபோல இருந்து, இரவும் பகலும் இராமபிரானையும், அவன் திரும்பி வருவதற்குரிய நாளையும் எண்ணியெண்ணி ஏங்கி, புலனடக்கத்தோடு தவசிபோலக் காலங்கழித்தான். சிந்தையான், கண்ணினன்: முற்றெச்சம். நந்தியம்பதி என்றதில் 'அம்' சாரியை. பரதன் முதலில் அயோத்தி நகருட் புகுந்து, பரிவாரங்களை அங்கே விட்டு விட்டுப் பின்பு தான் அங்கே இருக்க மனம் பற்றாது நந்திக்கிராமம் சேர்ந்தான் என்று வான்மீகம் கூறும்.

(பி-ம்.) 2. கோன்மிசை; செலுத்திச். (140)

இராமன் முதலிய மூவரும் தென்திசைச் செல்லல்

1210. குன்றினி லிருந்தன னென்னுங் கொள்கையால்
நின்றவர் நலிவரா னேசத் தாலெனத்
தன்றுணைத் தம்பியுந் தானுந் தையலும்
தென்றிசை நெறியினைச் சேறன் மேயினன்.

குன்றினில் இருந்தனன் என்னும் கொள்கையால் - (இராமன்) சித்திரகூட மலையில் தங்கியுள்ளான் என்ற எண்ணத்தால், நின்றவர் - (அயோத்தி நகரிலும் பிற இடங்களிலும்) உள்ளவர்கள், நேசத்தால் (என்பால் வைத்த) அன்பினால், நலிவர் என - (அடிக்கடி வந்து) துன்புறுத்துவர் என்று கருதி, தன் துணை தம்பியும்-தனக்கு எப்போதும் துணையாகவுள்ள தம்பி இலக்குவனும், தானும்—, தையலும் - சீதாபிராட்டியுமாக, தென் திசை நெறியினை - தெற்குத் திக்கிற் செல்லும் வழியிலே, சேறல் மேயினன் - செல்லலுற்றான் (இராமபிரான்).

இனிச் சித்திரகூட மலையில் தங்கினால், பலரும் அடிக்கடி வந்து தொந்தரவு செய்வதற்கிடமாகும் என்று கருதி, இராமபிரான், மற்ற இருவரோடும் அங்கிருந்து புறப்பட்டுத் தெற்கு நோக்கி வழிக்கொள்ளலானான். தம்பியும், தானும், தையலும் என்பன சிறப்பினால் 'மேயினன்' என்னும் ஒருமை முடிபேற்றன; தன்றுணைத் தம்பி: "தன்று ணைத்திருத் தம்பிமார்" (1164).

(பி-ம்) 2. நின்றவர் நலிவராம், நெருக்குவர், நின்றது நலிவரால், நேயத்தாலெனத்.
4. தென்றிசை நோக்கியே, தென்றிசையிராமலும் சேறன்மேயினர். (141)

திருவடிசூட்டு படலம் முற்றும்

அயோத்தியா காண்டம் முற்றுப் பெற்றது

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

(எண்—செய்யுள் எண்)

அரும்பத முதலியவற்றின் அகராதி

(எண்—பாட்டின் எண்)

